* 542 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state the action taken by the Government so far to provide house-sites to the poor Harijans of Vannipair village, Tindivanam taluk, South Arcot district?

THE HON. SRI P. KAKKAN : The Collector of South Arcot has selected suitable areas for the provision of house-sites for the Harijans of Vannipair village. The District Health Officer has certified the place as suitable for house-sites. The Collector will be submitting proposals for the acquisition of the areas shortly.

SRI M. JAGANNATHAN : கடந்த ஐந்தாண்டு காலமாக வன்னிப்
பெயர் கிராமத்தைச் சேர்ந்த ஹரிஜனங்கள், தங்களுக்கு குடிமனை வழங்க
வேண்டுமென்று பலமுறை விண்ணப்பங்கள் போட்டும் இப்பொழுதுதான்
நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிகிறது. இவ்வளவு காலதாமதமாவ
தற்கு அரசாங்கம் என்ன பதில் சொல்கிறது ?

[3rd April 1958

**The Hon. Sri P. KAKKAN** : மனைக்கட்டுக்காக ஒரு இடத்தை எடுக்கும்போது, அது நலலயிடமா சுகாதாரமானயிடமா, அங்கு வீடுகள கட்டினால் அது விழுந்து விடாமல் பலமாக யிருக்குமா என்றெலலாம் பார்ததுத் தான்செயய வேண்டியிருக்கறது.

**Mr. SPEAKER** : அடுத்த இரண்டு கேள்விகளை சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

*Periyar E. V. Ramaswami*

* 543 Q.—Sri A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Home be pleased to state the state of health of Periyar E. V. Ramaswami confined in jail?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sri E. V. Ramaswamy Naicker, who was transferred to the Government General Hospital, Madras, for medical treatment for certain ailments, is now, after adjustment of his diet, comparatively free from the symptoms thereof, and is progressing satisfactorily. He has also been advised by the Medical Officers to read less and avoid eye strain, as he is developing early cataract.

* 544 Q.—Sri A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have any proposal to release Periyar E. V. Ramaswami?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The answer is in the negative.

**Sri A. V. P. ASAITHAMBI** : அண்மையில் சில திராவிடக் கழகத் தோழர்கள் உடல்நலம் இல்லாத காரணத்தினால் அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டதுபோல், பெரியார் ஈ. வே. ரா.-வையும் உடல் நலம் இல்லாத காரணத்தினால் விடுதலை செய்ய சர்க்கார் முன்வருமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : உடல் நலம் சரியாக இல்லாத எல்லோரையும் விடுதலை செய்வதில்லை. திராவிடக் கழகத்தைச் சேர்ந்த சில ப்ரிஸனேர்ஸ்களை விடுதலை செய்தது, டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர் அவர்கள், அவர் குணமாவது கஷ்டம், அவர்கள் குணமாகவதற்கு வெளியில் அனுப்பிவிடுவதுதான் நலம் என்று சொன்னதால்தான் அவர்களில் சிலர் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால் பெரியார் ராமசுவாமி நாயக்கரைப் பொறுத்தமட்டில் அப்படிப்பட்ட அபிப்பிராயத்தை மெடிக்கல் ஆபீஸர் சொல்லவில்லை. ஜெனரல் ஹாஸ்பிட்டல் டீன், **ulcerated skin over hernial sac** அதற்காக ட்ரீட்மெண்ட் நடக்கிறது, இன்னும் கொஞ்சம் நாள் ஹாஸ்பிட்டலில் இருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார். ஆகவே, விடுதலை செய்யும் பிரச்னை இல்லை.

**Srimathi HEMALATHA DEVI** : ஈ.வே.ரா. பெரியார் ஜாதி ஒழிப்பிற்காக வேலை செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இல்லாத ஜாதிகளை அதிகப்படுத்திக்கொண்டிருப்பதால் அவர் வெளியில் இருப்பதைவிட ஆஸ்பத்திரியில் இருந்துகொண்டு ஓய்வு எடுத்துக்கொள்வது நன்மையல்லவா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினர் சொல்வது, ராமசுவாமி நாயக்கர் அவர்களுக்கு அளிக்கிற யோசனையாகும்.

**Sri S. B. ADITYAN** : ஐயா, ஈ. வே. ரா-வை சிறையில் வைத்துக்கொண்டு வைத்தியச் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதைவிட அவரை விடுதலை செய்து அவர் சொந்த செலவில் வைத்தியம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யக்கூடாதா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் அங்கத்தினருக்கு ராமசுவாமி பெரியார் அவர்களிடம் ரொம்ப அக்கறையிருப்பதாக என்னிடம் அடிக்கடி காட்டிக்கொள்வதுண்டு. அங்கத்தினர் அவாகள் சர்க்கார்



3rd April 1958]

செலவைக் குறைக்கவேண்டுமென்று அபிப்பிராயம் சொல்கிறார்கள், அதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். விடுதலை செய்யவேண்டுமா வேண்டாமா என்பதுதான் பிரச்னை. அவர் கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே, சிறை தண்டனை முடியும்வரையில் அரசாங்கத்திற்கு என்ன செலவானாலும் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவரை விடுதலை செய்வதற்கில்லை.

**Sri K. VINAYAKAM: Sir, now that E. V. Ramasamy Periar is recovering wonderfully well, may I know whether he has gained any more weight or has lost some weight ?**

The Hon. Sri M. BHAKTAVATSALAM : **I do not have statistics with me about weight.**

**Sri A. V. P. ASAITHAMBI** : பெரியார் அவர்கள், ஜாதி ஒழிப்பிற்காக சர்க்கார் உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளாத காரணத்தினால்தான் இத்தகைய காரியங்களில் இறங்குகிறேன் என்று முன்பே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம் சட்டமன்றத்திலே சர்க்கார் கட்சித் தலைவர் அவர்கள் ஜாதியை ஒழிக்கக்கூடிய விதத்தில் சர்வ கட்சிக் கமிட்டி ஒன்றைக் கூட்டச் செய்வது அவசியம் என்று கூறியிருப்பதால் அவருடைய கருத்தை ஓரளவு நாம் நிறைவேற்ற இப்பொழுது தயாராயிருப்பதால், அப்படி இரண்டு பேர்களுக்கும் வித்தியாசம் இல்லாதிருக்கும் நிலைமையில், அவரை விடுதலை செய்துவிட்டால் இனிமேல் அவர் இத்தகைய காரியங்களில் இறங்கமாட்டார் என்று தெரிவதால் அவரை விடுதலை செய்ய சர்க்கார் முன்வருவார்களா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : ஜாதி ஒழிப்புப் பிரச்னை இதில் இல்லை. சர்க்காருக்கும் அவருக்கும் இடையேயுள்ள வித்தியாசம் போய்விட்டதாக அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். வித்தியாசங்கள் போகலாம், வரலாம். திராவிட கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே ஏற்பட்ட வித்தியாசம் எவ்வளவுதூரம் போய் இருக்கிறது என்று தெரியவில்லை. இப்பொழுது அவர்கள் தோழமை கொண்டாடுகிறார்கள். ராமசுவாமி பெரியாரைப் பொறுத்தமட்டில், அவர்கள் சட்டத்தை மீறி குற்றம் செய்தார்கள் என்று சார்ஜ் செய்யப்பட்டார்கள். அது கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு, செஷன்ஸ் கோர்ட்டினால் தண்டிக்கப்பட்டார். ஆகவே, அவர் தண்டிக்கப்பட்டு, சிறை தண்டனை அனுபவித்து வருகிறார்கள் என்பதைத் தவிர, வேறு பிரச்னை எழவில்லை.

*Hides and skins*

* 545 Q.—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state— 9-20 a.m.

(a) the value of hides and skins exported to foreign countries from the State during the years 1956 and 1957; and

(b) the names of the countries to which they were exported?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) The value of hides and skins exported to foreign countries from the Madras State as it is constituted now was Rs. 21·68 crores during 1956 and Rs. 17·53 crores during January to October 1957. The exports were mainly to United Kingdom, United States of America, Western Germany, France, Belgium, Australia and Japan.

Sri A. A. RASHEED : Sir, is it not a fact that the export of hides and skins has declined from 6,500 bales in a month in 1957 to 3,000 bales in 1958?

Mr. SPEAKER : The hon. Member is giving information.

[3rd April 1958

**The Hon. Sri R. VENKATARAMAN** : Mr. Speaker, the hon. Member is an expert and I take the information given here.

**Sri K. S. G. HAJA SHERIFF** : Sir, may I know from the Hon. Minister the reason for the decline in the export of this raw material which is earning very good foreign exchange?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, the figures I have given relate only to ten months. I do not know whether at the end of the year, it has declined very much. But, so far as the information goes, I have no information as to the decline in the exports.

**Sri N. K. PALANISAMI** : ஸார், இங்கிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தோல்கள் எல்லாம் பதனிடபட்டவைகளா அல்லது பதனிடபடாதவைகளா ? பதனிடபடாதவைகள் என்றால் அவைகளை இங்கேயே வைத்து பதனிட்டு அனுப்ப சர்க்கார் முன் வருமா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : ஸார், இரண்டுவகைத் தோல்களும் வெளிநாடுகளுக்கு தேவைக்கு தகுந்தபடி போகிறது.

**Sri A. A. RASHEED** : Sir, is the Hon. Minister aware that the system of consignment has ruined the trade of shipper? Will the Government come forward for abolishing the consignment system in the auction in London?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, for the first time I have to say " I do not know ".

**Sri V. K. KOTHANDARAMAN** : இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய ஆட்டுத்தோல் மாட்டுத்தோல் இவைகளில் 75 சதவிகிதம் நமது ராஜ்யத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதாக தெரிவித்தார்கள். அதேநேரத்தில் பிரான்ஸ், அமெரிக்கா போன்ற இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற தோல்கள் பதன் செய்யப்பட்டதா அல்லது பதன் செய்யபடாததா (அதாவது ட்ரை ஸ்கின்) என்பதை அறிய வேண்டுகிறேன் ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : இரண்டுவகை தோல்களும் அனுப்பப்படுகிறது என்று நான் முதலிலே சொன்னேன்.

**Sri K. S. G. HAJA SHERIFF** : Sir, in view of the importance to have export drive in order to earn more foreign exchange may I know from the Hon. Minister whether an investigation can be made of the cause of lesser export and of the steps to be taken to increase the export of hides?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Suggestions would be welcomed from those interested in the hides and skins trade.

**Sri A. V. P. ASAITHAMBI** : தலைவர் அவர்களே, எப்ரல் முதல் தேதியில் வெளியிடப்பட்டிருக்கிற ஏற்றுமதி இறக்குமதி கொள்கையில் ஆட்டுத்தோல், மாட்டுத்தோல் இவைகளின் மீது ஏதாவது கொள்கை மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறதா ? இந்த கொள்கைகளை வகுக்கும்போது இந்த சர்க்காரை மத்திய சர்க்கார் கலந்து பேசினார்களா ?

**The Hon. Sri R. VENKATARAMAN** : Sir, this concerns the Central Government. I have no information.

**Mr. SPEAKER** : Next question (No. 546).

**Sri M. JAGANNATHAN** : Sir, I want to raise a point of order before I put the question. I gave this question eight months back and the Government have taken such a long time to answer my question. Now, Sir, in view of the belated reply, I should say,



3rd April 1958]

the importance and the value of this question had been lost. Why should the Government take such a long time? I mean the delay by months and years.

**Mr. SPEAKER** : Regarding this point of order, as I have already explained to hon. Members a number of times. I may again explain that I have no power to compel the Hon. Minister. When a question is not answered, the hon. Member may put another question. All that I can do is to place it before the House. I do not think that eight months have elapsed since the question was given notice of. I will look into this and see.

Now I want to know whether the hon. Member is putting the question.

**Sri M. JAGANNATHAN** : I put the question, Sir.

*Harassment of Harijans*

* 546 Q.—**Sri M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Home pleased to state—

**(a) whether Harijans in the Harijan Colony of Mathur village, Tindivanam taluk, South Arcot district, were harassed by caste** Hindus of the village on 6th September 1957; and

(b) if so, the action taken by the local Police in the matter?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : (a) It has been reported that on 6th September 1957, some caste Hindus of Mathur went to Chinnacheri, a Harijan Colony about half a mile away, beat some Harijans and committed theft of their property. This appears to have been an act of retaliation against the Harijans for having beaten a caste Hindu two days before.

(b) The Harijans and the caste Hindus were prosecuted in two separate cases, in the Court of the Sub-Magistrate, Tindivanam. The Magistrate has acquitted all the accused in both the cases.

**Sri M. JAGANNATHAN** : தலைவர் அவர்களே, மாத்தூரிலுள்ள ஹரிஜனங்களை அந்த ஊர் ஜாதி ஹிந்துக்கள் கடுமையாக தாக்கியும் மற்றும் பலவிதங்களில் அங்குள்ள ஹரிஜனங்களுக்கு பலவிதமான துன்பங்களை இழைத்தும் இருக்கிறார்கள். அதற்கு அங்குள்ள போலீஸ்காரர்கள் இரண்டு வகுப்பார் மீதும் கேஸ் போட்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : என்னிடம் இருக்கின்ற தகவலின்படி முதலில் ஒருவர் தவறாக நடந்துகொண்டார் என்றும், அதிலிருந்து ஒரு ஜாதி சண்டையாக மாறி இரு சாராரும் அடித்துக் கொண்டார்கள் என்றும், அதன்பேரில் இரண்டு சாரார் மேலும் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் கேஸ் போடப்பட்டது. அதன்பின்னால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றம் இல்லை என்று விடுதலை அளிக்கப்பட்டது. இதனால்தான், ஒரு கேஸில் தீர்ப்பு ஏற்பட்டாலும் மேல் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டியிருக்கிறது. அதனால்தான் இதில் ஒரு முடிவு ஏற்படுகிறவரையிலும் இந்த கேள்விக்கு முன்பே பதில் அளிக்கமுடியவில்லை.

[3rd April 1958

*Devaswom Board for Kanyakumari district*

* 547 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Home be pleased to state with reference to Question No. 169 answered on 20th July 1957—

(*a*) whether the Devaswom Board for the Kanyakumari district has been formed; and

(*b*) if so, the number of members on the Board?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**SRI M. S. SELVARAJAN :** ஸார், நமது ராஜ்யம் முழுமைக்கும்
ஆலயங்களை நிர்வகிப்பதற்கு ஜில்லாக்கள்தோறும் **Area Committee** அமைத்
திருப்பது போல ராஜ்யம் முழுமையும் ஒரே சீரான முறையில் நடைபெறு
வதற்கு இந்த முறை கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள தேவஸ்வத்தை
நிர்வகிப்பதற்கும் இம்மாதிரி **Area** கமிட்டி நியமிக்கின்ற முறை பின்பற்றப்
படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** கன்யாகுமரி தேவஸ்
வத்தை பரிபாலிப்பதற்காக ஒரு புதிய மசோதா தயாரிக்கப்பட்டு இருக்
கிறது. அந்த மசோதா மத்திய சர்க்காரின் அங்கீகாரத்திற்காக
அனுப்பப்பட்டு இருக்கிறது. அது கிடைத்ததும் இந்த மன்றத்தின் முன்
னல் வைக்கப்படும். அப்போது இந்த கருத்துக்களைப்பற்றி எல்லாம் ஆராய
லாம்.

**SRI T. S. RAMASWAMY PILLAI :** இந்த மசோதாவை எப்போது
இங்கு சமர்ப்பிக்கப்படும் ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM :** மத்திய சர்க்காரின் அங்கீ
காரம் கிடைத்த உடன் இங்கு வைக்கப்படும். இதற்கு முன் கிடைத்திருந்தால்
இந்த சபைக்கூட்டத் தொடர் கலைவதற்கு முன்பே கொண்டு வரலாம்
என்றுதான் எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அப்படி முடியவில்லை
என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister, whether in view of the provisions in the States Reorganization Act, there would be a separate Devaswom Board for the management of Devaswom properties in the Kanyakumari district and also whether there is a proposal to have a separate Devaswom Board? Also may I know whether in the proposed Devaswom Board there will be a nominee of the Ex-Rajapramukh of the Travancore-Cochin State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there is a proposal to have a separate Devaswom Board. But I cannot anticipate the provisions of the proposed Board which are under scrutiny by the Government of India. I cannot also anticipate what exactly would be the constitution of the Devaswom Board.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, now that the Assembly is coming to a close, and it will take about eight months, before the orders of the Government are isused, will the Government consider making some interim arrangement?



3rd April 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the interim arrangements is already there. The Commissioner, Hindu Religious and Charitable Endowments is in charge of the institutions.

MR. SPEAKER : Questions are over.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]**

## II.—ANNOUNCEMENT BY THE HON. THE SPEAKER MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor of Madras has given his recommendation to the introduction in the Madras Legislative Assembly of the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958, and for the consideration in the Assembly of the Madras Animal Preservation Bill, 1958, as passed by the Madras Legislative Council.

## III.—CALLING ATTENTION TO THE CLOSURE OF TEXTILE MILLS DURING PERIODS OF POWER CUT.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. கே. கோதண்டராமன்
அவர்கள் 40-வது ரூல் பிரகாரம் ஒரு அவசர பிரேரணையை கனம் மந்திரி
அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிருர். அதற்கு அனுமதி
தந்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் அதைப்பற்றி சுருக்கமாக
பேசவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், நமது ராஜ்யத்தில் இருக்கக் 9-30 a.m.
கூடிய பஞ்சாலை மில்களுக்கு போதுமான அளவுக்கு கரண்ட் சப்ளை இல்லாத
காரணத்தால் ஒவ்வொரு பிரதேசத்திலும் மூன்று ஷிப்டுகள் இருக்கக்
கூடிய மில்களில் எல்லாம் இரண்டு ஷிப்டுகளாக குறைக்கப்பட்டு வருகிறது.
அதேபோன்று மில்லில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை
யும் குறைக்கப்பட்டு வருகிறது. அதற்கு காரணம் இன்றைக்கு இருக்கக்
கூடிய கரண்ட் விஷயம். கரண்ட் போதிய அளவு கிடைக்கவில்லை என்று
சொல்லக்கூடிய அதேநேரத்தில் பல மில்களிலும் ஜெனரேட்டர்கள் இருக்
கிறது. அவைகளை ஓட்டுவதின் மூலமாக கரண்ட் உற்பத்தி செய்யமுடியும்.
அதன் மூலம் எல்லா தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்க முடியும்.
ஏற்கெனவே இருக்கக்கூடிய சம்பளம் போதாது என்றும் சம்பள உயர்வு
வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் இப்போது
பாதி வேலையாக ஆக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் தொழிலாளர்கள்
இன்றைக்கு இருக்கக்கூடிய விலைவாசிகளின் அடிப்படையில் தொழிலாளர்
கள் வாழ்க்கை நடத்தமுடியாமல் கஷ்டப்படுகிருர்கள். ஆகவே இன்றைக்கு
எந்தெந்த மில்களில் எல்லாம் ஜெனரேட்டர்கள் இருக்கிறதோ அந்த
மில்களில் எல்லாம் அதன் மூலமாக கரண்டை கூடுதலாக உற்பத்தி செய்
வதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்குள்ள அதிகாரம்
எனக்கு கிடையாது என்று தொழிலாளர் இலாகா அமைச்சர் அவர்கள்
சொல்லக்கூடும். ஆனால் எலக்ட்ரிஸிட்டி மந்திரி அவர்கள் மூலமாக
இதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே இதன் மூலமாக நட
வடிக்கை எடுத்து கரண்டு கூடுதல் உற்பத்தி பண்ணுவதற்கு வழி செய்து
கொடுப்பது, தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் வாழ்க்கைத்தரத்தை
நடத்துவதற்கு வசதி செய்து கொடுப்பது போலாகும். குறிப்பாக குடியாத்
தம் திருமகள் மில்லிலே ஒரு ஜெனரேட்டர் இருக்கிறது. அந்த ஜென
ரேட்டரை ஓட்டவேண்டுமென்று சொன்னால், அது பழுது அடைந்திருக்
கிறது, சாமான்களுக்காக எழுதியிருக்கிறோம், இன்னும் வரவில்லை என்று
சாக்குப் போக்குகள் சொல்லப்படுகின்றன. உண்மையிலேயே, ஜெனரேட்டர்

[Sri V. K. Kothandaraman} [3rd April 1958

கெட்டிருக்கிறதா அல்லது வேண்டுமென்றே சொல்லுகிருர்களா என்பதை பரிசீலனை செய்து எந்தெந்தப் பஞ்சாலை மில்களிலே ஜெனரேட்டர்கள் இருக்கின்றனவோ, அவைகளை ஓட்டுவதன் மூலம் முழு வேலை கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, இந்த ஜெனரேட்டர்களை உடனடியாக ஓட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறிக்கொண்டு, எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, in view of the deteriorating power position in the Hydro-Electric Systems of the State on account of increased power consumption and depleted storages of reservoir, etc., and in order to meet the power demand and consumption in the Hydro-Electric and the Madras Electricity Systems, the Madras State Electricity Board has imposed a 25 per cent cut in power supply on all except certain essential services and domestic consumers having a monthly consumption of 20 units and less.

Some textile mills have their own standby or emergency sets for producing electricity to run the mills. Government have no information as to whether the textile mills are or are not operating such standby sets, during the power cut and if not the reasons therefor.

The Government have no power to compel the mills to use the standby sets to make up for the cut in power-supply to the mills. Government however, appeal to Industrialists to mitigate the hardship caused by the power cut by utilizing any power capacity they may possess.

Sir, workers have remedies under the Industrial Disputes Act in regard to closure, lay off or retrenchment, if any, caused by the power cut.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (SECOND AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill *, 1958.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958.'

The motion was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

* Published in the *Fort. St George Gazette*, dated 3rd April 1958.



3rd April 1958]

## V.—BUDGET FOR THE YEAR 1958-59.

### VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—DEMAND XXI—INDUSTRIES AND CINCHONA.

MR. SPEAKER : We are now going to discuss Demand XXI—Industries and Cinchona. The time allotted for the Demand is three hours.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,00,42,300 under Demand XXI—Industries and Cinchona.'

SRI K. VINAYAKAM : On a point of order, Sir. Is it not the Parliamentary procedure that the Hon. Minister will have to introduce the Demand on the recommendation of the Governor? Or can the Hon. Minister himself introduce it?

MR. SPEAKER : It is presumed that the Demand has been introduced on the recommendation of the Governor. Technically the hon. Member is right.

SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I think hon. Members read the Order Paper. It has already been mentioned there that on the recommendation of the Governor, the Demands will be moved.

THE HON. SRI C. SUBRAMANIAM : The recommendation of the Governor is not given for the first time now. It has already been granted. When any Hon. Minister moves a Demand he does so on the recommendation of the Governor. Otherwise he has no power to move any Demand here.

MR. SPEAKER : The hon. Member Sri K. Vinayakam is raising an academic discussion. He knows that the Demands are moved on the recommendation of the Governor.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ராஜ்ய விவகாரங்களிலே மிகவும் முக்கியமான ஒரு விஷயம் இருக்குமேயானுல் அது தொழில் இலாகாவைப் பற்றியதுதான். நாட்டிலிருக்கும் மக்களுடைய முன்னேற்றத்திற்கும், அவர்களுடைய தரம் உயருவதற்கும் மிகவும் அவசியமானது நாட்டில் தொழில் பெருக்கு ஏற்படவேண்டியது, கைத்தொழில் அபிவிருத்தி செய்ய வேண்டியது என்பனவைகள். இதை ஒட்டித்தான் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காக, சென்ற வருஷத்தில் என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது எல்லாவற்றையும் விரிவாக எடுத்துரைத்து அறிக்கை ஒன்றை அச்சிட்டு சபை முன்னுல் சமர்ப்பித்திருக்கிறேன். அந்த அறிக்கையைப் படித்துப் பார்க்கும்பொழுது என்னென்ன திட்டங்கள் போடப்பட்டன, என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, இவை எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பது எல்லாம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் இதை நன்ருகப் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இந்த அறிக்கையைப் படிக்கிற காலத்திலே, பல இடங்களில் செலவு குறைவாக இருப்பதாகக் காணப்படும். உதாரணமாக இந்த அறிக்கையில் 12-வது பக்கத்தை எடுத்துக்கொண்டால்,

[Sri R. Venkataraman] [3rd April 1958

**Brassware Unit, Kumbakonam—**

| | LAKHS. |
|---|---|
| Total cost .. .. .. .. .. .. | 7·83 |
| Budget Provision .. .. .. .. .. | 2·32 |
| Expenditure up to 31st December 1957 .. .. | 0·76 |

என்று போடப்பட்டிருக்கிறது. இதை வைத்துக் கொண்டு, கனம் அங்கத்
தினர்கள் ஏதோ செலவுகள் சரிவரச் செய்யப்படவில்லை என்ற தவருன
அபிப்பிராயத்துக்கு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம்
என்னவென்ருல், மற்ற இலாக்காக்களிலே "**Proportionate expen-
ture**" மூன்று மாதங்களுக்கு ஒரு முறை செய்ய முடியும். ஆனுல்
கைத்தொழில் இலாக்காவிலே, வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்கள்
வரவேண்டியிருப்பதாலும், இயந்திரங்கள் முக்கியமான செலவாக இருப்ப
தினுலும், இயந்திரங்கள் வந்தவுடனே தான் செலவு நான்கு லட்சம், ஐந்து
லட்சம் என்று உயர்ந்துவிடும். அவைகள் வருகிற வரையிலும் குறைவாகக்
காணப்படும். இயந்திரங்கள் இன்னும் வரவேண்டிய காரணத்தால் செலவு
குறைவாக காட்டப்பட்டிருக்கிறது. கொடுத்திருக்கிற விவரங்களை படித்துப்
பார்த்தால், எல்லா இடங்களிலும் செலவு குறைவாக இருப்பதற்குக் கார
ணம் இயந்திரங்கள் இன்னும் வந்து சேரவில்லை என்று ஒரே காரண
மாகவே இருக்கும்.

அடுத்தபடியாக, இந்தத் தொழில் மான்யக் கோரிக்கை வருகிறபொழுது
கைத்தறி சம்பந்தமான பிரச்னையை எடுத்துக் கொள்ளலாமென்று சொன்
னேன். அது சம்பந்தமாக ஒரு அறிக்கை அச்சிடப்பட்டு அங்கத்தினர்
களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்கிறபொழுது, கவர்னர்
பெருமான் உரையின் மீது நான் பேசிய காலத்தில், சென்னை ராஜ்யத்தில்
கைத்தறி நெசவுத்துணி விற்பனையில் ஒரு தேக்கம் ஏற்பட்டிருக்கிறது,
அதைத் தவிர்ப்பதற்கு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ள
வேண்டும், அதனுடைய அளவு சுமார் 2½ கோடி ரூபாயாக இருக்குமென்று
புள்ளி விவரங்கள் கொடுத்தேன். அதற்குப் பிறகு இந்த இரண்டு
மூன்று மாத காலங்களில் அந்தப் பிரச்னை ஒரளவும் குறையாமல் மேலும்
மேலும் அதிகரித்துக்கொண்டு போயிருக்கிறது என்பதை மிகவும் வருத்
தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சென்னை ராஜ்யத்திலே கூட்டுறவு
இயக்கம் சம்பந்தப்பட்ட மட்டில் துணித் தேக்கம் அப்பொழுது ஒரு கோடி
ரூபாயாக இருந்தது. இப்பொழுது இருக்கிற துணித்தேக்கம், கைத்தறி
இயக்கத்தில் மாத்திரம் 1 கோடியே 30 லட்சமாக உயர்ந்திருக்கிறது.
நாட்டில் இருக்கிற கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தில் 40 சத விகிதம் வந்
திருக்கிறது என்ற கணக்கை வைத்துக்கொண்டு பார்க்கிறபொழுது வெளி
யார், அதாவது மாஸ்டர் வீவர்களிடத்தில் இதனுல் தேக்கம் இதைவிட
குறைந்தது 1½ மடங்கு அதிகமாக யிருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டி
யிருக்கிறது. அவ்வாறு பார்க்கும்பொழுது கைத்தறி நெசவுத் துணித்
தேக்கம் 2½ கோடியாக இருந்தது இன்றைக்கு ஏறக்குறைய 4 கோடிக்கு
உயர்ந்திருக்கும் என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்
கொள்கிறேன். இடைக்காலத்தில் மில் துணிகளுக்கு எக்ஸைஸ் வரி விதிப்
பில் குறைவு செய்ததன் காரணமாக, கைத்தறித் துணிகளுக்கும், மில்
துணிகளுக்கும் விலை வேறுபாடுகள் அதிகரித்துவிட்டன. கைத்தறி துணிகள்
விலை அதிகமாகவும், மில் துணிகளின் விலை ஓரளவு குறைந்தும்
இப்பொழுது மார்க்கெட்டில் காணப்படுகிறது. ஆகவே அப்பொழுது நாங்கள்
சொன்னபடி, 1½ அணு ரிபேட்டைத் திருப்பித்தர வேண்டு
மென்று சொன்னது ஒவ்வாது. இரண்டு அணுவாகவாவது ரிபேட்டை
உயர்த்திக் கொடுத்தால் இப்பொழுது இருக்கிற கைத்தறித் துணித் தேக்கம்
குறைவுபடும். விற்பனையை அதிகரிக்க முடியும் என்பது சர்க்கா
ருடைய அபிப்பிராயம். அதை ஒட்டி மத்திய சர்க்காருக்கு கடிதங்கள்
எழுதிக் கொண்டிருக்கிருேம். இந்தப் பிரச்னையைப் பற்றி அங்த்தினர்கள்
விவாதிக்கிறபொழுது, அவர்களுடைய அனுபவத்தை ஒட்டிச் சொல்லு
வார்களேயானுல், நம்முடைய ராஜ்யத்தினுடைய பிரச்னை மற்ற ராஜ்யங்



3rd April 1958] [Sri R. Venkataraman]

களின் பிரச்னையைவிட சற்று வேறுபட்டதாக இருக்கிற காரணத்திலுலே,
நம்முடைய ராஜ்யத்தின் நிலைமைக்கேற்ற அபிப்பிராயங்களை எடுத்துச்
சொன்னுல், அதற்குப் பிரத்தியேகமான சலுகை அளிக்க வேண்டுமென்று
கேட்பதற்கு உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக முக்கியமான பிரச்னை ஒன்று எழுந்திருக்கிறது. கைத் 9-40
தறி துணி தேக்கத்தின் காரணமாக மில் நூல் விற்பனை குறைந்து விட்டது a.m.
என்று சொல்லி தென் இந்திய மில் முதலாளிகள் சில நாட்களுக்கு
முன்பு ஒரு தூது கோஷ்டியாக வந்து என்னை சந்தித்தார்கள். "நூல்
தேக்கம் அதிகரித்து விட்டது, அதனுல் இப்போது இருக்கின்ற அளவுக்கு
மில்களை ஓட்ட முடியவில்லை, ஓரளவு மணி நேரத்தை குறைத்துக் கொள்ள
வேண்டும், அல்லது மூன்ருவது ஷிப்டை மூட வேண்டும்" என்று அவர்கள்
கேட்டிருக்கிருர்கள். இதையும் நன்ருக பரிசீலனை செய்து, சமாளிப்பதற்
கான யோசனைகளை அங்கத்தினர்கள் கூறுவார்களானுல், சர்க்கார் அதை
ஏற்றுக்கொள்ளும் என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சேலம் மாக்னசைட் சம்பந்தமாக ஒரு வருஷ காலமாக
விவாதம் நடந்து வந்திருக்கிறது. அந்த விவாதத்தில் இந்த மாக்ன
சைட்டை சர்க்கார் எடுத்து நடத்த வேண்டும் என்று ஒரு யோசனை
சொல்லப்பட்டது. அதை தனியார் துறைக்கு மாற்றிக்கொடுக்க வேண்டும்
என்று மற்ருெரு யோசனையும் சொல்லப்பட்டது. விவாதம் நடக்கின்ற
காலத்தில் "ராஜ்யத்துக்கு நன்மை ஏற்படும் வகையில் தான் சர்க்கார்
முடிவு செய்யும் என்றும், கொள்கை அடிப்படையிலோ அல்லது வேறு
காரணங்களினுலோ எந்த விதமான முடிவும் செய்யப்படமாட்டது" என்றும்
திட்டவட்டமாக சொன்னேன். இது விஷயமாக சர்க்கார் ஒரு முடிவுக்கு
வந்திருக்கிருர்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பர்ன்
அண்டு கம்பெனி சேலத்தில் 70 லட்சத்துக்கு மேற்பட்டு மூலதனம் போட்டு
"பிரிக்ஸ்" செய்யக்கூடிய தொழிற்சாலை (**Refractory**) வைத்து நடத்து
வதாக ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். ஆகையால் இந்த மாக்னசைட்டை
அவர்களிடம் கொடுத்து விடலாம் என்று சர்க்கார் முடிவு செய்து விட்டது.
இந்த முடிவுக்கு வருவதற்கு முக்கியமான காரணம் இதை சர்க்கார்
நடத்தினுல் 3 லட்சம் ரூபாய்தான் லாபம் வரும். அங்கு ஒரு
"**Refractory**" நடத்துவது என்று சொன்னுல், ஒரு பெரிய தொழிற்
சாலை வருவதும் அல்லாமல் 1,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு
வேலை கிடைக்கும். இது சம்பந்தமாக மற்ற பல தொழில்களும் ஆரம்
பிக்க சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காரணத்தினுலேய சர்க்கார் இந்த
முடிவுக்கு வந்திருக்கிறது. மற்ற விவரங்கள் அறிக்கையில் இருக்கின்றன.
பதில் சொல்லுகின்ற காலத்தில் அங்கத்தினர்கள் சொல்லுகின்ற யோசனை
களைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,00,42,300 under Demand XXI—Industries and Cinchona."

எதிர் கட்சிகள் எல்லாம் சேர்ந்து கனம் கல்யாணசுந்தரம் அவர்
களின் 285-வது வெட்டுப்பிரேரணையை ஆதரிப்பதாக கேள்விப்படு
கிறேன். கனம் அங்கத்தினர் அதை பிரேரபனை செய்யலாம்.

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the allotment of Rs. 5,00,42,300 under Demand XXI—Industries and Cinchona, be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 5,00,42,300 under Demand XXI—Industries and Cinchona, be reduced by Rs. 100."

**How long will the Hon. Minister take for reply?**

**THE HON. SRI R. VENKATARAMAN : That depends on the hon. Members.**

MR. SPEAKER: Will half an hour do?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir; half an hour.

MR. SPEAKER: I ask the question with a purpose. The Indian National Democratic Congress and the Dravida Munnetra Kazhagam have given me two names each. One Independent also wants to speak. According to agreement, two leaders of Opposition parties should be given ten minutes each. The Hon. Minister has taken eight minutes. The Congress Whip has given me twelve names. In all it comes to 20. How to provide for all these 20 within such a short time allotted for the Demand is something beyond my comprehension, unless hon. Members are prepared to speak for five minutes each. The whole point is this. There is no point in the Business Advisory Committee considering the Demands and fixing the time for discussion of each Demand without taking into account the number of Members who may participate in the discussion on each Demand. It says ' two hours ' and I am given 20 names. Therefore, some rearrangement has got to be made. The Members of the Business Advisory Committee must take a realistic view of things. Things cannot go on like this. It seems to me very unfair to allow five minutes whether they are Congress Members or others on an important Demand like this.

THE HON. SRI C. SUBRAMANIAM: I think, we will give up discussion of Jails and have four hours for this Demand, which is important. I am sure hon. Members would be interested more in this Demand than the other and would like to make important points. So, there is no use of asking them to speak for five minutes. Four hours may be allotted for this Demand.

MR. SPEAKER: Is that the desire of the House?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Leaders of parties have agreed to the arrangement.

MR. SPEAKER: Even then there may be some difficulty in providing for all the twenty Members. The House must give me permission to cut out three or four Members, if necessary, at the end.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, the cut motion moved by the hon. Member, Mr. Kalyanasundaram, seeks to discuss the question of grant of permits to merchants. This is a matter which is within the exclusive right of the Central Government. We do not give them any permits or cancel any permits. It is really beyond the powers of the State Government.

SRI M. KALYANASUNDARAM: No, Sir. The Demand includes " the Director of Industries and Commerce, the Additional Director of Industries and Commerce and the Joint Directors of Industries and Commerce ". The permits are given only by the Additional Director of Industries and Commerce who comes within this Demand. So, my cut motion is perfectly in order.



THE HON. SRI R. VENKATARAMAN: I do not mind the cut motion. But it is not the correct position.

MR. SPEAKER: The Hon. Minister is not pressing his point.

THE HON. SRI R. VENKATARAMAN: So long as democratic form of Government is Government by debate, let there be any debate. It would be in public interest if more important things are discussed than mere iron permits.

SRI M. KALYANASUNDARAM: There seems to be no other thing here . . .

SRI K. VINAYAKAM: The Chair is the final authority to decide all that.

MR. SPEAKER: The hon. Member may touch upon other points than this.

SRI M. KALYANASUNDARAM: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் முக்யத்துவத்தை உணர்ந்து, விவாதிப்பதற்கு 4 மணி நேரம் ஒதுக்கப்பட்டு இருப்பதிலிருந்தே இது எவ்வளவு முக்கியமானது என்பதைக் குறித்து இந்த சபையில் எந்த விதமான கருத்து மாறுபாடும் இருக்க முடியாது. அடுத்து வரக் கூடிய வருஷம் தொழில்களுக்கு பெரிய நெருக்கடியை உண்டாக்கும் என்பதுதான் இப்போது இருக்கக் கூடிய அறிகுறி. நான் சில சமரசப் பேச்சுகளில் கலந்து கொண்டபோது, பெரிய மில் முதலாளிகள் ஆள் குறைப்பு, ஷிப்ட் குறைப்பு முதலிய யோசனைகளை சொல்லி வருகிறார்கள். அவர்களுடைய பாலன்ஸ் ஷீட்டைப் பார்க்கும்போது நூல் தேக்கம் அதிகமாக இருக்கிறது என்பதற்கு புள்ளி விவரங்கள் கொடுக்கிறார்கள். உதாரணமாக மதுரை மில்லில் இரண்டு கோடி ரூபாய் பெறுமானம் உள்ள நூல் தேங்கி இருக்கிறது. நான் பாலன்ஸ் ஷீட்டைப் பார்த்தேன். தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மதிப்பே குறைவு என்று சொல்கிறார்கள். " ஸ்டாக் நிறைய இருக்கிறது. போனஸ் குறைத்துக் கொடுப்பதற்காக குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள் " என்று தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் வாதாடுகிறார்கள்.

கைத்தறி ரிபேட்டை இரண்டு அணவாக அதிகரித்துவிட்டால் இந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்ற அபிப்பிராயத்தில் அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காருக்கு எழுதியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆனால் இந்த ரிபேட் குறைப்பதற்கு முன்பே நெருக்கடி ஆரம்பமாய் விட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். ரிபேட் சென்ற டிசம்பர் மாதம் குறைத்ததாக நான் எண்ணுகிறேன். கோவாபரேடிவ் சொசைடிகளாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி இப்பொழுது தேக்கம் இருக்கிறது. நான்கு கோடிக்கு மேல் தேக்கம் இருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டதை நான் வரவேற்கிறேன். அதற்கு மேல் அதிகமாக இருந்தாலும் இருக்கலாம். இவைகளை கோவாபரேடிவ் சொசைடிகள் வாங்குவதற்கு பணம் கிடையாது. பல சொசைடிகள் தங்கள் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கே முடியாமல் திண்டாடுகிறார்கள். ஸ்டேட் சொசைடிகள் இவைகளை வாங்குவதற்கும் பணம் இல்லை. அவர்களிடமே 85, 90 லட்சம் ஜவுளிகள் இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். எப்படி இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது என்று தீவிரமாக யோசனை செய்ய வேண்டும். இந்த சமயத்தில் மில் துணிமீது ஸெஸ் குறைத்து விட்டார்கள். குறைத்தது நியாயமா, அநியாயமா என்பது வேறு விஷயம், ஆனால் ஒரு நடவடிக்கை எடுக்கும்போது, எல்லா இராச்சியங்களையும் கலந்து, அங்கு என்ன என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை சிந்திக்காமல், மத்திய சர்க்கார் இந்த முடிவை எடுத்து இருக்கிறார்களா என்பது தெரிய வேண்டும். இராச்சிய சர்க்கார்களை கலந்து கொண்டார்களா? இல்லையா என்பது தெரியவேண்டும். ஸெஸ் குறைத்ததனால் பிரச்சினை

[Sri M. Kalyanasundaram] [3rd April 1958

9-50 a.m. தீவிரமாகும். ரிபேட்டை இரண்டு அணாவாக உயர்த்துவதை மத்திய சர்க்கார் வரவேற்கிறார்களா? எப்படிக் கொடுத்தால் இந்தப் பிரச்சினை தீரும் என்று யோசித்து, இராச்சிய சர்க்கார் பரிகாரம் தேட வேண்டுமென்றால், இப்பொழுது இருக்கும் ஜவுளிகளை கூட்டுறவு சொசைட்டிகளிலிருந்து, ஸ்டேட் சொசைடிகள் வாங்கவேண்டும் என்று முடிவு எடுக்கவேண்டும். அவர்களுக்கு போதுமான தொகையையும் இரண்டு கோடியோ, மூன்று கோடியோ, சொசைடிகளிலிருந்து ஜவுளிகளை வாங்க அவர்களுக்கு போதுமான வசதிகள் கொடுத்து, பிறகு விற்கும் காலத்தில் தள்ளுபடி செய்து கொடுத்து, ஏற்படும் நஷ்டத்தை சர்க்காரே பொருப்பெடுத்து ஏற்கும்படியான முடிவு எடுக்க வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரம் ஸ்டேட் சொசைட்டிகளுக்கு கொடுத்தால் தான் உடனடியாகப் பரிகாரம் காணமுடியும். அப்பொழுது தான் சொசைட்டிகளில், மாஸ்டர் வீவர்கள் இவர்களிடம் தேங்கி நிற்கும் ஜவுளிகள் அசைந்து கொடுக்கும், நூலும் அசைந்து கொடுக்கும். மில்களை மூடவேண்டாம். இந்தப் பிரச்சினை சுலபமானது அல்ல. அந்தக் காலத்தில் ஸ்பிண்டில் ஒதுக்கிய முறையால் வரும் விளைவு இது. ஆகவே இப்பொழுது, மில்களிலும் நெருக்கடி, கைத்தறியிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடியைத் தீர்க்க ரிபேட்டை கொஞ்சம் அதிகமாக்கி விடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. வியாபாரம் நடக்கும் முறையிலும், உணவுப் பொருள்கள் விலைவாசி ஏற்றமும் காரணமாக, துணி வாங்கும் சக்தி, மக்களிடம் குறைந்து இருக்கிறது. ரிபேட்டை அரையணா உயர்த்துவது மட்டும் தகுந்த பரிகாரம் ஆகாது. ஸ்டாக் தீரவேண்டுமானால், சொசைட்டிக்கு நல்ல முறையிலே வசதிகள் செய்து கொடுக்க வேண்டும், நஷ்டத்திற்கு சர்க்கார் ஈடு செய்ய ஒப்புக்கொள்ளவேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : கடைசியில் விற்றுத்தானே ஆகவேண்டும்.

**Sri M. KALYANASUNDARAM** : அதற்காகத்தான் சர்க்கார் நஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சேலம் மாக்னீஸைட் சம்பந்தமாக பர்ன் அண்டு கம்பெனிக்கு கொடுத்துவிட்டதை மந்திரி அவர்கள் கொஞ்சம் சந்தோஷத்தோடு தெரிவித்தார்கள். சந்தோஷப்பட வேண்டிய விஷயமா வருத்தப்பட வேண்டிய விஷயமா என்பது தெரியவில்லை. தொழிற்சாலை ஆரம்பிப்பது முக்கிய விஷயம். அதிலும் சர்க்காருக்கும் ஆதாயம் கிடைக்க வேண்டுமென்பது என் கவலை. நிதி அமைச்சர் அவர்களுடைய பிரச்னை பணம் இல்லை என்பது. ஆதலால் சேலம் மாக்னீஸைட், திருச்சி ஜிப்ஸம் இவைகளை சர்க்காரே நடத்த வேண்டும் என்பது என் கோரிக்கை. இப்பொழுது பர்ன் கம்பெனிக்கு கொடுத்தோமென்றால் இந்த சின்டிகேட்டும் அதுவும் வேறுவேறு இல்லை. இப்பொழுது இருக்கும் சின்டிகேட்டு தன்னுடைய சொத்துக்களை கொடுத்து அந்த கம்பெனியில் பார்ட்னர்களாக இருந்து நடத்தப்போகிறார்கள். எந்த வெள்ளைக்காரன் கடந்த 60 வருஷகாலமாக இலாபத்தை அடைந்து வந்தார்களோ அவர்களேதான் இப்பொழுதும் இலாபம் அடையப் போகிறார்கள். ஒரு வித்தியாசம் கிடைக்கும் இலாபத்தில் கல்கத்தாவில் இருக்கும் முதலாளிகளுக்கு பங்கு உண்டு. ஆனால் நம் சர்க்காருக்கு வரக்கூடிய வருமானம் என்ன? பூமியிலிருந்து வெட்டியெடுக்கக்கூடிய பொருளுக்காக வருஷம் ஒன்றுக்கு ரூபாய் 40 அல்லது 50 லட்சம் தான். ஆனால் சர்க்காரே எடுத்து நடத்தினால் அம்மாதிரி யோசனையை நான் பூரணமாக ஆதரித்து இருக்க முடியும். தொழிலாளிகளுக்கு வேலை கிடைக்கும் என்று சொல்லுகிறார்கள். இன்று அந்த தொழிற்சாலையில் 6,000 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அதில் புதிய தொழிற்சாலையில் 1,200 பேருக்குத்தான் வேலை கிடைக்கும். பர்ன் அண்டு கம்பெனி இயந்திரத்தை உபயோகித்து ஆள் சிக்கனம் செய்யப்போகிறார்கள். இந்த நிலையில் வேலை இழந்தவர்களுக்கு அவர்கள் எப்படி அதிகமாக வேலை கொடுக்க முடியும். ஆதலால் வேலை கிடைக்கும் என்ற வாதத்தை ஒப்புக்கொள்ள முடியாது. சர்க்காருக்கு நஷ்டம்தான். மேலும் புதிய தொழிற்சாலை நடை பெறக்கூடிய முறையில் நெருக்கடிகள் ஏற்படக்கூடிய நிலைமைதான் தோன்றுகிறது. ஆள் குறைப்பு, ஷிப்டுகள் மூடுவது போன்ற



3rd April 1958] [Sri M. Kalyanasundaram]

வைகளால் ஹைகோர்ட்டு உத்திரவைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. தொழிலமைச்சர் தந்திரமாக லாக் அவுட் என்று சொல்லி திறக்க வேண்டும் என்றார்கள். ஆனால் ஹைகோர்ட்டு யார் வேண்டுமானாலும் எந்த தொழிற்சாலையையும் எப்படி வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற சுதந்திரத்தை கொடுத்துவிட்டார்கள். அதிகாரத்தை அமைச்சர் தப்பித்தவறி கொடுத்தாலும் அதை ஹைகோர்ட்டு தடுத்துவிடுகிறார்கள். வரக்கூடிய காலத்தில் தொழில் நெருக்கடி அதிகரிக்கக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. என்பதைதான் நான் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த பிரச்சினைகளுக்கு பரிகாரம் தேடும்முறையில் சர்க்காரே மேன்மேலும் பெறும் தொழில்களை ஏற்று நடத்த முடியுமோ அந்த அளவுக்கு நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் அதிகம் இல்லாததால் வேறு விஷயங்களுக்கு நான் போகவில்லை. ஆனால் ஒன்று மட்டும் சபையின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் இரும்பு பொருள்கள் சம்பந்தப்பட்ட வரையில் அவை விவசாயத்திற்கும் குடிசைத்தொழில்களுக்கும் இன்னும் மற்றத் தொழில்களுக்கும் போதுமான அளவு ஒதுக்கப்பட வில்லை என்ற புகார்கள் இருந்து வந்து இருக்கின்றன. நானும் பல முறை எடுத்துக்கூறி இருக்கிறேன். விவசாயத்திற்கு என்று ஒதுக்கக்கூடிய ஷீட்டுகள், இரும்பு தகடுகள், வண்டிக் கட்டுகள் போன்ற இரும்பு சாமான்கள் அந்த அந்த ஜில்லாவுக்கு என்று ஒதுக்கப்படுவதில்லை.

Sir, for how many more minutes can I speak?

**Mr. SPEAKER** : The hon. Member has already spoken for 12 minutes. It is for him to decide how many more minutes he can reasonably ask for.

**Sri M. KALYANASUNDARAM** : Five more minutes, Sir.

**Mr. SPEAKER** : No, I can give only two more minutes. The Leaders of Parties also must have some consideration.

**Sri M. KALYANASUNDARAM** : நான் சில முக்கியமான விஷயங்களை பேசலாம் என்று இருந்தேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : Sir, I shall give five minutes from the time allotted to me to the hon. Member.

**Mr. SPEAKER** : Yes, I have no objection. I would like the hon. Members to appreciate my difficulties in the matter. There have been occasions when the hon. Members and some leaders of parties too exceeded the time-limit. Then, I am helpless. Now, the hon. Leader of the Opposition says that he will give five minutes from the time allotted to him to the hon. Member Sri Kalyanasundaram. Yes, he can do that. But, I want to make it clear to him that he will ultimately have only 5 minutes for his speech.

**Sri M. KALYANASUNDARAM** : அடிஷனல் டைரெக்டர் என்ற தனிப் பதவி இருந்ததை இப்பொழுது அபாலிஷ் பண்ணிவிட்டு இன்டஸ்ட்ரிஸ் டைரெக்டரோடு இணைப்பதாக செய்திருக்கும் முடிவை வரவேற்கிறேன். இது சிக்கனம் மட்டும் இல்லாமல் நேரடி கண்டிரோல் இருப்பதற்கும்

[Sri M. Kalyanasundaram] [3rd April 1958

உதவியாக இருக்கும். இதில் கண்ட்ரோல் இல்லாததால் கடந்த 4 அல்லது 5 வருஷங்கள் ஊதாரித்தனமாக விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்ட இரும்பு சாமான்கள், ஒரு சில வியாபாரிகள் சதி செய்து மோசடி செய்திருப்பதை பத்திரிகை படிப்பவர்கள் அறிவார்கள். இப்பொழுது எமரல்ட் என்ற கம்பெனி ஒன்று சென்னையில் இருக்கிறது.

MR. SPEAKER : The hon. Member cannot refer to private firms here.

SRI M. KALYANASUNDARAM : I am referring to them, because they are having permits . . .

MR. SPEAKER : The hon. Member is not right in referring to names of individual firms. Moreover, I think the matter is pending.

SRI M. KALYANASUNDARAM : Sir, I shall not refer to the merits of the case that is pending.

MR. SPEAKER : The hon. Member will be well-advised not to mention the names of private firms.

SRI M. KALYANASUNDARAM : இந்த ஷண்முகம் செட்டியார் தியாகராஜ செட்டியார் என்ற

MR. SPEAKER : I am sorry I must object to the mentioning of names of individuals who are not here to defend themselves.

SRI M. KALYANASUNDARAM : அவர்கள் மீது இப்பொழுது சர்க்காரால் ஒதுக்கப்பட்டிருந்த கோட்டாக்கள் பொய்யான பர்மிட்டுகள் வாங்கி அவைகளை துஷ்பிரயோசனம் செய்து அவர்கள் பேரில் வழக்கு இருக்கிறது. அந்த வழக்கு சரியான வழக்கா அல்லது பொய்யான வழக்கா என்பதற்கு நான் போகவில்லை.

MR. SPEAKER : I am afraid I cannot agree with you. "பொய்யானவழக்கா" is not for the hon. Member to decide. It is for the Court to decide.

SRI M. KALYANASUNDARAM : Sir, I am not commenting upon any case before a Court.

MR. SPEAKER : No, I am sorry I cannot allow the hon. Member to mention the names of individuals. He cannot refer to any outsider in this House. He can refer to general policies, but not mention the names of the individuals. I will not allow it.

SRI M. KALYANNSUNDARAM : சில வியாபாரிகள் என்று சொல்லுகிறேன்.

MR. SPEAKER : Yes, you can say like that. I have no objection.

SRI M. KALYANASUNDARAM : பெயரைச் சொல்லவில்லை. சில வியாபாரிகள் என்று சொல்லுகிறேன். சில வியாபாரிகளுக்கு பர்மிட்டுகள் வழங்கப்பட்டன. அந்த வியாபாரிகள் சம்பந்தப்பட்ட சர்க்கார் பைல்களைப் பார்த்தால், இப்பொழுதுள்ள மந்திரி அதற்கு புதிதாக இருக்கலாம்—அவர்கள் பேரில் 1953–54-ம் வருஷத்திலிருந்தே ப்ளாங்க் ரெக்கார்டு இருக்கிறது. முந்தராவை எப்படி ரைசிங் ஸ்டார் என்று சொல்லி அவர் மீது எப்படி புகார்கள் வந்ததோ, அப்படிப்பட்டக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இப்படி ஒரு ஐட்டம் புதியதாகத் தோன்றியது.



3rd April 1958] [Sri M. Kalyanasundaram]

இரும்புக்கும் இவர்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை. இரும்பு ஸ்டீல் போன்ற பொருள்களுக்கு பர்மிட்டுகள் வாங்கி அதை இவர்கள் துஷ் பிரயோசனம் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். மந்திரிகளுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த இவைகளை இப்படி துஷ்பிரயோஜனம் செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அன்று இண்டஸ்ட்ரியல் மந்திரியாக இருந்தவருக்கு இதைப் பற்றி நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் எந்த விதமான நடவடிக்கையும் இது வரையிலும் அவர்கள் பேரில் எடுக்கவே இல்லை. ஒரு தடவை இவர்கள் ரைசிங் ஸ்டார்களாக இருந்து பின்னால் வேறு பெயரில் வேறு நட்சத்திரங்களாக தோன்றக்கூடியவர்கள். அப்பொழுது வேறு பெயரை வைத்துக்கொண்டு இவர்கள் கம்பெனிகளை நடத்தி வருகிறார்கள். என்னிடமுள்ள புள்ளி விவரங்களை கவனித்தால் இது நன்றாகத் தெரிய வரும், வெங்காயம், மிளகாய் போன்ற பொருள்களுக்கு இவர்கள் நிறைய எக்ஸ்போர்ட் பர்மிட்டுகள் வாங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, செயற்கை பட்டுகளுக்குக் கூட இவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் அதாவது நான்கு வருஷ கணக்கை எடுத்துப் பார்த்தால் இவர்கள் பேரில் எவ்வளவு பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிய வரும். இவற்றையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தால் எவ்வளவோ பொருள்களுக்கு வியாபாரம் செய்வதற்கு இவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டிருப்பது தெரிய வரும். செயற்கை பட்டு வியாபாரத்தை கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுத்து வியாபாரம் செய்வதற்கு பதிலாக இவர்களுக்குக் கொடுக்கப்பட்டு அவர்கள் வியாபாரம் செய்து கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடிய வியாபார ஸ்தலம் எல்லாம் ஒரு மேஜை, ஒரு நாற்காலி, டெலிபோன் ஒரு போர்டு இவைகள் தான் இவர்களுடைய வியாபார ஸ்தலம். இதற்கு எமரல்ட் கம்பெனி என்று பெயர். இப்படி பல பெயர்களை வைத்துக்கொண்டு அவர்கள் வியாபாரம் செய்து வருகிறார்கள். பல ரூபத்தில் வியாபாரம் நடந்துகொண்டு வருகிறது. இவர்கள் பர்மிட்டுகளை வாங்கி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கொடுக்காமல் துஷ்பிரயோகம் செய்யக்கூடியவர்களுக்கு பர்மிட்டுகள் கொடுக்கப்பட்டு வருவதற்கு யார் யார் பொறுப்பு என்று கண்டுபிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி அவர்கள் பேரில் நடவடிக்கை எடுத்து அதைப்பற்றி இந்த சட்ட சபைக்கு ஒரு அறிக்கை விட்டால்தான் சர்க்காருடைய கௌரவம் இருக்கும். அந்த டிபார்ட்மெண்டுக்கும் கௌரவம் இருக்கும். இப்படி பல சலுகைகள் அவர்களுக்குக் காட்டப்பட்டிருக்கின்றன. என்னென்ன நடந்திருக்கிறது என்பதையெல்லாம் எனக்கு எடுத்துக் காட்ட முடியும். சர்க்காருடைய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்கு எனக்கு அனுமதி கொடுத்தால் அவர்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுக்கப்பட்டு அவைகளை அவர்கள் பயன்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிய வரும். அப்படி என்றால் எடுத்துக் காட்டவும் முடியும். அவர்கள் மீது இந்த சர்க்கார் ஏன் வழக்குப் போடக்கூடாது என்று கேட்கிறேன். 1955-ம் வருஷம் சிலவற்றைக் கண்டு பிடிக்கப்பட்டது. அதன் பிறகு 1955, 1956, 1957 ஆகியும் இன்னும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இப்படி கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? இந்த வியாபாரிகள் மோசடி செய்ததைக் கண்டு பிடிக்க என்ன நடவடிக்கை இது வரையிலும் எடுக்கப்பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று வருஷ கால தாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? தொழிலாளர்களுடைய போராட்டம் என்றால் அவர்கள் மீது உடனடியாக செக்ஷன் 151-ப்படி நடவடிக்கைகளை திடீர் திடீரென்று எடுத்துக்கொள்வது இல்லையா ? அதைப்போலவே இவர்கள் மீதும் உடனடியாக ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் மூன்று வருஷ காலதாமதம் ஆகிறது என்று கேட்கிறேன். இப்பொழுது அந்தக் கேஸ்கள் நடத்துவதற்கு பப்ளிக் ப்ராசிகூட்டர் இல்லையா ? அரசியல் கேஸ்களாக இருந்தால் எப்படி ஸ்பெஷல் பப்ளிக் ப்ராசிகூட்டரை நியமித்து கேஸ் நடத்துகிறார்களோ அப்படி ஏன் அவர்கள் விஷயத்தில் உடனடியாக கேஸ் நடத்த முன் வரவில்லை என்று கேட்கிறேன். எவ்வளவோ பொருள்களுக்கு பர்மிட்டுகள் வாங்கி வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பப்பட்டு

[Sri M. Kalyanasundaram] [3rd April 1958

ப்ளாக் மார்கெட்டுகள் நடைபெறுகின்றன. இப்படி வெளி நாடுகளுக்கு அனுப்பி மோசடி செய்கிறவர்களை ஏன் அரெஸ்ட் செய்ய முன் வரவில்லை. மற்றவர்களை அரெஸ்டு செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்படுவதுபோல் இவர்களையும் ஏன் அரெஸ்ட் செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று கேட்கிறேன். அப்படிக் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா, அதைப்பற்றி இந்த சட்ட சபையில் எடுத்துச் சொல்வதற்கு உரிமை இல்லையா. இவைகளைத் தெரியப்படுத்துவதற்குத்தான் ஒரு கட் மோஷன் கொடுத்திருக்கிறேன். இது முக்கியமான கட் மோஷன் இல்லை என்று சொல்வதற்கு இல்லை. சிறு தொழிலுக்கும், சிறு குடிசைத் தொழிலுக்கும் ஒதுக்கப்பட்ட பொருள்கள் வேறு ராஜ்யங்களுக்கு கள்ளத்தனமாக போவதற்குக் காரணமாக உள்ளவர்களின் மீது ஏன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று கேட்பதற்காகத்தான் கட் மோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கள்ளத்தனமாக போகிறது என்பதைக் காட்டுவதற்குத்தான் கட் மோஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர தொழில் வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படும் வகையில் நான் கட் மோஷன் கொடுக்கவில்லை. தொழில் வளம் பெறுவதற்கு கனம் மந்திரிக்கு எவ்வளவு அக்கரை இருக்கிறதோ அவ்வளவு அக்கரை எனக்கும் இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உண்மையான நிலைமையை எடுத்துக் காட்டுவதற்குத்தான் இதைக் கொடுத்திருக்கிறேன். நிர்வாகம் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்கும்தான் இதைக் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்திருக்கும் கட் மோஷனினால் தொழில் வளம் பெருகுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER :** எல்லோருக்கும் பத்து நிமிஷங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. மணி அடித்தவுடன் தங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ள வேண்டும் என்று கனம் அங்கத்தினர்களை நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

*** Sri K. R. VISWANATHAN :** கனம் தலைவர் அவர்களே, இந்த தொழில் மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற ஆசைப்படுகிறேன். நாட்டில் தொழில் வளம் பெருகுவதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும் நாட்டில் இருக்கக்கூடிய வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் இன்று வழிகோலப்படுகிறது. இன்று நாட்டின் தலைவர்களுடைய நோக்கம் எல்லாம் தொழில் துறையில் இத்தகைய இலட்சியங்களை நிறைவேற்றவேண்டும் என்பதுதான். இந்த முறையில் முக்கியமாக கனரக தொழில்களை உற்பத்தியைப் பெருக்குவதற்கு உபயோகித்துக்கொள்ள வேண்டும். கனரக தொழில் வெற்றி அடைவதற்கு தமிழ் நாட்டில் அதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் இல்லை என்று இது வரையிலும் சொல்லப்பட்டது. அப்படிச் சொல்லிக்கொண்டு வந்த காலம் போய் இன்றைக்கு நிலக்கரி, இரும்பு, மாக்னசைட் போன்ற எல்லா உலோகப் பொருள்களும் நமக்கு கிடைத்திருக்கின்றன. அந்த உலோகப் பொருள்களை எடுத்து பயன்படுத்திக்கொள்ளவும் அவைகளிலிருந்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காகவும் எங்கெங்கே ஆலைகளை ஏற்படுத்த வேண்டுமோ அந்த வழியில் நமது சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதை அறிந்து நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்கு சிறு தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கும் துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்னதாக நாட்டின் பல ஜில்லாக்களுக்கு சென்று பார்க்கும்போது ஆங்காங்கே சமுதாய அபிவிருத்தி திட்டப் பிரதேசங்களிலும் மற்ற பிரதேசங்களிலும் பல சிறு தொழில்களை வளர்க்க வேண்டும் என்பதற்காகவும், கைத் தொழில்களை பெருக்க வேண்டும் என்பதற்காகவும் பல லட்சக்கணக்கான பணத்தை செலவழிக்க ஆங்காங்கே பல தொழில்களை ஏற்படுத்தி மக்களுடைய கருத்துக்களை தொழில்வழி திருப்பியிருக்கிறார்கள். எங்கெங்கே எந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம், எந்தத் தொழிலை



3rd April 1958] [Sri K. R. Viswanathan]

அபிவிருத்தி அடையச் செய்யலாம், நாட்டை எந்த அளவில் தொழில் வளம் பெறச் செய்யலாம் என்று சிந்தித்துக்கொண்டு அந்தச் செய்கையில் இறங்கியிருக்கிறார்கள். இதைக் கண்டு மகிழ்ச்சியடைய வேண்டியதாக இருக்கிறது. முக்கியமாக பங்கு கொண்டிருப்பது இண்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ்ஸ் என்கிற முறையில் சிறு கைத்தொழில்களை பெருக்க இக் கூட்டுறவு முறையில் முக்கியமாக கவனத்தை செலுத்திக்கொண்டு வருகிறார்கள். மற்றும் தறி இல்லாத நெசவாளர்களுக்குக்கூட கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் அவர்களுக்கு தொடர்ந்து வேலை கிடைப்பதற்குக் இந்த முறை உதவி இருக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட இண்டஸ்ட்ரியல் கூட்டுறவு இயக்கம் பல ஊர்களில் பல நகரங்களில் ஏற்படுத்தி அங்கே இருக்கிற தறி இல்லாத நெசவாளர்களுக்கு வேலைகொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல சிறு தொழில்களையும் ஆரம்பித்திருக்கிறார்கள். இதைத் தவிர செருப்புத் தைத்தல், பூட்டு செய்தல் போன்ற இப்படிப்பட்ட தொழில்களும் ஈரோடு, திண்டுக்கல் போன்ற முக்கியமான இடங்களில் நடைபெற்று வருகின்றன. அங்கே மக்கள் ரொம்பவும் ஆர்வத்தோடு இதில் வேலை செய்து வருகிறார்கள். அங்கேயெல்லாம் பலருக்கு வேலைகளும் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே இப்படிப்பட்ட முறைகளிலும் சர்க்கார் சிறு தொழில்களை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

தனிப்பட்டவர்கள் இந்த துறையில் தொழில்களை நடத்துவதற்கு முன் வந்தால் அவர்களுக்கும் கடன் கொடுத்து உதவி செய்கிறார்கள். சென்ற ஆண்டு அப்படி கடன் கொடுப்பதற்கு என்று 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருந்தார்கள். இந்த ஆண்டும் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இப்படி ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய தொகையானது விரைவில் அவர்களுக்குச் சென்று அவர்கள் பயனடையாவிட்டால் உண்மையிலேயே அவர்கள் இதன் பயனை அடைய முடியாமல் போய்விடும். ஆகவே அவர்களுக்கு காலாகாலத்தில் இந்தக் கடன் உதவியைக் கொடுக்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். 10–10 a.m.

அடுத்தபடியாக, சர்க்கார் தொழில் விஸ்தரிப்பு கொள்கையின்பேரில் ஒரு சில யோசனைகள் சொல்ல நான் விரும்புகிறேன். நம்முடைய நாடு விவசாய நாடு. விவசாய நாடாக இருக்கும் நம் நாட்டில் நீர் வளமும் நில வளமும் செழித்து விளங்குகின்றன சில இடங்கள். சில இடங்கள் வரண்ட பிரதேசமாக விளங்குகின்றன. வளம் கொழிக்கின்ற பிரதேசங்களில் இருக்கும் மக்கள் ஆண்டிலே பெரும்பகுதி காலம் வேலை உடையவர்களாக இருக்கிறார்கள். அம்மாதிரி இல்லாமல் வரண்ட பிரதேசங்களாக இருக்கும் சங்கரன்கோவில், உடையார்பாளையம் போன்ற இடங்களில் உள்ள மக்கள் ஒரு ஆண்டில் 4 மாதங்கள்தான் வேலை உடையவர்களாக இருக்கிறார்கள். மற்ற 8 மாதங்களுக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். அத்தகைய பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு நாம் வேலை கிடைக்கும்படி செய்யவேண்டும். அம்மாதிரி வரண்ட பிரதேசங்கள் நம் ராஜ்யத்தில் எங்கு எங்கு இருக்கின்றன என்பதை கணக்கிட்டு, ஆங்காங்கு இருக்கின்ற இயற்கை வசதிகளைக்கொண்டு சிறு தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டும் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்கின்ற பொழுது அங்கு இருக்கும் தனிப்பட்ட நபர்கள் முன்வரவேண்டுமென்று எதிர்பார்ப்போமானால், அங்கு இருப்பவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாக இருப்பதன் காரணத்தினாலே, அவர்களால் தாங்களாகவே சிறு தொழில் வளர்ச்சிக்காக வேண்டிய காரியங்களைச் செய்ய முடியாது. ஆகவே, சர்க்கார் அவர்களுடைய தூண்டுதலுக்கு உதவும்படி, சிறு தொழில் வளர்ச்சிக்கு, பின்தங்கிய பிரதேசத்தில் இருக்கிற மக்கள் தொழில் துறையில் ஈடுபடுவதற்கு சர்க்காரே தூண்டுதலாக வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று நான் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உடையார்பாளையம் தாலூகாவில் முந்திரிப் பயிர் அதிகமாக விளைவிக்கப்படுகிறது. 30,000 ஏகர் முந்திரிப் பயிர் விளைவிக்கப்படுகிறது.

[Sri K. R. Viswanathan] [3rd April 1958

இப்போது முந்திரிக்கொட்டையை வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கொட்டையிலிருந்து பருப்பை எடுத்து அதை பதப்படுத்தி மேலே நாடுகளுக்கு அனுப்பும் முறையையும், அந்த கொட்டையிலிருந்து எண்ணெ எடுத்து, அந்த எண்ணெயிலிருந்து பிளாஸ்டிக் போன்ற சாமான்கள் செய்யும் முறையையும் அந்த இடத்தில் உள்ளவர்களே கற்றுக்கொண்டு செய்வதற்கு ஏற்பாடு செய்து, அதற்கு வேண்டிய இயந்திர சாலைகளையும் அமைத்துக்கொடுக்கவேண்டும். அதனால் அங்கு பல கூலி ஆட்களுக்கு வேலை கிடைக்கும். இதை சர்க்கார் முக்கியமாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சர்க்கார் சொல்லலாம் இது சிறு தொழிலாக இருப்பதனால், அங்கு இருக்கும் மக்கள் இதில் முதலிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும், அதற்கு பிறகு சர்க்கார் உதவிக்கு வருவார்கள் என்று. நான் முன்பு சொல்லியபடி இது பின் தங்கிய பிரதேசமாக இருப்பதனால், சர்க்காருடைய தூண்டுதல், சர்க்காரின் உதவி, சர்க்காரின் "இனிஷியேடிவ்" முதலில் அங்கு வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உடையார்பாளையம் தாலூகாவிலும், பெரம்பலூர் தாலூகாவிலும் ஜிப்ஸம் அதிகமாக கிடைக்கிறது. அங்கே "பெர்டிலைஸர் பிளாண்டு" உர உற்பத்தி சாலை ஒன்று ஏற்படுத்தவேண்டுமென்று வெகு நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். முன்பு ஒரு சமயம் அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது கூட, அங்கு கிடைக்கின்ற ஜிப்ஸத்தை தனியார் கையில் விடப்போவதில்லை, அதற்கு ஒரு தடை ஏற்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அதுபற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்த இடத்தில் ஏற்படுத்திய தடையை பயன்படுத்துக்கொண்டு, அந்த ஜிப்ஸத்தை வைத்துக்கொண்டு, ஒரு உர உற்பத்தி சாலையையும், "சல்பூரிக் ஆஸிட்" உற்பத்தி சாலையையும் அரியலூருக்குப் பக்கத்திலே பெரம்பலூர் அல்லது உடையார்பாளையம் தாலூகாவில் அமைத்துக்கொடுத்து, அதன் மூலம் 10,000 மக்களுக்கு தொழில் செய்வதற்கு வசதி ஏற்படும்படி செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் கிடைக்காத இடங்களிலே நூற்றுக்கணக்கான அடிகள் ஆழத்திற்கு சென்று தண்ணீர் எடுப்பதற்காக குழாய் கிணறுகளை சர்க்கார் இறக்கியிருக்கிறார்கள். அவைகள் கைத்தொழில் இலாகாவினால் இறக்கப்படுகின்றன. இந்த குழாய் கிணறுகள் இறக்கப்பட்டவுடன், ஆங்காங்கு இருக்கிற உள்ளாட்சி மன்றங்கள், அதாவது பஞ்சாயத்து போர்டுகள், ஜில்லா போர்டுகள் இவைகளை பராமரிக்க வேண்டுமென்று சொல்லி விட்டு விடுகிறார்கள். ரூ. 6,000 முதல் 10,000 வரை செலவழித்து இறக்கப்பட்ட பல கிணறுகள் இன்றைக்கு உள் ஆட்சி நிர்வாகத்தினால் பராமரிக்கப்படாமல் கைவிடப்பட்டு இருக்கின்றன. ஏன் சர்க்கார் இந்த குழாய் கிணறுகளை பராமரிக்கக்கூடாது என்று கேட்கிறேன். உள் ஆட்சி மன்றம் அந்த குழாய் கிணறுகளை எடுத்துக்கொண்டு பராமரித்தால் அதுவும் மக்களுடைய பணம்தான். சர்க்கார் அதை பராமரித்தால் அந்தப் பணமும் மக்களுடைய பணம்தான். ஏன் சர்க்கார் இந்தக் கிணறுகளின் பராமரிப்பை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து இறக்கப்பட்ட அந்தக் கிணறுகள் பாழாகப்போகவிடுவது சரியா? இம்மாதிரி உடையார்பாளையம் தாலூகாவில் லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவில் இறக்கப்பட்ட 23, 24 கிணறுகள் வீணாகி கிடக்கின்றன என்பதை எடுத்துக்காட்டி, இவைகளின் பராமரிப்பை சர்க்கார் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய பொருளாதாரத் துறையிலே வேலை வாய்ப்பு வசதிகள் எவ்வளவு முக்கியமான கேந்திரமாக இருக்கின்றன என்பதை நாம் உணர்கிறோம். உற்பத்தியை பெருக்குவதற்கு, வேலை வாய்ப்பு குறைவாக இருந்தாலும் கனரகத் தொழிலுக்கு முக்கியத்தும் கொடுக்கிறோம். இப்பொழுது அநேக அங்கத்தினர்கள் சொன்னார்கள் வாங்கும் சக்தி குறைந்துவிட்டது, அதனால் துணித் தேக்கம் இருக்கிறது என்று. வேலை வாய்ப்புகள்தான் நாட்டினுடைய வாங்கும் சக்தியையும், பொருளாதாரத்



3rd April 1958] [Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

துறையின் அபிவிருத்தியையும் கொண்டுவருமானதால், இதற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படுகிறது, எவ்வளவு அதிகமாக நிதி ஒதுக்கலாம், ஒதுக்கிய நிதியை எப்படி அதிகமாக ஆட்களுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய விதத்தில் செலவழிக்கலாம் என்பதில் இன்னும் அதிகமாக கவனம் செலுத்தி திட்டவட்டமாக திட்டங்கள் போட்டு, எவ்வளவு தூரம் இதற்காக நிதியை மக்களிடமிருந்து கடனாகவும், மத்திய சர்க்காரிடமிருந்தும் பெறமுடியுமோ, அவ்வளவையும் பெற்று அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கனரகத் தொழில்கள் சம்மந்தப்பட்ட வரையில் எந்தெந்த இடத்தில் எது கிடைக்கிறதோ, அதை வைத்துதான் செய்யமுடியும். ஆனால், சிறு கைத்தொழில்கள் வளர்ச்சி அப்படியல்ல. எந்தெந்த இடங்களில் வேலை வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறதோ, எந்தெந்த இடங்களில் மக்கள் பிற்போக்காக இருக்கிறார்களோ, அங்கே ஏதாவது தொழில் வளர்வதற்கு வாய்ப்பு உண்டா என்பதை ஆராய்ந்து அறிந்து அந்த இடத்தில் சிறு கைத்தொழில்களுக்கு, குடிசை கைத்தொழில்களுக்கு வாய்ப்பு கொடுத்தால்தான் அங்கு இருக்கும் மக்களுக்கு வேலை கொடுக்கமுடியும். உதாரணமாக நான் ஒன்றிரண்டு மட்டும் சொல்லுகிறேன். நேரம் அதிகமில்லை.

முதுகுளத்தூர் தாலூகாவில் பல இடங்களில் நிறைய சுண்ணாம்பு கிடைக்கிறது. இன்னும் என்னென்ன கிடைக்குமோ எனக்கு தெரியாது. கீழத் தாலூக்காக்களில் தொழில் வளம் வேண்டும், கட்டாயம் அங்கு ஒரு சிமெண்டு தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டுமென்று பல பேர்கள் கேட்டார்கள். பிற்போக்கு பிரதேசத்திலுள்ள ஜனங்களுக்கு ஆர்வமும் ஆத்திரமும் தொழிலில் அதிகமாக இல்லை என்று சொல்லிவிடலாம். அப்படிச் சொல்லாமல் அந்த இடத்தில் சர்க்கார் முயற்சி எடுத்து என்னென்ன வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை பரிசீலனை செய்து பார்த்து அங்கே ஏதாவது செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மானாமதுரை எப்பொழுதுமே மண் பாண்டங்களுக்கு பெயர்போன இடம். திருப்புவனம், திருப்பாச்சேரி போன்ற இடங்களில் "ஸிராமிக்ஸ், கிளாஸ் பாட்டரீஸ்" ஒர்க்ஸ் போன்ற தொழில்களை ஏற்படுத்தி செய்யலாம். அதிகமாக குடிசைத் தொழில்களை ஏற்படுத்தினால்தான் அதில் மக்களுக்கு நன்மை இருக்கும். நாட்டில் இருக்கும் தற்போதைய நிலையிலே குடிசைத் தொழில்களை ஏற்படுத்தினால்தான் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாங்கித்தர முடியும். நாட்டினுடைய பொருளாதார முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டுதான் குடிசைத் தொழிலைப் பற்றி நான் விரிவாக சொல்ல ஆசைப்படுகிறேன். மந்திரி அவர்கள் கூட சொன்னார்கள், "இந்த புஸ்தகத்தில் பார்த்தால் ஐந்து வருஷங்களுக்கு திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனால் செலவழித்திருப்பதைப் பார்த்தால் உங்களுக்கு கொஞ்சமாகத் தெரிகிறது. அப்படியில்லை. சீக்கிரமாக ஒதுக்கிய தொகையை செலவழிக்க முடியும்" என்று. இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுகளை பொறுத்தவரையில் இயந்திரங்கள் வாங்குவதிலே செலவழித்துவிடலாம். ஆனால் "ஹாண்டிகிராப்ட்ஸ்" குடிசைத் தொழில்களைப் பொறுத்தவரையில் வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்கள் வரவழிக்கத் தேவையில்லை. "வில்லேஜ் இண்டஸ்டிரீஸுக்கு" ரூ. 223 லட்சம் என்று கொடுத்திருக்கிறது. ஆனால் 1958–59ல் கூட சுமார் ரூ. 12 லட்சத்திற்குதான் நாம் திட்டமிட்டிருக்கிறோம். அதனுடைய முக்கியத்துவத்தை நாம் பார்க்கும்பொழுது, "வில்லேஜ் இண்டஸ்டிரீஸ்" மூலமாகத்தான் வேலை வாய்ப்புகள் அதிகமாக கிடைக்கும் என்பதைப் பார்க்கும்பொழுது அதற்குக் காரணம் "பாட்டில் நெக்ஸ்" என்று சொல்லுகிறார்களே அவைகள் யாவை, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் குறைவா என்பதை கவனித்து நிச்சயமாக ரூ. 223 லட்சம் மட்டுமல்ல, இன்னும் அதைவிட இரண்டு பங்கு தொகை செலவழிப்பதற்கு திட்டமிட்டு வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதில் நமக்கு ஒரு
கொள்கை அடிப்படை மிகவும் அவசியம். அதுபற்றி ஒன்றிரண்டு வார்த் 10-20
தைகள் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். முக்கியமாக எண்ணெ ஆட்டு a.m.
தலை எடுத்துக்கொள்வோம். இப்போது வார்தா செக்கு என்ற திருத்தியமைக்கப்பட்ட செக்கு வந்திருக்கிறது. அவைகளை உபயோகிப்பது கிராமங்

[Dr. Srimathi T. S. Soundaram Ramachandran] [3rd April 1958

களில் வெகு வேகமாகப் பரவிவருகின்றன. வார்தா செக்கு எண்ணெ ஆட்டும் தொழிலுக்கு புத்துயிரளித்திருக்கிறது. இதுபற்றி எனக்கு விவரமாகத் தெரியாது. எண்ணெய் ஆலைகளுக்குப் புத்துயிரளிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்திருக்கிறோமா? எண்ணெய் ஆலைத் தொழிலில் நவீன அபிவிருத்தி முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறோமா? எண்ணெய் ஆலைத் தொழிலிலும் நவீன அபிவிருத்தி முறைகளைப் புகுத்தி, கிராமங்களில் இருக்கும் எண்ணெய் ஆட்டும் தொழிலையும், அந்தத் தொழிலையும் சேர்த்து இரண்டையும் அபிவிருத்தி செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, கைக்குத்தல் அரிசித் தொழிலைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதைப்பற்றி இந்த சபையில் நான் ஆறு வருஷங்களாக சொல்லிவந்திருக்கிறேன். இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும். குடிசைத் தொழில்களில் ஒன்றாக இருக்கும் கைக்குத்தல் அரிசித் தொழில் அபிவிருத்தியடைய வேண்டுமென்பதற்காக மட்டும் நான் இதைச் சொல்லவில்லை. ஜனங்களின் ஆரோக்கியமும் அபிவிருத்தியடைய வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன். கைக்குத்தல் அரிசியில் "பி" வைடமின் அதிகமாக இருக்கிறது. மில்லில் தீட்டப்பட்ட அரிசியில் "பி" வைடமின் மிக மிகக் குறைவாக இருக்கிறது. நம் நாட்டு மக்களுக்கு ஏற்படும் நோய்களில் மிகப் பெரும்பாலானவை, "பி" வைடமின் இல்லாததலால் ஏற்படுபவைதான்; இதை நான் புள்ளிவிவரங்களைக் காட்டி நிரூபிக்கமுடியும். அப்படி இருக்கும்போது, கைக்குத்தல் அரிசி சம்பந்தமாக நாம் திட்டவட்டமான முடிவிற்கு வரவேண்டும்; இதுவரையில் இதுசம்பந்தமாக நாம் திட்டவட்டமான முடிவிற்கு வரவில்லை. மில்கள் இவ்வளவு அரிசிதான் அறைக்கவேண்டும் என்று கட்டுப்பாடு விதிக்க வேண்டும். அதேமாதிரி கேசரிப் பருப்பினால் மக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. கேசரிப் பருப்பானது, மனிதர்களுக்கு நோயை உண்டாக்கக்கூடிய விஷத்தன்மை உள்ளது என்று சொல்கிறோம். ஆகவே கேசரிப் பருப்பினால் மக்கள் பாதிக்கப்படாமல் பார்த்துகொள்ளவேண்டியிருக்கிறது. மில்கள் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசிதான் அறைக்க வேண்டுமென்று கட்டுப்பாடு விதிக்கவேண்டும். இதைச் செய்வதற்கு மத்திய சர்க்காரையோ மற்றவர்களையோ நாட வேண்டிய அவசியம் இல்லை. நாமே சுகாதாரச் சட்டத்தின்கீழ் சட்டமியற்றலாம். மேலும், பல வியாபாரிகள் மில்லில் நிறைய அரிசி அறைத்து "ஸ்டோர்" பண்ணிவைக்கிறார்கள். அவ்வாறு வெகுகாலமாகச் சேர்த்து வைக்கப்படும் அரிசியில் பூச்சிகள் வந்துவிடுகின்றன. அரிசியில் "பி" வைடமின் இருப்பது நமக்குத் தெரியாவிட்டாலும், பூச்சிகளுக்கு அது நன்றாகத் தெரிகிறது. பூச்சி புழுக்கள் சேர்த்துவைக்கப்படும் அரிசிக்கு வந்துவிடுகின்றன. ஏராளமாக அரிசி அறைத்து அதைத் சேர்த்துவைப்பதைத் தடுப்பதற்கும் சுகாதாரச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை அவசியம் செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தொழில்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான பல திட்டங்களை சர்க்கார் போட்டிருக்கிறார்கள். நல்ல கைத்தொழில்களுக்கு சர்க்கார் ஊக்கமளித்திருப்பதும் எனக்குத் தெரியும். இவைகளுக்காக ஒதுக்கப்படும் பணம் முழுவதும் செலவழிக்கப்படுகிறதா என்று எனக்குத் தெரியவில்லை. பல நல்ல தொழில்கள் இருக்கின்றன. எல்லாவற்றைப்பற்றியும் இங்கே விளக்கமாகச் சொல்வதற்கு எனக்குத் தெரியாது. அனேக இடங்களில் இருந்துவரும் வெண்கல வார்ப்புத் தொழில் விரைவில் அழிந்து போகக்கூடிய நிலைமையில் இருக்கிறது. பல நல்ல தொழில்கள் இப்போது அந்த நிலைமையில் இருக்கின்றன. திருவாடானைக்கோவிலைப் பார்த்தால் இவ்வளவு அழகாகக் கோயில் நிர்மாணிக்கும் ஸ்தபதிகள் இப்போது இருக்கிறார்களா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரம் தாலூகாவில் ப்ரும்மதேசத்திலும், வாக்கைக்குளத்திலும் வெங்கல வார்ப்பு வேலைகள் மிகவும் அழகாகச் செய்யப்படுகின்றன. அங்கே அந்தத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழி



3rd April 1958] [Dr. Srimathi T. S. Soundaram Ramachandran]

லாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லாவிட்டால், அவர்கள் மாற்றுக் கட்சியினராக மாறுகிறார்கள். இந்த தொழில்களை அழியாதபடி பாதுகாக்கவேண்டும்.

அம்பர் சர்க்காவைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த விஷயத்தில் கனம் தொழில் அமைச்சருக்கு நேரடியான தொடர்பு இல்லாவிட்டாலும் அம்பர் சர்க்காக்களை உற்பத்தி செய்வதில் அவருக்கு பொறுப்பு இருப்பதால் நான் கூறும் யோசனைகளை கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன். அம்பர் ராட்டை தொழிலை, "டீஸெண்ட்ரலைஸ்ட் மில்" தொழில் என்று சொல்வது தகும். அம்பர் ராட்டையில் பட்டை போடும் இயந்திரத்தை இன்னும் சுலபமாக இயங்கச் செய்வதற்கு வழி கண்டுபிடித்தால் நன்றாக இருக்கும். லட்சக் கணக்கான அம்பர் ராட்டைகளைத் தயாரித்து கிராமங்களில் பெண்களுக்குக் கொடுத்தால்அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் பணம் சம்பாதிக்க முடியும். இதைச்செய்யவேண்டும். அம்பர் ராட்டையைக் கண்டு பிடித்தவர் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீ ஏகாம்பரம் என்பவர் தான். நூற்பு முறையில் இன்னும் பல அபிவிருத்தி முறைகளைக் கண்டு பிடிப்பதற்கும், அம்பர் ராட்டையை இன்னும் அபிவிருத்தி செய்வதற்கும் அவருக்கு இந்த சர்க்கார் ஏன் வாய்ப்புகளும் வசதிகளும் கொடுக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். அம்பர் ராட்டையை இன்னும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அதற்கு வேண்டிய வாய்ப்புகளையும் வசதிகளையும் ஸ்ரீ ஏகாம்பரத்திற்கு இந்த சர்க்கார் அளிக்க வேண்டும் என்றும் சொல்ல விரும்புகிறேன். அம்பர் ராட்டை உபயோகத்தை விஸ்தரிக்க வேண்டுமானால் அதிகமான பயிற்சியாளர்களை—ஆசிரியர்களை—நியமிக்க வேண்டும். அவர்களையும் அதிகப்படுத்தி, பஞ்சையும் காலாகாலத்தில் கொடுத்தால், கிராமங்களிலுள்ள —முக்கியமாக வரண்ட பிரதேசங்களில்—மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பல கனம் அங்கத்தினர்கள் கைத்தறி நெசவுத் தொழிலைப் பற்றிப் பேசினார்கள். அவர்களுக்கு கைத்தறித் தொழிலில் இருக்கும் அக்கறையையும், அந்தத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைப்பற்றி இருக்கும் கவலையையும் நான் அறிவேன். அவர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். அந்தக் கவலையிலும் அக்கறையிலும் நானும் பங்குகொள்கிறேன். கைத்தறியை ஆதரிக்கும் நாம் எல்லோரும் கதரையும் ஆதரிக்க வேண்டும். நமது துணித் தேவைகளை, நூறு சதவிகிதமும் கதரினாலேயே பூர்த்திசெய்து கொள்ளவேண்டும். கதரை உபயோகிக்க வேண்டுமென்று எல்லாக்கட்சிகளையும் கேட்டுக்கொள்கிறேன். நாம் எல்லோரும் கதர் ஆடைகளையே அணிந்தால் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். நாம் மில் துணிகளை அணியாமல் இருந்தால் கைத்தறிக்கு உதவும்படி நாம் மத்திய சர்க்காரை நன்றாக வற்புறுத்திக் கேட்கலாம்.

அம்பர் ராட்டையை இன்னும் எவ்வளவு அபிவிருத்தி செய்யலாம் என்று சர்க்கார் ஆராய்ச்சி செய்யவேண்டும். குடிசைத்தொழில்களை வளர்க்கவேண்டும். இந்த விஷயத்தில் சர்க்காருக்கு ஒரு அடிப்படையான கொள்கை இருக்க வேண்டும்.

**Sri S. M. ANNAMALAI** : கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கைக்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணைகளை ஆதரிக்கிறேன். 1958-59-ம் ஆண்டுக்கு இந்த இனத்திற்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள பணம் 54·39 லட்சம் ரூபாய். சென்ற ஆண்டு இந்த இனத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் மிச்சமின்றி செலவழிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன? சில திட்டங்கள் முன்கூட்டியே ஆரம்பிக்கப்படவில்லை என்று ஆட்சியாளர்கள் காரணம் சொல்கிறார்கள். அப்படியானால் மிஞ்சியிருக்கும் பணத்தை மற்ற காரியங்களுக்காக ஏன் செலவழித்திருக்கக்கூடாது என்று நான் கேட்கிறேன். அடுத்தபடியாக, மத்திய சர்க்காரிலிருந்து வரும் கிராண்டுகளை எடுத்துக்கொண்டால் "லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்டிரீஸ்"க்காகவும், "மீடியம் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ்"க்காகவும் பணம் கொடுக்கப்படவில்லை. அரசாங்கத்தார் இதற்கு

[Sri S. M. Annamalai] [3rd April 1958

தகுந்த காரணம் சொல்லவில்லை. நாங்கள் இவ்வாறு கூறினால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எதற்கெடுத்தாலும் "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று சொல்கிறார்கள் என்று ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சொல்வார்கள். ஆனால், இந்த தொழில்களுக்கு மத்திய சர்க்கார் நிதி உதவி அளிக்கவில்லை என்பது உண்மை. மேலும், சிறு தொழில்களுக்கு 5·99 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அதற்கடுத்தபடியாக கிராண்டுகளை எடுத்துக்கொள்வோம். 1957–58-ல் 9·44 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது, ஆனால் செலவழிக்கப்பட்டது 5·05 லட்ச ரூபாய்தான். இந்த ஆண்டு 2·48 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது, இது மிக மிகக் குறைவானது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராமக் கைத்தொழில்களுக்காக 2.24 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் இதுவரை செலவாகியுள்ள தொகை ரூ. 11 லட்சம்தான். மீதித் தொகை செலவழிக்கப்படவில்லை. பட்ஜெட் எஸ்டிமேட்டில், 199·69 லட்ச ரூபாய் 1956–57-ல் செலவழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதில், 0·03 லட்ச ரூபாய் செலவிற்கு "details are not available" என்று சொல்லப்பட்டிருக்கிறது. விவரம் கொடுக்கப்படாதது வருந்தத்தக்கது. யானைக்கு அல்வா வாங்கிப் போட்டதாக விவரம் கொடுத்திருந்தாலும், பரவாயில்லை என்று சொல்லலாம். இங்கே விவரம் கொடுக்கப்படவில்லை.

10-30 a.m. இதற்கு அடுத்தபடியாக, திருவண்ணாமலைப் பகுதியில் இரும்பு கிடைக்கிறது என்று டைரக்டர் ஆப் இண்டஸ்டிரீஸ் அண்டு காமர்ஸ் சொன்னார்கள். போளூர் பகுதியில் கந்தகம் (சல்பர்) கிடைக்கிறது என்று சொல்லி அதைத் தோண்டியெடுப்பதற்காக வேண்டி, அமெரிக்காவிலிருந்து ட்ரில்கள் வாங்க உத்தரவு பிறப்பித்திருப்பதாகச் சொன்னார்கள். அதை உடனடியாகக் கவனித்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்றைக்குகூட ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—சந்தவாசலில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதென்றால் அதற்குப் பல கோடி ரூபாய்கள் செலவாகும் என்று. சந்தவாசல் காடுகளில் ஏராளமான மூங்கில் கிடைக்கிறது. அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்கவேண்டுமென்று பல மனுக்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதுவரை அந்த மனுக்கள் கவனிக்கப்படாமலிருக்கின்றன. அந்த இடத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்தால் ஏறத்தாழ . . .

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள், அந்தக் காகிதத் தொழிற்சாலையை சர்க்காரே நடத்தவேண்டுமென்று சொல்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் நடத்தவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். அப்படிச் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், அங்குள்ள மக்கள் ஜவ்வாது மலைவாசிகள். மலை மீது வசிப்பவர்கள். பெரும் முதலாளிகளாகவோ, பல லட்ச ரூபாய்களுக்கு அதிகாரிகளாகவோ உள்ள மக்கள் அங்கு கிடையாது. ஆகவே, சர்க்காரே முன்வந்து சந்தவாசலில் ஒரு காகிதத் தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கேள்வி நேரத்தின்போது நான் கேட்ட ஒரு கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் போட்டியிட்டிருந்தாலும் கலசபாக்கம் பிர்க்கா ப்ளாக் டெவலப்மெண்ட் ஏரியாவாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது". அதனால்தான் அதிக கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று சொன்னார்கள். அதேபோல், போளூரிலும் ப்ளாக் டெவலப்மெண்ட், கம்யூனிடி ப்ராஜெக்ட் ஆகிய இரண்டு வகைத் திட்டங்களும் இருக்கின்றன. இருந்தும்கூட, 1957-வது ஆண்டுக்குப் பின்னால்தான் அங்கு அந்தத் திட்டங்கள் எடுக்கப்படவில்லை. வெகுதாமதமாக நடத்துகிறார்கள். அங்கிருக்கும் அதிகாரிகளைக் கேட்டால், "நாங்கள்



3rd April 1958] [Sri S. M. Annamalai]

என்ன செய்வது? நாங்கள் மற்ற இடங்களில் இதற்கு முன்னமேயே ஆரம்பித்துவிட்டோம். ஆகையால், அப்படிப்பட்ட தொழிற்சாலையை அந்த இடத்தில்தான் ஆரம்பிக்கவேண்டும்" என்று சொல்லுகிறார்கள்.

(இச்சமயத்தில் ஸ்ரீ டி. டி. டேனியேல் தலைமை வகித்தார்)

இதற்கு முன்னால் ஒரு மான்யத்தில் பேசும்போது, "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெற்றி பெற்ற இடங்களில் ஒரு திட்டம்கூட ஆரம்பிக்கப்படவில்லை" என்று நான் அரசாங்கத்தின்மீது குற்றம் சாட்டியிருக்கிறேன். அதுபோல், இப்பொழுதும் சொல்கிறேன். கலசப்பாக்கத்தில் நான்கு கைத்தொழில்களை ஆரம்பித்த சர்க்கார், போளூர் தொகுதியில் ஒன்று கூட ஆரம்பிப்பதற்கு இந்தத் திட்டத்தில் இடத்தைக் காணோம். ஆகையால், தயவு செய்து அந்த இடத்தில், கட்சி மாறுபாடு இன்றி, கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல், எல்லா இடங்களிலும் மக்கள் வாழ்கிறார்கள் என்ற முறையில் கருத்து வேறுபாடு இன்றி, என்னுடைய தொகுதியில்கூட பல கைத்தொழில்களை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI A. VEDARATHNAM : கனம் சேர்மன் அவர்களே, இந்த கைத்தொழில் இலாகா செய்து வருகின்ற வேலையைத்தான் இங்குள்ள எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கூட வெகுவாகப் பாராட்டினார்கள். அதில் ஒன்றும் வியப்பு இல்லை என்பதை நான் கூற விரும்புகிறேன். ஏனெனில், இந்த இலாகாவை நிர்வகிக்கின்ற மந்திரி அவர்கள், நம்முடைய அகில இந்தியாவிலுமே உள்ள எல்லா ராஜ்யத்திலும் இதே மாதிரி இந்தத் தொழில் துறையை நிர்வகிக்கின்ற ஒரு ஆற்றல் பெற்றவர்கள்—அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் காரணத்தினால், அவர்கள் சக்தி முழுவதும் இந்த ஒரு ராஜ்யத்திலேயே அடக்கி வைத்திருக்கும்போது இங்கே இந்த மான்யத்தின் மீது பேசக்கூடிய மற்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களாலும் பாராட்டப்படுவதில் வியப்பு ஒன்றும் இல்லை என்பதை முதலில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தொழிலைப்பற்றி வெகுவாகப் பேசப்படுகிற இந்த நேரத்தில், "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்றெல்லாம் குற்றம் சாட்டப்படுகிற இந்த நேரத்தில், கைத்தொழிலுக்காக நம்முடைய ராஜ்ய சர்க்கார் எவ்வளவு நிதி ஒதுக்கி அந்தத் தொழிலை வளர்ப்பதற்கு என்ன செய்கிறது என்பதைச் கொஞ்சம் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் ஒன்றும் இல்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது. மத்திய சர்க்கார் எந்தெந்த தொழிலுக்கு எவ்வளவு அவர்கள் நிதி கொடுக்கிறார்களோ அதற்குரிய பகுதியைத்தான் நம்முடைய சர்க்கார் கொடுக்கும் நிலையில் இருக்கிறதேயல்லாமல் நம்முடைய நாட்டில் என்ன தொழில்களை இங்கே வளர்ப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து, அதற்குத் தகுந்தபடி நம்முடைய நிதியைப் பயன்படுத்தி நம்முடைய தொழிலை வளர்ப்பதற்கான முறையில் நம்முடைய அரசாங்கம் ஏதும் செய்யவில்லை என்ற யோசனையை நான் சர்க்காருக்கு குறிப்பிடுகிறேன்.

எனவே, நம்முடைய ராஜ்யத்தில் இந்தக் கைத்தொழில் வளர்ச்சி அடைய வேண்டுமானால், இங்கிருக்கும் சூழ்நிலைக்கொப்ப, அதை வளர்க்க வேண்டுமானால், குறைந்த பட்சம் நமக்கு ஒரு கோடி ரூபாயாவது இந்தக் கைத்தொழில் இலாகாவுக்கு என்று தனி நிதி ஒதுக்கி, அதன் மூலமாக இந்த தொழிலை வளர்த்தால்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இந்த நாட்டில் வேலையில்லா திண்டாட்டத்தை அடியோடு போக்க வேண்டுமென்று திட்டத்தை வகுத்திருக்கிற நாம், அதைப் பூர்த்தி செய்ய முடியும் என்ற விஷயத்தையும் அரசாங்கத்திற்கு நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தொழில் பண்ணை என்பது மிக அருமையான முறையிலே நம்முடைய மாகாணத்தின் தலைநகரத்தில் ஆரம்பிக்கப்பட்டு, அங்கே வேலை நன்றாக நடந்து வருகிறது. நம்முடைய தேசத்துப் பிரதமர் பண்டித நேரு அவர்கள் திறப்பு விழாவுக்கு அங்கே சென்றிருந்தபோது

[Sri A. Vedarathnam] [3rd April 1958

பார்த்தேன், அங்கு வெறும் கட்டிடங்கள்தான் இருந்தன. அதற்கு ஒரு மாதம் கழித்துப் பார்க்கும் போது, ஆச்சரியமாக இருந்தது, பிரமிக்கத் தகுந்த முறையிலே இருந்தது. மூக்குக் கண்ணாடி பிரேமிலிருந்து ரேடியோ செட் வரையில் தயாரிப்பதற்கான சகல கைத்தொழில்களிலும் அங்கே வேலை நடந்து வருவதைப் பார்க்க வியப்பாக இருந்தது.

டாக்டர் சௌந்தரம் அம்மையார் அவர்கள் அம்பர் சர்க்கா ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அம்பர் சர்க்காவை அங்கே அவர்கள் மீண்டும் ஆராய்ந்து நான்கு ஸ்பின்டில்கள் உள்ள அம்பர் சர்க்காவை எட்டு ஸ்பின்டில் அதே இராட்டையில் நூற்பதற்கான அம்பர் ராட்டைகளெல்லாம் ஆராய்ச்சியின் மூலமாகக் கண்டுபிடித்து வைத்திருப்பதைப் பார்த்தபோது மிக மகிழ்ச்சியாக இருந்தது: அவ்வளவு திருப்திகரமாக அங்கே வேலை நடக்கிறது.

நம்முடைய-தலை நகரத்தில் மாத்திரம் இம்மாதிரி பண்ணைகள் இருந்தால் போதாது. அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் ? அந்த இலாகாவுக்கு, ஐந்தாண்டுத் திட்டத்தில் அடுத்த அடுத்த வருஷங்களுக்கு ஒதுக்கி வைத்திருக்கும் நிதியை இந்த ஆண்டிலேயே பெற்று, அடுத்த ஆண்டுகளுக்கு நடக்க வேண்டிய வேலைகளைக்கூட இப்போதே அவர்கள் முடித்துவிட்டார்கள் என்ற விஷயத்தைக் கூறும்போது நான் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். இங்குள்ள அங்கத்தினர்கள் அத்தனை பேரும் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைவார்கள் என்று நினைக்கிறேன்.

அப்படியிருக்கும் ஒரு நிலையிலே இன்னும் ஒரு வருத்தமான நிலையையும் நான் இங்கே சொல்லாமல் விடுவதற்கு என்றால் முடியவில்லை. காதி அண்டு வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் போர்ட்டிலே கைத்தொழிலுக்காக, அம்பர் ராட்டைக்காக, ஒதுக்கிய பணத்திலே சற்றேறக்குறைய ஒரு கோடி ரூபாய் வரையில் நாம் பயன்படுத்த முடியாமல் லாப்ஸ் ஆகி அந்தப் பணம் வீணாகிப் போயிருக்கிறதென்று சொன்னால் அதைக் குறித்து வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில், அம்பர் ராட்டை மூலமாகத்தான் கிராமத்திலே குடிசையில் வாழ்கின்ற மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் போக்க முடியும், வேறு எந்த கனரகத் தொழில் மூலமாகவும் அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தை நாம் போக்க முடியாது. விவசாயத்தில் சில மாத காலங்கள் ஈடுபட்டு, பாக்கி காலம் எல்லாம் சும்மா இருக்கிற மக்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டுமானால், அதற்குச் சிறந்ததொரு வரப்பிரசாதம் போன்று அமைந்திருக்கிற இந்த அம்பர் ராட்டைக்காக காதி டைரக்டர் ஒரு கோடி ரூபாய் நம்முடைய மாகாணத்திற்கு ஒதுக்கியிருந்தும், தேர்ச்சிபெற்ற யோசனை சொல்கிற ஆள் இல்லை என்ற காரணத்திற்காக ஒரு கோடி ரூபாயை நாம் பயன் படுத்திக்கொள்ளாமல் விடுவது என்று சொன்னால், அதைக் குறித்து வருத்தப்படாமலிருக்க முடியாது. இருபத்தியைந்து லட்சம் ராட்டைகளில் இந்த ஐந்தாண்டுக்கும் இந்த நாட்டிலே பயிற்சி அளித்து, நூற்கும்படியாகச் செய்து, இங்குள்ள கைத்தறியாளர்களுக்கு உள்ள நூல் பஞ்சத்தைப் போக்கி, இந்த நாட்டிலேயே வேலையில்லாத் திண்டாட்டம் இல்லாமல் போக்க வேண்டுமென்ற அந்த இனத்திற்காக அவ்வளவு பெரும் தொகையை நாம் பயன் படுத்திக்கொள்ளாமல் விடுவது வருந்தத் தக்க விஷயம் என்பதையும் நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அது எப்படியாவது மீண்டும் கிடைக்கும்படியாக மீண்டும் கனம் அமைச்சர் முயற்சி செய்து, அடுத்த ஆண்டுக்குள்ளேயே அதை அவர்கள் உபயோகப்படுத்துகிற முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும். இரண்டு இலாக்காக்களும் வேறு வேறாக இருக்கிற காரணத்தினால் ஒருகால் இது பயன் படுத்திக்கொள்ளப்படவில்லையோ என்று நான் அஞ்சுகிறேன். அங்கே பார்த்தேன், அம்பர் சர்க்காவில் எட்டு ஸ்பின்டில் ஏற்பாடு செய்கிறார்கள். அம்பர் சர்க்காவுக்காக கொடுத்த பணம் ஒரு கோடி ரூபாய் வரை லாப்ஸ் ஆகிறது இன்னொரு பக்கத்தில் என்று சொன்னால், இந்த இரண்டு திறமையும் ஒன்றாகச் சேர்த்தால் இன்னும் இந்தப்/ பணி நன்றாக நடக்கும் என்ற எண்ணம் தோன்றுகிறது. மந்திரி சபைக்குள்ளே இருக்கும் மாறுதலை என் போன்றவர்கள் கூறுவதற்கு அதிகாரம் கிடையாது, எனக்கு உரிமை இல்லை. இருந்த



3rd April 1958] [Sri A. Vedarathnam]

போதிலுங்கூட, அவர்கள் இதைப் புனராலோசனை செய்து கைத்தொழிலோடு கைத்தொழில் இருந்தால்தான் அது சரியான முறையில் பயன் அளிக்கும். ஆகையால், இந்த விஷயத்தையும் அவர்கள் உணர்ந்து அந்த இலாகாவையும் இத்துடன் மாற்றினால் அடுத்த ஆண்டுக்குத் தர வேண்டிய பணத்தைக்கூட முன்னதாகவே பயன்படுத்திக்கொண்ட மந்திரி அவர்கள், இந்தப் பணத்தை அடுத்த ஆண்டுக்கே பயன்படுத்திக்கொள்ளாமல் போனாலும், கொடுத்த பணம் லாப்ஸ் ஆகாமல் செய்து விடுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதுமாத்திரம் அல்லாமல் இந்தக் கைத்தொழில் பண்ணை இருக்கிறதே அது சென்னை தலைநகரத்தில் இருந்தால் போதாது. பல ஜில்லாக்களில் இருக்கவேண்டுமென்று மூன்று, நான்கு பண்ணைகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். அது போதாது. குறைந்த பட்சம் ஜில்லாவிற்கு ஒரு கைத்தொழில் பண்ணையாவது இருந்தால் தான் நல்லது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கிறது. ஒரு ஜில்லாவிற்கு இன்னொரு ஜில்லா திறமையில் குறைவு என்று அல்ல. கைத் தொழில் திறமை நமது மாகாணம் முழுவதும் நிரந்தரமாகப் பொதிந்து கிடக்கிறது என்ற காரணத்தினால் ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்த பட்சம் ஒரு இண்டஸ்டிரியல் எஸ்டேட்டாவது ஏற்படுத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு ஒரு காரியம் செய்யலாம். நம் ராஜ்யத்தில் வேலையில்லாதவர்களை ஆண்டுக்குப் பல்லாயிரக்கணக்காக ப்ரொட்யூஸ் பண்ணிக்கொண்டிருக்கிற பாக்டரிகளை, அதாவது கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள், இவற்றில் எண்ணிக்கையைக் குறைத்துக் கொண்டாவது ஒவ்வொரு ஜில்லாவிற்கும் குறைந்த பட்சம் ஒரு கைத்தொழில் பள்ளியை ஏற்படுத்த வேண்டும் இன்றைக்கு ஹரிஜனங்களுக்கு மாடு கொடுக்கிறோம், உரம் கொடுக்கிறோம், விதை கொடுக்கிறோம், வீடு கொடுக்கிறோம், நிலம் கொடுக்கிறோம். எல்லாம் தானமாகவே கொடுத்துக்கொண்டிருக்கிறோம், அவர்களை தானம் வாங்குகிற நிலைமையில் வைத்து, நம்மை தானம் கொடுக்கிறவர்களாக ஆக்கிக்கொண்டிருக்கிறோம். இந்த நிலைமையை மாற்றி ஒவ்வொரு ஜில்லாவிலும் கைத்தொழில் பள்ளியை ஏற்படுத்தி அவர்களுக்கு சொந்தமாகத் தொழில் செய்து பிழைக்கும் திறமையை உண்டாக்கிவிட்டால் அவர்களும் தானம் வாங்கும் நிலைமையில் இருக்கமாட்டார்கள். நாமும் தானம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கமாட்டோம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படிச் செய்தால் நம் மாகாணம் எல்லா வகையிலும் தொழில் வளம் பெற்று விளங்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. நான் பார்த்திருக்கிறேன். இந்த மாகாணத்தில் இருக்கிற கைத்தொழில் பள்ளியில் பம்பு செட்டு, மோட்டார் முதலியவற்றையெல்லாம் மிகவும் திறம்படத் தயாரிக்கிறார்கள். இந்தியாவிற்குள்ளேயே இங்கேதான் மிகச் சிறந்தனவையாகத் தயாரிக்கப்படுகிறது என்கிற புகழுரைக்கு நம் மாகாணம் இலக்காயிருக்கிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம் ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவில் இருக்கக்கூடியவர்களுக்குத் தான் இது சாத்தியம் என்பது அல்ல. ஜில்லாவிற்கு ஒன்றாவது குறைந்த பட்சம் கைத்தொழில் பள்ளியை—இண்டஸ்டிரியல் ஸ்கூலை—ஏற்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கொஞ்ச நாளைக்கு முன்னால் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு சைக்கிள் பாக்டரியும், தீக்குச்சி பாக்டரியும் ஆரம்பிக்கப்படப்போவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த சைக்கிள் பாக்டரி என்ன ஆயிற்றோ தெரியவில்லை. சைக்கிளில் ஏறிக்கொண்டு உலகத்தைச் சுற்றிவரப்போய்விட்டதோ என்னவோ ? சைக்கிள் தொழிற்சாலையை அந்த ஜில்லாவில் ஆரம்பிப்பது பற்றிய பேச்சே ஒன்றும் இல்லை. அதற்கு அறுபது லட்சம், தொண்ணூறு லட்சம் என்று ஒன்றும் மூலதனம் போடவேண்டிய அவசியம் இல்லை. ஐந்தாறு லட்சம் ரூபாய் இருந்தால் போதும். தொழிற்சாலையை ஆரம்பித்துவிடலாம். செலவு செய்யப்படாமல் தேங்கிவிட்ட பணத்தைக் கொண்டாவது இந்த சைக்கிள் தொழிற்சாலையை—விவசாயம் தவிர வேறு எந்தத் தொழிலும் தெரியாத அந்த ஜில்லாவில், இன்றைக்கு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிற

[Sri A. Vedarathnam] [3rd April 1958

வர்களுடைய நலனுக்காகவாவது, உடனடியாக ஆரம்பிக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதே போல் தீப்பெட்டி தொழிற்சாலையையும் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். தீப்பெட்டித் தொழிற்சாலையில் வேலையில்லாக் கஷ்டம் இன்றைக்கு ஏற்படுகிறது என்று சொன்னாலும் சர்க்கார் உற்பத்தி செய்கிற தீப்பெட்டிக்கு அதிக கிராக்கி இருக்கிற காரணத்தினால் அதைத் திறம்பட மேலும் வளர்த்து தஞ்சை ஜில்லாவில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையையும் ஏற்படுத்த வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறு கைத் தொழில் பொருள்களை உற்பத்தி செய்து விட்டால் மட்டும் போதாது. உற்பத்தியான பொருள்களை விற்பனை செய்வதற்கும் மார்க்கம் இருக்க வேண்டும். ஆகவே ஏராளமாகக் குவித்திருக்கிற பொருளை விற்பனை செய்வதற்கும் விற்பனை எம்போரியம் ஏற்படுத்த வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக அசிஸ்டெண்ட் டைரெக்டர் ஆப் இண்டஸ்டிரிஸ், இரண்டாயிரம் ரூபாய் வரையில் அந்த அந்த ஜில்லாவில் செலவு செய்யலாம் என்கிற டிஸ்க்ரிஷனரி பவரைக் கொடுத்திருப்பதைப் பாராட்டி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri A. MARIAPPAN:** கனம் சேர்மன் அவர்களே, தொழில் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் மானியத்தை நான் ஆதரிப்பதோடு இந்த இலாகாவினர் குறிப்பாக கூட்டுறவு இலாகாவினர் நல்ல முறையில் காரியங்களைச் செய்வதற்காகப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் நம்முடைய அகில இந்திய பாலிஸியை எடுத்துக் கொண்டால் அதனால் கைத்தறி நெசவுத் தொழிலுக்குப் பெரிய பாதகம் ஏற்படுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. உண்மையிலேயே நாம் இன்றைக்கு கைத்தறி நெசவுத் தொழிலைப் பல வகையிலும் வளர்க்க வேண்டும் என்பதற்காக நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். அதே நேரத்தில் அகில இந்தியக் கொள்கையானது அதாவது—சாராயம் இறக்குமதி செய்யக்கூடாது, நார்பட்டு இறக்குமதி செய்யக்கூடாது என்று செய்திருப்பதானது இந்த கைத்தறித் துணி விலை ஏறுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. மில் துணிக்கும் எக்ஸைஸ் வரி குறைக்கப்பட்டுவிட்டதனால் மில் துணியோடு கைத்தறித் துணி போட்டி போட முடியாமல் இருக்கிறது. ஆகவே நமது சர்க்கார் மத்திய சர்க்காரிடத்தில் சொல்லி இரண்டணாவுக்கு அதிகமாகவே கூட ரிபேட் கொடுக்கும்படியாகச் சிபார்சு செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே இதைப்பற்றி மத்திய சர்க்காருக்குச் சொல்லியிருந்தாலும் மத்திய சர்க்கார் கைத்தறி நெசவுத் தொழில் விஷயத்தில் அதிக அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆகவே இம்முறை கண்டிப்பாக வலியுறுத்திச் சொல்லியாவது கைத்தறி, நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். துணித் தேக்கத்தைப் பார்த்தால் சாதாரணமாக சென்ற மாதம் மூன்று கோடி தேங்கியிருந்தது. இப்போது ஐந்து கோடி ரூபாய்க்கு தேங்கி கிடக்கிறது. தேங்கிக் கிடப்பதோடு மாத்திரம் அல்ல. கூட்டுறவு சங்கங்கள் நெசவாளர்களுக்கு கூலி கூடக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலைமையை பார்த்தால் 1951-52-ம் ஆண்டு நம் மாகாண கைத்தறி நெசவாளர்களுக்கு இருந்த நெருக்கடி, கஷ்டம் இவற்றையெல்லாம் அதிகமாக இப்போது ஏற்பட்டு விடுமோ என்று பயப்பட வேண்டியதாக இருக்கிறது. மத்திய சர்க்காரிடமிருந்து நிதி வரவேண்டும் என்று காத்திராமல் உடனடியாக நமது சர்க்காராவது ஒரு கோடி அல்லது இரண்டு கோடி கொடுத்து மாகாண சங்கத்தின் மூலமாக துணிகளை வாங்க வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதனால் இவர்களுக்கு நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. வரப்போகிற சித்திரை வைகாசி மாதங்களில் கல்யாண முகூர்த்த காலங்கள். சாதாரண நாட்களில் நமது ஜனங்கள் கைத்தறித் துணியை வாங்க முடியாவிட்டாலும் கல்யாண காலங்களில் நிச்சயமாக வாங்குவார்கள். ஆகவே சர்க்கார்



3rd April 1958] [Sri A. Mariappan]

கடனாகவாவது ஒரு கோடி, இரண்டு கோடி கொடுத்து கைத்தறி நெசவாளர்களுக்கு உள்ள கஷ்டங்களை மாகாண சங்கத்தின் மூலமாகக் குறைக்க முன் வரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாகாண சர்க்கார் தங்களுக்கு நஷ்டம் ஏற்படும் என்று பயப்படுகிறார்கள். 10-50 a.m.
அதை கூட்டுறவு ரெஜிஸ்ட்ரார் மூலம் கட்டாயப்படுத்தி உடனடியாக வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாகாண சங்கத்தைப் பொறுத்த மட்டில், தாம் வாங்கி வைத்தால் அந்த நஷ்டத்தை யார் ஏற்றுக் கொள்வார்கள் என்று பயப்படுகிறார்கள். ஆகவே, இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தப்படியாக, வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக்கொண்டால் அதற்கு 3,600 ரூபாய் என்று ஸீலிங் ரேட் வைத்திருக்கிறார்கள். பல காரணங்களால் அந்த 3,600-க்கும் செய்ய முடியாமல் போய் விடுகிறது. சேலம் போன்ற இடங்களில் அப்படி 3,600க்குள் செய்ய முடியாமல் போய் விடுகிறது. ஆகவே, மேற்கொண்டு 600 அல்லது 800 ரூபாய் ஆனாலும் கூட அதையும் ஸீலிங்க் ரேட்டில் உயர்த்தித் தருமாறு, ஏற்கனவே எடுத்துக் கொண்ட சங்கங்களுக்காவது கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். வீடு கட்டும் திட்டத்திற்கு கொடுக்கப்படும் காமன் அமினிட்டிஸிக்கு சர்க்கார் மான்யம் கொடுப்பதில்லை. அவற்றிற்கும் மான்யம் கொடுக்க சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் ஒரு நூற்பு நிலையம் ஏற்படுத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அங்கு ஒரு (**Magnesite Syndicate**) மேக்னசைட் சின்டிகேட் பற்றி சீக்கிரமாக முடிவு செய்ததற்காக நான் சர்க்காரைப் பாராட்டுகிறேன். மாற்றுக் கட்சியினர், அல்லது தொழிற்சங்கம் வைத்து நடத்திக் கொண்டிருப்பவர்களில் சிலர் சர்க்கார் சீக்கிரம் ஒரு முடிவுற்கு வரமாட்டார்கள் என்று தொழிலாளர்களைத் தூண்டிவிட காத்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏமாற்றம் அடையும் விதத்தில் சர்க்கார் ஒரு முடிவிற்கு வந்ததற்கு நான் அவர்களைப் பாராட்டுகிறேன். குறிப்பாக அமைச்சர் அவர்கள் இது பற்றி சீக்கிரம் ஓர் முடிவிற்கு வந்ததற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். அடுத்தப்படியாக, நாற்பட்டு இறக்குமதி செய்வதற்கு மத்திய சர்க்கார் தடை விதித்திருக்கிறார்கள். அப்படியிருந்தும், நம் தேசத்தில் உற்பத்தியாகும் நாற்பட்டு 75% நேரிடையாக மில்களுக்குப் போய் சேருகிறது. அதில் 30% எஸ்டாப்ளிஷ்மெண்ட் கோட்டாதாருக்கு கொடுக்கிறார்கள். எஸ்ட்டாபிலிஷ்மெண்ட் கோட்டாதார் பம்பாயில் தான் இருக்கிறார்கள் பெரும்பாலும். நாற்பட்டுகள் நேரிடையாக கைத்தறி நெசவாளர்களுக்கு வந்து சேருவதில்லை. ஆகவே இந்த விஷயத்தில் மாகாண சர்க்கார் அக்கறை எடுத்துக்கொண்டு மத்திய சர்க்காருக்கு எழுத வேண்டும். சென்னை மாகாணத்தில் நாற்பட்டு நெய்யக் கூடிய நெசவாளர்கள் இருக்கிறார்கள். சேலம் ஜில்லாவிலேயே மாதந்தோறும் எழு லட்சம் பவுண்டு செலவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இதற்கு உடனடியாக ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக, டைரெக்டர் ஆப் கண்ட்ரோல்ட் கம்மாடிட்டீஸ் அவர்களின் இலாகாவில், இந்த நாற்பட்டு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாவதில் பெரிய ஊழல்கள் நடந்து கொண்டிருக்கிறது. அதில் டைரெக்டர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தி அவர்களே நேரிடையாகப் பார்த்து அந்த ஊழல்களை நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். நம் மாகாணத்தைப் பொறுத்த வரையில் நெசவுத் தொழில் தெரியாதவர்கள், நெசவுத் தொழில் என்னவென்று தெரியாதவர்கள் இன்று கோட்டா வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது, நெசவாளர்களுக்கு நேரிடையாக வந்து சேவருதில்லை. ஆகவே, இந்த கோட்டா நெசவாளர்களுக்கு போய் சேர வேண்டும், கூட்டுறவு சங்கங்கள் மூலமாவது விநியோகிக்க வேண்டும். அல்லது மாகாண சங்கங்கள் மூலம் இறக்குமதி லைசென்ஸ் கொடுத்து அவர்கள் மூலம் நெசவாளர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்தால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நாற்பட்டு நெசவாளர்களுக்கு நேரிடையாகப் போய் சேரும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய டைரெக்டர் அவர்களையும் கேட்டுக்

கொள்கிறேன். முன்பு கதர் தேங்கியிருந்தபோது கதர் கூப்பன்கள் விநி
யோகம் செய்து அதன் மூலம் கதர் விற்பனைக்கு ஏற்பாடு செய்திருக்கிறது
சர்க்கார். அதே மாதிரி, கைத்தறித் துணி தேங்கி கிடக்கும் இந்த நேரத்தில்
கைத்தறிக்காக ஒரு கூப்பன் முறை ஏற்பாடு செய்து அதன் மூலம் கடனுக,
கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ அல்லது தனியாக கடன் கொடுத்தோ
இந்தக் கைத்தறித் துணிகளை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கெள்ளாகிறேன். அடுத்தபடியாக, சேலத்தில் இரும்புத்
தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை இவைகள் வருகிறது என்று
சர்க்கார் சொல்லிக்கொண்டிருக்கிருர்கள். அது பற்றி நாங்களும் பெருமை
யோடு இருக்கிறேம். அதனுல் சேலத்தில் உள்ள வேலையில்லாத் திண்
டாட்டம் நீங்கும் என்று நினைக்கிறேம். அதைக் காண்பித்து வேறு
ஒன்றும் செய்யாமல் எங்கள் ஜில்லாவில் முன்னேற்றம் ஏற்படாத நிலையில்
இன்று இருக்கிறது. ஆகவே, அவைகளை கூடிய சீக்கிரம் நிறை வேற்றித்
தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது இன்னும் நாலு
வருஷத்தில் வருமோ அல்லது ஐந்து வருஷத்தில் வருமோ தெரியவில்லை.
அடுத்தபடியாக, சேலத்தில் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்த ஏற்பாடு செய்து
கொண்டிருக்கிருர்கள். அதை சீக்கிரம் கொண்டு வர ஏற்பாடுகள் செய்ய
வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்ஸ் பற்றி வேதரத்னம் பிள்ளை அவர்கள் நன்ருக
எடுத்துச் சொன்ஞர்கள். அதை எல்லா ஜில்லாக்களிலும் விஸ்தரிக்க
வேண்டும். அப்படி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒவ்வொரு இண்டஸ்ட்ரியல்
எஸ்டேட் இருந்தால்தான் நாம் இப்பொழுதிருக்கும் வேலையில்லாத்
திண்டாட்டத்தைப் போக்க முடியும். அதற்கான ஏற்பாடுகளை செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கைத்தறி துணி தேக்கம் அதிகமாக
இருக்கிற காரணத்தால் அதை உடனடியாக அவசர நிமித்தமாக கருதி
அதற்குண்டான ஏற்பாடுகளைச் செய்யுமாறு மீண்டும் ஒரு முறை அமைச்சர்
அவர்களைக் கேட்டுக்கொண்டு நான் எனது உரையை முடித்துக் கொள்
கிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: கனம் சேர்மன் அவர்களே,
இந்த மான்யம் மிகவும் முக்கியமானதொரு மான்யமாகும்.
"உழவிற்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாரதி அவர்
கள் சொன்னது போல், நம் நாடு பின் தங்கிய நாடாகயிருப்பதால்
தொழில் வளத்திற்கு நாம் எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்கி
ரேமோ அவ்வளவு தூரம் நம் நாடு சீக்கிரம் முன்னேற முடியும், என்று
நாங்கள் கருதுகிறேம். நான் முன்ஞல் சொன்னது போல், சென்ற
ஆண்டில் ஐந்து கோடி சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டும்கூட தொழில்
துறையில் ஏகதேசம் இரண்டு கோடிக்கு அதிகமாக செலவாகவில்லை.
அதற்கு காரணம் பல இருந்தன. இருந்தபோதிலும் சரி, அதனுல்
நிச்சயமாக நம் முன்னேற்றம் தடைபட்டிருக்கிறது என்பதை நாம் நன்கு
உணரவேண்டும். அதுபோல், இந்த வருஷத்தில் நம் முன்னேற்றம்
எந்த விதத்திலும் குறையாதபடி எவ்வளவு விரிவாக நாம் காரியங்கள்
செய்ய வேண்டுமோ, அப்படிச் செய்ய வேண்டும். நம்மிடையே பெரிய
திட்டங்கள் இருக்கின்றன. பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துதல்,
குடிசைக் கைத்தொழில்கள், அம்பர் ராட்டு போன்ற திட்டங்கள் இருக்
கின்றன. தொழிற் பயிற்சி திட்டமும் இருக்கிறது. இவைகளெல்லாம்
தங்கு தடையின்றி எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக, டார்ஜெட்டை விட
அதிகமாக நாம் அதிகமாக இவைகளில் முன்னேற்றம் காண்கிறேமோ
அவ்வளவுக்கவ்வளவு நம் நாடும் முன்னேற்றம் அடையும். முதல் ஐந்
தாண்டுத் திட்டக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது.
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்
குறைப்பதற்கான முறையில் திட்டங்கள் பல தீட்டியபோதிலும்கூட அவைகள்
போதுமானதாக வில்லை என்பது தான் என் கருத்து. ஆகவே,
இப்பொழுதுள்ள திட்டங்களையாவது சரியான படி நிறைவேற்றுவதற்கு
நாம் பாடுபட வேண்டும். இதில், கட்சிபேதமின்றி எல்லோரும் ஒத்
துழைக்க வேண்டும். சர்தார் வேதரத்னம் பிள்ளையவர்களும், சௌந்
தரம் ராமச்சந்திரன் அம்மையார் அவர்களும் கூறியதை நான் முழு மன





தோடு ஆதரிக்கிறேன். அம்பர் சர்க்கா ராட்டைப் பொறுத்த வரையில்,
நாட்டில் சாதாரண ராட்டை விட அதிகமான ஆதரவு அம்பர் ராட்டிற்கு
இருக்கிறது. எங்கு பார்த்தாலும், அதை வரவேற்கிருர்கள்.
சாதாரண ராட்டில் 4 அணு கிடைத்தால் அம்பர் ராட்டில் ஒரு
ரூபாய், ஒன்றரை ரூபாய்கூட கிடைக்கும்படி நூற்கக் கூடியவர்கள்
இருக்கிருர்கள். அந்த அளவு நாட்டிற்கு தேவையிருக்கிறது, ஆனுல் சப்ளை
செய்யமுடியவில்லை. ஆகவே, இதற்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.
அது சாதாரண மக்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.
வேலையில்லா திண்டாட்டத்தைக் போக்க இது ஒரு சமய சஞ்சீவி என்று
சொன்ஞல் அது மிகையாகாது. ஆகவே, அந்தத் திட்டத்தில் முழு
கவனமும் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே
போல், கைத்தறி நெசவுத் தொழிலைப் பொறுத்த வரையில் ஒரு சிக்க
லான கட்டத்தில் இருக்கிறது. சென்னை ராஜ்யத்தைப் பொறுத்தவரை
யிலும், ஆந்திராவைப் பொறுத்தவரையிலும் லட்சோப லட்சம் ஜனங்கள்
கைத்தறியை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிருர்கள். இப்பொழுது ரிபேட்
குறைந்து விட்டது. துணி தேங்கிக் கிடக்கிறது. இதனுல் மில்களும்
பாதிக்கபட்டிருக்கிறது. இவைகளைப் பற்றியெல்லாம் சர்க்காரும் அமைச்சர்
களும் நன்கு உணருகிருர்கள் என்றும் அதற்காக பாடுபடுகிருர்கள் என்
றும் தெரியும். இந்தப் பிரச்னையை ஒரு கட்சிப் பிரச்னையாக கொள்
ளாமல் எல்லோரும் ஒத்துழைத்து இதற்கு ஒரு வழி கண்டு பிடித்தாக
வேண்டும். இந்த ராஜ்யத்தின் பிரச்னை இது என்ற ஹோதாவில் அத்தனை
கட்சிகளும் ஒன்ருகச் சேர்ந்து கொண்டு மத்திய சர்க்காருக்கு ஒரு சவால் 11-00 a.m.
விட வேண்டுமென்ருலும் செய்யலாம். அதுபோலவே, என்னைப்
பொறுத்த வரையில் இந்தியா முழுமைக்கும் பெரும் கைத்தொழில்கள்
வளர வேண்டுமென்றுள்ள எண்ணமுடையவன் நான். நமது ராஜ்யத்தை
அண்டை ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நமது ராஜ்யம் மிகவும்
பின் தங்கி நிற்கிறது. நமது ராஜ்யத்தைவிட அண்டை ராஜ்யங்களில் நடை
பெரும் கைத் தொழில்கள், பிளைவுட் பாக்டரி, ரப்பர் பாக்டரி, சிந்தரியில்
ஆரம்பித்திருக்கிறது மாதிரி அமோனியம் சல்பேட் பாக்டரி போன்ற
தொழிற்சாலைகள் மற்ற ராஜ்யங்களில் வரும்பொழுது நம்முடைய ராஜ்யத்
தில் மாத்திரம் இவ்வித தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதில் பின் தங்கி நிற்
கிறேம் என்று இருந்தால் டெக்ஞலஜிக்கல் முறையில் நாம் எப்படி
முன்னேற்றம் அடைய முடியும் ? பப்ளிக் செக்டாரில் எடுத்துப்பார்த்
தாலும் இதே நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களை
எடுத்துக்கொண்டால் பப்ளிக் செக்டாரின் கீழே அனேக தொழிற்சாலைகள்
நடந்து கொண்டு வருகின்றன. உதாரணமாக மைசூரிலே, யு.பி.யிலே,
அதே போன்று கேரளத்திலே, இவைகளை எடுத்துப் பார்ப்போமானுல்
நம்மை விட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு அதிகம்
தொழிற்சாலைகளை ஆரம்பித்திருக்கிருர்கள். இந்த நிலையில் நாம் மாத்
திரம் ஏன் பின்தங்கி நிற்க வேண்டும். அது மாத்திரமல்ல, நம்மிட
மிருந்த தொழிற்சாலைகள் எல்லாம் அனேகமாகப் போய் விட்டது.
நம்மிடத்தில் இப்போது சிங்கோஞ பாக்டரி போன்ற ஒன்றிண்டு தொழிற்
சாலைகள் மாத்திரம் இருக்கின்றன. அதிலும் லாபம் அதிகமாக
இல்லை என்று சொல்லப்படுகிறது. அதனுடைய மூலதனத்திற்கு வட்டி
போடுவதாக இருந்தால் கூட, அது நஷ்டமாகத்தான் வேலை செய்து
கொண்டிருக்கிறது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. கன்னியாகுமரி
ஜில்லாவை எடுத்துக்கொண்டால் அங்கு இருந்து கொண்டிருக்கிற மினரல்
பாக்டரியிலிருந்து சுமார் 18 லட்சம் வருமானம் கிடைக்கிறது. அந்த
பாக்டரியிலிருந்து டைட்டாணியம் போன்ற உபப்பொருள்களும் உற்பத்தி
செய்ய முடியும் என்று தோன்றுகிறது. இதில் ஒரு விஷயம் எனக்கு
விளங்கவில்லை, அதாவது போன பட்ஜெட்டில் 18 லட்சம் என்று இருந்தது.
அடுத்த வருடத்திற்கு 9 லட்சமாக குறைகிறது என்று கூறுகிருர்கள்.
இதற்கு என்ன காரணம் என்பதை அறிய ஆசைப்படுகிறேன். நமது
ராஜ்யத்தில் போதுவாக வருமானம் அதிகரிக்கக்கூடிய பல தொழிற்சாலை
கள் வளர வேண்டும். அப்போதுதான் நாட்டின் தொழில் முன்னேற்
றத்தில் நம்பிக்கை வளர முடியும். ஆகவே அத்தகைய தொழில்களை
ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில்

[Sri T. S. Ramaswamy Pillai] [3rd April 1958

சிறிய கைத் தொழில்களை வளர்ப்பதற்கும் வேண்டிய சாத்தியக்கூறுகள் நமக்கு இருக்கின்றன. இத்தகைய தொழில்கள் வளர்ந்தால்தான் நாட்டில் இன்று இருந்துகொண்டிருக்கக்கூடிய வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கடிக்கமுடியும். அதோடு சிறு கைத்தொழில்களும் குடிசைத் தொழில்களும் கோ-ஆர்டினேஷனாக இருக்க வேண்டும். அதுவும் ஒரே இலாகாவின் கீழ் இருக்க வேண்டும், ஒரே தலைமையில் இருந்தால் தான் இது நல்ல முறையில் நடை பெற முடியும். இந்த கருத்தை சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் தெரிவித்தார்கள். அதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். வெவ்வேறாக இருப்பதால் இதில் பல தடங்கல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக கன்னியாகுமரி ஜில்லாவில் முதலில் மூன்று ஸ்கீம்கள் வந்தன. ஒன்று பிரிக் பாக்டரி ஆரம்பிப்பது என்றும் மற்றொன்று ஸோப் பாக்டரி ஆரம்பிப்பது என்றும் இன்னொன்று கார்டுபோர்டு பாக்டரி ஆரம்பிப்பது என்றும் முதல் சொன்னார்கள். இவைகளை ஹரிஜனங்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில் ஆரம்பிப்பதற்காக சுமார் அறுபதினாயிரம் ரூபாய் ஒதுக்கி இருந்தார்கள். பின் என்ன காரணத்தினாலோ மூன்று மாதங்களுக்குப் பிறகு ஒன்று ஆரம்பித்தால் போதும் என்று கூறினார்கள். கடைசியில் ஒன்றுமே வரவில்லை. இந்த வேலைகள் எல்லாம் நடந்திருந்தால் அங்கிருக்கின்ற ஆயிரக்கணக்கான ஜனங்கள் பயன் பெறுவார்கள். இந்த ஒரு ஜில்லாவிலே இவ்விதம் இருக்கிறது என்றால் பல ஜில்லாக்களையும் எடுத்துப் பார்த்தால் எவ்விதம் எல்லாம் இருக்கும் என்று சொல்ல முடியாது. இவ்விதம் பல தடங்கள் வருவதினால் மக்கள் எவ்வளவு தூரத்திற்கு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். ஆகவே இவைகள் எல்லாம் ஒரே தலைமையில் கோ-ஆர்டினேஷனாக இருக்க வேண்டும். இவ்விதம் இல்லாதிருந்ததினால்தான் போன வருஷத்தில் சுமார் 200 லட்சம் ரூபாய் லாப்ஸாகியிருக்கிறது. ஆகவே இனிமேலாவது இவ்விதம் லாப்ஸ் ஆகாமல் கைத் தொழில்களுக்கும், குடிசை தொழில்களுக்கும் முதலிடம் கொடுத்து நாட்டில் தொழில்களை வளர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

Sri K. S. G. HAJA SHERIFF : Mr. Chairman, Sir, I rise to speak in support of the Demand moved by the Hon. Minister for Industries. I am very happy that the Hon. Minister has placed in the hands of the hon. Members a review of the industrial development of the Madras State. This gives in a very comprehensive manner information about what the Government have done so far and what they propose to do in the future for the industrial development of this State. I am also very happy to note that several new industries are going to come up in the various districts. But at the same time I am not very happy at the rate at which the industrial development is taking place in our State. We all know that our State is backward so far as industrial development is concerned with the result that the amount allotted to the development of industries by the Industrial Finance Corporation has so far been only Rs. 3 crores. I wish at least Rs. 10 crores should be allotted to aid industrialists to come forward and to start various industries. I also want that a scientific and technical survey should be made about the industrial potential of our State. Already a competent authority is available in Delhi under the chairmanship of Dr. P. S. Lokanathan. They have already undertaken such surveys of other States and submitted comprehensive reports. I want that such a survey should be conducted in our State and report made by that authority so that we can know in which particular area industries could be



3rd April 1958] [Sri K. S. G. Haja Sheriff]

started and the particular types of industries that could be started in the different areas and what would be the probable results. If such a report were placed in the hands of the industrialists and made available to the Government also, we can know the potentialities of our State and shape our policies accordingly.

Under the Industrial policy announced by the Prime Minister I want that at least one major industry should be started in every district. Unless we start industries, major, minor and small-scale industries, we are not going to solve the unemployment problem in our State. We must solve this problem to the best of our ability. Any slackness or slowness in this direction would not only create hardship but also would create a bad feeling so far as maintenance of industrial peace is concerned. So I want that the Government should give the best of consideration in adding not only the private industrialists but also in starting such of those industries placed under Schedules I and II under which they can start major industries.

Sir, I am sure Government will be aware of the recession that is taking place throughout the whole world. I want that a study should be made of the reasons for this recession even in highly industrially advanced countries and consequent unemplayment. A careful study of these problems will bring to our knowledge what types of industries we can start and also successfully compete in international markets. If our products are to compete successfully with others in the international markets, the manufacturing cost should be economic. Even though various processes could be adopted to make the manufacturing cost economic, unless the labour also co-operated with the management to achieve this, it may not be possible for the industrialists to manufacture goods at economic cost and successfully compete with the others in foreign markets.

Sir, it is also very necessary that we should start many small scale industries. If you take for example the two countries which were battered and shattered during the World War II, Japan and Germany, they have now emerged as the most industrially forward countries of the world. It is because of the incentive given to the private sector by the Government in starting various industries. Here, I know that there is a feeling that the private sector is not playing its part or should not play its part and everything should be taken over by the Government. But the Government have also at the same time come to a decision regarding the industries that should be started and controlled by them and the industries that should be given over to the private sector. Unless encouragement is given, incentive is given to the private sector, I am afraid, small scale industries cannot be started and the unemployment problem also cannot be solved. I hope Government will take all these factors into consideration and allot more money to the Industrial Finance Corporation even to the extent of economising expenditure in other

[Sri K. S. G. Haja Sheriff] [3rd April 1958

departments so that not only we can start more industries, the Government also can start more industries and thus solve the unemployment problem in a perfect manner. I shall in this connection repeat what has been said many times namely that poverty in any one place as a source of danger to prosperity in all other places.

Thank you.

11 a.m. ***Sri K. N. PALANISWAMI GOUNDER :** கனம். சேர்மென் அவர்களே, இந்த மான்ய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எந்தத் தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமானது மின்சாரம். மின்சாரத் திட்டமானது நம்முடைய சென்னை ராஜ்யத்திலே, மற்ற ராஜ்யங்களைவிட, மிகவும் பாராட்டக்கூடிய முறையிலே நடைபெற்று முன்னேற்றம் அடைந்துவருகிறது. சென்ற ஐந்து ஆண்டுகளிலே சென்னை ராஜ்யத்திலே கிராமங்களிலே விவசாயத்திற்காக போதுமான மின்சாரம் சப்ளை செய்யப்பட்டிருக்கிறது. மின்சார விஸ்தரிப்பு சம்பந்தப்பட்டவரையில் நம்முடைய ராஜ்யம் மற்ற ராஜ்யங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக இருக்கிறது. மின்சாரம் இல்லாமல் தொழில் வளர்ச்சி ஏற்பட முடியாது. சென்னை ராஜ்யத்திலே பல விதத்திலே மின்சார விஸ்தரிப்பு ஏற்பட்டு முன்னேற்றம் அடைந்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

நேற்றைய தினம் நமது சர்க்கார் கொடுத்திருக்கிற ஒரு அறிக்கையில் 1957–58-ல் சர்க்கார் தொழில் அபிவிருத்திக்காக என்னென்ன திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள், எவ்வளவு தூரம் அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் எடுத்துச் சொல்லி அவர்களுடைய சாதனைகளைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களுக்காக பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக தனிப்பட்டவர்களுடைய முயற்சியின் காரணமாக நமது ராஜ்யத்தில் தொழில் வளர்ச்சி அடைந்திருக்கிறது. நம்முடைய ராஜ்யமானது மற்ற எல்லா ராஜ்யங்களையும் விட பருத்தி உற்பத்தியிலே முக்கியமாக இருக்கிறது. பம்பாய்க்கு அடுத்தபடியாக, நம்முடைய ராஜ்யத்திலே கோயம்புத்தூர் ஜில்லாவானது பஞ்சு உற்பத்திக்கு பெயர் போனதாக இருக்கிறது. ஆந்திர ராஜ்ஜியத்திலே சில ஜில்லாக்களில் பருத்தி உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், கோயம்புத்தூரில் அதிகமாக பருத்தி உற்பத்தி ஆகிறது. கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் இன்றைய தினம் தனிப்பட்டார் செய்யும் ஒரு பெரிய மில் தொழிலாக இது இருக்கிறது.

இன்றைய தினம் தென்னிந்தியாவை எடுத்துக்கொண்டால், நமது சென்னை ராஜ்யம், கேரளா, ஆந்திரா, மைசூர் ராஜ்யங்களைக் காட்டிலும், தொழில் வளர்ச்சியிலே முற்போக்காக இருக்கிறது. நாம் சுதந்திரம் அடைந்த பிறகு சென்ற சில வருஷங்களாக பெரிய தனவந்தர்கள் பல தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைய தினம் சென்னை ராஜ்யமானது தொழில் வளர்ச்சியிலே முற்போக்காக இருக்கிறது. நமது சர்க்கார் கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்க்கும்பொழுது, தொழில் வளர்ச்சிக்காக பல கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்திருப்பதாகத் தெரிகிறது. சர்க்கார் எடுத்துக்கொண்ட தொழில் வளர்ச்சித் திட்டங்களிலே மிகவும் முக்கியமான திட்டம் நெய்வேலி பழுப்பு நிலக்கரி திட்டம்தான். அதற்காக இதுவரையிலும் 10 கோடி ரூபாய்க்குமேல் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டும் செலவு செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னும் பல தொழில்களைச் செய்வதற்கும் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். மில் ஆலைகளைத் தவிர, இன்னும் செமெண்ட் தொழிற்சாலைகள், போதிய உரத்தை தயாரிப்பதற்கான பாக்டரிகள் போன்றவைகளை நிறுவ தனிப்பட்டவர்களும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நம் நாட்டிலே கைத்தொழில் வளர்ச்சியடையவேண்டுமென்றால், விவசாயத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டும். நமது சர்க்கார் பல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினதால் இப்பொழுது உணவுப் பிரச்னை



3rd April 1958] [Sri K. N. Palaniswami Gounder]

ஓரளவுக்கு தீர்ந்துகொண்டு வருகறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தைவிட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பவானி போன்ற பெரிய அணைக்கட்டுகளை பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து கட்டியதன் காரணமாக இன்றைய தினம் உணவுப் பிரச்னை தீர்க்கப்பட்டிருக்கிறது. அதே மாதிரித்தான் உடைப் பிரச்னையும். 1951–52-ல் இருந்ததைவிட இன்றைய தினம் நமது நாட்டில் அதிகமான துணியை நாம் தயாரிக்கிறோம். துணி உற்பத்தி அதிகமாயிருப்பதால், அதை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நமது சர்க்கார் உதவி செய்யவேண்டும்.

(இச்சமயத்தில் கனம் சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்தார்.)

விவசாய தொழிலுக்கு சர்க்கார் அதிகமாக செலவழிக்கவேண்டும். கிராமங்களிலே மின்சாரத்தை நல்ல முறையில் பயன்படுத்தி விவசாயத்தைப் பெறுக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக நம்முடைய கல்வி முறையானது நாகரீகமாக இருக்கிறது. எந்த வேலைக்கும் போவதற்குத் தகுதியில்லாததாக இருக்கிறது. அதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கிறது. படித்தவர்கள் எல்லோருக்கும் சர்க்கார் வேலை தேடித் தருவது என்பது முடியாத காரியம். ஸ்ரீ வேதரத்னம் பிள்ளை அவர்களும் எடுத்துச் சொன்னார்கள். முக்கியமாகச் செய்யவேண்டிய காரியங்கள் என்ன இருக்கிறதோ அதைச் செய்து படித்தவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஸ்தாபனங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். இதைப்பற்றி பின்னால் கூறுகிறேன். இப்பொழுது சர்க்கார் திட்டங்கள் போட்டு பல கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்கிறார்கள். எந்தெந்த ஜில்லாவில் எந்த தொழில் அபிவிருத்திக்காக சாதனங்கள் இருக்கின்றனவோ, அதைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் உள்ள சட்ட சபை அங்கத்தினர்கள், தொழிலதிபர்கள், இன்னும் தொழில் வளர்ச்சியில் அக்கரை கொண்டவர்கள் எல்லோரையும் கூட்டி, அந்த ஜில்லாவில் என்னென்ன பொருள்கள் கிடைக்கின்றன, என்ன தொழில் செய்ய முடியும், எந்தத் தொழில் அவசியம் என்பதையெல்லாம் யோசித்து, எந்தத் தொழில் வளர்ச்சிக்கு வசதி இருக்கிறதோ அதை எடுத்துக்கொண்டு செய்தால் நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகரித்து முன்னேற்றம் ஏற்படும். ஆனால் இன்றைய தினம், ஒரு ஜில்லாவிலே அலுமினியம் பேக்டரி ஏற்படுத்தப்போகிறோம், மற்றொரு ஜில்லாவிலே பித்தளைப் பாத்திரங்கள் செய்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். எந்தெந்த ஜில்லாவில் எந்தத் தொழிலுக்கு அவசியமிருக்கிறது் என்பதைத் திட்டமிட்டுச் செய்யும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு தொழில்களுக்கு சர்க்கார் உதவி செய்வது வரவேற்கக்கூடியதே. ஆனால் இன்றைய தினம் நமது பாரத சர்க்கார் —சென்னை சர்க்கார் அல்ல என்று நினைக்கிறேன்—இந்த சிறிய கைத் தொழில்களுக்காக அதிகமாக விளம்பரம் செய்கிறார்கள். திருப்பூருக்கு சர்க்கார் விளம்பர "van" ஒன்று வந்தது. சுமார் 50,000 ரூபாய் இருக்கும் அந்த வண்டியின் விலை. இதைத் தவிர ஆயிர ரூபாய் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தர்கள் அந்த வானில் வருகிறார்கள். அதில் விளம்பரத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் சாமான்கள் என்னவென்றால் 10 ஜோடி செருப்புகள், 10 ஜோடி பூட்சுகள், மரப் பொம்மைகள், இன்னும் சில சாமான்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கனவே சொன்னதுபோல் இந்த லாரிக்கு 50,000 கிரயம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். இன்னும் அதை ஓட்டுவதற்காக வருஷா வருஷம் 15,000 ரூபாய் செலவு செய்கிறார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். இன்னும் அவர்கள் படிச் செலவு வேறு. இதை எல்லாம் பார்க்கும்பொழுது இந்த விளம்பரத்திற்காக பாரத சர்க்கார் ஏராளமான ரூபாய் செலவு செய்கிறார்கள் என்று சொல்ல வேண்டியிருக்கிறது. உத்தியோகஸ்தர்களைக் கேட்டால் கைத்தறி அபிவிருத்திக்காக விளம்பரம் செய்வதாகச் சொல்லுகிறார்கள். அந்த விளம்பர வண்டியில் வைத்திருக்கும் செருப்புகளை வாங்க ஆட்கள் கிடையாது. அங்கேயுள்ள மரப் பொம்மைகளை வாங்குவதற்கு ஆட்கள் கிடையாது. இவைகள் அத்தியாவசியமான சாமான்கள் இல்லை. மக்களிடத்திலிருந்து வரியை வாங்கிக்கொண்டு அதை

[Sri K. N. Palaniswami Gounder] [3rd April 1958

எந்த விதத்தில் செலவு செய்கிறது என்று தெரியாமல் சர்க்கார் செலவு செய்துவருவது மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆகையால் நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு யோசனை சொல்லவேண்டும்.

ஆந்திராவும், கேரளாவும் பிரிந்த பிறகு இந்தத் தொழில் இலாகாவில் உள்ள ஆபீசர்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு பத்து மடங்காகப் பெருகி இருக்கிறது. சேப்பாக்கத்தில் உள்ள ஆபீஸிலே இடம் போதாமல் மவுண்டு ரோடிலுள்ள "Kaleel Mansions" லும் ஆபீஸ் வைத்து நடத்துகிறார்கள். முந்தி ஒரு டைரக்டர், ஒரு டெபுடி டைரக்டர், இரண்டு அல்லது மூன்று உதவி டைரக்டர்கள் இருந்தார்கள் என்று சொன்னால், இப்பொழுது அவர்கள் நூற்றுக்கணக்கில் இருக்கிறார்கள். கோயம்புத்தூர் ஜில்லாவிலே சிறிய கைத்தொழில், அதாவது பனியன் பாக்டரி, சாயப் பட்டை போன்றவைகள் வைத்து நடத்துவதற்காக 25,000 ரூபாய் வரை பணம் கொடுக்கிறார்கள். அந்த ஜில்லாவில் 3 அல்லது 4 டெபுடி டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வான்கள் இருக்கின்றன, ஜீப்கள் இருக்கின்றன. இன்னும் போதிய உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். ரூ. 25,000 கடனாகக் கொடுப்பதைவிட அதை ஒரு சிறு தொழிலுக்கு ஒதுக்கிக் கொடுத்தால் சர்க்காருடைய செலவு கம்மியாகும். கொடுக்கும் தொகையும் மக்களுக்குப் போய்ச் சேரும். இண்டஸ்ட்ரியல் டிபார்ட்மெண்டு, கூட்டுறவு டிபார்ட்மெண்டு, அனிமல் ஹஸ்பண்டரி டிபார்ட்மெண்டு, சமுதாய நல அபிவிருத்தி இலாகா முதலியவைகளில் அநேக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். முன்பு நகாங்களில் 1 பங்கு உத்தியோகஸ்தர்கள் என்று சொன்னால் இப்போது 25 பங்காக இருக்கிறார்கள். எவ்வளவுதான் சர்க்கார் தொழில் வளர்ச்சிக்காக திட்டங்கள் போட்டாலும் கைத்தொழில் வளர்ச்சி அடையவில்லை. ஒவ்வொரு ஜில்லாவிலும் இருக்கும் சட்டசபை அங்கத்தினர்களையும், முக்கியஸ்தர்களையும் கலந்து திட்டங்களை வகுத்து, சர்க்கார் செலவு செய்யும் தொகை சரியாக பயன்படும்படி செய்ய வேண்டும்.

இன்றைய தினம் வீடு கட்டும் திட்டத்தைப்பற்றி சொன்னார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய் போட்டு வீடு கட்டிக்கொடுப்பதாக சொன்னார்கள். இப்பொழுது மில் தொழிலாளர்களுக்குதான் அதிகமாக வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களுக்கும், கதர் நெசவாளர்களுக்கும் நிறைய வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இம்மாதிரி திட்டங்களில் உத்தியோகஸ்தர்களோடு அந்தப் பிரதேசத்தில் இருக்கும் முக்கியஸ்தர்களையும் அழைத்து கலந்து ஆலோசிக்க வேண்டும். அப்படிச் செய்தால் திட்டங்கள் சரிவர நடைபெறுவதற்கு உதவியாக இருக்கும்.

நம் ராஜ்யத்தில் கைத்தொழில்கள் இன்னும் அதிகமாக முன்னேற்றம் அடைய வேண்டும். நமது தொழில் அமைச்சர் கனம் ஸ்ரீ ஆர். வெங்கடராமன் தொழில் துறையில் நல்ல அனுபவம் பெற்றவர். நல்ல முறையில் இந்தத் தொழில்கள் மக்களுக்கு பயன்படும்படி செய்யவேண்டும். சர்க்கார் செலவழிக்கும் பணம் வீணாகப் போகாமல் நல்ல முறையில் செலவிடப்படவேண்டும். இந்தத் தொழில்கள் விவசாயத்தையும், வியாபாரத்தையும் அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் இருக்கவேண்டும். இன்றைய தினம் எனக்கு பேச சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

11-23 a.m. * **Sri M. P. SARATHI**: கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, தொழில் மான்யத்தின் மீது கொண்டு வரப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துகளை சொல்லலாம் என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டு தொழில் மான்யத்திற்காக 3 கோடி சொச்சம் ரூபாய் கேட்கப்பட்டது. இந்த ஆண்டு 5 கோடி ரூபாய் சொச்சம் ஒதுக்கப்பட்டு அது இப்பொழுது விவாதத்துக்கு வந்து உள்ளது.

முக்கியமாக வட நாட்டில் பெரிய பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அதில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். எஞ்சினியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பெரிய கனரக தொழிற்சாலைகளை ஏற்படுத்தி



3rd April 1958] [Sri M. P. Sarathi]

அபிவிருத்தி செய்யலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதே சமயத்தில், சென்னை சர்க்கார் மட்டும் இப்பொழுது கதர் அபிவிருத்திக்கும், அம்பர் சர்க்காவுக்குமாக 3 கோடி ரூபாய் சொச்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். 1956-57-ம் வருஷம் 127 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. 1957-58-ல் 218 இலட்சம் ரூபாயாக இருந்து இப்போது ஏறக்குறைய 366 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது நாட்டில் கைத்தறி துணி விலை போகாமல் ஆங்காங்கு தேங்கிக் கொண்டிருக்கும்போது, கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, கதர் அபிவிருத்திக்காகவும், அம்பர் சர்க்கா அபிவிருத்திக்காகவும் 2 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்க வேண்டிய அவசியம் என்ன என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் என்ன சமாதானம் சொல்லப்போகிறார்களோ தெரியவில்லை. சர்க்கார் தன் கட்சியை பலப்படுத்திக் கொள்வதற்காகவே கதர் அபிவிருத்திக்கு நிறைய பணம் ஒதுக்குகிறார்கள், பல அதிகாரிகளை நியமித்து பிரசாரம் செய்ய சொல்லுகிறார்கள். உண்மையிலேயே நம் நாடு தொழில் துறையில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக இம்மாதிரி செய்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த இலாகாவில் பல அதிகாரிகளை நியமித்திருக்கிறார்கள் என்பதைக் குறித்து இரண்டொரு புள்ளி விவரங்களை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன்

சென்ற ஆண்டு இண்டன்ஸிவ் காதி என்ற முறையில் 232 பேர் இருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு 860 பேர் இருக்கிறார்கள். அதிகப்படியாக நியமனம் செய்யப்பட்டிருப்பதன் காரணம் தெரியவில்லை. எக்ஸ்டென்ஸிவ் காதி என்பதன் கீழ் சென்ற ஆண்டு 51 பேர் இருந்தார்கள். ஆனால் இப்போது அந்த எண்ணிக்கை 142-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. அம்பர் சர்க்காவுக்கு சென்ற ஆண்டு மூன்று கெஜட் பதிவுள்ள அதிகாரிகள் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது 12 அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதர அதிகாரிகள் போன வருஷம் 23 பேர்தான் இருந்தார்கள். ஆனால் இந்த வருஷம் 714 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக மொத்தமாகப் பார்க்கும்போது ஏறக்குறைய 1,500 அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எந்த இலாகாவிலும் இவ்வளவு அதிகாரிகளை நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. 'கதர் அபிவிருத்தி இருந்தால்தான் காங்கிரஸ் அபிவிருத்தி இருக்க முடியும்; காங்கிரஸ் அபிவிருத்தி அடைந்தால் தான் சர்க்கார் கைவசமிருக்க முடியும்' என்று நினைக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் நசித்துப் போய் கொண்டிருக்கும்போது கைத்தறி துணி தேங்கி இருக்கும்போது கதர் அபிவிருத்திக்காக அதிக பணம் செலவு செய்து கொண்டு போனால் கைத்தறி துணியின் நிலைமையை மோசமாக்கிக் கொண்டுதான் போகிறார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக கெஜட் பதிவுள்ள ஆபீஸர்களை சர்வீஸ் கமிஷன்தான் பொறுக்கி எடுக்கிறார்களோ என்னவோ. ஆனால் கதர் அபிவிருத்தி விஷயத்தில் அதிகாரிகளை சர்க்காரே நியமித்துவிடுகிறார்களோ என்று சந்தேகம் தோன்றுகிறது. அது மட்டும் அல்ல, சர்க்காரே தங்களுக்கு சொந்தமான ஆட்களையே நியமித்து விடுகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன்

சென்னை மாநிலத்தில் 3 சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தப்போவதாக சென்ற ஆண்டு பட்ஜெட்டின்போது சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் ஒரு ஆலையை கூட ஏற்படுத்தவில்லை. இதைப்பற்றி காரணங்களும் ஒன்றும் கொடுக்கப்படவில்லை.

சர்க்காரால் 10 இலட்சம் ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்ட விழுப்புரத்தில் இருக்கும் வனஸ்பதி தொழிற்சாலை மூடப்பட்டு இருக்கிறது. இதை சர்க்காரே எடுத்து நடத்தலாம். வட நாட்டிலிருந்து வனஸ்பதி வரவழைப்பதைத் தடுத்து நம் நாட்டிலேயே அதை உற்பத்தி செய்வதற்கு தோதாக இருக்கும்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: இதை எடுத்து நடத்தினால் நமக்கு நஷ்டம்தான் வரும்.

[3rd April 1958

**Sri M. P. SARATHI :** நாம் அதை எடுத்துக்கொண்டு நடத்தாமலே நஷ்டம் வரும் என்று சொல்வதில் பயன் இல்லை. எந்தத் தொழிலையும் இலாபம் வரும்படி அபிவிருத்தி செய்யலாம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் காட்பாடியில் வனஸ்பதி தொழிற்சாலை இன்னும் மூடப்பட்டிருக்கிறது. இதற்கு சர்க்கார் 10 இலட்சம் ரூபாய் கடனாக கொடுத்திருக்கிறது. ஆனால் அந்த கடனை வாங்ககூட முடியவில்லை.

ஒவ்வொரு ஜில்லாவிலும் பாலிடெக்னிக்குகளை ஆரம்பிக்க சர்க்கார் முன் வரவேண்டும். சென்ற ஆண்டு 24 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 2,22,000 ரூபாய் குறைக்கப் பட்டிருக்கிறது. இதற்கு காரணம் என்ன என்று அமைச்சர் சொல்லப் போகிறாரோ தெரியவில்லை. பாலிடெக்னிக்குகளை ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பிக்க வேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கும்போது சென்ற ஆண்டைக்காட்டிலும் 2 இலட்சம் ரூபாய் குறைக்கப்பட்டது மிகவும் வருந்தத்தக்கது.

இங்கு குடிசைத் தொழில்கள் வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தால் வட நாட்டில் உள்ளவர்கள் அங்கு தயாரிக்கும் பொருள்களுக்கு நம் நாட்டை ஒரு மார்க்கெட்டாக உபயோகப்படுத்திக் கொள்வார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமாக வட ஆற்காடு மாவட்டத்தில்—அது ஒரு பஞ்சப் பிரதேசம். அநேகமாக ஒரே தொழில் தான் செய்கிறார்கள். அது பீடித் தொழில் தான். பீடித் தொழிலாளிகள் எந்த நிலைமையில் இருக்கிறார்கள்? 100-க்கு 5 அல்லது 10 பேர் க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்டு இறக்கிறார்கள். இந்தக் காரணத்தினால், வட ஆற்காடு மாவட்டத்தில், ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தி, தொழிற்சாலையில் அந்த மக்களுக்கு வேலை கொடுத்து அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அண்மையில் அங்கு வந்திருந்து அமைச்சர் அங்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க போவதாகச் சொன்னார்கள். ஆகையால் இந்த நேரத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**Sri C. R. RAMASWAMI :** சபாநாயகர் அவர்களே, தொழில் மான்யம் மிகவும் முக்கியமானது என்பதை யாவரும் மறுக்க முடியாது. நாடு செழிப்படைய, மக்கள் நல்ல முறையில் வாழ்க்கை நடத்த, தொழில் வளர்ச்சி அவசியம். தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவில்லை என்பது வருந்தத்தக்கது என்று சொன்னார்கள். ஆனால் இயற்கை நமக்கு விரோதமாக இருக்கிறது என்பதை மறக்கக்கூடாது. நிலக்கரி முதலியவை நம் நாட்டில் இல்லாததால், கனரக தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடியவில்லை, தாமதம் ஏற்படுகிறது. ஆனால் இப்பொழுது, பழுப்பு நிலக்கரி நமக்கு கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு, கனரக தொழிற்சாலைகள் ஏற்படுத்தலாம். இது மகிழ்ச்சிக்குறிய விஷயம். இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்துவது என்பது மிகக் கஷ்டமான விஷயம். நன்கு ஆலோசனை செய்து செய்ய வேண்டிய விஷயம் இது. ஏதோ தொழிற்சாலை வைக்கவேண்டும் என்று நினைத்து பணம் போடுவது சரியில்லை. தொழிற்சாலை அவசியம் ஆதலால் அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளை செய்வது அவசியம். நடத்த முடியுமா முடியாதா என்பதை அலசிப்பார்த்துவிட்ட பிறகு ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1958–59-ல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பலரக தொழில் வளர்ச்சிக்காக 147 இலட்ச ரூபாய் செலவழிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். கிண்டி இன்டஸ்டிரியல் எஸ்டேட் மிகவும் நல்ல முறையில் அமைந்திருக்கிறது. அங்கே இப்பொழுது பல தொழில்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. இவைகளெல்லாம் சரியான முறையில் கவனித்து எல்லா தொழில்களையும் இலாபகரமாக செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்கு பிறகு இது சரியாக நடக்கவில்லை என்று வரக்கூடாது. அங்கு செய்யப்படும் பொருள்கள் விற்பனையாக



3rd April 1958] [Sri C. R. Ramaswami]

வேண்டிய ஏற்பாடுகளும் செய்யவேண்டும். இன்டஸ்டிரியல் எஸ்டேட் ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்கு செட்டுகள் போடுவது மின்சாரம் அளிப்பது போன்ற இவைகளெல்லாம் அரசாங்கம் தொழில் வளர்ச்சிக்காக செய்ய வேண்டிய வசதிகள். இது வரைக்கும் பணம் கொடுத்தால் தனிப்பட்ட நபர்கள் செய்வார்கள் என்று சொல்லுகிறார்கள். அதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பணம் வாங்குபவர்கள் எவ்வளவு தூரம் பயன்படுத்துகிறார்கள், தொழிற்சாலை அமைக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்ததுதான். ஆகையால் சர்க்காரே பல வசதிகள் இருக்கக்கூடிய இன்டஸ்டிரியல் எஸ்டேட்களை அமைத்துக்கொடுப்பதுதான் நல்ல முறை என்று நான் சொல்லமுடியும்.

கனரக தொழிற்சாலைகளைப்பற்றி சொல்லுகிறார்கள். சேலம் பாக்ஸைட்டு அலுமினியம் இவைகளை உடனடியாக அரசாங்கம் மூலமாக செய்தால் நல்லது. இரும்பைவிட அலுமினியம் செய்ய சுலபமான சூழ்நிலை இருக்கிறது. ஆனால். இப்பொழுது அந்த தொழில்கள் அமைத்தாலும் சாமான்கள் விற்பனையாவதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படுத்த வேண்டும். எலக்டிரிஸிட்டி டிபார்ட்டுமெண்டில் 10 கோடி 12 கோடி ரூபாய்க்கு சாமான்கள் வாங்க வேண்டி இருக்கிறது. அந்த பொருள்களையெல்லாம் இம்மாதிரியான தொழில்கள் உற்பத்தி செய்தால் அவை உடனடியாக விற்பனையாகும். எலக்டரிஸிட்டி டிபார்ட்டுமென்டுக்கு வேண்டிய பொருள்கள் என்ன என்பதை யோசனை செய்து பார்க்கவேண்டும்.

**Switchgear, transformers, copper wires, aluminium wires** முதலிய ஏராளமான சாமான்கள் வாங்குகிறார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் சாமான்கள் சீக்கிரத்தில் விற்பனையாகிவிடும். இந்த அறிக்கையை பார்த்தால் பலப்பட்ட தொழில்கள் ஏற்படுகின்றன என்று தெரிகிறது. அவைகளை எல்லாம் சர்க்காரே தங்கள் கையில் வைத்துக்கொண்டு வேண்டிய அளவு எல்லோருக்கும் பயன்படக் கூடிய அளவில் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டெக்னிகல் எஜூகேஷன் சம்பந்தமாக ஆர்டிசன்களுக்கு படிப்பு வசதி இல்லை. பாலிடெக்னிக் சென்னையில் இருக்கின்றன. மத்திய சர்க்கார் நடத்துவது போன்ற லேபர் டிரேடிங் ஸ்கூல்ஸ் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். உடனடியாக நிறைய பாலிடெக்னிக் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி ஆயிரக்கணக்கான ஆர்டிசன்களை பயிற்சிபெற செய்வது மிகவும் அவசியம்.

கனரக தொழில்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இன்டக்கரல் கோச் பாக்டரி, ஆவடி வாகன் பில்டிங் ஷாப் பின்னி மீட்டர் கேஜ் வாகன் ஷாப் போன்றவை இருக்கின்றன. வண்ணாரப்பேட்டையிலுள்ள இன்ஜினீரிங் ஒர்க்ஷாப் சரியாக நடக்கவில்லை. அதை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்ஜினீரிங் ஒர்க்ஷாப்பிற்கு ஒத்தாசையாக **Subsidiary industries** கிடையாது. ஒன்று இரண்டு சென்னையில் இருக்கிறது. அது இன்ஜினீரிங்குக்கு ரொம்ப அவசியம். ஆகவே இம்மாதிரியான சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தினால் ஓரளவுக்கு அந்தந்த பகுதியில் தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

நமது நாட்டில் எல்லா விதமான தொழில்களும் வளர்ந்து கொண்டே 11-40
வருகிறது. இவைகள் ஸ்ட்ரக்சரல் இஞ்சினியரிங், பேசிக் இஞ்சினியரிங், a.m.
பவுண்டரி வொர்க்ஸ், அல்லைட் இன்ஸ்ட்ரிஸ் என்று சொல்லுவார்களே இவைகள் எல்லாம். இவைகள் எல்லாம் ஏற்பட வேண்டியது முக்கியமாக இருக்கிறது. இவைகளுக்கு எல்லாம் இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைத் தவிர கைத்தறி நெசவாளர்களுக்கு நமது அரசாங்கம் பல துறைகளில் உதவி அளித்துக்கொண்டு வருகிறது. அந்தத் தொழில் வளர்ச்சி அடைவதற்கும் எந்த வகையிலும் உதவி அளித்துக்கொண்டு வரப்படுகிறது. தொழில் வளர்ச்சி அடைவதற்கு எல்லா வழியிலும் வசதிகள்

[Sri C. R. Ramaswami] [3rd April 1958

செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் மத்திய அரசாங்கம் மில் துணிகளுக்கு ரிபேட் கொடுத்திருக்கிறார்கள். அதனால் யார் பாதிக்கப் படுகிறார்கள் என்றால் கைத்தறி நெசவாளர்கள் தான். கைத்தறி நெச வாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர் களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகவும் சில யோசனை களைச் சொன்னோம். ஓரளவு அவர்களுக்கு என்று சிலவற்றை ஒதுக்க வேண்டும் என்று சொன்னோம். கனம் ராஜகோபாலாச்சாரி அவர்கள் சொன்னதுபோல் ஓரளவு நாம் அவர்களுக்கு என்று தோத்திகளையும் புடவைகளையும் ஒதுக்கி வைத்தால் அவர்களுடைய கஷ்டம் ஒரு அளவில் தீரும். அப்படி அவர்களுக்கு ஒதுக்கா விட்டால் அவர்களுடைய கஷ்டம் இருந்துகொண்டேதான் இருக்கும். அதிகப்படியான துணித் தேக்கம் இருந்துகொண்டேதான் இருக்கும். சைதாப்பேட்டையில் கைத்தறி நெச வாளர்களுடைய சங்கம் இருக்கிறது. அதிலுள்ள கஷ்டம் எனக்கு நன் றாகத் தெரியும். ஆயிரக் கணக்கான ரூபாய் பெருமானமுள்ள லுங்கிகள் அங்கே விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்றன. அதனால் பல நெசவாளர் கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தர மான ஏற்பாட்டைச் செய்தால்தான் அவர்களுடைய தொழில் வளரும் என்பதைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. அதனால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யும் என்று நினைக்கிறேன்.

கைத்தறி தொழில் ஒரு பெரிய குடிசைத் தொழில் என்று நாம் சொல்லிக்கொண்டு வருகிறோம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அர சாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதைத் தவிர இப்பொழுது விருதுநகரிலும், கிண்டியிலும் சைக்கல் களைச் செய்தவற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவைகளை என் செய்ய வேண்டும் என்று கேட்கிறேன். டி.ஐ. சைக்கல்ஸ் போன்ற பெரிய தொழிற்சாலைகள் நமது ராஜ்யத்தில் இருக்கும்போது இப்படிப்பட்ட சைக்கல் தொழிற்சாலையை என் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்கிறேன். அதற்கு என்று அரசாங்கம் மூன்று அல்லது நான்கு லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டிய அவசியமேயில்லை. இப்படிச் செலவு செய்து என் ஒரு தொழிற் சாலையை ஏற்படுத்தவேண்டும் ? அதற்குக் காரணம் என்ன என்பது தெரிய வில்லை. அதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் தெரிவிப்பார் என்று நினைக் கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : அசெல்பிள் பண்ணுவதுதான் மானுபாக்சர் செய்வதில்லை.

***SRI K. S. SUBRAMANIA GOUNDER** : மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படு கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது கைத்தறி நெசவாளர் களுடைய நிலை என்ன, அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன என்பதைப் பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். மத்திய அரசாங்கத்தினுடைய ஒரு கொள் கையால் கைத்தறி நெசவாளர்களுக்கும் அந்தத் தொழிலுக்கும் ஒரு பெரிய கேடு வந்திருக்கிறது என்று சொன்னால் அதில் ஒன்றும் மிகை இல்லவே இல்லை. ஒன்று அவர்களுக்குக் கிடைத்து வந்த ரிபேட்டைக் குறைத்து விட்டார்கள், அதே சமயத்தில் மில் துணிகளுக்கு இருக்கக்கூடிய எக்ஸைஸ் வரியை எடுத்து விட்டார்கள். அதன் காரணமாக கைத்தறித் தொழில் இரண்டு மடங்கு பாதிக்கப்பட்டு விட்டது. இந்த ராஜ்ய அரசாங்க மும், குறிப்பாக மந்திரி அவர்களும், இதற்காக எல்லா துறைகளிலும் இதைக் கண்டித்தும் நேரடியாகச் சொல்லியிருந்தும் அவர்கள் அதற்கு செவி சாய்க்காது இருப்பதைப்பற்றி நாம் வருந்த வேண்டியதாக இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். இந்த சட்டசபையில் ஒரு தீர்மானம் போட்டு அதை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பினால் அதற்காகவாவது அவர்கள் மதிப்புக்கொடுப்பார்களா என்பதையும் கனம் மந்திரி அவர்கள் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



3rd April 1958] [Sri K. S. Subramania Gounder]

கைத்தறிக்காக இந்த ஆண்டு என்பது லட்சம் இருபத்தி ஐந்து ஆயிரச் சொச்சம் ரூபாய் ரிசர்வ் பாங்கியிலிருந்து வொர்க்கிங் காபிடலுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அதில் நாம் எவ்வளவு பணம் உபயோகித்துக்கொண்டிருக்கிறோம் என்று பார்த்தால் ஆறு லட்சம் ரூபாய்க்கு மேல் இல்லை என்பதை நான் கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சற்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். இப் பொழுது கொடுக்கக்கூடிய பணம் எல்லாம் எதற்காகக் கொடுக்கப்படுகிறது என்று பார்த்தால் புதியதாக செஸ் நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தறி களுக்கு மாத்திரம் கொடுக்கப்படுகிறதே தவிர பழைய சங்கங்களுக்கு முன்னதாகவே இருந்த தறிகளுக்கும் பண வசதி அரசாங்கத்தாரால் செய்து தரப்படவில்லை என்று நிச்சயமாக சொல்லலாம். இதற்கும் பணவசதி செய்து தரப்பட வேண்டும். செஸ் நிதியில் பணம் இருந்தாலும் அதை உபயோகப் படுத்திக்கொள்ளுகிறோம் என்று மத்திய பாங்கு எழுதினால் அதற்கு உத்திரவு வராத நிலையில் இருக்கிறது. அதன் காரணமாகத்தான் பழைய சங்கங்கள் பணத்திற்கு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். செஸ் நிதியிலிருந்து ரிசர்வ் பாங்கில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பழைய தறிகளும் அந்தப் பணத்தை உப யோகப்படுத்துக்கொள்ளலாம் என்கிற முறையில் உடனடியாக ஒரு உத்தி ரவைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது துணித் தேக்கம் எந்த அளவில் இருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் விவரமாக எடுத்துக் கூறியிருக்கிறார். இதற்கு உடனடியாக ஒரு முடிவு காணவேண்டும். இப்பொழுது எக்ஸைஸ் வரியை குறைத்திருக்கிறார்கள். எதற்காக குறைத்தார்கள் என்று காரணம் சொல் லும்போது தேக்கம் அதிகமாக இருக்கிறது, அதற்காக உடனடியாக அதற்கு நிவாரணம் செய்கிறோம் என்கிற முறையில் அதைக் குறைத்திருக்கிறார்கள். அதைப்போலவே கைத்தறிக்கு இருக்கக்கூடிய தேக்கத்தையும் குறைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மத்திய அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் காரணத்தினால் கைத்தறித் துணி தேக்கம் இன்னும் அதிகமாக ஆகத்தான் செய்கிறது. அரசாங்கம் உடனடியாக அதில் தலையிட்டு அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை மந்திரி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணித் தேக்கம் அதிகமாக ஏற்படுவதன் காரணமாக குறிப்பாக சென்ட்ரல் பாங்கியிலிருந்து கிடைக்கக்கூடிய பணநிலை ஓரளவு பாதிக்கப்படு கிறது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் ஒவ்வொரு சங்கங்களும் எந்த அளவுக்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு அந்தப் பணத்தை பூர்ணமாக உபயோகப்படுத்திக்கொண்டு விட்டார்கள். அது போக திரும்பவும் அவர்கள் பணம் வேண்டும் என்று கேட்கும்போது அவர்களுக்கு பணம் கிடைக்க அரசாங்கம் அவர்களுக்கு ஒரு வழி செய்யாவிட்டால் சங்கங்களுடைய நிலை அதிகமாக பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுக்கு கொடுக்க பணம் இல்லாமல் இல்லை. பணம் கொடுப்பதற்கு அரசாங்க அனுமதி தேவை என்று தெரிவிக்கிறார்கள். மற்றொன்று ரிசர்வ் பாங்கு பணம் கொடுக் கிறோம் என்று சொல்லும்போது சென்ட்ரல் பாங்குக்கு அவைகளை கொடுக் கும்போது அவைகளை சூப்ரவைஸ் செய்வதற்கு என்று மான்யம் கொடுப்ப தாக சொல்லப்பட்டது. அதற்கு ஆகக்கூடிய செயலில் $87\frac{1}{2}$ சதவீதம் அதை சப்சிடியாகக் கொடுக்கிறோம் என்ற நிபந்தனையின் பேரில் அந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைப்பற்றி பல தடவைகள் சொல்லியும் எழு தியும் அதைப்பற்றிய உத்தரவு இதுவரையிலும் வராமல் இருப்பதைக் கண்டு உண்மையிலேயே வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. ஏற் கெனவே உறுதி கொடுத்ததுபோல் அதற்கு வேண்டிய ஒரு உத்தரவை சீக்கிரமாக கனம் மந்திரி அவர்கள் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்வதிலும் பெரிய குறை இருக்கிறது. சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்வதால் விலை ஸ்டேட்ஸ் சொஸைட்டிகளின் மூலம் நூல் விநியோகம் செய்வதால் விலை

[Sri K. S. Subramania Gounder] [3rd April 1958

அதிகமாக இருக்கிறது. இதைப்பற்றி எல்லா சங்கங்களும் திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஸ்டேட் சொசைட்டிகளுக்கு லாபம் இருக் கிறதா என்று பார்த்தால் அதனால் சில வருஷங்களில் நஷ்டம் தான் வந்திருக்கிறது. லாபம் வந்தாலும் கொஞ்ச அளவில் தான் லாபம் வந்து கொண்டிருக்கிறது. ஆகையினால் கூட்டுறவு இலாகாவும் அரசாங்கமும் இதற்கு என்ன செய்யமுடியும் என்பதை ஆராய்ந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இது ஸ்டேட்ஸ் சொ சைட்டிகளின் தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. நூல் விலை கட்டுப்பாடு இல்லாத காரணத்தாலும், அதில் ஒரு நிரந்தரமான விலை இல்லாத காரணத்தாலும் அதன் விலை சரியானபடி இல்லை. ஆகவே நூலை பொறுத்த வரையிலும் அதற்கு ஒரு நிரந்தர விலை வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நூல் விலையை பார்வேர்ட் காண்ட்ராக்ட்டுக்கு செய்யக்கூடாது எனக் கட்டுப்படுத்தினால் இதற்கு ஒரு முடிவு காண முடியுமா என்பதை ஆலோசனை செய்து பார்க்கும்படி. கேட்க விரும்புகிறேன்.

இந்த ரிபேட் குறைப்பைப் பொறுத்த வரையில் கனம் மந்திரி அவர் கள் கூறியதுபோல் 12 நயா பைசாவாக செய்யவேண்டும். அதை தவிர ஒரு வருஷத்தில் நான்கு தடவையாவது 15 நாட்களுக்கு ஷ்பெஷல் ரிபேட் அதாவது மூன்று அணா வரையில் ரிபேட் கொடுத்து அதனால் நல்ல முறையில் அந்தத் துணிகளை விற்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் சாரதி அவர்கள் பேசும்போது கதருக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள் என்றும், அதிகப் பணம் ஒதுக்கி
11.50 a.m. யிருக்கிறார்கள் என்றும் சொன்னார். கதர் கைத்தறி துணி என்று ஒப்புக் கொள்ளவில்லை என்றால் அதைப்பற்றி வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. கதர் துணியும் ஒரு கைத்தறி துணிதான். அதற்கு இரண்டு வகையில் ஆதரவு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதாவது கையா லேயே நூற்கப்படுகிறது, கையாலேயே நெய்யப்படுகிறது. அதனால்தான் அதற்கு அதிகப்படியான ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டு கொள்ளுகிறேன். பொள்ளாச்சியில் டெக்ஸ்டேல்ஸ் ஸ்பிண்டில்ஸ் மூலம் நூல் நூற்கப்படுவதற்கு ஒரு பைலட் ஸ்கீம் ஆரம்பித்திருக்கிறார்கள். சேலம் ஜில்லாவில் அதிகமான நெசவாளர்கள் இருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்திலே ஐந்தில் ஒரு பங்கு நெசவாளர்கள் அங்கே இருக்கிறார்கள். ஆகையினால் அங்கு டெக்ஸ்டேல்ஸ் இயந்திர நூல் நூற்பதற்கு ஒரு ஸ்கீம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இண்டஸ் டிரியல் எஸ்டேட் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆரம்பிக்கவேண்டுமென்று சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சொன்னார்கள். இது மிகவும் அவசியம். ஒவ்வொரு ஜில்லாவிலும் கண்டிப்பாக இதை ஆரம்பிக்க வேண்டும். நம்முடைய ராஜ்யத்தில் பெரிய ஜில்லாவாகிய சேலம் ஜில்லாவிலே இதை முதலில் ஆரம்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இரும்புத் தொழிற்சாலையை பொறுத்தவரையிலே, சீக்கிரமாக ஆரம்பிக்க படும் என்று சொன்னாலும்கூட, உடனடியாக இந்த ஆண்டிலேயே ஒரு பைலட் ஸ்கீம் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர் களே, ஒரு சர்க்காரின் தொழில் கொள்கை அது ஏற்றுக்கொண்டிருக்கிற பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும். இந்த சர்க்கார் தங்களுடைய பொருளாதார கொள்கை சமதர்ம பொருளாதார கொள்கை என்று அடிக்கடி சொல்லி யிருப்பதை நான் அங்கே நினைவூட்ட விரும்புகிறேன். சமதர்ம பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றவாறு இந்த ராஜ்யத்தின் தொழில் கொள்கை இல்லாதது மிகவும் வருந்தத்தக்கது. பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்று சொல்லுவது போல், ஒரு பக்கம் சமதர்ம பொருளாதாரக் கொள்கை என்று பேசிக் கொண்டு, மற்றொரு பக்கத்தில் தனிநபர் ஆதிக்கம் தொழிலில் ஏற்படுகின்ற ஒரு முறையிலே இந்த ராஜ்யசர்க்கார் தங்களுடைய தொழில் கொள்கையை வகுத்து அமுல் நடத்திக்கொண்டு வருவது மிகவும் வருந்தத்தக்கது.



3rd April 1958] [Sri P. S. Chinnadurai]

உதாரணமாக, நம்முடைய ராஜ்யத்தில் ஏற்படுத்துவதாக இருக்கும் அலுமினியம் தொழிற்சாலை சம்பந்தப்பட்ட வரையில் மாறுபட்ட கருத்துகளை அமைச்சர்கள் ஆங்காங்கு எடுத்துக் கூறி வருகின்றனர். ஒரு சமயத்தில் அதைத் தனியார் துறைக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இன்னொரு சமயத்தில் கேட்டால், இல்லை, அரசாங்கமே எடுத்து நடத்த லாமா என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம், அநேகமாக நிச்சயமாக நாங்களே எடுத்துக்கொள்ளக்கூடும் பொதுத் துறையிலே என்று நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அவர் அம்மாதிரி கூறி முடித்த ஓரிரண்டு தினங்களுக்குள் மத்திய மந்திரி மனுபாய்ஷா சென்னை ராஜ்யத்தில் ஏற்படுத்தப் போகிற அலுமினியம் தொழிற்சாலை தனியார் துறைக்கு ஒதுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு விட்டது என்று சொல்லியிருக்கிறார். என் போன்றவர்கள் இதில் எது சரி, எந்தத் தீர் மானம் சரி என்று எடுத்துக்கொள்ளுவது என்று நான் கேட்க விரும்புகிறேன். புதியதாக ஏற்படுத்தப்போகும் தொழிற்சாலைகள், குறிப்பாக பெரிய தொழிற்சாலைகள், அரசாங்கத்தாலேயே மக்களுக்காக ஏற்று நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை நிரந்தரமாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். தனியார் கையிலே மக்களுடைய பொருளாதார ஊற்றுகள் சிக்கி விட்டால், அதன் காரணமாக பல தொல்லைகளும், அல்லல்களும், சிக் கல்களும் ஏற்படுகின்றன. இதற்கு பல உதாரணங்களை நான் இன்றைய தினம் எடுத்துக்காட்ட முடியும். இது இந்த சபையில் அங்கத்தினர் களாக வீற்றிருப்பவர்கள் அறியாதது அல்ல. அரசாங்கம் அறியாதது அல்ல. எல்லோரும் அறிந்தது தான். உதாரணமாக பஞ்சாலை தொழிலை எடுத்துக் கொள்வோமேயானால், வளமான தொழில்தான் அது நம் நாட்டிலே, பஞ்சாலைத் தொழிலுக்கு பெரிய ஆபத்து வந்திருக்கிறது என்று முதலாளி கள் பறைசாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஒரு பக்கத்திலே கூறுகிறார்கள் அவர்கள் " நாங்கள் திட்டத்தின் கீழ் எவ்வளவு உற்பத்தி செய்யவேண்டு மென்று கூறப்பட்டதோ, அதைக் காட்டிலும் அதிகப்படியாக நாங்கள் உற்பத்தி செய்துவிட்டோம் என்று கைத்தறிக்கு போதுமான அளவில் எங்கள் நூலை வாங்காததினால் நாங்கள் சில ஷிப்டுகளை மூடப்போகிறோம், சில ஆலைகளை மூடப்போகிறோம் " என்று அமைச்சர் அவர்களிடம் வந்து அவர்கள் ஆலோசனை கேட்க வேண்டுமென்றால், அவர்களுக்கு எவ்வளவு துணிச்சல் இருக்க வேண்டும் ? அரசாங்கத்தினிடம் வந்து " நாங்கள் ஒரு ஷிப்டை மூடப்போகிறோம், உற்பத்தியை குறைக்க போகிறோம், எங்களுக்கு அனுமதி கொடுங்கள் " என்று ஆலோசனை கேட்பதற்கு முதலாளிகளுக்கு எவ்வளவு நெஞ்சு உரம் இருக்கவேண்டும் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரிய நெருக்கடி வந்துவிட்டது என்று முதலாளிகள் கூறுகிறார்கள். பல கஷ்டங்களை விவரித்து ஏதோ சில சிக்கல் ஏற்பட்டுவிட்டது என்று மக்கள் மத்தியிலே முதலாளிகளும் முதலா ளித்துவ பத்திரிகைகளும் பிரசாரம் செய்து கொண்டு வருகின்றனர். இதை சரியான முறையில் பரிசீலித்து அதற்குரிய ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பிக்க வேண்டுமென்று ஒரு பொருளாதார நிபுணரை ஏன் இந்த அரசாங்கம் கேட்டுக்கொள்ள கூடாது ? பஞ்சாலை நிலைமையை ஆலோசித்து ஆராய்ந்து பார்த்து ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பிக்கவேண்டுமென்று அரசாங்கம் சொல்லி யிருக்குமானால், முதலாளிகள் சொல்லுவதின் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளுவதற்கு ஏற்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கவேண்டும். அது இல்லாததால் நாம் இப்பொழுது சங்கடத்தில் ஆழ்ந்திருக்கிறோம். கனம் அமைச்சர்கூட ஒரு ஷிப்டை " மூடுவதற்கு முதலாளிகள் அனுமதி கேட் கிறார்கள். இந்தச் சபையின் அங்கத்தினர்கள் அதன்பேரில் என்ன ஆலோ சனை சொல்லுகிறார்களோ அதைச் சொல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் " என்று சொன்னார்கள். நாங்கள் என்ன யோசனை சொல்ல முடியும். ஷிப்டை மூடுங்கள், உற்பத்தியை குறையுங்கள், அதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் வேலையை இழக்கட்டும் என்று யோசனை சொல்ல முடி யுமா? எந்தத் தரப்பில் உள்ளவர்களும் அத்தகைய யோசனையை சொல்லு வதற்கு முன் வர மாட்டார்கள். முதலாளிகள் தங்களுக்கு கஷ்டம் வந்து விட்டது என் என்று நினைக்கிறார்கள் என்பதை ஆராயவேண்டும். அவர் களுடைய நிலைமையை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்படும் பொருளாதார

[Sri P. S. Chinnadurai] [3rd April 1958

நிபுணரை 10, 15 தினங்களுக்குள்ளாக அவர் தன் அறிக்கையை சமர்ப் பிக்கவேண்டுமென்று கூட அரசாங்கம் கோரலாம்.

முதலாளிகள் பெரிய கூச்சலே போட்டு சமீபத்தில் மத்திய சர்க்காரிட மிருந்து ஒரு பெரிய சலுகையை பெற்றுவிட்டார்கள். அதாவது எக்ஸைஸ் டியூடி நிவாரணம். சுமார் 15 கோடி ரூபாய்க்கு நிவாரணம் கிடைத்திருக் கிறது பஞ்சாலே முதலாளிகளுக்கு. தென்னிந்திய மில் முதலாளிகள் அது போதாது என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே அது போதாது என்று சொன்னால், தென்னிந்தியாவிலுள்ள நூல் ஆலேகளுக்கு அதிகப்படியான நிவாரணம் தேவை என்று சொன்னால், இந்த ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரோடு போராடி அதற்குரிய நிவாரணத்தை ஏன் வாங்கிக்கொடுக்கக்கூடாது ? தொழிலாளிகளேயும், முதலாளிகளேயும் ஒரு வருக்கொருவர் மோதிக்கொள்ளும்படி விட்டுவிட்டு ஏன் இந்த சர்க்கார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவேண்டுமென்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களே கேட்கிறேன். ஆகையால், நிவாரணம் தேவை என்றால் மத்திய சர்க்காரோடு சண்டை போட்டாவது நிவாரணம் பெறுவதற்கு முன் வரவேண்டுமென்று நான் கனம் அமைச்சர் அவர்களே கேட்டுக்கொள்ளு கிறேன்.

கைத்தறி துணி தேங்கிக் கிடப்பதால் அநேக தொல்லேகள் ஏற்பட்டிருக் கின்றன. கனம் அமைச்சர் அவர்கள் அமெரிக்கா சென்று வந்தவர்கள். அவர்கள் அமெரிக்க அனுபவம் பெற்றவர்கள். அமெரிக்காவில் இம் மாதிரி உற்பத்தி அதிகமாகி, தேங்கிவிட்டால், அது தானியமாகட்டும், மற்ற பொருளாகட்டும், அதை அழித்துவிடுவார்கள். நான் இங்கே அம்மாதிரி அழித்துவிட வேண்டுமென்று கூறமாட்டேன். இந்தியா ஏழை நாடு. அழிவு வேலேயை தாங்காது. ஆகவே, இப்பொழுது இங்கு இருக்கும் செல்வத்தை அழித்துவிடும்படி சொல்லவில்லே. 2 கோடி ரூபாய் பொறு மான கைத்தறி துணி தேங்கியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அந்தத் துணியை தீ வைத்து எறித்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லே. ஒரு பக்கத்தில் சர்க்கார் ஊழியர்கள் தங்களுக்கு சம்பளம் போதவில்லே என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் தங்களுக்கு சம்பளம் போதவில்லே என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்னொரு பக்கத்தில் உபாத்தியாயர்கள் தங்களுக்கு ஊதியம் போதவில்லே என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஏன் புதிய, சித்திரை வருஷப்பிறப்பு அன்று ஏப்ரல் 14-ம் தேதியன்று, இம்மாதிரி சர்க்கார் உத்தியோகஸ் தர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 100 பொறுமான போனஸ் கூபன் ஏன் கொடுக்கக்கூடாது ? சுமார் 2 லட்சம் பேர்களுக்கு ஒவ்வொரு வருக்கும் 100 ரூபாய் பொறுமான துணி கூப்பன் ஏன் கொடுக்கக்கூடாது ? திருப்பி பெறக்கூடிய முறையில் அல்ல, அல்லது கடனுக அல்ல, போனஸாக கொடுக்கவேண்டும். இப்படி சுமார் 2 கோடி ரூபாய் பொறுமான துணி கூப்பன்களே அவர்களுக்கு விநியோகித்துவிட்டால் ஒரு பக்கத்தில் கைத்தறி துணி தேக்கம் நீங்கிவிடும். இன்னொரு பக்கத்தில் சர்க்கார் ஊழியர்களின் அல்லல் தீரும். இன்னொரு பக்கத்தில் பஞ்சாலேகளுடைய நூலே எடுத்துக் கொள்ள முடியும். 2 கோடி ரூபாய்க்கு எங்கே போவது என்று கனம் அமைச்சர் அவர்கள் கேட்கலாம். சென்ற ஆண்டிலே ரூ. 3 கோடி 85 லட்சம் ஒதுக்கப்பட்டது ? அதை ஏன் பூராவாக செலவு செய்யக்கூடாது ? ரூபாய் 2 கோடி 33 லட்சம் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பாக்கி ரூ. 1½ கோடி என்ன ஆயிற்று ? கொடுத்த பணத்தை செலவழிக் காமல் இருக்கிறீர்களே என்று கேட்கிறேன். கோடிக் கணக்கில் செலவாகும் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளக்கூடாது. இந்த ஆலோசனையை அமைச்சர் அவர்கள் வேடிக்கையாக கருதாமல், உண்மையாகக் கருதி, உண்மையாகவே 100-க்கு 100 உள்ளத்திலிருந்து வருவதாக கருதி இதை கவனிக்கவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களே கேட்டுக்கொள்ளு கிறேன். பொருளாதார நிபுணரைக் கொண்டு இந்த ஆலோசனையை
12 noon. ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிறுதொழில்களுக்கு, குறிப்பாக கதர்த் தொழிலுக்குக் கொடுக்கப்படும் ஊக்கம் போதாது. எத்தனே அம்பர்ச் சர்க்காக்களே உற்பத்தி செய்யவேண்டு



3rd April 1958] [Sri P. S. Chinnadurai]

மென்று விரும்பினேமோ அத்தனே அம்பர் சர்க்காக்களே உற்பத்தி செய்ய முடிய வில்லே. அதற்குக் காரணமாக இருந்தது என்ன குறை என்றும் அந்தக் குறை எங்கே இருக்கிறது என்றும், அது யாரிடம் இருக்கிறது என்றும் கண்டுபிடித்து, அக்குறையை நீக்க வேண்டாமா ? பல நாட்களாக இந்த சபையில் " கதர்த் துணி கைத்தறித் துணியா ? " என்ற சர்ச்சை நடப் பதைப் பார்த்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். கைத்தறியைக் காட்டிலும் கைத்தறியாக இருப்பது கதர் என்ற உண்மை பலருக்கு இன்னும் தெரியாமலிருப்பது மிகவும் பரிதாபகரமானது. கிராமக் கைத் தொழில்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கவேண்டும். கைத்தொழில் களுக்காக ஒதுக்கப்படும் பணத்தொகை முழுவதையும் செலவிட வேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். உப-மானிய கோரிக் கையில் அதிகப் பணம் கோரக்கூடிய அளவுக்கு கைத்தொழில்களுக்காக பணம் செலவழிக்கவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறேன் ; அதற்கேற்றவாறு தம் இலாகாவை திறமையாக நிர் வகிக்க வேண்டுமென்றும் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த இலா காவில் திறமை வாய்ந்த பலர் இருக்கிறார்கள். அவர்களுடைய உதவியுடன் கனம் அமைச்சர் இலாகாவை திறமையாக நிர்வகிப்பது சுலபமானது. அவசியமானல் கனம் அமைச்சர் இன்னும் சில உத்தியோகஸ்தர்களே நியமித்துக்கொள்ளலாம். இலாகாவைத் திறமையாக நிர்வகிக்க வேண்டு மென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*Sri M. R. KANDASWAMI MUDALIYAR: கனம் சபா நாயகர் அவர்களே, தொழில்கள் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றியும், அதற்கான பரிகாரத்திற்காக தாம் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகளேப்பற்றியும் கனம் அமைச்சர் சொன்னார். இன்று கைத்தறி நெசவாளர்களின் நிலேமையைப் பார்த்தால், விக்கிரமாதித்தின் கதையில் " வேதாளம் மறுபடியும் முறுங்கை மரத்தில் ஏறிக்கொண்டது " என்று சொல்லப்படுவதுதான் ஞாபகம் வருகிறது ; அப்பேர்ப்பட்ட நிலேமையில் தான் இன்று கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இதுவரை கைத் தறித் துணிகளுக்கு 1½ அணு ரிபேட் கொடுக்கப்பட்டுவந்தது ; கைத்தறி நெசவாளர்கள் கொஞ்சம் கஷ்டமின்றி தொழில் நடத்திவந்தனர். இப்போது அந்தத் தொகை குறைக்கப்பட்டு மறுபடியும் பழைய நிலேமை ஏற்பட்டுவிட்டது. இப்போது கைத்தறித் துணிகள் நிறையத் தேங்கியிருக் கின்றன. அதன் காரணமாக இப்போது எங்கு பார்த்தாலும் பல கைத்தறி நெசவாளர்கள் கைத்தறிக் தொழிலே விட்டுவிட்டனர். கூட்டுறவுச் சங்கங்களில் எல்லாவற்றிலுமாக மொத்தம் சுமார் 5 கோடி ரூபாய் பெறுமான கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன. 5 கோடி ரூபாய் கைத்தறித் துணிகளுக்கு நாம் மார்க்கெட் தேடியாக வேண்டும். இவ்வளவு கைத் தறித் துணிகளுக்கு மார்க்கெட்டைத் தேடுவதுடன் நாம் நின்றுவிடக் கூடாது. இப்போதுள்ள கைத்தறித் தொழிலாளர்கள் எல்லோரும் தொடர்ந்து கைத்தறித் தொழிலில் ஈடுபடுவதற்கு அனுகூலமான நிலேமையை ஏற்படுத்தவேண்டும். அவர்கள் கஷ்டமின்றி தங்கள் தொழிலே நடத்து வதற்கு வகை செய்யவேண்டும். அவர்கள் கஷ்டஜீவனம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சபையில் எல்லோரும் கைத்தறித் தொழி லேப்பற்றி அக்கறையுடனும் அனுதாபத்துடனும் பேசியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது, கைத்தறித் தொழில் எவ்வளவு அவசியமான, சிறந்த தொழில் என்பது புலனுகிறது. இப்போது இந்த ராஜ்யத்தில் சுமார் ஏழு லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத் தார் கொடுத்துள்ள கணக்குப்படி பார்த்தாலும் ராஜ்யத்தில் 5 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள் ; 5 லட்சம் கைத்தறிகள் இருக் கின்றன. ஒவ்வொரு தறியையும் நம்பி 16 பேர்கள் வாழ்கிறார்கள். ஆகவே இந்த ராஜ்யத்தில் 80 லட்சம் பேர் கைத்தறித் தொழிலே நம்பிப் பிழைக்கிறார்கள். 5 லட்சம் பேர்களேயும் வேறு தொழிலில் ஈடுபடுத்த முடியுமா என்று பார்ப்போம். 5 லட்சம் பேர்களுக்கு மில் தொழிலில் வேலே கொடுக்கமுடியாது. 10,000 கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி

[Sri M. R. Kandaswami Mudaliyar] [3rd April 1958

செய்யும் துணிகளை ஆயிரம் மில் தொழிலாளர்கள் உற்பத்தி செய்ய
முடியும். 5 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் துணிகளை
எல்லாம் மில்களில் உற்பத்தி செய்வதாயிருந்தால், 50,000 பேர்களுக்குத்
தான் வேலை கிடைக்கும். இந்த நிலைமையில் கைத்தறி நெசவுத் தொழில்
இருக்கும்போது, ஒருவருக்கு வேலை கொடுக்கக்கூடிய இடத்தில் கைத்
தறியில் 10 பேருக்கு வேலை கிடைத்திருக்கிறது. ஆகவே இப்போது கைத்
தறி நெசவுத் தொழில் எவ்வளவு பரவலான குடிசைத் தொழிலாக
இருக்கிறது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். 5,000—10,000
பேர்களே மில் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். மில் துணிகள் தேங்
கிக் கிடக்கின்றன என்ற முகாந்திரத்தில் மில்கள் மூடப்பட்டால், உடனே
மில் தொழிலாளர்கள் தங்கள் சங்கங்களின் மூலம் கிளர்ச்சி செய்து
மில்களை உடனடியாகத் திறக்கச் செய்கிறார்கள். அம்மாதிரி அவர்கள்
தங்களைப் பாதுகாத்துக்கொள்கிறார்கள். ஆனால் கைத்தறி நெசவாளருக்கு
இப்படிப்பட்ட சங்கங்கள் கிடையாது. ஒரு சிலர் கூட்டுறவுச் சங்கங்களில்
இருக்கலாம். ஆனால் பொதுவாக, ஒவ்வொரு கைத்தறித் தொழிலா
ளரும் தானாகவே கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகவே கைத்தறித்
தொழிலாளர்கள் அரசாங்கத்தை பயமுறுத்தி எதையும் சாதித்துக்
கொள்ள முடியவில்லை. மற்ற தொழிலாளர்கள் அனுபவித்துவரும்
சௌகரியங்களில் 1/10 பங்குகூட கைத்தறி நெசவாளர்களுக்கு இல்லை.
கைத்தறி நெசவாளர்களும் விவசாயத் தொழிலாளர்களும் மிகவும் கஷ்டப்
படுகிறார்கள். மற்றத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் சௌகரியங்களில்
1/10 சௌகரியங்கள்கூட விவசாயத் தொழிலாளிக்கும் இல்லை. மில்
தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் 70 அல்லது 80 அல்லது 100
ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சம்பளம் தவிர அவர்களுக்கு பல
விதமான சலுகைகளும் கொடுக்கப்படுகின்றன. மில் தொழிலாளர்களில்
பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ காலத்தில் லீவ் போன்ற சலுகைகள்
மெடிகல் லீவ் உண்டு. மில் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளும்
உண்டு. மில் தொழிலாளர்களுக்கு இவ்வளவு சலுகைகளும் இருக்
கின்றன. கைத்தறி நெசவாளர்களுக்கு இந்தச் சலுகைகள் இருக்கின்
றனவா ? இல்லை. அவர்கள், தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்
வதற்கு அரசாங்கத்தை அணுகி அரசாங்கத்திற்குத் தொந்தரவு கொடுக்
கமுடிகிறதா ? முடியவில்லை. இதன் காரணமாக இன்று ராஜ்யத்தில்
என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது ? கிராமங்களிலுள்ள கைத்தறி நெச
வாளர்கள் மில் தொழிலை நாடி நகரங்களுக்குச் செல்கிறார்கள். 5 லட்சம்
கைத்தறித் தொழிலாளர்களும் தங்கள் தொழிலை விட்டுவிட்டு, அரசாங்
கத்தை அணுகி தங்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்று கேட்டால்,
அது எவ்வளவு சிக்கலான பிரச்னையாக இருக்கும் என்று அரசாங்கம்
சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே சென்னை அரசாங்கம் உடனடியாக
மத்திய அரசாங்கத்துடன் போராடி விவாதித்து கைத்தறி நெசவாளர்
களின் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். கைத்தறித் துணிகளுக்குக் கொடுக்
கப்படும் ரிபேட்டை 2 அணாவாக உயர்த்தவேண்டும். கரை போட்ட
வேஷ்டிகளையும் புடவைகளையும் உற்பத்தி செய்வதற்கான உரிமையை
கைத்தறித் தொழிலுக்கே கொடுக்கவேண்டுமென்று முன்பு இந்த
சட்டசபை ஏகமனதாகத் தீர்மானித்து அந்தத் தீர்மானத்தை மத்திய சர்க்
காருக்கு அனுப்பியது. அந்தத் தீர்மானத்தை உடனடியாக அமலுக்குக்
கொண்டுவர வேண்டுமென்று மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.
இந்த இரண்டு காரியத்தையும் இந்த அரசாங்கத்தார் உடனடியாகத்
செய்யாவிட்டால் கைத்தறி நெசவாளர்களின் பிரச்னை மிகச் சிக்கலான
தாக ஆகி ராஜ்யத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்று கனம்
அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்கள்
ஒருவிதமாகவும் தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்கள் வேறுவிதமாகவும்
நடத்தப்படுகின்றனர். தனிப்பட்ட கைத்தறி நெசவாளர்களுக்கு எந்த
விதமான சலுகையும் இல்லை. இப்போது கொடுக்கப்படும் 1 அணா
ரிபேட்கூட அவர்கள் உற்பத்தி செய்யும் துணிகளுக்கு இல்லை. அவர்களுடைய
குடும்பங்களும் வாழ வகை செய்யவேண்டும். அவர்களுக்கும் ஓரளவு



3rd April 1958] [Sri M. R. Kandaswami Mudaliyar]

வீட்டுச் சலுகைகளும் கல்விச் சலுகைகளும் கொடுக்கவேண்டும். அவர்
களுக்கு, வீடு கட்டிக்கொள்வதற்காக இனாமாகப் பணம் கொடுக்காவிட்
டாலும் கடனாகவாவது பணம் கொடுக்கவேண்டும். வீடுகள் கட்டிக்
கொள்வதற்கு உதவுவதற்காக அவர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள்
கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயத் தொழிலாளர்களும் மிகவும் கஷ்டப்படு
கிறார்கள். கனம் மின்சார அமைச்சரின் உதவியால் எல்லா கிராமங்
களுக்கும் ஓரளவு மின்சார வசதி கிடைத்திருக்கிறது. பருவமழை சரிவரப்
பெய்யாததால் விவசாயிகள் பம்புஸெட்டுகளை வைத்துக்கொண்டிருக்
கின்றனர். அவர்களுக்கு, அவைகளை வாங்கிக்கொள்வதற்குக் கடன்
கொடுக்கப்படும்போது அது வட்டிக் கடனாகக் கொடுக்கப்படுகிறது. வட்டித்
தொகையைக் குறைக்க வேண்டும். வட்டித் தொகையைக் குறைத்தால்
அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படும் என்று கனம் அமைச்சர் சொன்னார்.
விவசாயிகளுக்கு உதவுவதில் அரசாங்கத்திற்கு கொஞ்சம் நஷ்டம் ஏற்பட்
டாலும் பரவாயில்லை. மற்ற துறைகளில் அரசாங்கத்தார் எவ்வளவோ
பணம் செலவழிக்கிறார்கள். விவசாயிகளுக்கு உதவி, உணவுப்பொருள்
களை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டியது மிகவும் அவசியம். 50
ரூபாய் வட்டியை 30 ரூபாயாகக் குறைக்கவேண்டும். அத்துடன் 5
ஆண்டுகளுக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்
திருக்கும் காலவரையறையை 15-20 வருஷங்களாக அதிகரிக்கவேண்டும்.
அவ்வாறு செய்தால் தான். விவசாயிகளின் கஷ்டம் ஓரளவு குறைந்து,
அவர்கள் விவசாயத்தில் நன்றாக கவனம் செலுத்த முடியும்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவில் பல தொழிற்சாலைகளை அமைப்
பதற்கு இப்போது தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதைப் பார்த்து
நான் சந்தோஷப்படுகிறேன். சேலம் ஜில்லா பிற்பட்ட நிலைமையில் இருப்
பதால், அங்கே உடனயாக இரும்புத் தொழிற்சாலையையும் காகிதத் தொழிற்
சாலையையும் அலுமினியத் தொழிற்சாலையையும் அமைத்து அந்த ஜில்லாவை
அபிவிருத்தி செய்து, அங்குள்ள மக்களுக்கு அதிகமான வேலை
வாய்ப்புகளை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது எங்கு பார்த்தாலும் படித்தவர்கள் 12-10
உத்தியோகத்திற்கு செல்லவேண்டும் என்று ஆசைபடுகிறார்களே தவிர, p.m.
தொழிற் துறையில் ஈடுபட்டு தொழிலை அபிவிருத்தி செய்து நாட்டிலே
பொருளை உற்பத்தி செய்யவேண்டுமென்ற எண்ணம் குறைந்துவிட்டது. அது
யோசிக்கவேண்டிய விஷயம். ஒவ்வொரு ஜில்லாவிலும் பல தொழில்
கள் கற்றுக்கொடுக்கக்கூடிய பல காரியப் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டும்.
ஆங்காங்கே பள்ளி மாணவர்களுக்கு பல தொழில்களைக் கற்றுக்கொடுக்கக்
கூடிய முறையிலே அவர்கள் தொழில் துறையிலே ஊக்கம் செலுத்தக்கூடிய
முறையிலே பல தொழில் பள்ளிகளை ஏற்படுத்தவேண்டுமென்று
நான் மிகவும் பணிவுடன் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.
விவசாயிகள் பம்புசெட்டுகள் வைத்திருந்தும் கிணற்றில் தண்ணீர் இல்லாத
தால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்களுக்கு மின்சார பம்ப்
செட்டுகளுக்கு நிர்ணயித்திருக்கும் அக்ரிமென்டில் ஆர்ஸ் பவர் ஒன்றுக்கு
ஆண்டுக்கு ரூபாய் 50 என்று இருப்பதை ரூ. 30 என்று குறைக்கவேண்டு
மாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி செய்தால் சரக்குவட்டி நஷ்டம்
ஏற்படுகிறது என்று அமைச்சர்கள் பதில் சொல்லுகிறார்கள். அப்படி
வட்டி நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. சர்க்கார் விவசாயிகளுக்கு
எவ்வளவோ வசதி செய்கிறார்கள். அதில் நஷ்டம் ஏற்படுகிறது. அது
போல இதிலும் சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் விவசாய பம்பு செட்டுகளுக்கு
மினிமம் சார்ஜ் ரூ. 50 ஆக இருப்பதை ஆர்ஸ் பவர் 1-க்கு ரூபாய் 30 என்று
குறைக்கவேண்டுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**MR. SPEAKER**: The Hon. Minister will begin his reply at
1 O'clock. The hon the Leader of the Opposition will begin at
12-45 p.m. The Hon. the Deputy Leader, Dravida Munnetra

[Mr. Speaker] [3rd April 1958

Kazhagam, will begin at 12-30 p.m. There are twenty minutes more. I will allot these twenty minutes to three members at the rate of about seven minutes each. Of these three, one will be an Independent member and two will be Congress members.

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, இந்த
முக்கியமான மான்யக் கோரிக்கை மீது சில வார்த்தைகள் சொல்ல அவா
வுறுகின்றேன். ஸ்மால் ஸ்கேல், மீடியம் ஸ்கேல், லார்ஜ் ஸ்கேல் இண்டஸ்
டிரீஸ் என்ற மூன்று இனத்திலும் சர்க்கார் கையாளும் கொள்கையைப்
பார்த்தால், அவர்களுக்கு கொள்கை என்று ஒன்று உண்டா என்று சந்தேகம்
தோன்றுகிறது. ஏனெனில், ஒரு அளவு இந்தத் தொழில்களிலே முரண்
பாடு இருக்கும் என்பது திட்டவட்டமான ஒரு உண்மை. இந்த லார்ஜ்
ஸ்கேல், மீடியம் ஸ்கேல், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்டிரீஸைப்பற்றி ஜப்பா
னிலே மிட்சுபிசி ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த ஹட்டன் என்பவர் இவை
களைப்பற்றிக் குறிப்பிடும்போது, . . . " **Medium and small-scale industries should work in conjunction with large scale industries, but the general level of profit and profitability will be much lower. . .**"
என்று பொதுவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், இப்படிக் குறிப்பிட்ட
அதே நாட்டிலே 99·9 சதமானமும் சிறு தொழில் பெரிய அளவுக்கு
அந்த நாட்டிலே இருக்கிறது. அப்படியிருக்கக்கூடிய ஒரு நாட்டிலேகூட,
இப்பொழுது பெரும் தொழிலுக்கும் சிறு தொழிலுக்கும் நல்ல ஒரு
ஒற்றுமை இருந்தால்தான் வாழமுடியும் என்று சொல்லி, அதே நேரத்
தில் அதில் கிடைக்கும் லாபமும் குறைவாக இருக்கும் என்பதையும் குறிப்
பிட்டிருக்கிறார். ஆனால், நமது நாட்டிலே அமைந்துள்ள நிலைமை சிறு
தொழிலுக்குப் போட்டியாக ஒவ்வொரு தொழிலுக்கும் போட்டியாக அவை
கள் அமைந்துகொண்டே இருக்கின்றன.

எனக்கு முன்பு பேசிய பல்வேறு மெம்பர்கள் சொன்னார்கள். கைத்த
றியைப் பொறுத்தமட்டில், கதருக்கு இருக்கும் பாதுகாப்புபோல் இருக்க
வேண்டுமென்று வாதித்தார்கள். ஓரளவு அந்த முறையிலே ஒரு பாது
காப்பு இருந்தால் மாத்திரம்தான் கைத்தறி வாழும் என்றுதான் நானும்
நம்புகிறேன். ஆனால், இன்று நாட்டிலே ஏற்கனவே மில் துணிக்கு இருக்
கும் தேக்கத்தை வைத்துப் பார்த்தால், நீண்ட நாட்களுக்கு கைத்தறித்
தொழிலாளிகளுக்கு இன்று கிடைக்கும் வருமானம் இனியும் வருமா
என்பது சந்தேகம். ஒரு கழிக்கு ஐந்தணா கூலி இருந்ததுகூட மூன்றணா
வுக்கு சமீப காலத்தில் குறைந்திருக்கிறதென்றால் எந்த அளவுக்கு அந்தத்
தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது, நாட்டிலே எந்த அளவு தேக்கம் இருக்
கிறது என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. இப்படி **sub-human existence**
என்று சொல்லக்கூடிய முறையில், வாழ்வதற்குள்ள மார்க்கம்
கூட இல்லாத நிலைமையில் இன்று கைத்தறி நெசவுத் தொழிலாளிகள்
வாழ்கின்றார்கள் என்றால், சர்க்காருக்கு ஒரு கொள்கை இல்லை என்று
நான் சொல்வதிலே தவறு இல்லை என்று நினைக்கிறேன். நான் வாழக்
கூடிய தென்காசி, செங்கோட்டை பகுதிகளில் பெரும் அளவு கைத்தறித்
தொழில் இருக்கிறது. சமீப காலம் வரை அங்கிருந்து ஏற்றுமதி செய்யக்
கூடிய ஈரெழைத் துண்டுகள் மலையாளம் பகுதியிலே சென்று வியாபாரம்
ஆய்க்கொண்டிருந்தது. சமீபத்தில் பவர் லூம் வந்த பிறகு ஆலப்புழை
யில் இங்குள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாகிக்கொண்டிருந்தது
குறைந்திருக்கிறது. ஏற்கனவே மைசூரில் ஆடோமாடிக் பவர் லூம்கள்
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது மாகாணத்தில் மாத்திரம் நாம் விசை
தறியைப் புகுத்தவில்லையென்றால், இதர மாகாணங்களில் விசைத்தறி
வரும் என்றால், இங்கு கூலி குறைக்கப்படுவதற்கு நிர்ப்பந்தம் ஏற்படும்.
அல்லது இங்கிருந்து வெளி மாகாணங்களுக்கு நம்முடைய சரக்குகள்
சென்று அங்கு அந்த வியாபாரம் நடக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.
இதற்கு திட்டவட்டமான கொள்கை சர்க்காருக்கு இருக்கவேண்டும்.
துரதிருஷ்டவசமாக அது இல்லை.



3rd April 1958] [Sri K. Sattanatha Karayalar]

இந்தத் தொழில் மாத்திரம் அல்ல. ஆலப்புழையில் கத்தாழை நாரி
லிருந்து நூல் போன்று எடுத்து, கயிற்றுப் பாய் செய்யக்கூடிய தொழிலும்
இன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலில் பயிர்ச்சி அளிப்பதற்
காக பயிற்ச்சி சாலைகள் (ட்ரெயினிங் சென்டர்கள்) ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு
தென்காசியில் ஒரு யூனிட் அமைத்து, அங்கே ஒரு பயிற்ச்சிச் சாலை திறந்தி
ருக்கிறார்கள். தயவு செய்து அதை அன்பர்கள் பார்க்கவேண்டும். அங்கு
நடக்கக்கூடியதெல்லாம் எந்தவிதமான புதிய பயிற்ச்சி இல்லாமல் தலை
முறை தலைமுறையாக வந்துகொண்டிருக்கிற முறைப்படியே பாய் செய்து
கொண்டிருக்கிறார்கள். கத்தாழைகளையெல்லாம் வைத்துக்கொள்வதற்
காக ஒரு ஷெட் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஷெட்டுக்குள்ளே
இருந்து இத்தொழிலைச் செய்கிறார்கள். அவ்வளவுதான். இதைத்விர,
புதிய நுட்பமான முறையில் இந்தப் பாய்களைச் செய்வதற்கு அவர்களைப்
பழக்குவதற்கு ஒன்றும் முயற்சி இல்லை. இன்று அந்தத் தொழில் ஓரளவு
வாழ்கிறது. வெளிநாடுகளிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்யமுடி
யாத காரணத்தால் இந்தத் தொழில் தற்சமயம் வாழ்கிறது.

நமது நாட்டிலிருக்கும் **fibre** இரண்டு அங்குலம் நீளம் இருக்கிறது.
தென் ஆப்பிரிக்காவில் இதைப்பார்க்கிலும் 3 பங்கு நீளமாக இருக்கிறது.
வெளிநாட்டிலிருந்து வரவழைத்து நமது நாட்டில் சில முக்கியமான
இவைகள் செய்யப்படுவதோடுகூட, இன்சுலேடர் கேபிள்கள் செய்வதற்கு
கயிறுகள் பயன்படுத்தப்படுகின்றன. சர்க்கார் இறக்குமதிக் கொள்கை திட்ட
வட்டமாக இருக்கவேண்டும். நமது நாட்டிலே உள்ள பொருள்களை எந்த
அளவுக்கு உபயோகப்படுத்தலாம் என்பதைப்பற்றி அகில இந்திய ரீதியிலே
கொள்கை வகுத்து அத்தகைய இறக்குமதியை நிறுத்திவைக்கவேண்டும்.
இறக்குமதியைக் கட்டுப்படுத்தினால் மாத்திரம்தான் இந்தத் தொழில் வாழ
முடியும். இதைப்போன்று எத்தனையோ உதாரணங்கள் கொடுக்க முடியும்.

சாத்தூர், சிவகாசி வட்டாரங்களிலே சிறு தொழில் என்ற முறையில்
பவுண்டன் பேனா நிப்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. 10 முதல் 15
ஆயிரம் ரூபாய் மூலதனத்தில் இந்தத் தொழில் நடத்தப்படுகின்றன.
சமீபத்தில் சென்னையில் இருக்கும் மவுண்ட் ரோட்டைச் சுற்றிவந்தாலும்,
பாரிஸ் கார்னரைச் சுற்றிவந்தாலும், திரும்பும் இடத்தில் எல்லாம் பவுண்டன்
பேனா வியாபாரிகளைப் பார்க்கிறோம். இவர்கள் ஜப்பானிலிருந்துவரவழைக்கப்
பட்ட பேனாக்களை வாங்கி பத்தணாமுதல் ரூ. 1-8-0 வரையில் விற்கிறார்கள்.
ஆனால், அதைப்பார்க்கிலும் மிகச்சிறந்த முறையில் நமது நாட்டிலேயே
நிப்புகளும், பவுண்டன் பேனாக்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை
நமது நாட்டில் விநியோகம் ஆகாமல் இருப்பதற்குக் காரணம், வெளி
நாட்டிலேயிருந்து இங்கு இறக்குமதி செய்யும் விஷயத்தில் ஒரு திட்ட
வட்டமான கொள்கை இல்லாததுதான். வெளிநாட்டிலிருந்து அபரி
மிதமாக இறக்குமதி செய்வதால் பெரும் அளவுக்கு இந்தத் தொழில்
பாதிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் புதிதாக ஒன்று வந்திருக்கிறது. இதைப் பாதிக்கக்கூடிய
அளவுக்கு பெரும் தொழிலாக பைலட், பார்க்கர் போன்ற கம்பெனிகள்
இப்படிப்பட்ட பேனாக்களை உற்பத்தி செய்வதற்கு அங்கீகாரம் கொடுக்கிறார்
கள். மதராசில் பைலட் பென் மானுபாக்சரிங் கம்பெனி ஒரு தனி நபரு
டன் கூட்டு சேர்ந்து உற்பத்தி செய்கிறது. இது நமது கிராமாந்திரங்களில்
நடக்கும் சிறு தொழில்களுக்கு மிகப் பெரிய போட்டியாக அமைந்துள்ளது.
இந்த முறையில் ஒவ்வொரு சிறு தொழிலுக்கும் போட்டியாக பெரும்
தொழில் அமைந்திருக்கிறது. சிறு தொழிலுக்கும் பெரும் தொழிலுக்கும்
ஒன்றுக்கொன்று இணக்கம் (கோ-ஆர்டினேஷன்) இல்லாததனால் மிகப்
பெரிய அளவுக்கு சிறு தொழில்கள் பாதகம் அடைந்திருக்கின்றன.

சைக்கிள் உற்பத்தி செய்கின்ற தொழிலை எடுத்துக்கொண்டால், அம்பத்
தூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சைக்கிள் தொழிற்சாலையானது சிறு தொழில்
முறையில் நடத்தப்பட்டு வருவதற்கு மிகச் சீக்கிரமாக போட்டியாக அமை
யும். அப்படி வரும்போது சுமார் 50 ஆயிரத்துக்கு மேல் தொழில் செய்ய
க்கூடிய சைக்கிள் உற்பத்தி செய்கின்ற சிறு சிறு யூனிட்டாக இருந்து செய்
கின்ற தொழில்கள், லூதியானா போன்ற இடங்களில் இப்படிப்பட்ட சிறு

[Sri K. Sattanatha Karayalar] [3rd April 1958

தொழில்கள் பாதிக்கப்படும் என்பது உறுதி. ஆகவே, இதுசம்பந்தமாக அகில இந்திய ரீதியிலே நாடு பூராவுக்கும் ஒரு கொள்கைத் திட்டம் அடிப் படையாக இருக்கவேண்டும். அந்தத் திட்ட அடிப்படையிலே, ஒவ்வொரு இடத்திலும் என்ன தொழில் இருக்கிறதென்று சர்வே செய்து, எந்தெந்த இடத்தில் வேறு என்ன தொழில்கள் செய்யலாம் என்பதைப் பார்ப்பதற் காக முக்கியமாக தொழில் அதிபர்கள், தொழிலிலே ஈடுபடுகிற தொழிலாளி கள், பொது நலப் பிரதிநிதிகள் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியின் ஆலோசனையின்பேரில் செய்யவேண்டும். அது இல்லாமல், திட்டம் இல்லாத முறையில் வேலை செய்யக்கூடாதென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன்.

* **SRI A. R. SUBBIAH MUDALIAR** : தலைவர் அவர்களே, தொழில் இலாகா ரொம்பவும் விரிவு ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தும் ஜில்லாவில் ஒரு ஆபீசர்தான் இருக்கிறார். இதற்காக பைபர்கேட் பண்ணுவது ரொம்ப அவசியம். ஆந்திராவில் இது மாதிரி பைபர்கேட் பண்ணப் பட்டிருக்கிறது. இப்பொழுது அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஒருவர் இருக்கிறார். அத்துடன் வில்லேஜ் இண்டஸ்ட்ரீயல் ஆபீசர் ஒருவரும் இருக்கிறார்கள். ஜில்லாவை பைபர்கேட் பண்ணி, இரண்டு அஸிஸ்டெண்ட் டைரக்டர்களை போடலாம்.

12-20 p.m. வில்லேஜ் இண்டஸ்ட்ரீயல் ஆபீசராகப் போடும்போது டெக்னிகல் பீபிள் அல்லாதவர்களைப் போடுகிறார்கள். சிறு கைத்தொழில்களையும் குடிசைத் தொழில்களையும் மேல் பார்வையிடுவதற்காகத்தான் வில்லேஜ் இண்டஸ் ட்ரீயல் ஆபீசர்கள் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அவரு டைய அனுபவத்தைப் பார்க்கும்போது ரொம்ப வருந்தக்கூடிய நிலைமை யில் இருக்கிறது. தாசில்தார் கிரேடில் இருப்பவரை ஆறு வாரம் குடிசைத் ாழிலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களைதான் வில்லேஜ் கெஜட் பதிவுள்ள இண்டஸ்ட்ரீயல் ஆபீசர்காளகப் போடப்படுகிறது. அவர்கள் 20, 22 வருஷங்களாக ரெவினியூ இலாகாவில் இருந்துவிட்டு தொழில் இலாகா விற்கு வரும்போது தொழிலைப் பற்றி ஒன்றும் தெரியாமல், அதில் ஒரு அக்கறை, இன்டரஸ்ட் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். கிராமங்களில் உள்ள ஆர்டிசான்களோடு பழகுவதற்கு அவர்களால் முடியவில்லை. சுபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் இருக்கிறது. ஆகவே கிராமங்களில் தொழில் நல்ல முறையில் வளரவேண்டு மென்றால் டெக்னிகள்க்வாலிபிகேஷன் உள்ள வர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது 12 தொழில்கள் அவர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. க்ளாஸ் இண்டஸ்ட்ரி, பால்மரா இண்டஸ்ட்ரி, பாம்பூ இண்டஸ்ட்ரீ, முதலான 12 தொழில்கள் இருக்கின்றன. இன்றைக்கு 184 பேர்களை ட்ரெய்னிக் களாக எடுத்து ஆறு மாதம் ஒரு வருஷம் எனப் பயிற்சி கொடுக்கிறார்கள் மாதம் 30, 35 என்று இதற்காக உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பிறகு இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. சுமார் 70 ஆயிரம் ரூபாய் ; ஸ்டைபெண்டு தொகையாகச் செலவிடப்படுகிறது. இந்த 70 ஆயிரம் செலவழிக்கிறோமே தவிர அதற்குப் பிறகு அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று கவனிப்பதில்லை. உதாரணம் சொல்ல விரும்புகிறேன். லேஸ் எம்பிராய்டரி முதலியவைகளில் பெண்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்பு அவர்களுடைய நிலைமை கவனிக்கப்படவில்லை. அதற்கு ஒரு சின்னவழி சொல்ல விரும்பு கிறேன். அதே இடத்தில் கோவாப்பரேடிவ் சொஸைடி ஏற்படுத்தி உற்பத்தி பொருளை விற்பனை செய்வதற்கு வசதி செய்யலாம். தையல் மெஷின் **Women's Welfare Department** இருந்து வாங்கிக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். நான்கில் ஒரு பங்குத்தொகை கொடுத்தால் போதும். இந்த இடங்களை கோவாப்பரேடிவ் சொஸைடியை ஏற்படுத்தி நடத்தலாம். பயிற்சி முடிந்ததும் ரூபாய் 50 கொடுக்கிறார்கள். அதை வைத்துத் தையல் மெஷின் வாங்க ஏற்பாடு செய்யலாம். உற்பத்தி செய்யும் சாமான்களை விற்பனை செய்ய வசதி செய்தால் அவர்களுக்கு அளிக்கப் படுகிற பயிற்சி பிரயோஜனமுள்ளதாக இருக்கும். அது இல்லாமல்





3rd April 1958] [Sri A. R. Subbiah Mudaliar]

பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி அங்கே ஆறு மாதம் ஒரு வருஷம் வெறும் பயிற்சியை மட்டும் கொடுத்து வெளியில் அனுப்புவதால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படாது. ஆகவே இம்மாதிரி திட்டத்தை அமுல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தனிப்பட்டோர் தனியார் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது அரசாங்கம் மறைமுகமாக உதவி செய்யலாம். வெளிநாட்டுக்கு அவர்களை அனுப்ப உதவலாம். அப்படிச் செய்தால்தான் தனியார் இந்த மாகாணத்தில் பல தொழில் களை ஆரம்பித்து நடத்துவதற்கு வாய்ப்பு அதிகரிக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் நாட்டில்தான் தனியார் துறையில் அதிக ஊக்கம் அளிக்கப்படுவதில்லை. தொழில்கள் எல்லாம் தேசியமாக்குவது பிரயோஜனம் ஏற்படாது. தனியார் துறை வளர்ச்சிக்கும் சர்க்கார் ஊக்கம் அளிக்கவேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக எங்கள் ஜில்லாவில் சம்பந்தப்பட்டமட்டில் பேப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். அங்கே ஏற்படுத்துவதைப் பற்றி பேச்சுதான் இருக்கிறது. வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் தொழில் அமைதி நிலவுவதற்கு வழி செய்யவேண்டும், இண்டஸ்ட்ரியல் பீஸ் (தொழில் அமைதி) இல்லாத நிலைமையை உண்டாக்கி சில கட்சிகள் தங்களுக்குச் சாதகமாக அதை உபயோகப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறார் கள். இந்த நிலைமை மாற்றி நம் ராஜ்யத்தில் தொழில் துறையில் பூர்ண அமைதி நிலவுவதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு நேரம் இல்லாத காரணத் தினால் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRI R. SRINIVASA IYER** : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற இரண்டு வருஷ காலமாக நமது ராஜ்யத்தில் தொழில் துறையில் நல்ல அபிவிருத்தி அடைந்து வந்திருப்பதற்கு, அதுவும் குறிப்பாக இவ்வாண்டில் ரொம்பவும் ஜாஸ்தியாக தொழில் துறையில் விருத்தி ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாக இருந்த அமைச்சர் அவர்களை யும், இதர அதிகாரிகளையும் நாம் முதலில் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறோம். குற்றமே சொல்வது என்ற மனப்பான்மை இருந்தால் எந்த இலாகா அமைச்சரிடத்திலும் சில குற்றங்களைக் கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருக்கலாம். சூரியனிடத்தில் கூடக் கறுப்புப் புள்ளி இருக்கிற தென்று சொல்கிறார்கள். ஆகவே அவற்றை மட்டும் சுட்டிக்காட்டிக் கொண்டிருக்காமல் செய்திருக்கக்கூடிய நன்மைகளை எல்லாம் பாராட்டி இன்னும் என்ன என்ன காரியங்களைச் செய்யலாம் என்பதைச் சொன்னால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்கிற காரணத்தினால் நான் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

It has been recognised that the development of small scale industries is an important sector of economy for wide distribution of both economic activity and economic advantages. The need to promote, modernise and reorganise these industries is paramount. The principal needs of small scale industries are imparting training and technical advice regarding the adoption of improved tools, machines and new techniques, supply of raw materials and power at reasonable rates, supply of adequate finance on fair terms, facilities for importing or purchasing new machines, providing factory space in order to enable small enterpreneurs to conserve their limited resources for working expenditure, providing servicing and assistance in the marketing of the products.

[Sri R. Srinivasa Iyer] [3rd April 1958

அதாவது வடநாட்டிலேதான் பெரிய கன ரகத் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன, நமது நாட்டிலே இல்லை என்று சொல்லப்படுவதற்கு முக்கியமான காரணத்தை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். மூலப்பொருள்களுக்கு இங்கே வசதி இல்லாமல் இருந்தது என்பதை உணர்ந்திருந்தால் அந்தக் குறையைச் சொல்வதற்கே இடமிருந்திருக்காது. பொதுவாக நிலக்கரி, இரும்பு, தண்ணீர் இந்த மூன்றும் போதுமான அள்வு இல்லாமல் இருந்த குறையைப் போக்க நிலக்கரிக்கு நெய்வேலிச் சுரங்கமும், இரும்புக்கு சேலம் தொழிற்சாலையும், ஏற்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். தண்ணீர் சம்பந்தமாக பரம்பிக்குளம் திட்டம் இன்னொரு ராஜ்யத்தின் சம்மதத்தோடு நிறைவேற்றப்படவேண்டியிருப்பதனால்தான் கால தாமதமாகிறது. மற்றபடி எந்த எந்த இடங்களில் எந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்று யோசித்து சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருவது பாராட்டுவதற்குறியதாகும். எல்லா ஜில்லாக்களிலும் இது மாதிரியாக சிறு சிறு தொழில்களை ஆரம்பித்தால்தான் நாட்டில் பெருவாரியாக இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரும்பு சாமான்களுக்குக் பெயர்போன மன்னார்குடியில் இரும்புத் தொழிற்சாலையும், பட்டுக்குப் பெயர்போன திண்டுக்கல்லில் பட்டுத் தொழிற்சாலையும், பித்தளைப் பாத்திரங்களுக்குப் பெயர் போன கும்பகோணம் என்பதைக் கருதி கும்பகோணத்தில் பாத்திரத் தொழிற்சாலையையும் ஆரம்பித்திருப்பது போல ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்த ஜில்லாவில் முன்பு நடந்து வந்த தொழில்களுக்கு உயிர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவில் 1957–58-ம் வருஷத்தில் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பஞ்சாலைத் தொழிலை ஏற்படுத்துவதற்கு ஒரு திட்டம் இருக்கிறது. அந்த ஜில்லாவில் பருத்தி நல்ல முறையில் சாகுபடி ஆகிறது. ஆனால் அதற்கு ஊக்கம் இல்லை. அதற்கு சரியான பிரசாரம் இல்லை. சாதனங்கள் போதாது. ஆகையால் ஒரு லட்சம் ஏக்கராவுக்கு மேல் பருத்தி சாகுபடி செய்வதற்குத் தக்க வசதியை அளித்து பஞ்சாலைத் தொழிலை அங்கு ஏற்படுத்துவதற்குத் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டுமென்பதாக கேட்டுக்கொள்கிறேன். இதர சிறு தொழில்களை உத்தேசித்து போர்டு ஆப் இண்டஸ்ட்ரி ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுவும் நல்ல முறையில் வேலை செய்ய வேண்டும்.

மேலும் கேரள ராஜ்யம் தனியாகப் பிரிந்த பிற்பாடு நமக்கு காயர் இண்டஸ்ட்ரிக்கு வசதியே இல்லாமல் போய் விட்டது. சமீபத்தில்தான் அதற்கு ஏற்பாடு செய்திருப்பதை நான் பாராட்டுகிறேன். தஞ்சையில் மட்டும் 50 ஆயிரம் ஏகராவிற்கு மேல் தென்னை மரங்கள் இருக்கின்றன. ஒரு லட்சத்திற்கு மேல் நமது ராஜ்யத்தில் இருக்கிறது. மட்டைகளை எல்லாம் இன்றையதினம் எரித்து விடுகிறார்கள். பிரயோஜனம் இல்லாமல் போகிறது. கூட்டுறவு சொஸைடி மூலம் காயர் இண்டஸ்டிரியை அபிவிருத்தி செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக நம் ராஜ்யத்தில் டைல் பாக்டரி இல்லை. மங்களூர் டைல் வந்து கொண்டிருந்தது கேரளாவில்தான் ரயில் ஓடுகள் அதிகமாக செய்யப்படுகின்றன. தஞ்சை ஜில்லாவில் நல்ல மண் வளமுள்ள இடங்களில் செங்கல் அறுக்கப்படுகிறது. அங்கே ஒரு டைல் பாக்டரியையும் ஏற்படுத்துவதற்குத் தக்க ஏற்பாட்டை இந்தச் சர்க்கார் செய்யவேண்டும் என்பதாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்கு சர்க்கார் தக்க உதவி அளிக்கலாம். இதையும் கவனிக்கவேண்டுமென்பதாக நான் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு

12-30 p.m. காஸ்டிக் சோடா பாக்டரிக்கு, தாரங்கதரா கெமிக்கல் இண்டஸ்டிரீஸ், பம்பாய்க்கு லைசென்ஸ் கொடுத்து நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அப்படி ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் 100 ஸ்குயர் மைலுக்கு மேல் வேதாரண்யத்தில் உப்பு இருக்கிறது. நிபுணர்கள், அங்கு ஒரு மூன்று கோடி ரூபாய் செலவு செய்தால் ஆண்டொன்றுக்கு ஒரு



3rd April 1958] [Sri R. Srinivasa Iyer]

கோடி ரூபாய் வருமானம் வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியார் துறையில் விட்டாலும் சரி, அல்லது சர்க்கார் ஒரு சிறிய எஸ்டிமேட்டில் ஆரம்பித்தாலும் சரி, கொஞ்சங்கொஞ்சமாக வேதாரண்யத்தில் ஒரு காஸ்டிக் சோடா பாக்டரி ஆரம்பித்தால், நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. அது பற்றி ஆராய்ச்சி செய்த நிபுணர்களின் ரிப்போர்ட்டை வரவழைத்து நம் ராஜதானியில் ஒரு காஸ்டிக் சோடா பாக்டரி ஆரம்பிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த படியாக, இந்த **Industrial Development in Madras State.** புத்தகத்தின் கடைசியில் ஜியாலாஜிகல் செக்ஷன் பிரிக்கப்பட்டிருப்பதாய் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு வந்து, ஜியாலாஜிகல் சர்வே ஆப் இந்தியா கனிப்பொருளை பரிசீலனை செய்தார்கள். இப்பொழுது நாம் ஜியாலாஜிக்கல் சர்வே ஆப் மதராஸ் என்று ஒன்று இருக்கவேண்டும். அப்படி ஒன்று நம் மதராஸ் ஸ்டேட்டிற்கு தனியாக ஒன்று இருக்க வேண்டும். எவ்வளவு ரூபாய் செலவு செய்தாலும் சரி, கனிப்பொருள்களை கண்டு பிடித்தால்தான் தொழிலை விருத்தி செய்ய முடியும். தொழிலை விருத்தி செய்ய அதற்குறிய கனிப்பொருள்கள் இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும். ஆகவே, ஜியாலாஜிக்கல் எக்ஸ்பர்ட்டரை வரவழைத்து, ஒரு தனி டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி காவேரி டெல்டாவில் இருக்கும் எண்ணை முதலியவைகள் குறித்து, பரிசீலனை செய்யவேண்டும். ஆகவே தனியாக ஒரு ஜியாலாஜிக்கல் டிபார்ட்மெண்டு ஏற்படுத்தி சென்னை பூராவிற்கும் உள்ள கனிப்போருள்களைப் பற்றி தனியாக ஆராய்ச்சி செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*Sri K. ANBAZHAGAN: சட்டப்பேரவை துணைத் தலைவர் அவர்களே, கைத்தொழில் இலாகாவிற்கு அளிக்கப்படவேண்டிய மான்யத்தைக் குறித்து நடைபெறுகிற விவாதத்தில் என்னுடைய சில கருத்துக்களை கூறுகிற வாய்ப்பினைப் பெற்றதற்காக நான் மகிழ்கின்றேன். கைத்தொழில் இலாகா இன்றையதினம் ஒரு சாதாரண கடமையை நிறைவேற்ற வேண்டிய இலாகாவாயில்லாமல் இந்த நாட்டு மக்களின் எதிர்கால வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் இலாகாவாகும். இன்றைய அரசியல் சூழ்நிலையில் சென்னை மாநிலத்திற்கு நில வரி, விற்பனை வரி இவ்விரு துறைகளிலிருந்து பெறுகிற வருவாயைத் தவிர வேறு வருவாயைப் பெருக்கிக் கொள்ள கைத்தொழில் இலாகாவின் கடமை மூலம் நாட்டின் தொழிலைப் பெருக்கித்தான் நமது வருமானத்தைப் உயர்த்திக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நாட்டு மக்களின், இந்த நாடு என்று நான் சொல்லும் போது நாங்கள் விரும்புகிற திராவிடத்தைச் சொல்கிறேன். குறிப்பாக சென்னை மாநிலத்தில் இருப்பவர்களின் சராசரி வருமானம், பெர் காப்பிட்டா இன்கம், மிகவும் குறைவாக இருக்கிறது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். கனம் நிதியமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் சென்ற ஆண்டு வரவு செலவு திட்டத்தின்போது குறிப்பிட்டார்கள் தென்னாட்டில் உள்ள நாலு மாகாணங்களில் மிகக் குறைந்த வருமானம் பெறக் கூடியவர்கள், சென்னை மாகாணத்தில் உள்ளவர்கள்தான் என்று. அந்த அளவு வருமானத்தில் தாழ்ந்து கிடக்கிற ஒரு நாட்டைச் சார்ந்தவர்கள் அல்லது வட்டாரத்தைச் சார்ந்தவர்கள், அந்த வட்டாரத்தில் வருமானத்தை உயர்த்த வேண்டுமென்றால் தொழில் துறையில் மிகவும் முற்போக்கான ஒரு கொள்கையை கையாண்டால்தான் முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம், முழு நேர வேலை வாய்ப்பற்ற தன்மை ஒரு புறம், செய்கிற வேலைக்கு போதிய ஊதியம் கிடைக்காத சூழ்நிலை ஒரு புறம், அரசாங்கம் தனது கொள்கைகளை வரையறுப்பதில் தடுமாறும் நிலை ஒரு புறமாக இருக்குமானால் நிச்சயம் ஒரு நாடு அல்லது ஒரு சமுதாயம் முன்னேற முடியாது. ஒரு நாட்டின் தொழில் துறையில் இருக்க வேண்டிய அடிப்படைக் கொள்கைகள் மூன்றை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஒன்று வேலை வாய்ப்பு தேடித் தருவது, மற்றொன்று தேவைகளை நிறைவேற்றுவது, மூன்றாவது

வருமானத்தை உயர்த்துவது இவைகளாகும். இந்த மூன்று துறைகளில் வேலை வாய்ப்புத் தேடித் தருவது என்ற கொள்கை மட்டும் மகிழ்ச்சியுடன் யூட்டக் கூடியதாக இருந்த ஒரு நிலை, வெளி நாட்டு ஆட்சியில் நாம் பார்த்திருக்கிறோம். இன்றையதினம், எங்களைப்போன்றவர்கள், இன்றைய ஆட்சியும் கூட அன்னியர் ஆட்சியாகும் என்று சிற்சில காரணங்களால் சொல்கிறோம். மாறாக, ஆளும் கட்சியினர் தாங்கள் சுயாட்சி நடத்துவதாக பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். வேலை தேடித் தருவதோடு மட்டும் அந்நாட்டு மக்களுக்குள்ள பிரச்னைகளெல்லாம் தேடித் தந்ததாகி விடாது. சென்ற ஆண்டு புள்ளி விவரங்களின்படி, வேலை தேடித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்களின் 75 சத வீதத்துக்கு வேலை தேடித் தர முடியவில்லை. அப்படி வேலை தேடி தர முடியவில்லை என்பது ஒரு புறமிருக்க, வேலை வாய்ப்புத் தேடித் தரும் கதர் திட்டத்தை ஆதரிக்கிறோம் என்று சொல்லும்போது அது நமது நாட்டு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்கிறதா, நம் மக்களின் வருமானத்தை அது அதிகரிக்கிறதா, அல்லது அது நம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஏற்றதொரு கருவியாக இருக்கிறதா என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டிலே, துணியைப் பொறுத்த மட்டில், ஆலைகளில் நெசவு நடைபெறுகிறது அதேபோன்று கைத்தறி நெசவுத் தொழிலும் நடைபெறுகிறது. கதர் நெசவும் நடைபெறுகிறது. இவைகளினால் மக்களின் சிலர் பிழைக்கிறார்கள். அவர்களில் யாரும் துன்புற நான் சம்மதிக்கமாட்டேன். கதரை நம்பிப் பிழைக்கும் மக்கள் கண்ணீர் விட வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் யாரும் நினைக்க மாட்டார்கள். ஆனால் ஒன்று சொல்கிறேன். அரசாங்கம் தொழில் துறையில் நல்ல முற்போக்கான கொள்கைகளைக் கையாளுமேயானால், அந்த ஆற்றல் இந்த அரசாங்கத்திற்கு இருக்குமானால், கைத்தறி நெசவாளர்கள் மில்களில் இருந்த நூல் பெற்று பின்னர் அதை நெசவு செய்து துணியாக்கும்போது ஒரு சாரார் மட்டும் கை கொண்டே நூல் நூற்று எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டுமென்று அவர்களை வருத்திக்கொண்டிருப்பது எப்படி நியாயமாகும் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். உத்தமர் காந்தியடிகள் கதர் திட்டத்தை இந்த நாட்டில் கொண்டு வந்தது இரண்டு அடிப்படையிலாகும். ஒன்று, ஆலைகளுக்கு தேவையில்லை என்று எண்ணம் இப்பொழுது இருந்தது. மற்றொன்று ஆலைகள் வராமல் தடுப்பதற்கும், அன்னியர் ஆதிக்கம் குறைவதற்கும், பிற நாட்டு துணிகள் விற்கப்படாமல் இருப்பதற்கும், கதர் தேவை என்று நினைத்தார்கள். நான் சொல்வேன், கதர் உற்பத்தியும் கைத்தறி உற்பத்தியும் தென்னாட்டில்தான் அதிகம். இவ்விரு துறைகளிலும் தென்னாட்டின் உழைப்புத்தான் அதிகம். அப்பொழுது காந்தியடிகள் இந்தியா முழுமையையும் ஒரு நாடாகக் கருதிச் சொன்னார்கள். நம் உழைப்பு நமக்கு போதுமான பலன் அளித்ததா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். மற்றொன்றை குறிப்பிடுவேன், கதர் நூற்று பிழைப்பவர்கள் அவர்களுக்கு வேறு வேலை வாய்ப்புத் தேடித் தரும்வரையில் கதர் நூற்காதே என்றோ அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டாம் என்றோ நான் சொல்ல மாட்டேன். வேறு வேலை வாய்ப்புத் தேடித் தருகிற வரையில் கைத்தறித் தொழிலாளர்களையும், அவர்களின் தொழிலை விட்டு விடவேண்டுமென்றோ அல்லது அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டாமென்றோ நான் சொல்ல மாட்டேன். நேற்றைய தினம் பேசிய ஒரு அங்கத்தினர் சொன்னார், இயந்திரத் தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும், இயந்திரத் தொழிலில் ஈடுபட வேண்டியது அவசியம் என்று திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்திருப்பதாகச் சொன்னார்கள். அதன் நோக்கம், விஞ்ஞான வளர்ச்சியை உணர்ந்து நாம் நாட்டிற்கு நல்லது செய்ய வேண்டுமென்று நினைப்புடன்தான் அப்படி தீர்மானம் செய்தோம். இங்கு தென்னாட்டில் கைத்தொழில்களில் ஈடுபட்டிருக்கிற மக்கள் ஏராளம். ஆனால் அவர்களின் உழைப்பிற்குத் தக்க ஊதியம் கிடைக்கிறதா என்றால் இல்லை. அதை மாற்றியமைப்பதற்குள்ள வழிகளை கண்டு பிடிக்க அரசாங்கம் திட்டமிடவேண்டுமே தவிர அவர்களின் எந்தத் துறையில் சிக்கிக் கொண்டு தவிக்கிறார்களோ அதில் சிக்கிக்கொண்டு பட்டினி கிடந்து, ஓரளவு கூட உடுப்பதற்கு துணி இல்லாமல் வருந்திக்கொண்டு, ஓரளவு மூச்சுக் கூட விட முடியாமல்



தவித்துக்கொண்டு இருப்பதற்கு ஒரு வழி கண்டு பிடிக்காமல், அவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழி கண்டு பிடிக்காமல், அதற்கு வேண்டிய கொள்கைகளை கையாளாமல், இப்பொழுது கைக்கொண்டிருக்க கூடிய கொள்கையை நீண்ட காலக் கொள்கையாக கைக்கொண்டால் அதனால் பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. ஆகவே, நாம் ஏழை மக்களின் குறைகளைக் போக்க அதை ஒரு நீண்ட காலக் கொள்கையாக வகுத்துக்கொள்ளாது முற்போக்கான திட்டங்களை நாம் மேற்கொள்ள வேண்டும். தென்னாடு, வடநாடு என்று நான் குறிப்பிட்டுப் பேசுகிற காரணத்தால் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சிலர் வருந்தலாம், ஆனால் அப்படி வருந்துகிற அங்கத்தினர்கள் பேசுகிற பேச்சுக்களைப் பார்த்தால் சொற்றொடர்கள் மாறுகின்றனவே தவிர கருத்து மாறவில்லை. ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். கைத்தறி தொழிலாளர்கள் பிரச்னையை மத்திய அரசாங்கத்தினிடம் இந்த அமைச்சரவை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு போதுமான வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று. அப்படி எடுத்துச் சொல்லும்போது இந்த அமைச்சரவை நிச்சயமாக அவர்களுடன் சண்டை போட்டுத்தான் தீர வேண்டும். இது, உரிமைப் பிரச்னை மட்டுமல்ல, வாழ்க்கைப் பிரச்னையையும் ஒட்டியதாகும், இது. நான் கேட்கிறேன், மாகாண அரசாங்கம் மத்திய அரசாங்கம் என்று சண்டை போடும் நிலைமை ஏன் வந்தது? மாகாண அரசாங்கம் இந்த நாட்டு மக்களின் உரிமைகளை ஓரளவுதான் பாதுகாக்க முடியும். மற்ற உரிமைகள் அகில இந்தியாவின் உரிமைகள் என்று சொல்லி மத்திய அரசாங்கம் மாகாண அரசாங்கங்களை ஆட்டிப் படைக்கக்கூடிய நிலை இருப்பதால்தான் மாகாண அரசாங்கங்கள் மத்திய அரசாங்கத்தினிடம் வலியுறுத்த வேண்டிய அவசியமும், போராட வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. வடக்கு தெற்கு என்று சொல்லும்போது அந்தச் சொற்றொடர்கள் பிடிக்காவிட்டால் மத்திய அரசாங்க மாகாண அரசாங்கப் போராட்டம் என்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் சொன்னாலும் கூட அதிலே அதே கருத்துத்தான் உள்ளாடுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்று மட்டுமல்ல, இதற்கு முன்னமேயே எத்தனையோ பொறுப்புள்ள அமைச்சர்கள் தெரிவித்திருக்கிறார்கள் இதுபற்றி. கனம் சுப்பிரமணியம் அவர்களே, இந்தச் சட்ட மன்றத்தில் சென்ற ஆண்டில் தெரிவித்தார்கள். திராவிட முன்னேற்றக்கழகம் ஒரு பத்தாண்டு காலம் இப்பொழுது அவர்கள் நடத்துகிற கிளர்ச்சியை நிறுத்தட்டும், பத்தாண்டு காலத்திற்குள் மத்திய அரசாங்கத்தினிடம் கேட்டுக் கேட்டுப் போராடி இந்த நாட்டை வளப்படுத்துவேன், நாட்டை தொழில் மயமாக்குவேன் என்று சொன்னார்கள். அப்படி பத்து ஆண்டுகளில் இந்த நாட்டை வளப்படுத்துவேன், இந்த நாட்டைதொழில் மயப்படுத்துவேன் என்று சொல்லும்போது இப்பொழுது இந்நாடு தொழில் துறையில் மிகவும் பின் தங்கிக் கிடக்கிறது என்பதை அவர்களே ஒப்புக் கொண்டு விட்டதாகத்தான் கருத முடியும். அதே போன்று, நெய்வேலித் திட்டத்தைப் பற்றி இங்கு எவ்வளவோ ஆர்வத்தோடு பேசப்பட்ட போதிலும், அதைப் பற்றிச் சொல்லி அமைச்சரவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி ஊட்டினாலும், நேற்றியதினம் மத்திய அரசாங்க மந்திரியாகிய ஸ்வரன் சிங் அவர்கள் தெரிவித்த கருத்தைப் படித்துப் பார்த்தால் அதில் ஒரு அச்சம் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

**'There is a ray of hope that if the briquettes made from lignite in Neiveli turned out to be a good substitute for matallurgical coal, steel plants of a smaller size may be established in certain areas in the south'.** 12-40 p.m.

தென்னாட்டில் சிறந்த உருக்குத் தொழிற்சாலை இல்லை என்பதை பல தடவை குறையாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது, இந்த நேரத்தில் நெய்வேலியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலக்கரி திட்டம் பூரணமாக நிறைவேற்றப்பட்டவுடன் புதியதாக சில சில இடங்களில் சிறிய உருக்குத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்குள்ள ஒளி தோன்றுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். இவ்விதம் குறிப்பிட்டிருக்கிறாரே தவிர, முழு நம்பிக்கையை இதில் தெரிவிக்கவில்லை, மத்திய சர்க்கார் மந்திரி அவர்கள். சென்னை மாகாணம் குறைபடுகிறது என்று தெரிந்தும் கூட சிறிய

[Sri K. Anbazhagan] [3rd April 1958

அளவில்தான் நம்பிக்கை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கை போவதற்கு எவ்வளவு காலம் ஆகும், அல்லது அந்த நம்பிக்கை போய்விட்டது என்று நாங்கள் சொன்னால் அதை இந்த சர்க்கார் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அது மட்டுமல்ல, மற்றொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த இடத்தில் மூலப்பொருள்கள் இல்லை என்று காங்கிரஸ் உறுப்பினர்களே, இங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படாததற்கு காரணம் என்று தெரிவிக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் வணக்கத்துடன் தெரிவித்துகொள்வேன், நமக்கு ஏற்கெனவே வேண்டிய மூலப்பொருள்கள் இல்லையென்றால் நமக்கு வேண்டிய மூலப்பொருள்களை தேடிக்கொள்வதற்கான வசதிகளைப்பெற்றால்தான் நாம் பல தொழில்களை நடத்த முடியும். கனம் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் முயற்சி செய்தால், கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் முயற்சி செய்தால் இந்த காரியங்களை செய்ய முடியும். அது மாத்திரமல்ல. மூலதனத்திற்கு வேண்டிய உதவி கிடைப்பதற்காக மத்திய அரசாங்கத்தினிடத்தில் நமது அரசாங்கம் கேட்டும், கிடைக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஒரு உர உற்பத்தி நிலையம் **Fertilizer factory** நெய்வேலியில் நடத்தலாம் என்றுள்ள யோசனையை பல தடவை இந்த சபையில் பல அங்கத்தினர்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதில்

**The fertilizer production scheme for manufacture of urea with a nitrogen content of 70,000 tons per annum has been sanctioned, subject to availability of foreign credit** என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து மூலதனம் கிடைப்பதற்குள்ள வாய்ப்பு இருக்குமானால், அவ்விதம் மூலதனம் கிடைக்குமானால் இதை நிறைவேற்ற முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சிந்திரியில் உர உற்பத்திசாலைக்கு என்றால் 35 கோடி ரூபாய் மூலதனம் கொடுக்கப்படுகிறது, இந்த நாட்டிலுள்ள மக்களின் கணக்குப்படி ஒரு ஆளுக்கு ஒரு ரூபாய் என்று கணக்கிடலாம், அந்த விதத்தில் அங்கு 35 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. பிலாய் உருக்குத்தொழிற்சாலைக்கு என்றால் 110 கோடி ரூபாய் மூலதனத்திற்கு கொடுக்கப்படுகிறது, துர்க்காபூர் உருக்குத் தொழிற்சாலைக்கு என்றால் 140 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது, ரூர்க்கேலா உருக்குத் தொழிற்சாலைக்கு என்றால் 170 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது, இவ்விதம் உருக்குத் தொழிற்சாலைகளுக்காக சுமார் 400, 450 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் தென்னாட்டில் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மூலதனம் வேண்டும் என்று கேட்டால் வெளிநாட்டிலுள்ள மூலதனம் கிடைத்தால்தான், கொடுக்கமுடியும் என்று தெரிவிக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. இவர்களது உதவிதான் வேண்டாம், வேறு வகையிலாவது இதை ஆரம்பிக்கலாம் என்றாலும் கூட மத்திய சர்க்கார் இதற்கு தடையாய் இருக்கிறது, இதில் பல நேரங்களில் சிக்கல்களும் ஏற்படுகிறது. இந்த மத்திய சர்க்காரை நம்பவேண்டாம், என்று ஒதுக்கி வைத்து விட்டு, வெளிநாட்டில் நாம் கையேந்தினால் நிச்சயமாக நமக்கு உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நமது மாகாணத்திற்காக மத்திய சர்க்காரிடம் என்ன தொழில் திட்டங்கள் இருக்கின்றன? அகில இந்திய ரீதியில் இண்டஸ்ட்ரீயல் உற்பத்தியை பெருக்குவதற்காக எந்த விதமான திட்டத்திற்கும் வழிவகை செய்யாமல் இருந்து கொண்டிருக்கிறது மத்திய சர்க்கார். இதே கருத்தில்தான் இதே சட்டமன்றத்தில் எங்கள் தலைவர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். சில குறிப்பிட்ட தொழில் மூலமாக வருமானத்தை உயர்த்துவதற்கு கோடிக்கணக்கான ரூபாய்களை போட்டு தொழில்களை நடத்தவேண்டும். அதிலும் குறிப்பாக சில தொழில்களை நம்மால் நிறைவேற்ற முடியும் என்பதையும் குறிப்பிட்டு, அதற்காக மத்திய சர்க்காரை நம்பியிராமல் நம்முடைய மக்களிடமிருந்தே அதற்கான மூலதனத்தை திரட்டலாம் என்று தெரிவித்தார்கள். அதற்கும் கூட மத்திய சர்க்காருடைய அனுமதியும், பிளானிங் கமிஷனுடைய அனுமதியும் பெற வேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். நமக்கு இங்கே எட்டு அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவ்விதம் இருந்தும் கூட நாமே மூலதனம்



3rd April 1958] [Sri K. Anbazhagan]

போட்டு ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்றால் மத்திய சர்க்கார் அமைச்சர்களிடத்தில் தான் கேட்கவேண்டும் என்கிற நிலை இருக்கிறது என்றால், இந்த அமைப்பைத்தான் மாற்ற வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். இந்த நாட்டில் நமக்கு தரவேண்டிய மூலதனத்திற்கு மாத்திரம் வெளிநாட்டிலிருந்து கிடைத்தால் தான் இங்கு கொடுப்பதற்கு வழி செய்யமுடியும் என்று மத்திய சர்க்கார் அமைச்சர்கள் குறிப்பிடுகிறார்கள் என்றால் அதை நான் கண்டிக்கிறேன். நாங்களே நடத்துகிறோம் என்று சொன்னாலும் அதிலும் மத்திய சர்க்கார் குறுக்கிடுகிறது. இந்த குறுக்கீட்டை அகற்றவேண்டும். இந்த குறுக்கீட்டை சட்டத்தின் மூலமாகத்தான் அகற்றப்பட வேண்டும் என்று இருந்தால் அந்த முறையிலாவது கண்டிப்பாக அகற்றப்பட்டாக வேண்டும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். பெண்ணாகரத்தில் கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதற்கு தேவையான 30 இலட்சத்தில் மத்திய சர்க்காரிடமிருந்து 10 இலட்சம் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள் இந்த சர்க்கார். ஏற்கெனவே உற்பத்தியாகிற சர்க்கரை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இப்போது இந்த கூட்டுறவு ஆலைக்கு அவசியமில்லை என்று அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். இதை நான் மிக வன்மையாக கண்டிக்கிறேன். உற்பத்தி தேவைக்கு அதிகமாக இருந்தால் பிற மாகாணங்களுக்கு அனுப்பலாம், வேறு இராஜ்யங்களுக்கு அனுப்பலாம். நான் கேட்கிறேன், பிலாயில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் உருக்குத் தொற்சாலை, துர்க்காபூரில் இருக்கும் உருக்குத் தொழிற்சாலை, ரூர்க்கேலாவில் இருக்கும் உருக்குத் தொழிற்சாலை, இவைகளில் எல்லாம் அந்தந்த மாகாணத்தின் தேவைக்கு தகுந்தபடி தான் உருக்கு உற்பத்தி செய்கிறார்களா? ஆகவே அங்கே வேண்டுமானால் எத்தனை வேண்டுமானாலும் நிறுவுங்கள், எவ்வளவு இலாபம் வேண்டுமானாலும் பெறுங்கள் என்று மத்திய சர்க்கார் கூறுகிறார்கள், ஆனால் தென்னகத்திற்கு என்றால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது, ஆகவே அனுமதி தர முடியாது என்று கூறுகிறார்கள், என்ன காரணத்தால் இந்தவிதமான கொள்கையை கையாளுகிறார்கள்? ஆகவே இந்த போக்கை மாற்றுவதற்கு மாகாண சர்க்கார் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக நான் ஒரு வேண்டுகோளோடு தெரிவித்துக் கொள்கிறேன், எனக்கு வேறு பல கருத்துக்களை தெரிவிக்க வேண்டியிருக்கிறது என்றிருந்த போதிலும், அதற்கு காலம் இடம் தரவில்லை. கனம் அமைச்சர் வெங்கடராமன் அவர்களை பொறுத்த வரையில் மற்றவர்களிடத்தில் இருந்து கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் உள்ளவராக இருக்கிறார்கள். அவர்களிடம் நேரிடையாக பல கருத்துக்களை சொல்ல முடியும். அவர்களிடம் வடக்கு தெற்கு என்கிற அணையை சொன்னால் அதை உடைத்து விடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே நம் நாட்டு மக்களுக்காக சில அடிப்படையான திட்டங்களை போட்டு நம் நாட்டு மக்களுக்காக நிறைவேற்றப்படவேண்டும். நமது சென்னை மாகாண மக்களை பரிதாபகரமான நிலையில் விட்டுவிடாதவாறு நம் நாட்டு மக்களுக்காக பல திட்டங்களை போட்டு நிறைவேற்ற வேண்டும். நாங்கள் கூறுகிற நாட்டுப் பிரிவினையை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் நாட்டு மக்களுடைய நல் வாழ்வை கருதி, மக்களுடைய விருப்பத்தை ஏற்றுக்கொண்டு அதற்காக செயலாற்றுங்கள். இப்படிப்பட்ட அடிப்படையில் இந்த நாட்டை தொழில் மயமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தீப்பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். மக்களுக்கு போதிய அளவு உரம் கிடைக்கக்கூடிய அளவுக்கு உர உற்பத்தி தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும், கட்டு மரம் கட்டுவதற்கு உபயோகப்படுத்துகிற (தேக்கு) மரங்களை வளர்ப்பது போன்ற முயற்சிகளில் ஈடுபட வேண்டும். காங்கிரஸ் உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள்—முந்திரி ஓட்டிலிருந்து பிளாஸ்டிக் சாமான்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று—இவைகளை எல்லாம் இந்த நாட்டில் பெருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு இண்டஸ்ட்ரியல் ஸ்கூல்கள் அதிகமாக நடத்த வேண்டும். இப்போது நடத்தப்பட்டு வரும் ஸ்கூல்களிலுள்ள மாணவர்களுக்கு இதற்கு

[Sri K. Anbazhagan] [3rd April 1958

முன்னால் நாள் கூலியாக தரப்பட்டது, இப்போது ஸ்டைபண்டாக கொடுக்கப்படுகிறது. இதனால் பல ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இவர்களுக்கு நாள் கூலியாக தரப்படுவதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri A. VEDARATHNAM :** ஸார், பாயிண்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன், நூற்றுக்கு 85 விவசாயிகளாக இருக்கும் இந்த நாட்டில் விவசாய காலம் போக மீதி நேரத்தில் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு திராவிட முன்னேற்ற கழகம் என்ன சிபாரிசை செய்யும் என்பதை அந்த கட்சியின் சட்டசபை துணைத்தலைவராக இருந்துவரும் அன்பர் அன்பழகன் அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை கேட்கிறேன்.

**DEPUTY SPEAKER : I am not going to allow that point of information. The hon. Member need not answer it.**

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த தொழில் இலாகா மான்யத்தின் பேரில் கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்லலாம் என்று விரும்புகிறேன். இந்த தொழில் இலாகாவானது ரொம்ப திறமையுடன் வேலை செய்து கொண்டு வருகிறது என்பதைப்பற்றி யாரும் மறுக்க முடியாது. அமைச்சர் அவர்கள் இந்த பதவியை ஏற்றுக் கொண்டதிலிருந்துஅதிக ஊக்கத்துடன் இதில் நல்ல திட்டங்களை எல்லாம் போட்டு நன்றாக நடத்தி வருகிறார்கள். இருந்த போதிலும் என்னை பொறுத்த வரையில் சில யோசனைகளை இங்கு சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் ஒரு இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டை கிண்டியில் ஆரம்பித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் நாங்கள் போய் சுற்றிப்பார்த்தோம். அங்கு பல தொழில்களையும் விருத்தி செய்வதற்கு எடுத்துக்கொண்டிருக்கின்ற முயற்சிகளைப் பார்த்து நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். இவ்விதம் இரண்டொரு பிராந்தியங்களிலும் ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். இருந்தபோதிலும் இன்னும் மத்திய சர்க்காரிடமிருந்து அதிக உதவி பெற்று ஒவ்வொரு ஜில்லாக்களிலும் இம்மாதிரியான இண்டஸ்ட்ரீஸ் எஸ்டேட்டுகளை ஆரம்பித்து நடத்த வேண்டும். இதை நாம் எவ்வளவு தூரத்திற்கு சீக்கிரமாக ஆரம்பிக்கிறோமோ அவ்வளவு தூரத்திற்கு நம் நாடு முக்கியமாக தொழில்களில் நன்றாக வளர்ச்சி யடைந்து நாட்டில் சுபீட்சம் கிடைக்கும் என்பதைப்பற்றி நான் அதிகமாக சொல்ல வேண்டிய தில்லை. தென்னாடு பலவிதத்திலும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது.
12-50 p.m. பாராளுமன்ற உறுப்பினர்களும் இதை எடுத்துச் சொல்லி வருகிறார்கள். நான் சில மாதங்களுக்கு முன் வட இந்தியா போயிருந்த பொழுது பார்த்தேன், குறிப்பாக உத்திர பிரதேசத்தில், நூற்றுக்கணக்கான தொழிற் பண்ணைகளை ஏற்படுத்தி, தொழில் விருத்தி அடைந்து கொண்டு வருகிறது. நம்முடைய ராஜ்யத்திலும் இந்த மாதிரியான இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டுகளை நிறைய அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பூர்த்தியாவதற்குள்ளாக, ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு தொழிற் பண்ணையை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் கிடைக்காத மூலப்பொருள்கள் அநேகம் இருக்கின்றன. அவைகள் எல்லாம் இருந்தால் தான் நம் நாட்டில் சிறு தொழில்கள் வளருவதற்கான வாய்ப்பு ஏற்படும். கிடைக்காத மூலப் பொருள்களுக்கு " இம்போர்ட் லைசென்ஸ் " பெற்று, அவைகளை நிறைய வரவழைக்க வேண்டும். உதாரணமாக, ஆவடியில் சைக்கிள் உற்பத்தி செய்து வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய ஷீட்டுகள் கிடைப்ப தில்லை. இம்மாதிரி அநேகவித மூலப்பொருள்கள் எல்லாம் மேல்நாடு களிலிருந்து நமக்கு வரவேண்டியதாக இருக்கின்றன. முக்கியமாக சிறிய தொழில்களுக்கு என்னென்ன மூலப்பொருள்கள் வேண்டுமோ, அவைகளை உடனடியாக மத்திய சர்க்கார் மூலமாக வரவழைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



3rd April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

சில கனரகத் தொழில்கள் நமது பிராந்தியத்தில் இருந்தபோதிலும், சிறு தொழில்கள் நம்முடைய நாட்டில் எவ்வளவுக்கெவ்வளவு விருத்தி யாகிறதோ, அந்த அளவுக்குத்தான் நம்முடைய தமிழ் நாடு சுபிட்சம் அடையும். ஆகவே ஒவ்வொரு ஜில்லாவிலும் சிறு தொழில்கள் பரவ வேண்டும். முக்கியமாக குடிசைத் தொழில்கள் நன்றாகப் பரவ வேண்டும். சட்டி பானைகள் செய்தல், தீக்குச்சி செய்தல், பாய் நெசவு செய்தல் போன்ற வைகள் முக்கியமான குடிசைத் தொழில்கள். என்னுடைய பிராந்தியத் திலே தஞ்சை ஜில்லாவைப் போல நிறைய தென்னை மரங்களும், பனை மரங்களும் கடலோரப் பகுதியில் இருக்கின்றன. இம்மாதிரி சிறு தொழில் கள் அமைப்பதற்கு போதுமான வசதி யிருக்கிறது. குறிப்பாக கயிர்த் தொழிலுக்கு வேண்டிய வசதி யிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலமாக சிறு தொழில் ஆரம்பிப்பதற்கு அநேக விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார் கள். அவைகளுடைய முடிவு என்ன ஆயிற்று என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன். திருவொற்றியூர் முதல் தென் ஆற்காடு வரையில் சுமார் 60, 70 மைலுக்கு கடலோரப் பகுதிகளில் இருக்கும் தென்னை, பனை, இன்னும் இதர மரங்களைப் பயன்படுத்திக் கொண்டு கயிறுத் தொழிலையும், மற்ற சிறிய குடிசைத் தொழில்களையும் அந்தப் பிராந்தியங்களில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன். அதே மாதிரி லேத்துப் பட்டரை, கொல்லன் பட்டரைகளை ஒவ்வொரு தாலூக்காவிலும் முக்கியமான இடங்களில் நடத்தி வந்தால் விவசாயி களுக்கு உதவுவதாக இருக்கும். இது விஷயத்திலும் உடனடியாக நட வடிக்கை எடுக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு உழவுத் தொழிலுக்கு முக்கியமாக வேண்டியது கலப் பைகள் அதிலும் இப்பொழுது நூதனமான கலப்பைகள் வந்திருக்கின்றன. ஜாப்பானிய முறையைக் கையாண்டு களை எடுப்பதற்காக எல்லாம் முக்கிய மான மெஷின்கள் வந்திருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒவ்வொரு தாலூக்காவிலும் உற்பத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்து விவசாயி களுக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இண்டஸ்ட்ரியல் எஞ்சினியரிங் வொர்க்ஷாப்பைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அநேகம் பேர்களுக்கு இந்த மாதிரி வொர்க்ஷாப் இருப்பதாகவே தெரியாது. மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் அவைகள் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை. இந்த இலாக்காவிலிருந்து பம்பு செட்டுகள், மெஷின்களை எல்லா லாம் பழுது பார்ப்பதற்கு " கம்பவுண்டிங் பீஸ் " என்று வாங்கிக்கொண்டு, விவசாயிகளுக்கு நல்ல முறையில் உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத் தோடு, திட்டம் போட்டு முன்பு உதவி வந்தார்கள். இப்பொழுது போது மான எஞ்சினியர்கள் இல்லாத காரணத்தினாலோ அல்லது மெக்கானிக்கு கள் இல்லாத காரணத்தினாலோ, அப்பேற்பட்ட ஆட்கள் உள்ளே இருக்கும் கிராம பிராந்தியங்களுக்கு வந்து விவசாயிகளுக்கு உதவுவது இல்லை. இப்பொழுது கிராமங்களில் எல்லாம் மின்சார மோட்டார்கள், பம்பு செட்டு கள் வைத்து வேலை செய்கிறார்கள். ஆகவே நிறைய மெக்கானிக்குகளை யும், எஞ்சினியர்களையும் போட்டு, ஒவ்வொரு பிராந்தியத்திலும் விவசாயி களுக்கு செர்விஸ் (service) செய்து கொடுக்கும் நோக்கத்தை கருத்தில் கொண்டு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் துணித்தேக்கத்தைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டியது இல்லை. இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையிலே அதற் காக உடனடியாக மத்திய சர்க்காருடன் வாதாடி வேண்டிய உதவிகளை யெல்லாம் செய்யப் போவதாக சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை பார்ப்பதற்கு ரொம்பவும் பயங்கரமாக இருக்கிறது. இந்தக் கைத்தறிப் பிரச்னையை நாம் தீர்க்காவிட்டால், குறிப்பாக தென் பிராந்தியத்தில் எவருமே முன்னேற முடியாது. கைத்தறி நெசவாளர்களுக்கு என்ன உதவியெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். அப்படிச்

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [3rd April 1958

செய்யாவிட்டால், லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால்
பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுவார்கள். இது ரொம்பவும் முக்கியமான
பிரச்னை. என்னைப் பொறுத்த வரையில் 2 அணுவுக்கு மேலாக எவ்வளவு
ரிபேட் கொடுக்கமுடியுமோ அதைக் கொடுத்து துணித்தேக்கத்தைப் போக்கு
வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாப் பிரச்னைகளையும் விட இது
முக்கியமான பிரச்னை, அவசரமான பிரச்னையும் கூட. இதைப் பற்றி
விரிவாக அநேக அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகவே இதை
உடனடியாக தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது அநேக இடங்களில் பள்ளிக்கூடங்களில் கைத்தறி நெசவு
செக்ஷன் வைத்து, மாணவர்கட்கு சொல்லிக் கொடுத்து வருகிறார்கள்.
ஆனால் அவைகளுக்கு போதுமான உதவி சர்க்கார் அளிப்பது இல்லை.
மானேஜ்மென்டார் எவ்வளவு தூரம் ஊக்கம் எடுத்துக் கொண்ட போதி
லும், கைத்தறியை விருத்தி செய்வதற்காக வேண்டிய கருவிகள் எல்லாம்
பள்ளிக்கூடங்களுக்குக் கிடைப்பதில்லை. உதாரணமாக, செய்யூர் கிராமத்
திலே கஸ்தூரிபாய் கழக ஹரிஜன ஹாஸ்டல் ஒன்று நடந்துகொண்டிருக்
கிறது. அவர்கள் எத்தனையோ மனுக்கள் போட்டும் எந்தவிதமான பதிலு
லும் அனுப்பவில்லை. உதவியும் அளிக்கவில்லை. கைத்தறியை பள்ளிக்
கூடங்களில் விருத்தி செய்வதற்கு வேண்டிய உதவியைச் செய்யவேண்டும்.

ஸ்ரீமதி சௌந்திரம் ராமச்சந்திரன் அம்மையார் அவர்கள் அரிசி
மில்களைப்பற்றி பேசினார்கள். கைக்குத்தல் அரிசியை எல்லோரும் சாப்பிட
வேண்டியது அவசியம். அதை எவ்வளவு தூரம் விருத்தி செய்யவேண்
டுமோ அவ்வளவு தூரம் விருத்தி செய்யவேண்டும் என்பதை யாரும்
மறுக்க மாட்டார்கள். இருந்த போதிலும் இந்த மெஷின்களை எல்லாம்
எப்படி எடுத்துவிட முடியும்? புதிதாக லைசென்சு கொடுப்பதைப்பற்றி
யோசிக்க வேண்டுமே தவிர, பழைய அரிசி மில்களுக்கு பாலிஷ் இல்லாமல்
குத்தும்படியாக உத்திரவைப் போடலாமே தவிர, இவைகளை எடுத்துவிட
முடியாது. அப்படி எடுத்துவிட்டால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்
ஆயிரக்கணக்கான மக்கள் கஷ்டப்படுவார்கள். இருக்கும் மில்களை கண்
டிப்பாக மூட முடியாது. மூடுவதன் காரணமாக வேலையில்லா திண்டாட்
டம் அதிகரிப்பதுடன், மக்களுக்குப் போதுமான அரிசியும் கிடைக்காது.
ஆகவே பாலிஷ் இல்லாமல், வைட்டமின்கள் போகாதபடி, நல்ல முறையில்
அரிசி குத்தவேண்டுமென்று உத்தரவு போடவேண்டுமே தவிர, மூட
வேண்டுமென்ற நோக்கத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

இரும்பு விநியோகம் செய்யப்படுவதில் விவசாயிகள் படும் கஷ்டத்தைப்
பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. சென்ற வாரம் கேள்வி நேரத்தின்
போது அதைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இம்போர்ட் லைசென்ஸ் கொடுப்
பதில் வெளி நாடுகளிலிருந்து வரும் இரும்புக்கும், நம்முடைய நாட்
டில் கிடைக்கும் இரும்புக்கும், இரண்டுக்கும் சேர்த்து ஒரே லைசென்ஸ்
வழங்கப்படுகிறது. இந்த மாதிரி ஒரு லைசென்ஸ் முறை இருப்பதின் காரண
மாக, கருப்பு மார்க்கெட் ஏற்படுகிறது. ஆகவே இதைப் பிரித்து, இம்போர்ட்
லைசென்ஸ் கொடுக்கும்போது வெளி நாடுகளிலிருந்து வரும் இரும்புக்கு
1-00 p.m. ஒருவருக்கு லைசென்சும், டாட்டா கம்பெனியிலிருந்து வரும் இரும்புக்கு
வேறொருவருக்கு லைசென்சுக் கொடுக்க வேண்டுமே தவிர, இரண்டையும்
ஒருவருக்குக் கொடுப்பதன் காரணமாக பலவித ஊழல்கள் ஏற்படுகின்
றன. விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய இரும்புகளை சல்லிசாக கிடைப்
பதற்கு ஒரு தாலூகாவிற்கு ஒரு டெப்போ (depot) வைத்து அதை
கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு இது கூட்டுறவு சங்கங்
களின் மூலமாக கொடுக்கப்பட்டது. அது அப்போது சரிவர வழங்கப்பட
வில்லை என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரும்பு, தென் நாட்டுக்கு அதிக 'கோட்டா' கொடுக்காமல் வட
நாட்டிலேயே அநேக பிராந்தியங்களுக்கு கொடுக்கப்படுகிறது என்று நான்
கேள்விப்படுகிறேன். தமிழ் நாட்டில் வடக்கத்திய வியாபாரிகள் இருப்
பதனால் கள்ள மார்க்கட் இருப்பதாக கேள்விப்படுகிறேன். சர்க்கார் இதைப்



3rd April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

பரிசீலனை செய்து சரியாக விநியோகம் செய்யும்படி ஏற்பாடு செய்ய வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவில்பட்டி தாலூகாவில் 'போல்ட்ஸ், நட்ஸ்' செய்து வருகிறார்கள்.
அவர்களுக்கு போதுமான இரும்பு கிடைப்பது இல்லை. அதனால் அவர்
கள் வேண்டிய அளவு 'போல்ட்ஸ், நட்ஸ்' செய்ய முடியவில்லை. ஆகை
யால் அவர்களுக்கு வேண்டிய இரும்பை கிடைக்கச் செய்ய வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொய்னா மாத்திரையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல
ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி 'பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டியிலும்,
எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலும்' நன்றாக பரிசீலனை செய்து அனுப்பியிருக்
கிறார்கள். இதில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு
ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தோனேஷி
யாவில் இருக்கும் கலவரத்தின் காரணமாக கொய்னா மாத்திரை ஏற்றுமதி
செய்ய தேவையாக இருக்கும். 'ஜோனல் ரெஸ்டிரிக்ஷன்ஸ்' இருந்த
போதிலும் கூட, கல்கத்தாவிலிருந்து வரும் கொய்னா மாத்திரை நம்மு
டைய ராஜ்யத்தில் தயாரிக்கும் கொய்னா மாத்திரையோடு போட்டி போட்டு
வருகிறது. மத்திய சர்க்காரிடம் இதை எடுத்துச் சொல்லி இதைத் தடுப்ப
பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக ஆடிட்டர் ஜெனரல் 182 லட்சம்
வரையில் 'காபிடல் காஸ்ட்' 'ரைட் ஆப்' செய்ய வேண்டும் என்று
எழுதி இருக்கிறோம். இதில் ஆடிட்டர் ஜெனரல் சீக்கிரமாக உத்திரவு
பிறப்பிக்கும்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தத் தொழிலை
விருத்தி செய்வதற்கு புதுமாதிரியான மெஷின்களை வரவழைத்து உற்
பத்தியை நூதன முறையில் அதிகரித்து, அதன் மூலம் வருவாயைப்
பெருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களை
கேட்டுக்கொள்கிறேன்.

ஜியோலாஜிகல் (geological) சர்வேயைப்பற்றி தஞ்சாவூரிலிருந்து வந்
திருக்கும் அங்கத்தினர்கள் விரிவாகப் பேசினார்கள். மத்திய சர்க்காரை
எதிர்பார்க்காமல் நம்முடைய சர்க்காரே அநேக 'ஜியோலாஜிஸ்ட்ஸ்'
ஏற்படுத்தி அந்தந்த பிராந்தியங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து, இந்த
வகையில் எவ்வளவு தூரம் விருத்தி செய்ய முடியும் என்று நாம்
பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நிறைய கைத் தொழில் திட்டங்களை ஏற்படுத்துவதற்கு
நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: உதவி சபாநாயகர் அவர்களே,
இந்த விவாதத்தில் பங்கு எடுத்துக்கொண்டு, நல்ல அரிய யோசனைகளை
வெளியிட்டதற்காக எல்லா அங்கத்தினர்களுக்கும் எனது மனமார்ந்த
நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட் வரும் சமயத்தில்
தான் இந்த இலாகா பற்றிய பூரா விவரங்களையும் நானே தெரிந்து
கொள்கிறேன். அதுவும் பல அங்கத்தினர்கள் வெட்டுப் பிரேரேரணை
கொடுக்கின்றபோது அதைப்பற்றி இன்னும் சற்று அதிகமாக பரிசீலனை
செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது. ஆகவே இந்த மான்யக் கோரிக்கை
யின் மீது பேசினவர்களுக்கும், வெட்டுப் பிரேரேரணையை கொடுத்து
பேசாமல் இருந்தவர்களுக்கும் கூட எனது நன்றியை தெரிவித்துக்
கொள்கிறேன்.

நடைமுறை வருஷத்தில் செலவு குறைவாக செய்யப்பட்டது என்ற
ஒரு குறைபாடு சொல்லப்பட்டது. அதற்கு நான் பதில் சொல்கின்ற
முறையில் ஒன்றும் சொல்லப் போவதில்லை. இருந்தாலும் நிலைமையை
விளக்க வேண்டியதற்காக சில புள்ளி விவரங்களைக் கொடுக்க வேண்டி
யிருக்கிறது. சிறிய தொழில்களைப் பொறுத்த வரை 1956-57-ம் வருஷத்
தில் பிளான் ஸ்கீம்களுக்காக நமது ராஜ்யத்தில் செலவிடப்பட்ட தொகை
18,26,000 ரூபாய். நடை முறை வருஷத்தில் இவைகளுக்காக செல

[Sri R. Venkataraman] [3rd April 1958

விடப்பட்ட தொகை 76,04,000 ரூபாய். பிளானில் இல்லாத ஸ்கீம்களுக்காக
1956-57-ம் வருஷத்தில் 13,99,000 ரூபாய் செலவிடப்பட்டது. 1957-58-ம்
வருஷத்தில் இவைகளுக்காக 27,87,000 ரூபாய் செலவழிக்கப்பட்டது.
ஆக மொத்தமாக பிளான் ஸ்கீம்களையும், பிளானில் இல்லாத ஸ்கீம்
களையும் எடுத்துக் கொண்டு பார்த்தால், 1956-57-ம் வருஷத்தில் 32,25,000
ரூபாயும், 1957-58-ம் வருஷத்தில் 1,03,91,000 ரூபாயும் செலவு செய்யப்
பட்டிருக்கின்றன.

இண்டஸ்டிரியல் எஸ்டேட்டுகளுக்காக 1956-57-ம் வருஷம் 9,35,000
ரூபாயும் 1957-58-ம் வருஷம் 38,84,000 ரூபாயும் செலவிடப்பட்டது.
கணிசமான தொகைகள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்வதற்
காக இவைகளை குறிப்பிட விரும்புகிறேன். அதிகமான பணம் செலவழிக்
கப்பட்டிருந்தால் ஏன் புள்ளி விவரங்களில் செலவழிக்காதது போல்
காட்டப்படுகிறது என்று நண்பர்கள் கேட்கலாம். எப்போதுமே '**statistics
are deceptive**' என்று சொல்வார்கள். நாம் கணக்குகளை சரியாக
புரிந்து கொள்ள முடிவதில்லை. உதாரணமாக நாம் 'இண்டஸ்
டிரியல் ஸ்கூல்ஸ்' சம்பந்தப்பட்ட வரை செலவழிக்கப்படாமல் விடப்பட்ட
தொகை 16,24,000 ரூபாய் என்று இருக்கிறது. முதலில் நாம் நம்முடைய
ராஜ்யத்திலிருந்து செலவழித்து பிறகு மத்திய சர்க்காரிடமிருந்து 60
சதவிகிதம் பெறுகின்றோம். இதில் மத்திய சர்க்காரிடமிருந்து வந்த
தொகை 15,27,400 ரூபாய். நாம் செலவழிக்கின்ற தொகை ஒரு புற
மும், மத்திய சர்க்காரிடமிருந்து வரும் தொகை வேறு புறமும், 'காபி
டலில்' இருந்து 'ரெவினியூ'க்கு மாற்றுவது என்று பலவிதமாக கணக்கு
வைக்கின்ற முறை இருப்பதால் தவருன அபிப்பிராயம் ஏற்படுகிறது. இதைப்
பற்றி நான் நன்ருக பரிசீலனை செய்தாகிவிட்டது. இந்த விஷயத்தில் நான்
அதிக காலத்தை கட்த்தவேண்டும் என்று விரும்பவில்லை.

'இலூமினேட்' தொழிற்சாலையில் குறைவாக செலவழித்ததாக
கனம் அங்கத்தினர் டி. எஸ். சாமசாமி பிள்ளை அவர்கள் சொன்ஞர்கள்.
அது 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் 1-ந் தேதி தான் நமது ராஜ்யத்
திற்கு வந்தது. அந்த ராஜ்யத்தில் கணக்கு எப்படி இருந்தது என்ருல்,
'இலூமினேட்' பாக்டரியிலிருந்து 'ஜியோலாஜிகல் டிபார்ட்டுமெண்டுக்கு'
ராயல்டி கொடுத்ததாக கணக்கு காட்டுகிருர்கள். நமது ராஜ்யத்தில் தனி
யாக 'ஜியோலாஜிகல்' டிபார்ட்மெண்டு இல்லை. அது இண்டஸ்டிரீஸ்
டிபார்ட்மெண்டிலேயே ஒரு பகுதியாக இருக்கிறது. ஆகையால் அந்த
ராஜ்யத்தில் அவர்கள் தொகையை தனியாக ஒதுக்குவது போல் நாம்
காண்பிப்பது இல்லை. நமக்கு அந்த பாக்டரி வரும்போது அதன் மூல
தனம் எவ்வளவு என்ற புள்ளி விவரங்கள் நமக்கு கிடைக்கவில்லை.
இப்பொழுது அவைகள் நமக்கு நன்ருகத் தெரியும். இன்றைக்கு அத
னுடைய மதிப்பீடு 3,80,000 ரூபாய்தான். ஆகவே தொகை ஒதுக்கப்பட்டு
செலவிடாதது போல் காணப்படுகிறது.

**Sri T. S. RAMASWAMY PILLAI**: போன வருஷம் வருமானம்
அதிகம் வந்திருக்கிறதே, இப்போது இதன் மதிப்பீடு குறைவாக இருக்
கிறது என்றுதான் கேட்டேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: அவர் சொன்னதை நான்
தவருகப் புரிந்துகொண்டுவிட்டேன்.

1-10 p.m. "ஹாண்டுலூம்" பாக்டரி வைக்க சேலத்தில் அதிகமாக ஒரு தொகையை
ஒதுக்கி இருக்கிறது. அங்கு இடம் வாங்கி பாக்டரி வைக்கவேண்டும்.
"ஓக்ஸ் காம்பவுண்டை" வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்தியதில் நீண்ட
காலம் ஆகியதால் அந்தப்பணம் செலவழிக்கப்படாமல் நின்றுவிட்டது.
அப்படி ஒரு சில இடங்களைப் பார்த்தால் திருப்பி கொடுத்திருக்கிரும்.
அது செய்யவேண்டியதை செய்யாததால் அன்றி, டார்கெட்டை பூர்த்தி
செய்யாத காரணத்தால் அல்ல கணக்கு அட்ஜட்ஸ்மெண்ட் செய்யாததால்
தான் அதற்கு தான் இந்த இரண்டு காரணங்கள்.



3rd April 1958] [Sri R. Venkataraman]

ஏன் அதிகமாக பணம் செலவழிக்கப்
கதரை பொறுத்தவரையில் என்று கேட்டார்கள். ஏராளமான
படாமல் சரண்டர் செய்யப்பட்டது போட்டோம். அப்படி
"ஸ்கீம்களை" பார்ட் 2 "ஸ்கீம்காளக" எல்லா இஸ்கீம்களை
சென்ற பட்ஜெட்டில் செய்தோம், ஆனல் நாம் போட்ட அசோசியேஷன்
யும் அகில இந்திய காதி அண்ட் விலேஜ் இண்டஸ்டிரீஸ் போட்டார்கள்.
ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் வேறு இஸ்கீம்களை இஸ்கீம்களுக்காக
அவைகளை நிறை வேற்றி இருக்கிருேம். நமது கொடுத்திருக்கிருேம்.
செலவழிக்கப்படாத தொகைகள் சரண்டராக என்பதை
ஆதலால் இந்த சரண்டர்கள் நமது தவறினல் அல்ல
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தொழில் துரையை நடத்துவது பற்றி சொன்ஞர்கள். ச்ர்க்
கார் துறையில் நடத்துவதா, தனியார் துறையில் நடத்துவதா என்று,
சர்க்காரே நடத்துவதற்கு ஒரு கொள்கையும் காணும். அவர்கள் மனம்
குழம்பி இருக்கிறது என்று சின்னதுரை சொன்ஞர்கள். நான் திட்ட
வட்டமாக சொல்லுகிறேன், எந்த துறையில் இருந்தாலும் சரி தொழில்
வேண்டும் என்பதுதான் சர்க்காரின் கொள்கை. தனியார் துறையில்
வருமாஞல் அதை வரவேற்கிருேம். நன்ருக நடத்திஞல் அதை பாராட்டு
கிருேம். தனியார் துறையில் வராமல் சர்க்கார் துறையில் நடத்த வசதி
கள் இருந்தால், தனியார்தான் செய்ய வேண்டுமென்று சர்க்கார் தலை
யிடக்கூடாது. என்று இருக்கப்போவதில்லை. அவசியத்தை முன்னிட்டு
இன்றைக்கு இருக்கும் நிலைமையை பரிசீலித்து செய்யப்படுகிறது. பல
நிபுணர்கள் பரிசீலனை செய்தார்கள். கடைசியாக இந்த பிரஞ்சு எக்ஸ்
பர்ட் ஸாபோ என்பவர் அலுமினியம் தொழிற்சாலை சேலத்தில் வைக்க
முடியும், குறைந்தது 50 இலட்ச டன் கனிப்பொருள், பாக்ஸைட் கிடைக்
கிறது என்று சொன்ஞர்கள். அதற்கு வேண்டிய தொழில் நுட்பம்
மூலதனம், அதுவும் அன்னிய செலவாணி குறைவாக இருப்பதால் யாரா
வது அதற்கு வேண்டிய மூலதனம் முக்கியமாக இயந்திரங்கள் இவற்றை
பயன்படுத்திக்கொண்டு ஏற்பாடு செய்வது நல்லது. இதில் தனியார்
துறையில் இருக்கவேண்டுமா சர்க்கார் துறையில் இருக்க வேண்டுமா என்ற
மனவேறுபாடு ஏற்படுகிறது. இந்த பேச்சுகளில் இருந்து தவருக புரிந்துக்
கொள்ளக்கூடாது. எந்தத்துறையில் இருந்தாலும் சரி அது சென்னை
ராஜ்யத்தில் இருக்கவேண்டும் என்பது ஒன்றுதான் இந்த சர்க்காரின்
நோக்கம். தனியார் வெளிநாட்டின் தொடர்புகொண்டு மூலதனத்தை
போடுவார் என்ருல் சென்னை ராஜ்ய சர்க்கார் அதை வரவேற்கும். சர்க்கார்
துறையில் தான் செய்யவேண்டும் என்று அவ்வாறு முன் வருபவர்களை
தடுக்க மாட்டார்கள். அதற்கு மாருக அவர்களுக்கு எல்லாவிதமான
சௌகர்யங்களும் சலுகைகளும் செய்வார்கள். அதே முறையில்தான்
மாக்னீஸைட்டைப்பற்றி செய்ய முடியும். ஒரு வருஷகாலமாக ராஜ்ய
சர்க்கார் ஒரு கார்ப்பரேஷனுக வைத்துக்கொண்டு நடத்தவேண்டும் என்று
முயற்சி செய்துதான் பார்த்தார்கள். ஆனல் தனியார் எவரும் நம்முடன்
சேர்ந்து ஆரம்பிக்க முன்வரவில்லை. சர்க்காரே எடுத்துக்கொண்டு நடத்த
வேண்டுமென்ருல் அதற்கு வேண்டிய ரிப்ராக்டரி நடத்தவேண்டிய
மூலதனமும் நம்மிடத்தில் டெக்னிக்கல் ஸ்கில்லும் நம்மிடத்தில் இல்லை.
ஆகவே நம் ராஜ்யத்திலேயே, சேலம் நகரத்திலேயே ஒரு கோடி ரூபாய்
செலவில் அவர்களே செய்ய முன் வந்தால் அவர்களை இரண்டு கைகளாலும்
வரவேற்கிருேம் என்ருல் அதை இந்த சபை குற்றமென்று சொல்லாது
என்று நினைக்கிறேன். சின்னதுரை அவர்கள் கொள்கை பூர்வமாக
சொல்கிருர்கள். எங்களுக்கு தொழிற்சாலை வராவிட்டாலும் பாதகமில்லை,
சர்க்கார் துறையில்தான் நடத்தவேண்டும் என்று. எனக்கும் அவருக்கும்
அதுதான் அடிப்படை கொள்கை வித்தியாசம்.

நம் ராஜ்யத்தில் சிறு கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவை
களெல்லாம் பெரிய அளவுக்கு முன்னேறிக்கொண்டு இருக்கிறது என்று
சொல்ல தேவையில்லை. அகில இந்திய சிறு கைத்தொழில்கள் மகாநாடு
நடந்தபோது அங்கே வந்திருந்த மற்ற ராஜ்ய பிரதிநிதிகள் இதைப்பற்றி
பாராட்டிச்சொல்லி இருக்கிருர்கள். மேற்கொண்டு தொடர்ந்து அதிகமாக
துரிதமாக அங்கத்தினர்கள் உதவி செய்வதற்கு வேண்டுகிறேன்.

[Sri R. Venkataraman] [3rd April 1958

கதர் சம்பந்தமாக ஒரு பிரச்னை எழுப்பப்பட்டது. அன்பழகன் அவர்கள் கூட சொன்னார்கள். இந்த ராஜ்யத்திலே எவ்வளவு நாட்களுக்கு குறைந்த கூலி கொடுத்து இந்த வேலையை நடத்துவது, இது நிரந்தரமான கொள்கையா அல்லது இடைக்கால கொள்கையா என்று கேட்டார்கள். மேல் நாடுகளில் வேலை இல்லா திண்டாட்டம் ஏற்படும்போது நிவாரணம் கொடுக்கப்படும் வகையில் "டோல்ஸ்" வாங்குகிறார்கள். ஆனால் நம் நாட்டில் டோல்ஸ் கொடுக்காமல் அன்டர் எம்பளாயிட் ஆட்களுக்கும் "அன்எம்பிளாயிடு பர்சன்ஸ்களுக்கும்" ஏதாவது ஒரு துறையில் வேலை கொடுத்து பட்டினி இல்லாமல் கஷ்டப்படாமல் வைப்பது ஒன்றே அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கை. இதுதான் கதர் இயக்கம்; இன்றைக்கு கதர் இயக்கத்தில் ஒரு இலட்சம் ஸ்பின்னர்களும் 3,000 வீவர்களும் இருக்கிறார்கள். ஆகையால் இது பெரிய அளவிற்கு வேலையில்லா திண்டாட்டத்தை போக்கி பட்டினி இல்லாமல் வைக்க உதவி செய்கிறது. பிற்காலத்தில் தொழில்கள் நன்றாக வளர்ந்து, மக்கள் நல்ல முறையில் வாழலாம் என்று ஏற்பட்டால் கதரை விட்டு விடலாம். விடக்கூடாது என்று சொல்லப்போவதில்லை. ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமையில் மக்களெல்லோரும் பட்டினியால் வாடாமல் இருப்பதற்கும் விவசாயிகள் பாதிநாட்களுக்கு மேல் வேலையில்லாமல் திண்டாடுவதை தவிக்கவும், டோல்ஸ் (தானங்கள்) கொடுப்பதைவிட்டு சிறு தொழில்கள் அமைத்து அதன் மூலம் மக்களுக்கு உதவி செய்ய படுகிறது. இது அவர்களை கன்னியமாக்கும். அவர்கள் வாழ்க்கையை சுபிட்சமானதாக ஆக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மில்கள் மூடும் பிரச்சினையைப்பற்றி சின்னதுரை அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சர்க்கார் ஏதோ தவறு செய்தது போல் பேசியது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. முதலாளிகள் மூட வேண்டிய நிலைமை என்று சொன்னவுடன் தொழிலாளிகளுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும் என்று சொன்னேன். இது ஏதோ தொழில் தகராறு போனறதல்ல. ஆகவே முக்கூட்டு மகாநாடாக போட்டு அந்த மகாநாட்டில் நிலைமையை விசாரணை செய்யவேண்டுமென்று சொல்லுகிறேன். சர்க்காரும் உதவி செய்யவேண்டும். அதே முறையில் தொழிலாளிகளும் விட்டுக் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டால் அதற்கும் அவர்கள் தயாராக இருக்கவேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

**Sri P. S. CHINNADURAI:** தவறு இழைத்து விட்டதாக சொல்லவில்லை. முதலாளிகள் சொல்வதின் உண்மையை நிபுணர்களை அனுப்பி பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோருகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN:** நிபுணர் என்று நினைத்து தான் கனம் சின்னதுரை அவர்களை அழைத்து பேசவேண்டும் என்று சொன்னேன். (சிரிப்பு.)

கனம் சாரதி அவர்கள் சொன்னார்கள் விழுப்புரத்தில் எண்ணெய் தொழிற்சாலையை சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்று. சர்க்காருக்கு ரூ. 10 இலட்சத்துக்கு மேல் வரவேண்டி இருக்கிறது. அதை எடுத்து நடத்தவேண்டுமானால் மேலும் நஷ்டம்தான் வரும், என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். இருந்தாலும் அதை நன்றாக ஆலோசனை செய்து பார்த்த பிறகு ஏதோ ஒரு வெளிச்சம் தெரிகிறது. நம்பிக்கை ஏற்படுகிறது. ஒரு சோப்பு பாக்டரியாக நடத்தினால் ஒரு வேளை இலாபகரமாக இருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆகவே இந்த மில்லை குத்தகைக்கு வாங்கி சோப்பு பாக்டரியாக வைக்கலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது.

அதேபோல் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைப்பற்றி கூட சொன்னார்கள்.
1-20 p.m. கூட்டுறவு ஆலைகள் என்பது திடீரென்று வந்து விடாது. ஒரு ஆலையை வைக்கவேண்டுமென்றால் குறைந்த பட்சம் இரண்டு மூன்று வருஷங்களாகும். ஆனால் ஒன்றை மட்டும் நான் சந்தோஷமாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வெகு விரைவாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள



3rd April 1958] [Sri R. Venkataraman]

விரும்புகிறேன். சில இடங்களில் இடங்களை வாங்கி கட்டடங்களைக்கூட கட்டுவதற்கு ஆரம்பித்துவிட்டார்கள். இரண்டு சொஸைட்டிகள் யந்திரங்களை எல்லாம் வரவழைத்து விட்டார்கள். இதற்கு வேண்டிய அளவில் செலவுகூட அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது. இன்டஸ்ட்ரியல் பைனான்ஷியல் கார்போரேஷன் கொடுக்கவேண்டிய தொகையைக்கூட அவர்களுக்குக் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். வேலைகள் எவ்வளவோ நன்றாக முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆகவே சர்க்கரை ஆலைகள் சீக்கிரத்திலேயே ஆரம்பிக்கப்படும் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய செலவிலேயே எல்லா மைனிங் செக்ஷனை ஆரம்பிக்க மத்திய சர்க்காரில் பயிற்சிபெற்ற ஒருவரை இதற்குத் தலைவராகப் போட்டு நமது ராஜ்யத்தில் இருக்கிற கனிப் பொருள்களை ஆராய்ந்து நாம் அதை எப்படி பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதற்காகத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறோம். இன்னும் அதை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சர்க்கார் அதற்கு தயக்கம் காட்டாது என்பதை மாத்திரம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கைத்தறி நெசவு சம்பந்தமாக கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஆதரவாகப் பேசியதற்கு என்னுடைய நன்றி. கைத்தறி நெசவாளர்களின் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் சர்க்கார் எந்த விதத்திலும் தயங்காது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். அதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமும். ரிபேட் கொடுப்பதன் மூலமாகத்தான் அவர்களுடைய பிரச்னையை நாம் தீர்த்து வைக்கமுடியும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை அதிகமாக விற்பனை ஆகாமல் இருக்கக்கூடியதை விற்பனைக்குக் கொண்டு வருவதுதான். அவர்கள் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். விற்பனை ஆகாமல் இருக்கும்போது சர்க்காரில் இரண்டு கோடி மூன்று கோடி ரூபாய்....... (ஸ்ரீ ராஜா முத்தையா செட்டியார் எந்த அளவில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள்). முதலில் இல்லை என்று சொன்னார்கள், இப்பொழுது பேசாமல் இருக்கிறார்கள். இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய்க்கு தேக்கம் இருக்கிறது என்று சொன்னால் எல்லோரும் தங்களுடைய தேவைக்குத் தக்கபடி துணிகளை வாங்கிக்கொண்டு விட்டார்கள் என்ற அர்த்தம் இல்லை. எல்லோருக்கும் வேண்டிய அளவில் கிடைத்து விட்டது என்ற அர்த்தம் இல்லை. சமுதாயத்தில் இப்பொழுது இருக்கிற விலைக்கு இவ்வளவுதான் தேவையாக இருக்கிறது. விலை குறைந்தால் சற்று அதிகமாக தேவை ஏற்படும். விலையை அதிகரித்தால் தேவை குறையும்; அந்த அடிப்படையில்தான் இந்தத் தேக்கம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த தேக்கத்தை போக்குவதற்கு ரிபேட் கொடுப்பது என்ற ஒரு வழிதான் உண்டு. ரிப்பேட்டை அதிகரிப்பதன் மூலம் இந்தப் பிரச்னையை நம்மால் தீர்க்க முடியும். ஆகவே ரிப்பேட்டை அதிகரிப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக கனம் அன்பழகன் அவர்கள் சொன்னார், ஸ்டீல் ப்ளான்டைப்பற்றி ஏதோ ஒரு சந்தேகமான முறையில் கூறப்பட்டிருக்கிறது என்று. சரோன்சிங் பேசியபோது எந்த நிலைமையில் இருந்ததோ அந்த நிலைமைதான் இன்றைக்கும் இருக்கிறது. சேலத்தில் இருக்கக்கூடிய இரும்புக் கனி பொருளானது எப்படி இருக்கிறது என்றால் அதில் 38 பர்சண்ட் இரும்பு ஓர் கன்டென்ட்ஸ் இருக்கிறது. பீகார் முதலிய இடங்களில் இருக்கிற இரும்பு 60—68 பர்சண்ட் இருக்கிறது. இப்படி குறைவாக இரும்பு சக்தியுள்ள கனி பொருளை இரும்பாக மாற்றவேண்டும் என்று சொன்னால் லோ ஷாப்ட் பர்னேஸ் மூலமாகத்தான் மாற்றமுடியும். அப்படி ஜெர்மனி போன்ற இடங்களில் செய்திருக்கிறார்கள். அப்படியே நாமும் செய்யலாமா என்ற அபிப்பிராயம் இருக்கிறது. இது சம்பந்தமாகத்தான் இப்பொழுதுகூட நம்முடைய மெட்டலர்ஜிகல் லெபாரட்டரியில் பரிசீலனையெல்லாம் நடந்துகொண்டு வருகிறது. ஜெர்மனிபோன்ற இடங்களில் குறைவான இரும்பு சத்து இருக்கக்கூடிய கனி பொருள்களிலிருந்து

[Sri R. Venkataraman] [3rd April 1958

இரும்பாக உபயோகிக்கப்படுத்திக்கொள்ளவதுபோல நம்முடைய நாட்டிலும் அப்படி பண்ண முடியுமா என்பதை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லாவற்றையும் வாய்க்கு வந்தபடி பேசுவதில் பயன் இல்லை. எல்லாவற்றையும் தீர ஆலோசித்து ஆராய்ந்து பார்த்துதான் முடிவுக்கு வரமுடியும். அப்படி ஒரு முடிவுக்கு வந்த பிறகுதான் அதைப்பற்றி சொல்லமுடியும். லோ ஷாப்ட் முறை வெற்றிகரமாக நடக்கும் என்று தோன்றினால் அந்தத் துறையில் நம்முடைய நாட்டில் ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

"பர்ட்டிலைசர்ஸைப்பற்றி" அதாவது உர உற்பத்தியைப்பற்றி பேசும்போது "பாரின் கிரெடிட்" கிடைக்குமா என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். அது கிடைத்தால் அதன் பிறகு அதை ஆரம்பிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு எவ்வளவு செலவு ஆகும் என்பது தெரியவில்லை. ஸ்கீம் சாங்ஷன் ஆகிவிட்டது. அந்நியச் செலாவணி நமக்கு எவ்வளவு சீக்கிரத்தில் கிடைக்கிறதோ அந்த அளவுக்கு சீக்கிரத்தில் அது ஆரம்பிக்கப்படும். அந்தக் கருத்தில்தான் அதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது.

நமக்கு என்று நீலகிரியில் ஒரு பிலிம் செய்கிற தொழிற்சாலையை வைப்பதாக ஒரு முடிவு செய்யப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே நம்முடைய ராஜ்யத்தில் இருக்கிற கைத்தொழில், பெரிய தொழில் முதலியவைகள் நன்றாக முன்னேறவேண்டுமென்றால் தனியார்கள் அதற்கு முன் வரவேண்டும். பெரிய முதலை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் சற்று இதில் கவனம் செலுத்தவேண்டும். அதிகப்படியாக முதல் வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்கள் இதைக் கேட்டு தங்களுடைய முதலை இதில் போடுவதற்கு முன் வரவேண்டும். வருமான வரிக்குப் போய்விடுமோ என்று பலர் நமது ராஜ்யத்தில் தொழிலில் தங்களுடைய சொத்தைப் போடாமல் இருக்கிறார்கள். அப்படி வரிக்காக அந்தப் பணம் போய் விடாது. பத்து அல்லது பதினைந்து வருஷங்களாக நடந்து வந்ததை சற்று ஒதுக்கி வைத்துவிட்டு இனிமேல் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அதிகப்படியான அக்கரை காட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் பெரிய சொத்துடையவர்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அம்மாதிரி வருகிறவர்களுக்கு என்ன உதவி தேவையோ அந்த உதவியைக் கொடுக்கவும் அரசாங்கம் தயாராக இருக்கிறது. நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழில் வளம் வேண்டியதாக இருக்கிறது. அப்படி வளம் பெறுவதற்கு தனியார் பங்கு கொள்ளவேண்டும். அப்படி அவர்கள் தொழிலை ஆரம்பித்து நாட்டின் ஏழ்மையைப் போக்க பங்குகொள்ளவேண்டும். ஆகவே இந்த அடிப்படையில் எவ்வளவு அதிகமாக ஏற்பாடு செய்ய வேண்டுமோ அவ்வளவு செய்யவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இந்த மானிய கோரிக்கையை எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தொழில் வளரவேண்டும் என்பதில் கட்சி பேதமும் அபிப்பிராய பேதமும் இருக்கமுடியாது. ஏதோ அபிப்பிராய பேதம் வருகிறது என்று சொன்னார்கள். சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை, அவர்களுக்கு திறமை இல்லை என்று சொல்லுகிறபோது தான், நாங்களும் சாதாரண மனிதர்களாக இருப்பதால்தான், சற்று கோபம் வந்துவிடுகிறது. மற்றபடி நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாக தொழில் வேண்டும் என்று சொல்வதில் மற்ற எந்தக் கட்சியையும் விட அதிகமாக சத்தம் போடுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** சேலத்திலுள்ள இரும்புக்கனியில் இரும்பு சத்து குறைவாக இருக்கிறது என்றும், அதை உபயோகப்படுத்தலாமா என்று ஜெர்மனி நிபுணர்களைக் கேட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டது. இப்பொழுது இரண்டு மூன்று வருஷங்களாகியும் அதைப்பற்றிய முடிவு என்னவென்பது தெரியவில்லை. இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன ? ஜெர்மன் நிபுணர் முடிவு சொல்வதற்கு முன் ரஷியாவிலுள்ள நிபுணர் இதைப்பற்றி ஆராய்ந்து சொல்வதாகவும், அதற்கு வேண்டிய உதவியும் செய்கிறோம் என்று சொல்லியும் இருக்கிறார்கள். அந்த இறையிலும் அதை எடுத்து நிறைவேற்றாமல் விட்டு விட்டதற்குக் காரணம் என்ன ?



3rd April 1958] [Sri K. Anbazhagan]

**The Hon. Sri R. VENKATARAMAN:** ரஷ்யாவினுடைய அபிப்பிராயம் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. நெய்வேலி நிலக்கரி சம்பந்தமாக அதன் முடிவு கிடைத்த பிறகுதான் அதை உருவாக்க முடியும். லோ பர்னேஸ் ஷாப்ட் ஸ்கீம் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. அதன் முடிவு தெரிய வேண்டியதாக இருக்கிறது. அந்த முறை வெற்றிகரமாக முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. பழுப்பு நிலக்கரி சம்பந்தமாக ஜெம்ஷெட்பூரில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதன் முடிவும் தெரிய வேண்டியதாக இருக்கிறது. ஜெர்மனியிலும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அது வெற்றிகரமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

DEPUTY SPEAKER : Is Mr. Kalyanasundaram pressing his cut motion?

**Sri M. KALYANASUNDARAM :** Yes, Sir.

DEPUTY SPEAKER : I shall then put it to vote. The question is—

"That the allotment of Rs. 5,00,42,300 under Demand XXI —Industries and Cinchona—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall put the Demand to vote. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,00,42,300 under Demand XXI—Industries and Cinchona."

The Demand was put and carried and the grant was made.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3-30 p.m. 1-31 p.m.

The House then rose for lunch.

**(After Lunch—3-32 p.m.)**

IV.—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS MATERNITY BENEFIT (AMENDMENT) BILL, 1958 (L.C. BILL 1 OF 1958).

**The Hon. Sri R. VENKATARAMAN :** இந்த மசோதாவில் வருகிற 'மிஸ்காரியேஜ்' போன்ற சில வார்த்தைகளுக்கு எனக்கு சரியாக தமிழ் தெரியாது. ஆகையால் ஆங்கிலத்தில் பேசலாம் என நினைக்கிறேன்.

Mr. SPEAKER : It will take more time for others to follow and understand it. If you find it difficult, my difficulty is magnified.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

"That the Madras Maternity Benefit (Amendment) Bill,* 1958 (L.C. Bill No. 1 of 1958), as passed by the Legislative Council, be taken into consideration".

The Madras Maternity Benefit Act, 1934, regulates the grant of maternity benefits to women workers in factories. Maternity benefit is paid at the rate of eight annas per day for the actual number of days of absence immediately preceding and following the confinement, subject to a maximum period of seven weeks. Separate provisions for maternity benefits for plantation women workers are made in the Madras Plantation Labour Rules.

The question of providing maternity benefit on an uniform scale throughout India and enacting special legislation for the purpose was discussed by a Committee of the Indian Labour Conference in January 1954. It was suggested that the Government of India might draw up minimum standards of maternity benefits and recommend them to the State Government for adoption either by enacting fresh legislation or by suitably amending the existing laws to the extent necessary. The above suggestion was accepted by the Government of India. Accordingly draft model minimum standards for maternity benefits were drawn up. The model standards were finalised after obtaining the opinion of the State Governments. The Government of India have suggested that the above recommendations may be implemented, either by enacting fresh legislation or by suitably amending the existing Act. Hence, the Bill to amend the Madras Maternity Benefits Act, 1934, has been brought before the House for consideration.

The principal changes made in the Bill are as follows :—

The Act is extended to such industrial establishments as the State Government may from time to time by notification specify. The Act at present applies to all the factories and it is now intended to be extended to Industrial Establishments which the State Government may from time to time notify. The most important change is that the rate of maternity benefit is increased from eight annas a day to 75 np. per day or 7/12th of the average daily wage, whichever is higher. The maximum period for which maternity benefit is payable has also been increased from 7 weeks to 12 weeks. In addition, the following other benefits are provided :

Hitherto no provision was made in regard to pre-natal and post-natal treatment. The Bill provides for lump-sum medical bonus of Rs. 10, except in cases where pre-natal and post-natal care are provided free of charge. The period of prohibition of employment following confinement has been increased from four to six weeks. Provision is made for leave with full wages for a period of

* Published in the *Fort St. George Gazette*, Extraordinary dated 15th February 1958, and passed by the Legislative Council at its meeting dated 8—3—1958.



three weeks in case of miscarriages. Provision has also been made for leave on account of illness due to pregnancy, confinement or premature birth of a child up to a maximum period of one month. The Bill provides for nursing breaks of 15 minutes for nursing mothers after a continuous period of work for three hours. Opportunity has also been taken to specify the mode of recovery of the benefits payable under the Act and for the appointment of inspectors for the enforcement of the provisions of this Act.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958), as passed by the Legislative Council be taken into consideration.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மெடர்னிடி பெனிபிட் சட்டத்தை திருத்துவதற்கான மசோதாவை கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த சந்தர்ப்பத்தில், அதற்காக வேண்டி. தொழில் அமைச்சர் அவர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அதே நேரத்தில் இதில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை எடுத்துச் சொல்லாமலும் இருக்க முடியாது. "அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது" என்று பல பெரிய யோகிகள் பாடி வைத்திருக்கிறார்கள். அப்பேற்பட்ட மனித சமுதாய அபிவிருத்திக்கு காரணஸ்தர்களாக இருக்கக்கூடிய பெண்கள், தாய் குலத்தைச் சேர்ந்தவர்கள், அடக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு பல இடங்களில் அடிமைகளாகக் கூட இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இம்மாதிரி சந்தர்ப்பத்தில்தான் "விமன் வெல்பெயர் சென்டர்ஸ்" போன்றவைகளை அமைத்து, அதற்கு வேண்டிய லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி, அவர்களின் முன்னேற்றத்திற்காக வேண்டி பல விதத்திலே இன்றைய தினம் அரசாங்கம் வேலை செய்து வருகிறது என்பது நமக்குத் தெரிந்த விஷயம். அமைச்சர் அவர்கள் "இதோ பாருங்கள், பெண்களுக்கு நாங்கள் எவ்வளவு உரிமை கொடுத்திருக்கிறோம், அவர்கள் 10, 12 பேர்கள் சட்டசபையில் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று சொல்லலாம். அதை நாம் வரவேற்கிறோம். சட்டசபை உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பெண்கள் இந்த மசோதாவின் பேரிலே எந்த அளவுக்கு வாதாடப்போகிறார்கள், போராடப்போகிறார்கள் அவர்களுடைய இனத்தைச் சேர்ந்தவர்களுடைய உரிமைகளுக்காக வேண்டி, இந்த மசோதாவின் விவாதத்திலே அவர்கள் கலந்து கொள்ளப்போகிறார்களா, இல்லையா என்பதையும் பார்க்கப்போகிறோம்.

இந்த மசோதாவிலே பெண் தொழிலாளர்களுக்கு மெடர்னிடி பெனிபிட்டாக 12 வாரங்களுக்கு சம்பளத்துடன் லீவு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நாள் ஒன்றுக்கு 12 அணா சம்பளம் என்று கண்டிருப்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இப்பொழுது தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருக்கும் தொழிலாளர்கள் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்திற்கு ஏற்றபடி சம்பளம் போதவில்லை என்ற காரணத்திற்காக வேண்டி, சம்பள உயர்வு வேண்டும் என்று ஒரு பக்கத்திலே போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு தெரிந்த விஷயம். இந்த சந்தர்ப்பத்திலே பெண்களின் பிரசவ காலத்தில் அவர்களுக்கு கொடுக்கக்கூடிய லீவு சம்பளம் மூன்று மாதத்திற்கு நாள் ஒன்றுக்கு 12 அணா என்றால், இன்றைக்கு அவர்கள் தொழிற்சாலையில் ஒரு மாதத்திற்கு வாங்கும் சம்பளம் கூட கிடையாது. பிரசவ காலத்தில்தான் அவர்களுக்கு செலவு அதிகமாக ஆகும் என்பது சபாநாயகர் அவர்கள் டாக்டராக இருப்பதால், அவருக்கும் தெரிந்த விஷயம். ஆகவே இதற்காக வேண்டி அவரும்கூட பரிந்து பேசுவார், இதை ஒப்புக்கொள்ளுவார் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

MR. SPEAKER : அங்கத்தினர்களுக்கு தெரியவேண்டும். சபாநாயகருக்கு தெரியவேண்டிய அவசியமில்லை.

[3rd April 1958

SRI V. K. KOTHANDARAMAN: டாக்டர் என்ற முறையில்
சொன்னேனே தவிர, சபாநாயகர் என்ற முறையில் அல்ல.

MR. SPEAKER: ஆனால் நான் வாதாட முடியாதே ?

3-46 p.m. SRI V. K. KOTHANDARAMAN: மூன்று மாதங்களுக்கு அவர்
களுக்கு தினம் ஒன்றுக்கு 12 அணு கொடுப்பதற்கு பதிலாக எந்த அள
விற்கு அவர்கள் சம்பளமும் பஞ்சப்படியையும் சேர்த்து வாங்குகிறார்களோ,
அந்த சம்பளத்தை அப்படியே கொடுக்கவேண்டும். கஷ்டமான பிரசவ
காலத்திலே அதிகப்படியான செலவு இருக்கக்கூடிய காலத்திலே மேலும்
அதிகப்படியாக அவர்களுக்கு இரட்டிப்பான சம்பளம் கொடுக்கவில்லை
என்று சொன்னாலும், அந்தக் காலத்தில் அவர்கள் பெறக்கூடிய சம்பளம்
முழுவதையும் கொடுப்பதன் மூலம்தான் அவர்களுக்கு உண்மையான
உதவி அளிக்க முடியும். அந்த நேரத்திலே அவர்கள் நல்ல உணவு
சாப்பிடுவதன் மூலமாகத்தான் அவர்களுக்கு பிறக்கக்கூடிய குழந்தை
களும் நல்ல திடகாத்திரர்களாக இருக்க முடியும். அப்படியின்றி உடல்
நலம் குன்றியிருக்குமேயானால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தை
களும் தேவாங்குகளாகத்தான், பலஹீனர்களாகத்தான், இருக்கும்.
ஆகவே தயவு செய்து, அவர்கள் எவ்வளவு சம்பளம் பஞ்சப்படி வாங்கு
கிறார்களோ அவ்வளவு ரூபாய்க்கு இந்தத் தொகையை உயர்த்த வேண்டு
மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கனம் அமைச்சர் " இப்போது
8 அணு தானே கொடுக்கப்படுகிறது ? பன்னிரண்டு அணுவிற்கு நாங்கள்
உயர்த்தியிருக்கிறோமே!" என்று ஒரு வேளை சொல்லலாம். பன்னிரண்டு
வருஷங்களுக்கு முன்பே தென்னிந்திய மில்ஸ் அஸோஸியேஷன் சார்பில்
கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க இந்த லீவ் காலத்தில் நாள்
ஒன்றுக்கு ரூ. 1-11-6 சம்பளம் சில மில்களில் கொடுக்கப்படுகிறது.
மேலும் கோயமுத்தூர், மதுரை போன்ற இடங்களில் இன்ஷுயூரன்ஸ
திட்டம் இருப்பதால், அங்குள்ள தொழிலாளர்களுக்கு இந்த லீவ் காலத்
தில் இப்போது அதிகமான சம்பளம் கொடுக்கப்படுகிறது. மேலும், அங்
கெல்லாம் நகரசுத்தித் தொழிலாளர்கள் போன்றவர்களுக்கு முழுச்
சம்பளத்துடன் மெடர்ணிடி லீவ் கொடுக்கப்படுகிறது. ஆகவே சட்டத்
திற்குத் திருத்தம் செய்யும் இந்த வேளையில் இந்தத் தொகையை முழுச்
சம்பளமாக ஆக்கினேமேயானால்தான் நாம் தாய்க் குலத்திற்கு நன்மை
செய்தவர்கள் ஆவோம். கனம் அமைச்சர் " 8 அணுவாக இந்த
தொகையை நிர்ணயித்திருக்கும்போதே பெண்களை வேலைக்கு அமர்த்திக்
கொள்வதற்கு முதலாளிகள் தயங்குகிறார்கள். அவர்கள் மிகக் குறை
வான பெண்களையே வேலைக்கு அமர்த்திக்கொள்கிறார்கள். இந்தத்
தொகையை உயர்த்தினால் பெண்களை அவர்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்
ளவே மாட்டார்கள்." என்று சொல்லக்கூடும். நான் சொல்கிறேன்.
" இதே மசோதாவில் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கண்டிப்பாக
குறைந்த பட்சம் 25 சத விகிதம் ஸ்தானங்களுக்கு பெண்களை வேலைக்கு
அமர்த்திக்கொள்ள வேண்டுமென்று விதி வகுக்கவேண்டும். அவ்வாறு
செய்தால்தான் முதலாளிகள் பெண்களை வேலையிலிருந்து நீக்கமாட்டார
கள்: பெண் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வார்கள் ."
ஆகவே இப்படிப்பட்ட ஒரு திருத்தத்தையும் மசோதாவில் சேர்க்க
வேண்டும். மேலும் லீவ் காலம் மசோதாவில் எவ்வாறு நிர்ணயிக்கப்
பட்டிருக்கிறது ? பிரசவ காலத்திற்கு முன்பு 6 வாரங்களும் பின்பு
6 வாரங்களும் லீவ் கொடுக்க வேண்டுமென்று மசோதாவில் கூறப்பட்டி
ருக்கிறது. இந்தக் காலத்தில் லீவ் எடுத்தால் ஊதியம் மிகவும் குறை
யும் என்பதால் பிரசவ தினத்திற்கு மிக சமீப தினம் வரையில் பெண்
தொழிலாளர்கள் வேலை செய்யும் நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே
அவர்கள் சாதாரணமாக எவ்வளவு சம்பளம் வாங்குகிறார்களோ அவ்
வளவு பணத்தை லீவ் காலத்திலும் சம்பளமாக கொடுக்க வேண்டும்.
'அபார்ஷன்' ஏற்பட்டாலோ, 6—7 மாதங்களில் பிரசவமாகிவிட்டாலோ,
அப்போது கொடுக்கப்பட வேண்டிய லீவ் காலம் மூன்று வாரங்களாக
நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அபார்ஷன்தான் மிகவும் கஷ்டத்தைக்
கொடுப்பது. அபார்ஷன் ஏற்பட்டவர்களுக்குத் தான் ஜன்னி பிடித்து
விடக்கூடிய அபாயங்கள் இருக்கின்றன. இதை நாம் பலயிடங்களில்



3rd April 1958] [Sri V. K. Kothandaraman]

பார்க்கிறோம். அவர்கள் பல விதத்தில் நோய் வாய்ப்படுகிறார்கள். ஆகவே
அவர்களுக்கும் 12 வார லீவ் கொடுக்க வேண்டுமென்று விதிக்க வேண்டும்.
பிரசவ கால லீவ் காலத்தில் எல்லாப் பெண்களுக்கும் அபார்ஷனாக
இருந்தாலும் சரி, நல்ல பிரசவமாக இருந்தாலும் சரி, முழுச் சம்பளம்
கொடுக்க வேண்டும். பிரசவ காலத்திற்கு முன்பு 6 வாரங்களும் பின்பு
6 வாரங்களும் என்று லீவ் நிர்ணயிக்கப்பட்டிருப்பதுடன், அது பல
நிபந்தனைகளுக்கும் உட்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிபந்தனைகளை நீக்க 3-46 p.m.
வேண்டும். எந்த விதமான பிரசவமானாலும் 12 வார லீவ் கொடுத்துவிட
வேண்டுமென்று விதிக்கவேண்டும். மேலும் அலவன்ஸை முழு அல
வன்ஸாக கொடுக்க வேண்டும்; 10 ரூபாய் கொடுக்க வேண்டும்.
இந்த மசோதாவை இன்னும் நன்றாகப் பரிசீலித்து நல்ல திருத்தங்களை
இதற்குக் கொண்டு வருவதற்காக இதை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்
பினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு
என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Sri K. Sattanatha Karayalar has given notice of an amendment. Is the hon. Member pressing his amendment? If so, I have no objection.

SRI K. SATTANATHA KARAYALAR: Sir, I am moving the amendment. I beg to move—

"That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958) be referred to a Select Committee".

SRI M. JAGANNATHAN: I second it, Sir.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958) be referred to a Select Committee."

The motion and the amendment are before the House for discussion.

SRI T. S. RAMASWAMY PILLAI: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
மசோதாவைக் கொண்டுவந்திருக்கும் கனம் தொழில் அமைச்சரை
பாராட்டுகிறேன். இந்த மசோதாவின் வருகை ரொம்ப காலமாகவே எதிர்
பார்க்கப்பட்டு வந்தது. பல தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழி
லாளர்கள் பலவிதமாக நடத்தப்பட்டு வருகிறார்கள். தொழிலாளர்களின்
பிரச்னைகளை நன்குணர்ந்திருக்கும் கனம் தொழில் அமைச்சர் மசோதாவை
நன்றாகத் தயாரித்திருக்கிறார்கள். இந்தியா முழுவதிலும் எல்லா இடங்
களிலும் பெண் தொழிலாளர்களுக்கு இன்றியமையாத தேவைகளாக
இருக்கும் சில சௌகரியங்களை கொடுக்க வேண்டுமென்ற எண்ணம்
கொண்ட கனம் அமைச்சர் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை
நான் பாராட்டுகிறேன். இந்தியாவிலேயே தொழிலாளர்களுக்கு தலைமை
தாங்கி தொழிலாளர்களின் இயக்கங்களைத் திறம்பட நடத்தியிருக்கும் கனம்
அமைச்சர் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது குறித்து மிகவும்
பெருமைப்படுகிறோம். இந்த மசோதாவைப் பரிசீலிக்கும்போது, மெடர்
ணிடி லீவ் காலம் நிர்ணயிப்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தார்
கொஞ்சம் தாராளமாக இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. லீவ்
காலத்தில் கொடுக்கப்படவேண்டிய சம்பளத்தை நிர்ணயிக்கும் விஷ
யத்திலும் கொஞ்சம் தாராளமாக இருந்திருக்கலாம். அந்தத்
தொகையை 75 நயா பைசாவாக அரசாங்கத்தார் நிர்ணயித்திருக்கிறார்கள்.
இதை ஒரு ரூபாயாக ஏன் நிர்ணயிக்கக்கூடாது என்று கேட்க விரும்பு
கிறேன். எனக்கு முன் பேசிய ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் கூட, இப்
போது சில மில்களில் இது ஒரு ரூபாய்க்கும் அதிகமாகக் கொடுக்கப்படுவதாகத்

[Sri T. S. Ramaswamy Pillai] [3rd April 1958

தெரிவித்தார்கள். அப்படி இருக்கும்போது, இதை ஒரு ரூபாயாக
ஏன் நிர்ணயிக்கக்கூடாது ? இதை ஒரு ரூபாயாக நிர்ணயிக்கவேண்டும்.
மேலும் பெண் தொழிலாளர்கள் மற்ற நாட்களில் தினசரி எவ்வளவு
சம்பளம் வாங்குகிறார்களோ அந்தச் சம்பளத்தையே பிரசவ லீவ் காலத்
திலும் கொடுக்க வேண்டுமென்று நிர்ணயிக்க வேண்டும். பிரசவத்திற்குப்
பிறகும், 'மிஸ்காரியேஜ்'-க்குப் பிறகும் குறைந்தபட்சம் 45 நாட்களுக்கு
லீவ் கொடுக்க வேண்டும். மேலும், பிரசவத்தில் இறந்துவிட்டால் அந்தத்
தொழிலாளிக்கு, அவள் உயிருடன் இருந்த நாள் வரைக்கும்தான் சலு
கைகள் கொடுக்கப்படும். இந்தச் சலுகைகள் சாதாரணமான சந்தர்ப்பங்
களில் உயர்ந்த பட்சமாக எவ்வளவு கொடுக்கப்பட வேண்டுமோ, அவ்
வளவே இறந்துவிட்ட போதும் கொடுக்கப்பட வேண்டுமென்று விதிக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்கு ஒரு நம்பிக்கை
இருக்கிறது. அதாவது, தொழிலாளர்களின் நலன்களுக்கு அனுகுண
மாக இருப்பதில், கனம் அமைச்சர் எங்களைவிட பின்தங்கியவர் அல்ல
என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. கனம் அமைச்சர் "நாங்கள் சில
திருத்தங்கள் கொண்டு வருகிறோம். சில திருத்தங்களை நீங்கள் கொண்டு
வருவதற்கும் இடம் கொடுக்கவேண்டாமா ? ஆகவேதான் அவைகளை
நாங்கள் விட்டு வைத்திருக்கிறோம்" என்று சொல்வது வழக்கம். நான்
இப்போது கோரிய திருத்தங்களையும் கனம் அமைச்சர் அதே மாதிரி பாவிப்பார்
என்று நம்புகிறேன். பிரசவ காலத்தில் கொடுக்கப்பட வேண்டிய லீவ்
காலத்தையும் லீவ் கால சம்பளத்தையும் அதிகரிக்க வேண்டும். எல்லாத்
தொழில்களுக்கும் இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். இந்தியா முழுவ
திலும் இந்தச் சலுகைகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். இந்தச்
சலுகைகளை தொழிலாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று விதிக்கும்
விஷயத்தில், சில தொழிற்சாலைகளை ஒரு விதமாகவும் மற்ற தொழிற்சாலை
களை வேறுவிதமாகவும் சர்க்கார் நடத்தக் கூடாது. எந்தத் தொழிற்
சாலைக்கும் விதிவிலக்கு அளிக்கக்கூடாது. இந்த ராஜ்யத்தில் எல்லாத்
தொழிற்சாலைகளிலும் இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவர வேண்டு
மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

3-50 p.m. இதிலே ஒன்றே ஒன்று மட்டிலும் நாம் கவனிக்க வேண்டும். இந்த
சௌகரியங்களைக் கொடுப்பதால் ஒருவேளை முதலாளிகள் பெண் தொழி
லாளிகளை வேலைக்கு எடுத்துக் கொள்ளமாட்டார்களோ என்ற பயம் இருப்
பதாக மெம்பர் ஒருவர் குறிப்பிட்டதை நான் மீண்டும் குறிப்பிட விரும்பு
கிறேன். பஞ்சாலையில் வேலை செய்யும்போது ஒரு சில பிரிவுகளிலே
நிச்சயமாக ஆண் தொழிலாளிகளைவிட பெண் தொழிலாளிகள் அதிகமாக
வேலை செய்ய முடியும். ஆகையால், நிச்சயமாக பெண் தொழிலாளி
களுக்குக் கொடுக்கக்கூடிய வேலை எந்த அளவும் பாதிக்கப்படாது என்ற
கருத்தைப் பரிசீலனை செய்யவேண்டும். அதுபற்றிய திருத்தங்கள் வரும்
போது அவற்றை அனுதாபக் கண்களோடு நிச்சயமாக தொழில் அமைச்சர்
அவர்கள் பார்ப்பார்கள் என்றும், அனுகுணமான முறையில் திருத்தத்தை
ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையோடும் என்னுடைய வார்த்தை
தையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI J. MATHA GOWDER** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த
மசோதாவைக் கொண்டு வந்த தொழிலமைச்சரை நான் மிகவும் பாராட்டு
கிறேன். அதே நேரத்தில் ஒன்றை மாத்திரம் குறிப்பிட விரும்புகிறேன்.
இதிலே பிரசவத்திற்கு முன்பும் பிரசவத்திற்குப் பின்பும் இவ்வளவு
வாரம்தான் அவர்களுக்கு விடுமுறை கிடைக்குமென்று வரையறுக்கப்பட்
டிருக்கிறது. அனுபவ ரீதியில் ப்ளாண்டேஷன் லேபரிடத்திலே நான்
பார்த்திருக்கிறேன். தொழிலாளத் தாய்மார்களுக்கு பிரசவம்
எப்பொழுது ஏற்படும் என்று அவர்களுக்குத் தெரியாது. பாக்டரிகளிலோ
அல்லது வேறு துறையிலோ இருக்கக்கூடிய முதலாளிகள் சொந்தமாக
டாக்டர்கள் ஏற்படுத்தி யிருப்பார்கள். பிரசவம் எப்பொழுது, எந்த மாதத்
தில் ஏற்படக்கூடும் என்று அந்த டாக்டர்களும் கூட நிச்சயமாகச் சொல்வ
தில்லை. பத்தாவது மாதம் எப்பொழுது வருகிறது என்று தெரியாத
நிலையில், அவர்கள் எட்டு, ஒன்பது மாதம் என்று நினைத்துக்கொண்



3rd April 1958] [Sri J. Matha Gowder]

டிருந்து வேலைக்குப் போய்க்கொண்டிருப்பார்கள். சாதாரணமாக வேலைக்
குப் போய்க் கொண்டிருக்கும் போதுகூட அவர்களுக்கு பிரசவம் ஏற்பட்டு
விடுகிறது. இதனால் பிரசவத்திற்கு முன்பு அவர்களுக்குக் கொடுக்கப்படக்
கூடிய விடுமுறை முதலியவைகள் அவர்களுக்கு மறுத்துவிடுகிறார்கள்.
பிரசவத்திற்கு பிறகு நான்கு வாரங்களுக்கு மாத்திரம் அலவன்ஸ் கொடுக்
கிறார்கள். ஆகையால், அந்த விதமாக நாம் 12 வாரங்களுக்கு அலவன்ஸ்
கொடுக்கவேண்டுமென்று சட்டம் இயற்றும்போது, முன்பு 'பின்பு' என்று
வித்தியாசம் பாராட்டுவது அவ்வளவு பொருத்தம் இல்லாமல் இருக்கிறது.
நான் அனுபவபூர்வமாகச் சொல்கிறேன். தோட்டத் தொழிலாளிகள்
இருக்கிறார்கள். எப்பொழுதுதான் குழந்தை பிறக்கும் என்று அவர்
களுக்கே தெரியாத நிலையில் வேலை செய்துகொண்டேயிருந்து, இரண்டு.
மூன்று நாட்களுக்குள்ளேயே பிரசவம் செய்துவிடுகிறார்கள். முதலில்
இருக்கும் பிரசவ அலவன்ஸ் கிடைப்பதில்லை. பிற்பாடு கிடைக்கிறது. மெடி
கல் சர்டிபிகேட் வாங்கவில்லை என்பதனால் டாக்டரிடத்தில் காண்பிக்கப்
படுகிறார்கள், இப்படியெல்லாம் தகராறு செய்கிறார்கள். பிரசவத்திற்கு
முன்னால் அவர்கள் டாக்டரிடத்தில் அடிக்கடி போய்ச் சொல்வது இல்லை.
'எனக்கு எத்தனை மாதம் ஆயிருக்கிறது ?' என்று டாக்டரிடம் போய்
வெளிப்படையாகக் கேட்பதற்கு கூச்சப்பட்டுக் கொண்டு, அவர்கள் மறைத்து
விடுகிறார்கள். பிரவசவத்திற்குப் பிறகு அவர்கள் மெட்டர்னிடி பெனிபிட்
கேட்கும்போது முதலாளிகள் தகராறு செய்கிறார்கள். ஆகவே, 12 வாரம்
என்றால், பிரசவம் ஆவதற்கு முன்பும் பின்பும் என்பதை மாற்றி 12
வாரங்கள் பிரசவ அலவன்ஸ் கொடுப்பதற்கு நிச்சயமாக உத்தரவு போட
வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால்
சிக்கல் அதிகமாக ஏற்பட்டுக் கொண்டு போகிறது. முதலாளிகளுடைய
டாக்டரிடத்தில் போய் சர்டிபிகேட் வாங்க வேண்டுமென்று இருப்பதால்,
அது கடினமான காரியமாக இருக்கிறது.

இதிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரசவம் ஏற்பட்ட பிறகு
அவர்களுக்கு உடம்பு சௌகரியம் இல்லை யென்றால் மூன்று வார விடு
முறை அவர்களுக்கு கூலியோடு கொடுக்கிறார்கள். உடம்பு சுகம் இல்லா
மல் இருந்ததென்று அவர்கள் 'ப்ரூப்' காண்பிக்க வேண்டும். அதற்
காக அவர்கள் மெடிகல் சர்டிபிகேட் 'ப்ரட்யூஸ்' செய்து 'ப்ரூவ்' செய்ய
வேண்டி யிருக்கிறது. அந்த மெடிகல் சர்டிபிகேட்டை யாரிடம் வாங்க
வேண்டுமென்றால் முதலாளிகள் நியமித்திருக்கும் டாக்டரிடத்தில் வாங்க
வேண்டும். அதற்காக அவர்களிடம் தொழிலாளிகள் போய்க் கேட்கும்
போது அவர்கள் நிச்சயமாக அப்படிப்பட்ட சர்டிபிகேட்கள் தருவதே இல்லை.
பிரசவத்திற்குப் பிறகு கூட, அதாவது பிரசவம் ஆனவுடனே கூட, தேகம்
சரியாக இருக்கிறதென்று சர்டிபிகேட் கொடுக்கிறார்களே தவிர, 'உடம்பு
சரி இல்லை' என்று சர்டிபிகேட் கொடுப்பதில்லை. 'உடம்பு சரியாக இருக்
கிறது, வேலைக்குப் போகலாம்! என்று அந்த டாக்டர்கள் சர்டிபிகேட்
கொடுத்து விடுகிறார்கள். முதலாளிகளுடைய டாக்டர்கள் 'உடம்பு சரி
யில்லை' என்று சர்டிபிகேட் கொடுக்காவிட்டால், அதற்கு மேற்கொண்டு
ஜில்லா மெடிகல் ஆபீசரிடம் போய் சர்டிபிகேட் வாங்கி, அதை 'ப்ரொட்
யூஸ்' செய்தால் தான் சம்பளம் கொடுக்கிறான். ஆகையால், நாம் என்ன
செய்யவேண்டுமென்றால், பிரசவத்திற்கு பிறகு அவர்களுக்கு உடம்பு சரி
யில்லை, அவர்களுக்கு ஏதாவது வியாதி கண்டிருக்கிறது என்றால், அவர்
கள் முதலாளிகளுடைய டாக்டரிடம்தான் காண்பிக்கவேண்டும் என்று
நிபந்தனை இருப்பதை மாற்றி, எந்த டாக்டரிடத்திலாவது காண்பித்து
சர்டிபிகேட் வாங்கி அதை 'ப்ரட்யூஸ்' செய்தாலும், அதையும் ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று முதலாளிக்கு உத்தரவு போடவேண்டும். முத
லாளிகள் தங்களுடைய சொந்த டாக்டரிடத்தில்தான் காண்பிக்க வேண்டு
மென்று சொல்கிறார்கள். அவர்கள் சர்டிபிகேட் கொடுக்க மறுத்தால்
தான், அதன் பிறகு ஜில்லா மெடிகல் ஆபீசரிடம் அப்பீல் செய்துகொள்ள
வேண்டும். ஜில்லா மெடிகல் ஆபீசரிடம் போகும்போது, இரண்டு மூன்று
வாரங்கள் கழிந்துவிடுகின்றன. அதற்குள் உடம்பும் சரியாய் விடுகிறது.
பணமும் போய்விடுகிறது. இப்படியெல்லாம் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே,
பிரசவத்திற்குப் பிறகு உடம்பு சரியில்லையென்றால்—எல்லா டாக்டர்களும்

[Sri J. Matha Gowder] [3rd April 1958

தான் தங்களைப் பதிவு செய்துகொண்டிருக்கிறுர்கள் ஆதலால்,—அவர்கள் எந்த டாக்டரிடமாவது சர்டிபிகேட் வாங்கி ப்ரட்யூஸ் செய்து விட்டால் மூன்று வாரம் லீவ் கொடுத்துவிடவேண்டும் என்று இதைத் திருத்திலுைம் வேறு விதிகளை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திலுைம் நல்லது என்று நான் நினைக்கிறேன்.

இம்மாதிரி காலங்களில் 12 அணு, அதாவது 75 நயா பைசேதான் மலைப் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் குறைவான தொகையாகும். 12 அணுவில் மலைப் பிரதேசத்தில் உள்ளவர்கள் எந்த விதமாக ஜீவனம் செய்ய முடியும் ? உடம்பு நன்ருக இருக்கும்போது ஒரு பெண் தொழிலாளிக்கு ரூபாய் 1-5-0 கூலி இடைக்கிறதென்ருல், பிரசவத்திற்குப் பிறகு உடம்பு சரியில்லாமல் படுத்துக் கொண்டிருக்கும்போது 12 அணு கொடுத்தால் மருந்து வாங்குவதற்குக் கூட பணம் இல்லாமல் போய்விடுகிறது. பத்து ரூபாய் பிற்பாடு கொடுக்கலாம் என்று இருக்கிறது. 75 நயா பைசே என்று இருப்பதை ஒரு ரூபாய் என்று போட்டாலும் பரவாயில்லை. ஒரு ரூபாய் என்று போட்டால், முதலாளிகள் எந்த விதத்திலும் கெட்டுவிடமாட்டார்கள். தாராளமாகக் கொடுக்கலாம். ஒரு ரூபாய் வீதம் இப்படிப்பட்ட சமயங்களில் கொடுக்கும்படி முதலாளிகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ப்ளாண்டேஷன் சட்டத்தின்படி இப்பொழுது ரூபாய் 63 கொடுக்கிருர்கள். ஆனல், சரியானபடி கூலியை இப்பொழுது நாம் அதிகப்படி கூலி நிர்ணயம் ஏற்படுத்திய பிறகு 75 நயா பைசே என்று கணக்கிட்டால் 73·50 நயா பைசே வருகிறது. ஆனல், 63 ரூபாய் தான் பழைய கணக்கு வைத்துக் கொண்டு கொடுத்துக் கொண்டு தொழிலாளிகளை ஏமாற்றிக் கொண்டு வருகிருர்கள். தொழிலாளிகளுக்கு விவரம் தெரியாது. தொழிற் சங்கத் தலைவர் சொல்லி, எவ்வளவு கொடுத்தார் என்று தெரிந்து, அதற்குப் பிறகு கால்குலேஷன் செய்து கொடுத்தால் தான் அவர்களுக்குத் தெரியுமே தவிர, அவர்களுக்காகவே தெரியாது. 63-ஐ வாங்கிக்கொண்டே இருக்கிருர்கள். 73·50 கொடுக்க வேண்டியதற்கு 63 ரூபாய் கொடுத்துவிட்டு, முதலாளிகள் பாக்கியை இல்லையென்று சொல்கிருர்கள் என்று நேற்று லேபர் கமிஷனரிடம் ரிப்போர்ட் செய்திருக்கிறேன். தொழிலாளிகளுக்கு பெரும்பாலும் கல்வி அறிவு இல்லாததால் அவர்களை முதலாளிகள் ஏமாற்றிவிடுகிருர்கள். ஆகையால், அவர்களுக்கு 75 நயா பைசே என்று இருப்பதை ஒரு பு ழூரூபாய் வீதம் 12 வாரங்களுக்கு கொடுத்துவிட வேண்டுமென்று சட்டத்தை மாற்றினல் நல்லது என்று என்னுடைய யோசனையைச் சொல்லிக் கொண்டு வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

* Sri T. T. DANIEL : Sir, this is a very glorious Bill. The object of this Bill seems to be to render relief to the women workers working in factories and industrial establishments. I would suggest that the scope of the Bill be enlarged so as to bring all women workers. According to the Bill as it now stands women workers are entitled to leave with full wages for a period of three weeks in cases of miscarriage. I do not know why such a concession should not be given for the women workers after confinement. Whereas in the case of miscarriage, the women workers are entitled to leave with full wages, in the case of confinement, they are entitled to have only 75 nP a day or 7/12 of their average daily wage, I would suggest that there should not be any difference between miscarriage and also the period after confinement.

Then another thing is that in the case of miscarriage, the provision is that women workers are entitled to leave without wages for a maximum period of one month. So, they are entitled



3rd April 1958] [Sri T. T. Daniel]

to leave for one month, but they will not be getting any wage at all for the leave period. That also should be taken into consideration and the concession which the Government give for the ordinary period of six weeks after confinement should be given for one month in the case of leave taken for miscarriage.

The women workers are entitled to the full benefits only if 4 p.m.
they satisfy certain conditions. The provision in the Bill says : ' Provided further that a woman worker shall not be entitled to maternity benefit unless she has entered the service under the employer from whom she claims maternity benefit not later than thirty-five weeks immediately before the week in which the confinement takes place or immediately preceding the date on which she gives notice under sub-section (1) of section 6, whichever is earlier '. That is the condition imposed, namely that the woman workers should have worked for a certain period under the employer from whom she claims maternity benefit. In the principal Act only 240 days alone is prescribed. Now the period has been extended to 35 weeks. I hope the Hon. Minister in charge of the Bill will give the reason why this period has been extended.

**Sri S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருப்பதற்காக நான் தொழில் மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன். பாராட்டுவது மட்டுமல்ல. பிரசவ காலத்தில் பெண் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்கிற மசோதாவை அதுபற்றிய வேதனைகளை எல்லாம் நன்கு அறிந்த ஒரு பெண் அமைச்சர் கொண்டு வந்திருப்பார்களேயானல் மிகவும் நன்ருக இருந் திருக்கும். அதன் உண்மை விளைவுகள் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். இன்னும் அதிகமாக வேஜஸ் கொடுக்க வேண்டும் என்பதாகச் செய்திருப் பார்கள். மற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் சொன்னது போல நானும் சொல்ல ஆசைப்படுகிறேன், 75 நையா பைசா என்பது மிகமிக குறைவான ஊதியம். அதோடு மெடிகல் போனஸ் 10 என்று கொடுக்கப்பட்டிருப்பது போதாது. அதை 50 ரூபாயாக கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கடுத்தபடியாக மூன்று வாரம் முழுச் சம்பளம், ஒரு மாதம் சம்பளம் இல்லாமல் என்று இருக்கிறது. அதை அரைச் சம்பளம் கொடுக்க வேண்டும் என்ருவது செய்ய வேண்டுமென்ப தாகக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த 75 நையா பைசே என்று இருப்பதை அதிகப்படுத்த வேண்டும் என்பதாகவும் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் முதலாளிகள் இதை எதிர்த்தாலும் சொல்லலாம் எங்கள் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகிருர்களய்யா. நீங்கள் கவலைப்படவேண் டாம், ஒருவருக்கு இரண்டு குழந்தைகளுக்கு மேல் உண்டாகாது, ஆகவே இந்த இரண்டு குழந்தைகளை அவர்கள் பெற்றெடுத்துக் கொள்ளும் காலத் திலாவது இந்த வசதிகளையெல்லாம் கொடுக்கவேண்டும் என்பதை வற் புறுத்த வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* Sri M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, I rise to welcome this Bill because I feel that it is a very beneficial legislation which is a social legislation and a labour legislation at that. For this reason I would like to congratulate the Hon. Minister for Industries on having brought before this Assembly this piece of beneficial legislation. The Hon. Minister who is in charge of the Bill is eminently fitted and very well-equipped for the task that he has undertaken namely to bring in a labour legislation a social

[Sri M. Jagannathan] [3rd April 1958

legislation of this type which aims at bettering the conditions of women workers employed in factories and industrial establishments in our State.

While I say all this I would also like to take a peep into the history of this legislation. If my memory serves me aright I think it is the Whitley Commission which came to India that studied first the labour conditions obtaining in our country. Followed by that the Royal Commission on Labour visited India in the year 1931 or 1932. They toured the entire country and studied the conditions of labour and made several salutory recommendations with a view to improve the conditions of workers employed in factories and industrial establishments in the country as a whole. In pursuance of the recommendations of the Royal Commission on Labour the Government of India and particularly the Madras Government at that time came forward with a legislation like this and that was ably discussed in the then Legislative Council and passed without many amendments.

This Royal Commission on Labour which came to India witnessed several appalling conditions and circumstances under which the women workers were employed in the various factories and industrial establishments in the country at that time. Those were days when the poor women workers were exposed to all sorts of difficulties and risks and uncertainties and they had to bear them all in the course of their employment which affected their health and income. In those days women workers were employed in factories and industrial establishments in spite of the fact that they were pregnant. During the pre-natal and post-natal periods they were compelled to work. This was very injurious to their health. In order to improve their conditions the Royal Commission on Labour recommended these and the Bill which was framed then embodying those recommendations conferred certain benefits to those poor women workers. These poor people to eke out their daily bread were compelled to work in the factories and industrial establishments and this is a fact which we must all sympathize with. Unlike women belonging to the richer sections of the society these people are forced to do such hard work on account of their dire poverty and need to earn a livelihood to keep their body and soul together. That is something very deplorable and I think this Government which swears by the establishment of a Socialistic pattern of society by gradual steps has certainly taken a step in the right direction. Therefore I welcome this Bill.

In doing so I would like to point out one or two pitfalls one or two irregularities that this Bill contains. One adverse effect of this Bill I am afraid will be to discourage some of the employers from employing women workers, they may even shut out or exclude women workers, because they might be annoyed at the Government conferring so many benefits on the workers and interfering in the management of their factories. Some of the employers were willing to take these women workers because they had to pay only less wages. Hereafter they may not be enthusiastic in



3rd April 1958] [Sri M. Jagannathan]

employing them because Government have brought this kind of legislation. Hereafter they will have to pay more in terms of money to the women workers and they will have also to make themselves answerable to the Inspectors of Factories.

Therefore, this is an inherent difficulty which the Government should be aware of. I suggest that the Government should come forward with all possible steps to guard against this sort of difficulty in the matter of employment of women workers. The Hon. Minister, who was an experienced trade unionist, would be aware of this and I hope he will give due consideration to this point. 4-10 p.m.

The so-called increased benefits which this Bill seeks to confer on the women workers are not substantial in point of wages, leave facilities, etc. If the Government are really sincere about conferring greater benefits on the women workers with a view to improving their condition, the Government should examine some of the amendments given notice of by the Opposition parties in particular, besides the amendments given notice of by those on the other side. Womenfolk are in a peculiar position when compared to men. There is a biological difference between men and women, in the matter of child birth. Women are suffering from this biological handicap. And so they must certainly stand on a different footing. The Government therefore must come forward to provide them greater benefits so that these may go a long way in alleviating their sufferings. I hope the Government will really bestow their thought on some of these amendments and be magnanimous enough to accept them. These will certainly tend to improve their condition of work in factories and industrial establishments. When women are in a state of pregnancy they need more money to spend on their treatment. They have to pay doctors and nurses. So there must be an opportunity provided for them to get increased wages during pregnancy so that they may be able to take care of their health. Only then we can expect poor women to be in a position to safeguard their health. The Government must in all sincerity come forward to provide increased benefits for women workers in all these respects.

I once again appeal to the Government to provide substantial benefits to women workers so that this legislation may not be a mere paper legislation and an eye-wash but a real boon to women workers. I hope the Government will translate all our suggestions into action.

**Sri P. S. CHINNADURAI:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த சபை முன்பாக பிரேரேபணை செய்யப்பட்டிருக்கிற 1958-ம் வருஷத்திய சென்னை மகப் பேறு சகாய திருத்த மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த சட்டத்தை நான் வரவேற்பதற்கு மிக முக்கிய காரணங்கள் உண்டு என்பதை தாங்கள் நன்றாக அறிவீர்கள். ஒரு பக்கத்தில் குழந்தைகளைப் பெற வேண்டாமென்று மிகவும் தீவிரமாகப் பிரசாரம் செய்யப்படுகிற வேளையிலே இந்த சட்டம் இங்கு கொண்டு வரப் பட்டிருக்கிறது. மிகவும் துணிச்சலான நல்ல செயல், அது. நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்துள்ள அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். குழந்தைகளைப் பெருமல் தடுப்பதற்கு கமிஷன் கொடுக்கிறேன், அந்தக்

கமிஷனை அதிகரிக்கிறேன் என்று அறிவிப்புகள் கொடுக்கப்படுகிற வேளையில்
நீங்கள் குழந்தைகளை பெறுங்கள் உங்களுக்கு போதிய அளவு அதிகமான
சகாயம் கொடுக்க சர்க்கார் தயாராகயிருக்கிறது என்று அறிவிக்கும் முறை
யில் இந்த சட்ட மசோதா இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. அந்நிலை
யில் இது, தொழிற்சாலைகளில் வேலை செய்ய வேண்டிய நிர்பந்தம்
ஏற்பட்டிருக்கிற தாய் குலத்திற்கு ஒரு சிறந்த சேவையாகும் என்பதில்
சந்தேகமே கிடையாது. பெண்கள் எப்பொழுது தொழிற்சாலைக்கு வேலை
செய்யப் போகிறார்கள் என்றால், மிகுந்த துன்பம் ஏற்படும்போது கணவன்
வருமானத்தை கொண்டு மாத்திரம் சரிக்கட்ட முடியாமல் போகும்போது
தான் தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் செல்ல நம் நாட்டில் பெண்கள்
துணிகிறார்கள். ஆகவே, அந்த நிலையிலே, கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற
தாய் குலத்திற்கு மிகவும் சிறந்த முறையிலே சேவை செய்யும் முறையிலே
இந்த திருத்த மசோதா அமைந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.
பல திருத்தங்கள் இந்த திருத்த மசோதாவிற்கு பிரேரேபணை செய்யப்பட்
டிருக்கிறது. நல்லெண்ணத்தோடுதான் அத்திருத்தங்கள் பலவும் இங்கு
பிரேரேபணை செய்யப்பட்டிருக்கிறது, என்பதில் ஆட்சேபணையில்லை.
ஆனால் எந்த சந்தர்ப்பத்தில் இந்த மசோதா வந்திருக்கிறது என்பதை
நாம் கவனிக்க வேண்டும். இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் இந்த
மசோதா கொண்டு வரப்பட்டதே பெரிய காரியம். இதற்கு இன்னும் பல
திருத்தங்கள் நாளடைவில், காலக்கிரமத்தில் நாம் செய்து கொள்ளலாம்.
அதற்கு பெரிய தடை எதுவும் இருக்க முடியும் என்று நான் நினைக்க
வில்லை. இந்த திருத்த மசோதாவை எந்தளவு இன்னும் அபிவிருத்தி
செய்யவேண்டுமோ அந்தளவு அபிவிருத்தி செய்து கொள்ள நமக்கு
இன்னும் சந்தர்ப்பம் கிடைக்கும், இன்னும் நான்கு ஆண்டுகளுக்குள்ளா
கவே கனம் அமைச்சர் அவர்கள் தனது பதவிக் காலத்திலேயே கூட
இதற்கு பல திருத்தச் சட்டங்கள் கொண்டு வந்து நிறைவேற்ற வாய்ப்புகள்
இருக்கின்றன என்று கூறலாம். இங்கு கொண்டுவரப்பட்டிருக்கும் திருத்
தங்களைப் பார்க்கும் போது, அதை அமைச்சர் அவர்கள் அறியாமல் இருந்
திருப்பார் என்று சொல்வதற்கில்லை. அவர் அறிந்ததுதான். இப்பொழுது
இந்த திருத்த மசோதாவையே கொண்டு வர துணிச்சல் இருந்ததே,
அதை விட அபிவிருத்திகரமான திருத்தங்களைக் கொண்டு வருவது எப்படி
என்று அவர்கள் எண்ணிப் பார்த்திருக்கக் கூடும். ஆகவே, இந்தள
வோடு நிறுத்திக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன். இதிலே, அதிக
மாக ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லப்பட்டது. 75 நயா பைசா அல்லது
12-ல் ஏழு பங்கு என்று இருக்கிற உதவியைப்பற்றி. நான் நினைக்கிறேன்,
அங்கத்தினர்கள், சம்பளம் என்பதை சரியாக புரிந்து கொண்டார்களோ
என்று. சம்பளம் என்பது "பேமெண்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்" படி, டியர்
னஸ் அலவன்ஸ் எல்லாவற்றையும் சேர்த்துத்தான் என்று கருதுகிறேன்.
அப்படிப் பார்க்கும்போது, 12-ல் 7 பங்கு என்றிருப்பது சரியானதுதான்
என்று கூறுவேன். ஏனென்றால், இப்பொழுது இன்ஷூரன்ஸ் திட்டத்தில்,
இதே அளவிற்கான ஒரு உதவிதான் கொடுக்கப்படுகிறது. அதாவது,
12 வார காலம் ஸிக் லீவாக அனுமதிக்கப்படுகிறது. அந்தக் காலத்தில்
மொத்தத்தில் பெறுகிற சம்பளத்தில் 55 சத விகிதம் உதவித் தொகையாக
கொடுக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் இது கொண்டு வரப்பட்
டிருக்கக்கூடும் என்று கூட நான் நினைக்கிறேன். கிட்டத்தட்ட கணக்கு சரியாகத்
தான் வருகிறது. ஆகவே, 75 நயா பைசா அல்லது 12-ல் 7 பங்கு, எது
அதிகமோ அதைக் கொடுக்கலாம் என்று இருப்பது சரி என்று ஒப்புக்
கொள்ளலாம் என்று தோன்றுகிறது. மலைப் பகுதிகளில் வாழும் தொழி
லாளிகளுக்கு உதவி அதிகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது
குறித்து அமைச்சர் அவர்கள் இன்னும் சிறிது காலம் கழித்து ஒரு திருத்
தச் சட்டம் கொண்டு வந்தால் கூட நான் ஆச்சரியப்பட மாட்டேன். இவை
களையெல்லாம் அவர் கவனத்தில் வைத்துக்கொண்டு வேண்டியது
செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இதை முழு மனதோடு வரவேற்
கிறேன்.

4-20 p.m. பல குறிப்பிடத்தக்க அம்சங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது
வரை இல்லாத முறையில் யாருமே நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு



தொழிற் சங்க வாதிகள் எல்லாம் எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்
திருந்த இந்த மசோதா இன்றைய தினம் இங்கு கனம் அமைச்சர் அவர்
களால் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ரொம்பவும் போற்றுதற்குரியது
என்று நான் கருதுகிறேன். எத்தனையோ சலுகைகளை தொழிலாளர்கள்
அடைய முடிய வில்லையே என்று தொழிற்சங்க வாதிகள் எல்லாம் நினைத்
துக் கொண்டிருந்தார்கள். அதை எல்லாம் நீக்குவதற்கு வழியே
கிடையாதா என்று அஞ்சிக் கொண்டிருந்த காலம் உண்டு. இதில் எவ்
வளவோ கவனம் செலுத்தப்பட்டு இந்த மசோதா இங்கு கொண்டு வரப்
பட்டிருக்கிறது. சர்ச்சைக்குரிய பல விஷயங்களைப்பற்றியும் அமைச்சர் அவர்
கள் இதில் ஆலோசித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்தச்
சட்டத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். பின்னால் திருத்தங்
கள் வந்தாலும் அவைகளையும் நான் சந்தோஷத்தோடு வரவேற்பேன்
என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை நான் வரவேற்றுக்
கொள்கிறேன்.

* **Srimathi P. K. R. LAKSHMIKANTHAM** : கனம் சட்டசபை தலை
வர் அவர்களே, இந்த பிரசவ மசோதாவை நான் மட்டற்ற மகிழ்ச்சியோடு
வரவேற்கிறேன். பிரசவம் என்றாலே பெண்களின் புனர் வாழ்வு என்
பதுதான் அர்த்தம். அப்படிப்பட்ட பெண் தொழிலாளர்களுடைய கஷ்
டங்களை நினைத்து அவர்கள் பிரசவ காலத்தில் அவர்கள் படும் இன்னல்களை
எல்லாம் நினைத்து அவர்களுக்கு நல்ல முறையில் லீவு கொடுக்கப்பட
வேண்டும், நல்ல முறையில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும்,
அதற்காக நல்ல முறையாக சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்ப
தையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த
மசோதாவை கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக அமைச்சர் அவர்
களுக்கு பெண்களின் சார்பாக நான் என் நன்றியை தெரிவித்துக்கொள்
கிறேன். இதில் பல நல்ல அம்சங்கள் இருந்தாலும் ஒன்றை எடுத்துச்
சொல்ல ஆசைப்படுகிறேன். பிரசவத்திற்கு முன்பு ஆறு வாரம் என்றும்,
பிரசவத்திற்கு பின்பு ஆறுவாரம் என்றும் லீவில் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. எனக்கு முன்பு பேசிய திரு. மாதா கவுடர் அவர்கள் இதைப்பற்றி
குறிப்பிட்டார்கள். சாதாரணமாக பிரசவம் என்பது எப்போது ஏற்படும்
என்பது தெரியாது. சிலருக்கு ஒரு மாதத்திற்கு முன்னாலே அதற்கான
அறிகுறிகள் இருக்கும். சிலருக்கு இருக்கவே இருக்காது. ஆகவே, இந்த
லீவு முன்பும் பின்பும் என்று இருப்பதை நீக்கிவிட்டு பொதுவாக 12 வாரங்
கள் என்று இருந்தால் நல்லதாக இருக்குமென்று நினைக்கிறேன். பதி
னைந்து நாட்களுக்கு முன்னால் பிரசவமாகி விட்டாலும் அதற்கு பின்பு
லீவை 12 வாரங்களாக அனுஷ்டிக்கப்படவேண்டும். ஆகவே, இதை
திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் பிர
சவ நாட்களில் முழு சம்பளம் கொடுத்தாலும் அதை பெண்கள் எல்லோ
ரும் வரவேற்பார்கள். இப்போது இதில் 12 அணா என்று சம்ப
ளம் குறிக்கப்பட்டிருக்கிறது. இதை குறைந்த பட்சம் ஒரு ரூபாயாக
கொடுக்க வேண்டும் என்று இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மேலும் குறை பிரசவத்திற்கு மூன்று வாரகாலம் லீவு என்று சொல்லப்
பட்டிருக்கிறது. அது போதாது என்று நினைக்கிறேன். குறை பிரசவம்
என்பது இரண்டு விதத்தில் ஏற்படக்கூடும். ஒன்று எட்டாவது மாதத்தில்
குறை பிசரவம் ஏற்படக்கூடும், இன்னொன்று நான்காவது மாதத்தில் ஏற்படு
கிற குறை பிரசவம். ஆனால் எட்டாவது மாதத்தில் ஏற்படுகிற குறை பிரச
வம் 10 மாதங்கள் சுமந்து பிறகு நடக்கும் பிரசவத்திற்கும் எட்டாவது
மாதத்தில் ஏற்படும் குறை பிரசவத்திற்கும் வித்தியாசம் இல்லை என்பது
தான் என்னுடைய கருத்தாகும். ஆகவே, இந்தக் குறைந்த பிரசவம்
என்பதில் இரண்டு அர்த்தம் கொடுக்க வேண்டும். அதாவது நான்காவது
மாதம் வரைக்கும் ஆறு வாரம் லீவு கொடுத்தால் போதும் என்று
இருக்கவேண்டும். எட்டு மாதத்திற்கு மேல் ஏற்படும் குறை பிரசவத்
திற்கு அதற்கு சாதாரண பிரசவ காலத்தில் கொடுக்கப் படும் லீவு,
சம்பளம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய
கருத்தாகும். ஆகவே இவைகளை எல்லாம் கவனித்து இவர்களுக்கு பிரசவ
காலத்தில் முழு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை நான்

[Srimathi P. K. R. Lakshmikantham] [3rd April 1958

மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த காலத்தில் முழு சம்பளம் கொடுப்பதற்கு சட்டம் கொண்டு வர முடியாது என்று இருந்தாலும், இதை திருத்தி அமைக்க முடியுமானால் இதில் 12 அணா என்றிருப்பதை குறைந்தது ஒரு ரூபாய் என்று திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மசோதாவை நல்ல முறையில் கொண்டு வந்து இங்கு பாஸாக போவதைப்பற்றி நினைக்கும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இரண்டு திருத்தங்களும் இதில் கொண்டு வந்தால் நல்லது. அதையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இதை நான் வரவேற்கிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். இதில் ஒரே ஒரு விஷயத்தை மாத்திரம் சுட்டிக்காட்ட அவாவுறுகிறேன். இந்த மசோதாவில் தாய்குலத்தை கௌரவிக்கக்கூடிய முறையிலும் பிரசவ காலத்திற்கு 12 வாரங்கள் லீவு என்றும் அந்தக் காலத்திற்கு 75 நயா பைசா சம்பளம் கொடுக்கக்கூடிய முறையிலும் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. முன்பு இருந்ததைவிட நல்ல முறையில் இப்போது நான்கு அணா அதிகமாகவும், லீவு விஷயத்தில் முன்பு எழு வாரங்களாக இருந்ததைத் இப்போது 12 வாரங்களாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால் குறைந்தபட்சம் இந்த காலத்தில் முழு சம்பளத்தையும் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயமும். இதைப்பற்றி கனம் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்கள். அகால பிரசவ உபாதைகளுக்கு உட்படும் ஆள்களுக்கு மூன்று வார காலம் முழு சம்பளம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பிரசவ காலத்தில் அதாவது குறைந்தபட்சம் நான்கு மாதங்களுக்கும் முழு சம்பளம் கொடுத்தால் நல்லதாக இருக்கும். அதற்கு மேல் லீவு எடுப்பதாயிருந்தால் 12 அணா என்று ஒரு ஷரத்தை ஏற்படுத்தலாம். இவ்விதம் ஷரத்துக்களை வைத்தால் பெண்களை அதிகமாக வேலைக்கு வைத்துக்கொள்ளமாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டக்கூடும். சாதாரணமாக பெண்களை வேலைக்கு வைத்திருப்பவர்கள் இவ்விதம் சட்டங்கள் வந்தால் பெண்களை வேலையிலிருந்து குறைத்துவிடுவார்கள். குறைந்த கூலியை கொடுத்து வேலை செய்யலாம் என்ற நினைப்பில்தான் பெண்களை அதிகமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இவ்விதம் சட்டம்வரும்போது அவர்கள் பெண் தொழிலாளர்களை குறைத்துக்கொள்ளக்கூடும். கழிந்த காலத்தை எடுத்துப்பார்த்தாலும் பெண் தொழிலாளர்களை குறைத்துக்கொண்டு வருவதை நாம் பார்க்கலாம். அதை நாம் தடுத்தாக வேண்டும். இதற்கு குறைந்தபட்சம் இத்தனை சதவிகிதம் பெண் தொழிலாளர்களை வைத்துக் கொள்ளவேண்டும் என்று அதற்கு சட்டம் செய்வது அவசியம் என்றிருக்குமானால்—அதற்கு ஒரு சட்டத்தை செய்தாக வேண்டும். ஆகவே இவ்விதம் பெண்களை வேலையினின்றும் நீக்கப்படுவதை தடுக்கின்ற முறையில் இந்த வசதியை செய்து கொடுக்க சர்க்கார் தவறக்கூடாது. ஆகவே இதைப்பற்றி எதிர்க்கட்சியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்களை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். அந்த முறையில் இதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதோடு மருந்து செலவுக்கு என்று ஒரு சிறிய தொகையும் இதில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, சாதாரணமாக சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தபோதிலும் அதை முறியடிப்பதில்தான் முதலாளிகள் தங்கள் கவனத்தை செலுத்துவார்கள் என்பதை தனது சொந்த அனுபவத்திலேயே அமைச்சர் அவர்களே உணர்ந்திருப்பார்கள். ஆகவே இந்தச் சட்டங்கள் எல்லாம் எவ்வளவு நல்ல சட்டங்களாக இருந்தாலும் அதற்கு உற்சாகம் காட்ட முடியவில்லை. இந்த மசோதா சம்பந்தப்பட்டமட்டில் இதனால் அதிகப்படியான சலுகையை தொழிலாளர்கள் அடைகிறார்கள் என்று சொல்ல முடியாது. ஏற்கெனவே நமது ராஜ்யத்திலுள்ள பஞ்சாலை தொழிலாளர்



3rd April 1958] [Sri M. Kalyanasundaram]

களுக்கு கிடைக்கக்கூடிய சலுகை கிட்டத்தட்ட இந்த அடிப்படையில்தான் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் சில இடங்களில் இதைவிட அதிகமாக இருக்கும். இந்த மசோதா நமது ராஜ்யத்தில் பின்தங்கி இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஒரு உதவி அளிக்கவேண்டும் என்று மத்திய சர்க்கார் நிர்ணயித்த ஒரு விகிதத்தின் அடிப்படையில் தான் இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவினால் போதிய அளவு திருப்தி ஏற்பட முடியவில்லை என்பதுதான் 4-50 p.m. என்னுடைய அபிப்பிராயம். பின்னர் நமக்கு சந்தர்ப்பம் கிடைக்கக்கூடிய சமயத்திலாவது இதற்கு தக்க மாறுதல் கொண்டுவரவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். குறைந்தது 12 வாரத்திற்கும் முழுச் சம்பளம் இருக்கவேண்டும். முழுச் சம்பளம் இல்லாமல், 12 அணா அல்லது சம்பளத்தில் 12-ல் 7 பாகம் என்று போட்டிருப்பது மிகவும் குறைவானது. உண்மையில் இதை 6 வார காலத்திற்குத்தான் அனுபவிக்க முடியும். அதற்கு முன்னதாக கணக்குப் போட்டு 6 வாரம் ஓய்வு எடுத்து பலனை அனுபவிப்பது சாத்தியமல்ல. அதற்கு ஈடாகக் கொடுக்கப்படும் தொகை என்ன ? பத்து ரூபாய்தான். அந்தத் தொகையை அதிகப்படுத்தி 25 ரூபாயாகவோ அல்லது 50 ரூபாயாகவோ போட்டிருந்தால், நிச்சயமாக அதிக அனுகூலம் இருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்வேன். இதனால் கிடைக்கக்கூடிய அனுகூலத்தைப் பெறக்கூடியவர்கள் ரொம்ப சொல்பமானவர்கள். இன்னொரு காரணமும் இருக்கிறது. எண்ணை மில்கள், அரிசி மில்கள், இந்த மாதிரி மில்களில் வேலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு இந்தப் பலன் கிடைக்குமா என்பதே சந்தேகம். இப்பொழுது பாக்டரி சட்டங்கள், சம்பளப் பட்டுவாடா சட்டம், அமலில் இருந்தும்கூட, இந்த மில்களிலே "Casual Labour" என்கிற முறை தான் கையாளப்பட்டு வருகிறது. பிரசவ காலத்திற்கு முன்னதாக 35 வாரங்களுக்கு, அதாவது 245 நாட்களுக்கு, ஒரே முதலாளியின்கீழ் வேலை செய்திருக்கவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதன்படி பார்த்தால் இந்த மில்களில் இருக்கக்கூடிய பெண் தொழிலாளிகளுக்கு இந்தப் பலன் கிடைப்பது துர்லபம். அநேகமாக யாருக்கும் கிடைக்காது. அதற்குத் தகுந்த முறையில் கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். "Casual Labour" முறை இருக்கக்கூடாது. அது அடியோடு ஒழிந்தால் தான் இதனால் கிடைக்கக்கூடிய பலன் ஒரு சிலருக்காவது கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே தனியாக கண்காணிப்பதற்காக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. படித்தவர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதுமட்டுமல்ல. அவர்கள் போய் கண்காணித்து இஷ்டப்பட்டவர்களையும் அழைத்துப் போகலாமென்று இருக்கிற ஷரத்தை வரவேற்கிறேன். இஷ்டப்பட்டவர்களை அழைத்துச் செல்லாமென்று சொல்லும்போது போலீஸ்காரர்கள் என்று நான் எடுத்துக்கொள்ளவில்லை. தொழிற்சங்க ஊழியர்கள் என்று எடுத்துக் கொள்கிறேன். தொழிற்சங்க ஊழியர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதோடு அந்தத் தொழிலாளிகள் கொடுக்கக்கூடிய வாக்குமூலத்தை சாட்சியமாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று இருக்கிறது. தங்களுடைய நலனுக்கு எதிராக சாட்சியம் கொடுக்குமாறு கட்டாயப்படுத்தக்கூடாது என்ற பகுதியை வரவேற்கிறேன். அமல் நடத்துவதில் நாம் எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கையைப் பொறுத்திருக்கிறது இதனால் பெண் தொழிலாளிகளுக்குக் கிடைக்கக்கூடிய பலன். சட்டத்தை மட்டும் இயற்றிவிட்டால் போதாது. சட்டத்தை அமல் நடத்துவதிலும் நிர்வாகம் சுறுசுறுப்பாக இருந்து, இந்த சட்டத்தில் இருக்கக்கூடிய நலன்கள் யார் யாருக்குக்கிடைக்க வேண்டுமோ அவர்களுக்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR :** Mr. Speaker, 4-35 p.m. Sir, I wholeheartedly welcome this measure. There can be no two opinions about this. The Hon. Minister is careful enough to introduce many safeguards. But still I would like to say a few words concerning certain clauses. As one of the hon. Members

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [3rd April 1958

has pointed out, the employers may try their level best to see that women workers are shut out from the field altogether. Of course, it is left to their option. There is no provision here to compel the employers to employ these womenfolk. So, indirectly this will work some hardship to the womenfolk.

I thank the Hon. Minister for having enhancd the scales of wages during the pre-natal and the post-natal period for the nursing mother. But I find that there is provision in the Bill only for one Inspector to enforce the provisions of this Bill in the whole State. I doubt very much Sir, whether it will be possible for one Inspector to enforce the provisions of this Bill, in addition to the other work he may have. Unless the Acts that are passed and measures like this—are enforced properly, the object of passing such Bills will be frustrated.

I wholeheartedly endorse the view of Sri Sattanatha Karayalar that provision also should be made for providing some amount for purchase of medicines, etc. That also should be favourably considered. Many amendments have been introduced by so many hon. Friends and I am sure the Government will give due weight to those amendments and accept the proposals as far as possible.

4-37 p.m. **The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் பேச்சிலிருந்து போதுமான அளவு தமிழ் வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு விட்டேன். மகப்பேறு சகாய சட்டத்திற்கு ஆதரவு அளித்த எல்லா அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்டமானது—பெருமையுடன் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்திய ராஜ்யங்களிலே சென்னையில் வெகு காலத்திற்கு முன்பாகவே கொண்டுவரப்பட்டது. சரித்திரத்தை இப்பொழுது சொல்லவேண்டிய அவசியம் என்ன என்று சொன்னால், இப்பொழுது என்னென்ன வாதங்கள் சொல்லப்படுகின்றனவோ அவைகள் அப்பொழுதும் சொல்லப்பட்டது. அவை நடைமுறையில் உண்மையாக எந்தவிதமான கஷ்டத்தையும் கொடுக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொல்லுகிறேன்.

1919-ம் வருஷத்தில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் வாஷிங்டன் மகாநாட்டில் மகப்பேறு சகாய உதவி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது. அதற்குப் பிறகு 1924-வது வருஷத்தில் காலம் சென்ற தொழிற்சங்கத் தந்தை ஸ்ரீ என். எம். ஜோஷி அவர்கள் இதற்காக ஒரு சட்டத்தை மத்திய சட்டசபையிலே கொண்டுவந்தார்கள். அன்றைக்கு அங்கு இருந்த சபை அதை நிராகரித்துவிட்டது. அதற்குப் பிறகு மத்திய சட்டம் இன்றுவரையிலும் கிடையாது. ஆனால் நல்ல முற்போக்கான ராஜ்யங்கள் இந்த மகப் பேறு சகாயச் சட்டம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அவரவர்களுக்கு வேண்டிய சட்டங்களைச் செய்ய முன் வந்தார்கள். 1929-ம் வருஷத்திலே பம்பாயிலும், 1934-ல் சென்னையிலும் இந்தச் சட்டம் செய்யப்பட்டது. சட்டம் செய்கின்ற காலத்தில் விவாதத்தின் போது, இந்த மாதிரி சட்டம் ஏற்படுத்துவதன் மூலமாக பெண்களுக்கு கொஞ்ச நஞ்சம் கிடைக்கிற வேலையும் கிடைக்காமல் போய்விடும் என்ற பயம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சமுதாயம் வளர்ச்சி அடைகிற போக்கிலே தொழிலாளர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய சட்டங்களை நிறைவேற்றினால், சமுதாயத்திற்கோ அல்லது தொழில் வளர்ச்சிக்கோ எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்பதை சரித்திரம் எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆகவேதான் அந்த முறையில் தெரிவித்துக்



3rd April 1958] [Sri R. Venkataraman]

கொள்கிறேன், ஓரளவு சகாய உதவியானது அதிகப்படுத்தப்பட்டு இருந்தாலும் அதனால் எந்தவிதமான கேடும் விளைந்துவிடாது என்று. சமுதாயத்தினுடைய முற்போக்கின் அடிப்படையில் நோக்குகிறபொழுது, இந்தவிதமான சட்டங்கள் செய்தவன் மூலமாக, தொழில் வளர்ச்சி போன்றவைகள் நன்றாகப் பெருகும் என்பது தெரிகிறது. இந்த சட்டத்திலே நாம் கொடுத்திருக்கிற சலுகைகள் எல்லாம் அகில இந்திய அடிப்படையிலே விவாதம் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அந்த அகில இந்திய அடிப்படையில் விவாதம் செய்கின்றபோது, எல்லாத் துறையில் 4-40 p.m. இருக்கக்கூடியவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், சர்க்கார் பிரதிநிதிகளும், எல்லோருமாக சேர்ந்து நன்றாக பரிசீலனை செய்யப்பட்டவை. எந்த முறையில் உதவி அளித்தால் ஒரு தொழிலாளருக்கு கஷ்டம் ஏற்படாமல் இருக்கும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்வதில் குறைந்துவிடாமல் இருக்கும் என்றெல்லாம் யோசனை செய்த பிறகுதான் இன்றைக்கு இவ்விதமான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

கனம் அங்கத்தினர்கள் 12 வாரத்திற்கும் முழு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் லட்சுமிகாந்தம்மாள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்த அளவுக்கு சட்டத்தில் மாறுதல் செய்தால் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில் குந்தகம் ஏற்படாத நிலைமை இருக்குமோ, எந்தவிதமான கஷ்டம் ஏற்படாமல் இருக்குமோ, இவைகளையெல்லாம் யோசித்துத்தான் விதிதாசாரங்கள் எல்லாம் போடப்பட்டு இருக்கின்றன. பிளாண்டேஷன் லேபர் ஆக்ட், மெடர்னிடி பெனிபிட் ஆக்ட் போன்ற சட்டங்கள் பின்னால் நிறைவேற்றப்பட்டவை. அதில் கண்டிருக்கும் சலுகைகளுக்கு இந்த மசோதாவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சட்டத்தில் போடப்படுகின்ற சலுகைகள் எல்லாம் "Golden mean" என்று சொல்வதுபோல, மிகவும் அதிகமான சலுகைகளை கொடுத்து வேலை கிடைக்கின்ற வசதிகள் குறைந்து போகாமலும், வாழ்க்கைக்கு வேண்டியதை குறைத்துக்கொள்ளாமலும், இரண்டு அடிப்படையிலும் வைத்து ஒரு நடுத்தரமான யோசனையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற யோசனைகளை எல்லாம் அந்தந்த ஷரத்து வரும்போது பரிசீலனை செய்யலாம்.

ஆனால் நான் சொன்னதுபோல் ஒரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதால், இப்போது எந்தவிதமான மாறுதலும் செய்வதற்கு இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அனுபவத்தை ஒட்டி, பிற்காலத்தில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டும் என்றால், அதற்கு நமக்கு எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. உரிமையும் இருக்கிறது. அப்பொழுது மாறுதல்கள் செய்யலாம். அதிகப்படியான சலுகைகளை புகுத்தி நடைமுறையில் அமல் நடத்த முடியாத ஒரு கஷ்டம் விளைவிக்கக்கூடாது என்ற காரணத்தினாலேயே, பல யோசனைகளை, சலுகைகளை—அதிகமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லும் யோசனைகளை—ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் இதை வரவேற்று, பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுள்ள என் பிரேரேபணையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Mr. SPEAKER** : Is the hon. Member Sri Sattanatha Karayalar withdrawing his amendment?

**Sri K. SATTANATHA KARAYALAR** : I am not pressing it, Sir.

The amendment was, by leave, withdrawn.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [3rd April 1958

has pointed out, the employers may try their level best to see that women workers are shut out from the field altogether. Of course, it is left to their option. There is no provision here to compel the employers to employ these womenfolk. So, indirectly this will work some hardship to the womenfolk.

I thank the Hon. Minister for having enhanced the scales of wages during the pre-natal and the post-natal period for the nursing mother. But I find that there is provision in the Bill only for one Inspector to enforce the provisions of this Bill in the whole State. I doubt very much Sir, whether it will be possible for one Inspector to enforce the provisions of this Bill, in addition to the other work he may have. Unless the Acts that are passed and measures like this—are enforced properly, the object of passing such Bills will be frustrated.

I wholeheartedly endorse the view of Sri Sattanatha Karayalar that provision also should be made for providing some amount for purchase of medicines, etc. That also should be favourably considered. Many amendments have been introduced by so many hon. Friends and I am sure the Government will give due weight to those amendments and accept the proposals as far as possible.

4-37 p.m. **THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர்கள் பேச்சிலிருந்து போதுமான அளவு தமிழ் வார்த்தைகளைக் கற்றுக்கொண்டு விட்டேன். மகப்பேறு சகாய சட்டத்திற்கு ஆதரவு அளித்த எல்லா அங்கத்தினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சட்டமானது—பெருமையுடன் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், இந்திய ராஜ்யங்களிலே சென்னையில் வெகு காலத்திற்கு முன்பாகவே கொண்டுவரப்பட்டது. சரித்திரத்தை இப்பொழுது சொல்லவேண்டிய அவசியம் என்ன என்று சொன்னால், இப்பொழுது என்னென்ன வாதங்கள் சொல்லப்படுகின்றனவோ அவைகள் அப்பொழுதும் சொல்லப்பட்டது. அவை நடைமுறையில் உண்மையாக எந்தவிதமான கஷ்டத்தையும் கொடுக்கவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் சொல்லுகிறேன்.

1919-ம் வருஷத்தில் சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் வாஷிங்டன் மகாநாட்டில் மகப்பேறு சகாய உதவி கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது. அதற்குப் பிறகு 1924-வது வருஷத்தில் காலம் சென்ற தொழிற்சங்கத் தந்தை ஸ்ரீ என். எம். ஜோஷி அவர்கள் இதற்காக ஒரு சட்டத்தை மத்திய சட்டசபையிலே கொண்டுவந்தார்கள். அன்றைக்கு அங்கு இருந்த சபை அதை நிராகரித்துவிட்டது. அதற்குப் பிறகு மத்திய சட்டம் இன்றுவரையிலும் கிடையாது. ஆனால் நல்ல முற்போக்கான ராஜ்யங்கள் இந்த மகப் பேறு சகாயச் சட்டம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அவரவர்களுக்கு வேண்டிய சட்டங்களைச் செய்ய முன் வந்தார்கள். 1929-ம் வருஷத்திலே பம்பாயிலும், 1934-ல் சென்னையிலும் இந்தச் சட்டம் செய்யப்பட்டது. சட்டம் செய்கின்ற காலத்தில் விவாதத்தின் போது, இந்த மாதிரி சட்டம் ஏற்படுத்துவதன் மூலமாக பெண்களுக்கு கொஞ்ச நஞ்சம் கிடைக்கிற வேலையும் கிடைக்காமல் போய்விடும் என்ற பயம் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சமுதாயம் வளர்ச்சி அடைகிற போக்கிலே தொழிலாளர்களுக்கும் சமூகத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய சட்டங்களை நிறைவேற்றினால், சமுதாயத்திற்கோ அல்லது தொழில் வளர்ச்சிக்கோ எந்தவிதமான குந்தகமும் ஏற்படாது என்பதை சரித்திரம் எடுத்துக்காட்டியிருக்கிறது. ஆகவேதான் அந்த முறையில் தெரிவித்துக்



3rd April 1958] [Sri R. Venkataraman]

கொள்கிறேன், ஓரளவு சகாய உதவியானது அதிகப்படுத்தப்பட்டு இருந்தாலும் அதனால் எந்தவிதமான கேடும் விளைந்துவிடாது என்று. சமுதாயத்தினுடைய முற்போக்கின் அடிப்படையில் நோக்குகிறபொழுது, இந்தவிதமான சட்டங்கள் செய்தவன் மூலமாக, தொழில் வளர்ச்சி போன்றவைகள் நன்றாகப் பெருகும் என்பது தெரிகிறது. இந்த சட்டத்திலே நாம் கொடுத்திருக்கிற சலுகைகள் எல்லாம் அகில இந்திய அடிப்படையிலே விவாதம் செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டவை. அந்த அகில இந்திய அடிப்படையில் விவாதம் செய்கின்றபோது, எல்லாத் துறையில் 4.40 p.m.
இருக்கக்கூடியவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், சர்க்கார் பிரதிநிதிகளும், எல்லோருமாக சேர்ந்து நன்றாக பரிசீலனை செய்யப்பட்டவை. எந்த முறையில் உதவி அளித்தால் ஒரு தொழிலாளருக்கு கஷ்டம் ஏற்படாமல் இருக்கும், தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்வதில் குறைந்துவிடாமல் இருக்கும் என்றெல்லாம் யோசனை செய்த பிறகுதான் இன்றைக்கு இவ்விதமான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

கனம் அங்கத்தினர்கள் 12 வாரத்திற்கும் முழு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் லட்சுமிகாந்தம்மாள் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்த அளவுக்கு சட்டத்தில் மாறுதல் செய்தால் வேலைக்கு அமர்த்திக் கொள்வதில் குந்தகம் ஏற்படாத நிலைமை இருக்குமோ, எந்தவிதமான கஷ்டம் ஏற்படாமல் இருக்குமோ, இவைகளையெல்லாம் யோசித்துத்தான் விகிதாசாரங்கள் எல்லாம் போடப்பட்டு இருக்கின்றன. பிளாண்டேஷன் லேபர் ஆக்ட், மெடர்னிடி பெனிபிட் ஆக்ட் போன்ற சட்டங்கள் பின்னால் நிறைவேற்றப்பட்டவை. அதில் கண்டிருக்கும் சலுகைகளுக்கு இந்த மசோதாவும் உயர்த்தப்பட்டிருக்கிறது. சட்டத்தில் போடப்படுகின்ற சலுகைகள் எல்லாம் "Golden mean" என்று சொல்வதுபோல, மிகவும் அதிகமான சலுகைகளை கொடுத்து வேலை கிடைக்கின்ற வசதிகள் குறைந்து போகாமலும், வாழ்க்கைக்கு வேண்டியதை குறைத்துக்கொள்ளாமலும், இரண்டு அடிப்படையிலும் வைத்து ஒரு நடுத்தரமான யோசனையாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற யோசனைகளை எல்லாம் அந்தந்த ஷரத்து வரும்போது பரிசீலனை செய்யலாம்.

ஆனால் நான் சொன்னதுபோல் ஒரு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதால், இப்போது எந்தவிதமான மாறுதலும் செய்வதற்கு இல்லை என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அனுபவத்தை ஒட்டி, பிற்காலத்தில் ஏதாவது மாறுதல் செய்யவேண்டும் என்றால், அதற்கு நமக்கு எல்லாவிதமான வசதிகளும் இருக்கின்றன. உரிமையும் இருக்கிறது. அப்பொழுது மாறுதல்கள் செய்யலாம். அதிகப்படியான சலுகைகளை புகுத்தி நடைமுறையில் அமல் நடத்த முடியாத ஒரு கஷ்டம் விளைவிக்கக்கூடாது என்ற காரணத்தினாலேயே, பல யோசனைகளை, சலுகைகளை—அதிகமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லும் யோசனைகளை—ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறேன் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் இதை வரவேற்று, பாராட்டியதற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் என்றுள்ள என் பிரேரேபணையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

* MR. SPEAKER: Is the hon. Member Sri Sattanatha Karayalar withdrawing his amendment?

SRI K. SATTANATHA KARAYALAR: I am not pressing it, Sir.

The amendment was, by leave, withdrawn.

[3rd April 1958

MR. SPEAKER : The question is—

" That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958) be taken into consideration ".

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

*Clause* 4.

MR. SPEAKER : Motion moved—

" That clause 4 do stand part of the Bill ".

SRI M. JAGANNATHAN : Sir, I move the amendment, namely—

" *For* sub-clause 3, *substitute* :

' (3) it applies to every factory and to all industrial establishments, both in the private and public sectors '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : கனம் கோதண்டராமன் கொடுத்திருக்கிற திருத்தம் விளங்கவில்லை. இந்த மசோதாவில் இருக்கிற வார்த்தைகளை பிரித்துச் சொன்னதுபோல் இருக்கிறது. இதைப்பற்றி விரிவாக சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மசோதாவில் ஒரு வாக்கியமாக இருக்கிறது. இரண்டு வாக்கியங்களாக பிரித்துக் கொடுத்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இதை வாபஸ் வாங்கிக்கொள்கிறீர்களா ?

SRI V. K. KOTHANDARAMAN : I am not moving my amendment, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : " பப்ளிக் செக்டார் " " பிரைவேட் செக்டார் " என்பவை சட்ட பூர்வமான வார்த்தைகள் அல்ல. இவைகள் எல்லாம் நடைமுறையில் உபயோகிக்கின்ற வார்த்தைகள். தொழிற்சாலையை யார் நடத்தினாலும், தனியார் நடத்தினாலும், சர்க்கார் நடத்தினாலும் பெண்களுக்கு இந்த வசதிகள் உண்டு. இந்த வசதிகள் இல்லை என்று நினைத்து திருத்தம் கொடுத்திருப்பதாக நினைக்கிறேன், ஆகையால் இதை வாபஸ் பெறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member withdrawing his amendment?

SRI M. JAGANNATHAN : Yes, Sir.

The amendment was by leave withdrawn.

Clause 4 was put and carried.

*Clause* 5.

MR. SPEAKER : Motion moved—

" That clause 5 do stand part of the Bill ".

SRI V. K. KOTHANDARAMAN : Sir I move the amendment namely, that—

" In sub-section (*a*) of the proposed section 3, after the words ' such other person ' *insert* the word ' also '."



3rd April 1958]

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : I am unable to accept the amendment, Sir.

MR. SPEAKER : The question is—

" In sub-section (*a*) of the proposed section 3, after the words ' such other person ' *insert* the word ' also '."

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

*Clause* 6.

MR. SPEAKER : Motion moved—

" That clause 6 do stand part of the Bill ".

There are a number of amendments of a similar nature. If amendments Nos. 1, 14 to 17, 40 and 41 are moved, all the others, I think, will be covered.

61247

SRI S. M. ANNAMALAI : I move the amendment, namely—

" In the proposed new section 5, *for* the words ' at the rate of seventy-five naye paise a day or seven-twelfths of the average ', *substitute* the words ' full ' and *omit* the words ' whichever is higher '."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN : I move the amendments, namely—

" (1) In sub-section (1) of the proposed section 5, for the words ' seventy-five naye paise a day or seven-twelfths of the average daily wage ' *substitute* the words ' one rupee a day or the full amount of the average daily wage '.

(2) In the *second* proviso under sub-section (1) of the proposed section 5 for the words ' six weeks ' *substitute* the words ' eight weeks '.

(3) In the second proviso under sub-section (1) of the proposed section 5 for the words ' thirty-five weeks ' *substitute* the words ' twenty-four weeks '.

(4) In Sub-section (2) of the proposed section 5 *for* the words ' the maternity benefit shall be payable only for the days . . . the day of her death ', *substitute* the words ' the maximum amount of maternity benefit that she would have got under that sub-section shall be paid to her nominee in one lumpsum '."

The amendments were duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN : I move the following amendments, namely—

" (1) In sub-section (1) of the proposed section (5)—

(1) *Omit* the words ' of seventy-five naye paise . . . of seven-twelfths '.

(2) *Insert* the words ' and allowance or allowances ' *after* the words ' daily wage '.

(3) *omit* the words ' whichever is higher ' and

(4) *for* the words 'during the ' *substitute* the word ' or '.

(2) In sub-section (2) of the proposed section (5) for the words ' only for the . . . including the day of her death ' *substitute* the words ' for the days she is entitled to under sub-section (1) '."

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause as well as the amendments are before the House for discussion.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த திருத்தங்கள் எல்லாம், மசோதாவில் கொண்டுவந்திருக்கும் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று கூறுகின்றன. இப்போது சட்டத்தில் இருக்கிற 8 அணாவையே 12 அணாவாக உயர்த்தப்போகிறோம். இதுவே 50 சதவிகிதம் உயர்வு ஆகிறது. கனம் ஜகன்னாதன் அவர்கள் பேசும்போது " இந்தவிதமான உயர்வுகளைக் கொடுத்து பெண்களுக்கு வேலை கிடைக்காமல் போய்விடும்படி மந்திரி பார்த்துக்கொள்ள வேண்டும் " என்று சொன்னார்கள். ஆகையால் இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்ற முறையில் இதை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரை கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது உள்ள சட்டத்தில் 6 வாரங்கள் என்று இருக்கிறது. அதை 8 வாரங்களாக உயர்த்தவேண்டும் என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். மகப்பேறு சகாயம் 12 வாரங்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சர்வ தேச தொழிற்சங்க சம்மேளத்தில் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நமது ராஜ்யம், இந்தியா என்று தனித்தனியாக அமைத்துக்கொள்ள முடியாது. ஆகையால் இதை அதிகரிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member Sri Annamalai withdrawing his amendment?

SRI S. M. ANNAMALAI : No, Sir. I am pressing the amendment.

MR. SPEAKER : The question is—

" That in the proposed new section 5 *for* the words ' at the rate of seventy-five naye paise a day or seven-twelfths of the average' *substitute* the words 'full' and *omit* the words ' whichever is higher '."

The amendment was put and lost.

MR. SPEAKER : Is the hon. Member Sri Jagannathan pressing his amendments?

SRI M. JAGANNATHAN : I am not pressing them.



The amendments were by leave withdrawn.

MR. SPEAKER : Is the hon. Member Sri Kothandaraman withdrawing his amendments?

SRI V. K. KOTHANDARAMAN : No, Sir, I am pressing my amendments.

MR. SPEAKER : The question is—

" In sub-section (1) of the proposed section (5)—

(1) *Omit* the words ' of seventy-five naye paise . . . or seven-twelfths ';

(2) *insert* the words ' and allowance or allowances ' *after* the words ' daily wage ';

(3) *omit* the words ' whichever is higher '; and

(4) *for* the words ' during the ' *substitute* the word ' or '."

The amendments were put and lost.

MR. SPEAKER : The question is—

" In sub-section (2) of the proposed section (5) *for* the words ' only for the . . . including the day of her death ' *substitute* the words ' for the days she is entitled to under sub-section (1) '."

The amendment was put and lost.

Clause 6 was put and carried.

Clauses 7, 8 and 9 were put and carried.

*Clause* 10.

SRI M. KALYANASUNDARAM : Sir I move— 4-50 p.m.

" In the proposed section 8-F *after* the words ' Maternity benefit ' *insert* the words ' and leave of absence '."

Sir, this is a technical amendment and I would request the Hon. Minister to consider this. In the proposed section 8 it is stated that the worker shall be entitled to payment of maternity benefit for a maximum period of one month. In the definition of ' maternity benefit ' there is no indication that they will be entitled to leave of absence also. That is why I have stated ' and leave of absence '. This is only a technical amendment moved for the purpose of clarification.

SRI P. S. CHINNADURAI : I second the amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, the provisions of the proposed section 8-F are clear. It provides for maternity benefit in addition to the period of absence allowed under section 5. The period of absence is provided for in section 5 which is twelve weeks on the whole. The clause covers not only post-natal illness but illness which may arise in the course of pregnancy, confinement or premature birth of a child. In all these cases, the benefit which the woman worker will get is leave of absence as provided for under section 5 plus monetary benefit.

[Sri R. Venkataraman] [3rd April 1958

That is the intention. If the hon. Members want it may be increased, it is different. As it is, the clause is fairly clear.

SRI M. KALYANASUNDARAM: இதிலே இருக்கும் நிலையிலே ஆறு வாரத்திற்கு மேற்கொண்டும் ஓய்வு உண்டு என்பது ஸ்பஷ்டமாக இல்லை. அப்படியென்றால், பணம் மட்டும்தான் கிடைக்கும். ஓய்வு கிடைக்காதோ என்று சந்தேகம் இருக்கிறது. இது எழுத்துப் பிழையாக இருக்குமோ என்னமோ. லீவும் கூட உண்டு என்ற அர்த்தம் கொடுக்கவில்லை. ஆறு வார ஓய்வுக்கு மேல் பிறகும் அவசியம் ஏற்பட்டால், லீவு எடுக்கலாம் என்று தெளிவாக இல்லை. மெடர்னிடி பெனிபிட் என்று மட்டும் இருந்தால் பணம் மட்டும் கிடைக்கும், ஒரு மாத ஓய்வு கிடைக்காது. ஆகவே ஒரு மாத ஓய்வு என்பது விடப்பட்டிருக்கிறது என்பது என் அபிப்பிராயம்.

MR. SPEAKER: The question is—

"In the proposed section 8-F *after* the words 'Maternity benefit' *insert* the words 'and leave of absence'."

The amendment was put and lost.

MR. SPEAKER: I believe Mr. Kalyanasundaram is not moving his other amendments.

SRI M. KALYANASUNDARAM: No, Sir.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

"In the proposed new section 8-A *for* the word 'ten' *substitute* the word 'fifty'."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

"In the proposed new section 8-B *for* the words 'fifteen minutes' *substitute* the words 'half an hour'."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

"In sub-section (2) of the proposed new section 8-D *for* the word 'without', *substitute* the words 'with half'."

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

"In the proposed new section 8-F *after* the word 'month' in line 1 of page 56, *add* the words 'with full daily wages' and *omit* the words 'and at the rate of seventy-five naye paise a day or seven-twelfths of the average daily wage, whichever is higher."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN: Sir I move—

"In the explanation under the proposed section 8-B *for* the words 'of such age' *substitute* the words 'not exceeding four years of age'."

The amendment was duly seconded.



3rd April 1958]

SRI M. JAGANNATHAN: Sir, I move—

"In the proposed section 8-C *for* the words 'six weeks' *substitute* the words 'eight weeks'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN: Sir I move—

"In sub-section (1) of the proposed section 8-D *for* the words 'three weeks' *substitute* the words 'eight weeks'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN: Sir I move—

"In sub-section (2) of the proposed section 8-D *for* the words 'one month' *substitute* the words 'two months'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN: Sir I move—

"In the proposed section 8-F *for* the words 'seventy-five naye paise' *substitute* the words 'one rupee'."

The amendment was duly seconded.

SRI M. JAGANNATHAN: Sir I move—

"In the proposed section 8-F, *for* the words 'seven-twelfths' *substitute* the words 'the full amount'."

The amendment was duly seconded.

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I move—

"In the explanation under the proposed section 8-B *for* the words 'of such age and for such period as may be prescribed' *substitute* the words 'not exceeding three years of age'."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move—

"In the new section 8-D *for* the word 'three' *substitute* the word 'twelve'."

The amendment was duly seconded.

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move—

"In the new section 8-F *omit* the words 'and at the rate . . . whichever is higher'."

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN: I oppose the amendments.

MR. SPEAKER: I shall put the amendments to vote.

All the amendments were put one by one and lost.

Clause 10 was put and carried.

Clause 11 was put and carried.

*Clause* 12.

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" *Omit* the proposed section 9-B ".

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : This is only a permissive power which is necessary. I oppose the amendment.

MR. SPEAKER : The question is—

" *Omit* the proposed section 9-B ".

The amendment was put and lost.

Clause 12 was put and carried.

Clauses 13 to 16 were put and carried.

*Clause* 1.

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (2) of clause 1 *for* the words ' on such date as the State . . . appoint ' *substitute* the words ' at once '."

The amendment was duly seconded.

THE HON. SRI R. VENKATARAMAN : We have to frame rules and all that.

MR. SPEAKER : The question is—

" In sub-clause (2) of clause 1 *for* the words ' on such date as the State . . . appoint ' *substitute* the words 'at once '."

The amendment was put and lost.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958) as passed by the Council be passed."

MR. SPEAKER : The question is—

" That the Madras Maternity Benefit (Amendment) Bill, 1958 (L.C. Bill No. 1 of 1958) as passed by the Council be passed."

The motion was put and carried and the Bill was passed.



(3) THE MADRAS ANIMAL PRESERVATION BILL, 1958 (L.C. BILL NO. 2 OF 1958).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, I move— 5.00 p.m.

" That the Madras Animal Preservation Bill[a], 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, விவசாய நாடு என்ற முறையில், நமது தேசீய பொருளாதார அபிவிருத்திக்கான வேலைத் திட்டத்தில், நமது கால்நடை செல்வத்தை பாதுகாப்பதும் அபிவிருத்தி செய்வதும் முக்கியமான பணியாகும். பசுவும், காளையும் நமது வாழ்வில் பங்காளிகள் என்றால் அது மிகையான கூற்று அல்ல. காளைகள் வேளாண்மைக்கு வேண்டிய மூல உழைப்பு சக்தியை அளிக்கின்றன. பசுக்கள், மக்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கும் சக்தி குன்றியவர்களுக்கும் இன்றியமையாத பாலை வழங்குகின்றன. எனவே பயனுள்ள கால்நடைகள் கொல்லவிடாமல் அவைகளை பாது காப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது மிக முக்கியமான காரியமாகும். நமது அரசியல் அமைப்பும் இதை வற்புறுத்துகிறது. கால்நடை வதையைக் கட்டுப்படுத்தி, பயனுள்ள கால்நடைகளின் பாதுகாப்புக்கு வகை செய்வதற்காக; மத்திய கோசம்வர்த்தன கவுன்சில் தயாரித்த நகல் மசோதாவை இந்திய அரசாங்கம் அண்மையில் நமது அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தது. மேற்கண்ட மசோதாவில் சொல்லப்பட்ட ரீதியில் சட்டமியற்ற நடவடிக்கை எடுப்பதைப் பற்றி ஆராயும் படியும், இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டது.

இந்திய அரசாங்கத்தின் அவ்வேண்டுகோளின்பேரில் நமது தேசத்திலுள்ள பெரும்பாலான மாநிலங்கள் ஏற்கனவே தகுந்த சட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றி உள்ளன. மைசூர்- ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பசுவதையை பூர்ணமாகத் தடை செய்துள்ளன. பம்பாய், அஸ்ஸாம், மேற்கு வங்கம், ஹைதராபாத் ஆகிய மாநிலங்களில் ஓரளவுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையொட்டி இந்த அரசாங்கம் 1958-ம் ஆண்டில் சென்னை விலங்குகள் பாதுகாப்பு மசோதாவை தயாரித்துள்ளது. சில வார்த்தை மாற்றங்களுடன் அம் மசோதா அந்த மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. காளைகள், எருதுகள், பசுக்கள், கன்றுகள், எருமைகள், எருமைக்கன்றுகள், போன்ற சில வகை கால்நடைகளை வதை செய்வதை தடுப்பதே மசோதாவின் நோக்கமாகும். பத்து வயதுக்கு மேற்பட்ட விலங்குகளும், உழைப்புக்கும் வளர்ப்புக்கும் தகுதியற்றவைகளும் காயமடைந்தோ, ஊனப்பட்டோ அல்லது தீராத வியாதியினால் பாதிக்கப்பட்டோ நிரந்தரமான சக்தி குன்றிய விலங்குகள் மட்டுமே கொல்லப்படுவதற்கு அனுமதிக்கப்படும். அத்தகைய விலங்குகள் எதையாவது கொல்லவேண்டுமானால் அந்த விலங்கு கொல்லப்படுவதற்கு தகுதியானது என்று உரிய அதிகாரியிடம் சான்று பெற்றாக வேண்டும். விலங்குகளை வதைக்கும் நோக்கத்துடன் வேண்டுமென்றே அவைகளை முடமாக்குகிறவர்களுக்கும் அல்லது அவைகளுக்கு விஷம் வைக்கின்றவர்களுக்கும் அல்லது அவைகளைப் பயனற்றவைகளாக செய்பவர்களுக்கும் தக்க தண்டனை அளிக்க மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

மசோதாவை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும் பிரேரணையை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

MR. SPEAKER : Motion moved—

" That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be taken into consideration."

[a] Published in *Fort St. George Gazette*, dated 15th February 1958, Passed by the Legislative Council at its meeting on 17th and 18th March 1958.

[3rd April 1958

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be referred to a Select Committee."

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be referred to a Select Committee."

**SRI M. KALYANASUNDARAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தமாதிரி மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்று 1953-லேயே மத்திய சர்க்காரிலிருந்து யோசனை தந்தார்கள். இப்பொழுது 1958-ல் இந்த மசோதா வந்திருக்கிறது. மசோதாவின் நோக்கம் என்னவோ மிகவும் பாராட்டத்தகுந்தது. சீரிய நோக்கம் தான். விவசாயத்திற்கு மனித உழைப்பு எவ்வளவு முக்கியமோ அதே போலே இவைகளின் உழைப்பும் மிக முக்கியமானது என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது. ஆனால் சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறுமா என்பதில்தான் சந்தேகம். மேலும் நம் ராஜ்யத்திலே அத்தகைய கொடுமைக்கு இவைகள் ஆளாகின்றனவா என்று யோசிக்கவேண்டும். ஐந்து வருஷத்திற்கு பிறகு சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியம் என்ன? இவையெல்லாம் எனக்கு பல சந்தேகங்களை கிளப்புகின்றது. இதன் மூலம் கிராமப்புறங்களிலே கால்நடை நல்ல முறையிலே அபிவிருத்தி அடைய இந்த சட்டம் உதவி செய்யுமா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மற்ற உதவிகளெல்லாம் சர்க்கார் செய்ய வேண்டியது நிறைய இருக்கின்றன. அதைப்பார்க்கும்போது அவர்கள் கொடுக்கக்கூடிய வசதிகள் மிகக் குறைவாகத்தான் இருக்கிறது. இப்பொழுதே போதுமான கால்நடை வசதிகள் இல்லாமல் விவசாயிகளும், போதுமான உணவுப்பொருள்கள் கிடைக்காமல் கால்நடைகளும் கஷ்டப்படுகின்றன. பஞ்சப் பிரதேசங்களில் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் பஞ்சப்பிரதேசத்தில்தான் கால்நடை அபிவிருத்தி சாத்தியமாகும். இந்த வருஷத்தில் கூட திருச்சியில் வட பகுதிகளிலும், சேலம் ஜில்லாவில் பெரும் பகுதிகளிலும் எருதுகளுக்கு தீனி கிடைக்காத கஷ்டமான நிலைமை இருக்கிறது. வைக்கோல் பிண்ணாக்கு முதலியவை கிடைப்பது அரிதாகிக்கொண்டிருக்கிறது. காடுகளில் மேய்ச்சலுக்குகூட அதிகாரிகளின் தொந்தரவு அதிகமாக இருக்கிறது. அங்கெல்லாம்தான் கால்நடை வளருமே தவிர இந்த சட்டம் இயற்றுவதால் கால்நடை வளரும் என்று நம்புவதற்கில்லை. ஆனால் கன்றுக்குட்டிகளை எடுத்து சாப்பிடும் பழக்கம் இருக்கிறது. ஒருக் கால் இந்த சட்டத்தால் கன்றுக்குட்டிகள் மிச்சமாகும். இந்தச் சட்டம் விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் முறையில் இல்லாமல் அவர்களுக்கு இம்சை கொடுக்கக்கூடிய முறையில் அமையுமோ என்று சந்தேகிக்கிறேன். மதுவிலக்கு சட்டத்தால் விசேஷ பலன் ஏற்பட்டு விடவில்லை. அதேபோல் இம்மாதிரி சட்டம் கால்நடையை பாதிக்கும் என்றே நினைக்கிறேன். எஸ். பி. ஸி. ஏ. இன்ஸ்பெக்டர்கள், அவர்களுக்கு புண்கழுத்து இன்ஸ்பெக்டர்கள் என்றே வழங்குகிறது. இவர்கள் செய்யும் நன்மையைவிட தொந்தரவே அதிகம். இவர்களைக்கண்டாலே விவசாயிகளுக்கு பயம். புண்கழுத்து மாடுகள், லாடமில்லாத மாடுகள் வேலை செய்வதும் ஒன்றும் நிறுத்தப்படுவதில்லை. ஆனால் இதனால் இந்த இன்ஸ்பெக்டர்களுக்கு ரூபாய் 5–10 கிடைக்கிறதே அன்றி உண்மையில் கஷ்டப்படும் கால்நடைகள் வேலையில் இருந்து ஓய்வு பெறுவதில்லை. விவசாயிகள் இவர்களுக்கு பணம் கொடுக்கும் தொந்தரவுதான் மிச்சம்.



3rd April 1958] [Sri M. Kalyanasundaram]

வட இந்தியாவில் வகுப்புக்கலவரம் காரணமாக பசு வதை செய்வதை தடுக்க வேண்டிய அவசியம் இருந்தது. வகுப்பு வெறிகள் அங்கு அதிகம். ஆனால் தமிழ்நாட்டில் மாட்டு இறச்சியை உண்பவர்கள் கிடையாது. அதுவும் உயிரோடு இருக்கும் மாடுகளைக் கொன்று இறைச்சி தின்னமாட்டார்கள். செத்த மாட்டின் இறைச்சியை கிராமபுரத்திலே சிலர் உண்பார்கள். அந்தமாதிரி பாகுபாடு செய்து ஏதாவது தடை செய்தால் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ள முடியும், ஆகவே இந்த சட்டம் கால்நடை செல்வத்தை வளர்க்கும் என்று ஒப்புக்கொள்ள முடியாது. அதுவும் சர்டிபிகேட்டு வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறது. பத்து வயது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம் நாட்டிலே மனிதன் சாராசரி வயதே மிகக் குறைவு. எருது மற்றவைகளின் வயது ரொம்பவும் குறைவு. மூன்றில் இருந்து ஆறு வயது வரைதான் மாடுகளுக்கு நல்ல பருவம் என்று கொள்ளலாம். பத்து வயதுக்குப் பிறகு அடிக்கலாம், கொல்லலாம் என்பதானது அர்த்தமற்றதாக இருக்கிறது. சர்டிபிகேட் வாங்குவது என்பது கால்நடையை பாதிக்கக்கூடியதாகவே அமையும் கால்நடை செல்வத்தை அபிவிருத்தி செய்ய உதவியாக இருக்காது என்பதே என்னுடைய கருத்து. சர்டிபிகேட் மறுக்கப்பட்டால் அப்பீல் கவர்ன்மெண்டு வரைக்கும் இருக்கிறது. இது மிகவும் முக்கியமான விஷயம். இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கலெக்டருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்திருக்கலாம். 5-10 p.m. கலெக்டருக்குக் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்து விட்டு அதன் மேல் வரக்கூடிய அப்பீலை முடிவு செய்வதற்கு உள்ள அதிகாரத்தை கலெக்டருக்குக் கொடுத்தால் விவசாயிகளுக்குத் தொந்தரவு இல்லாமல் இருக்கும். இந்தச் சட்டம் அவசியமா இல்லையா என்பதைப்பற்றி நிர்ணயம் செய்ய வேண்டியது இல்லை. இதை சட்டமாக்குவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. இதை சட்டமாக்கினால் இது சரியான படிக்கு அமுலாக்கப்படுமா என்பதுதான் என்னுடைய சந்தேகம். இதை நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமானால் இந்த சட்டத்தைப் பற்றி கிராமங்களில் டாம் டாம் மூலம் பிரசாரம் செய்து இதைப் பற்றி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட ஒரு சட்டம் இல்லாமலேயே இந்த சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்த சட்டத்தை நிறைவேற்றிய பிறகாவது இதைப்பற்றி டாம் டாம் மூலமாக கிராமங்களில் பிரசாரம் செய்ய வேண்டும். நான் சொன்ன யோசனைகளை ஏற்றுக் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் கைவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இதை நிறைவேற்றத்தான் போகிறார்கள். இதை நிறைவேற்றுவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. இந்தச் சட்டம் விவசாயிகளைக் கொடுமைப்படுத்தாத வகையில் இதை நிறைவேற்றி அமுலுக்குக்கொண்டு வரவேண்டும். இந்தச் சட்டத்தைப்பற்றி கிராமங்களில் டாம் டாம் செய்த பிறகு இதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற யோசனையைக் கூறிக்கொண்டு நான் முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. T. DANIEL : Mr. Speaker, while supporting this Bill, I will make a few suggestions. The object of the Bill is to provide for the preservation of certain animals by regulating the slaughter thereof. "Animal" is defined in clause 2 as "a bull, bullock, cow, calf, he-buffalo or she-buffalo or buffalo-calf." I suggest that it must also include 'sheep'. "Sheep" according to the general understanding is called the poor man's cow. So, sheep also should be brought within the definition of 'animal'. As sheep is also of the same species as cows it also must come within the definition of "animal".

[Sri T. T. Daniel] [3rd April 1958

I would like to draw the attention of the Hon. Minister to another matter. The competent authority to be appointed under clause 3 for executing any of the functions under the Act has got the power to enter and inspect anybody's premises. So anybody's premises can be entered by those people who can conduct an inspection of the premises if they have got any reason to suspect that any offence under the Act is likely to be committed. Thus a very wide power is given to the competent authority under this Bill. The power given to that authority in relation to search and inspection seems to be unfettered and unrestricted. In view of that, the officer concerned should have certain status and the status of the officer who will be appointed under the Act by the notification should be specifically mentioned. In clause 3, it is stated that the Government may, by notification appoint the Executive Authority or any other authority or person to perform all or any of the functions of a competent authority. "As the Bill now stands, the Government can appoint anybody as competent authority. The Executive Authority has been defined in clause 2. According to this definition, 'Executive Authority' means an Executive Authority as defined in clause (8) of section 3 of the Madras Public Health Act, 1939.' According to the definition in section 3 of the Madras Public Health Act, 1939, Executive Authority means the President or Chairman of the Municipality or any authority who has the executive powers under the District Municipalities Act or the City Municipal Act or the District Boards Act. So, there seems to be some contradiction with regard to the definition. Because, under clause 3, the Government can also appoint any other person other than the Executive Authority. I would therefore suggest that any person who is appointed under this clause must be not below the rank of the Executive Authority under Section 3 of the Madras Public Health Act.

With regard to appeals and revision, the Government have got power *suo moto* to question the legality or propriety of any action taken by the competent authority, even without hearing the aggrieved party in question. I would suggest therefore that if the Government want to pass any order, the aggrieved party must at least be given an opportunity to be heard before an order is passed questioning the legality or propriety of any action taken by the competent authority. Now, clause 4 provides for the prohibition of slaughter of animals without certificate. According to this clause the competent authority can issue a certificate for the slaughter of the animal under certain conditions which are enumerated in sub-clauses (2) and (3). In clause 4 (3) (*a*), it is stated, 'the animal is over ten years of age and is unfit for work and breeding.' It come to this. If the animal is ten years of age and if it is unfit for work and breeding even for a few days, the competent authority can issue a certificate and the animal concerned could be slaughtered. The age-limit is more or less the passport for the animal. I would suggest that the object of the Bill must be that the animal must be permanently incapacitated for work due to age.



3rd April 1958] [Sri T. T. Daniel]

But, as the clause now stands, if the animal is over 10 years of age and if it is unfit for work, a certificate can be issued. It is not stated anywhere that the animal must be permanently incapacitated for work or breeding. This idea does not come in this clause. I would suggest that the Hon. Minister may make it clear by suitable amendment so that the object of the Bill is fulfilled by inserting the word 'permanently' between the words 'is' and 'unfit' occurring in sub-clause (3) (*a*) of clause 4.

* **Sri A. R. SUBBIAH MUDALIAR:** கனம் சபாநாயகர் அவர்களே, காலநடை பாதுகாப்புச் சட்டத்தைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். இது ரொம்பவும் வரவேற்கக்கூடியது. நமக்குக் கால் நடைச் செல்வம் மூலமாக ஆயிரம் கோடிக்கு உரம் கிடைக்கிறது, ஆயி ரம் கோடிக்குச் வேலை மூலமாக வாய்ப்புக் கிடைக்கிறது என்பது சர்க்காரு டைய ஒரு கணக்கு. அதை விட நாம் பசுவை கடவுள் என்று பாவித்து நடத்துகிறோம். பசு வதை என்பதை கனவிலும் காணக்கூடாத முறை யில் நாம் போற்றிக்கொண்டு வருகிறோம். அவைகளை ஆதரிக்க வேண் டியது அவசியம்தான். ஆனால் சட்டத்தைப் புறக்கணிக்கக்கூடிய நிலை மையில் வழி சில இருந்து கொண்டிருக்கின்றன. அதாவது எங்கள் ஜில்லா வுக்கு அடுத்தாற்போல் அதாவது செங்கோட்டை கழிந்தவுடன் திருவாங் கூர் ஸ்டேட் வருகிறது. கொல்லம் ஊருக்கு எங்கள் கிராமம் வழியாக தினம் ஆயிரக்கணக்கான மாடுகள் ஸ்லாட்டருக்குக் கொண்டு போகப்படுகிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக நம்முடைய தமிழ் நாட்டில் தடை விதிக்கப்படு கிறது. அடுத்துள்ள ஸ்டேட்டுக்கு மாடுகள் கொண்டு போவதற்கு யாதொரு விதமான தடையும் இதில் இல்லை. சாதாரணமாக செங்கோட்டை கழி ந்து அடுத்தாற்போல் ராஜகிரகம் என்று கேரள ஸ்டேட்டில் அதிகப்படியாக பசு வதை செய்கிறார்கள். அங்கே இதைச் சாப்பிடக்கூடியவர்கள் ஜாஸ்தி. அப்படிப்பட்ட நிலைமையில் இங்கேயிருந்து அங்கே கொண்டு போவதற்கு எந்தவிதமான தடையும் இந்தச் சட்டத்தில் இல்லை. தங்களைக் சட்டத் திலிருந்து காப்பாற்றிக்கொள்வதற்காக மாடுகளை அங்கே கொண்டு போவ தற்கு வழி ஏற்படுகிறது. ஆயிரக்கணக்கான மாடுகள் போய்க்கொண்டி ருக்கின்றன. அதனால் இந்தப் பக்கங்களில் படு மோசமான மாடுகளுக்குக் கூட நல்ல விலை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கு அடி மாடு என்று சொல்லுவோம். அதனுடைய தோலுக்கு அவ்வளவு மதிப்பு இருக்கி றது. தடை செய்வதற்கு வழி இல்லாவிட்டாலும் பின்னால் விதி ஏற்படுத்தும்போது இதற்கு ஓர் ஏற்பாடு செய்தால் இப்படி கடத்தல் நடப் பதை நிறுத்த வழி ஏற்படும் என்று நினைக்கிறேன். பெரிய பணக்காரர் கள் சொந்த மாடுகள் வாங்குகிறார்கள். பசுக்களை கரவை முடிந்தவுடன் அதைத் தெருவில் அவிழ்த்து விட்டு விடுகிறார்கள். சென்னையில் இதை நாம் சாதாரணமாகப் பார்க்கலாம். சென்னையில் அநேக இடங்களில் அப்படிப் பட்ட மாடுகளைப் பார்க்கலாம். சுமார் 300 அல்லது 400 மாடுகள் தெருவில் கிடக்கும். தீவனங்களைச் சாப்பிட்டுக்கொண்டு திரிந்துகொண்டு போக் குவரத்தை தடை செய்து கொண்டும் இருப்பதைப் பார்க்கலாம். அவை கள் ஸ்லாட்டருக்கு வரக் கூடிய நிலைமையில்கூட இருக்கின்றன. அதற்கு 8–ஆவது க்ளாசில் நல்ல ஒரு விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது "whoever poisons, maims or renders useless any animal with intent to make, or knowing that he is likely to make, such animal fit for slaughter under the provisions of this Act . . ." என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்லாட்டர் செய்யக்கூடிய நிலைமைக்கு மாடுகளை வைத் துக்கொண்டிருக்கிறார்கள். என்று தெரிந்தவுடனேயே, ஆரம்பத்திலேயே 5-20 p.m.
அவர்களுக்கு "பெனல்டி" போடக்கூடிய நிலைமை இருந்தால்தான் நல்ல மாடுகள் வளர்ப்பார்கள். "ஸ்லாட்டர்" ஸ்டேஜுக்கு வந்த பிற்பாடு "பெனல்டி" போடுவதில் பிரயோசனம் இல்லை. ஆரம்பத்திலேயே மாடுகளை ரோடு களில் தற்காப்பு இல்லாமல் அவிழ்த்துவிடுவதை தடுக்க வேண்டும் அதற்கான ஏற்பாடுகளை "ரூல் மேகிங் பவரின்" கீழாவது செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

***Sri M. JAGANNATHAN** : கனம் தலைவர் அவர்களே, இந்த கால்நடைப் பாதுகாப்பு மசோதாவை நான் வரவேற்கிறேன். கனம் அமைச்சர் அவர்கள் சென்ற மாதத்திலே சென்னை நகரில் இருக்கிற பூந்தமல்லியிலே ஒரு கேந்திர கால்நடை கிராம திட்ட விழாவிலே கலந்து கொண்டு பேசினர், நம்முடைய மாநிலத்தில் பசுவதையை தடை செய்வதற்காக கூடிய சீக்கிரம் சட்ட சபையில் நான் ஒரு மசோதாவை கொண்டு வரப்போகிறேன். (5-21 p.m.) நம்முடைய நாட்டிலே பசுக்களை காப்பாற்றுவது இன்றியமையாதது, பசுவை ஹிந்து மத சம்பிரதாயப்படி தெய்வீகமாக, தெய்வத்திற்கு சமமாக கருதுகிறோம். மகாலக்ஷ்மிக்கு சமமாக நாம் கருதுகிறோம். அது மாத்திரமல்ல. கால்நடை வளர்ச்சியில் தமிழரைப் போல உற்சாகம் உடையவர்கள் யாரும் இருக்க முடியாது. ஆண்டாள் அம்மையார் கூட" . . . . குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள் . . . என்று கூறியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் வருடம் தோறும் பொங்கல் விழாவை ஒட்டி பசுக்களை நாம் வெகுவாக கொண்டாடி வணங்குகிறோம். என்றெல்லாம் அந்த கூட்டத்திலே அமைச்சர் அவர்கள் பேசியதாக நான் யத்திரிகையில் படித்தேன். (சிரிப்பு) ஆகவே, இம்மாதிரியான ஒரு உயர்ந்த லட்சியத்தை பாதுகாப்பதற்காக இந்தக் கால்நடைய சம்ரக்ஷணை மசோதா வந்திருப்பதைப் பற்றி நான் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் மற்றொரு விஷயத்தை இந்த அவையிலே கூற விரும்புகிறேன். அதாவது, சில வருஷங்களுக்கு முன்னால் அமெரிக்காவிலிருந்து நமது நாட்டிற்கு ஒரு பெரிய பொருளாதார நிபுணர் வந்தார். நம்முடைய பாரத நாட்டிலே இவ்வளவு தூரம் வறுமை தாண்டவமாடுவதற்கு காரணம் என்னவென்பதை அவர் பரிசீலனை செய்து பார்த்தார். அப்படி பரிசீலனை செய்து பார்த்து கடைசியிலே ஒரு முடிவுக்கு வந்தார். இந்தியாவின் அடிப்படையான வறுமைக்கு சில காரணங்கள் உண்டு என்று அவர் சொல்லியிருக்கிறார். முதல் காரணம் இந்தியாவில் இருக்கிற அதிகமான எண்ணிக்கையுள்ள குரங்குகள். இரண்டாவது, இந்தியாவிலுள்ள அதிகமான எண்ணிக்கையுள்ள கால்நடைகள். மூன்றாவது இந்தியாவில் இருக்கிற ஹிந்து மதத்தைச் சேர்ந்த மக்களுடைய "புட் ஹாபிட்ஸ்" உணவு பழக்கவழக்கங்கள். இந்தியாவினுடைய அடிப்படையான வறுமைக்கு காரணம் இந்த மூன்றும் தான் என்று அவர் எடுத்து கூறினர். நம் நாட்டிலே வறுமைக்கு காரணம் அதிகமான கால்நடைகள் இருப்பது என்று அவர் கூறியிருக்கிறார். நம்முடைய ,நாட்டிலே கால்நடைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்தக் கால்நடைகளின் தரம் அதாவது "குவாலிடி" மோசமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆஸ்திரேலியா நாட்டிலே எவ்வளவு ஆடுமாடுகள், கால்நடைகள் இருக்கின்றனவோ அதைவிட அதிகமாக நம்முடைய நாட்டில் இருக்கின்றன. பசுவதையை தடுப்பதற்கு இந்த மசோதாவை கொண்டு வருகிறோம் என்று சொல்லிவிட்டு, இதோடுகூட ஆண் எருமை, பெண் எருமை, எருமைக் கிடா இவைகளையெல்லாம் சேர்த்து ஒன்றாக இந்த மசோதாவில் கொண்டு வருவது, மேலும் மேலும் கால்நடைகளை அதிகமாக வளர்த்து நம்முடைய நாட்டில் இருக்கும் வறுமையை அதிகப்படுத்துவதற்கு ஒரு காரணமாக இருக்கும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கோ சம்வர்த்தன கமிட்டியார் செய்துள்ள சிபாரிசின் பேரில் மத்திய சர்க்கார் இந்த சர்க்காருக்கு ஒரு நகல் மசோதாவை அனுப்பியதாகவும் அதைப் பார்த்து இவர்கள் இந்த மசோதாவை தயாரித்திருப்பதாகவும், மைசூர் ராஜ்யத்தை விட ஒரு படி அதிகமாகவே இவர்கள் போய் இந்த மசோதாவை தயாரித்திருக்கிறார்கள் என்றும் நான் அறிகிறேன். பசுவதையை மாத்திரம் தடை செய்வதற்கு நாம் இந்த மசோதாவில் வரையறுத்துவிட்டு, எருமைக் கிடாக்களையும் அதனுடைய கன்றுகளையும் இந்த மசோதாவின் குறிக்கோளிலிருந்து நீக்கிவிடுவதற்கு வழி வகை செய்தால் தான், அது பல விதத்திலும் நன்மை பயக்கும் என்று நான் நினைக்கிறேன். நம்முடைய நாட்டில் சில சமூகத்தைச் சேர்ந்தவர்கள்—நான் பெயரைச் சொல்வதற்கு விரும்பவில்லை—இந்தப் பிராணிகளை உணவாக உட்கொள்ளுகிறார்கள். அந்த ஏழை மக்களுக்கு அதிக விலை கொடுத்து மாமிசம்



வாங்கி சாப்பிடுவதற்கு அவர்களுடைய பொருளாதார நிலைமை இடம் கொடுக்கவில்லை. ஆகவே, இந்த மாமிச உணவை அவர்கள் குறைந்த விலையில் வாங்கி உட்கொள்ள ஏதுவாக இருக்கிறது. இந்த மசோதா நிறைவேற்றப்பட்டுவிட்டால் அதை நாம் முழுதும் தடை செய்தவர்களாவோம். அது மாத்திரமல்ல. இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால் நம்முடைய நாட்டிலே இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டிருக்கிற தோல் பதனிடும் தொழில் மிகவும் பாதிக்கப்படும் என்று நான் நினைக்கிறேன். 'ஹைட்ஸ் அண்டு ஸ்கின்ஸ்' பெரும்பாலும் கால்நடைகளிலிருந்து நாம் பெறுகிறோம். நம்முடைய நாட்டின் தேவைக்கு போதிய அளவிலே நம்மால் தோல் உற்பத்தி செய்ய முடியவில்லை. தேவை ஏராளமாக இருக்கிறது. அதற்குத் தகுந்த அளவிற்கு தோல் பதனிடும் தொழிலை நாம் அபிவிருத்தி செய்து, மக்களுக்கு வேண்டிய பொருள்களை தோலினால் செய்துகொள்ள வழி வகைகள்தேட வேண்டும். இந்த நிலைமையில் இம்மாதிரியான ஒரு மசோதாவை கொண்டு வந்து கால்நடை எல்லாவற்றையுமே வதை செய்வதை தடை செய்துவிட்டால், அதனால் பலவித இன்னல்கள் ஏற்படும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய திருத்தத்தில் நான் கொடுத்திருக்கிறபடி, பசவை மாத்திரம், கரவை மாட்டையும் அதனுடைய கன்றையும் மாத்திரம் இந்த மசோதாவின்கீழ் வைத்துக் கொண்டு, இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டிருக்கிற இதர பிராணிகளை, எருமை கிடா அதனுடைய கன்று இவைகளையெல்லாம் விலக்கிவிட்டால், இந்த மசோத உண்மையிலேயே மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். இதனால் நம் நாட்டின் வறுமைக்கு அடிப்படைக் காரணமான கால்நடைகளின் எண்ணிக்கை ஓரளவுக்கு குறைக்கப்பட்டு, தரத்தில் உயர்ந்த கால்நடைகளை நல்ல முறையிலே கேந்திர கிராம திட்டங்கள் மூலமாக நாம் அபிவிருத்தி செய்து, மக்களுக்கு நல்ல சுபிட்சமான வாழ்வை தேடிக் கொடுக்க முடியும் என்று கூறிக்கொண்டு, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

Mr. SPEAKER : As many more hon. Members want to participate in the debate I think there is no point in my sitting some more time to finish this off. I therefore adjourn the discussion on this subject to 3 o'clock on Saturday the 5th April 1958. The idea was that we should meet at half past three for discussion of this subject. But in view of the fact that more members are participating if the house has no objection I shall adjourn discussion on this subject to 3 o'clock on Saturday the 5th April 1958. The revised programme will be sent to all hon. Members. (Most of the members agreed.) I now adjourn the House to meet at 8-30 a.m. on Saturday the 5th April 1958. (5-30 p.m.)

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 533, asked by Sri V. K. Kothandaraman at the meeting of the Legislative Assembly held on 3rd April 1958, page 4 infra.]

### STATEMENT I.

*Statement showing the number of Prohibition cases tried from 1952 to 1957.*

| *Serial number and name of district.* | *Number of cases tried under Prohibition Act.* | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1952. | 1953. | 1954. | 1955. | 1956. | 1957. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 North Arcot .. | 11,320 | 8,175 | 11,061 | 14,389 | 17,873 | 18,146 |
| 2 Chingleput .. | 1,148 | 1,308 | 1,154 | 4,337 | 10,943 | 12,573 |
| 3 South Arcot .. | 682 | 473 | 815 | 3,854 | 9,208 | 8,859 |
| 4 Tanjore .. | 1,592 | 2,377 | 2,871 | 4,883 | 6,448 | 7,617 |
(*c*) & (*d*) No information is available with this Government regarding the number of Harijan students (including Harijan Christians) who were admitted for training in the institution during 1957–58

* 568 *Q.*—MR. SPEAKER : இந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட கனம் மந்திரி வரவில்லை. ஆகவே, இதை போஸ்ட்போன் செய்யலாம்.

### *Teachers Training Schools*

* 571 Q.—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of (i) Teachers' Training Schools and (ii) Pupil Teachers undergoing training, district-war;

(b) how many of the training schools are under Government management; and

(c) where they are located?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) to (c) A statement* is placed on the table of the House.

**Sri A. VEDARATHNAM** : இந்தப் பள்ளிகள் எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது, ஜனத்தொகை அடிப்படையிலா அல்லது தேவைக்குத் தகுந்தபடியா? ஜில்லாவிற்கு ஜில்லா வித்தியாசம் இருப்பதால் இது எந்த அடிப்படையில் ஏற்படுத்தப்படுகிறது என்று கேட்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : சர்க்கார் ஏற்படுத்துகிற பள்ளிகள் தேவையின் அடிப்படையில் ஏற்படுத்தப்படுகின்றன. தனியார் ஏற்படுத்த முன் வரும்போது, அதற்கு வேண்டிய நிதி வசதி போன்றவைகளை சௌகரியமாக அமைத்துக் கொடுக்கிறவர்களுக்கு இதை ஆரம்பிக்க அனுமதி கொடுக்கப்படுகிறது.

**Sri V. K. KOTHANDARAMAN** : அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்தர பாடசாலையில், ஐந்து, ஆறு பாரங்களில், டீச்சிங் ப்ராக்டீஸ் என்று ஆப்ஷனல் சப்ஜெக்ட் எடுத்து படித்து தேறிய பிறகு அதற்கு மேல் ஒரு வருஷம் படித்து டி.எஸ்.எல்.ஸி. சர்டிபிக்கேட் வாங்கி வருகிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? சமீபத்தில் காலேஜ் எலிஜிபிள் ஸ்டூடன்ட்ஸ் ஒரு வருஷம் ட்ரெய்னிங் சேர வேண்டும் என்ற புதிய உத்தரவை சர்க்கார் இட்டுள்ளதா? அதற்கு காரணம் என்ன?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்தக் கேள்வி மூலக் கேள்வியில் இருந்து எழவில்லை. இருந்தாலும் அங்கத்தினர் அவர்களுக்கு அதை சொல்லிவிடுகிறேன். இந்த டீச்சிங் ப்ராக்டீஸ், டைவர்ஸிபைட் கோர்ஸில் ஒன்றாக நடத்தி வந்தது சரியாக நடைபெறவில்லை. அதனால் நல்ல பயிற்சி ஏற்படவில்லை என்று நிபுணர்கள் அபிப்பிராயம் சொல்லியிருப்பதால் அதை இப்பொழுது எடுத்து விடுவது என்று முடிவிற்கு வரப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்த கமிட்டிகள்கூட அதை சிபார்சு செய்திருக்கிறது. ஆகவே, அதற்கு எந்த விதமான இடமும் கொடுக்காமல் பாஸ் செய்தவர்களை எடுத்து இரண்டு வருஷ பயிற்சி கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது.

**Sri K. ANBAZHAGAN** : இந்த மாநிலத்தில் உள்ள ஏராளமான பயிற்சி பள்ளிகளில் இருந்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் தேர்வு பெற்று வெளி வரும்போது ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் இருக்க வேண்டுமென்ற முறையை ஏற்படுத்துவது பல ஆசிரியர்களுக்கு வேலையில்லாத நிலையை உண்டாக்கி விடுகிறது என்பதை அரசாங்கம் உணருமா? அது குறித்து பரிசீலிக்குமா?

**The Hon. Sri C. SUBRAMANIAM** : அதையெல்லாம் பரிசீலனை செய்துதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது. ஏழாயிரத்து எண்ணூறு ஆசிரியர்கள் ஒவ்வொரு வருஷமும் பயிற்சி பெற்று வெளி வருகிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் வேலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

---

* Printed as Appendix II on pages 264–267 infra.



Sri K. VINAYAKAM : May I know from the Hon. the Minister for Education whether the principle relating to pupil-teacher ratio in high schools and elementary schools is also applicable to the teachers' training schools and if so, what is the ratio between the pupil and teacher in such schools?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir, there is a prescribed ratio as between the number of pupils and the number of teachers in the training schools.

### *Tapioca*

* 572 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the steps taken to improve the tapioca industry; and

(b) whether any facilities have been provided for its export?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) It is presumed that the question relates to the manufacture of sago from tapioca. The recommendations of the Sago Experts Committee for the manufacture of Sago on hygienic lines have been accepted by the Government and are being implemented. The Government of India have extended up to 31st December 1959 the period of protection to Sago Industry against foreign competition by a levy of 35 per cent *ad valorem* import duty on imported Sago. The Sago industry has been made eligible for aid under the State Aid to Industries Act.

The following proposals are also under consideration of the Government :—

(i) Assignment of lands for the cultivation of tapioca to ensure raw material for the industry.

(ii) Grant of assistance for the establishment of a laboratory at Salem for quality control.

(iii) Appointment of an Assistant Director of Industries and Commerce at Salem to be in charge of this industry.

(iv) The deputation of an officer of the Agricultural Department to study the methods of cultivation of tapioca and the manufacture of globules (Sago) in Malaya.

(b) The Government of India have allowed the export of Sago to all destinations except the Portugese possessions.

**Sri N. K. PALANISAMI** : நிபுணர்கள் சொன்ன சிபார்சுகளில் பாக்கி எவ்வளவு அமுலாக்கப்படவில்லை?

**The Hon. Sri R. VENKATARAMAN** : நண்பர் அவர்கள் நிபுணரின் சிபார்சுகளைப் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். எந்த சிபார்சு வேண்டுமென்று சொன்னால் பதில் சொல்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : அமைச்சர் அவர்கள் சொன்னபோது, நிபுணர் கமிட்டியின் சிபார்சு பிரகாரம் மத்திய சர்க்கார் ட்யூட்டி போட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதன் காரணமாக முன்பு இருந்ததைவிட இப்பொழுது அதிகமாக உற்பத்தி பெருகியிருக்கிறதா?

[5th April 1958

THE HON. SRI R. VENKATARAMAN : அதற்கான முயற்சிகள்தான் நடக்கிறது. இப்பொழுது 5,000 ஏக்கரில் டாபியோக்கா நம் ராஜ்யத்தில் உற்பத்தி செய்ய முயற்சி எடுத்து வரப்படுகிறது.

SRI A. GOVINDASAMY : இந்த மரவள்ளி பயிரிடுகிறவர்களுக்கு அரசாங்கம் என்ன சலுகை செய்திருக்கிறது, அல்லது அவர்களுக்கு என்ன சலுகை செய்ய உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுதுதான் சொன்னேன், அதிகமாக உற்பத்தி செய்வதற்கு 5,000 ஏக்கர் ஒதுக்கி வைத்து சாகோ மான்யுபாக்சரிங் அஸோஸியேஷனுக்கு நாமினல் ரேட்டில், ஏதோ பெயரளவில் குத்தகை வாங்கிக்கொண்டு கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : இந்த கிழங்கை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு முன் வருவதற்கு வேண்டி குறைந்த பட்ச விலை நிர்ணயிப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : A separate question may be put, Sir.

### *Jeeps*

* 573 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of jeeps retrenched in the various departments in pursuance of the recommendations made by the Special Officer for Jeeps Enquiry?

THE HON. SRI V. RAMIAH : Seventeen jeeps have been recommended to be retrenched in the various departments. Orders have since issued for retrenching four of them. As regards others, the matter is under consideration of the Government.

SRI M. KALYANASUNDARAM : தேவையில்லாத இடங்களில் இருந்து எடுக்கப்பட்ட ஜீப்களை தாசில்தார்களுக்கு கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI V. RAMIAH : எந்த ஜீப்பும் இதுவரை எடுக்கப்படவில்லை. எப்படி அவைகளை எடுக்கலாம் என்பது பற்றி சம்பந்தப்பட்ட இலாகாக பரிசீலித்து முடிவு செய்யும்.

SRI S. NAGARAJA MONIGAR : இந்த நாடு முன்னேறுவதற்கு சமீப காலத்தில் ஜீப்கள் நமக்கு அளவுகடந்த உதவியாக இருக்கிறது. ஆங்காங்கு சிலவைகள் சரியாக உபயோகப்படுத்தவில்லை . . .

MR. SPEAKER : The hon. Member is giving his opinion. Let him put the question.

SRI S. NAGARAJA MONIGAR : I am putting the question, Sir.

MR. SPEAKER : No, you are not. Please put it as a question.

SRI S. NAGARAJA MONIGAR : ஆங்காங்கு சிலவைகள் சரியாக உபயோகப்படுத்தவில்லை என்று இருந்தாலும் ஜீப்களை நிறுத்தி இன்னும் அதிகமாக தாசில்தார் போன்றவர்களுக்கு கொடுத்து நாட்டின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு செலவு வந்தாலும் அதைச் செலவு செய்வார்களா ?



5th April 1958]

THE HON. SRI V. RAMIAH : நாட்டின் முன்னேற்றத்தை தடை செய்யாமல் வேண்டிய ஜீப்புகள் வேண்டிய அளவு கொடுக்க சர்க்கார் எப்பொழுதும் தயாராயிருக்கிறது.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : ஒரு டிபார்ட்மெண்டிலிருந்து மற்றதொரு டிப்பார்ட்மெண்டிற்கு மாற்றுவதை ரிட்ரென்ச்மெண்ட் என்று நினைக்கிறீர்களா ?

THE HON. SRI V. RAMIAH : உபரியாக இருக்கக்கூடிய ஜீப்களை ஒரு இடத்தில் சேகரித்து வைத்து எப்பொழுது எந்தெந்த இலாகாவிற்குத் தேவையோ அப்படிக் கொடுப்பதுதான் நன்றாகயிருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : ஜில்லா போலீஸ் அதிகாரிகளிடம் இருக்கும் ஸ்டேஷன் வாகன்களை குறைக்கும் யோசனை சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI V. RAMIAH : தனி கேள்வி போட வேண்டும்.

SRI A. GOVINDASAMY : ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீஸர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ஜீப்களை "வித்ட்ரா" செய்ய வேண்டுமென்று பல்வந்தராய் மேத்தா அவர்களின் யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMIAH : அதையெல்லாம் மனதில் வைத்துத்தான் ஸ்பெஷல் ஆபீஸர் பரிசீலனை செய்து சிபார்சு செய்திருக்கிறார்கள்.

SRI K. PERIANNAN : இம்மாதிரி ஜீப்களை ஜில்லா ஹரிஜன அதிகாரிகளுக்கு கொடுத்து ஜில்லாவில் உள்ள ஹரிஜன மக்களின் குறைகளை நிவர்திக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMIAH : எந்தெந்த அதிகாரிகளுக்கு தேவையோ அவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் ஜில்லாவில் இருக்கக்கூடிய எல்லா ஜீப்களையும் ஒரு இடத்தில் சேகரித்து தேவைக்குத் தகுந்தவாறு கொடுக்கப்படும்.

### *Community Development Projects*

* 574 Q.—SRI G. ANNAMALAI MUTHURAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to include Ilupur and Viralimalai areas of the Tiruchirappalli district under the Community Development Project; and

(b) if so, when?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) It is not possible now to say when the National Extension Service Scheme will be extended to the areas in question. They will have to wait for their turn.

SRI G. ANNAMALAI MUTHURAJA : கிராம அபிவிருத்தி திட்டங்களை ஏற்படுத்துவதற்காக வேண்டிய ஆபீஸ்களை அதிகமாக பிற்போக்கான இடங்களில் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. இவ்விதம் இப்போது செய்யப்படுவதில்லை. உதாரணமாக திருச்சியிலிருந்து விராலிமலை, இழுப்பூர் போன்ற இடங்களுக்கு செல்லும் 25 மைல் தூரமும் ஒரே காடாக இருந்து கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட இடங்களில் போகும் போது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாக இது தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன் . . .

[5th April 1958

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு சிறிய பிரசங்கம் செய்யக்கூடாது. கேள்வி மாத்திரம் கேட்கவேண்டும்.

SRI G. ANNAMALAI MUTHURAJA : ஆகவே இந்த இடங்களில் ஆபீஸ்களை ஏற்படுத்துவதற்கு ஏதாவது திட்டங்கள் உண்டா என்பதை அறிய வேண்டுகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் முதலில் சொன்னதற்கு மேல் கூடுதலாக இதில் இப்போது சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

### *Compulsory Elementary Education*

* 576 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the names of areas in the South Arcot district where compulsory elementary education was introduced during 1956-57; and

(b) the number of attendance officers employed in those areas?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Compulsory elementary education was not introduced in South Arcot district during 1956–57.

(b) Does not arise.

### *Co-operative Credit Societies*

* 577 Q.—SRIMATHI A. S. PONNAMMAL : Will the Hon. the Minister for Industries be pleased to the state—

(a) the number of co-operative credit societies in Nilakottai;

(b) the number of such societies which have not applied for loan for over one year from the Central Co-operative Bank and the reasons therefor;

(c) the number of Harijan members in those societies ; and

(d) the number among them who have obtained loans?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 123.

(b) Twenty societies have not applied to the Central Banks for loans during the period as they are either dormant or are having overdues under loans payable to the Central Bank.

(c) & (d) Particulars are not readily available and it may take time to collect the information from all the 123 societies individually.

SRIMATHI A. S. PONNAMMAL : கனம் தலைவர் அவர்களே, ஒரு சில ஸொஸைட்டிகளில் இருந்து பணம் படைத்த விவசாயிகள் குறைந்த வட்டிக்கு பணத்தை கடனாக வாங்கி அதிக வட்டிக்கு மற்ற விவசாயிகளுக்கு கொடுத்து வருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவ்விதமென்றால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த விதமாக யாராவது செய்வார்களானால், அவர்களுடைய பெயர்களை எழுதி அனுப்பினால் அவர்களுக்கு கொடுக்காமல் இருப்பதற்கு வேண்டிய முயற்சிகளை செய்யலாம்.



5th April 1958]

SRI V. K. KOTHANDARAMAN : இந்த நிலக்கோட்டையில் இருக்க கூடிய நாணய சங்கங்களில் எத்தனை சங்கங்களில் போதிய நாணயம் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லா சங்கங்களிலும் போதிய நாணயம் இருக்கிறது. அதை வைத்துக்கொண்டுதான் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : கோவையிலுள்ள சங்கத்திற்கு நாணயம் இருக்கிறதா ?

MR. SPEAKER : கேள்வி அவுட் ஆப் ஆர்டர்.

### *Stage Carriage Buses*

* 578 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the daily mileage of stage carriage buses has been revised in January 1958;

(b) if so the details thereof ; and

(c) the reasons for this revision ?

THE HON. SRI V. RAMIAH : (a) Yes, Sir.

(b) (1) Ordinary stage carriages running on roads in the plains and a stage carriage plying partly on roads in the plains and partly on ghat roads shall be allowed a daily mileage not exceeding 180 miles.

(2) A stage carriage used as an Express Bus on a permit for Express Stage Carriage, granted by the State Transport Authority, Madras, shall be allowed a daily mileage not exceeding 250 miles.

(c) The increase was based on the recommendation of the State Transport Advisory Committee meeting held on 26th September 1957.

### *State Bank of India*

* 580 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the answer given to Question No. 109 on 14th February 1958—

(a) the places where the new branches of the State Bank are to be opened in the State;

(b) whether these branches will undertake all banking business;

(c) the number of such branches still to be opened during the Second Five-Year Plan period ; and

(d) the places where they are to be opened?

[5th April 1958

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The 17 centres are the following :—

1 Ambasamudram.
2 Arni.
3 Atur.
4 Dharapuram.
5 Kallakurichi.
6 Karaikudi.
7 Palni.
8 Rajapalaiyam.
9 Saidapet.
10 Sivaganga.
11 Srivaikuntam.
12 Tenkasi.
13 Tindivanam.
14 Tiruthuraipundi.
15 Tiruvallur.
16 Tiruvarur.
17 Villupuram.

Out of these, branches have been opened at Arni and Atur with effect from 10th March 1958.

(b) Yes.

(c) & (d) The State Bank of India have informed the Government that some more branches will be opened in the Madras Circle of the Bank, the jurisdiction of which extends over the States of Madras, Andhra Pradesh, Mysore and Kerala and that out of these, no definite number has been specifically allotted for the Madras State.

SRI A. VEDARATHNAM : முன்னமேயே பாங்குகள் இருக்கின்ற இடங்களில் ஸ்டேட் பாங்குகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக பாங்குகள் இல்லாத இடத்திலும் இந்த பாங்குகள் தேவைப்படுகிற இடத்திலும், மேஜர் பஞ்சாயத்து, தாலூகா ஸப்-ஹெட்குவார்ட்டர்ஸ் போன்ற இடங்களிலும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அரசாங்கத்திற்கும் ஸ்டேட் பாங்கு ஏற்படுத்துவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கேள்வி கேட்டதினால் இந்த பதிலை தயாரித்து கொடுத்திருக்கின்றேன்.

SRI S. B. ADITYAN : இந்த ஸ்டேட் பாங்க் இந்த தமிழ் நாட்டில் சம்பாதிக்கிற லாபத்தை எல்லாம் டெல்லிக்குக்கொண்டுப் போகிறார்களா ? அல்லது தமிழ் நாட்டிலேயே செலவு செய்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Does not arise, Sir.

SRI M. JAGANNATHAN : திண்டிவனத்தில் எப்போது ஸ்டேட் பாங்கு திறக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஸ்டேட் பாங்கு எப்போது திறக்கவேண்டும் என்று முடிவு செய்கிறார்களோ அப்போது திறக்கப்படும்.



5th April 1958]

*State Transport Advisory Board*

* 581 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any representative of the students in the State Transport Advisory Board?

THE HON. SRI V. RAMIAH : No, Sir.

SRI N. K. PALANISAMI : இந்த போர்டில் மாணவர்களின் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்றிருக்கிறது, ஆனால்

MR. SPEAKER : The hon. Member must put the question. If not he will resume his seat.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister who are the Members of the Advisory Board?

THE HON. SRI V. RAMIAH : There are a large number of members, Sir. But I shall say that Members of the Legislature find a place there. Transport interests and Class 1 Officers are also there.

SRI A. GOVINDASAMY : சென்னையில் ஓடுகின்ற பஸ்களை சம்பந்தப் பட்ட போர்டில் மாணவர்களின் பிரதிநிதிகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதில் ஆண் மாணவர்களும் பெண் மாணவர்களும் இருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMIAH : நான் அப்படி சொல்லவில்லை, இதைப்பற்றி எனது சக மந்திரி அவர்களுக்கு கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள்.

SRI K. VINAYAKAM : Is the Hon. Minister aware of the fact that this State Advisory Transport Board has been doing very good and utilitarian service which has been much appreciated by the Director of Transport, Madras?

THE HON. SRI V. RAMIAH : I would like to know which Board the hon. Member means, whether it is about the Board under my control or under the control of my colleague, Sir?

MR. SPEAKER : Since he has put the question to you, it relates to the Board under your control.

THE HON. SRI V. RAMIAH : Sir, as far as the Board under my control is concerned, it is doing very good work.

SRI K. ANBAZHAGAN : இங்கு இந்த கேள்விக்கு தரப்பட்டிருக்கிற தலைப்பு ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் என்று. இதை ரோட் ட்ரான்ஸ்போர்ட் என்றிருந்தால் இந்த குழப்பம் ஏற்பட்டிருக்காது என்று நம்புகிறேன். ஆகவே இவ்விதம் மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமா ? அரசாங்க போக்குவரத்துக்கு ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் என்றும் வெளியிலுள்ளவைகளுக்கு ரோட் ட்ரான்ஸ்போர்ட் என்று வைத்துக்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI V. RAMIAH : இந்த தலைப்பினால் சென்னையிலிருக்கின்றவர்களுக்குத்தான் இந்த குழப்பம் ஏற்படுகிறது. சென்னைக்கு வெளியே இருக்கின்றவர்களுக்கு இந்த குழப்பம் ஏற்படுவதில்லை.

[5th April 1958

SRI A. GOVINDASAMY : இந்த கமிட்டியில் சட்டசபை எதிர்கட்சி அங்கத்தினர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMIAH : நிச்சயம் இடம் பெற்றிருக்கிறார்கள், கனம் அங்கத்தினர் அவர்கள் பக்கத்தில் இருக்கும் கல்யாணசுந்தரம் அவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள்.

*Salaries of Government employees*

* 583 Q.—SRI A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the amount spent by the Government towards the salaries of the State Government employees; and

(b) the percentage of this amount to the total expenditure of the State?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) The total expenditure on the pay and allowances of the State Government employees based on the Revised Estimates for 1957-58 will be about Rs. 1,978 lakhs.

(b) The percentage of this amount to the total expenditure of the State on Revenue Account is about 30 per cent (excluding Travelling Allowance).

SRI A. VEDARATHNAM : இந்த சதவிகிதம் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இந்த செலவை குறைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போதிருப்பதை காட்டிலும் கூட்டவேண்டும் என்று எதிர்கட்சிகள் எல்லாம் முயற்சி செய்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எப்படி குறைப்பது என்று தெரியவில்லை.

SRI P. S. CHINNADURAI : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் ஊழியர்களுடைய சம்பளங்களை உயர்த்திக்கொடுக்கவேண்டுமென்று இந்த சர்க்கார் பைனான்ஸ் கமிஷனிடம் ரிப்போர்ட் கொடுத்திருக்கின்றார்கள். அதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுத்தால் இந்த சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு இந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த கேள்விக்கும் சம்பள உயர்வுக்கும் சம்பந்தம் இல்லை.

MR. SPEAKER : The hon. Member is entitled to put this question, because—I must explain my position clearly—in the last few days I have disallowed certain questions, but the Hon. Ministers were willing to answer them. They were eager to answer. But when I allow a question, the Hon. Minister says " this does not relate or arise ".

Next question No. 584 may now be put.

*Traffic signals*

9-10 a.m. * 584 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal to instal automatic traffic signals at different centres in the Madras City; and

(b) if so, when it will be given effect to?



5th April 1958]

THE HON. SRI V. RAMIAH : (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister whether the automatic signal has reduced the number of accidents? Will the Government consider to instal more automatic signals?

THE HON. SRI V. RAMIAH : Sir, automatic signals by themselves have not been very effective. To keep them effective, we have to post a policeman nearby to see that they control properly. After considering these, we are not encouraging this.

SRI S. NAGARAJA MONIGAR : சென்டிரல் ரெயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில் மோட்டார் முதலிய வண்டிகள் வெகுதூரம் சென்று திரும்ப வேண்டியிருக்கிறது. போக்குவரத்து முன்னேற்றத்திற்காக அதை மாற்றி அமைக்கக் கூடிய வழி ஏதாவது உத்தேசத்தில் இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMIAH : இப்பொழுது ஆட்டோமாடிக் ஸிக்னல்களைப் பற்றித்தான் கேள்வி.

SRI K. ANBAZHAGAN : ஆட்டோமாடிக் ஸிக்னல் வைக்கப்பட்டுள்ள இடத்தில் சென்னை நகரத்தில் ஒரு போலீஸ்காரரால் அதனுடைய அமைப்பு முறையை ஒழுங்கு செய்யமுடியவில்லையாதலால், இரண்டு பக்கங்களிலும் இரண்டு போலீஸ்காரர்கள் இருந்தால் தவறு ஏற்படாமல் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய முடிகிறது. ஆகவே அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI V. RAMIAH : இதையெல்லாம் பரிசீலனை செய்து தான் எல்லா இடங்களிலும் வைத்தால் இந்த ஆட்டோமாடிக் ஸிக்னல் இயங்கி போக்குவரத்துக்கு நன்மை செய்யமுடியாது என்பதால், போலீஸ் காரர்களைப் போட்டிருக்கிறோம்.

SRI K. VINAYAKAM : Were any statistics taken at the particular place where the automatic signal control is located and how does that compare with places where there are no such signals? From these statistics have not the Government come to the view that the mechanical device works much better than the human agency that is expected to control traffic and accidents?

THE HON. SRI V. RAMIAH : As far as statistics are concerned the hon. Member may put a separate question. I will go into it. As far as the utility of these signals is concerned, I believe they are not as effective as we imagined they would be.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that in Calcutta the entire city is controlled by automatic traffic signals and it has proved very effective in that city?

MR. SPEAKER : How does the hon. Member expect the Minister to answer a question about Calcutta? If the Hon. Minister is prepared to answer the question I have no objection.

THE HON. SRI V. RAMIAH : Sir, during my recent visit to Calcutta, I saw not only the automatic signals, but I also saw policemen standing by the side of these signals.

MR. SPEAKER : As the Hon. the Home Minister has not yet come, we will take up the questions addressed to him on Monday.

Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—POINT OF INFORMATION *RE* BUDGET OF THE STATE ELECTRICITY BOARD.

9-20 a.m. SRI R. SRINIVASA IYER: Mr. Speaker, Sir, we find that the Second Supplementary Financial Statement for the year 1957–58 of the Madras State Electricity Board has to-day been laid on the table of the House. Earlier, another statement regarding the Electricity Board was also placed on the table of the House. There was a request that the Electricity Demand and the Electricity Board may be discussed in the Assembly during the Budget discussions. I wish to know if the Members of the Assembly would have an opportunity of discussing the Budget for the Electricity Board.

MR. SPEAKER: If the hon. Member would come to my chamber and state his case, I shall consider.

## III.—CALLING ATTENTION TO THE FAILURE OF THE GOVERNMENT TO MAINTAIN SENDURAI-JAYANKONDAN ROAD IN TIRUCHIRAPPALLI DISTRICT IN PROPER REPAIR.

MR. SPEAKER: The hon. Member Sri K. R. Viswanathan has given notice of a motion calling the attention of the Government to a matter of urgent public importance under rule 40 of the Assembly Rules. I would request him to be brief in explaining his case. On a previous occasion he had taken more than ten minutes to explain his case.

SRI K. R. VISWANATHAN: கனம் தலைவர் அவர்களே, உடையார் பாளையம் தாலுகாவில் செந்துறை-ஜெயங்கொண்டான் சாலை தாலுகா தலைநகரத்தையும் செந்துறை ரெயில்வே நிலையத்தையும் இணைக்கிறது. இந்த சாலையின் நீளம் சுமார் 20 மைல். இந்த சாலையில் இரண்டு பஸ் சர்விஸ்கள் ஓடுகின்றன. இந்த சாலை மாவட்ட கழக நிர்வாகத்தில் இருந்தபொழுது, பல தடவை ஜில்லா இன்ஜினியருக்கு மகசர்களும் விண்ணப்பங்களும் அனுப்பியும், அதனுடைய பராமரிப்பை சரியானபடி கவனிக்காமல் இருந்தார்கள். 4, 5 ஆண்டுகள் ஆனபிறகு ஜெல்லி போட வேண்டுமென்று உத்திரவு வந்தது. அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் அந்த சாலையை சர்க்கார் எடுத்துக் கொள்வதாக முடிவு செய்தார்கள். ஆகையால் மாவட்ட கழகத்தார் அந்த சாலையைப் பராமரிக்கும் கடமையை மறந்தார்கள். ஜெல்லிகூட சேர்த்துவைத்தும் அதைப் பரப்புகிற கடமையை விட்டு, சர்க்காரே எடுத்துச் செய்து விடுவார்கள் என்று நினைத்து அதை அப்படியே விட்டு விட்டார்கள். அவர்களும் துரிதமாக அந்த பராமரிப்பு வேலையை எடுத்துக் கொள்ள முன்வந்தார்கள் இல்லை. இந்த நிலைமையில் இந்த சாலையில் ஓடிக்கொண்டிருந்த இரண்டு பஸ் சர்விஸ்களும் அதிலே செல்லும் பிரயாணிகளுக்கு தொல்லை விளைவித்து, நாள் தோறும் ஒரு பஸ் சர்விஸாவது ஆபத்துக்குள்ளாகாமல் இருக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒரு பஸ் ஸர்விஸ்தான் நிரந்தரமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லும் அளவிலே, ஒன்று ஆபத்துக்குள்ளாகியிருந்தால், அடுத்த நாளிலே அடுத்த பஸ் ஆபத்துக்குள்ளாகும். இம்மாதிரி நிலையில் பல விண்ணப்பங்கள்செய்தும் கூட அங்கு இருந்த ஜில்லா இன்ஜினியர் கவனிக்காமல் இருந்தார். 3–10–1957-ம் தேதியன்று ஒரு பஸ்ஸுக்கு கவிழக்கூடிய நிலையில் ஆபத்து நேர்ந்து, 4, 5 பிரயாணிகளுக்கு காயம் ஏற்பட்டது. இந்த சமாசாரத்தை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், உடனடியாக அந்த சாலையை பராமரிப்பு செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.



THE HON. SRI P. KAKKAN: Mr. Speaker Sir, in April 1956 the Government took over the Sendurai-Jayankondan Road from the control of the Tiruchirappalli District Board. The length of the road is 15 miles seven furlongs. The surface of the road is of Kankar metal for the first eight miles and of laterite metal for the remaining distance. During 1956–57 a sum of Rs. 15,393 was spent by the Highways Department on the maintenance of the road against an average annual expenditure of Rs. 13,500 incurred by the District Board during 1954–55 and 1955–56. During the current year (1957–58) an estimate for Rs. 27,000 for the first eight miles and another for Rs. 14,000 for the second stretch of eight miles of the road have been sanctioned with a total allotment of Rs. 25,712 for expenditure during the current year. The balance of Rs. 15,000 and odd will be spent during the next financial year. The pace of improvement to the road is being stepped up, consistent with the amount available under the maintenance allotment and without detriment to other roads in the area.

The Divisional Engineer (Highways) personally inspected the road on 28th February 1958 and found the road surface to be fair except in certain stretches. The repairs now under execution are in respect of these bad stretches. An expenditure of Rs. 19,112 has been incurred up to 31st January 1958. The Department has taken steps to push through the work and to restore the road to a fair condition.

MR. SPEAKER: The hon. the Home Minister has come. Since I have already announced that his questions would be taken up on Monday. There are six or seven questions and we cannot finish them to-day. If the Hon. Minister has no objection we will take them up on Monday.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes, Sir. I am sorry my train was late by three hours.

MR. SPEAKER: I have already explained your predicament to the House.

## IV. ADOPTION OF THE REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES ("WHAT HAPPENED IN MUDUKALATHUR?" CASE)".

THE HON. SRI C. SUBRAMANIAM: Mr. Speaker Sir, I move—

"That the Report of the Committee of Privileges ('What happened in Mudukalathur?' Case), laid on the Table on 31st March 1958, be approved."

MR. SPEAKER: Motion moved—

"That the Report of the Committee of Privileges ('What happened in Mudukalathur?' Case), laid on the Table on 31st March 1958, be approved."

I am sure we are not going to have a big discussion over this.

**Sri M. KALYANASUNDARAM**: கனம் சபாநாயகர் அவர்களே, இதைப்பற்றி நீண்ட விவாதம் செய்வதற்காக அல்ல நான் இப்பொழுது பேசுவது. இந்த உரிமைப் பிரேரணையை பிரேரேபித்தவன் என்கிற முறையில் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ரிப்போர்ட்டை நான் வரவேற்கிறேன். ஓரளவுக்கு நான் கொடுத்திருக்கிற கருத்துக்களை நிராகரித்திருந்த போதிலும், சில நல்ல யோசனைகளை அந்த ரிப்போர்டிலே கூறியிருக்கிறார்கள். **'The Committee also desires in order that no *mala fide* intention might be attributed, such reports of speeches made in the House should be published without any comments.'**

இந்த சபையில் நடைபெறும் பிரசங்கங்களை பிரசுரிக்கக் கூடிய சமயத்தில், அவற்றை எவ்வாறு பிரசுரிக்க வேண்டுமென்பதற்கு யோசனை சொல்லியிருப்பதோடு கூட, பத்திரிகைகளின் கவலையைப் போக்கக் கூடிய முறையில் சில முடிவுகளைக் கூறியிருக்கிறார்கள். சமீப காலத்தில் இங்கே உரிமைப் பிரேரணைகள் எழுப்பப்பட்டிருப்பதை முன்னிட்டு பத்திரிகைகளுக்குப் பேச்சுக்களை எப்படி பிரசுரிப்பது என்பது சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு கவலை ஏற்பட்டது. அந்தக் கவலையைப் போக்கக் கூடிய முறையில் இந்தப் பகுதியில்: **'Whilst recognising that it is the duty of the House to intervene in case of attacks which may tend to undermine public confidence in and support of the institution of the Assembly itself, this Committee is of opinion that it is also important that the law of Parliamentary privilege should not be administered in a way which would fetter or discourage the free expression of opinion or criticism, however prejudiced or exaggerated such opinion or criticism may be, and the process of Parliamentary investigation should not be used in a way which would give importance to irresponsible statements'**
**9-30 a.m.** இந்தப் பகுதியும் வரவேற்கக்கூடிய அம்சமாக இருக்கிறது. பத்திரிகைகளின் உரிமையை பாதுகாக்கக்கூடிய அம்சமாக இருக்கிறது. நான் பிரேரேபணை கொண்டு வந்ததன் நோக்கம் யாரையும் குற்றம் கண்டு பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அல்ல, இந்த சட்ட சபை நடவடிக்கைகளின் அந்தஸ்தை உயர்த்த வேண்டும் என்பதற்காகத் தான். இந்த ரிபோர்ட்டை சிறந்த முறையில் தயாரித்த கமிட்டியாரை பாராட்டிக் கொண்டு, இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நிதி அமைச்சர் கூறியதை நானும் ஆமோதிக்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் இந்த அறிக்கையை ஆதரித்ததற்கு நான் நன்றி செலுத்துகிறேன். இது சம்பந்தப்பட்ட உரிமைப் பிரச்னை எழுப்பப்பட்ட பிற்பாடு ஜன சக்தி சம்பந்தப்பட்ட உரிமைப் பிரச்னையும் எழுப்பப்பட்டது. அதன் காரணமாக கனம் கல்யாணசுந்தரம் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு இந்த அறிக்கையை வரவேற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பிறரைப் பற்றி குற்றம் சொல்லி விடுவது சுலபம். தாங்கள் அதில் சம்பந்தப்படும்போதுதான் இந்த உரிமைகளைப் பற்றி சரியாக உணர முடிகிறது.

இவைகள் எல்லாம் சபையின் முன் வந்ததன் காரணமாக தெளிவு ஏற்பட்டது பற்றி நான் மிகவும் வரவேற்கிறேன்.

Mr. SPEAKER: The question is—

**"That the Report of the Committee of Privileges ('What happened in Mudukalathur?' Case), laid on the Table on 31st March 1958, be approved."**

**The motion was put and carried.**



**V.—ADOPTION OF THE REPORT OF THE COMMITTEE OF PRIVILEGES *RE* THE DEFINITION OF THE TERM "PRECINCTS OF THE HOUSE".**

The Hon. Sri C. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I move—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

Mr. SPEAKER: Motion moved—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

**Sri M. KALYANASUNDARAM**: இதில் ஒரு யோசனை மட்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ரிபோர்ட் நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்பதில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை. இந்த செக்ரிடேரியட் கட்டிடத்தில் ஒவ்வொரு பகுதியும் குறிப்பிட்டிருக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையை குறிப்பிடவில்லை. சட்ட மன்றம், கமிட்டிகள் அறை, காண்டீன் என்று குறிப்பிட்டிக்கிறபொழுது எதிர் கட்சித் தலைவர் அறையும் சேர்க்கும் முறையில் இதை திருத்த வேண்டும். இதற்காக அதிகாரம் சபாநாயகரிடத்தில் இருக்கிறது.

சட்ட சபை கூடும்போது அங்கத்தினர்கள் இருக்கக்கூடிய அறையை இதில் சேர்க்கவேண்டும். சபாநாயகருக்கு அதிகாரம் இருப்பதால், இவைகளை சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு இதை நான் வரவேற்கிறேன்.

Mr. SPEAKER: The hon. Member must have come to my room and explained all these points to me. Anyhow, I shall consider them.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இந்த அறிக்கையைப் பற்றி பொதுவாக நான் ஒன்றும் சொல்லப்போவது இல்லை. இந்த இரண்டு அறிக்கைகளையும் சமர்ப்பித்த கமிட்டியின் பதவி காலம் முடிவடைந்து ஒரு புதிய கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஒரு வருஷ காலமாக நல்ல முறையில் இயங்கி வந்த இந்த கமிட்டிக்கு சபையின் சார்பாக பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER: The question is—

"That the Report of the Committee of Privileges regarding the definition of the term 'Precincts of the House', laid on the Table on 31st March 1958, be approved."

The motion was put and carried.

**VI.—GOVERNMENT BILLS.**

**(1) THE MADRAS GENERAL SALES TAX BILL, 1958 (L.A. BILL NO. 6 OF 1958).**

The Hon. Sri R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I beg to move—

**"That the time appointed for the presentation of the Report of the Select Committee on the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 8 of 1958), be extended till the middle of November 1958."**

[Sri R. Venkataraman] [5th April 1958

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப் பற்றி இரண்டொரு விளக்கங்கள் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோதாவை பிரேரேபிக்கின்ற போது புது சட்டம் இந்த வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதி அமுலுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். ஆனால் திருத்தக் கமிட்டி கூடிய காலத்தில், அங்கு வந்து சாட்சியம் சொன்னவர்கள் "இதை அவசரமாக நிறைவேற்றக்கூடாது, சிறந்த முறையில் நன்றாக பரிசீலனை செய்த பிறகு தான் கொண்டு வரவேண்டும்" என்று அவர்கள் அபிப்பிராயம் கூறினார்கள். இந்த புது சட்டமானது 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதி அமலுக்கு வந்தால் போதும் என்றும் அபிப்பிராயம் சொல்லப்பட்டது. ஆகவே இப்பொழுது அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : "ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன்". 1-4-1959-ல் புது சட்டம் அமலுக்கு வரும் என்று சொல்வதனால் வியாபாரிகள் பழைய முறையிலேயே கணக்குகளை வைத்திருந்தால் போதுமா என்கிற விவரத்தை தெளிவாக்க வேண்டும்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது 1939-ம் வருஷத்திய சட்டம் அமலில் இருக்கும் என்று சர்க்கார் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். இதைப்பற்றி எந்த விதமான குழப்பமும் இருப்பதற்கு இடம் இல்லை. புது சட்டம் வருகின்ற வரையில் பழைய சட்டமே அமலில் இருக்கும் என்று திட்டவட்டமாக சர்க்கார் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, ஒரு வருஷத்தில் நடுவில் கணக்குகளை மாற்ற வேண்டும் என்று சொன்னால் அதனால் கஷ்டங்கள் வரும் என்ற காரணத்தினால் புது சட்டம் 1959-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : The question is—

"That the time appointed for the presentation of the Report of the Select Committee on the Madras General Sales Tax Bill, 1958 (L.A. Bill No. 6 of 1958), be extended till the middle of November 1958."

The motion was put and carried.

## VII.—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—*cont.*

### DEMAND IV—FOREST DEPARTMENT AND DEMAND XXXIV—CAPITAL OUTLAY ON FORESTS.

**Mr. SPEAKER** : Now, Demand IV—Forest Department and Demand XXXIV—Capital Outlay on Forests will be taken up for discussion and two hours are allotted to them. At 11-30 I will put them to the vote. Then Demand VI—Motor Vehicles Act Administration will be taken up for discussion. Now the Hon. Minister concerned will move his Demand.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 56,56,400 under Demand IV—Forest Department."

"That the Government be granted a sum not exceeding Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests."



5th April 1958]

**Mr. SPEAKER** : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 56,56,400 under Demand IV—Forest Department."

"That the Government be granted a sum not exceeding Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests."

I understand that the Opposition parties have agreed that Sri S. M. Annamalai will move a cut motion to Demand IV—Forest Department and Sri K. Sattanatha Karayalar will move a cut motion to Demand XXXIV—Capital Outlay on Forests. Now they will move their respective motions.

**Sri S. M. ANNAMALAI** : Sir, I move—

"That the allotment of Rs. 56,56,400 under Demand IV—Forest Department be reduced by Rs. 100."

**Sri K. SATTANATHA KARAYALAR** : Sir, I move—

"That the allotment of Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests be reduced by Rs. 100."

**Mr. SPEAKER** : Cut motions moved—

"That the allotment of Rs. 56,56,400 under Demand IV—Forest Department be reduced by Rs. 100."

"That the allotment of Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests be reduced by Rs. 100."

Now the Demand and the cut motions are before the House for discussion.

How much time does the Hon. Minister require for his reply?

**The Hon. Sri M. BHAKTAVATSALAM** : 20 minutes.

**Mr. SPEAKER** : According to the agreement, one Leader from the Opposition can speak for 15 minutes. About one hour and 20 minutes are available for discussion and now the hon. Member Sri S. M. Annamalai will speak.

**Sri S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, காட்டு இலாகா மான்யக் கோரிக்கையின் மீது கொடுத்த வெட்டுப்பிரேரேபணையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இது குறிப்பாக ஜவ்வாது மலையில் வாழும் மக்களைப் பற்றிய பிரச்னையைப் பொறுத்தது. இந்தப் பிரச்னை 2, 3 ஆண்டுகளாக சர்க்காரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. 1954-ம் ஆண்டிலே ரெவினியூ அமைச்சர் அவர்களிடம் ஒரு தூது கோஷ்டி வந்து தங்களுடைய பிரச்னைகளைச் சொன்னார்கள். காட்டு இலாகாவுக்கு சொந்தமான நிலங்களை பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று சொன்ன போதிலும், இது வரையிலும் ஒன்றும் கவனிக்கப்படவில்லை. இதைப்பற்றி காட்டு இலாகா அமைச்சர் அவர்களிடம் சென்ற ஆண்டு பல மனுக்கள் கொடுக்கப்பட்டன. அவைகளும் இது வரை கவனிக்கப்படவில்லை. இப்பொழுதும் அங்கு வசிக்கின்றவர்கள் ஒரு தூது கோஷ்டியாக வந்து தங்கள் குறைகளைச் சொல்லத் தயாராய் இருக்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய மக்களைப்பற்றி, அவர்கள் வாழ்க்கையைப் பற்றி ஒரு சில உதாரணங்கள் சொல்ல விரும்புகிறேன்.

[Sri S. M. Annamalai] [5th April 1958

அங்கு இருக்கும் மக்கள் உண்மையிலேயே கல்வி அறிவு இல்லாதவர்கள். 100-க்கு 99 பேர் படிக்காதவர்கள். அங்கு உள்ள மக்கள் நம்முடைய சட்ட திட்டங்கள் தெரியாதவர்கள். அதற்கு உட்படாமல் இருப்பவர்கள். அங்கு 25,000 பேர் இருக்கிறார்கள் என்று நிதி அமைச்சர் சொன்னார்கள். ஆனால் வாக்காளர் பட்டியலில் 1,000, 1,500 பேர் தான் இருக்கிறார்கள்.

9–40 a.m. அவர்கள் நம்முடைய சட்ட திட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். உதாரணமாக, ஒருவனுடைய மனைவியை வேறொருவன் மணந்தால், அவளுக்குப் பிறந்த குழைந்தைகள், முதலில் மணந்து கொண்டவனின் சொத்துக்களுக்கு உரிமை கொள்ளும். ஆகவே அவர்கள் நம்மிடமுள்ள பந்தங்களுக்கு உட்படாமல் வாழ்க்கை நடத்துபவர்கள்.

ஜவ்வாது மலைமீது ஏறத்தாழ ரூ. 15,000-க்கு சந்தனத் தேன் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். உண்மையிலேயே அப்படிப்பட்ட திட்டம் ஒன்று இருந்தால், அதை நான் வெகுவாக வரவேற்கிறேன். அந்த இடங்களில் சந்தன மரங்கள் அதிகமாக இருக்கிறது. ஆகையால் சந்தனத் தேன் அதிகமாகக் கிடைக்கும். ரூ. 15,000 என், அதற்குப் பல இலட்ச ரூபாய்களையே ஒதுக்கலாம். வேறொன்றும் நான் சொல்லுவேன். அந்தக் காட்டுப் பிரதேசத்தில் நிறைய கடுக்காய் கிடைக்கிறது. ஜவ்வாது மலை வாசிகள் இந்தக் கடுக்காய்களை, கண்டிராக்டர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுத்து விடுகிறார்கள். ஆதலால் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய நல்ல லாபமும் கிடைப்பதில்லை. கண்டிராக்டர்கள் கொள்ளை லாபம் அடைகிறார்கள். ஆகவே, நமது சர்க்கார், தாங்களே இந்தக் கடுக்காய்களை வாங்கி அவர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்ய வேண்டும். மேலும், இந்தக் கடுக்காய்களைக் கொண்டு நல்ல மருந்துகள் கூடச் செய்யலாம் என்று சொல்லுகிறார்கள்.

இன்னொன்று. பல ஆண்டுகளாக புறம்போக்கு நிலங்களை இந்த மக்கள் பயிரிட்டு வந்திருக்கிறார்கள். அவைகளை, அதாவது காட்டிலாகா புறம்போக்குகளை, ரிவின்யூ புறம்போக்காக மாற்றி, உடனடியாக அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டு மென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மந்திரியவர்கள் காடுகளை வளர்க்க வேண்டும் வளர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இங்கே நான் குறிப்பிடும் பிரதேசம் காடு வளர்க்க தகுந்த பிரதேசம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு சொன்னார்கள், தான் 16, 17, 18 தேதிகளில் ஜவ்வாது மலைக்குப் போகிறேன் என்று. அவர்கள் போய்ப்பார்க்கட்டும். பார்த்தால் மட்டும் போதாது. ஒரு இரவாவது, அல்லது இரண்டு நாட்களாவது அங்கே தங்கி, அங்கு இருக்கும் மக்களின் வாழ்க்கையை நேரிடையாகப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அங்கு கிடைக்கும் காட்டுப் பொருள்களைக் கொண்டு அங்கு ஒரு நல்ல தொழிற்சாலையை ஆரம்பிக்க முயற்சிக்க வேண்டும். அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். அமைச்சருடைய வரவை அந்த மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்.

சில சமயங்களில் காட்டு விறகுகளை ஏலம் போடுகிறார்கள். அவர்கள் தனியாக விறகுகளை ஏலம் விடுவது கிடையாது. சில பகுதிகளிலுள்ள பெரிய பெரிய மரங்களை ஏலம் விடுகிறார்கள். ஆனால் ஏலம் எடுப்பவர்கள், ஏலம் விட்ட மரங்களோடு இல்லாமல், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகளின் உதவியைக் கொண்டு பக்கங்களிலுள்ள பெரிய பெரிய பச்சை மரங்களையும் வெட்டி விடுகிறார்கள். அப்படிப்பட்ட வியாபாரிகளை, உடனடியாகக் கண்காணித்து, காட்டிலாகா அதிகாரிகளுக்கும் கூடத் தெரியாமல், ஸி.ஐ.டி.-க்களைப் போட்டு கண்டு பிடித்தால், அவர்கள் பச்சை மரங்களை வெட்டுவதை தடுக்க நம் மாநில சர்க்காரால் முடியும். சேந்தவாசலிலிருந்து சண்பகத்தோப்புக்கு ஒரு பாதை போகிறது. அது படு மோசமாக



5th April 1958] [Sri S. M. Annamalai]

இருக்கிறது. காட்டினுள்ளே போகச் சரியான பாதையாக அதை அமைக்க வேண்டும். அது சண்பகத் தோப்பையும் தாண்டி, வாணியம்பாடி வரைக்கும் போகிறது. அங்கு நிறைய லாரி போக்கு வரத்து இருக்கிறது. ஆகவே, உடனடியாக அந்தப் பாதையை செப்பனிட்டு, அந்த ரோட்டைச் செப்பனிட்டு, நல்ல முறையில் திருத்தினால், மிகுந்த சௌகரியமாக இருக்கும். அங்கு ஒரு டிராவலர்ஸ் பங்களாக்கூட இருக்கிறது, அதுவும் இந்த ரோடு மூலம் தான் சென்று அடைய முடியும். ஆகவே இந்த ரோட்டை நல்ல முறையிலே செப்பனிட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தழை உரம் வெட்டுவதற்காக மரங்களை ஏலம் விடுகிறார்கள். ஆனால் ஏலம் எடுப்பவர்கள், ரேஞ்ஜர்களுக்கோ, அல்லது மற்ற அதிகாரிகளுக்கோ, வண்டிக்கு ரூ. 1 அல்லது 2 வீதம் கொடுத்துவிட்டு, மறை முகமாக, மற்ற மரங்களிலிருந்தும் வெட்டிச் செல்லுகிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லுவேன். விவசாய மக்களுக்கு தழை உரங்களை எடுத்துச்செல்ல, பர்மிஷன் கொடுத்தால் போதுமானது. பாகுபாடுகளை நீக்கி, விவசாய மக்களுக்கு, தழைகள் கிடைக்கச் செய்வது மிக முக்கியமான விஷயம் என்பதைக் கூறிக்கொள்ளுகிறேன். சில சமயங்களில், விவசாயிகள், தும்பைச் செடிகளையும், எருக்கஞ்செடிகளையும் தழைக்கு எடுத்துச் செல்வதை காட்டிலாகா அதிகாரிகள் தடுத்து விடுகின்றனர். விவசாயிகள் தும்பை, எருக்கு போன்ற செடிகளைத் தாராளமாக எடுத்துச் செல்ல அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்குக் கூட இந்த சர்க்கார் விலை வாங்குகிறார்கள். இதை விட்டு விவசாயிகள் தாராளமாக இவற்றை எடுத்துச்செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri M. S. SELVARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, காட்டிலாகா மானியத்தை வரவேற்று சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஸார், சில தினங்களுக்கு முன்பு, இலங்கை சென்று இருந்த போது அங்கு ஒரு இடத்தில் காடுகொன்று நாடாக்கும் முயற்சி நடந்து கொண்டிருப்பதைக் காண நேர்ந்தது. மனிதன் நாகரீகம் அடைவதற்கு எப்படி ஆரம்ப காலத்தில், காடுகளை அழித்து நாடாக்கினானோ, அதே போன்று, இன்றும் நடக்கும் நிகழ்ச்சியை நான் அங்கு பார்த்தேன், இங்கும் பார்க்கிறேன். இந்த நாட்டின் நிலைமை, காட்டை அழிப்பதற்குப் பதிலாக, " நாடு வாழ்வதற்கு, காடு வாழ்க " என்ற சுலோகன், அதிலும் முக்கியமாக தமிழ்நாட்டிற்கு ஏற்ப அமைந்து இருக்கிறது. நமக்கு அமைந்து இருக்கக்கூடிய வசதிகளை நாம் பயன்படுத்திக்கொள்வதற்கு, காடுகள் இருக்கும் பகுதிகளில் என்னென்ன மரங்களை வளர்த்து, அவைகளிலிருந்து கிடைக்கும் பொருள்களை, மதிப்புள்ள பொருள்களாக மாற்றி வாழ்க்கைக்கு உதவியாக்கும் விஷயத்தில், நம் காட்டிலாகா தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்பதைப் பாராட்டுகிறேன். இந்த முயற்சியில், மலைப் பகுதிகள் தவிர, நீர்த்துறைகளில், ஆற்றோரங்களில், இங்கெல்லாம் கூட மரம் வளர்க்கும் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். தாம்பிரபரணி, கால்வாய் ஓரங்களில்கூட தேக்கு மரம் பயிர் செய்யப்படுவதை நான் வரவேற்கிறேன். மற்ற கால்வாய் பகுதிகளிலும் இந்த முயற்சியை தொடர்ந்து நடத்தினால், நல்ல பலன் கிடைக்கும். திருநெல்வேலி ஜில்லாவில் பல மைல்கள் நீளமுள்ள, சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட மணிமுத்தார் கால்வாய் பிரதேசங்களில் மரம் வளர்க்கும் முயற்சியைக் கைக்கொள்ள வேண்டும் என்று கூறிக் கொள்ளுகிறேன். மலைப் பகுதியை மட்டும் நம்பாமல், வேறு பகுதியையும் ரிஸர்வ் பாரஸ்டாக கண்காணிக்கப்படுகிறது. உதாரணமாக, திருச்செந்தூரில் உள்ள குதிரைமொழிக் காடு. அங்கு, அண்டிப் பருப்பு மரங்கள் வளருகின்றன. ஆனால் அது இப்பொழுது டிபார்ட்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகிறது. அதனால் அதிகப் பலன் இல்லை என்று தோன்றுகிறது. அதற்குப் பதிலாக, பொது ஜனங்களே தாங்களாகவே முயற்சி செய்து வளர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தலாம். அவர்கள் வளர்க்கும் ஒவ்வொரு மரத்திற்கும் இவ்வளவு ரூபாய் தந்து விடுவது என்றால், உற்சாகம் ஏற்பட்டு பொறுப்போடு செய்வார்கள்.

9-50 a.m. குதிரைமொழி ரிசர்வ் பாரஸ்ட் மணல் பகுதியான இடம். அந்தப் பிரதேசம் நல்ல விதமாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதைப்போலவே தென்னாட்டிலுள்ள நல்ல மணல் பாங்கான பிரதேசத்தை பாதுகாத்து வருவது ரொம்பவும் அவசியமாக இருக்கிறது. இப்பொழுது மழைகாலங்களில் குதிரைமொழித் தேரியில் அநேகம் இடங்களில் மழை பெய்து அந்த தண்ணீர் வீணாக கடலில் போய் விழுகிறது. அவைகளையெல்லாம் அங்கங்கே அணைக்கட்டி தடுத்து நிறுத்தி வைத்துக்கொண்டால் எவ்வளவோ உதவியாக இருக்கும். அப்படித் தடுத்து வைக்காமல் இருப்பதால் அவைகள் அங்குள்ள தரிசு நிலங்களுக்கு பயன் இல்லாமல் வீணாகப் போய் கடலில் விழுகிறது. அதனால் அங்கங்கே காண்டூர் பண்டுகள் கட்டி அவைகளைத் தேக்கி வைத்து அங்கங்கே பல மண் அணைகளைக் கட்ட வேண்டும். இதைப் பற்றி பல வருஷங்களாக அரசாங்கம் பரிசீலனை செய்து வந்தும் இது வரையிலும் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாகத் தெரியவிவில்லை. வருஷா வருஷம் எந்த அளவுக்கு அதை பாதுகாத்து வைக்க முடியுமோ அந்த அளவுக்கு பாதுகாத்து வைத்தால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். அவைகளை எந்த அளவுக்கு இது வரையிலும் நிறைவேற்றி இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு நிறைவேற்றப்படவில்லை. அதனால் மழை காலங்களில் பெய்யும் மழைத் தண்ணீர் வீணாக கடலில் போய் விழுகிறது. யாதொரு பயனையும் அடைய முடியாமல் அந்தத் தண்ணீர் வீணாகிறது. ஆகவே குறுகிய கால திட்டங்களை அமைத்து அப்படிப்பட்ட தண்ணீர் வீணாகாமல் போவதைத் தடுத்து நிறுத்துவதற்கு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றொரு ஆலோசனையையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டுப் பிரதேசத்தில் மற்ற எல்லா வருஷங்களையும் விட இந்த வருஷம் அதிகப்படியாக மழை பெய்து அந்தத்தண்ணீர் எல்லாம் பயன்படாமல் வீணாகப்போய் கடலில் விழுந்துவிட்டது. மணிமுத்தார் அணை கட்டியபின்பும் பெரும் அளவு தண்ணீர் வீணாகக் கடலில் போய்விட்டது. எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் போய்விட்டது. அந்தத் தண்ணீரைக் குதிரைமொழித் தேரியில் வைத்து பக்கங்களிலுள்ள தேரியின் சுற்று வட்டாரங்களிலுள்ள ஊற்றுகளுக்கு அதை பயன் படுத்திக் கொண்டு அதிகப்படியான மரங்களை வளர்ப்பதற்கு பயன் படுத்திக்கொள்ளலாம். அங்கு சுற்றிலுமுள்ள கிராமங்களுக்கு வசதியாக அந்த தண்ணீரை தேக்கி வைத்துக்கொண்டு ஊற்றுகளின் மூலமாக மரங்கள் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். மருதூர் அணைகட்டிற்கு மேலே மருதூர் மேலக்காடு அடுத்து ஒரு தனி கால்வாயின் மூலம் வீணாகும் தண்ணீரை குதிரைமொழித் தேரியில் கொண்டு தேக்குவதற்கு ஒரு திட்டத்தினால் பரிசீலனை செய்து குதிரைமொழித் தேரியில் மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது பல மரங்களின் மகசூல்களை அனுபவிக்கலாம். மட்டை, ஓலை வெட்டிக்கொள்வதற்கும் குத்தகைக்கு விடுகிறார்கள். அப்படி குத்தகைக்கு விடும்போது ஒரு வருஷத்திற்கு என்று குத்தகைக்கு விடுகிறார்கள். பல வருஷங்களுக்கு குத்தகைக்கு விட்டால் அதனால் அவர்கள் நல்ல பலனை அடைவதோடு அரசாங்கத்திற்கும் நல்ல பயன் கிடைக்கும். ஒரு வருஷத்திற்குக் குத்தகைக்கு விடுவதால் குத்தகைக்காரர்கள் தங்களுடைய ஒரு வருஷ காலத்திற்கு எல்லாவற்றையும் வெட்டிக் கொண்டு விடலாம் என்று மரத்தின் குருத்து முதலிய எல்லா பாகங்களையும் சேர்த்து வெட்டிக்கொண்டு போய் விடுகிறார்கள். அப்படி இல்லாமல் பல வருஷங்களுக்கு அவர்களுக்குக் குத்தகைக்கு விட்டால் ஒவ்வொரு வருஷமும் கொஞ்சம் கொஞ்சமாக ஓலை, மட்டைகளை வெட்டிக் கொள்ளுவார்கள். அதனால் மரத்திற்கும் நல்லது. அவர்கள் கொஞ்சம் சாவதானமாக வெட்டிக்கொள்ளலாம் என்றும் நினைத்துக்கொண்டு மரத்திற்கு சேதம் வரக்கூடிய வகையில் வெட்டி விட மாட்டார்கள். அதனால் ஒரு வருஷ குத்தகைக்கு விடுவதை விட்டுவிட்டு பல வருஷங்களுக்கு



குத்தகைக்கு விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி விட்டால்தான் மரங்கள் வளருவதற்கு ஏதுவாக இருக்கும். அதிகப்படியான மரங்களையும் பாதுகாத்துக்கொள்ள வசதி ஏற்படும்.

நம்முடைய ராஜ்யம் நீண்ட கடற் கரையுள்ள பிரதேசம். மலைப் பிரதேசம் குறைந்த பகுதியில் தான் இருக்கிறது. இந்த மணல் பாங்கான இடங்களில் அதிகப்படியான சவுக்கு முதலிய மரங்களை வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒன்று அரசாங்கமே அந்த வேலையை எடுத்து நடத்தலாம். அல்லது அந்த இடங்களைக் குத்தகைக்கு விட்டு அங்கேயெல்லாம் இந்த மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யலாம். மற்றும் அந்த இடங்களில் எந்த விதமான மரங்களை வளர்க்கலாமோ அந்த அந்த அளவுக்கு மானியம் கொடுத்து மரங்களை வளர்ப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கன்யாகுமரி ஜில்லா, விளவங்கோடு பகுதி, செங்கோட்டை முதலிய இடங்களில் ஏழை ஜனங்கள் காட்டை நம்பி கொண்டு தான் தங்களுடைய ஜீவனத்தை நிரந்தரமாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். காட்டை நம்பித்தான் அவர்கள் வாழ வேண்டியதாக இருக்கிறது. அங்கிருந்து அவர்கள் விறகுகளைக் கொண்டு அன்றாடம் அன்னங்காச்சி சாப்பிட வேண்டியதாக இருக்கிறது. வேறு எந்த விதத்திலும் அவர்கள் தங்களுடைய ஜீவனத்தை நடத்த வில்லை. அவர்களை எந்த விதமாகவும் சட்டமிட்டு காட்டிற்குள் போகக்கூடாது என்று தடுத்து விட முடியாது. காடு இல்லாமல் அவர்களால் ஜீவிக்க முடியாது. அவர்களை நாம் எவ்வளவோ தடுக்கிறோம். அப்படித் தடுத்தும் அவர்களை நிறுத்த முடியவில்லை அதனால் அவர்கள் தவறான முறையில் செல்லுகிறார்கள். அவர்களுக்கு எந்த விதமான மாற்று வழிகளைச் சொன்னாலும் அவர்களால் காட்டிற்குச் செல்லாமல் இருக்க முடியாது. அவர்களுடைய ஜீவனம் பூராவும் காட்டில் தான் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு ஒரு லைசென்சு முறை என்று ஒன்றை வைத்து அதன் மூலம் அவர்கள் காட்டிற்கு சென்று விறகுகளைக்கொண்டு வந்து விற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யலாம்: ஒரு சுமைக்கு ஒரு அணா அல்லது இரண்டு அணா என்று வைத்து வசூல் செய்தால் அதைக் கொண்டு அவர்கள் தங்களுடைய ஜீவனத்தை நடத்திக்கொள்ள வசதியாக இருக்கும். அதைத் தவிர நமக்குக் கிடைத்த கன்யாகுமரி ஜில்லாவில் சிற்சில பகுதிகளில் நல்ல ரகமுள்ள ரப்பர் விளைவதாகத் தெரியவருகிறது. அங்குள்ள எஸ்டேட் காரர்களும் இப்படிப்பட்ட நல்ல ரக ரப்பர்களை வளர்ப்பதற்கு முயற்சிக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. அந்த ரப்பர் மற்ற தேசங்களில் கிடைப்பதைவிட முதல்தரமான ரப்பர் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே அப்படிப்பட்ட ரப்பரை வளர்ப்பதற்கு இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த ரப்பரை வளர்ப்பவர்களுக்கும் நல்ல உதவியும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காட்டிலாகாவில் சிற்சில இடங்களில் தைரியமுள்ள அதிகாரிகள் இருக்கிறார்கள். சில இடங்களில் இப்படிப்பட்ட அதிகாரிகள் கிடையாது. அப்படி தைரியம் இல்லாதவர்கள் அந்த இலாகாவில் பொறுப்பை ஏற்று நடத்தக் கூடியவர்களாக இல்லை. பல இடங்களில் தைரியமாகவும், உத்சாகமுள்ளவர்களாகவும் உள்ள அதிகாரிகள் தேவையாக இருக்கிறது. உத்சாகம் இருக்கக்கூடிய அதிகாரிகள் அதிகப்படியாக தேவைப்படுகிறது. குதிரைமொழி பிரதேசத்தில் இதற்கு முன்னதாக அதிகாரிகள் இருந்தபோது மரங்கள் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு வந்தது. ஆனால் ஒரு வருஷ காலமாக வேறு சில பகுதிகளில் தவறான முறையில் அனாவசியமாக மரங்கள் அழிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்தில் அனாவசியமாக மரங்கள் அழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இதை அரசாங்கம் ஜாக்கிரதையாக கண்காணிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இப்படிப்பட்டவைகளை கண்காணிக்க நான் ஒரு யோசனையைச் சொல்லிகொள்ள விரும்புகிறேன். ஆகவே இம்மாதிரியான அதிகாரிகளுக்கு

[Sri M. S. Selvarajan] [5th April 1958

யோசனை சொல்வதற்கு என்று ஒரு ஆலோசனைக் கமிட்டியை அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு ஆலோசனைக் கமிட்டி எல்லா ஜில்லாக்களுக்கும் தேவைப்படாவிட்டாலும் சில ஜில்லாக்களுக்கு தேவையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இப்படிப்பட்ட ஒரு ஆலோசனைக் கமிட்டியை அமைத்து அங்கங்கே ஜில்லா முழுமைக்கும் ஆலோசனை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு வேலைகளைச் செய்வதோடு மரங்கள் அழிக்கப்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சபையை ஜில்லாவிற்கு ஏற்படுத்துவது ஒருபுறம் இருக்க ஸ்டேட் முழுமைக்கும் ஒரு சபையை அமைத்து இந்த காட்டிலாகாவை பராமரிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ராஜ்யம் பூராவுக்கும் ஒரு கமிட்டியை அமைத்தால் ரொம்பவும் உபயோகமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அப்படி அமைப்பதால் எந்த விதமான தவறும் இல்லை என்று கருதுகிறேன்.

இந்தக் காட்டுப் பகுதியிலும் சரி, மலைப் பகுதியிலும் சரி எவ்வளவோ நல்ல பொருள்களை வளர்ப்பதற்கு நம்முடைய அரசாங்கம் எல்லா விதத்திலும் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பது மிகவும் பாராட்டத் தகுந்தது. அந்த முறையில் ஒரு ஆலோசனையையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது கொச்சின் கொல்லம் போன்ற இடங்களில் வளத்திற்குரிய காட்டுமரங்களை வளர்த்து வருகிறார்கள். நம் பிரதேசத்தில் அவ்வளவு வளர்க்கவில்லை. அவைகள் அங்கிருந்து கீழ் கடற்கரைப் பகுதிக்கு ரயிலிலோ தோணிகளிலோ வருவதனால் அதிகப்படியான செலவு ஆகிறது. அந்தக் காட்டுமரங்கள் நமக்கு அவசியமாக இருக்கிறது. ரயில் மூலமாகவும், தோணிகளின் மூலமாகவும் அவைகள் நமக்கு வருவதால் அதிகப்படியான விலை கொடுக்ககூடிய நிர்பந்தம் நமக்கு ஏற்படுகிறது. அதைப்போன்ற மரங்கள் கீழ் திசையிலேயே நாம் வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் நலமாக இருக்கும. கிழக்கு தொடர்ச்சி மலையிலும் ஸ்ரீவைகுண்டம், வல்ல நாட்டுப் பொற்றை முதலிய இடங்களிலும் இது போன்ற மரங்களை வளர்ப்பதற்கு ஏதுக்கள் இருக்கிறது. இதை ஜாக்கிரதையாக பரிசீலனை செய்து அந்த மரங்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

10 a.m. * **Sri P. M. MUNUSAMI GOUNDER** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் நமது மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் காட்டிலாகா மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகளைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். முக்கியமாக நமக்கு விவசாயம் அவசியம். நமது நாடு விவசாயத்தை நம்பிய நாடு. நம் நாட்டில் விவசாயம்தான் அதிகமாக நடந்து வருகிறது. அதை நாம் நல்ல முறையில் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரவேண்டும். நல்ல முறையில் அதிகமாக விளைச்சலை உண்டாக்க வேண்டியதற்கு நாம் பல வழியில் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அதற்கு நமக்கு காட்டு இலாகா மிகவும் முக்கியமாக இருக்கிறது. அதனால் அந்த இலாகா நமக்கு ரொம்பவும் அவசியம் என்பது எல்லா அங்கத்தினர்களுக்கும் நன்றாகத் தெரியும். இந்த சந்தர்ப்பத்தில் நமக்கு காட்டிலாகாவில் இருக்கும் நிலங்களையும் மற்ற நிலங்களையும் எடுத்து காடாகச் செய்யவேண்டும் என்று சொல்லிக் கொண்டு வருகிறோம். இன்னும் காடுகளை அதிகப்படுத்தவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அப்படி நாம் அதிகப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரும்போது கனம் செல்வராஜ் என்ன சொல்லுகிறார்கள் என்றால் சிலோனில் காட்டிலாகா காட்டை அழித்து நகரங்களாகவும், கிராமங்களாகவும் ஆக்க முயன்று வருவதாக தெரிகிறது, ஏன் அதே மாதிரி நாமும் செய்யக்கூடாது என்று சொல்லுகிறார். அம்மாதிரி நாமும் செய்யவேண்டுமா என்று கேட்கிறேன்.

**Sri M. S. SELVARAJAN** : ஆன் எ பாயின்ட் ஆப் பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன். சிலோனில் காட்டை அழித்து நாடாக்கவேண்டும் என்று ஒரு சுலோகத்தைச் சொல்லிக்கொண்டு காட்டை அழித்து நாடாக்கிக்



5th April 1958] [Sri M. S. Selvarajan]

கொண்டு வருகிறார்கள். அப்படி இல்லாமல் அதற்கு மாற்று சுலோகத்தை அமைத்து நாம் காட்டை வளர்த்தால் நாடு வளரும். நாட்டிலுள்ள காடும் வாழவேண்டும், நாடும் வாழவேண்டும் என்ற சுலோகத்தை நாம் கடைப்பிடிக்கவேண்டும் என்றுதான் சொன்னேன்.

**Sri P. M. MUNUSAMI GOUNDER** : அப்படி அவர் சொல்லியிருந்தால் அதை நான் ஒப்புக்கொண்டு நான் சொன்னதை வாபஸ் பெற்றுக்கொள்ளுகிறேன். காட்டை வளர்த்து நாட்டை முன்னேற்றத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்கு நாம் முயற்சிக்கவேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரா, கேரளம் ஆகிய ராஜ்யங்கள் பிரிவதற்கு முன்னால் நமக்கு காடு எந்த அளவில் இருந்தது, தற்போது நமக்கு அது எந்த அளவில் இருக்கிறது என்பதை பார்க்கும்போது, நாம் ஆயிரக்கணக்கான ஏகராக்கள் காடுகளை அந்த ராஜ்யங்களுக்கு கொடுத்துவிட்டு, குறைந்த அளவு காட்டு பிரதேசத்தைத்தான் நாம் வைத்திருக்கிறோம் என்பதை நம்முடைய புள்ளி விவரங்களிலிருந்து நன்றாக அறிகிறோம். விவசாயத்திற்கு மழை மிகவும் தேவை. தற்போது விஞ்ஞானிகள் காடுகள் இருக்கும் இடங்களில்தான் அதிகமான மழை பெய்கிறது என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். நாமும் அதை அனுபவத்தில் பார்க்கிறோம். அப்படியிருக்கும்போது காட்டை அதிகமான அளவிற்கு உற்பத்தி செய்வதோடு, அதை மேம்படுத்தவேண்டியது நம்முடைய கடமை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மலைப் பிரதேசங்களிலும், காட்டு பிரதேசங்களிலும் நாளுக்கு நாள் வளர்ச்சி குறைகிறதே ஒழிய, வளர்ச்சி அதிகமாக வேண்டிய வசதியில்லை, அதற்கான ஒரு அறிகுறியும் இல்லை என்பதை நாம் பார்க்கிறோம். இந்த காடுகளை பராமரிப்பதற்கு போதுமான மான்யம் கோரப்படவில்லை, இன்னும் இதற்காக அதிகப்படியான மான்யத்தை கோரியிருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். காரணம் விவசாயத்திற்கு மட்டுமல்ல, எதை எடுத்துக்கொண்டாலும் மரம் மிக மிக அவசியம் என்பது நமக்கு நன்றாக தெரியும். நாம் இன்றைக்கு தேக்க மரத்தை வெளி நாடுகளிலிருந்து தருவிக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். அந்த மாதிரி இல்லாமல் நமக்கு இருக்கும் வசதிகளை வைத்துக்கொண்டு, இன்னும் அதிகமான முயற்சி செய்து காடுகளை முன்னேற்றத்திற்கு கொண்டு வரவேண்டுமென்பதை நான் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தக் காட்டிலாகா இதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். ஆனால் சர்க்கார் செய்து வரும் வளர்ச்சியில் நமக்கு சிறிது பலன் குறைவாக இருக்கிறது. அதற்கான ஒரு உபாயத்தை கனம் அங்கத்தினர் ஒருவர் சொல்லிக் காட்டினார். காட்டிற்கு அருகாமையில் இருப்பவர்களிடமே காடுகளை வளர்க்கும் பொறுப்பை கொடுத்து விடுவோமானால், அல்லது காடு உற்பத்தி செய்வதை ஏலத்தில் விட்டால் அது நல்ல முறையில் நடக்கும் என்று அந்த அங்கத்தினர் கூறினார். அது வாஸ்தவம். தனி நபர்களுக்கு கூப்புகளை ஏலத்திற்கு விடுவது போல, காடு உற்பத்தி செய்வதையும், ஒரு ஏகராவுக்கு இவ்வளவு என்பதையும், 5 வருஷம் 10 வருஷம் என்ற காலத்தையும் நிர்ணயித்து அதற்குள் காட்டை வளர்த்துக் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனையுடன் தனி நபர்களிடத்தில் ஏலத்தில் விட்டால், நல்ல முறையில் காடுகள் வளர்க்கப்படும் என்பதில் சந்தேகம் இல்லை. தற்பொழுது "கார்டுகள், வாட்சர்கள்" போன்ற அதிகாரிகளை வைத்து காடுகளை பராமரித்தாலும் அது போதாது. ஏனென்றால், அக்கம்பக்கத்திலிருக்கும் கிராமங்களில் உள்ளவர்கள் மேற்கொண்டு அந்தக் காடுகளை பராமரிக்க வேண்டுமென்ற அக்கரை இல்லாமல் இருக்கிறார்கள். அது சர்க்காரின் சொத்து, தங்களுடைய சொத்து அல்ல என்ற ஒரு மனப்பான்மை அவர்களிடம் இருப்பதனால், இது மாதிரியான சங்கடங்கள் ஏற்படுகின்றன. சர்க்காருடைய சொத்தாக இருந்தாலும் அது தங்களுடைய சொத்துதான் என்ற ஒரு மாற்று மனப்பான்மை அவர்களிடம் ஏற்படும் அளவுக்கு நாம் எந்த ஏற்பாட்டையும் செய்யவேண்டும்.

[Sri P. M. Munusami Gounder] [5th April 1958

அநேக இடங்களில் முக்கியமாக சேலம் ஜில்லா போன்ற இடங்களில் அதிகமான மலைப் பிரதேசங்கள்தான் காட்டுப் பிரதேசம் என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் காட்டுப் பிரதேசங்களுக்கும், மலைப் பிரதேசங்களுக்கும் வித்தியாசம் நன்றாக இருக்கிறது. மலைப் பிரதேசங்களைக் காட்டுப் பிரதேசங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இல்லை. ஆனால் காட்டிலாகா அதிகாரிகள் கொடுத்திருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து மலைப் பிரதேசங்களைக் கூட காட்டுப் பிரதேசங்கள் என்று ஒதுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்களுக்கு சேலம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோதுகூட தெரிய வந்திருக்கும். அந்தப் பகுதியில் ஜமீன்தார்கள் அதிகமாக இருந்தார்கள். ஜமீன்தார்கள் ஏகபோகமாக இருந்த காலத்தில்கூட மக்கள் அந்த மலைப் பிரதேசங்களை நல்ல முறையில் ஆடுமாடு மேய்ப்பதற்கு பயன்படுத்தி வந்தார்கள். தற்பொழுது அவர்கள் அந்தப் பிரதேசங்களை பயன்படுத்திக்கொள்ள முடியாமல் இருப்பதால் அவர்கள் மிகவும் கஷ்டத்தை அனுபவிக்கிறார்கள். காரணம் என்னவென்றால், மலைப் பிரதேசங்களாக இருந்தாலும், சர்க்கார் அதிகாரிகள் அவைகள் காட்டுப் பிரதேசம் என்று காட்டிலாகாவில் எடுத்துக்கொண்டுவிட்டார்கள். அதனால் ஆடு மாடுகள் அந்தப் பிரதேசங்களில் உள்ளே நுழைந்து மேய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அதனால் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் நன்றாகத்தெரியும். மலைப் பிரதேசங்களாக இருக்கும் இடங்களை காடு என்று ஒதுக்கவேண்டிய வேலையே இல்லை. சர்க்காருடைய சொத்தாக இருந்த போதிலும் கூட, ஆங்காங்குள்ள மலைப்பிரதேசங்களில் ஒன்றிரண்டு புல் பூண்டுகள் வளர்ந்தால் கூட அதை பொது மக்கள் ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு வேண்டி உபயோகப்படுத்துவதற்கு விட்டுவிடவேண்டும். அந்தப் பிரதேசங்களை காட்டிலாகா உத்தியோகஸ்தர்களுடைய மேற்பார்வையில் வைத்து அதனால் மக்களுக்கு துன்பம் விளைவிக்கக்கூடிய ஒரு நிலைமையை உண்டாக்கக்கூடாது. சேலம் ஜில்லாவில், அதிலும் வடபகுதியில் ஹோசூர், கிருஷ்ணகிரி தாலூகாக்களில் ஆடு வளர்ப்பது முக்கியமான தொழில். நூற்றுக் கணக்கான வருஷங்களாக அங்கிருக்கும் மக்கள் இந்த ஆடு வளர்க்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் முன்னதாக இந்த மலைப் பிரதேசங்களில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்ததுபோல், இப்பொழுது அந்தப் பிரதேசங்களை அவர்களுக்கே ஆடுமாடுகளை மேய்ப்பதற்கு விட்டுவிட்டால், மிகவும் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படியில்லை என்றால், காட்டிலாகா உத்தியோகஸ்தர்கள் இந்தப் பிரதேசங்கள் செடிகொடிகளை வைத்து வளர்ப்பதற்கு லாயக்காக இருக்கின்றன என்று கருதுவார்களேயானால், அந்தப் பிரதேசங்களில் ஒரு பகுதியையாவது தனியாக ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு என்று ஒதுக்கிவிடவேண்டும். மற்ற பகுதிகளை காட்டிலாகா உத்தியோகஸ்தர்கள் பராமரித்துக்கொள்ளட்டும். அப்படிச் செய்தால்தான் இந்த மக்களுக்கு தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால் இந்தப் பிரதேசங்களில் பிற்போக்கான மக்களும், ஹரிஜன மக்களும் அதிகமாக வாழ்கிறார்கள். அவர்கள் அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். அவர்கள் கூலி வேலை செய்யும்போது அங்கிருக்கும் சில சுள்ளிகளையும், புல் போன்றவைகளையும் தலையில் தூக்கிக்கொண்டு வந்து விற்று ஜீவனம் செய்வார்கள். அவர்களுக்கு இதை விட்டால் பிழைப்பதற்கு வேறு வழியில்லை. ஆகவே, சர்க்கார் இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதனால் இந்த ஏழை மக்களுக்கு பிழைப்பதற்கு ஒரு நல்ல வழி செய்ததுபோல் ஆகும் என்று சொல்லிக்கொண்டு காட்டு இலாகாவில் அதிகமான பட்டாக்கள் கொடுக்காமல் காடுகளை நல்ல முறையில் பாதுகாத்து மேலும் மேலும் வளர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

**Sri K. SATTANATHA KARAYALAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த காட்டிலாகா மான்யக் கோரிக்கையிலே எனது வெட்டுப் பிரேரேபணையின் மீது ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல அவா



5th April 1958] [Sri K. Sattanatha Karayalar]

உறுகின்றேன். குறிப்பாக நான் இந்த வெட்டுப் பிரேரேபணையை கொடுத்த நோக்கம் காட்டிலாகாவில் வனம் வளர்ப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கக் கூடிய நிதி மிகவும் குறைவாக இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவதற்காகத்தான். ஏனென்றால், இன்று எந்த அளவு வனம் வளர்க்கப்பட வேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறதோ, அந்த அளவுக்கு இந்த நிதி பயன்படுமா என்று சந்தேகம் எனக்கு இருக்கிறது. விறகு விலைவாசி இந்த நாட்டில் மிக உயர்ந்திருக்கிறது. சாதாரணமாக மனிதனுடைய வாழ்க்கைத் தரத்தில் மிகப் பெறும் அளவிற்கு பாதிக்கக்கூடிய ஒரு பொருளாக இருப்பது விறகு. அது டன் ஒன்றுக்கு சுமார் ரூ. 80 விலைக்கு மார்கட்டில் தற்பொழுது விற்கப்படுகிறது. இந்த நிலைமையில் விலை கணிசமாக குறைக்கப்படவேண்டுமானால், குறைந்த விலைக்கு விறகு கிடைக்கக்கூடிய ஒரு சௌகரியம் செய்ய வேண்டுமானால், நாம் வன இலாகாவிலிருந்து ஏலத்தில் கொடுக்கக்கூடிய விறகை குறைந்த விலைக்கு மார்கட்டில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். முன்பு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் விறகை கூட்டுறவு சங்கங்களின் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 22 வீதம் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்றும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். காட்டிலாகாவிலிருந்து விறகை ஏலம் எடுக்கக்கூடிய 'தனி நபர்கள் அதை இந்த விலைக்குத் தான் விற்கவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்படவேண்டும். வன இலாகாவிலிருந்து விறகை ஏலத்தில் விற்கும் பொழுது முக்கியமாக கூட்டுறவு சங்கங்கள் மொத்தத்தில் அவர்கள் ஏலத்தில் எடுக்கக்கூடிய விறகில் 75 சதவிகிதம் குறைந்த விலைக்கு விற்கவேண்டுமென்ற ஒரு நிர்ப்பந்தம் இருக்க வேண்டும். அந்த கண்டிஷனில் ஏலம் போடப்பட்டால் ஒரு வேளை சர்க்காருக்கு கிடைக்கக்கூடிய வருவாயில் ஓரளவுக்கு குறைவு ஏற்பட்டாலும், மொத்தத்தில் விறகின் விலை கணிசமான அளவுக்கு இறங்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

கன்யாகுமரி, செங்கோட்டை தாலூகாக்களில் சந்தனக் காடுகள் மிகவும் குறைந்த அளவிற்குத்தான் வளர்க்கப்படுகின்றன. இயற்கையாக பறவைகள் மூலம் பரப்பப்படும் விதைகளினால் மாத்திரம்தான் சந்தனக் காடு வளர்கிறது என்று சொல்லப்படுகிறது. அது ஓரளவு சரியல்ல என்று நினைக்கிறேன். சந்தனக் காடுகள் பல இடங்களிலே சில குறிப்பிட்ட நபர்களால் வளர்க்கப்படுவது எனக்குத் தெரியும். அப்படியிருக்க, அதை வளர்ப்பதற்கான மார்க்கத்தைக் காணவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சர்க்கார் முந்திரிக் காடுகளை வளர்ப்பதற்குக் திட்டமிட்டிருக்கிறார்கள். முந்திரி பயிர் செய்பவர்களுக்கு ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம் நீண்டகால கடன்கள் கொடுக்கப்படுகின்றன. அதை 5 வருஷங்களில் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து வருஷங்களில், முந்திரிப் பருப்பு கொடுக்கக்கூடிய மரமாக முந்திரிச் செடி வளர்ந்துவிடாது. ஆகவே இந்தத் காலத்தை 10 ஆண்டுகளாகவாவது நிர்ணயித்தால்தான் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும். அது தான் அவர்களுக்கு சௌகரியமான தவணையாக இருக்கும். பயிரிலிருந்து பலன் எடுப்பதற்கு முன்பு அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால், இது கடன் உதவியாகவே ஆகாது. விவசாயிகள், நிலத்தில் குழிகள் தோண்டுபவர்களுக்கும், நிலத்திற்கு வேலி போடுபவர்களுக்கும் இதர வேலையாட்களுக்கும் ஆரம்பத்திலேயே பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தக் கடன்களை முன்னதாகக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அவ்வாறு செய்யவேண்டும். ஸெக்யூரிடி வாங்கிக் கொண்டுதான் சர்க்கார் கடன் கொடுக்கிறார்கள். அவ்வாறு கொடுக்கும் கடனை முன்னதாகக் கொடுக்கவேண்டும். கடன் தொகையை 200 ரூபாயாக நிர்ணயித்திருப்பது சரியல்ல. இது மிகவும் குறைவான தொகை. இதை 300-400 ரூபாயாக உயர்த்த வேண்டும். 10-10 a.m.

மேலும் ரப்பர் செடிகளை வாங்குவதற்கு, முன்னதாகப் பணம் கொடுக்கப்படுகிறது. ரப்பரே வளராத இடங்களில் ரப்பரைப் பயிரிடுவதற்கு முயற்சிகள் நடக்கின்றன. இதன் காரணமாக, வாழைபோன்றவைகளைப் பயிரிடுபவர்கள்

[Sri K. Sattanatha Karayalar] [5th April 1958

பலர் நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அந்த நிலங்களில் நெடுநாட்களாகப் பயிரிட்டு வந்தவர்கள் வெளியேற்றப் படுகிறார்கள். கன்னியாகுமரியிலும் செங்கோட்டையிலும் தனிப்பட்டோரின் காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகள் வீணாகாதபடி அவைகளில் முந்திரி மரங்களையும் சந்தன மரங்களையும் வளர்க்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட தனி நபர்களை சர்க்கார் கேட்டுக்கொள்ளவேண்டும். இல்லா விட்டால் அவைகளை சர்க்காரே எடுத்துக்கொண்டு அவைகளில் இந்த மரங்களை வளர்க்கலாம். அதற்குரிய சட்டத்தைக் கொண்டு வரலாம். மேலும், பல மலைகளில் பாறைகளின்மீது மண் மேடிட்டிருக்கிறது. அங்கெல்லாம் நிறையப் புட்கள் முளைத்திருக்கின்றன. அங்கே கன்று-காலிகளை பலர் மேய்ச்சலுக்காகக் கொண்டு போகிறார்கள். அந்தப் புல்களை தீயிட்டு அப்புறப்படுத்தி விடுகிறார்கள். கோடை மழை பெய்தால் மலையில் வெறும் பாறைகள்தான் தெரிகின்றன. அங்கே பசுமையான பயிர்கள் இல்லை. தனி நபர்களின் காடுகளில் மண் அரிப்பை நீக்கி அவைகளை அபிவிருத்தி செய்வதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஏழை எளியவர்கள் பலர் காடுகளிலிருந்து விறகு வெட்டி ஊருக்குக் கொண்டு வந்து அவைகளை விற்றுப் பிழைக்கிறார்கள். அவர்கள் காடுகளில் விறகு வெட்டி அதை தலைச் சுமையாகக்கொண்டுவந்து ஊர்களில் 3–4 அணாவிற்கு விற்கிறார்கள். அவர்களுக்கு நாள் ஒன்றிற்கு உயர்ந்த பட்சம் 8 அணாதான் கிடைக்கும். அவர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தார் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டும்; அவர்கள் காட்டில் விறகு எடுப்பதை அனுமதிக்க வேண்டும். பச்சை மரங்களை வெட்டுவதைத் தடுத்து நிறுத்தத்தான் வேண்டும். உலர்ந்துபோன, பட்டுப்போன, மக்கிப்போன, மரங்களை இவர்கள் காடுகளிலிருந்து கொண்டு போவதை அனுமதிக்க வேண்டும். வேண்டுமானால் இதற்கு "பாஸ்" கொடுக்கும் முறையைக் கொண்டு வரலாம். உலர்ந்து போன மரங்களைத்தான் கொண்டு போகிறார்களா என்று கண்காணித்து அனுமதிக்கலாம். இப்படிப்பட்ட மரங்களை இவர்கள் காடுகளிலிருந்து கொண்டுபோவதால் காடுகள் அழிந்து விடும் என்று சொல்வது சரியல்ல. ஆயிரக்கணக்கான ஏழைப் பெண்மணிகள் இவ்வாறு விறகு விற்று கஷ்ட ஜீவனம் செய்கிறார்கள். அவர்களுடைய பிழைப்பைக் கெடுக்கும் காரியம் எதையும் செய்யக்கூடாது. காடுகளிலிருந்து ஏழை மக்கள் பட்டுப் போன மரங்களை எடுத்துச் செல்வதை அனுமதிக்க வேண்டுமென்று கூறிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

*Sri T. KARIA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, காட்டிலாகாவிற்கான மானிய கோரிக்கையை ஆதரிக்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவில் என் தொகுதியானது பெரும்பாலும் மலைச் சாரலைச் சார்ந்திருக்கிறது. அங்குள்ள ஜவ்வாது மலையில் பெருவாரியான சந்தன மரங்கள் வளருகின்றன என்பது அரசாங்கத்திற்கு தெரியும். இந்தக் காடுகளின்மூலம் சர்க்காருக்கு 50 லட்ச ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது என்பதும் சர்க்கார் கொடுத்துள்ள கணக்கிலிருந்தே தெரிகிறது. அங்கே மாநில முதலமைச்சர் சுற்றுப்பிரயாணம் செய்த போது, அங்கு வாழும் மலைவாசிகளுடைய பல குறைகள் அவருக்குத் தெரிவிக்கப்பட்டன. அந்தக் குறைகள் நாளது வரையில் நிவர்த்தி செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் அமைச்சர் இன்னும் சில தினங்களில் அங்கே சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதாக எங்களிடம் சொன்னார். இது குறித்து சந்தோஷப்படுகிறேன். அங்குள்ள பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு வைத்திய வசதி கிடையாது. மேலும், அவர்களுக்கு போதிய கல்வி வசதியும் இல்லை. காட்டிலாகாவினால் ஒன்றிரண்டு பள்ளிக்கூடங்கள்தான் நடத்தப்படுகின்றன. பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கல்வி வசதியின்றி இருக்கிறார்கள். மேலும், குடி தண்ணீர் வசதியில்லாமலும் அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மலைவாசிகளுக்கு இருக்கும் இந்தக் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டுமென்று அரசாங்கத்தாரைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், அங்கே நீலகிரி மலையைப் போல் 7,000 அடி உயரமுள்ள எலகிரி மலையிலும் பாதை போடுவதற்கான



5th April 1958] [Sri T. Karia Gounder]

திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அது 13 லட்ச ரூபாய் செலவுள்ள திட்டம். அது கனம் மராமத்து அமைச்சரிடத்தில் தங்கியிருக்கிறது என்றும் அதன் காரணமாக நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது என்றும் நினைக்கிறேன். இந்த வருஷமாவது அங்குள்ள பாதையை செப்பனிட வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, காடுகளிலிருந்து சந்தனக்கட்டைகளை சிலர் திருட்டுத்தனமாக வெட்டி எடுத்துக்கொண்டுபோவது கனம் அமைச்சருக்குத் தெரியும். இதைத் தடுப்பதற்கு தீவிர முயற்சி எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக கோர்ட்டுகளில் பல வழக்குகள் போடப்படுகின்றன. ஆனால் சம்பந்தபட்டவர்கள் திறமையாக வாதாடும் வக்கீல்களை வைத்து தப்பித்துக்கொண்டு வந்து விடுகின்றனர். அவர்கள் தப்ப முடியாத வகையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தன மரங்களை ஏராளமாக வளர்க்க வேண்டுமென்று ஸ்ரீ கரையாளர் சொன்னார். சந்தன மரங்கள் இயற்கையாகத்தான் வளருகின்றன. எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் சந்தன மரங்களை வளர்ப்பதற்கு காட்டிலாகாவினர் முயற்சி செய்தார்கள். அவர்கள் லட்சக்கணக்கான சந்தனச் செடிகளை நட்டார்கள். அவை வளரவில்லை. சில இடங்களில் அவை இயற்கையாகவே வளருகின்றன. எங்கள் ஜில்லாவில் அதிகமாக வருவாய் தரும் ஜவ்வாது மலைக்காடுகளில் அவை இயற்கையாகவே ஏராளமாக உண்டாகி வளருகின்றன. அங்கே வந்து நேரில் அந்த சந்தன மரங்களைப் பார்க்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டிருந்தேன். இம்மாதம் 14-ம் தேதி காலை அங்கே வந்து மலை மேல் ஏறி அவைகளைப் பார்க்கப் போவதாக அவர் எங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்; அது சம்பந்தமாக "ப்ரோக்ராம்" கொடுத்திருக்கிறார். காடுகளில் எல்லா மரங்களையும் ஏராளமாக வளர்ப்பதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, இந்தக் காட்டிலேயுள்ள புறம்போக்கு நிலங்களைக் கொடுக்க 10-20 a.m.
வேண்டுமென்று அங்கேயுள்ள மலை ஜாதியார்கள் தொந்தரவு செய்கிறார்கள். காட்டை அழித்துக் கொடுப்பது சிரமம் என்று சில நாட்களுக்கு முன்பு ரெவினியூ அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். காட்டின் ஓரப் பகுதியில் காட்டிலாகா சம்பந்தப்பட்ட பல தரிசு நிலங்கள் காடிலாகாவுக்குத் தேவை இல்லை என்று ஒதுக்கியுள்ள பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலம் உள்ள வடாற்காடு ஜில்லாவிலே சாகுபடிக்கு லாயக்கான நிலங்களை ஏழை எளிய விவசாயிகளுக்குப் பட்டா செய்து தருமாறுகூட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவை காட்டிலாகா சம்பந்தப்பட்ட நிலங்கள். காட்டிலாகா சம்பந்தப்பட்ட நிலங்களை ரெவினியூ இலாகாவுக்கு மாற்றி, ஏழை விவசாயிகளுக்கு மேற்படி நிலங்களைப் பட்டா செய்து தந்தால் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு அது அனுகூலமாக இருக்கும் என்பதையும் அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(இத் தருணத்தில் ஸ்ரீ கே. சட்டநாதக் கரையாளர் தலைமை வகித்தார்.)

பெருவாரியாக அன்ரிசர்விட் காடாக இருந்தாலும் சரி, ரிசர்வ்ட் காடாக இருந்தாலும் சரி, பசுந்தழை உரத்திற்கு மத்தியிலே கொஞ்ச காலம் பண வசதி செய்யப்படாமலிருந்தது. பசுந்தழை உரம் எவ்வளவு விவசாயத்திற்குத் தேவை என்பது நான் சொல்லாமலேயே நமது விவசாய அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். பசுந்தழை உரத்திற்கு அந்த இலாகாவிலேயிருந்து பர்மிட் கொடுக்கும்போது கட்டணம் இல்லாமல் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கிவர சர்க்கார் உத்தரவு செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். எங்களுக்கெல்லாம் காடு வெகுதூரமாக இருந்தாலுங்கூட, நாங்கள் எவ்வளவு தூரமாக இருந்தாலும் சரி தற்சமயம் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகிறோம் என்றால் போட்டா போட்டி ஏற்படுகிறது. காடு ஏலம் போகும் காலத்தில் ஒரு வருஷம் வண்டியொன்றுக்கு ஒரு ரூபாய் என்று வசூலிக்கிறார்கள்.

[Sri T. Karia Gounder] [5th April 1958

இப்பொழுது இரண்டு ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். மூன்று ரூபாய் என்றுகூட வசூலிக்கிறார்கள். அல்லது அப்படி இலவசமாகக் கொடுக்கத் தவறினாலுங்கூட சர்க்கார் ஏதாவது திட்டமாக வரையறுத்து எவ்வளவு தான் வசூல் செய்யவேண்டுமென்று செய்வார்களானால், அந்த ஒரு தொந்தரவு நீங்கும் என்பதையும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பல இடங்களிலே சர்க்காருக்குச் சொந்தமாக உள்ள காடுகளை அழித்து—நண்பர் திரு. எஸ். எம். அண்ணாமலை அவர்கள் சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது—ஏலம் எடுப்பதை விட்டு, ஏலம் எடுக்காத பகுதிகளில் கண்டிராக்டர்கள் வேலை செய்கிறார்கள் என்பது என்னிடத்திலே கூட, புகார் செய்யப்பட்டது. நான் அந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே நேரில் பேசினேன். அவர்களும் திடீரென்று சென்று பார்த்தார்கள். தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி அமைச்சர் அவர்களிடமும் தனியாகச் சொல்லியிருக்கிறேன். இம்மாதிரி பொதுமக்களுடைய சொத்தை, சர்க்காருடைய சொத்தை, தவறுதலாக உபயோகப்படுத்துபவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்க சர்க்கார் தீவிர நடவடிக்கை போலீஸ் இலாகா மூலமாகவாவது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், நாம் எதற்கெடுத்தாலும் போலீஸ் அமைச்சர் அவர்களிடம் ஒவ்வொரு இலாகாவுக்கும் போலீஸ் பாதுகாப்பு வேண்டுமென்று சொல்வதாக நினைக்கவே கூடாது. அந்த இலாகாவிலே சில தவறுதல் இருக்கலாம். இருந்தாலுங்கூட போலீஸ் பாதுகாப்பு இருப்பதாக அவர்களுக்குத் தெரிந்தால் கண்டிப்பாக அவர்கள் அம்மாதிரி செய்யமாட்டார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது விஷயமாக ரெவினியூ அதிகாரிகளிடம் பல தடவை புகார் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கும் வேலையின் நிமித்தம் சரிவர வேலையைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள் என்றுதான் தெரிந்த அளவிலே சொல்லிக்கொள்வேன். இந்த அளவில் அங்கே காடு அழிந்து விட்டால், மழை தவறுவதற்கு அது காரணமாக அமையும். மழை தவறுதலுக்குக்கூட காடு அழிவுதான் காரணம் என்று சொல்கிறார்கள். கனம் அங்கத்தினர் செல்வராஜன் அவர்கள் சொன்னார்கள். இயற்கையாகவே, இலங்கை நாட்டில் கொழும்பு நகரத்தில் மட்டுமல்ல—மழை அதிகமாகப் பெய்கிறதென்றால், ஒரே பச்சைப் பசேல் என்று தேயிலைத் தோட்ட விருத்திதான் காரணம் என்பதை நான் கொழும்பு நகரம் சென்று பார்த்தபோது உணர்ந்தேன். வருஷத்திற்கு 20 அங்குலம், 30 அங்குலம் இங்கே மழை பெய்யும்போது, அங்கே 300 அங்குலத்துக்கு மேல் மழை பெய்கிறது என்றால், அதற்குக் காரணம் அங்கே காடுகள் அழிக்கப்படாமல் இருப்பதுதான் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ஏழை மலைவாசிகளுக்குத் தகுந்த முயற்சியை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வரும்போது எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து என்னுடைய சிறிய உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-25 a.m. * SRI K. GOPALA KOUNDER: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் காட்டிலாகா மான்யத்தில் நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எங்கள் தாலூகாவில் 32 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கர் விஸ்தீரணமுள்ள ,காடுகள் இருக்கின்றன. மேற்படி காடுகள் பஞ்சாயத்தாக இருந்தபோது பத்து காடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காட்டுக்கும் இரண்டு வாச்சர்களும் ஏழு மெம்பர்களும் நியமிக்கப்பட்டு நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தது. பஞ்சாயத்து நிர்வாகத்திலிருந்து இப்பொழுது காட்டிலாகா நிர்வாகத்திற்கு விடப்பட்டிருக்கிறது.



5th April 1958] [Sri K. Gopala Kounder]

எங்கள் தாலூகாவில் நான்கு வாட்சர்களும் இரண்டு கார்டுகளும் நியமித்திருக்கிறார்கள். இந்த 32 ஆயிரம் ஏக்கரா காடுகளை நான்கு கார்டுகளும் நான்கு வாட்சர்களும் பராமரிக்கவேண்டியிருப்பதால், அவர்களால், பராமரிக்கமுடியவில்லை. ஏனென்றால், 20 வாச்சர்களும் 70 மெம்பர்களும் பார்த்துவந்தபோது இருந்த காட்டின் நிலைமை; இப்பொழுது இருக்கவில்லை. காடுகள் பூராவும் அழிந்துவிட்டன. எங்கள் காடுகளில் தேக்க மரமும், செம்மரமும், இன்னும் பல மரங்களும் நல்ல முறையில் இருந்தன. அந்த மரங்களில் ஒன்றுகூட இப்பொழுது இருக்கவில்லை. இப்பொழுது இருக்கும் கார்டுகளும், வாட்சர்களும் இவ்வளவு பெரிய விஸ்தீரணமுள்ள காட்டைப் பராமரிக்க இயலாமலிருப்பதால், ஏற்கெனவே இருந்த எண்ணிக்கையில் கார்டுகளையும் வாட்சர்களையும் அதிகப்படுத்த வேண்டுமென்று நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

கூப் விடுவதிலே ஒரு காட்டில் 400, 500 ஏக்கர் என்று விடுகிறார்கள். அதை இந்த பாரஸ்டர்கள் பார்ப்பதா, அல்லது கன்று வளர்ப்பதை பார்ப்பதா என்று தெரியவில்லை. கன்று வளர்ப்பை அவர்கள் பந்தோபஸ்து செய்யவேண்டியிருக்கிறது. அவைகளுக்குத் தண்ணீர் விட்டும், அவைகளுக்கு ஆபத்து வராமலும் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இதற்கெல்லாம் அதிகமான ஆட்கள் தேவையாக இருக்கிறது.

ஏற்கெனவே பஞ்சாயத்தில் இருந்தபோது காய்ந்த விறகு சுள்ளிகளைப் பொறுக்கவேண்டுமானால், அதற்கு அரையணா வீதம் கொடுத்து பாஸ் பெற வேண்டியிருந்தது. இது ஏழை ஹரிஜனங்களுக்கு சௌகரியமாக இருந்தது. பாஸ் வாங்கி ஒரு சுமை காய்ந்த விறகு சுள்ளிகளைப் பொறுக்கி, அதை விற்று ஜீவனம் செய்ய நல்ல முறையாக இருந்தது. ஆனால், இப்பொழுது அந்த பாஸ் முறை நீக்கப்பட்டிருக்கிறது. அந்த முறையைத் திரும்பவும் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கூப் எடுக்கும் குத்தகைக்காரர் தன் கூப்பை வெட்டுவதோடுகூட, அக்கம்பக்கத்தில் இருக்கும் காட்டு மரங்களை வெட்டி விற்பனை செய்வதற்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அதையும் சர்க்கார் நல்ல முறையில் கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

காடுகளில் வேலை செய்யக்கூடிய வாட்சர்களுக்கும் சம்பளம் ரொம்பவும் குறைவாக இருப்பதால் அவர்கள் வேறுவிதமாகப் பயன்படுத்துவதற்கு அவர்களுக்கு வழி ஏற்படுகிறது. அதேபோல் எங்கள் தாலூகாவில்கூட, நான்கு நாட்களுக்கு முன்னாடி ஒரு கார்டு ஒருவர் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். அவர் காட்டுப் பகுதியை விற்றுவிட்டார் என்று ஏராளமாக அவர்கள் பேரிலே பெட்டிஷன் போட்டு, நடவடிக்கை எடுத்து நான்கு நாட்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். அம்மாதிரி வெளி ஊரிலேயிருந்து பாரஸ்டு கார்டுகளைப் போடாமல் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்களையே போட்டால் அவர்கள் பொதுஜனங்களுக்காவது கொஞ்சம் அச்சப்பட்டு இம்மாதிரி காடுகளை விற்பனை செய்வதற்கு வசதி இருக்காது.

அதோடுகூட, கிழக்கு மேற்கு பகுதிகள் என்று பிரிக்கப்பட்டு, மேற்குப் பகுதியைவிட கிழக்குப் பகுதியில் இருப்பவருக்கு ரூபாய் 12 அதிகச் சம்பளம் போட்டிருப்பதாக தெரிகிறது. அதையும் சம பாகமாகக் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்கள் தாலூகாவில் காடுகள் அதிகமாக இருப்பதால் அங்கு ஒரு கால்நடைப் பண்ணை வைத்து நடத்தினால் கால்நடை உற்பத்தியாவதற்கு நல்ல வசதியாக இருக்குமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கள் தாலூ 10-30 a.m.
காவில் இருந்து திண்டிவனம் தாலுக்காவிற்கு தழை பர்மிட் வாங்க போகவேண்டியதாக இருக்கிறது. திண்டிவனத்திலுள்ள பாரஸ்ட் ஆபீசர் அடிக்கடி காம்பு போய்விடுகிறார். அதனால் விவசாயிகளுக்கு கஷ்டமாகிறது. தழை பர்மிட் கொடுக்கும் விஷயத்தில் அங்கங்கேயுள்ள பாரஸ்ட் கார்டு கொடுக்கும்படியாக செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விறகு சுள்ளி பொறுக்கும் விஷயத்திலும் கவனம் செலுத்தி அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

[5th April 1958

* **Sri G. G. GURUMURTHI :** கனம் சார்மென் அவர்களே, சபைமுன்பு இருக்கும் காட்டு இலாகா மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மாகாணப் பிரிவினைக்குப் பிறகு சென்னை மாகாணத்தில் இருந்த காட்டுச் செல்வம் மிகவும் குறைந்து அண்டை மாகாணங்களுக்குப் போய்விட்டன. இருக்கக்கூடிய காட்டுப் பிரதேசங்களில் எல்லாம் உண்டாகக்கூடிய காட்டுப் பொருள்கள் நம் ராஜ்யத்தினுடைய ஜனததொகையைப் பொறுத்துப் பார்த்தால் போதுமானதாக இல்லை. நம் ராஜ்ய மக்களுக்கு தேவைப்படுகிற எரிபொருள்களை காட்டிலிருந்து எதிர்பார்க்கும்போது போதுமானதாக இல்லை. பலபல மரங்கள் வெட்டப்பட்டு காட்டுச் செல்வம் குறைந்துவருகிறது.

இப்போது இன்னும் ஒருவிதமான ஆபத்தும் ஏற்பட்டிருக்கிறது. அதாவது நகரங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக கிராமப் புரங்களில் உள்ள புளிய மரங்கள் போன்ற பெரிய மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு வருகின்றன. அதிக விலை வருகிறது என்று விவசாயிகளும் அவற்றை விற்றுவிடுகிறார்கள். ஆகவே எரிபொருளுக்கு வேண்டிய இதர உபகரங்களைப்பற்றி கிராமப்புறங்களில் பிரசாரம் செய்து பெரிய மரங்களை வெட்டாமலும், அதிக மரங்களை வளர்ப்பதற்கு வேண்டிய பிரசாரத்தையும் செய்யவேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்னொரு விஷயம். பத்து மைல் சுற்றளவுக்கு பாரஸ்ட் கார்டுகளைப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களால் காட்டில் மரங்களை வெட்டாமல் அவ்வளவு தூரம் பார்த்துக்கொள்ள முடிவதில்லை. மரங்களை திருட்டுத்தனமாகப் பலர் வெட்டுகிறார்களே என்று அதிகாரிகளிடத்தில் சொன்னால் பெரிய தொகுதியாக இருக்கிறது, நாங்கள் எப்படிக் கண்காணிப்பது என்கிறார்கள். அதோடு சட்டத்தில் உள்ள ஒரு குறைபாடும் சாதகமாக இருக்கிறது. அதாவது பாரஸ்ட் ஏரியாவைத் தாண்டிவிட்டால் அப்படி மரங்களை வெட்டிக் கொண்டு போகிறவர்களைத் தடுக்க முடியாது, அரெஸ்டு செய்ய முடியாது என்கிறார்கள். அதோடு அந்த இலாகாவிலுள்ள ஊழியர்களுக்கு மிகவும் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. அந்தச் சம்பளத்தை வைத்துக் கொண்டு அவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்களே சொந்தமாக வெட்டி விற்பனை செய்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்களுடைய சம்பளத்தை அதிகப் படுத்தியாவது சரியான முறையில் காட்டு வளத்தைப் பெருக்க இவர்களை வேலை செய்யும்படியாக நமது சர்க்கார் செய்யவேணடுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பர்கூர் காடுகள் அடர்ந்த பிரதேசம். அங்கே முன்பு பழங்குடி மக்கள் எவ்வாறு விவசாயம் செய்து வந்தார்களோ அதுபோலத்தான் இப்போதும் விவசாயம் செய்து வருகிறார்கள். ஐந்து எக்கருக்குமேல் விவசாயம் செய்யக்கூடாது, மேற்பட்டு இருந்தால் அவர்களை நிலத்திலிருந்து வெளியேற்றவேண்டுமென்பதாக சமீபத்தில் ஒரு சர்க்கார் உத்தரவு வந்திருக்கிறது. இதனால் பெரும்பாலானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். மலைப்பிரதேசத்தில் ஐந்து எக்கரில் ஒரு போகம் மாத்திரம் சாகுபடி செய்து வாழ்க்கை நடத்துவது என்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். அங்கே ஜனப்பெருக்கமும் அதிகமாகிவிட்டது. ஆகவே அவர்கள் நல்லமுறையில் விவசாயம் செய்வதற்குப் போதுமான நிலங்கள் அனுமதிக்கப்பட வேண்டுமென்றுக் கேடடுக்கொள்கிறேன். புறம்போக்கு நிலங்கள் இருந்தாலும் அவைகளையும் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு மலைப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்து கைத்தொழில் நடக்க ஏற்பாடு செய்தால் தான் அங்குள்ள மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரக்கூடும். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் கால்நடை மிகவும் விசேஷமானது. பர்கூர் காளைகள் என்று மிகவும் உபயோகமான ஒரு வகை இருக்கிறது. தற்சமயம் அதை சரியான முறையில் பராமரிக்க தக்க ஏற்பாடு இல்லாததால் அழிந்து வருகிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் கவனித்து ஒரு பண்ணையை ஏற்படுத்தி அந்த வர்க்க மாடுகளைப்



5th April 1958] [Sri G. G. Gurumurthi]

பராமரிக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு பர்கூர் மலையிலிருந்து வருகிற பொருள்களை அந்தியூர் வழியாகத்தான் கொண்டுவரவேண்டியிருக்கிறது. சரியான போக்குவரத்து வசதி கிடையாது. பாரஸ்ட் ரோடில் லாரிகள், மற்ற வண்டிகள் செல்வதற்கு வசதி இல்லை. ஆகவே அந்தியூரிலிருந்து கிர்க்கண்டி வரை பர்கூர் வழியாக ரோடு போடப்படவேண்டும். ராமபுரம், கிர்க்கண்ட பள்ள வரைக்கும் மைசூர் சர்க்கார் ரோடு இருப்பதால் கொள்ளேகாலத்திற்கு நேரான வழி, குறுக்கு வழி ஏற்படும். இதையும் நமது அரசாங்கத்தார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காட்டுச் செல்வத்தை நல்ல முறையில் பராமரிக்க தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்றுக் கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri M. ANANDAN :** கனம் சார்மென் அவர்களே, இந்த இலாகா மானியத்தின்மீது கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நமது ராஜ்யத்திலே ஏராளமான காடுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளை நல்ல முறையில் நமது ராஜாங்கம் பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் குறிப்பாக தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலூகாவில் ஏராளமான காடுகளும், மலைகளும் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள், தரிசு நிலங்கள் எல்லாம் இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட நிலங்களை நமது அரசாங்கம் ஏழை விவசாயிகளுக்கு சாகுபடி செய்யக் கொடுக்கவேண்டும். அடுத்தபடியாக எனது தொகுதியில் பழிஞ்சுபட்டு மலைக்காடு இருக்கிறது. வடக்கே சுவாமிமலை என்ற காடு இருக்கிறது. தெற்கே தலைவாசல் வரையில் 50 மைல் தூரத்தில் ஜாகீர்மலை இருககிறது. அந்த மலையில் இயற்கையாக, தேக்கு, தென்னை, கமுகு, சந்தனம், எலுமிச்சை, இஞ்சி, மரங்களும் இருக்கின்றன. ஏழை ஹரிஜனங்களும், பின்தங்கிய வகுப்பினரும் 10-40 a.m.
ஜாகீர்மலைக்கு மேல் சென்று சுள்ளி பொறுக்கி விற்பது வழக்கம். அப்படி அவர்கள் செய்துகொண்டு வரும்போது, பாரஸ்ட் வாச்சர்களும் கார்ட்களும் அப்படி தலைச்சுமையாய் சுள்ளிகளைக் கொண்டுவருகிறவர்களிடம் இருந்து கோடாலி, கொடுவாள், வெட்டறிவாள் இவைகளைப் பிடுங்கிக்கொண்டு விடுகிறார்கள். ஆனால் சர்க்கார் சொல்கிறார்கள், சர்க்கார் ஏழை ஹரிஜனங்களையும், பின்தங்கிய மக்களுக்கும் சலுகை காட்டுகிறார்கள் என்று. இப்படி பட்டினியாலும் பஞ்சத்தாலும் வாடுகிற மக்களிடம் இருந்து கோடாலி, கொடுவாள் இவைகளைப் பிடுங்கிக்கொண்டு விட்டால் அவர்கள் எப்படி ஜீவனம் நடத்த முடியும். அவர்களுக்கு இந்தச் சுள்ளி முதலியவைகளை விற்பதால் ஒரு எட்டணா கிடைக்கும். ஆனால் இந்த வெட்டறிவாள், கோடாலி இவைகளுக்கு எவ்வளவு ரூபாயாகும் என்று பாருங்கள். ஆகவே, இந்த ஏழை ஹரிஜனங்களும், பின்தங்கிய வகுப்பினரும் இம்மாதிரி சுள்ளி, முள் இவைகளை எடுத்து வருவதற்கு அனுமதிக்கப் பட வேண்டுமென்று சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாகக், காட்டு வாச்சர்கள், காலை ஆறு மணியில் இருந்து மாலை ஐந்து மணி. வரை காட்டில் சுற்றுவது வழக்கம். காட்டிலே காவல் அதிகம். ஆகவே, அவர்களுக்கு கொடுக்கக் கூடிய சம்பளம் போதாது. ஆகவே அரசாங்கம் அவர்களது சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நல்ல உடுப்புகளும் குல்லாவும் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக, என் தொகுதியில் 'காணுங்காடு என்ற காடு இருக்கிறது. அதை நல்ல முறையில் பாதுகாக்க வேண்டும். அதேபோல் கண்ணலைகுன்றுமலை சின்ன மோரை என்ற காடு இருக்கிறது. அது பயனற்றதாகும். அங்கு சர்க்கார் மரங்கள் வைப்பதற்கு லாயக்கற்றதாக அவை இருக்கிறது. அது மணலால் அரிக்கப்பட்ட இடமாகும். முன்பு அதில் இப்பொழுது மக்கள் புத்திராம்பட்டு ஹரிஜன முன்னோர்கள் ஏறி, மதகுகள் கட்டி விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். முன்வந்த பஞ்சத்தால் அவர்கள் பசியாலும், பட்டினியாலும் அந்த இடங்களைப் பயிர் இட முடியாமல் முள் செடிகள் முளைத்து காடாக இருக்கிறது. அதை ரிசர்வ் பாரஸ்டுக்கு மாற்றி விட்டார்கள். அங்கு ஹரிஜனங்களுக்கும், வன்னியர்களுக்கும் புறம்போக்கு தரிசு நிலம் கிடையாது; அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் முன்னோர்கள் கட்டிய ஏரி, மதகு இவைகள் இருக்கும் இடத்தை

[Sri M. Anandan] [5th April 1958

பார்த்து அரசாங்கம் அதை அந்த ஏழை ஹரிஜன மக்களுக்கும், மற்றவர்களுக்கும் விவசாயம் செய்து கொடுக்கவேண்டும். ரிசிவந்தம் பிர்க்காவில் ஏராளமான காடுகள் இருக்கிறது. அங்கு சில பகுதிகளில், பரிசல் ஊற்றங்கால் காடாய் இருக்கிறது. அங்கு மரங்களை வைத்து உற்பத்திசெய்யலாம் என்றால் அங்கு மரங்கள் நன்கு வளராது. செலவுதான் ஆகுமே தவிர பலன் ஒன்றும் கிடைக்காது. தூர்க்கம் பிர்க்காவில் வலஞ்சாங் காடுகள் என்று இருக்கிறது. நான் சொல்வது, பழைய காடுகளை அழித்துவிட்டு புதிய காடுகள் வைப்பதை விட பழைய காடுகள் இருப்பதே நல்லது. மேற்சொன்ன வலஞ்சரம் காடுகளை ஏழைகளுக்கு விவசாயம் செய்ய கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, வடக்காநந்தம் பிர்க்காவில் மலைஜாதி மக்கள், சுமார் 2,000 வாக்காளர்கள் மலைமேல் வசிக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் வாசம் செய்வதற்கு அரசாங்கம் வேண்டியதைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஒரு ஜாகீர்தார், மாயம்பாடி பொட்டியத்தில் இருக்கிறார். அதேபோல் வடக்கு நத்தத்தில் ஒரு ஜமீந்தாரும் இருக்கிறார். அவர்களும், அவர்களது நண்பர்களும் போலி கதர் உடுத்திக் கொண்டு நாங்கள் காங்கிரஸ் அனுதாபிகள் என்று சொல்லிக் கொண்டு மலை ஜாதி மக்களைத் துன்புறுத்தி, அவர்களின் வயிற்றில் அடிப்பதுமாதிரி, அவர்கள் விவசாயம் செய்யும் பொருள்களை, கடுக்காய் போன்ற பொருள்களை, ஒரு மரக்கால் கடுக்காய் இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுமானால் அதை நாலணாவிற்கு தா என்று வற்புறுத்திக் கேட்கிறார்கள். இப்படி அவர்கள் கொடுக்க மறுத்தால் கீழ்புரத்தில் இருக்கும் ஹரிஜனங்களையும் வன்னியர்களையும் லஞ்சம் கொடுத்துக் கூட்டிச் சென்று அங்கே போய் அந்த மலையில் வாழும் மக்களை பலவிதத்திலும் துன்பப்படுத்துகிறார்கள். அதை அரசாங்கம் உடனடியாக தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, எங்கள் ஜாகீர் மலையின் கீழ் ஏராளமான நிலங்கள் இருக்கிறது. அங்கு, மரங்களும் தழைகளும் மற்றும் முள்ள சருகுகளும் படிந்து வண்டல் மண் இருக்கிறது. அங்கு நல்ல சவுக்கு, தீக்குச்சி மரங்களை பயிர் செய்தால் அது நன்றாக தழைத்தோங்கி வளர்ந்து நம் நாட்டிற்கும் நல்ல பலனைத்தரும். அடுத்தபடியாக, புறம்போக்கு தரிசுகளை ஏழை மக்களுக்கு கொடுக்க வேண்டுமென்றும் நான் சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, திருவண்ணாமலை தாலுகாவில், தானிப்பாடி பிர்க்காவில் பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கு ஏழு மதுரை காடுகள் ஏராளமாக இருக்கிறது. நான் சொல்வது என்னவென்றால், அந்தப் பழைய காடுகளை எல்லாம் வெட்டி புதுக்காடுகள் வளப்பதற்கு பதிலாக இருக்கும் பழைய காடுகளையே நல்லமுறையில் பாதுகாக்கலாம், அப்படி பாதுகாக்க வேண்டுமென்றும் சொல்லிக் கொள்கிறேன். அதோடு அவைகளில் இருந்து ஏழை மக்கள் சுள்ளி இவைகளைப் பொறுக்கிக்கொள்ள சர்க்கார் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, வேட்டவலம் பிர்க்காவில் மலைகள் ஏராளம் இருக்கின்றன. அங்கு ஒரு ஜமீன்தார் இருக்கிறார். அவர் விவசாயிகளுக்கு நல்ல முறையில் காசு கொடுப்பதாகத் தெரியவில்லை. விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்த ஜமீந்தாருக்கும், பாரஸ்ட்டாருக்கும் அதைப்பற்றி கண்டிப்பான ஒரு உத்தரவை அரசாங்கம் இட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சார மலைக்காடும் லாயக்கற்ற காடுகளாகத்தான் இருக்கிறது. அதையும் ஏழைகளுக்கு பயிர் இட கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

MR. SPEAKER : Your time is up.

* SRI S. T. SUBBAYYA GOUNDER : தலைவர் அவர்களே, இந்த காட்டிலாகா மானியத்தின் பேரில் நான் சில குறிப்புகள் கூற விரும்புகிறேன். ராஜ்யபிரிவினைக்குப் பிறகு, ஆனமலை ரேஞ்சிலிருந்து நமக்கு கிடைத்துக்கொண்டிருந்த நல்ல வருமானம் கிடைக்கக் கூடிய தேக்கங்காடுகள் எல்லாம் இப்பொழுது கேரள அரசாங்கத்திற்குப் போய் விட்டது. அங்கு இப்பொழுது நமக்கு 2,000 ஏக்கர்தான் தேக் வைத்து பயிர் செய்ய இடமிருக்கிறது: வீட்டு வேலைகளுக்கும், மற்ற வேலைகளுக்கும் இப்பொழுது தேக்கு கிடைப்பது என்பது மிகவும் அரிதாகி விட்டது. அதனால் இப்பொழுது ஆனமலை, உடுமலைப்பேட்டை ரேஞ்சில்



5th April 1958] [Sri S. T. Subbayya Gounder]

அட்டக்கட்டியில் இருந்து தளிஞ்சி வரை ஒரு இடம் இருக்கிறது. அது, உடுமலைப்பேட் ரேஞ்சைச் சேர்ந்ததுதான். அது சுமார் 10,000 ஏக்கர் தேக்கு பயிர் செய்ய நல்ல இடமாக இருக்கிறது. அங்கு 2,000 மலைவாசிகள் இப்பொழுது வசித்துக்கொண்டிருக்கிறார்கள். பன்றிமலை, பூண்டி, தளிஞ்சி போன்ற இடங்களில் இவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அங்குள்ள காடுகளை வெட்டித் திருத்தி ராகி பயிர் செய்துகொண்டு வருகிறார்கள். அதனால் காடுகள் சேதம் அடைகின்றன. ஆகவே, அவர்கள் எல்லோரும் ஒரேயிடத்தில் இருந்துகொண்டு பயிர் செய்ய அவர்களுக்குப் பூமி ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன். இரண்டாவதாக, அங்கு நல்ல மரங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளை, கிராம மக்கள் ஒருவருக்கும் தெரியாமல் பகல் வேளையிலும், இரவு நேரத்திலும் சென்று பலர் வெட்டிக்கொண்டு போகிறார்கள். அங்கு சாதாரணமாக பாரஸ்ட் டிப்பார்ட்மெண்டில் உள்ளவர்களே போய்ச் சேர முடியாது.

அந்த மாதிரி இருக்கிற இடம் அது. அந்த இடத்தில் எந்தவிதமான 10–50 a.m.
போக்குவரத்திற்கும் சௌகரியம் கிடையாது. அந்த இடத்தில் சுமார் 20 வீடுகள் கட்டவேண்டுமென்று ஏற்பாடு செய்வதற்காக நாங்கள் அங்கே போனோம். ரேஞ்சு ஆபீஸர், நான் இன்னும் சில பேர்கள் அங்கு இரண்டு வாரத்திற்கு முன்னால்போய் இருந்தோம். அந்த இடம் என்னுடைய தொகுதியிலிருந்து, அதாவது அடிவாரத்திற்கு ஐந்து மைல் போக வேண்டும். அங்கிருந்து இரண்டரை மைல் காட்டுக்குள் போகவேண்டும். அந்த இடம் நல்ல இடமாக இருக்கிறது. அங்கு சுமார் 4 ஆயிரம் 5 ஆயிரம் ஏக்கர்களில் சர்க்கார் தேக்கு பயிர் செய்யலாம். அங்கு இப்போது இருக்கக்கூடியவர்கள் விவசாயம் செய்வதற்காக அதிகமான மரங்களை வெட்டிப் போட்டிருக்கிறார்கள். அதை எல்லாம் சேகரம் பண்ணினால்கூட சுமார் பத்தாயிரம் அல்லது இருபதினாயிரம் அடி மரத்திற்கு மேல் கிடைக்கும். அவ்வளவு தூரத்திற்குக் கீழே சோர்ந்து கிடக்கிறது. நாங்கள் வீடுகட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை பார்த்துவிட்டு, ரொம்ப நேரமாய்விட்டதால் திரும்பி வந்து விட்டோம். இரண்டரை மைல் காட்டில் நடந்து போகவேண்டும். அந்தக் காடு நல்ல காடாக இருக்கிறது. அங்கிருக்கக்கூடிய விறகை எல்லாம் வெளியே உபயோகத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்றால் "பொன்னுரம்மன் கோவிலிலிருந்து இரண்டு மைல் தூரத்திற்கு ரோடு போட்டால் சௌகரியமாக இருக்கும். நாளுக்கு நாள் நகரங்களிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி விறகின் விலை உயர்ந்துகொண்டே வருகிறது என்று குருமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். இப்போது டன் 40, 45 ரூபாய் என்று விற்கிறார்கள். இதில் இரண்டரை மைல் தூரத்திற்கு ரோடு போடுவதாயிருந்தால் விறகுகளையும் மூங்கில்களையும் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். சர்க்காருக்கும் அதனால் அதிக வருமானம் கிடைக்கக்கூடும். மேலும் அதில் பாரஸ்டு ஆபீஸர்களைப் போட்டு இன்னும் அதிகம் தேக்கு பயிர் செய்ய முடியும். இதில் போடப்படுகிற ரோட்டை கீழ்பூணச்சி என்ற இடத்தில் கொண்டுவந்து சேர்த்துவிடலாம். இதன் மூலம் அங்கு இருக்கிற மலைவாசிகளும் பலன் அடைவார்கள். மேலும் கிராமங்களில் இருக்கிற விறகுப் பஞ்சத்தையும் போக்க முடியும். மேலும் விறகு கஷ்டம் இன்னும் 10, 15 வருஷத்திற்கு இல்லாமல் ஆக்கலாம். அதோடு வேண்டிய அளவு மூங்கிலும் இருக்கிறது. இப்போது போக்குவரத்து சௌகரியம் இல்லாமல் இருப்பதினால்தான் ஒருவரும் காண்ட்ராக்ட் எடுக்காமல் இருக்கிறார்கள். இப்போது இருக்கிற பாரஸ்ட் தடிஞ்சலியிலிருந்து கீழ்பூணச்சி வரையிலும் இருக்கிறது. இதில் எல்லாம் அவர்கள் இப்போது விவசாயம் செய்கிறார்கள். நானும் ஒரு விவசாயிதான். இருந்தாலும் நாம் எல்லாம் இம்மாதிரி விவசாயத்தைப் பார்த்திருக்க முடியாது. அந்தக் காடுகளில் ஒன்றிரண்டு கொத்துக் கொத்திவிட்டு இரண்டு ராகிகளை போட்டு விடுகிறார்கள். அதில் பின்னால் நல்ல பயிர் பிடித்துவிடுகிறது. போன வருஷம் இரண்டாயிரம் மூட்டை ராகியை அவர்களிடமிருந்து வாங்கியிருக்கிறார்கள். இப்போது இதில் ரோட்டையும் போட்டு கூப்புகளையும் பிரித்துக்கொடுத்துவிட்டால், கிராமத்தில் இப்போது இருக்கும்

[Sri S. T. Subbayya Gounder] [5th April 1958

விறகுக்கும் மூங்கிலுக்கும் பஞ்சமே ஏற்படாது. அதோடு அங்கு நமது ராஜ்யத்திற்கு வேண்டிய அளவுக்கு 4 ஆயிரம், 5 ஆயிரம் எக்கர்களில் தேக்கும் பயிரிடலாம். இதைப்பற்றி கெவர்மெண்டுக்கும் எழுதுகிறேன் என்று அன்றைக்கு எங்கள்கூட வந்த ரேஞ்சு ஆபீஸரும் சொன்னார்கள். ஆகவே இதில் கூடுமானவரைக்கும் சர்க்கார் வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதோடு தேக்கு அந்த இடத்தில் பயிர் செய்தால் கூடுதலான ஊதியம் கிடைக்கும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER**: கனம் உதவித் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீலகிரி ஜில்லாவில் முதுமலை போன்ற திட்டங்களை சர்க்கார் நல்லவிதத்தில் நிறுவியிருக்கிறார்கள். நீலகிரியில் நல்ல விலையுயர்ந்த மரங்கள் எல்லாம் பயிராகிறது. ஈக்கலிப்ட்ஸ், தேக்கு, சந்தனம், ரோஸ்வுட் முதலிய மரங்களும், ஆஸ்ட்ரேலியாவில் பயிராகக்கூடிய மரங்களும் பயிரிடலாம் என்பதை அறிந்து சந்தோஷப்படுகிறேன். இப்போது ஈக்கலிப்ட்ஸ், தேக்கு முதலிய மரங்கள் பயிரிடப்பட்டு வருகிறது. மேலும் நல்ல முறையில் மரங்களும் பயிரிடமுடியும் என்று ஸ்பெஷலிஸ்ட்கள் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நல்ல ஜாதி மரங்களைப் பயிரிடுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஈக்கலிப்ட்ஸ் மரங்களிலிருந்து கற்பூரத் தைலத்தையும் உற்பத்தி செய்துகொண்டு வருகிறோம். இவ்விதம் இரண்டுக்கும் இது உபயோகமாக இருக்கிறது. இதை அதிகமாகப் பயிரிடுவதற்கு உற்சாகம் கொடுக்க வேண்டும். சர்க்கார் துறையில் மாத்திரமல்லாமல் தனியார் துறையிலும் இதைப் பயிரிடுவதற்கு உற்சாகம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மைசூர் பார்டர் பக்கத்திலும் கேரள பார்டர் பக்கத்திலும் பாரஸ்டாக ஆக்குவதற்கு லாயக்கில்லாமல் பல எக்கர் பூமிகள் இருக்கின்றன. காரணம் அந்த இடங்களில் ரெயின்பால்ஸ் குறைவாக இருக்கிறது. அந்த இடங்களை அங்குள்ள மக்கள் நெல் பயிரிடுவதற்காக வேண்டி தேர்ந்து எடுத்திருக்கிறார்கள். அந்த இடங்களை நெல் பயிர் செய்வதற்கு கொடுக்கவேண்டும். காடுகளை மேலும் வளர்க்கவேண்டுமென்றால் இவையல்லாமல் வேறு அதிகமாக 30 ஆயிரம், 40 ஆயிரம் எக்கர்கள் இருக்கின்றன. இவைகளை பாரஸ்டாக ஆக்குவதற்கு எடுத்துக்கொள்ளலாம். அதோடு பாரஸ்டுகளில் இருக்கும் ரோடுகள் எல்லாம் ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அவைகளை எல்லாம் செப்பனிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நீலகிரி பாரஸ்டு கார்டுகளுக்கு கொடுக்கப்படும் சம்பளம் மிக குறைவாக இருக்கிறது. அவர்கள் பகல் பூராவும் காடுகளில் செல்லவேண்டியிருக்கிறது. அவர்கள் குளிரில் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்குக் குறிப்பாக மலைப்பிரதேசங்களிலுள்ள கார்டுகளுக்கு சம்பளத்தை உயர்த்தினால் நல்லதாக இருக்கும் என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஒரு யோசனையாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் கிராமங்களில் குடியிருப்பு இருக்கக்கூடிய இடத்திலிருந்து 50 கஜ தூரத்திற்கு பாரஸ்டுகளை ஏற்படுத்துவதால் அந்தக் காடுகளில் உள்ள காட்டு மிருகங்கள் ஊருக்குள் வந்துவிடுமோ என்கிற பயம் அவர்களுக்கு இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே குடியிருப்பு இருக்கக்கூடிய இடத்திலிருந்து குறைந்தது நான்கு பர்லாங் தூரத்திற்குள் பாரஸ்டுகளை அமைக்கக் கூடாது என்று சர்க்கார் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கால்நடைகளைப் பொறுத்தவரையில், நாம் கால்நடைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். இந்த நிலையில் கால்நடைகள் பாரஸ்டுக்குள் போவதற்கு பாஸ் வேண்டும் என்று இப்போது வைத்திருக்கிறோம். இந்தக் கட்டணம் இப்போது மூன்று ரூபாய், நான்கு ரூபாய் ஐந்து ரூபாய் என்றிருக்கிறது. இவைகளை அடியோடு ரத்துசெய்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாரஸ்டுக்குள் பாஸை வைத்துக்கொண்டு அவர்கள் எல்லா இடங்களிலும் கால்நடைகளை ஓட்டிக்கொண்டு போகிறார்கள். மேலும் இவைகளை வாங்குபவர்கள் எல்லாம் ஏழை மக்கள். இதன் மூலம் சர்க்காருக்குப் பெரிய



5th April 1958] [Sri J. Matha Gowder]

நஷ்டம் ஒன்றும் ஏற்பட்டு விடாது. ஆகவே இந்த பாஸ் முறையை ரத்து செய்துவிடவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: தலைவர் அவர்களே, இந்தக் காட்டு இலாகாவின் பேரில் கொண்டு வந்திருக்கும் வெட்டுப்பிரேரணையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய வனச் செல்வமானது நம்முடைய நாட்டில் அதிகமாக விருத்தியாக வேண்டும் என்பது எல்லோருடைய கோரிக்கையாகும். இதைப்பற்றி சர்க்கார் பல நடவடிக்கைகளும் எடுத்துக் கொண்டு வருகிறது. இதற்காக இந்த மான்யத்தில் இரண்டு ஐட்டத்தின் கீழும் சுமார் 79 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். முக்கியமாக இந்தக் காடுகளை வளர்ப்பதில் 11 a.m. எல்லோரும் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். அதன் மூலமாக நம்முடைய சர்க்காருக்கு வனச் செல்வம் பெருக வேண்டும். மக்களுக்கு பல விதத்திலும் இந்த இலாக்காவானது உதவி அளிக்கும்படியான வாய்ப்பு ஏற்படவேண்டுமென்றுதான் சொல்லுகிறேன். இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் விறகுப் பற்றுக்குறை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, சென்னை நகரை எடுத்துக்கொண்டால், விறகின் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறது. சில சமயங்களில் விறகு கிடைப்பதே இல்லை. இதே நிலைமை நீடித்துக்கொண்டிருந்தால், பழையபடி "ரேஷன்" முறையைக் கொண்டுவந்து விநியோகம் செய்யும்படியான நிலைமை வரக்கூடுமோ என்று பயமாயிருக்கிறது. காட்டு இலாக்காவினர் இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விறகுகளின் உற்பத்தியை எவ்வளவு தூரம் அதிகரிக்க முடியுமோ அந்த அளவுக்கு அதிகரிக்கவேண்டும். சில ஜில்லாக்களில் காட்டு இலாக்காவினர் சவுக்கு உற்பத்தி செய்து வருகிறார்கள். அது எவ்வளவு துரிதமாக நடக்க வேண்டுமோ அவ்வளவு துரிதமாக நடக்கவில்லை யென்று தான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய யோசனை என்னவென்றால், சில ரயத்துகளுக்கு இந்தக் காட்டு இலாக்காவினர் சில எக்கர்களைப் பிரித்துக் கொடுத்து, 7 வருஷத் திட்டம் என்று ஒரு திட்டத்தைப் போட்டு, அவர்கள் மூலம் சவுக்கு உற்பத்தி பெருக்குவதற்கு ஊக்கம் அளிக்கும் முறையில் சில சலுகைகளைக் கொடுத்தால், அநேக பிராந்தியங்களில் சவுக்கு உற்பத்தி அதிகரிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்குத் தீர்வையைக் குறைத்துக் கொடுத்து, ரயத்துவாரித் தீர்வையை அதாவது அயன் தீர்வைக்கு மேல் இரண்டு பங்காக வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். சில எக்கர்களைப் பிரித்துக் கொடுத்து, இன்னும் ரயத்துகளுக்கு வேண்டிய உதவியை காட்டிலாக்காவினர் செய்து கொடுத்தால், ஆயிரக்கணக்கான எக்கர்களில் சவுக்கு வைக்கப்பட்டு, சென்னை நகரத்திலும் சரி, மற்ற பிராந்தியங்களிலும் சரி, சரியான காலத்தில் அதை வெட்டிக்கொடுத்தால், விறகுப் பிரச்னை தீர்ந்து விடும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அடுத்தப்படியாக மேய்கால் பிரச்னையைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. காடுகள் அழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது எல்லோருடைய கடமை. ஆனால் குடியானவர்களுக்கு மேய்கால் வசதி எவ்வளவு தூரம் செய்யவேண்டுமோ, அதைக் காட்டு இலாக்கா செய்ய முன்வர வேண்டும். சில பிராந்தியங்களில் ஏழைக் குடியானவர்களுக்கு ரொம்பவும் தொந்திரவு ஏற்படுகிறது. அதுவும் மேய்கால் வசதியில்லாத பல கிராமங்கள் இருக்கின்றன. பக்கத்தில் 3, 4 மைல்களுக்கு அப்பால் காட்டு இலாக்கா இருந்த போதிலும், அந்த ரயத்துக்களுக்குப் போதுமான உதவி செய்ய முன்வருவது இல்லை. அங்கெல்லாம் அநேகவிதமான ஊழல்கள், லஞ்சப் பழக்கங்கள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய மாகாண மொழியில், அதாவது தமிழில், இந்தக் காட்டு இலாக்கா விதிகளை அச்சிட்டு கிராம உத்தியோகஸ்தர்களின் மூலம் குடியானவர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்று சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

விறகு மரம் உற்பத்தி செய்வது ஒருபுறமிருக்க, காட்டிலாக்காவினர் முந்திரியைப் பயிரிட்டுத் தருகிறார்கள். போகப் போக இது எப்படியிருக்கும் என்பதைப் பார்த்துத்தான் சொல்லவேண்டும். சில பிராந்தியங்களிலே

[Sri V. K. Ramaswamy Mudaliar] [5th April 1958

இது நன்றாக வளருமா, வளராதா என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இதனால் அந்நியச் செலாவணி வசதி கிடைக்கும் என்று இருந்தாலும், இன்னும் வீடு கட்டுவதற்காக வேண்டிய தேக்கு மரங்களையும், மற்ற காட்டு மரங்களையும் விருத்தி செய்வதில் காட்டு இலாக்கா அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது வீடு கட்டுவதற்காக உபயோகப் படும் அநேக விதமான மரங்கள் மலையாளப் பிராந்தியத்திலிருந்து நமக்கு வருகின்றன. சில மட்டரகத் தேக்கு மரங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இந்த மாதிரி மரங்களை எல்லாம் காட்டு இலாக்காவினர் நம்முடைய ராஜ்யத்தில் விருத்தி செய்தால் ஏழை மக்கள் வீடு கட்டுவதற்கு வேண்டிய வசதிகள் ஏற்படும். அதன் காரணமாக அவற்றின் விலை குறையக்கூடுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் வாட்டில், புளூ கம் (**Blue gum**) போன்ற மரங்களை நடுவதற்காக சர்க்கார் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அவைகளை இன்னும் அதிகமாக விருத்தி செய்வதற்கு முன்வரவேண்டும். நீலகிரிப் பிராந்தியத்திலே " வென்லாக் டௌன்ஸ் " என்ற பகுதி இருக்கிறது. அழகுக்காகவும், மிலிட்டரி அதிகாரிகள் எழுதி அனுப்பியதன் காரணமாகவும், அநேக பிராந்தியங்களில் மரம் வளர்ச்சி செய்யாமல் இருக்கிறார்கள். இதற்காக எவ்வளவு தேவையோ அந்தப் பகுதியை மட்டிலும் வைத்துக்கொண்டு, மீதி இடங்களில் எல்லாம் புளூ கம், வாட்டில், தேக்கு, இன்னும் என்னென்ன மரங்கள் முக்கியமோ அவற்றையெல்லாம் விருத்தி செய்வதுடன், ஆயுர்வேத முறை மருந்துச் செடிகளையும் (மெடிஸனல் ஹெர்ப்ஸ்) வளரச் செய்வதற்கு காட்டு இலாக்காவினர் முன் வரவேண்டும். கோடைக்கானல் மலைப் பகுதிகளிலும், மேட்டுப்பாளையத்திலிருந்து நீலகிரி வரையிலுள்ள மலைப் பகுதிகளிலும் இந்த ஆயுர்வேத முறை மருந்துச் செடிகளையும், மூலிகைகளையும் உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிர, மெழுகு, அரக்கு, தேன், இவைகளை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும். ஹோசூர் பிராந்தியத்தில் சில இடங்களில் இவற்றை உற்பத்தி செய்கிறார்கள். நம்முடைய பிராந்தியத்திலும் பல இடங்களில் இவற்றை உற்பத்தி செய்தால், அதன் காரணமாக அந்நியச் செலாவணி வசதி ஏற்படும். இதற்காக நாம் அதிகமாகச் செலவு செய்ய வேண்டியதில்லை.

சந்தன மரத்தில் அதிகமாக கள்ள வியாபாரம் நடந்து கொண்டிருக்கிறது என்று அடிக்கடி புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கு காட்டு இலாக்கா தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். சந்தன மரத்தை இன்னும் அதிகமாக எல்லா இடங்களிலும் உற்பத்தி செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

கடைசியாக " **Timber Transport Rules** " சம்பந்தமாக பல தடவைகள் அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். கேரள ராஜ்யம் போன பிறகு, அதாவது ஷோரனூர், நீலாம்பூர் காடுகள் எல்லாம் நம் ராஜ்யத்தை விட்டு போன பிறகு, இங்கே பெரிய காடுகள் இல்லை. காட்டில் முக்கியமான மரங்கள் இருந்தால்தான் இது சம்பந்தமான விதிகளை கடுமையாக அமல் செய்ய வேண்டும். குறிப்பாக, செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களிலே, இந்தச் சட்டத்தை கடுமையாக அமல் நடத்த வேண்டியது அவசியமில்லை என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இதனால் காட்டு இலாக்காவில் இருக்கும் சிப்பந்திகள் அதிகமாக லஞ்சம் வாங்கிக் கொண்டு, எவ்வளவு தூரம் கீழ்த்தரமாக நடந்துக்கொள்ள முடியுமோ, அவ்வளவு மோசமாக நடந்து கொள்கிறார்கள். இதனால் ஏழை மக்களுக்கு ரொம்பவும் கஷ்டம் ஏற்படுகிறது. சென்னைக்கு ஒரு வண்டி, இரண்டு வண்டி விறகு கொண்டு வருபவர்கள் எல்லோரையும் துன்புறுத்துகிறார்கள். அமைச்சர் அவர்கள் இந்த விதிகளையெல்லாம் திருத்தி அமைத்து கஷ்டமில்லாமல் செய்திருந்த போதிலும், ஒரு தாலூகாவிலுள்ள



5th April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

ரேஞ்சரை ஏழை மக்கள் பார்க்க வேண்டுமென்றால், அவர்களால் அவரை சுலபமாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. (இந்த சமயத்தில் சபா நாயகர் ஆசனத்தில் அமர்ந்தார்).

அவரைச் சுற்றிப் பார்த்துக் கண்டுபிடிக்க ஒரு வாரம் அல்லது 10 நாள் ஆகிறது. ஆகவே இந்த பெர்மிட் கொடுக்கும் அதிகாரத்தை ரெவினியு இன்ஸ்பெக்டருக்கோ, தாசில்தாருக்கோ கொடுத்துவிட்டால் மிகவும் நலமாயிருக்குமென்று சொல்லிக்கொள்கிறேன். ரெவினியூ இலாக்காவும் இந்தச் சர்க்காரின் கீழ்தான் இருக்கிறது. காட்டு இலாக்காவைத்தான் நம்பவேண்டும், மற்ற இலாக்காக்களை நம்பக் கூடாது என்பதல்ல. இந்த மாதிரி சில்லறை பெர்மிட்டுகள் கொடுப்பதை ரெவென்யூ இலக்காவினரிடம் ஒப்புவிக்கலாம் என்பது 11-10. a.m.
என்னுடைய அபிப்பிராயம். " ஸாயில் கன்ஸர்வேஷன் " நில அரிப்புத் திட்டங்கள் மிகவும் முக்கியம். இப்பொழுது சில பிராந்தியங்களில் அந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. மற்ற பிராந்தியங்களிலும் இவைகளைத் துரிதமாக எடுத்துக்கொண்டு உடனடியாக இந்தத் திட்டங்களை அமல் செய்து, நிலங்களை நன்றாக உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். **Wild life preservation** (துஷ்ட மிருகங்கள் பாதுகாப்பு) மிகவும் முக்கியம். இந்தப் பிரச்னையைப்பற்றி நம்முடைய சர்க்கார் மற்ற சர்க்கார்களுடன் சில மீட்டிங்குகள் போட்டுப் பேசி வருகின்றனர். இங்கு இருக்கக்கூடிய மிருகங்களை சரிவர பாதுகாக்கப்படுவது இல்லை. அநேக ஷிகாரிகளை திருட்டுத்தனமாக சிலர் அழித்து விடுகிறார்கள். இவர்களுக்கு கடும் தண்டனை கொடுக்கவேண்டும். **wild life preservation** நமது மாகாணத்திற்கு மிகவும் முக்கியம். இதற்கான சட்டங்களை சரியாக அமல் நடத்தி எல்லா மிருகங்களையும் பாதுகாக்க வேண்டும்.

காடுகளில் சரியான ரோடுகள் இருப்பது மிகவும் அவசியம். அப்படி இருந்தால் தான் காட்டிலாகா உத்தியோகஸ்தர்களைத் தவிர மற்றவர்களும் போய்ப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். வெளியூர்களிலிருந்தும் அநேகர் அதை வந்து பார்வையிடுவதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

நத்தம், கரந்த மலை, செங்குறிச்சி, முதுமலை போன்ற காட்டு இலாகா இடங்களில் சரியான ரோடுகள் இல்லை. அங்கு ரோடுகள் போடும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **The Hon. Sri M. BHAKTAVATSALAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு, காட்டுச் செல்வத்தின் பெருமையை உணர்ந்து, அதை பாதுகாப்பதற்கும், மேலும், அபிவிருத்தி செய்வதற்கும் நல்ல கருத்துக்களை தெரிவித்த அங்கத்தினர்களுக்கு என்னுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் காட்டுச் செல்வம் மிகவும் குறைவு என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேசீய தேவை மதிப்போடு ஒப்பிட்டுப் பார்த்தால் நம் காட்டுச் செல்வம் பாதி கூடத் தேறாது. ஆகவே இங்கு இருக்கும் காட்டுச் செல்வத்தை நாம் பாதுகாக்கவேண்டும். அதோடு மட்டும் அல்லாமல் மேலும் காடுகளை வளர்க்கவேண்டி இருக்கிறது. காடுகள் மழை பெய்வதற்கு அனுகூலமாக இருக்கிறது. ஆனால் காடுகள் நன்றாக வளர்வதற்கும் மழை தேவையாக இருக்கிறது. இலங்கைக் காடுகளைப் பற்றி சிலர் குறிப்பிட்டார்கள். இலங்கையில் ஒரு வருஷத்தில் ஏராளமாக மழை பெய்கிறது. ஆகையால் அங்கு காடுகள் அதிகமாக இருக்கின்றன. காடுகள் அதிகமாக இருந்தாலும் ஒரு விதமான வெறுப்பு ஏற்படும். நம் நாட்டில் மழை குறைவு. இப்பொழுது உள்ள காடுகளை அழியாமல் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். அதுவே சர்க்காரின் கொள்கை. நிலம் இல்லாதவர்களுக்கு என் காடுகளில் சாகுபடி செய்வதற்கு நிலம் கொடுக்கக்கூடாது என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். காடுகளைப் பற்றி சேலத்திலிருந்து வந்த

[Sri M. Bhaktavatsalam] [5th April 1958

அங்கத்தினர் குறிப்பிட்டு, மலையில் உள்ள காடுகளை எதற்காக எடுத்துக் கொள்ளவேண்டும், கீழே இருக்கும் காடுகளை பாதுகாத்தாலே போதும் என்று சொன்னார்கள். முன்பு இவைகள் மிட்டாதார்களின் வசத்தில் இருந்தது. இப்போது மிட்டாக்களை எல்லாம் எடுத்துக்கொண்ட பிறகு, சர்வே செய்யப்பட்டது. அப்படியிருக்கும்போது மலைப் பிரதேசங்களை விட்டு விட முடியாது. காடுகளை எங்கெல்லாம் வளர்க்க வேண்டுமோ அங்கெல்லாம் வளர்க்க வேண்டும் என்று நாம் சொல்லும்போது, இந்த மலையில் உள்ள காடுகளையும் எடுத்து கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதை கனம் அங்கத்தினர் உணர்வார்கள். மேய்க்கால் வசதிக்குக் குந்தகம் ஏற்படும் வகையில் இந்த மலைப் பிரதேசங்களில் உள்ள காடுகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லை. மேய்க்காலுக்கு என்று சில பகுதிகளை ஒதுக்கி வைத்து மற்ற இடங்களில் மரங்களை வளர்ப்பது என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

காடுகளை வளர்ப்பதிலும், அபிவிருத்தி செய்வதிலும், பல தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கவனம் செலுத்த வேண்டும். முக்கியமாக விறகைப் பற்றி குறிப்பிட வேண்டும். நம் நாட்டில் விறகு பற்றாக் குறை அதிகம். அதனால் சில சமயங்களில் விலை அதிகமாக ஏறிவிடுகிறது.

சவுக்கைப் பற்றி எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சவுக்கு மட்டும் அல்ல, வேறு விறகுக்கு பயன் படக்கூடிய மரங்களையும் சில பிராந்தியங்களில் காட்டு இலாகா மூலம் வைக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் தனிப்பட்டவர்களே, சவுக்கு பயிர் செய்து விற்கிறார்கள். அரசாங்கம் சவுக்கு பயிர் செய்வது என்றால் காட்டு இலாகா நேரிடையாகவே பயிர் செய்வது தான் நல்லது என்பது என் அபிப்பிராயம். காட்டிலாகா அதைக் குத்தகைக்கு விட வேண்டும். என்று சொல்வது அனுகூலமானதாக இராது என்று நான் கருதுகின்றேன்.

முந்திரி செடி வைப்பது பற்றி சிலர் குறிப்பிட்டார்கள், இது ஒரு நல்ல திட்டம். இப்பொழுது 45,000 ஏக்கர் முந்திரி இருக்கிறது. இது மிகவும் திருப்திகரமாகவே இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். "தனிப்பட்ட நபர்கள் முந்திரி பயிரிட்டால் அவர்களுக்கு 100 ரூபாய் கடன் கொடுக்கப்படுவதாகவும் அந்தத் தொகை குறைவு, அதை 200 ரூபாயாக உயர்த்த வேண்டும்" என்று கனம் அங்கத்தினர் சட்டநாத கரையாளர் சொன்னார்கள். ஆனால் தனிப்பட்ட நபர்களின் நிலங்களில் முந்திரி பயிரிடுவது என்கிற திட்டம் காட்டிலாகாவில் இல்லை. இது விவசாய இலாகாவைச் சேர்ந்தது. மற்ற பயிர்களுக்கு எவ்வாறு கடன் கொடுக்கப்படுகிறதோ அவ்வாறு முந்திரிக்கும் கடன் கொடுக்கப்படுகிறது. 100 ரூபாய் போதாது, 200 ரூபாய் வேண்டும் என்று அவர்கள் சொல்லும் போது ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். காட்டிலாகாவில் பயிரிடப்படுகின்ற முந்திரி செடிக்கு ஏகருக்கு 30 ரூபாய் செலவாகிறது. அதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. மழை அதிகம் தேவையில்லை. அது தானாகவே வளர்ந்து வருகிறது. ஆகையால் விவசாய இலாகா கொடுத்து வரும் கடன் தொகையை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கருதவில்லை. இருந்தாலும் மேற்கொண்டு பரிசீலனை செய்து பார்க்கலாம். காடுகளை பயன்படுத்திக்கொள்வதில் விறகுத் தேவை முக்கியமானது. தேக்கு மரம் வீடுகள் கட்டுவதற்கு வேண்டியிருக்கிறது. இப்பொழுது தேக்கு பற்றாக் குறை நிறைய இருக்கிறது. ஆகையால் அதை இறக்குமதி செய்ய வேண்டி இருக்கிறது. ஆகையால் தேக்கு பயிரிட வேண்டும். ஆனால்தேக்கு பயிரிடுவதற்கு அதற்குத் தகுதியான சீதோஷ்ண ஸ்திதி வேண்டியிருக்கிறது. நீலகிரி அதிக உயரத்தில்
11-20 a.m. இருப்பதினால் அங்கு அது பயிராகாது. சமவெளிகளிலும், குறைந்த உயரமுள்ள இடங்களிலும் அதைப் பயிர் செய்வதற்கு மழை வேண்டும். மழை இருக்கும் பிராந்தியத்திலே தான் தேக்கு பயிரிடலாம். ஆனாலும் தேக்கு பயிரிடக்கூடிய இடங்களில் மழை ஈரத்தை வைத்துக்கொண்டே பயிரிடலாம் என்ற யோசனையை காட்டிலாகா அதிகாரிகள் பரிசீலனை செய்து, நதி தீரங்களிலும் அவ்வாறு பயிரிடுவது என்ற ஒரு திட்டத்தை அமல் நடத்தி வருகிறார்கள். தாமிரபரணி, காவேரி போன்ற நதி, தீரங்களில் படுகை நிலங்களில் தேக்கு பயிரிடுவது சாத்தியமாகிறது. ஆனால் இதிலும் சாகுபடியாளர்கள் 'நாங்கள் சாகுபடி செய்து கொண்டிருந்தோம், இப்பொழுது இவர்கள் தேக்கு பயிரிடுகிறார்களே' என்று நினைக்கிறார்கள். நாம் எடுத்துக்கொள்ளும் திட்டம் பலன் தரக்கூடியவையா என்பதை அங்கத்தினர்கள் கவனிக்க வேண்டும். எந்த இடங்களில் வேறு வகையிலே எதுவும் செய்ய முடியாதோ அந்த இடங்களிலே தேக்கு பயிரிடக்கூடுமானால் நல்லது அம்மாதிரி செய்யப்படுகிறது. மழை அதிகமாக இருக்கும் சில இடங்களிலே கன்னியாகுமரி பிரதேசங்களிலே இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பயிர் செய்யப்பட்டும் வருகிறது. அதே மாதிரி திருநெல்வேலி குற்றாலம் முதலிய பிராந்தியங்களிலும் தேக்கு பயிரிடப்பட்டு வருகிறது.



5th April 1958] [Sri M. Bhaktavatsalam]

ஆனைமலைக் காடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அங்கே காடுகள் இருந்த பிரதேசங்கள் கேரளநாடு ஏற்பட்ட பிறகு அந்த நாட்டுக்கு போய்விட்டது. மேலும் ஆனைமலை காடுகள் ரொம்பக்குறைவு. உளந்திவாளி என்ற பிராந்தியம் இருக்கிறது. அங்கே மழையும் பெய்கிறது. ஆனால் அங்கு இது வரை தேக்கு பயிரிடவேண்டிய முயற்சி எடுக்கப்படாததற்குக் காரணம் அங்கு சரியான போக்கு வரத்து இல்லை என்பது தான். இரண்டு ஆண்டுக்கு முன்பு காட்டிலாகா ரோடு போடும் திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள் சில அங்கத்தினர்களும் ரோடுகளைப் பற்றிச் சொன்னார்கள். இந்த வேலை இப்பொழுது முடிந்து விட்டது. ஐந்து ஆயிரம் ஏக்ராவரை தேக்கு பயிரிடலாம் என்று இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

வாட்டில், புனுகம் பயிரிடுவதைப் பற்றி அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதற்குக் கொஞ்சம் உயரம் வேண்டும். நீலகிரியில் ஓரளவு பயிரிடப்பட்டு வந்தது. தொழில் முறையில் வாட்டில் மரங்கள் அதிகம் வேண்டும், சீக்கிரத்தில் பயிரிட்டால் அதை ஒட்டி பெரிய தொழிற்சாலைகள் அமைக்க முடியும் என்ற காரணத்தால் இவைகளை நீலகிரி மலையிலும் கொடைக்கானல் மலையிலும், கோயமுத்தூர், சேலம் ஜில்லாக்களிலுள்ள சில பிராந்தியங்களிலும் இவைகளைப் பயிரிடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறே தீக்குச்சி, தீப்பெட்டி இவைகளுக்கு உபயோகமான சாப்ட் உட்டு விஷயமும். அது மிகவும் அரிதானது. மத்திய சர்க்கார் கூட அதற்கு உதவி அளிக்கிறோம் என்கிறார்கள். உதவி அளிக்கிறார்கள். ஆனால் சில இடங்களில்தான் இந்த சாப்ட் உட்டும் பயிரிட முடியும். எங்கெங்கே சாத்தியமோ அந்த இடங்களிலெல்லாம் soft wood பயிரிடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

அங்கத்தினர்கள் மருந்து வகையில் சில செடிகள் பயிரிடலாம் என்றும் சொன்னார்கள். பலன் தரக்கூடிய எந்த காரியமானாலும், அதையெல்லாம் அரசாங்கம் கவனித்துக் கொண்டுதான் வருகிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சந்தன மரங்களைப் பற்றிச் சொன்னார்கள். அதிகமாக சந்தன மரம் வளருவது இயற்கையிலேதான். அதற்குப் பறவைகள் உதவுகின்றன என்று சொன்னேன். சிலசில இடங்களில் அதற்கென்று கவனம் செலுத்தி பயிரிடலாம். கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல அதிகமான பலன் கிடைப்பது இயற்கையிலேதான். தனிப்பட்ட நபர்கள் வசமிருக்கும் மரங்கள் கூட இயற்கையாக வளருவதுதான். தனிப்பட்ட நபர்களிடம் உள்ளதையெல்லாம் அரசாங்கத்தினதை போல் சர்க்காரே விற்கவேண்டும். ஒரு முகமாக சர்க்கார் விலையை ஒட்டி விற்பனை செய்ய வேண்டும். அப்படி செய்தால் பட்டாதார்களுக்கு அதற்கு வேண்டிய விலை கொடுப்பதற்கு சாத்தியம் என்ற முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மைசூர் அரசாங்கத்தினர் ஒன்று தெரிவித்தார்கள். 'சந்தின மரத்திலிருந்து சாண்டல் உட்டு எண்ணெய் ஆக்கினால் அது மிக இலாபகரமானது, உலகத்திலே அது மிகத் தேவையாக இருக்கிறது. அதன் தரத்தை உயர்த்தலாம், அதனால் அதிக பலன் ஏற்படலாம்' என்று சொன்னார்கள். மைசூர்

[Sri M. Bhaktavatsalam] [5th April 1958

அரசாங்கத்தினர் தாங்கள் செய்தது போல் நமது அரசாங்கமும் செய்தால் நல்லது என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். அதை நமது அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறார்கள்.

இந்த சந்தனக் காடுகளை பொறுத்த மட்டில் திருட்டு அதிகம். ஏனென்றால் சிறு சிறு துண்டுகளாக இருந்தால் கூட அதற்கு விலை அதிகம். திருட்டுத் தனமாகக் கொண்டு போவதும் சுலபமாக இருக்கிறது. இந்த திருட்டை தவிர்க்க அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது. அவ்வப்பொழுது கேசுகள் போடப்படுகின்றன. சில நிரூபிக்கவும் படுகின்றன. சில நிரூபிக்கப்படாமல் போகலாம். இங்கிருந்து பம்பாய் வரை கொண்டு போகப்படுவதை அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள், சமீபத்தில் ஒரு பெரிய கேசை போலீசார் புலன் விசாரித்து செஷன் கோர்ட்டு வரை போய் குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனையும் விதிக்கப்பட்டது. அவ்வாறு சந்தன மரங்களைப் பாதுகாப்பதிலே பொதுமக்களுக்கும் நிரம்ப அக்கறை இருக்கிறது. அக்கறை வேண்டுமென்று கூறுவேன். சில இடங்களில் இவைகளைப் பட்டாபோட்டுக் கொடுத்தால் என்ன என்கிறார்கள். ஆனால் அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்து பார்த்தால் விலை மதிக்கத்தக்க சந்தன மரங்கள் அங்கே வளருவதாகத் தெரிகிறது. காட்டிலாகா நிலங்களை விவசாயத்திற்குப் பயன் படுத்தும் விஷயத்தில் சர்க்காருக்கு அதை பயன் படுத்தக்கூடுமானால் தடுப்பதாக நோக்கம் இல்லை. எங்கெங்கே அவை காட்டு வளர்ச்சிக்கு பயன் படாதோ அதை விவசாயத்திற்குக் கொடுக்க ஆட்சேபம் இல்லை. சில இடங்களிலே கொடுத்தும் இருக்கிறோம். ஆனால் முதல் கவனம் காட்டுச் செல்வத்தை வளர்ப்பதற்குத்தான். எங்கே காடு வளருமோ அந்த இடங்களில் இதில் தான் முதல் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஜவ்வாது மலைக் காடுகளைப் பற்றி வெட்டுப் பிரேரணையை பிரேரேபித்த கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். அவர்கள் பல நல்ல யோசனைகளும் சொன்னார்கள். காட்டுச் செல்வத்தை வளர்ப்பது பற்றிப் பாராட்டி பேசினார்கள். அந்த இடங்களிலே நிலங்களை மலை ஜாதினிருக்கே கொடுத்து விடுங்கள் என்கிறார்கள். முன்பு இதைப் பரிசீலனை செய்து பார்த்ததில் அவை சந்தன மரக் காடாக இருந்தது. மலை ஜாதியினருக்கு வேண்டிய வசதிகள் செய்யப்படுவதில் எனக்கு மிகவும் ஆர்வம் உண்டு. நான் அடிக்கடி சொல்வதுண்டு, அவர்களுக்கும் அவர்கள் சார்பாக வருபவர்களுக்கும் காட்டுச் செல்வ வளர்ச்சிக்கு குந்தகம் இல்லாமல் எல்லா வசதிகளும் செய்ய முடியும். காட்டு மரங்களைப் பாதுகாத்துக் கொண்டே நடப்படும் மரங்களுக்கிடையே பயிர் செய்யலாம். இதற்கு " டமரி கல்டிவேஷன் " என்று பெயர். அதைச் செய்ய முன் வந்தால் ரொம்ப நல்லதாக இருக்கும்

11-30 a.m. கனம் அங்கத்தினர் ஸ்ரீ செல்வராஜ் அவர்கள் சொன்னார்கள், குதிரைமொழி காடு பற்றி, இங்கே பயிர் செய்வதில் கஷ்டம் இருக்கிறது. மண்ணரிப்பு ஏற்படுகிறது. இவையெல்லாம் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் ' நிலமில்லாதவர்கள் ஆகிய நாம் பயிரிடகேட்கிறோம். இவர்கள் பிடிவாதம் பிடிக்கிறார்களே, கொடுக்கமாட்டேன் என்கிறார்களே' என்று நினைக்கிறார்கள். அங்கீகாரம் இல்லாமல் ஆக்கிரமித்தவர்களை வெளியே போ என்று சொல்லுகிறார்களே என்று வருத்தம் ஏற்படுகிறது.

**SRI S. M. ANNAMALAI:** பாயின்டு ஆப் இன்பர்மேஷன், சார்.

**MR. SPEAKER:** இன்பர்மேஷன் கடைசியில் கேளுங்கள்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM.** கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள், கேரள அரசாங்கம் கூட இம்மாதிரிதான் காட்டுச்செல்வம் பாதிக்கப்படுகிறதே என்று கவலை கொள்ளுகிறார்கள். ஏராளமான காட்டுச்செல்வம் அவர்களுக்கு உண்டு. அதை பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்கள் எவ்வளவோ நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறார்கள். காடுகளில் ஏதாவது ஆக்கிரமிப்பு இருந்தால் அதன் பேரில் அவர்கள் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.



5th April 1958] [Sri M. Bhaktavatsalam]

அப்படிப்பட்ட ஒரு செய்தியை கனம் அங்கத்தினர்கள் இன்று பத்திரிகைகளில் பார்த்திருப்பார்கள். மொத்தத்தில் காட்டு வளர்ச்சிக்குக் குந்தகம் இல்லாத வகையில் அங்கே வசிக்கிற மக்களுக்கு வேண்டிய சலுகைகளை "அவர்களுக்கு நாம் அளிக்கலாம். இதற்கு ஒதுக்கி வைத்த பணம் போதாது" என்று குறிப்பிட்டார்கள். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய ராஜ்யத்திற்கு காடு வளர்ப்புக்கு என்று அதிகமாக ஒன்றும் ஒதுக்கி வைக்கவில்லை. எனக்கு இப்பொழுது கொஞ்சம் நினைவு இருக்கிறது. இதற்கு என்று சென்ற வருஷம் ஐந்து லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. காட்டு வளர்ச்சிக்கு என்று இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் பெரிய திட்டம் போட்டு பணம் ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். பிளானிங் கமிஷனும் நாம் போட்டுக்கொடுத்த திட்டத்தை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக எந்த வகையிலும் பணம் ஒதுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருஷமும் பரிபூர்ணமாகத் திட்டங்கள் வகுக்கப்பட்டு அவைகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இருந்தாலும் இப்பொழுதுள்ள திட்டம் போதாது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஒவ்வொரு திட்டத்தையும் எவ்வளவு தூரம் நிறைவேற்றுவதற்கு சாத்தியமோ அவ்வளவு தூரம் நிறைவேற்றி வருகிறோம். ஒவ்வொன்றிலும் எவ்வளவு தூரம் கவனம் செலுத்தவேண்டுமோ அவ்வளவு தூரம் கவனம் செலுத்திக் கொண்டுவருகிறோம். பணம் ஒதுக்கிவைப்பது மட்டும் அல்ல. அதை நிறைவேற்றி வைக்க வேண்டியதாக இருக்கிறது. சற்று முன்பு நான் சொன்னேன்.

**MR. SPEAKER:** Will the Hon. Minister please excuse me. At the end of two hours allotted for the Demand the Speaker has to put the Demand to the vote of the House unless the Hon. Minister moves that the discussion be extended for a specific number of minutes. That means that the next Demand will also be extended by that time.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** Yes, Sir. I may require five more minutes. I move—

"That the time allotted for Demands IV and XXXIV be extended by five more minutes."

The motion was put and carried.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** ஆகவே திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். முன்பே சொன்னேன். பொள்ளாச்சி தாலூகாவில் ஆனைமலை பிராந்தியத்தில் குளந்தி என்ற இடத்தில் ரோடு போடவேண்டும் என்று சொன்னார்கள். அங்கு ரோடு போடவேண்டியதாகத்தான் இருக்கிறது. இதுவரையிலும் ரோடு போடப்படவில்லை. இனிமேல் அதை எடுத்துக்கொள்ளலாம். அந்த வகையில் கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. பல துறைகளிலும் பணம் ஒதுக்கி செலவு செய்யப்பட்டு வருகிறது.

ரப்பரைப்பற்றி குறிப்பிட்டார்கள். இது முக்கியமானதுதான். அதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ரப்பர் முக்கியமானதுதான். நிலங்களை விவசாயிகளுக்கு ரப்பர் பயிரிடுவதற்கு விட்டுவிடவேண்டும் என்று சொன்னார்கள். நமக்கு ரப்பர், டீ, எல்லாம் வேண்டியதுதான். கன்யாகுமரியில் பயிரிடப்படும் ரப்பரைப்பற்றி சொல்லப்பட்டது. அதைப்பற்றி பரிசீலனை செய்து வருகிறார்கள். மத்திய சர்க்காரும் இதில் அக்கறைகாட்டி வருகிறார்கள். அவர்களுடைய உதவியும் நமக்கு இது விஷயமாகக் கிடைக்கும் என்று தோன்றுகிறது. கன்யாகுமரியில் எப்படி ரப்பரை பயிரிடுவது, எவ்வாறு அதை அங்கே அதிகப்படுத்துவது என்பதிலெல்லாம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. டிம்பர் ட்ரான்சிட் ரூல்களைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்டார். இப்பொழுது விதிகளைக் கொஞ்சம் தளர்த்தி இருக்கிறோம். இருந்தாலும் இன்னும் சிரமும் இருக்கிறது என்று அவர்

குறிப்பிட்டார். அவர் சொல்லியபடி ரேஞ்சர்களும் இதைப்பற்றி பரிமிட்டுகள் கொடுக்கலாமா, கொடுத்தால் கஷ்டமாக இருக்கிறது என்றும் சொன்னார்கள். அதைப்பற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்து பார்க்கிறோம். அதற்கு வேண்டிய பரிகாரத்திற்கு வழி தேடுகிறோம். இன்னும் காட்டுத் தேனி வளர்ப்புக்கு கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். பல அங்கத்தினர்கள் பல அறிய யோசனைகளைச் சொன்னார்கள். அவைகளிலெல்லாம் கவனம் செலுத்தி வருகிறோம். மற்ற யோசனைகளுக்கும் கவனம் செலுத்த முயலுகிறோம். நீலகிரியில் நெல் சாகுபடி செய்வதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைக் குறிப்பிட்ட கனம் அங்கத்தினருக்கு நான் சொல்லிக்கொள்வது, அங்கே நெல் பயிரிட்டால் அதனால் மண் அரிப்பு ஏற்படும், மண் அரிப்பு ஏற்பட்டால் விவசாயம் செய்யமுடியாது. அதனால் உருளைக்கிழங்கு போன்றவைகளைப் பயிரிடுவதற்கு முடியாமல் போய்விடும். ஏதோ ஓர் இடத்தில் நெல் பயிரிட்டதை வைத்துக்கொண்டு எல்லா இடங்களிலும் பயிர் செய்வது என்பது முடியாத காரியம். மற்றவைகள் பாதிக்காமல் இருப்பதற்கு பார்த்துக்கொள்ளவேண்டியதாக இருக்கிறது. இந்தக் குறுகிய காலத்திற்குள் சிலவற்றைப்பற்றிக் குறிப்பிட்டேன். இதற்கு மேல் உங்களுடைய அரிய காலத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. எவ்வளவோ அங்கத்தினர்கள் அரிய கருத்துக்களை வெளியிட்டார்கள். அவைகளையெல்லாம் பரிசீலனை செய்கிறோம். இவ்வளவு தூரம் இந்த மானியத்திற்கு அக்கறை காட்டிய அங்கத்தினர்கள் ஏக மனதாக இந்த மானியத்தை ஆதரிப்பார்கள் என்று நம்பிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR:** கனம் சபாநாயகர் அவர்களே, சவுக்கு வைப்பதைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். தனிப்பட்டவர்களுக்குச் சவுக்கை காட்டுப்பிரதேசத்தில் வைப்பதற்குச் சலுகை கொடுத்தால் நல்லது என்று சொன்னேன். என்னுடைய அபிப்பிராயத்தை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அரை நிமிஷம் கொடுத்தால் அதற்குள் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது காட்டிலாகாவுக்குப் போதுமான வேலை இருக்கிறது. செடிகளை வைத்து அவைகளைக் காப்பாற்ற வேண்டியதாக இருக்கிறது. இன்னும் பல நல்ல மரங்களை வைத்தும் அவர்கள் காப்பாற்றவேண்டியதாக இருக்கிறது. இப்படி அவர்களுக்கு அநேகவிதமான வேலைகள் இருப்பதால் சவுக்கு வைப்பதை ஏழை குடியானவர்களுக்கு விட்டு விடலாம். சவுக்கு மரம் வைப்பதற்கு காட்டிலாகா இவ்வளவு தூரம் கவனம் செலுத்தவேண்டியதில்லை. அதற்குச் செலவிடும் கவனத்தை மற்ற செடிகளை விருத்தி செய்வதற்குச் செலவிடலாம். அதைப்பற்றித்தான் நான் சொன்னேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** நான் குறிப்பிட்டது சவுக்கு வைப்பதாக இருந்தால் ஒரு முறை நாற்று வைத்து விட்டால் அப்புறம் வேலை இல்லை. தண்ணீர் தான் ஊற்றவேண்டும். தினம் தண்ணீர் ஊற்ற வேண்டியதில்லை. ஏதாவது ஒரு நாளைக்குத் தண்ணீர் ஊற்றினால் போதுமானது. அதன் பலன் சமுதாயத்திற்குப் பரிபூர்ணமாகக் கிடைக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். சாதாரணமாக ஒரு ஏக்கர் அல்லது ஒன்றரை ஏக்கர் தான் வைத்துக்கொண்டிருப்பார்கள் தனிப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்கள் அதைக் காட்டுப் பிரதேசங்களில் வைத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்வது அவ்வளவு சாத்தியம் அல்ல என்ற வகையில்தான் நான் சொன்னேன்.

**Sri S. M. ANNAMALAI:** ஸார், ஆன் எ பாயின்ட் அப் இன்பர்மேஷன் : சந்தனக்கட்டை பயிராகாத இடங்களில் சிலர் பத்து அல்லது பதினைந்து வருஷங்களாக வேறு தானியங்களைப் பயிரிட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ? இப்பொழுது குமரி கல்டிவேஷன் செய்கிறார்கள். அப்படி இரண்டு அல்லது மூன்று ஏக்கர் செய்கிறார்கள். அதற்குத் தண்ணீர் இரவு பகலாக மொண்டு வந்து ஊற்றுகிறார்கள். அத்துடன் மற்றவைகளையும் பயிரிடுகிறார்கள். அப்படி மற்றவைகளைப்



பயிரிட்டு அதன் மகசூல் வருகிற வரைக்கும் அவர்களுக்கு மாதம் பத்து அல்லது பதினைந்து ரூபாய் கிடைக்கும்படியான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா ? அப்படிக் கொடுத்தால் அவர்கள் குமரி கல்டிவேஷனை வளர்க்கத் தகுதியாக இருக்கும் அல்லவா ? இதைச் செய்ய அரசாங்கம் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri M. BHAKTAVATSALAM:** கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்துக்களை மேற்கொண்டு பரிசீலனை செய்யலாம்.

**Mr. SPEAKER:** Is the hon. Member withdrawing his cut motion?

**Sri S. M. ANNAMALAI:** I am pressing the motion, Sir.

**Mr. SPEAKER:** The question is—

"That the allotment of Rs. 56,56,400 under Demand IV—Forest Department be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

**Mr. SPEAKER:** The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 56,56,400 under Demand IV—Forest Department."

The Demand was put and carried and the Grant was made.

**Mr. SPEAKER:** Is the hon. Member Sri Sattanatha Karayalar withdrawing his amendment?

**Sri K. SATTANATHA KARAYALAR:** I am pressing my motion, Sir.

**Mr. SPEAKER:** The question is—

"That the allotment of Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

**Mr. SPEAKER:** The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 19,13,000 under Demand XXXIV—Capital Outlay on Forests."

The Demand was put and carried and the grant was made.

## DEMAND VI—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION.

**The Hon. Sri V. RAMIAH:** Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,19,800 under Demand VI—Motor Vehicles Acts Administration."

I have already circulated a note on the working of the Department.

[5th April 1958

MR. SPEAKER : I understand that all the opposition parties have agreed that the cut motion standing in the name of the hon. the Leader of the Opposition should be moved. The hon. the Leader of the Opposition may move his cut motion. Now we will sit till 1-30 p.m. May I know how long the Hon. Minister takes to reply to the debate?

THE HON. SRI V. RAMIAH : About 15 to 20 minutes, Sir.

MR. SPEAKER : I understand also that on behalf of the opposition, the hon. Member Sri Chinnadurai will speak. The hon. the Leader of the Opposition may move his cut motion.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Mr. Speaker, Sir, I move—

"That the allotment of Rs. 11,19,800 under Demand VI—Motor Vehicles Acts Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.

11-40 a.m. SRI V. K. RAMASWAMY MUDALIYAR : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரபணையின் பேரில் அநேக விஷயங்கள் பற்றிப் பேசவேண்டியிருந்த போதிலும், எனக்குக் கொடுத்திருக்கும் அவகாசம் குறைவாக இருப்பதன் காரணத்தினால், முக்கியமாக சில விஷயங்களை மாத்திரம் நான் எடுத்து சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ள அபிப்பிராயப்படுகிறேன். இந்த இராஜ்யத்தில் போக்குவரத்து இலாகா பஸ்கள், இலாரிகள் இவைகளுக்கு லைசென்ஸ் வழங்குவது பற்றி இன்னும் ஒரு திட்டமான முடிவுக்கு வரவில்லை. என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதில் பலவித ஊழல்கள் இருக்கின்றன. முன்பு "ரோட் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டி" என்று ஒரு கமிட்டியைப் போட்டு அதன் மூலம் இந்தப் பெர்மிட்டுகள் வழங்கப்பட்டு வந்தன. அந்தக் கமிட்டிக்கு கலெக்டர் சேர்மனாக இருந்தார். மற்றபடி ஜில்லா போர்டு தலைவர், போலீஸ் சூபரின்டெண்டெண்ட், இன்னும் ஒன்றிரண்டு நான்–அபீஷியல்ஸ் இவர்கள் அந்தக் கமிட்டியிலே அங்கத்தினர்களாக இருந்தார்கள். நம்முடைய ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு நடத்திக்கொண்டு வரும் இந்த சர்க்கார் கலெக்டர் அவர்களுக்கே இது விஷயமாகப் பூரா அதிகாரத்தையும் கொடுத்து, அவர்களே இந்த பெர்மிட் கொடுக்கும் விஷயம் பற்றி எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று இப்பொழுது உத்தரவு போட்டு, சில காலமாக அம்மாதிரி நடந்துவருகிறது. இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். முன்பு இருந்த கமிட்டியில் 'நான்–அபீஷியல்ஸ்' இருந்தார்கள். அதாவது முனிசிபல் சேர்மன், ஜில்லா போர்டு தலைவர் அங்கத்தினர்களாக இருந்தார்கள். தற்காலிகமாக இப்பொழுது சில காலமாக ஜில்லா போர்டு இல்லை. இருந்தபோதிலும், நம்முடைய ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொண்டிருக்கும் சர்க்கார் கலெக்டர் அதாவது ஒரு 'அபீஷியலிடம்' நம்பிக்கை வைத்து, மற்றவர்களிடம் நம்பிக்கை வைக்காததன் காரணம் என்னவோ எனக்குத் தெரியவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஜில்லா போர்டு தலைவர், முனிசிபல் சேர்மன். அதைத் தவிர டிரான்ஸ்போர்ட் அனுபவம் பெற்றவர்கள் அநேகம் பேர்கள் ஜில்லாக்களில் இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த அனுபவம் பெற்ற எம்.எல் ஏக்கள் இருக்கிறார்கள். அவர்களையாவது இந்தக் கமிட்டியில் போட்டிருக்கலாம். அதுபற்றி ஆட்சேபணை இல்லை. இப்படி மக்களுடைய பிரதிநிதிகளான 'நான்–அபீஷியல்ஸ்' பேரில் நம்பிக்கை வைக்காமல், கலெக்டர் பேரில் நம்பிக்கை வைத்து அவர்களே இந்த லைசென்சுகளைக் கொடுத்து பராமரித்து வரவேண்டும் என்ற முறையை அமுலுக்குக் கொண்டு வந்திருப்பது ரொம்பவும்



5th April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

வருந்தத்தக்கது. கலெக்டர்கள் இவைகளை நல்ல முறையில் நடத்திவந்த போதிலும், அவர்கள் பேரிலும் இன்னும் சில குறைகள் இருக்கின்றன. 'மார்கிங் லிஸ்ட' த்தைப் பற்றி தாம் பரிசீலித்துக்கொண்டு வருவதாக கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே கூறியிருக்கிறார். 'மார்கிங் லிஸ்டம்' என்ற அடிப்படையில் பெர்மிட்டுகள் வழங்கப்பட்ட போதிலும், அது நல்ல முறையில் நடக்கவில்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. சிறிய ஆபரேடர்களுக்கு பெர்மிட்கள் கொடுக்கிறார்களா என்றால், இல்லை. அதிலும் முக்கியமாகப் புதியதாக ஒருவர் இந்தத் தொழிலை எடுத்து நடத்தவேண்டுமென்றால் அவருக்குச் சலுகை ஒன்றும் கிடையாது. சிறு ஆபரேடர்களுக்கு, ஒரு வண்டி வைத்திருப்பவர்களுக்கு இரண்டு, இரண்டிற்கு மூன்று, மூன்றிற்கு நான்கு, நான்கிற்கு ஐந்து இம்மாதிரியாகப் பெர்மிட்கள் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதுவும் சரிவர நடத்தப்படவில்லை. பெரிய ஆபரேடர்களுக்கு, 30,40 வண்டிகள் வைத்திருப்பவர்களுக்கு கொடுப்பதில்லை என்று ஒரு பக்கத்தில் பிரசாரம். அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று மற்றொரு பக்கத்தில் பிரசாரம். இம்மாதிரியெல்லாம் நிலைமை இருந்துகொண்டு வருகிறது. இது விஷயமாக சர்க்காரின் கொள்கை என்ன என்பதுதான் நிச்சயமாக எல்லா அங்கத்தினர்களுக்கும் தெரியவேண்டும். சிறு ஆபரேடர்களுக்கு 'ஆர்கனைஸேஷன்' இல்லை என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பார்க்கப்போனால் அநேக இடங்களில் சிறிய ஆபரேடர்கள் நல்ல முறையில் சர்வீஸ்களை நடத்தி வருகிறார்கள். அவர்கள் பேரில் ஒருவித குறையும் இல்லை. பெரிய ஆபரேடர்ஸ், 'பிளீட் ஓனர்ஸ்' நன்றாக நடத்துவது ஒரு பெரிய காரியம் அல்ல. இந்தத் தொழிலையே நம்பி பிழைத்துக்கொண்டிருக்கும் சிறிய ஆபரேடர்கள் சர்வீஸ்களை நல்ல முறையில் நன்றாக நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஒரு வண்டி ஒரு இடத்தில் 'பிரேக்டவுன்' அதாவது கெட்டுப்போய் விட்டால், 24 மணி நேரத்திற்குள்ளேயே, இன்னும் குறுகிய காலத்திற்குள்ளேயே, வண்டியை ரிபேர் செய்து 'லைனில்' விடுவதற்கு முயற்சி செய்கிறார்கள், சிறு ஆபரேடர்களுக்கு நல்ல சலுகைகள் கொடுத்து, அவர்கள் இந்தத் துறையில் முன்னேறுவதற்குச் சர்க்கார் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி பெர்மிட் கொடுக்கவேண்டுமென்பது பற்றி சர்க்கார் தீர்க்கமாக ஆலோசித்து திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம் போன்ற மற்ற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வரும் பஸ்களுக்கு முன்பு சென்னை நகரத்திற்குள் 30 பஸ், ஸ்டாப்புகள் இருந்தன. இப்பொழுது கிண்டிக்கு அருகாமையிலுள்ள கத்திப்பாரா ஸ்டாப்பிங்கிலிருந்து பிராட்வே வரைக்கும் 6 பஸ் ஸ்டாப்புகள்தான் இருக்கின்றன. எதற்காக சர்க்கார் இம்மாதிரி பஸ் ஸ்டாப்புகளைக் குறைத்திருக்கிறார்கள் என்றால், சர்க்கார் டிரான்ஸ்போர்டு பாதிக்கப்படுகிறது என்பதற்காக. அதனால் சர்க்கார் டிரான்ஸ்போர்டுக்கு வருமானம் குறைந்துவிடுகிறது என்ற காரணத்தினால். இம்மாதிரி பஸ் ஸ்டாப்புகளைக் குறைத்திருக்கிறார்கள். இதனால் திண்டிவனம், வட ஆற்காடு, போரூர் இம்மாதிரி இடங்களிலிருந்து சென்னைக்கு பிரயாணம் செய்யும் மக்கள், கர்ப்ப ஸ்திரிகள், நோயாளிகள் இறங்குவதற்கு கத்திப்பாரா ஸ்டாப்பிங்கை விட்டால் சர்க்கார் டிரான்ஸ்போர்டு வொர்க்ஷாப் வரையிலும் நடுவில் ஒரு ஸ்டாபிங் கூட இல்லை என்றால் கஷ்டப்படுவார்கள். ஆகவே மக்கள் மூட்டை முடுச்சுக்களை வைத்துக்கொண்டு மறுபடியும் அதிகக் கட்டணம் கொடுத்து சர்க்கார் டிரான்ஸ்போர்டு பஸ்ஸில் பிரயாணம் செய்து தாங்கள் போகவேண்டிய இடத்திற்குப் போய் இறங்கவேண்டியதாக இருக்கிறது. இதனால் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இது பற்றி எங்கு பார்த்தாலும் எதிர்ப்பு இருந்துகொண்டு வருகிறது, மேலும் 'கான்ஸ்டிடியூஷன்' இம்மாதிரி செய்வதை 'அலவ்' செய்யுமா என்பதையும் சர்க்கார் யோசிக்க வேண்டும். சர்க்கார் என்ற முறையில் அவர்களால் நடத்தப்படும் டிரான்ஸ்போர்டுக்கு அதிகமான வருமானம் வரவேண்டுமென்பது ஒரு பக்கத்தில் இருந்தாலும், சர்க்கார் பஸ்களுக்கு ஒரு வித விதிகள், தனி நபர் பஸ்களுக்கு வேறு விதிகள் என்று ஏற்படுத்தலாமா என்பதைச் சர்க்கார் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதை உடனடியாக அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும்.

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [5th April 1958

தவிர, ஒரு லாரி ஓட்டுவதற்கு பெர்மிட் வேண்டுமென்று மனு போட்டால் குறைந்தது 6 மாதம் அல்லது ஒரு வருஷம் இல்லாமல் பெர்மிட் வருவது கிடையாது. இதன் காரணம் என்னவோ தெரியவில்லை. அதிலும் ஒரு ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்குப் போக பெர்மிட் வேண்டுமென்றால், அதில் பலவித ஊழல்கள், லஞ்சம் இவைகளெல்லாம் மலிந்து இருக்கின்றன. இவைகள் பர்மிட் கொடுப்பதற்கு தொடுலை நார்த் அமெரிக்காவிலிருந்து சவுத் அமெரிக்காவிற்கும் பிரேஸிலுக்கு லாரிகள் போகவேண்டுமென்றால் 24 மணி நேரத்தில் ஒரே பெர்மிட் கிடைத்துவிடும். மாகாணம் பூராவிற்கும் ஒரு பெர்மிட் கிடைத்துவிடும். வரிகளெல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது. எண்ணெய் விலை ஏறிவிட்டது. வண்டி விலை ஏறிவிட்டது. அப்படியிருக்கும்பொழுது பெர்மிட் கொடுப்பதற்கு காலதாமதம் ஆனால் ரொம்பவும் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. சென்னையிலிருந்து கன்யாகுமாரி வரைக்கும், கோயம்புத்தூர் வரைக்கும் போவதற்கு சென்னையில் ஒரு அதிகாரியை வைத்து மாகாணம் பூராவிற்கும் ஒரே பெர்மிட்டாக இருக்கும்படி ல்ாரி பெர்மிட்டுகள் கொடுக்கப்படவேண்டும். இந்த ஸோனல் ஸிஸ்டம் சரிவர வேலை செய்யவில்லை. செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்திற்குப் போக வேண்டுமானால், வேறு பெர்மிட் வேண்டும். ஆனால் போலீஸாருக்கு மாமூல் கொடுத்துக்கொண்டு பெர்மிட் இல்லாமல் போய்க்கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு ஸோனைவிட்டு உதாரணமாக புதுச்சேரிக்குப் போகவேண்டுமானால் வேறு பெர்மிட் வாங்கியாகவேண்டும். மாகாணம் பூராவிற்கும் லாரிகளுக்கு ஒரே பெர்மிட் கொடுத்தால்தான் இது நன்றாக வேலை செய்யும். அதுவும் ஒரு இடத்திலிருந்து எவ்வளவு சீக்கிரம் கொடுக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொடுக்கும்படி சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இது ரொம்பவும் முக்கியமான சமாசாரம். இதில் அரசாங்கம் தீவிரமாகக் கவனம் செலுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

தவிர, 25 சத விகிதம் அதிகமான பெர்மிட்டுகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சில பிராந்தியங்களில் நான் போய் பார்த்தேன். ஒன்றிரண்டு போய்க்கொண்டிருந்த வண்டிகளையும் நிறுத்திவிடும்படியான தருணத்தில் இருந்துகொண்டு வருகிறது. மேலும் அதிக வண்டிகளை ஒரு ரூட்டில் விடவேண்டுமென்று சொன்னால், மற்ற ஆபரேடர்கள் ஆக்ஷேபணை செய்கிறார்கள். இதற்காக சர்க்கார் ஒரு அதிகாரியை நியமித்து அந்தப் பிராந்தியங்களில் அந்த அதிகாரி சுற்றுப்பிரயாணம் செய்து, மனுக்கள் வாங்கி எந்த இடத்தில் ஜனங்கள் பஸ்களை அதிகப்படுத்தவேண்டுமென்று சொல்கிறார்களோ அந்த இடங்களிலெல்லாம் 25 சத விகிதம் அதிகமான பஸ்களை விடுவது பற்றி நன்றாகப் பரிசீலனை செய்து, அந்த இடங்களில் பஸ் போக்குவரத்தை விஸ்தரிக்க வேண்டும். அதிலும் ஒரு ஆர். டி. ஓ. வை நம்பி இதைச் செய்ய முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். மேலும்
11-50 a.m. ஒரு ஆர். டி. ஓவை நம்பி இதைச் செய்யமுடியாது என்பதுதான் என் அபிப்பிராயம். அதிகமாக வேண்டிய இடங்களுக்குப் பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுவதில்லை. எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் பஸ் ரூட்டுகளை மூடிவிட்டார்கள். அந்த இடங்களில் மேலும் 25 சதவிகிதம் போடுவதென்றால், அது எப்படி முடியும்? இதையெல்லாம் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER: The hon. Leader of the Oppositiou is now speaking as a Member of the House and therefore his time is also fixed.**

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR:** ஸீஸன் டிக்கெட்டுகள் கொடுப்பது சம்பந்தமாகவும் சர்க்கார் நன்றாக ஆலோசிக்க வேண்டும். இதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. "**Season tickets holders are not allowed to travel in express trains**" என்று சொல்லப்படுகிறது. எந்த எந்த பிராந்தியங்களில் அதிக பஸ்களை விடவேண்டுமென்று ஆலோசித்து, அவசியமான பிராந்தியங்களில் அதிக பஸ்களை விடவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். சில இடங்களில் "ரிக்கெட்டில்" பஸ்கள் ஓடுகின்றன. அவைகளில் சிலவற்றின் சொந்தக்காரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்



5th April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliar]

கப்பட்டதால் அவர்கள் அவைகளை எடுத்துவிட்டு புதிய பஸ்களைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் புதிய பஸ்களைப் போட்டிருக்கும்போது உடனே பஸ் தொழிலை தேசீயமயமாக்கி விட்டால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுமா ? இப்படிப்பட்ட ஸ்திரமில்லாத நிலைமையில் பஸ் முதலாளிகள் இருக்கிறார்கள். எந்த எந்த ரூட்டுகளை எடுத்துக் கொள்ள தாங்கள் உத்தேசித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்து சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட வேண்டும். அவ்வாறு செய்தால் பஸ் முதலாளிகளுக்குச் சௌகரியமாக இருக்கும். அறிக்கை வெளியிட்ட பிறகு, தங்களால் எடுத்துக்கொள்ள முடிந்த ரூட்டுகளை சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம்; எடுத்துக்கொள்ள இயலாத ரூட்டுகளை விட்டுவிடலாம். எப்படி இருந்தாலும், முதலில் தங்கள் தேசீயமயமாக்கும் ஏற்பாட்டைச் சர்க்கார் அறிவிக்க வேண்டும். இதையும் சர்க்கார் தீர்க்கமாக ஆலோசிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

சில பஸ்களை வாங்கினால், உடனே "ஸ்பேர் பார்ட்ஸ்" (**spare parts**) வருவதில்லை. காரணம் இறக்குமதி லைஸென்ஸ் கொடுக்கப்படுவதில்லை. சில பஸ்களை வாங்கியவுடன் அவை ஆறு மாதங்கள் ஓடுகின்றன, அதற்குப் பிறகு "ஸ்பேர் பார்ட்ஸ்" போடவேண்டியிருந்தால், சாமான் கிடைக்காத காரணத்தினால் அவைகள் நின்றுவிடுகின்றன. ஏனென்றால், அந்தச் சமயத்தில் அவர்களிடம் இறக்குமதி லைஸென்ஸ் இருப்பதில்லை. மத்திய சர்க்காரிடம் தெரிவித்து, எல்லா பஸ் முதலாளிகளுக்கும் இறக்குமதி லைஸென்ஸ் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். நான் சொன்ன எல்லா விஷயங்களையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Srimathi KAMALAMBUJA AMMAL:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் பிரேரேபித்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். இப்போது போதிய பஸ்கள் இல்லை என்று சொல்லுகிறோம். இன்னும் 72 பஸ்கள்கூட அரசாங்கத்திற்குத் தேவையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. சென்னை நகரத்தில், சில பஸ் ரூட்டுகளில் போதிய பஸ்கள் இல்லை. உதாரணமாக, 2-ம் நெம்பர் ரூட்டிலும், 4-ம் நெம்பர் ரூட்டிலும் போதிய பஸ்கள் இல்லை. இந்த இரண்டு ரூட்டுகளுக்கும் அதிக பஸ்கள் தேவை.

**Mr. SPEAKER:** நீங்கள் தேசீயமயமாக்கப்பட்ட போக்குவரத்தைப் பற்றி பேசுகிறீர்கள். அதுசம்பந்தமாக மானிய கோரிக்கை இன்று பிரேரேபிக்கப்படவில்லையே!

**Srimathi KAMALAMBUJA AMMAL:** லாரிகளுக்கும் பஸ்களுக்கும் பெர்மிட்டுகள் கொடுப்பதைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்னை மாநிலத்திலும் ஆந்திர மாநிலத்திலும் லாரியை ஓட்டுவதற்குச் சிலர் பெர்மிட் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய லாரிகள் சென்னையிலிருந்து ஆந்திராவிற்கு போகின்றன. சென்னையிலிருந்து ஆந்திராவிற்குப் போகும்போது அந்த லாரிகள் செல்லும் வேகம் சொல்லத்தரமன்று. சென்னையிலிருந்து கல்கத்தாவுக்குப் போகும் ரோடில் ஏற்படும் லாரி விபத்துக்கள் அதிகமாகிக்கொண்டே போகின்றன. அதற்குக் காரணம் என்னவென்றால்; அந்த ரோடில் போகும் லாரிகளின் டிரைவர்கள் அவைகளை வேகமாக ஓட்டுவதுடன் மட்டுமின்றி, சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நாட்கள் இரவு பகலாகக் கண்விழித்து வண்டி ஓட்டுகிறார்கள். அந்த ரோடில் சாதாரணமாக விபத்துக்கள் காலை 3–4 மணிக்குத்தான் ஏற்படுகின் றன. இரண்டு-மூன்று நாட்களாகத் தூங்காததால் டிரைவர்கள் அந்த நேரத்தில் தூங்கிவழிந்துகொண்டே லாரிகளை ஓட்டுகிறார்கள். அந்த வேளையில் விவசாயிகள் தங்கள் பொருள்களை வண்டிகளில் மூட்டை மூட்டையாக நகரங்களுக்கு அந்த ரோடுகளின் மூலம் கொண்டுபோகிறார்கள். அப் போது, தூங்கிக்கொண்டே லாரி ஓட்டும் டிரைவர்களின் லாரிகள் விவசாயி களின் வண்டிகளின் மேல் மோதி அந்த வண்டிகளையும், வண்டி மாடு களையும், விவசாயிகளையும் சுக்கு நூறாக ஆக்கிவிடுகின்றன. ஆகவே ரோடு களில் போதிய செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போடவேண்டும். இப்போது 30 மைல்களுக்கு ஒருவர் வீதம் செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் போடப்படுகிறார் கள். இது போதாது. 10 மைல்களுக்கு ஒருவர் வீதம் செக்கிங் இன்ஸ்பெக்

[Srimathi Kamalambuja Ammal] [5th April 1958

டர்களைப் போடவேண்டும். அப்படிச் செய்தால்தான் லாரி டிரைவர்கள் வேகமாக லாரியை ஓட்டமாட்டார்கள். 30 மைல்கள் வரை செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் இல்லாவிட்டால் லாரி டிரைவர்கள் பல இடங்களில் வெகு வேகமாகப் போவார்கள். 10 மைல்களுக்கு ஒருவர் வீதம் செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போட்டால் அவர்கள் வேகமாக லாரியை ஓட்ட முடியாதபடி செய்யலாம். செக்கிங் இன்ஸ்பெக்டர்களை அதிகரிக்காவிட்டால், இரவு 10 மணியிலிருந்து காலை 4 மணி வரை லாரிப் போக்குவரத்திற்குத் தடை விதிக்க வேண்டும். அவ்வாறு செய்வது முடியாத காரியம் என்பது எனக்குத் தெரியும். ஆகவே 10 மைல்களுக்கு ஒருவர் வீதம் செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போட வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.'

இப்போது நம் ஊரில் மாட்டு வண்டிகளும் லாரிகளைப்போல் இரண்டு ரப்பர் சக்கரங்களுடன் போகின்றன. லாரிகளுக்கு வரி விதிக்கப்படுவதைப் போல் இவைகளுக்கு வரி விதிக்கப்படுவது கிடையாது. இவைகளை ஓட்டுவதற்கு லைசென்ஸ் மட்டும் வாங்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாக லாரிகள் எடுத்துச்செல்லும் பாரத்தில் பாதிக்கு மேற்பட்ட பாரத்தை இந்த மாட்டு வண்டிகள் எடுத்துச் செல்கின்றன. ஆகவே இம்மாதிரியான மாட்டு வண்டிகளுக்கும் வரி விதிக்க வேண்டியது அவசியம். இவைகளுக்கும் வரி விதிக்க வேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாதாரண மக்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்களிலுள்ள மீட்டர்களை வாசிக்கத் தெரியவில்லை. டாக்ஸிகளிலுள்ள மீட்டர்களை சாதாரண மக்கள் வாசிக்க முடிகிறது ; அந்த மீட்டர்கள் சாதாரண மக்களுக்குப் புரிகிறது. இதன் காரணமாக, ஆட்டோ ரிக்ஷாக்களில் பிரயாணம் செய்யும் சாதாரண மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். ஆகவே ஆட்டோ ரிக்ஷாக்களிலும் டாக்சிகளில் வைக்கப்படுவது போன்ற மீட்டர்களை வைக்க வேண்டுமென்று உத்தரவு போடவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றிரண்டு பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்கள் இன்னும் பல பஸ்களுக்குப் பெர்மிட் கேட்டால் அவர்களுக்குப் பெர்மிட் கொடுக்கப்படுவதில்லை என்றும் அதிக பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் மேலும் மேலும் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன என்றும் கனம் எதிர்க் கட்சித் தலைவர் கூறினார். குறைவான பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு மேலும் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுவதில்லை என்று கருதுவது தவறு. சம்பந்தப்பட்ட விதிகளுக்கு உட்பட்டிருந்தால் குறைவான பஸ்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் மேலும் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன. விதிகளுக்குப் புறம்பாக இருந்தால் தான் பெர்மிட் கொடுக்கப்படுவதில்லை. சாதாரணமாக, குறைவான பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் அதிகமாகப் பெர்மிட்டுகள் கொடுக்கப்படுகின்றன. 5–10க்கு மேற்பட்ட பஸ்களை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் பஸ் பெர்மிட்டுகள் எளிதில் கொடுக்கப்படுவதில்லை.

அடுத்தபடியாக, ஆர்.டி.ஏ–யில் உத்தியோகப்பற்றற்றவர்களுக்கு (**non-officials**) இடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. உத்தியோகப்பற்றற்றவர்களுக்கு அதில் இடம் கொடுத்தால் சில கஷ்டங்கள் ஏற்படும். உத்தியோகப்பற்றற்றவர்கள், பலரிடம் தயவுதாட்சண்யம் பார்க்கிறார்கள். சாதாரணமாக, மக்களுடைய வோட்டுகளைப் பெற்றவர்கள், வோட்டளித்த மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்யாவிட்டால் அவர்களுடைய வெறுப்பை சம்பாதித்துக்கொள்வார்கள்.

**12 noon.** அதுபோல, இம்மாதிரி ட்ரான்ஸ்போர்ட்டிலே பர்மிட்களுக்கு யாராவது அங்கத்தினர்களைக் கொண்டு சிபார்சுக்குப் போகிறார்கள். அந்த அங்கத்தினர் அதைச் செய்யவில்லையென்றால், வெளியே வந்தவுடனே கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சலுகை அங்கத்தினர்களுக்கே பாதகம் ஏற்படக்கூடிய அளவுக்குக் கொடுக்காத வகையில், ஆபிசர்களைப் போட்டு இதை நிர்வாகம் செய்யவேண்டும் என்ற முடிவு செய்திருக்கிறது நன்மை என்றுதான் நான் உத்தேசிக்கிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட சில திருத்தங்களை அரசாங்கம் ஏற்றுகொண்டு இன்றைக்கு ஆவனசெய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகின்றேன்.



5th April 1958]

**SRI M. R. KANDASWAMI MUDALIYAR** : சபாநாயகர் அவர்களே, இப்பொழுது அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் ட்ரான்ஸ்போர்ட் மான்யத்தின் மீது சில விஷயங்களைக் கூற நினைக்கிறேன். இப்பொழுதுள்ள போக்குவரத்து இலாகா நல்ல நிலைமையிலே நிர்வகிக்கப்பட்டு பொதுஜனங்களுக்கு அனுகூலமான முறையில் பல காரியங்களைச் செய்து வருகிறதைப்பற்றி நான் மிகவும் அந்த இலாகாவைப் பாராட்டுகிறேன்.

அதோடு இன்னும் சிற்சில விஷயங்களையும் கவனித்து நல்ல முறையிலே அவைகளைச் சீர்திருத்தி அமைக்கவேண்டுமென சில விஷயங்களை நான் சொல்ல எண்ணுகிறேன்.

(இத்தருணத்தில் ஸ்ரீ கே. சட்டநாத கரையாளர் தலைமை வகித்தார்.)

இப்பொழுது நாம் சோஷலிச சமுதாயத்தை நாட்டிலே கொண்டுவர வேண்டுமென நினைத்து, தேசியத்தை ஓர் அளவுக்கு அந்த நிலைக்குக் கொண்டுவரக்கூடிய முறையிலே இப்பொழுது கனம் பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே. அந்த முறையிலே பஸ் ஆபரேட்டர்களாக, அதிகமாக பஸ் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு மேலும் சில பஸ்கள் ஓட்டுவதற்குப் பர்மிட் கொடுக்கக்கூடிய நிலைமையில், இந்த நாட்டில் பொருளாதாரம் ஒரே இடத்தில் குவியக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க வேண்டிய சில ஷரத்துகள் அதில் இருக்கின்றன. அவை சரியாக அமுலாக்கப்படவேண்டும். சட்டத்தின் குறைபாட்டின் காரணமோ என்னவோ தெரியவில்லை. புதிதாக விண்ணப்பிக்கக் கூடியவர்களுக்கு சான்ஸ் கிடைக்கவில்லை என்று பொது ஜனங்களிடத்திலிருந்து அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி நம்முடைய அரசியல் முறைக்கு ஏற்ப பத்து பஸ்களுக்குமேல் ஏற்கெனவே வைத்திருக்கக்கூடியவர்களுக்கு எந்த பஸ் முதலாளிகளானாலும், அவர்களுக்கு புதியதாக இனிமேல் பர்மிட் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாத அளவுக்கு இப்பொழுது இருக்கும் முறையை ஓரளவு நீக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

நல்ல நிர்வாகத் திறமையுள்ளவர்கள் புதிதாக விண்ணப்பித்தாலும் அவர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேறி வர அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இந்த லாரிகள் இப்பொழுது போகக்கூடிய நிலைமையில் பல இடங்களில் விபத்துகள் ஏற்படுகின்றன. அவர்களுக்கு எந்த விதமான கண்டிஷனும் இல்லை என்று நினைக்கிறேன். இரவு பகல் எந்த நேரத்திலும் போகக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதால் அவர்கள் தூக்கத்தினால்—அவர்கள் மது வகைகள் என்று சொல்லுகிறார்களே அதை அருந்துவதன் காரணமாகக்கூட—பல இடங்களில் தவறுதலான விபத்துக்கள் நடக்கின்றன. பட்டப் பகலில் சமீபத்தில் ஆத்தூர் ரோடில் ஒரு இரட்டை மாட்டு வண்டி நடு ரோடில் வந்துகொண்டிருக்கும் நேரத்திலே லாரியொன்று அதன்மீது மோதி, அந்த இடத்தில் சுமார் ரூபாய் 250 முதல் 300 பெறுமானமுள்ள மாடுகள் வண்டியின் நேர் பக்கத்தில் அடிபட்டு நடுரோட்டிலே கிடக்கின்றன. இம்மாதிரி விவசாயிகள் தங்களிடத்தில் உள்ள சிறு தொகையை வைத்துக்கொண்டு தொழிலை நடத்தும் நேரத்தில் இவ்வளவு பெரிய விபத்துக்கள் ஏற்படுமானால் அதை நம்பி வாழக்கூடிய விவசாயிகளின் நிலை மிக மோசமாகப் போய் அவர்களைப் பாதிக்கும் நிலைமையில் போகும். இந்த ஆபத்தைத் தடுப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கவேண்டும். எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர், சொல்லிய மாதிரி 50 மைல், 60 மைல் வேகம் சென்றால், அதைத் தடை செய்யக்கூடிய வகையில் ஆபிசர்களை நியமிக்க வேண்டும். எந்தந்த இடங்களில் எத்தனை மைல் வேகம் போக வேண்டுமோ அந்த அளவுக்குக் கண்காணிக்க ஒரு டைமிங் ஸிஸ்டம் இருக்கவேண்டும்.

அதோடு, இரவு காலங்களில் லாரிகள் 12 மணி அல்லது ஒரு மணிக்கு மேல் போகக்கூடாதென்ற ஒரு தடையையும் விதித்தால்கூட நன்றாக இருக்கும். அதனால் இந்த விபத்துக்களும் ஓரளவு தவிர்க்கக்கூடும்.

[Sri M. R. Kandaswami Mudaliyar] [5th April 1958

சென்னையிலிருந்து சேலம் வரக்கூடிய இடங்களில், இரவு காலங்களில் வண்டிகளில் செல்வதற்கு ஆபத்தான நிலைமை இருக்கிறது. அவர்கள் வரக்கூடிய காலங்களில் எதிரில் வரக்கூடிய வண்டிகள் எந்தத் திசையிலிருந்து வருகின்றன. எந்தத் திசையிலிருந்து போகின்றன என்று தெரிந்துகொள்ள முடியாத அளவுக்கு லாரிகளில் உள்ள விளக்கு, லைட்டுகளை ஆப் செய்யாமலிருக்கிறார்கள். அதனால் விபத்துக்கள் விளைகின்றன. அதை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனித்து விபத்துக்கள் ஏற்படா வண்ணம் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் மார்க்கங்களில் ஒவ்வொரு பஸ் நிலையத்திலும் டிக்கட் புக் செய்யும் புக்கிங் ஆபிஸ் பல இடங்களில் இல்லை. சேலத்திலிருந்து திருச்செங்கோடு போகவேண்டுமானால், குறைந்தது 32 மைல் இருக்கிறது. டிக்கட் கொடுக்கும்போது நேராக திருச்செங்கோட்டுக்குத்தான் டிக்கெட் கொடுக்கிறார்களே தவிர, சேலத்திலிருந்து 12வது மைலில் உள்ள ஆட்டாம்பட்டிக்கு டிக்கட் வேண்டுமானால் கொடுப்பது குறைவாக இருக்கிறது. சேலத்திலிருந்து போகும்போதும் சரி, திருச்செங்கோட்டிலிருந்து வரும்போதும் சரி நூற்றுக்கணக்கான பிரயாணிகள் ஆட்டாம்பட்டியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆட்டாம்பட்டியிலிருந்து சேலத்திற்கோ, திருச்செங்கோட்டுக்கோ போகவேண்டுமானால் பஸ் கிடைப்பதில்லை. பஸ் வந்தவுடன் 100 பேர்கள் ஓடோடியும் வந்து ஒரே பஸ்ஸில் ஏறுவதற்கு வருகிறார்கள். ஆண், பெண் வித்தியாசமின்றி எல்லோரும் ஒருவரோடொருவர் அடித்துக்கொண்டு போகக்கூடிய காலங்களில் அங்கே திருடர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள், பிக் பாக்கட் அடிப்பதற்கு. திருட்டுகள் நடப்பதோடுகூட, அங்கே பல அவமானகரமான செயல்களும் ஏற்படுகின்றன. இம்மாதிரி சங்கடங்கள் எல்லாம் இருப்பதால், பிரயாணிகளுக்கு நல்ல வசதிகள் செய்துகொடுப்பதற்கான முறையில் சேலத்திலிருந்து 12 மைலுக்கு அப்பாலுள்ள இடங்களைப் போன்று, அதிக ஜனக்கூட்டங்கள் ஏறக்கூடிய இடங்களில், மேஜர் பஞ்சாயத்துப் போன்ற இடங்களில், பஸ் நிலையங்கள் வைத்து, அங்கே வரிசைக் கிரமமாக புக்கிங் செய்யக்கூடிய முறையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆட்டாம்பட்டியிலிருந்து சேலம் போகவேண்டுமென்றால், நூற்றுக்கணக்கான பேர்கள் ஒவ்வொரு பஸ்ஸும் வரக்கூடிய சந்தர்ப்பத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை டிராபிக் போர்டாரிடம் தெரிவித்தால், பஸ் முதலாளிகள் அங்கே சென்று, "அங்கே வேறு பஸ் தேவை இல்லை, ஜனங்களுக்குப் போதிய வசதிகள் இருக்கின்றன புதியதாக பஸ் ரூட் கொடுக்கவேண்டியதே இல்லை" என்று சொல்கிறார்கள். முதலாளிகளின் அபிப்பிராயத்திற்கு பஸ் விடப்படுகிறதா அல்லது பொதுஜனங்களுடைய சௌகரியத்திற்கு விடப்படுகிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். முதலாளிகளின் அபிப்பிராயத்தின்படிதான் டிராபிக் போர்ட் நடக்கவேண்டுமா என்று நான் கேட்கிறேன். முதலாளிகள் சொல்வதை அந்த அதிகாரிகள் கேட்டு அதன்படி நடப்பாரானால், பொது ஜனங்களுடைய சௌகரியம் என்ன ஆவது? பொது ஜனங்களுக்காக நடக்கக்கூடிய பஸ் என்று சொல்லக்கூடிய முறையில், வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் கோர்ட்டுக்குப் போகக்கூடியவர்களுக்கும் சௌகரியமாக இருக்கிறதா என்று அரசாங்கம் கவனித்து, அங்கே உடனடியாக பஸ் விடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அந்த பஸ் முதலாளிகள் அதை ஆட்சேபிக்கிறார்கள் என்று சொன்னால், அங்கு போதிய ஜன நெருக்கடி இருக்கிறதா என்பதைப் பார்க்க தனியாக ஒரு அதிகாரியைப் போட்டு விசாரிக்க வேண்டும். தினசரி எவ்வளவு பாசஞ்சர்கள் அந்த இடத்தில் பஸ்ஸுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள், எத்தனை பேர்களுக்கு இடம் கிடைக்கிறது, எத்தனை பேர்கள் இடம் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகிறார்கள் என்பதையெல்லாம் விசாரித்து நேரிடையாகத் தெரிந்து கொள்வதற்கு ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, அவருடைய யோசனையின்படி எந்த எந்த இடங்களில் பஸ் போக்குவரத்து புதியதாக ஏற்படுத்த வேண்டும் என்று நிர்ணயித்து பஸ் பர்மிட்டுகள் கொடுக்கக்கூடிய முறையில் சட்டங்களைத் திருத்தவேண்டுமென்று மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.



5th April 1958] [Sri M. R. Kandaswami Mudaliyar]

முதலாளிகள் தங்களுடைய லாபத்தை மட்டும் கருதி, அந்த இடத்தில் இருக்கும் பஸ்களைத் தவிர வேறு ஒன்றும் ஓடாமல் இருந்தால் தங்களுக்கு லாபம் வரும் என்று கருதுவார்கள், பொதுஜனங்களுடைய வசதியை அவர்கள் நினைக்கமாட்டார்கள். மீண்டும் ஒரு பஸ் விட்டு, ஜனங்கள் வசதியாகப் பிரயாணம் செய்வதற்கான வழியை அவர்கள் தேடவே மாட்டார்கள். ஆகவே, பொது ஜனங்களுடைய சௌகரியத்திற்கான முறையில் அந்த இடத்திற்குப் போதிய பஸ் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தவேண்டுமென்று நான் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த பஸ்களில் டிக்கட் கொடுக்கும் முறையில் சில தவறுதல்களும் ஏற்படுகின்றன. சேலத்திலிருந்து திருச்செங்கோட்டுக்கு ரூ. 1-2-0 கட்டணம் என்றால், கூட்டம் அதிகமாக இருக்கும் காலங்களில் இவ்விரண்டு ஊர்களுக்கும் நடுவில் இருக்கும் ஊர்களுக்கு டிக்கட் கொடுப்பதே இல்லை. பஸ் புறப்பட்ட இடத்திலிருந்து 12-வது மைலிலிருக்கும் ஏழணா கட்டணத்தில் இருக்கும் ஒரு ஊருக்கு டிக்கட் வேண்டுமென்றால் டிக்கட் கொடுக்காமல் பஸ் எந்த இடத்திற்குப் போய்ச் சேருகிறதோ அந்த இடத்திற்குத்தான் டிக்கட் வழங்குகிறார்கள். அதன் மூலம் 12-வது மைலில் இறங்குபவன் பஸ் கடைசியாகச் செல்லும் இடத்திற்கான முழுக் கட்டணம் செலுத்தி டிக்கட் வாங்கி, ஏழணா கட்டணத்தில் இருக்கும் தன்னுடைய ஊரில் இறங்கிச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, ஒரு பஸ்ஸில் 40 பிரயாணிகள் ஏறலாம் என்றால், 10, 15 டிக்கட்டுகள் காலியாக வைத்து 12, 15, 18-வது மைல்களில் ஏறுபவர்களுக்கு இடம் அளிக்கவேண்டிய ஏற்பாட்டை கண்டிப்பான உத்தரவின் மூலம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரியாக இருந்தால் தான் ஓரளவுக்கு 12-10 p.m.
பத்து மைல் பன்னிரண்டு மைல் என்று இடையிலுள்ள ஊருக்குப் போகிறவர்களுக்கு வசதி ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது இல்லாத காரணத்தினால் நெடுந்தூரம் போவதற்குரிய சார்ஜை வாங்கிக் கொண்டு குறைந்த தூரத்தில் இறக்கிவிடுகிறார்கள். இந்த நிலைமையை நமது சர்க்கார் மாற்றிச் அமைத்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பர்மிட் வழங்கும் முறையிலும் சமதர்மக் கொள்கையை அனுசரித்து அதிகமான பஸ்கள் இருக்கக்கூடியவர்களுக்கே ரூட்டுகளைக் கொடுக்காமல் பாவலாக! பொருளாதாரத் துறையில் யாவரும் முன்னேற்றம் அடைவதற்கு வேண்டிய நிலைமையில் புதிதாக வரும் அப்ளிகேஷன்களை எல்லாம் கவனித்து ரூட்டுகளை வழங்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ஹரிஜனங்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கும் அவர்கள் ஒரு பங்கு கொடுத்தால் சர்க்கார் ஒரு பங்கு கொடுத்தோ அல்லது அவர்களுக்கு முதல் இல்லாவிட்டால் இவர்களே மூலதனம் கொடுத்தோ பஸ் தொழிலில் அவர்களும் ஈடுபட வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI M. SELVARAJ**: மதிப்பிற்குரிய சார்மென் அவர்களே, மோட்டார் வாகன மானியத்தின் மீது எதிர்க்கட்சித் தலைவர் கொடுத்து இருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மந்திரி அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் "**Provision has been made for the constitution of a claims tribunal to settle claims arising out of accidents involving motor vehicles**" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நஷ்ட ஈடு மோட்டார் ஓட்டுகிற டிரைவர், கண்டெக்டர், சரக்குகளை ஏற்றிச் செல்கிற முதலாளி இவர்களுக்கு இதில் என்ன கொடுக்கப்படுகிறது என்பதை அமைச்சர் அவர்கள் தம் பதிலில் விளக்கவேண்டும் என்பதாகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக ரூட்டுகளை வழங்குவதில் மார்க்கிங் லிஸ்டம்படி வழங்கப்படுகிறது. "**status experience, workshop facilities, sector qualification**", என்பதாக அவர்களுக்குள்ள தகுதியை அளவிட்டு மார்க் லிஸ்டம் வழங்கி அதன் மூலமாக பஸ் ரூட்டுகள் வழங்கப்படுகின்றன. குறிப்பாக ஒரு புது ரூட் ஓபன் செய்யப்படுகிறதென்றால் நூறு அப்ளிகேஷன்கள் வருகின்றன. யாரோ ஒருவருக்கு ரூட் கிடைக்கிறது.

[Sri M. Selvaraj] [5th April 1958

பாக்கி 99 பேர்களுக்கு கிடைப்பதில்லை. அவர்கள் ஹைகோர்ட்டில் கேஸ் போடுகிற காரணத்தினால் பத்தாயிரம் இருபதாயிரம் என்று முதலீடு செய்திருக்கிற பஸ் ரூட் கிடைத்தவரும் கூட ஆறு மாதம், எட்டு மாதம் பஸ் விடமுடியாமல் போய்விடுகிறது. அவர்கள் பஸ்ஸை ஓடவிடாமல் தடை உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். கேஸ் நடந்து அவர்களுக்கு எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகிறது. ஆனால் இந்தவகையில் திட்டவட்டமாக முடிவு காண வேண்டுமென்றால் கலெக்டரை விட ஜுடிஷியல் அதிகாரியை வைத்து பர்மிட் வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால் அதை மாற்றவேண்டுமென்றால் ஹைகோர்ட்டுக்குப் போகவேண்டியதில்லை. அப்படியானால் மனப்பான்மை குறையும். இதையும் கவனிக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக என்னுடைய வட்டாரத்தில் சிதம்பரத்திலிருந்து பெரம்பலூருக்கு பஸ் விடும் ரூட் இதுவரையில் ஒன்பது பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது அது ஒன்பதாவது ஆசாமியிடத்தில் இருக்கிறது. முதலில் பர்மிட் கொடுக்கப்பட்டவர் என்ன ஆனார் என்று தெரியவில்லை. இப்படியில்லாமல் ஒருவருக்குப் பர்மிட் கொடுத்தால் அது அவர் கையை விட்டு மாறாமலிருக்கக் கூடிய நிலைமையை உண்டாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பர்மிட் வழங்குவதற்காக விதிக்கப்பட்டிருக்கும் தகுதியில் ஒன்று கூட இல்லாதவர்கள் சிலருக்குக் கூட பர்மிட் வழங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக வளவனூர் தொகுதியில் ஸ்ரீ கோவிந்தசாமிக்கு எதிராகத் தேர்தலில் நின்று தோற்றுப்போன காங்கிரஸ்காரர் [illegible] என்பவருக்கு ரூட் வழங்கப்பட்டிருக்கிறது. அவரை விட அதிகமான மார்க் ராணுவத் தொழிலாளர்களுக்கு—எக்ஸ் சர்வீஸ்மென்—இருந்தும் அவர்க்கு வழங்காமல் இவருக்கு வழங்கப்பட்டிருப்பதிலிருந்து ரூட் வழங்குவதை காங்கிரஸ்காரர்களுக்குத் தான் கொடுப்பது என்கிற நிலைமையை அரசாங்கத்தார் வைத்துக்கொண்டிருக்கிறார்களோ எனச் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. அதோடு நகர பஸ்களில் ஸ்டாண்டிங் பாசஞ்சர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். மொபஸல் பஸ்களில் கிடையாது. குறைந்தது ஐந்தாறு பேர்களாவது நின்றுகொண்டு பிரயாணம் செய்வதை அவற்றிலும் அனுமதிக்க வேண்டும், அதனால் வருமானம் அதிகம் வரும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக லாரிக்கு வெயிட்டு எட்டு டன்னிலிருந்து 9 டன்னுக்கு உயர்த்தியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே கொடுக்கப்பட்ட அளவுப்படி எப். பாரத்தில் பதினெட்டாயிரம் என்று தான் இருந்திருக்கிறது. இப்போது உள்ளபடி பழைய ப. பாரத்தில் காணப்படுகிற வெயிட்டையும் அதிகரித்துக் கொடுக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அதோடு லாரி டிரைவர் 70 மைலுக்கு ஓர் இடத்தில் போலீஸ் ஸ்டேஷனில் கையெழுத்து வாங்கிக் கொண்டுபோகவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. நடைமுறையில் யாரும் அப்படிச் செய்வதில்லை. அந்த விதியையும் நடைமுறைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வதோடு அந்த லாரியின் லோட் என்ன, அதில் உள்ள சரக்கு என்ன என்பதையும் கவனிக்கவேண்டும் என்பதாக அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக திருவிழாக்காலங்களில் களம்பூர் திருவண்ணாமலைக்கு 13 அணா சார்ஜ் என்றால் ஒரு ரூபாய், 1¼ ரூபாய் வசூல் செய்கிறார்கள். ஆர்.டி.ஓ. விடம் கேட்டால் 'நாங்கள் என்ன செய்வது ? செக் பண்ணும்போது சரியாகத்தான் இருக்கிறது. நடுவழியில் இது மாதிரியாக தவறான காரியம் செய்தால் போலீஸ்காரர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்' என்கிறார்கள். அதாவது ஆர்.டி.ஓ.க்களுடன் போலீஸ் இலாகா சரியான முறையில் ஒத்துழைப்பது இல்லை என்ற புகார் வருகிறது. ஆகவே இந்த இரண்டு தரப்பாருக்கும் நல்ல ஒத்துழைப்பு இருக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மந்திரி அவர்களுடைய அறிக்கையில் புதிதாக 25 சதவிகிதம் ரூட்டுகளை அதிகப்படுத்தப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். மேலும் நான் போன ஆண்டிலேயே விழுப்புரத்திற்கும்



5th April 1958] [Sri M. Selvaraj]

மாம்பழப்பட்டுக்கும் பஸ் ரூட் போடவேண்டும் என்பதாகக் குறிப்பிட்டேன். அது இன்னும் வரவில்லை. அதோடு விருத்தாஜலத்திலிருந்து சென்னைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விட்டால் அது ஒரு ஜங்ஷன் ஆனதால் ரயில் கூட்டங்களில் இருக்கும் அதிக நெருக்கடியைக் குறைக்க வசதி ஏற்படும். அதேபோல் விழுப்புரத்திலிருந்து அன்னியூர், விருத்தாஜலத்திலிருந்து நெய்வேலி முதலிய இடங்களுக்கு புதிய ரூட்டுகளை ஏற்படுத்தவேண்டும். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தினால் அது இப்போது அதிக முக்யத்துவம் பெற்றுவருகிறது. அதோடு இப்போதே கிராமங்களில் கட்டப்படும் காஸ்வேக்களை பாலங்களை—அகலமானதாகக் கட்டிவிட்டால் பிற்பாடாவது அங்கெல்லாம் தொடர்ச்சியாக பஸ் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு வசதி இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை குவார்டர்லி டாக்ஸ் பஸ் முதலாளிகள் 1,912 ரூபாய் வரையில் கட்டவேண்டியிருக்கிறது. அதுவும் 7-ந் தேதிக்குள் கட்டவேண்டும் என்று இருக்கிறது. அதனால் அந்த மாதத்தில் தொழிலாளர்களுக்கு அவர்கள் 7-ந் தேதிக்குள்ளாக சம்பளம் கொடுப்பதில்லை. குவார்டர்லி டாக்ஸை கட்டிவிட்டுத்தான் சம்பளம் என்பதாக அந்த மாதம் பதினைந்து, இருபது தேதி வரையில் தவிக்கவிட்டுவிடுகிறார்கள். ஆகவே இந்த குவார்டர்லி டாக்ஸை பதினைந்து இருபது தேதிக்குள் கட்டலாம் என்பதாகச் செய்தால் முதலாளிகளும் சௌகரியமாகக் கட்ட முடியும். தொழிலாளர்களுக்குச் சரியானபடி சம்பளம் கொடுப்பதற்கு வசதி ஏற்படும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக ஸ்டேட் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. அதன் மூலம் சில சிபார்சுகள் செய்யப்பட்டிருக்கிறது. அந்த சிபார்சுகளை தெரிவிக்கவேண்டும் அதாவது ஆந்திரா டாக்ஸ் 1/3 ஆக இருக்கிறது. தெலுங்கானாவிலும் அப்படித்தான். மைசூர் மாகாணத்தில் மாத்திரம் இரட்டிப்பு டாக்ஸ் வாங்குகிறார்கள். அந்தச் சர்க்காருடன் நமது சர்க்கார் கலந்து பேசி அதையும் 1/3 ஆக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குறிப்பாக நமது சென்னை நகரத்தில் மூன்று பேர்களுக்கு மேல் ஒரு சின்னக் குழந்தையிருந்தாலும் பேபி டாக்ஸியில் அனுமதிப்பதில்லை. ஐந்து வயது குழந்தையை அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்களானால் அந்தக் குழந்தையை பேபி டாக்ஸியில் ஏற்றமாட்டார்களே என்பதற்காக பெரிய டாக்ஸி வைக்கவேண்டி ஏற்படுகிறது. இது நியாயமல்ல. மூன்று பேர்களுக்கு மேல் ஒரு குழந்தையை அதாவது 5 வயதுக்குள் இருக்கிற குழந்தையை ஏற்றிக்கொள்ளலாம் என்பதாக டாக்ஸிக்காரர்களுக்கு அனுமதி அளிக்கவேண்டுமென்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன். அதோடு ஒரு டாக்ஸியில் சென்று ஒரு ஹோட்டல் வாசலில் நிறுத்தி காரைவிட்டு இறங்கி உள்ளே போவதற்குள் அந்த டாக்ஸிக்காரனை போலீஸ்காரர்கள் சார்ஜ் பண்ணுகிறார்கள்.

அதனால் அவர்களுக்கு 25 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரை அபராதம் 12-20 p.m.
போடுகிறார்கள். குறிப்பாக, பாஸஞ்சேர்ஸ் இறங்குகிறார்கள் என்றால் ஒரு ஐந்து நிமிஷத்திற்கு மேல் இருந்தால் சார்ஜ் செய்யலாம், இல்லாவிட்டால் கூடாது என்று சட்டம் கொண்டு வர வேண்டும். பேபி டாக்ஸியில் செல்லக் கூடிய டிரைவர்கள் குல்லாய் வைக்காவிட்டால் 25 ரூபாய் அபராதம் போடுகிறார்கள். அவர்கள் தினசரி 4, 5 ரூபாய்தான் கூலி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பாட்டா எல்லாம் சேர்த்து அவர்களுக்கு நான்கு ரூபாய்தான் கிடைக்கிறது. இந்நிலையில் அவர்களுக்கு 25, 50 ரூபாய் என்று அபராதம் போட்டால் அவர்கள் ஐந்தல்லது பத்து நாட்கள் பட்டினி கிடக்க வேண்டியதுதான். இதைத் தவிர்க்க வேண்டும். அவர்களின் தொழிலை சாஸ்வதமாக்க ஒரு சட்டம் கொண்டு வா வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம் மாநில அமைச்சர்கள் வெளியூர்களுக்குச் செல்லும்போது அவர்கள் பஸ் முதலாளிகளின் கார்களில் பிரயாணம் செய்யவேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அவர்கள் பிரயாணம் செய்வதால், அந்த வட்டாரத்தில் உள்ள அதிகாரிகள் அந்த பஸ் ஓனர்களைக் கண்டிக்க, கண்டித்துக் கேட்க பயப்படுகிறார்கள். ஆகவே, நான் சொன்னதையெல்லாம் நினைவில் கொண்டு வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

[Sri V. K. Kothandaraman] [5th April 1958

கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம், முதல் தர முனிசிபல் எரியாக்களிலாவது பஸ் ஸர்வீஸை தேசியமயமாக்கவேண்டும். அதன் மூலம் சர்க்காருக்கு பலவிதத்தில் வருமானம் கிடைக்கும். "**Single man**" எஸ்.டி.எக்குப் பதிலாக குறைந்தபட்சம் ஐந்துபேர்களைக்கொண்ட கமிட்டியை அமைக்க வேண்டுமென்றுகேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRIMATHI T. N. ANANDANAYAKI:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மோட்டார் வெகிள்ஸ் அட்மினிஸ்டேரஷன் மான்யத்தின் மீது பேசுகையில் ஒரு சில விஷயங்களை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய சர்க்காரில் இதே மான்யக் கோரிக்கையைப் பற்றிப் பேசும்பொழுது ஸ்ரீ இராய் பகதூர் அவர்கள், சென்னை மாகாணத்தில் போடுகின்ற வரியில் 75 சதவிகிதத்தை அகில இந்திய ரீதியிலே எல்லா மாகாணங்களுக்கும் பொருந்தும்படி அமைத்துவிடலாம் என்று சொன்னார்கள். அதைப்பார்க்கும்போது இந்த மோட்டார் வாகன வரி இங்கு அதிகமாக இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம். ஆகவே அதையும் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து அகில இந்திய ரீதியிலே மத்திய சர்க்கார் கொண்டு வருவதற்கு முன்னதாகவே, நாமே 75 சத விகிதமாகக் குறைத்துவிட்டால் நலமாயிருக்குமென்று நினைக்கிறேன். சற்று வரிப்பணத்தைக் குறைத்துக் கொடுத்தால், ஓவர் லோடிங்கைக் குறைப்பார்கள் என்று நினைக்கிறேன்.

பஸ் பெர்மிட்டுகளைக் கொடுப்பது எப்படி, எப்படி வழங்கிக் கொண்டிருக்கிறோம். அதற்காக எப்படி சட்டங்களையும் விதிகளையும் வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று பார்க்கும்போது ஆக்ட் 150/1956-ஐ மத்திய சர்க்கார் இந்தியா பூராவுக்கும் மோட்டார் வாகனங்க்ள் அட்மினிஸ்ட்ரேஷனை அந்த சட்டத்தின் அடிப்படையில் அமல் செய்யவேண்டுமென்பதற்காக கொண்டு வந்திருக்கிறார்கள். அதே சட்டத்தில் அந்தந்த மாகாணங்களின் சூழ்நிலைக்கேற்ப அந்தச் சட்டத்துக்கு உட்பட்டு மாகாணங்கள் விதிகளைக் செய்துக் கொள்ளலாம் என்ற "**Rule making power**" அதிகாரம் இருக்கிறது. அப்படி விதிகளைச் செய்யும் அதிகாரத்தை நமக்குக் கொடுத்திருந்த போதிலும், இன்னும் நம்முடைய மாகாணத்தில் அந்த விதிகள் ஏற்படுத்தப்பட வில்லை. அதன் காரணமாக மத்திய சர்க்கார் சட்டத்திற்கும் நம்முடைய விதிகளுக்கும் முரண்பாடு ஏற்படும் சூழ்நிலை இருப்பதால், கனம் அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகக் கவனித்து, இந்த விதிகளை ஏற்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் பர்மிட்டுகளை வழங்குவது எப்படி, எப்படி வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கும்பொழுது, தவறான வழியிலே தோற்கடித்துவிட்ட காங்கிரஸ்காரருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டது என்று ஒரு சிலர் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கப்பட்டது என்றால், அவரைக் கெடுப்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்குமே தவிர, அவர் வாழ்வதற்காக அல்ல. பஸ் பெர்மிட் கொடுப்பது ஆர்.டி.எ.-யோடு நின்றுவிடுவது அல்ல. அதற்கு மேல் எஸ்.டி.எ.-க்குப் போகிறார்கள். அதற்குப் பிறகு ஹைகோர்ட்டுக்குப் போகிறார்கள். அதற்கும் மேலே சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார்கள். இன்றைக்கு எதாவது ஒரு கேஸ் சுப்ரீம் கோர்ட்டுக்கு தவறாமல் போகிறது என்றால் அது பஸ் பர்மிட் சம்பந்தமான வழக்காகத்தானிருக்கும். வேறு எதுவும் இருக்காது. அந்த வகையிலே கீழே ஆர்.டி.எ. காங்கிரஸ்காரருக்கு பர்மிட் கொடுத்திருந்தாலும், அவர் ரூபாய் 40,000 போட்டு பஸ் வாங்கிவிட்டாலும் மேலே அப்பீலுக்கு போகும்பொழுது அவர் கதி "அதோகதி" யாகிறது. அவர் வழக்குத் தள்ளுபடியாகிறது. 40,000 ரூபாய் முதல் போட்டு, கடைசியில் அதை ரூபாய் 20,000-க்காவது விற்க வழியிருக்கிறதா என்று திண்டாடவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. நிலைமை அப்படி இருக்கிறது என்றால், அவர் வாழக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று கேட்கிறேன். ஆகையால், தவறான முறையில் கட்சிப் பற்றோடு பெர்மிட்டுகள் வழங்கப்படுகின்றன என்று சொன்னால், அவர்கள் அனுபவக்



5th April 1958] [Srimathi T. N. Anandanayaki]

குறைவினால் தான் அப்படி பேசுகிறார்களேயொழிய வேறு எந்தக் காரணத்தாலும் அல்ல என்றே என் போன்ற தேசியவாதிகள் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

பஸ் பெர்மிட்டுகள் சம்பந்தமாக ஜி.ஓ. நெ. 1298 போட்டு, 1956-ம் ஆண்டு ஏப்ரல்மீ 26உயிலிருந்து அமுலில் இருக்கிறது. அதாவது ஐந்து பஸ்கள் வரை ஒருவர் சௌகரியமாக வைத்திருக்கலாம், அப்படியிருந்தால் தான் அது "**viable unit**" என்று வைத்திருக்கிறார்கள். பொருளாதாரத் துறையிலே இந்த பஸ் தொழிலை ஒருவர் நல்ல முறையில் நடத்த வேண்டுமென்றால், குறைந்த அளவு ஐந்து பஸ்கள் வரை சலுகைகள் காட்ட வேண்டுமென்று இருக்கிறது. இதற்காக "மார்க் ஸிஸ்டம்" என்ற ஒரு முறையை வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே பஸ் வைத்து நடத்துபவர்களுக்கு அவர்களுடைய "**technical experience**"-க்காக மார்க் கொடுக்கப்படுகிறது. தவிர, அவர் வொர்க்ஷாப் வைத்திருந்தால் அதற்கு மார்க் கொடுக்கப்படுகிறது. அப்புறம் "**Place of business**" என்பதற்காக, பஸ் ஓடும் வழியில், ரூட்டின் மேல் இருந்தாலும் சரி, அல்லது டர்மினலில் இருந்தாலும் சரி, அதற்காக மார்க் போடுகிறார்கள். "**All things being equal viable unit must be taken into consideration**" என்று ஜி.ஓ.-வில் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்து மார்க்கை வைத்துக்கொணடு கொடுக்கிறார்கள். இதன்படி 5 பஸ்களுக்கு மேலிருந்தால் "0" போடுகிறார்கள். ஐந்துக்குக் குறைவாக இருந்தால் அவர்கள் பஸ்கள் வைத்திருக்கும் எண்ணிக்கைக்குக் தக்கவாறு, 1, 2, 3, என்று மார்க் போடுகிறார்கள், அப்புறம் மேலே சொன்ன விதிகளின்படி மார்க் கொடுத்து, அந்த இரண்டையும் கூட்டி யாருக்கு மார்க் அதிகமாக வருகிறதோ அவருக்கு பெர்மிட் கொடுக்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறு கிடையாது. வைத்தது சட்டமாக இருக்கக்கூடாது என்று "மார்க்கிங் ஸிஸ்டம்" முறையை வைத்து சர்க்கார் அப்போதைக்கப்போது உத்தரவிட்டு, அதன்படி நடக்கவேண்டுமென்ற உன்னத எண்ணத்தினால் ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் இதை அமல் நடத்தும்போது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஐந்துக்குக் கீழே பஸ்கள் இருந்தாலும் அவருக்கு பெர்மிட் கிடைப்பதில் சங்கடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் அவருக்கு "**workshop facilities**" கிடையாது. டி.வி.எஸ்.ஐ. போன்ற குறிப்பிட்ட பெரிய ஆப்பரேட்டர்கள் தான் மாகாணம் பூராவிலும் வொர்க்ஷாப் வைத்துக்கொள்ள முடிகிறது. அதற்காக அவர்களுக்கு இரண்டு மார்க் கொடுக்கிறார்கள். அந்த வொர்க்ஷாப்பில் எந்தெந்த அங்கங்கள் இருக்கவேண்டுமோ, அவைகள் எல்லாம் இருந்தால் தான் இரண்டு மார்க்குகள் கொடுக்கப்படும். குறைவாக இருந்தால் "பிராக்ஷன்" மார்க் கொடுக்கிறார்கள். 1-7/8, 1-5/8 என்றெல்லாம் மார்க் கொடுக்கிறார்கள். $\frac{1}{8}$ மார்க்குக்காக ரூபாய் 40,000 போட்டு பஸ் வாங்குகிறவரின் வழக்கு கடைசியில் தள்ளப்படுகிறது. உயர் நீதி மன்றத்திலே. நல்லெண்ணத்துடன் இந்த முறையைக்கொண்டு வந்திருந்தாலும், பெரிய பெரிய "**Fleet operators**"-க்குத் தான் அது அனுகூலமாக இருக்கிறது. அவர்களுக்குத்தான் வொர்க்ஷாப் **facilities** இருக்கிறது. அதிகமான பஸ்களை வைத்திருப்பவர்கள் "**sector qualification**"-க்காக மார்க் வாங்கிவிடுகிறார்கள். ஒரு மார்க்கை அடித்துக்கொண்டு போகிறார்கள். அப்புறம் "**place of business**"க்காகவும் மார்க்கை வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஐந்துக்கு மேலே பஸ் வைத்திருப்பவர்கள் "0"மார்க் வாங்கினாலும் கூட, 5-க்குக் கீழே பஸ் வைத்திருப்பவர்களைவிட அவர்களுக்கு மற்ற வசதிகள் இருப்பதினால், அதிக மார்க்கைப் பெற்று பெர்மிட் கிடைத்துவிடுகிறது. "சோஷலிஸ சமுதாயம் அமையவேண்டும்" என்ற முறையில் 5 பஸ்களுக்கு மேல் வைத்திருப்பவர்களுக்கு ஆதரவு காட்டக்கூடாது என்று தான் இப்படியெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் அதை அமல் நடத்துவதில் இருப்பதன் சங்கடங்கள் காரணமாக, 5 பஸ்களுக்கு மேல் வைத்திருக்கும் முதலாளிகளுக்குத்தான் சலுகைகள் கிடைக்கின்றன. "புதிதாக வருபவர்கள்" (**new entrants**) என்று கூறுகிறோமே அவர்களுக்கு வழியே கிடையாது. புதிதாகத் தொழிலுக்கு வந்தால் அவர்கள் மொட்டைதான் அடிக்கப்படுகிறார்கள். ஆகையினால்

[Sri A. Mariappan] [5th April 1958

பொது மக்களிடத்தில் இருந்து வருகிறது. ஆகவே இந்த விஷயத்தில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் ஜில்லாவை எடுத்துக் கொண்டால், எங்கள் ஜில்லா கலெக்டர் நல்ல முறையில்தான் ரூட்டுகள் எல்லாம் கொடுத்து வருகிறார். ஆனால் ட்ரிபூனல் வரும்பொழுது சர்க்காருக்கு விரோதமாகத் தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இதன் காரணமாகச் சிறிய பஸ் சொந்தக்காரர்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே மந்திரி அவர்கள் இந்த விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri V. K. KOTHANDARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, நாலரை கோடி ரூபாய் வருமானம் சர்க்காருக்குக் கிடைக்கிற இந்த டிமாண்ட் மிக முக்கியமானது என்பது அமைச்சர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆகவே இது போன்ற ஒரு டிமாண்டைப்பற்றி பார்க்கும்போது இந்த வகையில் எந்த அளவுக்கு இதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அவ்விதம் பார்க்கும் பொழுது இதில் நல்ல முறையில் கவனம் செலுத்தபடவில்லை என்பதைப்பற்றி ஒரு சில அபிப்பிராயங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்குக் கொடுக்கப்படுகிற பஸ் ரூட்கள் எப்படியிருக்கிறது என்றால் ஒரு சில ஏக போக முதலாளிகளிடத்தில் இவைகள் ஏகபோகமாக அனுபவிக்கப்பட்டு வருகிற அளவில்தான் இருக்கிறது. அதேநேரத்தில் இரண்டு மூன்று பஸ்களை வைத்து நடத்திக் கொண்டு இருப்பவர்கள் அதிகமாக ரூட்கள் கேட்டால் சரியாகக் கொடுப்பதில்லை. புதியதாக ரூட்டுகள் வேண்டும் என்று கேட்டாலும் கொடுப்பதில்லை. அது மாத்திரமல்ல, பஸ் ரூட்டுகளை வாங்கி வியாபாரம் செய்யகூடிய அளவில் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒரு சில மனிதர்கள் தங்களுக்குள்ள செல்வாக்கை உபயோகித்து பஸ் ரூட்டுகளை வாங்கி 50 ஆயிரம் ரூபாய், ஒரு லட்சம் ரூபாய் என்று பஸ் ரூட்டுகளை வாங்கி மற்றவர்களுக்கு விற்பனை செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்று சொன்னால், இன்றைக்கு நாட்டில் எவ்வளவு கேவலமான முறையில் இந்த பஸ் ரூட்டுகள் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். இதுபோன்ற நிலைமை நீடித்துக்கொண்டிருக்குமானால் பெரிய பணக்காரர்கள்தான் மேலும் பணக்காரர்களாக ஆக முடியுமே தவிர சாதாரண மத்திய தர மக்கள் இதனால் பலன் அடைய முடியாது. அது மட்டுமல்ல. பொது மக்கள் இதனால் ஒரு பலனையும் அடைய முடியாது. இன்றைக்கு பஸ் ரூட்டுகளை அதிகமாக வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் பெரிய பணக்காரர்களாக இருப்பதால் அவர்கள் அரை மையிலிலிருந்து ஒரு மைல் தூரத்திற்குப் போவதற்கும் 4 அணா, 5 அணா சார்ஜ் வாங்கக் கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதை மாற்றி குறைந்த பட்சம் மூன்று மைலுக்கு இரண்டு அணா என்று சார்ஜ் நிர்ணயிக்கவேண்டும். எந்த ரூட்டிலும் ஏகபோக உரிமை என்பது இருக்கக் கூடாது என்ற நிலைமை இருந்தாகவேண்டும். இன்றைய தினம் இதைப் பற்றி கேட்கும் போது பஸ் விடுவதற்கு அந்தஸ்து இருக்கிறதா பஸ் விடுவதற்கு ஷெட் இருக்கிறதா என்றெல்லாம் கேட்கப்படுகிறது. இதெல்லாம் இருக்கவேண்டும் என்று இருப்பது எல்லாம் இன்று வெறும் ஏட்டளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. உண்மையில் இது சரியான முறையில் அமுல் நடத்தப்படவில்லை என்பதை திட்ட வட்டமாகச் சொல்ல முடியும். குறிப்பாக வட ஆற்காடு ஜில்லாவை எடுத்துக் கொண்டு பார்த்தால் அங்கு "முருகன் பஸ் சர்வீஸை" நடத்துகிறவர்களுக்கு பஸ் விடுவதற்கு ஷெட் கிடையாது. வொர்க் ஷாப்பும் கிடையாது. இந்த அளவு இருந்து கொண்டிருக்கிற நிலையில் பஸ் ரூட்டுகளை வாங்கி மற்றவர்களுக்கு விற்பனை செய்யக்கூடியவர்கள் அனேகம் பேர் இருக்கிறார்கள் என்றால் அதை சர்க்கார் கண்டிப்பாகக் கவனித்தாக வேண்டும். இதன் மூலம் பெரிய பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாக மாறிக் கொண்டே போவார்கள். இன்றைக்கு பஸ் சர்வீஸ் நடத்துவதிலுள்ள லாபத்தை எடுத்துப் பார்த்தால், தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம், வண்டிக்கு ஏற்படுகிற தேய்மானம், மற்றும் பல செலவுகள் இவையெல்லாம் போக பஸ் ஒன்றுக்கு வருடம் ஒன்றுக்கு 45 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கிறது என்ற அளவுக்கு இருக்கிறது. ட்ரைவர்களாக



5th April 1958] [Sri V. K. Kothandaraman]

இருந்தவர்கள் எல்லாம் இன்றைக்குப் பெரிய ப்ளீட் ஓனர்களாக இருந்து வருகிறார்கள். யார் யாருக்கு எல்லாம் பஸ் விடுவதற்கு வசதி இருக் கிறதோ அவர்களுக்கு எல்லாம் பஸ் ரூட்டுகள் கொடுத்ததாக வேண்டும். குறிப்பாக இதிலிருந்து மத்திய சர்க்கார் தப்பித்துக்கொள்வதற்காக, மத்திய சர்க்கார் ஆர். டி. ஏ. and S.T.A. அமைப்பதற்கு எம். எல். ஏ. க்களும், அதிகாரிகளும், அதிகார பற்றற்றவர்களும் இருக்கவேண்டும் என்று சொல்லியிருந்தாலும், இந்த மாகாணத்தில் மட்டும் கலக்டர் மாத்திரம் ஆர். டி. ஏ. ஆக இருக்கவேண்டும் என்றும், அதற்கு மேலே அமைச்சர் அவர்களுடைய சிபார்சு பேரில் ரூட்டைக் கொடுப்பது என்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி கேட்கும் போது அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் இவ்விதம் சட்டம் போட்டிருக்கிறார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள், அல்லது அதிகாரிகள் அப்படி செய்து விடுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இவ்விதம் கேட்கக்கூடியவர்களை ஏமாற்று வதற்காக, சமாதானம் சொல்லுவதற்காக இவ்விதமெல்லாம் அமைக்கப் பட்டிருக்கிறது. வர்க்க அடிப்படையில் பணக்காரர்களுக்குச் சாதகமாக இருக்க வேண்டும் என்கிற நிலைமையில்தான் இவ்விதம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் மத்திய சர்க்கார் ஒன்று சொல்லியிருந்தாலும் மற்ற இடங்களில் எல்லாம் இல்லாத முறையில் ஸிங்கில் ஆர். டி. ஏ. என்றும் ஸிங்கில் எஸ்.டி. ஏ.என்றும் அமைக்கப்படுவதற்காக பல முறை டெல்லிக்குப் போய் அவர்களிடம் சலுகை அளிக்கவேண்டுமென்ற முறையில் கேட்டு இதை கொண்டு வந்திருக்கிறது இந்தச் சர்க்கார். இவ்விதம் பல சலுகைகளைப் பெறுவதற்காக இவ்விதம் அமைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு யாரும் இதை கட்டுபடுத்தவில்லை. இந்த ராஜ்யத்தில் இருக்கக் கூடிய அதிகாரிகளுக்கும் இதில் பங்கு உண்டு என்பதை நாம் பார்க்க வேண்டும் பஸ் ரூட்டுகளை எல்லாம் 25 சதமானம் அதிகப்படுத்தவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போட்டது. ஆனால் அதன் படி 25 சதமானம் ரூட்டுகளை அதிகப்படுத்தினார்களா என்பதைப்பார்த்தால் அதுதான் கிடையாது. அப்படி 25 சதமானம் அதிகப்படுத்தினால் சர்க்காருக்கும் அதிக பணம் கிடைக்கும். இந்த விஷயத்தில் எதற்கும் சொல்லுகிற மாதிரி சர்க்கார் இடத்தில் பணம் இல்லை என்று சொல்ல முடியாது. இப்போது நாலரை கோடி ரூபாய் வருமானம் கிடைப்பதாக இருந்தால் இன்னும் 25 சதமானம் அதிகப்படுத்தினால் சர்க்காரின் வருமானம் இன்னும் ஒரு கோடி ரூபாய் அதிகமாகும். அதோடு இவ்விதம் அதிகப்படுத்தும்போது மக்களுக்கும் நல்லது செய்ததாகவும் இருக்கும். லாரிகளைப் பொறுத்த வரையில் ஸ்டேட் பூராவுக்கும் இப்போது லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. லாரிகள் எல்லாம் அநேகமாக இராத்திரி காலங்களில்தான் போகிறது. பங்களூர் முதல் மதராஸ் வரை லாரிகள் இராத்திரி காலங்களில் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தால் ஒவ்வொரு நாளும் ஒரு மனிதன் செத் தான், ஒரு மாடு செத்தது, லாரி உடைந்து போனது என்கிற நிலைமையை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த மாதிரி நிலைமைக்குக் காரணம் என்ன? இராத்திரி கண் விழித்துக்கொண்டு லாரி ஓட்டுவதுதான். ஆகவே இராத்திரி 10 மணிக்கு மேல் போக கூடாது என்று உத்தரவு போட வேண்டும். அப்போதுதான் இது போன்ற ஆக்ஸிடண்ட்டுகளை நிறுத்த முடியும். அதே போன்று தான் டிரைவர்களுக்கு ஐந்து வருடத்திற்கு ஒரு முறை லைசென்ஸ் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அவர் களுக்கு இன்றைக்கு கொடுக்கப்படுகிற சம்பளம் போதாது. அவர்களுடைய சம்பள விஷயத்தையும் மற்றுமுள்ள குறைகளையும் விசாரணை செய்வதற்காக ஒரு கமிட்டி அமைக்கவேண்டும். அவர்களுடைய ட்ரஸ் இப்போது காக்கியாக இருப்பதால் அவர்கள் வெயில் காலத்தில் கஷ்டப்படுகிறார்கள். எப்போதும் அவர்கள் தொப்பி அணிந்து கொள்ளவேண்டும் என்ற நிலைமையும் இருக்கிறது. இதையெல்லாம் சர்க்கார் கவனம் செலுத்திப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்காக இந்த 12-40 p.m.
அட்வைசரி கமிட்டி கூட ஒரு சிபாரிசு செய்து அனுப்பியிருக்கிறது. அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே, இப்பொழுதுள்ள நிலைமையில் உடனடியாக 25 சத விகிதம் பஸ் ரூட்டுகளை அதிகப்படுத்த வேண்டும். லாரிகளுக்கு மாகாணம் பூராவும் அனுமதி

[Srimathi T. N. Anandanayaki] [5th April 1958

தான் யாரும் இந்தத் தொழிலுக்குப் புதிதாக வருவது கிடையாது. "செக்டர் குவாலிபிகேஷன்", இன்னும் இதர வசதிகளும் இருப்பதால் "**fleet operators**-க்குப் போக மிஞ்சினால்தான் புதிதாக வருபவருக்குக் கிடைக்கிறது. இந்த சங்கடங்களின் காரணமாக ஹைகோர்ட்டில் ஒரு ரிட் பெட்டிஷன் வந்து அந்த ரிட்பெட்டிஷன் (**W.P. 964/57**) பேரில் ஸ்ரீ பால கிருஷ்ணய்யர் அவர்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள். புதிதாக வருபவர்களை தனியாகப் பிரித்து அவர்களுக்கு மார்க் கொடுத்து அவர்களில் சிறந்தவரைத் தேர்ந்தெடுக்கலாம், அதேமாதிரி மற்ற யூனிட்டுகளை எல்லாம் ஒன்றாக வைத்து அவர்களுக்கு மார்க் கொடுத்து அவர்களில் அதிகம் மார்க்கு வாங்குகிறவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார். புதிதாக வருபவர்களையும் ஏற்கெனவே தொழில் செய்துகொண்டிருப்பவர்களையும் ஒன்றாகச் சேர்ப்பது நியாயமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறார். அப்படிப் பார்த்தாலும் **fleet operators**-க்குத் தான் போகும். ஏனென்றால் அவர்களுக்குத் தான் "செக்ட்ர் குவாலிபிகேஷன், **place of business, workshop facilities, technical experience** வசதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகையால் புதிதாக வருபவர்களுக்கு 25 சதவிகிதம், அதாவது புதிதாகக் கொடுக்கிற ரூட்டுகளிலே 25 சதவிகிதம் அவர்களுக்கு ஒதுக்கி வைத்தால் அவர்கள் முன்னேறுவதற்கு வழியிருக்கும். அது முடியவில்லையென்றால், புதிதாக வருபவர்களுக்கு அதிகமான குவாலிபிகேஷன் இல்லாமல் இருந்தாலும்கூட, அவர்கள் ஐந்துக்குக் குறைவாகப் பஸ்கள் வைத்திருந்தால், அவர்களைத்தான் "**prefer**" பண்ணவேண்டும். இந்த ஜி.ஓ.-வை நாம் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கிறோம். ஆகவே இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு, நடைமுறையில் இருக்கிற தொந்திரவுகளையெல்லாம் பரிசீலனை செய்து அதைத் திருத்தி அமைத்தால் நல்லது. நான் வக்கீல் தொழில் ஆரம்பித்தபோது 3 பஸ்கள் வைத்துக்கொள்ளலாமென்று இருந்தது. அப்புறம் அது 10 ஆகி, இப்பொழுது 5 ஆகிவிட்டது. இப்படிச் சும்மா சும்மா இதை மாற்றிக்கொண்டிருந்தால் ஆர்.டி.ஏ.-க்கே கஷ்டமாக இருக்கும். இதை எல்லாம் ஆலோசித்து சிறந்த முறையில் ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் காலத்திலேயே செய்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொரு விஷயத்தையும் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது லாரிகள் சம்பந்தப்பட்ட வரையில் ரூட்டுகளை எல்லாம் ஸ்டாண்டர்டைஸ் செய்து ஸோனல் ஸிஸ்டம் என்று வைத்திருக்கிறார்கள். ஒரு உதாரணம் சொல்லுகிறேன். இப்பொழுது ஸ்டாண்டர்டைஸ் செய்திருக்கிற ரூட்படி பார்த்தால் அரந்தாங்கி, தஞ்சாவூர், திருச்சி, திண்டுக்கல், பழனி என்று வருகிறது. ஆனால் லாரி ஆப்பரேட்டர்கள் கேட்டிருக்கும் ரூட் என்னவென்றால், அரந்தாங்கி, புதுக்கோட்டை, மேலூர், மதுரை. இப்படிப் போனால் 85 மைல் தான் ஆகும். அவர்கள் சொல்லுகிற ரூட் 12-50 p.m. படி 150 மைல் ஆகிறது. லாரிகள் குறைந்த அளவு தூரம் பிரயாணம் செய்தால் தான் செலவு கம்மியாகும். இதை விட்டுவிட்டு மூக்கை சுற்றித் தொடவேண்டும் என்று சொன்னால் பலவிதமான தகராறுகள் ஏற்படுகின்றன. அமைச்சர் அவர்கள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்து லாரி சொந்தக்காரர்கள் எந்த ரூட்டை கேட்கிறார்களோ அந்த ரூட்டை கொடுக்கவேண்டும். அவர்கள் கேட்கின்ற ரூட்டிற்கு பெர்மிட் கொடுக்காமல் சுற்றிப் போகக்கூடிய ரூட்டுக்கு பர்மிட் கொடுத்தால் பண்டங்களை எடுத்துக்கொண்டு போவதில் தாமதம் ஏற்படும். லாரிக்கு எந்த ரூட்டில் லோட் கிடைக்கும் என்பது லாரிக்காரர்களுக்குத்தான் தெரியும். இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, வியாபாரம் சரியான சூழ்நிலையில் நடக்கும்படியான முறையில் பெர்மிட்டுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இன்னும் ஒரு பாயின்ட் . . .

(ஸ்பீகர் மணி அடிக்கவே, அங்கத்தினர் பேச்சை முடித்துக் கொண்டார்.)

**Sri P. VEDAMANICKAM**: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மோட்டார் வாகன மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது மோட்டார் வாகன வசதிகள் மிகவும் முன்னேறி இருக்கின்றன. குறிப்பாக என்னுடைய மாவட்டத்தில் 5 புதிய ரூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அரை



5th April 1958] [Sri P. Vedamanickam]

மணிக்கு ஒரு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. இதற்காக நான் நன்றி தெரிவிக்கிறேன். அது மட்டும் அல்ல. 200, 300 மைல்களுக்கு—திருச்சியிலிருந்து திருவண்ணாமலைக்கும், சிதம்பரத்திலிருந்து மதராசுக்கும்—எக்ஸ்பிரஸ் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கின்றன. அதில் உட்கார நல்ல வசதிகள் இருக்கின்றன. 'ரெஸ்ட்' எடுப்பதற்குச் சௌகரியமாக இருக்கிறது. 'ரேடியோ' வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

ஜில்லாவாரியாகப் பர்மிட்டுகள் கொடுக்கும் முறையை மாற்றவேண்டும். இப்பொழுது எனது மாவட்டத்தில் கலெக்டரும், ஆர்.டி.ஓ.-ம் இதைச் செய்கிறார்கள். இதல் சில 'நான்அபிஷியல்ஸ்' இருக்கவேண்டும். சில பேர்களுக்கு அதிகாரிகளை அணுக முடிவதில்லை. அதிகாரிகளும் சர்வாதிகார தோரணையிலேயே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அந்த கமிட்டிகளில் 'நான்அபிஷியல்ஸ்' இருந்தால் அவர்கள் மூலமாக பல நன்மைகள் கிடைக்கும்.

இந்த பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கும் விஷயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் மோசமாக நடத்தப்படுகிறார்கள். திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு மாவட்டங்களில் இரண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெர்மிட்டுகள் கொடுக்கப்பட்டன. சர்க்கார் நல்ல நோக்கத்தோடு இப்படிச் செய்தாலும் பெரிய பஸ் முதலாளிகள் எல்லோரும் சேர்ந்து இந்த பஸ் பர்மிட்டுகளை கான்சல் செய்யும்படி அப்பீல் செய்துவிட்டார்கள். இதனால் அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் கடன்பட்டு, பிச்சை எடுக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அரசாங்கம் இந்த ரூட்டுகளை கொடுக்கிறபோதே சில சத விகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்று கொடுத்து, அவர்கள் முன்னேற்றம் அடையும்படி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்ல. அரசாங்க உத்தியோகங்களிலும் மற்ற இடங்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது.

எங்கள் தாலூகாவில் 'காமாட்சி கம்பெனி' என்று ஒரு பஸ் கம்பெனி இருக்கிறது. அதில் 25 பஸ்கள் இருக்கின்றன. நூறு தொழிலாளிகள் இருக்கின்றனர். ஆனால் ஒரு ஹரிஜன்கூட அதில் இல்லை. நான் அனேக தடவை சிபாரிசு செய்தும் ஒரு ஆளைக்கூட எடுத்துக்கொள்ளவில்லை. ரூட் பர்மிட்டுகளை கொடுக்கும்போது ஓரளவு தாழ்த்தப்பட்ட மக்களையும் ஏழை மக்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சர்க்கார் ஓர் உத்தரவு போடவேண்டும். அதைச் செய்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்த கம்பெனிகளில் வேலை கிடைக்கும். அரசாங்கத்திற்குப் போதுமான வருமானம் வேண்டுமானால் லாபகரமான பஸ் நிர்வாகத்தை ஓரளவு ஏற்று நடத்தவேண்டும். சென்னை நகரத்தில் பஸ்களை எடுத்து நடத்துவதுபோல் வெளியூர்களிலும் 100-க்கு 25 பங்காவது அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri P. S. CHINNADURAI**: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மோட்டார் நிர்வாக மான்யத்திற்கு எதிராகப் பிரேரபணை செய்யப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரிக்கிற முறையில் ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் இப்போது சுமார் 4,196 பஸ்கள் இருப்பதாகத் தெரிகிறது. 7,333 லாரிகள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகமொத்தம் 12,000 மோட்டார் வாகனங்கள் பெரும்பாலும் தனிப்பட்ட முதலாளிகள் கையில்தான் இருந்து வருகிறது. இவர்கள்கூட சர்க்கார் வாகன வரியை சரியானபடி செலுத்துகிறார்களா என்பது எனக்குச் சந்தேகம். அப்படி வரியை அவர்கள் சரியானபடி செலுத்தியிருந்தால் இப்போது கிடைக்கக்கூடிய $4\frac{1}{2}$ கோடி ரூபாயை விட அதிகப்படியாக வருமானம் கிடைக்கும் என்பது தான் என் நம்பிக்கை. 12,000 மோட்டார் வாகனங்கள் தனிப்பட்ட முதலாளிகள் கையில்தான் இருக்கிறது. அவைகள் பல புதிய ரூட்டுகளில் ஓடுகின்றன. இந்த ரோடுகள் யாருக்குச் சொந்தம்? இந்த ராஜ்ய மக்கள் அனைவருக்கும் தான் சொந்தம். இந்த ரோடுகளைப் பழுது பார்ப்பதற்கும் புது ரோடுகளைப் போடுவதற்கும் யாருடைய பணம் செலவழிக்கப்படுகிறது. பொது மக்களுடைய பணம்தான் செலவழிக்கப்படுகிறது.

[Sri P. S. Chinnadurai] [5th April 1958

புதிய ரோடுகளைப் போடுவதற்கும், பழைய ரோடுகளைச் சீர்படுத்துவதற்கும், அதிகப் பணம் செலவழிக்கப்படுகிறது. மோட்டார் வாகன வரி மூலம் எவ்வளவு பணம் கிடைக்கிறதோ அதைவிட அதிகமான தொகையை நாம் செலவழிக்கிறோம். ஆகையினால் பொதுமக்கள் மோட்டார் வாகனங்களை எந்த முறையில் கட்டுப்படுத்தி நிர்வகிக்கவேண்டும் என்று சொல்வதற்கு அவர்களுக்கு நிச்சயமாக உரிமை இருக்கிறது என்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மோட்டார் வாகனங்கள் அத்தனையும் ஏன் அரசாங்கம் உடைமையாக்கிக் கொள்ளக் கூடாது ? இந்தப் பிரச்னையைப்பற்றி இந்தச் சபையில் பல முறை பேசப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலும் பேசியிருக்கிறார்கள். சோஷலிஸ கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதாக அமைச்சர்கள் இந்தச் சபையிலும், வெளியிலும் சொல்லுகிறபோது ஏன் 12,000 மோட்டார் வாகனங்களை தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று எனக்குப் புரியவில்லை. சாதாரண காலங்களிலும் கூட மோட்டார் வாகனங்களின் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று எதிர்ப்பார்க்கலாம். இப்பொழுது கிடைக்கிற $4\frac{1}{2}$ கோடி ரூபாய் வரி போக மேலும் 10 கோடி ரூபாய் அவர்களுக்கு வருமானம் வருகிறது. இந்த லாபம் தனிப்பட்டவர்களுக்குக் கிடைத்து வருகிறது. மிகப் பெரிய வருமானம் வருகிற இந்தத் தொழிலை ஏன் சர்க்கார் தனிப்பட்டவர்கள் கையில் விட்டுவைத்திருக்கவேண்டும் என்று எனக்கு புரியவில்லை. அரசாங்கம் சொஷலிஸக் கொள்கையை அனுஷ்டிப்பவர்களானால், அதை நடைமுறையில் நிரூபிக்கவேண்டும். ஆகையால் பஸ் போக்குவரத்தை, லாரி போக்கு வரத்து—இவைகளை தனிப்பட்டவர்களுக்கு விட்டு வைத்திருப்பது கொஞ்சம்கூட பொருந்தாது என்று நான் மிகவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் இதை ஏற்று நடத்துவதில் பல கஷ்டங்கள், சிக்கல்கள் இருக்கலாம் என்று கூறப்படுகிறது. பஞ்சாயத்துகளுக்குப் போதிய வருமானம் இல்லை. முனிஸிபாலிடிகளுக்குப் போதிய வருமானம் இல்லை என்று சொல்லப்படுகிறது. இந்த பஸ் போக்குவரத்தையும் லாரி போக்குவரத்தையும் பஞ்சாயத்துகளும், முனிஸிபாலிடிகளும் நடத்துவதற்கான உரிமையை ஏன் வழங்கக்கூடாது.

கோவை நகர சபை பஸ் போக்குவரத்தை எடுத்து நடத்துவதறகான ஒரு திட்டத்தை இந்த அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிறது என்று நான் அறிகிறேன். அதன் மூலமாக அவர்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்வதோடு நகர மக்களுக்கும் நன்மை செய்யலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள். இதை அவர்கள் ஏன் அனுமதிக்கக்கூடாது. இந்த 1 p.m. ராஜ்யத்தில் ஜில்லா போர்டுகள் ஒழிக்கப்பட்டு, அதற்குப் பதில் பஞ்சாயத்து யூனியன்கள் வரப்போவதாகத் தெரிகிறது. இந்த நிலையிலே, வருமானம் வரும் என்ற நிலையில் பஞ்சாயத்துகளும், முனிஸிபாலிடிகளும் சேர்ந்து ஒரு டிரான்ஸ்போர்ட்டு கார்ப்பரேஷன் ஏற்படுத்திக்கொண்டு பஸ் போக்குவரத்தை லாரி போக்குவர்த்தை நிர்வகிக்க அரசாங்கம் ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது என்று கேட்கிறேன். அப்படிச் செய்தால் பல கோடி ரூபாய் தனியார் பெட்டகங்களுக்குப் போவதற்குப் பதிலாக மக்களின் பொது பெட்டகத்திற்குச் செல்வது சாத்தியமாகும். இது தனிப்பட்டவர்களுடைய இலாபத்திற்குத் தான் என்று இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏன் தனிப்பட்டவர்களுடைய ஏகபோகமாக இருக்க விதிகள் இருந்துகொண்டு இருக்கின்றன ? ஐந்து பஸ்களுக்கு மேல் ஒருவருக்கு கொடுக்கக்கூடாது என்று இருந்தபோதிலும் பிரத்தியட்சமாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பலர் வைத்துக் கொள்கிறார்கள்.—அண்ணன், தம்பிகள், மாமன், மைத்துனர்கள், மனைவி மக்கள் என்று பல பேர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். ஐந்து பஸ்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்பதைச் சாமர்த்தியமாக சட்ட வல்லுனர்களை வைத்துக்கொண்டு தங்களுக்கு இலாபகரமாக செய்துகொள்ளுகிறார்கள். இந்த ஏகபோக முறையானது ஒழியவேண்டுமென்று குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

பர்மிட் கொடுக்கும் முறையிலே கொஞ்சம் தாராளத் தன்மையை அனுசரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யார் கேட்டாலும், ஏழை கேட்டாலும் பணக்காரர் கேட்டாலும் பர்மிட்டுகள் கொடுக்கப்படவேண்டும்.



5th April 1958] [Sri P. S. Chinnadurai]

ஆனாலும் எனக்கு நம்பிக்கை இல்லை. ஒரு பஸ் வாங்க ரூ. 40 அல்லது 50 ஆயிரம் வேண்டும். எந்த ஏழையும் தனியாக இவ்வளவு தொகை வைத்து நடத்த முடியும் என்று. ஒரு சமயம் கூட்டுறவு சொஸைடி மூலமாக ஒருகால் முடியலாம். ஆகையினால் யார் நடத்த வருகிறார்களோ அவர்களுக்குத் தாராளமாக கொடுத்தால் பிரயாணிகளுக்காவது நல்ல வசதி கிடைக்கும். இப்பொழுது கிராமப் புறங்களில் ஓடும் பஸ்கள் " கண்டம் " பண்ணவேண்டிய நிலையில் இருக்கின்றன. இங்கெல்லாம் ரேட்டு க்வின் போன்ற அழகான பஸ்களில் செல்லுகிறோம். அப்படி இங்கே பிரயாணம் செய்துவிட்டு கிராமப்புறங்களிலே செல்லும்போது அவைகள் ரொம்ப கேவலமாக இருப்பது தெரிகிறது. அங்கெல்லாம் நல்ல பஸ்களை வைத்து ஓட்டுவதற்கு சர்க்கார் கவனம் செலுத்தவேண்டும்.

பர்மிட்படி 150 மைல் ஓட்டலாம் என்று இருக்கிறது. ஏற்கெனவே 100 அல்லது 50-வது மைலுக்கு மட்டும் வைத்திருந்தவர்களுக்கும், புதிதாக ஓட்டுபவர்களோடு இந்த அதிகமான தூரத்தைக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்ஸிகள் சம்பந்தமாக ஒரு வார்த்தை. ஒவ்வொரு நகரத்திலும் பிரைவேட் டாக்ஸிகள் இருக்கின்றன. சர்க்காரேகூட இவைகளை உபயோகிக்கிறார்கள். (குறுக்கீடு) ஒன்றிரண்டானால் ரிப்போர்ட்டு செய்யலாம். ஆனால் ஏகமாக இருந்தால் என்ன செய்வது ? அதில் வரும் வருமானம் ஏராளமென்பது என் அபிப்பிராயம். இப்படி பிரைவேட் டாக்ஸிகள் இருப்பது சரியல்ல.

ரயில் போக்குவரத்தைக் காட்டிலும் பஸ் போக்குவரத்தில்தான் மக்களுக்கு அதிக ஈடுபாடு. ஏனெனில் சீக்கிரமாக செல்லக்கூடியவை பஸ்கள். ஆகையினால் ' துரு பஸ்கள் ' அதிகமாக விட அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். மதுரைக்கும் திருச்சிக்கும் விட்டால் மிகவும் சிறந்ததாக இருக்கும். லாரி போக்குவரத்து ரயில் போக்குவரத்தைவிட விரைவாக சாமான்களை எடுத்துச் செல்ல வசதி இருப்பதால் மக்கள் லாரி போக்குவரத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். ஒழுங்குபடுத்த துரு பஸ்ஸுக்கு இருப்பதுபோல டைமிங்ஸ் வைக்கவேண்டும். சென்னையிலிருந்து கோவை, கள்ளிக்கோட்டை போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு டைமிங்ஸ் வைத்து குறிப்பிட்ட நேரத்தில் செல்லவேண்டுமென்று ஏற்பாடு செய்தால்—இத்தனை மணிக்குப் பிறகு போவதை தடை செய்யவேண்டுமென்று நான் சொல்லவில்லை—மக்கள் குறிப்பிட்ட நேரத்தில் கவனமாக இருந்து அவைகளில் தங்கள் சாமான்களை அனுப்ப முன்வருவார்கள். இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **THE HON. SRI V. RAMIAH** : சபாநாயகர் அவர்களே இன்று இந்த போக்குவரத்து இலாகா சம்பந்தப்பட்ட மான்யக் கோரிக்கையில் இந்த இலாகா இன்னும் திறம்பட வேலை செய்யவேண்டுமென்று நல்ல கருத்துக்கள் சொன்ன கனம் அங்கத்தினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இலாகா சம்பந்தப்பட்ட மான்ய கோரிக்கை மீது வந்திருந்த வெட்டுப்பிரேரணைகளையும் பேசிய அங்கத்தினர்கள் கருத்துக்களையெல்லாம் ஆலோசனை செய்து பார்த்தால் இலாகாவின் முக்கியத்துவத்தை மறந்து குறிப்பிட்ட பிரச்சினையை வலியுறுத்திச் சொல்லிவிட்டால் போதும் என்று அங்கத்தினர்கள் அபிப்பிராயப்பட்டார்களோ என்று சந்தேகிக்கிறேன். இன்று விவாதத்தில் எழுப்பப்பட்ட பர்மிட்டு வழங்கும் முறையில் யார் வழங்கவேண்டும் என்ற பிரச்சினை மட்டும் மிகவும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் போக்குவரத்து சம்பந்தப்பட்ட மற்ற பெரிய பிரச்சினைகள் ஒதுக்கி வைக்கக்கூடிய நிலைமையை பார்த்தால் எனக்கு மனக் கஷ்டம் ஏற்பட்டது. இந்த இலாகாவை பொருத்தவரை பெர்மிட் வழங்கும் வேலை மிகமுக்கியமான வேலை என்று ஒப்புக்கொண்டாலும் இந்த இலாகாவின் முக்கிய பொறுப்பு போக்குவரத்து வசதியை நாம் நல்ல முறையில் எல்லா மக்களுக்கும் பயன்தரக்கூடிய முறையிலே அமைக்கவேண்டும் என்பது தான். இன்றைக்கு கனம் கோதண்டராமன் பேசும்போது இந்த இலாகாவிலிருந்து அரசாங்கத்திற்கு, நாலரைக் கோடி ரூபாய் கிடைக்கிறது என்று சொன்னார்கள். அது இந்த இலாகா

[Sri V. Ramiah] [5th April 1958

வுக்கு நேரிடையாக வரக்கூடிய வருமானம். மற்ற இனங்கள் மூலம் வரக்கூடியது ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடுகூட தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கையைப் பார்த்தோமேயானால் இன்றைக்கு டிரைவர்கள், கண்டெக்டர்கள் என்கிற முறையில் கிட்டத் தட்ட 4,000 ஊழியர்கள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள். மேலும் இந்தத் தொழிலுக்கு வேண்டிய சிறு தொழில்களை எடுத்துக்கொண்டால் அதிலும் ஏராளமான பொது மக்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றம் வாழ்க்கை இவற்றை மனதில் கொண்டு இந்த இலாகாவை தன் வேலையை பரிசீலனை செய்யவேண்டும். இன்னும் அதிகமாக கவனம் செலுத்தவேண்டிய பகுதி பிரயாணிகள் பகுதி. அவர்கள்தான் இந்தப் போக்குவரத்தை முழுக்க முழுக்க ஆதரித்து நிற்பவர்கள். அவர்கள் சாதாரண நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மக்கள். அவர்களுடைய தேவைகளையெல்லாம் பூர்த்திசெய்ய இந்த இலாகா பரிசீலனை செய்து நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த முறையிலே இந்த இலாகா இயங்கவேண்டும் என்பது என் ஆசை. இன்றைக்கு இந்த இலாகாவிலிருந்து கொடுக்கக்கூடிய பர்மிட்டை தாராளமாக ஏழைகளுக்கும் கொடுக்கவேண்டுமென்றும் பல அங்கத்தினர்கள் கூறினார்கள். தாராளமாகக் கொடுப்பதில் ஆட்சேபம் இல்லை. கனம் சின்னதுரை அவர்கள் சொன்னார்கள் இந்த இலாகாவின்கீழ் 4,000 வண்டிகள் ஓடிக்கொண்டு இருக்கின்ற என்று.

இது போதாது. இதை இன்னும் குறைந்தது 25 சத விகிதம் அதிகப்
1-10 p.m. படுத்த வேண்டும் என்று உணர்ந்து அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய முடிவு இன்னும் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகள் பரிசீலனையிலிருக்கின்றன. வேகமாக ஒரு முடிவு காண வேண்டும். விஸ்தரிப்பை விரிவாகச் செய்யவேண்டும் என்ற அக்கறை எனக்கும் இருக்கிறது. இந்த இலாகா நல்ல முறையில் நடைபெறவேண்டும் என்பதற்காக நான் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு பல ஜில்லாக்களுக்குச் சென்று அங்கங்கே இருக்கக் கூடிய பஸ் சொந்தக்காரரர்களைக்கண்டு பேசி, லாரி சொந்தக்காராகளையும் கண்டு பேசி, அந்தச் சமயத்தில் சட்டசபை உறுப்பினர்கள் வந்தால் அவர்களையும் கலந்து கொண்டு, மற்றும் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களையும் கேட்டு, இந்த இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு நல்ல மாறுதலைச் செய்ய வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறேன். தனிப்பட்டவர் விருப்பப்படி நிர்வாகம் நடக்காமல் ஒரு முறையாக நடக்கவேண்டும் ஆங்கிலத்தில் ‘‘ லிம்ஸ் அண்ட் பான்சீஸ் ‘‘ என்று சொல்லுவார்களே அப்படி இல்லாமல், அந்த முறையில் இந்த இலாகா தொடர்ந்து நடக்கக்கூடாது என்ற ஆசையில் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறேன். இன்னும் நான் செங்கற்பட்டு ஜில்லாவிற்குப் போகவில்லை. மற்ற எல்லா ஜில்லாக்களுக்கும் சென்று எல்லோரையும் கலந்து ஆலோசனை செய்து அதன் மேல் வேலைகளைச் செய்து வருகிறேன். இன்னும் பல பிரச்னைகள் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இந்தத் தொழிலைப் பொறுத்த மட்டில் இதற்கு ஒரு நிரந்தரமான நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஒரு ஸ்திரமான கொள்கையுடன் இந்தப் பிரச்னையை நாம் அணுகிப் பார்க்க வேண்டும். இந்தத் தொழில் சம்பந்தப்பட்ட மட்டில் நல்லபோக்கு வரத்து வசதி இருக்க வேண்டும் என்ற கொள்கையில் இதற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொழில் நல்ல முறையில் வளர வேண்டும் என்ற அடிப்படையில் இப்பொழுது வேலை செய்து கொண்டு வருகிறேன். வையபிள் யூனிட் கண்டிப்பாக இருக்க வேண்டும். குறைந்த பட்சம் ஐந்து பஸ்களை வைத்துக்கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு வசதி கொடுத்து ஒரு நல்ல தரமுள்ள போக்குவரத்து இருக்க வேண்டும் என்று கருதி வேலை செய்து வருகிறோம். அந்தத் தொழிலை வளர்க்கவும், அதற்கு மற்ற சக்திகளை உண்டு பண்ணவும், அதை எந்த சூழ்நிலையில் அமைக்க முடியுமோ அந்தச் சூழ்நிலையில் அமைக்கவும் நல்ல வேலைகளைச் செய்து கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில் பார்க்கும்போது இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய ஸ்தாபனங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இன்றைக்கு ஒன்று முதல் நான்கு வரையில் பஸ்களை



5th April 1958] [Sri V. Ramiah]

வைத்து நடத்தும் ஸ்தாபனங்கள் சுமார் 352 இருக்கின்றன. அவர்களுக்கு ஐந்து பஸ்களை வைத்து நடத்துவதற்கு வேண்டிய சூழ்நிலையை உண்டு பண்ண வேண்டியதாக இருக்கிறது. அந்த ரீதியில் இந்தப் பிரச்னையை அணுக வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட வசதிகளையும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் அவர்களுக்கு முன்னேற்ற வேலைகளையும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காகத் தான் இப்பொழுது மார்க்ஸ் சிஸ்டம் என்று வைத்திருக்கிறோம். இந்த மார்க்ஸ் சிஸ்டத்தைப் பற்றி நான் பல பகுதிகளில் பல மக்களைச் சந்தித்துப் பேசியதில் இது ஒரு நல்ல சிஸ்டம் என்று சொன்னார்கள். இந்த மார்க்ஸ் சிஸ்டத்தைப் பற்றி சிலர் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்டு ஹைக்கோர்ட்டுக்குப் போய் அங்கே அதற்கு வேறு விதமாக அர்த்தம் செய்து அதன் பிறகு நாலைந்து மாத காலமாக இதில் நம்பிக்கை உள்ள அதிகாரிகள் கொஞ்சம் தைர்யமாக ஹைக்கோர்ட்டினுடைய தீர்ப்புக்கு மரியாதை கொடுத்து இதில் பெரிய பஸ் முதலாளிகள் கலந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்து நாலைந்து மாதங்களாக மற்றவர்களுக்கும் இதில் பர்மிட் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் விரும்பக் கூடிய கொள்கை பிரகாரம் சிறு ஸ்தாபனங்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும், அதைப் பலப்படுத்த வேண்டும். அதன் வாயிலாக நல்ல முறையில் இந்தத் தொழில் நடக்க வேண்டும் என்று இந்த மார்க்ஸ் சிஸ்டத்தை நல்ல முறையில் நடத்தி வருகிறோம். இன்னும் நல்ல முறையில் சிறு பஸ் சொந்தக் காரர்களுக்கு ஆதரவு கிடைக்கும் முறையில் இது நடத்தப்பட்டு வருகிறது. இதை இன்னும் எந்த முறையில் எப்படித் திருத்தி அமைக்கலாம் என்பதையும் பரிசீலனை செய்து வருகிறோம். விரைவில் இது சம்பந்தமாக ஒரு முடிவு காணலாம் என்று தோன்றுகிறது. மார்க்ஸ் சிஸ்டம் கண்டிப்பாக இருக்க வேண்டும். அதன் மூலமாக எல்லோருக்கும் பஸ்கள் கிடைத்து விடலாம். தனிப்பட்டவர்களுக்கும் கிடைத்து விடலாம். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பஸ் போக்குவரத்து சூழ்நிலையை கவனித்தால் யார் வேண்டுமானாலும் பஸ்களை வைத்து நடத்தலாம், நல்ல முறையில் இலாபம் கிடைக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் அதற்குப் சில முக்கியமான காரணங்களும் இருக்கின்றன. அதைப் பற்றி கூட கனம் சின்னதுரை குறிப்பிட்டார். பல கோடிக்கணக்கான ரூபாயை செலவு செய்து ரஸ்தாக்களை மராமத்து செய்து பஸ்களை போக்குவரத்துக்கு நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எந்த விதமான கஷ்டமும் இல்லாமல் பஸ் போக்குவரத்து நடப்பதை நாம் இப்பொழுது பார்க்கிறோம். அதைப்போலவே பஸ்ஸை நடத்தக்கூடியவர்கள், அவர்களுடைய முயற்சி இல்லாமலேயே தொழிற்சாலையிலிருந்து உற்பத்தியாகி வரும் பஸ்கள் நல்ல விசாலமாக அதிக எண்ணிக்கையுடன் ஸீட்டுகள் அமைக்க வசதியுடன் வருவதை நாம் பார்க்கிறோம். அதிகமான வருமானம் வந்து விடும் என்ற எண்ணத்தில் பல பஸ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் பிரயாணிகளுடைய நலனைப் பார்ப்பது இல்லை. அவர்களுக்கு உதவி செய்ய இந்தத் திட்டமானது எந்த முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. தொழிலாளர்களுக்கு வசதி ஏற்பட வேண்டும், முதலாளிகளுக்கு சௌகர்யம் ஏற்பட வேண்டும், அதே சமயத்தில் அரசாங்கத்துக்கு வருமானம் வரவேண்டும். இவைகளுக்கெல்லாம் பாதகம் ஏற்படாமல் அந்தத் தொழில் நடைபெறவேண்டும், அந்தத் தொழில் வளர வேண்டும் என்ற அடிப்படையில் இப்பொழுது வேலைகள் நடந்து வருகின்றன. பஸ் சரித்திரத்தைப் பார்த்தால் சென்ற பத்து அல்லது பதினைந்து வருஷங்களாகத்தான் இந்தத் தொழில் நல்ல முறையில் நடந்து வருவது தெரிய வரும். இதற்கு முன்பு இந்தத் தொழிலை நடத்தி வந்தவர்கள் கையில் இந்தத் தொழில் இப்பொழுது பெரும்பாலும் இல்லாமல் போய் விட்டதைக் கவனிக்க வேண்டும். இது ஸ்பெகுலேட்டர்ஸ் கைக்கு போய் விட்டால் நிச்சயமாக இது வளர முடியாது. கனம் அங்கத்தினர்கள் பர்மிட் வழங்கும் சம்பந்தமாக சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவைகளையெல்லாம் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தத் தொழில் நல்ல முறையில் வளர வேண்டும், சிறு ஸ்தாபனங்கள்

[Sri V. Ramiah] [5th April 1958

நல்ல முறையில் வளர வேண்டும் என்ற ஆசையில் தான் இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அதில் வேண்டிய ஆலோசனையும் செய்து வரப்படுகிறது. பஸ் தொழில் நல்ல முறையில் நடை பெறவேண்டும் அதற்கு வேண்டிய பல யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று தான் நான் எதிர் பார்க்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் சில அங்கத்தினர்களுக்கு தங்களுடைய யோசனைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போனாலும் இதைத் தொடர்ந்து நான் அவர்களுடைய ஜில்லாவிற்குவரும்போது கூட அவர்களுடைய யோசனைகளைச் சொல்லலாம். அப்பொழுது கனம் அங்கத்தினர்களும் சொல்லலாம், பஸ் முதலாளிகளும் சொல்லலாம், தனிப்பட்டவர்களும் சொல்லலாம். மற்ற பஸ் போக்குவரத்து சம்பந்தப் பட்டவர்களுடைய ஆலோசனையையும் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாகாணத்தைப் பொறுத்த வரையில், மற்ற மாகாணங் களில் சுற்றிப் பார்த்து விட்டு வந்த கனம் அங்கத்தினர்கள் சின்னதுரை, கோவிந்தசாமி, எதிர்க் கட்சித்தலைவர் முதலியவர்கள், குறிப்பிட்டார்கள், மற்ற மாகாணங்களில் நடைபெறுவதை விட நம்முடைய மாகாணத்தில் பஸ் போக்குவரத்து நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்று. அதையே நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நம்முடைய மாகாணத்தி லேயே பார்த்தால் ஒரு ஜில்லாவில் நடைபெற்று வருவதைப்போல் மற்றொரு ஜில்லாவில் நடைபெறாமல் இருக்கிறது. நம்முடைய இராஜ்யத் திலேயே ஒரு ஜில்லாவிற்கு மற்றொரு ஜில்லா மாறுபாடுள்ளதாக இருக்கி றது. இதை நாம் மறந்து விடக்கூடாது. மாகாணத்தில் எல்லா பஸ்களுக் கும் அரசாங்கத்தினுடைய கண்காணிப்பு ஒரேவிதமாக இருந்த போதிலும் சில ஜில்லாக்களில் பஸ் போக்குவரத்து நல்ல முறையில் நடந்து வருகிறது, சில ஜில்லாக்களில் நல்ல முறையில் நடைபெறவில்லை. சில ஜில்லாக்களில் பஸ் போக்குவரத்தை திறமையாக, கட்டுப்பாட்டுடன் நடத்திக்கொண்டு வரு கிறார்கள். நல்ல தன்மை வாய்ந்தவைகளாக நடத்தப்பட்டு வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். மற்ற ஜில்லாக்களில் பார்த்தால் சட்டத்தை எப்படி மீறவேண்டுமோ அப்படி மீறிக்கொண்டு அதிகப்படியான வருமான த்தை எதிர் பார்த்துக்கொண்டு பிரயாணிகளுக்கு எந்தவிதமான சௌகர் யத்தையும் செய்யாமல் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். படுமோசமான நிலைமையில் இருப்பதையும் நாம் பார்க்கிறோம். இரண்டொரு ஜில்லா வைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். சில ஜில்லாக்களில் நல்ல முறையில் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடைபெறுகின்றன, என்பதும் சில ஜில்லாக்களில் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படாமல் வசதிகளைச் செய்து கொடுக்காமல் நடைபெற்று வருவதையும பார்க்கிறோம். அரசாங்கத்தின் உத்தரவினால் மட்டும் கட்டுப்பட்டு நடந்துவிடுவார்கள் என்பது அல்ல. அரசாங்கத்தின் உத்தரவினால் மட்டும் காரியத்தை சாதித்து விட முடியும் என்பது அல்ல. அந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அந்தத் தொழில் வளர வேண்டும் என்ற ஆசை இருக்க வேண்டும். சில ஸ்தாபன ங்கள் வைத்து நடத்தும் பஸ்களைப் பார்த்தால் நல்ல இரகமாக இருப்பதாக இல்லை. மக்கள் போற்றக்கூடிய வகையில் அவர்கள் பஸ்களை வைத்துக் கொண்டிருக்கவில்லை. எல்லாப் பகுதிகளிலும் பஸ்கள் நல்ல ரூபத்தில் இருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது. ஆகவே இந்த விஷயத்தி லும் பஸ் முதலாளிகள் ஒத்துழைக்க வேண்டும். பொது மக்களுக்கு நல்ல முறையில் வசதிகளைச் செய்து கொடுக்க முன் வரவேண்டும். அதைப் போலவே இன்றைக்கு பலவிதமான விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு வேண்டிய பல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்காகப் பல கட்டுப்பாடுகளையும் கொண்டு வந்திருக்கிறோம். ஒவ்வொரு லாரியும் குறைந்தது எழுபது மைலுக்கு ஒரு தடவை போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் செய்து கொள்ள வேண்டும். வேகமாக ஓடக்கூடிய வண்டிகளைப் பார்த்து அவைகளின் மீது போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். கெஜட் பதிவுள்ள ஒவ்வொரு அதிகாரியும் இதைக் கண்காணிக்க வேண்டும். வேகமாக ஓட்டக்கூடிய வண்டிகளைக் கவனித்து ரிப்போர்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அளவில் அரசாங்கம் உத்தரவுகளைப் போட்டிருக்கிறது. நல்ல முறையில் இது பலன் கொடுக்கும் என்று எதிர் பார்த்துத்தான் அப்படிப்பட்ட



5th April 1958] [Sri V. Ramiah]

உத்தரவைப் போட்டோம். ஆனால் இது வரைக்கும் எந்த விதமான நடவடிக்கையையும் யாரும் எடுத்ததாக எனக்குத் தெரியவில்லை. இதை எல்லோரும் மனதில் கொள்ளவேண்டும். இது அவரவர்களுடைய பொறு ப்பு. அவரவர்களுக்கு கடமை இருக்கிறது என்கிற நிலைமையில் விபத்து க்களைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல ஸ்தாபனங்கள் நடத்தக்கூடிய பஸ்களோ அல்லது லாரிகளோ அதிகமாக எந்தவிதமான விபத்திற்கும் உள்ளாகாததை நாம் பார்க்கிறோம் அவர்கள் தங்கள் ஊழியர்களை நல்ல முறையில் கண்காணித்து வருகிறார் 1-20 கள். தங்களுடைய ஊழியர்கள் கண்டிப்பாக குறிப்பிட்ட வேகத்தில்தான் p.m. போகவேண்டுமென்ற முறையை அவர்கள் கட்டாயமாக ஏற்படுத்தி வைத் திருக்கிறார்கள். அதே ரீதியிலே எல்லா ஸ்தாபனங்களும், எல்லா முத லாளிகளும், சிறு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் ஒத்துழைக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அங்கத்தினர் சின்னதுரை அவர் கள் எப்படி லாரி ஓட்டுவதில் அதிகமாக சிறு ஸ்தாபனங்கள் இருக்கின் றனவோ, அம்மாதிரி பஸ்கள் ஓட்டுவதிலும் இருக்கலாம் என்று சொன் னார். கண்காணிப்புக்கு மீறிய சிறு ஸ்தாபனமாக இருந்தால் அதை நடத்தக்கூடியவர்களுக்கு எந்தவிதமான அக்கறையும் இல்லாமல் இருக் கும். அவர்கள் எப்படியாவது வருமானம் வந்தால் போதும் என்ற ஒரே குறிக்கோளோடு அந்த ஸ்தாபனத்தை நடத்துவார்களேயானால், பஸ்கள், லாரிகள் அதிகமான விபத்திற்கு உள்ளாகுமே தவிர, வேறு எந்தவிதமான நல்ல பலனும் கிடைக்காது. இந்தத் தொழில் வளர வேண்டும், "வையபிள் யூனிட்டுகளின்" தரத்தை கண்டிப்பாக வளர்க்க வேண்டும், நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் இன்னும் அதிக மான பஸ்கள் போக்குவரத்திற்கு கொடுத்து உதவவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. முதல் ஐந்தாண்டு திட்ட காலத்திலிருந்து இன்று வரையில் தொடர்ந்து மராமத்து இலாகா நல்ல ரஸ்தாக்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது. நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு ரஸ்தாக்கள் போடப்பட்டு தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக கிரா மங்களிலுள்ள மக்களுக்கு போக்குவரத்திற்கு நல்ல வசதி செய்துகொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் விவசாயம் செய்யக்கூடிய மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை ரோடுகள் மூலம் அவைகள் தேவைப் படுகின்ற இடங்களுக்கு எடுத்துச்சென்று விற்க முடியும். இதை மனதில் கொண்டுதான் 25 சத விகிதம் லாரி போக்குவரத்தையும், பஸ் போக்கு வரத்தையும் அதிகப்படுத்த வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டது. ஆனால் இப்பொழுது இந்த பஸ் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள் பஸ் போக்குவரத்தை அதிகமாக விஸ்தரித்துவிட்டால் தங்களுடைய வரு மானம் எங்கு குறைந்துவிடுமோ என்ற ஒரு பெரிய அச்சத்தால் அந்த உத்தரவை எப்படியாவது தடை செய்வதற்கு சட்ட வல்லுனர்களின் உதவியை நாடுகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை வைத்துக்கொண்டு அதற்குள்ளான தடை அனைத்தையும் ஏற் படுத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவர்களுக்கு ஏன் இந்த பயம் ஏற்பட்டது என்று எனக்கே புரியவில்லை. மக்களிடையே, அதிகமாக நடந்து செல்லும் பழக்கத்தை விட்டு, பஸ்களில் போகவேண்டுமென்ற மனப்பான்மை வளர்ந்துகொண்டே வருகிறது. அப்படியிருக்கும்பொழுது இன்னும் எத்தனை பஸ்கள் விட்டாலும், அதற்கு நிச்சயமாக ஆதரவு இருக்கும். ஆகையால் இதுவிஷயத்தில் இப்பொழுது இருக்கும் பஸ் முதலாளிகளுக்கு எந்த விதமான வீணான அச்சமும் வேண்டாம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். எல்லோரும் நன்றாக இதை உணர்ந்து, தங்கள் தங்கள் பகுதியில் இருக்கக்கூடிய பஸ் போக்குவரத்தை இன்னும் விஸ்தரிப்பதுபற்றி பரிசீலித்து, அதை பொதுமக்களுக்கு நல்ல விதமாக பயன்படுத்தக்கூடிய ரீதியில் நல்ல ஆலோசனைகளை கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். முதலில் பேசும்பொழுது இப் பொழுது அமைந்திருக்கக்கூடிய ஆர்.டி.ஏ. சரியான முறையில் இயங்க வில்லை, அவரால் இதை திறம்பட செய்ய முடியாது, இந்த அதிகாரம் ஒரு தனிப்பட்டவர் கையில் இருப்பதால் அரசாங்கம் அதில் குறுக்கிட்டு ஏதேனும் தப்பு தண்டா செய்துவிடமுடியும் என்ற ரீதியில் கொஞ்சம்

[Sri V. Ramiah] [5th April 1958

அச்சக் கண்ணேட்டத்தோடு பேசினார்கள். அந்த மாதிரி அச்சக் கண்ணேட்டம் அவர்களுக்கு இருக்கவேண்டிய அவசியமே இல்லை. நான் சில மாதங்களுக்கு முன்பு இதை பரிசீலனை செய்து பார்த்து, நல்ல விதமாக நடத்த முடியுமா என்பதை பரிசீலித்து, பின்னால் என்னுடைய அபிப்பிராயத்தை சொல்லுகிறேன் என்று சொன்னேன். 12 மாதங்களுக்குப் பிறகு, இந்தப் போக்குவரத்து இலாகாவின் நடைமுறையை பரிசீலித்த பிறகு, "டிரான்ஸ்போர்ட் அதாரிடியோடு" பொது ஊழியர் யாரையும் கலந்து அவர்களுக்கு தொந்தரவு கொடுக்கவேண்டாம் என்ற என்னுடைய ஆசை உறுதியாக வருகிறது. இதை கலெக்டர் அவர்களிடமே விட்டுவிட்டால்தான் மிகவும் நன்றாக இருக்கும், யாருக்கும் தொந்தரவு இல்லாமல் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் அவர் எந்தப் பாதையில் எப்படி செல்லவேண்டும் என்பதற்கு வழி வகுத்துக் கொடுக்கவேண்டுமென்பதற்காக, ஓரளவுக்கு "மார்க் லிஸ்டம்" என்ற ஒரு ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் பேசும்பொழுது ஆர்.டி.ஏ. இரண்டு மனுக்களின் பேரில் மார்க் போடக்கூடிய நேரத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு மனுதாருக்கு குறைவாக மார்க் வந்தபோதிலும், அதிகமான மார்க் வந்த மற்றொரு மனுதாரரை விட்டுவிட்டு குறைவாக மார்க் வந்தவருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டதாக சொன்னார்கள். அது எப்படி முடியும் என்று எனக்கே புரியவில்லை. இது பகிரங்கமாக செய்யக்கூடிய ஒரு வேலை. கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்களுக்கு மற்றொரு மனுதாருக்கு அதிகமாக மார்க் வந்துவிட்டது என்று தெரிந்துகொள்ளுவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்ட பிறகும் கூட, இது எப்படி ஏற்பட முடியும் என்பது எனக்கு தெரியவில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்கள் அவ்வளவு சுலபமாக இதை விட்டுவிடமாட்டார்கள். கனம் அங்கத்தினர் அனந்தநாயகி சொன்னது போல், எஸ்.டி.ஏ. ஹைகோர்ட், சுப்ரீம் கோர்ட் வரையில் போய் பார்த்துவிட்டு வந்துவிடுவார்கள். தப்பான முடிவுகள் ஏற்படாமல், இந்தத் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஒழுங்கானபடி நியாயம் வழங்கக்கூடிய முறையிலே பல வழிகளை வகுத்துக் கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. இன்னும் இருக்கக் கூடிய சிக்கல்களையும் தீர்த்திவிடவேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. அதற்கான நல்ல ஆலோசனைகளை கூறிய பல அங்கத்தினர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். தனிப்பட்ட முறையில் பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துகளை சொல்லி, அவைகளையெல்லாம் பரிசீலிக்கவேண்டுமென்று வலியுருத்தியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லிய கருத்துகள் அனைத்துமே பரிசீலிக்கப்படும். நானே நேரிடையாக அவைகளை பரிசீலனை செய்வேன். வந்திருந்த வெட்டுப் பிரேரேபணைகளை பார்த்து அவைகளில் அடங்கியுள்ள கருத்துகளை எப்படி தெரிந்துகொண்டேனே, அதே முறையில் அங்கத்தினர்களுடைய பேச்சுக்களில் இருக்கக்கூடிய கருத்துக்களையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டுமென்பது என்னுடைய ஆசை. போக்குவரத்து நிர்வாகத் துறையை பொறுத்தவரையில், அதை நல்ல சீரான முறையிலே, முன்னேற்றம் அடையக்கூடிய ஒரு முறையிலே, வளர்க்கவேண்டுமென்ற ஆசையுடன் வேலை பார்க்கும் எனக்கு உங்களுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் அவசியமாக இருக்கவேண்டும். அதை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கு எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். அதற்குத் தகுந்தபடி வேண்டிய, அவசியமான மாறுதல்களை அப்போதைக்கப்போது செய்வதற்கு தயாராக இருக்கிறேன். போக்குவரத்து நல்ல முறையில் வளரவேண்டுமென்று ஆசையோடு இந்த மானியத்தைக் கோரும்போது, அதில் 100 ரூபாய் குறைக்க வேண்டுமென்ற வெட்டுப் பிரேரேபணையை அங்கத்தினர்கள் வற்புறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன். நான் கேட்கக்கூடிய மானியம் ரூ. 11 லட்சம் தான். மிகவும் சொல்ப தொகை தான். அதிலும் ரூ. 100 குறைத்துவிடவேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, எல்லா அங்கத்தினர்களும், இந்த மானியத்தை ஏகமனதாக ஆதரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Is the hon. Member, Sri V. K. Ramaswamy Mudaliyar withdrawing his cut motion?

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: No, Sir.



5th April 1958]

MR. SPEAKER: The question is—

"That the allotment of Rs. 11,19,800 under Demand VI—Motor Vehicles Acts Administration—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 11,19,800 under Demand VI—Motor Vehicles Acts Administration."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: I now adjourn the House till 3 o'clock this afternoon. 1-31 p.m.

The House then rose for lunch.

**(After lunch—3 p.m.)**

(Mr. Speaker in the Chair.)

### VI.—GOVERNMENT BILLS—*cont.*

### (2) THE MADRAS ANIMAL PRESERVATION BILL, 1958 (L.C. BILL NO. 2 OF 1958).

MR. SPEAKER: We shall now proceed with the general discussion. Sri R. Srinivasa Iyer will now speak.

**SRI R. SRINIVASA IYER**: கனம் சபாநாயகர் அவர்களே, பசு போன்ற மிருகங்களைப் பாதுகாக்க வேண்டிய மசோதா ஏற்கெனவே வந்திருக்க வேண்டும். இவ்வளவு நாட்கள் கழித்து இது வந்திருக்கும்போது, ஸ்ரீ. கல்யாணசுந்தரம் இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று பேசாமல் மசோதாவை ஆட்சேபித்துப் பேசியது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. கால்நடைகளை 6 வயது வரை கொல்லுவதற்கு அனுமதிக்கக்கூடாது என்று அவர் சொன்னார். கால்நடைகளுக்கு எல்லாப் பற்களும் வருவதற்கே மூன்று வருஷங்கள் ஆகும். எட்டு பற்கள் வந்த பிறகு தான் அவைகளுக்கு நல்ல வயது வருகின்றன. புத்தகங்களின் படியும், என் அனுபவத்தின்படியும், அவைகளுக்கு சராசரி வயது 30. அதற்கு முன்பு இறந்தால், நாம் அவைகளை சரிவர கவனிக்காததாலோ, வியாதிகளால் பீடிக்கப்பட்டோ இருக்கின்றன என்று தான் சொல்ல வேண்டுமே தவிர, அவைகளாக வயதாகி இறக்கின்றன என்று சொல்ல முடியாது. கால்நடைகள் விவசாயத்திற்கு மிகவும் அத்தியாவசியம். அப்படியிருக்க, கால்நடைகளைப் பாதுகாப்பதற்காக சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பதைப் பாராட்டாதது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு கனம் அங்கத்தினர், புறா உட்பட எல்லா ஜந்துக்களையும் இந்த மசோதாவில் சேர்க்க வேண்டுமென்று சொன்னார். பசுவைத் தவிர மற்ற சில கால்நடைகளையும் மசோதாவில் சேர்த்திருப்பதை கண்டிக்கும் முறையில் தான் அவர் அவ்வாறு கூறினார். அவர் அவ்வாறு கூறியதும் எனக்கு வியப்பாக இருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் 97 லட்சம் மாடுகளும் 20 லட்சம் எருமைகளும் 70 லட்சம் செம்மறியாடுகளும் 37 லட்சம் வெள்ளாடுகளும் 3 லட்சத்திற்கு மேல் "பௌல்ஸ்"-ம் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள கால்நடைகளில் 7.5 சதவிகிதம் சென்னை ராஜ்யத்தில் இருக்கின்றன. இவைகளை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம். "அனிமல் ஹஸ்பண்ட்ரி" இலாகா கால்நடைகளை நன்றாக வளர்க்கும் விதத்தை நமக்குக் காட்டி

யிருக்கிறது. மாடுகளை வளர்ப்பவர்களுக்குத்தான் மாடுகளின் அருமை தெரியும். மாட்டு மாமிசம் சாப்பிடுபவர்கள்கூட இவைகளைப் பிரியமாக வளர்க்க வேண்டுமென்று சொல்வார்கள். கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம், எஸ்.பி.சி.எ. இன்ஸ்பெக்டர்களைப் பார்த்தாலே பயமாக இருக்கிறதென்றும், மாட்டின் கால்களில் என் லாடங்கள் அடிக்கவில்லை என்றோ வேறு ஏதாவதோ கேட்டு வண்டிக்காரர்களிடமிருந்து அவர்கள் பணம் வாங்கிவிடுகிறார்கள் என்றும் சொன்னார். பொதுமக்கள் பணம் கொடுப்பதே இதற்குக் காரணம். எஸ்.பி.சி.எ-க்கு பொதுஜன ஆதரவு பலமாக இருக்கிறது. அந்த ஸ்தாபனத்தை ஆட்சேபித்து வாதாடுவது தவறு ஆகும். நமக்கு பால் கொடுக்கும் கால்நடைகளையும் நமக்காக உழைக்கும் கால்நடைகளையும் நாம் வளர்க்கிறோம். அவைகள் எவ்வளவு காலம் உழைக்கமுடியுமோ அவ்வளவு காலம் வரையிலும் அவைகளை நன்றாகப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இந்த சந்தர்ப்பத்தில் என் அனுபவத்தில் கண்ட சில விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் பெருவாரியான கன்றுக்குட்டிகளைச் சாகடிக்கிறார்கள். அவைகளை வேண்டுமென்று கொரேமாகத் துன்பப் படுத்தி சாகடிக்கிறார்கள். பால்க்காரர்கள் கன்றுகளை மாடுகளிடம் பால் குடிக்க விடுவதில்லை. அவைகளுக்கு வாய்ப்பூட்டு போட்டுவிடுகிறார்கள். பால் கறப்பதற்கு முன்பு பேருக்கு அதைப் பால்குடிக்க விடுகிறார்கள். அது பசுவிடம் பால் குடித்துக்கொண்டிருக்கும்போது அதை இவர்கள் ஒரு கையால் அடிக்கிறார்கள். இது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. கன்றுகள் பிறந்து மூன்று-நான்கு நாட்கள் தான் ஆகியிருக்கும். அப்படிப்பட்ட கன்றுகளை இவர்கள் இம்மாதிரி நடத்துகிறார்கள். வாய்ப்பூட்டை எடுப்பதேயில்லை. மாட்டைப் பார்த்தால் அது ஐராவதம் மாதிரித் தான் இருக்கிறது மொழு மொழுவென்று இருக்கிறது. ஆனால் கன்றுகளை இவர்கள் மிகக் கொடுமையாக நடத்துகிறார்கள். "சாக மாட்டேன் என்கிறதே!" என்று அவைகளை இவர்கள் அடிக்கிறார்கள். என்போன்ற சிலர், கன்றுக்குட்டிகளை மாடுகளிடம் போதிய அளவு பால்குடிக்க விடும் பால்க்காரர்களிடம் தான் பால் வாங்குவது வழக்கம். நாங்கள் பால்க்காரர்களிடம் கன்றுக்குட்டியை மாட்டிடம் பால்குடிக்க விடவேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லி விடுகிறோம். இந்த வழக்கத்தை எல்லோரும் கைக்கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும். இங்கிலாந்தில் உள்ளவர்கள்—இங்கிலீஷ்காரர்கள்—கன்றுகளை கவனிப்பதே இல்லை. கன்று பிறந்தவுடனேயே அவர்கள் அதை "டிஸ்கார்ட்" பண்ணிவிடுவார்கள். கால்நடைக் கண்காட்சியில், அவ்வாறு "டிஸ்கார்ட்" பண்ணப்பட்டு அதற்குப் பிறகு ஹொஸூர் கால்நடைப் பண்ணையில் நன்றாக வளர்க்கப்பட்டிருந்த கன்றைக் காட்டினார்கள். மேலும், 24,000 படி பால் கொடுத்தும் 10 கன்றுகள் போட்டும் இருக்கும் ஒரு பசுமாட்டையும் கண்காட்சியில் காண்பித்தார்கள். அந்தப் பசு நன்றாக இருந்தது. அது இன்னும் 4–5 கன்றுகள்கூடப் போடக்கூடியது போல் தோன்றியது.

மேலும், மாடுகளை தோலுக்காகக் கொல்கிறார்கள். எங்கள் ஊருக்கு தோல் வியாபாரிகள் வந்தால், மாடுகள் கட்டாயம் சாகப்போகின்றன என்பதை நாங்கள் தெரிந்துகொள்வோம். மாடுகளுக்கு இவர்கள் வெள்ளைப் பாஷாணத்தை (ஆர்ஷனிக்) கொடுத்துவிடுகிறார்கள். அந்தப் பாஷாணம் மாடுகளை காந்தம்போல் இழுக்கும். அதை மாடுகள் சாப்பிட்டு இறக்கும். அப்படி இந்த நகரில் பாடிகார்ட் லேன்ஸ் பகுதியில் ஒரு வாரத்திற்குள் 40 மாடுகள் இறந்தன. இந்த ஊரில் செத்த மாடுகளைக்கூட விலைக்கு விற்கிறார்கள் போல் இருக்கிறது. ஒருவன் செத்த மாடுகளை விற்றுக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவைகளை ஒருவனே வாங்கிக் கொண்டு போய்க்கொண்டிருந்தான். இதன் காரணமாக அவன் யானைகவுனியிலிருந்து வந்த ஒருவனிடம் வேறொருநாள் மாடுகளை விற்கப் போனான். அப்போது, தினமும் வாங்கிக்கொண்டிருந்த பேர்வழி யானைகவுனி ஆளிடம் "அடே, நான் பாசாணத்தைக் கொடுத்து இங்கே 6 மாடுகளைச் சாகடித்திருக்கிறேன். நீ எப்படியடா இவைகளை வாங்கிக்கொண்டு போவாய் ?" என்று கேட்டான். இந்த நிலைமை மிகவும் வருந்தத்தக்கது.



மாட்டு மாமிசத்தை பலர் சாப்பிடுகிறார்கள். இது மிகவும் மலிவாக இருப்பதால் பலர் அதை வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இதற்காக மாடுகளை வதம் செய்கிறார்கள். இது சென்னைப் பட்டணத்தில் மிகவும் கொடுமையாக இருக்கிறது. மாடுகளை வாங்குவதற்கு பால்க்காரர்கள் 200–300 ரூபாய் செலவழிக்க வேண்டியிருக்கிறது. செலவுசெய்த பணத்தை மாடுகள் கொடுக்கும் பாலை விற்றுப் பெறுகிறார்கள். இரண்டு-மூன்று வருஷங்களில் செலவுசெய்த பணத்தைத் திரும்பப் பெற்றுவிடுகிறார்கள். அதற்குப் பிறகு அவைகளை அவர்கள் சீக்கிரத்திலேயே திருவொற்றியூருக்கு அனுப்பிவிடுகிறார்கள். அங்கே அவைகள் கொல்லப்படுகின்றன. இவைகள் அடிமாடுகள் என்று சொல்லப்படுகின்றன. திருவொற்றியூரில் அடிமாடுகள் வாங்கப்படுகின்றன. அதேமாதிரி, எங்கள் பக்கத்தில் பட்டுக்கோட்டையிலிருந்து புதுக்கோட்டைச் சந்தைக்கு கொண்டுபோகப்படும் மாடுகள் கொல்லப்படுகின்றன. அவைகள் நல்ல மாடுகளாக இருக்கின்றன. புதுக்கோட்டையிலிருந்து அவைகளை பலர் இலங்கைக்கு வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஆகவே அவைகள் இலங்கைக்கும் போகின்றன. பலர் மாடுகளை தோலுக்காகவும் எலும்புக்காகவும் வாங்கிக்கொண்டு போகிறார்கள்.

இந்தியாவில் க்ஷீணித்த மாடுகள் ஜாஸ்தியாக இருக்கின்றன என்றும் நல்ல மாடுகள் பாதுகாக்கப்படாமல் அழிகின்றன என்றும் ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார். இந்தக் காரணங்களினால், இந்த மசோதா வரவேற்கத்தக்கது. மாடுகளைக் கொல்பவர்களுக்கு அபராதம் போட்டு அவர்களை தண்டிக்கும் முறையை அமலுக்குக் கொண்டுவருவதால், நல்ல மாடுகளை அபிவிருத்தி செய்யமுடியுமா என்றெல்லாம் கேட்கக்கூடும். அபராதம் போட்டு தண்டித்துத்தானா மாட்டைக் கொல்லாமல் தடுக்க முடியும் ? என்ற அந்தக் கட்சியும், ஆர்க்குமெண்டும் இருக்கிறது. ஆனால், குழந்தைக்கு விளக்கெண்ணெய் புகட்டும்போது என்ன செய்கிறோம் ? கட்டாயமாகத்தான் புகட்டவேண்டியிருக்கிறது. அதுபோல், மாடுகளைக் கொல்லக்கூடாது என்பதை எவ்வளவுதான் சமாதானமான முறையில் சொன்னாலும் பயன் இல்லை என்பதை உணர்ந்து, ஓரளவு அபராதத்தைப் போட்டு தண்டனை விதித்தாலாவது மாடுகளைக் கொல்லாமல் இருக்கமாட்டார்களா, மாடுகளை நல்ல முறையில் வைத்திருக்க மாட்டார்களா, அதன் மூலம் விவசாயம் நல்ல முறையில் முன்னேறாதா என்ற நல்ல எண்ணத்தோடு இச் சட்டம் கொண்டுவந்திருக்கிறது நம்முடைய அரசாங்கம். அதைப்பற்றி ஜாஸ்தி விவாதம் தேவை இல்லை. இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு இன்னும் காலதாமதம் செய்யவேண்டியதவசியம் இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

3–10 p.m.

பத்து ரூபாய் அபராதம் போடவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. மாட்டைக் கொன்று தோலைவிற்றால் 30, 40 ரூபாய் கிடைத்துவிடும்போது, அதிலிருந்து பத்து ரூபாய்ப் பணத்தை அபராதமாக வீசியெறிவதில் அவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கமுடியும் ? தோல் விலை அதிகமாகக் கிடைப்பதால், அபராதத் தொகையை உயர்ந்தபட்சமாக நிர்ணயிக்கவேண்டும். அத்துடன் சிறைத் தண்டனையும் விதிக்கப்படவேண்டும். சிறைத் தண்டனை என்று விதித்தால் பாதகம் ஏற்பட்டுவிடாது. ஏனென்றால், ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட்டுகள் குற்றத்திற்குத் தகுந்தாற்போல்தான் சிறை தண்டனையைக் கூட்டியோ, குறைத்தோ விதிப்பார்கள். பாஷாணம் வைத்து மாட்டை ஒருவன் கொலை செய்தான் என்று நிரூபிக்கப்பட்டுவிட்டால் அவனுக்குச் சிறைத் தண்டனையை ஜாஸ்தியாகத்தான் போட்டாகவேண்டும். அதை மாஜிஸ்ட்ரேட்டுகள் தகுந்தபடி விதிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

பசுக்களையும், வேலை செய்கின்ற காளைகளையும் நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது அவசியம். பத்து வயதுக்குட்பட்ட மாடுகள் ஸ்லாட்டர் செய்யப்படுமானால், மாடுகளை வாங்குவதற்கும், கன்றுகளைப் பராமரிப்பதற்கும் சர்க்கார் என்ன தான் ஸப்ஸிடி கொடுத்தும் என்ன பிரயோஜனம் ? கால்நடைகள் நல்ல முறையில் வளருவதற்கு சர்க்கார் ஸப்ஸிடி கொடுப்பது ஒரு புறமும், கால்நடைகள் இளவயதிலேயே ஸ்லாட்டர் செய்யப்படுவது இன்னொருபுறமும் நாம் பார்க்கும்போது, சர்க்கார் கொடுக்கும் ஸப்ஸிடி

பணம் மாடுகளை மாம்சத்திற்காக வெட்டுவதற்குத்தானே செலவிடப்படுகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது. கால்நடை வளர்ச்சிக்கு சர்க்கார் ஸப்ஸிடி கொடுத்து, எத்தனையோ பிரயாசை எடுத்துக்கொள்ளுகிறார்கள். அந்த எண்ணம் ஈடேறுவதற்காக, கால்நடைகள் ஸ்லாட்டர் செய்யப்படாமலிருப்பதற்காக, இதில் போட்டிருக்கும் முறை நல்ல முறையிலே அமைந்திருக்கிறது.

அதிலே ஒருவர் மதத்தைக் கொண்டுவந்து புகுத்திவிட்டார். ஹிந்து மதத்திற்கும் கோ சம்ரட்சணத்திற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். பசுக்களைவிட எருமை முக்கியமானது. எருமைப் பாலிலிருந்துதான் அதிகமாக வெண்ணெய் கிடைக்கிறது. அத்துடன் எருமைத் தோல் ஜாஸ்தி விலை போகிறது. பல வகையில் பிரயோஜனமாக இருக்கக்கூடிய எருமைகளும் கொல்லப்படாமல் அவைகளையும் காபந்து பண்ணக்கூடிய முறையில் இச்சட்டம் அமைய வேண்டும். இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டியது அவசியம் இல்லை என்று சொல்லிக்கொள்வதோடுகூட, இதை உடனடியாக நிறைவேற்ற வேண்டியது தான் என்று சொல்லிக்கொண்டு, இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்காக நன்றி பாராட்டி என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்.

***Sri S. M. ANNAMALAI** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இப்பொழுது இந்தக் கால்நடைப் பாதுகாப்பு மசோதாவை இந்தச் சமயத்தில் கொண்டுவர வேண்டிய அவசியம் இல்லை. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கால்நடைகளைப் பாதுகாப்பதற்கு அந்தந்த விவசாயிகளுக்கு அக்கறை உண்டு. நன்றாக வேலை செய்யக்கூடிய எந்தக் கால்நடையையும் கொண்டுபோய் அறுப்பதற்கு யாரும் சம்மதிக்கமாட்டார்கள்; விலை கூறவும் மாட்டார்கள்.

இரண்டுவித காரணங்களைக்கொண்டு கால்நடைகளை அறுக்கலாம். யாருக்கும் தெரியாமல், திருட்டுத்தனமாக—குறிப்பிட்ட இனத்தவர் ஒருவர் இருக்கிறார்கள், ஏறத்தாழ நான் நினைக்கிறேன்—முஸ்லிம் அங்கத்தினர்கள் கோபித்துக்கொள்ள வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்—அவர்கள் தான் ஹிந்துக்களுடைய வீடுகளில் இருக்கும் காளை மாடுகளை ரகசியமாக, யாருக்கும் தெரியாமல், வாங்கி அறுப்பது வழக்கம். அது போல், சாதாரணமாக, கன்று போடாத பசுக்களை அவர்கள் ரகசியமாக வாங்கிச் சாப்பிடுவது வழக்கம். அதைத் தடுப்பதற்கு ஏதாவது சட்டம் வேண்டுமானால், க்ரிமினல் சட்டம் இருக்கிறது. விஷம் வைத்துக்கொல்கிறார்கள் என்றால், அதற்கு க்ரிமினல் சட்டத்தில் இடம் இருக்கிறது. க்ரிமினல் சட்டம் இருக்கும்போது, இந்தச் சட்டம் கொண்டுவரவேண்டிய அவசியமே இல்லை. அதுவும் கிராமப் புறங்களிலுள்ள மக்களுக்கு இந்தச் சட்டங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. முக்கியமாக ஒன்று சொல்கிறேன். சாதாரண கால்நடைகளுக்கு, நன்றாக இருக்கும் மாட்டுக்குக்கூட காக்கை வலி என்று வரும்போதெல்லாம் கிராம மக்கள் மாட்டின் காதை அறுப்பார்கள். காதை அறுத்தால்தான் அந்த வலி தீரும். காதை அறுப்பது என்றால், காதுகளின் பக்கத்தில் இரண்டு நரம்புகள் வருகின்றன. அந்த நரம்புகளை அறுத்தால்தான் காக்கை வலி தீரும். சாதாரண முறையில் இந்த நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

அதைப்போலவே சூடு வைக்கும் பழக்கமும் உண்டு. உடல் பூராவும் சூடு வைப்பார்கள். நரம்புகள் இருக்கும் இடங்களில் எல்லாம் சூடு வைப்பார்கள். சூடு வைப்பதற்குக் காரணம் என்னவென்றால், ஒருசில குறிப்பிட்ட வலி வருகிறது. வலி வரும்போது சூடு வைப்பார்கள். நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு கால்நடை நல்ல முறையில் நடக்காவிட்டால், அப்பொழுது சூடு வைத்தால் நன்றாக நடக்கும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் கிராமப்புறங்களில் நடக்கின்றன. காது அறுப்பது, சூடு வைப்பது எல்லாம் குற்றம் என்று நாம் சட்டம் செய்தால், சட்டத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாத கிராம மக்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாவார்கள். ஆகவே, இந்தச் சட்டங்களெல்லாம் கிராமப்புறங்களில் நன்றாக விளம்பரப்படுத்த வேண்டும்.



மேலும், இந்தச் சட்டத்தில் "கன்விக்ஷன்" பற்றி குறிப்பிட்டிருப்பது தேவை இல்லை என்று நினைக்கிறேன். பிரசாரத்தின் மூலமாக இப்படிப்பட்ட சட்டங்களின் நோக்கத்தை நிறைவேற்றலாம். கால்நடைச் கண்காட்சிகளை நடத்துவதன் மூலமாகவும் இந்நோக்கங்களை நிறைவேற்ற முடியும். இப்பொழுது ஏதோ கால்நடைக் கண்காட்சிகள் நடந்துவருகின்றன. இன்னும் அதிகமான முறையில், அடிக்கடி இத்தகைய கண்காட்சிகள் நடத்தினால், கால்நடைகளை நன்றாகப் பராமரிக்கவேண்டுமென்ற ஊக்கம் விவசாயிகளுக்கு ஏற்படும். இப்பொழுதே அந்த உணர்ச்சி ஓரளவுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த நல்ல எண்ணம் மக்களிடையே பரவிக்கொண்டு வருகிறது. மேலும் மேலும் கண்காட்சிகள் நடத்தி மக்களிடையே நல்ல எண்ணத்தைப் பரவுவதற்கு வழி செய்யாமல், மேலும் மேலும் கிராம மக்களுக்கு இப்படிப்பட்ட சட்டங்களை இயற்றுவதினால் பாதகமேயொழிய சாதகம் இல்லை.

நண்பர் கல்யாணசுந்தரம் அவர்கள், மாட்டின் கழுத்தில் சிறு புண் இருந்தாலும் இன்ஸ்பெக்டர்கள் சாதாரணமாக பத்து, பதினைந்து என்று லஞ்சம் வாங்கிக்கொண்டு, பிறகு ஓட்டிக்கொண்டு போகச் சொல்லிவிடுகிறார்கள், என்று சொன்னார்கள். எப்படியிருந்தாலும் சட்டத்தின் நோக்கத்தை அதிகாரிகளும் சரிவரப் புரிந்துகொண்டு அதன் நோக்கத்தை நிறைவேற்றப் போவதில்லை. ஆகையால், இல்லாத சட்டங்களை வேண்டுமென்று உற்பத்தி செய்து, கிராம மக்கள் மீது பல வித சட்டங்களைப் போட்டு அதன்மூலமாக பலவிதமான இக்கட்டுகளை ஏற்படுத்துவதில் பிரயோஜனம் இல்லை. இந்தச் சட்டம் இந்தச் சமயத்தில் வந்திருக்கக்கூடாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கின்றேன்.

**Mr. SPEAKER** : இப்பொழுது ஸ்ரீ கரிய கவுண்டர் அவர்கள் பேசலாம். ஐந்தாறு கனம் அங்கத்தினர்கள் பேசிவிட்டார்கள். இன்னும் அனேகர் பேசவேண்டுமென்றால் இதற்கென்று ஒதுக்கிவைத்திருக்கும் நேரம் போதாமல் போய்விடும். ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்கள் சுருக்கமாகப் பேசினால் போதும். சொன்னதையே சொல்லவேண்டாமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri T. KARIA GOUNDER** : தலைவர் அவர்களே, குறைச்சலாகப் பேசுவது என்பதுதான் எனக்கு உத்தேசம்.

**Mr. SPEAKER** : எல்லோரும் அப்படித்தான் நினைக்கிறீர்கள். என்ன செய்வது ?

**Sri T. KARIA GOUNDER** : சர்க்கார் கொண்டுவரும் எந்த சட்டத்திற்கும் சிலர் எதிர்ப்பைத் தெரிவிப்பதைக் கண்டு நான் ரொம்ப வருத்தப்படுகிறேன். போளூரிலிருந்து நண்பர் அண்ணாமலை அவர்கள் வந்திருக்கிறார்கள். அதன் பயனை நான் வாணியம்பாடியில் அனுபவிக்கிறேன். 1948-ம் வருஷம் ஜூலை மாதத்திலே மைசூர் சர்க்கார் இம்மாதிரி சட்டம் கொண்டுவந்து பூராவும் தடை விதித்தது எல்லோருக்கும் தெரியும் ஆனால், நம்முடைய சர்க்காரின் முதல் மந்திரியாக இருந்த, காலம் சென்ற ஸ்ரீ குமாரசாமி ராஜா அவர்களிடம் நாங்களெல்லோரும், அவர்கள் வேலூருக்கு வந்திருந்தபோது, எங்கள் தாலூகாவில் ஸ்லாட்டர் ஹவுஸ் இருப்பதைப் பார்க்கவேண்டுமென்று மனு கொடுத்துச் சொன்னோம். அப்பொழுது அவர், "சட்டம் செய்தாலொழிய இதைத் தடுக்க முடியாது" என்று சொன்னார்கள். நமது அமைச்சர் அவர்கள் இந்தச் சமயத்தில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக அவர்களை நான் மனதார வாழ்த்துகிறேன் ; புகழ்கிறேன். காரணம் என்னவென்றால், எங்கள் தாலூகாவில் இரண்டு இடங்களில் மாடுகளை ஸ்லாட்டர் செய்து மைசூர் ராஜ்யத்திற்கு அனுப்புகிறார்கள். தினசரி நூற்றுக்கணக்கான மாடுகளை ஸ்லாட்டர் செய்து மாமிசத்தை மைசூர் ராஜ்யத்திற்கு அனுப்புகிறார்கள். எப்படிப்பட்ட மாடுகளை அவர்கள் அறுக்கிறார்கள் ? கனம் அங்கத்தினர் அண்ணாமலை அவர்கள் ஏதோ சொல்கிறார் காது நரம்புகளை அறுக்கிறார்கள் என்றும், சூடு வைக்கிறார்கள் என்றும். இரவில் கொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த மாட்டை காலையில் பார்த்தால் காணப்படுவது இல்லை.

எங்கள் கிராமத்தில் இருந்த 10 மாடுகளைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அவைகளை அறுத்து, தோலையும், கறியையும் மைசூர் ராஜ்யத்திற்கு ஏற்றி அனுப்புகிறார்கள். இதைத் தடுக்க கனம் அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததற்காக அவரை நாம் போற்றக் கடமைப்பட்டிருக்கிறோம். போளூரில் அம்மாதிரி ஸ்லாட்டர் ஹவுஸ் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. இந்தச் சட்டத்தை குடியானவன் மீது புகுத்துகிறோம் என்றும், கிராம மக்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்றும் கனம் அங்கத்தினர் ஒரேயடியாகச் சொல்கிறார். இதிலே தப்பு இல்லை இம்மாதிரி சட்டம் கொண்டுவருவதிலே. இந்தமாதிரி சட்டத்தை திடீரென்று மைசூர் சர்க்கார் செய்துவிட்டார்கள். ராமசாமி முதலியார் திவானாக இருந்த சமயம் இதைக் கொண்டு வந்துவிட்டார்கள்.
3-20 p.m. இவ்வளவு நாள் நாம் பொறுத்திருந்தது தான் ஆபத்தாகிவிட்டது என்று நினைக்கிறேன். இந்தச் சட்டம் மிகவும் அவசியமானது. தண்டனையை அதிகமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நாட்டில் மனிதர்களைவிட மிருகங்கள் அதிகம் என்று ஸ்ரீ கல்யாணசுந்தரம் சொன்னார்கள். அவர் விவசாயியோ என்னமோ தெரியாது. எப்படிச் சொன்னார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. நாங்கள் கால்நடைகளை கடவுளுக்குச் சமானமாக நினைக்கிறோம். காலையில் எழுந்திருந்து அதைக் குளிப்பாட்டுகிறோம். அதை எத்தனை அக்கறையோடு பரிபாலிக்கிறோம் என்று சொல்வதற்கில்லை. சுமார் ஒரு ஜதை மாடு வாங்க 285 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். 400 ஜதை மாடு வாங்க நாங்கள் எத்தனை சந்தைக்குப் போயிருக்கிறோம் என்று பார்த்தால் இந்த நாட்டில் மாடுகளுக்குள்ள கிராக்கி தெரியும். தினசரி நூற்றுக்கணக்கான மாடுகள் அடிமாடுகளாக்கப்படுகின்றன. விவசாயத்திற்கு உபயோகப்படாத மாடுகளை அவ்வாறு செய்தால் பரவாயில்லை. அதுவும் மைசூர் ராஜ்யத்திற்கு அனுப்புவதற்காக எங்கள் தாலுக்காவில் கொல்லப்படுகிற மாடுகள் இத்தனை அத்தனை என்று சொல்ல முடியாது. கொல்வதைத் தடை செய்வது, மைசூர் ராஜ்யத்திற்கு அனுப்பப்படுகிற மாமிசத்தை உடனடியாகத் தடை செய்யவேண்டும் என்பதாக நான் கேட்டுக் கொள்கிறேன். இதற்காக ஒரு கமிட்டியை நியமித்து பரிசீலனை செய்து தகுதியில்லாத மாடுகளை வேண்டுமானால் சட்டத்திலிருந்து விலக்களிக்க அனுமதிக்கலாம் என்று சொல்லிக் கொண்டு, தலைவருடைய உத்தரவுப்படி என் உரையைச் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன்.

**SRI T. S. RAMASWAMY PILLAI:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் உன்னதமான நோக்கத்தை நான் பாராட்டுகிறேன். ஆனால் இதன் நோக்கம் இரண்டுவிதமாக இருக்கலாம். ஒன்று ஜீவகாருண்ய நோக்கம். மற்றொன்று பொருளாதாரத்தைப்பற்றிய நோக்கம். ஜீவகாருண்ய நோக்கம் என்றால் கால்நடைகள் என்று சொல்லும்போது காளைகளையும், பசுவையும், எருமையையும், எருமை மாடுகளையும், ஆட்டையும், கோழியையும் கூட ஏன் சேர்க்கக் கூடாதென்பது என் அபிப்பிராயம்.

**MR. SPEAKER:** The hon. Member need not refer to that because when we take up his amendment, I mean asking him how it is in order. So, let the hon. Member confine himself to the other aspects of the Bill.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** He has given notice of an alternative amendment also.

**MR. SPEAKER:** Let him not explain them now.

**SRI T. S. RAMASWAMY PILLAI:** கால்நடை என்று சொல்லும்போது அதுவும் சேருகிறது.

**MR. SPEAKER:** His amendment includes fish also. (Laughter.)



**SRI T. S. RAMASWAMY PILLAI:** நமது பொய்யாமொழிப் புலவர் சொன்னதுபோல

"கொல்லான் புலாலை உண்ண மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்பது நம்முடைய தமிழ் நாட்டு மரபு. அந்த மரபுக்கு ஒட்டி, பரம காருண்ய நோக்கத்தோடு எல்லா உயிர்களையும் பாதுகாக்கக்கூடிய அளவில் இந்த மசோதாவைக் கொண்டு வந்தால் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அவ்வாறு ஜீவகாருண்ய நோக்கத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொள்ளாமல் பொருளாதார நிலையையும் அனுசரித்து இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது என்றால் ஒரு விஷயத்தை கவனிக்கவேண்டும். கால்நடை பராமரிப்பு இப்படித் தடை செய்வதால் என்ன பயன்? கால்நடைகளை நல்ல முறையில் பராமரிப்பதற்காக பத்து வருஷங்களுக்குப் பிறகுதான் அவற்றைக் கொல்லலாம் எனச் செய்துவிடலாம். உண்மையில் இன்றைக்கு நாம் பார்க்கிறோம். பல வெளிநாட்டு தேசங்களில் கசாப்புக்கடை அதிகமாக இருக்கின்றன. மாடுகளை அடித்துக் கொன்று தின்கிற அமெரிக்கா, ரஷியா, ஆஸ்ட்ரேலியா முதலியவற்றில் மிக உயர்ந்த மாடுகள் எல்லாம் இன்றைக்குப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கால்நடை பராமரிப்புக்காக இந்தமாதிரியான சட்டத்தை அவர்கள் கொண்டுவரவில்லை. இருந்தாலும் அங்குள்ள மாடுகள் புஷ்டியாகவும், திடகாத்திரமாகவும்தான் இருக்கின்றன. ஆகவே ஏதோ கோ சம்வர்த்தன இயக்கத்தாருடைய நகல் மசோதாவைப் பார்த்து இந்தச் சட்டத்தைக்கொண்டு வருவதாக இவர்கள் சொல்கிறார்கள். மசோதாவின் நோக்கத்தைச் சொல்லும்போது நமது அண்டை ராஜ்யத்தில் கசாப்புக்கடைகளை மூடிவிட்டார்கள். அதனால் இங்கேயிருந்து மாடுகளை அடித்து அனுப்புகிறார்கள். அதைத்தடுக்க இதைக் கொண்டுவருவதாகச் சொல்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய ஸ்ரீ கரிய கவுடர் அவர்கள் அதைக் குறிப்பிட்டார்கள். ஏராளமான மாடுகள் கசாப்புக்கடைக்காகப் போகிறது என்று சொன்னார்கள். அதைத் தடுப்பதற்கும் இந்த மாதிரியான சட்டத்தினால் எவ்விதப் பிரயோஜனமும் இருப்பதாகத் தெரியவில்லை. பசுவை ரட்சிக்கவேண்டுமென்றால் பசுவைக் கொல்லக் கூடாது என்று செய்யலாம். அது மாத்திரம் அல்லாமல் காளைகளையும், எருமைகளையும் சேர்த்திருக்கிறோம். ஆடு கூட நல்ல பால் தரக்கூடியது. அதற்கும் விதி விலக்கு அளிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நோக்கம் வேலைசெய்கின்ற மாடுகளைக் கொல்லாமல் பாது காக்க வேண்டும் என்பதுதான். பால் அளிக்கக்கூடிய பசுக்கள், நமக்கு வேலை செய்யக் கூடிய மாடுகள் இவைகள் இரண்டும் நம்முடைய பொருளாதாரத்தில் பெரிதும் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகையால் அவைகளை அழிப்பதற்கு நாம் இடம் கொடுக்கக் கூடாது. பாதுகாக்கவேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் உட்கருத்து. வேலை செய்கின்ற மாடுகளைக் கொன்றுவிட்டால் நம்முடைய வேலை பாதிக்கப்படும். மாமிசம் இடைக்கும் என்ற நோக்கத்தோடு சிலர் ஆசைப்பட்டு அதை வாங்கலாம். அதேபோல பசுக்களையும் மரத்து இருக்கும் காலத்தில் பராமரிப்பதற்காக அஞ்சி, விற்றுவிட்டால் பணம் வரும் என எண்ணி விற்றுவிடுகிறார்கள். அந்த மாதிரியான எண்ணத்திற்கே நாம் இடம் கொடுக்கக் கூடாது. ஒரு பழமொழி சொல்வது உண்டு. "பொன் முட்டையிடும் வாத்தை கொல்வது" என்பதாக. அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதுதான் நம் நோக்கம். வேறு ஒன்றும் இல்லை. கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சி உப தலைவர் என்ன செய்யவேண்டுமென்று யோசனை சொல்கிறார் என்றே எனக்குப் புரியவில்லை. அவர் கொடுத்திருக்கிற திருத்தங்களும் விநோதமாக இருக்கின்றன. கேள்வி நேரத்தின் போது கனம் சபாநாயகர் அவர்கள் சில உபகேள்விகளை "இன்சின்யூவேடிங் க்வொச்சன்" என்பார்கள். அதுபோல இது "ரிடிகூலிங் அமெண்டுமெண்டு" விநோத

மான திருத்தம் என்று தாழ்மையுடன் சொல்ல விரும்புகிறேன். மாடுகளைக் கொலை செய்வதைத் தடுப்பது இதன் நோக்கம் என்றால் ஆடுகளை ஏன் சேர்க்கக் கூடாது, மீன் ஏன் சேர்க்கக் கூடாது, என்று கேட்டிருக்கிறார்கள். அமெரிக்காவை எடுத்துக் காட்டுகிறார். அமெரிக்காவில் மாடுகள் விவசாயத்திற்குப் பயன்படுவதே இல்லை. குதிரைகளைத்தான் உபயோகிக்கிறார்கள். இங்கே அப்படி இல்லை. குதிரையைக்கட்டி யாரும் உழுவது, விவசாயம் செய்வது எதுவும் நம் நாட்டில் இல்லை. மாடுகள்தான் மிகவும் அதிகமாக உபயோகப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே பொருளாதார அமைப்பில் அந்த தேசத்திற்கும், நம் தேசத்திற்கும் ஒப்பிட முடியாது. அப்படிச் செய்வதில் பயன் இல்லை. இந்த நாட்டுக்கு இந்த மசோதா அவசியம். சென்னை நகரிலேயே கனம் அங்கத்தினர் ஒருவர் சொன்னதுபோல நடக்கிறது. நகரத்திற்கு அப்பால் மாலை நேரத்தில், இருட்டு வேளையில் சென்றால் எவ்வளவு மாடுகள் மந்தை மந்தையாகக் கசாப்புக்கடைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன என்று தெரியும்.

3-30 p.m. அது மட்டுமல்ல. மைசூர் ராஜ்யத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அது அமுலில் இருக்கிறது. அதுவும், இந்தமாதிரி வதையை தடுக்கும் ஒரு சட்டமாகும். நான் சமீபத்தில் சேலத்திற்குச் சென்றிருந்தபோது குறிப்பிட்டார்கள், மைசூரில் இருக்கும் மாடுகளை அங்கு கொல்ல முடியாது என்று எல்லாம் ஹோசூருக்கு வருகிறது. அப்படி ஹோசூருக்கு ஏராளமாக அனுப்பி அங்கு கொல்கிறார்கள் என்று, அங்கு அப்படிக் கொல்வதை இந்தச் சட்டம் இல்லாததால் தடுக்கமுடியவில்லை. இந்தச் சட்டம் பல ராஜ்யங்களிலும் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்று முன்பே சொன்னேன். சில ராஜ்யங்களில் வதை பரிபூர்ணமாக தடுக்கப்பட்டிருக்கிறது. சில ராஜ்யங்களில், நாம் இப்பொழுது இந்த மசோதாவை எப்படி தயாரித்திருக்கிறோமோ, அந்த வகையில் சட்டம் இயற்றப் பட்டிருக்கிறது. கோ சம்வர்த்தன சபை இந்த அடிப்படையில்தான் யோசனை தெரிவித்தார்கள். இப்பொழுது எல்லாப் பசுக்களையும் கொல்வதை நிறுத்திவிடலாம் என்றால், அந்த மாம்சத்தில் அக்கறை இல்லாமல் இருக்கலாம், அக்கறை உள்ளவர்கள் யாருமே இல்லை என்று சொல்லலாம். அதுவல்ல பிரச்னை. தனக்கு இனி அது வேலை செய்யமுடியாது, அந்த மாட்டினால் ஒருவித பயனும் இல்லை என்றிருந்தாலும் அதைக் கட்டிக்கொண்டு தீனி போட வேண்டுமென்று சட்டம் செய்வது சரியல்ல. பால் அளிக்க பயனற்றுப் போய் விட்டதை ஏதாவது ஒரு ஸ்தாபனம் அந்த கால் நடைகளை ஏற்றுக் கொள்கிறோம் என்று வர வேண்டும். உனக்குப் பயன் இல்லை என்றாலும் அதை நீதான் வைத்துக் கொண்டிருக்கவேண்டுமென்று வற்புறுத்துவது நியாயமில்லை. ஆகவேதான், இந்த மசோதா பரிபூர்ணமாக தடுக்கும் விதத்தில் தயாரிகப்படவில்லை. வேலை செய்யும் மாடுகள் தவிர்க்கபபட வேண்டும், ஸ்ரீனிவாஸ ஐயர் அவர்கள் குறிப்பிட்டார்கள், பத்து வருடம் வரை எந்த மாடும் நிச்சயம் வேலை செய்வதற்கு தகுதியாகத்தான் இருக்கும் என்று அதில் ஒரு ஐயமுமில்லை. பத்து வருடங்களுக்கு பிறகு என்றாலும் கூட, பல்லைப் பார்த்தல்ல, அதற்கு பிறகும் ஒரு சர்டிபிக்கட் வேண்டும். இது வேலை செய்வதற்கு லாயக்கில்லை, பால் அளிக்க இது லாயக்கில்லை என்று சர்ட்டிபிக்கட்டோடு தான் அதை கசாப்புக் கடைக்கு கொல்ல அனுமதிக்க வேண்டுமென்பது சட்டம். எருமைமாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அதுவும் பல வகைகளில் பலன் தருகிறது. ஆகவே, மாடுகள் என்பது காளை மாடுகள், பசுக்கள், எருமைப் பசுக்கள், கன்றுகள் எல்லாம் சேர்ந்து இதில் அடங்கியிருக்கிறது. மாடுகளின் எண்ணிக்கை அதிகமாகிறது என்பது உண்மைதான். ஆகவே, அரசாங்கம் பலவகைகளிலும் கால்நடைகளின் மேல் கவனம் செலுத்தி அதன் தரத்தை உயர்த்தப் பார்க்கிறது. அதன் தரமும் உயர்ந்திருக்கிறது. சென்னையிலும் உயர்ந்திருக்கிறது என்பதை சமீபத்தில் நடந்த கால் நடைக் கண்காட்சியைப் பார்த்தவர்கள் உணர்ந்திருப்பார்கள். சட்டம் நிறைவேற்றுவதால் மட்டும் கால்நடைகளை அபிவிருத்தி செய்யப் போகிறோம் என்று சொல்லவில்லை. அதை, பல வழிகளில் அபிவிருத்தி செய்ய திட்டங்கள் நிறைவேற்றுகிறோம். எங்கு பார்த்தாலும் அவைகளின் தரம் உயர்ந்து வருகிறது. தஞ்சை ஜில்லாவில்,



டெல்டா பிராந்தியங்களில் மாடுகளின் தரம் குறைவு என்று பெயர். அன்று கும்பகோணத்தில் ஜில்லாக் கால்நடைக் கண்காட்சியைப் பார்த்தேன். என்னுடன் வந்தவர்களும் அதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். மாடுகளின் தரம் அவ்வளவு உயர்ந்துவருகிறது. தனிப்பட்டவர்கள் மாடுகளில் மிகுந்த அக்கறை எடுத்து மாடுகளை நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள். இப்படியெல்லாம் ஒரு பக்கம் செய்யும்போது, பலன் தரக்கூடிய மாடுகள் மற்ற ஒரு பக்கத்தில் ஏதோ மாமிசத்திற்காகவும் தோலிற்காகவும் கொல்லப்படுகிறது என்றால் நாம் இந்தத் திட்டங்களை நிறைவேற்றியும் பயனில்லை. ஆகவேதான் இந்த சட்டம் மற்ற ராஜ்யங்களில் பாசாக்கியிருக்கிறார்கள், எனினும் கொஞ்சம் காலதாமதமானாலும் பாதகமில்லை, எந்த வகையில் நிறைவேற்றுவது என்று பரிசீலித்துப் பார்த்துதான் இந்த மசோதா வந்திருக்கிறது. அதுதான் தாமதத்திற்குக் காரணம். இது நன்கு பரிசீலிக்கப்பட்டு கொண்டு வரப்பட்ட மசோதா. இதில் சிக்கலான பிரிவுகள் ஒன்றுமில்லை, என்று தாழ்மையோடு சொல்லிக்கொள்வேன். ஆகவே, இதை இன்னும் பொறுக்குக் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கோருவது சரியல்ல என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்த மசோதா இப்பொழுதே நிறைவேற்றப்படுவதற்கு யோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற பிரேரணையை கனம் அங்கத்தினர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். மற்றொன்று. எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், சட்டம் அவசியம் என்றிருந்தால் அதைச் செய்கிறோம். அவசியம் என்றிருந்தால் சில செய்கைகளை குற்றம் என்று சொல்கிறோம். ஹாரஸ்மெண்ட், தொந்தரவுகள் செய்வார்கள் என்று சொல்லப்பட்டது. தவறு செய்கிறவர்கள் தொந்தரவிற்கும் தயாராகயிருக்க வேண்டும். ஆனால் அனாவசியமாக தொந்தரவு செய்வதை பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை. எஸ்.பி.சி.ஏ. யைப் பற்றிச் சொன்னார்கள். கொஞ்சம் புண் இருந்தாலும் புண்ணுக்கு சிகிச்சை செய்யவேண்டும். அவை, வாயில்லா ஜீவன்களாகும். அது எப்படி சொல்லப் போகிறது. ஆகவே, நாம் தான் பார்த்துக்கொள்ள வேண்டும், அவைகளை அடுத்தது, லஞ்சம் இருக்கலாம். அங்குமிங்கும் அப்படி ஒருவர் இருவர் செய்யலாம். அதைச் சாக்காக சொல்லி சட்டம் வேண்டாம், நடவடிக்கைகள் வேண்டாம், எந்தக் குற்றம் செய்தாலும் பார்த்துக்கொண்டிருக்கலாம் என்று யாரும் கோரமாட்டார்கள். அடுத்தபடியாக, இந்த மசோதாவைப் பற்றிச் சொல்லும்போது, யார் சாப்பிடுகிறார்கள், யாருக்கும் இதில் அக்கறையில்லை, இங்கு யாருக்கும் அப்படி கொல்லவேண்டும் என்ற எண்ணமில்லை என்றெல்லாம் சொல்லப் பட்டது. அவர்கள் வாதப்படி மாடுகளை கசாப்புக் கடைக்கு கொண்டு போகவில்லை என்று சொன்னால் இந்த மசோதாவைப் பற்றி கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. தான் வைத்திருக்கும் மாடுகளை கசாப்புக் கடைக்கு கொல்ல அனுப்பும் எண்ணம் இல்லாதவர்களுக்கு இந்த சட்டம் கிட்டவே வராது. ஆகவே, அவர்கள் எந்த விதத்திலும் கவலைப்படவே வேண்டாம். பாதிக்கப்படுகிறவர்களுக்குக் கூட அனாவசியமான தொல்லையோ உபத்திரவமோயில்லாமல், விவசாயிகள் பாதிக்கப்படாமல் இந்தச் சட்டம் அமுலில் நடத்தப்படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அவ்வாறு செய்ய அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று சொல்லிக் கொண்டு எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Mr. Kalyanasundaram is not in his seat. His amendment is deemed to have been withdrawn. I shall put the motion to vote. The question is:

"That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause 2.*

Mr. SPEAKER : The motion is—

" That clause 2 do stand part of the Bill."

Sri M. JAGANNATHAN : Sir, I move—

" In item (*a*) of the clause, *omit* the words ' bullock ', ' he-buffalo ', or ' she-buffalo '."

Sri T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

Mr. SPEAKER : Amendment moved—

" In item (*a*) of the clause, *omit* the words ' bullock ', ' he-buffalo ' or ' she-buffalo '."

* Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தம், பசுவையும் அதன் கன்றையும் மாத்திரம் இந்த மசோதாவில் சேர்த்துக்கொண்டு மீதியிருக்கக்கூடிய எருது, ஆண் எருமை, பெண் எருமை போன்ற மிருகங்களை இந்த மசோதாவிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்பதுதான். அமைச்சர் அவர்கள் இப்பொழுது பேசும்போது சொன்னார்கள், யார் ஒருவன் இந்த மாடுகளை, கால்நடைகளை கசாப்புக் கடைக்குக் கொண்டு போகவில்லையோ அவர்களை இந்தச் சட்டம் பாதிக்காது என்று சொன்னார்கள். அதேபோல் நானும் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு விவசாயி இருக்கிறான் என்று வைத்துக்கொண்டால் அவனுக்கு இந்த எருது அல்லது எருமை தன் விவசாயத்திற்கு தேவைப் படுகிறதா என்றால், அவனுடைய தேவைகளைப் பற்றி முடிவு செய்ய அவனைவிட வேறு ஒரு நீதிபதியும் இருக்கமுடியாது.

3-40 p.m. ஆகவே இந்த மாதிரியான சட்டங்கள் அவனுக்காக கொண்டுவர வேண்டுமென்று அவசியமில்லை என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே இந்த திருத்தத்தை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

' There cannot be a better judge of his own requirements than the cultivator himself.'

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே நான் முன்பே குறிப்பிட்டேன். இந்த மசோதாவின் அடிப்படையான நோக்கம் வேலை செய்யக்கூடிய மாடுகளை கொல்லுவதை தடுக்கப்பட வேண்டும் என்பதுதான். ஆகவேதான் இதில் காளைகள் என்றும் எருதுகள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் யாராவது வேலை செய்யும் மாடுகளை கொல்லுவார்களா என்று கேட்கக் கூடும். நான் முன்னாலேயே சொன்னேன். பொன் முட்டையிடக்கூடிய வாத்து அத்தனை பொன் முட்டைகளையும் எடுத்துக்கொள்ளலாமே என்று கொல்லுவதும் உண்டு. அதே ரீதியில்தான் இன்றைக்கு தோலின் விலை அதிகமாக இருக்கிறது. அதற்காக கொல்லவும் கூடும், அவ்விதம் நடந்தும் வருகிறது. ஆகவேதான் இந்த மசோதாவை கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஆகவே நான் இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற் இல்லை.



Mr. SPEAKER : The question is—

" In item (*a*) of the clause *omit* the words ' bullock ", ' he-buffalo ' or ' she-buffalo '."

The amendment was put and lost.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 4 was put and carried.

*Clause 5.*

Mr. SPEAKER : The motion is—

' That clause 5 do stand part of the Bill.'

Sri M. JAGANNATHAN : Sir, I move the amendment standing in my name, namely,—

' *Omit* sub-clause (3).'

The amendment was duly seconded.

Mr. SPEAKER : Amendment moved—

" *Omit* sub-clause (3)."

Sri M. JAGANNATHAN : Sir, this sub-clause shuts out law Courts as Appellate Authorities and I think that that will work as a hardship to the persons concerned. The Government seem to be taken as a final authority in this matter. After all, the Government consist of human beings and they may go wrong because they have got vested interests. As the Government are bringing forward this Bill, in order to give effect to this Bill, they may decide in a particular way to suit their own convenience. Therefore, in my opinion, if law Courts are brought into play and made appellate authorities, that will meet the ends of justice. I think the Hon. Minister will see my point and accept this amendment.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்போது என்ன செய்ய வேண்டும் என்பதைதான் சபை செய்கிறது. சட்டம் செய்யும்போது அனாவசியமான வழக்குகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதைதான் நாம் மிகவும் கவனிக்கவேண்டும். எவ்வளவுதான் இருந்தாலும் இப்போதுள்ள அரசியலமைப்பின்படி ரிட் இருக்கிறது. ஆகவேதான் அவசியமில்லாமல் வழக்குகள் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்த பிரிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை.

Mr. SPEAKER : The question is—

" *Omit* sub-clause (3)."

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

Clause 6 was put and carried.

*Clause* 7.

MR. SPEAKER: The motion is—

"That clause 7 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN: Sir, I move the amendment standing in my name, namely,—

"In sub-clause (2) in line 37, *for* the words 'shall answer' *substitute* the words 'may answer'."

SRI T. S. RAMASWAMY PILLAI: Sir, I second it.

MR. SPEAKER: Amendment moved—

"In sub-clause (2) in line 37, *for* the words 'shall answer', *substitute* the words 'may answer'."

SRI M. JAGANNATHAN: My amendment is self-explanatory.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சட்டம் செய்கிறபொழுது வார்த்தைகள் சரியாக இருக்கவேண்டியிருக்கிறது. "ஷல் ஆன்ஸ்வர்" என்றிருப்பதினால் பதில் அளிக்கவேண்டும் என்றாகிறது. ஆகவே "மே ஆன்ஸ்வர்" என்று மாற்றவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். ஆகவே இந்த திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

The amendment was, by leave, withdrawn.

Clause 7 was put and carried.

*Clause* 8.

MR. SPEAKER: The motion is—

"That clause 8 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN: Sir, I move the amendments standing in my name, name by,—

"In sub-clause 1 *for the* words 'imprisonment for a term which may extend to three years or with fine which may extend to one thousand rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."

"In sub-clause 2 *for* the words 'imprisonment for a term which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."

The amendments were duly seconded.

MR. SPEAKER: Amendments moved—

"In sub-clause 1 *for* the words 'imprisonment for a term which may extend to three years or with fine which may extend to one thousand rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."



"In sub-clause 2 *for* the words 'imprisonment for a term which may extend to six months or with fine which may extend to one thousand rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."

SRI M. JAGANNATHAN: Sir, my amendments aim at reduction of the punishment provided for in the clause. The Hon. Minister might scrutinize them and try to accept them.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: சபாநாயகர் அவர்களே, இது தண்டனையைப் பற்றியது. இதை அங்கத்தினர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். இப்போது இதில் அதிகமாக தண்டனை ஒன்றும் அதிகமாக விதிக்கவில்லை. ஆகவே இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை.

MR. SPEAKER: The question is—

"In sub-clause 1 *for* the words 'imprisonment for a term which may extend to three years or with fine which may extend to one thousand rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."

"In sub-clause (2) *for* the words 'imprisonment which may extend to six months or with fine which may extend to one hundred rupees or with both', *substitute* the words 'fine which may extend to one hundred rupees'."

The amendments were put and lost.

Clause 8 was put and carried.

Clauses 9, 10, 11, 12, 13 and 14 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be passed."

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை சட்டமாக்குவதில் கனம் அங்கத்தினர் எல்லோரும் ஆதரவு அளித்தார்கள். இதில் திருத்தங்கள் கொடுத்த அங்கத்தினர்கள் திருத்தத்தைப் பற்றி திரும்பத் திரும்ப வற்புறுத்தாமல், இந்த மசோதாவின் உள் கருத்தை பாராட்டி இதற்கு ஆதரவு அளித்தார்கள். அதற்காக நான் அங்கத்தினர்கள் அனைவருக்கும் என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Animal Preservation Bill, 1958 (L.C. Bill No. 2 of 1958) as passed by the Council be passed."

The motion was put and carried and the Bill was passed.

### (3) THE MADRAS SALES OF MOTOR SPIRIT TAXATION (SECOND AMENDMENT) BILL, 1958 (L.A. BILL No. 15 OF 1958).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958 (L.A. Bill No. 15 of 1958) be taken into consideration." [a]

கனம் சபாநாயகர் அவர்களே, இது ஒரு சிறிய திருத்தம். சில நாட்களுக்கு முன்னால் இந்த சபையில் இதை நிறைவேற்றுகின்றபொழுது அதனுடைய இரண்டாவது ஷரத்தில் இம்போர்ட்டர் என்றால் இந்தியாவில் இறக்குமதி செய்கின்றவர்கள் என்று பொருள்பட போட்டிருந்தது: அவ்விதம் சொல்லும்பொழுது எர்ணாகுளம் போன்ற இடங்களிலிருந்து இறக்குமதி செய்து கோயம்புத்தூர் போன்ற இடங்களுக்கு கொண்டுவந்தால் நமக்கு கிடைக்கவேண்டிய விற்பனை வரி வராது. இவ்வாறு 15 இடங்களில் வெளியில் இறக்குமதி செய்து நமது ராஜ்யத்தில் விற்பனை செய்யப்படுகின்றது என்று நமக்கு தகவல் கிடைத்ததினால் அதைத் தடுப்பதற்காக இந்த திருத்ததை உடன்டியாக கொண்டுவரப்பட்டிருக்கிறது: அதாவது இம்போர்ட்டர் என்று சொல்லும்பொழுது வெளி நாட்டிலிருந்து கொண்டு வந்தாலும், இந்தியாவுக்கு உள்ளேயிருந்து, அதாவது சென்னை ராஜ்யத்திற்கு வெளியே யுள்ள இடங்களிலிருந்துகொண்டு வந்தாலும் அவ்விதம் கொண்டு வருவதை இந்தியாவில் இம்போர்ட் செய்வது என்று பொருள்படும் வகையில் திருத்தம் அமைந்திருக்கிறது. இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்த சட்டம் இப்போது அமுலுக்கு வந்துவிட்டது. பல இடங்களில் வரி வசூல் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த வரி நியாயமாக சர்க்காருக்கு கிடைக்கவேண்டியது. ஆகவே இவ்விதம் பிரிக்கப்பட்ட பணத்தை சர்க்காருக்கு கட்டவேண்டும் என்றும் கேட்டுக் கொள்வது இன்னொரு திருத்தம். இவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958 (L.A. Bill No. 15 of 1958) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958 (L.A. Bill No. 15 of 1958) be passed."

MR. SPEAKER : The question is—

" That the Madras Sales of Motor Spirit Taxation (Second Amendment) Bill, 1958 (L.A. Bill No. 15 of 1958) be passed."

**The motion was put and carried and the Bill was passed.**

[a] **Published in the *Fort St. George Gazette*, dated 3rd April 1958.**





### (4) THE MADRAS CATERING ESTABLISHMENTS BILL, 1957 (L.A. BILL NO. 18 OF 1957)

3-50 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

**"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957) as amended by the Select Committee be taken into consideration."** [a]

கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர்களுக்குச் சட்டம் கொண்டுவரவேண்டுமென்ற அடிப்படையிலே ஒரு மசோதா தயாரிக்கப்பட்டு இந்த சபை முன்னால் சென்ற வருஷத்திலேயே வைக்கப்பட்டது. அப்பொழுது பல அங்கத்தினர்கள் இதிலே சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று பல நல்ல யோசனைகளைக் கூறினார்கள். அதை ஒட்டி நான் இந்த மசோதாவை திருத்தக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று பிரேரேபித்ததன்படி, அதற்கு அனுப்பி, அந்தக் கமிட்டியின் பல்வேறு ஆலோசனைகளைக் கேட்டு, இந்த மசோதாவை இப்பொழுது திரும்ப இந்த சபை முன்னர் கொண்டுவந்திருக்கிறேன். திருத்தக் கமிட்டியில் சாட்சியம் கூறுகிற முறையில், பல ஹோட்டல் முதலாளிகளும், பல ஹோட்டல் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் வந்து அபிப்பிராயங்களைக் கூறினார்கள். அவற்றை யெல்லாம் கேட்டு, நல்ல முறையில் இப்பொழுது இருக்கக் கூடிய நிலைமைக்கு உகந்தவாறு, தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் அதிகமான கஷ்டங்களையும், தொந்தரவுகளையும் கொடுக்காத முறையிலே இந்த மசோதா சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் முக்கியமான அம்சம் என்னவென்று சொன்னால், இந்த மசோதா ஏகமனதாக திருத்தக் கமிட்டியில் நிறைவேற்றப்பட்டு இந்த சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் திருத்த கமிட்டியால் செய்யப்பட்ட திருத்தங்களை மட்டும் நான் இப்பொழுது எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக முன்னால் கொண்டுவந்த மசோதாவிலே இந்த சட்டம் நகரசபைகளுக்கும் சென்னை நகருக்கும் பொருந்தும் என்று சொல்லியிருந்தோம். திருத்தக் கழிட்டியிலே இதைப் பரிசீலனை செய்து, சர்க்கார் விரும்பினால் இதை மேஜர் பஞ்சாயத்து இடங்களுக்குக் கூட விஸ்தரிக்க முடியுமென்ற திருத்தத்தை செய்யவேண்டுமென்று அபிப்பிராயம் சொல்லப்பட்டது. அதன்படி திருத்தப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக ஏதாவது நாடகக் கொட்டகைகளில் ஹோட்டல்கள் வைத்திருந்தால், அது ஹோட்டல் சட்டப்படி உள் வராது என்று கண்டிருந்தது. ஏன் நாடகக் கொட்டகைகளில் உள்ள ஹோட்டல்களுக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று எல்லோரும் தெரிவித்தபடியால், அதையும் எடுத்துவிட்டு, இப்பொழுது நாடகக் கொட்டகைகளிலும், சினிமாக் கொட்டகைகளிலும் ஹோட்டல்கள் வைத்திருந்தால், அவையெல்லாம் சட்டத்தின் கீழ் வருமென்று திருத்தப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, ஹோட்டல் வைத்திருப்பவர்கள் எல்லோரும் தங்கள் ஸ்தாபனத்தை ரெஜிஸ்தர் செய்துகொள்ள வேண்டும். அதோடு அல்லாமல் வருஷா வருஷம் அந்த ரெஜிஸ்டிரேஷனை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்றும் திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது.

தொழிலாளர்கள் வேலை செய்கின்ற நேரத்தை "ஸ்பிரெட் ஓவர்" 14 மணி நேரமாக வைத்திருந்தது. அந்தமாதிரி வைத்திருந்தால், தொழிலாளர்களுக்குப் பாதகமான முறையில் இரண்டு, இரண்டு மணி நேரமாக வேலை வாங்கி அவர்களை கஷ்டத்துக்குள்ளாக்க முடியுமென்று யோசனை கூறியதனால், அதைத் தவிர்க்கும் பொருட்டு, 14 மணி நேரம் வேலை செய்கிற பொழுது இடைவேளை இரண்டு மணிக்கு மேல் இருக்கக்கூடாது என்று மாற்றப்பட்டிருக்கிறது. இதன்படி மூன்று ஷிப்டுகள் தான் ஒரு நாளைக்கு இருக்க முடியும். அதற்கு மேல் இருக்க முடியாது.

[a] **Published in the *Fort St. George Gazette*, dated 25th October 1957.**

மேலும் ஹோட்டல் தொழிலாளிகளுக்கு பண்டிகை விடுமுறைகள் எல்லாம் அனுமதிக்கப்படவில்லை. ஆகையால் அவர்களுக்கு ஒரு வருஷத்தில் சம்பளத்துடன் 7 விடுமுறை நாட்கள் அளிக்கவேண்டுமென்று சட்டத்தில் கண்டிருக்கிறோம். முக்கியமாக, சுதந்திர தினமும், குடியரசு தினமும் நிச்சயமாக விடுமுறையாக இருக்க வேண்டும். அதற்கு மேல் ஐந்து பண்டிகை நாட்களுக்கு லீவு கொடுக்கவேண்டுமென்று சட்டத்தில் கண்டிருக்கிறது. அவ்வாறு விடப்படும் விடுமுறை நாட்களிலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு, அவர்கள் விருப்பப்படி, வேண்டுமானால் இரட்டிப்புச் சம்பளமும், அப்படி இல்லாவிட்டால் ஒரு நாள் சம்பளமும், ஒரு நாள் அதற்காக "**substitute holiday**"யும் கொடுப்பதற்கு இந்த சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.. வேலையை இழப்பவர்கள் அப்பீல் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அவ்வாறு அப்பீல் செய்து அதில் வெற்றி அடைவார்களானால், அந்தத் தீர்ப்பை சாதாரண நீதிமன்றங்களிலே தடுத்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று கண்டிருக்கிறோம். இதனால் ரிட் ஜூரிஸ்டிக்ஷன் எடுபடவில்லை. ரிட்கள் போடக்கூடிய அதிகாரம் யாருக்கும் இருக்கிறது. தொழிலாளர்களுக்கும் இருக்கிறது. முதலாளிகளுக்கும் இருக்கிறது. ஆனால் கோர்ட்டுகளிலே இதைப் பற்றி தாவாக்களைப் போட்டு நீண்டகாலம் போவதற்கு முடியாத முறையிலே சட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. வேலைக்குத் திருப்பி எடுத்துக்கொள்ளாவிட்டால், அந்த தவறைச் செய்கிற முதலாளிகள் எந்த நாள் வரையிலும் திரும்ப வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லையோ அந்த நாட்களுக்கு அவர்கள் "பைன்" கட்டவேண்டுமென்றும், அவ்வாறு கட்டுகிற தொகையில் ஒரு பகுதியையோ அல்லது முழுவதையுமோ உரிமையுள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்றும் சட்டம் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளிகள் வேலை செய்கின்ற இடங்களை சுகாதார வசதியுள்ளதாகவும், சுத்தமாகவும் வைத்துக்கொள்ளவேண்டுமென்பதற்காக விதிகள் போடுவதற்கு இந்தச் சட்டம் இடமளிக்கிறது. சில தொழிலாளர்கள் இந்தச் சட்டத்தில் கண்டுள்ளதைவிட அதிகமான சலுகைகளைப் பெற்றுக்கொண்டிருந்தால் அது இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படமாட்டாது என்றும் கண்டிருக்கிறது. மேலும் இந்தச் சட்டம் கன்னியாகுமரி ஜில்லாவிற்கும் விஸ்தரிக்கப்படுமென்று கண்டிருக்கிறது.

இந்த விதமான மாறுதல்கள் எல்லாம் பழைய மசோதாவில் இருந்ததைவிட முற்போக்கான முறையில் அமைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் திருத்தக் கமிட்டி நன்றாக ஆராய்ந்து பரிசீலனை செய்து ஏகோபித்த முடிவுக்கு வந்திருப்பதனால் இந்த மசோதாவை சட்டசபை அங்கீகாரம் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**MR. SPEAKER : Motion moved—**

**"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957) as amended by the Select Committee be taken into consideration."**

**SRI T. S. RAMASAMY PILLAI :** கனம் சபாநாயகர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளர்களுடைய முன்னேற்றத்திற்காக கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவை எதிர்க்கட்சியிலுள்ள நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். ஆதி மசோதாவில் ஹோட்டல் தொழிலாளிகளுக்கு நடைமுறையில் பலவித குறைபாடுகள் இருந்தன. அமல் நடத்துவதிலும் பலவித குறைபாடுகள் இருந்தன. முதலாளிகள் சட்டத்திற்கு புறம்பாக நடந்தபோதிலும், தொழிலாளர்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற ஷரத்துகளும் இருந்தன. இவைகளையெல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து, தொழில் துறையில் நல்ல அனுபவம் வாய்ந்த அமைச்சர் அவர்கள், எல்லாக் கட்சியிலுள்ள அங்கத்தினர்களையும் கலந்து கொண்டு இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்



முதலாளிகள் தரப்பிலும், தொழிலாளர்கள் தரப்பிலும் கொடுக்கப்பட்ட சாட்சியத்தைக் கேட்டு, இத்தகைய மசோதாவைக் கொண்டுவந்துள்ளார்கள்.

இன்னும் முன்னேற்றம் செய்ய முடியாதா என்று கேட்டால், நிச்சயமாகச் செய்ய முடியுமென்று தாம் சொல்லுவேன். அதிலும் குறிப்பாக ஒரு விஷயத்தை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். அநீதியாக வெளியேற்றப்படும் தொழிலாளர்களுக்கு, அவர்களைத் திரும்ப எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னபிறகு, அவ்வாறு திருப்பி எடுத்துக் கொள்ளாவிட்டால், அவ்வாறு மறுத்த நாட்களுக்கு அன்றாடம் சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற ஷரத்தை நான் மிகவும் வரவேற்கிறேன். நடைமுறையில் பார்த்து இன்னும் அதிகச் சலுகைகளை வழங்கக்கூடுமென்றாலும் இப்பொழுதுள்ள நிலையில் இந்த மசோதாவை வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER :** சபாநாயகர் அவர்களே, ஓட்டல் தொழி- 4 p.m.
லாளருக்கான சட்டத்தை இன்று நாம் சட்டமாக்கப் போகிறோம். இந்த சட்டத்தை கொண்டு வந்த அமைச்சர் அவர்களுக்கு ஓட்டல் தொழிலாளர் சார்பில் என் நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலாளிகள் செய்யக்கூடிய எல்லா கஷ்டங்களையும் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு இன்றைய தினத்திலிருந்து விடுதலை கிடைத்ததைக் குறித்து மிகவும் சந்தோஷம். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு இன்னும் சௌகரியமாக பல சட்டங்களை அடிக்கடி கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

"இன்றைக்கு பல பலகாரங்கள் கெட்டுவிட்டன; நாளைக்கு புதிதாக போட வேண்டுமானால், நஷ்டம் அதிகம் வருகிறது" என்று ஓட்டல் முதலாளிகள் சொல்லலாம். தொழிலாளிகளுக்கு நல்ல பாதுகாப்பு கொடுத்தால், அவர்களை முதலாளிகள் நம்புவதாக இருந்தால், அவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வேலை செய்யச் சொன்னால், முதலாளிகளுக்கு லாபம் சம்பாதித்து கொடுப்பார்களேயல்லாமல் நஷ்டம் வரும்படி செய்ய மாட்டார்கள் என்பது உறுதி.

தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்ப்பு கொடுத்த பிறகும் அவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை என்றால், வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கும் நாட்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டும் என்று இருப்பதை நான் சந்தோஷத்தோடு வரவேற்கிறேன். லேபர் ஆபீசர்களுக்கும், லேபர் கமிஷனருக்கும் ஒரு உத்தரவு பிறப்பித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள சொல்ல வேண்டும். ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு 1 மாதம், 2 மாதம் என்று தள்ளிப்போட்டால், தொழிலாளி பண வசதி இல்லாத காரணத்தினால் வேறு மாகாணத்திற்கே போய்விட நேரிடும். அவனைக் கண்டுபிடிப்பதே மிகவும் கஷ்டம். ஆகையால் உடனே ஆட்களை எடுக்கும்படி செய்ய வேண்டும். ஒரு மாதத்திற்குள் எடுக்கவில்லை என்றால் அவர்களுக்கு தகுந்த தண்டனை கொடுக்க வேண்டும். இந்த விஷயத்தில் லேபர் ஆபீசர்களுக்கும், லேபர் கமிஷனருக்கும் ஒரு திட்ட வட்டமான சர்குலரை போடவேண்டும். சில லேபர் ஆபீசர்கள், சட்டத்தை சரியாக புரிந்துகொள்ளாமல் ஏமாந்து விடுகிறார்கள். ஒரு மாதத்திற்குள் ஆட்களை எடுக்க வில்லை என்றால் லேபர் ஆபீசர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு உரிமை இருக்கிறது. அந்த விதமான ஒரு ரிபோர்ட்டை லேபர் கமிஷனர் சர்க்காருக்கு அனுப்ப வேண்டும் என்று ஒரு உத்திரவு பிறப்பிக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன்.

**SRI N. K. PALANISAMI :** சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். பொறுக்கு கமிட்டியில் கனம் மந்திரி அவர்கள் பல திருத்தங்களை ஏற்று சரியான முறையில் மசோதாவை திருத்தியதற்காக என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் அதில் சில குறைகள் இருக்கின்றன. அவைகளை

திருத்தாவிட்டால் இந்த சட்டம் ஓட்டல் தொழிலாளர்களுக்கு பூரண பலன் அளிக்காது. இன்றையத் தினம் ஓட்டல்களில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களின் நிலைமை எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். குடியிருப்பதற்கு கூட வசதி இல்லாமல் ஓட்டலையே நம்பி இருக்கும் தொழிலாளர்களுக்கு, நிரந்தரமான வேலை இல்லை யென்றால், இந்த சட்டத்தின் மூலம் அனுகூலம் கிடைக்க வில்லை என்றால், அவர்கள் நிலை மிகவும் பரிதாபகரமாகத் தான் இருக்கும். "கீதா கபே"யில் 5 பிராஞ்சுகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிராஞ்சிலும் 100 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த 100 பேரில் 5 தொழிலாளர்கள் கூட நிரந்தரமானவர்கள் இல்லை. சிலர் தினம் கூலி பெற்றுக் கொள்கிறார்கள். சிலர் தினம் 12 அணா கூலி என்று கணக்கிட்டு ஒரு வாரத்துக்கு உண்டான தொகையை வாரா வாரம் பெற்றுக் கொள்கிறார்கள். ஆறு மாதம் தொடர்ந்து வேலை செய்தால்தானே அவர்களுக்கு பெர்மனெண்ட் செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தினம் கூலி வேலை செய்யக்கூடியவர்களை அப்படி செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

"கீதா கபே"யில் தொழிலாளர்களுக்கு 8 நாட்கள் லீவு கொடுத்து அதற்குப் பிறகு அவர்கள் வந்து சேரும்போது புதிதாக எடுத்துக் கொள்வதுபோல் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். இப்படிச் செய்வதால் 6 மாதம் தொடர்ந்து வேலை செய்யவில்லை என்று சொல்லி பெர்மனண்ட் செய்யாமல் இருக்கிறார்கள். செக்ஷன் 22-க்கு ஒரு திருத்தம் செய்ய வேண்டும். மோட்டார் சட்டத்தைப் போல் ஒரு தொழிலாளி வேலைக்கு வந்து சேர்ந்தவுடன் அவருக்கு என்ன வேலை, எவ்வளவு சம்பளம் என்பதையெல்லாம் "அப்பாயிண்டுமெண்டு ஆர்டரில்" திட்டவட்டமாக சொல்ல வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் இந்த தொழிலாளர்களுக்கு ஒரு விதமான பிரயோசனமும் இல்லை. எல்லா தொழிலாளர்களும் "தாற்காலிகமாகவே" வேலை செய்ய வேண்டிஇருக்கிறது. அவர்களுக்கு "பர்மனெண்ட்" ஆவது கிடையாது.

விசேஷ காலங்களில் அதிகப்படியான ஆட்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளும் பிரச்னை வரும். முதலில் சர்க்காருடைய "பர்மிஷனை" வாங்கிக் கொண்டு, வேலையிலிருந்து நீக்கிவிடுவது என்பது நல்ல முறையாக இருக்கும்.

'ஆறு மாதம் என்று இருப்பதை 3 மாதம் என்று திருத்தி அமைக்க வேண்டும். "அப்பாயின்ட்மெண்ட்" ஆர்டரில் இதைப்பற்றி குறிப்பிட வேண்டும். ஓட்டல் முதலாளிகள் ஓட்டலை மூடிவிட்ட 10 நாட்களுக்குப் பிறகு தான் சர்க்கார் இன்ஸ்பெக்டருக்கு தகவல் தெரிகிறது. ஆகையால் சர்க்கார் இன்ஸ்பெக்டர் மூடுவதற்கு முன்பு அதை பரிசீலனை செய்ய முடியாமல் இருக்கிறது. ஆரிய பவனில். . .

MR. SPEAKER : Why should the hon. Member mention individual names? While giving examples, he may be passing adverse remarks against them and they may not be able to defend themselves and the Minister also may not be willing to defend them.

THE HON. SRI R. VENKATARAMAN : We may not even know.

MR. SPEAKER : I was about to object when the hon. Member was referring to Geeta Cafe. I definitely object to the hon. Member mentioning individual names. He may say in a general way that some people are doing this and that. I will allow it.

SRI N. K. PALANISAMI : சில ஓட்டல்களை அண்ணன் நடத்திக் கொண்டு இருந்து, அதை தம்பி எடுத்து நடத்தும்போது 100, 150 ஆட்களுக்கு சம்பளம், இராஜுவட்டி கொடுக்கிறார்களா என்று பார்ப்பது இல்லை.



தம்பியின் கைக்கு மாறும்போது வேலை ஆட்களை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு உள்ள பாக்கியை சரியாக கொடுப்பதில்லை. அவர்களை மறுபடியும் வேலைக்கு எடுப்பது கிடையாது. இம்மாதிரி முறை இருக்கக்கூடாது. ஓட்டல் மூடுவதற்கு ஒரு மாதம் முன்னதாகவே தகுந்த அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். ஓட்டல் மூட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதா, வேலை செய்கின்றவர்களுக்கு "ரிட்ரென்ச்மெண்ட் காம்பன்ஸேஷன்", "இராஜுவெட்டி" முதலியவைகள் கொடுக்கப்பட்டனவா என்று பார்க்கும் வகையில் சட்டத்தை திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

லீவு வசதிகளைப் பொருத்த மட்டில் அவர்களுக்கு 22½ நாட்கள்தான் கிடைக்கிறது. "ஷாப் அஸிஸ்டெண்ட் ஆக்ட்" படி மொத்தம், தொழிலாளர்களுக்கு 36 நாட்கள் லீவு கிடைக்கின்றது. ஆகவே இந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு அதை விட குறைவாகத்தான் லீவு கிடைக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பொழுது வாரத்திற்கு ஒரு முறை ஓட்டல்களை மூடுகிறவர்கள் இந்த சட்டம் இயற்றின உடனே அப்படி மூட மாட்டார்கள். அவர்கள், ஓட்டலையே மூடாமல் வைத்திருப்பார்கள். "டர்ன் ஓவர்" லீவு என்பதன் மூலமாக 4 பேர் செய்யக்கூடிய வேலையை 3 பேர் செய்யவேண்டி வரும். ஆகவே அவர்களுக்கு "ஒர்க் லோட்" அதிகமாகும். "டர்ன் ஓவர்" லீவு என்பது நடைமுறையில் தொழிலாளர்களுக்கு லீவு இல்லாமல் போகும்படி ஏற்படும் ஆகையால் வாரத்திற்கு ஒரு முறை கட்டாயமாக ஓட்டல்களை மூடும் வகையில் சட்டத்தை திருத்தவேண்டும். இன்னும் அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயிக்கவேண்டும். திருச்சியில் பேசும்போது கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள் ஹோட்டல் தொழிலாளிகளுக்கு குறைந்த பட்ச சம்பளம் கொண்டுவரப்போவதாக நரசிம்மலு அவார்டுபடி சில ஹோட்டல்களில் ரூ. 2–2–0 கொடுக்கிறார்கள். ஆனால் அந்த மாதிரி எல்லா ஹோட்டல் தொழிலாளிகளும் அடைவதற்கு சர்க்கார் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் தொழிலாளர்களுக்கு பிராவிடன்ட் பண்டு வசதி, ஊருக்கு போய் வர வேண்டிய பண வசதி இவைகளெல்லாம் கிடைக்கும்படி சட்டத் 4-10 p.m.
தை திருத்தி அமைக்கவேண்டும். ஹோட்டல் தொழிலாளிகளுக்கு ஹெல்த் இன்ஸூரன்ஸ் சட்டத்தை விஸ்தரிக்கவேண்டும். அவர்களுக்கு விளையாட்டு வசதி இருக்க அறை வசதி இவைகளெல்லாம் செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : சார், இந்த ஹோட்டல் தொழிலாளிகளுக்கு வேண்டிய மசோதா 10 வருஷங்களுக்கு பிறகாவது இப்பொழுது வருவதைப்பற்றி பாராட்டுவது மட்டும் இன்றி இந்த சட்டத்தை கொண்டுவருவதற்கு தூண்டுகோலாக இருந்த ஹோட்டல் தொழிலாளிகளையும் பாராட்டியாகவேண்டும். ஏனெனில் அவர்களுடைய எதிர்ப்பு கிளர்ச்சி இல்லாமல் இருந்திருந்தால் இந்த பத்து வருஷத்திற்கு பிறகும் கூட இந்த சட்டத்தை துரிதமாக கொண்டுவந்து இருக்கமுடியாது. தொழிலாளர் தலைவரான கனம் வெங்கட்ராமன் அவர்களும் இது விஷயத்தில் கவனம் செலுத்தி கொண்டுவந்திருப்பதற்கு நமது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

இதில் பல குறைபாடுகளை அங்கத்தினர்கள் எடுத்து காட்டினார்கள். அமைச்சர் அவர்கள் பதினொருமணி நேரம் ஸ்பொட்டோவர் டைம் என்றும் அதில் 2 முறை இடை வேளை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனால் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் தகராறுகளும் குழப்பங்களும் தான் ஏற்படும் என்பது என் அபிப்பிராயம். ஒரு ஹோட்டல் காலை ஐந்து மணிக்கு திறக்கவேண்டுமென்றால் அதற்கு முன்பாகவே வேலை துவங்க வேண்டும். ஐந்து மணி முதல் பத்து மணி வரை டிபன் ஸெக்ஷன் வேலை செய்யவேண்டி இருக்கும். இதற்கு பிறகு இடைவேளை ஒரு மணியோ இரண்டு

[Sri V. K. Kothandaraman] [5th April 1958

மணியோ, பிறகு சாப்பாடு போடுவதற்கு பரிமாறுவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். இந்த இரண்டு முறை இடை வேளையை அவர்களால் அனுபவிக்க முடியாது. அவர்களுக்கு தனியாக வீடு கிடையாது. ஹோட்டலிலேயே தான் எங்கேயோ பாத்திரங்களோடு காய்கறிக் கிடக்கும் நாத்தம்பிடிச்ச இடத்திலோ படுத்திருப்பார்கள். அப்படிப்பட்ட நிலையிலே முதலாளி தொழிலாளியை வேலைக்கழைத்தால் அவனால் மறுக்க முடியாது. ஆகவே தயவு செய்து இந்த இடைவேளையை ஒரு வேளையாக மாற்றி தொழிலாளிகளுக்கு உதவி செய்யவேண்டு மென்று விரும்புகிறேன்.

வாரம் ஒரு நாள் லீவு விடவேண்டும் என்று இருக்கிறது. எதற்காக? ஹோட்டல் தொழிலாளிகளின் சுகாதாரத்திற்காக மட்டும் அல்ல. அவர்களுக்கு அது அவசியம்தான். எப்பொழுதும் அடுப்பங்கறையில் உட்கார்ந்துகொண்டு தண்ணீரிலே கையையுங் காலையும் எப்பொழுதும் விட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு இந்த ஓய்வு மிக முக்கியமானது; ஆனால் அது அவர்களுக்கு ஓய்வு மட்டும் அல்ல. அந்த ஹோட்டலுக்கு ஒரு நாள் லீவு கொடுத்து அந்த இடங்கள் வெய்யிலிலே காயவும் பாத்திரங்கள் கட்டிடம் இவைகள் சுகாதாரமாக இருக்க வசதியாகும். ஹோட்டல் முதலாளிகளுக்கும் இந்த ஓய்வு அவசியமே. அவர்கள் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் அல்லது வேறு அலுவல்களை கவனிக்கலாம். ஆகவே தொழிலாளிகளுக்கும் சரி முதலாளிகளுக்கும் சரி சுகாதாரம் பாதிக்கப்படுவதன் மூலம் இந்த ஒரு நாள் கண்டிப்பாக லீவு கொடுத்து மூடுவது என்பது தான் நன்மையாக இருக்க முடியும்.

ஹோட்டல் தொழிலாளியின் நன்மைக்காக ரிஜிஸ்டர்கள் வைக்கவேண்டுமென்று இருக்கிறது. சில தொழிற்சாலைகளில் டோக்கன் அல்லது டிக்கட்டு வழங்கப்படுகிறது. அதிலிருந்து அவர்கள் வேலைக்கு போனார்களா பிரசண்டா, ஆபிசன்டா, லீவா என்பதையெல்லாம் தெரிந்துக்கொள்ளலாம். அதைப்பார்த்து ரெஜிஸ்டர் வைத்துக்கொள்ளவேண்டும்.

மற்ற சில குறைபாடுகளைப்பற்றி கிளாசுகளுக்கு திருத்தங்களில் கொடுத்திருக்கிறேன். அவைகள் முக்கியமான திருத்தங்கள் அவைகளை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **Sri A. GOVINDASAMY**: சட்ட மன்றத்தலைவர் அவர்களே, இந்த ஓட்டல் தொழிலாளர் நன்மை மசோதாவை கொண்டுவந்திருக்கும் அமைச்சர் அவர்களை எதிர் தரப்பில் இருக்கும் எல்லா கட்சிகளும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்களுடைய தலைவராக நீண்ட காலம் இருந்து அவர்களுடைய குறைகளை சிறுகச் சிறுக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் நேரத்தில் நாம் அவர்களை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். ஹோட்டல் தொழிலாளிகள் விஷயத்தில் பாதுகாப்பில்லாது இருந்த நிலைமையை நீக்கி பாதுகாப்பு அளிக்கும் முறையிலே அமைந்திருக்கும் இந்த சட்டத்தை பார்த்து ஹோட்டல் வேலை செய்யும் தொழிலாளிகள் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனால் முதலாளிகளுக்கு இந்த சட்டம் வருவது சங்கடமாக இருக்கும். ஒரு முதலாளி கொடுத்திருக்கும் மகஜரில்—நான் அதைப்படித்தேன்—தொழிலாளிகளை டிஸ்மிஸ் செய்வதற்கு அதிகாரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார். உள்ளபடியே இது தொழிலாளிகளிடமுள்ள நம்பிக்கை இன்மையைபற்றி தெளிவுப்படுத்தியது. ஹோட்டல் வளர்ச்சியடைய அவர்கள் போட்ட முதலுக்கு லாபம் அடைய முதலாளி தொழிலாளிகளிடையே நல்ல உறவு வேண்டும். இந்த மனப்பான்மை வருந்தத்தக்கது. இத்தகைய முறையில் முதலாளிகள் இருக்கிறார்கள். தொழில் துறையைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள். மான்யத்தின் பேரில் பேசும்போது கூறினேன். அந்தந்த பிரச்சினையிலே அனுபவம் அடைந்தவர்களுக்கே அந்தந்த போர்ட்டு போலியா கொடுக்கவேண்டும் என்று சொன்னேன். அன்று அமைச்சர் அவர்கள் இங்கில்லை. இப்பொழுது சொல்லுகிறேன். தொழிலாளிகள் பிரதிநிதியான அமைச்சர் அவர்களுக்கு அவர்கள் குறைகள் உள்ளபடியே நன்கு தெரியும். தொழிலாளிகளுக்கு



5th April 1958] [Sri A. Govindasamy]

வேண்டிய முழுபரிகாரமும் தேடிக்கொடுக்க முடியாத நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது அவர்கள் இருக்கும் இடந்தான் காரணம். அதில் சந்தேகம் இல்லை.

இந்த பில்லிலே சாமான்கள் உடைந்தால் பொறுப்பு கட்டப்பட்டிருக்கிறது. தற்செயலாக கிளாஸ்டம்ளர்போன்ற சாமான்கள் ஒடைக்கப்பட்டால் அதற்கு தொழிலாளிகளிடம் பணம் வாங்கக்கூடாது.

உட்லண்ஸ், ஸ்பென்ஸர் போன்ற பெரிய ஹோட்டல்களிலே வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு உடைகள் கொடுக்கப்படுகின்றன. அங்கே சாப்பிடும்போது பெருமையும் சந்தோஷமும் ஏற்படுகிறது. இங்கே நம் ஹோட்டல்களிலே சென்னையிலோ மற்ற நகரங்களிலோ நிலைமை மிக மோசமாக இருக்கிறது. தொழிலாளிகள் ரொம்ப அழுக்கு படிந்த வியர்வை நாற்றம் வீசும் உடுப்புகளை அணிந்து கொண்டிருக்கிறார்கள். இது ரொம்ப அருவருப்பாக இருக்கிறது. ஆகவே இந்த ஹோட்டல் முதலாளிகளை உடுப்புக்கள் தைத்துக்கொடுக்க கட்டளை இடவேண்டும்.

4–20 p.m.
நல்ல முறையில் அவர்கள் படுத்துக்கொள்வதற்கு வேண்டிய வசதி செய்துகொடுக்கவேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு வசதி அந்த ஓட்டலிலேயே இருக்கவேண்டும். கனம் கோதண்டராமன் சொல்லியதுபோல் உருளைக்கிழங்கும், வெங்காயமும் அழுகிக்கிடக்கும் இடங்களில் அவர்களும் அழுகிக் கிடக்கும்படியான நிலை இருக்கக்கூடாது. அவர்களுக்கு குடியிருப்பு வசதி செய்துகொடுக்கவேண்டும்.

இந்தச் சட்டத்தில் எட்டு மணி நேர வேலை செய்யவேண்டும் என்று சட்டத்தை இயற்றுகிறார்கள். எட்டு மணியானவுடன் முதலாளிகள் தொழிலாளர்களை ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லப்போவது இல்லை முதலாளிகள் சொல்லக்கூடிய நிலைமை இருக்காது. உண்மையிலேயே தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கக்கூடிய நிலைமையில் சட்டம் இருக்கவேண்டும். நான்கு மணி நேரம் ஆனவுடன் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் நான்கு மணியானவுடன் ஓய்வு எடுத்துக்கொள் என்று முதலாளி தொழிலாளர்களைப் பார்த்துச்சொல்லப்போவது இல்லை. நான்கு மணியானவுடன் தொழிலாளி தன்னுடைய வேலையை திடீரென்று விட்டு விட்டு போய் விடமுடியாது. தொழிலாளி ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் அதிகமாக வேலை செய்தால்தான் அவன் நீண்ட நாட்கள் வேலையில் இருக்கமுடியும். அப்படி இல்லாமல் தொழிலாளி திட்ட வட்டமாக நான்கு மணி நேரங்கள் ஆகிவிட்டன என்று சொன்னால் அவனை வேலையை விட்டு நீக்குவதற்கு சந்தர்பம் கொடுக்கிறது. அப்படிப்பட்ட ஒரு ஓட்டை இந்தச் சட்டத்தில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆறு மாதங்கள் ஆனால் தொழிலாளியை நிரந்தரமாக வைத்துக்கொள்வதாகக் கருதப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் அந்தத் தொழிலாளிக்கு ஒரு மாதம் இரண்டு மாதங்களானதும் அவனை வேலையைவிட்டு நீக்குவதற்கு உள்ள நிலைமை ஏற்படுகிறது. அந்த வேலைக்கு வந்து ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களானவுடன் அவன் அந்த வேலையில் உள்ள பழக்க வழக்கங்களைத் தெரிந்துகொண்ட பிறகு அவனை வேலையை விட்டு நீக்கக்கூடாது என்ற முறையில் இந்தச் சட்டத்தை அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நமது தொழில் அமைச்சர் அவர்களுக்கு எந்த விதங்களில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும் என்பது நன்றாகத் தெரியும். அந்த இடங்களில் எல்லாம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது பத்து நாள் அவகாசம் நோட்டீஸ் கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்த பட்சம் மூன்று மாதம் அல்லது ஒரு மாதம் நோட்டீஸாவது கொடுக்க வேண்டும் என்ற அளவில் திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன், திடீரென்று வேலையைவிட்டு நீக்கி விட்டால் தொழிலாளி எங்கே போய் பிழைப்பான் என்பதை சிந்திக்கவேண்டும்.

தொழிலாளர்களுக்கு முதலாளிகள் அடையும் லாபத்தில் பங்கு இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் முதலாளிகள் சரியானபடி முன்னேறுவதற்கு வசதியாக இருக்கும். தனக்கு லாபம் கிடைக்கிறது என்ற அடிப்படையில் தொழிலாளி உற்சாகத்துடனும் ஊக்கமாகவும் வேலை செய்ய முற்படுவான். தனக்கு லாபத்தில் பங்கு இருக்கிறது என்ற நிலையில் அவன் நன்றாக வேலை செய்ய முற்படுவான். திறமையாகவும் வேலை செய்ய முன் வருவான். தொழிலில் அவனுக்கு அக்கரையும் ஏற்படும். அந்த முறையிலும் திருத்தம் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். 240 நாட்கள் வேலை செய்தால் அடுத்த வருஷத்தில் இருபது நாட்களுக்கு ஒரு நாள் லீவு என்றும், வாலிபர்களாக இருந்தால் பதினைந்து நாட்களுக்கு ஒரு நாள் லீவு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷங்களில் தொடர்ந்தால் போல் லீவு எடுக்காவிட்டால் அதை அடுத்த வருஷ லீவுடன் சேர்த்துக்கொள்ளலாம் என்றும், முப்பது நாட்களை அப்படி சேர்த்துக்கொள்ளலாம் என்றும், வாலிபர்களாக இருந்தால் நாற்பது நாட்களை அப்படிச் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது அப்படி இல்லாமல் எவ்வளவு நாட்களுக்கு அவர்கள் லீவு எடுத்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறதோ அந்த அளவுக்கு லீவு எடுத்துக் கொள்ளலாம் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தவேண்டும். அதற்கு வேண்டிய வழிவகையையும் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்

மற்றும் முதலாளிகள் தொழிலாளிகளிடத்தில் அதிகப்படியான அக்கரை காட்டுவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். கால நிலையை அனுசரித்து தொழிலாளர்களுக்கு முதலாளிகள் சில வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. குறிப்பாகச் சொல்லுகிறேன், வெய்யில் காலங்களில் ஓட்டலில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன. சித்திரை, வைகாசி மாதங்களில் தொழிலாளர்கள் அடுப்பங்கரையில் கஷ்டப்பட்டுக்கொண்டு வெந்துகொண்டு வேலை செய்யவேண்டியதாக இருக்கிறது. அந்த மாதங்களில் அவர்களுக்கு அதிகப்படியான சம்பளத்தை உயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட குறிப்பிட்ட சில மாதங்களுக்கு அதிகப்படியான சம்பளத்தைக் கொடுக்க முன் வரவேண்டும். அதேபோல் குளிர் காலங்களில் அவர்கள் காலை 5 மணிக்கு வரவேண்டியதாக இருக்கிறது. 5 மணிக்கு வந்து பச்சைத் தண்ணீரில் வேலைகளைச் செய்யவேண்டியதாக இருக்கிறது. அதனால் அவர்கள் குளிரினால் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே இந்தக் காலங்களில் அவர்களுக்கு அதிகப்படியான ஓய்வு கிடைக்கக்கூடிய அளவில் வழிவகை செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சாதாரணமாக முதலாளிகள் தொழிலாளர்களுக்கு மீதப்படுகிற பல காரங்களைக் கொடுத்து சாப்பிடச் சொல்லுகிறார்கள். சில சமயங்களில் ஊசிப்போன பதார்த்தங்களையும் கொடுத்து சாப்பிடச் சொல்லுகிறார்கள். இதனால் சில தொழிலாளர்கள் முதலாளிகளுக்குச் தெரியாமல் சாப்பிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையை தவிர்ப்பதற்கு அவர்களுக்கு வேண்டிய உணவு கொடுப்பதற்கும், அவர்களுடைய குடும்பத்தைச் காப்பாற்றுவதற்கு வேண்டிய உணவைக் கொடுக்கவும் முதலாளிகள் முன் வரவேண்டும். இந்த விதத்திலும் முதலாளிகள் தொழிலாளிகளுக்கு வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிப்பட்ட வசதியைச்செய்து கொடுத்தால் தொழிலாளர்கள் அன்புடன் நீண்ட காலம் அந்த முதலாளியினிடம் வேலை செய்வதற்கு முன் வருவான். இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பதுடன் அவர்களுக்கு குடியிருப்பு வசதியும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். மற்றும் பிராவிடெண்ட் வசதியும் செய்துகொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சட்டத்தின் அடிப்படையில் முதலாளிகள் அதிலும் பெரும் முதலாளிகள் லேபர் கோர்ட்டுக்குப் போனால் அங்குள்ள லேபர் கோர்ட் லேபர் இன்ஸ்பெக்டருடைய தகுதியும் அந்தஸ்த்தும் குறைவாக இருப்பதால் பெரிய ஓட்டல் முதலாளிகள் அவர்களை மதிப்பதாக இல்லை. அதனால்



அப்படிப்பட்ட இன்ஸ்பெக்டருடைய அந்தஸ்த்தை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் சாதாரணமாக 150 அல்லது 200 ரூபாய் சம்பளம் வாங்குவதால் உட்லாண்ட்ஸ் போன்ற பெரிய ஓட்டல் முதலாளிகள் இப்படிப்பட்டவர்களுக்கு பணியமாட்டேன் என்கிறார்கள். இவர்களுக்கு பயப்படுவதும் இல்லை. சாதாரணமாக இவர்கள் என்ன 150 அல்லது 200 ரூபாய் சம்பளக்காரர்கள் தானே என்று அவர்களை லட்சியம் செய்வதில்லை. அதனால் அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த நிலைமையிலும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதாலும் அடிக்கடி தொழிலாளர்கள் கோர்ட்டுகளுக்குப் போக வேண்டியதாக இருப்பதாலும் நல்ல முறையில் அடிக்கடி இந்தச் சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்தந்த சந்தர்ப்பங்களில் இந்தச் சட்டத்தை திருத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகிறதோ அந்தந்த சமயங்களில் இதைத் திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER:** கனம் பழநிசாமிக்கு நான் சொல்லியதை கனம் அங்கத்தினர் கேட்கவில்லை என்று தோன்றுகிறது. அப்படிக் கேட்டிருந்தாலும் அதை மறந்து விட்டார் என்றே நினைக்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து வரவேற்றுப் பேசிய கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நீண்ட காலமாக எந்தச் சட்டத்தின் கீழ் இவர்கள் அமுல் நடத்தபடுகிறார்கள் என்பது கூட தெரியாமல் ஹோட்டல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதனால் பல கஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கிறார்கள். இன்றைக்கு முதல் முதலாக தனியாக அவர்களுக்கான பிரத்யேகமான ஒரு சட்டத்தை கொண்டு வந்திருப்பது அவர்களுடைய வேலை நேரம், அவர்களுக்கு வேலை செய்கிற "கண்டிஷன்ஸ் அப் எம்ப்ளாய்மெண்ட்" இவற்றையெல்லாம் சரியான முறையில் பாதுகாப்பதற்குத்தான். இந்தச் சட்டத்தின் மூலமாக ஓட்டல் தொழிலாளர்களுடைய பிரச்னைகள் எல்லாவற்றையும் தீர்த்து விடலாம் என்று நான் நினைக்கவில்லை. ஓட்டல் தொழிலாளர்களுக்கு பொதுவாக பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில், அடிப்படையில் எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் இந்தச் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி பேசுகிறபோது நமது அங்கத்தினர்கள் சில முக்கியமான பிரச்னைகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். அதாவது அவர்களுக்குக் குறைந்த பட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டும், ப்ராவிடெண்ட் வசதி செய்து கொடுக்கப்படவேண்டும், இன்னும் எம்ப்ளாயிஸ் ஸ்டேட் இன்ஷூரென்ஸ் வசதிகள் முதலியவைகளை அவர்களுக்கு விஸ்தரிக்கவேண்டும், முதலாளிகளுடைய லாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்கு இருக்கவேண்டும் என்று பல அரிய யோசனைகளெல்லாம் சொல்லப்பட்டன. இவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக படிப்படியாக நாளடைவில் அவர்களுக்குக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன். இந்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கம் என்னவென்றால் அவர்களுடைய வேலை நேரத்தை ஒழுங்குப்படுத்துவதும், அவர்களுடைய வேலையில் இருக்கக்கூடிய பல சிக்கல்களை தவர்ப்பதற்கும் தான் இந்தச் சட்டத்தைக்கொண்டு வந்ததன் நோக்கம். ஆகவே இந்த அடிப்படையில் இந்தச் சட்டம் ஒரு பாக்டரி ஆக்ட் என்ற முறையில் பாக்டரியில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வேலை நேரம் ஓய்வு நேரம் இவைகளையெல்லாம் எப்படி நிர்ணயம் செய்யப்படுகிறதோ அதே முறையில் தான் இதிலும் நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்த அளவில் இது நல்ல முறையில் அமைந்திருக்கிறது என்பதை மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இதில் குறிப்பாக கனம் பழநிசாமி அவர்கள் சொன்னார். ஆறு மாதம் வேலையில் இருப்பவர்களுக்குத்தான் வேலையை விட்டு நீக்காமல் இருக்க பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால் சிலர் மூன்று மாதங்களிலேயே தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்குவதற்கு நடவடிக்கை

எடுத்துக்கொள்ளுவார்கள். அதனால் அப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் போய் விடுகிறது என்று சொன்னார். இந்தச் சட்டத்தில் மூன்று மாதம் என்று திருத்தி அமைத்து விட்டால் அவர்களுக்கு பாதுகாப்பு கிடைத்து விடுமா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படி மாற்றினால் அதை தவிர்க்க முடியுமா என்பதையும் பார்க்கவேண்டும். மூன்று மாதங்கள் என்றுரைத்தால் மூன்று நாட்களிலேயே வேலையை விட்டு நீக்குவதற்கு நடிவடிக்கை எடுத்துக்கொள்வார்கள். அதனால் எதைச் செய்வது என்பதுதான் புரியவில்லை. ஆறு மாதம் என்று வைத்தால் தொழிலாளர்கள் ஆறு மாத காலமாவது தொடர்ந்து வேலையில் இருக்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதன் மூலம் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பமும் அவகாசமும் அளிக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆறு மாதங்களுக்கு முன்னதாக அதாவது பழி வாங்கும் நோக்கத்துடன் தொழில் சங்கங்களில் ஈடுபட்டதற்காக அவர்கள் மீது குற்றம் சாட்டி அவர்களை வேலையிலிருந்து நீக்கினார்கள் என்று சொன்னால் "இண்டஸ்ட்ரியல் டிஸ்பூட்ஸ் ஆக்ட்" பிரகாரம் வேலையிலிருந்து நீக்கியதை சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டு வருவதற்கு முடியும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆறு மாதங்களுக்குள் வேலையை விட்டு நீக்கினால் சர்க்காரிடம் நேரடியாக அப்பீல் செய்துகொள்வதற்கு இதில் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ட்ரேட் யூனியன் அலுவல் காரணமாக விக்டிமைஸ் செய்திருக்கிறார்கள் என்று சர்க்காருக்குத் தகவல் கொடுத்தால் சர்க்காருடைய அபிப்பிராயத்தில் அப்படி செயயப்பட்டிருக்கிறார்கள் என்று தோன்றினால் ஆறு மாதங்களுக்குக் குறைவான சர்வீஸ் போட்ட தொழிலாளராக இருந்தாலும் கூட அவர்களுக்கு இண்டஸ்ட்ரியல் டிஸ்பூட்ஸ் ஆக்ட் பிரகாரம் பாதுகாப்பு அளிப்பதற்கு இன்றைக்கு இருக்கிற சட்டம் இடம் கொடுக்கிறது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

4-30 p.m. அடுத்தபடியாக வாரத்திற்கு ஒரு நாள் ஹோட்டல்களை மூடிவிடவேண்டுமென்று கனம் பழனிசுவாமி அவர்களும் இன்னும் பல அங்கத்தினர்களும் கூறினார்கள். இது செலக்ட் கமிட்டியிலேயே நன்றாக பரிசீலிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அப்பொழுதும் கனம் பழனிசாமி அவர்கள் ஹோட்டல்களை ஒரு நாள் மூடுவது நல்லது என்று சொன்னார்கள். நான் அதற்கு பதில் சொன்னேன். நம்முடைய நாட்டிலே இன்றைக்கு வேலையில்லா திண்டாட்டம் இருக்கிற நிலைமையிலே, வாரத்திற்கு ஒரு நாள் ஒரு தொழிலாளிக்கு லீவு கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்தால், எழு நாட்களும் ஹோட்டல் திறந்திருக்கவேண்டிய காரணத்தினால் ஒரு நாளைக்குக்கூட வேலை செய்வதற்காக இன்னொரு தொழிலாளியை அதிகமாக வேலைக்கு வைத்துத்தான் ஆகவேண்டும். அதனால் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் தன்மையில் இருக்கிறது. அத்துடன் பொதுமக்களில் சிலர் ஹோட்டலில் அவசியமாக சாப்பிடவேண்டிய நிலைமையில் இருப்பதால் வார விடுமுறை என்று ஹோட்டலை மூடிவிட்டால், அவர்கள் வேறு இடத்திற்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, பொது மக்களுக்கும் இது சௌகரியமாக இருக்கும், தொழிலாளிகளுக்கும் வேலை வாய்ப்பு அதிகமாக கிடைக்கும் என்று சொல்லி, வாரத்திற்கு ஒரு நாள் ஷிப்டு முறையிலே லீவ் கொடுப்பது நல்லது என்பதை எடுத்துக் காட்டினேன். அதை ஒட்டித்தான் செலக்ட் கமிட்டியில் எல்லோரும் ஏகோபித்து "யுனானிமஸ்ஸாக" இதை ஏற்றுக்கொண்டார்கள். இதில் ஏதாவது தவறுகள் ஏற்படுமானால், பின்னால் சட்டத்தை திருத்திக்கொள்ளலாம். இப்பொழுது இதைப்பற்றி அதிகமாக சர்ச்சை செய்ய தேவையில்லை. இதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிகமாக கிடைக்கும் என்ற நிலைமை ஏற்படுமானால் அது வரவேற்கத்தக்கது என்று சொல்லி, இந்தத் திருத்தத்தை நான் இப்பொழுது ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கனம் பழனிசுவாமி அவர்கள் 22 நாட்கள் லீவு தான் இந்த சட்டத்தில் கிடைக்கிறது. ஷாப் சட்டத்தில் 36 நாட்கள் லீவு கிடைக்கிறது என்று சொன்னார்கள். எட்டுச் சுரைக்காய் என்று சொன்னால், அது கனம் பழனிசுவாமி அவர்கள் சொன்னதுதான். ஹோட்டல் தொழிலாளிகளுக்கு ஷாப் சட்டத்தை அமுல் செய்யவேண்டுமென்று சொன்னால் இவர்கள் ஷாப் சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள், இவர்கள் அடுப்பண்டை



வேலை செய்பவர்கள், மாவு அறைப்பவர்கள், பாக்டரி சட்டத்தின் கீழ் வருவார்கள் என்று சொன்னார்கள். பாக்டரி சட்டத்தின் கீழ் இவர்களை கொண்டுவரலாம் என்று சொன்னால், பாக்டரி சட்டத்தின் கீழ் கொண்டுவர முடியாது, பவரில் ஒன்றும் வேலை செய்யவில்லை. மின்சார சக்தி உபயோகப்படுத்தப்படவில்லை, இவர்களின் எண்ணிக்கையும் குறைவு, ஆகவே இவர்களுக்கு பாக்டரி சட்டத்தையும் அமுல் நடத்த முடியாது என்று சொன்னார்கள். திருசங்கு சொர்க்கத்தில் எந்த சட்டத்தின் கீழும் இவர்கள் கொண்டுவரப்படாமல் இருந்தார்கள். ஆகவே அவர்களுக்கு எந்த சட்டத்தின் நன்மையும் கிடைக்கவில்லை. அப்படியிருக்கும்பொழுது ஏதோ ஏற்கனவே அவர்களுக்கு கிடைத்த 36 நாட்கள் லீவை நான் குறைத்து விட்டதாகச் சொல்லுவது சரி அல்ல. முன்னால் ஒரு நன்மையும் பெறாத நிலைமையிலே இந்த 22 நாட்கள் லீவு கொடுப்பது ஒரு பெரிய நன்மையாகத்தான் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, 14 மணி நேரம் "ஸப்ரேட் ஓவர்" இருப்பதில், இரண்டு முறை தான் இடைவேளை கொடுக்கவேண்டுமென்ற திருத்தம் செலக்ட் கமிட்டியிலே நிறைவேறியது. அதற்கு காரணம் என்னவென்றால், 14 மணி நேரத்திற்கு வேலை "ஸப்ரெட் ஓவர்" ஆக இருக்கலாம் என்று சொல்லுகிறபொழுது, ஒரு தொழிலாளி காலையில் 5 மணியிலிருந்து 7 மணி வரை, 9 மணியிலிருந்து 11 மணி வரை, 1 மணியிலிருந்து 3 மணி வரை, 5 மணியிலிருந்து 7 மணி வரை இவ்விதமாக 8 மணி நேரத்திற்கு பல முறைகள் தொடர்ந்து வேலை செய்யும்படியான நிலைமை ஏற்படக்கூடும் என்பதை தவிர்ப்பதற்காக இந்த விதமான மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. இதை சரியாக அமுல் நடத்தவில்லை என்று சொன்னால், அது சட்டத்தினுடைய தவறு அல்ல, அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிற சங்கங்களுடைய தவறு என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்த சட்டத்தையும் நடை முறையில் நல்ல முறையில் அமுல் நடத்தவேண்டுமென்று சொன்னால், சட்டத்தினால் மாத்திரம் அதை செய்துவிட முடியாது. அப்படிச் செய்யவேண்டுமென்று சொல்லும்பொழுது, தொழிற் சங்கங்களும் கண்காணிப்பாக இருந்து சட்டத்தை சரியாக அமுல் நடத்தாத இடங்களில் அதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டும். சர்க்கார் சட்டத்தின் மூலம் செய்துகொடுக்கிற பலவிதமான சலுகைகளை தொழிலாளிகள் பெறுவதற்கு தொழிற் சங்கங்கள் முன்அணியில் நின்று, அவர்களுக்கு எல்லாவிதமான காரியங்களையும் செய்து கொடுக்கவேண்டும். தொழிற் சங்க இயக்கம் பலமாக இல்லாவிட்டால், எவ்வளவு சட்டங்களை சர்க்கார் இயற்றினாலும், அது தொழிலாளிகளுக்கு நன்மை பயக்காது என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கோவிந்தசுவாமி அவர்கள் ஹோட்டல் தொழிலாளிகளுக்கு உடை கொடுக்க வேண்டும், இன்னும் அவர்கள் வசிப்பதற்கு நல்ல சுகாதாரமான இடம் அளிக்கவேண்டும், அவர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுக்கவேண்டுமென்றெல்லாம் சொன்னார்கள். இவைகளெல்லாம் நல்ல யோசனைகள்தான். ஆனால் இன்றைக்கு திடீரென்று எல்லாவற்றையும் செய்துவிட முடியாது என்று அவர்களே சொல்லிவிட்டார்கள். இந்த வசதிகளெல்லாம் காலக்கிரமத்தில் தொழிலாளர்களுக்கு கிடைக்கும்படியாக நாம் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பாடுபடுவோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்த மசோதாவை நல்ல முறையிலே வரவேற்று பேசிய கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் என் நன்றியை தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற என்னுடைய பிரேரேபணையை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) *after* the word ' section 21 ' *add* the words ' and section 22 '."

The amendment was put and carried.

Clause 3 as amended was put and carried.

Clause 4 was put and carried.

*Clause* 5.

MR. SPEAKER : The motion is—

' That clause 5 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN : Sir, I move my amendment, namely—

" *After* the words ' registration certificate if necessary ', *add* the following ' within a period not exceeding one month '."

SRI N. K. PALANISAMI : Sir, I second the amendment.

MR. SPEAKER : Clause 5 and the amendment are now before the House for discussion.

SRI M. JAGANNATHAN : I wish to say that my amendment seeks to provide a time-limit of one month for the issue of the certificate. I think there will be no difficulty in accepting it.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, this can be provided in the rules. It is not necessary to provide for it in the section.

MR. SPEAKER : The question is—

" *After* the words ' registration certificate if necessary ', *add* the following ' within a period not exceeding one month '."

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

*Clause* 6.

MR. SPEAKER : The motion is—

" That clause 6 do stand part of the Bill."

Sri N. K. Palanisami has given notice of an amendment. But before I allow him to move it, I would like Sri Palanisami to satisfy me about this amendment which reads " The Inspector shall, on receiving such notice and on being satisfied about the necessity for such closure, remove such catering establishments from the register of Catering Establishments ". The Government motion reads : " The Inspector on receiving such notice and on being satisfied about its correctness.' According to Article 19 of



the Constitution of India " Every citizen has the right to practise any profession or carry on any occupation, trade or business or to acquire, hold and dispose of property ". I should like to point out that there are decisions of the Court in this land and it is the practice that an employer can close his business provided he gives sufficient compensation according to the rules. If Sri Palanisami would therefore satisfy me that this does not violate the fundamental principle, I shall allow it.

SRI N. K. PALANISAMI : Sir, I move the following amendment :—

" *For* clause 6, *substitute* the following, namely :—

' 6. An employer before closing a Catering Establishment shall notify a month in advance to the Inspector in writing of such proposed closure. The Inspector shall on receiving such notice and on being satisfied about the necessity for such closure remove such catering establishments from the register of Catering Establishments and cancel the Registration Certificate.' "

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" For clause 6, *substitute* the following, namely :—

' 6. An employer before closing a Catering Establishment shall notify a month in advance to the Inspector in writing of such proposed closure. The Inspector shall on receiving such notice and on being satisfied about the necessity for such closure remove such catering establishments from the register of Catering Establishments and cancel the Registration Certificates.' "

SRI N. K. PALANISAMI : ஹோட்டல் முதலாளி, தன் ஹோட்டலை மூடிய 10 நாட்களுக்குள் இன்ஸ்பெக்டருக்கு அதைப்பற்றித் தெரிவிக்கவேண்டுமென்று ஏன் சொல்லப்படுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. இதை விளக்கினால் என் திருத்தத்தை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I would like the Hon. Minister also to help me in this because I am not quite sure about this.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, மசோதாவின் 6-வது பிரிவில் ஹோட்டல்களை மூடுவது சம்பந்தமாக விதி வகுக்கப்பட்டிருக்கிறது.

" . . . Removal of catering establishment from the register. An employer closing a catering establishment shall within three days of his doing so, notify to the Inspector in writing of such closure . . ."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஹோட்டலை மூடுவதற்கு 10 நாட்களுக்குள் நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், ஹோட்டல்காரர்கள் இன்று நோட்டீஸ் கொடுத்துவிட்டு நாளை மூடிவிடுகிறார்கள். ஆகவே, " **before one month**" என்ற வார்த்தைகளை அங்கே போட வேண்டும். இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். அதாவது, இன்று " கிருஷ்ணா லஞ்சு ஹோம் " என்ற பெயரில் இருக்கும் ஹோட்டல்

[Sri V. K. Kothandaraman] [5th April 1958.

நானே "ராமா லாட்ஜ்" என்ற பெயரில் நடக்கும். சென்னை நகரில் ஹோட்டல்களின் பெயர்கள் இம்மாதிரி மாறுவது சர்வசாதாரணமாக இருக்கிறது என்பது கனம் அமைச்சருக்கே தெரியும். ஒரே ஹோட்டலின் பெயர் எத்தனை தரம் மாற்றப்பட்டாலும், அல்லது அதன் முதலாளி எத்தனை தரம் மாறினாலும், அதில் வேலை செய்யும் தொழிலாளர்களின் உத்தியோக உரிமைக்கும் ஸெர்வீஸ் உரிமைக்கும் பங்கம் ஏற்படக்கூடாது; அவர்கள் வெளியேற்றப்படக்கூடாது. அதற்கு வகைசெய்வதற்காக 6 (a) என்ற ஷரத்தைச் சேர்க்க வேண்டுமென்பது என் திருத்தம். என்னுடைய திருத்தம் நியாயமானது என்பதை கனம் அமைச்சர் ஒத்துக்கொள்வார் என்று நம்புகிறேன். தயவுசெய்து அதை ஒத்துக்கொள்ளவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri A. GOVINDASAMY** : கனம் சபாநாயகர் அவர்களே, '**within ten days**' என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக '**within one month**' என்ற வார்த்தைகளைப் போட வேண்டுமென்று ஸ்ரீ கோதண்டராமனின் திருத்தத்தை சர்க்கார் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், '**within one month**' என்ற வார்த்தைகளைப் போட வேண்டுமென்ற திருத்தம் சர்க்கார் தரப்பிலிருந்து பிரேரேபிக்கப்பட்டால் நன்றாக இருக்கும் என்றும், சர்க்கார் தரப்பிலிருந்து அந்தத் திருத்தம் பிரேரேபிக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, 6-வது பிரிவின் நோக்கத்தை கனம் அங்கத்தினர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். ஹோட்டல்களை ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று 4-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஹோட்டல் மூடப் பட்டுவிட்டால் அது ரெஜிஸ்டரிலிருந்து நீக்கப்படவேண்டும். அதற்கான விதிகள் 6-வது பிரிவில் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஹோட்டலை மூடலாமா, மூடக்கூடாதா என்பது சம்பந்தமான விதிகள் இந்தப் பிரிவில் வகுக்கப் படவில்லை. ஹோட்டலை மூடுவதைப் பொறுத்தவரையில், தொழில் தகராறுச் சட்டத்தின் 25-F (f) பிரிவிலுள்ள விதிகள் அமுலாகும். அதற்கான விதிகள் இந்த மசோதாவில் வகுக்கப்படவில்லை. ரெஜிஸ்டர் பண்ணிக்கொள்ளாமல் ஹோட்டல் நடத்தக்கூடாது. ரெஜிஸ்டர் பண்ணிக் கொண்டு ஹோட்டல் நடத்துபவர்கள் ஹோட்டலை மூடிவிட்டால் உடனே சம்பந்தப்பட்ட ரெஜிஸ்டரிலிருந்து தங்கள் பெயர்களை நீக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு வகை செய்வதற்காகத் தான் இந்தப் பிரிவு அமைக்கப் பட்டிருக்கிறது. ஆகையால்தான் பொருக்குக் கமிட்டிகூட இந்தப் பிரிவின் தலையங்கத்தை '**Removal of catering establishment from the register**' என்று மாற்றியமைத்திருக்கிறது. இந்தப் பிரிவு '**Closure of catering establishment**' சம்பந்தமாக அமைக்கப்படவில்லை. ஹோட்டல்களை மூடுவதைத் தடுப்பதற்கான ஷரத்துக்கள் தொழில் தகராறுச் சட்டத்தில் இருக்கின்றன. அந்த ஷரத்துக்கள் ஹோட்டல்களையும் கட்டுப்படுத்தும் என்று சொல்லிக்கொண்டு இந்தத் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன்.

**Mr. SPEAKER** : இப்போது ஸ்ரீ பழனிசாமி தம் திருத்தம் சம்பந்தமாக என்ன சொல்ல விரும்புகிறார்?

**He wants to examine whether the closure is necessary or not. Is it relevant to this. That is the point I want to know.**

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தம் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டதா, இல்லையா என்ற சர்ச்சைக்கு இடமிருக்கிறது. அதைப்பற்றி நான். அபிப்பிராயம் சொல்ல விரும்பவில்லை. இதுவரை கொடுக்கப்பட்டிருக்கும் தீர்ப்புகளின்படி எந்த ஒரு நபருக்கும், தன் தொழிலை (தொழிற்சாலையை) தன் இஷ்டப்படி மூடுவதற்கு அதிகாரம் இருக்கிறது. அவ்வாறு ஒருவர் தன் தொழிற்சாலையை மூடும்போது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டுமென்றுதான் சொல்ல முடியுமே தவிர, அவர் தொழிற்சாலையை மூடக்கூடாதென்று சொல்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை.



5th April 1958] [Sri R. Venkataraman]

உதாரணமாக "ஸ்ரீ பழனிசாமி பாடவேண்டும்" என்று உத்திரவு போட முடியாது; ஆனால் "ஸ்ரீ பழனிசாமி பாடக்கூடாது" என்று உத்திரவு போட முடியும். **Specific performance of a personal practice of service is not enforceable, but a prevention of a personal service is possible.** ஆகையால் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : Is Sri Palanisami pressing his amendment?

Sri N. K. PALANISAMI : Yes, Sir.

Mr. SPEAKER : I rule it out of order, because I see that it offends the Constitution.

Sri V. K. KOTHANDARAMAN : Sir, I move—

"In clause 6, *for* the words 'within ten days', *substitute* the words 'before thirty days' and *add* the following at the end of the clause as new clause 6-A :—

'*Clause 6-A* On the reopening of a catering establishment either in the erstwhile existing name or otherwise the employee shall be liable for the claims of workers unsettled by the former employer, if the employer is a member of the family or dependent or relative of the former employer and the Inspector shall have such powers as may be prescribed to verify at the time of issue of fresh registration certificate and to settle the claims of the workers.' "

The amendment was duly seconded.

Mr. SPEAKER : The question is—

"In clause 6, *for* the words 'within ten days', *substitute* the words 'before thirty days' and *add* the following at the end of the clause as new clause 6-A :—

'*Clause 6-A*. On the reopening of a catering establishment either in the erstwhile existing name or otherwise the employee shall be liable for the claims of workers unsettled by the former employer, if the employer is a member of the family or dependent or relative of the former employer and the Inspector shall have such powers as may be prescribed to verify at the time of issue of fresh registration certificate and to settle the claims of the workers.' "

The amendment was put and lost.

Clause 6 was put and carried.

*Clause 7.* 4-50 p.m.

Mr. SPEAKER : The motion is—

"That clause 7 do stand part of the Bill."

Sri V. K. KOTHANDARAMAN : Sir, I move my amendment, namely :—

"In sub-clause (2), *for* the word 'nine', *substitute* the word 'eight'."

[5th April 1958

**SRI V. K. KOTHANDARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, 9-வது ஷரத்திலே தொழிலாளர்களுக்கு அரை மணி நேரம் ஓய்வு கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை ஒரு மணியாக்கவேண்டும் என்பது என்னுடைய திருத்தத்தின் நோக்கம். எதற்காகச் சொல்கிறேன் என்றால், நாம் ஹோட்டலுக்குச் சென்று டிபன் சாப்பிடும்போது பார்க்கிறோம், ஹோட்டல் சிப்பந்திகள் ஓடி ஓடி சப்ளை செய்வதை. அடுப்பங்கரையில் அவர்கள் வேலை செய்வதிலும் சிரமம் இருக்கிறது. இதில் பல விதமான கஷ்டங்கள் இருப்பதால், ஐந்து மணி நேரம் வேலை செய்துவிட்டு, அதற்குப் பிறகுதான் அரை மணி நேரம் ஓய்வு என்று இதில் கண்டிருப்பதை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக, நான்கு மணி நேரம் வேலை செய்யக் கூடிய அளவுக்கு நிலைமை இருந்தால் நல்லது. ஏனென்றால், ஐந்து மணி என்றால் அவர்கள் உடல் நலம் அந்த அளவுக்கு பாதகம் அடைகிறது என்று கனம் மந்திரி அவர்களுக்குத் தெரிந்த விஷயம்.

ஸ்ப்ரெட் ஓவர் டைம் 14 மணி நேரம் என்றும், இரண்டு இடை வேளை என்றும் இருப்பதில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருக்கிறது. இது நமக்கே கொஞ்சம் குழப்பமாக இருக்கிறது. இதையும் கொஞ்சம் தயவு செய்து விளக்கவேண்டும். அரை மணி ஓய்வு நேரத்தை ஒரு மணி என்று டெம்பரரியாகவாவது சேர்த்துக்கொள்ளவேண்டும்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, பாக்டரி சட்டத்தைப் போலவே ஒரு யூனிபார்மிடி இருக்க வேண்டுமென்பதற்காக இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. பாக்டரி சட்டத்தில் அரை மணி நேரம் என்று இருக்கிறது. அரை மணி நேரம் என்பது குறைந்தபட்ச அவகாசம் . அரை மணி நேரத்திற்குமேல் ஓய்வு நேரம் கொடுக்கக்கூடாது என்று அல்ல. கூடுமான அளவு எல்லா சட்டங்களும் யூனிபார்மாக, ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கிறது.

14 மணி நேரத்திலே நாம் இரண்டு தடவைதான் ஓய்வு கொடுக்க வேண்டுமென்று போட்டிருப்பதானது தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக போடப்பட்டிருக்கிறது. முதலில் விளக்கிச் சொல்லும்போது இந்த விவாதத்திலே சொன்னேன், மூன்று நான்கு ஷிப்டாகப் பிரித்து வேலை வாங்கினால்தான் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று. இரண்டு ரெஸ்டுக்குமேல் இருக்கவேண்டுமென்று சொன்னால், ஐந்து ஷிப்டுகளுக்கு மேல் வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும். நடைமுறையில் இன்னும் கொஞ்ச நாள் கழித்து மாறுதல் செய்யவேண்டுமென்று சொன்னால் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER: The question is—

"In the clause *for* the word 'five' *substitute* the word 'four'"

and

"*for* the words 'at least half an hour' *substitute* the words 'at least one hour'."

The amendment was put and lost.

Clause 9 was put and carried.

*Clause* 10.

MR. SPEAKER: The motion is—

"That clause 10 do stand part of the Bill."



5th April 1958]

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move the amendment, namely—

"In the clause *for* the word 'fourteen' *substitute* the word 'Twelve'."

SRI N. MARUDACHALAM: I second the amendment, Sir.

SRI P. S. CHINNADURAI: Sir, I move the amendment, namely—

"*For* the word 'fourteen' *substitute* the word 'twelve'."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendments moved—

"(1) In the clause *for* the word 'fourteen' *substitute* the word 'twelve'.

(2) *for* the word 'fourteen' *substitute* the word 'twelve'."

**SRI V. K. KOTHANDARAMAN**: கனம் தலைவர் அவர்களே பதினான்கு மணி நேரம் ஸ்ப்ரேட் ஓவர் டைம் இருப்பதை பன்னிரெண்டு மணி நேரம் என்று மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தம். காரணம், காலையிலே ஆறு மணிக்கு ஓட்டலுக்கு வந்து ஒரு நிமிஷம்கூட ஓய்வு பெறாமல் வேலை செய்வதாக இருந்தாலும், 14 மணி நேரம் இரவு எட்டு மணி வரைக்கும் அங்கே இருந்துதான் ஆக வேண்டும். இப்படி ஓய்வு இல்லாமல் வேலை செய்துகொண்டிருக்கும் ஓட்டல் தொழிலாளிக்கு ஒருவேளை தப்பித் தவறி கல்யாணம் ஏற்பட்டு, மனைவி மக்கள் என்று ஏற்பட்டுவிட்டால் கஷ்டம் தான். கல்யாணம் ஆகாதவராக இருந்தால், அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், ஒன்றிரண்டு வேளை ஓய்வு கொடுத்தால்கூட அங்கேயே படுத்து உறங்கிக்கொண்டிருப்பான். மனைவி மக்கள் இருந்தால், அவர்களைப் பார்த்துவிட்டு வருவதற்கு நேரம் அதிகமாகிவிடும். சென்னை நகரத்தைப் பொறுத்த வரை ஓட்டலுக்குப் பக்கத்திலேயே அந்தத் தொழிலாளிக்கு வீடு கிடைக்காது. வெகு தூரத்தில் குடிசை இருக்கலாம். அங்கு போய்விட்டு வருவது மிகவும் சிரமமாக இருக்கும். ஆகையால், இந்த விதமாக பல விதமான அசௌகர்யங்கள் இருக்கிறதென்பதைக் கணக்கில் வைத்துப் பார்க்கவேண்டும். ஜெயிலில் வார்டர்கள் இரவோடு இரவாக மனைவி மக்களைப் போய் பார்க்கிறார்கள். அதுபோன்ற நிலைமை ஓட்டல் தொழிலாளிக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக வேண்டித்தான் அதிகபட்சம் குறைக்கவில்லையென்றாலும், 12 மணி நேரமாகவாவது குறைக்க வேண்டும் என்ற திருத்தத்தைத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**SRI P. S. CHINNADURAI**: கனம் சபாநாயகர் அவர்களே, பாக்டரி சட்டத்திலே, வேலைசெய்யும் நேரம், ஓய்வு நேரம், எல்லாம் கூட்டி ஸ்ப்ரேட் ஓவர் டைம் பத்தரை மணி என்று தான் வரையறுக்கப்பட்டிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் அது 14 மணி நேரம் என்ற அளவுக்கு விதிவிலக்காக உயர்தர அதிகாரியால் கொடுக்கப்படலாம் என்றும் பாக்டரி சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. விதி விலக்கு கொடுப்பதற்குரிய அந்த அதிகாரத்தை உயர்தர அதிகாரிகளுக்கு எந்த அளவுக்கு வரையறுத்துக் கொடுத்திருக்கிறதோ அதையே சட்டத்தில் கொண்டுவருவது முறையானதல்ல என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

சட்டத்தில் 14 மணி நேரம் ஸப்ரெட் ஓவர் டைம் கொடுத்து விட்டால் அதைத் தவறுதலாகப் பயன்படுத்துவதற்கு சில மோசமான ஓட்டல் முதலாளிகள் முயலுவார்களானால் அதைத் தடுப்பதற்கு சிறிய அதிகாரிகளால் முடியாத நிலைமை ஏற்படும். அந்தச் சங்கடங்களை வரவழைக்க

[Sri P. S. Chinnadurai] [5th April 1958

வேண்டாம். ஆகையால், ஸ்ப்ரட் ஓவர் டைம் என்பதைக் குறைத்து என்னுடைய திருத்தத்தின்படி 12 மணி நேரம் என்று வைத்துக்கொள்வது நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

5 p.m. **THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர் களே, இதே பிரச்சனையின் மீது தான் கமிட்டியிலும் கூட நீண்ட நேரம் விவாதித்தார்கள். அதில் முதலாளிகளுடைய சார்பில் அபிப்பிராயம் கொண்டவர்களும், தொழிலாளர்களுடைய சார்பாக அபிப்பிராயம் கொண்டவர்களும் நீண்ட நேரம் விவாதம் செய்து புதிதாக இந்தத் தொழிலுக்குச் சட்டம் கொண்டு வருகிறோம், இது எந்த முறையில் அமுல் நடத்தப்படுகிறது, அதிலுள்ள லாப நஷ்டங்க்ள் என்ன என்பதை யெல்லாம் கொஞ்ச காலம் பொறுத்திருந்து பார்ப்பதற்கு முன்னால் இப்போதுள்ள நேரத்தைக் குறைப்பது சரியல்ல என்று முடிவு எடுக்கப் பட்டது. அவர்களது ஏகோபித்த முடிவை மாற்றுவதற்கு நான் தயாராய் இல்லை. அவர்களுடைய முடிவை நிறைவேற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இந்தத் திருத்தங்களை நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : The question is—

"(1) In the clause *for* the word 'fourteen' *substitute* the word 'Twelve'."

(2) *for* the word 'fourteen' *substitute* the word 'twelve'."

The amendments were put and lost.

Clause 10 was put and carried.

*Clause* 11.

MR. SPEAKER : The motion is—

"That Clause 11 do stand part of the Bill."

SRI N. K. PALANISAMI : Sir, I move the amendment standing in my name, namely,—

"*For* sub-clause (1) *substitute* the following :—

'(1) Restaurant in which is carried on the business of the supply of refreshments only, shall be closed for one whole day in each week.' "

SRI A. GOVINDASAMY : Sir, I second it.

MR. SPEAKER : Amendment moved—

"*For* sub-clause (1) *substitute* the following :—

'(1) Restaurant in which is carried on the business of the supply of refreshments only, shall be closed for one whole day in each week.' "

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move the amendments standing in my name, namely,—

"In sub-clause (1) *add* at the end the following 'when the catering establishment shall remain closed' :—

'In sub-clause (2) *after* the figure and word "15th August" *add* the following figure and word "1st May".' "



5th April 1958]

SRI N. MARUDACHALAM : Sir, I second the amendments.

MR. SPEAKER : Amendments moved—

"In sub-clause (1) *add* at the end the following 'when the catering establishment shall remain closed'."

"In sub-clause (2) *after* the figure and word '15th August' 'add the following figure and word '1st May'."

MR. SPEAKER :

Now the clause and the amendments are before the House **for** discussion—

**SRI V. K. KOTHANDARAMAN** : செக்ஷன் 2-லே எழு நாட்கள் பண் டிகை நாள் லீவு என்று இருக்கிறது. ஆகஸ்டு 15, ஜனவரி 26 என்பவை இதில் குறிப்பிட்டிருப்பது போல உலகத் தொழிலாளர் தினம் என்று சொல்லக்கூடிய மேதினமும் சேர்க்கப்பட்வேண்டும். இந்த வருஷம் 57-வது தினத்தில் நமது அமைச்சர் அவர்களும் பங்குகொண்டு சிறப்பான முறையில் சொற்பொழிவு ஆற்றினார்கள். அப்படிப்பட்ட உலகப் பொது தொழிலாளர் தினமாகிய மே தினத்திற்கும் விடுமுறை அளிக்கவேண்டும் என்பதை இதில் சேர்க்கவேண்டும் என்பதாக நான் திருத்தம் கொடுத் திருக்கிறேன். இதையும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதாக கேட்டுக் கொள்கிறேன். **(Mr. Sri Palanisamy rose.)**

**MR. SPEAKER : I think the Hon. Minister has already answered the point mentioned in the amendment moved by the hon. Member Sri Palanisami. I have no objection if he has got any new point to make.**

**SRI A. GOVINDASAMI** : வாரத்திற்கு ஒரு நாள் ஹோட்டலை மூடுவத னால் எவ்வித இடையூறும் வராது. அதற்குமாறாகத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஏற்படும். விசேஷ காலங்களில் வேண்டுமானால் அந்த ஹோட்டலை மூடாமல் அதைத் திறப்பதற்கு அனுமதி அளிக்கலாமே தவிர வாரத்தில் ஒரு நாள் கட்டாயம் மூடவேண்டும் என்பதாகச் செய்யவேண்டும். சாப் பாட்டு ஹோட்டலில் டேர்ன் ட்யூட்டியாகப் போட்டு வாரத்திற்கு ஒரு நாள் லீவு இல்லாதவாறு வேண்டுமானால் செய்யலாம் என்பதாகச் சொல்லிக் கொள்கிறேன்.

**MR. SPEAKER : If the Hon. Member Sri Palanisami wants to speak, he can do so.**

**SRI N. K. PALANISAMI** : இந்தச் சட்டத்தில் 22 நாட்கள் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். இது போதாது என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கெனவே அமுலில் உள்ள ஷாப்பு ஆக்ட் சட்டத்தின்படி 36 நாட்கள் தொழிலாளர்களுக்கு லீவு வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி யாக இவர்களுக்கும் செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. வாரத்திற்கு ஒரு நாள் லீவு என்பது அவசியம் கொடுத்தாகவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன். சாப்பாட்டு ஹோட்டலுக்கு வேண்டுமானால் விதி விலக்குக் கொடுக்கலாம். பாக்கியுள்ள ரெஸ்டொரண்டுகளுக்கு வாரத்திற்கு ஒரு நாள் அவசியம் லீவு கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். வாரத்திற்கு ஒரு நாள் லீவு விடாவிட்டால் வேலையில்லாத்திண்டாட்டம் ஓரளவு குறையும், என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது சரியல்ல. ஆகவே கண்டிப் பாக வாரத்திற்கு ஒரு நாள் லீவு அளிக்கவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். எட்டளவில்தான் இந்த லீவுகள் இருக்கின்றன. இந்தச் சட்டம் அவர்களுக்கு அமுலாகிறதா இல்லையா என்பது சர்ச்சையில் இருக்கிறது. பாக்டரி சட்டத்திலுள்ள லீவுகளைவிட இதில் அதிகமாகத்தான் இருக்கிறது. இதை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். புதிதாக நாஷனல் ஹாலிடே மசோதா வருகிறது. இந்த எழு நாட்களைத் தவிர பாக்டரி சட்ட லீவும் இவர்களுக்கு பொருந்தும். ஆகவே இது இப்போது இருக்கிற நிலைமையைவிட முன்னேற்றகரமான நிலைமை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மே தினத்திற்கு என் லீவு விடக்கூடாது என்று சொன்னார்கள். தொழிலாளர்கள் லீவு வேண்டுமென்றால் அன்றைய தினம் லீவு விட்டுவிட்டு, இன்னொரு நாள் அதற்குப் பதிலாக வேலை செய்யும்படியாகச் செய்யலாம் என்பதாக நான் வருஷாவருஷம் அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கிறேன். எந்த இடங்களில் எல்லாம் எழு நாட்களில் ஒன்றாக மே தினத்தையும் வைத்துக்கொள்ளவேண்டுமென்று தொழிலாளர் கேட்கிறார்களோ அங்கெல்லாம் அவ்வாறு வைப்பதற்கு எற்பாடு செய்யப்படுகிறது. சமீபத்தில் கோவையில் இந்தப் பிரச்னை எழுந்தபோது அந்த அந்த மில்லினுடைய தொழிலாளர்கள் விரும்பினால் முதலாளிகளோடு முடிவு செய்து மே தினத்தையும் எழு நாட்களில் ஒன்றாக சேர்த்துக் கொள்ள வசதி அளிக்கும்படியாக உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஆகவே அதைப்பற்றி கவலைபடவேண்டியதில்லை என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வாரத்திற்கு ஒரு நாள் மூடவேண்டுமென்பதைப்பற்றி என்னுடைய திடமான அபிப்பிராயமாக வேண்டுமா வேண்டாமா என்று சொல்வதற்கில்லை. கனம் அங்கத்தினர்கள் என்ன விரும்புகிறார்களோ அதை நன்றாகப் பரிசீலனை செய்து முடிவு செய்யவே விரும்புகிறேன். ஒரு வாரத்திற்கு ஒரு நாள் லீவு விடாமல் ஆனால் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வாரத்திற்கு ஒரு நாள் லீவு கிடைக்கும்படியாக ஷிப்ட் முறையில் வேலை செய்யும்படியாகச் செய்தால் இப்போது இருக்கும் தொழிலாளர்களை விட இன்னும் ஒன்றிரண்டு பேர்களுக்கு வேலை கிடைக்கும். அதாவது வாரத்திற்கு ஒரு நாள் மூட வேண்டும் என்றால் 6 தொழிலாளர்கள் வேலை செய்வார்கள். லீவு இல்லாது ஷிப்டு-முறைப்படி என்றால் 7 பேர்கள் வேலை செய்ய முடியும். இது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு குறைக்க உதவலாம் என்று நான் பொறுக்குக் கமிட்டியில் சொன்னேன். அதை அவர்களும் எகமனதாக எற்றுக்கெண்டார்கள். இப்போதும் அதையே எற்றுக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER** : I shall now put the amendment to the vote of the House.

The question is—

" *For* sub-clause (1) *substitute* the following :—

' (1) Restaurant in which is carried on the business of the supply of refreshments only, shall be closed for one whole day in each week.' "

The amendment was put and lost.

**MR. SPEAKER** : The question is—

" In sub-clause (1) *add* at the end the following :—

' when the catering establishment shall remain closed '."

" In sub-clause (2) *after* the figure and word ' 15th August ' *add* the following figure and word ' 1st August May '."

The amendment was put and lost.

Clause 11 was put and carried.



*Clause* 12.

**MR. SPEAKER** : The motion is " that clause 12 do stand part of the Bill."

**SRI S. M. ANNAMALAI** : Sir I move the following amendments which stand in my name.

" In sub-clause 1 *for* the figure ' 240 ' *substitute* the figure ' 200 '."

" In sub-clause 1 (i) *for* the figure ' 20 ' *substitute* the figure ' 15 '."

" In sub-clause 1 (ii) *for* the figure ' 15 ' *substitute* the figure ' 10 '."

" In Explanation 2 (c)of sub-section 1 (ii) *for* the figure ' 240 ' *substitute* the figure ' 200 '."

" In sub-clause 2 *for* the words ' two-thirds ' *substitute* the words ' three-fifths '."

**SRI M. SELVARAJ** : Sir, I second the amendments

**MR. SPEAKER** : Amendments moved—

" In sub-clause 1 *for* the figure ' 240 ' *substitute* the figure ' 200 '."

" In sub-clause 1 (i) *for* the figure ' 20 ' *substitute* the figure ' 15 '."

" In sub-clause 1 (ii) *for* the figure ' 15 " *substitute* the figure ' 10 '."

" In Explanation 2 (*c*) of sub-clause 1 (ii) *for* the figure ' 240 ' *substitute* the figure ' 200 '."

" In sub-clause 2 *for* the words ' two-thirds ' *substitute* the words ' three-fifths '."

**SRI N. K. PALANISAMI** : Sir, I move the amendment standing in my name, namely—

" *After* sub-clause (5) *add* the following new sub-clause :—

' (5-A) Every employee shall be allowed 12 days sick leave and 12 days casual leave in a calendar year with full wages.' "

**SRI V. K. KOTHANDARAMAN** : Sir, I second it.

**MR. SPEAKER** : Amendment moved—

" *After* sub-clause (5) *add* the following new sub-clause :—

'(5-A) Every employee shall be allowed 12 days sick leave and 12 days casual leave in a calendar year with full wages.' "

[5th April 1958

SRI P. S. CHINNADURAI : Sir, I move the amendment standing in my name, namely—

" *After* sub-clause (5) *add* the following sub-clause and renumber the subsequent sub-clauses—

' (6) Every employee shall be allowed during every calendar year leave with wages for a period not exceeding 12 days, on the ground of any sickness incurred or accident sustained by him.' "

SRI N. K. PALANISAMI : Sir, I second it.

MR. SPEAKER : Amendment moved—

" *After* sub-clause (5) *add* the following sub-clause and renumber the subsequent sub-clauses :—

' (6) Every employee shall be allowed during every calendar year not exceeding 12 days, on the ground of any sickness incurred or accident sustained by him.' "

Now the clause and the amendments are before the House for **discussion.**

SRI S. M. ANNAMALAI : இந்த க்ளாஸ் 12-ல் 240 நாட்கள் வேலை செய்தால்தான் 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவு கிடைக்கும். இல்லையேல் லீவு கிடைக்காது என்று இருக்கிறது. 240 என்று இருப்பதை 200 ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அதேபோல பதினைந்து நாட்கள் என்று இருப்பதை 10 நாட்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதேபோல் திருத்தம் 51-லே இதைப்பற்றி சொன்னேன். அதாவது ஜனவரி மாதம் தவிர மற்ற மாதங்களில் வேலைக்கு அமர்ந்திருந்தால் இரண்டு பாகம் வேலை செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அது அதிக மாக இருப்பதால் ஐந்தில் மூன்று பாகம் என்று கொடுத்திருக்கிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர் களே, ஹோட்டல் சாப்பாட்டைத் தொடர்ந்து சாப்பிடுவதனால் உடம்புக்கு நோய் வருகிறது, ஹோட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்வதில்லை என்பதாக நான் சிறு கதைகளில் படித்திருக்கிறேன். என்னைப் பொருத்தவரையிலும் அடிக்கடி ஹோட்டலிலேயே சாப்பிடுவதால் உடல் சுகக்குறைவு வருகிறது. ஹோட்டல் சாப்பாடு இல்லாமலிருந்தால் இன்னும் கூட ஆரோக்கியமாக இருப்பேன். ஹோட்டல் சாப்பாடு பலமுறையில் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடுகிறது என்பதை பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்கிற விஷயம். அதே சாப்பாட்டைச் சாப்பிடுகிற நிர்ப்பந்தம் தொழிலாளர்களுக்கு இருக் கிறது. ஆகையால் அவர்களுக்கு சிக் லீவு வசதி நல்லமுறையில் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் நன்றாகக் கவனிக்கவேண்டும். ஏதோ ஒரு காரணத்
5–10 p.m. தினால் அதை விட்டிருக்கிறார்கள். செலக்ட் கமிட்டியில் அது விடப்பட்டா லும் இந்த சபையில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற முறையில் இந்த ஸிக் லீவ் சம்பந்தமான திருத்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

SRI A. GOVINDASAMY : 240 நாளை 200 நாளாக திருத்திக்கொள்வதில் பெரிய சங்கடம் ஒன்றும் இருக்காது. சில சந்தர்ப்பங்களில் அமைச்சர் அவர்கள் ஷாப் ஆக்ட்டை துணைக்கு அழைப்பதும் சில சமயத்தில் அதில் இருந்து தப்பித்துக் கொள்வதுமான வழியைக் கையாள்கிறார்கள். ஏதாவது ஒன்றை கையாளவேண்டும். இந்தத் திருத்தத்தில் சங்கடம் ஒன்றுமில்லை.



5th April 1958]

SRI V. K. KOTHANDARAMAN : 240 நாட்கள் வேலை செய்தால் 20 நாட்களுக்கு ஒரு நாள் லீவ் என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது என்னவென்றால், ஆறு மாதம் என்பதை மூன்று மாதங்களாக குறைக்கவேண்டுமென்று சொன்னபோது அவரே சொன்னார், ஆறு மாதம் நிலைத்து வேலை செய்தாலே போதும் என்று. ஆகவே, ஆறுமாதமாக இருக்கட்டும் என்று சொல்லும் நேரத் தில் இது தொழிற்சாலையல்ல, அல்லது மில் ஒன்றுமில்லை, ஆகவே 240 நாட்கள் வேலை செய்ய முடியுமா ? அப்படியிருந்தால், ஒரு தொழி லாளிக்கும் லீவ் வாங்க முடியாது. நீ 240 நாட்கள் வேலை செய்யவில்லை, ஆகவே லீவ் கிடையாது என்று சொல்லி விடுவார்கள். ஆகவே, இந்த லீவையாவது பெறக்கூடிய தன்மையில் எவ்வளவு நாட்கள் வேலை செய் திருக்கிறார்கள் என்று கணக்கிட்டு 20 நாளுக்கு ஒரு நாள் லீவ் என்று சொல்லி, தயவு செய்து இதை ஏற்றுக்கொள்ளவேண்டும், இல்லாவிடில் அவர்களுக்கு ஒரு நாள் கூட லீவ் வாங்க முடியாது என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

THE HON. SRI R. VENKATARAMAN : கோவிந்தசுவாமி அவர்கள் சொன்னார்கள், நான் ஏதோ ஷாப் சட்டத்தை அடிக்கடி துணைக்கு அழைத்துக் கொள்வதாக. ஷாப் சட்டத்தை நான் துணைக்கு அழைப்பதே யில்லை. அந்தச் சட்டத்தால் எந்தவிதமான பயனும் இந்தத் தொழி லாளர்களுக்கு கிடைக்காது என்று எடுத்து சொல்லிவிட்டு பாக்டரி சட்டத்தின் கீழ் இன்றுள்ள நிலைமைப்படி எல்லாத் தொழிலாளர்களுக்கும் எந்த அள வுக்காவது ஒரு யூனிபார்மிட்டி ஏற்படுத்தவேண்டும். அதற்காகத்தான் அந்த அடிப்படையில் இந்த ஷரத்துக்கள் எல்லாம் வகுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இப்போதுள்ள பாக்டரி சட்டப்படி 240 நாள் வேலை செய்தால்தான் 20 நாளைக்கு ஒரு நாள் லீவ் என்ற முறையில் லீவ் கொடுக்கப் படுகிறது. இதுவரை எந்தவிதமான வரையறைக்கும் உட்படாமல் இருந்த தொழிலாளர்களுக்கு இதே ஒரு பெரிய முன்னேற்றமாகும். அடுத்த படியாக, லீவ் கொடுக்கவேண்டுமென்று சின்னதுரை அவர்கள் சொன்னார் கள். அது, அகில இந்திய ரீதியில் முக்கூட்டு மகாநாட்டில் இது சம்பந்த மான ஏதாவது ஒரு முடிவு எடுக்கப்படுமானால் அதை வைத்துக்கொண்டு நாம் எல்லாச் சட்டங்களையும் திருத்திக்கொள்ள முடியும். சிறு சட்டங்களைச் செய்யும்போது இந்த மாறுதல் செய்துவிட்டால் அதனால் தொழிலாளர் களுக்கு பாதகம் ஏற்படும் என்று நான் பயப்படுகிறேன். ஆகவே, இதை இப்பொழுதிருக்கிற நிலையில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I shall put all amendments to vote.

The amendments were put and lost.

Clause 12 was put and carried.

Clauses 13, 14, 15, 16 and 17 were put and carried.

*Clause* 18.

MR. SPEAKER : The motion is " that clause 18 do stnd part of the Bill."

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" *For* the figures and words ' 9 p.m. and 5 a.m.' *substitute* the figures and words ' 8 p.m. and 6 a.m.'."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" *For* the figures and words ' 9 p.m. and 5 a.m.' *substitute* the figures and words ' 8 p.m. and 6 a.m.'."

[5th April 1958

SRI M. JAGANNATHAN : Sir, clause 18 provides for prohibition of employment of women or young persons during night. This is very laudable. No woman or young person should be allowed to work in hotels during night time. If they are allowed to work as late as 9 p.m. or as early as 5 a.m. the very object or intention of this clause will be defeated. My amendment seeks to give a little concession in this respect to women and young persons. I think the Hon. Minister realises this humanitarian aspect of my amendment and I hope he will accept it.

THE HON. SRI R. VENKATARAMAN : சபாநாயகர் அவர்களே, இது கூட திருத்தக் கமிட்டியில் நன்கு ஆலோசிக்கப்பட்டது. பெண்களை எந்த வேலைக்கு உபயோகப்படுத்துகிறார்கள் என்று சொன்னால், சாதாரணமாக எலை எடுத்துப் போடுவதற்குத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். எட்டு மணிக்கு மேல் அவர்களை வேலைக்கு வைக்கக்கூடாது என்று சொன்னால் இப்பொழுதுள்ள வேலைக்கு அவர்களை அமர்த்த முடியாது. ஆகவே, அவர்களுக்கு வேலை கிடைக்கும் சந்தர்ப்பம் குறைந்து விடும். ஆகவே, இரவு 9 மணிக்கு பிற்பாடும் காலை 5 மணிக்கு முன்பும் வேலைக்கு அமர்த்த கூடாது என்று நடைமுறையில் உள்ள பழக்கத்தைப் பொறுத்து இது இருக்கிறது.

MR. SPEAKER : The question is—

" *For* the figures and words '9 p.m. and 5 a.m.' *substitute* the figures and words '8 p.m. and 6 a.m.'."

The amendment was put and lost.

Clause 18 was put and carried.

*Clause* 19.

MR. SPEAKER : The motion is 'that clause 19 do stand part of the Bill.'

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" In sub-clause (1) after the words ' evidence recorded at an *insert* the word ' impartial '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) after the words ' evidence recorded at an ' *insert* the word ' impartial.' "

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (1) *add* at the end the following words ' by the Inspector '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) *add* at the end the following words ' by the Inspector '."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" In sub-clause (1) *for* the word ' six ' *substitute* the word ' one '."

The amendment was duly seconded.



5th April 1958]

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) *for* the word ' six ' *substitute* the word ' one '."

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

" In sub-clause 1 *after* the word ' held ' *insert* the words ' by the Inspector '."

The amendment was duly seconded.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) *after* the word ' held ' *insert* the words ' by the Inspector '."

SRI M. JAGANNATHAN : Sir, Clause 19 provides for notice of discharge or dismissal. It says that no employer can discharge or dispense with the services of an employee without giving notice. But there is a provision which says that an employer can do so only if he establishes misconduct on the part of the employee. Before he establishes misconduct on the part of the employee, some sort of enquiry must be conducted. My amendment seeks to improve the position by saying that the enquiry should be an impartial enquiry. It should not be a mere haphazard enquiry. Therefore, I think the Hon. Minister will accept my amendment.

SRI V. K. KOTHANDARAMAN : ஹோட்டலில் வேலை செய்யும் தொழிலாளியின் பேரிலே தவறான குற்றச் சாட்டுகள் எவ்வளவோ சாட்டப்படலாம். தொழிலாளி என்று சொன்னால் ஹோட்டல் தொழிலாளி மட்டுமல்ல. எந்தத் தொழிலாளியாய் இருந்தாலும் சரி. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். குறிப்பாக, "மிஸ்காண்டக்ட்" என்று, தவறான நடவடிக்கைகளில் இறங்காத தொழிலாளியாய் இருந்தாலும், அவர் ஸ்திரமாக இருந்து தொழிலாளிகளின் உரிமைக்காக போராடுவாரேயானால், அந்தத் தொழிலாளியை எப்படியாவது வேலையில் இருந்து நீக்க, எப்படியாவது பழிவாங்க, பல சூழ்ச்சிகள் செய்கின்றனர் முதலாளிகள். எந்தத் தவறு செய்யாதவரா யிருந்தாலும் சரி, போலீஸ் இருக்கவே இருக்கிறது. ஏதோ பத்தோ இருபதோ கொடுத்துவிட்டு இவன் அதைச் செய்தான் இதைச் செய்தான் என்று நாலு நாளைக்கு லாக்கப்பிற்குள் போடு என்று சொல்லி எப்படி யாவது அவனை லாக்கப்பில் போடச் செய்து, பிறகு அவன் வெளி வந்ததும் உன்னை போலீஸ் பிடித்துச் சென்றது, நீ ஏதோ குற்றம் செய் திருக்கிறாய், ஆகவே, நீ வேண்டாம் என்று சொல்லி அனுப்பி விடுவார் கள். இதுபற்றிய புகார்கள் எவ்வளவோ அமைச்சர் அவர்களுக்கும், லேபர் கமிஷனருக்கும் வந்திருக்கின்றன. அதுபோன்று எவ்வளவோ இருக்கிறது. இந்தமாதிரி குற்றச்சாட்டுகளை ரிக்கார்டு செய்யவேண்டுமென்று சொன்னால் முதலாளிக்கு வேண்டிய தொழிலாளியும் இருப்பான். முதலாளி சொல்வதைக் கேட்டு அவர் தலையாட்டுவார். ஏதாவது எழுதி இதில் கையெழுத்து போடு என்று சொன்னால் அந்தத் தொழிலாளியும் போட்டு விடுவார். ஆகவே இதில் விசாரணை செய்யக்கூடிய விதத்தில் ஒரு இன்ஸ் பெக்டர் என்று ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இந்த திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

SRI S. M. ANNAMALAI : நான் கொடுத்திருக்கின்ற திருத்தம், இந்த சட்டத்தின்படி 6 மாதம் வேலை செய்தால்தான் தொழிலாளர்களுக்கு உபயோகம் என்று இருக்கிறது. ஆறு மாதங்களாவது வேலையில் இருக்கட்டுமே என்று சொன்னார்கள். ஆகவே ஆறு மாதங்கள்

[Sri S. M. Annamalai] [5th April 1958

என்றிருப்பது தொழிலாளர்களுக்கு கஷ்டம். ஆகவே இதை ஒரு மாதம் என்று ஏற்படுத்தவேண்டும் என்பதும், அதோடு இதைப்பற்றி விசாரணை செய்வது யார் என்பதில் "பை ஹூம்" என்பதில் "பை தி இன்ஸ்பெக்டர்", ஒரு இன்ஸ்பெக்டர் என்ற முறையில் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய திருத்தங்கள். இதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN :** இந்த மசோதாவிலுள்ள 19-வது விதியானது இப்போது பாக்டரி ஆக்டில் இல்லாத ஒரு புது திருத்தம். இதைவிட ஒரு படி முன்னேற்றமானது. இதில் இவர்களை வேலையிலிருந்து நீக்கினது தவறு என்று எந்த விதமான பிரச்னையும் எழுப்ப முடியும். அதோடு பாக்டரி சட்டத்தின்படி ஏற்படுத்துவதாயிருந்தால் அதற்காக ஒரு கன்சிலியேஷனும், அதற்கு மேல் டிஸ்பியூட்டுக்குப் போய் அதிலிருந்து தீர்ப்பை எதிர்பார்ப்பதுமாயிருக்கவேண்டும். ஆகவே இந்த கஷ்டங்கள் எல்லாம் வேண்டாம் என்று நினைத்துத்தான் முதலாவது முதலாளியும் அதற்கு மேல் லேபர் கமிஷனரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு அதிகாரியிடத்தில் அப்பீல் செய்வதற்குள்ள உரிமையும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இதில் இன்ஸ்பெக்டர் என்று தனியாக போடவேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அதோடு 6 மாதம் என்றிருப்பதை ஒரு மாதம் என்று ஆக்கலாம் என்று சொன்னார்கள். அப்படி வைத்தால் ஒரு தொழிலாளியைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியாது. ஆறு மாதம் என்று நிர்ணயிக்கும்போது ப்ரொபேஷன் என்று சொல்லுவது போல், அந்த காலத்தில் முதலாளி அந்த தொழிலாளியைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள முடியும். ஆகவே அதையொட்டித் தான் இவ்விதம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக சர்க்காரே நியமிக்கும் ஒரு இன்ஸ்பெக்டர் விசாரணை செய்துவிட்டு அதன்பின்னால் சர்க்கார் அதிகாரி ஒருவரே அப்பீல் விசாரணையும் செய்வது என்பது பொருத்தமான விஷயம் அல்ல. அதோடு இவ்விதம் இன்ஸ்பெக்டர்களை நியமிப்பதாயிருந்தால் தொழிலாளர்கள்தான் பாதிக்கப்படுவார்கள் என்பதை சொல்ல ஆசைப்படுகிறேன். அதாவது பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கின்ற இடத்தில் ஒவ்வொருவரையும் போய் இன்ஸ்பெக்டர் விசாரணை செய்யவேண்டும் என்று சொன்னால் அதனால் ஏராளமான காலதாமதம் ஆகும். மேலும் அந்த காலத்தில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுவார்கள். ஆனால் இதில் வேலையிலிருந்து நீக்கிவிட்டால் சர்க்காரால் நியமிக்கப்படுகிற உத்தியோகஸ்தரிடம் அப்பீல் செய்துகொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கழிந்த ஏழெட்டு வருஷ காலமாக இவ்வாறு இல்லாததினால் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**MR. SPEAKER :** I shall now put the amendment moved by the hon. Member Sri M. Jagannathan to the vote of the House. The question is :—

"In sub-clause (1), *after* the words 'evidence recorded at an' *insert* the word 'impartial'."

The amendment was put and lost.

**MR. SPEAKER :** I shall now put the amendment moved by hon. Member Sri V. K. Kothandaraman to the vote of the House. The question is :—

"In sub-clause (1) *add* at the end the following words 'by the Inspeceor'."

The amendment was put and lost.



5th April 1958]

**MR. SPEAKER :** I shall now put the amendment moved by hon. Member Sri S. M. Annamalai to the vote of the House. The question is—

"In sub-clause (1) *for* the word 'six' *substitute* the word 'one'."

The amendment was put and lost.

**MR. SPEAKER :** I shall put the other amendment moved by Sri S. M. Annamalai to the vote of the House. The question is—

"In sub-clause (1) *after* the word 'held' *insert* the words 'by the Inspector'."

The amendment was put and lost.

Clause 19 was put and carried.

**MR. SPEAKER :** It is now 5-25 p.m. May I suggest that we sit for half an hour more and finish the consideration of this Bill? I hope the House and the Hon. Minister have no objection to it.

**THE HON. SRI R. VENKATARAMAN :** I welcome it, Sir.

Clauses 20 and 21 were put and carried.

*Clause 22.*

**MR. SPEAKER :** The motion is—

"That clause 22 do stand part of the Bill."

**SRI N. K. PALANISAMI :** Sir, I move—

"*After* the word 'notices' *add* the words 'including muster rolls and payment registers in respect of all employees'."

The amendment was duly seconded.

**MR. SPEAKER :** Amendment moved—

"*After* the word 'notices' *add* the words 'including muster rolls and payment registers in respect of all employees.'"

**SRI N. K. PALANISAMI :** ஸார், கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள் ஆறு மாதங்கள் வேலையில் இருந்த பிறகுதான் பெர்மனன்ட் செய்யவேண்டுமென்று. எவ்வளவுதான் நல்ல சட்டத்தை கொண்டு வந்தாலும் இம்மாதிரி பிரயோஜனமில்லாத முறையில் செய்வது நல்லது அல்ல என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதுவும் சில ஹோட்டல்களில் தினக்கூலி, வாரக்கூலி இவ்விதம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது பெர்மனண்டு தொழிலாளர்களாக இருந்தால் தான் இந்த வசதிகள் எல்லாம் கிடைக்கும் என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. இது தொழிலாளர்களுக்கு பாதகமாய் இருக்கிறது. ஆகவே இதற்காக மஸ்டர் ரோல், அதாவது அப்பாயின்ட்மெண்ட் ஆன தேதியிலிருந்து அவர்களை தொழிலாளர்களாக வைக்கவேண்டும் என்று மோட்டார் வெகிக்கல்ஸ் ஆக்ட்டில் இருக்கிறது. அந்த முறையில் இங்கேயும் மஸ்டர் ரோல் ரெஜிஸ்டர் வைத்திருக்கவேண்டும் என்று சட்டம் இருக்கவேண்டும். அவர்களிடையில் ஏதாவது தகராறு ஏற்பட்டால் இதை பரிசீலனை செய்யக்கூடிய முறை இருக்கவேண்டும். ஆகவே இந்த திருத்தத்தை மந்திரி அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[5th April 1958

THE HON. SRI R. VENKATARAMAN : ஸார், இந்த 22-வது பிரிவின் கீழ், என்னென்ன ரெஜிஸ்டர்கள் வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்படவில்லை. என்னென்ன ரெஜிஸ்டர்கள் வைத்திருக்க வேண்டுமென்று. விதி தயாரிக்கப்பட்டு வருகிறது. அப்போது மஸ்டர் ரோல் வைக்கவேண்டும் என்பதையும் அதில் சேர்க்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த நிலையில் இந்த திருத்தங்களை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : I shall now put the amendment moved by Sri N. K. Palanisami to the vote of the House. The question is :—

" *After* the word ' notices ' *add* the words ' including muster rolls and payment registers in respect of all employees.' "

The amendment was put and lost.

Clause 22 was put and carried.

*Clause* 23.

MR. SPEAKER : The motion is—

" That clause 23 do stand part of the Bill."

SRI M. JAGANNATHAN : Sir, I move—

" *For* sub-clause (1) *substitute* the following :—

' (1) Any employer who contravenes any of the provisions of sections 4, 5, 6, 7, 9, 10, 11, 12 and 19, shall on conviction, be punishable with fine, which, for a first offence, may extend to two hundred and fifty rupees and, for a second or any subsequent offences, may extend to five hundred rupees '."

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendment moved—

" *For* sub-clause (1) *substitute* the following :—

' (1) Any employer who contravenes any of the provisions of sections 4, 5, 6, 7, 9, 10, 11, 12 and 19, shall on conviction, be punishable with fine, which, for a first offence, may extend to two hundred and fifty rupees and, for a second or any subsequent offences, may extend to five hundred rupees.' "

SRI V. K. KOTHANDARAMAN : Sir, I move—

" In sub-clause (1) *for* the words ' may extend to ' *substitute* the words ' shall be '."

" In sub-clause (1) *for* the words ' shall not be less than one hundred rupees or more than ' *substitute* the words ' shall be '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendment moved—

" In sub-clause (1) *for* the words ' may extend to ' *substitute* the words ' shall be '."

" In sub-clause (1) *for* the words ' shall not be less than one hundred rupees or more than ' *substitute* the words ' shall be '."



5th April 1958]

SRI M. JAGANNATHAN : Sir, the amendment that I have moved seeks to increase the punishment. The punishment provided in the Bill is not deterrent. Because, it provides for only Rs. 100 for the first offence and Rs. 250 for the second or subsequent offences, whereas my amendment says that that for the first offence, it should be Rs. 250, and for the second and subsequent offences it should be Rs. 500. The only object of the increased punishment which my amendment proposes is that it will have a deterrent effect on unscrupulous employers. Because, it is only then, they will not attempt to contravene the provisions of this Bill. On the other hand, they will be held in check. It is only for the purpose of discouraging them from violating the provisions of the legislation and for the purpose of making them think twice before commiting breaches of the law, I plead for increased punishment, Sir.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, தொழிற்சங்கச் சட்டங்களை கடுமையான தண்டனை மூலம் நிறைவேற்றவேண்டும் என்ற கொள்கையில் நான் இல்லை. போதுமான அளவுக்கு முதலாளிகள், தொழிலாளிகளின் ஒத்துழைப்பு வேண்டும், அதன் மூலமாக, நிறைவேற்றப்படுகிற சட்டங்கள் எல்லாம் அமல் நடத்தப்பட வேண்டும். தண்டனைக்குப் பயந்து முதலாளி நடக்கக்கூடாது. ஆகையால் சமூகமே நியாயமாக நடக்கவேண்டும் என்ற அடிப்படையில் இதை அமல் நடத்தவேண்டும் என்ற நோக்கம் உள்ளவன். ஆகவேதான் முதலில் மசோதா கொண்டுவருகிற பொழுது அதிகமான தண்டனை விதித்திருந்தாலும், திருத்தக் கமிட்டியில், இருதரப்பினருடைய ஒத்துழைப்பு மூலமாக அமல் நடத்தவேண்டுமென்ற நம்பிக்கையுடன் அதைக் குறைத்திருக்கிறேன். அந்த நம்பிக்கை கெட்டுவிடாது என்று நினைக்கிறேன். ஆகவே அதிகமான தண்டனை கொடுக்கவேண்டுமென்ற திருத்தத்தை கனம் அங்கத்தினர்கள் வாபஸ் பெறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5.30 p.m.

MR. SPEAKER : The amendment is—

" *For* sub-clause (1) *substitute* the following :—

' (1) Any employer who contravenes any of the provisions of sections 4, 5, 6, 7, 9, 10, 11, 12 and 19, shall on conviction, be punishable with fine, which, for a first offence, may extend to two hundred and fifty rupees and, for a second or any subsequent offences, may extend to five hundred rupees '."

The amendment was put and lost.

MR. SPEAKER : The amendment is—

" In sub-clause (1) *for* the words " may extent to " *substitute* the words ' shall be '."

" In sub-clause (1) *for* the words ' shall not be less than one hundred rupees or more than ' *substitute* the words ' shall be '."

The amendments were put and lost.

Clause 23 was put and carried.

Clause 24 was put and carried.

*Clause* 25.

MR. SPEAKER: The motion is—

"That clause 25 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move my amendment, namely:—

"*Add* the following as proviso 'Provided that the Inspector on such knowledge of the offence shall take such action as necessary to bring it before the court within thirty days'."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendment moved—

"*Add* the following as proviso 'Provided that the Inspector on such knowledge of the offence shall take such action as necessary to bring it before the court within thirty days'."

**SRI V. K. KOTHANDARAMAN**: இந்த மசோதாவின்படி முதலாளிகள் தவறு செய்து அதன் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டிய விஷயமாக 6 மாதம் வரையிலும் நீடிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்காகத்தான் முதலாளிகளுக்கு "பைன்" போடுகிறோம் என்று ஒரு வேளை கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அது எவ்வளவு என்பதைச் சொல்லிவிட்டால் நன்றாக இருக்கும். அந்த "பைனை" வாங்கித் தொழிலாளர்களுக்குக் கொடுத்துவிடப்போகிறோமே, எவ்வளவு நாட்கள் நீடித்தால் என்ன என்று சொல்லலாம். அந்தத் தொழிலாளிகள் சம்பளத்தில் பாதிதான் அந்த முதலாளிக்கு "பைனு" கப் போடுவார்களோ என்னமோ தெரியாது. இப்பொழுது வாங்குகிற சம்பளம் போதாது, இன்னும் அதிகப்படுத்தவேண்டும் என்று சொல்லுகிற நேரத்திலே, மாதக் கணக்கிலே நீடிக்கக்கூடிய நிலைமை இருக்குமானால், தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள். அந்தக் காரணத்தினால், 30 நாட்களுக்குள்ளே கோர்ட்டுக்குப் போய், விசாரணை செய்து தீர்ப்பு ஏற்படுகிற நிலைமை இருக்கவேண்டுமென்ற திருத்தத்தை கொண்டுவந்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டால், அதனால் முதலாளிகள் தப்பித்துக்கொள்ளத் தான் முடியும். காரணம் என்னவென்றால், அதிகமாக வேலையிருக்கிற காரணத்தால், 30 நாட்களுக்குள் கம்பிளெயின்ட் தாக்கல் செய்யா விட்டால் 30 நாட்களுக்குப் பிறகு "**barred by limitation**" என்று முதலாளிகள் தப்பித்துக்கொள்ள முடியும். அதனால்தான் இதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

MR. SPEAKER: The question is—

"*Add* the following as proviso 'Provided that the Inspector on such knowledge of the offence shall take such action as necessary to bring it before the court within thirty days'."

The amendment was put and lost.

Clause 25 was put and carried.

Clauses 26, 27 and 28 were put and carried.

*Clause* 29.

MR. SPEAKER: The motion is—

"That clause 29 do form part of the Bill."



SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move my amendment, namely—

"In sub-clause (2) (e) *add* at the end the following 'and arrangement for lodging facilities to the employees wherever they remain single'."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendment moved—

"In sub-clause (2) (*e*) *add* at the end the following 'and arrangement for lodging facilities to the employees wherever they remain single'."

**SRI V. K. KOTHANDARAMAN**: தொழிலாளிகள் தங்குவதற்கு இடவசதி செய்யவேண்டுமென்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, ஜாகை வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று திருத்தம் இருக்கிறது. தொழிலாளிகளுக்கு இன்னும் பல சலுகைகள் காட்டவேண்டுமென்று நான் சொல்லியவற்றில் இதுவும் ஒன்று. இப்பொழுதிருக்கிற நிலையிலே கட்டாயமாகச் செய்வதற்கு முடியாது என்று நினைக்கிறேன். அதனால்தான், இந்தத் திருத்தத்தை திருத்த கமிட்டியில் பேசுகிறபொழுது கூட நான் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக, கனம் சின்னதுரை அவர்கள் 29 (d)-ல் "**is to be completed**" என்று அச்சிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதை "**computed**" என்று வைத்துக்கொள்ளவேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, there seems to be some printing mistake. In sub-clause 2 (d) it is printed as 'free of charge to be completed'. It appears it must be 'free of charge to be computed'.

MR. SPEAKER: In my copy, it is 'free of charge to be computed'.

The question is—

"In sub-clause (2) (e) *add* at the end the following 'and arrangement for lodging facilities to the employees wherever they remain single'."

The amendment was put and lost.

Clause 29 was put and carried.

Clause 30 was put and carried.

*New clauses after clause* 30.

MR. SPEAKER: Hon. Members, Sri V. K. Kothandaraman and Sri N. Marudachalam have given notice that new clauses 31 and 32 be introduced. Sri M. Jagannathan has given notice that a new clause 31 be introduced. Are they moving them?

[5th April 1958

SRI V. K. KOTHANDARAMAN: Sir, I move my amendment, namely—

" After clause 30 *add* the following New Clauses, viz. :—

' 31. The employer of a catering establishment shall maintain a muster roll and Payment Register and produce same for inspection by the authorities prescribed :—

' 32. The employer of a catering establishment shall make necessary arrangement for medical check up, at the employer's cost, of all the employees, at least once a year, by a Registered Medical Officer duly authorized in a prescribed manner '."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendment moved—

" After clause 30 *add* the following New Clauses, viz. :—

' 31. The employer of a catering establishment shall maintain a muster roll and Payment Register and produce same for inspection by the authorities prescribed :—

' 32. The employer of a catering establishment shall make necessary arrangement for medical check up, at the employer's cost, of all the employees, at least once a year, by a Registered Medical Officer duly authorized in a prescribed manner '."

SRI M. JAGANNATHAN: Sir, I move the following amendment :—

" After clause 30 *add* the following as new clause 31 :—

' 31. *Advisory Committee.*—The State Government shall constitute an advisory Committee consisting of representatives of labour and employer with the Commissioner of Labour as Chairman to advise and report about the working of this Act '."

The amendment was duly seconded.

MR. SPEAKER: Amendment moved—

" After clause 30 *add* the following as new clause 31—

' 31. *Advisory Committee.*—The State Government shall constitute an advisory Committee consisting of representatives of labour and employer with the Commissioner of Labour as Chairman to advise and report about the working of this Act '."

SRI V. K. KOTHANDARAMAN: 31, 32-வது கிளாஸ்கள் இரண்டையும் புதிதாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று திருத்தம் கொண்டுவந்திருக்கிறேன். அதிலே ஒன்று டோக்கன்கள் கொடுக்கவேண்டும் என்று. எப்படி மற்ற தொழில்களிலே, தொழிலாளர்களுக்கு மாதம் ஒரு முறை டிக்கெட் கொடுக்கப்படுகிறதோ அதைப்போல டோக்கன்கள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்காக வேண்டி ரெஜிஸ்தர்கள் எல்லாம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று இன்னொரு இடத்தில் சொல்லியிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். இருந்த போதிலும், அதிகாரிகள் வரும்பொழுது அவைகள் சரியானபடி காண்பிக்கப்படுகிறதில்லை. அது எவ்வாறு இருந்த போதிலும், மாதம் ஒரு முறை டோக்கன்கள் கொடுப்பதன் மூலமாக, தொழிலாளர்கள் எவ்வளவு நாட்கள் வேலைக்கு வந்திருக்கிறார்கள், எவ்வளவு நாள் லீவு எடுத்திருக்கிறார்கள், ஆப்செண்ட் ஆக இருக்கிறார்களா என்பதையெல்லாம்



5th April 1958] [Sri V. K. Kothandaraman]

பரிசீலனை செய்வதற்கு உதவிகரமாய் இருக்கும். அது போன்று கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். 32 வது பிரிவின்படி வைத்திய வசதிகள் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதை இரண்டையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

SRI M. JAGANNATHAN: Sir, the new clause 31 reads like this : " The State Government shall constitute an Advisory Committee consisting of representatives of labour and employer with the Commissioner of Labour as Chairman to advise and report about the working of this Act." It is easy to pass a Bill like this. But the real benefit of this Bill lies in the manner how exactly this Bill is going to be implemented; and what exactly the Government are going to provide by way of machinery for the proper enforcement of this Act. Much depends upon the provision of proper machinery. I therefore feel, Sir, that the Government should come forward at least to constitute an Advisory Committee with representatives of the labour on the one hand and the employer on the other hand, presided over by the Commissioner of Labour just to review the working of this Act from time to time and report to Government as to the efficacy with which this Act is being worked in our State. If this is done, I think, Sir, the real intention and the spirit of this Bill will be achieved. I hope the Government will find no difficulty to accept my new clause.

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் வி. கே. கோதண்டராமன் அவர்கள் சொன்னது நாம் ஏற்கனவே நிறைவேற்றிய 29-வது பிரிவில் 2 (b)-ல் இருக்கிறது. 29-வது பிரிவிலே " **The State Government may, by notification, make rules for the purpose of carrying into effect the provisions of the Act.** " என்று போடப்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தப் பிரிவின் கீழ் வேண்டிய ரெஜிஸ்தர்கள் வைக்கவேண்டுமென்பதை நாம் வரையறுத்து விடலாம்.

அடுத்தபடியாக, வைத்திய வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். உடனடியாக எல்லாவற்றையும் செய்ய முடியாது. இதில் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் நான் முன்னேற்றம் காண முடியுமென்று முதலிலேயே சொன்னேன். அதை எல்லா அங்கத்தினர்களும் ஆதரித்தார்கள்.

ஆனால் " கிளாஸ் பை கிளாஸ் " வருகின்றபோது, கனம் அங்கத்தினர் கோதண்டராமன் ஒவ்வொன்றாக திருத்தங்கள் கொண்டுவந்து அதிகப்படி 5-40 p.m.
யான சலுகைகளை கொடுக்கலாம் என்று கருதுகிறார்கள். ஆனால் இதில் கஷ்டம் என்னவென்றால் எல்லா சலுகைகளும் " பேப்பரிலேயே " இருந்துவிட்டு, கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஜகன்னாதன் சொன்னதுபோல், கண்காணிப்பின்போது நிறைவேற்றுவதில் கஷ்டங்கள் இருக்கும். ஆகையால் நிறைவேற்றக்கூடிய அளவுக்கு சட்டம் செய்தால் நல்லது.

ஸ்ரீ ஜகன்னாதன் " ஒரு ஆலோசனை கமிட்டியின் மூலமாக இந்தச் சட்டம் எப்படி அமல் நடத்தப்படுகிறது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும் " என்று சொன்னார்கள். உண்மையாகவே இந்தச் சட்டம் சரியாக நடைபெறவேண்டும் என்று சொன்னால், இந்தத் தொழிலைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் இந்தத் தொழிலில் உள்ள குறைகளை இதற்கென நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளிடம் சொன்னால்தான் இந்த சட்டம் நன்றாக நடைபெறும். இந்தக் கமிட்டிகளைப்பற்றி எனக்கு எவ்வளவோ அனுபவம் இருக்கிறது. இவ்விதமாக அமைக்கப்படுகின்ற கமிட்டிகள் மேலெழுந்தவாரியாக பேசிவிட்டு போய்விடுகின்றனர். ஒரு தொழிலில் இருக்கக்கூடிய தொல்லைகள், தொந்திரவுகள் அவர்களுக்கு தெரியாது.

[Sri R. Venkataraman] [5th April 1958

இது திறமையாக நடக்க வேண்டும் என்று சொன்னால் இந்தத் தொழிலில் உள்ள அன்றாட பிரச்னைகளில் தலையிட்டு முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். இந்த அட்வைசரி கமிட்டி இப்பொழுது தேவை இல்லை. பின்பு எப்பொழுதாவது குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யும்போது இந்தவிதமான கமிட்டியை ஏற்படுத்தலாம். ஆகையால் இந்த அட்வைசரி கமிட்டி இப்பொழுது தேவையில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" *After* clause 30 *add* the following New Clauses, viz. :

' 31. The employer of a catering establishment shall maintain a muster roll and Payment Register and produce same for inspection by the authorities prescribed.'

' 32. The employer of a catering establishment shall make necessary arrangements for medical check up, at the employer's cost, of all the employees, at least once a year, by a Registered Medical Officer duly authorized in a prescribed manner '."

The amendment was put and lost.

MR. SPEAKER : The motion is—

" *After* clause 30 *add* the following as new clause 31 :—

5-40 p.m. ' 31. Advisory ommittee : The State Government shall constitute an Advisory Committee consisting of representatives of labour and employer with the Commissioner of Labour as Chairman to advise and report about the working of this Act '."

The amendment was put and lost.

*Clause* 1.

MR. SPEAKER : The question is—

" That clause 1 do stand part of the Bill."

SRI V. K. KOTHANDARAMAN : Mr. Speaker, Sir, I move the amendment namely :—

" *For* sub-clause (3), *substitute* the following :—

' (3) It shall come into force at once '."

SRI N. MARUDACHALAM : I second the amendment, Sir.

SRI N. MARUDACHALAM : I move my amendment—the second part only, namely :—

" *For* sub-clause (3) (*a*), *substitute* the following :—

' (3) (*a*) It shall come into force as follows :—

(i) at once in the case of the following Cities and Towns : Madras, Madurai, Coimbatore, Tiruchirappalli, Salem, Tanjore, Tirunelveli and Ootacamund;

(ii) not later than three months in all the municipalities constituted under the Madras District Municipalities Act, 1920; and



5th April 1958] [Sri N. Marudachalam]

(iii) on such date as the State Government may by notification appoint in all areas within the jurisdiction of—

(*a*) panchayats classified under the Madras Village Panchayats Act, 1950.

(*b*) panchayats constituted under the Travancore-Cochin Panchayats Act, 1950 '."

SRI V. K. KOTHANDARAMAN : I second the amendment, Sir.

SRI M. JAGANNATHAN : I move the amendment, namely :—

" In sub-clause (3) (*a*) after the word ' appoint ' *add* the words ' within a period of three months '."

SRI T. S. RAMASWAMY PILLAI : I second the amendment, Sir.

MR. SPEAKER : Amendment moved—

" *For* sub-clause (3), *substitute* the following :—

(3) It shall come into force at once '."

" For sub-clause (3) (*a*), *substitute* the following :—

' (3) (*a*) It shall come into force as follows :—

(i) at once in the case of the following Cities and Towns : Madras, Madurai, Coimbatore, Tiruchirappalli, Salem, Tanjore, Tirunelveli and Ootacamund;

(ii) not later than three months in all the municipalities constituted under the Madras District Municipalities Act, 1920; and

(iii) on such date as the State Government may by notification appoint in all areas within the jurisdiction of—

(*a*) panchayats classified under the Madras Village Panchayats Act, 1950.

(*b*) panchayats constituted under the Travancore-Cochin Panchayats Act, 1950 ."

" In sub-clause 3 (*a*) *after* the word ' appoint ' *add* the words within a period of three months."

SRI M. JAGANNATHAN : Mr. Speaker, Sir, sub-clause 3 (*a*) of clause 1 says that the Act shall come into force on such a date as the Government may notify. My amendment is that the Government may appoint any date within a period of three months from the date of passing this Act. I do not think there will be any technical difficulty for the Government to accept this amendment because I believe this is a very reasonable amendment.

THE HON. SRI R. VENKATARAMAN : சபாநாயகர் அவர்களே; இந்தச் சட்டத்தை நிறைவேற்றிவிட்டு எவ்வளவு சீக்கிரம் அமல் செய்ய வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் அமல் செய்வதற்கு நாங்கள் முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். இதில் காலதாமதம் ஆகாது. இதில் அநேக விதிகள் இருக்கின்றன. ஆகையால் சற்று அவகாசம் தேவை.

இதை எவ்வளவு துரிதமாக அமல் செய்யவேண்டுமோ அவ்வளவு துரிதமாக அமல் செய்ய வேண்டும் என்று சர்க்கார் விரும்புகிறார்கள். இதில் கால தாமதம் செய்யவேண்டும் என்கிற அபிப்பிராயம் கிடையாது.

MR. SPEAKER: The question is—

"*For* sub-clause (3), *substitute* the following:—

'(3) It shall come into force at once'."

"*For* sub-clause (3) (*a*), *substitute* the following:—

'(3) (*a*) It shall come into force as follows:—

(i) at once in the case of the following Cities and Towns: Madras, Madurai, Coimbatore, Tiruchirappalli, Salem, Tanjore, Tirunelveli and Ootacamund;

(ii) not later than three months in all the municipalities constituted under the Madras District Municipalities Act, 1920; and

(iii) on such date as the State Government may by notification appoint in all areas within the jurisdiction of—

(*a*) panchayats classified under the Madras Village Panchayats Act, 1950.

(*b*) panchayats constituted under the Travancore-Cochin Panchayats Act, 1950'."

The amendments were put and lost.

The amendment of Sri M. Jagannathan was by leave withdrawn.

Clause 1 was put and carried.

The Preamble was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move—

"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957), as amended, be passed."

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957), as amended, be passed."

**THE HON. SRI R. VENKATARAMAN:** கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைத்து இவ்வளவு சுமுகமாக இந்த சட்டத்தை நிறைவேற்றி வைத்தற்காக என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது சட்டம் எதுவும் இல்லாமல் கஷ்டப்படும் ஓட்டல் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக நன்மைகள் கிடைக்குமென்று எதிர்ப்பார்க்கிறேன். இதனால் ஓட்டல் முதலாளிகள் தங்களுக்கு பாதகம் ஏற்பட்டதாக நினைக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன். இதில் சம்மந்தப்பட்டவர்கள் சாட்சியம் சொல்லுகின்ற காலத்தில், இதில் உள்ள ஷரத்துக்களை வெகுவாக கண்டிக்கவில்லை. ஒன்றிரண்டு திருத்தங்கள் செய்யவேண்டுமென்றுதான் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அவைகளையெல்லாம் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளமுடியுமோ அந்த அளவுக்கு இந்த மசோதாவை



நிறைவேற்றிவைத்திருக்கிறோம். ஆகவே இதனால் ஓட்டல் தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படும் என்றுதான் நினைக்கிறேன். இதைச் சட்டமாக ஆக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**SRI P. S. CHINNADURAI:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சபை முன்பு பிரேரேபிக்கப்பட்டிருக்கும் ஓட்டல் தொழிலாளர் மசோதாவை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இந்த மசோதாவை கொண்டுவந்து நிறைவேற்றுவதற்காக கனம் அமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் வாழ்த்துகூற விரும்புகிறேன். இம்மாதிரி ஒரு சட்டத்தை இதற்கு முன் செய்ய முடியாதா? செய்திருக்க முடியும். ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு அப்போது மனம்தான் இல்லாமல் இருந்தது என்று நான் அறிகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கவேண்டும் என்று எண்ணம் இருந்தாலும் தயங்கி தயங்கி மசோதாக்களை ஒன்றன்பின் ஒன்றாக கொண்டு வந்துக் கொண்டிருக்கிறார்கள். எதிர் கட்சியில் இருக்கும் எனக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு நிறைய இருப்பினும், இந்த உண்மை நிலையை மறுப்பதற்கில்லை. இந்த சட்டம் இன்னும் தீவிரமாக அமலாக்கக்கூடிய முறையில் இல்லையே என்பதுதான் என்னுடைய குறை. இதற்கு அமைச்சர் அவர்கள் விட்டு கொடுத்த போதிலும், அரசியல் சூழ் நிலை விரிந்து கொடுக்கவில்லை என்றுதான் நினைக்கிறேன். இன்றைய தினம் தொழிலாளர்கள் அரசியலில் சிக்கி மிகவும் தாழ்மையான நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அந்தஸ்து குறைந்துபோய் இருக்கிறது. அவர்கள் ஓரளவுக்கு முன்னேறுவதற்கு ஒரு சிறு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுத்ததற்காக தொழிலாளர்களின் சார்பில், தொழிற்சங்கத்தின் ஊழியன் என்கின்ற முறையில் நான் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மசோதா கொண்டுவந்ததின் மூலம் கனம் அமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு சிறந்த சேவை செய்திருக்கிறார்கள். ஆனாலும், "பூவைச் சேர்ந்த நாறும் மணம் பெறுவது போல்" அரசியல் என்ற பெயரால், கனம் அமைச்சர் சார்ந்திருக்கிற கட்சி, "நாம் தான் இந்த சட்டத்தை கொண்டுவந்திருக்கிறோம்" என்று சொல்லிக் கொள்ளலாம். அப்படித் தான் செய்வார்கள். ஆனபோதிலும், கனம் அமைச்சர் அவர்கள் நீண்ட நாளாக தொழிலாளர்களோடு தொடர்பு கொண்ட காரணத்தால், அவர்களிடம் அனுதாபம் இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்கின்ற காரணத்தால் இந்த மசோதா கொண்டு வரப்பட்டது என்று கருதுகிறேன். ஆளுகின்ற கட்சியின் அரசியல் கொள்கைகளின் விளைவாக வந்தது என்பதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆகையால் கனம் அமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் வாழ்த்துக்கூறி இந்த மசோதாவை சட்டமாக நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னதை ஆமோதிக்கிறேன்.

**SRI N. K. PALANISAMI:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாவதைக் குறித்து இந்த நாட்டில் உள்ள எல்லா தொழிலாளர்களும் வரவேற்பார்கள். கனம் அமைச்சர் அவர்கள் விதிகளைக் கொண்டுவரக்கூடிய காலத்தில், தொழிலாளர்களுக்கு வேலை உத்திரவாதம் செய்வது அவசியம் என்று சொன்னேன்.

பொறுக்கு கமிட்டியின் முன்னால் சாட்சியம் அளிக்கும்போது முதலாளிகள் "இன்ஸ்பெக்டர்கள் அடிக்கடி வந்து தொந்திரவு கொடுக்கிறார்கள்" என்று சொன்னார்கள். இந்த இன்ஸ்பெக்டர்கள் ஓட்டலுக்குள் வந்தால் அவர்களுக்கு வேண்டிய காபிப் பலகாரம் முதலியவைகளை கொடுத்து இந்த முதலாளிகள் இவர்களை அனுப்பிவிடுகிறார்கள். ஆகையால் 2, 3 இன்ஸ்பெக்டர்களை வீட்டுக்கு அனுப்பினால் வேலை சரியாக நடக்கும் என்று நான் நினைக்கிறேன். சட்டத்தை சரியாக அமல் நடத்துவது இன்ஸ்பெக்டர்களின் கையில்தான் இருக்கிறது. ஏதாவது ஒரு தகராறு வந்தால்கூட அந்த இடத்திலேயே இன்ஸ்பெக்டர் வந்து சரியானபடி விசாரணை நடத்தக்கூடிய முறையில் ஒரு இன்ஸ்பெக்டரை போடவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[Sri N. K. Palanisami] [5th April 1958

5.50 p.m. மேலும் குறைந்தபட்ச சம்பளம் இந்த தொழிலாளர்களுக்கும் நிர்ணயிக்க வேண்டும். சமீபத்தில் திருச்சியில் பேசியபோதுகூட, கனம் அமைச்சர் அவர்கள் குறைந்தபட்ச சம்பளம் கொண்டு வரப்போவதாகச் சொன்னார்கள். அதைச் செய்யவேண்டும். அந்த தொழிலாளர்களுக்கு பிராவிடெண்ட், ஹெல்த் இன்ஷூரன்ஸ் முதலிய சௌகரியங்களும் கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்கு மெடிகல் பெஸிலிடிகளும் செய்து கொடுக்க வேண்டும். இதற்கு ஒரு கமிட்டி நியமித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri J. MATHA GOWDER** : கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தனிப்பட்டவர்கள் அல்ல. அரசியல் கட்சியிலேயே இருப்பவர்கள்தான். கனம் சின்னதுரை அவர்கள் அமைச்சர் அவர்கள் ஏதோ தனிப்பட்ட முறையில் இந்த மசோதாவைக் கொண்டு வந்தது போல் பேசினார்கள். அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி ஆளுகிறது. அது மக்கள் சர்க்கார். அவர்கள் மக்களுடைய நன்மைக்காகவும், தொழிலாளர்களுடைய நன்மைக்காகவும் பல நல்ல காரியங்களைச் செய்கிறார்கள். எந்த அமைச்சர் எந்த முறையில் கொண்டுவந்தாலும், மக்களின் நன்மைக்காக இருந்தால் சர்க்கார் அதை ஏற்றுக்கொள்கிறது. அந்த முறையிலேதான் இன்றைக்கு தொழில் அமைச்சராகிய கனம் வெங்கட்ராமன் அவர்கள் மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகையால், எதிர் கட்சிக்காரர்கள் காங்கிரஸ் அரசாங்கத்தைத் தனிப்படுத்தி தொழிலாளர்களைக் காப்பாற்ற யாரும் இல்லையே என்ற கூக்குரலைக் கிளப்பி காங்கிரஸ் சர்க்கார் செய்யவில்லை, அரசியல் கட்சி செய்யவில்லை என்று அவர்கள் கூறவேண்டாம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்களும் அந்தக் கட்சியில்தான் இருக்கிறார்கள் என்பதை அங்கத்தினர்கள் மறக்கக்கூடாது. தொழிலாளர்கள் வர்க்கத்திற்கு சர்க்கார் நன்மைகள் செய்து வருகிறார்கள். முக்கியமாக தோட்டத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில், எல்லாத்துறையிலும் பல சௌகரியங்களை செய்து கொடுத்து இருக்கிறார்கள். இன்றைக்கு அப்படிப்பட்ட நன்மைகளை ஹோட்டல் தொழிலாளிக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலே இந்த மசோதாவைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். இந்த மசோதாவை ஆதரித்து நிறைவேற்றிய எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இதை அமைச்சர் அவர்கள் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தொழிலாளர்களுடைய சார்பில் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Sri M. JAGANNATHAN** : Mr. Speaker, Sir, I rise to join the chorus of those who congratulate and praise the Hon. Minister for Industries and Labour for having brought forward this kind of beneficial legislation, which is a social and labour legislation. Sir, as hon. Members have already expressed, the Hon. Minister is wedded to a policy of helping the working classes more and more. Even yesterday, the Hon. Minister brought forward a Bill in this Assembly to help the women workers employed in factories and industrial establishments. To-day, this Bill also has been brought forward with the intention of helping the hotel workers and other employees in catering establishments who form the bulk of the population of the working classes in this State. Therefore, our Hon. Minister deserves congratulations and appreciation for his courage of conviction and for having brought forward this kind of beneficial legislation to help the working classes. I have no doubt in my mind that the Hon. Minister in spite of his party affiliation is having this attitude towards the working classes who form the proletariat of our State. The Hon. Minister, by bringing forward



5th April 1958] [Sri M. Jagannathan]

this kind of beneficial legislation has added a feather to his cap and I hope the Hon. Minister will interest himself more and more with this kind of legislation with a view to help the working classes in our State in future. Thank you, Sir.

**Sri A. GOVINDASAMY** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஹோட்டல் தொழிலாளிகள் மசோதா வந்த நேரத்தில், நாம் எல்லோரும் அதை நிறைவேற்றும் நேரத்தில் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு காப்பிகூட சாப்பிடாமல், நம் கடமை என்ற முறையிலே சட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தொழிலாளர் பிரச்சினைக்கு கட்சி பாகுபாடு பார்க்கவேண்டிய அவசியம் கிடையாது. சபைத் தலைவர் அவர்களே, தாங்கள் தொழில் அமைச்சர் பதவியில் இருந்த வேளையில், எதிர் கட்சியின் பாராட்டுதல்களைப் பெற்று இருக்கிறீர்கள். அதே முறையில்தான் இந்த தொழில் அமைச்சர் நிலையும். அவர்கள் தொழிலாளர் பிரச்சினைகளில் நல்ல அனுபவம் உள்ளவர்கள். உள்ளபடியே, தொழிலாளர் பக்கம் நின்று அவர்களுக்கு நன்மை பல செய்யவும், அவர்களுக்கு இடையூறு இருக்குமானால், அது அவருடைய கட்சியாக இருக்குமேயல்லாது, எதிர்கட்சியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். முதலாளி மனப்பான்மை கொண்டவர்கள் அவர்கள் பக்கத்திலேதான் இருக்கிறார்கள், இங்கு அல்ல. ஆகவே அமைச்சர் அவர்கள் தைரியமாகப் பணியாற்றவேண்டும் என்றும், எதிர்கட்சிகள் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து நல்ல மசோதாக்கள் வரும்போது, ஆதரவு கொடுத்து வருவார்கள் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த முறையிலே இன்றையதினம் ஹோட்டல் தொழிலாளர்கள் பாதுகாப்பு சட்டத்தை நிறைவேற்றும் நேரத்தில், சில திருத்தங்களை ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் சட்டமாகவரும் போது அவைகளைக் கவனித்துச் செய்கிறேன் என்று உறுதியை ஏற்றுக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்களை போதுமான சாவகாசம் எடுத்துக்கொண்டு ரூல்ஸ் பிரேம் பண்ணும்போது, அவைகளும் இடம் பெறும் அளவில் செய்து அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த சட்டத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பணம் வரும் மசோதாக்களானால், ஸேல்ஸ் டேக்ஸ் போன்ற சட்டங்களானால் உடனடியாக செய்வார்கள். ஆகவே, இதைக் காலங்கடத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சமையல் செய்ததைச் சுடச் சுடப் போட்டால்தான் நன்றாக இருக்கும். காலங்கடத்தக்கூடாது. இந்தச் சட்டத்தில் வேலை நேரம், மற்ற சலுகைகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால், அவர்களுடைய அடிப்படைப் பிரச்னை கூலி நிர்ணயம்தான். அதற்கு வேண்டிய சட்டத்தையும் அமைச்சர் அவர்கள் கொண்டு வருவார்கள் என்று நம்பி, இந்தச் சட்டத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆதரவும் நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**Mr. SPEAKER** : இன்னும் இரண்டு மூன்று அங்கத்தினர்கள் எழுந்து நிற்கிறார்கள். இப்பொழுதே, மணி ஆறடிக்கப் போகிறது. சில அங்கத்தினர்கள் பேசவேண்டுமானால் இன்னும் ஒரு அரைமணி நேரம் உட்கார்ந்தால் முடியும். எனக்கு ஆட்சேபமில்லை.

**If more hon. Members want to speak, the House will have to sit for another 15 minutes. It is already two minutes to six.**

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, எல்லோரும் சேர்ந்து சந்தோஷமாக நிறைவேற்றும் சமயத்திலே, இதை யார் செய்தார்கள் என்ற பிரச்னையை கிளப்பி, ஒரு குழப்பத்தை ஏற்படுத்தாமல் ஆதரவு அளித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இருந்தாலும் இந்த மசோதாவிற்கு எல்லோரும் ஆதரவளித்ததற்கு என் பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன்.

[Sri R. Venkataraman] [5th April 1958

கனம் கோவிந்தசாமி அவர்கள் ஸேல்ஸ்டாக்ஸாக இருந்தால் உடனடியாக அமல்நடத்துவார்கள். ஹோட்டல் பில்லானதால் காலங் கடந்துவார்கள் என்றார்கள். நான் இன்று ஸேல்ஸ் டாக்ஸை ஒரு வருஷம் தள்ளிப் போட்டு இருக்கிறேன். ஹோட்டல் பில்லை உடனடியாக நிறை வேற்றுகிறோம். ஆகவே, அம்மாதிரி பயம் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். தொழிலாளிக்கு எத்தனையோ வசதிகள் செய்ய வேண்டியிருக்கிறது. அவைகளெல்லாம் காலக்கிரமத்தில் செய்யலாம்.

இந்த குறைந்த பட்ச கூலி சம்பந்தமாக இப்பொழுது ஒரு நடவடிக்கையும் எடுப்பதற்கில்லை. அதை விட மிக முக்கியமான வசதிகள் இருக்கின்றன. குறைந்த பட்ச சம்பளம் நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியம்தான். ஆனால் எல்லாவற்றையும் எடுத்துப்போட்டுக்கொண்டு ஒன்றையும் செய்யாமல் இருப்பது எனக்கு வழக்கமில்லை. இந்த மசோதாவுக்கு ஆதரவு அளித்ததற்கு அங்கத்தினர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நிறை வேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**MR. SPEAKER : The question is—**

**"That the Madras Catering Establishments Bill, 1957 (L.A. Bill No. 18 of 1957), as amended, be passed."**

The motion was put and carried and the Bill as amended was passed.

**MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 7th April 1958.**

**The House then adjourned.**

## VIII—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory rules, orders and notifications.

93. *Second Supplementary Finanaical Statement for the year 1957-58 of the Madras State Electricity Board.*—[*Laid on the Table of the House under sub-section* (3) *of section* 61 *of the Electricity* (*Supply*) *Act,* 1948 (*Central Act* 54 *of* 1948).]

### B. Reports and other papers.

50. *Supplemental answer to the Legislative Assembly Question No. 37 asked by Sri N. K. Palaniswamy regarding concessions granted to Harijan converts.*



## APPENDIX I.

[Vide answer to starred question No. 557 asked by Sri T. Veluchamy at the meeting of the Legislative Assembly held on 5th April 1958, page 133 supra.]

*Copy of G.O. No.* 2400, *Public* (*General*) *Department, dated* 12*th August* 1957, *setting out the Terms of Reference to the Special Officer.*

[*Subject.*—Public Services—Administrative set up and staff position in the State—Enquiry ordered.]

In paragraph 20 of its report, the Official Committee for the Revision of Dearness Allowance to non-gazetted Government officers had recommended that a Special Officer of the rank of a Financial Commissioner may be appointed to scrutinise the organization in each department, in consultation with the heads of departments in charge, with a view to eliminate any tendency towards flabbiness in the administrative set-up of the State. The Government have decided to accept the above recommendation and to appoint a Special Officer of the rank of a Member (Board of Revenue) to conduct the enquiry. He will examine the question of reorganization of the various departments with a view to effecting reorganization wherever necessary and economies wherever possible. He will also look into the various items of departmental expenditure and contingencies to effect economies to the extent possible. The terms of reference will be as follows :—

(1) To examine whether adequate retrenchment or re-adjustment of staff has been made in the Secretariat, the offices of heads of departments and the regional offices of various departments with reference to the reduction of work consequent on the separation of Andhra and the territorial changes brought about by the State Reorganization, after making due allowance for the increase in work due to developmental activities connected with the Five-Year Plan and the National Extension Service.

(2) To examine whether, with reference to the volume and nature of the work now to be dealth with, the staff in the various offices is in excess of reasonable requirements and if so, what retrenchment is possible.

(3) To examine whether, without affecting efficiency, any economy of expenditure could be effected by—

(a) a redistribution in territorial *charges* in the district or region;

(b) redistribution of functions as between district officers regional officers and the heads of departments;

(c) delegations of administrative or financial powers; and

(d) changes in the method of organization and work in the various offices.

[5th April 1958

(4) To review the temporary posts in existence, to see whether their continuance is justified and whether and on what criteria such of them as reflect permanent needs can be made permanent.

(5) To examine the working of any "yard sticks" in force in any department for considering proposals for increase of staff to suggest any modifications that may be necessary, and to examine whether any such "yard stick" can be laid down for any other department.

2. The Special Officer will also be requested to examine and report whether a Financial Commissioner should be appointed on a permanent basis to ensure economy in administration, and if so, in what manner, after the initial examination of such department has been completed, he should function *vis-a-vis* the Head of the Department on the one hand and the Government on the other.

3. The Special Officer will also consider and report on the need to set up a permanent Organization and Methods Division in the Secretariat and the lines on which it should function.

4. The Special Officer will also examine and report on the following two requests of the Indian Officers' Association :—

(i) Sanction of annual increments to all gazetted officers of the State Government as in the case of non-gazetted Government servants, to enable them to get a little benefit by way of higher pay for leave salary and pension; and

(ii) Merger of 50 per cent dearness allowance with pay with immediate effect.

5. Orders regarding the appointment of the Special Officer will be issued from the Public (Special) Department. He will function in the Secretariat and will work under the direction of a Committee of the Cabinet which will issue instructions as to the order in which the departments should be taken up, the target to be aimed at, etc., and pass orders on the recommendation of the Special Officer relating to each department as and when he submits his report in regard to each department.

## APPENDIX II.

[Vide answer to starred question No. 571 asked by Sri A. Vedarathnam at the meeting of the Legislative Assembly held on 5th April 1958, page 138 supra.]

**(a) Number of Training Schools and number of pupil-teachers undergoing training—**

| *Name of district.* | *Number of training schools.* | *Number of pupil-teachers undergoing training.* |
|---|---|---|
| Madras .. .. .. .. .. | 10 | 1,296 |
| Chingleput .. .. .. .. .. | 5 | 469 |
| South Arcot .. .. .. .. .. | 9 | 977 |
| Tanjore .. .. .. .. .. | 14 | 1;542 |
| Madurai .. .. .. .. .. | 18 | 1,739 |
| Ramanathapuram .. .. .. .. | 12 | 1,473 |
| Tirunelveli .. .. .. .. .. | 18 | 2,025 |
| North Arcot .. .. .. .. .. | 11 | 895 |
| Salem .. .. .. .. .. | 7 | 657 |
| Tiruchirappalli .. .. .. .. | 15 | 2,527 |
| Coimbatore .. .. .. .. .. | 12 | 1,320 |
| The Nilgiris .. .. .. .. .. | 2 | 115 |
| Kanyakumari .. .. .. .. | 6 | 340 |
| Total .. | 139 | 15,375 |



5th April 1958]

(b) & (c) The number of Training Schools under Government management is 72 and their location is indicated below :—

1 Madras district .. ..
1 Government Training School, Egmore.
2 Government Training School for Muslims, Mount Road, Madras.
3 Secondary Training Section attached to the Madras-I-Azam, Mount Road, Madras.
4 Government Training School for Women, Royopetta, Madras.
5 Basic Training Section attached to the Lady Willington Training College, Madras.

2 Chingleput district .. ..
1 Government Basic Training School, Wallajabad.
2 Government Basic Training School, Chingleput.
3 Government Basic Training School, Tirur.
4 Government Basic Training School, for Women, Kancheepuram.

3 South Arcot district ..
1 Government Basic Training School, Villupuram.
2 Government Basic Training School, Cuddalore N.T.
3 Government Basic Training School, Chinna-Salem.
4 Government Basic Training School, Vadalur.
5 Government Basic Training School for Women, Tiruppapaliyur, Cuddalore N.T.

4 Tanjore district .. ..
1 Government Basic Training School, Kuruk thi.
2 Government Basic Training School, Vedaranyam.
3 Government Basic Training School, Tiruppuvanam.
4 Government Basic Training School, Tirumalaivasal.
5 Government Basic Training School for Women, Vedaranyam.
6 Government Basic Training School, Orthanad.
7 Government Basic Training School, Tanjore.
8 Government Basic Training School, Aduthurai.
Government Basic Training School for Women, Tanjore.

5 Madurai district .. ..
1 Secondary Training Section attached to the Government High School for Girls, Madurai.
2 Government Basic Training School, Kallupatti.
3 Government Basic Training School, Dindigul.
4 Government Basic Triaining School, Melur.
5 Government Basic Training School, Bodinaickanur.
6 Government Basic Training School for Women, Dindigul.
7 Government Basic Training School for Women, Bodinaickanur.

6 Ramanathapuram district ..
1 Government Basic Training School, Malliputtur.
2 Government Basic Training School, Ramanathapuram.
3 Government Basic Training School, Johilpatti.
4 Government Basic Training School. Muthanendal.
5 Government Basic Training School, Peraiyur.
6 Government Basic Training School, Parmakudi.
7 Government Basic Training School for Women, Ramanathapuram.
8 Government Basic Training School for Women, Palayamkottai.

7 Tirunelveli district .. ..
1 Government Basic Training School, Parivillikottai.
2 Government Basic Training School, Samugarangapuram.
**MR. SPEAKER**: இதுபற்றி இரண்டு நாட்கள் இண்டஸ்ட்ரீஸ் கோவாப்பரேஷன் டிமாண்ட் வந்தபோது விவாதித்தாகிவிட்டது.

If the hon. Minister is willing to answer it, I have no objection.

**SRI A. GOVINDASAMI**: கைத்தறி வார விழா கொண்டாடும் போது ரிபேட் கூட்டிக் கொடுத்ததுபோல் தீபாவளி, பொங்கல் பண்டிகை சமயத்திலும் ரிபேட்டை உயர்த்திக்கொடுக்க இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்யுமா?

**THE HON. SRI R. VENKATARAMAN**: அந்த மாதிரி சிபார்சு ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிறது.

**SRI P. S. CHINNADURAI**: நாம் அனுப்பியிருக்கிற கோரிக்கைக்கு மத்திய அரசாங்கம் பதில் அனுப்ப தாமதம் ஏற்படுவதால் இந்த பதிலைப் பெறுவதற்கு இன்றே ஒரு விசேஷ தூதரை இந்த ராஜ்ய சர்க்கார் அனுப்பி வைக்க முன்வருவார்களா?

**THE HON. SRI R. VENKATARAMAN**: It is a suggestion which may be considered.

[7th April 1958

*House servants in the City.*

* 597 *Q*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether Government have issued any instructions for the registration of servants in the houses in the City;

(*b*) if so, the total number registered so far; and

(*c*) the reasons for issuing such instructions?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir. However, the Commissioner of Police, Madras has issued instructions for collecting particulars from the employers in regard to the antecedents and descriptive particulars of their domestic servants.

(*b*) 1028.

(*c*) This step will help the Police in getting to know full particulars of any domestic servant given to misbehaviour or committing theft from the place where he or she is employed.

SRI A. A. RASHEED : Is it a compulsory registration or a voluntary one and who is in charge of such registration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is the Crime Branch which does it. It is not a compulsory thing.

SRI A. V. P. ASAITHAMBI : திருட்டுகளை ஒழிப்பதற்கு இது பாராட்டதக்க ஏற்பாடுதான். கோடம்பாக்கம் விசாரணைக்கு கதாநாயகனாக யிருக்கும் ஆறுமுகம் இந்தபட்டியில் உள்ளவர்களில் ஒருவரா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The question is out of order.

*Telegraphic lines*

* 598 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have moved the Central Government to put an additional pair of telegraphic lines between Nagercoil and Tirunelveli?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

SRI T. T. DANIEL : Whereas at present only one pair of telegraphic lines exists between Nagercoil and Tirunelveli and in certain cases when these lines go wrong, telegraphic messages take a long time to reach Tirunelveli as they have to be sent via Trivandrum and also the number of telegraphic messages have increased after integration, will the Government consider the desirability of recommending to the Central Government laying of one more pair of telegraphic lines between Nagercoil and Tirunelveli to avoid delay and inconvenience to the public?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that at present there are two telegraphic lines between these two stations, Nagercoil and Tirunelveli. For the purpose of a direct telephone carrier between Madurai and Trivandrum, erection of an additional pair of physical trunk lines between Tirunelveli and Nagercoil is also under consideration for departmental purposes.



7th April 1958]

*Co-operative credit societies*

* 599 *Q*—SRI M. JAGANNATHAN (on behalf of Sri K. Ramachandran) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of village co-operative credit societies in the Ramanathapuram district; and

(*b*) the amount advanced by way of loans through these societies in 1955–56, 1956–57 and 1957–58?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 619 as on 31st December 1957, Sir.

| | RS. |
|---|---|
| (*b*) July 1955—June 1956 ... ... ... | 16,38,871 |
| July 1956—June 1957 ... ... ... | 13,76,598 |
| July 1957—December 1957 ... ... | 15,51,941 |

*Magistrates*

* 600 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state the salary of the Subdivisional Magistrate and the First-class Magistrate in the Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Pending integration of their services and fixation of their pay, the Subdivisional Magistrates and each of the two First-class Magistrates allotted to this State from the former Travancore-Cochin State are drawing a salary of Rs. 265 and Rs. 230 per mensem respectively, in the former Travancore-Cochin scales of pay, namely, Rs. 250—15—400—25—500 for Subdivisional Magistrates, and Rs. 200—10—240—15—300 for First-class Magistrates. After their services are integrated and the posts held by them immediately before the appointed day are equated with the corresponding posts in this State, they will be permitted to opt either for the former Travancore-Cochin scale of pay or for the Madras scale of pay for the equated post.

SRI S. LAZAR : Which is more and which is less?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I cannot give that information but option has been given to the officers and so we need not worry about it.

SRI T. T. DANIEL : The First-class Magistrates allotted to this State from the former Travancore-Cochin State are having a scale of Rs. 200—300 whereas the First-class Magistrates of the Madras State are having a scale of Rs. 300—400. So, will the Government take that disparity into consideration and equalise their pay also from the date of the integration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have already stated that the officers have been given the option to choose either of the scales after integration and that will be all right for them.

[7th April 1958

*Trade unions*

* 601 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to Starred Question No. 1 answered on 3rd May 1957, whether there is any proposal to bring forward a Bill to recognize trade unions?

THE HON. SRI R. VENKATARAMAN: The subject was placed before the State Labour Advisory Board at its meetings held on 24th and 25th October 1957. In view of the divergent views expressed by the representatives of labour, it was decided that the subject may be discussed again at the next meeting of the State Labour Advisory Board. The date for the next meeting of the Board has not yet been fixed.

9-20 a.m. **SRI N. MARUDACHALAM**: ஸார், இதில் முனிசிபல் தொழிற் சங்கங்களையும் சேர்த்துக் கொள்ளப்படுமோ ?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes. The question may be addressed to the Hon. Minister for Local Administration.

*Game sanctuary*

* 602 *Q.*—SRI T. T. DANIEL: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to start a game sanctuary at Muthukulivayal in Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: There is no proposal at present to start a Game Sanctuary at Muthukulivayal in Kanyakumari district.

SRI T. T. DANIEL: There is an ancient palace at Muthukulivayal in Tovala taluk of the Kanyakumari district—near Balamore, six miles from Muthukulivayal—where there is water convenience throughout the year. There are hills adjacent to this palace and the whole place is teeming with life—buffaloes, elephants and deer live there. Will the Government therefore consider the desirability of going into the question of establishing a game sanctuary here? This could be established at a low cost.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: While there is no proposal to have any new Game Sanctuary, the Government have under consideration a proposal to organize State parks in some of the centres. The Government are also examining the possibility of opening one such park at Muthukulivayal.

*Dowry system*

* 603 *Q.*—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to bring forward a Bill to ban dowry system?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No, Sir.



7th April 1958]

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that as a result of this dowry system, many girls remain unmarried even up to thirty years? Will the Government consider the desirability of bringing forward a Bill to ban this system?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: I am, no doubt, aware of the prevalence of this evil practice. But the Government do not believe in mere legislation for preventing this.

**SRI K. ANBAZHAGAN**: இந்த வரதட்சிணை முறையை ஒழிப்பதற்காக மத்திய சர்க்கார் ஏதாவது சட்டம் கொண்டுவரப்போகிறார்களா ? அதற்கு தொடர்பு உடையதாக ஒரு சட்டம் இங்கு கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: மத்திய அரசாங்கம் இதற்கு என்ன செய்யப்போகின்றது என்பதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

**SRI A. V. P. ASAITHAMBI**: தலைவர் அவர்களே, வரதட்சிணை கொடுமையினால் பல இளம் பெண்கள் திருமணம் ஆகாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு செய்யமுடியுமா என்று ரஷீத் அவர்கள் கேட்டார்கள். அவ்விதம் அதாவது வேலையில்லாதவர்களுக்கு வேலை தேடி தரும் ஸ்தாபனம் இருப்பதுபோல் விவாகம் ஆகாதவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதற்குவேண்டி எம்ப்ளாய்மெண்ட் எகஸ்சேஞ்ச் மாதிரி ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்படுமா ?

**THE HON. SRI M. BHAKTAVATSALAM**: இப்போது அரசாங்கத்தினிடம் அவ்விதம் உத்தேசமில்லை. கனம் ஆசைத்தம்பி போன்றவர்கள் தீவிர பிரச்சாரம் செய்து மற்ற ஜாதிகளில் கல்யாணம் செய்துகொள்ள முன் வந்தால் இந்த தொல்லை நீங்கிவிடும்.

## UNSTARRED QUESTION.

*Supply of Electricity for Agricultural purposes*

11 *Q.*—SRI M. P. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state the names of the villages in the Attur taluk, Salem district, where electric energy was supplied for agricultural purposes in the year 1956–57 and 1957–58?

*A.*—Electricity was supplied for agricultural purposes to the following villages in Attur taluk, Salem district:—

I. In the year 1956–57—

(a) *Already electrified as on 31st March 1956*—

1 Abinavam.
2 Attur (New).
3 Chinnasamudram.
4 Dalvaipatti.
5 Erramasamudram.
6 Mulluvadi.
7 Narasingapuram.
8 Peddanaickenpalayam (Panchayat).
9 Sundarapuram.
10 Thapur Panchayat (Yethapur).
11 Thulukkanur.
12 Umaiyapuram.

[7th April 1958

(*b*) *Electrified during* 1956-57—

13 Appamasamudram.
14 Chandragiri.
15 Ichampatti.
16 Malleripatti.
17 Kalichettiyur.
18 Karathuvarajapalayam.
19 Malliakarai (Inam).
20 Mathur.
21 Periakrishnapuram.
22 Seeliampatti.
23 Thandavarayapuram.
24 Thennagadipalayam.
25 Valayamadevi (Panchayat).
26 Vaithiagoundapudur.

II. *In the year* 1957-58 (*up to the end of December* 1957)—

(*a*) *Already electrified as on* 31*st March* 1957—
The 26 villages listed under item I above.

(*b*) *Electrified in* 1957-58 *up to end of December* 1957—

27 Chokkanathapuram.
28 Sovakkaiputhur.
29 Malliakarai (Sirkar).
30 Gandipuram.
31 Ammanagar.
32 Arasanatham.
33 Manjini.
34 Kattukottai.
35 Chennakrishnapuram.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* FAILURE OF THE GOEVRNMENT TO SETTLE DISPUTES OF THE WORKERS IN THE STATE ELECTRICITY BOARD.

MR. SPEAKER: I have received notice under rule 40 from Mr. Kalyanasundaram and Mr. Govindasamy calling the attention of the Hon. Minister for Electricity to a matter of urgent public importance, viz., failure of the Government to settle the disputes between the State Electricity Board and its workers.

SRI A. GOVINDASAMI: சட்டமன்றத் தலைவர் அவர்களே, மின்சாரத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யப்போகிறோம் என்று நோட்டீஸ் கொடுத்த உடன் கனம் அமைச்சர் ராமய்யா அவர்களும், கனம் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்களும் இது விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்தி எதிர் கட்சித் தலைவர்களையும் மின்சார தொழிலாளர்களையும் வரவழைத்து ஒரு நெகோஷியேஷன் கமிட்டி போட்டிருக்கிறார்கள். ஆனால் இடைக்காலத்தில் அவர்களுக்கு ஒரு நிவாரணம் அளிக்கின்ற முறையில் அவர்களுடைய அடிப்படை சம்பளத்தை உயர்த்தி தீரவேண்டும். மற்றபடி அவர்கள் கேட்கிற உரிமைகளை கொடுப்பதற்கு ஒரு உத்திரவாதம் அளிக்கின்ற முறையிலும், அவர்களுடைய வேலை பளுவை குறைக்கின்ற முறையில் அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கவேண்டும். இவ்விதம் அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்காமல் இருந்து அவர்கள் இதில் அதிருப்தி கொண்டு வேலை நிறுத்தம் செய்வார்களானால் நமக்கு பெரிய நஷ்டம் ஏற்படும். வேலைநிறுத்தம் இப்போது ஏற்படாதவண்ணம் அமைச்சர் அவர்கள் தலையிட்டு ஒரு நெகோஷியேஷன் கமிட்டி போட்டார்கள்.



7th April 1958] [Sri A. Govindasami]

இப்போது அவர்களில், வேலையில் இருக்கின்ற நாற்பது ஆயிரம் பேர்களில் பத்தாயிரம் தொழிலாளர்களுக்குத்தான் நிரந்தர வேலையுண்டு. மற்றவர்களுக்கு தற்காலிகமான வேலைதான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் எல்லோருக்கும் நிரந்தரமான வேலையளிப்பதற்கும், அவர்களுடைய குறைந்த சம்பளத்தைத் உயர்த்துவதற்கும் நிவாரணம் அளிக்கின்ற வகையில் ஏதாவது அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI V. RAMIAH: Mr. Speaker, prior to the formation of the State Electricity Board, the workmen in the Electricity department were serving under the Government, but from 1st July 1957 have become employees of the State. There are about 41,400 workers employed under the Madras State Electricity Board and they are classified into four categories, viz., Operation Subordinate Service (7,700); Work-charged Establishment (1,700); Nominal Muster Roll Workers (22,000); and Casual workers (10,000). While the first two categories are paid monthly, the third category of workers are paid every fortnight, and the casual workers are paid by the day. The workers employed under the Operation Subordinate Service belong to the permanent Service Cadre, while all other workers are employed on a temporary basis. Even among the Operation Subordinate Service Workers, some are still temporary, awaiting confirmation in permanent vacancies.

The conditions of service of Electricity Employees have, in course of time, approximated to those of the employees under the Government and are not comparable to those of industrial employees.

The Madras Electricity Workers' Union, Madras, the Madras Electricity Department Operation and Construction Subordinate Service Association, Mettur Dam, the Madras Electricity Board Employees' Union, Pykara, the Madras Government Electricity Board Employees' Union, Papanasam and the Madras State Electricity Board Employees' Union, Vellore System, issued strike notices, dated 10th February 1958 stating that they will go on strike from 7 a.m., on 11th March 1958 to 7 a.m., on 13th March 1958, if their demands are not complied with. The membership of the first four Unions are respectively 1,788, 932, 427 and 742. The Madras State Electricity Board Employees' Union, Vellore System, is not a registered trade Union.

The demands relate to revision of wages, dearness allowance, permanency, free quarters, free electricity, free uniforms, gratuity, enhancement of the age limit for retirement, provident fund, uniform T.A., and leave rules, National and festival holidays, etc.

The Commissioner of Labour, Madras, held conciliation proceedings of the demands under Section 12 (1) of the Industrial Disputes Act, 1947 on 26th February 1958. The representatives of

[Sri V. Ramiah] [7th April 1958

the Electricity Board and the workers were present. The Commissioner of Labour could not, however, bring about an amicable settlement. He accordingly submitted a report to Government which was received on 5th March 1958.

As a matter of general policy, the Government prefer settlement of disputes by negotiation wherever possible. In this background, taking into account the special position of the Electricity undertaking as an essential public utility service, the conditions of employment, the nature of demands, the desirability of avoiding greater anomalies than are likely to be solved and the need to promote better relations, the Government felt that the dispute could be resolved by a Negotiating Committee in which the parties and the Commissioner of Labour could be associated.

Accordingly the Government proposed to the Madras State Electricity Board and to the workers, the constitution of a Negotiating Committee to conduct negotiations on the demands of the workers and to arrive at an amicable settlement in the matter. The Government have further discussed the matter with the parties and have appointed a Negotiating Committee under the Chairmanship of Sri M. V. Harihara Iyer consisting of the representatives of the Electricity Board and three representatives of the workers.

The Negotiating Committee has been asked to examine the issues relating to the revision of wages, classification and gradation of workers, D.A., Gratuity, Provident Fund, Permanency, etc., and to endeavour to arrive at an amicable settlement. The Committee has been requested to send its final report containing a Memorandum of settlement and/or its recommendations on the issues referred to it, within a period of two months. The Committee has been requested to send its final report containing a ditiously containing its recommendations on the quantum of interim relief, if any, to be granted to the workers.

In conclusion I would like to thank the leaders of the various parties in the Legislature who took an active interest in the matter with a view to preventing a strike by the Electricity Workers, and effecting an amicable settlement.

## III.—ADJOURNMENT MOTION *RE* TAMIL-SINHALESE LANGUAGE CONTROVERSY IN CEYLON.

9-30 a.m. MR. SPEAKER: I have received notice of an adjournment motion from three hon. Members, viz., Sri S. B. Adityan, Sri K. Appavu Pillai and Sri T. Velusamy which states—

"We, the undersigned members propose to move a motion for the adjournment of the business of the House for the purpose



7th April 1958] [Mr. Speaker]

of discussing a definite matter of urgent public importance, namely:—

In spite of the unanimous resolution of this Assembly on 13th May 1954 expressing concern over the position of the Tamil people of this State residing in Ceylon and requesting the Government to take suitable steps to prevent further deterioration of the position, a serious situation has developed on account of Tamil-Sinhalese language controversy and Tamil writings being tarred by bad elements in areas occupied by the Tamil people; and the Ceylonese authorities opening fire and killing two Tamilians and seriously injuring three more, all of them being persons belonging to this State and further clashes having occurred, resulting in more loss of lives. The failure of this Government to implement the resolution passed by this Assembly on 13th May 1954, has been the direct cause of the atrocities against the honour of the Tamil people and loss of their lives; and it is absolutely necessary that this Government should take serious notice of the position and make urgent representations to the Government of India to take immediate and effective steps to protect the lives and honour of the Tamil people of Indian origin in Ceylon."

Before giving my ruling on the admissibility of the adjournment motion, I wish to point out that under rule 41 of the Assembly Rules, a motion for an adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance may be made. There are certain considerations which must weigh with the Speaker in allowing or disallowing the adjournment motion. It should involve a matter of urgent and public importance. Secondly, the Government concerned must have the administrative responsibility in the matter that has arisen. So far as the implementation of the resolution of 1954 or the failure of the Government to implement it is concerned, by no stretch of imagination can it be stated that it is a matter of urgent public importance especially when we are in 1958. So, I do not think that a discussion on the failure of the Government to implement that resolution could become a matter of urgent public importance. But, I grant that what is happening in Ceylon may become urgent because of its importance. Anyway, before I give my ruling on the adjournment motion, I must satisfy myself whether the Government have any administrative responsibility in the matter. I should like to hear the Hon. Leader of the House or the Hon. the Home Minister on this point.

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, the resolution referred to in the adjournment motion relates to the repatriates from Ceylon and it has nothing to do with the internal happenings in Ceylon, which is a matter concerning two language sections belonging to Ceylon. It will therefore be highly improper either for this House or even for the Parliament to discuss that matter. So, without any further discussion, I would request you to rule the adjournment motion out of order.

[7th April 1958

MR. SPEAKER : Have the Government any administrative responsibility in the matter?

THE HON. SRI C. SUBRAMANIAM : Absolutely nil. Sir. The resolution also does not refer to this aspect. The resolution related to repatriates from Ceylon who are Indian nationals. But, this matter is purely the concern of the Ceylon Government. I therefore request you, Mr. Speaker, to rule it out of order without any further discussion.

MR. SPEAKER : As far as the resolution is concerned, I have already stated that it cannot be urgent after four years of the passing of the resolution and there is no doubt about it. But, I was only trying to know if the Government have any administrative responsibility in regard to this matter. I now understand that the Government have no responsibility in the matter. Therefore, I feel that this House is not competent to discuss it and I rule the adjournment motion out of order.

## IV.—PRESENTATION OF THE REPORT OF THE PUBLIC ACCOUNTS COMMITTEE FOR THE YEAR 1955-56.

SRI V. K. RAMASWAMY MUDALIAR : Mr. Speaker, I beg to present the report of the Public Accounts Committee on the Appropriation Accounts for the year 1955-56 and the Audit Report 1957, and the Finance Accounts of the Government of Madras for 1955-56.

## V.—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMONDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—*cont.*

### DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAX-S AND DUTIES ADMINISTRATION.

MR. SPEAKER : We have got two Demands for consideration to-day. One is Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration and Demand X—State Legislature. The time allotted for the discussion of each Demand is two hours. Now, the Hon. the Minister for Industries may move Demand VII.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, on the recommendations of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration."

கனம் சபாநாயகர் அவர்களே, ஏதோ 12 அல்லது 13 கோடி ரூபாய் வருமானத்தில் 1½ கோடி ரூபாயை சர்க்கார் வசூல் செய்வதற்காக செலவு செய்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படாமல் இருக்க ஓரிரண்டு வார்த்தைகளைச் சொல்ல முன் வந்திருக்கிறேன். இந்த மான்யக் கோரிக்கைத் தொகையாகிய 1 கோடியே 40 லட்சம் ரூபாயில் 95 லட்சம் ரூபாய் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு என்டெர்டெயின்மெண்ட் வரியில் அவர்களுடைய பங்கு 10-ல் 9 சத



7th April 1958] [Sri R. Venkataraman]

விகிதமாகக் கொடுத்துவிடப்படுகிறது. பாக்கி சுமார் 45 லட்ச ரூபாய்தான் பொது விற்பனை வரி அட்மினிஸ்டிரேஷனுக்காக செலவிடப்படுகிறது. 13 கோடி ரூபாய் வருமானத்தில் சுமார் 45 லட்சம் செலவழிப்பது மிகக் குறைவு. ஆகவே இந்த மான்யக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

விவாதத்தில் விற்பனை வரி விதிப்பு முறையை எந்த விதமாக அமைக்க வேண்டும் என்பதைப் பற்றிப் பேசுவது மிகவும் பொருத்தமாகயிருக்கும். ஆனால் இந்த விஷயம் இப்பொழுது பொறுக்குக் கமிட்டியின் முன்னால் இருப்பதால், அதைப் பற்றிப் பதில் ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் நான் இருக்கிறேன். முடிவுகள் எல்லாம் பொறுக்குக் கமிட்டி எடுக்க வேண்டிய நிலையிலிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Does it mean that the House will have a discussion on this Demand without the Hon. Minister's reply?

THE HON. SRI C. SUBRAMANIAM : He will reply to the other points.

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. I will be replying to the other points raised by the hon. Members.

MR. SPEAKER : Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration."

I understand that the Opposition parties have agreed that Sri V. K. Kothandaraman may move his cut motion to this Demand. So, he may move it.

SRI V. K. KOTHANDARAMAN : I move—

"That the allotment of Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : Cut motion moved—

"That the allotment of Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration be reduced by Rs. 100."

SRI V. K. KOTHANDARAMAN : விற்பனை வரி மசோதா இந்த சபைமுன் விவாதத்திற்கு வந்தபொழுது டாக்டர் லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட்டிலுள்ள குறைபாடுகளைப் பற்றியும், அதை அடிப்படையாக வைத்து விற்பனை வரி மசோதாவின் பேரிலும், வியாபாரிகள், பொது மக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் மிகவும் தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது. இதுபோன்ற விற்பனை வரி மசோதா நிறைவேற்றப்படுமானால், இதற்கு முன்னால் வியாபாரிகளும், பொது மக்களும் கணக்கு வைத்துக்கொள்ள முடியாத நிலையிலே எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்கிற ஒரு காரணத்தையொட்டி ஆளும் கட்சியை ஆதரித்துக்கொண்டிருந்த வியாபாரிகளும் சரி, ஆதரிக்காமல் இருந்த வியாபாரிகளும் சரி, மாகாண ரீதியிலே பலத்த கிளர்ச்சி செய்தார்கள், அதைவிட ஒரு பெரிய கிளர்ச்சி செய்யக்கூடிய நிலைமைதான் ஏற்படும்.

[Sri V. K. Kothandaraman] [7th April 1958

ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்பதைப் பற்றிக் கூறியபொழுது, இதை உடனடியாக நிறைவேற்றியாகவேண்டும், இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டும், பொறுக்குக் கமிட்டியிலே உடனடியாக நாம் விவாதம் நடத்தி, ஒரு முடிவுக்கு வந்து, இந்த எப்ரல் முதல் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவந்தாகவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், சிறிய வியாபாரிகளும், சட்டசபையிலுள்ளவர்களும் இதைப் பற்றிக் கூறியிருந்தபோதிலும், எப்ரல் முதல் தேதியிலிருந்தே அமலுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்தோடு இருந்தபோதிலும், மீண்டும் ஒரு வருட காலத்திற்கு ஒத்திப்போடவேண்டுமென்பதைக் கேட்கும்பொழுது, அதை வரவேற்கிறோம், சந்தோஷப்படுகிறோம். அதனால் விருதுநகரில் உள்ள பெரிய பெரிய நாடார்களோ, அல்லது செட்டியார்களோ பாதிக்கக் கூடிய அளவுக்கு இருந்திருக்கலாம். அவர்கள் எடுத்துச் சொன்ன பிறகு இதுபோன்ற ஒரு மாறுதல் வந்துவிட்டதோ என்னவோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. அது எப்படியிருந்தபோதிலும், மீண்டும் புனராலோசனை செய்யவேண்டுமென்று இருந்தபோதிலும், நல்ல முறையில் பரிசீலனை செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட் வந்த பிறகு, இப்பொழுது எப்படி ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, வியாபாரிகளுடைய அபிப்பிராயங்களையும் பொறுக்குக் கமிட்டியிலே இருக்கக்கூடிய அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு முடிவுக்கு வருவதற்கு முயற்சிக்கிறோமோ, அதே மாதிரி டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட் வந்தவுடனே வியாபாரிகளை அழைத்து, இதைப் போன்ற ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, எல்லா விஷயங்களையும் பரிசீலனை செய்திருந்தால், இதுபோன்று ஒரு வருடம் ஒத்திப்போடக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை இந்த சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்த விற்பனை வரியானது எப்படி ½ தம்படியில் ஆரம்பித்து இப்பொழுது பல முனை வரியாக எப்படி 2 அணா, 3 அணா என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டு, அதனால் கணக்கு வைத்துக் கொள்ள முடியாத நிலைமையில் எப்படி வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள், அதிகாரிகள் அவர்களை எவ்வாறெல்லாம் துன்புறுத்துகிறார்கள் என்பதையெல்லாம் பார்த்த பிறகு மீண்டும் அதைவிட மோசமான நிலையில் இருக்கக் கூடிய அளவுக்கு ஒரு மசோதாவைத் தயாரிப்போமேயானால், அதனால் வியாபாரிகளிடத்தில் பெரிய அளவுக்கு மனக் கசப்பும், அதிருப்தியும் ஏற்படும். ஆகையினால் நல்ல முறையில் மசோதாவைத் தயாரித்துக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகளும் பொது மக்களும் ஒரு முனை விற்பனை வரி கொண்டுவரவேண்டும் என்று சொல்கிறார்கள். எல்லா பொருள்களின் மீது ஒரு முனை விற்பனை வரி அல்ல. உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கவேண்டும். உணவுப் பொருள்களின் மீது விற்பனை வரி போட்டிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இன்றைக்கு கேரளாவில் ஒரு முனை விற்பனை வரிதான் இருக்கிறது. ஆனால் உணவுப் பொருள்களுக்கு அவர்கள் விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறார்கள். நாமும் அவ்விதம் விதி விலக்கு கொடுப்பதற்கு முயற்சி செய்தாகவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

9-40 a.m. விற்பனை வரி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், சரியான முறையில் கணக்கு வைத்திருந்தாலும், சரியானபடி இல்லாமல் இருந்தாலும் வியாபாரிகளை தொந்திரவு செய்கிறார்கள். ஒருவர் 50,000 ரூபாய் வியாபாரம் செய்ததாக கணக்கு வைத்திருந்தால், அதிகாரி "ஒரு லட்சம் ரூபாய் வியாபாரம் நடந்திருக்கிறது. அதைத்தான் குறைத்து 50,000 ரூபாய் என்று போட்டிருக்கிறாய்" என்று சொல்லி ஒரு தீர்ப்பு கொடுத்து அதிகமான வரியை போட்டுவிடுகிறார்கள். மேல் கோர்ட்டுகளுக்கு போவது என்று சொன்னால் அதில் வியாபாரிகளுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. இப்பொழுது சிறிய வியாபாரிகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பெரிய வியாபாரிகள் எப்படியோ சமாளித்துக்கொள்கிறார்கள்.



7th April 1958] [Sri V. K. Kothandaraman]

இப்பொழுது சென்னையில்தான் 'அப்பலேட் டிரிப்யூனல்' கோர்ட் இருக்கிறது. வியாபாரிகள் தங்களுடைய குறைகளை போக்கிக்கொள்வதற்கு 'அப்பலேட் டிரிப்யூனலு'க்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. தென் பிராந்தியங்களில் இருக்கக்கூடிய கன்னியாகுமரி, ராமனாதபுரம், மற்றும் பல ஜில்லாக்களிலிருந்தும் இங்கு வருவதற்கு அதிகப்படியான பணம் செலவழித்து வரவேண்டியதாயிருக்கிறது. ஆகவேதான் இந்த கோர்ட் சென்னையில் மட்டும் இருந்தால் போதாது. மேற்கொண்டு இன்னும் ஒரு கோர்ட்டும் இந்த ராஜ்யத்தின் மத்தியில் இருக்கக்கூடிய சேலத்திலோ அல்லது திருச்சிராப்பள்ளியிலோ ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அங்குள்ள வியாபாரிகளுக்கு பெரிய நன்மை செய்வதுபோல் ஆகும். சென்னையில் மட்டும் இந்த கோர்ட் இருப்பதினால் வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். பொது மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே கூடிய சீக்கிரம் இன்னொரு கோர்ட்டை ஏற்படுத்த வேண்டும் என்பது அவசியம்.

ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையோ ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இந்த கோர்ட் அங்கே போய் விசாரணை செய்யக்கூடியபடி ஏற்பாடு செய்யவேண்டும். சென்னையில் இருக்கும் கோர்ட் மற்ற ஜில்லாக்களுக்கு செல்ல வேண்டும் என்றால் அதில் மிகுந்த சிரமம் இருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் தொழிலாளர்களுக்காக இருக்கும் டிரிப்யூனல் [illegible] ஒவ்வொரு ஜில்லா விற்கும் செல்கிறது. அந்த டிரிப்யூனல் [illegible] எந்தெந்த ஜில்லாவில் கேஸ்கள் நடக்கின்றதோ அந்தந்த ஜில்லாக்களுக்கு நேராக [illegible] போய் விசாரணை செய்து வருகிறார்கள் என்பதை [illegible] நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போன்று வியாபாரிகளுக்கு [illegible] என்று ஏற்படுத்தப் பட்டிருக்கும் 'அப்பலேட் டிரிப்யூனல் [illegible] கோர்ட்டுகளும் எந்த இடத்தில் கேஸ்கள் நடக்கிறதோ அந்த ஜில்லாக்களுக்கு சென்று விசாரணை நடத்தினால் வியாபாரிகளுக்கு பெரிய நன்மை செய்வதுபோல் ஆகும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு முனை விற்பனை வரியிலிருந்து [illegible] பொருள்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று மறு [illegible] முறையும் கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப்படாத [illegible] தன்மையிலும், பொது மக்கள் பாதிக்கப்படாத தன்மையிலும் விற்பனை [illegible] விவாதம் செய்து, அதை நல்ல முறையில் கொண்டுவர வேண்டும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*SRI A. S. DURAISWAMI REDDIAR: கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது நமது ராஜ்யத்தில் சர்க்காருக்கு அதிக வரும்படியைக் கொடுப்பது இந்த விற்பனை வரிதான். கடந்த காலத்தில் நிதி அமைச்சராக இருந்த ஸ்ரீ கோபால் ரெட்டி அவர்கள் இதை ஒரு காமதேனு என்று சொன்னார்கள். உண்மையாகவே நம்முடைய ராஜ்யத்திற்கு அது ஒரு காமதேனு தான். அதைக் காப்பாற்ற வேண்டியது மிகவும் அவசியம். அந்த காமதேனுவிற்கு எந்த விதமான வியாதியும் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். வரி வசூல் செய்கிறவர்களுக்கு கஷ்டம் இல்லாமலும், வரி செலுத்துகிறவர்களுக்கு யாதொரு கஷ்டம் இல்லாமலும், சர்க்காருக்கு வருகின்ற வரும்படி குறையாமலும் இருப்பதற்காக டாக்டர் லோகநாதனை இதற்காக வேண்டி பரிசீலனை செய்து ரிபோர்ட் தயாரிக்கும்படி நியமித்தார்கள். இதைப்பற்றி சர்க்காரை பாராட்ட வேண்டியதுதான். டாக்டர் லோகநாதன் அவர்களும், ஒவ்வொரு ஊராகச் சென்று, ஒவ்வொரு வியாபாரியையும் நேராக அழைத்து விசாரணை செய்து, வியாபாரிகளுக்கு தொந்திரவு இல்லாமலும், வசூல் செய்கிறவர்களுக்கு கஷ்டம்

[Sri A. S. Duraiswami Reddiar] [7th April 1958

இல்லாமலும், சர்க்காருக்கு வருகின்ற வருமானம் குறைந்து விடாமலும், நன்றாகப் பரிசீலனை செய்து ஒரு ரிபோர்ட்டை தயார் செய்து அனுப்பினார்கள். அந்த ரிபோர்டையும் நமது சர்க்கார் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். அதில் சில முக்கியமான விஷயங்களை ஒப்புக்கொண்டு, சில விஷயங்களை தள்ளி விட்டார்கள்.

இந்த வரியை கட்டாமல் ஏமாற்றுவதற்கு முக்கியமான காரணம் பல முனை விற்பனை வரிதான் என்றும், விகிதாசாரம் அதிகமாக இருப்பதினால் வியாபாரிகள் ஏமாற்றம் செய்கிறார்கள் என்றும் அவர் சொல்கிறார். ஆகையால் பலமுனை விற்பனை வரி இருந்தாலும் விகிதாசாரங்களை குறைக்க வேண்டும் என்பதுதான் அவருடைய ரிபோர்ட்டின் முக்கியமான தாத்பரியம்.

விகிதாசாரங்களை குறைக்க வேண்டும் என்று சொல்லும்போது சர்க்காரின் வரும்படியையும் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் அவர் சொல்லியிருக்கிறார். அவர் ரிப்போர்டில் கீழ்க்கண்டபடி சொல்லியிருக்கிறார்.

“இந்த சிபார்சை நான் கூறும் நேரத்தில் அரசாங்கத்தின் வருமானத்தில் ஏற்படுகின்ற நிலைமைகள் பூராவையும் கணக்கில் வைத்தே கூறுகிறேன். இந்த அரசாங்கம் பலகட்ட விற்பனை வரி விகிதத்தை அதிகப்படியில்லாத அளவான விகிதத்தில் ஏற்படுத்தி முடிவு செய்யுமானால் அந்த முடிவு விற்பனை வரி முறையிலேயே ஒரு சக்தி வாய்ந்த வெற்றி தரக்கூடிய சூழ்நிலையை நிச்சயம் ஏற்படுத்தும் என்று மனவுறுதியோடு நம்புகிறேன்” என்று அவர் சொல்லியிருக்கிறார்.

பல முனை விற்பனை வரியை வைத்துக்கொண்டிருந்தாலும், விகிதாசாரத்தை குறைக்க வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். நம்முடைய சர்க்கார் அந்த ரிபோர்ட்டை அப்படியே ஒப்புக் கொள்ளவில்லை. இப்படி இதை அப்படியே ஒப்புக்கொள்ளாததனால் சர்க்காரின் வருமானம் குறைந்து விடும், வியாபாரிகள் ஏமாற்றிக் கொண்டுதான் இருப்பார்கள் என்று நான் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் லோகநாதன் அவர்கள் உணவுப் பொருள்களின் மீது ½ சத விகிதம் வரி விதிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் நமது சர்க்கார் உணவுப் பொருள்களின் மேல் 1 சத விகிதம் வரி விதித்திருக்கிறார்கள். சில உணவுப் பொருள்களின் மேல் 2 சதவிகிதம் வைத்திருக்கிறார்கள்.

9-50 a.m. பல முனை வரி கொடுப்பதில், எதிர்ப்புகள் இருக்கின்றன. கிளர்ச்சிகளும், கடையடைப்புகளும் வருகின்றன. லோகநாதன் ரிப்போர்ட்டை ஏற்றுக் கொண்டு எல்லாப் பொருளுக்கும் அரை சதவிகிதம் விதிக்கவில்லை என்று அரசாங்கத்தார் ஒரு பர்ஸெண்டும், இரண்டு பர்ஸெண்டும் விதித்து இருக்கிறார்கள். உணவு தானியம் என்றால் அரிசி, கம்பு, தினை, வரகு எல்லாம் சேர்ந்ததுதான். ஆனால், இன்று அரிசிக்கு மட்டும் ஒரு பர்ஸெண்டும், மற்ற தானியங்களுக்கெல்லாம் இரண்டு பர்ஸெண்டும் கொண்டு வருகிறார்கள். ஆகவே சர்க்கார், லோகநாதன் ரிப்போர்ட்டையும் எடுத்துக் கொள்ளவில்லை, மக்கள் கருத்தையும் எடுத்துக் கொள்ளவில்லை. மத்திய சர்க்கார் உணவு தானியத்திற்கே வரி கூடாது என்கிறார்கள். இந்தக் கருத்தையும் விட்டு விட்டு சர்க்கார் உணவு தானியத்திற்கும் அதிக விகிதம் செய்திருக்கிறார்கள். மேலும், லோகநாதன் அவர்கள் ரூ. 10,000-க்கு மேல் விற்பனை வரி போடவேண்டும் என்கிறார்கள். ஆனால், சர்க்கார் ரூ. 5,000 என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இம்மாதிரி லோகநாதன் ரிப்போர்ட்டையும் விட்டு விட்டு, வியாபாரிகள் கோரிக்கையையும் விட்டு விட்டு சர்க்கார் செய்து இருக்கிறார்கள்.

**The Hon. Sri R. VENKATARAMAN**: லோகநாதன் ரிபோர்ட்டையும் விட்டு விட்டு, வியாபாரிகளையும் விட்டு விட்டு, டாக்ஸேஷன் என்குயரி கமிட்டி சொன்னதை போட்டிருக்கிறோம்.



7th April 1958]

**Sri A. S. DURAISWAMI REDDIAR**: சந்தோஷம். ஆனால் இப்பொழுது ரூ. 5,000 என்று போட்டால், அதைப் பன்னிரண்டால் வகுத்து, முப்பதால் வகுத்தால், என்ன ஆகும்? ஒரு நாளைக்கு ரூ. 14-க்கு வியாபாரம் செய்யும் ஒவ்வொரு சிறு வியாபாரியும் பாதிக்கப்படுவான். இப்பொழுது பொருள்கள் விற்கும் விலையில், ரூ 14 ஒரு பெரிய தொகையல்ல. வியாபாரிகள் லைசென்ஸ் வாங்கவேண்டும் என்றிருக்கிறது. ஏற்கனவே ரூ. 6 ஆக இருந்தது. அது 10 அல்லது 20 ஆனாலும் வியாபாரிகள் கொடுக்கத் தயார். ஆனால் லோகநாதன் சொன்னபடி வியாபாரத் தொகை ரூ. 7,500-க்கு ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று வைத்திருந்தால் பாதகமில்லை. சர்க்கார் வைத்திருப்பது ரூ. 4,000.

நெல்லுக்கு செலுத்தும் வரியை ரிபேட்டு கொடுக்காமல், நெல்லுக்கும், அரிசிக்கும் அரை விகிதம் என்று போட்டால், வியாபாரிகள் ஏமாற்ற மாட்டார்கள். இரண்டு இடங்களில் போடுவதனால், அதற்காக கணக்கு வைப்பதும் தொல்லையான காரியங்கள்.

கமிஷன் ஏஜண்டு விஷயம் சட்டத்தில் விளங்கவில்லை. லோகநாதன் ரிப்போர்டில் அதிக பக்ஷம் இவன் ரூ. 1,000 லைசென்ஸ் கட்டணும். பிரின்ஸிபாலுக்கு ரிபேட்டு கொடுக்கணும் என்கிறார். அந்த கமிஷன் வியாபாரி யாரிடம் வாங்குவது? அது கஷ்டமான காரியம். கமிஷன் வியாபாரிகள் லைசென்ஸ வாங்கினால், ஸேல்ஸ் டாக்ஸ் கொடுக்க வேண்டாம். ஸேல்ஸ் டாக்ஸ் வைத்தால், இப்பொழுது போடப் போகும் லைசென்ஸ் கட்டணம் வேண்டாம். அதிகபக்ஷம் ரூ. 1,000 லைஸென்ஸ் என்பதற்கு ஆட்சேபம் இல்லை.

ஆகவே இம்மாதிரி பலவிதமான வரிகள், இரண்டு பர்ஸெண்டும், ஒரு பர்ஸெண்டும் போடாமல்; அரை பர்ஸெண்டு போட்டால் ரொம்ப நல்லதாக இருக்கும்.

முக்கியமான ஒரு விஷயம். கணக்கில் இல்லாத சரக்கை பறிமுதல் செய்வது என்பதை எடுத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR**: கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே சமயத்தில் எனக்கு தோன்றும் சில யோசனைகளை வெளியிட விரும்புகிறேன். அமைச்சர் அவை, குறிப்பாக அமைச்சர் அவர்கள் அதை முடிந்தமட்டிலும் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். நமது மாகாணத்தில் விற்பனை வரி ஒரு முக்கியமான வருமானமாக பல வருஷங்களாக இருந்து வருகிறது என்பது தெரிந்த விஷயம். மதுவிலக்கு மூலம் பல கோடி ரூபாய்களை இழந்துவிட்ட நாம், சிறந்த முன்னேற்றம் அடையவேண்டிய இந்தத் தருணத்தில், பண நிலைமையில் கஷ்டம் ஏற்படாதவாறு சமாளிக்க இந்த விற்பனை வரி ஒரு வகையில் உதவுவதன் காரணமாக அப்போதைய நிதி அமைச்சர் அவர்கள் இதை காமதேனு என்று குறிப்பிட்டார்கள் போலும். இதில் யார் யார் எந்த அளவிற்கு சாமான்கள் வாங்குகின்றார்களோ, அந்த அளவிற்கு வரி செலுத்த வேண்டிய ஒரு நியாயம் இருப்பதனாலே, இந்த வரியைப்பற்றி யாரும் அதிகமாக ஆட்சேபிக்க வேண்டியதில்லை என்று பல வருஷங்களாக பேசிக் கொண்டிருக்கிறோம். அந்தமுறையில் பார்க்கிறபொழுது கூட, இதை அடிக்கடி நமக்கு எடுத்துச் சொல்லி தங்களுடைய குறைபாடுகளை, வருத்தங்களை தெரிவிப்பவர்கள் வியாபாரிகள். நமது நாட்டிலே விவசாயிகளை முக்கியமானவர்களாக கருதுகிறோம். அடுத்தபடியாக நாம் எடுத்துக்கொள்ளவேண்டுமானால் வியாபாரிகளைத்தான். விவசாயிகள் ஏதோ அன்றாடம் வேலை செய்து, மாலையில் வீடு திரும்புகிறார்கள், அதிகமாக சிந்திப்பதற்கு அவர்களுக்கு அவகாசமில்லை என்று ஒருவாறு 10 a.m.

பேசலாம். வியாபாரிகளைப் பற்றி நாம் அப்படிச் சொல்ல தேவையில்லை. 'ஸன் நெவர் செட்ஸ் இன் தி பிரிட்டிஷ் எம்பயர்' என்று சொல்லக்கூடிய, உலகத்தையெல்லாம் ஆண்டோம் என்ற பெருமையைக் கொண்ட ஒரு அதிகார சர்க்கார், பிரிட்டிஷ் சர்க்கார், பூராவும் வியாபாரிகள் என்பதன் மூலம் பெருமை கொண்டார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. நம் நாட்டிலே அப்பேர்ப்பட்ட வியாபாரிகளுடைய தன்மைக்கு குறைவு எந்த காரணத்தையும்கொண்டு நாம் கொள்ளமுடியாது. ஆகவே விற்பனை வரியை நாம் ஒருவகையில் விடமுடியாது என்றாலும், அதன் மூலம் எவ்வளவு பணம் தேட முடியுமோ அதற்கு எல்லா வழியையும் செய்யவேண்டுமென்று சொன்னாலும், அதே சமயத்தில் வியாபாரிகளுடைய முறையீட்டை நாம் நிச்சயம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதில் அமைச்சர்களோ அல்லது வேறு யாருமோ சந்தேகம் கொண்டவர்களாக இருக்கவில்லை என்பது நிதர்சனம். ஆகவே இதற்காக பலமுறை பலகமிட்டிகளை நியமித்தார்கள். சமீபத்தில் டாக்டர் லோகநாதன் அவர்களைக் கொண்டு இதை பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. டாக்டர் லோகநாதன் அவர்கள் எவ்வளவு வல்லுணராக இருந்தபோதிலும், அவருடைய ரிபோர்ட் பற்றி நாம் உடனே குறைகள் கூறவில்லை என்றாலும், இம்மாதிரி விஷயத்திற்கு ஒரு தனி நபரை கமிட்டியாக போட்டு பரிசீலனை செய்வதைவிட, எப்பொழுதுமே ஒன்றுக்கு மேற்பட்ட கனவான்களைக் கொண்டு, இம்மாதிரியான கமிட்டிகளை அமைத்து பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும். இந்த நாட்டிலுள்ள வியாபார சமூகத்தை பாதிக்கின்ற ஒரு பெருத்த சிக்கலான விஷயத்தை பரிசீலிக்கும்பொழுது, இன்னும் இரண்டு நிபுணர்கள், அதிகாரிகள், சட்டசபை அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட வியாபாரிகளின் பிரதிநிதிகள் இவர்கள் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்து ஒரு ரிபோர்ட் தயாரித்திருந்தால், கொஞ்சம் காலமானாலும் சாவகாசமாக இம்மாதிரி செய்திருந்தால், முடிவு எப்படி இருந்தாலும் மக்களுக்கு நன்றாக ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கும் என்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. இப்பொழுது பல அரிய கருத்துகளை டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையில் கண்டிருந்தாலும், அவைகள் வரவேற்கத் தக்கவைகளாக இருந்தாலும்கூட, முக்கியமாக வியாபாரிகளுடைய மனதை திருப்திப்படுத்த வேண்டுமென்பதை நாம் நிச்சயமாக கொள்ளவேண்டும்.

இதிலே ஒன்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு நன்மையை செய்வதில் நிதானிக்கலாம் அல்லது செய்யாமலும் தவறிவிடலாம். நன்மைவேண்டும் என்று பல முறையீடுகளுக்குப் பிறகு நாம் சிறிது விட்டுக்கொடுத்து சில நன்மைகளை செய்துவிட்டு திடீரென்று பின்வாங்குவது என்று சொன்னால், இந்த நாட்டில் எந்த விஷயத்திலும் அது மிகவும் கஷ்டமாக இருக்கும் என்பதை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். சில பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருக்கிறோம். அவைகள் மறுபடியும் வந்துவிடுமோ என்று அஞ்சி இந்தமுறை நாங்கள் பட்ஜெட் ஸெசஷனுக்கு சென்னைக்கு வந்த நாள் முதல் சதா வியாபாரிகள் எங்களை விடாமல் பின்பற்றி தங்கள் முறையீடுகளை தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் முறையீடுகள் எவ்விதம் இருக்குமாயினும், என்னைப் பொறுத்தவரையில் எங்கள் ஊரில் கிருஷ்ணகிரி, காவேரிபூம்பட்டிணத்தில் நாட்டுச் செக்கில் எண்ணை ஆட்டுவது ஒரு கிராமக்கைத்தொழிலாக இருந்து வருகிறது. பல வருஷங்களுக்கு முன்பு கோபால ரெட்டி அவர்கள் இருந்த காலத்திலேயே நாங்கள் எல்லாம் முறையிட்டுக் கொண்டதன்பேரில் சாதாரணமாக நாட்டுச் செக்கில் எண்ணெய் ஆட்டும் தொழிலாளிகளுக்கு, வாணிய வைசிய சமூகத்தினர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அதன்மூலம் எத்தனையோ குடும்பங்கள் எங்கள் ஊரில் அந்தத்தொழிலை தொடர்ந்து செய்து வருகிறார்கள். சமுதாய நல அபிவிருத்தி திட்டம், தேசீய அபிவிருத்தித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 'வார்தாகானியில்' எண்ணை ஆட்டும் தொழில் விஸ்தரிக்கப்பட்டு பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கின்ற இந்த



நேரத்தில், எங்கள் பிராந்தியங்களிலும், ஈரோடு போன்ற இடங்களிலும் இந்தத் தொழிலை தொடர்ந்து நடத்திக்கொண்டு வருபவர்கள் பெருமகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்தத் தொழில் அவசியம் தேவை என்று கூறுகின்ற நேரத்தில், திரும்பவும் அதற்கு ஏதாவது வரி விதிப்பார்களேயானால், அது மிக மிக வருந்தத்தக்கது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படியளிக்கப்பட்ட விதிவிலக்கை இவர்கள் தவறாக உபயோகப்படுத்துகிறார்கள் என்ற காரணத்தினால், ஒருவேளை இதற்கு திரும்பவும் வரி போடவேண்டுமென்று நினைக்கலாம். இது விஷயமாகச் சர்க்காருக்கு ஏதாவது ஆதாரங்கள் வந்திருந்தால் அது முழுவதும் சரியாக இருப்பதற்கு நியாயமில்லை என்பதை எங்கள் ஊரிலே பெருவாரியாக நடத்தப்படும் இந்தத் தொழிலை நேரடியாக கண்டறிந்த நான் தைரியமாக சொல்ல முன்வருவேன். ஒன்றிரண்டு இடத்தில் தவறாக இருந்தாலும், அதற்காக சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்க வேண்டுமே ஒழிய, பூரா சலுகையுமே ரத்து செய்துவிடுவது சரியல்ல. மொத்தமாக இந்தத் தொழிலுக்கு விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு கொடுத்திருப்பதை எடுத்துவிடவேண்டுமென்று யாராகிலும் சிபார்சு செய்திருந்தால், செலக்ட் கமிட்டி முன்பு யாராகிலும் இதுபற்றி சாட்சியம் கூறியிருந்தால், தங்கள் காரியங்களை சாதித்துக்கொள்வதற்காகத் தான் அம்மாதிரி யாராகிலும் கூறியிருக்கக்கூடும் என்று நான் சொல்ல முடியும். ஆகவே, இது விஷயமாக மிக மன்றாடி சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு சமயத்தில் செய்த நல்ல காரியத்தை மறுசமயம் வாபஸ் வாங்குவது இந்த நாட்டில் நல்லது அல்ல. குறிப்பாக இந்தத் தொழிலைப்பற்றி எங்கள் ஊரில் எனக்கு பரிச்சயம் உண்டு. அவர்கள் இம்மாதிரி இந்த விதிவிலக்கை ஒன்றும் துஷ்பிரயோகப்படுத்தவில்லை. தயவு செய்து மறுபடியும் இந்தத் தொழிலுக்கு வரி விதிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இரண்டாவதாக நான் சொல்ல ஆசைப்படுவது பாலைப்பற்றித் தான். உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டியது நியாயம். அதில் எந்த அளவிற்கு நம் சர்க்கார் செய்யமுடியுமோ, அந்த அளவிற்குச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதிலும் பாலுக்கு கண்டிப்பாக விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். அதிலும் கூட்டுறவு சங்கங்களினால் பால் விற்பனை அதிகமாக நடத்தப்படுகிறது. பாலுக்கு வரியிலிருந்து விலக்கு அளித்தால் நான் மற்றவர்களும் 'கூட்டுறவு முறையில் சேர்ந்து பால் விற்பனை நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும். நாட்டில் நல்ல பிரஜைகள் உற்பத்தியாவதற்கு முக்கியமாக காமதேனுவின் பால் இன்றியமையாதது. காமதேனுவின் பாலுக்கு, காமதேனு என்று சொல்லக்கூடிய வரியை விதிக்கக்கூடாது. அதற்கு பூராவும் விதி விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பிறந்தபோதும் நாம் முதலில் வாயில் பருகுவது பால். கடைசியில் இறக்கும்போது நயக்கு விடப்படுவது பால் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமே கிடையாது. அவ்வளவு முக்கியமான ஜீவாதார வஸ்துவை நாம் வெளிநாடுகளிலிருந்து டப்பா டப்பாவாக தருவிக்கிறோம். அல்லது அன்னிய நாடுகள் நம் மீது இருக்கும் கருணையால் குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் கொடுப்பதற்காக பால் டப்பாக்களை இலவசமாக அனுப்பிவைக்கிறார்கள். ஆகவே அந்தப் பாலுக்கு இங்கு வரி போட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

10-10 a.m.

இந்த வரியை ஏமாற்றும் வியாபாரிகளும் இருக்கிறார்கள். வரி ஏமாற்றப்படுவதை கண்டுபிடித்து விட்டுவிட்டு போகின்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள். இரண்டு தரப்பிலும் தப்பு இருக்கிறது, இல்லை என்று சொல்ல முடியாது. இந்த ராஜ்ய மக்களிடையே மிக்க அதிகாரம் வாய்ந்தவர்களாகவும் செல்வாக்கு வாய்ந்தவர்களாகவும் சில உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களை இருவகையினராகப் பிரிக்கலாம். ஒரு வகையினர் விற்பனை வரி வசூலிப்பவர்கள். மற்றொரு வகையினர், மோட்டார் இலாகாவில் இருக்கும் ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள். இவர்களைக்

[Sri S. Nagaraja Monigar] [7th April 1958

கண்டு பேசிவிட்டால், எந்தக் காரியமும் உடனடியாக நடக்கிறது. இவர்களைக் கண்டால் யாரும் பயப்படுகிறார்கள். சமீபத்தில் நடந்த தேர்தலின்போது ஸ்ரீ நந்தி என்ற ப்ரேக் இன்ஸ்பெக்டர் ஒரு அபேட்சகரை பூரண வெற்றி அடையச்செய்துவிட்டார் என்பதைப் பார்க்கும்போது நமக்கு மிகவும் பயமாக இருக்கிறது. யார் யார் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று பார்த்து அரசாங்கத்தார் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். சி.ஐ.டி.-க்களின் மூலம் யார் யார் இப்படி நடந்துகொள்கிறார்கள் என்று கண்டறிய வேண்டும். இந்த விஷயத்தில், அந்த அந்த ஊர்களில் இருக்கும் கமிட்டிகளிடமிருந்தும் அரசாங்கத்தார் தகவல் பெற்று தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri T. S. RAMASWAMY PILLAI:** கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனைவரி சம்பந்தமாகதான் அனுஷ்டிக்கும் கொள்கையை அரசாங்கம் புனராலோசனை செய்துகொண்டிருக்கிறது. விற்பனைவரி விசாரணைக்காக ஒரு அதிகாரியை அரசாங்கம் நியமித்தது. அவர் கொடுத்த யோசனைகளின் அடிப்படையில் சர்க்கார் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார்கள். அந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்பட்டிருக்கிறது.' அதைக் குறித்து பொறுக்குக் கமிட்டியினர் சவிஸ்தாரமாக ஆலோசனை செய்துவருகிறார்கள்.

விற்பனைவரி சம்பந்தமாக அரசாங்கத்தார் அனுஷ்டிக்கும் கொள்கையைப் பொறுத்தவரையில், காங்கிரஸ் அங்கத்தினர்கள் கூறிய விஷயங்களை உண்மையிலேயே நாங்கள் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்கிறோம். எனக்கு முன்பு பேசிய இரண்டு கனம் அங்கத்தினர்களும், உணவு தானியங்களின்மீது இருக்கும் விற்பனை வரியை எடுத்துவிடவேண்டுமென்று கூறினார்கள். மேலும், உணவு தானியங்களின்மீது விற்பனைவரி விதிக்கக் கூடாது என்று மத்திய சர்க்காரிலிருந்தும் சிபாரிசு வந்திருக்கிறது. இதே கருத்தை இந்தப் பக்கத்திலுள்ள நாங்களும் எத்தனையோ தடவை எடுத்துக் கூறியிருக்கிறோம். உணவு தானியங்களின்மீது விற்பனைவரி விதிக்கக் கூடாது என்று எதிர் கட்சிகளின் அங்கத்தினர்களும் ஆளும் கட்சியின் அங்கத்தினர்களும் சொல்லிக்கொண்டிருக்கும்போதும், அவ்வாறு மத்திய அரசாங்கத்தார் சிபாரிசு செய்துகொண்டிருக்கும்போதும், இந்த அரசாங்கத்தார் உணவு தானியங்களின்மீது விற்பனைவரி விதித்துவருகிறார்கள். இது சம்பந்தமாக, சென்ற ஆண்டு பட்ஜெட் கூட்டத்தில் கனம் நிதி அமைச்சர், 'உணவுப் பொருள்களின்மீது விதிக்கப்படும் விற்பனை வரியானது நகரத்திலுள்ள அதிகச் சம்பளம் வாங்கும் தொழிலாளர்கள்மீதுதான் விழும் என்றும் அது ஏழைப் பாமர மக்கள்மீது விழாது என்றும் சொன்னார். அப்போது நாங்கள், சர்க்கார் சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முற்பட்டிருக்கும்போது சர்க்காரின் வரிக் கொள்கை கூடியவரையில் சமதர்ம ரீதியில் பரிணமிக்கவேண்டுமென்று கூறினோம். இப்போது, வரிப் பளு பெரும்பான்மையாக ஏழைப் பாமர மக்கள்மீதும் பாட்டாளி மக்கள்மீதும் தான் விழுகிறது. கூடியவரையில் வரிப் பளு ஏழைப் பாமர மக்கள்மீது விழாதபடி வரிக்கொள்கையை வகுக்கவேண்டும். விற்பனை வரி காமதேனுவா அல்லது கற்பகவிருக்ஷமா என்பது இப்போது பிரச்னை அல்ல. கூடியவரையில் ஏழைப்பாமர மக்கள் அதிகமாக பாதிக்கப்படாதபடி வரி விதிக்கவேண்டும் என்பதுதான் இப்போது கவனிக்கவேண்டிய விஷயம். கிராமங்களிலுள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் அறுவடை காலத்தில் கூலியாகப்பெறும் ஓரிரு மூட்டை நெல் அவர்களுக்கு 6 மாதங்களுக்குத்தான் காணுகிறது. ஆறு மாதங்களில் அது தீர்ந்துவிடுகிறது. அதற்குப், பிறகு அவர்கள் களை எடுத்தும் நாற்று நட்டும் பணம் சம்பாதித்து அந்தப் பணத்திற்கு அரிசி வாங்குகிறார்கள் என்பது கிராமங்களிலுள்ள எல்லோருக்கும் தெரியும். ஒருவேளை கனம் நிதி அமைச்சருக்கு அது தெரியாமல் இருக்கலாம். உணவுப் பொருள்களை உற்பத்திசெய்யும் லட்சோபலட்சம் ஏழை விவசாயத் தொழிலாளர்கள்மீது விற்பனை வரிப்பளு விழுந்தால் அது அநீதி என்றுதான் சொல்லவேண்டும். விற்பனை வரியைப் பொறுத்த



7th April 1958] [Sri T. S. Ramaswamy Pillai]

வரையில் சென்னை, ஆந்திரா, மைசூர் ஆகிய மூன்று ராஜ்யங்களிலுள்ள ஏழைப் பாமர மக்களும் துர்பாக்கியசாலிகள். இந்த ராஜ்யத்தில் விற்பனை வரி இலாகாவிற்கு தலைமை தாங்கும் கனம் அமைச்சர் இந்தப் பிரச்னையை சீக்கிரத்திலேயே தீர்ப்பார் என்று நம்புகிறேன். 'எனக்கு வேண்டியது விற்பனை வரியின்மூலம் 10½ கோடி ரூபாய்தான்' என்று கனம் அமைச்சர் கூறுவார். அந்தப் பணத்திற்காக வரி போடும்போது அதை பணக்காரர்கள்மீது போடவேண்டும். 'லக்ஷுரி குட்ஸ்'-ன் மீது போடவேண்டும். அந்தப் பொருள்கள்மீது 7 சதவிகிதமோ, 10 சதவிகிதமோ, 15 சதவிகிதமோ போடலாம். உணவுப்பொருள்கள்மீது வரி போட்டால் லட்சக் கணக்கான ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஜனவரி-பிப்ரவரி மாதம் அதிகாரிகள் தங்கள் இஷ்டம்போல 'அஸெஸ்மெண்ட்' போட்டுவிட்டுப் போகிறார்கள். அதிகமாக 'அஸெஸ்மெண்ட்' போடுபவர்களுக்கு உத்தியோகம் உயர்வு கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக உத்தியோகஸ்தர்கள் மிக அதிகமாக 'அஸெஸ்மெண்ட்' போட்டுவிடுகிறார்கள். அஸெஸ்மெண்ட் போட்ட பிறகு அவர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிறார்கள். அடுத்துவரும் அதிகாரிகள் அந்த அஸெஸ்மெண்டின்படி வரி வசூலிக்கத் திணறுகிறார்கள். வியாபாரிகள் ட்ரிப்யூனலுக்குச் சென்று அஸெஸ்மெண்ட் 'கான்செல்' ஆகும்படி செய்துகொண்டு வருகிறார்கள். அதிக அஸெஸ்மெண்ட் போடுபவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கப்படும் முறையால் இந்தக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தப் பிரச்னையை கவனித்து ஆவன செயயவேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri S. LAZAR:** மிஸ்டர் சேர்மன் ஸார், கனம் அமைச்சர் சமர்ப்பித்திருக்கும் இந்த மானிய கோரிக்கையை ஆதரிக்கிறேன். பொதுவாக, இங்கே பேசப்படும் பேச்சுக்களிலிருந்து விற்பனை வரி தேவை என்பது மிக நன்றாகத் தெரிகிறது. விற்பனை வரி அவசியம் என்பதை எதிர்க் கட்சியினர் உட்பட எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, விற்பனை வரி விதிக்கவேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கை சரியானது என்பது மிக நன்றாக விளங்குகிறது. சபையில் விவாதம் நடக்கும்போது, இந்த வரிவிதிப்பை அபிவிருத்தி செய்யக்கூடிய ஆராய்ச்சிகளும், ஏழை மககள் அதிகமாக பாதிக்கப்படாதவகையில் வரி விதிப்பதற்கான ஆராய்ச்சிகளும்தான் நடக்கின்றனவே தவிர, விற்பனை வரி விதிப்பு வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கையானது எதிர்க்கப்படவோ தாக்கப்படவோ இல்லை என்பதைப் பார்க்கும்போது அரசாங்கத்தின் கொள்கையைப் பாராட்டத்தான் வேண்டியிருக்கிறது. வரி விதிப்பு சம்பந்தப்பட்ட நிர்வாக அமைப்பைப் பொறுத்தவரையிலும், நிர்வாகத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் படும் கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவு அன்று. அவர்களுக்கு வேலை அதிகமாக இருப்பதுடன் மட்டுமின்றி, விற்பனை வரியை 'அஸெஸ்' பண்ணுவதிலும் அதை வசூலிப்பதிலும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக, அரசாங்கம் விற்பனை வரிச்சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவந்தால், அவர்களுடைய கஷ்டங்கள் அதிகமாகின்றன. மேலும் மேலும் பல பொருள்களை விற்பனை வரிக்கு புதிதாக உட்படுத்தும்போது அவர்களுடைய கஷ்டங்கள் அதிகமாகின்றன. இந்த நிலையில் விற்பனை வரி இலாகாவில் அதிகாரிகளையும் சிப்பந்திகளையும் அதிகரிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

10-20 a.m.

அஸெஸ்மெண்ட் சம்பந்தப்பட்ட வரைக்கும் பார்க்கும்போது, ஓரளவு இதிலே நன்கு தெரிந்தவன் என்ற முறையிலே சொல்ல ஆசைப்படுகிறேன். முன்னால் பேசிய நண்பர் ராமசாமி பிள்ளை அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மையாகும். அஸெஸ்மெண்ட் ஆபீசர்கள், ஏதோ அதிலிருந்து தங்களுக்கு உயர்வு கிடைக்கிறது என்ற நோக்கத்துடன்தான் அவர்கள் அஸெஸ்மெண்ட் செய்கிறார்கள் என்று பார்க்கும்போது இதிலே வியாபாரிகள் மிக மிக பாதிக்கப்படுகிறார்கள். இதிலே குறிப்பாக நான் சொல்ல

ஆசைப்படுகிறேன்—நமது அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரைக்கும் அதிலும் சென்னை அரசாங்கம் சம்பந்தப்பட்டவரைக்கும், நாம் வியாபாரத் துறையிலும் சரி, இன்னும் தொழிற் துறையிலும் சரி, ஓரளவுக்கு பின்தங்கியிருக்கிறோம் என்று நமது அரசாங்கப் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறபோது, இந்த விற்பனை வரியானது வியாபாரத் துறைக்கும் உற்பத்திப் பெருக்கத்திற்கும் ஓரளவு சம்பந்தம் உடையது என்ற அடிப்படையிலே பார்க்கும்போது, இதிலே அரசாங்கம் ஓரளவு கவனமாகச் செல்லவேண்டும் என்றுமட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆகவே, அசெஸ்மெண்ட் அதிகாரிகள் தங்களுடைய சுயநலத்தை எண்ணி ஒரு சில இடங்களில் அவர்கள் அசெஸ்மெண்ட் செய்யும்போது ஏதோ வரியை விதிக்கவேண்டும் என்ற ஒரு அக்கறை காணப்படுகிறதே தவிர, வரி வசூல் செய்யவேண்டும் என்பது மட்டும் அல்லாது வியாபாரிகளுக்குத் தொல்லைகள் கொடுக்காமலும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, அப்பெல்லெட் ஆபீசர் என்ற முறையில், இப்பொழுது இருக்கும் சட்ட அமைப்புப்படி, டெபுடி கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் இருக்கிறார் என்று இந்த இடத்தில் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள் விற்பனை வரி இலாகாவிலேயிருந்து எடுக்கப்பட்டவராக இருப்பது சரியல்ல. ஒரு நீதி மன்றத்தில் இருக்கும் ஜுடிஷியல் ஆபீசர் மாதிரி இருக்கவேண்டும். ஜுடிஷியல் அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும். ஏதோ டிபார்ட்மெண்ட் ஆசாமி ஒருவர் டி.ஸி.டி.ஓ. ஆக அமர்த்தப்பட்டால், அவருக்கு அப்பீலுக்கான அதிகாரங்கள் இருப்பதன் காரணமாக, அரசாங்கத்திற்கு அதிகமான வருமானம் வாங்கிக் கொடுத்தால், ஏதோ ஓரளவு தங்களுக்கு உத்தியோக உயர்வு கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்குப் பதிலாக ஒரு ஜுடிஷியல் ஆபீசரை 'இன்டிபென்டெண்ட்' ஆக இருப்பவராகப் பார்த்துப் போட்டால் நல்ல முறையில் இரு தரப்பாருக்கும் நல்ல பயனை விளைவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

ட்ரிப்யூனல் சம்பந்தப்பட்ட வரையில் குறிப்பாகச் சொல்லமுடியும். அது நேர்மையான முறையில், நல்ல முறையிலே நமது நாட்டிலே நியாயம் வழங்கி வருகிறது. அதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ட்ரிப்யூனல் அங்கத்தினர்களைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. ஆனால், ட்ரிப்யூனல் ஸிஸ்டம் நல்ல முறையிலே நமது மாகாணத்தில் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. அதற்கு என்ன காரணம் என்று பரிசீலனை செய்து பார்த்தோமானால், அதிலே ஜுடிஷியல் அனுபவம் உள்ள அங்கத்தினர்கள் அதில் இருக்கும் காரணத்தால் நல்ல முறையிலே அதிலே நிர்வாகம் நடந்து வருகிறது. அதிலும் குறிப்பாக நல்ல முறையிலே தீர்ப்புகள் அளிக்கவேண்டுமென்ற மனப்பான்மையும் இருக்கிறது. ஏராளமான கேஸ்கள் அங்கே தாக்கல் செய்யப்படுகின்றன. ஆகவே, ட்ரிப்யூனல் போன்று மாகாணத்தின் பல நகரங்களுக்கு மொபைல் ட்ரிப்யூனலாகச் சென்று அந்தந்த இடங்களிலேயே தீர்ப்புகள் அளிக்கும்படி ஏற்பாடு செய்தால், அதற்கான நடவடிக்கையை அரசங்கம் எடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

இந்த ட்ரிப்யூனலிலே வியாபாரத் துறையிலே அனுபவம் உள்ள அங்கத்தினர் ஒருவரையும் சேர்த்துக்கொள்வது நல்லது என்பது என் போன்றவர்களுடைய கருத்து ஆகும்.

இப்பொழுது உணவுப் பொருள் சம்பந்தப்பட்ட வரைக்கும் வரி விதிப்பு தேவை இல்லை என்ற சர்ச்சை நடந்துகொண்டு வருகிறது. ஆனால், குறிப்பாக நான் சொல்ல முடியும். 'பெரிஷபள்' என்று சொல்லக்கூடிய முறையில் காய் கறிகள் இன்னும் இது போன்ற அழுகக் கூடிய பொருள்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது நல்லது என்பது என் போன்றவர்களுடைய கருத்து. இதை சர்க்கார் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



கடைசியாக வரி விதிப்பு சம்பந்தப்பட்ட வரைக்கும் நாம் கையாளக்கூடிய இன்னும் ஒரு முக்கியமான கொள்கைபற்றி தெரிவிக்க விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதுபோல், நமது மாகாணம் வியாபாரத் துறையிலும் தொழிற் துறையிலும் பின்தங்கியிருப்பதாக அரசாங்கக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. அதைப் பார்க்கும்போது, இந்தத் துறையிலே எந்த வித பாதகமும் ஏற்படாத முறையில், அந்தந்த பொருள்களின் ட்ரான்சாக்ஷன்மீது வரி விதிப்பதற்குப் பதிலாக, எல்லாப் பொருள்களுக்கும் செய்ய முடியாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். கூடியவரைக்கும் குறித்த அளவுக்குமேல் வியாபாரம் செய்யக்கூடியவர்களிடம் வருஷமொன்றுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கட்டக்கூடியவாறு லைசென்ஸ் முறையை ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக பஞ்சு வியாபாரம் சம்பந்தப்பட்ட வரைக்கும் இப்படிப்பட்ட முறை இப்பொழுது இருக்கிறது. ஏதோ வருஷத்தில் ஒரு தடவை பணத்தைக் கொடுத்து லைசன்சு பெற்றுவிட்டால் பிறகு அவர்களுக்கு எந்தவிதமான தொல்லையும் இல்லை. இதனால் அவர்கள் தங்களுடைய வியாபாரத்தை நன்றாகக் கவனிக்கமுடியும்.

இன்னும் ஒன்று குறிப்பாகக் கவனிக்கமுடியும். நாம் ஒரு முனை விற்பனை வரி விதிக்கவேண்டுமென்ற அடிப்படையில் ஒரு சில பொருள்களுக்கு, அதிலும் குறிப்பாக இன்டஸ்ட்ரீஸ் ப்ராடக்டுகளுக்கு விதிக்க வேண்டுமென்ற கருத்து நமது அரசாங்கத்திற்கு இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், இந்தக் கருத்தின் பலனாக உற்பத்தி எந்த விதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. அதிலும் குறிப்பாக, நமது மாகாணத்தில் உற்பத்தி குறைவு என்ற நிலைமை இருக்கும்போது, வியாபாரமும் இங்கே ஓரளவுக்கு குறைவான நிலைமையில் இருக்கும்போது, ஒரு முனை விற்பனை வரியின் ரேட்டை அதிகமாக்கினால் பாதிக்கப்படும். வரியினுடைய மொத்த அளவு குறையக்கூடாது என்ற காரணத்திற்காக, மற்ற எல்லா மாகாணங்களையும்விட நம் ராஜ்யத்தில் வரி விதிப்பு குறைவாக இருந்தால்தான் சரியாக வியாபாரம் செய்யவேண்டும் என்ற ஒரு எண்ணம் வியாபாரிகளுக்குக் கண்டிப்பாக ஏற்படும். ஏனென்றால் அவர்களுக்கு இருக்கக்கூடியவையெல்லாம் ப்ராபிட் மோடிவ், அதாவது லாப நோக்கம் ஒன்றுதான். நமது நாடு செழிக்கவேண்டும், வியாபாரம் பெருகவேண்டும் என்ற அடிப்படையிலே அல்ல. ஆகவே, இந்தக் கருத்தையும் மனதிலே கொண்டு, நமது வியாபாரமும் தொழிலும் எந்த முறையிலும் பாதிக்கக்கூடாத அளவிலே அங்கே நமது திட்டத்தை வரி விதிப்பு முறையை அரசாங்கம் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri M. P. SARATHI** : கனம் தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி சம்பந்தமாக கொண்டுவரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது கருத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். முக்கியமாக விற்பனை வரி 1937-ல் அரை தம்படி என்று ஏற்பட்டு, அதற்குப் பிறகு ஒரு தம்படியாகி, பிறகு காலணாவாக உயர்ந்து, இப்பொழுது இரண்டு நயா பைசாவாக ஆக்கப்பட்டு, மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போகக்கூடிய நிலைமையில் இன்று டாக்டர் லோகநாதன் அவர்களுடைய ரிப்போர்ட் ஒரு கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அந்தக் கமிட்டிக்கு அனுப்பப்பட்டு, அங்கு இதை ஒத்திவைக்கப்படக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறது. ஏனென்றால் அதில் இப்பொழுது குளறுபடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. செலக்ட் கமிட்டிக்குப் போனபிறகு, எங்கு பார்த்தாலும் வியாபாரிகளுடைய நிலைமை என்ன ஆகுமோ, எப்படி எப்படி ஒரு முனை விற்பனை வரி ஏற்படுமோ என்ற ரீதியில் காய்கறி கடைக்காரர்களும், புஷ்பக் கடைக் காரர்களும் இப்படி சிறுசிறு வியாபாரிகளெல்லாம் மகஜர் அனுப்பியும் சட்டசபையைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக் கிறது. ஏன் ஒரு முனை விற்பனைவரி ஏற்படவேண்டுமென்று பல வியா பாரிகள் கோரியும், பல மகாநாடுகள் கூட்டியும், இந்த நிலைமை ஏற்பட் டிருக்கிறது. ஒரு முனை விற்பனைவரி என்று போடப்பட்டு,

வரும்படியில் 13 கோடி ரூபாய் வசூலிக்கக்கூடிய இந்த விற்பனை வரியில் ஒன்றும் குறையாமல், அதே ரீதியில் இதை ஏற்படுத்தி விடலாம் என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டு செய்வதால் இம்மாதிரி ஏற்படுகிறது என்று நான் நினைக்கிறேன். முக்கியமாக, விற்பனை வரி எதனால் ஏற்பட்டது? இந்திய சர்க்கார் இந்த நாட்டில் மக்களுடைய நன்மையை நோக்கமாகக்கொண்டு மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர வேண்டுமென்றதற்காக அதை சென்னை சர்க்கார் மாத்திரம்தான் இப்பொழுது கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்காக வேண்டி விற்பனைவரி, ஏற்படுத்தப்பட்டது. எந்த மாகாணத்திலேயும் நல்லமுறையில் நடத்த முடியாத மதுவிலக்குத் திட்டத்தை எங்கள் மாகாணத்திலே முதன் முதலாகக் கொண்டுவந்தோம். அதற்காக நஷ்ட ஈடாகப் பணம் கொடுக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டு அங்கே விற்பனை வரி இல்லாமலேயே செய்திருக்கலாம். ஆனால், அதற்குப் பதிலாக நாம் என்ன செய்திருக்கிறோம் என்றால், ஒரு தம்படியிலிருந்து இன்று நான்கு தம்படி வரை பெருக்கிக்கொண்டு போகிறோம். ஆகையால், வியாபாரிகளுடைய தொல்லை நாளுக்கு நாள் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. முக்கியமாக இப்பொழுது கமிட்டியில் அதைத் தீர ஆலோசித்து பல ஜில்லாக்களில் வியாபாரிகளெல்லாம் அந்தக் கமிட்டியின் முன் தங்களுடைய எண்ணத்தைத் தெரிவிக்கும்படி வரவழைத்து, அவர்கள் எண்ணத்தின்படி ஆலோசித்து இந்த ஒரு முனை விற்பனை வரியை ஏற்படுத்தினால், அதற்குப் பிறகும் வியாபாரிகள் தொல்லை இல்லாமல் இருக்கிறார்களா என்பதை அமைச்சர் அவர்களே முடிவு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். முக்கியமாக உணவு தானியங்களுக்கு விற்பனை வரி இருக்கக்கூடாதென்று இங்குள்ள அனைவரும் சொல்கிறோம். அதை சர்க்கார் கவனிக்கவேண்டும். அப்படியே உணவுப் பொருளுக்கு விற்பனை வரி விதிப்பதாக இருந்தாலும் 1%-க்கு மேல் விதிக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளவிரும்புகிறேன். சாதாரணமாக இன்று இந்த விற்பனை வரியினால் சிறு சிறு வியாபாரிகள் பலர் மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். கடைகளை மூடிவிட்டே தெருவில் சுற்றும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போது சிறு சிறு வியாபாரிகளைப் பாதிக்காத நிலைமை உண்டாகவேண்டும் என்பதற்காக டோடல் டர்ன்ஓவர் அதிகப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் இதனால் பெருமளவுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லமுடியாது.

10-30 a.m. அதோடு லாரிகளில் சாமான்களை ஏற்றிச் செல்லும்போது அங்கங்கே அந்த லாரிகளை மடக்கி அது எங்கே போகிறது, அதிலுள்ள சாமான் என்ன என்பதாகவெல்லாம் பல கேள்விகளைக் கேட்டு ஒரு மணி இரண்டு மணி நேரத்திற்குமேல் வழியில் வரிசையாக நிறுத்திவிடுகிறார்கள். இதனால் வியாபாரிகளுக்கு நஷ்டம். லாரிக்காரர்களுக்கு தொந்தரவும் நஷ்டமும் உண்டாகிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களும், தொந்தரவுகளும் வியாபாரிகளுக்கு இருந்துகொண்டிருக்குமானால் இந்தச் சர்க்காருக்கு நல்ல பெயர் கிடைக்காது என்று தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே ஒரு சர்க்கார் நல்ல முறையில் மக்களுடைய ஆதரவைப் பூர்ணமாகப் பெற்று இயங்கவேண்டுமானால் ராஜ்ய மக்களுடைய இராஜ்ய வியாபாரிகளுடைய நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் இருக்கவேண்டியது அவசியமாகும். வருவாயை மாத்திரம் அதிகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இந்தச் சர்க்காருக்கு இருக்குமானால் அதற்கு வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. உதாரணமாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையில் விளம்பரம் வருவதைப் பார்க்கிறோம். லட்சக்கணக்கான ரூபாய்கள் விளம்பரங்களினால் பத்திரிகை முதலாளிகளுக்கு வந்து கொண்டிருக்கிறது. அவர்கள் சிப்பந்திகளுக்காவது சரியான முறையில் ஊதியம் கொடுத்துக்கொண்டு வருகிறார்களா என்றால் அதுவும் இல்லை. கோடிக்கணக்காக சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் அந்தப் பணத்தில் ஒரு பங்கு சர்க்காருக்குக் கிடைக்கும்படியாக வரி போடக்கூடாது என்று கேட்கிறேன்.



அதோடு இன்னொரு விஷயத்தைப்பற்றியும் இங்கே சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். முன்பும் சொல்லியிருக்கிறேன். எண்ணை உற்பத்திக்கு சென்டிரல் டாக்ஸ் விதித்திருக்கிறார்கள். நமது சர்க்காரும் 3% விதிக்கலாம் என்று கண்டிருக்கிறது. இப்படிச் செய்வார்களானால் குடிசைத் தொழில் என்ற முறையில் இன்றையதினம் இயங்கி வருகிற கைச் செக்கு, மாட்டுச் செக்கு எல்லாம் அழிந்துவிடக்கூடிய ஆபத்து ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் 1% வேண்டுமானால் எண்ணைகளுக்கு வரி விதிக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக மைசூரிலும், ஆந்திராவிலும் 1% தான் இருப்பதாகத் தெரிகிறது. இங்கு அதை 3% ஆகப் போடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு வியாபாரிகளிடத்திலிருந்து விற்பனை வரி வசூலிப்பது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஒன்றும் வசூலிக்காமல் விடுவதாகத் தெரியவில்லை. சிறு சிறு கிராமங்களுக்குக்கூடச் சென்று திண்ணையில் கடை வைத்திருப்பவர்களுக்குக்கூட வரி போட்டுவிட்டுத்தான் வருகிறார்கள். பலவிதமான தொல்லைகளுக்கு—கணக்கை காட்டு, எடுத்துக் கொண்டுவா என்பதாக—உள்ளாக்குகிறார்கள். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். இதையெல்லாம் கவனித்துத்தான் நான் வெட்டுப்பிரேரணை கொடுத்திருக்கிறேன். இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு நான் முடித்துக்கொள்கிறேன்.

**SRI A. MARIAPPAN:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் மானியத் தொகையை ஆதரித்து நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் எத்தனையோ இலாக்காக்களை நல்லமுறையில் நடத்தி நல்ல பெயரை வாங்கியிருக்கிறார்கள் என்றாலும் இந்த விற்பனைவரி இலாகா சம்பந்தப்பட்ட வரையில் அவர்களுக்கு நல்ல பெயர் கிடையாது. அதற்குக் காரணம் விற்பனைவரி அதிகாரிகள் வியாபாரிகளை மரியாதையாக நடத்துவது இல்லை. எந்த இடங்களை எடுத்துக்கொண்டாலும் வியாபாரிகள் விற்பனைவரி காரியாலயத்திற்குப் போகும்போது உட்காரச் சொல்லி பேசுவதுகூடக் கிடையாது. அதுவும் ஏ.ஸி.டி.ஓ. என்பவர்கள் வியாபாரிகளை நடத்துகிற முறை அந்தப் பக்கங்களுக்குச் சென்று பார்த்தால் தெரியும். அவர்கள் நடந்து கொள்கிற முறையினால்தான் காங்கிரஸ் சர்க்காருக்கே இன்றைய தினம் கெட்ட பெயர் வந்து கொண்டிருக்கிறது. அதுவும் குறிப்பாக சேலத்தில் நடந்திருக்கும் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு இடத்தில் 1957-ம் வருடம் மார்ச்சு மீ 30உ-யில் கணக்குப் பார்த்திருக்கிறார்கள். மேலும் அந்தக் கணக்கு 1957-ம் வருடம் ஏப்ரல் மீ 20உ-யில் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. விற்பனைவரி அதன்பேரில் விதிக்கப்பட்டும் இருக்கிறது. ஆனாலும் அந்த வியாபாரி குறிப்பிட்டபடி கணக்குக் காட்டவில்லை. ஆறு மாதங்களுக்கு விற்பனைவரி கட்டாமல் மறைத்திருக்கிறார் என்பதாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மாதிரியாக நம் ராஜ்யத்தில் பல தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதோடு செவ்வாய்ப்பேட்டை போன்ற இடங்களில் வாரம்தோறும் சந்தை கூடுகிறது. அதிகமாக வியாபாரம் ஆகக்கூடிய இடம். அங்கெல்லாம் இந்த அதிகாரிகள் மிகவும் தவறுதலான முறையில் நடந்து கொள்வதன் காரணமாக நமது வருமானமும் பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் பல தொந்தரவுகளுக்குள்ளாவதால் சர்க்காருக்கும் அதிகமான கெட்ட பெயர் உண்டாகிறது. அதிகமாக லஞ்சம் வாங்கவேண்டும் என்பதற்காகவே அந்த அதிகாரிகள் இம்மாதிரியான முறைகளை எல்லாம் கையாளுகிறார்கள்.

குறிப்பாக உணவுப் பொருள்கள் மீதுள்ள வரியை எடுத்து விடவேண்டு 10-40
மென்று கேட்டுக்கொள்கிறேன். உணவுப் பொருள்கள்மீது வரி விதிப்பதில் a.m.
எவ்வளவோ சங்கடங்கள் இருக்கின்றன. செவ்வாய்பேட்டை போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால் உணவுப் பொருள்கள்மீது வியாபாரிகளுக்கு வரி வாங்க முடியவில்லை. பெண்கள் தலையில் அரிசி போன்ற சாமான்களை

எடுத்துச்சென்று விற்பனை செய்கிறார்கள். சேலம் போன்ற நகரங்களில். அப்படிக்கொண்டு வந்து விலைக்கு கொடுக்கும்போது அவர்களுக்கு அதன் மீது விற்பனைவரி வசூலிக்க முடிவதில்லை. ஆகவே, உணவுப பொருள்கள் மீதுள்ள வரியை கண்டிப்பாக எடுத்துவிடவேண்டுமென்று ஒரு முறைகூட நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பதிலாக, எனக்கு முன் பேசிய நண்பர் அவர்கள் சொன்னதுமாதிரி பத்திரிகைகளில் கொடுக்கப்படும் விளம்பரங்களுக்கு பக்கம் ஒன்றுக்கு 1,000, 1,500 ரூபாய் என்று வாங்கு கிறார்கள். அதில் ரூபாய் ஒன்றுக்கு எட்டணா வரி விதித்தாலும் பாதக மில்லை. அம்மாதிரி வரி விதிக்க சர்க்கார் முன் வரவேண்டும். அதற்கு மாகாண சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்று தெரிய வில்லை. அப்படி மாகாண சர்க்காருக்கு அதிகாரம் இல்லாவிட்டாலும்கூட, மாகாண சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி அப்படி விளம்பரங்களின் மேல் வாங்கக்கூடிய ரூபாய்க்கு வரி போடவேண்டுமென்று சொல்லி, அந்த வரி மூலம் உணவுப் பொருள்கள் மீது போடும் வரியை சரிக்கட்ட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கைத்தறிக்கு உபயோகப் படுத்தப்படும் ஜரிகைக்கு 2% வரி விதிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை, வரியில்லாமல் செய்யவேண்டும், அப்படி செய்ய முடியாவிட்டால் அதற்கு ½% வரி போட்டால் போதும். "டைஸ்" சாயம் போன்ற பொருள்களுக்கும் வரி விதிக்கப்படுகிறது. அதற்கும் ஒரு முனை வரி விதிக்கப்படுகிறது. அதற்கு 6% வரி விதிக்கப்படுகிறது. அது அதிகமாகும். ஆகவே அதை 3% என்று குறைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள் கிறேன். ஹோட்டல் முதலாளிகளை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு அநீதி, தீங்கு இழைக்கப்படுகிறது. அவர்களுக்கு என்ன வியாபாரம் நடக்கிறது என்று பரிசீலிப்பதில்லை. குத்து மதிப்பாக அவர்கள் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். சேலத்தில் பெரிய ஹோட்டல் முதலாளிகள் இன்று அவைகளை மூட வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, சர்க்கார் ஹோட்டல் முதலாளிகளுக்கு விதிக்கப் படும் வரிகளை நன்கு பரிசீலித்து அது சரியானதா என்று பார்த்தபிறகு வரி விதிப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டு மென்றும் சர்க்காரை நான் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, இந்த சேல்ஸ் டாக்ஸ் பில் ஒத்தி போடப்பட்டிருப்பதால் அமைச்சர் அவர்கள் நம் மாகாணத்தில் நல்ல முறையில் சுற்றுப்பிரயாணம் செய்து வியாபாரிகள் இந்த சேல்ஸ் டாக்ஸைப்பற்றி என்னென்ன குறைகள் கூறுகிறார்கள் என்று அறிந்து அவைகளை நன்கு பரிசீலித்து வியாபாரிகளுக்கு கஷ்டம் இல்லாத முறையில் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வியாபாரிகளைப் பொறுத்த வரையில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் வரி செலுத்துவதில் வருத்தப் படுவதில்லை. அவர்கள் நல்ல முறையில் வரி செலுத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். தங்களுக்கு தீங்கு இழைக்கக்கூடாது, அதிகாரிகள் தங்களைக் கொடுமைப்படுத்தக்கூடாது என்றுதான் அவர்கள் கோரு கிறார்கள். ஆகவே, மீண்டும் சொல்லிக் கொள்கிறேன், இந்த விற்பனை வரி இலாகாவிற்கு வியாபாரிகள் சென்றால் அவர்களை அதிகாரிகள் மரியாதை யாக நடத்துவதற்குண்டான ஏற்பாடுகளை சர்க்கார் செய்யவேண்டும், அதற்கு ஏதாவது ஒரு தாக்கீது அனுப்பினால்கூட நன்றாகயிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு செய்யவேண்டுமென்றும் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன் அதோடு ஏ.ஸி.டி.ஓ. போன்றவர்களுக்கு இன்னும் சற்று அதிக் சம்பளம் கொடுத்து இன்னும் தரம் உயர்ந்த வர்களாக நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் முதல் ஐந்தாண்டு திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இவைகள் மூலமாக மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் நன்மை செய்திருந்தாலும், இந்த விற்பனை வரி இலாகாவால் செய்யப்படும் அநீதி காரணமாக அக்கிரமம் காரணமாக வியாபாரிகள் இன்றையதினம் ஆளும் கட்சியை வெறுக்கிறார்கள். அதன் மீது அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட்டிருக்கிறது. நாம் விடுதலைக்காக போராடிய காலத்தில் ஆயிரம், லட்சம், கோடிக் கணக்கான பணம் கொடுத்து, நன்கொடை கொடுத்து உதவிய வியாபாரிகள் இன்றையதினம் அதே கட்சியை குறை கூறுவதோடு, இந்த விற்பனைவரி இலாகாவினர்





செய்யும் கொடுமை காரணமாக மிகவும் அல்லல் உறுகிறார்கள். ஆகவே வியாபாரிகளுக்கு தகுந்ததொரு பரிகாரம் தேடவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

***Sri P. S. ELLAPPAN** : தலைவர் அவர்களே, இந்த விற்பனை வரி சம்பந்தமாக எல்லோரும் அதை ஆதரித்துப் பேசினார்கள். நான் அதை ஆதரித்தோ அல்லது நிராகரித்தோ ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. எனக்கு சில சந்தேகங்கள் பொதுவாக இருக்கின்றன. அதைப்பற்றி தெரிந்துகொள்ள வேண்டுமென்பதுதான் என் ஆசை. 1926-ல் எம். கே. மைக்கேல் என்று சொல்லக்கூடியவர் சர்வெண்ட்ஸ் ஆப் இந்தியா சொஸைட்டியில் ஒரு அங்கத்தினராக இருந்தார். இந்தியாவும் சுயாட்சியும் என்று ஒரு புஸ்தகம் எழுதினார். அதன் விலை ஆறணாதான். சின்ன புத்தகம். அதற்கு ரைட்ஹானரபிள் ஸ்ரீ வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அவர்கள் முகவுரை எழுதியிருந்தார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால், நமது தேசத்தில் வரக்கூடிய வருவாயை வெள்ளையன் ஒவ்வொரு வருஷத்திலும் எந்தெந்த வழியில் பணத்தை எடுத்துக்கொண்டு போகிறான் என்பதுதான். நமது தேசத்திற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டால் பாலாக ஓடும், தேனாக பாயும் என்று சொல்பவர்களும் சொன்னவர்களும் இதைக் கவனிக்கவேண்டும். ரெவின்யூ மூலம் வரக்கூடிய வருவாய், 33 கோடி. மதுவால் வரக்கூடிய வருவாய் 18 கோடி. அபின், கஞ்சா இவைகளினால் வரக்கூடி வருவாய் 4½ கோடி. உப்பில் இருந்துவரும் வருவாய் 7½ கோடி. இப்படி, சகல செலவுகளும் போக இவ்வளவு ரூபாயை அவர்கள் இங்கிலாந்திற்கு கொண்டுபோகிறார்கள் என்று எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். இவ்வளவு ரூபாய்களை வெள்ளையன் லண்டனுக்கு எடுத்துச் செல்கிறானே, இது என்ன அநியாயம், எல்லோரும் சேர்ந்து இவர்களை விரட்டவேண்டாமா என்றெல்லாம் எழுதியிருந்தார். இப்பொழுது வெள்ளை யனை விரட்டிவிட்டோம். அவனும் போய்விட்டான். ஆனால் அந்தப் பணம் இப்பொழுது எங்கே போயிற்று ? என்று கேட்கிறேன். இதைத்தான் மக்களும் கேட்கிறார்கள். இப்பொழுது உப்புக்கு வரி, மிளகாய்க்கு வரி, புளிக்கு வரி என்றெல்லாம் போடுகிறார்கள். முன்பெல்லாம், ஒரு விவசாயி உழுதுவிட்டு வந்து ஒரு கடையில் சென்று கால் அணா கொடுத்துவிட்டு புகையிலை தா என்றால் இரண்டு முழம் புகையிலை கிடைக்கும். ஆனால் இப்பொழுது ஒரு அணாவிற்கு ஜான் அளவு புகையிலைகூட கிடைப்பதில்லை. இப்படியிருக்கிறது நிலைமை. மக்கள் படும் கஷ்டத்தைப்பற்றி சொல்ல முடியாது. ஆகவே, நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், விவசாயிகளை நல்ல முறையில் கவனிக்கவேண்டும் என்று இன்று நம் தொழில் மந்திரி அவர்கள் சொன்னார்கள், ஒரு ஸ்டோர்ஸில் ஒரு லட்சம் ரூபாய் கொள்ளைபோய்விட்டதென்று. ஓரணா, இரண்டணா என்று ஏழை மக்கள் தங்கள் உயிரை விட்டுகொடுக்கும் பணத்தை இப்படி கொள்ளை அடித்துக்கொண்டு போகிறார்கள் சிலர். இந்த அநியாயத்தை எங்கேபோய் சொல்வது ? இவ்வளவு அதிகாரிகள், இவ்வளவு மந்திரிகள், இவ்வளவு எம்.எல்.ஏ.-க்கள் இருக்கும்போது வருஷா வருஷம் லட்சக்கணக்கில் ரூபாய் கொள்ளைபோகிறது. "குருடன் கடையில் அள்ளாதவன் கிடையாது" என்பது போல இருக்கின்றது லக்ஷக்கணக்கில் நஷ்டம் என்ற பெயரில் கொள்ளை போகும் சேதி. நான் தொழில் அமைச்சர் அவர்களைப்பற்றி குறைகூறவில்லை. அவரை சின்ன வயதில் இருந்து எனக்குத்தெரியும், ஸ்ரீ பி. என். சங்கரநாராயண ஐயர் அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோகலே ஹரிஜன காலனியில் நான் இருந்தபோது மந்திரியார் அவர்களை நான் நன்றாக அறிவேன். நமது தொழில் அமைச்சர் அவர்கள் மிகவும் நல்லவர். நான் அவரை தோத்திரம் செய்வதாக நினைத்துக்கொள்ளா தீர்கள். உண்மையிலேயே அவர் மிகவும் நல்ல மனம் படைத்தவர். நான் சொல்வது, மக்களின் பணம் மிகவும் ஜாக்கிரதையாக செலவழிக்கப்பட வேண்டும். அப்பணத்தை வீணாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டு மென்றுதான் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். நான் எதிர்கட்சியில் இருந்து சொல்வதாக நினைத்துக்கொள்ளாதீர்கள். நாம் எல்லோரும் ஒன்றுதான். கொஞ்ச நாளில் எல்லாம் சரியாகப் போய்விடும். (பலத்த சிரிப்பு) இதோடு என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன்.

[7th April 1958

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR :** தாற்காலிக சபாநாயகர் அவர்களே, நமது கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இம்மான்யத்தை ஆதரித்து சிற்சில விஷயங்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மான்யம் வரவேற்கத்தக்க மான்யம். நம் வருவாய், நமது பெரியவர்கள் சொன்னதுமாதிரி, காமதேனுவிற்கு சமானமாக, கற்பக விருக்ஷத்திற்கு சமானமாக எப்பொழும் வருவாயை வற்றாத ஊற்றாக கொடுக்கக்கூடிய மான்யமான இந்த மான்யத்தை நான் வரவேற்கிறேன். எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர் அவர்கள் சில குறைகளைப்பற்றி சொன்னார்கள். அவர், வெள்ளைக்காரன் காலத்தில் அதிகப் பணம் லண்டனுக்கு சென்று கொண்டிருந்ததே, இப்பொழுது அவைகள் எங்கே போய்விட்டது என்று கேட்டார்கள். ஆனால் ஆங்கிலேயன் வரிகளைகொண்டு செல்லக்கூடிய காலங்களில் நமது நாட்டில் செய்யவேண்டிய பல வேலைகளையும் செய்யாமல் வரிகளை எல்லாம் கொண்டு சென்றான். ஆனால் இப்போது நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக நமக்கு கிடைக்கும் வருவாயைக்கொண்டு குறைந்த செலவினங்களை வகுத்துக்கொண்டு அதற்கு தகுந்த முறையில் நமது நாட்டிற்கேற்றவாறு பல திட்டங்களை வகுத்துக் கொண்டு அதை நிறைவேற்றுவதற்காக செலவு செய்துகொண்டிருக்கின்றோம். கனம் அங்கத்தினர்அவர்கள் இதை நினைத்துப் பார்க்க வேண்டும். ஆங்கிலேயன் இருந்த காலத்தில் நமது நாட்டுக்கு அவசியமான
10-50 a.m. பல துறைகளில் முன்னேற்றம் ஏற்படாமல் இருந்தது. அவைகளில் எல்லாம் இன்றைக்கு முன்னேற்றம் காண்பதற்காக விற்பனை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது, என்றால் விற்பனை வரியின் மூலம் கிடைக்கின்ற பணத்தை துர்விநியோகம் செய்யப்படுகிறதா என்பதை பார்க்கவேண்டும். எந்த வரியும் விதிக்காமல் நாட்டை ஆளமுடியாது. ஆயினும் இந்த விற்பனை வரியைப் பற்றி ஒரு சில அபிப்பிராய கருத்துக்கள் நிலவிவருகின்றன. காரணம் என்னவென்றால் வரிகளை வசூல் செய்யக்கூடிய அதிகாரிகள், தங்களுடைய அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்து வருவதால் இந்த அபிப்பிராயம் நிலவி வருகிறது. எல்லா அதிகாரிகளும் இப்படி என்று சொல்லிவிட முடியாது. வியாபாரிகளை நிர்பந்தம் செய்யவேகூடாது. வியாபாரிகளுக்குத் தொந்தரவே கொடுக்கக்கூடாது என்று சொன்னால் வியாபாரிகள் அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காக தவறான கணக்கைத்தான் வைத்துக்கொண்டிருப்பார்கள். எல்லா வியாபாரிகளும் அப்படியிருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வருமானம் இருந்தால் அதன்படி சரியான கணக்கு காட்டாமல் அரசாங்கத்தை ஏமாற்றுகிறார்கள். இதற்காக சரியான கணக்கை கண்டுபிடிப்பதற்காக அதிகாரிகள் கடுமையான முறைகளை கையாளவேண்டியிருக்கிறது. சில அதிகாரிகள் வேண்டுமென்றே சில தப்புக்களை செய்கிறார்கள் என்பதை சொல்லுவதற்கு வருத்தப்படுகிறேன். இதன் காரணமாக அரசாங்கத்தின்மீது மக்களுக்கு துவேஷமும் ஏற்படுகிறது. நம்முடைய நாட்டு மக்களுடைய மனதில் இவ்விதம் ஒரு கருத்து தோன்றியிருக்கிறது. ஆகவே அதிகாரிகள் சரியான முறையில் வியாபாரிகளிடம் நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இச்சமயத்தில் மிஸ்டர் ஸ்பீக்கர் தலைமை வகித்தார்).

அதாவது ஸேல்ஸ் டாக்ஸ் ஆபிஸர்களில் ஒரு சிலர் கணக்கு சரியாக இல்லையென்றால் வியாபாரிகளுக்கு ஒரு அவதி கொடுத்து, வியாபாரிக்கு கணக்கு சரியில்லை என்ற விபரத்தை தெரியப்படுத்தி, வியாபாரிகள் அதன்பேரில் சொல்லக்கூடிய பதிலை தெரிந்துகொண்டு வரி விதிக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால் சில அதிகாரிகள் அப்படி செய்வதேயில்லை. வரிகளை அவர்களை கேட்காமலே விதித்து சிறிய வியாபாரிகளை கஷ்டப்படுத்துகிறார்கள். அவர்கள் கொடுக்கின்ற கணக்குகள் சரியில்லை என்று தெரிந்தால் வியாபாரிகளுக்கு தெரியப்படுத்தி, அவர்களுடைய பதிலை அறிந்த பிறகு வரி விதிப்பதாயிருந்தால் அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. அவ்விதம் சில அதிகாரிகள் செய்யாமல் இருப்பதினால்தான் கஷ்டங்கள் ஏற்படுகிறது. சரியான முறையில் வரி விதிப்பதை ஆட்சேபிக்கமுடியாது. வரி விதிக்காமல் இந்த நாட்டை ஆளமுடியாது. அதோடு இந்த வியாபாரிகளும் நாட்டி-



7th April 1958] [Sri M. R. Kandaswami Mudaliyar]

னுடைய நன்மையைக் கருதி தாங்களாகவே கொடுக்கவில்லை. பொது மக்களிடமிருந்து வாங்கக்கூடிய பணத்தைத்தான் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும். ஆகவே அரசாங்கத்தை ஏமாற்றாமல் நாட்டினுடைய நன்மையைக் கருதி சரியான முறையில் கணக்குகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று எல்லா வியாபாரிகளையும் கேட்டுக்கொள்கிறேன். முறையற்ற முறையில் வியாபாரிகள் நடக்கக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன். அதோடு, இதற்கு முன்னால் 10 ஆயிரம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு வரி விதிக்கவேண்டும் என்று இருந்தது. இப்போது அது 5,000 ரூபாய்க்கு வந்திருக்கிறது. இப்போது பொருட்களின் விலை எல்லாம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இந்த தொகை மிகவும் குறைந்த தொகை. எளிதாக ஒவ்வொரு சிறிய வியாபாரிக்கும் வந்துவிடும். இதற்காக சிறிய வியாபாரிகள் கணக்கு எல்லாம் வைத்து பார்க்கவேண்டிய கஷ்டம் ஏற்படுகிறது. இந்த கஷ்டங்களை போக்குவதற்காக இப்போது 5 ஆயிரம் என்றிருப்பதை 10 ஆயிரம் என்று ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், இது நாம் சிறிய வியாபாரிகளுக்கு செய்யக்கூடிய கடமை என்ற முறையில் இதை ஆலோசனை செய்து இவ்விதம் செய்யவேண்டும் என்று அமைச்சர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக, அச்சுத் தொழிலை நடத்தக்கூடியவர்களுக்கு விற்பனை வரி விதிக்கின்ற காலங்களில் அவர்கள் விலைக்கு வாங்கும் காகிதத்திற்கும் வரி விதிக்கப்படுகிறது. உதாரணமாக 25 ரூபாய்க்கு காகிதம் வாங்கி பிரிண்ட் செய்யும்போது அதற்கு கூலி 10 ரூபாய் என்றிருந்தால் இப்போது 25-ம் 10-ம் 35 ரூபாய் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. இது முறையல்ல. இவ்விதம் அவர்கள் விலைக்கு வாங்கக்கூடிய காகிதத்திற்கும் வரி கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆகவே இந்த முறை பிரஸ்காரர்களுக்கு தொந்தரவாக இருக்கிறது. ஆகவே இதை நீக்கிவிட்டு அவர்களுடைய பிரிண்டிங் சார்ஜு-க்கு மாத்திரம் வரி விதித்தால் நலமாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விதம் காகிதத்திற்கும் சேர்த்து வரி போடுவது அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும். ஆகவே விலைக்கு வாங்கக்கூடிய காகிதத்திற்கு டாக்ஸ் போடுவது என்பது சரியான முறையல்ல. ஆகவே அவர்களுடைய பிரிண்டிங் சார்ஜுக்கு மாத்திரம் வரி விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு உணவுப் பொருள்கள்மீது வரி விதிப்பதைப்பற்றி பல மெம்பர்கள் ஆட்சேபம் தெரிவித்தார்கள். இந்த முறையில் எல்லோரும் சமதர்மமான முறையில் நடத்தப்படுகிறார்கள். அதாவது இந்த வரி அரசன் முதல் ஆண்டி வரையிலும் கொடுக்கவேண்டியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த உணவுப் பொருட்கள்மீது வரி விதிப்பதில் பெரிய வியாபாரிகளுக்கு பாதகம் ஏற்படுகிறது. இதில் பெரிய வியாபாரிகளுக்கும் சிறிய வியாபாரிகளுக்கும் ஒரு மூட்டையின் பேரில் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் வித்தியாசம் ஏற்படுகிறது. வரி விதிக்காமல் இருக்கின்ற வியாபாரிகள் குறைந்த விலைக்கு உணவுப் பொருட்களை விற்கிறார்கள். அதே சமயத்தில் பெரிய வியாபாரிகளுக்கு இவ்விதம் விற்பனை செய்ய முடியாது. இவ்விதம் மூட்டை ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் வித்தியாசம் வருகிறது. ஆகவே உணவுப் பொருட்கள்மீது வரி போடுவதை எடுத்துவிட்டால் பொது மக்களுக்கு ஒரு பெரிய உதவி செய்ததாக இருக்கும் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். ஆகவே இதன்பேரில் வரியை பூராகவும் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே முறையில்தான் பேப்பர்கள் வாங்கி பிரிண்ட் செய்வதில் பேப்பர்களின்மீது வரி போடக்கூடாது. அதே போன்றுதான் உணவுப் பொருட்கள் மீதுள்ள வரியையும் எடுத்துவிட வேண்டும். இவைகளை செலக்ட் கமிட்டியிலும் இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் நன்றாக பரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறேன். அதோடு அதிகாரிகளை நல்ல முறையில் வியாபாரிகளிடத்தில் நடந்துகொள்வதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த முறையில் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். வியாபாரிகளை இந்த அதிகாரிகள் இம்சிக்கிறார்கள் என்ற எண்ணத்தை போக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

[7th April 1958

**SRI P. S. CHINNADURAI** : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த விற்பனை வரி சம்பந்தமான புதிய திட்டமானது பொறுக்கு கமிட்டியினுடைய பரிசீலனையில் இருக்கின்ற காரணத்தால் இந்த மான்ய விவாதத்தில் அதிகமாக, விரிவாக பேசவேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தைப்பற்றி அரசாங்கத்தினுடைய
11-00 a.m. கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். அதை சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று எண்ணுகிறேன். உணவுப்பொருட்கள்மீது வரி விதிக்கக்கூடாது என்று ஒவ்வொரு ஆண்டிலும் இந்த சபையில் பலதரப்பிலிருந்தும் அங்கத்தினர்கள் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலேகூட இந்த மான்யத்தின்பேரில் பேசிய பல அங்கத்தினர்கள் இதனைக் குறித்து மிகவும் கடுமையாகப் பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூட உணவுப் பண்டங்களின்பேரில் இந்த வரி விதிக்கக்கூடாது என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் அரசாங்கத்தார், இந்த உணவுப் பண்டங்களின்பேரில் வரி விதிப்பை எடுத்துவிட்டால் அதனால் வருமானம் குறைந்துவிடும், அதற்கு என்ன செய்வது எனறு நினைக்கிறார்கள். இந்த உணவுப் பண்டங்களின்மீது விற்பனை வரி விதிக்கக்கூடாது என்று பலமுறை எடுத்துக்காட்டியதுண்டு. இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற விற்பனை வரி மசோதாவில் பல விஷயங்கள் விட்டுப்போய் இருக்கின்றன என்றுதான் எனக்கு தோன்றுகிறது. குறிப்பாக, பத்திரிகை (நியூஸ் பேப்பர்கள்) தொழிலை நடத்துபவர்கள் நிறைய சம்பாத்தியத்தை தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பல அடுக்கு மாளிகைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவ்வளவு பெரிய அளவில் வருமானத்தைப்பெறும் பத்திரிகைத் தொழிலை நடத்துபவர்களுக்கு ஏதாவது விற்பனை, வரி விதித்திருக்கிறார்களா என்று பார்த்தால் கிடையாது. அவர்கள் நிறைய விளம்பரங்கள் போடுவதன்மூலமாக வருமானம் சம்பாதிக்கிறார்கள். தவிர,. தங்களுடைய பத்திரிகைகளை அதிகமாக விற்பனை செய்வதன் மூலமும் வருமானத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள். அவர்களுடைய சிப்பந்திகளுக்குக்கூட போதுமான அளவு சம்பளம் கொடுக்காமல், கொள்ளை அடித்துக்கொண்டு போகிற முதலாளிகள் இந்த வரி விதிப்பிலிருந்து தப்பித்துக்கொள்ளக்கூடாது. திருத்த மசோதாவில் இவர்களுக்கு விற்பனை வரிபோடுவதற்கு ஏற்பாடு செய்திருந்தால் நன்றாக இருக்கும். இதைப் பற்றி இந்த அரசாங்கம் நன்றாக ஆலோசனை செய்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, விற்பனை வரி மான்யத்தின்பேரில் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த விற்பனை வரியானது முதன்முதலில் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக கொண்டுவரப்பட்டது, அதற்குப் பிறகு ரேட்டை அதிகரித்து, இந்த வரியானது "காமதேனு" என்று சொல்லும் அளவுக்கு விருத்தியடைந்துகொண்டு வந்திருக்கிறது. இதன் காரணமாக வருஷத்தில் 10 கோடி ரூபாய்க்குக் குறையாமல் சர்க்காருக்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இந்த சட்டமானது சரிவர அமல் நடத்தப்பட்டு வருகிறதா என்பதையெல்லாம்பற்றி நாம் யோசிக்கவேண்டும். சில அதிகாரிகள் வியாபாரிகளை துன்புறுத்திக் கொடுமைப்படுத்தி வருவதாகவும் பல புகார்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. இன்னும் சில இடங்களில் பார்த்தால் இந்த வரியைக் கொடுக்காமல் இருப்பதற்காக "எவேஷன்" கையாளப்பட்டு வருவதாகவும், அதனால் லீக்கேஜ் இருப்பதாகவும் கேள்விப்படுகிறோம். வரிகளை நல்ல முறையில் விதித்து அவைகளை வசூல் செய்வதற்கும் தக்க ஏற்பாடு சர்க்கார் செய்ய வேண்டும். என்னைப் பொறுத்த மட்டில், சில சாமான்களுக்கு வரியைக் குறைத்துப்போட்டு, அதை நல்ல முறையில் வசூல் செய்தால், நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு மேலாக வசூலாகும் என்பதில் சந்தேகமில்லை. இதை சர்க்கார் நன்றாக யோசிக்கவேண்டும். தவிர, வரி கொடுப்பவர்



7th April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

களுக்கு அதிகமான தொந்திரவைக் கொடுக்க வழியும் தேடக்கூடாது. ஆனால் வரியை சரிவரக் கொடுக்காமல், சிலர் அதற்காக குறுக்கு வழியைக் கண்டுபிடித்து வரி கொடாமல் இருப்பதற்காக வேலை செய்தால் அவர்களைத் தண்டிக்கவேண்டியது நியாயம். இருந்தபோதிலும் வியாபாரிகளுக்குத் தொந்தரவு கொடுத்து கணக்குகளைப் பறிமுதல் செய்வதோ அல்லது மற்ற சாக்குப்போக்குகளைச் சொல்லி அவர்களைத் துன்புறுத்தவோ செய்தால், வியாபாரத்தில அவர்களுக்கு உற்சாகம் இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டை பற்றி அநேக அங்கத்தினர்கள் பேசினார்கள். இந்த சிபார்சுகளை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரும்படியான ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும், உள்ளே புகுந்து எல்லாவற்றையும் பார்க்கிறபொழுது, உடனே இதை அமலுக்குக் கொண்டுவந்தால் சில வியாபாரத் துறைகளிலே சர்க்காருக்கு அதிக நஷ்டம் ஏற்படும். தவிர நமது மாகாணத்தில் போட்டிருக்கும் வரிக்கும், மற்ற மாகாணங்களில் போட்டிருக்கும் வரிக்கும் வித்தியாசம் இருக்கிறது. அதனால் பல சிக்கல்கள் ஏற்படும். ஆகவே இதைத் தீர்க்காலோசனை செய்து, வருகிற ஆண்டிலே கொண்டுவரப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதை நான் பாராட்டுகிறேன். நன்றாக ஆலோசனை செய்து, பின்னர் ஏதாவது ஊழல்கள் இல்லாத படியும், நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானம் எவ்வளவு அதிகமாக கிடைக்குமோ அதற்கும் ஏற்பாடு செய்யும் முறையில் இதை அமலுக்குக் கொண்டுவரவேண்டும்.

டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட்டில் "டிரேட் லைசென்சை"ப் பற்றி சிபார்சு செய்திருப்பதைப் பார்க்கிறோம். முன்பு 5,000 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. டாக்டர் லோகநாதன் அதை 7,500 ரூபாய் ஆக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் அதை ரூபாய் 4,000-ஆகக் குறைத்துப்போட்டு, லைசென்சு கட்டணத்தை 6 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். பொதுவாகப் பார்க்கப்போனால், டாக்டர் லோகநாதன் சிபார்சுகளில் எவை சாதகமாக இருக்கின்றனவோ அவைகளை ஏற்றுக்கொண்டும், சாதகமாக இல்லாதவைகளை புறக்கணித்திருப்பதாகவும்தான் தோன்றுகிறதேயொழிய, முன் இருந்த கட்டணம் என்ன, எப்படி இருந்தால் நல்லமுறையில் வசூல் செய்ய முடியும் என்பதையெல்லாம் யோசித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது சாமான்கள் விலைவாசிகள் எல்லாம் உயர்ந்துவிட்டன. ஆகவே அந்த லிமிட்டை மேலும் குறைத்தால் டிரேட் லைசென்சு மூலம் நமக்கு வருமானம் வருமா, வராதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். 4,000 ரூபாய் என்று போட்டால் சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள்.

அதே மாதிரித்தான் விற்பனை வரி சம்பந்தப்பட்டமட்டிலும், 10,000 ரூபாய் லிமிட் இருந்தது. டாக்டர் லோகநாதனும் அதே லிமிட்டைத்தான் சிபார்சு செய்தார்கள். ஆனால் நம்முடைய சர்க்கார் அதைக்குறைத்து 5,000 ரூபாயாக நிர்ணயித்திருக்கிறார்கள். இதை அப்படியே அமலுக்குக் கொண்டுவருவார்களேயானால் தினசரி சராசரியாக 14 ரூபாய்க்கு விற்பனை செய்பவர்கள்கூட இந்த வரிக்கு உள்ளாவார்கள். ஆகையால் சிறிய வர்த்தகர்கள் அதிகம் பேர் இதனால் பாதிக்கப்படுவார்கள். சிறிய கடை வைத்திருக்கும் பெண்பிள்ளைகள் எல்லோரும்கூட, அதாவது விறகுக் கடை, தோசைக்கடை, ஆப்பக்கடை வைத்திருப்பவர்கள்கூட இந்த வரி செலுத்தும்படியான கட்டத்திற்குள் வருவார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகையால் இதை நன்றாக யோசித்து பழைய லிமிட்டையே கொண்டுவரலாம் அல்லது விலைவாசிகள் உயர்ந்திருப்பதால் அதை உயர்த்தலாமா என்பதைப் பற்றி யோசிக்கலாம். அதைக் குறைத்தால் சிறிய வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள்.

டாக்டர் லோகநாதன் ரிப்போர்ட் பிரகாரம் 79 அயிட்டங்களுக்கு ஒருமுனை வரி போடவேண்டும் என்று சிபார்சு செய்திருக்கிறார்கள். அதை

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [7th April 1958

நம்முடைய சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சதவீதத்தையும் அதிகப்படுத்தியிருக்கிறார்கள். அதைப்பற்றியும் நாம் நன்றாக யோசிக்கவேண்டும். 79 அயிட்டங்களையும் ஒப்புக்கொண்டு வரியின் விகிதத்தையும் உயர்த்தினால், அதனால் சில வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று சொல்ல விரும்புகிறேன். உணவு உற்பத்தியைப் பற்றி பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த உணவுப் பொருள்களின்மீது எந்தவிதமான வரியும்
11-10 a.m. போடக்கூடாது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். பழங்கள், பதார்த்தங்கள், அரிசி, கோதுமை முதலிய உணவு பொருள்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும். டாக்டர் லோகநாதன் அவருடைய ரிப்போர்ட்டில் உணவுப்பொருள்களுக்கு $\frac{1}{2}$ சதவிகிதம் வரி இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய சர்க்கார் சில உணவுப் பொருள்களின்மீது 1 சதவிகிதமும், கோதுமை, பருப்பு, கேழ்வரகு முதலிய பொருள்களின்மீது 2 சதவிகிதமும் வரி போட்டிருக்கிறார்கள். உணவுப் பொருள்களிலேயே ஏன் வித்தியாசம் இருக்கவேண்டும் என்று எனக்கு தெரியவில்லை. உணவுப் பொருள்களின்மீது வரியே இருக்கக்கூடாது. அப்படி ஏதாவது வரி போட்டாலும் அது குறைந்ததாக இருக்கவேண்டும். இதில் வித்தியாசம் இருக்கக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கமிஷன் ஏஜண்டுகள் 100 ரூபாய் லைசென்ஸ் கட்டணம் கொடுத்து லைசென்ஸ் வாங்கிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடமிருந்து விற்பனை வரி வசூலிப்பது என்றால் எப்படி வசூலிப்பது. அவர்கள் 100-க்கு இவ்வளவு சதவிகிதம் கமிஷன் என்று போட்டுக்கொண்டு வியாபாரம் செய்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து வரி வசூலிப்பது என்பதும் மிகவும் சிரமமாக இருக்கும். இவர்கள் விஷயத்தை நன்றாக பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, உணவுப் பொருள்கள், பண்டங்கள் இவைகளுக்கு வரி விலக்கு கொடுக்கவேண்டும் என்றும், நன்றாகப் பரிசீலனை செய்து, இந்த புது சட்டத்தை கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Before I call upon the Hon. Minister, I have to mak an announcement. I am extending the time for withdrawal of nominations to the Public Accounts Committee and the Estimates Committee till 10 a.m. to-morrow morning. The Hon. Minister will now reply.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சபாநாயகர் அவர்களே, நான் பதில் உரையை துவங்குவதற்கு முன்னால் அகில இந்திய அடிப்படையில் நியமிக்கப்பட்ட கமிஷன் சொல்லியிருக்கின்ற ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

" It is true that all taxes are unwelcome and that no tax can be rendered popular by good administration "

என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில்தான் நான் இந்த சபையின் முன்பு இருக்கிறேன் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எவ்வளவுதான் திறமையாக இலாகா நிர்வாகம் இருந்தாலும் வரி விதிப்பு காரணமாக அது 'பாபுலராக' இருக்க முடியாது. ஆகவே இந்த வரி விதிப்பு இலாகா நடத்துகின்ற முறையில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது இதை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பதில் சொல்லாம் என்று நினைக்கிறேன். ஒன்று நிர்வாக முறையில் இருக்கும் கஷ்டங்கள், குறைகள் ; இரண்டாவது வரிவிதிப்பு முறையில் இருக்கும் கஷ்டங்கள், குறைகள், நிர்வாக இலாகாவில் இருக்கக்கூடிய கஷ்டங்களையும், குறைகளையும் பார்க்கும்போது, இதில் அமல் நடத்துவதில் ஏதாவது திருத்தங்கள் செய்ய முடியுமா என்பது ஆலோசனை செய்யப்பட்டது. டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையில் கூறிய எல்லா யோசனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.



7th April 1958] [Sri R. Venkataraman]

'அஸெஸ்மெண்ட்' செய்பவர்கள் தனியாகவும், அப்பீலை பரிசீலித்து முடிவு செய்பவர்கள் தனியாகவும் இருக்கவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். இதை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கிறது. 'அஸெஸ்மெண்ட்'-ல் ஏதாவது விருப்பு வெறுப்பு காரணமாக தவறாக வரி விதிப்பு செய்து இருந்தாலும்கூட 'அப்பீல்லிங்'-ல் இருப்பவர்கள் எப்பொழுதுமே வரி விதிப்பில் ஈடுபடாமல் இருப்பதன் காரணமாக நன்றாக பரிசீலனை செய்து நீதி வழங்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதற்கு மேல் 'அப்பலேட் ட்ரிப்யூனல்' ஒன்று வைத்திருக்கிறோம். அதற்குத் தலைமையாக ஒரு ஜில்லா ஜட்ஜ் இருக்கிறார். அதைப்பற்றி அங்கத்தினர்கள் பெருமையாக சொன்னார்கள். "அப்பலேட் ட்ரிப்யூனல் நன்றாக நடந்து வருகிறது, செம்மையாக விசாரிக்கின்றது, அங்கு எந்த விதமான குறைபாடும் இல்லை" என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது இருக்கின்ற ட்ரிப்யூனல் சென்னை நகரத்தில் இருக்கிறது. இன்னும் ஒரு ட்ரிப்யூனலை சென்னை ராஜ்யத்தில் வேறு ஏதாவது ஒரு இடத்தில் ஏற்படுத்தி அந்த பிராந்தியத்தில் உள்ள அப்பீல்களை விசாரிக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சில அங்கத்தினர்கள் சொன்னார்கள். நாம் புதிதாக கொண்டுவந்திருக்கிற மசோதா நிறைவேற்றப்படுமானால் இந்த 'அஸெஸ்மெண்ட்' வேலை மிகவும் குறைந்து விடும். 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரை இருக்கக்கூடியவர்களுக்கு 'அஸெஸ்மெண்ட்' கிடையாது. அவர்களுக்கு 'ஸ்லாப் ரேட்' போடப்படும். மொத்தமாக ரூபாய் 5, 10, 20, 25 என்று போடப்படும். அப்பொழுது இவர்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று கணக்கிட வேண்டிய தேவையில்லை. 'ஸ்லாப் ரேட்'டின் பிரகாரம் ஒருவர் 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் பிரிவுக்குள் வருகிறாரா அல்லது 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் பிரிவுக்குள் வருகிறாரா என்று பரிசீலனை செய்யவேண்டிய பிரச்னைதான் இருக்கும். ஆகையால் அப்பீல்கள் குறைந்து விடும் என்று நான் நம்புகிறேன். அப்பீல்கள் நிறைய இருக்குமானால் இரண்டு இடங்களில் ட்ரிப்யூனல்கள் வைத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம். இல்லாவிட்டால் சென்னை நகரத்தில் இருக்கின்ற ஒரு ட்ரிப்யூனலே போதும். இவையெல்லாம் அனுபவத்தை ஒட்டி செய்யக்கூடிய காரியங்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

'அஸெஸ்மெண்ட்' ஆபீசர்கள் சரியான முறையில் நடந்துகொள்வதில்லை என்று வருஷா வருஷம் சொல்வது வழக்கம். இந்த வருஷம் அதிகமாக புகார்கள் சொல்லவில்லை என்று பார்க்கும்போது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இந்த இலாகாவை நிர்வகிக்க ஆரம்பித்த காலத்தில் ஒவ்வொரு நாளும் புகார்கள் வந்து கொண்டிருந்தன. டாக்டர் லோகநாதன் அவர்கள் விசாரணை நடத்த ஆரம்பித்த காலத்திலிருந்து இந்த புகார்கள் குறைந்து விட்டன. இதற்கு காரணம் என்னவென்றால், இந்த சட்டத்தை அமுல் நடத்தும்போது எந்தவிதமான தொல்லையும் இருக்கக்கூடாது என்று நிர்வாக உத்தியோகஸ்தர்கள் உணர்ந்துகொண்டு விட்டதனால்தான். இதைத்தான் அரசாங்கம் விரும்புகிறது என்று அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இந்தப் புகார்கள் இல்லாத காரணத்தினால் தொல்லைகள் இல்லை என்று நான் நினைக்கிறேன். இதனால் அவர்கள் மனித இயல்பு மாறி தெய்வீகப் பிறவியாகி விட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. தவறுகள் இருந்தால் அதை சர்க்காருக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நண்பர் மாரியப்பன் ஒன்றிரண்டு விஷயங்களை கூறினார்கள். அவர் எனக்கு இதுவரை இதைப்பற்றி ஏன் எழுதவில்லை என்று எனக்குத் தெரியவில்லை. தனிப்பட்ட அதிகாரி சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை என்றால், அதைப்பற்றி எனக்கு உடனடியாக எழுதினால் அதை நான் கண்காணிப்பதற்கு உதவியாக இருக்கும். பொதுவாக அதிகாரிகள் எல்லோரும் தவறு செய்கிறார்கள் என்று சொன்னால் அது சரியாகாது.

[Sri R. Venkataraman] [7th April 1958

அவர்கள் உற்சாகம் குறைந்து விடும். அம்மாதிரி ஏற்படாமல் தனிப்பட்டவர் ஏதாவது தவறுகள் செய்தால் அதை உடனே சர்க்காருக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

11-20 a.m. வரிவிதிப்பு முறைகளைப்பற்றி பேசப்பட்டது. ஆரம்பத்திலேயே நான் சொன்னேன். அதிகமாக பதில் சொல்லுவதற்கில்லை என்று. காரணம் என்னவென்றால் இந்த விஷயங்கள் பூராவும் செலக்ட் கமிட்டி முன்னால் விசாரணையில் இருக்கிறது. கமிட்டியில் பல சிறந்த வியாபாரிகளை கூப்பிட்டு அவர்களுடைய அபிப்பிராயங்கள் கேட்கப்பட்டன. ஏராளமானவர்கள் ஒரு முனை வரியே வேண்டும் என்றவர்கள் பல கட்ட வரியே நல்லது என்று சொன்னார்கள். உதாரணமாக சோடா விற்பவர்கள் பல கட்ட வரியே வேண்டும் என்றார்கள். அதேபோலே ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திர வியாபாரிகள், அலுமினிய பாத்திர வியாபாரிகள், சாயம் போடுபவர்கள், இன்னும் மற்றவர்கள் ஒரு முனை வரி வேண்டாம் என்று கூறினார்கள், ஆகவே இவர்கள் முன்பு கொண்டிருந்த அபிப்பிராயங்களை மாற்றிக் கொள்ளவேண்டியதாக ஏற்பட்டிருக்கிறது. இதேபோல சேம்பர் ஆப் காமர்ஸாராகளும் பல கட்ட வரி இரண்டு பர்ஸண்டு போடுவதைக் காட்டிலும் ஒரு முனை வரியாக ஆறு அல்லது எழு பர்ஸண்டு போட்டால் வாங்குவதற்கு தயக்கம் ஏற்படும், கன்ஸியூமர் ரிஸிஸ்டன்ஸ் உண்டாகும் என்றார்கள். ஆகவே இதை மீண்டும் பரிசீலனை செய்து பார்த்துத்தான் திட்டவட்டமாக அபிப்பிராயம் சொல்லமுடியும் என்றார்கள். வியாபாரிகளின் விருப்பத்திற்கிணங்க நன்றாக அவகாசம் கொடுத்து முடிவு எடுபடுதற்காக ஒரு வருஷம் தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.

கனம் கோதண்டராமன் அவர்களுக்கு தன்னம்பிக்கையே குறைவு. பெரிய வியாபாரிகளெல்லாம் சொன்னதன்பேரில் சர்க்கார் மாற்றிவிட்டது என்றார்கள். அவர் செலக்ட் கமிட்டியிலேயே இருப்பவர். அங்கத்தினர்கள் எல்லாம் நன்றாக உணர்வார்கள். இது கமிட்டி முன்னால் வைக்கப்பட்டு அங்கத்தினர்களால் யோசனை செய்யப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு. ஆகவே அந்த அளவுக்கு இந்த பெருமையை கனம் கோதண்டராமன் அவர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : நீங்கள் இப்பொழுது இப்படி சொன்னதை வரவேற்கிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : வரி விதிப்பு சம்பந்தமாக கிளர்ச்சிக்கும், கடையடைப்புக்கும் ஏற்பாடு செய்கிறார்கள். இதற்கு அவசியமே இல்லை. மக்கள் அபிபபிராயத்திற்கு இணங்க இதற்கென்று ஒரு தனி நிபுணரை போட்டு விசாரித்து கனம் அங்கத்தினர்களின் அபிப்பிராயங்களையும் கேட்டு, மேலும் வியாபாரிகள் சொல்லுவதையெல்லாம் கேட்டு நல்ல முறையிலே இதைச் செய்யவேண்டுமென்று முன்வந்திருக்கும் போது கிளர்ச்சிக்கு அவசியம் என்ன ? அபிப்பிராயங்களைச் சொல்ல வேண்டிய இடங்களிலே சொல்லியும் செலக்ட் கமிட்டி அங்கத்தினர்கள் மூலமாகவும் சொன்னாலே போதும். இதிலிருந்து எங்களுக்கு ஒரு சந்தேகம். இந்த கிளர்ச்சிகள் செய்வதைப்பார்த்தால் உண்மையிலேயே நியாயம் எந்த பக்கம் இருக்கிறது என்பதைப்பற்றி. உதாரணமாக லோகநாதன் அவர்கள் அறிக்கையில் சொன்னார்கள். இந்த நாட்டு செக்குகளுக்கு வரி விலக்கு கொடுப்பதுபற்றி. மில்களில் உற்பத்தியாகும் எண்ணெய் நாட்டு செக்கு எண்ணெய் என்று விற்கப்படுகிறது என்று இருந்தாலுங்கூட நாட்டு செக்கு பாதுகாக்கப்படவேண்டும் என்ற என் சொந்த அபிப்பிராயத்திற்கு இடங்கொடுக்க விரும்பினேன். ஆனால் செலக்ட் கமிட்டிக்கு 300 அல்லது 400 தந்திகள் வரவே ஓரளவு லோகநாதன் அவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்குமோ என்ற சந்தேகம் வளர்ந்தது. அதே போல்தான் இந்த ரூ. 5,000 பற்றியும் இதை டாக்ஸேஷன் என்கொயரி கமிட்டியின் சிபார்சு அடிப்படையில் செய்திருக்கிறோம். இதில் ஒரு தப்பான அபிப்பிராயங்கொண்டு இதற்கு ஒரு கிளர்ச்சி செய்வதிலிருந்து இந்த லிமிட்டில் உள்ள வியாபாரிகள் வரி விதிப்பிலிருந்து தப்புகிறார்களோ



7th April 1958] [Sri R. Venkataraman]

என்று அஞ்சவேண்டி இருக்கிறது. பரிசீலனை செய்து முடிவு செய்ய செலக்ட் கமிட்டி இருக்கிறது. இக் கமிட்டி முடிவு செய்த பிறகு இதை மேலும் பரிசீலிக்க சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இதை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்பது. நாட்டின் நிர்வாகத்தை நடத்துவது கஷ்டமான வேலை. அதற்கு வரி விதிப்பு என்ற கஷ்டமான காரியத்தை மேற்கொண்டு நடத்த வேண்டி இருக்கிறது. அதை மக்களிடத்திலே நல்ல முறையிலே செய்ய வேண்டுமென்பதே சர்க்காரின் நோக்கம் என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் சபை முன்னால் வைக்கும்போது சட்டத்திலே எந்த விதமான மாறுதலும் செய்யப்படவில்லை என்பதை அங்கத்தினர்கள் உணர்வார்கள். இதற்கு எந்த விதமான கிளர்ச்சியும் அவசியமில்லை. காய்கறிகாரர்கள், அரிசி வியாபாரிகள் மற்றவர்கள் தங்களுக்கு ஏதோ திடீர் என்று ஆபத்து வந்துவிட்டதாக நினைப்பது தவறு. ஒரு ஆபத்தும் வந்துவிடவில்லை. 1939-வது வருஷ சட்டம் நன்றாக நடத்தப்படுகிறது. புதிதாக கொள்கை பூர்வமாக நாங்கள் ஒரு மசோதாவை பரிசீலனையில் வைத்திருக்கிறோம். கொள்கை என்ன ? இது இரண்டு விதமானது. ஒன்று சில பொறுக்கிய பண்டங்கள்மீது அதிக வரி விதிப்பது. அல்லது எல்லா பண்டங்களின் மீதும் குறைவான வரியை விதித்து வேண்டிய பொருளை ஈட்டுவது. இதில் எது செய்தாலும் நியாயத்திற்கு ஒத்தது என்பது பரிசீலித்து தீர்ப்பு செய்ய வேண்டிய விஷயம். இப்பொழுது நாம் நினைக்கும் சோஷலிஸ சமுதாய பாணியில் நிர்வாகத்தை நடத்தவேண்டும். அந்த அடிப்படையில் எல்லா மக்களும் தங்கள் தங்கள் கட்டணத்தை செலுத்துவார்கள் என்பதை ஒட்டி தான், அந்த அடிப்படையில்தான் பார்க்கப்படுகிறது. அந்த மாதிரி பல பண்டங்கள்மீது பல வரிகள் விதிப்பதுபற்றிய மசோதா செலக்ட் கமிட்டி முன்னால் பரிசீலனையில் இருக்கிறது.

பழைய நண்பர் திரு. எல்லப்பன் சொன்னார்கள், வரியெல்லாம் வசூலித்து அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன் எடுத்துக்கொண்டான், இப்பொழுது வரிவசூல் செய்வது எதற்கு என்றார்கள். திரு. எல்லப்பன் அவர்களுககு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 15 அல்லது 20 வருஷங்களுக்கு முன்னால் கோகுலம் ஹரிஜனங்களுக்கு உதவி செய்ய கால் காலணவாக சேர்க்க வேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது நமது சர்க்கார் வரிவசூல் செய்து பெரிய அளவில் ஹரிஜனங்களுக்கு, படிப்பு, சுகாதாரம், வைத்தியம் இன்னும் பல துறைகளிலும் வசதிகள் செய்வதற்கு செலவிடுகிறார்கள். மேலும் உலக பொருளாதார கொள்கையை பார்க்கும்போதும் நன்றாக தெரியும். எல்லா நாடுகளிலும் இந்த விற்பனை வரி விதிக்கப்படுகிறது. நியாயமான வரி என்றுதான் நிபுணர்கள் கருதுகிறார்கள்.

கடைசியாக நண்பர் சின்னதுரை நியூஸ் பேப்பர்களுக்கு வரி போட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால் அந்த அதிகாரம் மத்திய சர்க்காரைச் சேர்ந்தது, சென்னை சர்க்காருக்கு இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்த யோசனையை அவர்கள் டெல்லியில் இருக்கும் தங்கள் பிரதிநிதிகளிடம் சொல்லி பார்லிமெண்டில் சொல்லி ஏற்பாடு செய்தால் அதனால் எங்களுக்கும் வருமானம் வருமானால் அதை வரவேற்கிறோம்.

கடைசியாக உணவுப்பொருள்கள் பற்றி. நெல்லை எடுத்துக்கொண்டால் சாதாரணமாக அது உற்பத்தியாகும் இடத்திலேயே 80 சத விகிதம் உட்கொள்ளப்படுகிறது. வியாபாரம் அதிகமாக நடப்பதில்லை. விவசாயிகள் பெரும் பகுதியை கூலியாகப் பெற்று உணவுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதில் ஒரு பர்சண்டு விகிதத்தில் சர்க்காருக்கு ரூ. 45 லட்சம் வருகிறது. அதே சமயத்தில் இந்த தொகையை விட்டுக்கொடுகக் கூடாதா என்று கேட்கப்படுகிறது. இதுவும் பரிசீலனை செய்யப்படும். இத்துடன் அங்கத்தினர்கள் இந்த மானிய கோரிக்கையை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[7th April 1958

MR. SPEAKER: The question is—

"That the allotment of Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER: I now put the Demand to the vote of the House. The question is:—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,40,86,400 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

The Demand was put and carried and the Grant was made.

### (2) DEMAND X—STATE LEGISLATURE

THE HON. SRI C. SUBRAMANIAM: Sir, on the recommendation of the Governor I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 23,51,700 under Demand X—State Legislature."

MR. SPEAKER: Motion moved—

"That the Government be granted a sum not exceeding Rs. 23,51,700 under Demand X—State Legislature."

I understand that all Opposition parties have agreed to support the cut motion standing in the name of the hon. Member Sri M. Kalyanasundaram. Sri M. Kalyanasundaram will now move his cut motion.

SRI M. KALYANASUNDARAM: Sir, I move—

"That the allotment of Rs. 23,51,700 under Demand X—State Legislature—be reduced by Rs. 100."

MR. SPEAKER: Cut motion moved—

"That the allotment of Rs. 23,51,700 under Demand X—State Legislature—be reduced by Rs. 100."

The motion and the cut motion are before the House for discussion.

1-30 a.m. SRI M. KALYANASUNDARAM: நம்முடைய குடியரசில் சட்டசபைகளும் பார்லிமெண்டும் மேலும் மேலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. அப்படியிருக்கும்பொழுது இந்த சட்ட சபையின் அந்தஸ்தை மேலும் மேலும் உயர்த்தக்கூடிய முறையிலும், நம்முடைய மக்களிடத்திலே சட்ட சபையின் நடவடிக்கைகள் பற்றியும் சட்ட சபை அங்கத்தினர்கள் பற்றியும் நன்மதிப்பு உயரக்கூடிய முறையிலும் இந்தச் சபையின் நடவடிக்கைகள் இருக்கவேண்டும். சபையினுடைய அதிகாரங்களும் இருக்கவேண்டுமென்பதில் எதிர்க்கட்சிகளைவிட சர்க்கார் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்களுக்குத்தான் பொறுப்பு அதிகம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அப்படி பார்க்கும் பொழுது இந்தச் சபையைப்பற்றி எடுக்கக்கூடிய முடிவுகளை அமைச்சர்கள் தங்களுடைய சொந்தப் பொறுப்பிலேயே எடுத்துவிடுவார்களேயானால்,



7th April 1958] [Sri M. Kalyanasundaram]

அது மிகவும் வருந்தத்தக்கது. கடந்த காலத்தில் அப்பேற்பட்ட மிக முக்கியமான ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அது இந்தச் சபையில் பலராலும், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்களாலும் கண்டிக்கப்பட்டது இந்தச் சபையின் ஞாபகத்தில் இருக்கும் என்று நான் நம்புகிறேன். சபை கூடவேண்டிய இடத்தை மாற்றுவது என்பது ஒரு சாதாரணமான விஷயமல்ல. அப்பேர்பட்ட ஒரு முடிவை அமைச்சர்கள் தங்கள் பொறுப்பிலேயே எடுத்து, சபை மவுண்டுரோடில் கூடிவந்ததை மாற்றிவிட்டு இந்த இடத்தில் கூடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட பல கஷ்டங்களைப்பற்றி எடுத்துச் சொல்லிவந்திருக்கிறோம். ஆனால் இப்பொழுது இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டது தானே. இனி அதைப்பற்றி பேசுவதில் பயனில்லை என்று அங்கத்தினர்கள் விட்டுவிட்டார்கள். இம்மாதிரி ஒரு முடிவு எடுப்பதானது இந்தச் சபையின் சுதந்தரத்தை மதிப்பதாக ஆகாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதை ஒரு உதாரணமாகச் சொன்னேன். ஆகவே, இந்த டிபார்ட்மெண்டு சுயேச்சையாக இயங்கவேண்டும். சபாநாயகர் பொறுப்பிலேயே பூரண அதிகாரங்களும் இருக்கவேண்டும். எடுக்கவேண்டிய முடிவுகளில் அவருக்கே பூரண பொறுப்பும் அதிகாரமும் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அங்கத்தினர்கள் அவர்களுடைய உரிமைகளைப்பற்றி சபாநாயகருக்கு எடுத்துச் சொல்லவும், மேற்கொண்டு அவர்களுக்கு கிடைக்கவேண்டிய வசதிகளைப்பற்றி எடுத்துச் சொல்லவும், வசதி ஏற்படும் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். அதோடுகூட, இந்தச் சபையின் வேலைகளை துரிதமாக நல்ல முறையில் நடத்துவதற்கு கனம் அங்கத்தினர்கள் மட்டும் பொறுப்பு என்று நாம் கருத முடியாது. இந்தச் சபையின் நடவடிக்கைகள் இவ்வளவு பாராட்டத்தகுந்த முறையில் நடைபெறுகிறது என்றால், அதற்கு இந்த இலாகாவில் வேலை செய்யக்கூடிய சகல உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் பொறுப்பாளிகளாக ஆகிறார்கள். அப்படியிருக்கக்கூடிய சிப்பந்திகளின் பேரில் அமைச்சர்களோ அல்லது ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களோ கண்காணிப்பு செலுத்துகிறார்கள் என்று ஒரு நிலைமை இருக்கக்கூடாது. இந்த இலாகா சம்பந்தப்பட்ட மட்டில் அவர்களை எல்லோரையும் சமமாக மதிக்கவேண்டும். அந்த எண்ணம் அவர்களுக்கு ஏற்படவேண்டுமானால் இந்த இலாகா சபாநாயகரின் முழு பொறுப்பில் சுயேச்சையாக இயங்கவேண்டும். இவர்கள் சம்பந்தப்பட்ட உரிமைகளும் பிரச்னைகளும் நிதி இலாகாவிற்கோ அல்லது பொது இலாகாவிற்கோ போகவேண்டிய நிலைமை இருக்கக்கூடாது. அந்த நிலைமை இருக்கும் வரையில் இவர்களுக்கு தாங்கள் சர்க்காரைச் சார்ந்திருக்கிறோம் என்ற பயம் இருக்கத்தான்செய்யும். அம்மாதிரி சங்கடமான நிலைமையில் இந்த சிப்பந்திகள் இருப்பார்களேயானால் இந்தச் சபையின் வேலைகள் நல்ல முறையில் நடப்பதற்கு குந்தகமாக இருக்கும். ஆகவே, இந்த இலாகா சபாநாயகரின் பொறுப்பிலே சுயேச்சையாக இயங்கவேண்டும் என்று பல முறை வற்புறுத்தி சொல்லி வந்தவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில், மீண்டும் இதை வற்புறுத்தி சொல்லுகிறேன். அதே சமயத்தில் எவ்வளவு சங்கடமான நிலைமையிலும் இந்த டிபார்ட்மெண்டைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் இந்தச் சபையினுடைய நடவடிக்கைகள் நல்ல முறையில் நடப்பதற்கு ஆற்றிவந்திருக்கக்கூடிய சேவையை நான் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதேபோன்று, அவர்களுக்கு மனக்குறை இருந்தபோதிலும், பல கஷ்டங்கள் இருந்தபோதிலும் இந்தச் சபையின் நடவடிக்கைகள் நன்று நடப்பதற்குரிய சேவையை செய்து, நமது தேசத்தின் லட்சியத்தைக் கருதி திறமையாக தொண்டாற்றி வரவேண்டும்மென்று நான் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்தச் சபையின் அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையைப்பற்றி ஒரு விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய சபையின் அங்கத்தினர்களின் மொத்த எண்ணிக்கை 205-ஆக இருந்துகொண்டிருக்கிறது. இந்த எண்ணிக்கையை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நம்முடைய ராஜ்யத்திலுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பது தெரியவரும். அதுபற்றி நான் சில புள்ளிவிவரங்களை கொடுக்கிறேன். லோக்

[Sri M. Kalyanasundaram] 7th April 1958

சபைக்கு நாம் அனுப்பும் பிரதிநிதிகள் மொத்தம் 41. நம்முடைய சபைக்கு 205 பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிறோம். அதாவது ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 5 அங்கத்தினர்கள் வீதம் நாம் இந்த சபைக்கு தேர்ந்தெடுக்கிறோம். இதை மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கலாம். மேற்கு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் பார்லிமெண்டு அங்கத்தினர்களின் எண்ணிக்கை 34. அந்த ராஜ்யத்தில் சட்ட சபை அங்கத்தினர்களின் எண்ணிக்கை 238. அதாவது ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 7 அங்கத்தினர்கள் வீதம் அவர்கள் சட்ட சபைக்கு தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அதேமாதிரி ஆந்திரப் பிரதேசத்தோடு ஒப்பிடலாம். நம்மை விட்டுபிரிந்த ஒரு பகுதி அந்த ராஜ்யத்தோடு சேர்ந்திருக்கிறது. அவர்கள் பார்லிமெண்டுக்கு 43 பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிறார்கள். சட்ட சபைக்கு 301 பிரதிநிதிகளை அனுப்புகிறார்கள். அதாவது ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 7 அங்கத்தினர்கள் வீதம் சட்ட சபைக்கு தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். அஸ்ஸாம் ராஜ்யத்தில் ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 9 பிரதிநிதிகள் வீதம் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கிறார்கள். அதாவது ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 9-லிருந்து 6 அங்கத்தினர்கள் வீதம் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் மற்ற ராஜ்யங்களில். நம்முடைய ராஜ்யம் ஒன்றில்தான், பெரிய ராஜ்யங்களுக்குள் சட்ட சபைக்கு பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கிறது. (கனம் ஸ்ரீ ஆர். வெங்கடராமன்—யு.பி. ராஜ்யத்தில்.) அது ரொம்பவும் பெரியது. ஆகையினாலே குறைந்திருக்கலாம். அப்படிப் பார்க்கும்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 5 அங்கத்தினர்கள் வீதம்தான் சட்ட சபைக்கு பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆகையினால் இந்த எண்ணிக்கை ரொம்பவும் குறைந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள் யு.பி. ராஜ்யத்தைப்பற்றி சொன்னார்கள். அங்கு ஜனத் தொகை மிக அதிகம். அந்த ராஜ்யத்திலிருந்து 86 பார்லிமெண்டு அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒரு அங்கத்தினருக்கு 6, 7 அங்கத்தினர்கள் வீதம் சட்ட சபைக்கு தேர்ந்தெடுத்தால் ரொம்பவும் எண்ணிக்கை அதிகமாகப் போய் விடும். அதன் காரணமாக இப்பொழுது அங்கே 430 பிரதிநிதிகள் சட்ட சபையில் இருக்கிறார்கள். அது பெரிய ராஜ்யமாக இருப்பதினால் அங்கே பிரதிநிதித்துவம் குறைவாக இருக்கலாம். ஆகவே, நம்முடைய ராஜ்யத்தில் சட்ட சபைக்கு பிரதிநிதித்துவம் மிக குறைவாக இருக்கிறது. இதன் பேரில் மந்திரி அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு பார்லிமெண்டு அங்கத்தினருக்கு 6 சட்ட சபை அங்கத்தினர்கள் வீதம் பிரதிநிதித்துவம் இருக்கும்படி அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது மிகவும் அவசியமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். அதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயம் நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், தேர்தல் சம்பந்தமான பிரிவைப்பற்றித்தான். இதற்கு வேண்டிய தொகையை இந்த மான்யத்தின் கீழ்கோருகிறார்கள். இந்த ஆண்டில் கூட இதற்காக ரூ 12 லட்சம் இந்தத் தலைப்பின் கீழ் கோரப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை செலவழிக்கக்கூடிய அதிகாரிகளும், சிப்பந்திகளும் எந்த டிபார்ட்மெண்டின் கீழ் வேலை செய்கிறார்கள் என்றால், 'சீப் செக்ரடரியின்' கீழ் அவர்கள் வேலை செய்கிறார்கள். ஒன்று இந்த மான்யத்திலிருந்து இந்தத் தொகையைப் பிரித்து வேறு மான்யத்தோடு சேர்க்க வேண்டும். அல்லது இந்த மான்யத்தோடு இந்தத் தொகையையும் சேர்த்து கோரவேண்டுமென்றால், இந்த இலாகாவை 'லெஜிஸ்லேசர் டிபார்ட்மெண்டின்' கீழ் கொண்டுவரவேண்டும். தேர்தல் அதிகாரிகளும் அவர்களின் கீழ் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகளும் சட்ட சபை இலாகாவின் கீழ் கொண்டுவரப்பட்டுவிட்டால், தேர்தல், சட்ட சபை சம்பந்தமான எல்லா விஷயங்களும் ஒரே இலாகாவின் கீழ் இருக்கும். அதுவும் நிர்வாகத்தை ஒட்டி இல்லாமல் சுயேச்சையாக இருக்கும். என்னுடைய யோசனை என்னவென்றால் தேர்தல் அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் சட்ட சபை டிபார்ட்மெண்டோடு சேர்த்துவிடவேண்டுமென்பதுதான். இந்த ஆலோசனையை பரிசீலனை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளு



7th April 1958] [Sri M. Kalyanasundaram]

கிறேன். மேலும், சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இருக்கும் சில குறை 11-40 a.m.
களையும் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கும் காரியாலயங்கள் சம்பந்தமாக இருக்கும் சில கஷ்டங்களையும் கனம் அமைச்சர் கவனிக்கவேண்டும். இந்த அதிகாரம் பூராவும் இந்த சபையிடமே இருக்குமேயானால் நான் இதைப் பற்றிப் பேசவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. சட்ட சபையிலும் பூராப் பொறுப்பும் இல்லாததால் நான் இதைப்பற்றிப் பேசவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை. எதிர்க் கட்சிகளுக்கு காரியாலய இடங்கள் சமீபத்தில்தான் கொடுக்கப்பட்டன. அந்தக் காரியாலயங்கள் மிகவும் வசதிக்குறைவானவையாக இருக்கின்றன. அங்கே உட்கார்ந்து அதிக நேரம் வேலை செய்ய முடியவில்லை. ராஜாஜீ ஹாலுக்குப் பக்கத்திலுள்ள கட்டிடம் எதிர்க் கட்சிகளுக்கு, காரியாலயங்களாக வைத்துக்கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கே வேலை பார்ப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சட்ட சபை கூடும் சமயத்தில் எதிர்க் கட்சிகளுக்கு இங்கே தனி அறைகள் இல்லை. எதிர்க் கட்சித் தலைவர் ஒருவருக்குத்தான் ஒரு அறை கொடுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சிக்கு இங்கே அறை கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் கட்சிகள் தனியாகக் கூடிப் பேசி இயங்கவேண்டுமென்றால், அதற்கு இங்கே இட வசதி செய்துகொடுக்கப்படவில்லை. இங்கே ஒவ்வொரு கட்சிக்கும் ஆபீஸ் இடவசதி தனித் தனியாக செய்துகொடுக்கப்படவேண்டும். மற்ற கட்சிகளுக்கு தனி அறைகள் கொடுக்கப்படாமல் இருக்கும்போது காங்கிரஸ் கட்சிக்கு நல்ல கட்டிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்களுக்கு அந்த வசதியைப் பெறுவதற்கு உரிமை உண்டு. எங்களுக்கும் அந்த உரிமை உண்டு. எல்லாக் கட்சிகளுக்கும் இடவசதி செய்துகொடுக்கப்படவேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன். காங்கிரஸ் கட்சிக்கு டெலிபோன் வசதி இருக்கிறது. 'நாங்கள் 150 பேர் இருக்கிறோம்' என்று காங்கிரஸ் அங்கத்தினர்கள் காரணம் சொல்லக் கூடும். அவர்களுக்கு இட வசதி செய்துகொடுக்கப்படவேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன். அதேபோல் மற்ற கட்சிகளுக்கும் இடவசதி செய்து கொடுக்கப்படவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். பல விஷயங்களில் நம் சட்ட சபை மற்ற ராஜ்யங்களுக்கு முன் உதாரணமாக இருக்கிறது. மற்ற சில ராஜ்யங்களில் ஆளும் கட்சியினரும் எதிர்க் கட்சியினரும் சட்ட சபையில் ஒருவருக்கொருவர் நடந்துக்கொள்ளும் விதம் விரோதமாக இருக்கிறது. நம் ராஜ்யத்தில் நாம் அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. இந்த ராஜ்யத்தில், சட்ட சபையில் பல கட்சிகளின் அங்கத்தினர்களும், பேசும்போது கார சாரமாகப் பேசினாலும் ஒருவருக்கொருவர் பழகும்போது சுமுகமாகப் பழகுகிறார்கள். அப்படியிருக்கும்போது காரியாலய வசதிகளைச் செய்து கொடுக்கும் விஷயத்தில் கட்சிகளிடையே காட்டியிருக்கும் தாரதம்மியத்தைப் போக்கி எல்லாக் கட்சிகளுக்கும் நல்ல காரியாலய வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொண்டு என் வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபிக்கிறேன்.

**Sri A. R. SUBBIAH MUDALIAR**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்ய கோரிக்கைப் பிரேரேபணையை ஆதரிக்கிறேன். இப்போது சட்ட சபைக் காரியாலயம் ரொம்ப நன்றாக நடந்து வருகிறது. காரியாலய உத்தியோகஸ்தர்கள் சட்டசபை அங்கத்தினர்களுக்கு தங்கள் ஒத்துழைப்பைப் பூரணமாகக் கொடுக்கிறார்கள். அவர்களுடைய ஒத்துழைப்பு மிகவும் போற்றத்தக்கது. என் போன்ற புது அங்கத்தினர்களுக்கு அவர்கள் மிகவும் ஒத்தாசையாக இருக்கிறார்கள். நான் பல காரியாலயங்களைப் பார்த்திருக்கிறேன். சட்டசபைக் காரியாலய அதிகாரிகள் அவரவர்களுடைய கஷ்டங்களைத் தெரிந்துகொண்டு வேண்டிய உதவியை அளிக்கிறார்கள். இது மிகவும் திருப்திகரமான விஷயம். இவர்கள் என்போன்ற அங்கத்தினர்களுக்கு பல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். என் போன்றவர்கள் 400 மைல்களுக்கு அப்பாலிருந்து இங்கே வந்திருக்கிறோம், நாங்கள் பள்ளிப் பிள்ளைகளைப்போல், இங்கே வந்து பல விஷயங்களைத் தெரிந்துகொள்கிறோம். புதிதாக பள்ளிக்குப் போகும் பிள்ளைகளைப்போல் என்போன்றவர்கள் சட்டசபைக்கு வந்திருக்கிறார்கள். சட்டசபைக் காரியாலய உத்தியோகஸ்தர்கள் கட்சி பேதம் பாராட்டாமல் எல்லாக் கட்சிகளின்

[Sri A. R. Subbiah Mudaliar] [7th April 1958

அங்கத்தினர்களுக்கு உதவி செய்கிறார்கள். இது மிகவும் போற்றத் தகுந்தது. சட்டசபைக் காரியதரிசியின் முன்னிலையில் இந்த விஷயத்தை இங்கே சொல்வது உசிதமல்ல. இருந்தாலும் இதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. சட்டசபைக் காரியாலயத்திலுள்ள உத்தியோகஸ்தர்களைப் போல மற்ற காரியாலயங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும் செயலாற்றினால் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்யலாம்.

சர்க்காருக்கு ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு வருட பட்ஜெட் கூட்டமும் மார்ச் மாதத்தில் நடத்தப்படுகிறது. விவசாயிகளாக இருக்கும் என்போன்ற அங்கத்தினர்களுக்கு இதனால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மார்ச்சு மாதம்தான் அறுவடை நடக்கும். வருஷம் பூராவும் கஷ்டப்பட்டு சாகுபடி செய்த மகசூலை மார்ச்சு மாதம்தான் அறுவடை செய்யவேண்டும். மார்ச்சில் பட்ஜெட் கூட்டம் நடந்தால் எங்கள் தொழிலை நாங்கள் அப்போது கவனிக்க முடிவதில்லை; அப்போது அறுவடை நடப்பதை நாங்கள் மேற்பார்வை செய்ய முடிவதில்லை. ஆகவே பட்ஜெட் கூட்டத்தை இரண்டு கூட்டங்களாகப் பிரித்து ஜனவரியில் ஒரு கூட்டத்தையும் ஏப்ரலில் ஒரு கூட்டத்தையும் நடத்தலாம் என்று சொல்ல விரும்புகிறேன. ஜனவரியில் பட்ஜெட்டை சமர்ப்பித்துவிட்டு 'டோகன் கிராண்ட்' வாங்கிக்கொள்ளலாம். ஏப்ரலில் பட்ஜெட்டை விரிவாக டிமாண்டுவாரியாக விவாதிக்கலாம். நான் சுயநல எண்ணத்துடன் இவ்வாறு சொல்லவில்லை. நம் நாடு விவசாய நாடு. நம் நாட்டில் முக்கியமான தொழில் விவசாயம். ஆகவேதான் நான் இவ்வாறு கூறுகிறேன். டிமாண்டுகளை ஏப்ரலில் எடுத்துக்கொண்டு ஒவ்வொரு டிமாண்டை விவாதிப்பதற்கும் 3—4 மணி நேரம் கொடுக்கவேண்டும். ஒவ்வொரு டிமாண்டை விவாதிப்பதற்கும் 3—4 மணி நேரம் கொடுத்தால் எல்லோரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியும். இப்போது சில டிமாண்டுகளின் விவாதத்திற்கு நேரம் கொடுக்கப்படாததால் பல அங்கத்தினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியவில்லை. உதாரணமாக நீர்ப்பாசன மான்ய கோரிக்கையை விவாதிப்பதற்கு போதிய நேரம் கொடுக்கப்படவில்லை. அதன் காரணமாக பல அங்கத்தினர்கள் அந்த விவாதத்தின் போது தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியவில்லை. கோரிக்கைகளை விவாதிப்பதற்கு நான் கோருகிறபடி நேரம் கொடுத்தால் பட்ஜெட் கூட்டத்தின் காலம் 10 நாட்கள் அதிகரிக்கும். அவ்வாறு செய்தால், எல்லா அங்கத்தினர்களுக்கும், பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

மேலும், கேள்வி நேரத்தையும் அதிகரிக்க வேண்டும். இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 1 மணி நேரம், கேள்விகளுக்குப் போதவில்லை. ஆகவே கேள்வி நேரத்தை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கனம் அங்கத்தினர்களுக்கு சில சர்க்கார் பிரசுரங்கள்தான் கொடுக்கப்படுகின்றன. சர்க்கார் பிரசுரங்களில் முக்கியமான எல்லாப் பிரசுரங்களும் கனம் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. சர்க்கார் அலுவலகத்தில் எல்லா முக்கியமான சர்க்கார் பிரசுரங்களையும் போதிய எண்ணிக்கையில் அச்சடித்து சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோருக்கும் அவைகளின் பிரதிகளைக் கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபை லைப்ரரி ரொம்ப நன்றாக நடக்கிறது. சபையில் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டியிருந்தால், அந்த விஷயம் சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களும் லைப்ரரியில் கிடைக்கின்றன. இப்போது லைப்ரரி கோட்டைக்கு வந்திருக்கிறது. இங்கே லைப்ரரியில் விளக்கு வசதிதான் கொஞ்சம் குறைவாக இருக்கிறது. லைப்ரரியில் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் கனம் அங்கத்தினர்களுக்கு வேண்டிய உதவியை அளிக்கிறார்கள்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இப்போது பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு ரெயில்வே பாஸ்கள் கொடுக்கப்படுகின்றன. மத்திய சர்க்கார் அவர்களுக்கு ரெயில்வே பாஸ்கள் கொடுக்கிறார்கள். சட்டசபை



7th April 1958] [Sri A. R. Subbiah Mudaliar]

அங்கத்தினர்களுக்கும் ரெயில்வே பாஸ்கள் கொடுத்தால், நாங்கள் எங்கள் தொகுதி சம்பந்தப்பட்ட குறைகளை மந்திரிகளிடம் தெரிவிப்பதற்கும், செக்ரடேரியட் லெவலில் முறையீடுகளை (ரெப்ரெஸெண்டேஷன்ஸ்) செய்யவும் அடிக்கடி சென்னைக்கு வரமுடியும். இது சம்பந்தமாக, பல சட்டசபைகளில் பலர் பேசியிருப்பதாகத் தெரிகிறது. சட்டசபை அங்கத்தினர்களுக்கு ரெயில்வே பாஸ்கள் கொடுத்தால் சர்க்காருக்கு அதிகச் செலவு ஏற்படும் என்று சொல்லப்படக்கூடும். அவ்வளவு செலவு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. சட்டசபை அங்கத்தினர்களுக்கு ரெயில்வே பாஸ்கள் கொடுக்கும் முறையை பரீட்சார்த்தமாக இரண்டு—மூன்று வருஷங்களாவது அமல் நடத்தலாம் என்றும், அந்தக் காலத்தில் இதன் மூலம் அரசாங்கத்திற்கு அதிகச் செலவு ஏற்பட்டால் பிறகு இந்த முறையை ரத்து செய்துவிடலாம் என்றும் அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்தியாவில் எல்லா இடங்களிலும் பிரயாணம் செய்வதற்கு ரெயில்வே பாஸ்களை இந்த சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. சென்னை ராஜ்யத்தில் மட்டும் பிரயாணம் செய்வதற்கு ரெயில்வே பாஸ்களை எங்களுக்கு வழங்கினால் போதும் என்றுதான் சொல்கிறேன். அவ்வாறு செய்தால், நாங்கள் அப்போதைக்கப்போது சென்னைக்கு வந்து எங்கள் தொகுதிகள் சம்பந்தமான முறையீடுகளை கனம் மந்திரிகளிடமும் ஸெக்ரெடேரியட்டிலுள்ள அதிகாரிகளிடமும் செய்ய முடியும்.

மேலும், எங்களுக்கு இப்போது கொடுக்கப்படும் தினப் படியை (டி.எ.) உயர்த்த வேண்டுமென்று பலர் சொல்கிறார்கள். அதை நான் சொல்லக் கூடாது. மற்ற பலர் சொல்கிறார்கள். அவர்கள் சொல்வது சரி என்றுதான் தோன்றுகிறது. அதை கவனிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

"மன்த்லி ஸாலரி ஆப் செக்ரடேரியட் ஸ்டாப்" என்பதைப்பற்றி சில 11-50 a.m.
வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய அலவன்ஸ் பற்றி நான் ஒரு கேள்வி கேட்டேன். "கேள்வி மூலமாகக் கேட்க வேண்டாம்; நானே நேராகப் பதில் கொடுக்கிறேன்" என்று கனம் சபாநாயகர் அவர்கள் எனக்குப் பதில் அனுப்பியிருந்தார்கள்.

MR. SPEAKER: டியானால், இப்பொழுது ஏன் கேட்கிறீர்கள்?

SRI A. R. SUBBIAH MUDALIAR: "ஓவர்டைம் பே" கொடுக்காமல் ஏதோ நான்கு மணி நேரம் வேலை பார்ப்பதற்கு ஒன்றரை ரூபாய் டீ அலவன்ஸ் மாதிரி கொடுக்கிறார்கள், என்பதைக் கேட்கும்போது சற்று வருத்தமாக இருக்கிறது. இந்தக் காரியாலயத்தில் இருப்பவர்கள், இரவு பத்து மணிக்குப் பேசினாலும் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நான் ஏதோ தூக்கி வைத்துப் பேசுவதாக யாரும் நினைக்கக்கூடாது. விடியற்காலை எட்டு மணிக்கும் அவர்கள் காரியாலயத்தில் வேலை செய்வதைப் பார்க்கிறோம். இவ்வளவு ஒத்துழைக்கும் ஆட்களுக்கு எக்ஸ்ட்ரா அலவன்ஸ் என்ற முறையில் செஷன் காலத்தில் (during the time of the session) கொடுக்கப்பட்டால் நல்லது. ஒரு ப்ராஜெக்ட் ஏரியாவுக்குச் சென்று பார்த்தால் அங்கே வேலை செய்பவர்களுக்கு ப்ராஜெக்ட் அலவன்ஸ் என்ற முறையில் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. அதேமாதிரி சட்டசபை அலுவலகத்தில் வேலை பார்க்கிறவர்களுக்கும் எக்ஸ்ட்ரா அலவன்ஸ், செஷன் காலத்தில் கொடுக்கலாம்.

காலை 11 மணியிலிருந்து மாலை 5 மணி வரையில் வேலை பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு இரவிலும் வேலை பார்த்தால், டைபிஸ்டுகளாக இருந்தால் ஒன்றரை ரூபாய் வீதமும், ஆனால், அட்டெண்டர்களாக இருந்தால் ஒரு ரூபாய் வீதமும் கொடுக்கப்படுகிறது. கணக்கு கேட்டதில் கணக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் என்னிடம் முறையிடவில்லை—நான் அவர்களைப் பார்க்கும்போது அவர்களுடைய நிலைமையைக் கண்டு ரொம்பப் பரிதாபப்படுகிறேன். 10, 12 மணி நேரம் வேலை வாங்கிவிட்டு ஒரு ரூபாய் அளவுக்கு டீ அலவன்ஸ் மாதிரி கொடுத்தால் பிரயோஜனம் இல்லை என்றும், ப்ராஜெக்ட் அலவன்ஸ் மாதிரி கொடுப்பது நலம் என்றும் நினைக்கிறேன்.

[Sri A. R. Subbiah Mudaliar] [7th April 1958

எந்தப் பார்ட்டிக்கும் ரூம் வசதி இல்லை. லௌஞ்சில் கஷ்டப்படுகிறோம். நான் பொதுப்படையாகச் சொல்கிறேன். ஒவ்வொரு பார்ட்டிக்கும் ஒரு அறை இருப்பது நல்லது என்பது என்னுடைய கோரிக்கை. நான் பேசுவதற்குச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு என்னுடைய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**SRI P. S. CHINNADURAI :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, நம்முடைய அரசியல் சட்டத்திலே லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கு இடம் அளிக்கப்பட்டிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் நான் கூறுவேன்—ஜனநாயக சம்பிரதாயங்களுக்கேற்ப நாம் சரிவர இந்த சட்டசபை அலுவல்களை நடத்தவேண்டுமானால் மக்களுக்கு உரிய பூரண உரிமைகள் கொடுக்க வேண்டுமானால், லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்பது அனாவசியம் என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். லெஜிஸ்லெடிவ் கவுன்சிலுக்காக செலவழிக்கிற செலவு அவசியம் இல்லாத செலவு என்பது என்னுடைய நிச்சயமான அபிப்பிராயம்.

" அதிலே மிகப்பெரிய அறிவாளிகள், இவர்கள் எல்லாம் வந்திருப்பதற்கான வசதி செய்திருக்கிறோம்; அத்தகைய அறிவாளிகளை வேண்டாம் என்று கூறுகிறீர்கள்? அப்படி அவர்கள் இருப்பது நல்லதுதானே ?" என்று கேட்டால் நான் சொல்வேன் அவர்கள் எல்லாம் உண்மையிலேயே மேதைகளாக இருந்தால், அவர்கள் இந்த நாட்டின் அரசியலை நடத்துவதற்கு அவசியமானவர்கள் என்று மக்கள் கருதுவார்களானால், நிச்சயமாக அவர்கள் தேர்தல் மூலமாகவே மக்களை அணுகி, அந்தத் தேர்தலிலேயே அவர்கள் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பை உண்டாக்கிக் கொள்வதற்கு அவர்களால் இயலும் என்று நான் குறிப்பிட விரும்புகிறன்.

லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கு தேர்தல் இருக்கவேண்டியதில்லை. தேர்தல் இருப்பதினால் பலவிதமான ஊழல்கள்கூட நடைபெறுகின்றன என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகையால், லெஜிஸ்லேடிவ் கவுன்சில் இல்லாமல் செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்ய முடியுமானால் அதைத் தான் செய்ய முன்வரவேண்டுமென்று இந்த ராஜ்ய அரசாங்கத்தை நான் மிகவும் கேட்டுக்கொள்வேன்.

படித்தவர்கள் அதிகமாக உள்ள கேரளம் போன்ற ராஜ்யத்திலேகூட இம்மாதிரி லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்று ஒன்று இல்லை. லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்று ஒன்று அவசியம் இருந்துதான் ஆகவேண்டும் என்று ஏதும் கிடையாது என்று நான் மறுபடியும் வலியுறுத்திச்சொல்ல விரும்புகிறேன்.

லெஜிஸ்லெடிவ் கவுன்சில் என்பதை அடியோடு எடுத்துவிடுவதற்கு ஏதாவது தடையாக இருந்து, அவசியம் அதை வைத்துக்கொள்ளத்தான் வேண்டும் என்று சொன்னால், அதை இன்னும் பிரதிநிதித்துவம் உள்ளதாக ஆக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம் ஆகும். உதாரணமாக, ஸ்தல ஸ்தாபனத் தொகுதிகள் என்று நிர்ணயிக்கப்பட்டு, அந்த ஸ்தல ஸ்தாபனத் தொகுதியிலேயிருந்து அங்கத்தினர்கள் லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் " ஸ்தல ஸ்தாபனங்கள் " என்ற அந்த வரிசையிலே க்ளாஸ் 2 பஞ்சாயத்துக்கள் இப்பொழுது சேர்க்கப்படவில்லை. க்ளாஸ் 2 பஞ்சாயத்துக்கள்தான் அதிகமாக இருக்கிறது. நம்முடைய ராஜ்யத்திலே. ஏராளமான அத்தகைய ஸ்தல ஸ்தாபன வோட்டர்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு இயலாத ஒரு நிலைமை இன்று இருக்கிறது. அந்த நிலை போக்கப்படவேண்டும். ஸ்தல ஸ்தாபனத் தொகுதி வோட்டர்கள் ஜாபிதாவில் க்ளாஸ் 2 பஞ்சாயத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரம் அல்ல. பட்டதாரி தொகுதி, உபாத்தியாயர் தொகுதி என்று இப்படியாக பிரிக்கப்பட்டு இருக்கும்போது, ஏன் தொழிற் சங்கங்களுக்கு என்று ஒரு தொகுதி பிரிக்கப்படக் கூடாது என்று நான் கேட்



7th April 1958] [Sri P. S. Chinnadurai]

கின்றேன். லெஜிஸ்லேடிவ் கவுன்சிலே வேண்டாம் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆனால், லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்பது இருக்கத்தான் வேண்டும் என்றால், தொழிற் சங்கங்களுக்கு ஏன் அதிலே முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். தொழிற் சங்கங்கள் இப்பொழுது அபிவிருத்தி அடைவதற்காக, தொழிற் சங்கங்கள் தங்களுடைய ஆலோசனைகளை பிரத்தியேகமாக எடுத்துக் கூறுவதற்காக, அவர்களுக்கும் தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பிவைப்பதற்கு வாய்ப்பு உண்டாக்கிக் கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த சட்டசபைக் காரியாலயம் சம்பந்தப்பட்டவரையில், அது முற்றிலும் சபாநாயகருடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்று கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் கூறியதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன். அது எவ்வளவு அவசியம் எனபதை உண்மையிலேயே கனம் அமைச்சர் அவர்கள் உணரவேண்டும். கட்சிப் பற்று இல்லாமல் சட்டசபை அலுவலகம் தன்னுடைய கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமானால், அவசியமாக, கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கக்கூடிய சபாநாயகருடைய கட்டுப்பாட்டின் கீழே சட்ட சபை அலுவலகம் இருந்தால்தான் அது சாத்தியமாகும் என்று நான் மறுபடியும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் இதற்கான ஒரு கோரிக்கை வரவேண்டுமென்று இதை வலியுறுத்தி அங்கத்தினர்கள் கூறுவதும், அதை மறுத்து கனம் அமைச்சர் அவர்கள் பதிலளிப்பதுமாகவே இதை விட்டுவிடாமல் இதற்குரிய நடவடிக்கைகளை உடனே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், சட்டசபை ரிப்போர்ட்டர்கள் சம்பந்தமாக ஒரு வார்த்தை சொல்ல நான் விரும்புகிறேன். சட்டசபை ரிப்போர்ட்டர்களைப்பற்றி நான் சொல்லும்போது இன்னும் மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும்கூட இது பொருந்தும். அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு, அதிக நேரம் வேலை செய்கிறார்கள். நாம் சட்டங்கள் போட்டு முதலாளிகளை ஓவர் டைம் வேஜஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். இரண்டு மடங்கு ஓவர்டைம் வேஜஸ் கொடுக்க வேண்டுமென்று பிறரைக் கேட்டுக்கொள்ளுகிற நாம், நம்முடைய சிப்பந்திகளை எப்படி நடத்துகிறோம் என்ற விஷயத்தைக் கவனித்துப்பார்க்கக் கடமைபட்டிருக்கிறோம். இரண்டு மடங்கு சம்பளம் கொடுத்து விடுவதினாலே ஒன்றும் அதிகச் செலவு ஏற்பட்டுவிடாது. அப்படி அதிகச் செலவு ஏற்பட்டாலுங்கூட அதைத் தாங்கிக்கொள்ளுவதற்கு இந்த ராஜ்ய அரசாங்கத்தினுடைய நிதி நிலைமை இடம் கொடுக்கும் என்றுதான் நான் உறுதியாக நம்புகிறேன். ஆகையால், இந்த விஷயத்தையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்த ஆண்டிலும் இதே விஷயத்தை இந்தச் சபையில் சொல்வதற்கு உரிய நிலைமையை கனம் அமைச்சர் அவர்கள் உண்டாக்கி விடக்கூடாது எனறு மறுபடியும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறன்.

மேலும், அங்கத்தினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு பிரதிநிதித்துவம் வகிக்கிறார்கள் என்றாலும் ராஜ்யத்தின் நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதையும் திட்ட வேலைகள் ஆங்காங்கே எங்ஙனம் நிறைவேற்றப்படுகிறது என்பதையும் ஒவ்வொரு அங்கத்தினரும் அறிந்து கொண்டால்தான் நல்லது என்று நான் இந்த அரசாங்கத்திற்குக் கவனப்படுத்த விரும்புகிறேன். அதற்கு அனுசரணையாக இருக்கும் முறையிலே, ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரயில்வே பாஸ் இலவசமாக ராஜ்யம் முழுதிலும் எங்கே வேண்டுமானாலும் போய் வருவதற்கு கொடுக்கக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். இது மிகவும் அவசியம். ஜனநாயக யுகத்தில் நாம் வாழ்ந்து, ஜனநாயக சம்பிரதாயத்தைப் பின்பற்றி இந்த அரசாங்கம் திறம்பட நடப்பதாக அங்கத்தினர்கள் ஒத்துக்கொள்ளவேண்டுமானால், இது அவசியம் என்று நான் இங்கே குறிப்பிடுவதற்கு விரும்புகிறேன். இதனால் சற்று அதிகச் செலவானால்கூட, அரசாங்கம் ஏற்பதற்கு அவசியம் இருக்கிறது. அரசாங்கம் செலவு முழுமைக்கும் எல்லோருமே பொறுப்பு ஏற்றுக்கொள்ளுகிறார்களே தவிர, அங்கத் கத்தினர்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ளாமல் கனம் அமைச்சர் மாத்திரம்

பொறுப்பு ஏற்றுக்கொள்வது என்பது இல்லை. ஆகையால், இந்தப் பொறுப்பை அங்கத்தினர்கள் சார்பாக இருந்து நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர்கள் தங்குகிற விடுதியைப் பொறுத்தவரையில் பல சௌகரியங்கள் செய்யவேண்டியிருக்கிறது. தங்குகிற விடுதியில் ஒரே ஒரு டெலிபோன்தான் இருக்கிறது. அந்த ஒரு டெலிபோனை வைத்துக் கொண்டு எல்லா அங்கத்தினர்களுடைய வசதியையும் பூர்த்தி பண்ண முடிவது இல்லை. ஆகையால், ஒவ்வொரு அறைக்கும் டெலிபோன் வைப்பதற்கு ஏற்பாடு செய்து, ஒரு பொது டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் மூலமாக நிர்வகித்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அங்கத்தினர்கள் வருஷம் பூராவும் இந்த விடுதிகளில் உட்கார்ந்திருக்கப்போவதில்லை. ஏதோ சென்னைக்கு சட்டசபை அலுவலையொட்டி வரும்போது அவர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு அது ஒத்தாசையாக இருக்கும். இதனாலெல்லாம் அதிகமான செலவு ஏற்பட்டுவிடாது. அப்படித்தான் செலவு ஏற்பட்டாலும் அது வீண் செலவு அல்ல என்று நான் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

பழைய ஹாஸ்டல் சம்பந்தபட்டவரையில் சொல்லவேண்டுமானால், அது ரொம்பப் பழுதுபார்க்கப்படவேண்டும். நல்ல கட்டிடம். இன்றைக்கு அதைக் கட்டுவதானால், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். அது சரியான முறையில் பழுதுபார்க்கப்படவேண்டும். அதற்கான ஏற்பாடுகள் கட்டாயம் செய்யப்படவேண்டும்.

ஹாஸ்டலைச் சுற்றியிருக்கும் தோட்டம் பெயருக்குத் தான் தோட்டம் என்று சொல்லலாமே தவிர அந்தத் தோட்டத்தைப் பார்க்கும் யாருக்கும் இந்த அரசாங்கத்தைப் பற்றியும் இந்த அரசாங்கத்தை நிர்வகித்துக்கொண்டிருக்கும் அமைச்சரவையைப் பற்றியும் அவர்களுக்கு அனுசரணையாக இருக்கும் சபை அங்கத்தினர்களைப் பற்றியும் ரொம்ப தவறான அபிப்பிராயம் தான் ஏற்பட்டுவிடக்கூடும். ஆகையால் அந்தத் தோட்டத்தை சரியானபடி பாதுகாக்கவேண்டும். இப்பொழுது இருக்கும் பாழடைந்த நிலைமை சீக்கிரமாக நிவர்த்திக்கப்படவேண்டும் என்று நான் இங்கே அவசியம் சொல்லத் தான்வேண்டும். அதோடு இந்த அறைகளுக்கான வாடகை ரொம்ப அதிக
12 noon. மானது. நான் அண்மையில் பீகாருக்குச் சென்றபோது சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் அறையைப் பார்த்தேன். அவர்களுக்கு மிகவும் வசதியான அறைகள் மிகக் குறைவான வாடகையில் கொடுக்கப்படுகிறது. மாத வாடகையாகட்டும், தின வாடகையாகட்டும் குறைவாகவே இருக்கிறது. ஆகவே இப்போது இருக்கிற அறை வாடகையைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டல் சாப்பாடு சம்பந்தமாக பலவிதமான புகார்கள் சொல்லப்படுகின்றன. அந்தக் குறைகளை எல்லாம் நீக்கி அதை அபிவிருத்தி செய்வதற்கு நிறைய வசதி இருக்கிறது. அதைச் சரிவர கவனிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஹோட்டலுக்குப்போய் கண்ட சாப்பாட்டைச் சாப்பிட்டு உடலைக் கெடுத்துக் கொள்வதற்குப் பதிலாக இந்த ஹாஸ்டல் சாப்பாட்டை நல்லமுறையில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அதிகச் செலவு ஆகிவிடுமோ என்று அமைச்சர் அவர்கள் கவலைப்படவேண்டாம். (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்:—செலவு அதிகம் ஆனால் என்ன? அங்கே இருப்பவர்கள் ஒத்துழைத்தால் சமமாக செலவை ஒப்புக்கொள்ளப்போகிறார்கள்.) அதுவும் சரி. இன்றைக்கு அங்கே அதிகமாகச் செலவு ஆகிறதென்றால் அதற்குக் காரணம் ஸ்டாப் மெயின்டனன்ஸ் என்பதாகவும் சொல்கிறார்கள். மில்களில் தொழிலாளர்களுடைய காண்டீன்களை நடத்தக்கூடிய காலத்தில் ஸ்டாப் செலவை மில் முதலாளிகளே ஒப்புக்கொள்கிறார்கள். அதுபோல இங்கும் அரசாங்கத்தாரே லெஜிஸ்லேசர் ஹாஸ்டல் ஸ்டாப் செலவை ஒத்துக் கொள்ளவேண்டும் என்பதாகவும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கு ஆகும் செலவில் ஒரு பங்கை சப்ஸிடியாக சர்க்காரே கொடுத்து உதவுவதற்கு வந்தால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். இங்கே





205 மெம்பர்கள் இருக்கிறார்களே அதுபோல ஹாஸ்டலிலும் 205 அறைகள் கிடையாது. ஆகவே உறுப்பினர்களுக்குப் போதுமான இடவசதி அங்கே செய்துதரப்படவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri G. GOMATHI SANKAR DIKSHITAR :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசவிரும்புகிறேன். மக்களுடைய பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சபைக்கு வந்திருக்கிற நாம் எல்லாம் நம்முடைய கடமையை நன்றாக உணர்ந்து பொறுப்போடு செயலாற்றுவதற்கு மிக மிக உதவியாக சட்ட சபை செக்ரடரி வர்க்கத்தினர் இருக்கிறார்கள். அதற்காக அவர்களை முதலில் நான் பாராட்ட விரும்புகிறேன். சட்ட சபையில் எந்த எந்த வகையில் பணியாற்ற வேண்டுமோ அந்த அந்த வகையில் பணியாற்றுவதற்கு அவர்களிடத்தில் இருந்து நாங்கள் எல்லாவகையிலும் உதவியைப் பெற முடிகிறது. அலுப்பு சலிப்பின்றி, இந்தச் சபை உறுப்பினர்கள் தம் கருத்துக்கு ஏற்ற வகையில் பணியாற்றுவதற்கு, சட்ட சபையின் கௌரவத்திற்கும், நாட்டு மக்களின் நலனுக்கும் உகந்த வகையில் பணியாற்றுவதற்கு மிகவும் உதவியாக இருக்கும் செக்ரடரி போன்ற உத்தியோகஸ்தர்களுடைய சேவையைப் பாராட்டி நான் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, நாம் எல்லாம் புதிய மெம்பர்கள். நமக்கு ஒரு விதமான பொறுப்பு இருக்கிறது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அவர்கள் நன்றாகப் பயிற்சியைப் பெற்று, சட்ட நுணுக்கங்களை எல்லாம் நன்றாக உணர்ந்து நல்ல முறையில் மக்களுக்கு பயன் அளிக்கும் சட்டங்களைச் செய்வதற்குரிய பயிற்சிகளைப் பெறுவதற்கு—முக்கியமாக வாலிபர்களுக்கு—அதிகமான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு எல்லாவிதமான வசதிகளும் இங்கே கொடுக்கப்படுகின்றன. இதில் உள்ள சிப்பந்திகள் பெரும்பாலோர் டெம்பரரியாக இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதற்கு வகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றப்படி இதர ராஜ்யங்களை எல்லாம் விட, நம்முடைய ராஜ்யத்தில் பலவிதமான கட்சிகள் இருந்தாலும், கருத்துக்களில் அபிப்பிராயப் பேதங்கள் இருந்தாலும், சட்ட சபையில் சுமுகமான முறையில் பொறுப்பையுணர்ந்து ஜனநாயகப் பண்பாட்டிற்கு உகந்த வகையில் செயலாற்றுவதற்கு சட்ட சபை காரியாலயத்தார் பலவிதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். நமது மந்திரி அவர்களும் அவர்களுடைய முயற்சிக்கு பல வகையிலும் உதவி செய்யவேண்டும் நமக்குள்ள சிறிய சிறிய குறைகளை எல்லாம் நிவர்த்திப்பதற்கும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதாகக் கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை முழுமனதுடன் ஆதரிக்கின்றேன்.

**Sri K. ANBAZHAGAN :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமன்றங்கள் என்ற தலைப்பில் பேசுகின்ற இந்த நேரத்தில் எனக்கு முன்னாலே பேசிய பல்வேறு கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எடுத்துக்கூறிய எல்லாக் கருத்துக்களையும் நானும் ஆதரிக்கின்ற முறையில் சில வார்த்தைகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உண்மையாகவே இந்த சட்டமன்றமானது தங்களுடைய திறமையால் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருகிறதென்று முதலில் குறிப்பிடுவது இன்றியமையாதது என்று நினைக்கின்றேன்.

சட்டமன்றத்திற்குள் உறுப்பினர்களாக இருப்பவர்கள் வெளியில் சென்று என்ன மாதிரியாகப் பேசியபோதிலும், வெளியில் அவர்கள் பேசுகின்ற பேச்சு மிகவும் கடுமையானதாக விஷம் தோய்ந்திருக்கிறதென்று மற்ற கட்சியைப்பற்றி அமைச்சர் அவர்கள் வெளியில் தெரி

[Sri K. Anbazhagan] [7th April 1958

வித்தபோதிலும், சட்ட மன்றத்திற்குள்ளே அப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்ற மனப்பான்மை வளராது ஓரளவு பண்பாட்டோடு சபை நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்றால் பண்பாட்டிலே சிறந்த ஒருவர் இன்றையதினம் இந்த மன்றத்திற்குத் தலைவராக இருப்பது தான் என்று நினைக்கிறேன்.

இந்த சட்டமன்றத்தின் நிர்வாகத்தில் மிக அதிகமான திறமையைக் காட்டவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆங்கிலத்தில் எல்லா நடவடிக்கைகளும் இருந்த சூழ்நிலை மாறி இன்று தமிழில் எல்லா நடவடிக்கைகளும் மாற்றப்படுகிற காரணத்தினால், அவையிலுள்ள 205 உறுப்பினர்களும் இன்றைக்குத் தமிழிலேயே பேசுகின்ற காரணத்தினால் அவைகளை நல்ல முறையில் அப்படியே சுருக்கெழுத்தில் எடுத்து உருவாக்குகின்ற நேரத்தில் பிழைகளின்றி அப்படியே உருவாக்கவும், பின்னர் அவை அச்சேறுகின்ற காலத்தில் கருத்துக்கள் மாற்றப்படாதிருக்கக்கூடிய நிலைமையில் அச்சேறுவதற்கு திறமையும், தகுதியும் இங்கே அதிகப்படவேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ் துறையில் வல்லுனர்களாக இருக்கிறவர்களால் தான் சுலபமாக அந்தக் காரியத்தைச் செய்யமுடியும் என்றும், இங்கே ஆங்கிலம் தெரிந்தவர்கள் மிகவும் உற்சாகமாக அந்தக் காரியத்தைச் செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்றாலும் அப்படிச் செய்வதிலே சில பல தவறுகள் ஏற்படுகின்றன. இங்கே பேசப்பட்டு எழுதப்படுகிற பேச்சு ஒரு வகையாகவும், அச்சேறிய பிறகு அதன் கருத்தே மாறுபாடு அடைந்ததாகவும் காணப்படுகிறது. எழுத்துப் பிழைகளைத் திருத்தலாம், இலக்கணப் பிழைகளைத் திருத்தலாம். தொடர்ச்சியை ஏற்படுத்தச் சில திருத்தங்களைச் செய்யலாம் என்றாலும், கருத்தை மாற்றக்கூடிய அளவில் அச்சேறும்போது திருத்தங்கள் செய்யப்படுவது தவறாகும். அப்படி மாற்றப்பட்டிருப்பதை அச்சேறி வந்துள்ள புத்தகங்களில் பார்க்கும்போது நான் அறிந்திருக்கிறேன். அமைச்சர் அவர்களுடைய ஆழ்ந்த கருத்துக்கள்கூட, அச்சேறும்போது ஒருவிதமான புதுப்பொருள் தோற்றும்படியாக மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மாறுதல் ஏற்படுவது ஜனநாயகப் பண்பாட்டுக்கு உகந்தது அல்ல. இன்னும் இவ்விஷயத்தில் போதிய கவனம் செலுத்தி நல்ல முறையில் அச்சேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிற காரணத்தினால் இதை வலியுறுத்த விரும்புகிறேன்.

12-10 p.m. செலவு அதிகமாகயிருக்கலாம். ஜனநாயகத்தில் செலவு அதிகந்தான். ஆனால் அதில் இருக்கிற கடமை பெரிது என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். மற்றொன்று, இங்கு பேசப்படுகிற கருத்துக்கள் பின்னால் அச்சிடப்பட்டு வெளிவருவதற்கு நீண்ட காலமாகிறது. ஏறத்தாழ சென்றாண்டு பட்ஜெட் நடவடிக்கைகள் எல்லாம் இப்பொழுதுதான் அச்சிடப்பட்டு வெளிவருகிறது என்று சொல்லும்போது அது பயனற்றனவாகிப் போய்விடுகிறது. ஆகவே, நான் கேட்டுக்கொள்கிறேன், சட்ட மன்ற நடவடிக்கைகளை அச்சிட ஒரு தனி அச்சுப் பொறி அமைப்பும் அதற்கான ஒரு தனி அலுவலகமும் ஏற்படுத்தப்பட்டாகவேண்டும். இன்றையதினம் இருக்கிற அரசாங்க அச்சுப் பொறி இலாகாவில் பல்வேறு கடமைகளோடு இதனையும் இணைத்து விடுகிறார்கள். சட்ட மன்ற நடவடிக்கைகள் உடனுக்குடன் வெளிப்படவேண்டும். அது ஜனநாயகத்தின் இன்றியமையாத கடமைகளில் ஒன்றாகும். எவ்வளவுக்கெவ்வளவு சட்ட மன்ற நடவடிக்கைகள் காலங்கடந்து அச்சியியற்றி வெளிவருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஜனநாயகம் பாதிக்கப்படுகிறது. உடனடியாக பரிசீலிக்கப்படுகிற உரிமை உணர்ச்சி மங்குகிறது. ஆகவே, அதற்கு இடம் கொடுக்காது ஒரு தனி அச்சுப் பொறி இலாகாவை நம் சட்ட மன்றத்திற்கு ஏற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும். அது ஒரு பெரிய செலவாகக்கூடயிருக்கலாம். ஆனால் அது இங்குள்ள உறுப்பினர்களின் உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகும். மற்றொன்று, இந்த இலாகாவைப்பார்த்தால், பல அதிகாரிகளும் போதிய அளவு உயர்ந்த தகுதிகளைப் பெற்றிருந்தபோதிலுங்கூட மேலும் மேலும் பதவிகள் உயர்வதற்கான வாய்ப்பு வசதிகள் குறைவாகயிருக்கிறது என்று



7th April 1958] [Sri K. Anbazhagan]

உணருகிறேன். இங்கு குறிப்பாக லோயர் டிவிஷன் க்ளார்க்குகளின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகவும் அப்பர் டிவிஷன் க்ளார்க்குகளின் எண்ணிக்கை சற்று குறைவாகவும் இருப்பதால் பெரும்பாலும் பட்டதாரிகளாக வருபவர்களுக்கு மேலும் மேலும் உத்தியோக உயர்வு பெற வாய்ப்பு குறைந்து விடுகிறது. ஆகவே, அந்தச் சூழ்நிலையில் அப்பர் டிவிஷன் க்ளார்க்குகளின் எண்ணிக்கையை உயர்த்துவதின் மூலம் அந்தக் குறைகளை போக்குவதோடு, எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் கூறியது போல் கூடுமான வரையில் தாற்காலிகமாக நியமிக்கப்படுகிறவர்களையெல்லாம் நிரந்தரமாக வேலையில் நியமிக்கப்படுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டாகவேண்டும். மற்றொன்று, இந்த சட்ட மன்ற நடவடிக்கைகள் நல்ல தமிழில் நடைபெறவேண்டுமானால், இன்றையதினம் இந்த சட்ட மன்றத்தில் பயன்படுத்தப்படுகிற சில சொற்கள் மாற்றப்பட்டாகவேண்டும். அப்படி மாற்றுவதற்கு அமைச்சர்களும் ஆளும் கட்சியினரும் மனமுவந்து முன்வரவேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் என்று சொல்லப்படுகிறது—இதற்குரிய பொருள் நம் மனதில் ஆழமாக பதியவில்லை. நிதியமைச்சர் சுப்பிரமண்யம் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது கனம் சுப்பிரமண்யம் என்று சொல்லவரவில்லை, ஆனால் கக்கன் அவர்களைப்பற்றிச் சொல்லும்போது கனம் கக்கன் அவர்கள் என்று என்னை அறியாமலேயேவருகிறது. பொருள் பொருத்தம் குறைவாக இருப்பதால், மதிப்பிற்குரிய என்றோ, உயர்திரு என்றோ, பெருந்தகை என்றோ, இப்படிப்பட்ட நல்ல சொற்களை அமைச்சர்கள் தயவுசெய்து இந்த மன்றத்தில் வழக்கிற்கு கொண்டுவர முன்வரவேண்டும். அதேபோல "ஸ்ரீ" என்று சொல்லி தமிழில் எழுதுவது வெட்கக்கேடாகயிருக்கிறது. ஒரு கோணல் எழுத்து காரணமாக இன்றையதினம் சிங்கள நாட்டில் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அப்படிப்பட்ட ஒரு குழப்பநிலை இங்கு இல்லாததற்குக் காரணம், இங்குள்ள நம் மக்களின் பண்பாடுதான். இருந்தாலும் அமைச்சர்கள் தமிழ் பற்றுள்ளவர்களாக இருப்பதால் இச்சட்ட மன்றத்தில் "ஸ்ரீ" என்ற சொல்லுக்குப் பதில் "திரு" என்ற சொல்லை பயன்படுத்த முன்வரவேண்டும். இன்று வழக்கில் இருக்கிற சில சொற்கள், "சட்ட மன்றம்", "சட்டப் பேரவை", "சட்ட சபை", "சட்ட சபை சபாநாயகர்" என்ற சொற்களுக்கு எந்தெந்த தொடரை பயன்படுத்துவது நல்லது என்று தீர்மானிப்பதற்கு, சட்டமன்ற நடவடிக்கைகளில் எந்தெந்தச் சொற்கள் பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்கு, ஒரு "சொல் ஆய்வுக் குழு" அல்லது "சட்டசபை நடவடிக்கைகளில் இருக்கவேண்டிய சொற்களைப்பற்றிய ஒரு ஆய்வுக் குழுவை சட்டசபை காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சபாநாயகரோடு கலந்து ஏற்படுத்துவார்களேயானால் சில சொற்கள் நாளடைவில் நல்ல முறையில் சட்டமன்றத்தில் இடம் பெற வாய்ப்பு ஏற்படும். அடுத்து நான் கேட்டுக்கொள்வேன், ஜனநாயக உரிமைப்படி, இச்சட்டமன்ற உறுப்பினர்களின் சலுகைகள் மிக முக்கியமாக கவனிக்கப்படவேண்டும். சலுகைகள் என்று சொல்வதைவிட "உரிமை" என்றுகூடச் சொல்வேன். பாராளுமன்ற உறுப்பினர்களுக்குள்ள வாய்ப்புகள், உரிமைகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளைவிட பன்மடங்கு அதிகமாகயிருக்கிறது. எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் இம்மன்ற உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இந்த சென்னை மாநில அளவிற்காவது எந்தயிடத்திற்கும் சென்று எந்த ஒரு பிரச்னையையும் நன்கு அறிந்து கொள்ள வாய்ப்பு அளிக்கவேண்டுமானால் அப்படி பாஸ் அளிக்க இந்த அரசாங்கம் நிச்சயம் முன்வந்தாகவேண்டும். இப்படியெல்லாம் சலுகைகள் கேட்கலாமா என்று அமைச்சர்கள் கேட்கக்கூடும். நான் சொல்கிறேன், இது இது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் சலுகையல்ல, இது சட்டமன்ற உறுப்பினர்களின் உரிமையாகும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இமயமலை அடிவாரத்தில் இருந்து கன்னியாகுமரி முனை வரை எங்கு வேண்டுமானாலும் செல்வதற்குள்ள வாய்ப்பும் உரிமையும் அளிக்கப்படுமானால் இம்மாநில உறுப்பினர்களுக்கு இம்மாநில அளவாவது சுற்றி வருவதற்குள்ள உரிமை, அதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டேயாக வேண்டும். அப்படிப்பட்ட உரிமைகள் அளிக்கும்போது செலவு அதிகமாகிறது என்றால் அந்தச் செலவை இந்த அரசாங்கம் மகிழ்ச்சியோடு ஏற்று

கொள்ளவேண்டும். மற்றொன்று, எதிர் கட்சிகளின் உதவிக்காக இங்கு ஒரு "இன்பர்மேஷன் சென்டர்"—அவர்களுக்கு எந்தப் பிரச்னைபற்றியும் கருத்து தெரிவிப்பதெற்கென்று ஒரு நிலையம் ஏற்படுத்தப்படும் என்று முன்னாளில் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த நிலையம் இன்னும் ஏற்படுத்தப்பட்டதாக நான் அறியவில்லை. அப்படி ஒன்று ஏற்படுத்தப்படுமானால் அது மிகவும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை. எதிர்கட்சி அங்கத்தினர்கள் தங்கிப்பேச சட்டமன்றத்தை யொட்டி தனி அறைகள் தரப்பட்டாகவேண்டும். ஆளும்கட்சியினருக்கு இதில் குறை இல்லாமலிருக்கக் காரணம், அவர்கள் கூடிப்பேச எட்டு அமைச்சர்களின் அறைகளும் ஒரு கொரடாவின் அறையும் இருக்கின்றன. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், மாற்றுக் கட்சியினரைப் பொறுத்த வரையில் நாங்கள் கூடிப்பேசுவதற்கு உள்ள இடம் வராந்தாவும், பிறர் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் இடமுந்தான். எதிர்கட்சித் தலைவர் அவர்களுக்கு தரப்பட்டிருக்கும் ஒரு அறை இருக்கிறது, அவர்களிடம் சென்று கொஞ்ச நேரம் நாங்கள் கூடிப்பேச இடம் தாருங்கள் என்று கேட்கும் நிலைதான் இன்று மாற்றுக் கட்சியினருக்கு இருக்கின்றது. ஆகவே, மாற்றுக் கட்சியினருக்கு அறை தேடித் தருவதை அரசாங்கம் ஒரு கடமையாகக்கருதவேண்டும். அடுத்து, நூல நிலையத்திற்குத் தரப்பட்டிருக்கும் இடம், அங்கு சென்று உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியில்லை. இன்றுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் அந்த இடந்தான் நூல் நிலயத்திற்குக் கிடைத்தது என்று சொன்னாலும், நல்ல காற்றோட்டமும் இயற்கை ஒளியும் உள்ள இடமாக அது இருந்தால்தான் மூன்றல்லது நான்கு மணி நேரம் தொடர்ச்சியாக அங்கிருந்து படிக்க முடியும். அதற்கு வாய்ப்பு தேடித்தருவது அரசாங்கத்தின் கடமையாகும். மாற்றுக் கட்சியினர்கள் நன்கு படித்துவிட்டு பேசவேண்டும் என்று சொல்லும்போது நூல் நிலையத்தை ஒழுங்கு படுத்தித்தரவேண்டும், அப்படித் தந்தால்தான் அது முழு அளவிற்குப் பயன்படும். மற்றொன்று, எதிர்கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களின் கருத்துக்களை நல்ல முறையில் மக்களுக்கு பரப்பவேண்டுமானால், ஆளும் கட்சியினருக்குள்ள வாய்ப்பு எதிர்க்கட்சிகளுக்கு கிடைக்கவேண்டுமானால், அவர்களின் சொற்பொழிவுகள் உடனுக்குடன் அரசாங்கத்தாரால் வெளியிடப்படுவதோடுகூட உறுப்பினர் களின் பேச்சுகளின் 1,000, 2,000 பிரதிகள் எளிய விலைக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஒருவரின் சொற்பொழிவை தாமாகவே அச்சிடுவதாக யிருந்தால் எவ்வளவு செலவாகுமோ அச்செலவுதான் இப்பொழுதாகிறது. ஆகவே, மக்களிடையே உறுப்பினர்களின் கருத்துக்களைப் பரப்பவேண்டு மென்ற ஜனநாயகக் கொள்கை இந்த அரசாங்கத்திற்கு இருக்குமேயானால் அவர்களின் பேச்சுப் பிரதிகளை எளிய விலைக்கு அச்சிட்டுத்தர அரசாங்கம் முன்வரவேண்டியது ஜனநாயக ஆட்சியின் இன்னொரு கடமையாகும் என்பதை நினைவூட்டிக்கொண்டு இச்சட்டமன்ற நடவடிக்கைகள் மிகவும் செம்மையாக நடைபெறுகிறது என்ற கருத்தை மறுபடியும் நினைவூட்டிக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri N. R. THIAGARAJAN**: தலைவர் அவர்களே, சட்டசபை அங்கத்

12-20 p.m. தினராக இங்கு வந்தபோது நான் மிகவும் பெருமிதத்தோடு வந்தேன். ஏதோ ஒரு புதிய உலகத்திற்குப் போகிறோம், அங்கு காரியங்கள் வெகு வேகமாகவும் செம்மையாகவும் நடைபெறும் என்றெல்லாம் நினைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன். ஆனால் இங்கு வந்து ஹாஸ்டலைப் பார்த்தவுடன், அது சாதாரணமாக உள்ள ஹோட்டல் எவரேஸ்ட் போன்று கூட இல்லாததைக் கண்டேன். உதாரணமாக, சட்டசபை மெம்பர்களை வந்து பார்ப்பதற்கு காலையில் தினசரி 10, 15 பேர்கள் வந்து கொண்டிருக் கிறார்கள். அதுவும் காலையில் நாம் அறையைத் திறந்தவுடன் உடனே அதற்குள் நுழைந்து விடுகிறார்கள். அதனால் காலைக்கடன்களைச் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. அது குறித்து அப்பொழுதே, மராமத்து இலாகா அமைச்சர் அவர்களிடம் சொன்னோம், மூன்று ரூம்களை இரண்டாக்கி குறுக்கே ஒரு "பாத் ஆண்ட் லெட்ரீன் அட்டாச்ட்"-ய் இருக்க வேண்டுமென்று சொன்னோம். அப்படிக் கேட்டுக்கொண்டும் இதுவரையிலும் அது நிறை வேற்றப்படவில்லை. அக்கட்டிடம் கட்டும்போதே அதைச் செய்திருக்கலாம். அதை விட்டு விட்டார்கள். நண்பர்கள் வடக்கு வாழ்கிறது என்று சொல்



கிறார்களே, ஒரு விஷயத்தில் வடக்கு வாழ்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். பஞ்சாப் சட்டசபை மெம்பர்களுக்கு மாதம் 300 ரூபாய் சம்பளம், தினசரி 10 ரூபாய் அலவென்ஸ்-ம் கொடுக்கிறார்கள். அங்குள்ள சட்டசபை மெம்பர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள இடம், நல்ல காற்றோட்டமும், நல்ல கட்டில் முதலிய சௌகரியங்கள் உள்ள ரூம்களாகும். அவர்களுக்கு, வென்னீர் வேண்டுமானால் வென்னீர் கிடைக்க சௌகரியம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் வைத்தே பஞ்சாப் சட்டசபை மெம்பர் களுக்கு கிடைக்கும் வசதி வேறு எந்தயிடத்திலும் இல்லை. அவ்வளவு சௌகரியமாக இருக்கிறது அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் ரூம்கள். வெளியில் "விஸிட்டேர்ஸ்" உட்கார நல்ல வசதியும் அளிக்கப்பட் டிருக்கிறது.

இதைப் போன்ற மற்ற மாகாணங்களிலுள்ள சட்டசபை மெம்பர்களுடைய ஹாஸ்டல்களில் மெம்பர்களுக்கு அதிகமான வசதிகள் செய்து கொடுக்கப் பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். நம்முடைய ஹாஸ்டல்களில் அதிக வசதி இருக்கிறது என்று கூற முடியாது. இப்போது 10 ரூம்களுக்கு ஒரு வேலைக்காரன் என்று போட்டிருக்கிறார்கள். நான் பாதுகாப்பு கைதியாக இருந்த சமயத்தில் கூட, ஒரு கிரிமினல் கைதியை எனக்கு மாத்திரம் தனியாக வேலைக்காரனாக போட்டிருந்தார்கள். வேலைக்காரன் வேண்டும் என்று விரும்புவன் அல்ல நான். ஏதோ ரூமில் இருந்து கொண்டு ஒரு காப்பி வேண்டும், அல்லது சிகரெட் வாங்கிவர வேண்டுமென்றால் அவசரத் திற்கு வாங்கி வருவதற்கு ஆள் கிடையாது. பத்து ரூம்களுக்கு என்று போடப்பட்டிருக்கும் வேலைக்காரனிடத்தில் சொல்லி அனுப்பினால் குறைந்தது அவன் திரும்பி வருவதற்கு 10 மணி நேரம் ஆகிவிடுகிறது. ஒரு நாள் காலையில் ஒரு ஆளிடம் காப்பி வாங்கிவரும்படி கூறி அனுப்பினேன். அன்று பகல் 12 மணி வரையிலும் அவன் வரவில்லை. அவனிடம் கேட்டதற்கு "நான் காப்பி வாங்கிகொண்டு வரும்பொழுது இன்னொரு ஆள் வேறொரு இடத்திற்கு போகச்சொன்னார், அங்கே போனேன், அதனால் இவ்வளவு நேரமாகி விட்டது" என்று ஆறு மணிக்கு வாங்கின காப்பியை பகல் 12 மணிக்கு கொண்டு வந்து கொடுத்தான். இவ்விதம் இந்த ஹாஸ்டலில் இருப்பதை விட ஹோட்டல்களில் இருப்பதே மேல் என்ற முறையில், இந்த பட்ஜெட் ஸெஷனுக்குக்கூட ஹோட்டலில்தான் தங்கி வருகிறேன். ஹாஸ்டலில் தங்கவில்லை. அதோடு ஆபீஸ் நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அது திருப்திகரமான முறையில் நடைபெறுவதாக சொல்லமுடியாது. பலரும் திருப்திகரமாக நடைபெற்று வருகிறது என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் எனக்கு மாத்திரம்தான் இந்த குறைகள் இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில் பல குறைகள் இருக்கின்றன. சிலர் பெயரளவுக்கு இருந்து கொண்டு தன்னுடைய தலைமை பதவி மாறாமல் இருக்கும் விதத்தில் ஆபீஸ் காரியங்களை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். டி.எ. பில்லை பொறுத்தவரையில் என்னுடைய பில் இன்னும் பாஸாகி வரவில்லை. பலருக்கு பாஸாகி வந்திருக்கிறது. இதைப்பற்றி கனம் சபாநாயகர் அவர் களிடம் எழுதிக்கொடுத்திருக்கிறேன்.

**Mr. SPEAKER**: டி.எ. பில்லைப்பற்றி எனக்கு எழுதி என்ன பிரயோ ஜனம் ?

**Sri N. R. THIAGARAJAN**: சம்பள விஷயத்திலும் என்னைப் பொறுத்தவரையில் பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. அதாவது என்னுடைய சம்பளத்தை தேனியிலிருந்து 12 மைல் தூரத்தில் இருக்கும் பெரியகுளம் என்னும் இடத்தில் போய்தான் வாங்க வேண்டியிருக்கிறது. பெரிய குளத்தில் தான் சர்க்கார் கஜானா இருக்கிறது. அங்கு போய் க்யூ வரிசையில் நிற்க வேண்டும். இதை விட்டு விட்டு உள்ளே போய் டோக்கன் வாங்கினால் வெளியே நிற்கிறவர்கள் அதையும் ஆட்சேபிப்பார்கள். இவ்விதம் ஒரு நாள் பூரா நின்று டோக்கன் வாங்கிவிட்டு ஸ்டேட் பாங்கில் போய் பணம் வாங்க வேண்டும். இவ்விதம சம்பளம் வாங்குவதற்கு மூன்று நான்கு நாட்கள் ஆகிவிடுகிறது. இதையாரும் நம்ப மாட்டார்கள். ஆனால் உண்மையில் இப் படித்தான் நடந்துவருகின்றது. இதைப் பற்றி நிதி அமைச்சர் அவர்களிடமும்

[Sri N. R. Thiagarajan] [7th April 1958

கூறியிருக்கிறேன். இவ்விதம் பாங்கில் போய் கேட்கும்போது அங்கே சில வேளைகளில் பில்வரவில்லை என்று சொல்லிவிடுவார்கள். அதோடு அதில் ஏதாவது சின்னஞ்சிறு எழுத்துப்பிழைகள் இருந்தால் கூட அதை திருப்பி அனுப்பி விடுவார்கள். இவ்விதம் இரண்டு மூன்று முறை திருப்பி அனுப்பி விடுவார்கள். இவ்விதம் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்த முறையை மாற்ற வேண்டும் என்று சொன்னேன். அல்லது இதை மணியாடர்களாக அனுப்பிவிடுங்கள் என்று காரியதரிசி அவர்களிடம் சொன்னேன். இவ்விதம் 206 மணியாடர்களையும் எழுதி அனுப்ப முடியுமா என்று காரியதரிசி அவர்கள் கேட்டார்கள். நான் ஜில்லா போர்டு தலைவராக இருந்த சமயத்தில் சுமார் 4,000 மணியாடர்கள் எழுதி அனுப்பியிருக்கிறேன். இப்பொழுது செக் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். உள்ளூர் பாங்குக்கு செக் வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். சட்டசபை மெம்பர்களுக்கு செக்குகள் எளிதான முறையில் கிடைக்கச் செய்யவேண்டும். இவ்விதம் ஒரு மாதம் சம்பளம் வாங்குவதற்கு நான்கு நாட்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்ருல் 60 மாதங்கள் சம்பளம் வாங்குவதற்கு 250 நாட்கள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. டி.எ. பில்கள் எல்லாம் மெம்பர்களுக்கு லெகுவாக வந்து சேரும்படியான விதத்தில் இருக்க வேண்டும். உதாரணமாக நான் டெல்லியில் ஒரு பார்லிமெண்ட் மெம்பர் ரூமுக்கு சென்றிருந்தபொழுது ரூமை திறந்த உடனே அங்கு ஒரு செக் போடப்பட்டிருந்தது. அது எந்த செக் என்று விசாரித்தபொழுது டி. எ. செக் என்று தெரிய வந்தது. இவ்விதம் டி.எ. செக்கள் எல்லாம் மெம்பர்களுடைய கைக்கு தேடி வர வேண்டும். மெம்பர்கள் போய் அலையக்கூடிய பழக்கம் இருக்கக் கூடாது அங்கே எல்லாம் டி.எ. செக் வாங்குவதற்கு அந்த இடத்தில் போய் சில மணி நேரங்களுக்குள்ளாக செக்-கை வாங்கி வந்து விடுகிருர்கள். ஆகவே அந்த முறையில் செக்கள் எல்லாம் லெகுவான முறையில் அங்கத்தினர்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் சட்டங்களை திருத்தி அமைக்கவேண்டும். முப்பது வருடங்களாக இருந்து வருகிற முறையை எப்படி மாற்றி யமைப்பது என்று பார்க்கக்கூடாது. சட்டசபையைப் பொறுத்தவரையில் சில வித்தியாசங்களும் இருக்கிறது. இங்குள்ள அங்கத்தினர்களுக்கு 150 ரூபாய் சம்பளம் இருக்கிறது. பார்லிமெண்ட் மெம்பர்களுக்கு 400 ரூபாய் சம்பளம் இருக்கிறது. மத்திய என்.ஜி.ஓ.க்களுக்கும் மாகாண என்.ஜி.ஓ.க்களுக்கும் வித்தியாசம் இருப்பது போல் நம்மிடையிலும் சம்பள வித்தியாசம் இருக்கிறது. அது போல்தான் மத்திய சர்க்கார் மந்திரிகளுக்கு 3,500 ரூபாய் சம்பளம் இருக்கிறது. நம்முடைய மாகாண சர்க்கார் மந்திரிகளுக்கு 1,000 ரூபாய்தான் சம்பளம் இருக்கிறது. நமக்கும் 400 ரூபாய் வேண்டும் என்று நான் கேட்கவில்லை. அவர்களுக்கு கொடுக்கப்படுவது போல் நமக்கும் ரயில்வே பாஸ் தரவேண்டும். இதைப்பற்றி பல மெம்பர்களும் சொன்ஞர்கள். இந்த மாதிரி ரயில்வே பாஸ் கொடுத்தால் மாகாணத்திலுள்ள பல இடங்களுக்கு சென்று விவரங்களை அறிந்துகொள்வதற்கு லெகுவாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்ததாக கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் சொன்ஞர்கள், சட்டசபை நடவடிக்கைப் புத்தகங்கள் சரியான சமயங்களில் கிடைக்கவில்லை என்று, அதையேதான் நானும் குறிப்பிட விரும்புகிறேன். கழிந்த ஜூலை மாதத்திலுள்ள நடவடிக்கைப் புத்தகம் இன்னும் எனக்கு கிடைக்கவில்லை சுமார் ஒரு ஆண்டு காலம் ஆகப்போகிறது. இன்னும் ஐந்து ஆண்டுகள் இப்படியே போய்விட்டால் அதன் பின்னல் நீங்கள் மெம்பர் அல்ல, அதனுல் நடவடிக்கை புத்தகம் அனுப்ப முடியாது என்று சொல்லி விடுவார்களோ என்று பயப்படுகிறேன். ஆகவே இதை சீக்கிரமாக அச்சடித்து அனுப்புவதற்காக சட்டசபைக்கு என்று ஒரு அச்சாபீஸ் வைத்தால் நல்லது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு சர்க்கார் வெளியிடும் சில புத்தகங்கள்தான் கொடுக்கப்படுகிறது. சர்க்கார் வெளியிடும் எல்லா புத்தகங்களும் மெம்பர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் தான் லெட்டர் பேப்பர்கள் மெம்பர்களுக்கு அதிகமாக கொடுக்க வேண்டும், ஒரு நாளைக்கு இரண்டு பேப்பர் என்று கருமித்தனமாக கொடுக்கப்பட்டு வருகிறது. 40 நாட்களுக்கு நான்கு பாட்-கள் உண்டு என்று சொல்கிருர்கள். நான் தினசரி 100 லெட்டர் பேப்பர்கள் எழுதிக்கொண்டிருக்கிறேன். இங்கே அதிகமாக கொடுக்கப்



7th April 1958] [Sri N. R. Thiagarajan]

படுவதில்லை. ஆதலால் ஊரிலிருந்து வரும்பொழுதே சட்டசபை கூடும் நாட்களை எண்ணிக்கொண்டு அதற்கு தகுந்தாற்போல் லெட்டர் பேப்பர்களை அச்சடித்துக்கொண்டு இங்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே சட்டசபை மெம்பர்களுக்கு லெட்டர்பேப்பர் விஷயத்தில் கருமித்தனம் இல்லாமல் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று காலி கவர்களும் அதிகமாக கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே அடுத்த வருடத்தில் இந்த மான்யம் கொண்டு வருகின்ற சமயத்தில் இந்த குறைகள் எல்லாம் இல்லாதவாறு நீக்கி விட்டோம் என்று நாமே எண்ணிக்கொள்ளவேண்டும். ஏதோ மக்களுக்கு எல்லாம் என்னவெல்லாமோ செய்யவேண்டும் என்று சொல்லுகிறவர்கள், நமக்குள்ள காரியங்களையாவது நிறைவேற்றிக்கொள்ளவேண்டும். வெளியிலுள்ளவர்கள் மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யவேண்டிய நீங்கள், உங்களுடைய குறைகளையே தீர்த்துக்கொள்ள முடியவில்லையே என்று கேட்கிருர்கள். ஆகவே இந்த குறைகளை எல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

**Sri A. GOVINDASAMY:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த சபையின் கௌரவம் திரு. சிவஷண்முகம் பிள்ளை அவர்களுடைய காலத்திலிருந்து தங்கள் காலம் வரையிலும் நல்ல முறையில் காப்பாற்றப்பட்டு வருகிறது. மற்ற ராஜ்யங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, எடுத்துக்காட்டாக பெருமைக்குரிய வகையில், நம்முடைய சட்டசபை விளங்குகிறது என்பதை என் அனுபவத்திலிருந்து சொல்ல ஆசைப்படுகிறேன். சில சட்டசபைகளை நாம் நேரடியாக பார்க்கிற நேரத்தில் நம்முடைய சட்டசபை கண்ணியமாகவும். பெருமையாகவும், நல்ல முறையில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற முறையில் நடை பெற்று வருகிறது. குறிப்பாக சபாநாயகர் அவர்கள் கட்சி வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் பேசுவதற்கு சம சந்தர்ப்பம் அளித்து நமது சபையின் கௌரவம் காப்பாற்றப்பட்டு வருகிறது என்று சொல்லுகின்ற நேரத்தில் என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். இதுவரை சபாநாயகர்களாக இருந்தவர்களின், புலுசு சாம்பமூர்த்தி, சிவசண்முகம் பிள்ளை, கோபால மேனேன் இவர்களது படங்கள் சபாநாயகர் அவர்களுடைய அறையில் வைக்கப்பட்டிருக்கிறது. அந்த (ரோவில்) வரிசையில் தங்களுடைய படத்தையும் வைக்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

**Mr. SPEAKER:** நான்தான் இங்கு இருக்கிறேனே . . .

12-30 p.m.

**Sri A. GOVINDASAMY:** தாங்கள் இருந்தாலும் தங்களின் படம் அந்த வரிசையில் இருக்கவேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன். இருக்கிற ஆட்களின் படங்கள் எத்தனையோ இடங்களில் வைக்கப் பட்டிருக்கின்றன. உயிரோடு இருக்கிறவர்கள்கூட எத்தனையோ பேர் புகைப் படங்களை எடுத்து அவர்களுடைய வீடுகளில் மாட்டிவைக்கிருர்கள். தங்களுடைய படமும் இங்கே வைக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறேன். அந்தப் படமும்கூட இந்த சபையில் தொங்கப்பட வேண்டும். தங்கள் அறையில் இருக்கக்கூடாது. இந்த சபையிலே இடமிருக்கிறது. இன்ஞர் இன்ஞர் சபாநாயகர்களாக இருந்திருக்கிருர்கள் என்று எல்லோரும் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அவர்களுடைய படங்கள் இங்கே தொங்கப்படவேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்தபடியாக விசிட்டர்கள் காலரியைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். விசிட்டர்கள் அன்ருடம் வந்து கொண்டிருக்கிருர்கள் என்று சொல்லிவிட முடியாது. சில பேர் கிராமங்களிலிருந்து வருகிருர்கள். இங்கே அமலில் இருக்கிற சட்ட திட்டங்கள் அவர்களுக்குத் தெரியாது என்கிற காரணத்தால் ஒரு சில அங்கத்தினர்கள் பேசுகிறபொழுது உற்சாகப்பட்டு, ஆரவாரம் செய்து கை தட்டுகிற நிலைமை ஏற்படுகிறது.

[ Sri A. Govindasamy] [7th April 1958

அந்த நேரத்திலே போலீஸ்காரர்கள் அவர்களை போலீசில் ஒப்படைக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது. அதைத் தடுப்பதற்கு ஒரு வழி செய்யலாம். விசிட்டர்கள் காலரிக்கு நுழையும் இடத்தில், காலரியில் உட்கார்ந்திருக்கும்பொழுது என்னென்ன முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்று அறிக்கை எழுதி வைக்கலாம். விசிட்டர்களுக்குக் கொடுக்கும் பாஸ்களின் பின் புறத்தில் எப்படி எப்படி ஒழுங்கைக் காப்பாற்ற வேண்டுமென்று சொன்னால், இங்கே இருக்கிற போலீஸ்காரர்களுக்கோ, ஸார்ஜண்டுகளுக்கோ தொந்தரவு இருக்காது, விசிட்டர்களுக்கும் தொல்லை ஏற்படாது என்று நினைக்கிறேன். முக்கியமான வாதம் நடக்கிறபொழுது, இரண்டு மணி நேரம் சட்டசபையில் இருக்கலாம், இரண்டு மணி நேரம் கீழே இருக்க வேண்டுமென்ற நெருக்கடி ஏற்படுகிறது. இந்த நெருக்கடியை சபாநாயகர் ஒருவிதமாக சமாளித்துக் கொண்டாலும், பார்வையாளர்கள் சட்டசபை உறுப்பினர்களிடத்தில் கோபித்துக்கொண்டு போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒரு உறுப்பினர் இரண்டு பேர்களுக்கு கையெழுத்துப் போட்டுக் கொடுக்கலாமென்றிருக்கிறது. ஆகையால் ஏன் மீண்டும் சட்டசபையை மவுண்டு ரோட்டுககு கொண்டு போகக் கூடாது என்று கேட்கிறேன். நிச்சயமாக இந்த சபை இங்கே நீடித்து இருக்க முடியாத நிலைமை ஏற்படப்போகிறது. துறைமுக விஸ்தரிப்பு வேலை பூராவும் முடிவு பெற்றால், இங்கே சட்டசபை நடப்பது மிகமிக கஷ்டமாக யிருக்கும். அந்த நேரத்திலே அங்கே போவதற்கு முயற்சி செய்வதை விட, இப்பொழுது முன்கூட்டியே, இந்த சபையை மாத்திரமல்ல, இங்கேயிருக்கிற காரியாலயத்தையும் மவுண்டு ரோடுக்குக் கொண்டுபோவது நல்லது.

இப்பொழுதிருக்கிற கட்டிடத்தை குழந்தைகள் சினிமாவுக்காக ஏற்பாடு செய்துவிட்டாலும், அங்கே புதிதாக ஒரு கட்டிடத்தைக் கட்டலாம். நண்பர் தேனீ தியாகராஜன் அவர்கள் பஞ்சாபிலே சட்டசபை உறுப்பினர்களுக்கு ஹாஸ்டலிலே எவ்வளவு வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அந்த முறையில் ஒரு புதிய ஹாஸ்டலை நிறுவலாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நானும் அங்கே சென்று பார்த்தேன். வீட்டிலே இருக்கிற சௌகரியம் இருக்கிறது. "வுட்லண்ட்ஸ் காட்டேஜ்" என்று சொல்லுகிறார்களே, அதிலே இருக்கிற சௌகரியத்தை அங்கே இருக்கிற உறுப்பினர்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறார்கள். "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை. நண்பர் தியாகராஜன் அவர்களும் தன்னுடைய சௌகரியம் குறைகிறபொழுது, "வடக்கு வாழ்கிறது" என்பதை ஒப்புக்கொண்டதைக் குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அங்கு இருக்கிற சௌகரியங்களைப் பார்த்த பொழுது அந்த சௌகரியங்கள் நமக்கும் வரக்கூடாதா என்று பேசினார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சபையிலே இப்பொழுது வோட்டிங் நடக்கும்பொழுது அங்கத்தினர்கள் நின்று வோட்டு அளிக்கும்படியான நிலைமை இருக்கிறது. டில்லி பாராளுமன்றத்திலே, ஒரு நவீன வோட்டிங் முறையைக் கையாளுகிறார்கள். ஒரு பட்டனை அமுக்கினால் பச்சை லைட் தெரியும். இன்னொரு பட்டனை அமுக்கினால் சிவப்பு லைட் தெரியும். பச்சை லைட் "எஸ்" (Ayes) என்பதைக் குறிக்கும். சிவப்பு லைட் "நோஸ்" (Noes) என்பதைக் குறிக்கும். அந்த முறையை இங்கே கையாளலாமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டசபை உறுப்பினர்கள் "செக்" மாற்றவேண்டுமென்று சொன்னால், மவுண்டு ரோட்டிலுள்ள ஹாஸ்டலுக்குச சென்று மாற்றவேண்டிய நிலைமை இருக்கிறது. சட்டசபை நடவடிக்கைகள் முடிந்து பாங்குக்குப் போய் செக்கை கொடுக்கிற நேரத்திலே பாங்கு மூடப்படுகிறது. ஆகையினால் இந்தக் கட்டிடத்திலேயே பாங்குக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



7th April 1958] [ Sri A. Govindasamy]

நம்முடைய மாகாணத்திலே தமிழ் ஆட்சி மொழியாக வந்துவிட்டது. ஆனால் சட்டசபையில் பெருவாரியான நடவடிக்கைகள் இன்னும் ஆங்கிலத்தில் தான் நடந்து கொண்டிருக்கின்றன. மூல கேள்விக்கு பதில் சொல்லும்பொழுது அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்தில் தான் பதில் கொடுக்கிறார்கள். இதனால் உப கேள்விகள் போடும்பொழுது ஆங்கிலம் தெரியாத சட்டசபை உறுப்பினர்களுக்கு சங்கடம் ஏற்படுகிறது. அமைச்சர் என்ன சொன்னார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமல் அதையே மீண்டும் உப கேள்வியாகக் கேட்கக்கூடிய தர்ம சங்கடம் ஏற்படுகிறது. மூல கேள்விக்கு முதலில் பதில் கொடுக்கும்பொழுது, அந்த பதிலும் தமிழில்தான் இருக்கவேண்டும். அதோடு சட்டசபை நடவடிக்கைகள் பூராவும் தமிழில் இருக்கவேண்டும். உப கேள்விகளுக்குப் பதில் சொல்லும்பொழுதும் தமிழிலேயே சொல்ல வேண்டும். தமிழ் தெரிந்தவர்கள் கூட ஆங்கிலத்தில் உப கேள்விகளைப் போடுவதன் காரணமாக, அமைச்சர் அவர்களும் ஆங்கிலத்தில் பதில் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் என்ன கேட்டார்கள், அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார்கள் என்பதைப் புரிந்து கொள்ளமுடியாமல் அதே கேள்வியைத் திரும்பவும் கேட்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எல்லா நடவடிக்கையுமே தமிழில் நடக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ஆண்டில் நமக்கு தேர்தல் செலவுக்காக கொடுக்க வேண்டிய பணத்தை ரூ. 1,13,000 ஐக் குறைத்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நமக்கு ரூ. 14,13,000 கொடுக்க வேண்டும். ஆனால் ரூ. 13,00,000 தான் கொடுத்திருக்கிறார்கள். ஏன் பூராத் தொகையையும் கொடுக்கவில்லை என்பது தான் கேள்வி. மக்கள் சபை தேர்தலையும் சேர்த்துத் தான் நடத்தியிருக்கிறோம். ஆகவே அந்தத் தொகையைப் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் பட்டியல் தயார் செய்வதற்கும், உப தேர்தல் இருந்தால் அந்த ஆண்டு அதிகமாகச் செலவு செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. தேர்தல் பட்டியல் தயார் செய்யும் தொழிலில் பெருவாரியாக ஆசிரியர்கள் தான் ஈடுபடுகிறார்கள். அப்படி வேலை செய்கின்ற நாட்களுக்கு அவர்களுக்கு "அலவன்ஸ்" கொடுத்தால் இன்னும் திறமையாக அவர்கள் வேலை செய்ய முடியும். தேர்தல் காலத்தில் வேலை செய்தவர்களுக்கு இன்னும் டி. ஏ. கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதை எல்லோருக்கும் காலதாமதம் இல்லாமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, இந்த சட்ட மன்றத்திலே வேலைபார்க்கும் எல்லா என். ஜி. ஓ. க்களுக்கும், கீழ்த்தர சிப்பந்திகளுக்கும் போதுமான சம்பள உயர்வு இல்லாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு வேலைப் பளு அதிகரித்துக்கொண்டே போகிறது. நண்பர் தேனீ தியாகராஜன் அவர்கள் தனிப்பட்ட முறையில், இங்கேயுள்ள அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை என்று சொன்னார். தனிப்பட்ட முறையில் குற்றச்சாட்டு இருந்தாலும், இங்கே இருக்கிற காரியதரிசிகளும், குமாஸ்தாக்களும, மற்றவர்களும் சட்டசபை உறுப்பினர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தான் கொடுக்கிறார்கள். நாம் கேட்கிற குறிப்பிட்ட வேலைகளைச் செய்து கொண்டு தான் வருகிறார்கள். தனிப்பட்ட முறையில் இந்தமாதிரிக் குற்றச்சாட்டு வந்தாலும் அதைத் தீர்க்கவேண்டிய பொறுப்பு ஆட்சியாளருக்கு உண்டு. ஆனால் என்னைப் பொறுத்த வரையில் நான் பழி சுமத்தத் தயாராயில்லை. சட்டசபை வேலைப் பளுவைக் குறைக்கவேண்டும். இங்கே வேலை பார்க்கிறவர்களின் சம்பளத்தை உயர்த்த வேண்டும், இங்கே டெம்பரரியாக வேலை பார்க்கின்ற பியூன்கள் சட்டசபை நடக்கின்ற நாட்களைத்தவிர, மற்ற நேரங்களிலே வேலையை இழக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது. அவர்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்கள் குடும்பமும் கஷ்டப்படுகிறது. இதை தவிர்ப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[ Sri A. Govindasamy] [7th April 1958

இந்த சட்டசபைக் கட்டிடத்துக்குள்ளேயே பார்ட்டி ஆபீஸ்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு தனி அறை இருக்க வேண்டும். இந்தமாதிரி வசதியில்லாத காரணத்தால் லாபியிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிற பொழுது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி முடிவு செய்யவேண்டுமென்று சொன்னால் தனியாக இடமில்லாத நிலைமை ஏற்படுகிறது. சட்டசபை உறுப்பினர்கள் கட்சிக்கூட்டம் நடத்துவதற்கு தனி அறைகள் ஒதுக்கப்பட்டாலும், போதுமான சௌகரியம் இல்லை. சென்ற சட்டசபை இருந்த காலத்தில் பழைய ஹாஸ்டலிலே ஒதுக்கியிருந்தார்கள். ஏன் இந்த சட்டசபை நடக்கிற பொழுதும் ஹாஸ்டலிலே வசதி செய்து கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். "உங்கள் சம்மதத்தின் பேரில்தானே நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம்" என்று கேட்கலாம். ஒன்றுமே யில்லை என்ற காரணத்திற்காகத் தான் கொடுத்ததை ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, சட்டசபை நல்ல முறையில் நடப்பதற்கும், சட்டசபை உறுப்பினர்கள் தங்களுடைய வேலைகளைத் திறமையாகச் செய்வதற்கும் வேண்டிய வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஹாஸ்டல் வாடகை ரூ. 2½ ஆக இருக்கிறது. இதைக் குறைக்கலாம். சௌகரியக் குறைவு இருக்கிற காரணத்தினாலே, வாடகையைக் குறைக்கவேண்டும். அப்படிக் குறைத்தால் நஷ்டம் ஒன்றும் ஏற்படாது. இந்த ஹாஸ்டலில் சாப்பாட்டு வசதி சரியாக இல்லை.
12-40 p.m. ஆகையால் வேறு ஓட்டலுக்குப் போய் சாப்பிடும்படியான நிலைமை இருக்கிறது. ஏதோ ஒரு சிலருக்கு அங்கு கிடைக்கும் சாப்பாடு பிடிக்கிறது. மற்றவர்களுக்கு அது பிடிப்பது இல்லை. ஆகையால் எல்லோரும் அங்கேயே சாப்பிட வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யக் கூடாது. மொத்தத்தில் சாப்பாடு வசதி சரியாக செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் தங்கும் அறைகளில் அவர்கள் நண்பர்களோ அல்லது உறவினர்களோ வந்து தங்கும்படி நேர்ந்தால் ஒரு ரூபாய் கட்டணம் வாங்கிக்கொண்டால் போதும். இதற்குத் தகுந்தவாறு விதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIAR**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரேபணையை நான் ஆதரிக்கிறேன். 1957-ம் வருஷம் மார்ச் மாதம் புதிய சட்ட சபைக்கு தேர்தல் நடந்து ஒரு வருஷ காலமாக இந்தக் கட்டிடத்தில் வேலை நடந்து வருகின்றது. ஆரம்பக் காலத்தில் திடீரென்று சட்டசபையின் அனுமதியில்லாமல் மௌண்ட் ரோடிலிருக்கும் நல்ல கட்டிடத்தை விட்டுவிட்டு இங்கு வந்து பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறோம் என்று முன்பே சொன்னேன். இப்போதும் சொல்கிறேன். ஆகையால் அதிகமாக சொல்லவேண்டிய அவசியம் இல்லை, இந்த ஒரு வருஷ காலமாக சட்டசபை அங்கத்தினர்கள் படும் கஷ்டத்தைப் பார்த்து கனம் அமைச்சர் அவர்களுடைய மனது மாறி அங்கத்தினர்களுக்கு பல வித சலுகைகள் கொடுப்பதற்கு முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சட்டசபை மௌண்ட் ரோடிலிருந்து இவ்விடம் வந்திருப்பதில் இரண்டு, மூன்று லட்சம் ரூபாய் நம்முடைய சர்க்காருக்கு செலவாகியிருக்கிறது என்பதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. இந்தக் கட்டிடத்தில் மெம்பர்களுக்கு போதுமான வசதிகள் கிடையாது. 'லௌஞ்ச்' கிடையாது நூல் நிலையத்தில் இருந்து ஒரு புஸ்தகம் வேண்டும் என்று சொன்னால் அது மௌண்ட் ரோட் பகுதியில் இருக்கிறது என்று 'லைப்ரேரியன்' சொல்லுகிறார்கள். இம்மாதிரி பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. இங்கு கட்சிகளுக்காக தனிப்பட்ட ஒரு அறை கிடையாது. சுமார் ஒரு வருஷம் கழித்து எதிர் கட்சித் தலைவர் என்கிற முறையில் எனக்கு ஒரு சிறிய அறை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் நான்கு பேருக்குமேல் உட்கார முடியாது. அந்த அறையில்



7th April 1958] [Sri V. K. Ramaswamy Mudaliar]

அதிக நேரம் உட்கார முடியாது. ஏனென்றால் சிறு நீர் கழிக்கும் இடம் பக்கத்தில் இருக்கிறது. அதிக நாள் கழித்துத்தான் அந்த அறைக்கு டெலிபோன் கொடுத்திருக்கிறார்கள். அங்கு 'லௌட் ஸ்பீகர்' இன்னும் வைக்கவில்லை. அந்தப் பேப்பர் இன்னும் சுற்றிக்கொண்டிருக்கிறது. இம்மாதிரி பலவித கஷ்டங்கள் இருக்கின்றன. இப்படியே கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு 4, 5 வருஷங்களுக்கு இருப்பதா என்பதை நாம் சற்று யோசிக்கவேண்டும். சமீபத்தில் நான் மைசூருக்கும், பம்பாய்க்கும் போயிருந்தேன். அங்கு அங்கத்தினர்களுக்கு எல்லா விதமான வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள். . இப்போதும் இங்கு ஒன்றும் மிஞ்சிவிடவில்லை. மத்திய சர்க்காரிடமிருந்து சுமார் 30 லட்சம் ரூபாய் நம் சட்டசபைக் கட்டிடங்களுக்காக கிடைத்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். இதில் ஏதாவது தவறு இருக்குமானால் அமைச்சா அவர்கள் என்னை திருத்துவார் என்று நினைக்கிறேன். மௌண்ட் ரோடில் முன்பிருந்த கட்டிடம் திரும்பி கிடைப்பதற்கு சௌகரியம் இல்லாவிட்டால் ஒரு புதிய கட்டிடத்தை சீக்கிரத்தில் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி இல்லாவிட்டால் இப்பொழுதிருக்கும் அறையை குளிர்ச்சி அறையாக மாற்றி அமைக்கலாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன், கௌன்சில் மெம்பர்கள் அதிகமாகிக்கொண்டு வருவதினால் இடம் போதாத காரணத்திற்காக வேறு இடம் கட்டப்போவதைப் பற்றி சர்க்கார் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகையால் இவைகளை யெல்லாம் தீர்க்கமாக யோசித்து நல்ல முறையில் ஒரு கட்டிடத்தை அமைத்து அந்த இடத்திற்கு சட்டசபையை மாற்றலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அங்கத்தினர்கள் காப்பி, டிபன் சாப்பிடுவதற்குகூட சரியான வசதி கிடையாது. கூட்டத்தோடு கூட்டமாகப்போய், இடிப்பட்டு கஷ்டப்பட்டு சிற்றுண்டி சாப்பிடவேண்டிய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் சர்க்கார் யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய சர்க்கார் லோக் சபை அங்கத்தினர்களுக்கு எவ்வளவோ வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி நம் ராஜ்ய சர்க்காரும் இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம், ஹாஸ்டலில் தங்கி இருப்பவர்களுக்கு சரியான சாப்பாட்டு வசதி இல்லை என்று புகார்கள் வந்து கொண்டு இருக்கின்றன. இந்த குறைகளை கவனித்து நல்ல முறையில் ஹாஸ்டல் நடக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹைதராபாத்தில் அங்கத்தினர்களிடம மாதத்திற்கு ரூபாய் 25 விகிதம் குடிக்கூலி வாங்கிக்கொண்டு 'Family Quarters' கொடுத்திருக்கிறார்கள். இங்குள்ள அங்கத்தினர்களுக்கும் அம்மாதிரி கொடுக்கலாம் என்று நினைக்கிறேன். எல்லா அங்கத்தினர்களும் இதைப் பயன்படுத்திக்கொள்ளப்போவதில்லை. தேவைப்படுகிறவர்கள் இதை பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் இந்த வசதியை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கத்தினர்களுக்கு இந்த மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்ய ரெயில்வே டிக்கெட் சலுகை கொடுக்கவேண்டும். சமீபத்தில் நடந்த பிசினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டத்தில் இதைப் பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதை சீக்கிரம் பரிசீலனை செய்து முடிவு செய்யவேண்டும். இம்மாதிரி சலுகைகள் கொடுத்தால் அங்கத்தினர்கள் 365 நாட்களும் பிரயாணம் செய்து கொண்டிருப்பார்கள் என்ற எண்ணத்தையும் கைவிடவேண்டும். அங்கத்தினர்கள் பொறுப்பு வாய்ந்தவர்கள். 75,000 ஓட்டர்களின் பிரதிநிதிகள். ரயில் சலுகை கொடுத்தாலும், சாப்பாடு இன்னும் மற்ற செலவுகள் இருக்கும். ஆகையால் அங்கத்தினர்களுக்கு மாகாணம் முழுவதும் சுற்றுப்பிரயாணம்செய்ய 'இலவச பாஸ்' கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். லெஜிஸ்லேசர் டிபார்ட்மெண்டைப் பற்றி பல அங்கத்தினர்கள் பேசினார்கள். மற்ற டிபார்ட்மெண்டுகளில் இருப்பதைப் போல், சட்ட இலாகா, நிதி இலாகா போன்று இந்த இலாகாவில் இருப்பவர்

[Sri V. K. Ramaswamy Mudaliar] [7th April 1958

களுக்கும் சலுகை கொடுத்து அவர்களுடைய 'ஸ்டேடஸை உயர்த்துவதற்காக முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டும். 'லெஜிஸ்லேசர் பாடி.' ஒரு 'சாவரின் பாடி என்று சொல்வார்கள். அங்கத்தினர்களுக்கு மட்டும் சலுகை கொடுப்பதோடு நிற்காமல் இலாகாவின் ஸ்டேடஸை உயர்த்தி அதை ஒரு தனி இலாகாவாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எலெக்ஷன் செலவுகள் இதில் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த அம்சத்தை இதிலிருந்து நீக்கிவிடவேண்டும். தனி அம்சமாக இதைக் காட்டலாம் என்று நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அரசியல் சட்டம் பற்றி முன்பே ஒரு தரம் சொன்னேன். இப்பொழுதும் வற்புறுத்துகிறேன். ஒன்றுக்கு ஒன்பது என்ற விகிதம்
12-50 வேண்டும். 1 : 9 என்ற ரேஷியோவில் போடலாம். சர்க்காருக்கு அந்த உரிமை இருக்கிறது. அதேமாதிரி திருத்தி அமைக்கலாம். மற்ற மாகாணங்களில், அஸ்ஸாம், மைசூர் போன்ற மாகாணங்களில், ஒன்றுக்கு எட்டு, ஒன்பது என்று இருக்கிறது. அந்த ரீதியில் டிலிமிடேஷன் பண்ணவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதாவது அங்கத்தினர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அங்கத்தினர்களெல்லாம் சொல்ல வேண்டிய குறைகளை சொன்னார்கள். நான் கடைசியாக கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். அங்கத்தினர்கள் கோரும் சலுகைகளையெல்லாம் கூடிய சீக்கிரம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கத்தினர்கள் படும் கஷ்டங்களை நிவர்த்திக்க சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்.

அங்கத்தினர்கள் அனுப்பும் பெட்டிஷன்களுக்கும், லெட்டர்களுக்கும் அனேக டிபார்ட்மென்டுகளிலிருந்து பதில் வருவதில்லை. அங்கத்தினர்கள் பொறுப்பு வாய்ந்தவர்கள். அவர்கள் சர்க்காருக்கோ அமைச்சருக்கோ எழுதும் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் தரப்பட்டு அவை கவனிக்கப்பட வேண்டும். நாங்கள் சொன்னதையெல்லாம் ஏற்றுக்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM** : சபாநாயகர் அவர்களே ! இந்த மான்யத்தின்மீது நடந்த விவாதத்தில் பல கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. முதன்முதலில் இந்த சபையில் இருக்கக்கூடிய அங்கத்தினர்களின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டும் என்பதைப்பற்றி சில அங்கத்தினர்கள் வற்புறுத்தினார்கள். அதற்கு மேற்கோளாக மற்ற சபைகளிலே இருக்கும் எண்ணிக்கையையும் எடுத்துக் காட்டினார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டை பொருத்த வரையில் எண்ணிக்கையை உயர்த்தித்தான் காரியங்களை செய்யவேண்டும் என்ற முறபிலே நாம் இயங்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன், நமது சட்ட சபையில் அங்கத்தினர்களும் குறைவு நமது மந்திரிகளின் எண்ணிக்கையும் குறைவு. நமது காரியாலயங்களிலேயே வேலை செய்பவர்களும் குறைவு. குறைவானவர்களை வைத்துக் கொண்டே அதிகமான வேலையை செய்யும் திறமை நமக்குத்தான் இருக்கிறது என்பதை சொல்ல வேண்டியது அவசியமில்லை. நம் சர்க்கார் இல்லை, மத்திய இலாகா ஒன்றில் நடக்கும் நிகழ்ச்சிக்கு நான் தலைமை வகித்தேன். அங்கே இருந்த—தமிழ் அதிகாரி அல்ல—வேறு பாகத்திலிருந்து வந்திருந்த ஒரு அதிகாரி சொன்னார்கள். ஒரு காரியத்திற்கு ஒரு பகுதியிலிருந்து இத்தனை எண்ணிக்கை வேண்டுமென்றால் நம் பகுதிகளிலிருந்து மிக குறைந்த எண்ணிக்கை இருந்தாலே போதும், என்பதைப்பற்றி சொன்னார்கள்.

**SRI K. ANBAZHAGAN** : அமைச்சர் அவர்கள் தமிழர்களின் திறமையையும் ஆற்றலையும் பற்றிகுறிப்பிட்டார்கள். ஜனநாயக தத்துவத்தில் மக்களுக்கு கொடுக்க வேண்டிய பிரதிநிதிகளை கோருகின்றபோது தனிப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் சீர் கெட்டுவிடும் என்று அமைச்சர் கருதுகிறார்களா ?



7th April 1958]

**THE HON. SRI C. SUBRAMANIAM** : இப்பொழுது கனம் அன்பழகன் 75,000 பேர்களுக்கு பிரதிநிதியாக செயலாற்ற முடியாது என்றால், அப்படித் தன்னைக் குறைவு படுத்திக்கொள்வது தமிழ் பண்பின் காரணத்தால் என்று நினைக்கிறேன். 75,000 ஆனால் என்ன ஒன்று அல்லது ஒன்றரை இலட்சமானால் என்ன ? பிரதிநிதியாக செயலாற்ற முடியும் என்று சொல்லுவேன். ஆகையினால் பிரதிநிதி நல்ல முறையிலே பிரதிநிதியாக விளங்க முடியும். குறைந்தால் தான் நன்றாக விளங்க முடியும் என்பது பூராவும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்து அல்ல என்பது என் அபிப்பிராயம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இன்னும் எண்ணிக்கையை கூட்டுவதால் சிறந்த சபையாகவோ நல்ல முறையிலே இயங்க முடியும் என்றோ நான் கருதவில்லை. எப்படி இருந்தாலும் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டும் என்று முடிவு செய்து கொண்டால் போதுமானது. இதை எதற்காக சொல்லுகிறேன் என்றால் இப்பொழுது நாம் 205 பேர்கள் இருக்கிறோம். இதற்கே போதிய சௌகர்யங்களை செய்துகொள்ள முடியாமல் இத்தனை புகார்களும் வருகின்றன. இதை இன்னும் 300 பண்ணிக்கொண்டு அதற்கு சௌகர்யங்களை செய்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுவானேன், என்று தான். 205-க்கே இவ்வளவு புகார்கள் என்றால், 300-க்கு இன்னும் அதிக குறைகள் ஏற்படும். ஆகவே நம் எண்ணிக்கையை இன்னும் 100 அதிகம் ஆக்க வேண்டும் என்பது இப்பொழுது இருக்கும் நிலையில் சரியான யோசனையாக இருக்க முடியாது.

இன்னொரு கருத்தையும் சொல்லுகிறேன். இதை பல சமயங்களில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுதும் சொல்ல விரும்புகிறேன். இந்த சபையானது நல்ல முறையிலே இயங்குவதற்கு எல்லாவிதமான சௌகர்யங்களையும் அங்கத்தினர்களுக்கு செய்து கொடுக்க கடமை பட்டிருக்கிறோம். அந்த முறையிலே அதற்கென்று இருக்கும் கமிட்டியிலே முடிவுகள் வருகின்றன. ஆனால் அதிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. முதன் முதலில் அங்கத்தினர்கள் தங்கும் விடுதிகள் நல்ல முறையிலேயே இயங்க வேண்டும். அதற்கு ஒரு தனிக்கமிட்டி இருக்கிறது. அவர்களே காரியங்களை முடிவு செய்து கண்காணிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட அதிலே பல குறைகள், புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன. நான் ஒரு உறுதியை கொடுக்க முடியும். ஹௌஸ் கமிட்டியின் தீர்மானத்தை நான் நிராகரித்து இருப்பதாக நினைவில்லை. சௌகரியங்களைப் பொறுத்த வரையில் நான் நிராகரித்து இருந்தால்கூட—வாடகையில் வேண்டுமானாலும் ரூ. 2–8–0-ஐ ரூ. 2–0–0 ஆக குறைக்க சம்மதித்து இருக்க மாட்டேன். அவை தொடர்ந்து வரும்போது கோரும் சௌகர்யங்களை செய்வதில் எதையும் நிராகரித்து இருப்பதாக ஞாபகமில்லை.

சாப்பாட்டு வசதி சௌகர்யமாக இல்லை என்பதைப்பற்றி இந்த வருஷத்தில் அல்ல 5 வருஷமாகவே ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். ஒரு தனி ஏற்பாட்டை செய்து, ஹோட்டல் நடத்துபவரைக் கொண்டு ஏற்பாடு செய்யலாமா என்று யோசனை கேட்டேன். அதிகச் செலவு ஆனாலும் சர்க்காரிலிருந்து ஓரளவு கொடுத்து அங்கத்தினர்களிடம் குறைந்த அளவில் பெறலாமா என்று யோசிக்கப்பட்டது. ஆனால் அங்கத்தினர்கள் அதை மறுத்து விட்டார்கள். இதற்கு பிறகு இப்பொழுது உணவு ஏற்பாட்டை அங்கத்தினர்கள் ஒரு கமிட்டியின் மூலமாகவே செய்து நல்ல முறையிலே நடத்த வேண்டும் என்ற ஏற்பாட்டை செய்தார்கள். இதை சர்க்கார் ஏற்றுக்கொண்டு கண்காணிக்கவும் ஏற்பாடு செய்தது. இதிலே பல தகராறு அபிப்பிராயபேதம் கருத்துவேற்றுமைகள். இன்றைக்கு தரம் குறைந்துவிட்டது என்று பல புகார்கள். ஆகையால் ஹௌஸ் கமிட்டிக்கு முழு பொறுப்பும் கொடுத்து அதிகமான செலவானாலும் சர்க்காரிலிருந்து போட்டுக்கொள்ள தயார். எந்த ஏற்பாட்டை செய்து கொள்வதானாலும் என்னைப் பொறுத்த வரையில் ஏற்றுக்கொள்ள தயார். ஆனாலும் இதிலும் கட்சி, பிரதிக் கட்சி வந்துவிடுகிறது. அரசியல் கட்சி

[Sri C. Subramaniam] [7th April 1958

அடிப்படையில் அல்ல, சாப்பாட்டு கட்சி அடிப்படையில் வந்துவிடுகிறது
1 p.m. அங்கத்தினர்கள் சாப்பாட்டிற்கு நல்ல முறையில் ஏற்பாடு செய்ய வேண்டியது அவசியம். ஆனால் இதை எந்த முறையில் செய்வது என்பது பற்றி எனக்குக்கூட ஓரளவு புரியாமல் இருக்கிறது. அதன் காரணமாக திக்குமுக்கலாட வேண்டியிருக்கிறது. இது பற்றி கமிட்டி இல்லாவிட்டாலும், கட்சித் தலைவர்களெல்லாம் கூடி ஒரு திட்டத்தை வகுத்து ஆலோசனை சொன்னால் அதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவதாயிருந்தால், அதையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். 1 மாதம் 1½ மாதம் அங்கத்தினர்கள் இங்கு தங்கவேண்டியிருக்கும்பொழுது அவர்கள் சாப்பிடும் உணவு நல்ல உணவாக இருப்பது, ஆரோக்கியத்தை பாதிக்காத உணவாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். அதை எந்தமுறையில் ஏற்படுத்தவேண்டுமென்று அங்கத்தினர்கள் விரும்புகிறார்களோ அந்த முறையில் ஏற்படுத்தி, அதற்கான செலவையும் சர்க்கார் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறது. இன்னும் அங்கத்தினர்களுக்கு வேண்டிய மற்ற சௌகரியங்களையும் பரிசீலித்து அது சம்பந்தமாக முடிவு செய்தால், அந்த முடிவுகளை நிறைவேற்றி வைப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

சட்டசபை அங்கத்தினர்கள் விடுதியில் இருக்கக்கூடிய அறை வசதிகளைப் பற்றி தியாகராஜன் அவர்கள் குறை கூறினார்கள். பண நெருக்கடியாக இருந்த காலத்திலே 1950–51-ம் வருஷத்தில் இந்தக் கட்டிடம் கட்டப்பட்டது. அப்பொழுது தனித்தனி அறைகளாக இருந்தால் போதும், ஒவ்வொரு அறைக்கும் பாத் ரூம் அவசியமில்லை என்ற முறையிலே கட்டிடத்தை கட்டி முடித்தார்கள். அதிலும் இப்பொழுது ஏதாவது மாறுதல் செய்யவேண்டுமென்று அங்கத்தினர்கள் எல்லோரும் கருதுவார்களேயானால், அந்த மாறுதல்களை செய்வதில் ஒன்றும் கஷ்டம் இருக்காது. அந்த மாறுதல் எவ்வளவு தூரம் அவசியம் என்பதை அங்கத்தினர்கள் எல்லோரும் யோசித்து ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இது விஷயமாக ஒரு முடிவான யோசனையை அங்கத்தினர்கள் தெரிவிப்பார்களேயானால், அடுத்த கூட்டத்திற்கு முன்னால் செய்யவேண்டிய மாறுதல்களை செய்துவிடலாம். அந்த அளவிற்கு அறைகள் குறையும். அதை ஈடு செய்வது எப்படி என்பது பற்றி யோசித்து அதற்கும் ஏதாவது ஏற்பாடு செய்யமுடியும் என்று கருதுகிறேன். அது ஒன்றும் நாம் சமாளிக்க முடியாத காரியம் அல்ல. அதேமாதிரி அந்த விடுதியில் மற்றும் அங்கத்தினர்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டும் என்பது பற்றி முடிவு செய்து, முடிவான கருத்துக்களை தெரிவிப்பார்களேயானால், அந்த சௌகரியங்களை செய்து கொடுப்பதற்கு என்னைப் பொறுத்த வரையில் தயக்கம் இருக்காது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு நான் இதைச் சொல்லவில்லை. பல தடவைகள் நான் இதைச் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், உருவான திட்டம் ஒன்றை நான் பார்த்ததாக எனக்கு ஞாபகம் இல்லை. அப்படி முன்பு ஏதாவது ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அதை நான் கவனிக்காமல் இருந்தால்கூட, இனி இம்மாதிரி வரக்கூடிய திட்டங்களை நிறை வேற்றுவதற்கு, அமுல் நடத்துவதற்கு சகல முயற்சிகளையும் செய்கிறேன். பணம் ஒதுக்கினாலும்கூட, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்து உத்தரவுகள் போட்டாலும்கூட, அதை நிறைவேற்றக் கூடியது அங்கத்தினர்களுடைய பொறுப்பாக இருக்கிறது, இந்த இலாகாவினுடைய பொறுப்பாக இருக்கிறது. அதிலும்கூட தாமதம் ஏற்படுகிறது என்பதையும் நான் கவனிக்கிறேன். ஆகவே, அங்கத்தினர்களுடைய சௌகரியத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொள்ளுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகளை எந்தமுறையில் அதிகப்படுத்தவேண்டும், திருத்தவேண்டும், மாற்ற வேண்டுமென்ற முடிவுகளை தெரிவித்துவிட்டால், அந்த முறையில் மாற்றுவதற்கோ, திருத்துவதற்கோ, அதிகப்படுத்துவதற்கோ வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் உடனே எடுத்துக் கொள்ளும். இதனால் ஆகக்கூடிய சிறிய செலவுத் தொகை பட்ஜெட்டை அதிகமாக பாதித்துவிடாது. அங்கத்தினர்கள் இது பற்றி சிபார்சு செய்யும்பொழுது இதையும் மனதில் வைத்துக் கொண்டு தான் செய்வார்கள். பொது மக்களுடைய பிரதிநிதிகளாக இருப்பதினாலே அதிகப்படியாக வீண் செலவு செய்யவேண்டுமென்று



7th April 1958] [Sri C. Subramaniam]

அவர்கள் சிபார்சு செய்யமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே அந்தப் பொறுப்பை அங்கத்தினர்களுக்கே விட்டுவிடுகிறேன். அவர்கள் இது விஷயமாக சொல்லக்கூடிய திட்டத்தை நான் ஏற்றுக் கொள்ளுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

அதே முறையில்தான் சபை நல்ல முறையில் நடப்பதற்கு சபை நடக்கின்ற நேரத்தில் எல்லாவிதமான சௌகரியங்களுக்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை இருப்பதற்கு இடமில்லை. பலர் இந்தச் சபை கட்டிடத்தை முன்பிருந்த இடத்தை விட்டு இங்கே மாற்றியது தவறு என்ற கருத்தை திரும்பதிரும்ப சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இருந்தாலும் சிலகுறைகள் இருக்கின்றன, சில நன்மைகள் இருக்கின்றன. இங்கே இருந்தாலும் சில குறைகள், சில நன்மைகள், இருக்கின்றன. அந்த முறையில் பார்க்கும் பொழுது அங்கே சபை கூடுவதினால் சில நன்மைகளும் அதற்குத் தகுந்த சில கெடுதல்களும் இருந்தன. பெருவாரியாக மொத்தத்தில் நாம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுதும், மற்ற அங்கத்தினர்களின் அபிப்பிராயத்தைக் கேட்ட பிறகும், சபை இங்கு கூடுவதிலே சபை நன்றாக நடப்பதற்கு ஒரு சூழ்நிலை இங்கு இருக்கிறது என்பதைத் தான் எல்லோரும் தெரிவித்திருக்கிறார்கள். அங்கத்தினர்களுக்கு ஏதாவது ஒரு தகவல் வேண்டுமானால், காரியாலயம் இன்னொரு பக்கத்தில் இருக்குமானால், அந்தத் தகவல் வந்துசேருவதற்குள் சபையின் கூட்டமே முடிந்துபோய் விடும். இப்பொழுது இங்கு சபை கூடுவதால், அவசரமாக ஏதாவது தகவல் வேண்டுமானாலும் சரி, விவாதத்திலே பல பிரச்னைகள் எழுப்பப்படும் பொழுது, உடனடியாக பதில் அளிப்பதற்கு காரியதரிசிகளிடமிருந்தோ, அல்லது வேறு அதிகாரிகளிடமிருந்தோ புள்ளி விவரங்கள் அல்லது வேறு தகவல்கள் வேண்டுமானாலும் சரி, அவைகளை உடனடியாக பெற முடிகிறது. சபை மவுண்டு ரோடில் கூடியிருந்த பொழுது, அந்த சௌகரியம் இருக்கவில்லை என்று நான் சொல்ல முடியும். ஏனென்றால் பல சமயங்களில் ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றி பதில் சொல்லுவதற்கு விவரங்கள் வேண்டுமென்றால் அவைகள் காலாகாலத்தில் வந்து சேருவதில்லை. ஆனால் அந்தக் குறை இங்கு இல்லை. அதே சமயத்தில் இங்கு அங்கத்தினர்களுக்கு வேண்டிய பல சௌகரியங்களை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று சொல்லும்பொழுது, அவைகள் அனைத்தையும் சிறிது சிறிதாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால் இன்னும் இங்கே இட நெருக்கடி கொஞ்சம் இருக்கிறது. அதற்காக புதிய கட்டிடங்களை கட்டிக்கொண்டிருக்கிறோம். அந்தக் கட்டிடங்கள் கட்டி முடிந்த பிற்பாடு எல்லாவிதமான வசதிகளையும் பெருக்கிக்கொள்ள முடியும். இந்தச் சபையை பொறுத்த வரையில் இதிலே கொஞ்சம மிச்சம் பிடித்து அங்கத்தினர்களுக்கு அசௌகரியத்தைக் கொடுத்து பட்ஜெட்டை சரிக்கட்டவேண்டிய நிலைமையில் நாம் இல்லை. அங்கத்தினர்களுக்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்துகொடுக்க முடியும். இந்தச் சபையை 'ஏர் கண்டிஷன்' செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். எல்லாக் கட்சியினருக்கும் இது விஷயத்தில் ஏகோபித்த அபிப்பிராயம் இருக்குமானால் இது பற்றி ஆலோசிக்கலாம். ஆனால் இதை ஒரு அரசியல் பிரச்னையாக வைத்து கொண்டு, ஏதோ 2, 3 லட்ச ரூபாய் செலவில் அங்கத்தினர்கள் 'குளு, குளு' என்று உட்காருவதற்கு வேண்டிய வசதிகளை செய்து கொண்டுவிட்டார்கள் என்று சொல்லி இதை அரசியல் பிரச்னையாக உபயோகப்படுத்திக்கொள்ள முன்வருவார்கள். அப்படியில்லாமல் இங்கு அங்கத்தினர்கள் நன்றாக தங்குவதற்கு, சபை நன்றாக நடப்பதற்கு சௌகரியங்கள் இருக்கவேண்டும் என்பதில் ஒன்றுபட்ட கருத்து இருக்குமேயானால், அதை ஏற்று நடத்துவதற்கு தயாராக இருக்கிறோம். அதே மாதிரி சபை உதகமண்டலத்தில் கூடவேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டது. சர்க்காரைப் பொறுத்தவரையில், இது விஷயமாக சபையினரிடையே ஒன்றுபட்ட அபிப்பிராயம் இருக்குமானால், அதற்கு சர்க்கார் தடையாக இருக்க விரும்பவில்லை. ஆகவே இதை நீங்கள் யோசித்துப் பார்த்துச்சொல்லுங்கள் என்று கட்சித் தலைவர்களுக்கு விட்டுவிட்டோம். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்கள் மட்டும் அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டும், அதை நாங்கள் எங்களுடைய அரசியல் பிரச்னையாக உபயோகித்துக்கொள்ளும் உரிமையை நீங்கள்

பரிக்கக்கூடாது. ஆகையால் என்னுடைய சம்மதத்தை நீங்கள் கேட்கக் கூடாது. ஆனால் அந்த முடிவுப் பிரகாரம் நாங்கள் ஊட்டிக்கு வருகிறோம். அங்கு இருக்கக்கூடிய சௌகரியங்களை அனுபவிப்பதற்கு தயார். அதை என்னுடைய அரசியல் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக் கொண்டால் அதற்கு ஏன் நீங்கள் தடையாக இருக்கிறீர்கள். நான் சம்மதம் கொடுக்க மாட்டேன். நீங்கள் வேண்டுமானால் முடிவு செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சபை நல்ல முறையிலே கூடவேண்டுமென்பதற்காக மற்ற கட்சித் தலைவர்கள் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சபை ஊட்டியில் கூடுவதால் வீண் செலவு கூடாது என்பது மற்ற எதிர்க் கட்சி தலைவர்களுக்கு தெரிந்ததே. எதிர்க் கட்சி தலைவர், கம்யூனிஸ்டு கட்சி தலைவர், சோஷலிஸ்டுகட்சி தலைவர் இவர்களுக்கு வீண்செலவு செய்யவேண்டுமென்ற கருத்து இருக்க முடியாது. இவர்களெல்லாம் இதற்கு சரி என்று சொல்லும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும் இதுதான் சரி என்று மனதில் பட்டாலும், சர்க்கார் அந்த முடிவை செய்தால், அதை நான் ஏற்றுக் கொள்ளத் தயார். நான் மட்டும் சம்மதத்தை வெளிப் படையாக தெரிவிக்க மாட்டேன் என்று சொல்லுவது ஒரு தைரியம் இல்லாத காரணத்தினால் தான் என்று நினைக்கவேண்டியதாக இருக்கிறது. இது ஒரு சரியான முடிவு என்று சொன்னால் அந்த முடிவுக்கு சம்மதம் கொடுப்பதற்கு தைரியம் இல்லாத காரணத்தினால், இதை வேறு வகையிலே அரசியலில் பயன் படுத்திக்கொள்ளுவதற்காக இவ்வாறு நாங்கள் சம்மதம் கொடுக்கமாட்டோம் வெளிப்படையாக என்ற முறையில் சொல்லுவது சரியில்லை. தவறு என்று நினைத்தால், ஊட்டிக்கு போவது தவறு, ஆகையினால் போகக்கூடாது, என்று சொன்னால் அதை நான் புரிந்து கொள்ள முடியும். ஊட்டிக்கு போகலாம். ஆனால் அதை சர்க்கார் முடிவு செய்தால் போகலாம். நாங்கள் அதற்கு சம்மதம் தெரிவிக்க முடியாது என்று சொல்லக்கூடாது என்ற அளவில் நான் சொல்லுகிறேன். சரி என்ற ஒரு காரியத்திற்கு சம்மதம் தருவதில் என்ன கஷ்டம் இருக்க முடியும் என்பது எனக்கு புரியவில்லை. அவர்களுடைய அரசியலில் அது வேறு விதமாக இருக்கலாம். என்னுடைய அரசியலில் அதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை புரிந்துகொள்ள முடியவில்லை.

1-10 pm **Sri C. N. ANNADURAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஊட்டிக்கு போவது பற்றி சொல்லும்பொழுது, சட்டமன்றம் அங்கே கூடினால், நான் வருவதற்கு தயாராக இருக்கிறேன், ஆனால் அது விஷயத்தில் முடிவு மட்டும் எடுப்பதற்கு நான் தயங்குவதாக நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் சொன்னதிலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஊட்டிக்கு வரும் என்ற அர்த்தம் உள்தொக்கி இல்லை என்பதை நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இதுதான் கஷ்டமாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் என்ன பேசுகிறார்—அவர் பேசுவதன் அர்த்தம் என்ன—என்பதை நான் புரிந்துகொள்ள முடியவில்லை. என்னை விட்டு விடுங்கள். மற்ற கட்சிகளின் தலைவர்களும் அவர் பேசுவதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் அன்று பேசியதைப் பொறுத்தவரையில், " நாங்கள் உதகமண்டலத்திற்கு வர மறுக்கவில்லை. ஆனால் எங்கள் முடிவைக் கூறுவதற்குத் தயாராயில்லை." என்று கூறினார் என்றுதான் நானும் மற்றெல்லோரும் கருதினோம். ஆகையால், சட்டசபை விஷயங்களில் தம் கருத்தை எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் தயவுசெய்து விளக்கமாகத் தெரிவிக்கவேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Sri C. N. ANNADURAI**: இந்தப் பிரச்னை முதன் முதலாக வந்தபோது, உதகமண்டலத்திற்கு நாம் போவது சரியில்லை என்று நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பிரச்னை மேலும் மேலும் கிளப்பப்பட்டதால், பொறுப்பை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறேனே தவிர, விளக்கமாக இல்லாமல் எதையும் நான் பேசவில்லை. நான் கூறியதை, தாம் புரிந்துகொண்ட மாதிரியே மற்ற எதிர் கட்சிகளின் தலைவர்களும் புரிந்துகொண்டார்கள் என்று கனம்



அமைச்சர் கூறினார். அவர்களும் கனம் அமைச்சரும் மட்டும் இதைப்பற்றிப் பேசினார்களா என்று தெரியவில்லை. எல்லோரும் கூடிப்பேசியபோது, உதகமண்டலத்திற்கு நாம் போகவேண்டாம் என்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: எப்படியும் இப்போதாவது அதைப் பற்றி விளக்கம் கூறியதற்காக ஸ்ரீ. அண்ணாதுரை அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்காரைப் பொறுத்தவரையில், உதகமண்டலத்திற்குப் போவதும் போகாமலிருப்பதும் ஒன்றுதான். உதகமண்டலத்திற்குப் போகும் விஷயத்தில் சர்க்காருக்கு எவ்வித அக்கரையும் இல்லை. சட்டசபைக் கூட்டம் உதகமண்டலத்தில் நடக்கலாமா என்பதுபற்றி சட்டசபை முடிவுசெய்யவேண்டும். சட்டசபைக் கூட்டத்தை உதகமண்டலத்தில் நடத்தலாம் என்ற யோசனையை சபையின் ஒரு பகுதியினர் எதிர்த்தாலும், சட்டசபைக் கூட்டத்தை சர்க்கார் உதக மண்டலத்தில் நடத்தாது. தமிழ்நாட்டு மக்களின் நலன்களைப் பொறுத்த வரையில், நாம் உதகமண்டலத்திற்குச் செல்வது தவறு என்ற தன் கருத்தை ஸ்ரீ அண்ணாதுரை விளக்கியது குறித்து நான் சந்தோஷப் படுகிறேன். உதகமண்டலத்திற்கு சட்டசபை அங்கத்தினர்கள் வந்து அங்கே சபைக் கூட்டத்தை நடத்தவேண்டுமென்று நாம் கூறுவதை வற்புறுத்த வேண்டாமென்று உதகமண்டலத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினரைக் கேட்டுக்கொள்கிறேன். மற்ற கனம் அங்கத்தினர்கள், அங்கே கூடவேண்டுமென்று வற்புறுத்தினார்கள். என்னைப் பொறுத்தவரையிலும், ' நீங்கள் எல்லோரும் செய்யும் முடிவை ஒத்துக்கொள்வதற்கு நான் தயாரா யிருக்கிறேன் ' என்று அவர்களிடம் நான் உறுதியாகச் சொல்லிவிட்டேன். நான் இந்தப் பிரச்னையைத் திரும்பத் திரும்ப எழுப்பி அவர்களைச் சங்கடப் படுத்த விரும்பவில்லை. இந்தப் பிரச்னைகுறித்து எதிர்க் கட்சிகள்தான் இனிமேல் முடிவுசெய்யவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டசபை நன்றாக இயங்கும்படி செய்வதன்பொருட்டு கனம் அங்கத்தினர்களுக்கு பல்வேறு சௌகரியங்களைச் செய்துகொடுக்கும் விஷயத்தில், எல்லாக் கட்சிகளின் தலைவர்களுக்கும் தனி அறைகள் கொடுக்கவேண்டுமென்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அந்த அறைகள் இங்கே இருக்கவேண்டுமா அல்லது தங்கும் இடத்தில் (மவுண்ட் ரோடில்) இருக்கவேண்டுமா என்ற பிரச்னையைப் பொறுத்தவரையில், தங்கும் இடத்தில்தான் இருக்கவேண்டுமென்று முதலில் சொல்லப்பட்டது. ஆகவேதான், அவசர அவசரமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அங்கே அந்த அறைகள் கொடுக்கப்பட்டன. இங்கே வேண்டுமென்றால் அதற்கும் ஏற்பாடு செய்கிறோம். அந்த அறைகள் எங்கே வேண்டுமென்று முதலில் கேட்கப்பட்டபோது, " விடுதி இருக்கும் இடத்திலேயே இந்த அறைகள் இருந்தால்தான் எங்களுக்கு சௌகரியமாக இருக்கும். இவை அங்கே இருந்தால்தான், கட்சிகள் கூடி இயங்குவதற்கு சௌகரியமாக இருக்கும். ஏனென்றால், சட்டசபைக் கூட்டம் நடக்கும்போதுதான் இங்கே வருகிறோம்; மற்ற சமயங்களில் அங்கேதான் இருக்கிறோம்" என்று எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சொன்னார்கள். ஆகவேதான் அங்கே இந்த அறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறைகள் கூட சௌகரியமாக இல்லை என்று சொல்லப்பட்டது. அவை சௌகரியமாக இல்லை என்றும், இங்கே அறைகள் வேண்டுமென்றும் சொன்னால், இங்கே அறைகள் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம். சில காரியங்களுக்காக இங்கேயுள்ள சில இடங்களை வேறு ஸ்தாபனங்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அந்த ஸ்தாபனங்களை அங்கே அனுப்பிவிட்டு அந்த இடங்களை கட்சிகளுக்குக் கொடுப்போம். அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று சட்டசபைக் காரியதரிசியிடமும் சொல்லியிருக்கிறேன். அந்த இடங்களை கட்சிகளுக்குக் கொடுப்பதில் கஷ்டம் இராது.

சட்டசபை நன்றாக இயங்கவேண்டுமென்றால், சட்டசபை இலாகாவும் நன்றாக இயங்கவேண்டுமென்றும், அந்த இலாகா சுதந்திரத்துடன் இயங்கவேண்டுமென்றும் கருத்தறிவிக்கப்பட்டது. நம் ராஜ்யத்தில் சட்டசபை இலாகாவிற்கு இதுவரையிலும் எவ்வளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்

[Sri C. Subramaniam] [7th April 1958

கிறது என்பதையும், அது சர்க்காரில் ஒரு தனி அங்கமாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் கனம் அங்கத்தினர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். சென்னையில் நடந்த சபாநாயகர்களின் மகாநாட்டிற்கு வந்த சபாநாயகர்களில் பலர் இங்கே செய்யப்பட்டிருக்கும் இந்த ஏற்பாட்டை அறிந்தபோது ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் " உங்கள் ராஜ்யத்தில் இவ்வளவு முன்னேற்றமான ஏற்பாட்டைச் செய்திருக்கிறீர்களே ! வேறு பல ராஜ்யங்களில் இருக்கும் சர்க்கார்கள் இப்படிப்பட்ட ஏற்பாட்டைப்பற்றி நினைக்கவே இல்லையே !" என்று சொன்னார்கள். வேறு எற்பாடுகளும் ஏதாவது அவசியமாக இருந்தாலும் அவைகளையும் செய்யலாம். வேறு ஏதாவது ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் இந்த இலாகாவினரின் வேலைத் திறனை அதிகரிக்க முடியுமானால், அந்த ஏற்பாட்டையும் செய்யலாம் ; அந்த ஏற்பாட்டிற்கான யோசனையைப் பரிசீலித்து அந்த அடிப்படையில் அவசியமான மாறுதலைச் செய்யலாம். எந்த ஏற்பாடாக இருந்தாலும் செலவிற்கான பொறுப்பு கடைசியில் சர்க்காருக்குத்தான் வந்துசேருகிறது ; அந்தப் பொறுப்பு சர்க்காரில் நிதி மந்திரிக்கு இருக்கிறது. செலவு புதியதாக இருந்தாலும், அந்தச் செலவிற்கான பொறுப்பு நிதி மந்திரிக்கு இருக்கிறது, அந்தச் செலவு எந்தப் பகுதியில் செய்யப்பட்டாலும்—தனியாக இயங்கும் பப்ளிக் ஸெர்விஸ் கமிஷன் செலவழித்தாலும் சரி, தனியாக இயங்கும் ஹைக்கோர்ட் செலவழித்தாலும் சரி—அதற்கான பொறுப்பு நிதி மந்திரியைத்தான் சாரும். அந்தச் செலவிற்கு இந்த சபையில் பதில் சொல்லவேண்டிய பொறுப்பு நிதி மந்திரிக்குத்தான் இருக்கிறது. ஆகவேதான், எந்தத் திட்டத்தைப்பற்றியோ ஏற்பாட்டைப்பற்றியோ ஆலோசனை கூறப்பட்டாலும், அந்த ஆலோசனை நிதி மந்திரியின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டு, அது நிதி மந்திரியால் அங்கீகரிக்கப்பட்ட பிறகுதான், அது சம்பந்தமான புதுச் செலவுகள் செய்யப்படவேண்டுமென்பது நம் நிர்வாக அமைப்பில் ஒரு அடிப்படையான அம்சமாக இருக்கிறது. எந்த ஒரு இலாகாவும், அது தனிப்பட்ட இலாகாவாக இருந்தாலும் அதன் புதிய செலவுகளுக்கு என் சம்மதம் பெறப்பட வேண்டியிருக்கிறது. என் சம்மதம் பெறப்படுவதற்காக எந்தக் காரிய யோசனைகளும் என் பரிசீலனைக்குக் கொண்டுவரப்படும்போது, அவைகளை நான் மட்டும் நேரிடையாகப் பரிசீலிப்பதில்லை. நிதி இலாகாவினர் அவைகளைப் பரிசீலித்து எனக்கு ஆலோசனை கூறுகிறார்கள். அதற்கு நிதி இலாகா காரியதரிசியும் மற்ற உத்தியோகஸ்தர்களும் இருக்கிறார்கள். அந்தக் காரியங்களை ஏற்றுக்கொள்ளலாமா வேண்டாமா என்பதுபற்றி அவர்கள் எனக்கு ஆலோசனை கூறுகிறார்கள். அவர்கள் ஆலோசனை சொன்ன பிறகு கடைசியாக தீர்ப்புக் கூற வேண்டிய பொறுப்புத்தான் எனக்கு இருக்கிறது. சட்டசபை இலாகாவைப் பொறுத்த புதிய காரியங்களுக்கான யோசனைகள் என் பார்வைக்குக் கொண்டுவரப் படுகின்றனவென்றால், இந்த இலாகாவின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் எனக்கு இல்லை. இந்த இலாகாவின் அதிகாரிகள் நன்றாக வேலை செய்வதற்கு வகைசெய்யக்கூடிய பல்வேறு யோசனைகள் தெரிவிக்கப்படவேண்டும். இந்த இலாகா தனி இலாகாவாக ஆனதில் சில நன்மைகளும் இருக்கின்றன. சில சங்கடங்களும் இருக்கின்றன. நன்மைகளை அடைய விரும்பும்போது சில சங்கடங்களையம் ஏற்கத்தான் வேண்டும். இலாகா தனியாக ஆக்கப்பட்டதன் காரணமாக இலாகாவிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கும் உத்தியோக உயர்வு வாய்ப்புகள் குறையுமானால் அந்தச் சங்கடத்தை அவர்கள் ஏற்கத்தான்வேண்டும் இந்த இலாகா நன்றாக இயங்கும்படி செய்வதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டுதான் இருக்கிறோம். இந்த இலாகா நன்றாக இயங்கினால்தான் சட்டசபையும் நன்றாக இயங்கமுடியும். இதை உணர்ந்துதான், இதற்கான பல காரியங்களைச் செய்துவருகிறோம். இவை எல்லாவற்றையும்விட சர்க்காரின் முழுப் பொறுப்பும் இந்த சபையில்தான் இருக்கிறது. மந்திரிகளிடம் சர்க்காரின் பொறுப்பு இருந்தாலும் அந்தப் பொறுப்பு எல்லாம் இந்த சபையில்தான் இருக்கிறது. ஆகவே இந்த சபை எவ்வளவுக்கெவ்வளவு நன்றாக இயங்குகிறதோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்காரும் நன்றாக இயங்கும். சர்க்காருக்கு சபையின் ஆதரவுவேண்டும். சபையின் ஆதரவு இல்லாவிட்டால் நாங்கள் சர்க்காரை நடத்தமுடியாது.



7th April 1958] [Sri C. Subramaniam]

ஆகவே சர்க்காரை நன்றாக நடக்கச்செய்யும் பொறுப்பு சட்டசபைக்கு இருக்கிறது. சட்டசபை என்று சொல்லும்போது, சட்டசபையிலுள்ள எல்லாக் கட்சிகளையும்தான் நான் குறிப்பிடுகிறேன். எந்தத் தனியொரு கட்சியையும் நான் குறிப்பிடவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள் எவ்வளவுக் கெவ்வளவு திறமையாகத் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு சர்க்காரின் திறமையும் நிர்வாகத்தின் திறமையும் மேலும் மேலும் அதிகரிக்கும். ஆகவே சட்டசபை அங்கத்தினர்கள் சபையில் எந்தக் குற்றச்சாட்டைச் சொல்லும்போதும் சரியான புள்ளிவிவரங்களுடனும் ஆதாரங்களுடனும் அதைச் சொல்லவேண்டும் என்று சொல்லிக்கொள் கிறேன். அவ்வாறில்லாமல், பொதுப்படையாக, மொட்டையாக குற்றச்சாட்டுகளைச் சொன்னால், அவைகளால் நாங்கள் பாதிக்கப்படுவதில்லை என்பதை சபை அங்கத்தினர்களுக்கு நான் தெரிவிக்கவேண்டியது மிகவும் அவசியம். இங்கே எடுத்துச் சொல்லப்படும் குறைகளெல்லாம் தீரவேண்டு மானால், அவைகளை மந்திரிகளும் நிர்வாகத்தில் உள்ளவர்களும் உணர வேண்டும். ஆகவே அவைகளை அவர்களுக்கு உணர்த்தக்கூடிய வகையில், ஆதாரங்களுடனும் புள்ளிவிவரங்களுடனும் அவைகளை இங்கே சொல்ல வேண்டும். அப்படியின்றி, ' வெறும் வாதத்திற்காகவும், அந்த வாதம் எங்கள் கட்சிப் பத்திரிகையில் வருவதற்காகவும் பேசுவோம் ' என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னால் அதற்கு நாங்கள் ஒத்துக்கொள்ள வில்லை.

சட்டசபை அங்கத்தினர்கள், அவர்கள் சட்டசபையில் சொல்லும் விஷயங் களையும், குற்றச்சாட்டுகளையும் நல்லமுறையில் எடுத்துச்சொல்வதற்கு அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் பல சௌகரியங்களை செய்துகொடுக்கவேண்டியது அவசியம் என்று நான் முன்பே சொன்னேன். அதற்கு என்ன என்ன சௌகரியங்கள் வேண்டுமென்று சொல்ல நான் முற்படவில்லை. எதிர் கட்சி அங்கத்தினர்கள் திட்டம்போட்டு, தங்களுக்கு என்ன என்ன சௌகரியங்கள் வேண்டுமென்பதைக் குறிப்பிட்டால் அவர்கள் கூறுவதை கவனித்துவேண்டிய சௌகரிகங்களை நாங்கள் செய்து கொடுப் போம். எந்த எந்த சௌகரியங்கள் செய்துகொடுப்பதற்கு ஆகக்கூடிய செல வுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியுமோ, அந்த அந்த சௌகரியங்களை செய்துகொடுப்போம். ஒரு ' இன்பர்மேஷன் ஸெண்டர் ' வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதாவது, இங்கே நன்றாகப் பேசுவதற்கு கனம் அங்கத்தினர்களுக்கு உதவும் வகையில் பல விவரங்களையும், ஆதாரங் களையும், செய்திகளையும் அவர்களுக்குக் கொடுத்து உதவக்கூடிய ஸ்தாபனம் வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை அமைப்பதில் கஷ்டம் இருக்காது.

இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துவது மூலமாக கனம் அங்கத்தினர் 1-20 p.m. களுக்கு பல விஷயங்களைப்பற்றிப் படிப்பதற்கும் அறிவதற்கும் சௌகரிய மாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்யமுடியும். ஆனால், அது எந்தவிதமான ஏற்பாடாக இருக்கவேண்டும் என்பதை இந்தச் சபையிலுள்ள கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் ஆலோசனை செய்து சொன்னால், அப்படிச் சொல்லியதற்குப் . பிறகு, எல்லோரும் உட்கார்ந்துகொண்டு பரிசீலனை செய்து, விவாதித்து எந்த முறையில் இருக்கவேண்டும் என்ற முடிவு ஏற்படலாம். அதற்கும் வெகு சுலபமாக ஏற்பாடு செய்ய முடியும்.

அந்த முறையில் நாம் எல்லோரும் விரும்புவது, அதுதான் எல்லோ ருடைய விருப்பமாகவும் இருக்கமுடியும். இந்த சபையிலே இன்னும் நல்ல முறையிலே, திறமையான முறையிலே, மக்கள் பாராட்டுகிற முறையிலே பாராட்டுவது மட்டுமல்ல, மக்களுக்கு நன்மை கொடுக்கிற முறையிலே விவா தங்கள் நடைபெறவேண்டும், குறைகள் எடுத்துச் சொல்லப்படவேண்டும், கேள்விகள் கேட்கப்படவேண்டும், அந்த முறையிலே கனம் அங்கத் தினர்கள் இயங்கவேண்டும். இந்தச் சபை மேன்மேலும் நல்ல முறையிலே பணியாற்றுவதற்கு எந்தவித உதவியும் செய்வதற்கு சர்க்கார் தயாராக இருக்கிறது என்ற உறுதியை மட்டும் சொல்லிக்கொண்டு, இந்த மான்யத்தை ஏற்று எந்த விதமான கருத்து வேற்றுமையும் இல்லாமல் நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையிலே இந்த

[Sri C. Subramaniam] [7th April 1958

வெட்டுப் பிரேரேபணையை வற்புறுத்துவது அவசியமா என்பதையும் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையைமுடித்துக்கொள்கிறேன்.

**Sri K. ANBAZHAGAN :** அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, கட்சித் தலைவர்கள் எல்லோரும் ஒருசேர வற்புறுத்துவார்களானால், எந்தச் செலவையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றத் தயாராக இருக்கும் என்று பலதடவை எடுத்துச் சொன்னார்கள். 'இன்பர்மேஷன் ப்யூரோ ஒன்றை ஏற்படுத்துவேன்' என்று அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த சட்டசபையில் சொன்னார்கள். ஆனால், காலதாமதம் ஆகிறது. ரயில்வே பாஸ் வழங்குவது குறித்தும் எல்லாக் கட்சியிலிருந்தும் வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள் எல்லோரும் வலியுறுத்திய அந்தக் கருத்துக்குப் பதில் சொல்லாமல் விட்டு விட்டார்கள். அதற்கான பதிலை, எல்லோரும் ஒருமித்துக் கூறியதற்கான பதிலை நான் எதிர்பார்க்கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** இன்பர்மேஷன் ப்யூரோ இப்பொழுதே ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால அதை விரிவுபடுத்துவதற்குத் தயாராயிருக்கிறோம்.

கனம் அங்கத்தினர்களுக்கு ரயில்வே பாஸ் வழங்குவது பற்றி, அந்தக் கூட்டத்தில் பேசும்போது அப்போதே நான் பதில் சொன்னேன். ஆகையால், இப்பொழுது சொல்லவேண்டியது அவசியம் இல்லை என்று விட்டு விட்டேன். ஏனென்றால் அது எல்லோரும் அறிந்திருப்பது.

முன்பு இந்தப் பிரச்னை வந்தபோது, அது மந்திரிசபை முன்னால் வைக்கப்பட்டு, ' இது அவசியம் இல்லை ' என்று மந்திரிசபையில் முடிவு செய்திருக்கிறார்கள், அந்த முடிவை மாற்ற வேண்டுமானால், அந்தச் சபை முன்பு வைத்துதான் மாற்றவேண்டும். ஆகையால், இதைப் பரிசிலனை செய்து, மறுபடியும் மந்திரி சபை முன்னால் வைத்து, அதில் ஏற்படும் தீர்ப்பை கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்கலாம். பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் சொல்லியிருக்கும்போது, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டியது அவசியமில்லை என்ற காரணத்திலேயே அதைப் பற்றி இங்கே பதில் சொல்லவில்லையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஆனால் ரயில்வே பாஸைப் பொறுத்த வரையில் இதிலே நாம் செய்ய வேண்டிய முடிவு மட்டும் அல்ல, மத்திய அரசாங்கத்தையும் ரயில்வே நிர்வாகத்தையும் கேட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடாக இருப்பதால் நாம் அதற்குத் தயாராய் இருந்தாலும்கூட, எந்த அளவு அந்த வசதி அங்கே கிடைக்கும் என்பதைப் பரிசிலனை செய்து, அவர்களுடைய ஒப்புதலையும் பெற்றுதான் இந்தக் காரியம் செய்யவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாம் முடிவு எடுத்தவுடனேயே எல்லோருக்கும் பாஸ் வழங்கி, அந்தப் பாஸைக் காண்பித்து விட்டு ரயிலிலே பிரயாணம் செய்ய வேண்டுமென்று சொன்னால், அது நாம் செய்யக்கூடியதல்ல. ரயில்வே நிர்வாகத்தையும் கலந்தாலோசித்துத்தான் செய்யவேண்டியதாக இருக்கிறது.

இது நம்முடைய ராஜ்யத்தில் மட்டும் கைவிடப்படவில்லை. எல்லா ராஜ்யங்களும் இந்தப் பிரச்னைப்பற்றி யோசித்து, நடைமுறையில் சாத்தியம் இல்லை என்று எல்லா ராஜ்யங்களிலும் கைவிடப்பட்டிருக்கிறது. நாமும் அந்த முறையில்தான் கைவிட்டிருக்கிறோம். மறுபடியும் கனம் அங்கத்தினர்கள் இதை மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று சொல்வதால் மறு பரிசீலனை செய்கிறோம். மறுபடியும் மந்திரி சபையின் முன்னால் கொண்டு வந்து, மறுபடியும் வேண்டுமானால் ரயில்வே நிர்வாகத்திற்கும் எழுதி இதில் ஏதாவது செய்யமுடியுமா என்று யோசித்துப் பார்த்து முடிவு செய்கின்ற முறையில்தான் அதற்குப் பதில் சொல்லாமல் விட்டுவிட்டேனே தவிர அதை அலட்சியம் செய்யவேண்டுமென்ற மனப்பான்மையினால் அல்ல. அதிலே என்னுடைய கருத்தை இதற்கு முன்பும் தெரிவித்து இருக்கிறேன்.



7th April 1958]

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர்கள் ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்கள் வெட்டுப் பிரேரேபணையை வற்புறுத்துகிறாரா ?

**Sri M. KALYANASUNDARAM :** I am not pressing my cut motion, Sir.

The cut motion was, by leave, withdrawn.

**Mr. SPEAKER :** கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த 10-வது மான்யக் கோரிக்கை—ஸ்டேட் லெஜிஸ்லேசர்-யை ஆதரிக்கிறவர்கள் ' ஆம் ' என்று சொல்லுங்கள். எதிர்க்கிறவர்கள் ' இல்லை ' என்று சொல்லுங்கள்.

' ஆம் ' என்று சொன்னவர்களுக்கு வெற்றி. அரசாங்கத்திற்கு இந்தப் பணம் வழங்கப்படும்.

இந்தச் சபையை நாளை காலை 8-30 மணி வரை ஒத்திவைக்கிறேன்.

The House then adjourned.

## APPENDIX I.

[Vide answer to starred question No. 568 asked by Sri K. B. S. Mani on behalf of Sri P. G. Manickam) at the meeting of the Legislative Assembly held on 7th April 1958, page 276 supra.]

*Statement showing the number of persons in each district who have committed offences in contravention of the Madras Prohibition Act and the nature of such offences in 1957.*

| District. | Smuggling of liquor from other States. | Smuggling of liquor from district to district. | Illicit distillation. | Possession of illicit distilled spirits. | Sale of illicit distilled spirits. | Tapping of trees for fermented toddy. | Permitting sweet toddy to ferment. | Tapping of trees for sweet toddy without licences. | Illicit transport of liquor. | Unlicensed sale of liquor. | Unlicensed possession of liquor. | Unlicensed possession of intoxicating drugs. | Cultivation of hemp plants. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| Chingleput .. .. .. | .. | .. | 3,761 | 4,050 | 5 | 452 | 30 | .. | 1 | 11 | 377 | .. | 2 |
| South Arcot .. .. .. | 175 | .. | 835 | 2,011 | 6 | 98 | 62 | 29 | .. | .. | 101 | .. | .. |
| Tanjore .. .. .. | 51 | .. | 2,151 | 2,476 | .. | 119 | 56 | 148 | .. | 10 | 1,081 | .. | 1 |
| Tiruchirappalli .. .. | .. | .. | 939 | 1,976 | 10 | 113 | 6 | 60 | .. | .. | 44 | .. | 3 |
| Madurai (North) .. .. | .. | .. | 1,044 | 1,584 | .. | 16 | .. | 54 | .. | .. | 5 | .. | .. |
| Madurai (Urban) .. .. | .. | .. | 437 | 1,364 | .. | .. | .. | 159 | .. | .. | 21 | .. | .. |
| Ramanathapuram .. .. | 3 | .. | 287 | 1,113 | .. | 282 | 47 | 537 | .. | .. | 320 | .. | .. |
| Tirunelveli .. .. .. | .. | .. | 889 | 1,624 | 5 | 263 | 70 | 712 | .. | 19 | 822 | .. | .. |
| North Arcot .. .. .. | .. | .. | 3,805 | 3,839 | 9 | 290 | 24 | 38 | .. | 1 | 198 | .. | 4 |
| Salem .. .. .. | 7 | .. | 2,572 | 4,921 | 13 | 470 | 6 | 85 | .. | .. | 433 | .. | 3 |
| Coimbatore .. .. .. | 1 | .. | 2,608 | 4,175 | 11 | 868 | 8 | 494 | 4 | .. | 288 | .. | 4 |
| The Nilgiris .. .. .. | .. | .. | 434 | 644 | .. | .. | .. | .. | .. | .. | 95 | .. | 2 |
| Government Railway Police, Tiruchirappalli. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 799 | .. | .. | .. | .. |
| Madras City .. .. .. | .. | .. | 1,456 | 6,000 | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |



| District. | Smuggling of drugs from district to district. | Smuggling of drugs from other States. | Illicit transport of drugs. | Unlicensed sale of drugs. | Unlicensed possession of drugs. | Miscellaneous. | Rendering denatured spirit potable. | Smuggling of opium. | Transport of opium. | Possession of opium. | Sale of opium. | Offences under Dangerous Drugs Act. | Total. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) |
| Chingleput .. .. .. | .. | .. | .. | .. | 15 | 4,504 | 47 | .. | .. | 7 | 5 | .. | 13,267 |
| South Arcot .. .. .. | .. | .. | .. | .. | 21 | 5,544 | 3 | .. | .. | 7 | .. | 2 | 8,894 |
| Tanjore .. .. .. | .. | .. | .. | .. | 17 | 2,665 | 1 | .. | .. | 32 | .. | 8 | 8,815 |
| Tiruchirappalli .. .. | .. | .. | .. | .. | 65 | 5,668 | 1 | .. | .. | 60 | .. | .. | 8,945 |
| Madurai (North) .. .. | .. | .. | .. | .. | 714 | 1,515 | .. | .. | .. | 15 | .. | 3 | 4,950 |
| Madurai (Urban) .. .. | .. | .. | .. | 78 | 589 | 1,551 | .. | .. | .. | 28 | .. | 23 | 4,250 |
| Ramanathapuram .. .. | .. | .. | .. | .. | 264 | 658 | .. | .. | .. | 16 | .. | .. | 3,527 |
| Tirunelveli .. .. .. | .. | .. | .. | .. | 101 | 3,710 | .. | .. | .. | 45 | .. | 14 | 8,274 |
| North Arcot .. .. .. | .. | .. | .. | .. | 59 | 9,513 | 34 | .. | .. | 8 | .. | .. | 17,822 |
| Salem .. .. .. | .. | .. | .. | .. | 116 | 13,205 | .. | .. | .. | 16 | .. | .. | 21,847 |
| Coimbatore .. .. .. | .. | .. | .. | .. | 107 | 8,952 | 8 | .. | .. | 38 | .. | 108 | 17,674 |
| The Nilgiris .. .. .. | .. | 1 | .. | .. | 3 | 1,018 | 34 | .. | .. | .. | .. | .. | 2,231 |
| Government Railway Police, Tiruchirappalli. | .. | .. | .. | .. | .. | 1,956 | .. | .. | .. | .. | .. | .. | 2,755 |
| Madras City .. .. .. | .. | .. | .. | .. | .. | 9,000 | .. | .. | .. | .. | .. | .. | 16,456 |

[7th April 1958

## APPENDIX II.

[Vide answer to starred question No. 569 asked by Sri A. Vedarathnam (on behalf of Sri P. G. Manickam) at the meeting of the Legislative Assembly held on 7th April 1958, page 276 supra.]

*Statement showing the number of persons given liquor permits in 1956–57.*

| Name of district. | *Number of persons given liquor permits in 1956.* | | | | |
|---|---|---|---|---|---|
| | *Indian (annual permits on health grounds).* | *Visitors (on grounds of health).* | *Officials, seamen, etc., of merchant Navy.* | *Military officials.* | *Non-Indians.* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| Coimbatore .. .. | 11 | .. | .. | .. | 24 |
| Nilgiris .. .. | 14 | .. | .. | 100 | 10 |
| Madurai .. .. .. | 7 | .. | .. | .. | 18 |
| Salem .. .. .. | 3 | .. | .. | .. | 3 |
| Tiruchirappalli .. .. | 2 | .. | .. | .. | .. |
| Tanjore .. .. .. | .. | .. | .. | .. | .. |
| Ramanathapuram .. | 1 | .. | .. | .. | 1 |
| Chingleput .. | 1 | .. | .. | 6 | .. |
| South Arcot .. .. | .. | .. | .. | .. | 4 |
| Tirunelveli .. .. | 3 | .. | .. | .. | 5 |
| North Arcot .. .. | 2 | .. | .. | .. | 1 |
| Madras .. .. | 71 | 2,047 | 11,437 | 24 | 438 |
| Total .. | 118 | 2,047 | 11,437 | 130 | 504 |

| Name of district. | *Number of persons given liquor permits in 1957.* | | | | |
|---|---|---|---|---|---|
| | *Indian (annual permits on health grounds).* | *Vistors (on grounds of health).* | *Officials, seamen, etc., of merchant Navy.* | *Military officials.* | *Non-Indians.* |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| Coimbatore .. .. | 7 | .. | .. | .. | 4 |
| Nilgiris .. .. | 13 | .. | .. | 74 | 16 |
| Madurai .. .. | 3 | .. | .. | .. | 9 |
| Salem .. .. | 3 | .. | .. | .. | 5 |
| Tiruchirappalli .. .. | 2 | .. | .. | .. | 2 |
| Tanjore .. .. | 1 | .. | .. | .. | .. |
| Ramanathapuram .. | 4 | .. | .. | .. | .. |
| Chingleput .. .. | .. | .. | .. | 18 | 2 |
| South Arcot .. .. | 3 | .. | .. | .. | .. |
| Tirunelveli .. .. | 3 | .. | .. | .. | 2 |
| North Arcot .. .. | 3 | .. | .. | .. | .. |
| Madras .. .. .. | 139 | 2,525 | 14,434 | 30 | 405 |
| Total .. | 178 | 2,525 | 14,434 | 122 | 445 |



7th April 1958]

## APPENDIX III.

[Vide answer to starred question No. 585 asked by Sri T. S. Ramaswamy Pillai at the meeting of the Legislative Assembly held on 7th April 1958, page 281 supra.]

*Statement showing the particulars of murder cases during the five-years* 1953–57.

| District. | Number registered. | Number which ended in conviction. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **1953** | | |
| Chingleput .. .. .. .. | 32 | 8 |
| South Arcot .. .. .. .. | 42 | 15 |
| Tanjore .. .. .. .. .. | 71 | 30 |
| Tiruchirappalli .. .. .. .. | 83 | 22 |
| Madurai North .. .. .. .. | 73 | 24 |
| Madurai Urban .. .. .. .. | 29 | 5 |
| Ramanathapuram .. .. | 60 | 16 |
| Tirunelveli .. .. .. .. | 143 | 45 |
| Kanyakumari .. .. .. .. | 11 | 2 |
| North Arcot .. .. .. .. | 44 | 17 |
| Salem .. .. .. .. | 150 | 63 |
| Coimbatore .. .. .. .. | 149 | 67 |
| Nilgiris .. .. .. .. .. | 9 | 3 |
| Railway Police, Tiruchirappalli .. | .. | .. |
| Madras City .. .. .. .. | 16 | 11 |
| Total .. | 912 | 328 |
| **1954** | | |
| Chingleput.. .. .. .. .. | 27 | 7 |
| South Arcot .. .. .. .. | 53 | 23 |
| Tanjore .. .. .. .. .. | 50 | 27 |
| Tiruchirappalli .. .. .. .. | 64 | 22 |
| Madurai North .. .. .. .. | 63 | 14 |
| Madurai Urban .. .. .. .. | 36 | 13 |
| Ramanathapuram .. .. | 50 | 18 |
THE HON. SRI R. VENKATARAMAN ; (a), (b) & (c) A statement[a] showing the names of the industrial schemes so far sanctioned and implemented during 1957–58, their location and the amount sanctioned for each and the names of the schemes proposed to be started during 1958–59 in the Coimbatore district, is placed on the table of the House.

SRI P. G. MANICKAM : நமது சர்க்காரானது கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு அநேக நல்ல திட்டங்களைப் போட்டு இருப்பதாக இந்த அறிக்கையில் தெரியவருகிறது. இதைக் கணிப்பதற்கு உத்தியோகப் பற்றற்ற ஒரு ஆலோசனைக் கமிட்டியை நியமனம் செய்வதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இது கேள்வி அல்ல. ஆலோசனை.

*Supply of Electricity*

* 635 Q.—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the action taken on the representation of the Panchayat Board of Mettupalayam village in Gobichettipalayam taluk, Coimbatore district, to the Chief Operation Engineer (South), Madras, on 31st December 1956, for the supply of electricity to Mettupalayam village; and

(b) the reason for the delay in arranging for the supply?

THE HON. SRI V. RAMIAH : (a) A representation, dated 29th November 1956 (and not 31st December 1956) was received from the Executive Officer of the Mettupalayam Panchayat Board, who was informed by the Chief Operation Engineer (South), that a scheme for the supply of electricity to the village had been sent to the Government for sanction.

(b) In view of the orders of Government, since issued, prohibiting installation of oil or electric-driven pumpsets in wells in the Lower Bhavani Project area, the original scheme for supply of electricity to the village evolved in December 1956 had to be revised. A revised remunerative scheme has since been evolved and it is hoped that electricity will be extended to the area expeditiously.

a Printed as Appendix on pages 471-472 infra.

[8th April 1958

* 636 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the action taken on the petitions of the villagers of Kavandapady and the resolution passed by the Panchayat Board of Kavandapady, Bhavani taluk, Coimbatore district for the supply of electricity; and

(*b*) the reason for the delay in arranging for the supply?

The Hon. Sri V. RAMIAH : (*a*) Does not arise as no representations have been received so far either from the villagers or from the Panchayat Board of Kavandapady for the supply of electricity to the area.

(*b*) In view of the orders of Government since issued, prohibiting the installation of oil or electric driven pumpsets in wells in the Lower Bhavani Project ayacut area, a scheme sanctioned in October 1956, for the supply of electricity to Kavandapady could not be executed so far. A revised remunerative scheme has since been evolved excluding the wells which fall within the prohibited zone of the Lower Bhavani Project Ayacut, and supply of electricity to the area will be extended as expeditiously as possible.

* 637 *Q.*—Sri P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the names of villages proposed to be electrified during 1957–58 in Bhavani taluk, Coimbatore district; and

(*b*) the amount provided therefor?

The Hon. Sri V. RAMIAH: (*a*) & (*b*) The following villages have already been electrified during the current year 1957–58 at an estimated cost of Rs. 4,24,100 namely :—

1. Vengahal Mettur.
2. Villamarthur.
3. Aymarthukkottahai.
4. Gettisamudram.
5. Puliampatti.
6. Rahankulam.
7. Kattur.
8. Koochikallur.
9. Kalingarayanpalayam.

The following villages are proposed to be electrified shortly at an estimated cost of Rs. 8,13,980, namely :—

1. Ennamangalam.
2. Kavandapady.
3. Poochampalayam.
4. Odthamai.
5. Sangarapalayam.



8th April 1958]

Sri P. G. MANICKAM: இந்த திட்டங்கள் எல்லாம் நடைமுறை வருஷத்திலேயே நிறைவேற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMIAH : இப்பொழுது நிறைவேற்றப்பட்டு இருக்கும் திட்டங்களையும், நிறைவேற்றுவதற்கு தாயராக இருக்கும் திட்டங்களையும் சொன்னேன்.

Sri G. G. GURUMURTHI : சாங்கிஷன் ஆன திட்டங்களில் மேட்டுப் பாளையமும் சேர்த்துக் கொள்ளப்படுமா?

The Hon. Sri V. RAMIAH : மேட்டுப்பாளையம், ஸ்கீம் சாங்ஷன் செய்யும் கட்டத்தில் இருக்கிறது என்று நான் சொல்லியிருக்கிறேன்.

* 638 *Q.*—Sri P. S. CHINNADURAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have any proposal to exempt the agriculturists who have signed an agreement for electric installation but have not been able to utilize electricity for irrigation purposes due to scarcity of water, from the payment of electric charges?

The Hon. Sri V. RAMIAH : Under the present rules, sufficient concessions already exist for the grant of exemption from the payment of electric charges for proved scarcity of water for pumping. The need for issue of any new order in this regard does not therefore arise.

Sri S. M. ANNAMALAI : 1957–58 வருஷம் சுமார் 14,000 சர்வீஸ் கனெக்ஷன்கள் கொடுத்திருந்தபோதிலும், மோட்டார் கிடைக்காத காரணத்தினால் சர்வீஸ் வாங்கிக் கொள்ள முடிவதில்லை. அப்படிப்பட்ட சர்வீஸ்களுக்கு கட்டணம் வசூல் செய்யாமல் இருப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri V. RAMIAH : குறிப்பிட்ட காலத்திற்குள் மோட்டார் வாங்குவதில் உண்மையிலேயே சிரமம் இருக்குமானால், அவைகளை பரிசீலனை செய்து, உதவி செய்யப்படும்.

* 639 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there has been any cut in the supply of electric power recently in the Tiruchirappalli district;

(*b*) whether such power cut applies to industrial consumers; and

(*c*) the step taken by the Government to give a constant and regular supply?

The Hon. Sri V. RAMIAH : (*a*) & (*b*) Yes, Sir.

(*c*) Cuts in the supply of power have to be imposed whenever the water position in the hydel reservoirs deteriorates resulting in a reduction in the power-supply available for distribution. It is expected that the generation in our power systems will more or less catch up with the demand when all the power schemes included in the Second Five-Year Plan are completed and commissioned in a few years' time. It may then be expected that constant and regular supplies will be available.

[8th April 1958

**Sri S. LAZAR** : சார், சமீபத்தில் 25 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று 'கட்' போடப்பட்டிருக்கிறது. நிரந்தரமான ஒரு நிலைமை இன்னும் குறைந்த பட்சம் எவ்வளவு நாட்களில் ஏற்படும்.

**The Hon. Sri V. RAMIAH** : நிரந்தரமான நிலைமை இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவுக்குள் ஏற்பட்டு விடும். இன்னும் சில மாதங்களில் இப்போது இருக்கக்கூடிய கஷ்டம் போய்விடும் என்பதுதான் என்னுடைய நம்பிக்கை.

* 640 Q.—Sri A. VEDARATHNAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the basis on which power-cut has been imposed this year; and

(b) how long the cut will be continued?

**The Hon. Sri M. A. MANICKAVELU** (on behalf of the Hon. Sri V. Ramiah) : (a) The power-cut imposed is based on the demand for power in the Hydro-areas in relation to the quantum of power generated in the Hydro-electric power stations in the State, which in turn is dependent on the water storages available in the Hydel Reservoirs.

(b) Till about the end of June 1958, when with the onset of the South-west monsoon, the storages in the Hydel Reservoirs in the State, may normally be expected to be augmented.

**Sri A. VEDARATHNAM** : நதி உற்பத்தி ஸ்தானங்களில் இந்த வருஷம் அதிக மழை பெய்திருந்தும், 'பவர் கட்' ஏன் வரவேண்டும்? பவர் உற்பத்தியை அதிகரிக்காமல் வினியோகத்தை அதிகரித்துக் கொண்டு போவதற்குக் காரணம் என்ன?

**The Hon. Sri V. RAMIAH** : மின்சார திட்ட பகுதிகளில் உள்ள அத்தனை தேக்கங்களிலும் போதுமான மழை இல்லை. முக்கியமாக பைகாரா பகுதியில் அதிக மழை இல்லாத காரணத்தினால் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. மின்சார வினியோகத்தை அதிகப்படுத்திக் கொண்டு போவதினால் அதிகமான பாதகம் ஏற்படாது என்பது நம்முடைய நம்பிக்கை. திட்டங்கள் எல்லாம் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன. ஆகையால் இந்த நெருக்கடி தீர்ந்து விடும்.

**Sri K. VINAYAKAM** : Sir, when we are not in a position to maintain the existing services by giving cent per cent of their energy wanted in the concerns, what useful and utilitarian purpose will be served by electrifying more villages which will be also subsequently starved due to these cuts?

**The Hon. Sri V. RAMIAH** : Sir, my hon. collegue remarked that villages are starved. The villages are not starved. Neither are those who consume electricity are starved. We are going with an expansion scheme—both on the expansion of the available electricity and on the generation of electric power. We expected our Periyar scheme to come in time, to meet the expanded development of power. But due to some defects, it was held up for a few months. But, if there is any strain, it is due to that and that will be over in course of time.



8th April 1958]

**Sri S. PAKKIRISAMI PILLAI** : மழைத் தண்ணீர் வராத காரணத்தினால் 'ஹைட்ரோ பவர் ஸ்டேஷன் ஏரியா'க்களில் கட்டுப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். 'தெர்மல் பவர் ஸ்டேஷன்களில்' இம்மாதிரி கட்டுப்பாடு இருக்கவேண்டிய காரணம் என்ன? 'ஸ்டாக்கரிங் பீரியட்ஸ்' என்று போடுவதற்கு காரணம் என்னவென்று சொல்லமுடியுமா?

**The Hon. Sri V. RAMIAH** : 'தெர்மல் ஸ்டேஷன்களில்' இப்போது கட்டுப்பாடு இல்லை. ஆனால் 'ஸ்டாக்கரிங்' முறை தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கிறது. பேஸின் பிரிட்ஜ் பவர் ஸ்டேஷனில் இன்னும் சில வாரங்களில் அதிகப்படியான மின்சாரம் உற்பத்தியாகும். அப்போது இந்த 'ஸ்டாக்கரிங்' முறையை திருத்தி அமைப்பதற்கு யோசனை செய்யப்படும்.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : குடிசைத் தொழிலாக இருக்கும் 'பவர் லூம்ஸ்களுக்கு' இதிலிருந்து விதி விலக்கு அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**The Hon. Sri V. RAMAIAH** : அதற்கு தனி கேள்வி வேண்டும்.

*Sreepadam lands*

* 641 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have received any communication from the Kerala State regarding the introduction of legislation conferring permanent rights on tenants of Sreepadam lands transferred to this State after States Reorganization making them pay land revenue only; and

(b) if so, the steps taken by the Government thereon?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : (a) Yes, Sir.

(b) The Government have consulted the Board of Revenue and the Board's reply is awaited.

**Sri N. K. PALANISAMI** : என்ன காரணத்தினால் இம்மாதிரி தாமதம் ஏற்படுகிறது என்று கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : இதில் தாமதம் ஒன்றும் ஆகவில்லை. இந்த விஷயம் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

**Sri S. LAZAR** : ஸ்ரீ பாத நிலங்கள் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**Mr. SPEAKER** : The hon. Member may put a separate question.

**Sri T. T. DANIEL** : Sir, in view of the fact that these Sripadam lands belong to the ex-Rajapramuk of the erstwhile Travancore-Cochin State, may I know from the Hon. Minister whether his opinion has been got by the Kerala Government as to whether he is prepared to surrender all these Sripadam lands in favour of the cultivators?

**The Hon. Sri M. A. MANICKAVELU** : Sir, the hon. Member has given the meaning of the word ' Sripadam ".

As regards the other question, I want notice.

[8th April 1958

*Kerosene*

* 642 Q.—SRI A. VEDARATHNAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have investigated the reported occurrence of kerosene in the Coromandal coast; and

(b) whether any investigations have been undertaken by the Government on the occurrence of kerosene in Mayuram while digging a bore well?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The possibilities of occurrence of oil in these areas are under examination by the Geological Survey of India.

(b) No information is available on the occurrence of kerosene in Mayuram, Tanjore district. However, the occurrence of natural gas in certain villages in Sirkali taluk, Tanjore district, has been reported and Government have sanctioned a scheme for the collection of the natural gas and for examining the possibilities of putting them to various industrial uses. Preliminary work relating to this has been taken up.

**SRI A. VEDARATHNAM:** இந்த ஆராய்ச்சியை இந்திய சர்க்கார் செய்வதாக மந்திரியவர்கள் குறிப்பிட்டார்கள். நம்முடைய இராஜ்யத்தில் பூகர்ப்ப ஆராய்ச்சி ஸ்தாபனங்கள் உண்டா? அதிகாரிகள் இருக்கிறார்களா? இல்லையானால், எங்கெல்லாம் நிலக்கரி கிடைக்கிறதோ, அங்கே கெரோஸின், பெட்ரோல் கிடைக்கிறது என்பதால், அந்தப் பகுதிகளை ஆராய முன்வருவார்களா?

**THE HON. SRI R. VENKATARAMAN:** இந்த ஸர்வே மத்திய சர்க்காரால் நடத்தப்படுகிறது. கனிப் பொருள்களை ஆராய்ச்சி செய்ய நம் இராஜ்யத்திலும் தனியாக ஆராய்ச்சி நிலயமும், ஏற்படுத்தி இருக்கிறோம். இந்த ஸர்வே மத்திய சர்க்கார் செய்வதற்குக் காரணம், அவர்களுக்குத்தான் ஸர்வே செய்யக்கூடிய எல்லா விதமான பெஸிலிட்டிஸ்களும் இருக்கின்றன.

**SRI N. R. THIAGARAJAN:** இராமநாதபுரம், சாத்தூர் வைப்பாரு பாலம் கட்டும்போது, அஸ்திவாரத்தில் எண்ணெ கிடைப்பதாகச் சொல்லப்பட்டது. எண்ணெ கிடைக்கிறதா? ஆராய்ச்சி நடந்ததா?

THE HON. SRI R. VENKATARAMAN: I would very much like to strike oil but it seems to me very difficult.

SRI A. A. RASHEED: What are the places in our State where oil is found?

THE HON. SRI R. VENKATARAMAN: Oil is not found in any place in our State. But certain experts who visited this country said there were possibilities of oil being found on the coastal belt from West Bengal down to Cape Comorin. They also said that aero-magnetic survey may be conducted in this area and the possibility is of finding oil under the sea and not very much on the surface.

**SRI C. MUTHIAH PILLAI:** ஒரு பம்பாய் நிபுணர் சீர்காழி தாலுக்காவில் ஆராய்ச்சி செய்வது பிரயோசனமானது என்று சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் கொடுத்திருக்கும் ரூ. 8,500 காணாது



8th April 1958]

என்றும் சொன்னார்கள். ஆறு மாத காலம் ஆயிற்று. இன்னும் ஆராய்ச்சி எடுத்துக்கொள்ளவில்லை. அதை ஏற்படுத்த முடியுமா? அதற்குள்ள சூழ் நிலையை ஏற்படுத்தி, பொருள்கள் கிடைத்தால், தொழிற்சாலை ஏற்படக்கூடிய நிலையை ஏற்படுத்துமா என்று திட்டவட்டமாக அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** சர்க்கார் ஒதுக்கியிருக்கும் பணம் போதாது என்பதை அங்கத்தினர் அவர்களிடம் சொன்னதை என்னிடத்தில் சொல்லியிருந்தால் முயற்சி செய்யலாம். ஆராய்ச்சி நடந்து கொண்டு இருக்கிறது. அதன் பலனாக, அங்கே கிடைக்கும் 'காஸ்', வாயு, இன்டஸ்டிரியல் யூஸ், தொழிற்சாலை உபயோகத்திற்கு பயன்படுமானால் சர்க்கார் எல்லா முயற்சிகளும் செய்யும்.

**SRI S. NAGARAJA MONIGAR:** கனம் பொருந்திய சர்தார் வேதரத்தினம் அவர்களுக்கு கூட மத்திய சர்க்கார் பேரில் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா என்று கேட்கிறேன்.

MR. SPEAKER: I rule the question out of order.

*Petroleum*

* 643 Q.—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether experts have made any investigation of the occurrence of petroleum in this State; and

(b) the details about the steps proposed to be taken by the Central and State Governments in the matter?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) Yes, Sir.

(b) The Geological Survey of India are conducting survey of the oil possibilities in this State as part of their programme of oil survey in India. This Government have asked for a high priority for investigation in this State.

**SRI K. VINAYAKAM:** தேர்தல் காலத்திலே, இங்கே இருக்கிற ஒரு எதிர் கட்சிக்காரர்கள் காவேரித் தண்ணீர்ல் எண்ணெய் இருக்கிறது, எங்களை அனுப்பினால் துருவி ஆராய்ந்து எண்ணெய் தருவோம் என்றார்களே, அதை ஆராய்ந்து பார்த்தார்களா ? காவேரித் தண்ணீரில எண்ணெய் இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார்களா ?

MR. SPEAKER: The hon. Member may put a separate question.

**SRI P. G. MANICKAM:** பெட்ரோல் ஊற்றுகள் ஆங்காங்கே அகப்படலாம் என்ற யோசனையை நிபுணர்கள் தெரிவித்தார்களே, அதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு, நம் சர்க்கார் என்ன யோசனை தெரிவித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**THE HON. SRI R. VENKATARAMAN:** அந்த எண்ணெய் வங்காளத்திலிருந்து, கன்யாகுமரி வரை இருக்கும் பிரதேசங்களில் அகப்படலாம் என்ற யோசனை சொல்லப்படுகிறது. புதிதாக ஸர்வே நடத்த வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

[8th April 1958

Continuation of the gravity and magnetic surveys of the sedimentary areas in the Tiruchirappalli district and the eastern belt of Madras State. Reconnaissance, reflection, seismic traverse along the coastal belt in the South Arcot and Tiruchirappalli districts.

MR. SPEAKER : Questions are over.

[*Note*.—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* FIRE ACCIDENT AT GURUSWAMY GRAMANI GARDEN, SEMBIAM.

9-25 a.m. **MR. SPEAKER** : ஸ்ரீமதி சத்தியவாணிமுத்து 40-வது ரூல் பிரகாரம் உள்நாட்டு மந்திரியின் கவனத்துக்கு ஒரு முக்கிய விஷயத்தைக் கொண்டுவரப்போகிறார்கள். கனம் அங்கத்தினர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பேசலாம். சுருக்கமாக முடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

9.25 **DR. SRIMATHI SATHIYAVANIMUTHU** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த குருசாமி கிராமணித் தோட்டத்தில் 3–4–1958 பிற்பகல் திடீரென்று பல வீடுகள் தீப்பற்றி எரிந்தன. வழக்கம் போல, தீ அணைக்கும் படையினர் வரும் முன்னறே, ஊர் பொதுமக்களும், தொழிலாளர்களும் சேர்ந்து தீயினை அணைத்திருக்கிறார்கள். இதிலே பாதிக்கப்பட்டவர்கள், ஒரு குடும்பத்தைத் தவிர, ஏனையோர்கள் முஸ்லிம் சமுதாயத்தைச் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் அங்கும் இங்கும் இடமில்லாமல் தத்தளிக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிலும் தீயைத் தடுத்து சொத்துக்களை எடுக்க முயற்சித்தும், எதனையும் எடுக்க முடியாத காரணத்தால், நடுத் தெருவில் விடப்பட்டு தவிக்கிறார்கள்.

தீ பற்றிய செய்தி கிடைத்தவுடன், அமைச்சர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் செய்தியைக் குறித்து, தெரிவித்தும் காலத்தில் வேண்டிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிகிறது. குறிப்பாக ரூ. 100 முதல் ரூ. 4,000 வரை ஒவ்வொருவரும் சொத்து நாசம் அடைந்திருக்கிறார்கள். சர்க்கார் மாமூல் முறையிலே, தாமதப்படுத்தி, மூன்று மாதம், ஆறு மாதம் கழித்து, 25 ரூபாயை கொடுக்காமல், விரைவில் அதற்குண்டான ஏற்பாடு செய்யவேண்டும். தெரிந்தவரை, குடும்பங்கள் வசதியான நிலையில் இருந்தவர்களாகவே தெரிகிறது. ஒரு வீட்டில் நான் கண்டேன், உபயோகத்தில் இருந்த ரேடியோ பற்றி எரிந்து, வொயர்களை மட்டும் காண முடிந்தது. வசதியோடு இருந்தவர்கள் என்ற காரணத்தால், சற்று அதிகமான பொருள் உதவி செய்து குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டும் என்றும், தாமதமின்றி உதவியளிக்கவேண்டும் என்றும், இதுவரை சர்க்கார் ஏதாவது உதவி செய்திருந்தால் அதனைச் சொல்லுமாறும் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**THE HON. SRI M. BHAKTAVATSALAM** : கனம் சபாநாயகர் அவர்களே, குருசாமி கிராமணித் தோட்டத்தில் அல்ல, செம்பியம் தில்லைநாயகம் பிள்ளை தெருவில், ஏப்ரல் 3-ம் தேதி, பிற்பகல் 3-43 மணிக்கு, நெருப்பு விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்தது. உடனே எழும்பூர், வேப்பேரி, கீழ்பாக்கம், வண்ணாரப்பேட்டை இவ்விடங்களிலுள்ள தீயணைக்கும் படைகளை அனுப்பினார்கள். நெருப்பு மூன்று மணி நேரத்தில் அணைக்கப்பட்டது. தீ எதனால் ஏற்பட்டது என்பது தெரியவில்லை. இந்தத் தீயினால் இழக்கப்பட்ட குடிசைகள், வீடிழந்த குடும்பங்கள் எண்ணிக்கை இவைகள் தரப்பட்டிருக்கின்றன. அழிக்கப்பட்ட வீடுகள் 25, வீடுகளை இழந்த குடும்பங்கள் 32 ; மாடாவது, மனிதனாவது உயிரிழந்தது ஒன்றும் இல்லை. இந்தத் தீயினால் ஏற்பட்ட சேதம் ரூ. 4,300. நெருப்பணைக்கும் யூனிட்டுகள் வேலை செய்ததால் காப்பாற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ. 10,700.

ஏப்ரல் மாதம் 4-ம் தேதியன்று கலெக்டர், மேயர், மற்றும் நகரசபை அதிகாரிகள் எல்லோரும் அந்த இடத்திற்குச் சென்று, தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச உணவு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.



8th April 1958] [Sri M. Bhaktavatsalam]

நஷ்டம் அடைந்ததை பார்த்து அஸெஸ் பண்ணி, ஒரு குடும்பத்திற்கு ரூ. 30 வீதம் அளிப்பது என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நேற்றைக்கே பணம் கொடுக்கப்பட்டிருக்கும். தீ அணைப்பில் தீ அணைக்கும் யூனிட்டுகள் உடனடியாக வேலை செய்திருக்கிறது. இதில் தீ அணைக்கும் படையினர் இடையிலோ, சாதனங்களிலோ தவறுதல் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## III.—ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER.

### (1) GOVERNOR'S MESSAGE RECOMMENDING THE INERODUCTION OF THE MADRAS PLANTATIONS AGRIZULTURAL INZOME-T3X (AMENDMENT) BILL, 1958.

MR. SPEAKER : I have to announce to the House that I have received a message, dated 7th April 1958, from the Governor of Madras giving his recommendation under Article 202, Clauses (1) and (3) read with Article 199, Clause (1), sub-clauses (a) and (g) of the Constitution of India to the introduction in the Madras Legislative Assembly of the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958.

## IV—PRESENTATION OF THE SECOND REPORT (SECOND ASSEMBLY) OF THE COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

SRI R. SRINIVASA IYER : Mr. Speaker, Sir, I, the Chairman of the Committee on Subordinate Legislation, present this, the second Report of the Committee, appended herewith, to this Honourable House.

## V—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1958.

MR. SPEAKER : Though according to the Agenda, the Plantations Agricultural Income-tax (Amendment Bill) 1955, should be introduced in the afternoon, may I suggest that the Hon. Minister concerned may introduce it now so that copies of it can be taken and circulated to hon. Members.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under Rule 21 (3) of the Assembly Rules, I move—

'That Item IV, viz., Government Bills—2. The Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958, be taken up now.'

MR. SPEAKER : The question is—

'That Item IV, viz., Government Bills—2. The Madras Plantations Agricultural Income-Tax (Amendment) Bill, 1958, be taken up now.'

The Motion was put and carried and the Bill was taken up.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Plantations Agricultural Inucome-Tax (Amendment) Bill[a], 1958.

[a] **Published in *Fort St. George Gazette*, dated 8th April 1958.**

[8th April 1958

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Plantations Agricultural Income Tax (Amendment) Bill, 1958.'

The Motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## VI—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—*cont.*

### DEMAND XV—EDUCATION.

MR. SPEAKER : We have got four hours for Education Demand in the morning and we shall discuss it till 1-30 p.m. and from 3 p.m. to 5 p.m. we shall discuss the next Demand. At 5 p.m. I will apply the guillotine. Now the Hon. Minister for Education will move his Demand.

* THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,34,26,500 under Demand XV—Education.'

இந்த மானியத்தை சபையின் முன் சமர்ப்பிக்கும் முறையில் நான் முறையாக ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இலாகாவிலிருந்து இந்த மானியத்தின் பேரில் விவாதிக்க வேண்டிய புள்ளிவிவரங்களை ஒரு அறிக்கையின் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் பல முக்கியமான புள்ளி விவரங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் முக்கியமாக இந்த விவாதத்தில் நாம் கவனிக்க வேண்டிய இரண்டு விஷயங்களில் (1) கல்வி வசதியை விஸ்தரிப்பது, (2) அந்தக் கல்வி நல்லதரமுள்ள கல்வியாக உயர்த்துவது. இந்த இரண்டையும் நாம் மனதில் வைத்துக்கொண்டுதான் இந்த மானியத்தை விவாதிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த அடிப்படையில் கனம் அங்கத்தினர்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகளைக் கேட்டு கடைசியில் அதற்கு பதில் சொல்லக்கூடிய முறையில். இன்னும் நான் சொல்ல வேண்டிய சில கருத்துக்களையும் பின்னல் நான் பதில் சொல்லும் போது சொல்ல விரும்புகிறேன். ஆகவே இந்த மானியத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,34,26,500 under Demand XV—Education.'

I understand that the Opposition Parties have agreed to support the Cut Motion standing in the name of Sri K. Anbazhagan. Now Sri Anbazhagan will move his cut motion.

SRI K. ANBAZHAGAN : Sir, I mave the following cut motion standing in my name :—

'That the allotment of Rs. 12,34,26,500 under Demand XV—Education be reduced by Rs. 100.'



8th April 1958]

MR. SPEAKER : Cut Motion moved—

'That the allotment of Rs. 12,34,26,500 under Demand XV—Education be reduced by Rs. 100.'

How much time does the Hon. Minister want for his reply?

THE HON. SRI C. SUBRAMANIAM : 45 minutes.

MR. SPEAKER : Two leaders from the Opposition can speak for 15 minutes each. They and the Hon. Minister will take one and a quarter hours. The Chief Whip of the Congress Party has given me 12 names and it is physically impossible to call all the 12 names. At the same time this is an important Demand and I think it is unfair to limit the duration of a speech to less than 10 minutes. Therefore, I shall call as many hon. Members as possible.

SRI K. ANBAZHAGAN : சட்ட மன்ற தலைவர் அவர்களே. கல்வி மான்
யத்திற்கு வெட்டுத் திருத்தம் ஒன்றை இங்கே தருவதன் மூலமாக ஆசிரியர்
களுடைய குறைகள் பல்வேறு நிலையிலும் பல்வேறு வகைகளிலும் உள்ள
வைகளையும், பள்ளிக்கூடங்களில் உள்ள தன்மையையும் விளக்குவதற்கு
நான் இங்கே முன் நிற்கிறேன். உண்மையாகவே கல்வியானது மிகமிக
இன்றியமையாதது என்பதை இந்தக் காலத்தில் விளக்கத் தேவையில்லை.
ஆனால் ஜனநாயக பண்பாடு வளர்வதற்கும் ஒரு நாட்டின் மக்கள் நல்வாழ்வு
பெறுவதற்கும், அவர்கள் வாழ்க்கைத் துறையில் முன்னேற்றமடைவ
தற்கும், விஞ்ஞானக் கல்வியை பெரும்பாலான மக்கள் உள்ளபடியே உண
ர்ந்து பின் பற்றுவதற்கும் அடிப்படையான கல்வி, அதை தொடர்ந்து
உயர்தரக் கல்வி இந்நாட்டு மக்களுக்கு சிறந்த முறையில் அளிக்கப்
பட்டாகவேண்டும். சிறந்த முறையில அவர்களுக்கு கல்வி அளிக்கப்
பட்டாக வேண்டும். அப்படி அளிப்பதற்கு திட்டங்கள் உருவாகின வகை
யிலும் முறையான திட்டமுடனும் செயல்படுத்தப்பட்டாக வேண்டும்.
அந்த முறையில் சென்னை மாநிலம் பொறுத்தவரையில் ஓரளவு நல்ல
வகையிலேயே திட்டங்கள் ஏற்கனவே அமைந்து இருக்கின்றன பல்லாண்டு
காலமாக. இரட்டை ஆட்சி இந்நாட்டில் நடைபெற்ற காலத்திலிருந்து
மத்திய சர்க்காரிடத்தில் மட்டும் அதிகாரம் இல்லாமல் மாகாண சர்க்காருக்
கும் சில அதிகாரங்கள் கிடைத்து, அந்தக் காலம் தொட்டு கல்வித் துறை
யிலும் ஓரளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதை அரசாங்கத்தா
ரால் வெளியிடப்பட்டிருக்கிற கல்வி அறிக்கை ஒன்றில் பார்க்கிறோம்.
அதாவது "எஜுகேஷன் இன் மெட்ரஸ் ஸ்டேட்" என்ற தலைப்பின்
கீழ் வெளியிடப்பட்டிருக்கிற புஸ்தகத்தில் குறிப்பாக, தெளிவாக எடுத்து
காட்டப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் ஏதேனும் முற்போக்கு இருக்கு
மானால், கல்வித் துறையிலே ஓரளவு முன்னேறியிருக்கிறோம் என்று
அமைச்சர் அவர்களே சொல்லிக்கொள்ளகூடுமானால் அப்படிச் சொல்
வதற்கு காரணம் இந்த மாநிலத்தைப் பொறுத்தவரைக்கும் 1911-ம்
ஆண்டிலேயே ஒரு மாற்றத்தோடு அது தொடங்கி இருக்கிறது. அப்படித்
தொடங்கி இருக்கும் மாற்றம் இன்றைய தினம் சில வகையில் வளர்ந்து
இருக்கிறது. ஆனல் இன்றைக்கு இருக்கிற கல்வி வளர்ச்சியை ஓரளவு
குறிப்பிட்டு அதனாலேயே இன்றையதினம் நாம் முன்னேறி இருக்கிறோம்
என்று கனம் அமைச்சர் அவர்களே சொல்லிக்கொள்ளும் நேரத்தில்
இருக்கிற சில குறைகளைத் திரும்பிப் பார்க்க மறுத்து ஏதாவது சில நலன்
களைப் போற்றியிருப்பதை மட்டும் கண்டு பெருமைப்பட முயற்சிக்கிறார்.
இங்கு எவ்வளவு பணம் செலவழிக்கப்படுகிறது என்பதைச் சொல்லுகிற
நேரத்தில் ஏறத்தாழ 63 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டிருக்கிறோம். இப்படி
திட்டமிட்டிருக்கிற இந்தத் திட்டத்தில் 12 கோடி ரூபாய் ஏறத்தாழ கல்வித்
துறைக்கு செலவழிக்கிறோம். அது 20 சத விகிதமாக இருக்கிறது என்று
சொல்லப்படுகிறது. இப்படி 20 சதவிகிதம் செலவழிக்கப்படுவதானது அந்த
ஒரு ராஜ்யத்தினுடைய முற்போக்கான திட்டத்தினுடன் ஒப்புடையதாகும்.
ஆகவே ஒரு ராஜ்யத்தில் 20 சத விகிதம் கல்விக்காக செலவழிக்கிறோம்.

[Sri K. Anbazhagan] [8th April 1958

என்று அமைச்சர் குறிப்பிட்டு பெருமை கொள்கிறார். நானும் உண்மையாகவே 20 சத விகித குறிப்பாக கண்டு மகிழ்கிறேன். ஆனால் இந்தக் குறிப்பு இந்த ராஜ்யம் ஒரு தனி ராஜ்யமாக இருந்து அந்த நாட்டில் வசூலிக்கப்படுகிற எல்லா வரிகளும் வந்து அதைக் கணக்கிட்டால் அதில் 20 சதவிகிதம் கல்விக்குப் போகுமானால் அது பொருந்தும். இன்றைக்கு "நாம் 63 கோடி ரூபாய்க்கு திட்டமிடுகிறோம்" என்று சொன்னாலும் இங்கு வரி வசூலிக்கப்பட்டு, அதைக்கொண்டு செயல்படுகிறோம் என்று சொன்னாலும் இங்கே இருந்து மத்திய அரசாங்கத்திற்கு—நம்முடைய மாகாண சர்க்கார் மூலமாக அல்ல—தனிப்பட்ட வழியில் செல்லுகிற வரி மூலமாக ஏறத்தாழ 60 கோடி ரூபாய் பல்வேறு கணக்குகளால் தீர்மானிக்கப்படுகிறது. இதனைக் காட்டி இது வரையிலும் அறிவிக்கவில்லை. இப்படி அறிவிக்காவிட்டாலும் குறைந்த அளவு இந்தியாவின் மொத்த வருமானத்தை, கணக்கில் எடுத்துக்கொண்டால் சென்னை மாகாணத்தின் பங்காக ஒதுக்கக்கூடிய தொகை ஏறத்தாழ 45 கோடியிலிருந்து 65 கோடி வரையில் இருக்கும். இதைச் சேர்த்து கணக்கிட்டால் சென்னை மாகாண மக்கள் செலுத்துகிற வரி தொகை, திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கொடுக்கப்படும் தொகை முதலியவைகளைக் கணக்கிட்டால் கல்விக்காக செலவழிக்கப்படும் தொகை 20 சத விகிதம் ஆகாது என்பதை நான் கனம் நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நாட்டு மக்கள் செலுத்துகிற வரித்தொகையின் பேரில் அவர்களுக்கு கல்வித்துறையில் செலவிடப்படவில்லை.

மற்றொன்று இன்றைய தினம் ஏறத்தாழ ஒவ்வொரு மாணவனுக்கும் 30 ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது அதாவது ஒவ்வொரு மாணவனுடைய சராசரி கல்வித் திட்டத்திற்கு. ஆனால் சில நாட்களுக்கு முன்னால் 9 ரூபாய் செலவழிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படியும் ஒரு இடத்தில் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. அப்படி 9 ரூபாய் கல்விக்காக ஒரு மாணவனுக்கு என்று செலவழிக்கப்பட்ட காலத்திற்கும் இப்பொழுது இருக்கிற விலைவாசி நிலவரத்திற்கும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏறத்தாழ 45 ரூபாய் அளவிற்கு ஒரு மாணவனுக்கு செலவழித்தாக வேண்டும். ஐந்து மடங்கு விலைவாசி உயர்ந்திருக்கிற நேரத்தில் 45 ரூபாய் செலவழிப்பதற்கு பதிலாக 30 ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். இன்னும் அதிகமாக செலவழிக்கப்பட வேண்டும். அப்படி செலவழிக்கப்படுவதற்கு வேண்டிய வழியை கனம் அமைச்சர் அவர்கள் தேடவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

9-40 a.m. அடுத்து நான் சொல்லுவேன். கல்வித் திட்டத்திலுள்ள குறைகளைப் போக்கவேண்டுமானால், ஆசிரியர்களுடைய உள்ளக் குமுறலை நிச்சயமாக துடைத்தாக வேண்டும். ஆசிரியர்கள்தானே என்று அலட்சியம் செய்தோ ஆசிரியர்கள் அரசியல் கட்சி சார்பில் தங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுவதா என்று ஆத்திரத்தோடு கேட்டோ, ஆசிரியர்களுடைய குறைகளை எங்களால் முடிந்தபோதுதானே களையமுடியும், அதுவரையில் அவர்கள் பொறுத்து கிடக்கத்தான் வேண்டும் என்று பதில் சொல்லியோ, உண்மையிலேயே கல்வித் திட்டத்தை உயர்த்திவிட முடியாது. உயர்த்துவதற்கு பயன்படாது. ஆசிரியர்களுடைய நிலையிலே உள்ள குறைகளை நான் மட்டுமோ, எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் மட்டுமோ எடுத்துச் சொல்லுவதாக எண்ணிவிடக்கூடாது. மௌலானா ஆஸாத் எடுத்துச் சொன்னதை, இன்றைய தினம் இருக்கிற கல்வி இலாகா ஆலோசகர் ஸாயிதியான் அவர்கள் மிக தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆஸாத் அவர்களுடைய வார்த்தைகள் இவைதான்.

"Whatever may be the system that we may adopt, there can be no real improvement without an improvement in the quality of our teachers. For various reasons our teachers have been unhappy in the recent years."



8th April 1958] [Sri K. Anbazhagan]

என்று மௌலானா ஆஸாத் அவர்கள், மறைந்த மிகப் பெருந்தகை அவர்கள், மிக நன்றாக வலியுறுத்தி எடுத்துச் சொல்லியிருக்கிறார். அந்த குறைகள் இந்த நாட்டு ஆசிரியர்களுடைய நிலையிலே இருக்கிற வரையில், இந்த நாட்டு கல்வித் திட்டத்தின் பெயரை மாற்றுவதாலோ, ஒரு திட்டத்தை இன்னொரு திட்டமாக மாற்றுவதாலோ மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தி குடும்பத்திலுள்ள குழந்தைகளைக் காட்டிலும் ஆசிரியர்களுக்கு பள்ளிக்கூடத்திலுள்ள பிள்ளைகள் அதிகம் என்று எடுத்துக் காட்டுவதாலோ, எந்த விதத்திலும் கல்வித் திட்டமானது பயனுள்ளதாக மாறிவிடாது.

இந்த நேரத்தில் நான் மற்றொன்று கூற விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு இருக்கிற கஷ்ட நஷ்டங்களை தீர்ப்பதற்கு, தொழிலாளிகளுடைய கஷ்ட நஷ்டங்களை தீர்ப்பதற்கு காட்டிய அந்த அளவு கவனம்கூட பல நேரங்களிலே காட்டப்படவில்லை. தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் இருக்கவேண்டுமென்று அரசாங்கம் நல்ல முறையிலே தீர்ப்பு அளிப்பதற்கு பல நேரங்களிலே முன் வருகிறது. ஆனால் அதே நேரத்திலே ஆசிரியர்களுடைய சம்பளத்திலே இருக்கிற குறையை உணர்ந்து, அவர்களுக்கு குறைந்தபட்ச அளவு சம்பளம் அளித்தாகவேண்டும் என்று இந்த அரசாங்கம் தீர்மானிக்க முடியவில்லை என்றால், இந்த அரசாங்கம் முதலாளிகளைவிட கேவலமான நிலைமையில்தான் தன்னுடைய பொறுப்பை தட்டிக்கழிக்கிறது என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன். உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் 30 ரூபாய் சம்பளம் வாங்க வேண்டிய நிலைமையில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் அவர்கள் சம்பளம் வாங்குகிறார்கள். ஒரு ஆசிரியருக்கு திருமணம் ஆகியிருக்குமானால் அவர் மனைவியோடு சேர்ந்து ஒரு நாளைக்கு ஒரு ரூபாயில் குடும்பம் நடத்தியாகவேண்டும். அலவன்ஸையும் சேர்த்து அவர்கள் 45, 48, 50, ரூபாயில் அவர்கள் வாழ்க்கையை நடத்தியாக வேண்டும். வேறு விதத்தில் வருமானம் வருவதற்கு ஆரம்ப ஆசிரியர்களுக்கு வாய்ப்பு உண்டா என்று கேட்டால், வாய்ப்பு கிடையாது. அவர்கள் பார்க்கின்ற அந்த வேலை நிரந்தரமானதா என்று கேட்டால், நிரந்தரம் என்றுசொல்லமுடியாது. மூன்று மாத அறிவிப்பை அந்தந்த பள்ளிக்கூட நிர்வாகிகள் அந்த ஆசிரியர்களுக்கு தரமுடியும். மூன்று மாதங்களுக்கு மேல் வேலை நிச்சயம் என்று அவர்கள் கருதிக் கொண்டிருக்க முடியாது. வேலை நிச்சயம் இல்லாத தன்மை, "பிராவிடண்ட் பண்டு" அல்லது ஊதிய சேமிப்பு ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமை, குறைவான சம்பளத்தில் வேலை செய்யவேண்டிய நிலைமை, ஆகிய இடுக்கண்கள் நிறைந்த சூழ்நிலைக்கு இந்த நாட்டு ஆரம்ப ஆசிரியர்கள் ஆளாகியிருக்கிறார்கள். அதை மாற்றியமைப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. ஏனென்றால் சக்தியோடு போராட முடியாத சமுதாயம் ஆசிரியர்களுடைய சமுதாயம். அவர்களுக்கு சக்தியோடு போராடுவதற்கு ஏற்ற சூழ்நிலை இல்லை. அவர்கள் கூட்டமாக சேர்ந்து இருக்கமுடியாது. கூடிச் சேருவதற்கான வசதியையும் அவர்கள் தேடிக் கொள்ளமுடியாது. ஊதியம் அதிகமாக உள்ளவர்கள் நாடு எங்கும் பரந்து இருப்பார்களேயானால் ஒன்று சேர்ந்து பல காரியங்களை செய்யமுடியும். ஊதியம் குறைவாக இருப்பவர்கள் ஒரே இடத்தில் குழுமியிருந்தால், அவர்கள் ஒன்று சேர்ந்து பல குறைகளை எடுத்துச் சொல்லமுடியும். ஆனால் ஆசிரியர்கள் கிராமந்தோறும் பரவியிருப்பதால், ஒன்று சேருவது கடினம். அப்படி ஒன்று சேரமுடியாத நிலையில் இருக்கும் அவர்கள் கஷ்டத்தை உணர்ந்து, உடனடியாக நம்முடைய ஆட்சியாளர்கள் அவர்களுடைய குறைகளையெல்லாம் கவனித்து தீர்க்கவேண்டும்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் ஒரு பள்ளியில் வேலை செய்பவர்களுக்கு ஒரு ஊதியம், தனிப்பட்ட நிர்வாகத்தில் நடைபெறும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு ஊதியம் ஒரு விதம், உள்ளாட்சி மன்றங்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு மற்றொரு வகையிலே சம்பளம், அரசாங்கத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வேறு விதமான சம்பளம் என்ற நிலைமை ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றையதினம் இருந்துகொண்டு வருகிறது. உயர்நிலை ஆசிரி

[Sri K. Anbazhagan] [8th April 1958

யார்களைப் பொறுத்த வரையிலே ஒரே விகிதத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னாலும் செகண்டரி கிரேட் டீச்சர்ஸ் நிலையிலும் கூட, 5-வது 4-வது வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் அந்த ஆசிரியர்கள் பாடம் நடத்துபவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு இன்றையதினம் அந்தச் சிறிது உயர்த்தப்பட்ட அந்தச் சம்பளம்கூட தரப்படுவதில்லை. அப்படி தரப்பட்டால்தான அவர்கள் படித்த படிப்பிற்கு ஓரளவாவது பயன் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆசிரியர்களுடைய குறைந்தபட்ச சம்பளம் உடனடியாக தீர்மானிக்கப்படவேண்டும். யாரானாலும் வயிற்றைக் கழுவி, அதற்குப் பின்னால்தான வாயைத் திறந்து பாடம் நடத்தமுடியும். வயிற்றிற்கு போதுமான உணவு இல்லாமல் அவர்கள் எந்தக் கடமையையும் செம்மையாகச் செய்யமுடியாது. நம்முடைய அமைச்சர்கள்கூட என்ன அருமையான சூழ்நிலையில் அமர்ந்திருந்தாலும், பசி வந்திட பத்தும் பறந்து போம் என்று கூறுவதுபோல பறந்துவிடாவிட்டாலும்கூட, இங்கு அமர்ந்திருப்பதை விட்டுவிட்டு பசியைப் போக்கிக் கொள்ளுவதற்கு செல்லும் மனப்பான்மை இயற்கையாகவே இருக்கிறது. அது குறை அல்ல. அந்தப் பசியைப் போக்கிக் கொள்ளுவதற்கு நமக்கு இருக்கும் வாய்ப்பு ஆரம்ப ஆசிரியர்களுக்கு இருந்தாகவேண்டும். அதைவிட பெரிய வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, அந்த அளவுக்கு வசதிகள் அவர்களுக்கு அளிக்கப்படவேண்டும். அதற்காக குறைந்தபட்சம் ரூ. 50 ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளம் இருக்கவேண்டும். செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு ரூ. 70 அளவு சம்பளம் அளிக்கப்பட்டால்தான், அவர்களுக்கு இந்த நாட்டிலே எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து அதற்கு மேல் இரண்டு ஆண்டு பயிற்சி பெற்றதற்குரிய ஒரு வாய்ப்பு கிடைத்ததாகும். அதற்கு மேல் எண்ணிப் பார்ப்போமானால், தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி அளிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிற பள்ளிக்கூடங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி தரப்படுகிறது. அதுபற்றி அவர்கள் திரும்ப திரும்ப கேட்டிருக்கிறார்கள். ஊதியம் குறைவாக இருந்து நகரங்களிலே வாழும் ஆசிரியர்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு அரசாங்கம்தான் முயற்சி செய்து வீட்டு வாடகைப் படியை தந்தாகவேண்டும். பிரசவகால விடுமுறை தொழிலாள பெண்மணிகளுக்கு எப்படி அளிக்கப்படுகிறதோ, புதிய சட்டங்களின் மூலம் எப்படி அளிக்கப்படுகிறதோ, அதே முறையில் ஆசிரியப் பெண்மணிகளுக்கும் அளிக்கப்படவேண்டும். பிரசவம் என்பது ஆசிரியைக்கும் தொழிலாளப் பெண்மணிகளுக்கும், இரண்டு பேர்களுக்கும் ஒரேவிதமான வேதனையைத்தான் தரும். அப்படிப்பட்ட நிலைமையில் உள்ளவர்களுக்கு சம நிலைமையில் வாய்ப்பு அளிக்கவேண்டும்.

அதற்கு அடுத்து, இந்த நாட்டிலே இருக்கிறவர்களுக்கு ஓர் ஆசிரியர்களாக ஒரு திட்டத்தின் கீழ் வேலை தரவேண்டுமென்று தீர்மானித்து, அந்த ஆசிரியர்களுக்கு ஒரு நீண்ட கால பயிற்சித் திட்டத்தை வலியுறுத்தினார்கள். முதலிலே குறைந்த காலப் பயிற்சி போதும் என்று கருதினார்கள். நிபுணர்கள் திரும்ப ஆராய்ந்தார்கள். ஆராய்ந்தவுடனே, இரண்டு ஆண்டு காலப் பயிற்சி தேவை என்று சொல்லி அந்த ஆசிரியர்களை பயிற்சிக்கு அனுப்பியிருக்கிறார்கள். பயிற்சியினுடைய நோக்கத்தை நான் ஆதரிக்கிறேன். ஆனால் நிலைமையைக்கண்டு அதற்கேற்ற முறையில் பயிற்சி ஏற்படுத்துவது நிபுணர்களின் வேலையாக இருக்கவேண்டும். அந்த முறையில் பார்க்கப்போனால் ஏறத்தாழ ஓராண்டு காலத்தில், 2, 3 ஆண்டு காலம் ஆசிரியராக இருந்தவர்களுக்கு, நல்ல முறையிலே பயிற்சி அளிக்க முடியும். அது மட்டுமல்ல. அவர்களுக்கு அந்த நேரத்தில் தரப்பட்ட ஊதியத்தையும் உயர்த்தியிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் மிகக் குறைந்த ஊதியம் பெறுகிறார்கள். குறைந்த ஊதியம் பெறுவதனால் அவர்கள் படுகின்ற வேதனை அதிகம். பல முறை அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருந்தபோதிலும், முதலில அமைச்சர் அவர்கள் கவனிப்பதாகச் சொல்லி, பிறகு கவனித்தோம், இப்பொழுது இயலாது என்று மறுப்பது மிகமிக வருந்தத்தக்கது.



8th April 1958] [Sri K. Anbazhagan]

அதற்கடுத்து நான் ஒன்று சொல்லுவேன். உயர்நிலைப் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கு இந்தி மொழி போதிக்கவேண்டுமென்று சொல்லுவது இந்த நாட்டு மக்களுடைய காதத்திற்கும், நிலைமைக்கும் ஏற்றது அல்ல, அவசியமும் அல்ல. விரும்புகிறவர்கள் மட்டும்தான இந்தி படிக்கவேண்டுமே தவிர. இந்தியையோ அல்லது வேறு ஒரு அல்ல இந்திய மொழியையோ கட்டாயமாக இரண்டாவது மொழியாக படிக்கவேண்டுமென்று சொல்லுவது பொறுத்தமல்ல, நியாயமும் அல்ல. இந்தியாவிலுள்ள வேறு ஒரு மொழியை படிப்பதால் தமிழ் மாகாணத்திலுள்ள பிள்ளைகளுக்கு தீமைதான் ஏற்படும் என்று நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன். இதற்காக நான் மூன்று காரணங்களை முன்பே சொல்லியிருக்கிறேன். தமிழ் மொழி என்பது சற்று திறமையாக நடத்தப்படவேண்டிய, அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டிய, ஒரு மொழியாக இருக்கிறது. அதற்கு மேலே ஆங்கில மொழியை நல்ல முறையிலே பயின்றால்தான் உயர்ந்த, சிறந்த அறிவும் தெளிவும் பெறமுடியும். அதற்கிடையிலே பிறிதோர் மொழியை, அதாவது இந்தியையோ அல்லது வேறு ஒரு இந்திய மொழியையோ கட்டாயமாக கற்கவேண்டுமென்று சொல்லிவிட்டு, பள்ளிக்கூடங்களில் ஒரு மொழி போதிப்பதற்கு மட்டும் ஒரு ஆசிரியரை நியமித்துவிட்டு மறைமுகமாக இந்தியை படிக்கும்படி கட்டாயப்படுத்துவது நல்லது அல்ல, தேவையுமல்ல, வேண்டியதுமல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரை கேட்டால் தபால் கார்டுகளிலே இந்திக்கு பதிலாக தமிழ் எழுத்துக்களை அச்சடிக்க இயலாது என்று அந்த அளவுக்கு அழுத்தமாகப் பேசுகிறார்கள். அந்த அழுத்தம் நமக்கும் இந்தியை மறுப்பதிலே இருக்கவேண்டும்.

பிரி-யூனிவர்ஸிடி வகுப்பிற்கு, மூன்று ஆண்டு பட்ட படிப்பிற்கு முந்திய வகுப்பிற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற பாடங்கள் மிக அதிகமானவை. ஒரு மொழித்துறையில் ஆட்சி நடத்தும் நிலைமை மாறி, மற்றொரு மொழியில் ஆட்சி நடத்துகின்ற ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிற நேரத்தில், தமிழ் மொழியில் ஆர்வம் அதிகமாக பெறவேண்டிய நேரத்தில், ஏரான மான பாட திட்டங்களை புகுத்துவது மாணவர்களுடைய முழு அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. இந்த சூழ்நிலையை இந்த அவைக்கு எடுத்துக் காட்டி, அதன் மூலம் கேட்டுக்கொள்ள நான் விரும்புவது என்னவென்றால், பல்வேறு பாட திட்டங்கள் மூலம் மாணவர்களை குழப்பாமல், மாறாக, அந்த மாணவர்கள் நல்ல அறிவு பெறுவதற்கு ஏற்ற வகையில் தமிழையும் ஆங்கிலத்தையும் சிறந்த முறையில் கற்றுக்கொள்ளுவதற்கேற்ற வாய்ப்புகளை கட்டாயமாக ஏற்படுத்திக்கொடுக்கவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, அண்ணாமலை நகரில் நடந்த நிகழ்ச்சி பற்றி அங்குள்ள மாணவர்கள் மீது பழியை சுமத்தி அமைச்சர் அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். சட்டமன்றத்தில் பேசுகின்ற அமைச்சர் ஒரு கருத்தை வெளியிடுகிறார். வெளியே பேசும்பொழுது அந்த அமைச்சர் மாறுபட்ட ஒரு கருத்தை வெளியிடுகிறார். அந்த அமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்கள் கூட வெளியே வேறு விதமாக பேசுகிறார்கள். மாணவர் மீது குற்றம் சுமத்துகிற அமைச்சர் அங்குள்ள சூழ்நிலையை மாற்ற நல்ல முறையிலே முயற்சி செய்திருக்க வேண்டும். அமைச்சர் அவர்கள் அங்கு சென்ற நேரத்தில் அங்குள்ள சூழ்நிலை மிக இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அமைச்சர் அங்கு சென்ற சில மணி நேரத்திற்குள்ளே சூழ்நிலை மாறிவிட்டது. எப்படி எப்படி அந்த சூழ்நிலை மாறியது என்பதை அமைச்சர் அவர்கள் ஆராயாமல், அதற்குள்ள பொறுப்பை தட்டிக் கழித்து விட்டுவிட்டு, இங்கு சென்னைக்கு வந்து மாணவர்கள் தவறாக நடந்துகொண்டார்கள், அவர்களிடையே ஒரு விஷம் ஏற்பட்டிருக்கிறது, மாற்றுக் கட்சியினர் தவறான முறையில் நடக்கிறார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுவது அண்ணாமலை பல்கலைக் கழகத்தை சரியாக புரிந்து கொள்ளாததன் விளைவு, அந்த மாணவர்களைப் பற்றி தெரிந்துகொள்ளுவதற்கு வாய்ப்பில்லாததன் விளைவு என்று நான் கருதுகிறேன். மாணவர்களைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு கனம் அமைச்சருக்கு இல்லாததன் விளைவு இது என்றுதான் நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : The hon. Member's time is up.

SRI K. ANBAZHAGAN : ஒரே நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். கனம் அமைச்சரை நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அவருக்குள்ள சூழ்நிலையை நீங்கள் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். நானும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 5 வருஷங்கள் படித்தவன். அந்தக் காலத்தில் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் இருந்தார்கள். அவர்களுடைய தன்மையை நான் அறிந்திருக்கிறேன். அங்கிருந்த துணைவேந்தர்களின் தன்மையையும் நான் அறிந்திருக்கிறேன். இப்போது இருக்கும் துணைவேந்தர் எப்படி நடந்துகொண்டார் என்பதையும் நான் பார்த்தேன். இப்போதைய துணைவேந்தர் தம் பொறுப்பைக் கட்டிக் காத்திருக்கிறார்—நான் குறைசொல்லவில்லை. இப்போது இருக்கும் பல்கலைக்கழக ரெஜிஸ்டிரார் தம் கடமையைச் செய்யவில்லை—நான் குற்றம் சாட்டுகிறேன். அங்கு இப்போதுள்ள ஆசிரியர்கள் மாணவர்களால் தங்களுக்கு இருக்கும் கடமையை ஆற்றவில்லை—நான் தெளிவாகக் குற்றம் சாட்டுகிறேன். அங்கே சென்ற கனம் அமைச்சர், தாம் அமைச்சராக இருப்பதை மறந்து வெறும் காங்கிரஸ்காரராகத் திரும்பிவிட்டார். இது மிகவும் வருந்தத்தக்கது என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

9-51 a.m. SRI C. MUTHIAH PILLAI : கனம் சபாநாயகர் அவர்களே, எதாவது ஒரு திட்டம் இப்போது வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்றால், அது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நடத்தப்படும் கல்வித் திட்டம்தான் என்று நான் நிச்சயமாகச் சொல்லமுடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வித் திட்டங்கள் வெகு வேகமாக நடக்கின்றன. நான் அறிந்த வரையில், தஞ்சாவூர் ஜில்லாவிலும் திருச்சி ஜில்லாவிலும் "ஊருக்கு ஒரு பள்ளி" என்பது போக "தெருவிற்கு ஒரு பள்ளி" என்று சொல்லக் கூடிய அளவிற்கு இப்போது பள்ளிகள் இருப்பது கண்கூடு என்று சொல்ல விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முதல் மூன்று ஆண்டுகளில் ஒரு பள்ளிக்கூடம்கூட புதிதாகத் திறக்கப்படவில்லை. கடைசி இரண்டு ஆண்டுகளில் 4,500 பள்ளிக்கூடங்கள் புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருப்பதைப் பார்க்கும்போது ஏழை மக்கள்பால் கல்வி அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் இருக்கும் அன்பும் அக்கறையும் நன்றாகத் தெரிகிறது. சபையில் சமர்ப்பித்திருக்கும் அறிக்கையில், கனம் கல்வி அமைச்சர், கடந்த மூன்று ஆண்டுகளில் ராஜ்யத்தில் செய்யப்பட்டிருக்கும் கல்விக் காரியங்களைக் குறிப்பிட்டிருக்கிறார், இதுவரை கொடுக்கப்பட்டிருக்கும் கல்விச் சலுகைகளைப் பற்றியும் அதில் குறிப்பிட்டிருக்கிறார். எதிர் காலத்தில் ஜாதிகளை கவனிக்காமல் பிற்போக்காக இருப்பவர்களுக்கும் பொருளாதார நிலைமையில் தாழ்ந்தவர்களாக இருப்பவர்களுக்கும் கல்விச் சலுகை கொடுக்கப்படும் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. கல்வித் திட்டம் எதிர் காலத்தில் இன்னும் வேகமாகப் போகும் என்று இதிலிருந்து தெரிகிறது.

அடுத்தபடியாக, பகல் உணவு சம்பந்தமாக சர்க்கார் நன்றாகத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். 4,300 பள்ளிகளில் மாணவர்களுக்கு தனியார் பகல் உணவு அளித்துவருகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் பண உதவி அளிக்கிறது. இந்தத் திட்டத்தில், சர்க்காரும் தனியாரைப்போல் அதிக அக்கறைகாட்ட வேண்டும். அறநிலைய தர்ம ஸ்தாபன (Hindu Religious and Charitable Endowments) நிதியிலிருந்து இதற்காக சர்க்கார் பணம் செலவழிக்கலாம். அவ்வாறு செய்ய வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். ப்ரைவேட் மானேஜ்மெண்டாரையும் அவர்களுடைய நிதியிலிருந்து செலவழிக்கச் சொல்லலாம். அதற்கான பிரசாரத்தைச் செய்ய வேண்டும். இதையெல்லாம் செய்து இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும்.

மொழிகளைப்பற்றி அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தியை இன்று பல மேதைகளும் அறிஞர்களும் எதிர்க்கிறார்கள். அவர்கள், சொல்வதைக் கேட்டு இந்த மக்கள் இந்தியைப் படிக்காமல் இருந்தால் கடைசியில் 15 வருஷங்களுக்குப் பிறகு அவர்கள் கஷ்டப்படுவார்கள். அப்போது பிற்பட்ட சமுதாயத்தினர்தான் மிகவும் கஷ்டப்படுவார்கள். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் ரொம்ப காலமாக இந்தியை கற்று வருகிறார்கள்.





அவர்களுக்கு அப்போது கஷ்டம் இருக்காது. மற்ற சமுதாயத்தினர் பின் தங்க வேண்டுமென்பதை உள்நோக்கமாகக் கொண்டுதான் அந்தத் தலைவர்கள் ஹிந்தியை எதிர்க்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு முக்கியஸ்தரிடம் விசாரித்தேன். அந்த உள் நோக்கத்துடன்தான் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள் என்று அவரும் சொன்னார். பிற்பட்ட மக்கள் ஹிந்தியைப் படிக்காமல் இருந்து விடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். பொதுமக்களை உண்மையை அறியும்படி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு உயர்நிலைப் பள்ளி வகுப்புகளை நடத்துவதற்கான அனுமதி 56 உயர்நிலைப் பள்ளிகளுக்கு மறுக்கப்பட்டது. இந்த விஷயத்தில் சென்ற வருஷத்திற்கும் இந்த வருஷத்திற்கும் மாறுபாடு இருக்கிறது. ஜில்லா போர்டு இருந்த காலத்தில் எல்லா யோசனைகளும் (ப்ரபோஸல்ஸ்) ஜில்லா போர்டு அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. இப்போது அந்த நிலை மாறிவிட்டது. விதிகள் மாற்றப்பட்டுவிட்டன. அதன் காரணமாக பல உயர்நிலைப் பள்ளி வகுப்புகளுக்கு அனுமதி கிடைக்கவில்லை. முன்பு இருந்ததுபோல் ஜில்லா போர்டு டிவிஷனல் ஆபீசர்களுக்கு இந்த அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் டி.பி.ஐ. ஆபீசுக்கு யோசனைகள் (ப்ரபோஸல்ஸ்) வராது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களின் நிலைமையைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கு 1955-ம் வருஷம் பென்ஷன் கொடுக்கப்பட்டது; இந்தியாவிலேயே வேறு எந்த ராஜ்யத்திலும் செய்யாத காரியம் இங்கே செய்யப்பட்டிருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. 1958-ம் வருஷம் ஆசிரியர்கள் பென்ஷன் வாங்குவதற்குத் தகுதியுடையவர்களாக இருந்த போதிலும் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக எதிர்க் கட்சியினர் கேள்வி கேட்ட போது "கண்டிப்பாக இந்த வருஷம் கொடுத்துவிடுவோம்" என்று கனம் அமைச்சர் பதில் கூறினார். பென்ஷன் கொடுக்கப்பட வேண்டிய எல்லா ஆசிரியர்களுக்கும் இந்த வருஷமாவது பென்ஷன் கொடுத்துவிட வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, மாணவர் ஆசிரியர் விகிதத்தை எடுத்துக்கொண்டால் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் நிர்ணயித்தது. நடைமுறையில் என்ன நடக்கிறது? ஒரு வகுப்பில் 60 பிள்ளைகள் இருக்கும்போது கூட இது இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப் படுவதில்லை. இப்படிப்பட்ட நிலையை அனுமதிக்கும் உத்தரவை அரசாங்கம் போடக்கூடாது. (குறுக்கீடு) அப்படிப்பட்ட உத்தரவு போடவில்லை என்றால், நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களின் சம்பளங்களை எடுத்துக்கொண்டால், கார்ப்பொரேஷன் பள்ளி ஆசிரியர்களின் சம்பளங்கள் ஒருவிதமாகவும், ஸ்தலஸ்தாபனப்பள்ளி ஆசிரியர்களின் சம்பளங்கள் மற்றொரு விதமாகவும், ஹரிஜன நல இலாகாவின் கீழ் நடக்கும் பள்ளிகளின் ஆசிரியர்களின் சம்பளங்கள் இன்னொரு விதமாகவும், தனியாரால் நடத்தப்படும் பள்ளிகளின் ஆசிரியர்களின் சம்பளங்கள் வேறொரு விதமாகவும் இருக்கின்றன. எல்லோருடைய சம்பளங்களும் ஒரேவிதமாக இல்லாததால் அவர்கள் மனதில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது.

(Sri K. Sattanatha Karayalar in the Chair.)

இந்த அடிப்படையில், எந்த நிர்வாகத்தின் கீழ் உள்ள ஆரம்பப்பள்ளி 10a.m.
களில் வேலை செய்யும் ஆசிரியர்களாக இருந்தாலும், அவர்களுக்கெல்லாம் ஒரே தரமான சம்பளம் கொடுக்கவேண்டுமென்ற அந்தத் திட்டத்தையும் அரசாங்கம் கண்டிப்பாக ஏற்படுத்தவேண்டும். மத்திய, மாகாண சர்க்கார் களுக்குள்ளேயே வித்தியாசம் களைந்தெறியப்படவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டிருக்கும் இந்த வேளையிலே ஸ்தல ஸ்தாபனம், தனியார் ஆகிய இப்படிப்பட்ட நிர்வாகங்களிலே இருக்கும் ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்திலே வித்தியாசம் இருக்கிற மனப்பான்மை கண்டிப்பாக நீக்கக்கூடிய வகையில், எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய வகையில், கல்வி மந்திரி அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[Sri C. Muthiah Pillai] [8th April 1958

அறிந்தபடியாக, காவிரிப்பூம்பட்டினத்திலே, சரித்திரப் புகழ்பெற்ற இடத்தில் ஒரு தமிழ்க் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்று வெகு காலமாக கேட்டுக்கொண்டிருக்கிறோம். இந்த அற நிலையப் பாதுகாப்பு மந்திரி அவர்கள் அங்கு வந்திருந்தபோது, அதற்காக நிதி நிலைமையை விஸ்தரித்துத் தருவதாக சொன்னார்கள். காவிரிப்பூம்பட்டிணத்தைப் பார்க்க வராத பேதைகள் இல்லை. காவிரிப்பூம்பட்டிணம் என்பது ஊர் பேரே தெரியாமல் கடல் கொண்டு போயிருக்கிறது. துரதிருஷ்டவசமாக, அது என்னுடைய தொகுதியில் இருப்பதால், வெட்கப்பட்டுச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியிலே அது இல்லாவிட்டால், அந்த மக்களுக்கு அவ்வளவு வெறுப்பு ஏற்படாது. அதைப் பார்க்க வரும்போது, அந்த சரித்திரத்தை கருத்திற்கொண்டு, ஏதோ செய்துவிடுகிறோம் என்று பேசிவிட்டு, இங்கு வந்தவுடன் அதையெல்லாம் மறந்துவிடுகிறார்கள். பழம் பெருமை வாய்ந்த அந்த இடத்தில் ஒரு தமிழ்க் கல்லூரியை ஏற்படுத்தி, நல்ல முறையிலே விஸ்தரிப்பதற்குள்ள திட்டங்கள் வகுக்கப்படவேண்டும். இந்த அற நிலையப் பாதுகாப்பு இலாகாவிலிருந்து நிதி ஒதுக்கிக் கொடுப்பதாக வாக்களித்திருப்பதை ஞாபகப்படுத்தி, கல்வி இலாகா அதற்குள்ள காரியம் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அரசாங்கக் கட்டிடங்களைக் கட்ட வேண்டியதும், பராமரிப்பதும் இன்ஜினீரிங் இலாகாவின் பொறுப்பில் இருக்கிறது. அப்படி இருப்பதால், கட்டிடங்கள் கட்டி முடிப்பதிலே மிக மிக தாமதம் ஆகிறது. ப்ளான் கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கல்வி இலாகா கட்டிடங்கள் பராமரிப்புக்காக பணம் சாங்ஷன் செய்யப்பட்டிருந்தும், அந்தப் பணம் செலவிடப்படாமல் இருக்கிறது. ஆகவே, கல்வி இலாகாவின் கீழ "ப்ளான்ஸ் அண்டு டிசைன்ஸ்" என்ற முறையில் தனியாக ஒரு இன்ஜினீரிங் பிரிவை ஏற்படுத்தினால், தங்களுக்குக் கீழ் இருக்கும் இன்ஜினீரிங் பிரிவைக் கேட்க கல்வி இலாகாவினருக்கு அதிகாரம் இருக்கும். அப்படியில்லாத ஒரு நிலையில், இன்றைக்குக் கல்வி இலாகாவைக் கேட்டால் அவர்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்து, "இன்ஜினீரிங் டிபார்ட்மென்டைக் கேளுங்கள்" என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த நிலையை மாற்றியமைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

* **SRI M. S. SELVARAJAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தை நான் வரவேற்கிறேன். சுதந்திரத்திற்கு முன்பு கல்விக்காக செலவிடப்பட்ட தொகையைக் காட்டிலும் எட்டு மடங்கு தொகை இப்பொழுது ஏறத்தாழ செலவிடப்படுவதாக அறிக்கையிலிருந்து காண்கிறோம். ஆந்திரம் பிரியாத நிலைமையில், ஐந்து கோடி ஜனங்களுக்கு ஐந்து வருஷ காலத்திற்குமுன்பு செலவிட்ட தொகையைவிட, இன்றைக்கு 3 கோடியினருக்கு அதிகமாக செலவிடப்படுகிறது. கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை வருஷா வருஷம் அதிகப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது கல்வியின் கவர்ச்சி குன்றாத முறையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

ஒவ்வொரு தேசத்திலும் கல்வியானது சிற்சில குறிக்கோளோடு பயிற்றுவிக்கப்படுகிறது. பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளில்கூட லீடர்ஷிப் ட்ரெயினிங் என்பதை மனதிலே கொண்டு கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. அமெரிக்காவில் ஜனநாயகத் தன்மையை வளர்க்கக்கூடியதை அடிப்படையாகக் கொண்டு கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. ரஷ்யாவிலேகூட, புதுமை காணும் முயற்சியை மனதிலே கொண்டு கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. ஆனால், இந்த நாட்டிலும் சரி, இந்த ராஜ்யத்திலும் சரி, கல்வியின் குறிக்கோள் கல்வி ஒன்றுக்காகத்தான் என்ற முறையில் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. கல்விக்காகத்தான் கல்வி என்பதாக அல்லாமல் வேறு எந்தக் குறிக்கோளுக்காக, தெளிவான குறிக்கோளுக்காக, கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது என்பது அமைச்சர் அவர்கள் சொல்லித் தெரிய ஆசைப்படுகிறேன். கல்வியின் குறிக்கோள் என்ன என்பதை நிச்சயப்படுத்த வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். வெறுமனே சாதாரணக் கல்வியோடு தொழிற் கல்வி மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டால் இந்த நாடு திருப்தி கண்டுவிட



8th April 1958] [Sri M. S. Selvarajan]

முடியும் என்று நினைக்கமுடியாது. அதையும் கடந்து கல்வியின் குறிக்கோள் இந்த நாட்டில், இந்த ராஜ்யத்தில், பின்பற்றக்கூடிய நிலைமை இருக்கவேண்டும் என்பது என்னுடைய ஆசை.

கல்லூரிகளில் சொற்பொழிவு முறையில் பயிற்றுவிக்கப்படுவதுகூட அடிப்படைக் கோளாறுக்குக் காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். பிரசங்க முறை (லெக்சர் முறை) பின்பற்றப்படுவதில் கோளாறு இருப்பதாக நான் அறிகிறேன். பிரசங்க முறைக்குப் பதிலாக "டிஸ்கஷன் முறை" அதாவது ஒருவருக்கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளக்கூடிய முறையில் கல்வி பயிற்றுவிக்கக்கூடிய ஒரு பயிற்சி முறையைக்கூட நாம் ஏற்படுத்தலாம். இந்த நாட்டிலுள்ள குழந்தைகளும் சரி சாதாரண நடுத்தரப் பருவம் உள்ள சர்வகலாசாலை மாணவனாக இருந்தாலும் சரி, கல்வித்தரத்தில் உலகத்திலுள்ள எந்த தேசத்திற்கும் நம் தேசம் பின்தங்கியது அல்ல. அமெரிக்கா தேசம் போன்ற நாகரீக தேசத்திலே இருக்கும் மாணவனுக்குக்கூட நம் தேச மாணவன் பின்தங்கியவன் அல்ல. இந்த நாட்டிலிருந்து பிறதேசங்களுக்குச் செல்லும் ஆவரேஜ் மாணவர்கள், அங்கேயுள்ள மாணவர்களோடு பரீட்சை எழுதி முதல்தரமாகத் தேறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இந்த நாட்டிலே இன்ஜினீரிங் கல்வி பெறுபவர்கள்கூட சாதாரண ஸ்தானத்தில் இருக்கும் தச்சர், கொல்லர் போன்றவர்களிடம் தெரிந்துகொள்ளவேண்டிய அளவுக்குக்கூட கல்வி பெறாமல் இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அளவுக்கு இருக்குமானால், எங்கோ ஒரு திசையில் கோளாறு இருக்கிறது. சிலர் குறிப்பிட்டதுபோல், சர்வகலாசாலையிலும், மற்றும் சில பகுதிகளிலும் மாணவர்களுடைய ஒழுக்கம்கூட ஓரளவு கெட்டு இருக்குமானால், அது கல்வியில் இருக்கும் உன்னதமான லட்சியத்தை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதையும் இந்த நாட்டின் கல்வித்தரம் இன்னும் மாறவேண்டிய நிலைமையில் இருக்கிறது என்பதையும்தான் காட்டுகிறது.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். சர்வகலாசாலையில் போதனா மொழி ஆங்கிலமா, தமிழா என்று பல சர்ச்சைகள் இருந்துகொண்டிருப்பது அவ்வளவு அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன். இன்று இருக்கும் லெக்சர் முறை பின்பற்றப்படாமல், டிஸ்கஷன் முறை பின்பற்றப்படக்கூடிய நிலைமை வருமானால் ஒவ்வொரு மாணவனுடைய கருத்து சொந்த பாஷையில் தான் உருவாக முடியும். அந்தக் கருத்து ஆங்கிலம் மூலமாக மட்டும் அல்லாமல், ஆங்கிலம் தமிழ் ஆகிய இவ்விரண்டு மொழிகள் மூலமாகவும் இருந்து, தமிழ் மொழியே பின்னால் வந்து ஆட்சி புரியக்கூடிய நிலைமைக்கு வந்துவிடும். அந்த முறையில் கல்லூரிகளிலும் தமிழே போதனா மொழியாக அமையக்கூடிய நிலைமையை நாம் பெற்றுக் கொள்ள முடியும்.

செகண்டரி பயிற்சி, வெறுமனே தொழிலுக்கு மாத்திரம், உத்தியோகத்திற்கு மாத்திரம் பயிற்றுவிக்கக்கூடிய நிலைமை இல்லாமல் மாற்றம் செய்யப்படவேண்டும். பஞ்சாப் ராஜ்யத்தில் சிற்சில பகுதிகளில் சிற்சில முறைகள் பின்பற்றப்படுகின்றன. வருடாந்திரப் பரீட்சை இல்லாவிட்டாலும், மாதாந்திர, வாராந்திர பரீட்சை போன்று வைத்து ஒருசில பாடசாலைகளில் சில முறைகள் அங்கே கையாளப்படுகின்றன. அவரவர்களுடைய தேவைக்குத் தகுந்தபடி ஆசிரியர்களும் மாணவர்களும் தங்களுடைய அபிப்பிராயங்களை எல்லாவற்றையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்வதன் மூலம், அப்படிப் பரிமாறிக்கொள்ளுவதின் மத்தியிலே பயிற்றுவிக்கக்கூடிய நிலைமையை நாம் அங்கே பார்க்கிறோம். அங்கேயிருக்கும் சர்வகலாசாலை இவ்விதமாக பரீட்சை இல்லாமல் பயிற்றுவித்தாலும்கூட, அது போன்று பரீட்சை இல்லாமல் படித்துத் தேறக்கூடியவர்களைக்கூட சர்வகலாசாலை அப்ரூவ் செய்யக்கூடிய நிலைமையை நாம் பார்க்கிறோம். இதுபோன்ற நிலைமையை இங்கும் சிலயிடங்களில் முயற்சி செய்யலாம் என்பதை நினைப்பூட்டுகிறேன். காலையிலிருந்து மாலை வரையிலும் பாடசாலையில் மாணவர்கள் தங்கி இருப்பதும், ஆசிரியர்கள் பயிற்றுவிப்பதும் என்ற நிலைமை இருக்கும்போது, இந்த ராஜ்யத்தில் 180-லிருந்து 200 நாட்கள் வேலை நாட்கள் இருப்பதால், அதைப்பற்றி

[Sri M. S. Selvarajan] [8th April 1958

அபிப்பிராய பேதங்களும் எதிர்ப்புகளும் இருக்கக்கூடிய நிலைமைக்கு ஆசிரியர்கள் முற்படுகிறார்கள். முதலாளி-தொழிலாளி என்ற தொழிற்சங்க முறையில், ஆசிரியர்களை நடத்தாமல், இந்தத் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் அவர்களுக்கும் சம்பந்தம் உண்டு என்ற குறிக்கோளோடு, அவர்களும் முன்னுக்கு வரக்கூடிய நிலைமையை கல்வித்திட்டத்தின் மூலமாக அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க நாம் முற்படவேண்டும்.

ஆரம்பக் கல்வியிலும்கூட, இன்றையதினம் இருக்கும் உபாத்தியாயர்-மாணவர் ரேஷியோ 1 : 35 என்று இருப்பதில்கூட தவறு இல்லை, கோளாறு இல்லை. கேரளத்தில் பின்பற்றப்படுவதுபோல், ஆசிரியர்கட்கு அதிகப்படியும் மாணவர்கட்குக் குறை கல்வியுமளிக்கும் ஷிப்ட் முறை இங்கே பின்பற்றப்படாத நிலைமையில் உபாத்தியாயர்-மாணவர் ரேஷியோ 1 : 35 என்று இருப்பதில் தவறு இல்லாமல் இருக்கலாம். ஆனால், சிறு சிறு ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் மாணவர்களைப் பிரித்து வைத்து, க்ரூப் ஸிஸ்டம் வைத்து, அவர்களுக்கே பயிற்சி கொடுக்கக்கூடிய நிலைமையில் ஒன்றிரண்டு பாடசாலைகளில் பரீட்சார்த்தமாக ஏற்பாடு செய்யலாம். நல்ல முறையிலே அவர்கள் வளருவதற்கு, ஆராய்ச்சி செய்வதற்கான நிலைமையைக்கூட சிற்சில பாடசாலைகளில் கொடுத்து, அதற்குள்ள நிலைமையைப் பின்பற்ற முயற்சிக்கலாம். ஆசிரியர்களுடைய தரம், குறிப்பாக அடிப்படையில் உள்ள ஆசிரியர்களுடைய தரம், நல்ல விதத்தில் முன்னேறாத வரையில் நாம் லட்சியத்தை அடைய முடியாது போகலாம். மத்திய சர்க்கார் மனமுவந்து கொடுக்கும் மான்யத்தை வாங்கி உபயோகிப்பதற்கு சென்ற வருஷம் தவறியிருக்கிறோம் என்பது வருத்தத்திற்குரியது. வீடு கட்டுவதற்கு மத்திய சர்க்கார் அளித்த மான்யத்தை இந்த ராஜ்ய சர்க்கார் தகுந்தபடியாக பயன்படுத்த தவறிவிட்டது. வருஷக் கடைசியில் மத்திய சர்க்கார் மானியங்கள் கொடுக்கப்படுவதால் சிரமம் ஏற்பட்டு இந்த ராஜ்யத்தில் எல்லாப் பாடசாலைகளிலும் நல்ல முறையிலே பயன்படுத்த முடியாமல் போய்விடுகிறது. அரசாங்கத்தின் நிர்வாக அமைப்பில் ஜில்லாக் கல்வி அதிகாரி மட்டும் இருந்தால் போதும். மத்தியிலே டிவிஷனல் இன்ஸ்பெக்டர் இருப்பதால் காலதாமதம் அனாவசியமாக ஏற்படுகிறது, என்பதை பற்பல ரெப்ரசென்டேஷன் மூலமாக நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் மாற்று ஸ்கேல் நிர்ணயிக்கும்போது ஆரம்ப ஆசிரியர்களுடைய ஸ்கேல் மாற்றியமைக்கப்படவில்லை. ஆரம்ப ஆசிரியர்களுக்கு 30 ரூபாயிலிருந்து ஸ்கேல் ஆரம்பிக்கப்படுகிறது. 33 ரூபாயுடன் முடிவடைகிறது. இது சாதாரணமாக ரயில்வே போர்ட்டருக்கு கொடுக்கக்கூடிய சம்பளம்கூட இல்லாத நிலைமையில் இருக்கிறது. இதைப் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆரம்ப ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும் ஆஸ்பத்திரி வசதிகளும், சாதாரண மருத்துவ வசதிகளும் போதுமான அளவுக்கு நாம் செய்து கொடுக்க முயற்சிக்கவேண்டும். நகரப்புறங்களில் ஸ்தலஸ்தாபன அரசாங்கப் பள்ளி ஆசிரியர்கட்கு வழங்கப்படும் வீட்டு வாடகை அலவன்ஸ் உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கப்படவேண்டும்.

மாணவர்களிடையே கட்டுப்பாட்டை வளர்ப்பதற்கும், ஒற்றுமையை வளர்ப்பதற்கும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் பொதுவான கடவுள் வாழ்த்து காலையிலும் மாலையிலும் தேசீயவாழ்த்துபாடக்கூடிய முறை பின்பற்றப்பட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும். அப்
10-10 a.m. பொழுதுதான் நாட்டில் தேசீய உணர்ச்சி மாணவர்களிடையே ஏற்படும் என்றும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றையதினம் நம்முடைய ராஜ்யத்தில் பயன்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய கல்வித் திட்டமும் சரி, தேசத்தில் பயன்பட்டுக்கொண்டிருக்கக் கூடிய கல்வித் திட்டமும் சரி, கவர்ச்சியோடுகூடிய விருத்தி இல்லாமல் இருக்கிறதென்பதை நான் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆங்காங்கு இருக்கக் கூடிய ஜில்லா அமைப்பு எதிர்காலத்தில் மாறப்போகிறது. என்றென்றும் நிரந்தரமாக இப்படியே இருக்க முடியாது. இந்த நாட்டின் உதவியுடன்கூட, வெளிநாட்டின் சொந்த உதவியும் சேர்ந்து சில பகுதிகளை விருத்தியடைந்திருக்கின்றன. விருத்தியடைந்த பகுதிகளின் வளர்ச்சி, கவர்ச்சி குன்றாமல் கல்வித் திட்டம் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



8th April 1958] [Sri M. S. Selvarajan]

தூத்துக்குடிக்குப் பக்கத்தில் 5 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடம் நில வசதியோடுகூட ஆறுமுகசாமி என்பவர் இனமாகக் கொடுத்து அங்கே ஒரு இன்ஜினியரிங் கல்லூரியை ஏற்படுத்துவதற்கு உதவி செய்ய முன்வந்திருக்கிறார்கள். அதையும் பயன்படுத்திக்கொண்டு, இந்த ராஜ்யத்தில் தொழில் கல்வி நல்ல முறையில் பரவி வளர்வதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் நாடு நல்ல முறையில் முன்னேற்றம் அடையும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**Sri K. RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்கள் கோரியிருக்கும் கல்வி மானியத்திற்கு பன்னிரண்டு கோடி ரூபாய் வரையிலும் அதாவது பட்ஜெட்டிலேயே 20 சத விகிதம் கல்விக்காக செலவிடப்படவேண்டும் என்று ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். வருஷாவருஷம் அதிகமாக ஒதுக்கி வந்து கூடியவரையிலும் நல்ல பட்ஜெட் என்ற பெயரைப் பெறுவதற்குத் தகுதியுள்ள முறையில் இந்த மானியத்திற்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் சரியான முறையில் செலவழிக்கப்படவேண்டும். அப்போதுதான் அதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் அனைத்தையும் பெற முடியும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முதலில் நமது மாகாணத்திலே கம்பல்சரி எஜுகேஷன் வரவேண்டும். அதாவது கட்டாயக் கல்வி இன்னும் வரவில்லை. கட்டாயக் கல்வி வருவதற்கு இதுவரையிலும் தடங்கல் இருந்திருக்கலாம். இப்போது எந்த விதமான தடங்கலும் இல்லை. சர்க்காருடைய புள்ளிவிவரங்களின்படி இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலும் பள்ளிக்கூடத்திற்குப் போகத் தகுதி உடையவர்கள் 41 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருக்கிறவர்கள் $18\frac{1}{2}$ லட்சம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் $25\frac{1}{2}$ லட்சம் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு போய்க் கொண்டிருக்கிறார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலும்கூட ஐந்து லட்சத்து இருபதாயிரம் பேர்கள் வரையிலும் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டிய குழந்தைகள். வருஷம் ஒன்றுக்கு ஒரு லட்சத்து ஆறாயிரம் பிள்ளைகளைச் சேர்க்கவேண்டுமென்று காணப்படுகிறது. நாற்பது லட்சம் என்று சொல்கின்றதுகூட ஆரம்ப காலத்தில் இருந்திருக்கவேண்டும். இப்போது அதைவிடக் குறைவாகத்தான் இருக்க வேண்டும். இருபது லட்சம் மாணவர்கள் வரையிலும் அதாவது முக்கால் வாசிப் பையன்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பல பள்ளிக்கூடங்கள் புதிதாக ஏற்படுத்தப்படவேண்டியிருக்கின்றன. அரசாங்கம் கல்விக்காக ஒதுக்குகிற தொகை அதிகமாக இருக்கிறது என்றாலும் பள்ளிக்குப் போகவேண்டிய மாணவர்கள் தொகையும் அதிகமாக இருக்கிறது. மொத்தம் 12 கோடி செலவழிக்கிறோம் என்றால் அதிலே ஆரம்பக் கல்விக்காக ஆறு கோடி செலவழிக்கிறோம். என்றாலும் கட்டாயக் கல்வியை ராஜ்யம் பூராவும் உடனடியாக அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறோம். வரும் ஆண்டிலாவது கண்டிப்பாகக் கட்டாயக் கல்வியை ஐந்தாவது, ஆறாவது வகுப்பு வரையிலும் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போதுள்ள பேசிக் எஜுகேஷன் முறையைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல வேண்டியிருக்கிறது. பொதுவாக ஆதாரக் கல்வி என்பது எல்லோராலும் ஆதரிக்கப்படவேண்டிய விஷயம். எந்தமுறையில் நடைபெறவேண்டுமோ அந்த முறையில் நடைபெற்றால் நல்ல பயன் உண்டாகும். நம் நாட்டைத் தொழில்மயமாக்குவதற்கு பேசிக் எஜுகேஷன் நல்ல முறையில் அமைந்தால் பயன்தரும். ரஷியாவையோ, வேறு எந்த நாட்டையோ எடுத்துக்கொண்டாலும் தொழில் வளர்ச்சி இண்டஸ்ட்ரியல் பயாஸ் என்ற முறையில் கல்வி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால் நம் நாட்டில்தான் க்ராப்ட்ஸ் என்ற முறையில் ஸ்பின்னிங் மாத்திரம்—நூல் நூற்றல்—அநேகமாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. க்ராப்ட்ஸ் என்றாலும் அநேகம் இருக்கின்றன. வீவிங், கார்ப்பெண்டரி முதலிய பல இருக்கும்போது ஸ்பின்னிங் ஒன்று மாத்திரம்

[Sri K. Ramachandran] [8th April 1958

வற்புறுத்தப்பட்டு வருவதைப் பார்க்கும்போது ஏதோ கட்சிப் பிரசாரத்திற்
காக கதர் இயக்கக் கொள்கைக்காக மட்டும் இவை பயன்படுத்திக் கொள்
கிருர்களோ என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே நம்முடைய ராஜ்
யத்திலும் ஆதாரக்கல்வி என்பது தொழில் வளர்ச்சிக்குப் பயன்படக் கூடிய
வகையில் அமையவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அப்
போதுதான் இந்தக் கல்வித்திட்டம் வெற்றிபெற முடியும் என்பதாகவும்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சென்ற சில தினங்களுக்கு முன்பு
ஒரு பெரிய கல்வி அதிகாரி இருபது இருபத்தைந்து நாட்கள் ஆதாரக்
கல்விப் பயிற்சியைப் பெற்றதாகவும் அந்தக் காலத்தில் முடிச்சு இல்லாமல்
நூல் நூற்க மட்டும்தான் கற்றுக் கொண்டதாகவும் சொன்னர். பயிற்சி
முடிந்து வந்த பிறகு அது அவருக்கு எந்தவிதமான பயனையும் அளிக்க
வில்லை. ஆகவே க்ராப்ட்ஸ் என்று சொல்லி வெறும் ஸ்பின்னிங் மாத்
திரம் வைத்து அதை ஆதாரக் கல்வி என்ருல் அதனுல் எந்தவிதமான
பயனும் ஏற்படாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு
இப்போது இருக்கக் கூடிய முறையைப் பார்த்தால் இந்த ஆண்டிலும்
கூட எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் விஸ்தரிக்கப்படவில்லை என்று சொல்
லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலும் சில பள்ளிக்கூடம் எதிர்ப்
பாக இருக்கிறது என்று சொல்கிருர்கள். தொழில் முறையில் கல்வி
அமையவேண்டும். அந்த முறையில் சீர்திருத்தி அமைத்தால் நல்ல பயன்
தரும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மிட் டே மீல்ஸ் அதோடு சேர்ந்திருக்கிற விஷயம். ஆதலால் அதைப்
பற்றி ஒரு வார்த்தை சொல்ல ஆசைப்படுகிறேன். திட்டம் நல்ல திட்டம்.
பஞ்சாயத்துகள் இல்லாத கிராமங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு—
கஷ்டப்படுகிற மக்களுக்கு உண்மையிலேயே பயன்படும். ஆனுல் இதுவும்
ஏட்டளவில்தான் இருக்கிறதென்று சொல்கிருர்கள். அதுவும் உண்மை
யில் பயன்படக்கூடிய அளவில் அமையவேண்டும்.

அதோடு பேசிக் எஜுகேஷன், செகண்டரி எஜுகேஷன் இரண்டுக்கும்
ஓர் இணைப்பு இருக்கவேண்டும். இப்போது அப்படியில்லையென்றுதான்
சொல்லவேண்டியிருக்கிறது. அந்த இணைப்பைச் சரியான முறையில் ஏற்
படுத்த நல்ல திட்டம் வகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இருக்கிற செகண்டரி எஜுகேஷனில்கூட தனியார் பள்ளிக்
கூடங்களில் ஓரளவு நல்லமுறையில் நடப்பதாகத் தெரிகிறது. ஆனுல்
அரசாங்கப்பள்ளிகளில் சரியான முறையில் நடப்பது இல்லை. நல்ல திறமை
யானவர்களை நியமிப்பது இல்லை. மாற்றலாகிவிட்டாலும் உடனே ஆசிரி
யரைப் போடுவது இல்லை என்பதாகப் பலவிதமான புகார்கள் இருக்கின்றன.
இதையெல்லாம் சரியானமுறையில் திருத்தி அமைக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக வாத்தியார்களைப் பொறுத்தவரை
யில் சம்பள விகிதங்களை மாற்றியமைக்கவேண்டும். அவர்களுக்கு இப்போது
இருக்கிற சம்பளம் காணுது. கீழ் வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொடுப்ப
தற்காக அவர்களின் சம்பளத்தைக் குறைப்பதில் அர்த்தமில்லை. ஒரே
படிப்பு படித்தவர்களுக்கு எந்த இடத்திலும் ஒரே சம்பளம் கொடுப்பதுதான்
முறை. இரண்டாவது வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுத்தால் ஒரு
சம்பளம், மூன்ரும் வகுப்பில் சொல்லிக் கொடுத்தால் ஒரு சம்பளம்,
நான்காவது வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுத்தால் ஒரு சம்பளம்,
ஐந்தாவதில் சொல்லிக் கொடுத்தால் ஒரு சம்பளம் என்று வைப்பது
அவ்வளவு நல்லதல்ல. பள்ளிக்கூடங்களில் அவர்கள் சரியாக பாடம்
கற்பித்துக் கொடுக்க வேண்டுமென்ருல் அவர்கள் எல்லோருக்கும் ஒரே
மதிப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல்,
ஷிங்கிள் டீச்சேர்ஸ்-ஐப் பொறுத்த வரையில் ஒன்று அவர்களுக்கு கொடுக்
கப்படும் ஸ்டைபண்ட், இரண்டாவதாக அவர்களது டிரெயினிங் இவைகளை
எடுத்துக் கொண்டால் அவர்கள் அன்எம்ப்ளாய்மெண்ட் ரிலீப் ஸ்கீமில்
வேலை பார்க்கக் கூடியவர்கள். அவர்கள் ஏதோ சுமாராக சம்பளம் வாங்
கிக் கொண்டிருந்தார்கள். ஆனுல் இப்பொழுது, அவர்களுக்கு ட்ரெயினிங்



8th April 1958] [Sri K. Ramachandran]

சமயத்தில் ஸ்டைபெண்ட் 18 ரூபாய் தான் கொடுக்கப் படுகிறது. புதிதாக
ட்ரெயினிங்குக்கு செல்பவர்களின் நிலை வேறு. ஆகவே, இந்த ஸ்டை
பண்ட்டை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மூன்று
வருஷங்கள் அவர்கள் வேலை பார்த்து விடுகிருர்கள். இந்த பேஸிக்
ட்ரெயினிங் பயிற்சி இரண்டு வருடங்கள் என்று இருப்பது அதிகம்; இரண்டு
வருடங்கள் வேண்டியதில்லை, ஒரு வருடமே போதுமானதாகும். அடுத்தபடி
யாக, பாலிடெக்னிக்ஸ். பாலிடெக்னிக்ஸ் ஜில்லாவிற்கு ஒன்ருவது ஏற்படுத்தி
அதில் அதிகம் மாணவர்கள் படிக்க வசதி செய்து கொடுக்கப் பட வேண்
டும். அப்பொழுதுதான் நம் நாட்டில் தொழில் கல்வி வளர்ச்சி அடைந்து
நாட்டிற்கு பயன் அளிக்கும் நிலை ஏற்படும். இப்பொழுது ஜில்லாவிற்கு
ஒன்று இல்லை. ஏதோ சில முக்கியமான இடங்களில் அவைகள் ஏற்படுத்
தப் பட்டிருக்கின்றன. அதனுல் நாம் அதிக பயனை எதிர்பார்க்க முடி
யாது. அடுத்தபடியாக, மெடிக்கல், இன்ஜினியரிங் காலேஜ்களில்
அதிகம் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு வசதியான முறையில் கூடுதல்
ஸீட்கள் அவைகளில் ஒதுக்கி இன்னும் கூடுதல் மெடிக்கல் காலேஜ்களும்,
என்ஜினியரிங் காலேஜ்களும் நாம் ஏற்படுத்த வேண்டிய நிலையில் இருக்
கிருேம். என்ஜினியரிங் லைனில் எப்பொழுது பார்த்தாலும் 250 போஸ்ட்
கள் வேக்கன்டாயிருக்கின்றன. ஆகவே, அதிகம் என்ஜீனியரிங், மெடிக்
கல் கிராஜ்வேட்ஸ் நமக்கு கிடைக்கும் விதத்தில் வேண்டிய நடவடிக்கைகள்
எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, கல்லூரிகளில் தமிழை
பாட மொழியாக்க வேண்டிய முயற்சியையும் எடுத்துக் கொள்ளவேண்டு
மென்றும் கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri M. P. PERIASAMI**: சேர்மென் அவர்களே, இந்த கல்வி
மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல நான் முன்
வந்துள்ளேன். முன்பு நம் மாகாணத்தில் ரொம்பக் குறைவாகத்தான்
பள்ளிக்கூடங்கள் இருந்தன. ஆனுல் நமது காங்கிரஸ் அரசாங்கம் வந்த
வுடனேயே சின்னச் சின்ன கிராமங்களில் எல்லாம் 500 ஜனத்தொகை
யுள்ள எல்லாக் கிராமங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்பாடு செய்யப் பட்
டிருக்கிறது. அதோடுகூட அநேகமாக படித்து வேலையில்லாது இருக்கக்
கூடியவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி வேலை
கொடுக்கப் பட்டிருந்தபோதிலும் அவர்களுக்கு சம்பளம் குறைவு என்பது
நம் எல்லோருக்கும் தெரியும். வேலை கொடுத்து விட்டோமே தவிர அவர்
களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் மிகவும்
கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். அவர்களின் சம்பளத்தை, அடிப்படைச்
சம்பளம் 30 என்று இருப்பதை குறைந்தது 50 ரூபாய் என்ருவது வைத்
தால்தான் அவர்களுக்கு நாம் ஒரு சிறு நன்மையாவது செய்தவர்களா
வோம். அப்படியானுல்தான் அந்த ஆசிரியர்களுக்கும் பள்ளிக்கூடங்
களில் பாடம் சொல்லிக் கொடுக்க ஒரு உற்சாகம் இருக்கும், என்று தெரி
வித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக, ஓராசிரியர்கள் அநேகமாக எல்
லாக் கிராமங்களிலும் போடப் பட்டிருக்கிருர்கள். அந்த ஓராசிரியர்கள்,
மூன்று நான்கு வருடங்களாக சொல்லிக் கொடுத்து வந்திருக்கிறவர்கள்,
எல்லோரும் இன்று ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளுக்கு பயிற்சிக்கு அனுப்ப
ஒன்ருகத் திரட்டப்பட்டு வருகிருர்கள். அவர்கள், 60, 70 என்று சம்பளம்
வாங்கிக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது ஸ்டைபன்டைக் கொண்டு மாத்
திரம் படித்து வருகிருர்கள். இவர்களுக்கும், தனிப்பட்ட முறையில் பயிற்
சிப் பள்ளியில் படித்து வருகிறவர்களுக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. அங்கு,
கல்யாணம் ஆகாத மாணவர்கள் படிக்கிருர்கள். அவர்களுக்கு என்ருல்
அது போதும். இந்த ஓராசிரியர்களாக மூன்று நான்கு வருடங்கள் இருந்து
வேலை செய்து வந்த ஆசிரியர்களுக்கு கல்யாணம் ஆகி அவர்கள் இரண்டு
மூன்று குழந்தைகளையும் விட்டு விட்டு பயிற்சிப் பள்ளிக்குச் சென்று விடுகிருர்
கள். அவர்கள் இந்த 18 ரூபாயைக் கொண்டு எப்படி காலம் தள்ள முடியும்?
60, 70 என்று சம்பளம் வாங்கி வந்த ஆசிரியர்கள் எப்படி 18 ரூபாயைக்
கொண்டு ஜீவனம் நடத்த முடியும்? அவர்களின் மனைவி மக்களின் நிலை
என்ன வாகும்? அதோடு இந்த பேஸிக் ட்ரெயினிங் இரண்டு வருஷம் என்றி
ருப்பதை ஒரு வருஷமாகக் குறைத்து விட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்
கிறேன். இரண்டு வருஷம் அப்படி படித்து விட்டு ஒரு ஆறு மாதம் பேஸிக்
எடியூக்கேஷன் பள்ளிகளில் சேரவேண்டியிருக்கிறது. சேலத்தில்

[Sri M. P. Periasami] [8th April 1958

மோகனூரில் கிட்டத்தட்ட 200 உபாத்தியாயர்கள் படித்து வருகிறார்கள். பேசிக் எடியூக்கேஷன் அங்கு கிடையாது. அதை உடனடியாக பேஸிக் ஸ்கூலாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லாவிட்டால் பேஸிக் ட்ரெயினிங்கை ஒரு வருஷமாக குறைத்து சொல்லிக் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக மத்தியானச் சாப்பாடு. ஏழைப் பிள்ளைகள் எல்லோருக்கும் மத்தியான உணவு அளிக்கப்பட்டு வருகிறது. அது மிகவும் முக்கியமான விஷயமாகும். நமது முதன் மந்திரியவர்களின் திட்டப்படித்தான் இது ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் பெரிய மனது வைத்து ஏழைப் பிள்ளைகளுக்கு மத்தியானச் சாப்பாடு கொடுக்க ஏற்பாடு செய்து, அதற்கு நம் கல்வி இலாகா உயர்தர அதிகாரியான டைரக்டர் அவர்கள் சில கிராமங்களைச் சுற்றிப் பார்த்து இது பற்றி பிரசாரம் செய்து பொது மக்களிடம் இதுபற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தியதோடு ஏழைப்பிள்ளைகளுக்கு இலவச மத்தியானச் சாப்பாடு கொடுக்க கிராமத்தார் பண உதவியும் செய்து வருகிறார்கள். அது போற்றத்தக்கதுதான். அதற்கு அரசாங்கமும் தக்க மான்யம் கொடுக்க வேண்டும். நாமக்கல் தாலுகாவில் கந்தம்பாளையம் என்ற ஊரில் ஏற்கெனவேயே ஒரு ஹையர் எலிமெண்ட்டரி ஸ்கூல் இருந்தது. அதை ஒரு உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று கட்டிடம் கட்டியாகி விட்டது. ஆனால் இப்பொழுது அது எந்தக் காரணம் கொண்டோ அங்கிருந்து மாற்றப் பட்டு விட்டது. கல்வியமைச்சர் அவர்கள் இந்த வருஷத்தில் அப்படி ஒரு உயர் நிலைப் பள்ளியை அங்கு ஏற்படுத்துவதாக கூறியிருக்கிறார். ஆகவே, எப்படியாவது, இந்த வருஷத்திலாவது கந்தம்பாளையத்தில் ஒரு உயர் நிலைப் பள்ளியை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். சேலத்தில் ஒரு முனிசிபல் கல்லூரி மட்டும் இருக்கிறது. நாமக்கல் தாலுக்காவில் ஒரு கல்லூரி கட்ட போதுமான நிலங்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் தக்க மான்யம் கொடுத்து அதைத் தொடங்க வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட, சேலம் டௌனில் ஒரு பெண் கல்லூரி திறப்பதற்காக ஒரு முயற்சி நடைபெற்று வருகிறது. அதையும் ஏற்பாடு செய்யவேண்டும். சேலம் ஜில்லாவில் கிட்டத்தட்ட இரண்டு மூன்று கல்லூரிகள் இருந்தால்தான் சேலம ஜில்லாவில் உள்ள மாணவர்கள் மற்ற ஊர்களுக்குப் போகாமல் அங்கிருந்து கொண்டே படிக்க முடியும். அதோடு, ஹரிஜனங்கள் படிப்பதற்காக கிராமங்களில் அநேகம் உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அங்கு ஹரிஜனங்கள் மட்டுமல்லாமல் பாக்கி எந்த ஜாதியில் சேர்ந்தவர்களானாலும் சரி, ஏழைப்பிள்ளைகள் படிக்க வாய்ப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. நாமக்கல் தாலுகால் இரண்டு ஹைஸ்கூல்கள் இருந்தன. இப்பொழுது, நம் காங்கிரஸ் சர்க்கார் வந்தபிறகு, கிட்டத்தட்ட 10, 11 ஹைஸ்கூல்கள் அங்கு வந்து விட்டன. நமது அரசாங்கத்தைக் குறை கூறுகிறவர்கள் அதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சின்னச் சின்ன கிராமங்களில் எல்லாம் நம் அரசாங்கம் பள்ளிக்கூடங்கள் திறந்திருக்கிறது. அது குறித்து எல்லோரும் அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, ஒரு உபாத்தியாயர் 50, 60 பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதென்றால் அது மிகவும் கஷ்டமான காரியமாகும் என்று உபாத்தியாயர்கள் தங்களது குறைகளை சொல்கிறார்கள். உபாத்தியாயர்கள் எங்கு பார்த்தாலும் கான்பரன்ஸ் போட்டு தங்கள் குறைகளை எடுத்துக் கூறுகிறார்கள். அவைகளையெல்லாம் அரசாங்கம் உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேசமயத்தில் உபாத்தியாயர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுகிறேன். உபாத்தியாயர்கள் தங்களது குறைகளைத் தெரிவிக்க ஒன்றாகத் திரண்டு கூட்டங்கள் போடுவது அவசியமே. ஆனால் அவர்கள் சாத்வீகமான முறையில் தங்களது குறைகளை எடுத்துச் சொல்வார்களேயானால் அரசாங்கம் அவைகளை உடனடியாகக் கவனிக்கும். அதற்கு மாறாக, அரசரங்கத்திற்கு விரோதமாக நடந்தால் அரசாங்கத்திற்கு கஷ்டந்தான் ஏற்படும். ஆகவே, இவைகள் ஒன்றும் இல்லாமல் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கத்தினிடம் கேட்க வேண்டும். அதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.



8th April 1958]

**Sri K. L. RAMASWAMI** : சட்டமன்ற நாதர் அவர்களே, இன்று கல்வி அமைச்சர் அவர்கள் நாட்டின் மிகவும் இன்றியமையாத கல்வி மானியத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். நான் மனதார வரவேற்று சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக நாம் சுதந்திரம் பெற்ற பின் நாட்டின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருப்பது கல்வியின்மைதான் என்பதை நமது அரசாங்கம் நன்றாக உணர்ந்து இருக்கிறது. அது ஒரு சமூக கேடு என்பதை உணர்ந்து சமூக ரீதியில் நாட்டில் எல்லா மூலை முடுக்குகளிலும் கல்வியின்மையை போக்குவதற்காக பல திட்டங்களை நமது அரசாங்கம் வகுத்திருக்கிறது. அந்த திட்டத்தில் எல்லோருக்கும் இலவச கட்டாய ஆரம்ப கல்வி என்பது மிகவும் வரவேற்கக்கூடியதே. அது மட்டுமல்ல, இப்போது இருக்கும் நிலையில் கல்வியின் போக்கை எடுத்துக்கொண்டால் நாட்டின் கல்வியின் தரம் குறைந்துவிட்டது, மாணவர்களிடையே கட்டுப்பாடும் ஒழுக்கமும் சிதைந்து விட்டது, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொடர்பில்லை. இவ்விதம் பலவிதமான குறைகளை கூறுகிறார்கள். அதோடு கல்வியினால் வேலையில்லா திண்டாட்டமும் அதிகரித்து கொண்டு போகிறது. இதுவரையிலும் ஒரு தொழிலை அதாவது இயற்கையாக இருந்து வருகிற தொழிலை மறந்து விட்டு, வேறொரு தொழிலை கற்றுக்கொள்ளும் நோக்கத்துடனேயே இதுகாறும் கல்வி திட்டம் அமைந்திருந்தது. ஆனால் இப்போது சுதந்திர சர்க்கார் அந்த திட்டத்தை மாற்றி நல்ல முறையில் அமைத்திருக்கிறார்கள். அதாவது கல்வி கற்ற பின் வாழ்க்கையில் நல்ல தொழிலை தேடிக் கொண்டு அரசாங்கத்தினுடைய ஆதரவை நாடாமல் அவர்கள் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன், அதற்கான முறையில் ஆதார கல்வியை நாட்டில் புகுத்தியிருக்கிறார்கள். அதோடு நாட்டில் கல்வியின்மையையும் போக்க வேண்டும் என்று சீரிய நோக்கமும் இதில் அடங்கியிருக்கிறது. இந்த முறையில் இருக்கின்ற சமயத்தில் நாட்டில் வறுமையும் தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. இதற்காக படிக்கும் ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவ்விதம் அவர்களை தயார்படுத்தி நாட்டை ஆளக்கூடிய முறையில் நாம் செய்து வருகிறோம். இந்த திட்டமானது சீரிய முறையில் வெற்றி பெறும் என்று நமக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த திட்டம் மேலும் முன்னேற வேண்டுமானால், அவர்களுக்கு இருக்கக்கூடிய நோக்கத்தை வெற்றியாக நிறைவேற்ற வேண்டுமென்றால், முதலில் அரசாங்கம், பெற்றோர்கள், அடுத்தபடியாக ஆசிரியர்கள், இவ்விதம் மூன்று பேர்களுடைய ஒத்துழைப்பும் இதில் இருக்கவேண்டும். இந்த கூட்டுறவு இருந்தால்தான் வெற்றி காண முடியும். ஆசிரியர்களுடைய நிலையை எடுத்துக்கொண்டால் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்காக இதுவரையிலும் சிந்திக்கும் வாய்ப்பு அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். முக்கியமாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு சிறு வயதிலேயே நல்ல பழக்க வழக்கங்களை கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்களை நல்ல பழக்க வழக்கமுள்ளவர்களாக ஆக்கும் பொறுப்பில் ஈடுபட்டிருப்பவர்கள் ஆரம்ப ஆசிரியர்கள். அவர்களுடைய நிலையை நரம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். அம்மாதிரிப்பட்ட அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி கொடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய கோரிக்கை. ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தை ஓரளவு உயர்த்தியிருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் பல்வேறு இடங்களில், மூலை முடுக்குகளில் ஊர் ஊராக சோர்ந்து கிடக்கிறார்கள். அவர்கள் தனித்தனியாக இருப்பதால் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் நல்ல முறையில் இல்லை. ஆரம்ப ஆசிரியர்களை எடுத்துக் கொண்டால் முதலாவது பொருளாதார துறையில் அவர்களுடைய வாழ்க்கை சிறந்ததாக இல்லை. சமூக ரீதியில் எடுத்துக்கொண்டாலும், சமூகத்தில் அவர்களுக்கு சிறந்த இடம் தரப்படவில்லை. மற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் இவர்களுக்கும் வேறுபாடு காட்டப்படுவதில்லை. ஆரம்ப ஆசிரியர்களுக்கும், மற்ற அரசாங்க ஊழியர்களுக்கும் வேறுபாடு வகுக்க வேண்டும். அந்த மாதிரி விஷயங்களில் கவனிக்கும்போது ஒரு சில குறைகள் இருக்கிறது. அதாவது கவர்ன்மெண்ட் காண்டக்ட் ரூல்ஸ், கான்பிடன்ஷியல்

[Sri K. L. Ramaswami] [8th April 1958

ரெஜிஸ்டர் போன்றவைகள் ஆசிரியர்களுடைய தகுதிக்கு இடையூறாக இருக்கிறது. அதோடு ஆசிரியர்கள் புத்தகங்களை எழுதக்கூடாது என்கிற தடையும் இருக்கிறது. அவர்கள் ஏதாவது புத்தகங்கள் எழுத விரும்பினால் அதற்கு சர்க்கார் அனுமதி பெற வேண்டும் என்று இருக்கிறது. இது ஆசிரியர்களுடைய தொழிலுக்கு இடையூறாக இருக்கிறது. நீர் இறைக்க இறைக்கத்தான் நீர் தோன்றிக்கொண்டு இருக்கும். அது போல ஆசிரியர்கள் அந்தத் துறையில் மேலும் மேலும் பயன் பெறுவதற்கு, அவர்களுடைய தொழிலை வளப்படுத்திக்கொள்ள இது இடையூறாக இருக்கிறது. ஆகவே அவர்கள் புத்தகங்கள் எழுதினால் அவர்களுடைய தொழில் நன்றாக சிறக்கும். ஆகவே அவர்கள் புத்தகம் எழுதுவதற்கு தடை எதுவும் இருக்கக்கூடாது என்பது என் கருத்து. அதோடு ஆசிரியர்களுடைய சம்பளத்திலும் வேறுபாடு இருக்கிறது. அந்த வேறுபாடுகளை நீக்குவதற்கு வேண்டி சர்க்கார் சிந்தித்து வருகிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த சம்பள வேறுபாடுகளை நீக்கி ஒழுங்குபடுத்தி நல்ல முறையில் ஒரு திட்டத்தை வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் வகுக்கப்படும் சமயத்தில் ஒன்றிரண்டு கருத்துக்களை மனதில் கொள்ள வேண்டும். உதாரணமாக இப்போது பள்ளிக்கூட நாட்கள் அதிகமாக இருக்கிறது. ஐந்து நாட்கள் என்று இருந்தது இப்போதுள்ள திட்டத்தின்படி ஆறு நாட்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. வேலை செய்யும் நாட்கள் அதிகமாகியிருக்கின்றன. தனிப்பட்டோர் நடத்தும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், சர்க்கார் நடத்தும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் சம்பள வேறுபாடு இருக்கிறது. இந்த சிறிதான வேறுபாட்டை இல்லாமல் செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்து. அது போலவே கல்லூரி ஆசிரியர்களில் தமிழ் ஆசிரியர்களுக்கு பாரபட்சம் காண்பிக்கப்படுகிறது என்று நான் சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரே வகுப்புக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்கள் குவாலிபிக்கேஷன் வேறாக இருந்தாலும் அவர்கள் செய்யும் வேலை ஒன்றாகத்தான் இருக்கிறது. இவ்விதம் ஆசிரியர்களில் அஸிஸ்டண்ட் லெக்சரர் கிரேட் ஒன்று என்றும், கிரேட் இரண்டு என்றும் இரு வகுப்பாக மொழிப்பிரிவில் இருந்து வருகிறார்கள். மொழிப்பிரிவில் ஒரே வேலையை செய்யும் ஆசிரியர்களிடையில் கிரேட் இரண்டுக்கு ரூபாய் 85-ம், கிரேட் ஒன்றுக்கு ரூபாய் 150 என்றும் வேறுபட்டு இருக்கிறது. முன்பெல்லாம் கிரேட் இரண்டு ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்றிருக்கவேண்டும் என்று இருந்து வந்தது. இதனால் ஆசிரியர் பயிற்சி இல்லாத காரணத்தால் அவர்களுடைய சர்வீஸ் எல்லாம் ரெகுலரைஸ் செய்யாமல் இருந்து, அதன்பின் மதிப்பிற்குரிய டயரக்டர் அவர்கள் 1956 டிசம்பர் முதல் இந்த கிரேட் இரண்டு ஆசிரியர்களுக்கு இந்த பி.டி. பயிற்சி வேண்டியதில்லை என்று விதிகளை தளர்த்தி இருக்கிறார்கள். அதனால் சுமார் எட்டு ஆண்டு, ஒன்பது ஆண்டுகள் சர்வீஸ் உள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது இவர்களுடைய சர்வீஸ் 1957 ஜூன் மாதத்திலிருந்து ரெகுலரைஸ் செய்யப்படும் என்று இருக்கிறது. இதனால் அவர்களுடைய இன்கிரிமெண்ட்டை அவர்கள் இழந்து வருகிறார்கள். அவர்களுக்கு இருக்கிற இந்த குறையையும் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு வித்வான் அல்லது புலவர் பட்டமும், எஸ்.எஸ்.எல்.ஸி.-யும் படித்தவர்கள் கிரேட் இரண்டு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கிரேட் ஒன்று பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. அவர்கள் செய்யக்கூடிய வேலையிலும் சம்பள வேறுபாடு இருக்கிறது. ஆகவே இந்த வேறுபாட்டை நீக்குவதற்காக கிரேட் ஒன்று, இரண்டு என்றிருப்பதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக கல்லூரிகளில் அதிகப்படியான மாணவர்கள் படிப்பதற்கு வசதிகள் இல்லை. இந்த குறையை சர்க்கார் போக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

10-40 a.m. **SRI N. K. PALANISAMI** : கனம் தலைவர் அவர்களே, ஒரு வகுப்பில் 25 அல்லது 30 பிள்ளைகள் இருக்கக்கூடிய நேரத்திலேயே ஸ்டேக்நேஷன் ஏற்படுகிறது. முதலாவது வகுப்பிலே ஐந்து பேர்கள் இருந்தால், ஐந்தாவது வகுப்பில் இரண்டு பேர்கள்தான் இருப்பார்கள். அதற்கிடையில் மூன்று பேர்களின் படிப்பு நஷ்டமாகிறது. அந்த அளவுக்குப் பணமும் விரயமாகிறது. இப்பொழுது 25 பிள்ளைகள் என்றிருப்பதை 40 ஆக



8th April 1958] [Sri N. K. Palanisami]

வைத்து, அடிஷனல் உபாத்தியாயர்கள் போடவில்லை என்றால், இன்னும் ஸ்டேக்நேஷனும், வேஸ்டேஜும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய வகுப்புகளிலே உள்ள மாணவர்களுடைய விஷயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். மேல் வகுப்புகளிலே கொஞ்சம் கவனம் குறைவாயிருந்தால் கூட பரவாயில்லை. ஆனால் சிறிய மாணவர்களிலே சிலர் சீக்கிரமாகப் புரிந்துகொள்வார்கள், சிலருக்கு அவ்வளவு சீக்கிரமாகப் புரியாது. அதற்குத் தகுந்தமாதிரி தனித்தனி மாணவர்களின் தரத்தைப் பொறுத்து ஆசிரியர்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும். ஒரு வகுப்பில் 50 பிள்ளைகள் படிக்கவேண்டுமென்று சொன்னால், எப்படி தனிப்பட்ட அட்டென்ஷன் கொடுக்க முடியும் என்று கேட்கிறேன். இப்பொழுதே கல்வியின் தரம் குறைந்திருக்கிறது. இதனால் மேலும் குறைவதற்கான வாய்ப்பு ஏற்படும். 20 அல்லது 25 பிள்ளைகள் இருக்கக்கூடிய இடங்களிலே 40 அல்லது 50 பிள்ளைகளை அடைத்து வைக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதிகப்படியான கட்டிடங்களைக் கட்டுவதற்கும் பண வசதி கிடையாது. ஆகவே இதையெல்லாம் கவனித்து, கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு முயற்சிக்க வேண்டும். கீழ் வகுப்புக்களில் 30 பிள்ளைகள் என்று வைத்துக்கொள்ளலாம். மேல் வக்ப்புகளில் வேண்டுமானால், 35 அல்லது 40 என்று வைத்துக் கொள்ளலாம். 40 பிள்ளைகள் ஆனவுடனே அதிகப்படியான உபாத்தியாயர்கள் போடவேண்டும். அம்மாதிரிச் செய்யாவிட்டால், நாம் ஏதோ பணம் செலவு செய்கிறோம் என்று இருக்குமே தவிர கல்வியின் தரம் உயராது. பையன்களும் முன்னேற்றம் அடையமாட்டார்கள்.

ஆசிரியர்களின் நிலைமை சாதாரண பியூன்களைவிட மோசமாக இருக்கிறது என்று பண்டித நேரு அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. ஸெகண்டரிப் பள்ளிகளிலே இனிமேல் 2,700 மணி நேரம் வேலைக்குப் பதிலாக 4,000 மணி நேரம் வேலை செய்யவேண்டும். 180 நாட்களுக்குப் பதிலாக 200 நாட்கள் வேலை செய்யவேண்டும். அதைத் தவிர, அதிகப்படியான பையன்களுக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இதற்குப் பிறகு எல்லாம் கூட அவர்களுக்கு பழைய சம்பளமேதான் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. சுதந்திரம் பெறுவதற்கு முந்தி என்ன சம்பளம் இருந்ததோ அதையே இன்னமும் பெற்றுக் கொண்டு வாழ்க்கையில் கஷ்டப்படுகிறார்கள். நாம் பேசுகின்ற "சோஷலிஸம்" காகிதத்தில்தான் இருக்கிறது. நாம் சோஷலிஸத்தைப் பற்றிப் பேசுகிறோம். யாருக்காகப் பேசுகிறோம் என்று தெரியவில்லை. சாதாரண ஒரு உபாத்தியாயருக்கு, ஒரே கிரேடிலுள்ளவருக்கு, ஸ்தல ஸ்தாபனப் பள்ளிக்கூடங்களிலே சேர்ந்தால் ஒருவிதச் சம்பளம், தனிப்பட்ட எய்டெட் பள்ளிகளில் சேர்ந்தால் வேறுவிதச் சம்பளம், இன்னும் ஹைஸ்கூல்களில் சேர்ந்தால் இன்னொரு சம்பளம் என்ற தராதரம் இருப்பது என்ன காரணத்தினாலேயோ என்று எனக்குத் தெரியவில்லை. சர்க்கார் ரிப்போர்ட்டில் இந்த தராதரத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த அளவுக்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்\ என்று தெரியவில்லை. ஜூன் மாதத்திலிருந்து இந்தப் புதுத் திட்டம் ஆரம்பமாகப் போகிறது. இதுவரை ஒன்றும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவில்லை.

"ஸ்பெஷல் பே, ஸ்பெஷல் அலவன்ஸ்" என்று 12 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் சம்பள உயர்வு கேட்டால் ஐந்து ரூபாய் கொடுத்திருக்கிறோமேயென்று சொல்லுகிறார்கள். அலவன்ஸ் கொடுங்கள் என்று கேட்டால், 7 ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஏன் இது இரண்டையும் சேர்த்துச் சம்பளமாகக் கொடுக்கக் கூடாது என்று கேட்கிறேன். இந்த ஸ்பெஷல் அலவன்சும் சில இடங்களிலே கொடுக்கப்படுவதில்லை. வாணியம்பாடி ராமகிருஷ்ணா ஹைஸ்கூலிலே அந்த அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. திருப்பத்தூர் வெங்கடேஸ்வரா ஹைஸ்கூலில் இந்த அலவன்ஸ் கொடுக்கப்படவில்லை. கார்ப்பொரேஷன் பள்ளிகளில் ஆசிரியர்கள் லீவு எடுத்தால் பாதி அலவன்ஸ்தான் கொடுக்கப்படுகிறது.

ஏற்கெனவே கொடுத்த சிறிய உயர்வு கூட இந்த ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாட முறையில் மாற்றம் ஏற்படவேண்டும். இன்னும் " **Black hole tragedy of Calcutta** " வைப்பற்றி படிக்க வேண்டிய துர்ப் பாக்கியமான நிலையில் நமது மாணவர்கள் இருக்கிறார்கள். மேல் வகுப்பு களில் "நான்டீடெயில்டு" பாடத்தில் அந்நியர்களைப் பற்றி இன்னும் படிக்க வேண்டியிருக்கிறது. நம் நாட்டிலே டாகூர் போன்ற கவிஞர்கள் இருந் திருக்கிறார்கள். ஏன் அவர்களைப்பற்றிய பாடங்களை வைக்காமல், இன்னும் அந்நியர்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும் ? மாணவர்களுக்கு கேள்விகள் போடும்பொழுதுகூட " **yes** " அல்லது " நோ "-வா என்று கேட்கிறார்கள். எல்லாவற்றிற்கும் மாணவர்கள் "நோ" என்று போட்டு விட்டாலும் கூட பாதி "ரைட்டாகப்" போய்விடும். இம்மாதிரி "**gambling**" முறை ஏன் இருக்கவேண்டுமென்று கேட்கிறேன். "லிட்டிலன்ஷிப்" கிளா ஸிலே ஒன்றும் சொல்லிக் கொடுப்பது கிடையாது. அந்த பீரியடிலே மாணவர்களை வெளியே சுற்ற ,விடுகிறார்கள். அந்த முறையை மாற்றி சரியான பாட திட்டத்தை வகுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதாரக் கல்வியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். அச்சிடப்பட்ட முதல் புத்தகம் இருக்கிறதா என்பதே சந்தேகம். ஆசிரியர் போர்டில் என்ன எழுதுகிறாரோ அதைத்தான் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. 40 பையன்களும் அந்த முறை யிலே உள்ள கருவிகளையெல்லாம் உபயோகித்து தேர்ச்சி அடைகிறார்கள் என்று சொல்ல முடியாது. அடுத்தபடியாக "இண்டஸ்டிரியல் பயஸ்" என்றிருக்கிறது. உண்மையிலே அது நல்ல முறைதான். சில பள்ளிக் கூடங்களிலேதான் இதை அமுலுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். எஞ்சினியரிங் கல்வியைப் போதிக்கக்கூடிய முறையில் எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் இந்த முறையைக் கொண்டு வந்தால் நலமாக இருக்கும். இப்பொழுது இருக்கக்கூடிய ஆதாரக் கல்வி எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இருக்கிறது. இன்னும் பரீட்சார்த்தத் திட்டமாகத்தான் இருக் கிறது. சாதாரணக் கல்வி என்றிருப்பதை "ஆதாரக் கல்வி" என்று போர்டிலே வேண்டுமானால் போட்டு மாற்றலாம். ஆனால் உண்மையிலே ஆதாரக்கல்விப் பள்ளிக்கூடங்களாக மாற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடை யாது.

கனம் அமைச்சர் அவர்கள் அண்ணாமலை பல்கலைக் கழகத்தைப் பற்றிப் பேசினார்கள். அங்கே நடந்த சம்பவத்தைப் பற்றி எல்லோரும் வருத்தப் படுகிறோம். 29-ம் தேதி வரையிலும் மாணவர்கள் கட்டுப்பாடாகவும், ஒழுங்காகவும் இருந்தார்கள் என்று மந்திரி அவர்களே சொல்லுகிறார்கள். பெண்கள் நாடகம் நடத்திக்கொண்டிருந்தபோதும் கூட கட்டுப்பாடாக இருந்திருக்கிறார்கள். திரும்பி வரக்கூடிய நேரத்தில் தான் தகராறு ஏற்பட்டது. ஒரு சிலருக்கு பெர்மிஷன் கொடுத்தார்கள். ஒரு சிலருக்கு பெர்மிஷன் கொடுக்கவில்லை. ஏன் ஒரு சிலருக்குப் பெர்மிஷன் கொடுக்க வில்லையென்பதுதான் கேள்வி. "உள்ளே விட மாட்டேன்" என்று அங்கேயுள்ள பியூன் சொல்லி ஒரு மாணவரின் சட்டையைப் பிடித்துக் கிழித்ததன் காரணமாக, மாணவர்கள் இம்மாதிரியான முறையில் நடந்து கொண்டார்கள். துணைவேந்தரிடம் சென்றார்கள். அவர் மறு நாள் காலையில் அவர்களை வரச்சொன்னார். மறுநாள் அங்கே சென்று அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது போலீசார் அவர்களைக் கைது செய்திருக் கிறார்கள். இந்த நிலைமை இன்று மட்டும் இருப்பதல்ல. அதற்கு முன்பே அங்கேயிருக்கிற வார்டன் பேரிலும், அதிகாரிகள் பேரிலும் இருக்கக்கூடிய அதிருப்தியான நிலைமைதான் இதற்குக் காரணம். ஆகவே இதை விசாரிப்பதற்கு சர்க்கார் ஒரு கமிஷனை நியமித்து யார் மீது குற்றம் என் பதைக் கண்டுபிடிக்கவேண்டும். பரீட்சைகள் எல்லாம் ஒத்திவைக்கப்பட் டிருக்கின்றன. எவ்வளவு பெரிய தப்பிதமாக இருந்தாலும் கல்லூரியைத் திறந்து மாணவர்கள் வரும்படியான நிலைமையை உண்டாக்கி, பரீட்சை களை நடத்தும்படியான நிலைமையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



**Sri N. MAHALINGAM :** மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர் 10-50 a.m.
களே, இன்றைய தினம் சபையின் முன்பு இருக்கும் கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மாகாணத்தில் கல்வி இலாகா நல்ல முறையில் வேலை செய்து வருகிறது. சர்க்கார் அறிக்கையில் குறிப்பிட்டபடி நமது மாகாண வருவாயில் சுமார் 20 சத விகிதத்திற்கும் அதிகமாகவே கல்விக்காக செலவழிக்கப்படுகிறது என்பது நாம் எல்லோரும் சந்தோஷப்படக் கூடிய சமாச்சாரம். நாம் இவ்வளவு அதிகமாக பணம் செலவு செய்யும்போது அதிலிருந்து பூரண பலன் கிடைக்கிறதா என்பதை நாம் மிகவும் யோசித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

இப்பொழுது முக்கியமாக எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் தேறக் கூடிய மாணவர்களின் தாம் ஓரளவு முன்பு இருந்ததைப் போல் இருப்பது இல்லை என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. அவர்கள் கல்லூரிகளில் சேரும்போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆங்கிலத்தில் எழுதுவதற்கும் பேசுவதற்கும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், என்று கல்லூரியில் இருக்கக் கூடிய் உபாத்தியாயர்களும், தலைவர்களும் சொல்கின்றனர். எஸ்.எஸ். எல்.ஸி. பரீட்டையில் தரத்தை உயர்த்த வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்போது சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது இருக்கும் பரீட்சை முறைதான் இந்தத் தரக் குறைவுக்கு முக்கியமான காரணமாக இருக்கிறது. கேள்விகள் சிறிய கேள்விகளாக கேட்கப்படுகிறது. " ஆம் " அல்லது " இல்லை " என்கிற பதிலைத்தான் இப்போது எதிர்பார்க்கிறார்கள். பாடங்களைப் படிக்காமலே, மாணவர்கள் இம்மாதிரி கேள்விகளுக்கு பதில் எழுதுவது சாத்தியமாக இருக்கிறது. அமெரிக்கா போன்ற நாடுகளில் இம்மாதிரி சிறிய கேள்விகள் கேட்கப்பட் டாலும், அங்கு குறைந்தது 60 மார்க்குகள் வாங்கினால்தான் தேர்ச்சி பெற்றதாக கருதப்படுகிறது. ஆனால் நம்முடைய தேசத்திலோ 30 அல்லது 35 மார்க்குகள் வாங்கினாலே தேர்ச்சி பெற்றதாக கருதப்படுகிறது. ஆகை யால் மேல் நாடுகளில் செய்வதை பூரணமாக செய்ய வேண்டியது அவசி யம். ஆகையால் சிறு கேள்விகளுக்கு ஒரு வார்த்தையில் விடைகள் எதிர்பார்க்கும் போது 30 அல்லது 35 மார்க்குகள் என்று இருப்பதை 60 ஆக உயர்த்த வேண்டும். அல்லது பரீட்சை முறையை மாற்றி அமைக்க வேண்டும்.

இங்கிலாந்து தேசத்தில் 10-வது வகுப்பில் பரீட்சை முறை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கு " **Three Tier System** " என்கிற முறை இருக்கிறது. ஒரே வகுப்பில் படிக்கும் மாணவர்கள் மூன்று வகை யான பரீட்சைகள் எழுதலாம். அங்கு உள்ள மாணவர்கள் எந்த பரீட்சை யை எழுதுவது என்பதை அவர்கள் தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். முதல் பரீட்சையில் தேரியவர்கள் கல்லூரி படிப்பு படிக்க முடியும். இரண்டாவது பரீட்சையில் தேறியவர்கள் தொழில் கல்வி ஸ்தாபனங்களில் சேருவதற்கு முடியும். இங்கிலாந்து நாட்டில் இருக்கும் கல்வி முறையைப் போல் நம் நாட்டிலும் பரீட்சையில் தேர்ச்சி செய்யக்கூடிய முறையை மாற்றி அமைக்கவேண்டியது அவசியம். அப்போதுதான் தரம் உயரும்.

இப்பொழுது பத்தாவதுவரையில் தாய் மொழியில் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. பிறகு மாணவர்கள் கல்லூரிக்குச் சென்றால், அங்கு ஆங்கிலத்தில் கல்வி போதிக்கும்போது அவர்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த வேண்டியது அவசியம். மாணவர்களை ஆங்கிலத்தில் நன்றாக பேசுவதற்கும் எழுதுவதற்கும் தயார் செய்ய வேண்டியது மிக வும் அவசியம். இப்போது பத்தாவதிலும் இந்த ஆங்கிலப்படிப்பின் தரம் குறைவாக இருப்பதினால் கல்லூரிகளுக்கும் பாலிடெக்னிக்குகளுக்கும் மாணவர்கள் செல்லும் போது மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அடுத்தபடியாக கல்லூரிகளுக்கு மான்யம் கொடுப்பது ஒரு முக்கிய விஷயம். ஒரு வருஷத்திற்கு உண்டான மான்யத்தை இரண்டாவது வருஷம்தான், " ஆடிட் " எல்லாம் முடிந்தபிறகுதான் சர்க்கார்

[Sri N. Mahalingam] [8th April 1958

கொடுக்கிறார்கள். அந்த மான்யம் நடப்பு வருஷத்திலேயே கிடைக்கும்படி செய்யவேண்டும். சாதாரணமாக ஒரு கல்லூரியில் எவ்வளவு பணம் செலவாகும் என்பது கல்வி இலாகாவுக்கு தற்சமயம் தெரிந்திருக்கும். ஆகையால் 100-க்கு 75 பங்கு மான்யமாவது நடப்பு வருஷத்தில் கொடுத்து விட்டு " ஆடிட் " முடிந்தபிறகு பாக்கி இருக்கும் 25 சத விகித மான்யத்தை கொடுக்கலாம். அப்படி இல்லாமல் இப்போது இருக்கக்கூடிய முறைப் படி ஒரு வருஷ மான்யத்தை அந்த வருஷம் முடிந்த பிறகு கொடுப்பது என்றால் தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகளில் பலவித கஷ்டங்கள் ஏற் படுகின்றன. ஆகையால் 75 சத விகித மான்யம் நடப்பு வருஷத்திலும், 25 சத விகிதம் " ஆடிட் " முடிந்த பிறகும் கொடுக்க வேண்டும் என்ற யோசனையை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். கல்வி இலாகாவில் இருக்கக்கூடிய அதிகாரங்கள் பரவலாக இருக்கவேண்டும். இப்போது சென்னையில் கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் உதவி டைரக்டர்கள் இருக்கிறார்கள். இந்த உதவி டைரக்டர்களுக்கு அதிகமான அதிகாரம் இருப்பது இல்லை. அவர்கள் அநேக விஷயங்களில் தாங்களாகவே முடிவு செய்ய முடிவது இல்லை. ஆகையால் அந்த பேபர்கள் எல்லாம் சென்னைக்கு வரும்படியான நிலை மை இருக்கிறது. சென்னையில் இருக்கும் டைரக்டர் அவர்களுக்கு கீழே இரண்டு உதவி டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. அதேபோல் ஜில்லாவில் இருக்கக்கூடிய உதவி டைரக்டர்கள் டிவிஷனல் இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்கு அதிகமான அதிகாரம் கொடுத்தால், ஆரம்ப பள்ளிகள், உயர்தர பள்ளிகள் சம்பந்தப்பட்ட உத்திரவுகளை சீக்கிரம் போடுவதற்கும் உதவியாக இருக்கும். அப்பொழுது " பவர்ஸ் டிசென்டிரலைஸ்டு " ஆக இருக்கும். இது எல்லோருக்கும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சர்க்கார் சிறு தொழில் கல்விக்காக " **Director of Technical Education** " என்று ஒரு பகுதியை தனியாக அமைத்திருக்கி றார்கள். இந்த முயற்சியை நாம் பாராட்ட வேண்டியதுதான். இம்மாதிரி எல்லா மாகாணங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அகில இந்திய தொழில் நுட்ப கழகத்தினுடைய கோரிக்கையுங்கூட. இப்போது ஏற்படுத்தியிருக்கிற " **Director of Technical Education** " என்பது " **Chief Engineer** " ஓடு சேர்த்து போடப்பட்டிருக்கிறது. அவர் தன் னுடைய இலாகா வேலையை பூர்த்தி செய்துவிட்டு இந்த இலாகாவின் வேலையையும் கவனிப்பது என்றால் மிகவும் சிரமம். தனியாகஒரு " **Director of Technical Education** " என்று ஏற்படுத்தினாலொழிய இந்த வேலைகளை பொறுப்பாக செய்ய முடியாது. நம்முடைய மாகாணத் தில் 8 என்ஜினீயரிங் காலேஜ்களும், 20-க்கு மேற்பட்ட பாலிடெக்னிக்கு களும் இருக்கின்றன. இவைகளின் வேலைகளை எல்லாம் கவனித்து, ஆராய்ந்து பார்த்து சரியானபடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றால் இதற்கு தனியாக ஒரு டைரக்டர் போட வேண்டும். இல்லாவிட்டால் எந்த நோக்கத்தோடு இந்தப் பகுதியை ஆரம்பித்தோமோ அந்த நோக்கம் பூரணத்துவம் அடையாது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

கல்வித்துறையில் ஒரு முக்யமான மாறுதல் செய்திருக்கிறார்கள். முன் பெல்லாம் லோயர் கிரேட், 3-வது பாரம் என்று இரண்டு மூன்று பிரிவுகள் இருந்துகொண்டிருந்தன. இப்பொழுது ஒரே மாதிரியாக " **VIII Standard** " என்று மாற்றி அமைத்திருக்கிறார்கள். இதை சீக்கிரம் அமல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு விஷயம் பூரணமாக தெளிவுபட இல்லை. அதாவது ஆதாரப் பள்ளியில் பயிற்சி பெற்றவர்களுக்கும், " **VIII Standard** " க்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. ஆதாரப் படிப்பு முடிந்தவுடன் உயர்தரக் கல்விக்கு இவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்பது தெளிவாக இல்லை. இதைப் பற்றி சர்க்கார் வெள்ளையறிக்கையில் தெளி வாக்கப்படவில்லை. செய்ய வேண்டியது அவசியம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



8th April 1958] [Sri N. Mahalingam]

கல்வித்தரம் குறையக்கூடாது என்று சொல்லும்போது கட்சிப்பாகுபாடு ஒன்றும் இருக்க முடியாது. இதில் எல்லோருக்கும் ஒன்றுபட்ட அபிப்பி ராயம் இருக்கிறது. தரம் குறையாமல் இருப்பதற்கு ஏற்ற வகையில் நாம் மாறுதல்களை செய்ய வேண்டும். எதிர் கட்சியில் இருக்கும் சில நண்பர்கள் பேசுவதைப் பார்க்கும்போது அவர்கள் சர்க்காரைப் பற்றி குற்றம் குறைகள் சொல்வதற்காக பேசுகிறார்களா அல்லது எதிர் கால இளைஞர்களின் க்ஷேமத்தை கவனத்தில் கொண்டு பேசுகிறார்களா என்பது தெரியவில்லை.

(ஸ்ரீ கே. சட்டநாத கரயாளர் தலைமை.)

சமீபத்தில் சென்னையில் இருக்கும் தியாகராஜா கல்லூரியில் மாணவர்கள் 11.00
கூட்டத்தில் இவர்கள் பேசும்போது, ஏதாவது தவறுகள் நடந்தால், a.m.
உடனடியாக புரட்சி செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். மாணவர் கள் சட்டப் பிரகாரம் நடக்கவும், ஒழுங்கு முறையில் வாழ்க்கையை நடத்து வதற்கும், நாம் அவர்களுக்கு புத்தி சொல்லவேண்டியிருக்க, மாணவர்கள் புரட்சி செய்ய வேண்டும் என்பது, காலத்திற்கு ஏற்றது அல்ல. மாணவர்கள் சிறந்த முறையிலே நேரத்தை செலவழித்து வாழ்க்கை நடத்தி சிறந்த கல்விமான்களாக, புத்திசாலிகளாக ஆவதை விட்டு, புரட்சி செய்ய வேண்டும் என்பது காலத்திற்கு ஒவ்வாதவாதம்.

கல்லூரிகளில் ஹ்யுமானிடீஸ் பாடங்களை, உடனடியாகத் தமிழிலே, ரீஜனல் மொழியிலே கொண்டுவரவேண்டும் என்று சர்க்கார் அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஸயன்ஸ் பாடங்கள் கூட உடனடியாக தாய் மொழியிலே வரவேண்டும். நேரிடையாக இல்லாவிட்டாலும், ஆங்கில வார்த்தைகளைக் கூடியவரை உபயோகித்துக்கொண்டால், அதிகக் கஷ்டமில் லாமல் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்.

* **Sri A. VEDARATHNAM** : சட்ட சபைத் தலைவர் அவர்களே, சட்ட நாதன் அவர்களே (சிரிப்பு), இந்தக் கல்வி மான்யத்தை முழுமனதோடு ஆதரிக்கிறேன். நம் மாகாணம் சுருங்கி இருக்கிறதே யன்றி, நம் கல்வி சுருங்கவில்லை. விரிந்தே வந்து இருக்கிறது. இவ் வாறு அது விரிவடைந்து வருகிறது என்பதை யாரும் எதிர்த்துக்கூற முடியாது. எந்த அளவுக்கு விரிவு அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு அடைந்தாகி விட்டதா என்றால் இல்லை என்றுதான் கூறுவேன்.

அரசியல் நிர்ணய சட்ட சபை செய்த சட்டத்தில் 1960-ம் ஆண்டுக்குள் இந்த நாட்டில் கல்வி அறிவு இல்லாதவர்களே இல்லாமல் செய்யவேண் டும் என்று சட்டம் வகுத்து இருக்கிறோம். அந்த எல்லையை அடைந்து இருக்கிறோமா என்றால் அந்த அளவுக்கு பள்ளிக்கு செல்லும் வயதினர் கள் பள்ளியில் இல்லாததால், இல்லையென்றே சொல்லவேண்டும். ஆகவே நமது வேலை மகத்தானது, இதை அதிகமாக குறிப்பிடத்தேவை யில்லை.

இங்கே ஆசிரியர் சம்பளத்தை பற்றித்தான் வெகுவாக பேசப்பட்டது. அதிலும் எதிர்க்கட்சிக்காரர்கள் தாங்கள்தான் அவர்களுக்கு வாரிசுபோல விஷயங்களை குறிப்பிட்டார்கள். கனம் பழனிசாமி அவர்கள் சுதந்திரம் அடைந்தபிறகும் முன்பு இருந்த சம்பளத்தையே இன்னமும் அரசாங்கம் கொடுத்து வருவதாக குறிப்பிட்டார்கள். நான் நினைக்கிறேன் பழனிசாமி அவர்கள் அந்தக்காலத்திலே பள்ளிமாணவனாக இருந்து இருப்பார் என்று. சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபாய் 14 தான் சம்பளம் இருந்தது என்பது அவர்களுக்கு தெரியாது. காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு இப்பொழுது அவர்கள் சம்பளத்தை 400 சத விகிதம் அதிகரித்திருக்கிறார்கள் என்பதை

நினைவூட்ட விரும்புகிறேன். ஆனால் இதிலிருந்து இப்பொழுது கொடுக்கப்படும் சம்பளமே போதும் என்று நான் வாதிப்பதாக நினைக்கவேண்டாம். இதில் குறைபாடுகள் இருக்கலாம். கல்வி அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் யாரும் சொல்லாமலே, யாரும் எடுத்துக்காட்டாமலே வேண்டுவனவற்றை செய்பவர்கள். நிதியும், கல்வியும் அவர்களிடம் இருப்பதால் முதலிடம் இந்த கல்விக்கு கொடுப்பார்கள் என்றும் அதன் பிறகு மற்ற இலாக்காக்களை கவனிப்பார்கள் என்றும் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு கல்வியிலே போதுமான அக்கரை உண்டு. அவர்கள் இளம்பிராயம் முதலே, சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்பே கல்வித்துறையில் தொண்டு ஆற்றி இருப்பவர்கள் என்பதை சொல்லத்தேவையில்லை. 1960-ம் ஆண்டுக்குள்ளே மாகாணத்திலுள்ள அத்தனை பேரும் கல்வி கற்றவர்களாக ஆகவேண்டுமென்றால், எத்தனை மாணவர்கள் வந்த போதிலும் கல்வி வசதியளிக்க அந்த இலாகா இப்பொழுது தாயாராக இருக்கிறது. ஆனால் இந்தப் பள்ளிகளைமாணவர்களின் உபயோகத்திற்கு வரும்படி செய்வதில்தான் சிரமம் இருக்கிறது. அதற்காகத்தான் நல்ல சிறந்த முறையை, எந்த மாகாணத்திலும் இல்லாத முறையை, நம்மாகாணத்தில் அனுஷ்டிக்கிறார்கள். ஆசாரிய விநோபாவே அவர்களின் பூமிதான இயக்கத்தை அகில இந்தியாவில் புகழ்கிறார்கள். நாம் செய்வது சிறிய அளவில் ஒரு பெரிய முயற்சி என்பதை மட்டும் நான் குறிப்பிட்டு காட்ட விரும்புகிறேன். இதன் மூலமாக பள்ளிக்கு வர முடியாத கஷ்ட நிலையில் இருக்கும் பல இலட்ச மாணவர்களை பள்ளிக்கு வர தூண்டுவது நமது மதிய உணவு திட்டம். கல்வி இலாகா நிர்வாகிகள் இதை ஒரு இயக்கமாக ஆரம்பித்து நடத்துவது பாராட்டத்தக்கது. இதற்கு எத்தனை பணம் வேண்டுமோ அதில் ஒரு பகுதியை மக்கள் கொடுக்கிறார்கள். அதந் இடத்தில் அரசாங்கம் மற்றொரு பகுதியை கொடுத்து அந்த இயக்கத்தை ஆதரிக்க முன் வருகிறார்கள். இது மிகவும் போற்றத்தக்க விஷயம்.

விநோபா பாவே போல கல்விக்கு என்று பூமிதானம் வாங்க ஒரு திட்டம் ஆரம்பித்த சில தினங்களுக்குள்ளேயே 9,000 எக்கரா நிலம் வந்துவிட்டது. இவர்களுக்கு ஒரு பயம் பிடித்துக்கொண்டுவிட்டது. இவ்வளவு நிலத்தை ஒரே அடியாக கொஞ்ச நாட்களில் அடைந்தால் போக, போக கிடைக்கும் அத்தனை நிலங்களையும் ஜீரணம் பண்ண முடியாத நிலைமை வருமோ என்று பயந்து அதை உபயோகிக்க வழி வகைகள் செய்த பிறகே இதை வாங்கவேண்டும் என்று இந்த பூமிதானத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அவர்களை நான் வேண்டுகிறேன். மத்திய உணவு திட்டத்தையும் பள்ளிக்கு பூமிதானம் வாங்குவதையும் சேர்த்து செய்தால் ஒரு பெரும் அளவுக்கு உதவியாக இருக்கும் என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். கல்வி திட்டத்தைப் பற்றி நம் நாட்டில் இன்னும் கூட ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. இதுவரை இருந்து வந்த கல்வி திட்டம் எத்தகையது என்பதை என்னைப்போன்ற சாதாரண மனிதர்கள் அல்ல, பல பல்கலைக்கழக அங்கத்தினர்களும், துணைவேந்தர்களும் பல சந்தர்ப்பங்களிலே பட்டமளிப்பு விழாக்களில் நிகழ்த்திய உரைகளையும், 50 ஆண்டுகளாக திகழ்த்தி இருக்கும் உரைகளையும் பார்த்தால் அவர்கள் எல்லோரும் இந்த மெக்காலே கல்வித்திட்டம் நம் நாட்டுக்கு பொறுந்தாத திட்டம், பொறுந்தாத திட்டம் என்று அத்தனைபேரும் கூறியிருக்கிறார்கள். இந்த கல்வித்திட்டம் நல்ல திட்டம் என்று கல்வி மான்கள் யாரும் சொல்லவில்லை என்பதை வற்புறுத்தி சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த பொருத்தமற்ற கல்வித்திட்டத்தை இந்த மாகாணத்தில் கட்டிக்கொண்டு அழுது வருகிறோம். ஒரு பொருந்தும் திட்டத்தை யாராவது, நிபுணர்களாவது கொண்டுவர முன் வந்து இருக்கிறார்களா என்றால் இல்லையென்றே சொல்லவேண்டும். மகாத்மா காந்தி நாட்டிற்கு சுதந்திரம் பெற ஒரு சிறந்த சேவையை செய்தார்கள், ஆனால் நாட்டிற்கு கல்விதிட்டத்தில் அவர்கள் செய்த மாறுதல் சுதந்திரத்தை காட்டிலும் சிறந்தது என்பதை எக்காலத்திலும் மறக்கமுடியாது, என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் கல்வித்திட்டத்தை சாதாரண ஒருவர் மாற்ற இந்த இராஜ்யத்திலே முன் வந்தால் அது என்ன கதியாகும் என்பதை இங்கு இருக்கும்





அங்கத்தினர்கள் நன்றாக உணர்வார்கள். காந்தியடிகளைத்தவிர யாராலும் இந்த கல்வித்திட்டத்தை மாற்றியிருக்க முடியாது. அது அவர்கள் செய்த ஒரு மகத்தான சேவையென்பதை மறக்க முடியாது.

இன்றைக்கு பழைய கல்வித்திட்டத்தில் படித்தவர்கள் என்ன ஆவது என்பதைப்பற்றி ஸ்ரீமான் சிந்தாமணி தேஷ்முக் கூறுகிறார்கள்—1.25 இலட்சம் பட்டாதாரிகள், டிக்கிரி ஹோல்டர்கள் வேலையின்றியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இந்த மாகாணத்திலோ எஸ்.எஸ்.எல்.ஸி. வரை படித்து வேலையில்லாமல் இருப்பவர்கள் 1.50 இலட்சம் பேர் இருக்கிறார்கள். இப்படி வேலை இல்லாதவர்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைபோன்ற கல்விசாலையை மாற்றி அமைத்தது ஒரு பெரிய மகத்தான சேவையாகும். காந்தியடிகள் அவர்களால் கொடுக்கப்பட்ட இந்த கல்வித்திட்டம் நிபுணர்களால் சரியான திட்டம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு அதை மத்திய சர்க்காரும் ஏற்றுக்கொண்டு நாட்டிலுள்ள அத்தனை மாகாண சர்க்கார்களும் இதுதான் எதிர்காலத்திற்கு ஏற்ற நல்ல திட்டம் என்று ஒப்புக்கொண்டு 10 ஆண்டுகளாக இத்திட்டம் அமுலில் இருந்து வருகிறது. இந்த நேரத்திலே சர்வகலாசாலை துணைவேந்தர் ஒருவர் மேல் சபையில் ஆதாரக்கல்வி என்றால் என்ன, எனக்கு புரியவில்லை என்று சொன்னார்கள் என்றால் அதை என்னென்று சொல்வது என்று எனக்குப் புரியவில்லை.

இது பெரிய விந்தையாக இருக்கிறது என்றுதான் நான் கூறுவேன். 11-10 a.m. என் அப்படிச் சொல்லுகிறேன் என்றால் பத்து ஆண்டு காலமாக அது அமுலுக்கு வந்திருக்கிறது. அதுமட்டும் அல்ல, சர்வகலாசாலை கமிஷன் ஒன்று நம்முடைய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டு அதுவும் ஒரு ரிப்போர்ட்டை சமர்ப்பித்திருக்கிறது. அதன் விலை 15 ரூபாய். அந்த சர்வ கலாசாலை கமிஷனில் அந்தத் துணை வேந்தர் ஒரு உருப்பினராக இருந்து அதில் இந்த ஆதாரக் கல்வியைப்பற்றி ஒரு சாப்டரும் எழுதியிருக்கிறார்கள்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

அந்த ரிப்போர்ட்டும் அவருடைய முன்னிலையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கிறது. செகண்டரி எடுகேஷன் கமிட்டி தலைவராக இருந்தும் ரிப்போர்ட்டை எழுதியிருக்கிறார். அப்படித் தலைவராக இருந்து ஆதாரக் கல்வியைப் பற்றி எழுதியிருக்கிறார். அப்படி இருந்தும் அவர் ஆதாரக்கல்வியைப்பற்றி ஒன்றும் புரியவில்லை என்று சொன்னால் அது விந்தையாகத்தான் இருக்கிறது. போஸ்ட் பேஸிக் பரீக்ஷை முடித்தவர்கள் கல்லூரிகளில் படிக்கச் செல்லக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். நந்தனார் கடவுளை வணங்குவதற்கு எப்படி நந்தி முட்டுகட்டையாக இருந்தாரோ அப்படி இவர் இருக்கிறார். கல்வி விஷயத்தில் இப்படி இவர் முட்டுகட்டையாக இருந்தால் இந்த நாட்டின் எதிர்காலத்தில் சர்வகலாசாலை படிப்பு முழுமையும் எப்படி தமிழ் மயமாக்க முடியும்? இப்பொழுது கல்வி அமைச்சர் அவர்கள் எதிர் காலத்தில் சர்வகலாசாலை முழுவதும் தமிழ் போதனா மொழியாக வரவேண்டும் என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறார்; அதற்கு எப்படி வழி காண முடியும்? அதற்கு வேண்டிய முயற்சிகளை அவர் எவ்வளவோ எடுத்துக்கொண்டு வருகிறார். அதற்கு நந்திபோல் இவர் குறுக்கே நிற்கிறார். இன்றைக்கு வர்தாவை எடுத்துக்கொண்டால் அங்கே சர்வகலாசாலையில் இந்தி போதனா மொழியாக வந்துவிட்டது. நாக்பூரில் மராத்தி மீடியம் வந்துவிட்டது. ஐதராபாத்தில் உருது மீடியம் வந்துவிட்டது. இப்படி பல மாகாண சர்வகலாசாலைகளில் போதனா மொழி தாய் மொழியில் வந்துக் கொண்டிருக்கும்போது நம்முடைய நாட்டில் இன்னும் வராமல் இருக்கிறது. அங்கிருந்து எவ்வளவோ பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியே வருகிறார்கள். அதைப்போலவே எவ்வளவோ வளமை வாய்ந்த தமிழ் மொழியில் இன்னும் வராமல் இருக்கிறார்கள். அவர்கள் வந்திருக்கும்போது வளமை வாய்ந்த தமிழ் மொழியில் என் வரக்கூடாது? அப்படி வருவதற்கு வேண்டிய வாய்ப்பு இருக்கிறது. அப்படி வராமல் இன்னும் இருப்பது விந்தையாக இருக்கிறது. அதற்குக் காரணம் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. போஸ்ட் பேஸிக்

[Sri A. Vedarathnam] [8th April 1958

ஸ்கூல் இந்த மாகாணத்தில் சில இடங்களில் பரீட்சார்த்தமாக வந்திருக்கிறது. பி.டி. கல்லூரியை இப்பொழுது ஓரத்தநாட்டில் ஆரம்பித்திருக்கிறார்கள். அதைச் சிறந்த முறையில் நடத்தி அதிலிருந்து சிறந்த பட்டதாரிகளை தோற்றுவிக்கவேண்டும். இப்பொழுது பட்டதாரி ஆசிரியர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பல பி.டி. கல்லூரிகளில் போதிய மாணவர்கள் வராததற்கு போதிய சம்பளம் இல்லாமல் இருப்பது தான் காரணம். இப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு மாணவர்கள் அதிகமாக வராமல் இருப்பதற்கு இதுதான் காரணம். அவர்களுக்கு கவனக்குறைவு இருக்கிறது என்பது அல்ல. மற்ற பயிறசி பள்ளிகளில் 40 ஸ்தானங்களுக்கு 400 அப்ளிகேஷன் வருகின்றன என்று சொல்லுகிறார்கள். சில இடங்களில் பி.டி. காலேஜில் போதிய மாணவர்கள் வராமல் பல ஸ்தாபனங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். வாஸ்தவத்தில் குறைகள் இருக்கத்தான் செய்கிறது. அதன் காரணத்தால்தான் அதிகப்படியான மாணவர்கள் வருவதில்லை. இதை கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

**Sri A. V. P. ASAITHAMBI** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கல்வி மானிய கோரிக்கையின் மீது எழுப்பப்பட்ட வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். அண்ணாமலை சர்வகலாசாலை செனட்டில் நான் ஒரு அங்கத்தினர் என்ற காரணத்தால் இந்தப் பிரச்னையைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். அண்ணாமலை சர்வகாலசாலையில் அண்மையில் நடந்த குழப்பமான நிலைமைக்கு கனம் மந்திரி அவர்கள் பொறுப்புடையவராக இருந்தும் கூட அவர் ஓர் பரிகாரமும் காணாதபடி இங்கே வந்தது தவறு என்பதை இதே மன்றத்தில் சுட்டிக்காட்டி பேசியிருந்தேன். ஆனால கனம் அமைச்சர் அவர்கள் அண்ணாமலை சர்வகலாசாலை குழப்ப நிலைமையை விளக்கி இந்த மன்றத்தில் ஒரு ஸ்டேட்மெண்டை கொடுக்கிறபோது எனக்கு பதில் அளித்துச் சொன்னார். மந்திரியாக இருக்கிற நான் சர்வகலாசாலை நிர்வாகத்தில் தலையிடுவதோ அல்லது அவர்கள் கேட்காது தானாகவே அப்படிச் செய்வது சரியல்ல என்றும், மாணவர்கள் கேட்டிருந்தாலாவது அந்தப் பிரச்னைக்கு பரிகாரம் தேடியிருப்பேன் என்றும் எனக்கு பதில் சொன்னார். ஆனால் அந்த பதிலிலேயே கடைசிப் பகுதியில் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதை நான் இங்கே நினைவூட்டி மறுபடியும் அதை ஒப்பிட்டுப்பார்க்கும்படியாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர்கள் கேட்டிருந்தால் நான் தலையிட்டு அந்தப் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் தேடி இருப்பேன் என்று சொன்ன கனம் அமைச்சர் அவர்கள் அப்படிக் கேட்டும் ஒன்றும் செய்யவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. 30-ம் தேதி இரவு கனம் அமைச்சர் அவர்கள் சென்னைக்குப் புறப்படுவதாக திட்டம் இருந்தது. அதன்படி கனம் அமைச்சர் அவர்கள் புறப்பட்டு வந்திருக்கிறார். அந்த இடத்தில் இஞ்சினியரிங் பகுதி மாணவர்கள் அவரை வழி மறித்து இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு காணாதபடி போகக்கூடாது என்று கேட்டுக்கொண்டு அவரைப்போக விடாமல் மறித்திருக்கிறார்கள். அதன் பிறகு கனம் மந்திரியும் ஊருக்குப் புறப்படாமல் திரும்பி இருக்கிறார். அந்த அளவுக்கு நிலைமை இருந்திருக்கும்போது கனம் மந்திரி அவர்கள் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் தேடித் தந்து விட்டு சென்னைக்கு வந்திருக்கலாம். அந்த மாதிரி கனம் மந்திரி அவர்கள் பரிகாரம் செய்யாதபடி கல்லூரியிலிருந்து புறப்பட்டு வந்து விட்டு கல்லூரியை மூடிவிடுங்கள் என்று சொல்லக்கூடிய நிலைமையில் இன்றைய தினம் நாட்டில் நிலைமை இருக்கிறது என்று சொன்னால், பொறுப்புள்ள கல்வி இலாகா மந்திரி அவர்கள் சொன்னால், பொறுப்புள்ள கல்வி இலாகா மந்திரி அவர்கள் அங்கே இருந்து கொண்டு கல்லூரியை மூடக்கூடிய நிலைமை வருகிறது என்று சொன்னால் அங்குள்ள யுனிவர்சிட்டி நிர்வாகஸ்தர்களுக்கு நிர்வாகத் திறமை குறைவாக இருக்கிறது என்று சொல்வது மாத்திரம் அல்ல கனம் மந்திரி அவர்களுக்கும் நிர்வாகத் திறமை குறைவாக இருக்கிறது என்றும் குற்றம் சாட்ட விரும்புகிறேன். சர்வகலாசாலைக்கும் தங்களுக்கும் சம்பந்தம்



8th April 1958] [Sri A. V. P. Asaithambi]

இல்லை என்று சொல்லிவிட்டு, சம்பந்தம் இல்லாத அவர் இங்கே வந்து ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால் அவர் இங்கு வந்து அவசரமாகவும் அவசியமாகவும் ஒரு ஸ்டேட்மெண்டைக் கொடுத்தார், என்று சொன்னால் இந்நாட்டில் நடக்கிற கல்வி சம்பந்தமான ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் கல்வி இலாகாவுக்கு நிச்சயமாக பொறுப்பு உண்டு. அதே மாதிரி கல்வி மந்திரிக்கும் பொறுப்பு உண்டு. அப்படிப்பட்ட பொறுப்பு இல்லை என்று அவர் பேசியதுப் தலையிடுவது தவறாக முடியும் என்று மந்திரி அவர்கள் சொன்னதும் அவர் பிரச்னையில் புகுந்து சரியானபடி வேலை செய்யவில்லையே என்ற திறமைக் குறைவு வெளிப்பட்டுவிடுமோ என்று அப்படி அவர் பேசியிருக்கிறார் என்றே நான் நிச்சயமாக கருதுகிறேன். 29-ம் தேதி பெண் மாணவர்களின் ஆஸ்டலில் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட போது மாணவர்கள் நல்ல முறையில் நடந்து கொண்டதாகவும் சென்னையில்கூட மாணவர்கள் அப்படிப்பட்ட நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை என்றுகூட சொல்லியிருக்கிறார். ஆகவே அவர் பேசியதில் சென்னையிலுள்ள மாணவர்கள் ஒழுங்காக நடப்பது இல்லை என்றுகூட கற்பனை செய்து கொண்டு அந்த இடத்தில் பேசியிருக்கிறார்.

29-ம் தேதி இரவு அங்கே இருக்கிற வாயில்காப்பானாக இருக்கக்கூடிய ஒரு ஆள் ஒரு மாணவனை அனுமதிக்காத காரணத்தால் மாணவர்கள் உள்ளே சென்றவுடன் அந்த வாயில்காப்போன் அந்த மாணவர்களை தாறுமாறாகப் பேசி அவர்களுடைய சட்டையைப் பிடித்து இழுத்து அவமரியாதை செய்திருக்கிறான். அதனால்தான் அங்கு குழப்பம் ஏற்பட்டது. அதன் பிறகுதான் அவர்கள் வைஸ் சான்சலரைக் பார்க்க வந்திருக்கிறார்கள். ஆனால் கனம் மந்திரி அவர்கள் என்ன சொல்கிறார் என்றால் வாயல்காப்போன் பர்மிட் இல்லாவிட்டால் எப்படி உள்ளே விடுவான், அவன் தன்னுடைய வேலையைச் செய்திருக்கிறான் என்ற முறையில் கனம் மந்திரி அவர்கள் குறிப்பிட்டார். அதன்மேல் மாணவர்கள் தவறான முறையில் நடந்துகொண்டார்கள் என்றும் குறிப்பிட்டார். ஆனால் நான் கனம் மந்திரிக்கு என்ன சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் என்றால் மாணவர்கள் பர்மிட் இல்லாதபடி உள்ளே சென்றார்கள் என்றால் அவர்கள் பேரில் வாயில்காப்போன் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதைப்பற்றி வார்டனிடத்தில் ரிப்போர்ட் பண்ண வேண்டியதுதானே. அதன் பிறகு வைஸ் சான்சலரிடம் ரிப்போர்ட் பண்ண வேண்டியதுதானே. அப்படி இல்லாமல் அவமரியாதையாகப் பேசி, தாறுமாறாகப் திட்டி சட்டையைபிடித்து இழுக்க வேண்டிய அவசியம் என்ன என்று கேட்கிறேன். அந்த சமயத்தில் அவர்கள் வைஸ் சான்சலர் வீட்டிற்குப் போகாமல் எங்கே செல்வார்கள். தி.மு.க. கட்டடத்திற்கு வருவார்களா ? அவர்கள் வைஸ் சான்சலர் கட்டடத்திற்கு வந்திருக்கிறார்கள், அன்றிரவே. அப்படி அவரிடம் வந்து வாயில் காப்போன் அவமரியாதையாக நடந்துகொண்டிருக்கிறான் என்று சொல்வதற்குத்தான் அவர்கள் வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் வந்த போது நல்ல முறையில் அதைப்பற்றி விசாரணைசெய்து மாணவர்களை இரண்டு திட்டு திட்டிவிட்டுப் போகச்சொல்லியிருந்தால் அந்த அளவில் அந்தப் பிரச்னை அந்த இரவே முடிந்திருக்கும். அதையெல்லாம் செய்யாதபடி மந்திரி வந்திருக்கிறார், அவருக்கு அவமரியாதை ஏற்படும் வகையில் ஒன்றும் செய்ய வேண்டாம் என்று சொல்லி தங்களுடையக் கடமையைச் செய்யாமல் தட்டிக்கழித்து விட்டதால்தான் அந்தக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. வேறு தனிக் காரணம் அதற்குச் சொல்லவே முடியாது. மறு நாள் காலையில் வந்த மாணவர்களுக்கு வைஸ் சான்ஸலர் என்ன பதில் சொன்னார் ? ஏன் அவர் பொறுப்பை தட்டிக் கழித்து கலெக்டரிடம் ஒப்படைக்கவேண்டும் ? கலெக்டர் தான் வைஸ் சான்ஸலர், நான் வைஸ் சான்ஸலர் அல்ல என்ற நிலைமையில் கலெக்டரிடம் ஏன் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும் ? கலெக்டரிடம் ஒப்படைக்கும்படி அம்மாதிரி நிலைமை 11-20 a.m.
என்ன மோசமாக இருந்தது ? பொறுப்பு உள்ளவர் ஏன் இம்மாதிரி கலெக்டரிடம் ஒப்படைக்கவேண்டும் ? கலெக்டராவது பொறுப்போடு நடந்து கொண்டாரா என்றால், அதுவுமில்லை. கலெக்டர் மாணவர்களுடைய குறைகளை விசாரித்தார்களா என்றால் அதுவும் கிடையாது. கலெக்டர் அவர்கள்

[Sri A. V. P. Asaithambi] [8th April 1958

மாணவர்களுடைய குறையை கவனிக்காததாலும், மந்திரி அவர்கள் கவனிக்க மறுத்ததாலும், கடைசியில் ஏதோ குழப்பங்கள் நடந்திருக்கின்றன. அம்மாதிரி காலித்தனத்தை யாரும் ஆதரிக்கமாட்டார்கள். மாணவர்களுடைய இம்மாதிரியான எழுச்சி இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. இதற்குக் காரணம் காங்கிரஸ்தான். சுதந்திர இயக்கத்தின்போது பல மாணவர்கள் காங்கிரஸினால் இம்மாதிரி பாதையில் பழக்கப்பட்டார்கள். அந்த வாடைதான் இப்பொழுது வீசுகிறது. இம்மாதிரி குழப்பங்கள் ஏற்பட்ட பிறகாவது அங்கே இருந்த கல்வி மந்திரி, மந்திரி என்ற ஹோதாவில் இதைப் பற்றி விசாரிப்பது சர்வகலாசாலையில் தலையிடுவது போலாகும் என்று சொன்னாலும், அரசியல் வாதி, பொறுப்புள்ள காங்கிரஸ் வாதி என்ற முறையில், என் அமைச்சர் அவர்கள் மாணவர்களுடைய குறைகளை விசாரித்திருக்கக்கூடாது ? அப்படியில்லாமல், யாருக்கும் தெரியாமல் 31-ம் தேதி இங்கே திரும்பி வந்துவிட்டார். அவருக்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்று எப்படி சொல்ல முடியும் ? அதுமட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் இங்கு வந்து வாசல்காப்பான் நேர்மையாக நடந்துகொண்டிருக்கும்போது அவன்மேல் எப்படி நடவடிக்கை எடுப்பது என்று சொன்னார்கள். வாசல்காப்பான் நேர்மையாக நடந்துகொண்டதாகவே இருக்கட்டும். பிரிஸிடென்ஸி காலேஜில் ஒரு பேராசிரியரை ஸஸ்பெண்டு செய்துவைத்திருக்கிறார்கள் 15 நாட்களாக. அவர் செய்த தவறு என்ன ? ஒரு பெண் மாணவி செய்த தவறுக்காக ஒரு பேராசிரியர் ஸஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் அண்ணாமலை நகரத்தில் மாணவர் செய்த தவறுக்காக பள்ளிக்கூடத்தையே மூடியிருக்கிறார்கள்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** தெரியாமல் பேசாதீர்கள்.

**SRI A. V. P. ASAITHAMBI :** தெரிந்துதான் சொல்லுகிறேன். சட்டமன்றத்தில் அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது அண்ணாமலை நகர சம்பவத்தைப் பற்றி குறிப்பிடும்பொழுது எந்தக் கட்சியைப் பற்றியும் பேசவில்லை. ஆனால் வெளியே வேலூரில் மந்திரி அவர்கள் பொறுப்பு இல்லாத தன்மையிலே இந்தக் கலவரத்திற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் தான், நெஞ்சில் கை வைத்துப் பார்த்தால் தெரியும் என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். அம்மாதிரி இங்கே பேசுவதற்கு அமைச்சர் அவர்களுக்கு என்ன பயம் ? இங்கே ஒரு மாதிரி பேசி, வெளியே ஒரு மாதிரி பேசுவானேன் ? இது தான் அரசியல் நாணயமா என்று தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை கேட்கிறேன். மந்திரிகள் இன்றைக்கு ஒன்று சொல்லுவது, பிறகு அதை மறுத்துவிடுவது, இங்கே ஒன்று பேசுவது, வெளியே மற்றொன்று பேசுவது என்ற நிலைமை ஏன் ? இந்தக் கலவரத்திற்கு காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் என்பதற்கு ஏதாவது காரணம் காட்டி நிரூபிக்க முடியுமா என்று அமைச்சர் அவர்களை கேட்கிறேன். இந்தக் கலவரத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. எங்களுக்கு கல்லூரிகளிலும், பள்ளிக்கூடங்களிலும் மந்திரிகள் போல் தாராளமாக போய் பேசுவதற்கு அனுமதி கிடைப்பது கிடையாது. லயோலா காலேஜில் முதல் அமைச்சர் அரசியல் பற்றி பேசுகிறார். கிறிஸ்துவ கல்லூரியில் கல்வி அமைச்சர் அரசியல் பேசுகிறார். (குறுக்கீடு) இந்தி மொழி கமிஷனைப் பற்றி பேசியிருக்கிறார். நாங்கள் அம்மாதிரி போய் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இலக்கியத்தைப் பற்றி வேண்டுமானால் நாங்கள் பேசலாம். வேறு எதையும் பற்றி நாங்கள் பேசியதில்லை. கல்வி விஷயத்திலே, மாணவர்கள் விஷயத்திலே அமைச்சர் அவர்கள் தவறான பாதையில் செல்லுகிறார். மந்திரி பக்தவத்சலம் அவர்கள் மாணவர்கள் மிருகத்தனமாக நடந்துகொண்டார்கள் என்று பேசியிருக்கிறார். இது பொறுப்புள்ள ஒருவரின் பேச்சா என்று கேட்கிறேன். நம்முடைய பிள்ளைகளும் படிக்கிறார்கள். மந்திரி பக்தவத்சலம் அவர்களுடைய பிள்ளைகளும் படிக்கலாம். அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுடைய பிள்ளைகளும் படிக்கலாம். எல்லோரையும் சேர்த்து மாணவர்கள் மிருகத்தனமாக நடக்கிறார்கள் என்று பொறுப்புள்ள மந்திரி பேசுவது என்றால் ..........(மணி அடிக்கப்பட்டது).



8th April 1958]

III.—ANNOUNCEMNTS BY THE HON. THE SPEAKER—*cont.*

(2) COMMITTEE ON ESTIMATES.

**MR. SPEAKER :** I have to announce to the House that I have received 38 nominations to the Committee on Estimates, of which 24 nominations have since been withdrawn. As the number of candidates nominated and who have not withdrawn, is equal to the number of vacancies to be filled, viz., fourteen, I declare them to have been duly elected to the Committee on Estimates. The following are the fourteen candidates :—

1. Sri K. Appavoo Pillai.
2. Sri T. S. Ramaswamy Pillai.
3. Sri S. Pakkirisami Pillai.
4. Sri K. Sattanatha Karayalar.
5. Sri A. Govindasamy.
6. Sri A. P. C. Veerabahu.
7. Sri N. R. Thiagarajan.
8. Sri R. Subramaniam.
9. Sri C. R. Ramaswami.
10. Sri K. R. Viswanathan.
11. Sri K. S. Subramania Gounder.
12. Sri V. Govindaswami Naidu.
13. Sri T. Sivagnanam Pillai.
14. Sri A. E. Chandrasekharan.

The Hon. Minister for Finance is a Member of the Committee, ex-officio.

Under Rule 164 of the Assembly Rules, I nominate Sri K. S. Subramania Gounder to be the Chairman of the Committee.

(3) COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

**MR. SPEAKER :** I have to announce to the House that thirty-five members filed their nominations for the election of fourteen members to the Committee on Public Accounts. Twenty members have withdrawn their candidature.

As the number of candidates who have been duly nominated and have not withdrawn their candidature, exceeds the number of seats to be filled, there will be a poll in the Lounge Room for Members, Legislature Buildings, between the hours of 9 a.m. and 1 p.m. on Thursday, the 10th April 1958.

VI.—BUDGET FOR THE YEAR 1958–59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958–59—*cont.*

DEMAND XV—EDUCATION—*cont.*

**SRI V. S. ARUNACHALAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை முழுமனதோடு ஆதரித்து, என்னுடைய சில வார்த்தைகளை சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய நாட்டிலே உள்ள எல்லா மக்களுக்கும் கல்வித் துறை தான் முக்கியம் என்பது நாம் எல்லோரும் அறிந்த விஷயமாகும். கல்வியை எந்த முறையில நம் மக்களிடையே பறப்பவேண்டும், எந்த

[Sri V. S. Arunachalam] [8th April 1958

முறையிலே பறப்பினால் மக்கள் பலன் அடைவார்கள் என்றெல்லாம் நாம் யோசிக்கவேண்டியது அவசியம். பல அங்கத்தினர்கள் அவர்களுடைய கருத்துகளை எடுத்து உரைத்தார்கள். நானும் சில கருத்துகளை சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆரம்ப பள்ளிக்கூடங்களை நாம் முதலில் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நல்ல சிறந்த முறையிலே நடந்தால்தான், கல்வியானது நம்முடைய நாட்டிலே நல்ல முறையில் பெருக்கம் அடையும். ஆரம்ப ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியத்தை கொடுக்க நாம் வழி வகுக்க வேண்டும். இப்பொழுது நம் அரசாங்கமானது ஆரம்ப ஆசிரியர்களின் ஊதியத்தில் கவனம் செலுத்தி அதை ஓரளவுக்கு உயர்த்தியிருப்பதை நாம் வரவேற்கிறோம். இன்னும் அவர்களுடைய ஊதியத்தை தகுந்த முறையிலே உயர்த்தவேண்டுமென்று அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஆரம்ப ஆசிரியர்கள் பணி செய்யும் வகைகளிலே நாம் நல்ல ஒரு திட்டத்தை நிறுவவேண்டும். இதற்கு முன்பு மாணவர்களின் எண்ணிக்கையை பற்றி நாம் திட்டமிட்டு கொடுத்துள்ளோம். 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஒரு கணக்கில் ஆரம்ப ஆசிரியர்கள் வேலை செய்து கொண்டு வந்தார்கள். தற்போது 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஒரு திட்டம் வந்துவிட்டது. அதனால் அவர்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகக்கூடும். எவ்வளவு திறமைசாலியாக ஒரு ஆசிரியர் இருந்தாலும் கூட, பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால், பிள்ளைகளுக்கு போதிக்கும் தன்மையிலே குறைவு ஏற்படும் என்பதுதான் என்னுடைய மனத் திட்டம். ஒரு கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியில் 40 பிள்ளைகள் இருப்பார்கள். அதிலே 5 வகுப்புகள் இருக்கின்றன. அந்தப் பள்ளியில் ஒரே ஆசிரியர் இருந்தால், 5 வகுப்புகளுக்கும் ஒரே ஆசிரியர் பாடம் சொல்லுவது மிக கஷ்டம் என்றுதான் எனக்கு தெரிகிறது. அப்படியில்லாமல் 25 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருந்தால், 40 பிள்ளைகள் இருக்கும்பொழுது 2 ஆசிரியர்கள் இருந்தால்தான், அந்தப் பள்ளியிலே செவ்வனே அவர்கள் பாடத்தை மாணவர்களுக்கு போதிக்கக் கூடும். 20 அல்லது 25-க்கு அதிகப்பட்ட மாணவர்கள் இருந்தால் இன்னும் ஒரு ஆசிரியர் நியமித்து, ஆசிரியரின் எண்ணிக்கையை உயர்த்தவேண்டும் என்று நான் அரசாங்கத்தை இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள்தான் நம்முடைய நாட்டின் முதுகெலும்பு என்று நாம் சொல்லக்கூடும். அவர்கள் மாணவர்களை திருத்தி நல்ல படிப்பினையை அவர்களுக்கு போதிக்க அவர்களுக்கு தகுந்த உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அரசாங்கம் கொடுக்கவேண்டும். எல்லா ஆசிரியர்களும் அவர்களுடைய பணியை சரிவர ஆற்ற வேண்டுமானால், பல்வேறு பள்ளிகளில் இருக்கும் ஆசிரியர்களின் சம்பளங்களில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது. ஒரே தரமுடைய ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள், ஜில்லா போர்டு பள்ளிகளில் ஒரு விதமாகவும், கார்ப்பொரேஷன் பள்ளிகளில் ஒரு விதமாகவும், தனியார் பள்ளிகளில் இன்னொரு விதமாகவும் இருக்கின்றன. ஒரே தரமுடைய ஆசிரியர்கள் எல்லோருடைய சம்பளங்களையும் ஒரே விகிதத்தில் அமைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

நம் நாட்டின் மொத்த வருவாயில் 20 சதவிகிதத்தை அரசாங்கம் கல்விக்காகச் செலவிடுவதைப் போற்றுகிறோம். இவ்வளவு பணத்தை கல்விக்காகச் செலவழிக்கும்போது, கல்வித் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில பள்ளிகளில் நல்ல கட்டிடங்கள் இல்லை. நல்ல கட்டிடங்கள் இல்லாத பல பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவைகளில் மாணவர்கள் அதிகமாக இருந்தாலும் கட்டிட வசதி குறைவாக இருப்பதால் ஒரு ஆசிரியரோ இரண்டு ஆசிரியர்களோகூட அவர்களுக்குப் சரிவரப் பாடம் சொல்லிக்கொடுக்க முடியவில்லை. இப்போது அரசாங்கத்தார் பள்ளிக்கூடங்களுக்கு எவ்வளவோ



8th April 1958] [Sri V. S. Arunachalam]

கிராண்டுகள் கொடுத்து சில பள்ளிக்கூடக் கட்டிடங்களைப் புதுப்பித்து வருகிறார்கள். இன்னும் நிறைய கிராண்டுகள் கொடுத்து மற்ற பள்ளிக்கூடங்களிலுள்ள வசதிக் குறைவான கட்டிடங்களையும் புதுப்பிக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டில் ஆதாரக் பள்ளிகள் மிகவும் அவசியம் என்றுதான் நான் கருதுகிறேன். ஆதாரப் பள்ளிகளுக்கு, அவசியமான கட்டிட வசதிகளையும், மற்ற வசதிகளையும் செய்துகொடுத்து அவைகள் நல்ல முறையில் நடக்கச் செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெண்களுக்கு தனி உயர்நிலைப்பள்ளிகள் இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். ஆண்கள், பெண்கள் ஆகிய இரு பாலரும் படிக்கும் உயர்நிலைப்பள்ளிகளில் அவர்களைச் சரிவர கண்காணிக்க முடிவதில்லை என்ற செய்திகளை நாம் அறிகிறோம். திருவள்ளூர் தாலூகாவில் இரண்டு உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியும் அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே, அங்கே ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நல்ல முறையில் நடப்பதற்கான வழிவகைகளை சர்க்கார் செய்திருக்கிறது. ஆசிரியர்கள் அவர்களுடைய பணிகளைச் சரிவரச் செய்வதற்கு அவர்களுக்கு உதவும் வகையில், அவர்களுக்கு போதிய ஊதியம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்றும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களை நன்றாக நடத்த வேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மானிய கோரிக்கையை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

*SRI V. SANKARAN : கனம் சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர்களில் சிலர் "கனம் மந்திரி, இந்த சந்தர்ப்பத்தில் மொழிப் பிரச்னைப்பற்றி பேசலாமா ?" என்று கேட்டார்கள் ? அவர்களுடைய தலைவர்களே அடிக்கடி பொது மேடைகளில், "பொதுப் பிரச்னைகளில் மொழிப் பிரச்னையும் ஒன்று ஆகும். ஆகவே பொதுப் பிரச்னையாகிய மொழிப் பிரச்னை சம்பந்தமாக எல்லா அரசியல் கட்சிகளும் அபிப்பிராயம் தெரிவிக்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். மொழிப் பிரச்னை அரசியல் பிரச்னை அல்ல. ஆகையால், மொழிப் பிரச்னை சம்பந்தமாக கனம் அமைச்சர் இங்கே பேசினால், அவர் அரசியல் விஷயத்தைப்பற்றிப் பேசியதாகக் கருத முடியாது. மொழிப் பிரச்னையைப் பொறுத்தவரையில், அரசியல் கட்சிகளின் அபிப்பிராயங்கள் வேறுபட்டிருக்கலாமே தவிர, அந்தப் பிரச்னையைப்பற்றி இங்கே இந்த சந்தர்ப்பத்தில் பேசுவது தவறு ஆகாது. அதேமாதிரி, மாணவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதும் பொதுப் பிரச்னைதான். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதுபற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனால், மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பது பொதுப் பிரச்னைதான். மாணவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டுமென்று எல்லோரும் சொல்லலாம். இதில் அரசியல் ஒன்றும் இல்லை. ஆகவே இந்தப் பிரச்னைகளில் அரசியலைக் குழப்பக்கூடாது என்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ அன்பழகன், இந்த ராஜ்யத்திலிருந்து ராஜ்ய சர்க்காரும் மத்திய சர்க்காரும் பெறும் எல்லா வரி வருமானங்களிலும் 20 சத விகிதத்தை இந்த ராஜ்யத்தில் கல்விக்காக செலவழிக்க வேண்டுமென்றும், மத்திய சர்க்கார் நமக்கு ஒரு நன்மையும் செய்வதில்லை என்றும் சொன்னார். மத்திய சர்க்கார் நமக்கு போதிய பணம் கொடுக்கவில்லை என்று சொல்லலாமே தவிர, அவர்கள் நமக்கு கொஞ்சம்கூடப் பணம் கொடுப்பதில்லை என்றோ அவர்களால் நமக்கு நன்மையே இல்லை

[Sri V. Sankaran] [8th April 1958

என்றோ நாம் சொல்ல முடியாது. நம் ராஜ்யத்திலிருந்து மத்திய அரசாங்கத்தார் வரிகளின் மூலம் பெறும் பணத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்கள் நமக்கு போதிய பணம் கொடுக்கவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அவர்களால் நமக்கு நன்மையே இல்லை என்று சொல்லமுடியாது. அவர்களால் நமக்கு எவ்வளவோ நன்மைகள் இருக்கின்றன. உதாரணமாக, தேசப் பாதுகாப்பை எடுத்துக்கொண்டால், நம் ராஜ்யத்தைப் பாதுகாக்கும் பொறுப்பும் அவர்களிடம் இருக்கிறது. இந்த ராஜ்யம் இந்திய யூனியனிலிருந்து பிரிந்தால், தேசப் பாதுகாப்பிற்காகவே வருடா வருடம் நாம் 10 கோடி ரூபாயாவது செலவழிக்க வேண்டியிருக்கும்; அந்த நிலையில் நாம் எல்லாத் துறைகளுக்குமாக மொத்தம் 100 கோடி ரூபாயாவது வருடா வருடம் செலவழிக்க வேண்டியிருக்கும். ஆகையால், நம் ராஜ்யத்திலிருந்து மத்திய அரசாங்கத்தார் வரிகளின் மூலம் பெறும் பணத் தொகைக்குத் தகுந்த அளவுக்கு அவர்களால் நமக்கு நன்மைகள் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். நம் பணத்தையெல்லாம் அவர்களே எடுத்துக்கொள்கிறார்கள் என்றும், அவர்களால் நமக்கு ஒரு நன்மையும் இல்லை என்றும் சொன்னால், அதை நான் ஒத்துக்கொள்ளமுடியாது.

இந்த வருட பட்ஜெட்டில் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகையானது, சென்ற வருஷம் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 62 லட்சம் ரூபாய் அதிகமானது. இதில் 20 சத விகிதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள இந்தப் பணத்தொகையில் 53 சதவிகிதம் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது; ராஜ்யத்தில் 85 சதவிகித மக்கள் ஆரம்பக் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பக் கல்விக்கு இவ்வளவு பணத்தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சமயத்தில் நாம் இன்னொரு விஷயத்தை கவனிக்கவேண்டும் நாட்டில், ஜனத்தொகை வருடா வருடம் 1½ சத விகிதம் அதிகரிக்கிறது. ஜனத்தொகை இவ்வாறு அதிகரித்துக்கொண்டே போனால் நாம் நிர்ணயித்துள்ள இலக்கை அடைவதற்கான காலமும் நீடித்துக்கொண்டே போகும். இந்த நிலையில், 1953-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆரம்பக் கல்வித் திட்டத்தை மறுபடியும் கொண்டுவந்தால் இலக்கை சீக்கிரம் அடையலாம் என்று நினைக்கிறேன். அந்தத் திட்டத்தை ஏன் இப்போது மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சர்க்காரைக் கேட்க விரும்புகிறேன். 1953-ல் அது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இருந்த சூழ்நிலை வேறு. இப்போதிருக்கும் சூழ்நிலை வேறு. அப்போது தப்பபிப்பிராயம் காரணமாகவும், தனி நபர் மீதுள்ள 'ப்ரிஜுடிஸ்' காரணமாகவும் அது நிராகரிக்கப்பட்டிருக்கலாம். ஒரு வேளை, இப்போது அந்தத் திட்டத்தை மறுபடியும் சபையின் பரிசீலனைக்குக் கொண்டுவந்தால் சபை அதை ஒத்துக்கொள்ளலாம். இப்போது 27 லட்சத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் ஆரம்பப் பள்ளிகளில் படித்து வருகிறார்கள். அந்தத் திட்டம் வந்தால் 30 லட்சம் பிள்ளைகள் படிக்கலாம். மேலும், அந்தத் திட்டம் வந்தால், அதில் நேரம் குறைக்கப்பட்டிருப்பதால், 'வேஸ்டேஜ்'-ஐக் குறைத்துவிட முடியும். மேலும் அந்தத் திட்டத்தில் ஆதாரக் கல்வியைக்கூடப் புகுத்த முடியும். இந்தத் திட்டத்தின் மேன்மைகளைப்பற்றி ஆரம்பக் கல்விக் கமிட்டியாரே சொல்லியிருக்கிறார்கள். பம்பாய், திருவாங்கூர்-கொச்சி போன்ற ராஜ்யங்களில் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. மேலும், பிலிப்பைன்ஸ், நார்வே போன்ற நாடுகளிலும் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. நார்வேயில் நகரப் பள்ளிக்கூடங்களில் பள்ளி வாரங்கள் 39-ஆக இருக்கும்போது, கிராமப் பள்ளிகளில் பள்ளி வாரங்கள் 21-ஆகத்தான் இருக்கின்றன. நார்வேயில் கிராமப் பள்ளிகளில் அவ்வளவு பள்ளி வாரங்களே இருந்தாலும் அவைகளில் படிக்கும் மாணவர்களும், நகரங்களில் படிக்கும் மாணவர்கள் எவ்வளவு பெறுகிறார்களோ, அவ்வளவு தேர்ச்சி பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு பள்ளியில் பாடம் போதிக்கப்படும் காலம் குறைவாக இருந்தாலும், வெளி அனுபவம் அதிகமாக இருப்பதால் விஷயங்களை சீக்கிரம் கிரகித்துக் கொள்கிறார்கள் என்றும், அந்தக் காரணத்தால் பள்ளியில் போதனைக்



8th April 1958] [Sri V. Sankaran]

காலம் குறைவாக இருந்தாலும் அதனால் பாதகம் இல்லை என்றும் ஆரம்பக் கல்விக் கமிட்டியாரே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை மறுபடியும் சட்டசபையின் பரிசீலனைக்குக் கொண்டு வந்து, அது சம்பந்தமாக சபை அங்கத்தினர்களின் கருத்துக்களை அறிந்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதிகச் செலவு இல்லாமல், லோகல் போர்டு பள்ளிகளில் 35 பையன்களுக்கு ஒரு உபாத்தியாயர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உதவிபெறும் பாடசாலைகளில் ஒரு உபாத்தியாயருக்கு 20 பையன்கள் முதல் 60 பையன்கள் வரையில் இருக்கலாம் என்று இரட்டிப்பாக்கும்போது, செலவு இல்லாமலேயே பூரணமாக, எல்லோரும் கல்வி பெறும்படியாகச் செய்யலாம். அந்த ஒரு நிலைமையிலே அதைப் பழையபடி பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம் நாட்டில் ஓராசிரியர் உபாத்தியாயர்களைப் பொறுத்தவரையில், பயிற்சி பெற்றவர்களையெல்லாம் திரும்ப எடுத்துக்கொள்வதாக மந்திரி அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்கள் ரிடையர் ஆனபிறகும் இரண்டு மூன்று வருஷம் உபாத்தியாயர்களாக இருந்தவர்கள். அவர்கள் ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களாக இருப்பதால், அவர்களுடைய ஓய்வு பெறும் காலத்தை சிறிது உயர்த்தலாகாதா என்பதை மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டுகிறேன்.

ஆரம்பப் பள்ளிகளையெல்லாம் ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவது சர்க்காருடைய உத்தேசம் என்று சொல்லப்படுகிறது. மூன்று முக்கிய அம்சங்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், பெரிய மாறுதலாக இருப்பதால், ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவதனால் எப்படிப்பட்ட அனுகூலங்கள் எவ்வாறு கிடைக்கும், எப்படிப்பட்ட நன்மைகள் கிடைக்கும் என்பதை சற்று விவரமாகக் கூறுமாறு மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மத்தியானச் சாப்பாடு மாணவர்களுக்குப் போடும் விஷயமாகக் கூற வேண்டுமானால், மாணவன் ஒன்றுக்கு ஒன்றரையணா மதிப்புள்ள சாப்பாடு போடப்படும் என்று சொல்லப்படுகிறது. இந்த ஒன்றரையணாவுக்குள் மத்தியான சாப்பாடு போட்டுவிட முடியுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கிராமப் பள்ளிக்கூடங்களில் இந்த மத்தியானச் சாப்பாடு போடுவது என்பது பெரிய விழா மாதிரி நடக்கிறது. பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் அந்தந்த ஊரில் உள்ளவர்களிடமிருந்து நெல் வசூலிப்பதும், அதைச் சேகரித்து, பிறகு மாணவர்களுக்கு சாப்பாடு போடுவதைக் கவனிப்பதும், இப்படியாக உபாத்தியாயர்களுடைய காலத்தை விரயம் செய்கிறார்கள். இதற்கே முக்கியமாக காலம் போகிறது. கிராமத்திலுள்ள தனவந்தர்களிடமிருந்து நெல், அரிசி முதலியவைகளை வசூல் செய்வதினால், படிப்புச் சொல்லிக் கொடுப்பதைவிட, இதிலேயே அவர்களுடைய காலம் சென்றுவிடுகிறது என்று குறையும் இருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்யவேண்டும். நிரந்தரமாக யராவது எண்டௌமெண்ட் செய்ய முன்வந்தால், அவர்கள் இப்பணியை எடுத்துக்கொள்வது நல்லது. அப்போதைக்கப்போது அரிசியும் நெல்லும் வாங்கி, சமைத்துப் போடுவது என்றால் இந்தப் பிரச்னை என்றைக்கும் தீராத பிரச்னையாக இருந்துகொண்டிருக்கும். ஆகவே, இதற்கு ஒரு நிரந்தரமான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பைலட் ப்ராஜெக்ட் என்று திருவள்ளூரிலும், கடம்பத்தூரிலும் ரூ. 1,300-ம், ரூ. 12,500-ம் முறையே வசூல் செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த முறையிலே பல இடங்களில் பொது மக்களையும், உபாத்தியாயர்களையும் சேர்த்து வைத்து, ஊரிலுள்ள பிரமுகர்களிடமிருந்து எண்டௌமெண்ட் வாங்கி பள்ளிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முற்படவேண்டும். அப்படி எண்டௌமெண்ட் செய்யக் கூடியவர்களுக்கு திருப்தியளிக்கக்கூடிய முறையில் பள்ளிக்கூடங்களில் அவர்களுடைய பெயர்கள் பொறித்த ஸ்லாப் வைக்கலாம். அதனால் அவர்களுக்கு ஊக்கம் ஏற்படலாம். ஆகவே, நிரந்தரமான எண்டௌமெண்ட் இருக்கவேண்டும்.

[Sri V. Sankaran] [8th April 1958

அப்படியில்லாமல் அன்றாடம் வாங்குவதென்றால் அது என்றைக்கும் தீராத ஒரு பிரச்னையாக, போகப் போக வளர்ந்துகொண்டே போகக் கூடிய பிரச்னையாகவும் இருக்கும்.

ஆரம்பப் பள்ளி சம்பந்தமாக ஒரு மைல் ரேடியஸ்ஸுக்குள் இன்னொரு பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்று இருக்கிறது. முனிசிபல் நகரங்களில் அந்த விதி தளர்த்தப்படவேண்டும்.

பாடப் புத்தகங்கள் வெளியிடும்போது, அரசாங்கம் வெளியிட்டாலும் சரி, தனிப்பட்டோர் வெளியிட்டாலும் சரி அது பற்றி நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். கான்வென்ட் பள்ளிக்கூடங்களில், பரீட்சை முடிந்த ஒரு வாரத்திற்குள்ளேயே முடிவை அறிவித்துவிட்டு, அடுத்த வருஷத்திற்கான பாடப் புத்தகங்களைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தந்த பள்ளிக்கூடங்களிலேயே புத்தகக் கடை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பரீட்சை நடந்த ஒரு வாரத்திற்குள்ளேயே புத்தகங்களைத் தயாராக வைத்துக்கொண்டிருப்பதனால் உடனே வாங்கிக்கொண்டு, விடுமுறைக் காலங்களில் படித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும்; கான்வென்ட் பள்ளிக்கூடங்களில் இருக்கும் இம்முறையை நாம் மற்றப் பள்ளிக்கூடங்களிலும் கையாண்டால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பது பாராட்டத் தக்கது. ஹரிஜனங்களாக இருந்து கிறிஸ்துவ மதத்திற்கு மாறியவர்களுக்கும் இப்பொழுது கல்விச் சலுகை விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது, ஸ்காலர்ஷிப்பும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவர்கள் என்ற முறையில் அவர்கள் ஏற்கெனவே மிஷனரிகளிடமிருந்து ஓரளவு நன்மை அடைந்து வருகிறார்களா, சலுகை பெறுகிறார்களா ? அப்படிப்பட்டவர்களுக்கே அரசாங்கம் மீண்டும் இத்தகைய சலுகைகளை அளித்துக் கொண்டிருக்கிறதா ? இம்மாதிரி இரண்டு வழிகளிலும் நன்மை பெறுகிறார்களா என்பதை அரசாங்கம் ஆலோசிக்க வேண்டும். ஒரே சமயத்தில் இரண்டு இடங்களிலும் சலுகை பெறலாம் என்ற நிலைமைக்கு இடம் அளிக்கக்கூடாது. கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஹரிஜனங்கள் விஷய்த்தில் நன்றாக பரிசீலிக்க வேண்டும். இல்லாவிட்டால் இரண்டு இடங்களிலும் சலுகை பெறும்படியான நிலைமை ஏற்படும். அந்த விதமான தப்பு செய்வதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, எல்.டி. பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களுக்கு பென்ஷன் திட்டம் இருக்கிறது. அது யோசிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அதையும் சீக்கிரம் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## III.—ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER—*cont.*

### (4) COMMITTEE ON SUBORDINATE LEGISLATION.

MR. SPEAKER : I have to announce to the House that under Rule 196 (1) of the Madras Legislative Assembly Rules I have nominated the following Members to serve on the Committee on Subordinate Legislation :—

Sri R. Srinivasa Iyer.
Sri S. Lazar.
Sri T. T. Daniel.
Srimathi A. Suares.
Sri A. R. Subbiah Mudaliar.
Sri M. D. Ramasami.
Srimathi Dr. Sathiyavanimuthu.



8th April 1958] [Mr. Speaker]

Sri K. Vinayakam.
The Hon. Sri C. Subramaniam.
Sri S. Nagaraja Monigar.

Under Rule 197 of the Assembly Rules I nominate Sri R. Srinivasa Iyer to be the Chairman of the Committee.

## VI.—BUDGET FOR THE YEAR 1958-59—VOTING OF DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1958-59—*cont.*

### DEMAND XV—EDUCATION—*cont.*

SRI P. S. CHINNADURAI : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கல்வித் துறைக்கென நாம் பட்ஜெட்டிலே ஒதுக்கியிருக்கும் பணம், ஒரு கணிசமான தொகைதான் என்பதிலே ஐயமில்லை. ஆனால் இவ்வாறு ஒரு கணிசமான தொகையைச் செலவழிப்பதற்குரிய முழுப் பயனையும் அடையவேண்டுமானால், ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்தவேண்டும் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுடைய தரம் உயரவேண்டும் என்று நான் குறிப்பிடும்போது, அவர்களுடைய வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்தாலொழிய, அவர்களுடைய கவனம் பெரிதும் இந்தக் கல்வித் தரத்தை உயர்த்துவதிலே செலுத்துவதற்கு இருக்காது, என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் ஆசிரியர்களுடைய குறைகளைக் குறித்து இந்தச் சபையிலே பேசப்பட்டு வருகிறது. இந்த ஆண்டிலேயும் ஆசிரியர்களுடைய குறைகளைத் நிவர்த்தி செய்யவேண்டுமென்று அங்கத்தினர்கள் பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகளைக் குறித்து பல அங்கத்தினர்கள் இந்தச் சபையிலே மீண்டும் நினைவுபடுத்தியிருப்பது கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்தை கவரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

சில தினங்களுக்கு முன்னால் ஆரம்ப ஆசிரியர்கள் ஒரு பெரும் ஊர்வலமாக பல பாகங்களிலிருந்து புறப்பட்டு, சென்னை நகரத்திற்கு வந்து மக்கள் முன்னால் தங்களுடைய குறைகளை எடுத்து விவரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பதையும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஆசிரியர்கள் தங்களுடைய கோரிக்கை அட்டைகளை ஏந்திக்கொண்டு ஊர் ஊராகச் செல்ல வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக்கத் தவறினால், நம்முடைய கடமையிலிருந்து தவறியதாகத்தான் ஆகும் என்று நான் குறிப்பாக வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப ஆசிரியர்கள் இவ்வாறு ராஜ்யமெங்கும் பெரும் கிளர்ச்சியிலே ஈடுபடுவதற்கு ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுமானால் அதற்குரிய காரணங்களையும் கண்டு, அவைகளைக் களைந் தெறிவதற்கு நாம் உண்மையாகவே முயற்சிக்க வேண்டும் என்று இந்த இலாகாவை நிர்வகிக்கக் கூடிய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏதோ தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்வதைப்போல் என்று கருதி அலட்சியமாக இருந்துவிடக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. அவர்களுக்கு வேறு யாரும் இல்லை. நாம்தான் இருக்கிறோம். மக்கள் இருக்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகளாக சட்டசபை அங்கத்தினர்களும் அமைச்சர்களும் இருக்கிறார்கள். அரசாங்கமே ஆரம்ப ஆசிரியர்களை சரிவர நடத்துவதற்கு தவறினால் இவர்கள் எப்படி பிறர் இடத்திலே போய், அவரவர்கள் தொழிலாளர்களை சரிவர நடத்த வேண்டுமென்றும் அவர்களுக்கு ஜீவனச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடுவதற்கு முடியும் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்கள் தங்களுடைய சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்குக்கூட போதிய வருமானம் இல்லாத நிலைமையிலே அல்லல் உறுகிறார்கள் என்றால், அவர்கள் எப்படி நல்ல பிரஜைகளைத் தோற்றுவிக்க தங்கள் முழு கவனத்தையும் செலுத்த இயலும் என்று கேட்கின்றேன். ஆசிரியர்களுடைய இந்தக் குறையை நாம் போக்குவதற்கு

[Sri P. S. Chinnadurai] [8th April 1958

முயலாத வரையில் கல்விக்காக செலவழிக்கக் கூடிய பணம், குறிப்பாக ஆரம்பக் கல்விக்காக செலவழிக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் வீணாகப் போய்விடுமோ என்று நான் உண்மையாகவே அஞ்சுகிறேன்.

இவ்வாறு ஆரம்பப் படிப்பிற்காக என்று நாம் ஒதுக்கி வைக்கும் பணத்தோடு இன்னும் கொஞ்சம் அதிகத் தொகையை ஒதுக்கியாவது ஆரம்ப ஆசிரியர்களுடைய குறைகளை நீக்குவதற்கு முற்பட வேண்டுமென்று தான் நான் கோருகிறேன். அவ்வாறு செய்வதை விடுத்து, ஆரம்ப ஆசிரியர்களுக்குள்ளேயே பிரிவை உண்டாக்குவதற்கோ அவர்கள் ஒரே கூட்டணியாக செயல்படுவதை தடுப்பதற்கோ, ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்களைத் தோற்றுவித்து அவர்களைப் பிரிவினைப்படுத்துவதற்கோ இந்த அரசாங்கம் முயலுமானால், அவர்கள் தங்களுடைய கடமைகளிலிருந்து தவறுவது மாத்திரமல்ல, வேண்டுமென்றே முதலாளிகள் போக்கிலே சூழ்ச்சிகளைக் கையாளுவதாகத்தான் இருக்குமென்று நான் குறிப்பிடுவேன். ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் முதலாளிகள் தான் போட்டிச் சங்கங்களை தோற்றுவிப்பார்கள், ஆதரிப்பார்கள், ஊக்குவிப்பார்கள். அதேபோல் இந்த அரசாங்கம் போட்டி ஆசிரியர்கள் சங்கங்களை உண்டாக்குவதற்கும் ஊக்குவிப்பதற்கும் முயற்சிக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். அந்த எண்ணத்தை கைவிடுத்து, அதற்கு பதிலாக ஆரம்ப ஆசிரியர்களின் பொதுவான குறைகளைக் கவனித்து, அவைகளைக் களைந்து எறிய உண்மையான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த அமைச்சர் அவையை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்களின் குறைகளைக் கவனிக்க எல்லாத் துறையிலிருந்தும் வற்புறுத்தல் வரும்போது, ஆரம்ப ஆசிரியர்களுக்கு மாத்திரம் என்ன பாரம், தடையாக இருக்கிறது என்று இந்தச் சபை தெரிந்து கொள்ளுவதற்கு பாத்தியதை இருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுடைய பிரச்னையைக் கவனிக்க வேண்டும். ஏனென்றால் இது கனம் அமைச்சர் அவர்களுடைய சொந்த வீட்டு விஷயம் அல்ல. அவர்கள் சொந்த முறையில் தனிப்பட்ட முறையில் உணர்வும் ஊக்கமும் இருந்தால் உற்சாகமும்
11-15 a.m. இருந்தால் கவனிப்பது, இல்லாவிட்டால் கவனிக்காமல் தள்ளி விடுவது என்று இருக்க முடியாது. அல்லது எதிர்க் கட்சிக்காரர்கள் சில பேரைக் குறிப்பிட்டு ஆரம்ப ஆசிரியர்கள் பேசச் சொல்லியிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தினால் அரசியல் பிரச்னையாக அலட்சியப்படுத்தி விடுவது தவறு என்பதாக எச்சரிக்க விரும்புகிறேன். இந்த எச்சரிக்கை இந்த ஆண்டோடு கடைசியாக இருக்கவேண்டும். அடுத்த ஆண்டிலும் இந்தமாதிரி எச்சரிக்கை வருவதற்கு இந்த அரசாங்கம் அனுமதித்தால் நிச்சயமாக மக்கள் மத்தியிலே பதில் சொல்லவேண்டிய நிலைமை உண்டாகிவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம் நாட்டில் பல தொழில்கள் வளர்ச்சியுறவேண்டுமே என்று சொல்லும்போது தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படிப் பதில் சொல்கிற அமைச்சர் அவர்கள் நாட்டுக்குத் தேவையான அளவு தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்களைத் தயாரிப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா, அதற்குப்போதுமான அளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால் மிகவும் வருந்தவேண்டியதாகத்தான் இருக்கிறது. சென்ற ஆண்டில், யூனிவர்ஸிடி தலைப்பில் சர்க்கார் ஆர்ட் கல்லூரி தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டது 44 லட்சம் என்றால் செலவழிக்கப்பட்டது 33 லட்சம்தான். இதனால் போதுமான அளவு தொழில் நுணுக்கப் பயிற்சி உடையவர்களைத் தயாரிக்க முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

அன்றைக்கு ஸ்ரீ வேதரத்தினம் பிள்ளை அவர்கள் பேசும்போதுகூட வேலையில்லாதவர்களைப் ப்ரட்யூஸ் பண்ணுகிற தொழிற்சாலையாக விளங்குவது நம் நாட்டிலுள்ள கல்லூரிகள் என்பதாகச் சொன்னார். அதை நான் ஆதரிக்கிறேன். அப்படிப்பட்ட கல்லூரிகள் அதிகப்படுவதைக் தடுத்தாவது தொழில் கல்லூரிகளை அதிகமளவுக்கு ஏற்படுத்துவதற்கு நம் சர்க்கார் முயற்சி செய்ய வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.



8th April 1958] [Sri P. S. Chinnadurai]

அடுத்தபடியாக கல்லூரி மாணவர்களுடையே ஒழுக்கக் குறைவு ஏற்படுகிறது. நிலைமை மோசமாகிறது. தன்னடக்கமின்மை வளருகிறது. என்பதாகவெல்லாம் அன்றைக்கு அண்ணாமலை சர்வகலாசாலை சம்பவம் பற்றி மந்திரி அவர்கள் இங்கே விளக்கியபோது குறிப்பிட்டார்கள். சுதந்திரப் போராட்ட காலத்திலே கல்லூரி மாணவர்கள் எந்த முறையில் தேசீய இயக்கங்களிலே பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற சரித்திரத்தை அறிந்துள்ளவர் வாயிலிருந்து அப்படிப்பட்ட கருத்து இன்றைக்கு இந்த அவையில் வருகிறது என்பதை வருத்தத்தோடு கூற விரும்புகிறேன். அதை நான் ஒருவகையில் ஒப்புக்கொள்கிறேன். முன்பெல்லாம் மாணவர்கள் கிளர்ச்சி செய்வதாக இருந்தால் மிகப் பெரிய காரியங்களுக்காகவே கிளர்ச்சி செய்வார்கள். ஆனால் இப்போதெல்லாம் ஒரு வேலைக்காரன் விஷயமாக, காவல்காரன் விஷயமாக தகராறு ஏற்பட்டு அதுவே பெரிய கிளர்ச்சியாக இப்போது முடிகிறது. இதற்கு யார் பொறுப்பாளிகள் என்று கேட்கிறேன் ? மாணவர்களை அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று வற்புறுத்தக் கூடியவர்கள் ஆட்சியாளர்கள்தாம். " மாணவர்களே நீங்கள் அரசியலில் கலந்து கொள்ளாதீர்கள் " என்று பல பலடியாக உபதேசம் செய்கிறார். மத்திய பீடத்தில் உள்ளவர்களும் கூட இதே உபதேசத்தைச் செய்துவருகிறார்கள். அதன் காரணமாக மாணவர்கள் சினிமாத் துறையில் கலந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள் வேலைக்காரர் விஷயமாக தகராறை உண்டுபண்ணிக்கொள்கிறார்கள். நாம் உபதேசம் செய்யாமல் விட்டிருந்தாலும் அவர்கள் சுதந்திரமாக எந்த நேர்மையான கொள்கையைப் பின்பற்றவேண்டுமோ அதைப் பின்பற்றிக்கொள்ள முடியும். அவர்களுடைய கவனம் சரியான வகையில் செல்லாது வேறு வகையில் திரும்பிவிடுவதற்குக் காரணமாக இருப்பவர்கள் நாம்தாம் என்பதை மறந்துவிடக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு இன்னொரு விஷயம். அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர்கள் காவல்காரன் சட்டையைப் பிடித்து இழுத்தான் என்பதற்காகச் சற்று வரம்பு மீறியே நடந்து கொண்டுவிட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். உப அத்தியக்ஷகர் என்ன செய்தார் ? அமைச்சர் அவர்களும் அன்றைக்கு அங்கே இருந்தார்களே இவர்கள் எல்லாம் தங்கள் பொறுப்பை அன்றைக்கு நிறைவேற்றி வைத்தார்களா ? உப அத்தியக்ஷகரிடத்தில் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்பு உண்டு. அதற்காக அவர் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லையென்றால் அதையும் சுட்டிக்காட்டக்கூடாது என்கிற மனப்பான்மை உடையவன் அல்ல. மாணவர்கள் தாமே, அவர்களே சற்று வரம்பு மீறி நடந்துவிட்டார்கள் என்பது உண்மையாகவே இருக்கட்டும். இவர்களாவது சற்று பொறுமையாக—பெரியவர்களுக்கே இயல்பாக இருக்கவேண்டிய அனுபவத்தோடு கூடிய பொறுமையைக் காட்டி நடந்து கொண்டிருக்கிறார்களா ? மாணவர்கள் அத்துமீறி நடந்தார்கள், சர்வகலாசாலையை மூடிவிட்டோம் என்றால் மாணவர்களுக்கு என்ன ? அதனால் அவர்களுடைய பெற்றோர்களுக்கு எத்தனை நஷ்டமும், கஷ்டமும் உண்டாகியிருக்கும். இதை மாணவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும் என்று பதில் சொல்வது சரியாகுமா ? யோசித்துப்பார்க்கும் சக்தி இல்லாமல் தானே வரம்பு மீறி நடந்து கொண்டிருக்கிறார்கள். நாமாவது அவர்களைக் கூப்பிட்டு அழைத்துவைத்துப்பேசி நல்ல உபதேசத்தைச் செய்யலாம் என இவர்கள் முன் வந்தார்களா ? அந்த அளவுக்குக் கூட இவர்களுக்கு சகிப்புத் தன்மை இல்லாவிட்டால் மாணவர்களைக் குறித்து என்ன சொல்ல இருக்கிறது ? மாணவர்கள் சம்பந்தப்பட்ட வரையில் அண்ணாமலை சர்வகலாசாலையை நிர்வகிக்கின்ற உப அத்தியக்ஷகரும்சரி, வார்டனும்சரி, சாமர்த்தியமாக, சற்று அநுபவ நிலையையொட்டிய சகிப்புத்தன்மையோடு நடந்து கொண்டிருக்கவேண்டுமென்பது என் அபிப்பிராயம். மாணவர்கள் என்ன சிறைக் கைதிகளா ? அவர்களைப் போலீசாரைக் கொண்டு அடிக்கச் சொல்வது நியாயமா ? நாம் பொறுமையோடு நிதானமாக, சாமர்த்தியமாக, சகிப்புத் தன்மையோடு நடந்துகொள்ளாமல் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுடைய வாழ்க்கை பாதிக்கும் வகையில், அவர்களுடைய பெற்றோர்கள் எல்லாம் கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாகும்படியாக நடந்து கொண்டிருப்பது தப்பு என்று நினைக்கிறேன். இப்போதும் ஒன்றும் காலம் தவறிப் போய்

[Sri P. S. Chinnadurai] [8th April 1958

விடவில்லை. பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக யூனிவர்சிடி செனட்டுக்கு ரகசியமாகத் தேர்தல் நடக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: I have to announce to the House that the leaders of various parties and the Hon. the Leader of the House have agreed that we should extend the time allotted for the discussion of this demand. They have agreed that we should give up the time allotted for discussion of the Demand for 'Loans and Advances by the State Government' and continue the discussion on the Education Demand till 5 o'clock this evening when the guillotine will be applied to the Demands that have not so far been discussed and voted. That means, the hon. Member Sri T. S. Ramasami Pillai will speak from 3-40 to 3-55, the leader of the Communist party will speak from 3-55 to 4-10 and the Hon. Minister will reply to the debate from 4-10. At exactly 5 o'clock whatever be the demand under discussion, I will apply the guillotine. Neither the House nor I have the power to extend the discussion beyond that time. So we shall sit till 1-30 now and meet again at 3-30 p.m. and sit till 5 o'clock. I am glad that many more members will have a chance to speak on this demand.

SRIMATHI A. SUARES: Mr. Speaker, Sir, I support the Demand for Rs. 12,34,26,500 under 'Education'. On a careful study of the Budget figures it is found that the Government have allotted large sums of money for various progressive schemes in addition to the routine expenditure. I shall quote only a few of these figures. Under Second Five Year Plan, for the improvement of Education in different grades of schools a sum of Rs. 2,21,44,700 has been granted. Grants towards extra cost due to the revision of salaries and enhancement of Dearness Allowance to teachers in
12-00 noon. aided, primary and basic schools and to local bodies for primary education, comes to Rs. 1,00,36,500.

| | RS. |
|---|---|
| Grants for compulsory education ... ... | 25,00,000 |
| Grants for mid-day meals ... ... ... ... | 20,00,000 |
| Opening of new elementary schools to relieve educated unemployed ... ... ... ... | 40,00,000 |

Though the Government have allotted large sums under various heads for Education, I wish to make a plea for higher salaries for two grades of teachers in particular, viz., the secondary grade teacher and the school assistant, i.e., trained graduate teacher. The Elementary school teachers have already been benefited by the revision of salaries and also enhancement of Dearness Allowance during the last two years but the secondary grade teacher and the school assistant are still receiving inadequate basic salaries. The scale of pay for a Secondary Grade teacher is 45-3-60-2-90. It takes 20 years for the Secondary Grade teacher to reach the



8th April 1958] [Srimathi A. Suares]

maximum salary and after that there is no increase or promotion. The School Assistant's scale in Grade II is 85—175 and in Grade I, 165—245. In this case a teacher takes 25 years to reach the maximum salary, and 75 per cent of the School Assistants do not get further promotion and retire on the salaries just mentioned. These scales of pay have been in force for a long time during which period the cost of living has increased four-fold in certain items of expenditure. The dearness allowance now paid does not go a long way to meet the high cost of house rent, food and clothing. If we try to divide the salary of Rs. 45/- minus Provident Fund contribution, under the heads 'house rent, lighting, food, clothing, education of children, medical charges', for a small family of 5 to 6 members, we will find it an impossible task. The teacher has to maintain a certain status to be respected in school. With increasing prices, this becomes more and more difficult.

The School Assistants are not better off with a starting salary of Rs. 85. A graduate teacher studies for four years in an Arts or Science College and one year in a training college. If we compare the scale of pay of a graduate teacher with that of a graduate working in other services, we will find that the School Assistant has a poorer start in life. A Police Inspector is started on a salary of Rs. 175, a Jailor on Rs. 200, a Matron of a Jail on Rs. 125, a Tahsildar and a Sub-Magistrate on Rs. 200 a Forest Ranger on Rs. 125, a Head Nurse on Rs. 150 and an Upper Division Clerk on Rs. 90. Compared with these salaries, the salary the School Assistant in Grade II gets is low. It may be argued that school teachers have shorter hours of work and longer vacation. The work of a teacher does not end when the school bell rings at 4 or 4-30 in the evening. She has to attend to games or extracurricular activities and also to take her work to her home. He or she has to prepare lessons for each day and has to correct piles of exercise books every day. This work will go on to mid-night in the case of scrupulous and conscientious teachers. Of course, the teacher gets long vacation but earned leave is proportionately less on this account.

In the present day, classes have increased in size. Though the maximum strength is 40, we hear of classes with a strength of 45 and even 50. Most people cannot realize the difficulty in handling such large classes in class rooms that are usually limited in size. To maintain discipline and to give individual attention to 50 young, lively and perhaps mischievous children, is a very difficult task. A parent with half a dozen children, finds it difficult to manage them during long holidays and waits for the opening of schools but a teacher has to do her job day in and day out for years together.

When salaries are insufficient, teachers try to supplement their income through private tuition. If private tuition is not controlled and restricted by the school authorities, it becomes an evil. Too many hours are spent on private tuition with the result that legitimate work in schools as well as preparation of lessons at home and correction of excercises, suffer. When teaching becomes inefficient, almost every child needs private tution, and further evils follow in its wake, viz., partiality, dishonesty, neglect of duty,

etc. This practice forms a vicious circle which has to be watched. If the Government keep down the strength of classes there would be greater efficiency.

Even a small increase of, say, Rs. 5 a month in the basic salary will entail high expenditure but this extra expenditure is necessary to better the lot of the Teacher. Perhaps one grade of Teachers can be benefited at a time in the remaining years of the Second Five Year Plan period. Owing to low salaries the Department does not get the best type of Teachers. Those who can secure lucrative jobs in private firms or in other Departments of Government, will not come forward to take up the teaching profession. Those who do take up the teaching profession, prefer to teach outside the State, where higher scales of pay prevail. The State cannot afford to lose good teachers. If higher salaries are paid this exodus of teachers can be stopped.

The teaching profession is a vocation and a mission unlike other jobs. The younger folk of the country are trained by teachers in their most impressionable age. What a man or woman is in later life can be traced back to the kind of teachers he or she had in early years. Perhaps the Members of this House owe their present position and their present ability to the foundation laid by their teachers in their school days. In bettering the lot of teachers the Government will be bettering the training of the whole Nation.

All teachers must have been pleased to read in the newspapers of the Scheme, for 'national awards for teachers' in recognition of the services of teachers ' who have worked in a spirit of dedication and service'. It is not so much the award of Rs. 500/- that the teachers will appreciate, but the recognition given to their service which will raise their prestige. In the Lok Sabha recently the Union Minister for Education made a statement that from next year financial assistance will be given for all categories of teachers.

(Deputy Speaker in the Chair.)

For the last two years the Central Government have been assisting the elementary grade teachers and secondary grade teachers. With this financial assistance, I am hopeful that the Madras Government will consider seriously the question of improving the basic salaries of teachers. In doing so, the Government will only be placing the teaching profession on a level with other professions which now offer a better starting salary.

**Sri V. K. KRISHNAMURTHI** : அவையின் தலைவரவர்களே, மதி வளம் பெருக நிதிவளம் கோரும் இம்மான்யக் கோரிக்கையை வரவேற்றுதரிக்கின்றேன்.

12-05 p.m. உவமையற்ற இலக்கணத்தாலும், உயிருள்ள இலக்கியத்தாலும் தமிழகம் அலங்கரிக்கப் பெற்றிருப்பது பாராட்டற்குரியதே. இலக்கண நூல் தலை வராகவும் வாழ்வியலின் விளக்காகவும் விளங்குகின்றதாதலி ஞலே பெருமிதத்திற்கு கல்வி முதன்மை என்றியம்பியிருத்தல் வெள்ளி டைமலை, அதன் அடிவழி வந்த தமிழ்மறை கல்லாதார் விலங்கினத்துடன் வைத்தெண்ணப்படுவரென்றும் அறிவுடையார் எல்லாமுடையர் என்றும் கூறியிருத்தலாலே கல்வியின் இன்றியமையாமையை நாம் நன்குணர் கிறோம்.



நம் அரசாங்கம் கல்வியின் இன்றியமையாமையை நன்குணர்ந்து வரு வாயில் ஐந்திலொரு பகுதியை கல்விக்குச் செலவழிப்பது நல்லாட்சிக்கோர் எடுத்துக்காட்டு. என்றாலும் ஆரம்பக்கல்விக்கு மிகப் பெருந்தொகை செல வழிப்பதைக் கண்டு களிபேருவகை எய்தினும் அதனாலானபயனைக் காண கையில் கலக்கமுறாமலிருக்க முடியவில்லை. முதல் வகுப்பில் 40 மாண வர்கள். ஐந்தாம் வகுப்பில் 20 மாணவர்கள் என்று ஆண்டிற்கொரு முறை ஒருவர் பின் ஒருவராக ஓடி ஒளிந்தனர். நிலவும் வாய்ப்பை வழுவவிடாமல் இருகப்பற்றின் செலவுக்கும் உழைப்பிற்கும் பலனுண்டு. ஆதலால் படிப்படியாக ஒவ்வொரு ஆண்டுக்கும் கட்டாயத்தை ஏற் படுத்தினால் பலனுறுவர். கல்வியின் தரம் ஆசிரியர்களின் புலமையைப் பொறுத்திருக்கிறது. இலக்கண-இலக்கிய அறிவு ஓரளவு பெற்றிருந்தால் பிழையற கல்வியளிக்க இயலுமாதலால் ஆசிரியர் பயிற்சி பெரும்பொழுதே தமிழ் இலக்கண-இலக்கிய அறிவு பெற ஆவன புரிய வேண்டும். ஏழை மாணவர்களுக்கு இலவச உணவு கொடுக்க அரசாங்கம் முன்வந்திருப்பது உவகையுற வைக்கிறது, பசிவந்திடில் பத்தும் பறந்திடும் என்ற ஔவையின் அருள் வாக்கும், பிடித்த கல்வி பெறும்புணை விடூஉம் பசிப்பிணி என்னும் பாவி என்ற சீத்தலை சாத்தனாரின் நல்வாக்கும் நினைவிற்கு வருவதால் பழங்காலப் புலவர்களின் பொன்னுரை நம் அரசாங்கத்தால் நடைமுறை யில் உருவாகின்றன. என்று பெருமையுடன் பகர்கின்றேன்.

பள்ளி இறுதி தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் பேர் பாதி தேர்தலில் தேறவில்லை, தவறிய மாணவர்கள் கதி அந்தோ, செலவிடும் தொகைக்குப் பலன் பாதிதான் கிட்டுகிறதெனினும் தனியாக மேற்படி மாணவர்களுக்கு தனி பயிற்சி நல்கி குறைந்தது 80 சத விகிதம் தேறக் கூடிய வகை புரிய வேண்டுமென்றதால் மார்க்குகள் கூட்டிப் போடவேண்டுமென்ற பொருள் அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். கல்லூரிகளின் பாட மொழியாக தமிழ் இருக்க வேண்டுமென்ற கருத்து உருவாகி நிரம்ப ஆதரவு பெற்று வருகிறது. விஞ்ஞானப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதில் கருத்து வேறுபாடிருக்கிறது. விஞ்ஞானப் பகுதிக்கு கலைச் சொற்கள் எவை என்ற வாதத்திலிறங்காமல் அனைத்துலகக் கலைச் சொற்களைக் கையாள வேண்டுமென்ற முடிவிற்கு விரைவில் வந்து தீர வேண்டும். இல்லை எனின் அலை ஒழிவது எப்பொழுது தலை முழுகுவது எப்பொழுது என்ற நிலை நீடிக்குமானால் முடிவு காணாது அவலத்தில் மூழ்கிக் கொண்டிருக்க நேரிடும். ஆதலால் தமிழிலே கல்லூரிகளில் பாடம் பயிற்றுவிக்கப் படவேண்டுமென்ற முயற்சி விரைவில் நிறைவேற அரசினர் ஆவன புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி மான்யத்தைப்பற்றிய கோரிக்கையில் வர்க்கமற்ற சாதியற்ற சமுதாயம் படைக்க கல்வியின் குறிக்கோள் அரண் செய்ய வேண்டுமென்ற நன்னோக்கத்தை நவின்றிருப்பது பாராட்டி—வரவேற்று—போற்றிப்புகழவேண் டியதன்றி வேறென்ன ? பொன்னான இவ்விரு கொள்கைகள் நிறைவேற நந்தமிழலக்கியம் அரண்செய்கிறதென்று பெருமையுடன் ஆன்ற சான்று களுடன் கூறுகிறேன்.

ஜாதி என்ற சொல் தமிழல்ல; சாதி என்ற சொல் நீர்வாழும் பிராணிகளின் பிரிவுகளுக்குக் கூறப்பட்டிருக்கிறதேயன்றி மண் மீதிலங்கும் மக்களினத்திற்கும்—விலங்கினத்திற்கும் இல்லவே இல்லை என்று இலக்கியம் பயின்றதால் அறுதியிட்டு உறுதியுடனியம்புகிறேன். புறநாகரிகங்கள் நுழைந்ததால்—புற கொள்கைகள் அலை அலையாகப் புரண்டோடி நம் நாட்டில் புகுந்ததால் ஜாதி என்ற சொல் நுழைந்து அகதி போல் விளங்குகிறது. ஜாதி என்னும் பேய் நம் தமிழ் சமுதாயத்தில் நுழைந்து உயர்வு-தாழ்வு; பிரிவு-பிளவு ஏற்படுத்திப் பலபிரிவினைகளை உண்டாக்கி ஊறு விளைத்ததென்று வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். " பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்............... " என்ற அறம் பிறந்த தமிழகத்தில்; " உயர்திணையென்மனார் மக்கட் சுட்டே " என்ற நற்கொள்கை பிறந்த தமிழகத்தில் ஜாதி நுழைந்தமை தீவினையின் காரணமன்றி வேறென்ன ? அண்மையில் நம் தமிழகத்தைச் செம்மை யாக்க சைவசித்தாந்த சமரச ஒளி ஏந்திய வள்ளலார் இராமலிங்க அடிகள்

[Sri V. K. Krishnamurthi] [8th April 1958

" நால் வருண ஆசிரம ஆச்சார
நவின்ற கலை சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டேன்று "

மிகவும் வன்மையாகக் கண்டித்தமையை நிறைக்காமலிருக்கவில்லை.

வர்க்கமற்ற சமுதாயம் என்ற பொழுது மிண்டிய மாயா வாதத்தை முன்னிருத்தி உடையவருக்கும் இல்லாதவருக்கும் போராட்டத்தைக் கிளப்பி அவலம் நிகழ்கிற பொழுது அரசைக் கைப்பற்றி நிலத்தைப் பங்கிடுவது போல் அல்லாமல் வள்ளுவன் உரைத்த "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்" என்ற பேரறத்தையும் "ஊருணி நீர் நிறைத்தற்றே—பேரறிவாளன் திரு" என்ற உயர் அறத்தையும் பின்பற்றி வர்க்கமற்ற சமுதாயத்தைப் படைப்பதோடு, பைந்தமிழ் அன்னைக்குப் பன்னீராயிரம் பாமாலை புனைந்த கம்பனின் "எல்லோரும் எல்லாப்பொருளும் பெற்றிருத்தலாலே உடையாருமில்லை. இல்லாருமில்லை" என்ற கருத்து காரல் மார்க்ஸ் பிறப்பதற்குப் பன்னெடுங்கால முன்னரே பகர்ந்தமை பாராட்டற் குரியதே. நல்ல சமுதாயத்தைப் படைக்க தமிழ் இலக்கியம் அரண் செய்வதால் தமிழ் இலக்கியத்தின் பெருமை என்னே. தமிழ் இலக்கியத்தை நன்காராயின் உயரிய நல்ல சமுதாயத்தை உருவாக்க இயலுமென்று வகையுட னுரைக்கின்றேன்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழன் புனைந்த கட்டுரைகளில் பா. வே. மாணிக்க நாயகர் யாத்த "வடிவு திரிந்து அறிவு வளர்ந்த வரலாறு" என்ற கட்டுரை உலகப் புகழ் யெய்தவல்லது. இவர் தொடங்கிய தமிழ் ஒலி ஆராய்ச்சியை இவருக்குப் பின்னர் என் ஒப்பற்ற ஆசிரியர் கே. பி. சந்தோஷ் தொடர்ந்து ஆராய்ந்தாரெனினும் முற்றுப் பெறு முன் அவ்வுலகேதினார். இவ்வாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த தக்க புலவர்களை அரசினர் அணுகுவதுடன் அவர் கட்டுரையை வெளியிட்டு அன்னாருக்கு விழா கொண்டாடுமாறு அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழுக்கு உயர்வு நல்க அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வழக்கொழிந்த மொழிகளெல்லாம் உலகப் புகழ் எய்தின, தமிழ் மொழியோ வழக்கொழியவில்லை, உலகப் புகழ் எய்தவில்லை. காலன் வாய்ப்பட்ட இலக்கியங்களெல்லாம் உலகப் புகழ் எய்தின, தமிழ் இலக்கியமோ காலன் வாய்ப்படவில்லை—வாழ்வில் இரண்டறக் கலந்து விளங்குகிறது என்றாலும் உலகப் புகழ் எய்தவில்லை. ஆதலால் தமிழ்ப் பெருமையையும் இலக்கியப் பெருமையையும் பார் அறிய ஆவன செய்ய அரசினர் பணிவுடன் வேண்டுகிறேன்.

கரிசற்ற கல்வியும், ஆசற்ற அறிவும், கரையற்ற கலையும், புரையற்ற பண்பும், கட்டமைந்த ஒழுக்கமும் பெற்று நம் மக்கள் நலமெய்தி மொழி—நாகரீகம்—கலை—பண்பு வளர பாடு பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இக்கல்வி மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். வணக்கம்.

12-20 p. m.

**Sri A. GOVINDASAMY :** சட்ட மன்ற உதவி தலைவர் அவர்களே, கல்வி மான்யத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் அண்ணாமலை பல்கலைக் கழகத்தை மூடுவிழா செய்த பெருமை நமது கல்வி அமைச்சர் அவர்களை சார்ந்திருக்கிறது என்பதை நினைக்கும் பொழுது மிகவும் வேதனையாக இருக்கிறது. அங்கு மாணவர்கள் தவறுகள் செய்தார்கள், மாணவர்கள் தவறாக நடந்து கொண்டார்கள் என்கிற ஒரு பட்டியலையும் இங்கு கல்வி அமைச்சர் அவர்கள் படித்தார்கள். மாணவர்களை வெளியே அனுப்பி விட்டு கல்லூரியை மூடிவிட்டு பெருமிதத்தோடு இங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த பிரச்னையை சுமுகமாக தீர்த்திருக்கலாம். மாணவர்கள் இதுவரையிலும் அனுமதி பெற்றுக் கொண்டு கல்லூரி விழாவுக்கு போனது கிடையாது. இப்போது நடந்த விழாவுக்கு அனுமதி வேண்டுமென்று கட்டளை போட்டிருக்கிறார்கள். அதன்படி மாணவர்கள் அனைவரும் அனுமதி பெற்றுக் கொண்டு தான் போயிருக்கிறார்கள், ஒன்றிரண்டு பேர்களை தவிர. இவ்விதம் போயிருந்தும் இந்த சம்பவம் நடந்திருக்கிறது. இப்போது என்ஜினியரிங் கல்லூரி மூடிய காரணத்தால் இப்போது பரிட்சை கழிந்த உடனேயே உத்தியோகம் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்த மாணவர்களுக்கு இப்போது உத்தியோகம் கிடைப்ப



8th April 1958] [Sri A. Govindasamy]

தற்கு வசதியில்லாமல் இருக்கிறது. இதனால் அவர்களது ஸீனியாரிட்டி கிடைக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. இன்ஜினியர்கள் நமக்கு தேவை தேவை என்று சொல்லிவிட்டு, இவ்விதம் என்ஜினியரிங் கல்லூரியை மூடியதற்கு காரணம் என்ன என்று கேட்கிறேன். மாணவர்களுடைய குழப்பங்கள், இதற்கு முன்னாலும் அண்ணாமலை பல்கலை கழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அந்த நேரங்களில் எல்லாம் துணை வேந்தர்களாக ரைட் ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி அவர்கள் ரத்தினசுவாமி அவர்கள், ரெங்கநாதன் அவர்கள் போன்றவர்கள் இருந்திருக்கிறார்கள். இந்த மாதிரி குழப்பங்கள் நடந்த நேரங்களில் எல்லாம் கல்லூரியை மூடியது கிடையாது. ஆகவே இந்த பிரச்னையில் கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு முடிவு காண்பதற்கு தவறி விட்டார்கள் என்பது அவருடைய மனசாட்சியே சொல்லும் என்று நினைக்கிறேன். அவர் செய்ய வேண்டிய கடைமையிலிருந்து வழுக்கி விழுந்து விட்டார் என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. இங்கே வைத்து குற்றம் சாட்டாமல் இருந்து விட்டு வெளியே போய் திராவிட முன்னேற்ற கழகம் தான் இந்த குழப்பத்திற்கு காரணம் என்று சொல்லியிருக்கிறார். உண்மையிலேயே அங்கு இதுவரையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பேசுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவ்விதம் யாராவது அங்கு சென்று பேசியிருப்பார்கள் என்றால் அதுவும் இலக்கியத்தின் பேரில் தான் பேசி யிருப்பார்கள். ஆகவே உடனடியாக கல்லூரியை திறந்து பரிட்சையை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும். என்று கேட்டுக்கொள்கிறேன். அது ஒரு ஆட்டணமஸ் பாடி என்று சொல்லிவிடக் கூடாது. ஏனென்றால் நாம் அதற்கு மான்யம் கொடுக்கிறோம். அங்கே யிருந்த கல்லூரியின் ஸ்தாபகரின் உருவச் சிலையின் பக்கத்திலிருந்த கொட்டகை கொளுத்தப்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. அது வருந்தக்கூடிய செய்திதான். அதை மாணவர்கள் செய்யவில்லை என்று நான் விசாரித்ததிலிருந்து தெரிகிறது. அதை வேண்டுமென்றே சில விஷமிகள் செய்திருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாணவர்கள் பேரில் வீணாக பழியை சுமத்துவதற்காக இவ்விதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்தபடியாக இந்தி மொழி படிக்கின்ற விஷயத்தைப்பற்றி குறிப்பிடும் போது நம் ராஜ்யத்தை தவிர மற்ற இடங்களில் மாணவர்கள் இரண்டு மொழி படித்தால் போதும் என்று இருக்கிறது. ஆனால் நமது நாட்டிலுள்ள மாணவர்கள் மூன்று மொழிகள் படிக்க வேண்டி யிருக்கிறது. கல்வி திட்டத்தில் வேறு ஏதாவது இந்தி மொழி படித்தால் போதும் என்று சொல்லி யிருக்கிறதே என்று சொல்லலாம். ஆனால் வேறு இந்திய மொழி படிப்பதற்கு மொழி ஆசிரியர்களை நியமிப்பதில்லை. இந்தி ஆசிரியர்களைத்தான் நியமித்திருக்கிறார்கள். இதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். ஆசிரியர்களுடைய குறைகள் இருப்பது வரையிலும் கல்வியின் தரம் உயருவது கஷ்டமாகத்தான் இருக்கும். இதைப்பற்றி எத்தனையோ தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளை போக்குவதற்கு எதிர் கட்சிகளிடம் வந்து சொன்னால்தான், அதன்மூலம் அதற்கு நிவாரணம் ஏற்பட்டு அதன் மூலம் கல்வியின் தரம் உயரும் என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1—7—58-லிருந்து ஒரு வகுப்பில் 35 முதல் 69 வரையிலும் பிள்ளைகள் இருந்தாலும் ஒரே ஒரு ஆசிரியர் தான் வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. நான் சொல்லுவது 35-க்கு மேல் கூடுதலாக 36 ஆக இருந்தாலும் இரண்டு ஆசிரியர்களை போட வேண்டும். இருபது மாணவர்களுக்கு குறைவாக இருந்தால் வகுப்பை நடத்த முடியாது என்று கூறுகிறார்கள். இவ்விதம் இருந்தால் பல மாணவர்கள் படிக்க முடியாமல் துரத்தப்படுவார்கள் என்பதுதான் பொருள். ஆகவே இதையும் சர்க்கார் ஆலோசனை செய்து பார்க்க வேண்டும். அதோடு கல்வியின் தரம் குறையாமல் இருக்க வேண்டுமென்றால், கல்விக்காக அதிகப்படியாக வேலை செய்கின்ற ஆசிரியர்களுடைய குறைகளை நாம் நீக்கியாக வேண்டும். 1—4—58- முதல் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை நடத்தப்படும் பள்ளிகளில் தலைமை ஆசிரியர் இல்லாத இடத்தில் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களை ஹையர் கிரேடில் நியமிக்கிறார்கள். அப்போது அவருக்கு ஹையர் கிரேட் சம்பளம் தான் கிடைக்கிறது. இதை நிறுத்தியாக வேண்டும். இவ்விதம் செக்கண்டரி

கிரேட் பாஸ் பண்ணினவர்கள் ஹையர் கிரேட்டில் மானேஜ்மெண்டு ஸ்கூலில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்தப் புதிய உத்தரவினால் இந்த நிலைமை ஏற்படுகிறது. இதை நாம் தடுத்தாக வேண்டும். அதோடு மனேஜ் மெண்ட் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும். அவர்களுக்கு டயரக்ட் பேமெண்ட் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் மற்றும் பல குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதில் முக்கியமாகச் சில குறைகள் இருக்கின்றன. அதாவது அவர்களுக்கு மேல்சபையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். பி.எ. படித்தவர்களுக்கும் செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் இருப்பதுபோல் அதிகமாக இருக்கக்கூடிய மற்ற ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்வதற்கு வசதியும் வாய்ப்பும் ஏற்படும். அதோடு ஆசிரியர்களுக்கு என்று வீடு இல்லாததினால் வெளியூர்களிலிருந்து வந்து வேலை பார்க்க வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக தண்டனை பெற வேண்டியிருக்கிறது. அதோடு சில சமயங்களில் சமாதானம் எழுதிக் கொடுக்க வேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே பள்ளிக்கூடங்களின் பக்கத்தில் வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அல்லது மற்ற ஊழியர்களுக்கு கொடுக்கப்படுவது .போல் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டும். அதோடு அவர்களது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று அடிக்கடி குறைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் தீர்மானத்திலும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு 50 ரூபாயாகவும், செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 70 ரூபாயாகவும் உயர்த்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர் இந்தச் சர்க்காருக்கு எந்தெந்த விதங்களில் எல்லாம் உதவுகிறார்கள் என்று பார்த்தால் இந்தச் சட்டசபை தேர்தல் நேரத்தில் வாக்காளர் பட்டியல் தயாரித்துத் தருவது ஆசிரியர்கள் தான். உணவு நெருக்கடி காலத்தில் ரேஷன் கார்டு எழுதிக் கொடுத்தது எல்லாம் ஆசிரியர்கள்தான். ஆகவே இவ்விதம் எல்லாம் உதவி செய்து வருகிற ஆசிரியர்களுடைய சம்பளத்தை அவர்களது வேலைக்கு தகுந்த அளவு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி ஆசிரியர்கள் வோட்டர்ஸ் லிஸ்ட் தயாரிக்கும் பொழுது அவர்களுக்கு ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு கணவனும் மனைவியும் ஆசிரியர்களாக வேலை செய்து வருவதாக இருந்தால் அவர்கள் இரண்டு பேருக்கும் ஒரே பள்ளிக்கூடத்தில் வேலை கொடுப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இன்று எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்தலில் 30 சத விகிதம் 50 சத விகிதம் தான் மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள் என்றால் ஹைஸ்கூல்களில் பி. டி. டீச்சர்ஸ் கிடைப்பதில்லை. கணக்குப் பாடத்திற்குத் தனியாக பி.டி. படித்தவர்கள் போடுவதில்லை. காரணம் அவர்களுக்குச் சம்பளம் கூடுதல் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதே போல் விஞ்ஞான பாடத்திற்கும் ஆசிரியர்கள் இடையாது. ஸயன்ஸ் பாடத்திற்கு ஏற்றவாறு லாபரட்டரி இல்லாத நிலைமை எத்தனையோ பள்ளிக்கூடங்களில் இருக்கிறது. அதைப் போக்குவதற்கு பி.டி.ஆசிரியர்களை போடவேண்டும். இன்றைக்கு டபிள் டிகிரி எடுத்தவர்கள் பி. எல். படித்தவர்கள் எல்லாம் நன்றாக சம்பாதித்துக் கொண்டிருக்கும் பொழுது இவர்களுக்கு குறைந்த சம்பளம் தான் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே இவர்களுக்குக் அடிப்படை சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே ஒவ்வொரு ஹைஸ்கூல்களிலும் தேவைக்கேற்றபடி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் பரிட்சையில் அதிக மாணவர்கள் தேற முடியும். மேலும் கடலூரில் ஒரு ஆர்ட்ஸ் கல்லூரி திறக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் ஜில்லாவில் அண்ணாமலை யூனிவர்ஸிட்டி இருக்கிறது என்றாலும் கடலூரில் ஒரு ப்ரி-யூனிவர்ஸிட்டி என்ற அளவிளாவது முதலாவதாக ஒரு கல்லூரி திறக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு ஆறு ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. தென்னாற்காடு ஜில்லாவின் தலைநகரமாக இருக்கிறது. ஆகவே கடலூரில் இதை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடலூரில் இல்லாவிட்டாலும் விழுப்புரம் தாலூகாவில் எங்காவது திறக்க





வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது ஆரம்பப் பள்ளிகளை 500 பேர் ஜனத்தொகை கொண்ட இடங்களில் திறந்திருக்கிறோம் என்றும் இனிமேல் 300 பேர் ஜனத்தொகை கொண்ட இடங்களில் திறக்கப்போகிறோம் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் ஸ்கூல் லெஸ் ஸெண்டர் என்ற முறையில் பல இடங்களில் இருந்து வருகிறது. சில இடங்களில் ஆறு வயது குழந்தைகள் ஒரு மைல் தூரம் வரை பள்ளிக்கூடத்திற்குப் போய் படிப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக எந்தெந்த கிராமத்தில் 300 பேர் ஜனத்தொகை இருக்கிறதோ அந்த கிராமங்களில் எல்லாம் ஆரம்பப் பள்ளிகளைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI K. R. VISWANATHAN: உதவி அவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கல்வி மான்யத்திற்காக 12 கோடி சொச்ச ரூபாய் ஒதுக்கியிருப்பதுபற்றி நாமெல்லோரும் மிகவும் மகிழ்ச்சி அடையவேண்டும். இந்த மாகாணத்திலே இருக்கிற செலவுத் தலைப்புகளிலே முதலாவதாக நிற்பது கல்வி மான்யக் கோரிக்கைதான் என்று சொல்லவேண்டும். முக்கியமாக, அறிவை இந்த நாட்டிலே பெருக்க வேண்டும், எல்லா மக்களிடையேயும் கல்வியை வளர்க்க வேண்டுமென்ற அடிப்படையான நோக்கத்தைக் கொண்டு பெரும் தொகை ஒதுக்கியிருப்பதைக் குறித்து கல்வி அமைச்சரை எல்லோரும் பாராட்டுகிறோம். இப்படி அதிகமாகப் பணத்தை ஒதுக்கிச் செலவு செய்கின்ற நேரத்திலே அண்மையில் நடந்த அண்ணாமலை பல்கலைக்கழக நிகழ்ச்சியானது, இவ்வளவு பெரும தொகை வீணாக விரயமாகிறதோ என்று நினைக்கத் தக்க அளவுக்கு நம் எல்லோருக்கும் வருத்தத்தை உண்டாக்கியிருக்கிறது. இத்தகைய அறிவு வளர்ச்சிக்காகச் செலவழிக்கப்படுகின்ற பெரும் தொகை யாவது, மாணவர்களை பலாத்காரத்திலே ஈடுபடச் செய்து, ஒழுக்கக் கேட்டை வளர்த்து, சட்டுப்பாடற்ற தன்மையில் அவர்களை இழுத்துச் செல்லும்படியான கல்வியைப் புகட்டுவதற்காகத்தான் பயன்படுகிறதோ என்று நாம் வருந்த வேண்டிய நிலையிலிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்பொழுது "கல்லாத பேர்களே நல்லவர்கள், நல்லவர்கள் கற்றும் அறிவிலாத...." என்ற தாயுமானார் கூற்றுக்கிணங்க, இம்மாதிரி ஒரு கல்வியை மாணவர்களுக்குப் புகட்டுவதை விட, அவர்கள் கற்காமலே இருப்பது மிகவும் சிறந்தது என்று தான் தோன்றுகிறது. இங்கே பேசிய எதிர்க்கட்சி அங்கத்தினர்களில் சிலர் அண்ணாமலைப் பல்கலைக் கழக நிகழ்ச்சிக்கு அங்கேயுள்ள துணை வேந்தரும், அடுத்தபடியாக அமைச்சரும், அந்த ஜில்லா கலெக்டரும், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டும்தான் பொறுப்பாளிகள், மற்றவர்கள் பொறுப்பாளியில்லை என்று வரிசையாகக் கூறிக் கொண்டே போனார்கள். அவர்கள் சொல்ல மறந்துவிட்டது ஒன்று என்று நான் நினைக்கிறேன். துணை வேந்தரை அங்கே அமர்த்திய வேந்தருக்கும், இந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய திரு. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும் பொறுப்பு உண்டு என்று சொல்லியிருப்பார்களே யானால், அதை நாம் வரவேற்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இத்தகைய ஒரு பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, தமிழ் நாட்டிலே உள்ள மாணவர்கள் எல்லோரும் கல்வி கற்று அறிவு வளர்ச்சியடையவேண்டுமென்று நினைத்து இந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவிய அண்ணாமலைச் செட்டியாரின் சிலையை உடைக்கக் கூடிய அளவுக்கு மாணவர்கள் முன்வந்து விட்டார்கள் என்றால், அவர்களுடைய புல்லறிவை என்னவென்று சொல்வது என்று தான் வருந்தவேண்டியிருக்கிறது. ஸ்ரீ ஆசைத்தம்பி அவர்கள் வேகமாகப் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் பொறுப்பற்ற தன்மையிலே எந்தப் பரிகாரமும் தேடாமல் வந்து விட்டார்கள் என்றும், அங்கே இருக்கிற துணை வேந்தர் அந்தப் பதவியை நிர்வகிக்கத் தகுதியுள்ளவர்கள் அல்ல என்றும் கூறினார். அவர்கள் பேசிய ஆத்திரமான பேச்சிலிருந்து, அங்கே குழப்பம் நடைபெற்றது சரிதான் என்று அவர்கள் கூறுவது போது. குழப்பத்திற்கு அவர்கள்தான் காரணமோ என்றும் தான் நினைக்க வேண்டியிருக்கிறது. இந்த மாதிரிக் குழப்பமான நிலைமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மட்டுமல்ல. இன்னும் பல உயர்நிலை 12-30 p.m.

[Sri K. R. Viswanathan] [8th April 1958

பள்ளிகளிலேயும் இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமையை நீடிக்கச் செய்யாமல் ஒழித்துக் கட்டுவதற்கு என்ன வழி யிருக்கிறது என்பதை எல்லாக் கட்சித் தலைவர்களும் ஆராய வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறிய யோசனையை வரவேற்கிறேன். அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பட்டதைக் குறித்து நாம் வருந்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதை விரைவிலேயே திறந்து, அந்த மாணவர்களுக்குக் கெடுதி ஏற்படாமல் படிப்பினை காட்டி தேர்வுக்கு ஏற்பாடு செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இம்மாதிரி குழப்பங்களுக்கும் கலவரங்களுக்கும் இடம் அளிக்காமல் ஒழுக்கமும் கட்டுப்பாடும் வளரக்கூடிய முறையிலே கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இம்மாதிரி கட்டுப் பாடு இருக்கிற இடங்களிலே, கிறிஸ்துவ சமயக் கல்லூரிகளிலும் சரி, ராமகிருஷ்ண வித்தியாலயங்களிலும் சரி, குழப்பங்களும், கலவரங்களும் ஏற்படுவது இல்லை. முக்கியமாக சமயக் கல்வி, கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலியவற்றை போதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இது குறித்தேதான் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டிலுள்ள பள்ளிகளில் திருக்குறளை கட்டாயமாகப் போதிக்க வேண்டுமென்கிற ஒரு நல்ல முறையை அன்று கல்வி அமைச்சராக இருந்த திரு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கொண்டு வந்தார்கள். ஆனால் அத்தகைய ஏற்பாடு வெற்றிகரமாக நடைபெறவில்லை. வெற்றிகரமாக நடைபெறுவதற்கு முயற்சி எடுக்கவில்லையென்றே நினைக்கிறேன். பள்ளிக்கூடங்களிலே மனப்பண்பாடு ஏற்படுவதற்கு வேண்டிய சமயக் கல்வியாக இருந்தாலும் சரி, ஒழுக்கக் கல்வியாக இருந்தாலும் சரி, பொதுவான முறையில் எல்லா மாணவர்களுக்கும் போதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இனி, நமது நாட்டிலே பல அனாதை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கு தாய் தகப்பன் இல்லாத குழந்தைகளை எடுத்து வளர்த்து அவர்களை அறிவுடைய மக்களாக ஆக்குவதற்கு அவர்களுக்கு வேண்டிய கல்வியைப் புகட்டி, நாட்டினுடைய முன்னேற்றத்துக்குத் துணை புரியும் வகையில் அவர்களுக்கு வாழ்க்கையிலே வழிகாட்டி விடப்படுகிறது. அத்தகைய அனாதை இல்லங்களை சில சட்டசபை உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு நடத்தி வருகிறார்கள். இப்பொழுது அரசாங்கத்தில் ஒரு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களாக இருப்பவர்கள் இந்த நிலைமையை சமூக சேவை செய்வதற்காக பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த உத்திரவின்படி, சட்டசபை உறுப்பினர்கள், இந்த அனாதை இல்லங்களை நடத்தும் பொறுப்பை விட்டுவிட்டு, வேறு யாருக்காவது மாற்றிக் கொடுக்க வேண்டும். இத்தகைய நிலைமையினால் சட்டசபை உறுப்பினர்கள் சமூகத்திற்கு சேவை செய்து வருகிற தன்மையைத் தடுப்பதாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். சட்டசபை உறுப்பினர்கள் எப்போதுமே சட்டசபை உறுப்பினர்களாக இருப்பார்கள் என்பதில்லை. ஒரு சில ஆண்டுகளுக்குத்தான் இருப்பார்கள். ஆனால் சமூக சேவை எப்பொழுதுமே செய்யவேண்டியிருக்கும். ஆகவே சட்டசபை உறுப்பினர்களாய் இருந்தாலும் சரி, இந்த அனாதை இல்லங்களை நடத்தும் பொறுப்பை தடை செய்யக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குப் பிற்பட்ட வகுப்பினருக்கும், ஹரிஜனங்களுக்கும் சம்பளக் கட்டணச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதற்குக் கல்வி விதி 92-வதின்படி ஏழ்மைச் சான்றுகள் வாங்கி வர வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது. இன்றைக்கு பெரும்பாலானவர்களுக்கு 10-வது படிவம் வரையிலும் கல்விக் கட்டணச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. ரூபாய் 1,200-க்கு குறைந்த வருமானமுடையவர்கள் என்று அந்த ஊர் மணியகாரரிடமிருந்தோ அல்லது கணக்குப் பிள்ளையிடமிருந்தோ சொர்டிபிகேட் வாங்கி வரவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஒரு ஊரிலே 100 மாணவர்கள் இருப்பார்களேயானால், குறைந்தது 80 அல்லது 90 மாணவர்களுக்கு இந்த சொர்டிபிகேட் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்த



8th April 1958] [Sri K. R. Viswanathan]

மாணவர்கள் முதலில் கிராமப் புறங்களிலே இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்களிடம் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. பிறகு தாசில்தாரிடத்தில் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. அங்கே சென்றும் உண்மையாகவே தகுதியுடையவர்களாய் இருந்தாலும் கூட, இந்த சொர்டிபிகேட்டுகளைப் பெறுவதற்கு மிகவும் தொல்லைப்பட வேண்டி யிருக்கிறது. பெருவாரியான மக்களுக்குக் கட்டணச் சலுகை வழங்கி இருப்பதனாலே, பெருவாரியான மக்கள் இந்த சொர்டிபிகேட்டுகளைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகின்ற காரணத்தினாலே, இந்த மாதிரி ரூபாய் 1,200-ம் அதற்கு மேலும் வருமானமுள்ளவர்களின் பட்டியலை அந்தந்த கிராமத்திலுள்ள கிராம உத்தியோகஸ்தர்கள் சர்க்காருக்கோ அல்லது பள்ளிக்கூடத்திற்கோ சமர்ப்பித்து விடுவார்களேயானால், அதிலிருந்து ஒரு மாணவன் சலுகை பெறத் தகுதியுடையவனா இல்லையா என்பதைத் தீர்மானித்து விடலாம். இந்த மாதிரி ஒரு முறையைக் கையாண்டால் சொர்டிபிகேட்டுகள் வாங்குவதிலுள்ள தொல்லைகள் நீங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கெஜட் பதிவில்லாதவர்களின் குழந்தைகளுக்கு, பெற்றோருக்கு 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானமிருந்தால், சம்பளக் கட்டணச் சலுகை கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் கணவன், மனைவி இந்த இரண்டு பேரில், யாராவது ஒருவர் ராஜ்ய சர்க்கார் உத்தியோகஸ்தராக இருந்து, மற்றவர் மத்திய சர்க்கார் உத்தியோகஸ்தராக இருப்பாரேயானால், அவர்களுடைய குழந்தைகளுக்கு கட்டணச் சலுகை கிடையாது என்ற விதி இருக்கிறது. இரண்டு பேருக்கும் சேர்ந்து மாதச் சம்பளம் ரூபாய் 300-க்கு குறைவாக யிருந்தால் ஏன் சலுகை வழங்கக்கூடாது என்று கேட்கிறேன்? ராஜ்ய சர்க்காரில் இருக்கிறவர் ரூபாய் 300-க்கு குறைவான சம்பளம் பெற்று, மத்திய சர்க்காரிலே இருப்பவர் ஓய்வு பெற்றவராக இருந்த போதிலுங் கூட சம்பளச் சலுகை கொடுக்கலாம் என்ற விதி இருக்கிற பொழுது, இரண்டு பேருக்கும் சேர்ந்து ரூபாய் 300-க்கு குறைவான 12-40 p.m. சம்பளமாய் இருந்தால் ஏன் சலுகை கொடுக்கக் கூடாது? ஆகையால் 300 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் வாங்குபவர்களுக்கு இந்தக் கட்டணச் சலுகை கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இனி கலைக் கல்லூரிகளிலும், தொழில் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேருகின்ற காலம் வருகிறது. என்ஜினியரிங் கல்லூரிகளிலும் மருத்துவ கல்லூரிகளிலும் மற்ற சர்க்கார் நடத்துகிற கல்லூரிகளிலும் ஒரு கமிட்டி நியமித்து மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். ஆனால் தனிப்பட்டவர்கள் நடத்தும் சொந்தக் கல்லூரிகளில் இம்மாதிரி கமிட்டி ஒன்றும் கிடையாது. அவர்கள் இஷ்டம் போல் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுகின்றனர். இதனால் கிராமப்புறங்களில் இருக்கும் மாணவர்களும், அவர்களுடைய பெற்றோர்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

ஏதாவது பெரிய மனிதருடைய சிபாரிசு இருந்தால்தான் இந்தக் கல்லூரிகளில் இடம் கிடைக்கிறது. சிபாரிசு இல்லாவிட்டால் காலேஜுகளில் இடம் கிடைக்காது என்ற நம்பிக்கை இப்பொழுது பரவிக் கொண்டு வருகிறது. இதற்குக் கல்லூரித் தலைவர்கள்தான் காரணம் என்று சொல்ல வேண்டியதாயிருக்கிறது.

தனிப்பட்டவர்கள் நடத்தும் கல்லூரிகளில் எந்தவிதமான நிபந்தனையும் போட முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்களைச் சேர்க்கிற விதிகளை வேண்டுமானால் அவர்கள் உருவாக்கிக்கொள்ள தனிப்பட்டவர்களுக்கு உரிமை கொடுக்கலாம். ஆனால் விதிகள் ஏற்பட்ட பிறகு அதன்படி அவர்கள் நடக்கிறார்களா என்பதைப் பார்ப்பதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். உதாரணமாக "லயோலா" காலேஜில் 360 மார்க்குகளுக்குக் குறைந்த மாணவர்களை எடுத்துக் கொள்வதில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் குறைந்த மார்க்குகள் வாங்கி இருப்பவர்களை சேர்த்துக் கொள்வதில்லையா, ஏற்படுத்தின விதியை சரியாக அனுஷ்டிக்கிறார்களா என்று பார்ப்பதற்கு சர்க்காருக்கு

அதிகாரம் இருக்க வேண்டும். சிபாரிசு இருந்தால்தான் கல்லூரியில் இடம் கிடைக்கும் என்ற தன்மை மாறி இந்த விஷயத்தில் சர்க்கார் ஒரு சீரிய முறையை வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

**Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN** : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கைக்காக நம் ராஜ்ய வருமானத்தில் கணிசமான தொகை கல்விக்காக அளித்திருப்பதைக் குறித்து நம் ராஜ்ய சர்க்காருக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதிலும் மிகவும் பெரும் தொகை ஆரம்பக் கல்விக்காக அனுமதித்திருக்கிறார்கள். ஆரம்பக் கல்வியை அதிகமாக ஆரம்பிப்பதற்கு வெகு. வேகமாக முயற்சிகள் எடுத்துக் கொண்டிருப்பதற்கு சர்க்காருக்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் அகில இந்திய ஆரம்பக் கல்வி மகாநாடு நடந்தது. அப்பொழுது மற்ற ராஜ்யங்கள் ஆரம்பக் கல்விக்காக எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. கேரளாவைத் தவிர, மற்ற எல்லா மாகாணங்களையும் விட, தமிழ் நாட்டில் ஆரம்பக் கல்விக்கு மிக மிக அதிகமான தொகை செலவழிக்கப்படுகிறது. பம்பாய் ராஜ்யம் மிகவும் முன்னேற்ற மடைந்த ராஜ்யம். ஆரம்பக் கல்விக்கு அதிகத் தொகை செலவழிப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். பம்பாயில் 9 கோடி சொச்சம்தான் ஒதுக்கி யிருக்கிறார்கள். ஆனால் நம் ராஜ்யத்தில் 10 கோடிக்கு மேலாக நாம் ஒதுக்கியிருக்கிறோம். அதே போல் ஆரம்பப் பள்ளி நிர்வாகத்திற்காக ஒரு நிர்வாகக் குழு 'இன்ஸ்பெக்டரேட்' நல்ல விதமாக வேலை செய்து வருகிறது.

பள்ளிக்கூடங்களில் குழந்தைகள் எவ்வாறு அதிகமாக வர முடியும் என்று பார்க்க வேண்டும். 1-வது வகுப்பு முதல் 8-வது வகுப்பு வரை போவதற்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை. இந்த விஷயங்களில் நாம் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறோம். கேரள ராஜ்யத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார் வருவதற்கு முன்பும் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பும் வழக்கம் பெற்றோர்களுக்கு வந்து விட்டது. அது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. இரண்டு அல்லது 3-வது வகுப்பு படிக்கும் போது குழந்தைகளுக்கு 8 அல்லது 9 வயது ஆகிவிடும். அப்போது பெண் குழந்தைகள் தங்கள் தாய்மார்களுக்கு உதவி செய்வதற்காக வீட்டில் தங்கி விடுகிறார்கள். ஆகையால் பள்ளிக்கு வரும் குழந்தைகள் மிகவும் அதிகமாகக் குறைந்து விடுகிறது. நூற்றுக்கு 50 பேர் பெண்கள் இருக்கிறார்கள். நூற்றுக்கு 100 பேர் ஆண்கள் பள்ளிக்கு வந்தாலும் அதிகமான பெண்கள் பள்ளிக்கு வந்தால் ஒழிய, பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் சத விகிதம் அதிகரிக்க முடியாது. பெண் குழந்தைகள் பள்ளிக்கு வருவதில் பெற்றோர்களிடம் நாம் பிரசாரம் செய்வது மட்டும் போதாது. நாமும் இந்த விஷயத்தில் சிறிது கவனம் செலுத்த வேண்டும்.

புதிய சாப்பாட்டு திட்டத்தைப் பற்றி எடுக்கும் முயற்சிகளை நாம் பாராட்ட வேண்டும். இதில் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் செல்வாக்குள்ளவர்களும் அக்கறை காட்டினால் இன்னும் நன்றாக வேலை செய்ய முடியும்.

'லேபர்' ஸ்கூல் என்று தனியாக ஏற்படுத்தாமல், எல்லா பள்ளிகளிலேயும் ஹரிஜனங்களையும், பிற்பட்ட மக்களையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு மட்டும் பிற்பகல் சாப்பாட்டு கொடுக்கலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பிட்ட சில குழந்தைகளுக்கு மட்டும் சாப்பாடு கொடுத்தால் மற்ற ஏழைக் குழந்தைகளுக்குக் கொடுக்காமல் இருக்க முடியாது. இதில் பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும். அது உண்மைதான். இருந்தாலும் '**Lesser of the two Evils**' என்று சொல்வதுபோல் குறைந்த தீமையை வைத்துக்கொள்ளலாம். ஆகையால் தனியாக 'லேபர்' ஸ்கூல்கள் வேண்டாம் என்று நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம்.





மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்கு 50,000 ரூபாய் வீதம் மத்திய சாப்பாட்டுக்கு ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் ஒதுக்கியதாகவும், அந்தப் பணம் கொஞ்சம் கூட உபயோகப்படுத்தப் படவில்லை என்றும் தெரிகிறது. இது மிகவும் வருத்தப்பட வேண்டிய விஷயம். ஆகையால் மத்திய சாப்பாட்டிற்கு ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் தொகையை ஒதுக்குவதற்குப் பதில் கல்வி இலாகா மூலமாகவே அதை உபயோகித்துக் கொள்ளலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதால் ஒதுக்கப்பட்ட தொகையை நன்றாக உபயோகித்துக் கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன்.

ஆசிரியர்கள் தரத்தைப்பற்றி பேசப்பட்டது. இந்தச் சர்ச்சையில் நான் விழ விரும்பவில்லை. ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிராமப் புறங்களில் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏற்படுத்தினால் அநேக கிராமங்களில் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கும், இருக்கும் பள்ளிகள் முன்னேற்றம் அடைவதற்கும் ஹேதுவாக இருக்கும் என்று மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆதாரக் கல்வியைப்பற்றி நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எட்டாவது வகுப்பு வரையில் இதில் எந்தவிதமான சிக்கல்களும் இல்லை. 'போஸ்ட் பேஸிக் எஜுகேஷன்' திட்டம் இப்பொழுது வேகமாக அமலுக்கு வந்து கொண்டிருக்கிறது. இதில் 9,10,11 படிவங்கள் இருக்கின்றன. அதற்குப் பிறகு அவர்கள் எப்படி எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்கிற பிரச்னை இப்பொழுது எங்களுக்குக் கவலையை உண்டாக்கி இருக்கிறது. இப்பொழுது எஸ்.எஸ்.எல்.ஸி. முறையிருக்கிறது. 'டைவர்சிபைட் எஜுகேஷன்—மல்டி பர்பஸ் ஹைஸ்கூல்' இருக்கிறது. உத்திர ஆதாரக் கல்வி இருக்கிறது. இவற்றில் எல்லாம் படித்து வருவதற்கு எல்லா வகையிலேயும் சரியான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதில் ஒரு சரியான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தால் ஒழிய கிராமப் புறங்களில் தொழிலும் கல்வியும் இணைந்த ஆதாரக் கல்வியின் எதிர்காலம் பிரகாசமாய் இருக்காது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில ஸ்தாபனங்களில் 2. 3 வருஷங்களாக 11-வது கிரேட் படித்த மாணவர்கள் வெளியே வருகிறார்கள். சில ஸ்தாபனங்களில் இந்த வருஷம் மாணவர்கள் படித்து வெளியே வரத் தொடங்கி இருக்கிறார்கள். எதிர்காலத்தில் இன்னும் அதிக மாணவர்கள் படித்து வெளியே வருவார்கள். அவர்களை 'யூனிவர்சிட்டி எஜுகேஷன்' பயில்வதற்கு அங்கீகாரம் கொடுப்பார்களா என்பது சரியாகத் தெரியவில்லை.

குழந்தைகளைப் பொறுத்த வரையில் படிப்பில் அதிக வித்தியாசம் இருப்பதில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன்பு எங்கள் ரூரல் இன்ஸ்டிடுடில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரு பையன் வருஷப் பரிட்சையில் இரண்டாவதாகத் தேறினான். ஆகவே போஸ்ட் பேஸிக் பள்ளியில் இருந்து படித்துவரும் குழந்தைகளுக்கும், எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவர்களுக்கும் கல்லூரிகளில் படிக்க, பாலி டெக்னிகுகளில் படிக்க, பேஸிக் கிராமசேவா டிரைனிங்குகளுக்கு யூனிவர்சிட்டி வரையிலும் எல்லா வசதிகளும் செய்து கொடுத்தால்தான் பேஸிக் டிரைனிங் குறைந்த தரம் உள்ளதோ என்ற அச்சம் பெற்றோர்களுக்கு இருப்பதைச் சர்க்கார் போக்க முடியும். 12-50 p.m.

ஹைஸ்கூல்கள் சில இடங்களில் பெறுவாரியாக இருக்கிறது. மூன்று மைலில் அல்லது 4 மைலில் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் சில இடங்களில் பல மைல் தூரத்திற்குக் கூட ஒரு ஹைஸ்கூல் கிடையாது. ஆகவே புதிதாகத் துவங்கும் பள்ளிகளாவது பிள்ளைகளுக்குச் சமீபத்தில் இருக்குமாறு அமைக்க, வேண்டியது அவசியம். பெற்றோர்களுக்கு பிள்ளைகளை ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க வைக்கும் வசதி பெறும்பாலாகக் கிடையாது. அப்படிச் செய்தால்தான் பிற்போக்கான மக்களுக்குப் படிக்க வசதியேற்படும். இப்பொழுது பள்ளிக்கு பள்ளி ஒரு மைல் தூரம் இருக்க வேண்டும் என்கிறார்கள். ஐந்து வயது முதற்கொண்டு படிக்கும் சிறு குழந்தைகள் ஒரு மைல் குழந்தைகள் கூட எப்படி நடக்க முடியும். நம் வீட்டுக் குழந்தை நடப்பதானால் கால் வலிக்குமே என்று நாம் வருந்தவில்லையா. ஆகவே இடத்திற்கு தகுந்தாற்போல் இரண்டு பர்லாங் தூரமே ஆனாலும் பள்ளிகளை ஏற்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டும்.

ஆதாரக் கல்வியைப்பற்றி விஸ்தாரமாக சொல்ல வேண்டும் என்பது அவசியம் இல்லை. இதிலே நான் சொல்ல விரும்புவது, பெண்கள் சம்பந்தமான முதியோர் கல்வி திட்டத்தைப்பற்றி. இந்த முறையிலே வருபவர்கள் 18 அல்லது 20-வது வயதான அகதிகளும் விதவைகளும் புருஷனால் பணக் கஷ்டத்தாலோ குணக்கேட்டாலோ தள்ளப்பட்ட பெண்களும் ஆகும். இவர்களுக்கு பயிற்சி • கொடுத்து ஈ.எஸ்.எல்.ஸி.-க்கு அனுப்புகிறோம். ஆனால் ஜூனியர் பேஸிக் படித்தவர்கள் ஹையர் கிரேட் பயிற்சிக்கு இடம் கொடுக்கப்படுவதில்லை. இவர்களுக்கு இந்த சலுகை கொடுக்கப்பட வேண்டியது அவசியம். இவர்கள் வயதானவர்கள். வாழ்க்கையில் 'நிறைய அனுபவம் உடையவர்கள். ஆகவே இவர்களுக்கு மருத்துவம் கிராம சேவிகா முதலிய பயிற்சிகள் கொடுக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதையும் நான் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அங்கஹீனமான, குருடர்கள், செவுட்டூமைகள் முதலிய இந்தக் குழந்தைகளுக்கு போதுமான பாதுகாப்போ, வாய்ப்போ கிடைக்கவில்லை. இந்தப் பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் தரப்பிலிருந்து டீச்சிங் கிராண்ட் என்று 3-ல் இரண்டு பங்குதான் கொடுக்கப்படுகிறது. இது எந்த நூற்றாண்டிலோ ஏற்பட்ட விதி. ஆகவே இதற்கு போதுமான அளவு போர்டிங் கிராண்டு, டீச்சிங் கிராண்ட் இவைகளைக் கொடுத்து எங்கெங்கு அங்கஹீனமான குழந்தைகள் இருக்கிறார்களோ அங்கங்கு பள்ளிகளை ஏற்படுத்த சர்க்கார் முன்வரவேண்டும். ஒரு ஊரிலுள்ள இப்பேர்ப்பட்ட குழந்தைகள் வெளியூர்களுக்கு சென்று கல்வி கற்க முடியாது. இந்த குழந்தைகளுக்கு தகுந்த கல்வித் திட்டமும் தொழில் திட்டமும் வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**Sri N. MARUDACHALAM** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி மான்யத்தின்மீது சில விவரங்களை கூற விரும்புகிறேன். இந்த கல்வி விஷயத்தில் அஸ்திவாரமாக உள்ளவர்கள் உபாத்தியாயர்கள். இவர்களைப் பற்றி பல அங்கத்தினர்கள் கூறினார்கள். இவர்கள் நிம்மதியாக இருந்தால்தான் குழந்தைகளிடையே கல்வி அறிவு வளர முடியும். உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்தால்தான் அவர்கள் நிம்மதியாக இருந்து படிப்புச் சொல்லிக் கொடுக்க முடியும். இவர்கள் எந்த கட்சியையும் சேர்ந்தவர்கள் அல்ல.

ஆரம்ப பள்ளியிலே ஒரு உபாத்தியாயருக்கு 40 பிள்ளைகள் என்று கூறுகிறார்கள். நாற்பது குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது முடியாத காரியம். ஒரு குடும்பத்திலே நான்கு குழந்தைகளை சமாளிப்பதே கஷ்டமான காரியம். அந்த ரீதியில் கல்வி அபிவிருத்தி அடைய வேண்டுமானால் ஆரம்பப் பள்ளியிலே ஒரு உபாத்தியாயருக்கு 25 குழந்தைகளுக்கு மேல் இல்லாமல் ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் சிறு வகுப்புகளுக்கு பூராவும் பெண்களே உபாத்தியாயர்களாக இருக்க வேண்டும். இந்த பெண்களுக்கு எல்லா விதமான சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டும். கிராமங்களில் உபாத்தியாயர்களின் நிலை ரொம்ப மோசமாக இருக்கிறது. அவர்கள் ஏழ்மையான நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு போதுமான சம்பளத்தை கொடுத்து அவர்கள் மன நிம்மதியோடு கல்வி வளர்ச்சிக்கு வேலை செய்ய வசதி செய்து கொடுக்க வேண்டும்.

1-00 p.m. அதோடுகூட ஹரிஜன ஆஸ்டல்கள் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. அப்படிப்பட்ட சில ஆஸ்டல்களில் ஜாதி இந்துக்களைச் சேர்ந்தவர்கள் ஹரிஜனங்கள் என்று சொல்லிக் கொண்டு படித்து வருகிறார்கள். இப்படி பல இடங்களில் நடந்து கொண்டு வருகின்றன. இதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். இதிலிருந்தே அவர்கள் எவ்வளவு ஏழ்மையான நிலைமையில் இருக்கிறார்கள் என்பது தெரிய வரும். பல ஆஸ்டல்களில் படித்து வரும் எல்லா குழந்தைகளுக்கும் சாப்பாடு போடுவதில்லை. அவர்களுடைய ஏழ்மைத்தனத்தை இதன் மூலம் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. ஆகவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்த எந்த சலுகைகள் காட்டப்படுகின்றனவோ அதே சலுகைகளை மற்ற ஏழைக் குழந்தைகளுக்கும் காட்ட வேண்டும். அப்படி இருந்தால்தான் இந்நாட்டில் இப்பொழுது நடைபெற்று வரும் ஆட்சி முறையில் குறை





சொல்லாமல் இருக்க முடியும். ஆகவே இந்த ஹரிஜன மானியத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் போதாது. (பல குரல்கள் : இது கல்வி மானியம்.) கல்வி மானியத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் போதாது. ஒதுக்கிய பணத்தை நல்ல முறையில் செலவழிப்பதற்கு வழி காண வேண்டும். நாட்டிற்கு நன்மை அளிக்கக்கூடிய முறையில் ஒதுக்கிய பணத்தை செலவழிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே உபாத்தியாயர்களைப்பற்றி நான் எவ்வளவோ சொல்லி இருக்கிறேன். ஸ்தல ஸ்தாபனங்களில் நடக்கும் சில பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறது, சில ஸ்தல ஸ்தாபன பள்ளிக்கூடங்களுக்கு பணம் கொடுப்பதாக இல்லை. சில இடங்களில் மானியம் கொடுக்கப்படுவது 12,000 ரூபாய் என்றும் அதில் 6,000 ரூபாய் திருப்பி வாங்கிக் கொள்ளப்பட்டு விடுகிறது என்றும் சொல்லப்படுகிறது. அது சரியல்ல, சிங்கநல்லூர் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொண்டால் அங்கே பஞ்சாயத்து போர்ட் பள்ளிக்கூடத்தை நடத்துகிறது. அங்கே சுமார் 40 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே சுமார் 300 ஹரிஜனக் குழந்தைகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழந்தைகள் படிக்கும் இடம் சினிமா கொட்டகை மாதிரிதான் இருக்கிறது. ரூம் ரூமாக இல்லவே இல்லை. அப்படி ரூம் மாதிரி இல்லாமல் இருந்தால் எப்படி படிக்க முடியும் ? உபாத்தியாயர்கள் பிள்ளைகள் வரிசையாக உட்கார வைத்துப் படிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் ஒரு க்ளாஸில் சொல்லிக் கொடுப்பது மற்றொரு க்ளாசுக்கு கேட்பதால் பிள்ளைகள் சரியாக படிக்க முடியவில்லை. அங்கே 12,000 ரூபாய் கொடுக்கப்பட்டு 6,000 ரூபாய் திருப்பி வாங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் பள்ளிக்கூடங்கள் சரிவர மானேஜ் பண்ண முடியாது. கொஞ்சம் பணத்தை அதிகமாகக் கொடுத்தால் பள்ளிக்கூடங்களை சரிவர நடத்தமுடியும், அதற்கு வேண்டிய சந்தர்ப்பமும் இருக்கும். இந்த நிலைமையில்தான் பஞ்சாயத்து போர்ட் பிரசிடெண்ட் சொல்லுகிறார். பல க்ளாசுகளில் மாறுபாடுகள் இருக்கின்றன. பல முறையில் பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. பல இடங்களில் பலவிதமாக நடைபெற்று வருகின்றன. வடவெள்ளி கிராமத்தில் தனிப்பட்டவருடைய மானேஜ்மெண்டில் பள்ளிக்கூடம் நடைபெற்று வருகிறது. அது வெங்கைய நாயுடுவால் நடத்தப்பட்டு வருகிறது. அங்கே நாலைந்து உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். அங்கே ஆதாரக் கல்வி நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தில் மூன்று நான்கு மாதங்களாக சம்பளம் கொடுப்பது இல்லை. மூன்று மாதங்கள் கழித்துதான் அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறது. இப்படி அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தால் அவர்களால் எப்படி தங்களுடைய வாழ்க்கையை நடத்த முடியும். அதனால் அவர்கள் சோளம், ராகி முதலியவைகளைப் பிள்ளைகளைக் கொண்டு வரச் சொல்லி ஜீவிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த முறையில் கிராமங்களிலுள்ள உபாத்தியாயர்கள் தங்களுடைய ஜீவனத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். உபாத்தியாயர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தினால்தான் கல்வித் தரமும் உயர்வதற்கு வாய்ப்பு இருக்கும். நான் சொல்லியவைகளை ஒரு பிரசங்கமாக எடுத்துக் கொள்ளாமல் கனம் சுப்பிரமணியம் அவர்கள் இதை நேரடியாக பரிசீலனை செய்து பார்த்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்.

**Srimathi C. KOLANTHAI AMMAL** : கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் கனம் மந்திரி அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். உண்மையாகவே நமது முதல் ஐந்தாண்டு திட்டத்திலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் நம்முடைய திட்டத்தின் ஐந்தில் ஒரு பங்கை கல்விக்கு என்று ஒதுக்கி இருப்பதற்கு ஆசிரியை என்ற முறையில் நான் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆரம்ப ஆசிரியர்களைப்பற்றி பல கட்சி அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். கனம் மந்திரி அவர்கள் ஏதோ நேற்று சொல்லும்போது ஆரம்ப ஆசிரியர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு எதிர்க் கட்சியினருடைய ஒத்துழைப்பை நாடினால் மட்டும் அவர்களுடைய பிரச்னை

[Srimathi C. Kolanthai Ammal] [8th April 1958

தீர்ந்து விடாது என்று கருதுவது போல் குறிப்பிட்டார். ஆனால் அதிலும் ஒரு உண்மை இருக்கிறது. எதிர்க் கட்சிக்காரர்களை மட்டும் நாடினால் அவர்களுடைய பிரச்னைகள் தீர்ந்து விடாது. நேற்று நான் சொன்னேன். "நீங்கள் எதிர்க் கட்சிக்காரர்களை நாடாமல் நீங்களாகவே ஆறு அல்லது ஏழு பேர்கள் சேர்ந்து கொண்டு மந்திரியினுடைய அறையில் போய் அவரைக் கண்டு உங்களுடைய குறைகளைச் சொல்லிக் கொள்ளுங்கள்" என்று சொன்னேன். அதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். நான் இருந்த அந்தக் கூட்டத்தில் பேசுவதற்கும் மறுத்து விட்டார்கள். அவர்கள் கருதுவதெல்லாம் ஏதோ எதிர்க்கட்சிக்காரர்களுக்குத்தான் அவர்களுடைய குறைகள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது, மற்றவர்களுக்கு இல்லை என்ற மனப்பான்மையில் இவர்கள் இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட மனப்பான்மை அவர்களுக்கு அமைந்து போன காரணத்தால் தான் அந்தக் கூட்டத்தில் கூட என்னைக் கலந்து கொள்வதற்கு மறுத்து விட்டார்கள். ஆனால் அவர்கள் எப்படி நடந்துகொண்ட போதிலும் ஆரம்ப ஆசிரியர்களுடைய உரிமையை மனதில் எண்ணிக் கொண்டு எந்த வழியிலாவது அவர்களுடைய பிரச்னைகள் தீர்ந்தால் போதும் என்று நான் கருதுகிறேன். மாற்றுக் கட்சிக்காரர்களுடன் சேர்ந்து அவர்களுடைய கட்சிக்கு ஆதரவு கொடுக்கிற முறையில் ஆசிரியர்கள் இருக்கக் கூடாது என்பதை மட்டும் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆசிரியர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு அவர்கள் கட்சிக் கூட்டங்களுக்கு போகக் கூடாது என்பதை ஆசிரியர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் எதிர் கட்சிக்காரர்கள் தங்களுடைய கட்சி பிரசாரத்திற்கு ஆரம்ப ஆசிரியர்களுடைய பிரச்னைகளை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள், அதற்கு இடம் கொடுக்கக்கூடாது என்றும் அவர்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலை இன்று ரொம்பவும் கடுமையான நிலையில் இருக்கிறது. அதிலும் சென்னை மாகாணத்திலிருக்கக்கூடிய ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலை மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு வீட்டு வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு திட்டம் ஒதுக்க வேண்டும். ஆகவே ஆரம்ப ஆசிரியர்களுக்கு நல்ல முறையில் வீடுகள் கட்டும் திட்டம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை இந்த இடத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அவர்களைப்பற்றி எதிர்க்கட்சியிலுள்ளவர்கள் எப்படி பெருமை அடித்துக்கொள்ளுகிறார்களோ, அவர்கள் பேரில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகிறார்களோ அந்த அளவில் அவர்கள் பேரில் எங்களுக்கும் அனுதாபம் உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற முறைப்படி அவர்கள் பேரில் எங்களுக்கும் அனுதாபம் உண்டு என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தமிழை வளர்ப்பதற்கு தாங்கள் அக்கறை கொண்டிருக்கிறோம் என்றும், அதற்கு ஏற்றவாறு தமிழைச் சார்ந்த தோழர்கள் 15 பேர்கள் தமிழுக்கு தூண்களாக இருக்கிறோம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படிச் சொல்லிக் கொண்டு எதிர்க்கட்சியிலுள்ள தோழர்கள் சிலர் இந்தச் சட்டசபையில் பேசுகிற காலத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை என்னால் எடுத்துக் காட்ட முடியும். அவர்கள் தமிழ் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நேரத்தில் அவர்கள் "இதரர்கள்," என்றெல்லாம் சொல்லி வருகிறார்கள். உயர்திணை உபயோகப்படுத்தும் பொழுதெல்லாம் அவர்கள் அஃறிணையை உபயோகப்படுத்துகிறார்கள். இதைத் தவிர அவர்கள் பேசும்போது "நான் ஒன்று சொல்வேன்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அதாவது நிகழ் காலத்தைக் குறிப்பிடும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் எதிர் காலத்தைக் குறிப்பிட்டு பேசுகிறார்கள். நிகழ் காலத்தைக் குறிப்பிட்டு பேசுவது கிடையாது. இந்த முறையில் அவர்களுடைய இலக்கணம் இருக்கிறது. அந்த முறையில்தான் அவர்களுடைய தமிழ் தொண்டு இருக்கிறது. இலக்கிய முறையில் நாங்கள் புத்தகங்களை எழுதுகிறோம் என்றும் சொல்லுகிறார்கள். நல்ல இலக்கிய முறையில் எழுதுவதற்கு ஆர்வம் வேண்டும், அதெல்லாம் இருக்கிறது



8th April 1958] [Srimathi C. Kolanthai Ammal]

என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் சொல்லுகிறவர்கள் தமிழ் நடையில் எழுதுவதைப் பார்த்தால் நன்றாகத் தெரிய வரும். இந்த நிலையில் கனம் கோவிந்தசாமி நாங்கள் எழுதும் நூல்களைக் கொடுக்கிறோம், அதைப் பாருங்கள் என்று சொல்லுகிறார்கள். நாங்கள் எழுதும் நூல்களைக் கொடுக்கிறோம் அதையும் அவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று நாங்கள் சொல்லுகிறோம். அவர்கள் எந்த முறையில் தமிழ் ஓசையை வளர்க்கிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும். அவர்கள் முத்தமிழைப்பற்றி பேசுகிறார்கள். தாமாஷா வரியைப்பற்றி பேசும்போது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், அவர்கள் ஈடுபட்ட பிறகுதான் உயர்ந்த நிலையில் தமிழ் வளர்ந்து இருக்கிறது என்று பெருமை அடித்துக் கொண்டார்கள். அவர்களுடைய நாடகத் தமிழுக்கும் இன்று இருக்கும் சினிமாத்துறை தமிழுக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர வேண்டும். இன்னும் அவர்கள் நல்ல தமிழை வளர்க்கிறோம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஏதோ ரீங்காரமாக அடுக்கு மொழிகளில் பேசி விடுகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை. இப்படி மாணவக் கூட்டங்களில் பேசி விடுகிறார்களே தவிர . . . .

**Sri K. ANBAZHAGAN** : On a point of order இந்த மன்றத்தில் அங்கத்தினர்கள் பேசுகிற காலத்தில் மற்ற அங்கத்தினர்களைப் பார்த்து "நீங்கள், நாங்கள்" என்றெல்லாம் நேரடியாகப் பேசுவது போல் பேசுகிறார்கள். அப்படி குறிப்பிட்டு பேசுவது அவையினுடைய முறைக்கு உகந்தது அல்ல. இப்படியே கனம் அங்கத்தினர் தொடர்ந்து பேசிக்கொண்டு வருகிறார். ஆகவே இம்மாதிரி பேசும் முறையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

DEPUTY SPEAKER : The hon. Member need not address as 'நீங்கள்' as it will refer only to the chair.

**Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : எதிர்க் கட்சியிலும் இப்படியே தவறு செய்து கொண்டிருக்கிறார்கள். இம்மாதிரியே எதிர்க் கட்சியிலும் உள்ளவர்கள் பேசாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**DEPUTY SPEAKER** : இதைப்பற்றி நீங்கள் அப்பொழுது கேட்டிருக்கவேண்டும். இப்பொழுது கேட்பதில் பிரயோசனம் இல்லை.

**Sri K. ANBAZHAGAN** rose. . .

DEPUTY SPEAKER : Let the hon. Member Srimathi Kolanthai Ammal continue her speech. Probably, she is not aware of the procedure.

**Srimathi C. KOLANTHAI AMMAL** : இந்த முறையில் இசைத் தமிழ், நாடகத் தமிழ் வளரும்படியான பொறுப்பு எங்களையே சாரும் என்று 1-10
**நீங்கள்** (சிரிப்பு)—அவர்கள் இறுமாப்போடு இருக்கக்கூடாது. சட்டசபை p.m.
அங்கத்தினர்களாகிய 205 பேர்களையும் அது சாரும் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் நேற்று டைரக்டர் அவர்களிடம் நான் சொன்னேன். கிரேடு 1, கிரேடு 2 என்று சொல்லக்கூடிய ஆசிரியர்களைப் பற்றி எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர்கள் விரிவாகக் கூறினார்கள். பி.ஓ.எல். (ஹானர்ஸ்) பட்டம் பெற்றவர்கள், தமிழில் எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள், கிரேடு 1, கிரேடு 2 என்ற பகுதியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்கள் குறைந்த சம்பளம் பெற்று வருகிறார்கள். அந்த நிலை மாறி, ஒரே மாதிரியாகத் தமிழ் ஆசிரியர்களுக்கு நியாயமான, வேலைக்குத் தகுந்த ஊதியம் கொடுக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்துவிட்டு, நான்கு ஆண்டு வித்வான் வகுப்பில் படித்துவிட்டு, அதற்குப் பிறகு ஓராண்டு பயிற்சி பெற்று, ஆக ஐந்தாண்டு படித்து பட்டம் பெற்றவர்களுக்கு, அதிலும் சிறப்பாகத் தமிழ் துறையிலே பத்துப்

[Srimathi C. Kolanthai Ammal] [8th April 1958

பன்னிரண்டு ஆண்டுகள் ஆசிரியராக இருந்து அனுபவம் பெற்ற பிறகும் கூட, பேராசிரியர் என்ற பட்டம் கொடுக்க மறுக்கிறார்கள். ஐந்தாண்டு சர்விஸ் பெற்ற பி.ஓ.எல். (ஹானர்ஸ்) பட்டதாரிகளுக்கு, அவர்களுடைய இலக்கிய இலக்கண அறிவு குறைவாக இருந்தபோதிலும் கூட, பேராசிரியர் என்ற பட்டம் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இந்த வேறுபாடு ஆசிரியர்களுடைய தகுதிக்கு மிகவும் குறைபாடாக இருக்கிறதென்பதையும் நான் இந்த இடத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பிரி-யுனிவர்ஸிடி மாணவர்களுக்கு பாடத் தொகை அதிகமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழ் பாடம் குறைவு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எஸ்,எஸ்.எல்.ஸி. வரைக்கும் படித்த பல மாணவர்கள், சிறப்புத் தமிழ், பொதுத் தமிழ் என்ற இரண்டு வகைப்பட்ட அளவுக்குத் தமிழைப் படித்த மாணவர்கள், பிரி-யூனிவர்ஸிடி வகுப்பில் குறுகிய பாடத் திட்டங்களை படிக்கிறார்கள். அது தமிழின் முன்னேற்றத்திற்கும் தமிழின் இயக்கத்திற்கும் உதவி செய்வதாகாது. பிரி-யுனிவர்ஸிடி வகுப்பில், தமிழில் அதிகமாக இலக்கிய இலக்கணப் பாடங்களை வைக்கவேண்டும்.

மானேஜ்மெண்டார் நடத்தும் பள்ளிகளில் நூல் நிலையங்களுக்கு 30 சத விகிதம் நூல் வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஆனால், பஞ்சாயத்துக்கள், ஜில்லா போர்டுகளால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கு அம்மாதிரி நூல் நிலையங்களுக்கு நூல் வாங்குவதற்கு அனுமதி கொடுப்பதில்லை. அதை அரசாங்கம் கவனித்து அந்த பள்ளிக்கூடங்களும் எல்லா பாட திட்டங்களையும் வெற்றி பெறச் செய்வதற்குரிய நூல்களை, நூல் நிலையங்களுக்கு வாங்கும்படியான ஒரு சிறந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நெசவாளர்கள் முதலிய தொழிலாளர்களுக்கு வீட்டு வசதித் திட்டமானது சட்டத்திலே சேர்ந்திருப்பது போல, சிறப்பாக அதிலும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீட்டு வசதித் திட்டம் சட்டத்திலேயே சேர்ந்திருக்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

10, 12, நூற்றாண்டுகளிலே எழுதப்பட்ட கல்வெட்டுகளிலே, குறிப்பாக கோவில்களில் எல்லாம் இருக்கும் கல்வெட்டுகளிலே, மான்யங்கள் ஒதுக்கப்படும்பொழுது கலை வளர்ச்சிக்கென்று ஒரு குறிப்பிட்ட பகுதி ஒதுக்கப்பட்டிருப்பது போல, இன்று நமது பெரிய மடங்கள் தருமபுரம் ஆதீனம், திருவாடுதுறை ஆதீனம் போன்ற மடங்கள் ஏராளமான சொத்தை கல்விக்காக, சிறப்பாக தமிழ் கல்விக்காக, பயன்படுத்தி வருகிறார்கள். அந்த முறையில் ஆசிரியர்களுக்கு உதவித் தொகை அளிக்கவேண்டுமானால், அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெற்று நிச்சயமாக ஆசிரியர்களுடைய வறுமையை நீக்குவதற்கு ஏதாவது பெரும் முயற்சி செய்யவேண்டுமென்று, பணிவன்போடு ஆசிரியர் என்ற முறையில் கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுடைய கல்வித் தரம் உயருவதற்கு அடிப்படையிலே ஒரு திருத்தம் வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். முற்காலத்தில் மாணவர்கள் குருகுல முறை மூலம் கல்வி பயின்றார்கள். "இரு என இருந்து சொல் எனச் சொல்லி பருகவ நன்ன ஆர்வத்தனாகி செவி வாயாக" மாணவர்கள் படித்தார்கள். இப்பொழுதுள்ள நிலைமையைப் பார்க்கும்பொழுது 100-க்கு 25 மாணவர்கள் தான் அந்தத் துறையிலே இருக்கிறார்கள். ஆகவே, இன்று மாணவர் இரு என ஆசிரியர் இருக்கிற நிலை வந்துவிட்டது. கல்வியின் தரம் உயரவேண்டுமென்று சொன்னால், மாணவர்களுக்கு எந்தவிதமான கட்சி மனப்பான்மையும் இல்லாதபடி, நன்றாக படிக்கவேண்டுமென்ற ஒரு மனப்பான்மையை அவர்களிடையே வளர்ப்பதற்கு, எந்த முறையிலாவது சட்ட திட்டங்களை வகுக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன். அதிலும் சிறப்பாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இத்தகைய ஒரு நிகழ்ச்சி நடந்தது என்று சொன்னால் நாம் எல்லோரும் வருத்தப்படவேண்டியதாக இருக்கிறது. என்னுடைய பல்கலைக் கழகம் என்ற முறையில், அந்தப் பல்கலைக் கழகத்தில் பல் வேறு குறைபாடுகள் நடைபெறுகின்றன என்று சொன்னால், அந்தப்



8th April 1958] [Srimathi C. Kolanthai Ammal]

பல்கலைக் கழகம் இயங்குவதற்கு எத்தனை கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்பட்டு வருகிறது என்பதை மாணவர்கள் உணரவேண்டுமென்பதைத்தான் இந்த இடத்திலே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். மாணவர்கள்தான் நம்முடைய நாட்டிலே வருங்காலத்தில் சிறந்த தனிப் பெரும் மன்னர்களாக திகழ்க்கூடும், அவர்களைத்தான் நாம் நம்பியிருக்கிறோம் என்ற ரீதியிலே, மாணவர்களின் கல்வித் தரம் உயர்வதற்கான படிப்பை அவர்கள் படிப்பதற்கு ஏற்ற வழிவகைகளையெல்லாம் செய்யவேண்டும். அதற்குரிய திட்டங்கள் வகுப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று கூறிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துகளை தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் அளித்ததற்காக என் நன்றியை உதவி சபாநாயகர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**Sri T. KARIA GOUNDER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கல்வி மான்யத்தை கனம் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருப்பதை ஆதரித்து சில வார்த்தைகள் நான் பேச விரும்புகிறேன். நான் மாலையிலே பேசலாம் என்று நினைத்தேன். உதவி சபா நாயகர் அவர்கள் இப்பொழுதே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். எனக்கு முன் பேசிய எல்லா நண்பர்களும் இந்த மான்யத்தைப் பற்றி புகழ்ந்தும், ஆதரித்தும் பேசினார்கள். சிலர் நேராக கல்வி அமைச்சர் அவர்களை தாக்கிப் பேசினார்கள். நான் கல்வி மான்யத்தைப் பற்றி பின்னால் பேசலாம் என்று எண்ணுகிறேன். கனம் நிதி அமைச்சர் அவர்களையும், உள்நாட்டு இலாகா அமைச்சர் அவர்களையும் எதிர்க் கட்சியிலிருந்து பேசிய நண்பர்கள் தாக்கிப் பேசினார்கள். எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அண்ணாமலை யுனிவர்ஸிடியானது உலகத்திலேயே தனிப்பட்ட மனிதனின் பெயரால் நடத்தப்படுகின்ற யுனிவர்ஸிடி என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பல் யுனிவர்ஸிடிகள் உலகத்திலே உள்ளன. குறிப்பாக நான் சொல்ல வேண்டுமானால், நம் நாட்டிலே தனிப்பட்டவர் பெயரால் நடக்கும் யுனிவர்ஸிடியை ஆரம்ப காலத்திலிருந்து பீடித்திருந்த அந்த நோயானது, மாணவர்கள் உள்ளத்திலேயும் இருக்கிற நோய் என்பதை, குறிப்பாக நான் இந்த இட்த்திலே சொல்ல வேண்டுமானால் எல்லா பிராமணரல்லாத சகோதரர்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக, அண்ணாமலை யுனிவர்ஸிடியில், நீண்ட நாட்களாக பிள்ளைகள் மனதில் உள்ள இந்த நோயானது வளர்ந்து, கடைசியிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையே மூடவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டது பற்றி எல்லோரும் வருந்தவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆறு அறிவு படைத்த மனிதனாகப் பிறந்த எல்லோரும் வருந்தத்தக்க விஷயம்தான் இது. நிதி அமைச்சர் அவர்கள் பொறுப்பற்ற முறையில் அன்றைய தினம் அண்ணாமலை நகரத்தில் நடந்துகொண்டார்கள் என்று எதிர்க்கட்சியினர் நாக்கில் நரம்பில்லாமல் பேசியது குறித்து நான் பெரிதும் வருந்துகிறேன்.

**DEPUTY SPEAKER** : The Hon. Member should not use those words " நாக்கில் நரம்பில்லாமல் ". He should use only soft and mild words.

**Sri P. S. CHINNADURAI** : கனம் அங்கத்தினருக்கு நாக்கில் நரம்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Sri T. KARIA GOUNDER** : பிராமணரல்லாத சமூகம் முன்னேற வேண்டும் என்பதற்காக அதை ஆதரித்து வந்த தலைவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும், தலை நிமிர்ந்து நாமும் மனிதர்கள் என்று பேசக்கூடிய உயர்வு பெற பிராமணரல்லாத சமூகத்திற்கு எவ்வளவு நாளாகும் என்பதையும் ஒவ்வொரு நண்பரும் மனதில் கைவைத்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் நாம் கீழ் நிலைக்கு போக ஆரம்பித்துவிட்டோம். மாணவர் உள்ளத்திலே விஷம் ஊட்டப்படும் நிலையை பார்க்கிறோம். ஒருக்கால் சென்னை நகரத்திலுள்ள பிராமணரல்லாத மாணவர்கள் நன்றாக படிக்கிறார்களோ, என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் சென்னையை விட்டு, மற்ற நகரங்களிலே படிக்கும் மாணவர்கள் பத்தாவது வகுப்பு வரையிலும், ஸ்கூல் பைனல் வரையிலும் படித்துவிட்டு, அல்லது ஒரு சிலர் " இண்டர்மீடியட் " வரையிலும்

[Sri T. Karia Gounder] [8th April 1958

1-20 p.m. படித்துவிட்டு, அதற்கு மேல் படிக்காதவர்களே நூற்றுக்கு நூறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அண்ணாமலை பல்கலைக் கழக சம்பவத்தைப் பொறுத்த வரையில் கனம் நிதி மந்திரி செய்தது தவறு என்று சொல்லப்பட்டது. அவர் தவறு செய்யவே இல்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு மானியம் கொடுப்பதற்கும் அதற்கு யோசனை சொல்வதற்கும் கனம் மந்திரிக்கு அதிகாரம் இருக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு உத்திரவு போடுவதற்கு கனம் மந்திரிக்கு அதிகாரம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிரஸ்தாப சம்பவத்தின்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் கனம் மந்திரியின் காரின் மீது கற்களை எறிந்தார்களாம். எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், காரின் மீது மாணவர்கள் கற்களை எறிந்ததற்குக் காரணம் என்ன என்பதைத் சொல்லாமல், பொறுப்பற்ற முறையில் வேறு என்னவெல்லாமோ சொல்கிறார்கள். வேலூரில் கனம் மந்திரி பேசியது பற்றி குறிப்பிடப்பட்டது. அந்தக் கூட்டத்தில் மந்திரியுடன் நானும் இருந்தேன். பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்திகளை நம்பக்கூடாது. பத்திரிகைக்காரர்கள், இல்லாததையெல்லாம் எழுதுகிறார்கள். அந்தக் கூட்டத்தில் கனம் மந்திரி மனம் நொந்து பேசினார். "இந்த சமூகம் இப்படி அழிந்து போகிறதே!" என்று சொல்லி அக்கூட்டத்தில் தம் பேச்சை அவர் முடித்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவம் சம்பந்தமாக அங்கே அவர் வேறுவிதமான அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்த வார்த்தையை அவர் அங்கே மனம் நொந்து சொன்னார்.

சமீபத்தில் சென்னையில் நடந்த சம்பவம் என்ன என்று நாம் பார்க்க வேண்டும். சென்னையில் சிலர் சர்க்கார் பஸ்களுக்கு பெட்ரோலால் தீ யிட்டுக் கொளுத்தினார்கள் என்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. பள்ளிசெல்லும் மாணவர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்தார்கள் என்று எல்லோரும் சொன்னார்கள். பிராமணரல்லாதார் சமூகம் வளர வேண்டுமென்று சொல்லும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இம் மாதிரி நடந்துகொண்டேயிருந்தால், இந்தச் சமூகம் முன்னேறுவதற்கு இன்னும் நூறு வருஷங்கள் ஆகும் என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் என்ன? இப்போது, ஹிந்தி வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லுகிறார்கள். ஏராளமான பிராமணர்கள் ஹிந்தி படித்திருக்கிறார்கள். ஹிந்தியே ஒருவேளை ஆட்சிமொழியாக வந்துவிட்டால், அப்போது பிராமணரல்லாத சமூகத்தினர்தான் கஷ்டப்படுவார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பிராமணர்கள்பால் பொறாமை கொள்ளக் கூடாது. அவர்களைப் போல் நாமும் முன்னேறப் பார்க்க வேண்டும். குறிப்பாக தி.மு.க. அங்கத்தினர்கள் தான் பிராமணரல்லாத சமூகத்திற்கு பாதகம் செய்கிறார்கள். தி.மு.க. அங்கத்தினர்கள் தான் பொறுப்பற்ற முறையில் பேசுகிறார்கள். அவர்கள் அவ்வாறு பேசக்கூடாது. எல்லோருக்கும் சுயமரியாதை உணர்ச்சி இருக்கும்போது கனம் மந்திரிகள் பொறுப்பற்ற முறையில் நடந்துகொண்டார்கள் என்று சொல்வது தவறு.

லட்சக்கணக்கான தமிழர்கள், தமிழர்கள் என்று கூறித் தலை நிமிர்ந்து நடக்கவேண்டும். அதற்கான காரியத்தைச் செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை ஸ்ரீ அண்ணாமலைச் செட்டியார் அமைத்தார். தமிழ் இசைக் கலையை அபிவிருத்தி செய்வதற்கும் அங்கே ஏற்பாடு செய்தார். தமிழர்கள் எஞ்ஜினியரிங் கல்வியைப் பெறுவதற்காக அங்கே எஞ்ஜினியரிங் கல்லூரியையும் அமைத்தார். அந்த எஞ்ஜினியரிங் கல்லூரி மாணவர்களும் பிரஸ்தாப சம்பவத்தில் ஈடுபட்டார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு அந்த எஞ்ஜினியரிங் கல்லூரியின் ப்ரின்சிபாலையும் ஆசிரியர்களையும் கண்டேன். அந்தப் பிரின்சிபால் "இப்போதாகிலும் மாணவர்கள் குறைகளை அமைச்சரிடம் சொல்லட்டுமே! அமைச்சர் அதை நிவர்த்தி செய்வாரே!" என்று சொன்னார். அந்தப் பல்கலைக் கழக மாணவர்கள் அண்ணாமலைச் செட்டியாரின் சிலையை அழிக்க முற்பட்டார்கள். இதைவிட நன்றிகெட்டதன்மை வேறு என்ன இருக்கமுடியும்? தமிழ் நாட்டு மாணவர்கள்



8th April 1958] [Sri T. Karia Gounder]

இவ்வாறு செய்தால், தமிழர்களின் பண்பு, கலாசாரம், கண்ணியம் முதலியவை என்ன ஆவது? தமிழர்கள் படித்து முன்னுக்கு வரவேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்ரீ அண்ணாமலை செட்டியார் அந்தப் பல்கலைக் கழகத்தை அமைத்தார். அந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் இப்படியா நடந்துகொள்வது? மாணவர்கள் திருந்தும் வரையில் பல்கலைக் கழகத்தை திறக்க வேண்டாமென்றும் இன்னும் இரண்டு வருஷங்களுக்கு பல்கலைக் கழகத்தை மூடிவைக்க வேண்டுமென்றும்கூட ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு நான் யோசனை கூற விரும்புகிறேன். இந்த விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்கள் தலையிடுவாரானால் தலையிடவேண்டாமென்று கூட அவரை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வேன். படிக்கும் பையன்கள் படிப்பை விட்டுவிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து, ரெயில்வே பிளாட்பாரங்களிலும், நடுத் தெருவிலும் நிர்க்கதியாக அலைவதைப் பார்க்கும் எந்தத் தமிழனும் வருந்தாமல் இருக்கமுடியாது.

கல்விக்காக கனம் நிதி அமைச்சர் செய்திருக்கும் சேவையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது. கல்விக்காக 12 கோடி ரூபாய் செலவழிக்க முன்வந்திருக்கும் கனம் அமைச்சரை நான் பாராட்டுகிறேன். எனக்கு $1\frac{1}{2}$ நிமிஷம் அதிகமாகக் கொடுத்ததற்காக தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் சபாநாயகர் அவர்களே, உலகத்திலேயே தனிப்பட்டோரால் நடத்தப்படும் பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒன்றுதான் என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கரிய கௌண்டர் கூறினார். அது வாஸ்தவமா என்று அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER** : அது கனம் அங்கத்தினர் ஸ்ரீ கரிய கௌண்டர் அவர்களுடைய அபிப்பிராயம்.

**Sri P. S. ELLAPPAN** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சச்சரவு நிறைந்த கட்டத்தில் என்னைக் கொண்டு வந்து விட்டுவிட்டீர்கள். (சிரிப்பு). இப்போது நடக்கும் விவாதத்தைப் பார்த்தால் நாம் எல்லோரும் தமிழ் நாட்டில் இருக்கிறோமா, அல்லது வேறு எங்கிருந்தாவது இங்கே வந்துவிட்டோமா என்று தோன்றுகிறது.

எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் ஏதாவது சொன்னால், "சுயநலக் கண்ணோட்டத்துடன் அவர்கள் அவ்வாறு சொல்லுகிறார்கள்" என்று ஆளும் கட்சி அங்கத்தினர்கள் சொல்கிறார்கள். எதிர்க் கட்சியில் இருக்கும் நான் பேசும் விஷயங்களைப்பற்றியும் அவர்கள் அப்படிச் சொல்வார்களோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. நான் சுயநலக் கண்ணோட்டத்துடன் எதையும் சொல்லமாட்டேன்.

ஆசிரியர்களின் பிரச்னைகளைப்பற்றி எல்லோரும் பேசினார்கள். "வயிற்று பிள்ளையை நம்பி மாடுமேய்க்கும் பிள்ளைகளைக் காலை வாரிவிட்டாளும்" என்று ஒரு கதை உண்டு. மாடுமேய்க்கும் பிள்ளைகள் இருந்த நிலைமையில் தான் இன்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். என்னைப் பெரிய படிப்பாளியாகவோ, ஞானியாகவோ யாரும் கருதவேண்டாம். கனம் நிதி அமைச்சருக்கு, மற்றெல்லோருக்கும் தெரிந்திருப்பதைவிட நன்றாக எல்லா விஷயங்களும் தெரியும். அவரால் கொண்டுவரப்படும் எல்லா பட்ஜெட்டுகளும், எவ்வளவு விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டாலும் கடைசியில் சுமூகமாக நிறைவேறிவிடும். முருகன் கொண்டுவரும் பட்ஜெட்களின் முடிவுகள் எல்லாம் சுமூகமாக இருக்கும். (சிரிப்பு). பட்ஜெட்டின் மீது நடக்கும் விவாதம் முதலில் சூடாக இருக்கும், கடைசியில் ஆறிவிடும். இருந்தாலும் நானும் இரண்டு வார்த்தைகள் பேச வேண்டுமென்பதற்காகப் பேசுகிறேன்.

இரண்டு பர்லாங்குகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் பள்ளிக்கூடங்களை அமைக்க வேண்டுமென்று ஸ்ரீமதி சௌந்தரம் அம்மையார் கூறினார். அப்படி இருந்தால் தான் சிறிய குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குப் போகமுடியும் என்று அவர் கூறினார். நான் சொல்கிறேன்: 5 மைல்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதமாவது பள்ளிக்கூடங்களை அமைக்க

[Sri P. S. Ellappan] [8th April 1958

வேண்டும். இப்போது கல்விக்காக எவ்வளவோ பணம் செலவழிப்பதாக சர்க்கார் சொல்கிறார்கள். ஆனால், கிராமங்களில் 10 மைல்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதம் கூட பள்ளிக்கூடங்கள் இல்லை. இருக்கும் பள்ளிக்கூடங்கள் பல வகைப்பட்டவையாக இருக்கின்றன. சில பள்ளிக்கூடங்கள் ஜில்லா போர்டுகளால் நடத்தப்படுகின்றன. சில பள்ளிக்கூடங்கள் ஹரிஜன நல இலாகாவால் நடத்தப்படுகின்றன. இந்தப் பள்ளிக்கூடங்களில் கட்டிட வசதி இல்லை ; வகுப்பு அறைகளில் பகலில் வெயிலும் இரவில் நிலாவும் வெளிச்சம் கொடுக்கும். இந்தப் பள்ளிக்கூடங்களையெல்லாம் ஒரே வகைப்பட்டனவாக ஆக்கவேண்டும் ; அதாவது எல்லாவற்றையும் ஜில்லாபோர்டு பள்ளிக்கூடங்களாக ஆக்கவேண்டும், இல்லாவிட்டால் எல்லாவற்றையும் ஹரிஜன நல இலாகாவின் கீழ் நடக்கும் பள்ளிக்கூடங்களாக ஆக்க வேண்டும்.

ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் அந்தந்த தாலூகாவிலே இருக்கும் ஆசிரியர்களை அந்தந்த தாலூகாவிற்குள்ளேயே மாற்றவேண்டும். ஒரு ஜில்லாவை விட்டு இன்னொரு ஜில்லாவுக்கு கே.டி.க்களைக் கொண்டு போவது போல மாற்றுவதால் அவர்கள் படும்பாடு இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. "இங்கு வந்து சொல், அங்கு வந்து சொல்", பிரசிடெண்டிடம் சொல், செக்ரடரியிடம் சொல்" என்று உயிரை வாங்குகிறார்கள். கேட்டால், அப்படித்தான் போடுவோம் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த நிலை மிகுந்த கஷ்டமாக இருக்கிறது.

எங்கள் சூணாம்பட்டு, தென்னாற்காடு ஜில்லாவின் பார்டரில், கடைசியில் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடத்தைப் பார்த்தால், எல்லாம் அப்படியே ஒன்றுமே இல்லாத நிலையிலே இருக்கிறது. அம்மாதிரி பள்ளிக்கூடங்கள் எல்லாம், குறிப்பாக ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்கள் எல்லாம் என்ன நிலைமையில் இருக்கின்றன, என்ன குறைகள் இருக்கின்றன என்பதை அவ்வப்போது கண்காணிப்பதற்கு தனியாக ஒரு அதிகாரி நியமித்து அடிக்கடி அவைகளுக்கு வேண்டிய ரிப்பேர் செய்யவேண்டும். டெண்டர் விட்டால்கூட யாரும் ரிபேர் செய்வதற்கு வரமாட்டேன் என்று சொல்கிறார்கள். வருஷம் மூன்று ஆகியும் அந்தப் பள்ளிக்கூடம் கட்டப்படவில்லை. மழை காலத்தில் குழந்தைகள் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

தயவுசெய்து ஆசிரியர்கள் விஷயத்தில் தகுந்த சலுகை காண்பிக்க வேண்டும். அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி இல்லை. போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு போலீஸ் ஸ்டேஷன் அருகாமையில் போலீஸ் லைன்கள் கட்டுவதுபோல், ஆசிரியர்களுக்கும் அந்தந்தக் கிராமங்களில் வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்திற்கு நல்ல ஆசிரியர் ஒருவரை நியமித்தாலும், வீட்டு வசதி இல்லாத காரணத்தால், திரும்பிபோய்விடுகிறார். இப்படிச் சில கஷ்டங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் சரிவர பார்த்து நிவர்த்தி பண்ணும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜில்லா போர்டுகளிலே வேலை செய்யும் ஆசிரியர்களெல்லாம் 55 வயதிலேயே ஓய்வு பெற்று உட்கார்ந்துவிடலாம் என்று இருக்கிறது. மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடத்தில் 60 வயது வரைக்கும் இருக்கலாம் என்று இருக்கிறது. ஒரே வித கஷ்டம் இருப்பதால், எல்லா ஆசிரியர்களும் 60 வயது வரையில் உத்தியோகத்தில் இருக்கலாம் என்று ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்தால் கோலை ஊன்றிக்கொண்டு வந்தாவது பள்ளிக்கூடத்தில் ஏதாவது சொல்லிக்கொடுப்பார்கள். ஆகவே, 60 வயது வரையில் எல்லா ஆசிரியர்களும் வேலைசெய்யலாம் என்ற சட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்படி ரொம்ப தாழ்மையாக கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு விஷயத்தைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். அதாவது, நாமக்கல் கவிஞர் தீண்டாமையைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்றால், " நால்வர் உரைத்த தேவாரத்தில் இல்லை நந்தன் குலம் தனை நிந்தனை சொல்ல " என்று சொல்லியிருக்கிறார். இந்த நிலையில் ஜில்லா போர்டு பள்ளிக்கூடங்களில் கூட இன்னும் ஜாதி



8th April 1958] [Sri P. S. Ellappan]

வித்தியாசம் இருக்கிறது. ஹரிஜனப் பிள்ளைகளோடு ரெட்டியார் பிள்ளைகளோ முதலியார் பிள்ளைகளோ விளையாடினால்கூட தவறாக இருக்கிறது. ஒன்றாக விளையாட விடுவது இல்லை. பள்ளிக்கூடம் விட்டு வெளியே போகும் போதுகூட ரெட்டியார் பிள்ளைகளுக்கும் முதலியார் பிள்ளைகளுக்கும் ஒரு வழியும், ஹரிஜனப் பிள்ளைகளுக்கு இன்னொரு வழியும் என்ற நிலை இருக்கிறது. இதையெல்லாம் இங்கே சொல்வதற்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எதிர் கட்சியிலிருந்து உண்மையை எடுத்துச்சொன்னாலும் நல்ல விதமாக ஏற்றுக்கொள்ளுவது இல்லை. ஆகவே, பள்ளிக்கூடங்களில் தீண்டாமை இருக்கும்படியான விஷயத்தை ரொம்ப முக்கியமாக, சிரத்தையோடு நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3-30 p.m. 1-31 p.m.

The House then adjourned.

**(After lunch—3-30 p.m.)**

(Mr. Speaker in the Chair.)

**Sri P. G. MANICKAM :** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை ஆதரித்து நான் சில சங்கதிகள் சொல்ல விரும்புகிறேன். கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் கல்வி விஷயமாக போதுமான கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள்.

**Mr. SPEAKER :** நான்கைந்து அங்கத்தினர்கள் இன்னமும் பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே கனம் அங்கத்தினர்கள் ஐந்து நிமிஷங்கள் மட்டும் இனி தங்கள் கருத்துக்களைச் சொல்வதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri P. G. MANICKAM :** கல்வி விஷயமாக பல கோடி ரூபாய்களை நாம் செலவிட்டுக் கொண்டிருந்தும் கூட அங்கங்கே காணப்படுகிற சில குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக அவைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆரம்பக் கல்வியை நாம் எடுத்துக் கொண்டால் 1949-53-ம் வருஷத்திலே ஒன்பது லட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் முதல் வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஐந்தாவது வகுப்பு வரையில் அவர்களிடையே வந்திருப்பவர்கள் மூன்று லட்சம் சொச்சம் மாணவர்கள்தான். இவர்கள்தான் ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இடையில் அதிகமான மாணவர்கள் நின்றுவிடுகிறார்கள். இதனால் கல்வியின் நிலைமை என்ன ஆகிறது என்பதை நாம் யோசிக்க வேண்டும். வாத்தியார்களுக்கு ஆகிற செலவு என்ன ? பள்ளிக்கூடக் கட்டிடம், இதர செலவுகள் எல்லாம் என்ன ? இப்படி ஏராளமான தொகை செலவு செய்யப்பட்டும்கூட முதல் வகுப்பில் சேருகிற மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்காத ஒரு காரணத்தினால் ஆரம்பக் கல்வியின் தரமானது ஒருவிதத்தில் பாதிக்கப்பட்டுவிடுகிறது. மட்டமாகி விடுகிறது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பள்ளிக்கூடத்தில் படிக்கச் சேர்ந்த மாணவர்கள் இடையில் நின்று விடாது இருப்பதற்கு பிற்பகலில் உணவு கொடுக்கும் திட்டம் அமைந்திருக்கிறது. இதன் மூலம் ஏழை மாணவர்களுக்கு நன்மை ஏற்படுவதோடு சாப்பாட்டிற்காக அவர்களிடையில் படிப்பதை நிறுத்திவிடாமல் இருக்கலாம். ஆகவே இந்தத் திட்டம் நல்லமுறையில் நடைமுறையில் செயல்படுவதற்கு அதிகாரிகள் அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[Sri P. G. Manickam] [8th April 1958

அதோடு அதிகாரிகள் ஆங்காங்கு பள்ளிக்கூடங்களைப் பார்வையிடச் செல்லும்போது குழந்தைகளுடைய பெற்றோர்களுடன் அதிகமாகப் பேச வேண்டும். குழந்தைகளின் படிப்பை இடையில் நிறுத்திவிடாமல் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கும்படியாக சொல்ல வேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் எங்கள் ஜில்லா விஷயம் ஒன்றிரண்டைப் பற்றித் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1958-ம் ஆண்டு மார்ச் மீ 3உ என்னுடைய வாய்மொழிக் கேள்வி ஒன்றுக்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் வயது 6 முதல் 11 வரையில் 450,955 பேர்கள் என்பதாகவும், இவர்களில் பள்ளியில் படிப்பவர்கள் மட்டும் 31,975 என்றுதான் என்பதாகவும், 11 வயது முதல் 14 வரையில் பள்ளிக்குச் செல்லக்கூடியவர்களின் தொகை 236,214 என்பதாகவும், இவர்களில் பள்ளியில் சேர்ந்து படிக்கக்கூடியவர்கள் 8,101 தான் என்றும் குறிப்பிட்டார்கள். அதாவது 6 வயது முதல் 11 வயது வரையில் பள்ளிக்கூடத்திற்குச் செல்லவேண்டியவர்கள் இன்னும் எங்கள் கோவை ஜில்லாவில் 418,980 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் நமது ராஜ்யத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பாகத்தினர் அந்த ஜில்லாவிலேயே இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகையால் அந்த ஜில்லாவில் அதிகமான ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பித்து அதிகமான மாணவர்கள் உடனடியாகப் படிப்பதற்கு வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும் செய்து கொடுக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் மூன்று நான்கு வருஷங்களுக்குள் வருஷத்திற்கு ஒரு லட்சம் மாணவர்கள் வரையிலாவது அதிகமாகப் பள்ளியில் சேர்க்கப்படுவதற்கு வேண்டிய வசதிகள் எல்லாவற்றையும் செய்யவேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**SRI P. VEDAMANICKAM :** தலைவர் அவர்களே, இவ்வாண்டு நமது நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டப்படி கல்வி இலாகாவிற்கு 12 கோடி 34 லட்சம் ரூபாய் மான்யம் கோரியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இரண்டு கோடி 62 லட்சம் ரூபாய்தான் கல்விக்காக செலவிடப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இப்போது கல்விக்காகப் பத்து கோடி ரூபாய் வரையில் அதிகம் செலவிட்டு வருகிறோம். இது நாம் அந்த துறையில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதைக் காட்டும்.

இருந்தாலும் ஆரம்ப ஆசிரியர்களுடைய நிலைமை அல்லலுக்குரியதாகவே இருந்து கொண்டிருக்கிறது. வருங்காலப் பிரஜைகளை உற்பத்தி செய்யக்கூடிய ஆரம்ப ஆசிரியர்களுக்கு உற்சாகம் ஊட்டும் அளவில் அவர்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டும். குறிப்பாக இன்றைக்கு அவர்களுக்கு 30 ரூபாய் சம்பளமும், அலவன்சு 31 ரூபாயும் கொடுக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். இந்த அலவன்ஸ் ஒருக்கால் நிறுத்தப்பட்டுவிட்டால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் அவர்களுடைய வாழ்க்கை நிலைக்குப் போதுமானதாக இராது. ஆகையால் அவர்களது சம்பளத்தை உயர்த்த தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லாவிட்டாலும் அவர்களுடைய அலவன்சில் ஒரு பகுதியை சம்பளத்தில் சேர்த்துவிடுவதற்கு சர்க்கார் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு முக்கியமாக நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒவ்வொரு ஆசிரியருக்கும் எத்தனை பிள்ளைகள் இருக்கவேண்டும் என்று நிர்ணயிப்பது. இன்றைக்கு ஒரு ஆசிரியருக்கு நாற்பது மாணவர்கள் இருக்கவேண்டும் என நிர்ணயித்திருக்கிறார்கள். சிறு பிள்ளைகளை வீட்டில் வைத்துக்கொள்வது எவ்வளவு கஷ்டம் என்பது பெற்றோர்களுக்குத் தெரிந்திருக்கும். அதற்காகவே பள்ளிக்கூடத்திற்கு பெரும்பாலானவர்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பிவிட விரும்புகிறார்கள். ஒன்றிரண்டு குழந்தையை வைத்துக் கொள்வதே இத்தனை கஷ்டம் என்றால் ஒரு ஆசிரியர் வகுப்பில்



8th April 1958] [Sri P. Vedamanickam]

நாற்பது பிள்ளைகளை வைத்துக் கொள்வது எத்தனை கஷ்டமாக இருக்குமென்று சொல்ல விரும்புகிறேன். படிப்பின் தரமும் அதிகமான மாணவர்கள் இருக்கும்போது மிகவும் குறைந்துவிடுகிறது. ஆகவே மாணவர்களின் தொகையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதாவது குறைந்தது 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்றாவது வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட மிட் டே மீல்ஸ் ஏழை மாணவர்களுக்குப் பிற்பகலில் கொடுக்கப்படுகிறது. ஏறக்குறைய ஒரு மாணவனுக்கு 6 நையா பைசா செலவாகிறது. உண்மையில் சில கிராமங்களில் நல்ல முறையில் இந்தத் திட்டம் நடைபெறுகிறது. சில கிராமங்களில் முடியவில்லை. பல கிராமங்களில் இது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அங்கும் நல்ல முறையில் பிற்பகலில் உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பத்து ஆண்டில் நம் நாட்டில் உள்ளவர்கள் எல்லாம் கல்வி அறிவு உடையவர்களாகச் செய்யவேண்டுமானால் கட்டாயக் கல்வியை அமுலுக்கு கொண்டு வரவேண்டும். கட்டாயக் கல்விமுறையை அமுலுக்கு கொண்டுவந்து பள்ளிக்கூடத்திற்கு வயது வந்த பிள்ளைகளை அனுப்பாதவர்களைத் தண்டிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அது இல்லாத காரணத்தினால் கட்டாயக் கல்வி சரிவர நடைபெறாமல் இருக்கிறது. எல்லா மாணவர்களும் நாட்டில் படிக்க வேண்டுமானால் கட்டாயக் கல்வி அவசியம் என்று வற்புறுத்துகிறேன்.

அடுத்தபடியாக செகண்டரி க்ரேட் ஆசிரியருக்கு எந்தப் பள்ளியில் வேலை செய்தாலும் ஒரேவிதமான சம்பளம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு இடத்தில் வேலை செய்பவருக்கும், இன்னொரு இடத்தில் வேலை செய்பவருக்கும் வித்தியாசம் இருக்கக்கூடாது. அதோடு இன்னொரு விஷயம். ஆசிரியர்கள் அடிக்கடி ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றப்படுகிறார்கள். குறிப்பாக தென்னாற்காடு மாவட்டத்தில் சென்ற மூன்று ஆண்டில் அடிக்கடி இம்மாதிரியாக ஆசிரியர்கள் 3-40 p.m. மாற்றப்பட்டு வருகிறார்கள். இதனால் ஆசிரியர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆசிரியர் கலப்பு மணம் செய்து கொண்டதற்காக அவர் ஒரு ஆண்டில் மூன்று முறை மாற்றப்பட்டார். இன்று அரசாங்கமும், இதர அரசியல் கட்சிகளும் கலப்பு மணத்தை ஆதரிக்கும்போது ஒரு ஹரிஜன ஆசிரியர் கலப்பு மணம் செய்து கொண்டதற்காக ஒரு ஆண்டிலேயே மூன்று தடவை மாற்றப்பட்டு அவர் மிகவும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, குறைந்தது மூன்று வருஷங்களுக்காவது ஒரு ஆசிரியரை ஒரேயிடத்தில் இருக்கும்படிச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களை தாலுகா விட்டு தாலுகா மாற்றினால் இன்னும் அல்லல். குறைந்த சம்பளத்தில் அவர்கள் இப்படி அடிக்கடி மாற்றப்பட்டால் எவ்வளவு தூரம் கஷ்டப்படுவார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRIMATHI KAMALAMBUJA AMMAL :** சபாநாயகர் அவர்களே, இந்த கல்வி மான்யக் கோரிக்கைக்கு நம் வருமானத்தின் ஐந்தில் ஒரு பகுதி ஒதுக்குவதை விட நான்கில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டால் அதை நான் முழு மனதுடன் வரவேற்கும் ஒரு நிலை ஏற்படும். நமது கல்வி அமைச்சர் அவர்கள் நிதியமைச்சராகவும் இருக்கும் காரணத்தினால்தான், மற்ற துறைகளுக்கும் பணம் ஒதுக்க வேண்டியிருப்பதால் தானே கல்விக்காக அதிகம் தொகை ஒதுக்கிக் கொண்டால் தன் இலாகாவிற்கே அதிகம் ஒதுக்கிக் கொண்டது மாதிரியாகும் என்று இது மிகவும் முக்கியமான இலாகாவாக இருந்தபோதிலுங்கூட நமது வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்குதான் ஒதுக்கிக் கொண்டிருப்பது அவரது பெருந்தன்மையைத் தான் எடுத்துக் காட்டுகிறது. ஆக, கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை நான்கில் ஒரு பகுதியாக இருந்தால் அதை முழு மனதுடன் வரவேற்பேன் என்று சொன்னதற்குக் காரணம் என்னவென்றால்,

[Srimathi Kamalambuja Ammal] [8th April 1958

சமுதாயத்திலுள்ள கேடுகளை, ஒழுங்கீனங்களைப் போக்கக்கூடியதும், அறிவை உண்டாக்கக் கூடியதும் கல்வி ஒன்றுதான். நல்லதொரு, ஒழுக்கமுள்ள சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் சமுதாயத்தில் உள்ள மக்கள் அனைவரும் கல்வி அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டியது மிக மிக அவசியம். அப்படி நம் மக்களின் கல்வி அறிவைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நமது சர்க்கார், இப்பொழுது ஏறக்குறைய 500 ஜனத்தொகை உள்ள எல்லா சிறு சிறு கிராமங்களிலும் கூட, பக்கத்தில் பள்ளிக்கூடம் இல்லாவிட்டால் அங்கெல்லாம் ஓராசிரியர் பள்ளிகளாவது ஏற்படுத்தவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள். பள்ளிக்கூடங்கள் அதிகரித்துக்கொண்டு போகும்போது ஆசிரியர்களும் அதிகமாகத் தேவைப்படுகிறார்கள். ஆனால் ஆசிரியர்களின் பயிற்சிக்காக ஒதுக்கப்படும் ஸ்தானங்களைப் பார்க்கும்போது அது மிகக் குறைவாக யிருக்கிறது. ஆசிரியர்களின் தேவை அதிகப்படும்போது ஸ்தாபனங்களும் அதிகமாக ஒதுக்கப்படவேண்டும். ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், ட்ரெயினிங் பெற்ற ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். அடுத்தபடியாக, ஆசிரியர்களுக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள விகிதாச்சாரம், 40 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் என்று கல்வி வெள்ளை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஒரு ஆசிரியர் 40 பிள்ளைகளை வைத்துக்கொண்டு பராமரிப்பது என்றால் அது மிகவும் கஷ்டமான காரியந்தான். சாதாரணமாக பிள்ளைகளை அடக்கி வைத்துக் கொண்டு அவர்கள் வீட்டிற்குப் போனாலே அதுவே பெரிய ஒரு காரியமாகும். உண்மையிலேயே, பிள்ளைகளுக்கு போதிய அளவு கல்வி அறிவு புகட்ட வேண்டுமென்றால் ஒரு ஆசிரியருக்கு 40 பிள்ளைகள் என்பது அதிகமாகும். ஆகவே, மாணவர்களின் தொகைக்கு ஈடு கட்டுவது போல் ஆசிரியர்கள் அமர்த்தப் பட்டால்தான் அவர்களால் மாணவர்களுக்கு உயர்தரமான கல்வி போதிக்க முடியும். தற்போதுள்ள நியதிப்படி 40 பிள்ளைகளுக்கு மேல் 60, 65 பிள்ளைகள் இருந்தால் கூட வேறு ஆசிரியர்கள் போட முடியாமல் இருக்கிறது. ஆகவே, 60 பிள்ளைகள் இருந்தால், குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்களாவது போடக்கூடிய ஒரு நிலையையாவது ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். எட்டாம் வகுப்பு படித்துவிட்டு ஹையர் கிரேட் ட்ரெயினிங் எடுக்கும்போது, எட்டாம் வகுப்பு வரை பாஸ் செய்து விட்டு ஹையர் கிரேட் ட்ரெயினிங்க்கு மனு செய்யும் மாணவ மாணவிகளின் நிலை மிகவும் பரிதாபகரமாக யிருக்கிறது. காரணம், 4, 5 பாரங்கள் பாஸ் செய்தவர்களும், 6-வது பாரம் தேர்ச்சி பெறாதவர்களும் அதற்கு மனு செய்கிறார்கள். அப்பொழுது செலக்ஷன் கமிட்டியில் என்ன செய்கிறார்கள் என்றால், எட்டாம் வகுப்புக்கு மேல் படித்தவர்களுக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டியிருக்கிறது. எட்டாவது பாரம் வரை படித்துவிட்டு, ஹையர் கிரேட் டிரெயினிங்கையே நம்பிக் கொண்டிருக்கும் மாணவ மாணவிகளின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருக்கிறது. அவர்கள் ஏமாற்றத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, எட்டாவது வகுப்பு வரை படித்து விட்டு ஹையர் கிரேட் ட்ரெயினிங்க்கு செல்லலாம் என்பதையே எடுத்து விட்டால் கூட நல்லது என்றுதான் நான் நினைக்கிறேன். ஆகவே, எட்டாவது வகுப்பு முடித்தவர்களுக்கு ஏதாவது ஒரு தொழிலைச் செய்ய வழி வகை வகுத்துக் கொடுத்தால் மிகவும் உபகாரமாயிருக்கும் (பெல்) நேரம் அதிகம் இல்லாததால் அதிகமாக விஸ்தரித்துப் பேச முடியவில்லை. ஆகவே, சில விஷயங்களை மாத்திரம் சொல்லிக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். ஒரு ஹைஸ்கூல் ஆரம்பிக்க வேண்டுமென்றால் கட்டிடத்திற்கு 50,000 ரூபாயும் அதற்கு மேல் மெயின்டனன்ஸுக்கு வேண்டிய தொகையும் வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது எட்டாம் வகுப்பு வரை உள்ள இடங்களில் வருடத்திற்கு ஒரு வகுப்பாவது உயர்த்திக் கொடுத்தால் நன்றாகயிருக்கும். ஐம்பதினாயிரம் ரூபாயையும் ஊராரே கொடுக்க கஷ்டப்படுகிறார்கள். ஆகவே சிலயிடங்களில் மாத்திரந்தான் உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு உயர்தரப்படிப்பு கிடைக்க வசதியிருக்கிறது. மீதியிடங்களில் அப்படி உயர்நிலைப் பள்ளிகள் இல்லாததால் உயர்தரப் படிப்பு கிடைக்க வசதியில்லாது போய் விடுகிறது. மிட்டே மீல்ஸ் காரணமாக பள்ளிக்கூடங்களுக்கு அதிகம் பிள்ளைகள் வந்து சேருகிறார்கள்.



8th April 1958]

SRI T. S. RAMASWAMY PILLAI : சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து பல அங்கத்தினர்கள் பேசினார்கள். ஆசிரியர்களின் குறைகளையும், கல்வி இலாகாவில் சீர்படுத்தப்படவேண்டிய பல விஷயங்கள் குறித்தும் அன்பர்கள் எடுத்துக் கூறினார்கள். நம்முடைய கல்விக் கொள்கையைப் பொறுத்தளவில் ஆரம்பக் கல்விக்காக 12 கோடி ரூபாயில் ஏகதேசம் 6 கோடிக்கு அதிகமான ரூபாயை நாம் ஒதுக்கியிருக்கிறோம். அது, அத்தியாவசியமான ஒரு தொகையாகும். நம் நாட்டு மக்களின் எழுத்தறிவையும், கல்வியறிவையும் உயர்த்தினால் ஒழிய நம் ஜனநாயகமும், நம் தேசத்தின் முன்னேற்றமும் ஓங்கி வளர முடியாது. இந்த நிலையில் ஒரு பெரும் பகுதியை அதற்காக ஒதுக்கியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இவ்வளவு தொகை ஒதுக்கியபோதிலும் அந்தத் தொகை எவ்வளவு தூரம் பயன்படுகிறது என்று பார்த்தால் அந்தத் தொகை அளவிற்கு நாம் பயன் அடையவில்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம் ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் வேறு எந்த ராஜ்யத்தையும் விட நம் ராஜ்யத்தில் தான் கல்வி அரசியலால் பாதிக்கப்பட்டிருக்கிறது. கல்விக் கொள்கையைப் பொறுத்தளவில், நம் சென்னை ராஜ்யத்தைப் போல் வேறு எந்த ராஜ்யத்திலும் கல்வி பாதிக்கப்படவில்லை என்று நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, இந்தியை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது ஆரம்பக் கல்வி விஷயத்தில் எவ்வளவு அதிகமான குழந்தைகளுக்கு பயிற்சி கொடுக்க முடியும், குறுகிய காலத்தில் என்ற விஷயத்தை எடுத்துக்கொண்டாலும் சரி அண்டை நாடுகளை விட நம் நாடு தான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. வேறு வெளி ராஜ்யங்களில் ஹிந்திக்கு எதிர்ப்பில்லை. கேரள ராஜ்யத்தில் இந்திக்கு எதிர்ப்பில்லை, அதேபோல் ஆந்திராவிலும் இந்திக்கு எதிர்ப்பில்லை. ஆனால் நம் ராஜ்யத்தில் இந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது. அதேபோல், ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில் நம் ராஜ்யத்தில் ஒரு மாணவனுக்கு ஒரு வருஷத்திற்கு 24 ரூபாய் செலவாகிறது என்று சொல்லும்போது அது 30 ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்று கல்வியமைச்சர் அவர்களின் அறிக்கையில் காண்கிறேன். அதே நேரத்தில் அண்டை ராஜ்யத்தில் எட்டு ரூபாய்தான் ஆகிறது என்றால் நாம் செலவு செய்யும் 30 ரூபாய் அங்கு மூன்று பையன்களுக்கு செலவு செய்யும் தொகையை விட கூடுதலாகயிருக்கிறது. அதைப் பார்க்கும்போது நாம் ரூபாயை எவ்வளவு தூரம் துர்விநியோகம் செய்கிறோம் என்று பார்க்கவேண்டும். நம் அரசியல் சட்டம் 42-வது விதிப்படி 14 வயதுள்ள எல்லோருக்கும், எவ்வளவு முடியுமோ அவ்வளவு தூரம், இலவசமாகவும் கட்டாயமாகவும் கல்வி அறிவு கொடுக்கும் புனிதமான, மகத்தான கடமையை நாம் இன்றையதினம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். எத்தனையோ கமிட்டிகள் போட்டோம். 1953-ல் ஒரு கமிட்டி, 1955-ல் ஒரு கமிட்டி, அதன் பின்னால் வெள்ளை அறிக்கை ஒன்று, பின்னர் வெள்ளை அறிக்கையைப்பற்றி இரு சபைகளையும் சேர்ந்த நிபுணர்களின் அறிக்கை இவைகளெல்லாம் வந்துவிட்டன. 1950-ல் இருந்து நாம் 1960-ம் ஆண்டை எட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்வளவு வருடங்களாக நாம் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர முன்னேற்றம் ஒன்றும் காண்பதற்கில்லை. இப்பொழுது 27 லட்சம் மாணவர்கள் ஆரம்பப் பள்ளிகளில் இருப்பதாக புள்ளி விவரங்கள் கூறுகிறது. இதற்கு முன்னால் உள்ள புள்ளிவிவரங்களைப் பார்க்கும்போது, நிலைமை எப்படி இருக்கிறது என்றால், 10 லட்சம் மாணவர்கள் ஒன்றாவது வகுப்பில் சேர்ந்தால் ஐந்தாவது வகுப்பிற்கு வரும்போது அது 3 லட்சமாக குறைகிறது. பாக்கியுள்ளவர்கள் ஒன்றாவது, இரண்டாவது வகுப்புடன் நின்று விடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு செலவு செய்ததெல்லாம் வேஸ்ட்தானே. மேலும் அண்டை ராஜ்யங்களில் ஆசிரியர்களுடைய சம்பளமும் ஜாஸ்தியாக இருக்கிறது. இந்த நிலை மாத்திரம் இங்கு ஏன் என்று நாம் 5-30 p.m. பார்க்கவேண்டும். இதில் அரசியல் அபிப்பிராயங்களை எல்லாம் அப்புறப்படுத்திவிட்டு இந்தப் பிரச்னையை எடுத்துப்பார்ப்போமானால் இந்த ஆறரைக் கோடி ரூபாயை செலவு செய்வதில் நாம் பல லட்சக்கணக்கான மாணவர்களை பயிற்றுவிக்க முடியும் என்பதை நாம் பார்க்கவேண்டும். அந்த முறையில் பார்க்கும்பொழுது என்னுடைய கொள்கை என்னவென்றால், என்னுடைய அரசியல் கட்சியின் கொள்கை என்று சொல்ல முடியாது. இதில் ஷிப்ட்

ஸிஸ்டம் ரொம்பவும் அத்தியாவசியமானது என்று சொல்லமுடியும். இதன் மூலம் லட்சோபலட்சம் பிள்ளைகளுக்கு கல்வி அளிக்க முடியும். இந்த ஸிஸ்டம் அண்டை ராஜ்யமான கேரள ராஜ்யத்தில் இருந்துகொண்டு வருகிறது. ஏன் நமது ராஜ்யத்தில் கூட கன்னியாகுமரி ஜில்லாவில் இந்த ஷிப்ட் ஸிஸ்டம் இப்போதும் நடந்துகொண்டு வருகிறது. இதன் மூலம் அதிகமான கல்வி அறிவு பெறச் செய்ய முடிகிறது. அந்த ஜில்லா கல்வி அறிவு அதிகமாக பெற்றிருக்கிறது என்று பெருமைபட்டுக் கொள்ள முடியும். இதல்லாமல் கல்வி விஷயத்தில் அரசியலை புகுத்துவது என்பது, அல்லது குலக் கல்வியை புகுத்துவது என்பது எல்லாம் பொதுக்கூட்டங்களுக்கும் சபைக்கும் தான் நல்லதாக இருக்கும். அண்டை ராஜ்யத்தில் 80 சத விகிதம் லிட்டரஸி இருக்கிறது என்று சொல்லும் பொழுது நமது ராஜ்யத்தில் 20 சத விகிதம் தான் இருக்கிறது என்று சொன்னால் அதைப் பற்றி உண்மையிலேயே நாம் வருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆகவே நாம் அதை புனராலோசனை செய்யவேண்டும். இதைப்பற்றி நம்முடைய லெஜிஸ்லேட்டிவ் கமிட்டியினுடைய ரிப்போர்ட்டில் தெளிவாக கூறப்பட்டிருக்கிறது. ஐந்து வருடம் கட்டாய கல்வி வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். இவ்விதம் இருக்கவேண்டும் என்று 1950-லேயே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதை நடைமுறைக்கு கொண்டு வருவதில்தான் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த கட்டாயக் கல்வியை கொண்டு வரவேண்டும் என்று சொல்லும்பொழுது அதை ஏன் உடனே அமுல் நடத்தக்கூடாது என்று கேட்கிறேன். கன்னியாகுமரி ஜில்லாவில் இந்த கட்டாய கல்வியினால் எந்தவிதமான கஷ்டமும் ஏற்பட்டு விடவில்லை. ஐந்து வயதானஉடன் நிச்சயமாக பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடுவார்கள். அதே போன்றுதான் பகல் உணவு விஷயத்தில் அங்கு 25 வருடங்களாக இந்த பகல் உணவு அளிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இதைப்பற்றி புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் வருங்கால இந்திய பிரஜைகளை நாம் உருவாக்கவேண்டியிருக்கிறது. இப்போது 27 லட்சம் மாணவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இங்குள்ள என்ரோல்மெண்ட் விகிதத்தைப்பார்த்தால் செக்கண்டரி ஸ்கூலில் 90 பேர்கள்தான் இருக்கிறார்கள். அங்கே 190 பேர்கள் இருக்கிறார்கள். இவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. இதைப் போக்கடிப்பதற்கு எல்லோரையும் பள்ளிக்கூடத்திற்கு கொண்டு வரவேண்டும். நம்மால் 27 லட்சம் மாணவர்களுக்கும் கல்வி பயிற்றுவிக்க முடியும். அடுத்ததாக நம்முடைய கல்வியின் தரம் குறைந்துவிட்டதாக சொல்லமுடியாது. நம்முடைய பைனான்ஸ் டிப்பார்ட்மெண்டில் ஒருவர், ஷிப்ட் ஸிஸ்டத்தில் படித்தவர், காம்பட்டிடீவ் எக்ஸாமினேஷனிலும், ஐ.ஏ.எஸ்., ஐ.ஆர்.எஸ். போன்ற பரீட்சைகளில் முதலாவதாக தேறியிருக்கிறார். இவர் ஷிப்ட் ஸிஸ்டத்தில் படித்தவர்தான். ஆகவே கல்வியின் தரம் பாதிக்கப்பட்டிருப்பதாக சொல்ல முடியாது. இதை அரசியல் பிரச்னையாக நாம் பார்க்கமுடியாது. ஆகவே இந்த திட்டத்தை புனராலோசனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக ஆசிரியர்களைப் பற்றி பலர் இங்கு கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் நான் சொல்லுவது என்னவென்றால் அவர்களது சம்பளங்கள் பல தினுசுகளாக இருக்கிறது. இவ்விதம் இருந்தால் நிச்சயமாக ஆசிரியர்களிடையே மனக்கசப்பு இருக்கத்தான் செய்யும். உதாரணமாக அவர்களது சம்பளங்களை பார்க்கும்பொழுது கார்ப்பரேஷன் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு 35—60 என்றும் எய்டட் ஸ்கூல் ஆசிரியர்களுக்கு 30—35 என்றும் பஞ்சாயத்து ஸ்கூல் ஆசிரியர்களுக்கு 30 ரூபாய் என்றும் பலவிதமாக இருக்கிறது. இந்த நிலை இருக்கக்கூடாது. இவ்விதம் இருந்தால் அவர்களுக்கு வேலை செய்வதற்கு உற்சாகம் இருக்கமுடியாது. ஆகவே இவர்களது சம்பளம் ஒரே வகையில் இருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக அண்ணாமலை நகர் கல்லூரியில் ஏற்பட்ட விஷயங்களைப்பற்றி இங்கு குறிப்பிடப்பட்டது. சம்பவம் நடந்த மறு நாள் அதாவது 30-ம் தேதி 6–30 மணிக்கு அடியேனும் அங்கு இருந்தேன். இந்த சம்பவத்தைப் பொறுத்த அளவில், அன்று ஏற்பட்ட சம்பவத்தைப் பொறுத்த அளவில் இந்த சம்பவத்திற்கும் அரசியலுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று என்னால்



திடமாக சொல்ல முடியும். ஆகவே இந்த சம்பவத்தோடு அரசியலை சேர்த்து பார்ப்பது நமக்கும் நல்ல தல்ல, மாணவர்களுக்கும் நன்மையல்ல, அந்த யூனிவர்ஸிட்டிக்கும் நல்லதல்ல என்பதை தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கே இரண்டு ஆண்டுகளாக ஹாஸ்டல் தினம் நடத்தவில்லை. வேண்டாம் என்று வைத்துவிட்டார்கள். அதன்பின் இந்த ஆண்டில் பெண்கள் ஹாஸ்டலில் மாத்திரம் நடத்தினார்கள். இதற்கிடையில் ஹாஸ்டலைப்பற்றி அடிக்கடி புகார் இருந்து கொண்டிருந்தது. அங்கு என்.ஸி.ஸி. ஆபீஸர்களுக்கு சாப்பாடு போட்டதற்காக ஏற்பட்ட 5,000 ரூபாய் செலவையும் மாணவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்களாம். இதைப்பற்றி முன்பே புகார்கள் இருந்து கொண்டிருக்கிறது. அதே மாதிரித்தான் ஹாஸ்டல் வார்டனைப்பற்றியும் பல புகார்கள் இருந்து கொண்டிருக்கிறது. முன்னால் அவரை நீக்கிவிட்டு பின்னாலும் அவரையே நியமித்தார்களாம். இம்மாதிரி நிர்வாகத்தில் பல ஊழல்களும் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிர்வாகத்தின் வைஸ்-சான்ஸிலர் போட்ட உத்தரவை யாரும் கேட்கமாட்டார்கள் என்ற பேச்சுகூட அங்கு இருக்கிறது. இத்தகைய நிலையில் அன்றைய தினம் பெண்கள் விடுதியில் நடந்த ஹாஸ்டல் தினத்திற்கு 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களும் அங்கு சென்றிருக்கிறார்கள். அவர்கள் அங்கு ஒழுங்காகவும் அமைதியாகவும் நடந்து கொண்டார்கள் என்று அமைச்சர் அவர்களே இங்கு ஒத்துக்கொண்டார்கள். இவ்விதம் அங்கு நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். பின் இரவு 12 மணிக்கு சென்றிருக்கிறார்கள். சாதாரணமாக இரவு 10 மணிக்கு பின்னால் போனால் வாட்ச்மேன் அனுமதியில்லாமல் யாரையும் விடுவதில்லை. சாதாரணமாக ரெஸிடன்ஸியல் யூனிவர்ஸிட்டி எவ்வளவோ இருக்கின்றன. தென் இந்தியாவில் கண்போன்று நமக்கு ஒரே ஒரு ரெஸிடன்ஸியல் யூனிவர்ஸிட்டி இது ஒன்றுதான் இருக்கிறது. வட இந்தியாவில் பனாரீஸ் யூனிவர்ஸிட்டி இருக்கிறது, லட்சுமணபுரி யூனிவர்ஸிட்டி இருக்கிறது. இருந்தாலும் மிகச் சிறப்புடன் விளங்குகிற இந்த அண்ணாமலை யூனிவர்ஸிட்டியை கண்ணும் கருத்துமாக பார்க்கவேண்டியது நம்முடைய கடமை. அதை ஸ்தாபித்த ராஜா ஸர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும். இந்த யூனிவர்ஸிட்டியை பாதுகாக்கவேண்டியது நம்முடைய எல்லோருடைய கடமையாகும். இவ்விதம் அவர்கள் அங்கு வந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் அவர்களில் சிலரிடத்தில் அனுமதி இல்லாத காரணத்தால் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. இதற்கு முன்னாலும் பல தடவை வெளியில் ரோடுகளில் படுத்துவிட்டு அடுத்த நாள் போகவேண்டிய நிலைமை அங்கு மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அன்றைய தினம் 250 மாணவர்கள் வந்திருக்கிறார்கள். வாட்ச்மேன் அனுமதிக்கவில்லை, உடனே வார்டன் அவர்கள் வீட்டுக்கு சென்றிருக்கிறார்கள். அங்கு அவர்கள் இல்லை என்று அறிந்த பிறகு அவர்கள் வைஸ்-சான்ஸிலர் இருக்கும் இடத்திற்கு போவதை தவிர வேறு எங்கே போவார்கள். ஒன்று வெளியே படுக்கவேண்டும் அல்லது வைஸ்-சான்ஸிலர் அனுமதியுடன் உள்ளே போகவேண்டும். இந்த நிலைமையில் மாணவர்கள் வைஸ்-சான்ஸ்ஸிலர் இருக்கும் விடுதிக்குச் சென்றிருக்கிறார்கள். அன்றையதினம் கனம் அமைச்சர் அவர்களும் வைஸ்-சான்ஸிலர் அவர்களுடைய விடுதியில் இருந்தார்கள். இவ்விதம் மாணவர்கள் வந்ததும் அமைச்சர் அவர்கள் வந்து பார்க்கவில்லை. வைஸ்-சான்ஸிலர் வந்து பார்த்திருக்கிறார். நான் வேண்டுமானால் திருச்சிக்கு போய்விடுகிறேன், ராஜிநாமா செய்துவிடுகிறேன், நான் சொன்னால் ரெஜிஸ்ட்ரார் கேட்க மாட்டார், நான் சொன்னால் வார்டன் கேட்கமாட்டார், நான் என்ன செய்ய முடியும் என்று கேட்டிருக்கிறார். வேறு வழியில்லாமல் மறுநாள் காலையில் வரும்படி சொன்னார்களாம். பின்னால் மாணவர்கள் வேறு வழியின்றி மீண்டும் வார்டன் வீட்டுக்கு மீண்டும் ஒரு முறை சென்றிருக்கிறார்கள்.

MR. SPEAKER: The hon. Member must remember that it is now 4 o'clock. 4. p.m.

SRI T. S. RAMASWAMY PILLAI: அவர்கள் பார்க்க செல்லும் பொழுது வாார்டன் வீட்டில் இல்லையாம். நிலைமை தடுமாறிவிட்டது.

ஆகவே மாணவர்கள் கல்லை எடுத்து எறிந்தார்கள். வார்டனுடைய மனைவி "நான் என்ன தவறு செய்தேன்" என்று கேட்டார்களாம். உடனே அவர்கள் திரும்பினார்களாம். "தன் கையே தனக்கு உதவி" என்பது போல, ஹாஸ்டலிலே கண்டதையெல்லாம் உடைத்துச் சென்றார்கள் என்று எனக்கு 30-ம் தேதி மாலை 6-மணிக்குத் தகவல் கிடைத்தது. 6-மணிக்குப் போகும்பொழுது துணை வேந்தருடைய விடுதிக்கு முன்னால் ரோட்டிலே 2,000 அல்லது 3,000 மாணவர்கள் நின்றார்கள்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : 600 மாணவர்கள்தான் இருக்கும்.

**Sri T. S. RAMASWAMY PILLAI** : எதற்காக நிற்கிறீர்கள் என்று கேட்டேன். நாங்கள் துணை வேந்தரிடம் முறையிடச் செல்லுகிறோம் என்று சொன்னார்கள். துணை வேந்தரிடம் முறையிட நீங்கள் அத்தனைபேரும் எதற்காகச் செல்லவேண்டும், உங்கள் பிரதிநிதிகளை அனுப்பினால் போதாதா என்று கேட்டேன். "பிரதிநிதிகள் போயிருக்கிறார்கள், அவர்கள் வருகைக்காக காத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள். "அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லலாமே" என்று சொன்னேன். நாங்கள் போட்ட கூட்டத்திலேகூட பேசமுடியாது என்று சொல்லிவிட்டு சென்னைக்கு போய் விட்டார்கள் என்று சொன்னார்கள்.

*இந்த சமயத்தில் கனம் சபாநாயகர் மணியை அடித்து, ஸ்ரீ வி. கே. ராமசுவாமி முதலியாரை கூப்பிட்டார்கள்.*

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் கூட்டணியின் சார்பாக இங்கேயுள்ள எல்லாக்கட்சிகளுக்கும் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்திருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளின் சார்பாகவும், எதிர் கட்சித் தலைவர் என்ற முறையிலும் அந்த விண்ணப்பத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கிறேன். ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : அசெம்பிளி விதி 217-வது விதியின் படி விண்ணப்பம் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் நிராகரிக்கப்படுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**Sri M. KALYANASUNDARAM** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் விவாதத்திலேயே மிகவும் முக்கியமான மானயக் கோரிக்கை கல்வி மான்யக் கோரிக்கையாகும். இன்னொரு விதத்திலும்கூட இது முக்கியமானதாகும். இந்தக் கோரிக்கையை விவாதிக்கிற நேரத்தில், இதிலே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் "ஏதோ தங்களுக்குக் கிடைக்கும்" என்று எதிர்பார்த்து ஆவலோடு ராஜ்யம் பூராவும் நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். பலர் அவர்களுடைய ஸ்தாபனங்களின் சார்பில் சென்னை வரையிலும் நடந்தும், சைக்கிளிலும், இன்னும் பல முறையிலும் வந்து, இங்கேயுள்ள பல கட்சிகளைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர்களையும், மற்றவர்களையும் கண்டு, தங்களுடைய குறைகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே என் போன்றவர்களால் எந்த விதமான அரசியலையும் பார்க்க முடியாது. ஏதோ கஷ்டப்படுகிறவர்கள் ஆறுதலைத் தேடி வருகிறார்கள். இதிலே அரசியல் காரணம் காண்பதை விட்டுவிட்டு, அவர்கள் சொல்லுவதிலே என்ன நியாயம் இருக்கிறது, எவ்வளவோ கஷ்டத்தை மேற்கொண்டு அவர்கள் நம்முடைய கல்விக்காக சேவை செய்து வருகிறார்களே, அவர்கள் மனமுடையாதபடி நல்ல வார்த்தைகளையாவது சொல்லி உற்சாகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் சண்டையை எல்லாம் நமக்குள்ளேயே, அரசியல் தலைவர்களுக்குள்ளேயும், கட்சிக்குள்ளேயும், மந்திரிகளோடும் வைத்துக்கொள்ளலாம். ஆசிரியர்களையும், ஊழியர்களையும், அரசியல் தகராறுக்கு இழுக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கோரிக்கைகளில் முக்கியமானது அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்பது. அது சம்பந்தப்பட்ட மட்டில் அமைச்சர் அவர்கள் இந்த மான்யக் கோரிக்கையில் என்ன உறுதி அளிக்கப்போகிறார்கள் என்பதைப்பற்றி நான் அதிகமாக எதிர்





பார்க்கவில்லை. வழக்கமாக கூறக்கூடிய பதில் தான் இதிலும் இருக்கும். ஆனால் மற்ற சௌகரியங்களையாவது கவனிக்கவேண்டும். ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தும் பிரச்னை வேறு, மற்ற இலாகாக்களில் வேலை பார்ப்பவர்களின் சம்பளத்தை உயர்த்தும் பிரச்னை வேறு. இதை தனித் தனியாக கவனிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கொடுத்தால் மற்றவர்களும் சம்பளம் கோருவார்களேயென்று பிரச்னையை ஒத்திப் போடக்கூடாது என்று வலியுறுத்துவதோடுகூட ஒரு கிரேடில் இருக்கக் கூடியவர்களுக்கு பல விகிதாசாரங்கள் இருப்பதை அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செகண்டரி கிரேடு டிரெயினட் உபாத்தியாயர்களுக்கு, ஆரம்பப் பள்ளிகளில் வேலை செய்கிறவர்களுக்கு அந்த கிரேடு கொடுக்கப் படவில்லை என்று குறை கூறுகிறார்கள். இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு உத்தரவு போடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்ன விவரம் என்று அறிய விரும்புகிறேன். ஹையர் எலிமெண்டரி கிரேடு உபாத்தியாயர்களுக்கு பஞ்சாயத்து போர்டிலுள்ளவர்களுக்கு ஒரு சம்பளம், கார்ப்பொரேஷனில் வேலை பார்க்கிறவர்களுக்கு ஒரு சம்பளம், முனிசிபாலிட்டியில் வேலை பார்க்கிறவர்களுக்கு ஒரு சம்பளம் என்று சம்பள விகிதம் இருக்கிறது. ஒரு கிரேடுக்கு ஒரு சம்பள விகிதம் ராஜ்யம் பூராவும் இருக்க வேண்டும். அந்தந்தப் பிரதேசத்திற்குத் தகுந்தவாறு தனி அலவன்ஸ் கொடுக்கலாம். ஒரு கிரேடு சம்பந்தப்பட்ட மட்டில் ஒரே சம்பளம் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அமல் நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்:

இந்த ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் தனி நபர்கள் நிர்வகிக்கக்கூடிய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு ஒழுங்காக போய்ச் சேரவில்லை என்ற புகார் இருந்துகொண்டு இருக்கிறது. ராஜ்யப் பிரிவினைக்கு முன்னர் ஒரு ஜில்லாவில் பரீட்சார்த்தமாக நேரிடையாக ஆசிரியர்களுக்கே சம்பளத்தைக் கொடுக்கலாம், அதற்கு ஏற்பாடு செய்யலாமென்று நடைபெற்று வந்தது. முடிவு என்ன என்பது தெரிவதற்குள்ளாக ராஜ்யப் பிரிவினை ஏற்பட்டது. மலபார் கேரளாவோடு சேர்ந்துவிட்டது. இப்பொழுது நம்முடைய ராஜ்யத்தில் இந்தப் பிரச்னை இருந்துகொண்டிருக்கிறது. சில ஆசிரியர்கள் சொல்லுகிற புகார் என்னவென்றால், பத்து ரூபாய்க்கு மேல்கூட பிடித்துக்கொண்டு தான் சம்பளம் கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இப்பேர்பட்டவர்களிடம் பள்ளிக்கூடங்களை விட்டுவைப்பது தவறு என்பது என்னுடைய அபிப்பிராயம். கொடுக்கும் சம்பளமானது நேரடியாக ஆசிரியர்களுக்குப் போய்ச் சேருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஆசிரியருக்கும் எத்தனை குழந்தைகள் இருக்கலாம் என்பது சம்பந்தமான சர்ச்சை இன்னும் தீர்ந்தபாடில்லை என்று நினைக்கிறேன். ஒரு ஆசிரியருக்கு 35 குழந்தைகள் இருக்கலாம்...... (சிரிப்பு)

**Sri P. G. KARUTHIRUMAN** : ஒரு ஆசிரியருக்கா 35 குழந்தைகள் : (பலத்த சிரிப்பு).

**The Hon. Sri C. SUBRAMANIAM** : மாணவர்கள் என்று சொல்லுங்கள்.

**Sri M. KALYANASUNDARAM** : ஆரம்ப ஆசிரியர்களிடம் படிக்கக்கூடியவர்கள் குழந்தைகள்தான். நான் ஆச்சரியப்பட மாட்டேன். உங்களுக்கு சக்தி இல்லை, ஆதலால் குடும்பக் கட்டுப்பாடு வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். குழந்தைகள் ஜாஸ்தி பெறுவதைப் பற்றி ஆச்சரியப்படவேண்டியதில்லை. குழந்தைகள் என்றால் அந்த ஒரு அர்த்தத்திலே மட்டும் பார்க்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். கருத்திருமன் அவர்களுக்கு வேண்டுமானால் அந்த சந்தேகம் இருக்கும். ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடாது. அளவைப் பற்றிக்கூட சந்தேகம் இருக்கிறது. 35-க்கு மேல் 69 வரையிலும் ஒரே ஆசிரியர் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமோ என்ற கவலை இருக்கிறது. 35-க்கு மேற்பட்டுவிட்டால் 36 ஆக இருந்தாலும்கூட இரண்டு

ஆசிரியர்கள் இருக்கவேண்டும். 70 ஆக இருந்தால் மூன்றாவது ஆசிரியர் நியமிக்கும் முறை இருக்குமானால், ஆசிரியர்களின் வேலைப்பளு குறையும், அவர்களுக்கு உற்சாகமும் ஏற்படுமென்று நினைக்கிறேன். அதிகப்படியான சம்பளத்தைக் கொடுத்துத்தான் அவர்களை இன்னும் உற்சாகப்படுத்த முடியுமென்றாலும், வேலைப்பளுவைக் குறைத்து அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அண்ணாமலை ஸர்வகலாசாலை நிகழ்ச்சிகளைப்பற்றி பேசுவதற்கு முன்னர், மாணவர்களிடத்தில் அரசியல் கட்சிகள் எப்படியிருக்க வேண்டுமென்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் அடிக்கடி வெளியிலேயும் பேசி வருகிறார்கள், சட்ட சபையிலும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு விஷயத்தை வரவேற்கிறேன். இதற்காக ஒரு ஆலோசனைக் குழுவை நியமித்து, அந்தக் குழுவில் இந்தப் பிரச்னைகளையெல்லாம் கலந்து ஆலோசிக்கலாமென்று அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய முடிவானது வரவேற்கத் தக்கது. அதிலே என் கட்சியின் சார்பில் எந்த அளவுக்கு ஒத்துழைப்பைக் கொடுக்கமுடியுமோ அதை நாங்கள் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். கல்வியின் தரத்தை உயர்த்துவது நமது பிரதான குறிக்கோளாக இருக்க வேண்டும். மாணவர்களின் குறிக்கோளும் கல்விதான். ஆகவே என் கட்சியின் சார்பில் ஒத்துழைப்பைக் கொடுக்க முடியுமென்பதை அறிவித்துக்கொண்டு, இன்னும் மற்ற பிரச்னைகளையும் அமைச்சர் அவர்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் ஆலோசிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கல்வியின் தரம் உயரவேண்டுமானால், மாணவர்களிடத்தில் வெறும் கட்சி அரசியல் இருக்கக்கூடாது என்பதை நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்ள முடியும். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, கட்சி அரசியல் இருக்கக் கூடாது. அவர்கள் கல்வி அறிவு பெறவேண்டும். நல்லறிவு பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு கல்வி கற்கவேண்டும் என்பது அரசியல் கட்சிகளின் குறிக்கோளாக இருக்கவேண்டும். அரசியல் கட்சிகளுக்கு இதற்கு அப்பாற்பட்ட குறிக்கோள் இருக்குமென்று நான் நினைக்கவில்லை. ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி—எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறலாம், ஆளும் கட்சி எதிர் கட்சியாக முடியும்—யார் அதிகாரத்தில் இருந்தபோதிலும், இந்த நாட்டை பரிபாலித்து, இந்த நாட்டின் பிரச்னைகளைக் கவனிப்பது, நம்முடைய ஆற்றல் மிகுந்த ஊழியர்களால்தான் முடியுமே தவிர, அரசியல் வாதிகள் மட்டும் ஆண்டு விடுவதாக நினைக்க முடியாது. நம்முடைய மாணவர்கள் நல்ல முறையில் கல்வி கற்கவேண்டுமென்ற குறிக்கோளோடு கல்லூரியில் படிக்க வேண்டுமென்பதில் அபிப்பிராய பேதம் இருக்கக்கூடாது. அவர்கள் தான் பிற்காலத்தில் பெரிய பெரிய விஞ்ஞானிகளாகவும் பெரிய பெரிய எஞ்சினியர்களாகவும் தோன்றவேண்டும். மாணவர்களிலிருந்து தான் பெரிய பெரிய அறிஞர்கள் தோன்றவேண்டும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதில் சிலர் அமைச்சர்களாக இருந்தாலும் கூட அவர்களும் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களே. ஆகையால் மாணவர்களிடத்தில் சென்று அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கல்லூரிகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று நாம் சொல்லும் போது, ஜாக்கிரதையாக உணர்ந்து தான் பேசவேண்டும். எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் இல்லாத ஒரு சூழ் நிலையில்தான் பொறுமையும் துவேஷமும்
4-10 p.m. ஏற்படுகின்றன. சில கட்சிகள் கல்லூரி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கு எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கல்லூரி அதிகாரிகள் மாணவர்களுக்கு உத்தரவு போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மாணவர்கள் " வாக்குவமில் " இல்லை. கல்லூரி அதிகாரிகள் உத்திரவு போட்டு ஒன்றும் தடுத்து விடமுடியாது. வெளியில் இருப்பவர்கள் இங்கு நடப்பதைப் பற்றி தெரிந்துகொள்வது இயல்பு.

பெரியவர்கள், கட்சித் தலைவர்கள் அவர்களை அணுகி பேசி, எந்த மாதிரி கட்டுப்பாடுவேண்டும் என்று ஒரு நல்ல முடிவு எடுத்தால், அப்பொழுது மாணவர்களைக் காப்பாற்றமுடியும். கட்சிகளின் மேல் உள்ள





வெறுப்பை வைத்துக்கொண்டு மாணவர்களிடம் துவேஷத்தை காட்டக் கூடாது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அத்தகைய கண்ணோட்டத்தோடுதான் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நாம் பார்க்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

அங்கு நடந்த நிகழ்ச்சிகளில் யார் செய்தது சரி, யார் செய்தது தவறு என்பது அபிப்பிராயபேதமுள்ள விஷயம். இரண்டு பக்கத்திலும் தவறு இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். இந்த யுனிவர்சிட்டிக்கு பொறுப்பான அதிகாரிகள் தந்திரமாக நடந்துகொண்டதாக சொல்ல முடியாது. அமைச்சர் அவர்கள் தங்கியிருந்த முதல் இரண்டு நாட்களிலும் மாணவர்கள் மிக அமைதியாக இருந்து, நிகழ்ச்சிகளில் உற்சாகத்தோடு கலந்து கொண்டிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். மாணவர்கள் கடைசி நாள் மட்டும் கலகம் செய்தாலும், மற்ற இரண்டு நாட்களிலும் ஒழுங்காக நடந்து கொண்டதாக அமைச்சர் அவர்களே அறிவித்தார்கள் என்று நான் அறிகிறேன். அன்று நான் இங்கு இல்லை. இரண்டு நாட்கள் அமைதியாக இருந்ததைப்பற்றி பாராட்டியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது இந்த நிகழ்ச்சிகளுக்கு யார் பொறுப்பாளி. மாணவர்களிடத்தில் ஒரு வியாதி பரவியிருக்கிறது என்ற கருத்தை அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றி சொல்லியும் வருகிறார்கள். நோயை அறிந்து அதற்குத் தகுந்தபடி மருந்து கொடுக்க வேண்டும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: (உட்கார்ந்துகொண்டு) அங்கு பொதுவாகவே வியாதி இருக்கிறது.

**Sri M. KALYANASUNDARAM**: அந்தப் பல்கலைக் கழகத்திலேயே வியாதி இருப்பதாகச் சொல்வதில் எனக்கு அபிப்பிராயபேதம் இல்லை. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். பல்கலைக் கழகத்திலேயே வியாதி இருக்கிறது என்று ஒப்புக்கொண்ட பிறகு மாணவர்களை மட்டும் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை. பல்கலைக் கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், எல்லோரும்—புரோ சான்ஸ்லரிடமிருந்து கடைசியாக இருக்கும் கேட் கீப்பர் வரை—இந்த நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பானவர்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: நல்ல வேளையாக " சான்ஸ்லரை " விட்டு விட்டீர்கள்.

**Sri M. KALYANASUNDARAM**: " சான்ஸ்லர் " நேரிடையாக நடவடிக்கைகள் எடுப்பதில்லை. ஆகையால் அவரை அவர் இடத்திலேயே விட்டு விடுகிறேன். "புரோ சான்ஸ்ஸலரிலிருந்து" கடைசி சிப்பந்தி வரை எல்லோரும் பொறுப்பாளிகள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

அந்தப் பல்கலைக் கழகத்தில் எந்த தனி அரசியல் கட்சிக்கும் பெரிய செல்வாக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஏதோ சில அரசியல் கட்சிகளில் ஈடுபட்டுள்ள மாணவர்கள் 10, 20 பேர் இருக்கலாம். அதனால் ஒன்றும் ஏற்படாது. இதற்கு வேறு காரணங்கள் இருக்க வேண்டும். இவ்வளவு மாணவர்கள் இருக்கக்கூடிய பல்கலைக்கழகத்தை ஒரு தொழிற்சாலையை மூடுவது போல் மூடப்படுவதற்கு, அப்படி என்ன பெரிய ரகளை ஏற்பட்டது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதாவது தகராறுகள் இருந்தாலும் பல்கலைக் கழகத்தை மூடியிருக்கக் கூடாது.

"புரோ சான்ஸ்லர்" தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் என்ற தயக்கம் இல்லாமல் அமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சிகளை பரிசீலனை செய்வார்களானால், நோயைப் புரிந்து கொள்ள முடியும், அதற்கான ஒரு பரிகாரத்தைத் தேட முடியும்.

“ அண்ணாமலை யூனிவர்சிடி ஆக்ட் ” ஐ திருத்த வேண்டும். இதைப் பற்றி பல முறை, 5 வருஷங்களாக நாங்கள் பேசி வந்திருக்கிறோம். இதைத் திருத்துவதற்காக முன்பு வாக்குறுதியும் அளிக்கப்பட்டது. இதைத் திருத்துவதற்கு அமைச்சரவை யோசித்துக் கொண்டிருக்கிறதோ என்னமோ எனக்குத் தெரியாது. “ப்ரோ சான்ஸ்லர்”க்கு “ஸ்தாபகர்” என்கிற முறையில் “ சான்ஸ்லரை ” விட அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சென்னை பல்கலைக் கழகத்திற்கு நிதி அமைச்சர் “ புரோ சான்ஸ்லர்,” அப்படியிருந்தும் பல்கலை கழகத்தின் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை, தலையிட முடியாது என்றும் சொல்லி விடுகிறார். ஆனால் அண்ணாமலை பல்கலைக் கழகத்தின் “ புரோ சான்ஸ்லர்” அதனுடைய தினசரி நிர்வாக வேலைகளில் தலையிடுகிறார். அதற்கான அதிகாரம் அவருக்கு இருக்கிறது. அதை அவர் சொந்த எஸ்டேட்டாகவே கருதுகிறார். சில அங்கத்தினர்கள் அண்ணாமலை செட்டியாரைப் பாராட்டினார்கள். அவரைப் பாராட்ட வேண்டியது தான். ஆனால் இந்தப் பல்கலைக் கழகத்திற்கு சர்க்கார் 25 லட்சம் ரூபாய் மான்யம் கொடுத்திருக்கிறார்கள். பொது மக்கள் 10 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இவைகளைப் பார்க்கும்போது அவர் கொடுத்த தொகை குறைவாகவே இருக்கும். இருந்தாலும், இந்த நற்பணிக்கு முன்னின்று இதை ஸ்தாபித்ததற்காக அவருடைய ஞாபகார்த்தமாக அந்த பல்கலைக் கழகத்திற்கு அவருடைய பெயர் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் இதை அவர்கள் சொந்த எஸ்டேட் போன்று கருதக்கூடாது.

**MR. SPEAKER :** கனம் அங்கத்தினர் பேச ஆரம்பித்து 15 நிமிஷங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

**SRI M. KALYANASUNDARAM :** இந்தக் கருத்தை சொல்லி முடித்துவிடுகிறேன்.

நண்பர் ராமசாமி பிள்ளைகூட இந்த பல்கலைக் கழகத்தைப்பற்றி பெருமையாக சொன்னார்கள். அதைப் பற்றி பெருமைப்படுவதில் ஒன்றும் தவறு இல்லை. இருந்தபோதிலும், முதலில் இந்த சட்டத்தைத் திருத்த வேண்டும். “ புரோ சான்ஸல”ருக்கும் பல்கலைக் கழகத்திற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்ற நிலைமையை உண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான் யூனிவர்சிடியும் உருப்படும். மாணவர்களும் உருப்படுவார்கள். காலம் போதாத காரணத்தினால் இதோடு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **THE HON. SRI C. SUBRAMANIAM :** சபாநாயகர் அவர்களே, கல்வித் துறையிலே நடைபெற்று வரக்கூடிய பல்வேறு விஷயங்களைப் பற்றியும் இங்கு விவாதம் நடந்தது. 12 கோடி ரூபாய் இந்த இலாகாவிற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி பலபேர் பாராட்டி பேசினார்கள். ஒரு சிலர் இந்த 12 கோடி ரூபாய்க்கு உள்ள பலன் நமக்கு கிடைக்கின்றதா என்பதைப் பற்றி சந்தேகப்பட்டார்கள். என்னைப் பொறுத்த வரை 12 கோடி ரூபாய்க்கு உரிய பலன் வருகிறது என்பதைப் பற்றி சந்தேகம் இல்லை. ஆனால் இப்போது நடக்கக்கூடிய விஷயங்கள் எல்லாம் நம் எல்லோருக்கும் திருப்தி அளிக்கக்கூடிய முறையில் நடக்கிறது என்று நான் சொல்வதற்கு இல்லை. கனவு உலகத்தில் இருந்தால் தான் நான் அப்படிச் சொல்ல முடியும். ஆனால் ஒன்று மட்டும் நான் உறுதியாகச் சொல்ல முடியும். அந்த நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு தீவிரமான, உறுதியான முயற்சி நடைபெற்று வருகின்றது என்பதை மட்டும் நான் சொல்ல முடியும். அதுவும் 4, 5 வருஷங்களாக அந்த முயற்சி சட்ட சபையில் இருக்கக்கூடிய எல்லா கட்சியைச் சேர்ந்தவர்களின் ஒத்துழைப்புடனேயே நடந்து வருகிறது. அப்படி நடந்து வருகின்ற முயற்சியின் காரணத்தினால், அந்த முயற்சிக்கு ஓரளவு நல்ல பலனும் ஏற்பட்டு வருகின்றது என்பதை தைரியமாக சொல்லமுடியும்.

கல்வியைப் பொறுத்த வரையிலும், அரசியல் கட்சிகளின் பல்வேறு அபிப்பிராயங்களை சொல்லக்கூடிய ஒரு திட்டமாக இல்லாமல், ஒன்றுபட்ட அபிப்பிராயத்துடன்—இந்த சபையில் தெரிவிப்பது மட்டும் அல்ல





வெளியிலேயும் கூட ஒன்றுபட்ட அபிப்பிராயத்துடன்—ஒத்துழைக்க வேண்டும், எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெற வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதுவும் ஓரளவு பலன் பெற்று இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் நம்மையும் மீறி முடிவான விஷயங்களிலும் விவாதத்திற்கு உரியதாக மீண்டும் அதைக்கொண்டு வந்திருந்தாலும்கூட கடைசியில் நாம் ஒப்புக்கொண்ட திட்டம் என்று உணர்ந்து அந்த அளவுக்கு ஒத்துழைக்க முன் வருவதை நான் பாராட்டுகிறேன். (4-20 p.m.) இந்த நான்கு அல்லது ஐந்து வருஷங்களிலே நம் ராஜ்யத்திலே ஏற்பட்டிருக்கும் முன்னேற்றம் நாம் உருவாக்கி இருக்கக்கூடிய திட்டங்களினால்தான். அகில இந்தியாவிலும் நம் திட்ட அடிப்படையில் மற்றவர்களும் தங்களுடைய திட்டங்களை வகுக்கவேண்டும் என்ற எண்ணம் பரவி வருகிறது. அதற்கு என் முயற்சியோ அல்லது இலாகாவிலுள்ள அதிகாரிகளின் முயற்சியோ காரணம் என்று சொல்லமுடியாது. இதற்கு முக்கிய காரணம் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைத்து திட்டத்தை உருவாக்கியதுதான். அதனால்தான் பல்வேறு விஷயங்களைப்பற்றியும் சர்ச்சைகள் இருந்தாலும் நமது திட்டம் நல்லதாக கருதப்படுகிறது. குறைகள் இருக்கலாம். குறைகளை எடுத்துச் சொல்லலாம், அப்படி சொல்லுவது மிக அவசியம். ஏனெனில் குறைகளை தெரிந்து கொள்ளாமல் அவைகளை போக்கமுடியாது. குறைகளை போக்குவதில் எந்த விதமான அபிப்பிராய பேதமும் இடையாது. கட்சி பாகுபாடுகள் இல்லாமல் முயற்சி எடுக்கவேண்டும் என்பது அவசியம். இதற்கு என்னசெய்வது என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டும். இதற்காகத்தான் சென்ற கூட்டத்திலேயே நான் இங்கு என் கருத்தை வெளியிட்டேன். இங்குள்ள எல்லா கட்சித் தலைவர்களையும், மேல் சபையில் இருக்கக்கூடிய சில தலைவர்களையும் கொண்டு ஒரு ஆலோசனை குழு ஏற்படுத்தி கல்வித் திட்டங்களில் ஏற்படும் எல்லா பிரச்னைகளையும் அந்த குழுவே ஆராய்ந்து தக்க முறையிலே கருத்து வேறுபாடு இல்லாமல் முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னேன். அந்த முறையிலே முயற்சி செய்தால்தான் இன்னும் நல்ல பலன் கிடைக்கும் என்ற கருத்தை தெரிவித்தேன். அந்தக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் குழுவின் முதல் கூட்டம் நாளை 11-ந்தேதி காலை 8-30-க்கு கூடுவதாக இருக்கிறது. எல்லாத் தலைவர்களும் கலந்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். சில அங்கத்தினர்கள் ஆச்சரியப்படுபவர்கள் போல் தெரிகிறது. இப்பொழுதுதான் நேரம் குறிப்பிடப்பட்டது, தேதியும் குறிப்பிடப்பட்டது. அதை இங்கே சொல்கிறேன்.

முதலிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது ஆரம்பக் கல்வி. ஆரம்பக் கல்விபற்றி நம் முடிவான கருத்துகளை திட்ட ரூபமாக வெளியிட்டு இருக்கிறேன். இது மட்டுமல்ல. இந்த சபையிலேயும் மேல் சபையிலேயும் அது விவாதிக்கப்பட்டது. ஏகமானதாக ஒத்துக்கொள்ளப்பட்டது. இந்த அடிப்படையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. திட்டத்திற்கு மாருக ஏதாவது நடைபெற்ருல் அதை உடனடியாக என் கவனத்திற்கோ அல்லது இலாகாவின் கவனத்திற்கோ கொண்டு வந்தால் வேண்டிய பரிகாரம் செய்வது சாத்தியமாகும். நடவடிக்கைகள் அந்த அடிப்படையில் இருக்கலாம். ஆனால் நடைபெறுவது அதே முறையிலே இருக்கிறதா என்பது கவனிக்கப்படவேண்டும். குறைகள் இருக்கலாம். இருபது ஆயிரம் ஆரம்பப்பள்ளிகளிலே நாம் நினைத்தப்படியே எல்லாக் காரியங்களும் நடைபெறுகின்றன என்று சொல்லமுடியாது. ஆரம்பக் கல்வி நிர்வாகம் யார் கையில் இருந்தாலும் நல்ல முறையிலே நடக்கவேண்டும் என்பதைப் பற்றி சந்தேகமில்லை. இப்பொழுது ஸ்தலஸ்தாபனங்களை ஆராய்வதற்காக இந்த சட்டசபை குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆராய்ந்து வருகிறது. அந்தக் குழு தாற்காலிகமாக சில முடிவுகளுக்கு வந்திருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் என்று ஏற்படுத்தும்போது யூனியன் கையிலேயே இந்த ஆரம்பக்கல்வி முழுவதும் இருக்கவேண்டும் என்பது ஒன்று. தனிப்பட்டவர்கள் பள்ளி நிர்வாகிகளாக இருந்தாலும் அவர்கள் பெற வேண்டிய தொகையை இந்த பஞ்சாயத்து யூனியன் மூலமாகவே பெறவேண்டும். ஆகவே தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன் சபை இதற்கு பொறுப்பாக இருந்து நிர்வகிக்கவேண்டும் என்ற தாற்காலிகமான முடிவுக்கு வந்திருக்கிறோம். இப்பொழுது இருக்கக்கூடிய பள்ளிகளை

[Sri C. Subramaniam] [8th April 1958

நல்ல முறையிலே நடத்துவது மட்டும் அல்ல, கல்வி பெருவதற்கு வேண்டிய வசதிகளே செய்யவும் இது மிகவும் உதவியாக இருக்கும் என்றே நம்புகிறேன். அதற்கேற்ற முடிவை எடுத்திருக்கிறோம். ஆனால் ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் இந்த பஞ்சாயத்து யூனியனே நேரிடையாக நிர்வகிக்க வேண்டுமா என்பதைப் பற்றி முடிவு இன்னும் ஏற்படவில்லே. இந்த விஷயம் விவாதத்தில் இருக்கிறது. இதில் கொஞ்சம் கருத்து வேறுபாடு இருக்கிறது. பஞ்சாயத்து யூனியனே நேரிடையாக பார்க்கவேண்டும் என்று சிலர் சொல்லுகிறுர்கள். ஒரு சிலர் இதற்கு பதிலாக பொறுப்பு பஞ்சாயத்து யூனியனுக்கும் அந்தந்த பள்ளிகளே அந்தந்த பஞ்சாயத்துக்களே நிர்வகிக்க வேண்டுமென்றும் கருத்து வேறுபாடு இருக்கிறது. இதிலும் கூட கருத்து ஒற்றுமை ஏற்பட்டு ஏகோபித்த முடிவு வரும் என்று எதிர்ப்பார்க்கிறேன். இப்பொழுது இருக்கும் பள்ளிக்கூடங்கள் நல்ல முறையிலே நிர்வகிக்கப்பட வேண்டும், அதற்கு எல்லா சௌகரியங்களேயும் செய்து கொடுக்கவேண்டும் என்பது நமது திட்டம். அத்துடன், ஒவ்வொரு பகுதியிலும் திட்டமிட்டு 100-க்கு 90 பிள்ளேகளே ஒண்ணுவது முதல் மூன்ருவது வரை 1965-க்குள்ளே பள்ளிக்குப் போய் தொடர்ந்து இருந்து கல்வி பெரும் நிலேமையை ஏற்படுத்த வேண்டும். கனம் ராமசாமி சொன்னது போல், ஒரு வருஷம், இரண்டு வருஷம் படித்து பள்ளியை விட்டு விட்டுப் போகும் நிலேமை ஏற்படாமல் செய்யவேண்டும். அந்த முறையிலே திட்டப்படி அமுல் நடத்துவதற்கு நிர்வாக அமைப்பு சாதகமாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே, அந்த முறையை அடுத்த வருஷத்திலிருந்து ஒவ்வொரு பகுதியிலும் அமலுக்கு கொண்டு வரும் நிலேமை ஏற்படும். இரு ஆரம்பக் கல்வி பொறுத்த வரையில் ஒன்று முதல் மூன்று வகுப்பு வரை சேர வேண்டிய எல்லாக் குழந்தைகளும் படிக்க அவ்வளவு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றனவா, அதிக தூரம் குழந்தைகள் நடக்காமல் பள்ளிக்கு போய் படிக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். ஒரு குழந்தை ஒரு மைலுக்கு மேல் நடக்கக்கூடாது என்ற ஒரு முடிவைச் செய்திருக்கிறோம். அதற்காக இரண்டு பர்லாங் தூரமானலும் ஒரு பள்ளி இருக்கவேண்டும் என்று யாரோ சொன்னர்கள், அம்மாதிரி வைத்து விடலாம். ஆனல் அதிலிருக்கும் கஷ்டம் பள்ளிக்கூடங்கள் ஓராசிரியர் பள்ளிக்கூடங்களாக இருக்கும். அம்மாதிரி ஆகுமேயானல் ஓராசியர்கள் திறம்பட பணியாற்ற முடியாது. குறைந்தது இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களாவது இருந்தால்தான் நல்ல பணியாற்ற முடியும் என்ற கருத்து உறுதியாக இருக்கிறது. ஆகையால்தான் இரண்டு பர்லாங்குக்கு ஒன்ரே, அல்லது வீதிக்கு வீதியோ, ஒரு கிராமத்தில் ஒரு தெருவில் இரண்டு மூலேகளுக்கும் பள்ளிகளோ வைப்பதென்பது சாத்தியமில்லே. ஆகவே நல்ல முறையிலே பணியாற்ற எந்த அளவுக்கு பள்ளிக்கூடங்கள் தேவையோ அந்த முறையிலே பிள்ளேகள் ஒரு மைலுக்கு மேல் நடக்காதவாறு திட்டமிட்டு வேலே செய்யவேண்டும். அந்த முறையிலே 1965-ம் வருஷத்திற்குள்ளாக ஏறக்குறைய எல்லா குழந்தைகளுக்கும் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரை கட்டாயமாக படிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அடுத்த ஐந்தாண்டு திட்டத்திற்குள்ளாக ஏழாவது வரையிலும் எல்லா குழைந்தைகளும் படிக்க வேண்டும் என்ற ஏற்பாடு செய்யவேண்டும். அதைப்பற்றியும் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். இதிலிருந்து உயர்நிலேப்பள்ளிகளுக்கு செல்லும் போது ஐந்து மைலுக்கு மேல் நடக்காத முறையிலே அமைக்கவேண்டும். ஐந்து மைலாக மட்டும் இருந்தால் வண்டி, பஸ், அல்லது சைக்கிள் வசதியை கொண்டு பள்ளிக்கு செல்ல சாத்தியமாகும். எந்த கிராமத்திலிருந்தும் ஐந்து மைலுக்குள்ளாக இந்த பள்ளிகள் இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். இந்த நிலேயில்தான் கல்வி விஸ்தரிப்பு திட்டம் அமுல் படுவதற்கு எடுத்திருக்கும் முயற்சி அதே சமயத்தில் கல்வி தரமும் உயர வேண்டும் என்பதைப்பற்றி அக்கரை கொண்டு என்ன செய்யவேண்டுமென்று ஆராய்ந்து சொல்லியிருக்கிறோம். இதிலே இந்த ஆரம்ப படிப்பு எந்த அடிப்படையிலே இருக்கவேண்டும் என்பது பிரச்னே. இதற்கு முன்பு பல்வேறு அபிப்பிராயங்கள் இருந்தாலும் இப்பொழுது ஆதாரக்கல்வி முறையே ஆரம்பப்படிப்புக்கு ஏற்றது என்பதில் அபிப்பிராய பேதம் இடையாது.



8th April 1958] [Sri C. Subramaniam]

4-30 p.m.

அதற்குப் பிறகு ஏழாவது வகுப்பு, அதற்கு அப்பாற்பட்ட வகுப்பு இவைகளுக்கும் அமைக்க வேண்டுமா என்பதைப் பற்றி கருத்துவேறு பாடுகள் இருந்தாலும் ஆதாரப்படிப்பு ஆரம்பப்பள்ளிகளில் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லோரும் ஏகோபித்த அபிப்பிராயம் கொண்டிருக்கிறுர்கள். ஒரு சில மேதைகள் வேண்டுமென்ருல் அதில் இன்னும் சந்தேகம் தெரிவிக்ககூடிய நிலேயில் இருக்கலாம். அவர்கள் கூட சந்தேகம்தான் தெரிவிக்கிறுர்களேயொழிய இது கூடாது என்று சொல்ல வில்லே. இந்த நிலேமையில் அவர்கள் ஒதுங்கி இருக்கிறுர்களேயொழிய அவர்கள் நந்தியாக இல்லே என்பதை கனம் வேதரத்னம் பிள்ளே அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது எல்லா பள்ளிக்கூடங்களேயும் ஆதாரப் பள்ளிக்கூடங்களாக உடனடியாக செய்துவிட முடியுமா என்று பார்த்தால் முடியாது என்கிற ஒரு முடிவுக்கு நாம் வந்திருக்கிறோம். ஒரு திட்டம் போட்டு வருஷத்திற்கு இத்தனே ஆதாரப் பள்ளிகளாக மாற்றி அமைக்கவேண்டும் என்பதைப் பற்றி ஆதாரக் கல்வி நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு அவர்களுடைய ஆலோசனேகளின் அடிப்படையில் எல்லாவிதமான மாறுதல்களேயும் செய்வதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் எல்லாவற்றையுமே ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளாக மாற்றவேண்டும். அதையும் 1961–62-க்குள்ளாக அப்படி அமைக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு முககால் வாசிக்கு மேற்பட்ட ஆதாரப் பயிற்சி பள்ளிகளாக மாற்றப்பட்டுவிட்டது. அதாவது 130-ல் 40–41 பாக்கி இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று வருடங்களில் அவைகள் எல்லாம் ஆதாரப்பயிற்சிப்பள்ளிகளாக மாற்றப் பட்டுவிடும். வருஷம் ஒன்றுக்கு அப்படி ஆயிரம் அல்லது ஆயிரத்தி ஐந்நூறு பள்ளிகளுக்கு மேல் மாற்றமுடியாது. அப்படி ஆதாரப்பள்ளி களாக மாற்ருவிட்டாலும் கூட ஆதாரப் பள்ளிகளில் இருக்கும் சில அம்சங்களே உடனடியாக எல்லா பள்ளிகளிலும் இருக்கும்படியாக ஏற்பாடு செய்ய முடியும் என்பதையும் சிபார்சு செய்திருக்கிறுர்கள். ஆகையினல் சுத்தமாக இருக்க பழக்கிக்கொடுப்பதற்கும், சிறு சிறு குழுக்களே நியமித்து அந்த அடிப்படையில் பள்ளிக்கூடங்களே நடத்துவதற்கும், அந்தந்த ஊர் களில் இருக்கக்கூடிய வெவ்வேறு நடவடிக்கைகளில் ஓரளவு பங்கு எடுத்துக் கொள்வது இது போன்று இருக்கக்கூடிய சில அம்சங்களே இப்பொழுது இருக்கக்கூடிய எல்லா பள்ளிக்கூடங்களிலும் அவைகளே புகுத்தப்பட முடியும். அந்த அடிப்படையில் செய்வதற்குத்தான் ஏற்பாடு செய்து திட்டமிட்டுக்கொண்டிருக்கிறோம். தொழில் மூலமாக படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கும் அதற்கு அடிப்படையான கருத்துக்களே வருஷம் ஒன்றுக்கு சுமார் ஆயிரம் அல்லது ஆயிரத்தி ஐந்நூறு பள்ளிகளுக்கு விஸ்தரிக்கவேண்டும் என்கிற ஒரு நிலேமையை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். அந்த முறையிலும் இந்தக் காரியங்களேச் செய்துகொள்ள வேண்டும் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

இதில் பல அங்கத்தினர்கள் ஆசிரியர்களுடைய குறைகளேப் பற்றியும் அவர்களுக்கு நாங்கள் செய்து கொடுத்திருக்கக்கூடிய சௌகர்யங்களேப் பற்றியும் ரொம்பவும் அக்கரை காட்டிப் பேசினர்கள். அதற்கு அவர் களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிக்கூடத்தின் தரமும், கல்வியின் உயர்வும் ஆசிரியர்களுடைய தரத் தையும் உயர்வையும் பொறுத்திருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கையும் பொறுத்திருக்கிறது. அதை எனக்கு உணர்த்துவதற்கோ அல்லது சர்க்கா ரில் இருக்கும் சர்க்கார் அதிகாரிகளுக்கு உணர்த்துவதற்கோ அதையே வற்புறுத்தி திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இங்கே இருக்கும் தலேர்வகளாக இருந்தாலும் சரி, அல்லது ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களுடைய குழுவாக இருந்தாலும் சரி, ஆசிரியர்களிடம் அக்கரை கொண்டிருக்கும் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு இருக்கக் கூடிய குறைகளேச் சொல்வதற்கு கிளர்ச்சிகளோ, ஊர்வலங்களே நடத்துவ தோ, அல்லது கோஷங்களேக் கிளப்புவதோ, எந்த விதத்திலும் அவசியம் இல்லே என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி வற் புறுத்துவதால் தான் எனக்கு அந்தக் குறைகள் தெரிய வரும் என்பது அல்ல. அந்தக் குறைகள் தெரியவருவது மட்டும் அல்ல, அந்தக் குறை கள் தெரிந்தாலும் கூட அவைகளே நீக்குவதற்கு அந்தக் காலத்தில்

நான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை என்று அவர்கள் நினைத்தால் இந்த மூன்று நான்கு வருஷ நிகழ்ச்சிகளை மறந்து விட்டுத்தான் அவ்வாறு நினைக்க வேண்டும் என்று தாழ்மையுடன் நான் இந்த சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் கேட்டாலும் சரி கேட்காவிட்டாலும் சரி அவர்கள் கேட்காத குறைகளை கூட அவசியம் ஏற்பட்டபோது அவைகளை நிறைவேற்றிக்கொடுக்கக்கூடிய வசதி ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வசதி ஏற்பட்டதோடு மட்டும் அல்ல, சில இனங்களில் செலவைக் குறைத்துக்கொண்டும் அதற்கு பணத்தை ஒதுக்கிவைத்து செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி சில இனங்களில் நிதியை ஒதுக்கிவைத்து ஓரளவு செய்யப்பட்டும் இருக்கிறது. அவ்வாறு செய்து முடிக்கிற காலத்தில் ஆசிரியர்களுக்கு ஒரு வசதி இல்லாவிட்டாலும் இன்னொரு வசதியை அவர்களுக்கு ஒவ்வொரு தடவையும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது ஒவ்வொரு பட்ஜெட்டைப் பார்த்தாலும் தெரியவரும். ஒரு வசதி இல்லாவிட்டாலும் இன்னொரு வசதியைச் செய்து கொண்டே வந்திருக்கிறோம் என்பது இங்கே நடந்திருக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தால் தெரியும். ஏதோ நிதி மந்திரியே கல்வி மந்திரியாகவும் இருக்கிறார் அதனால் ஒருக்கால் அவருக்கு கல் மனதாக இருக்குமோ என்று கூட நினைத்து அதனால் அவர்களுக்கு குறைகளை தெரிவிக்க வேண்டுமானால் கூட்டம் போட்டுச் சொல்ல வேண்டுமோ, அல்லது ஊர்வலங்களை நடத்திச் செல்ல வேண்டுமோ, அல்லது கோஷம் போட்டுச் சொல்ல வேண்டுமோ, அல்லது எதிர்க் கட்சிக்காரர்களைக் கொண்டு சொல்லச் சொன்னால் ஒருக்கால் அவருக்குத் தெரியவருமோ என்று நினைத்துக்கொண்டிருப்பதற்கு அவசியமே இல்லை என்பதை ஆசிரியர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு அவசியமே இல்லை என்பதையும் வற்புறுத்தி சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கே தெரியாத குறைகளை வேண்டுமானாலும் அவர்களுக்குத் தெரியும் அளவில் அவர்களுடைய குறைகள் என்ன என்பதையும் என்னால் பட்டியல் போட்டுக் கொடுக்க முடியும். அது அல்ல இப்பொழுது நம் முன்னால் இருக்கும் பிரச்னை. இப்பொழுது இருக்கும் வசதியை வைத்துக்கொண்டு எப்படிச் செய்வது, நிதி மந்திரியாக இருக்கும் காரணத்தால், எனக்கு இதற்கு ஆர்வம் இருக்கிறது, கல்வி மந்திரி என்ற முறையில் நிதி மந்திரியினிடத்தில் சென்று வற்புறுத்தி, நிதி ஒதுக்கிக்கொள்ள வேண்டிய நிலைமை இல்லாத காரணத்தால், நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இதற்கு கிளர்ச்சிகள், செய்தும், வேறு எந்த விதமான நடவடிக்கைகளும் அவசியம் இல்லை என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறைகள் இருக்கின்றன என்பது வாஸ்தவம். அந்தக் குறைகளை எந்த விதத்தில் சொல்லிக்கொள்வது என்பதைப் பார்க்க வேண்டும். சில சமயங்களில் குறைகளைச் சொல்லிக்கொண்டால் அவர்களுக்கு ஆறுதல் ஏற்படுவதும் உண்டு. அந்தக் கருத்தில் சொல்லிக்கொள்ளலாம். அதற்கு ஒரு உதாரணம் கூட சொல்லலாம். ஒருவருக்கு துக்கம் வருகிறது. நமக்கு துக்கம் இருக்கும்போது அதைப் பற்றி வெளியில் சொல்லிக்கொண்டு ஆறுதல் தேடுவது போன்று சொல்லிக்கொள்ளலாமே தவிர வேறு விதத்தில் சொல்லிக்கொள்ளவது சரியல்ல. ஆறுதல் அடையும் முறையில் சொல்லிக்கொள்வதில் எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் என்னுடைய மனதை மாற்றுவதற்கு இங்கே அவர்களுடைய குறைகளை உணர்த்துவதற்கு இதைச் செய்கிறார்கள் என்றால் அதை ஆட்சேபித்துதான் ஆக வேண்டும். இதற்கு அவசியம் இல்லை. அத்துடன் இன்றைக்கு நான் மற்ற பகுதிகளுக்குப் போகும்முன்பு, ஆரம்ப ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய சில குறைகளைப் பற்றி பலர் எடுத்துச்சொன்னார்கள், சமீப காலத்தில் கூட அதைப் பற்றி ஒரு உத்தரவு போட்டும் கூட தப்பு அர்த்தங்கள் இருப்பதாகத் தெரிகிறது. செகண்டரி க்ரேட் பாஸ் செய்த உபாத்தியாயர்களுக்கு 45—2—85 என்கிற விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கக்கூடிய நிலைமையில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் ஆரம்ப பள்ளிகளில் வேலை செய்கிற செகண்டரி க்ரேட் உபாத்தியாயர்களுக்கு இது இல்லை என்கிற ஒரு உத்தரவு மத்தியில் வந்தது. அதை ஒப்புக்கொள்ளுகிறேன்.





அப்படி ஒரு கேள்வி கேட்டதற்குக் கூட அதற்கு காரணம் சொன்னேன். அதைப்பற்றி திரும்ப சொல்ல வேண்டியதில்லை. அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்கு வந்தவுடன் அதைப் பரிசீலனை செய்து அம்மாதிரி போட்ட உத்தரவு தவறு என்று கருதி செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் எந்தப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்து கொண்டிருந்தாலும் இந்த சம்பள விகிதத்தையே கொடுத்தாக வேண்டும் என்கிற ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறோம். ஆனால் ஒரு கட்டுப்பாடு மட்டும் செய்திருக்கிறோம். ஏனென்றால் செகண்டரி க்ரேட் உபாத்தியாயர்கள் எல்லோருமே ஒன்று முதல் ஐந்தாவது வகுப்பு வரையில் இன்றைக்கு சர்க்கார் பணம் கொடுக்கின்ற காரணத்தால், அவர்களை நியமிக்க ஏற்பாடு செய்தால் இன்றைக்கு ஹையர் கிரேட் பயிற்சி பெறுகிறவர்களுக்கே அங்கே வேலை செய்ய இடம் இல்லாமல் போய் விடும் என்றும் மேல் வகுப்புகளுக்கு வேண்டிய செகண்டரி க்ரேட் ஆசிரியர்கள் இல்லாமலும் போய் விடும் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாட்டையும் அமைத்து இருக்கிறோம். இரண்டு தாம் உள்ள உபாத்தியாயர்களுக்கும் இட வசதி கொடுத்து வருகிறோம். அதனால்தான் இருதரத்திற்கு வேலை கொடுத்தாக வேண்டும் என்ற காரணத்தால் இதைச் செய்திருக்கிறோம். ஆரம்ப பள்ளிகளில் செகண்டரி க்ரேட் ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமானால் சர்க்காருடைய அனுமதி பெற்று நியமிக்கலாம் என்று ஒரு வித கட்டுப்பாட்டையும் விதித்திருக்கிறோம். சிறு வகுப்புகளிலேயே செகண்டரி க்ரேட் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருந்தால் மேல் வகுப்புகளுக்கு அவர்கள் இல்லாமல் போய் விடும் என்ற காரணத்தால் இந்தக் கட்டுப்பாட்டை வைத்திருக்கிறோம். இரண்டு தர உபாத்தியாயர்களுக்கும் வேலை செய்ய இடம் இல்லாமல் போய் விடும் என்ற நிலைமை ஏற்படக்கூடாது என்று இதை வைத்திருக்கிறோம். அதனால் 1-4-1958 வரைக்கும் எந்த உபாத்தியாயராவது எந்தப் பள்ளியிலாவது வேலை செய்து வந்தால் முன்பு அறிவித்தது போலவே 45 ரூபாய் விதிதத்தில் அவர்களுக்கு சம்பளத்தைக் கொடுத்துவிட் வேண்டும். அதற்கு எந்த விதமான கட்டுப்பாடும் இருக்கக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறோம். 1—4—1958-க்கு மேல் சர்க்காருடைய அனுமதி பெற்றுத்தான் கீழ் ஆரம்பப்பள்ளிகளில் செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களை நியமிக்க வேண்டுமென்று கட்டுப்பாட்டை வைத்துக்கொண்டு 1—4—1958 வரையில் அந்தப் பள்ளியில் யாராவது வேலை செய்துவந்தால் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சம்பள விகிதத்தைக் கொடுத்துவிட வேண்டும் என்றும் உத்தரவு போட்டிருக்கிறோம். அதனால் யாருக்கும் எந்த விதமான பாதகமும் ஏற்படப் போவதில்லை. அதைப் பற்றி சந்தேகப்படவேண்டியதில்லை என்பதை இங்கே விளக்க விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக எத்தனை மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்கிற வாதம் இங்கே எழுப்பப்பட்டது. அதைப்பற்றியும் சமீபத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டு அதைப்பற்றி பத்திரிகைகளிலும் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. 40 மாணவர்கள் என்று சொல்லும்போது 40 மாணவர்கள் இந்த அட்டெண்டன்ஸில் இருக்கக்கூடியவர்கள், "ஸ்டுடெண்ட்ஸ் ஆன் ரோல்ஸ்" என்று சொல்லுவார்கள், அதாவது அட்டவணையில் இருக்கக் கூடியவர்கள், மாணவர்கள் 40 ஆக இருக்க வேண்டும். அப்படி 40 என்று இருக்கும்போது பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடியவர்கள் 30-லிருந்து 35 வரையில்தான் இருக்கும். 35 மாணவர்கள் அட்டெண்ஸில் இருந்தால் அதற்கு ஒரு ஆசிரியர் என்கிற ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். இது புதிதான முடிவு அல்ல. பல வருஷங்களாகவே எய்டட் ஸ்கூல், லோகல் போர்ட் ஸ்கூல், கவர்ன்மெண்ட் ஸ்கூல், முதலியவைகளில் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற அடிப்படையில்தான் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருக்கிறோம். அதே விகிதத்தில்தான் இப்பொழுது உத்தரவு பெற்ற தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய பள்ளிக்கூடங்களுக்கும் விஸ்தரித்திருக்கிறோம். இதிலும் ஏதோ ஒரு சந்தேகம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதாவது ஒன்று முதல் 35 வரைக்கும் ஒரு ஆசிரியர் என்று சொன்னால் 35 முதற்கொண்டு 70 வரையில் மாணவர்கள் இருந்தால் என்ன செய்வது என்ற சந்தேகத்தைக் கிளப்பினார்கள். மாணவர்களின் தொகை 70 ஆனதற்குப் பிறகுதான் இரண்டாவது ஆசிரியரை போட்டுக்

[Sri C. Subramaniam] [8th April 1958

கொள்ளவேண்டும் என்கிற முறையில் சில அதிகாரிகள் உத்தரவு போட்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதிலும் சில சந்தேகங்கள் இருந்திருக்கிறது. அந்த சந்தேகத்தையும் நிவர்த்திக்கப்போகிறோம்.
4-40 p.m. ஒன்றிலிருந்து 35 மாணவர்கள் வரை ஒரு ஆசிரியர். மாணவர்களின் எண்ணிக்கை 35-லிருந்து 36-க்குப் போக ஆரம்பித்துவிட்டாலே 70, மாணவர்கள் வரை 2 ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளலாம். அதேமாதிரி 71-லிருந்து 105 மாணவர்கள்வரையில் மூன்று ஆசிரியர்கள் நியமிக்கலாம். இப்படியாக அந்த எண்ணிக்கைக்கு மேல் ஒரு மாணவன் அதிகமாக இருந்தால்கூட இன்னொரு ஆசிரியரை நியமித்துக்கொள்ளலாம் என்று உத்தரவு போடப்பட்டு எல்லோருக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது.

**Sri K. ANBAZHAGAN**: மாணவர்களின் எண்ணிக்கை 35-க்கு அதிகமாக இருந்தால் இரண்டாவது ஆசிரியர் இருக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒரு வகுப்பிலே 20 மாணவர்களுக்கு குறைவாக இருந்தால், அந்த வகுப்பை மூடிவிட்டு வேறு வகுப்போடு இணைத்துவிட வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 55 மாணவர்கள் உள்ள பள்ளிகளில் நடவடிக்கை எப்படி எடுப்பது என்பதை அறிய விரும்பு கிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: இது வகுப்பு கணக்கில் செய்யப்படுவதில்லை. ஒரு பள்ளிக்கூடத்தில் முழுவதும் இருக்கும் கணக்கை வைத்து செய்யக்கூடியது. இதை அந்த முறையில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு வகுப்பிலே 35 மாணவர்கள், 70 மாணவர்கள், 105 மாணவர்கள் கிராமப் பள்ளிக்கூடத்திலே இருக்க முடியாது. பெரிய பள்ளிக்கூடங்களாக இருப்பவைகளில்தான் இம்மாதிரி வரும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே எந்த விதத்திலும் கஷ்டம் இருப்பதற்கு வழியே இல்லை. அந்த முறையில் இன்றைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பள்ளியில் 20 மாணவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், அதைத் தொடர்ந்து நடத்தவேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி யோசனை செய்யவேண்டும். அன்எகனமிக் ஸ்கூல்களாக இருந்தால், அதை மூடிவிட்டு பக்கத்தில் இருக்கக்கூடிய பள்ளிக்கூடத்தோடுதான் அதை இணைக்கவேண்டும். ஆகவே இந்த முறையில் பள்ளிகளில் இருக்கக் கூடிய மொத்த எண்ணிக்கையிலே ஆசிரியர்களை நியமிப்பது ஒரு விதம். பெரிய பள்ளிக்கூடங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்து, முதல் வகுப்பில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், இரண்டாவது வகுப்பில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், மூன்றாவது வகுப்பில் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற முறையில் பார்த்து ஆசிரியர்களை நியமிப்பது இன்னொரு விதம். இந்த அடிப் படையில்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் எந்த விதத்திலும் கஷ்டம் இருப்பதற்கு நியாயம் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகையினால் இந்தப் பிரச்னையைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை.

இன்னொரு பிரச்னையும் இங்கு கிளப்பப்பட்டது. இப்பொழுது 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற விகிதத்திலே நியமிக்கப்பட்டு பணியாற்றுகிறவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்படுமோ என்ற ஒரு சந்தேகம் பல இடங்களில் எழுந்தது. இதுபற்றி இதற்கு முன்னேயே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதும் விளக்கம் தருகிறேன். இப்பொழுது இருக்கக்கூடிய உபாத்தியாயர்களை எந்த விதத்திலும் நீக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படி நீக்கக்கூடாது என்று சொல்லும்பொழுது, 20 மாணவர் களுக்கு மேல் எண்ணிக்கை உயராமல் இருந்தால் அப்பொழுதுதான் அன்பழகன் அவர்கள் கேட்ட கேள்வி எழுகிறது. அதை மற்ற பள்ளி யோடு சேர்த்து ஒன்றுக்க வேண்டும் என்கின்ற உத்தரவு அதற்குத்தான் அமையும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த முறையில் மாற்றி அமைப்பதிலே கூடிய அளவு இப்பொழுது இருக்கக்கூடியவர்களையே இதுவரையிலும் நியமித்திருக்கிறோம்.



8th April 1958] [Sri C. Subramaniam]

அடுத்தபடியாக செகண்டரி பள்ளிக்கூடங்களை அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. உணவு திட்டத்தைப்பற்றி எல்லா அங்கத்தினர்களும் வரவேற்றுப் பேசினார்கள். அதுபற்றி நான் திருப்பிச் சொல்லத் தேவையில்லை. ஐந்தாவது வகுப்பு வரையில் கொடுக்கின்ற கல்வி, எல்லோருக்கும் எழுதப்படிக்க கற்றுக்கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில், பரவலாக எல்லோருக்கும் இந்தப் படிப்பு கொடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் அமைந்திருக்கிறது. 6-வது, 7-வது வகுப்பிலும் அதே மாதிரிதான். அதற்கு மேலாக உயர்நிலை வகுப்புகளில் போதிக்கப் படும் கல்வி அதற்கும் மேலான எல்லாவிதமான படிப்பிற்கும் போவதற் கான அடிப்படையில் அமைந்திருக்கிறது. இதன் காரணமாக உயர் நிலை பள்ளிகளில் தரத்தை மிக உயர்வாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். இன்றைக்கு அதில்தான் சில கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பி.ஏ. பட்டம் பெற்று பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதற்கென்று 7 புதிய ஆசிரியர் பயிற்சி கல் லூரிகள் 2, 3 வருஷங்களில் ஏற்படுத்தியிருக்கிறோம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வேண்டிய அளவுக்கு முதல் ஐந்தாண்டுத்திட்ட கடைசியிலேயே நாம் பயிற்சி கல்லூரிகளை ஆரம்பித்து விட்டோம். அதற்குப் பிற்பாடு 2 கல்லூரிகள் ஆரம்பித்தாகிவிட்டது. இப்பொழுது 14 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள் இருக்கின்றன. இருந்தாலும் கூட, அவைகளில் போதுமான பயிற்சி பெறக்கூடிய மாணவர்கள் வந்து சேருவதில்லை. சென்ற வருஷத்தில் நெருக்கடியான ஒரு நிலைமை ஏற் பட்டுவிட்டது. இந்த வருஷத்தில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை பார்க்கவேண்டும். இந்த நெருக்கடி ஏற்படுவதற்கு நிதி வசதிகூட காரணம் அல்ல. ஆசிரியர்கள் போதுமான அளவிற்கு இல்லாத காரணம்தான். இன்னும் பள்ளிகளை அதிகமாக ஏற்படுத்தினால் நெருக்கடி அதிகமாகும். போதுமான ஆசிரியர்களை தயார் செய்துகொண்டுதான், அதற்கு மேல் பள்ளிக்கூடங்களை விஸ்தரிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த நிலையில் பி.ஏ. படித்தவர்கள் பயிற்சி பெற்று ஆசிரியர் தொழிலுக்கு ஏன் அதிகமாக வரவில்லை என்பதுபற்றி யோசிக்கவேண்டும். பட்டம் பெற்றவர்களுக்கு, அதிலும் முக்கியமாக விஞ்ஞானம் படித்து பட்டம் பெற்றவர்களுக்கு வேறு துறைகளில் தொழில் கிடைப்பதற்கு பல வசதிகள் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல முன்னேற்ற திட்டங்கள் நிறைவேறுகின்ற காரணத்தினாலே, அதிகமான பேர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வர முன்வருவதில்லையோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஆகவே, போதிய அளவு ஆசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தியோ, அல்லது வேறுவகையில் ஏதாவது செய்தோ பட்டம் பெற்றவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்வதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம். ஆரம்பமாக இப்பொழுது உயர்நிலை பள்ளி களிலுள்ள எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரு வசதியை விஸ்தரிப்பதற்கு இந்த பட்ஜெட்டிலே முடிவு செய்திருக்கிறோம். இதை இந்த ஆண்டில் 1—4—1958 முதல் அமுலுக்குக் கொண்டு வருவதாக முடிவு செய் திருக்கிறோம். இதுவரையிலும் ஓய்வு சம்பளம் ஆரம்பப் பள்ளிகளில் இருக்கக்கூடிய உபாத்தியாயர்களுக்கு மட்டும்தான் இருந்து வந்தது. உயர்நிலை பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளம் இல்லாமல் இருந்தது. அதுபற்றி பல மகாநாடுகளில் கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டன. என்னிடத்திலும் பல விண்ணப்பங்கள் மூலமாக இந்தக் கருத்தை தெரிவித்திருந்தார்கள். 1—4—1958-லிருந்து ஓய்வு எடுத்துக்கொள்ளக்கூடிய உயர்நிலை பள்ளி ஆசிரியர்களுக்கு, உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, ஓரியண்டல் ஸ்கூல்ஸ், ஆங்கிலோ இண்டியன் ஸ்கூல்ஸ், ஸ்பெஷல் ஸ்கூல்ஸ், பள்ளிகள் என்று சொல்லக் கூடிய இனத்திலே இருக்கக்கூடிய எல்லா ஸ்தாபனங்களிலும் பணியாற்றி வருகிற ஆசிரியர்களுக்கு ஓய்வுச் சம்பளம் கொடுப்பதாக முடிவு செய்யப் பட்டிருக்கிறது. இது அமுலுக்கு வருவதை வரவேற்பதுமட்டுமல்லாமல் இதையொட்டி, பட்டம் பெற்ற பலர், ஆசிரியர் தொழிலில் வந்துசேர்ந்து உதவுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

[Sri C. Subramaniam] [8th April 1958

முக்கியமாக "ஸையன்ஸ்" தரம் இன்றைக்கு மிகவும் உயரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். "ஸையன்ஸ்" தரம் உயர்ந்தால்தான் அதன்மூலம் தொழில் நுட்ப கல்வியினுடைய தரம் உயரும். அதன் மூலம் ஆராய்ச்சி செய்யக்கூடிய மேதைகள் அதிகமாக வந்து ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று நாம் விரும்புகிறோம். உயர்நிலை பள்ளிக்கூடங்களில் எந்த அளவிற்கு "ஸையன்ஸ்" பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும், எப்படி தரத்தை உயர்த்தவேண்டும், அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று ஆராய்ச்சி செய்து, பல்வேறு பள்ளிக்கூடங்களுக்கு உதவி செய்வதற்கு போதிய கட்டிடங்களையும், லேபோரடரிகளையும் கட்டிக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய பல முயற்சிகளை செய்துகொண்டிருக்கிறோம். இதற்கு மேலாக இன்னும் தரத்தை எப்படி உயர்த்துவது என்பதுபற்றி இன்றைக்கு பல முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம். ஆங்கிலம் சொல்லிக்கொடுப்பதில் கஷ்டம் இருக்கிறது. கல்லூரியில் போதனை மொழியாக தற்பொழுது ஆங்கிலம் இருப்பதால் அதன் மூலம் கல்வி கற்பதில் கஷ்டம் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்தும்படியான வகையில் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் போதிக்கப்படவேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராய பேதம் இருக்க முடியாது. "லெஜிஸ்லேசர் கமிட்டியும்" அதுபற்றி சிபார்சு செய்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய ஆங்கில பாடதிட்டம் நல்ல முறையிலே அமைந்திருக்கிறது என்று எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பாடம் சொல்லிக்கொடுப்பதில் இன்னும் என்னென்ன முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுபற்றி ஆராய்ச்சி செய்து ஒரு நிபுணர் மூலமாக திட்டம் தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதன் மூலமாக ஆங்கிலத்தின் தரத்தை மிகவும் உயர்த்த முடியும். ஆங்கிலத்தின் தரம் உயருவதால், ஆங்கிலம் போதனை மொழியாக இருக்கும் வரையில் அது உதவியாக இருப்பதோடு, பின்னால் மாணவர்கள் பல்வேறு வகையில் அறிவு பெறுவதற்கு அது சாதகமாக இருக்கும் என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. ஆங்கிலம் கல்லூரியில் போதனை மொழியாக இருக்கக்கூடாது என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருந்தாலும்கூட, அதே சமயத்தில் ஆங்கிலம் நன்றாக போதிக்கப்பட வேண்டும், ஆங்கிலத்தின் தரம் உயரவேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையும் இருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுத்துக்கொண்டுவருகிறோம்.

கல்லூரிக்குப் போவதற்கு முன்பு இங்கே என்ன என்ன மொழிகளை
4-50 p.m. மாணவர்களுக்கு போதிக்க வேண்டும் என்பதைப்பற்றியும் ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக ஸ்ரீ அன்பழகன் இந்த விஷயத்தைப்பற்றி பேசியிருப்பதால், இதைப்பற்றி நான் பேசவேண்டியது அவசியமாகிவிட்டது . இல்லாவிட்டால் இதைப்பற்றிப் பேச நான் விரும்பியிருக்க மாட்டேன். இந்தப் பிரச்னை நன்றாக ஆராயப்பட்டது. இந்தப் பிரச்னையை சட்டசபைக் கமிட்டி ஆராய்ந்தது. அதற்குப் பிறகு இந்தப் பிரச்னையை இந்த சபையிலும் விவாதித்து நாம் ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். இந்தப் பிரச்னையைக் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது என்று நான் சொல்லவில்லை. வேறுபட்ட கருத்துக்கள் இருக்கக் கூடும். ஆனால், நாம் ஒரு முடிவிற்கு வந்த பிறகு, நாம் எல்லோரும் இந்த விஷயத்தில் ஒற்றுமையாக இருந்து அந்த முடிவை அமல்நடத்த வேண்டும் ; அப்படியின்றி, அவரவர்கள் தங்கள் தங்கள் வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துக்கொண்டேயிருந்தால் அந்த முடிவை அமல் நடத்தமுடியாது, குழப்பம்தான் ஏற்படும். ஆகவே, மொழிப் பாடத்திட்டத்தைப் பொறுத்தவரையில், நாம் செய்திருக்கும் முடிவை நிறைவேற்றுவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இதைவிட நல்ல திட்டம் பின்னர் உருவாகுமானால், அப்போது இந்த முடிவை மாற்றுவதுபற்றி கவனிக்கலாம். இப்போதிருக்கும் நிலைமையில் இதுதான் நல்ல பாடத் திட்டம். ஆகவே எல்லா கனம் அங்கத்தினர்களும் இந்த பாடத் திட்டம் சம்பந்தமாக தங்களுக்கு இருக்கும் வேறுபட்ட கருத்தை இனிமேல் வலியுறுத்துக் கொண்டிராமல், இந்தப் பாட திட்டத்தை சரிவர நிறைவேற்றுவதற்கான



8th April 1958] [Sri C. Subramaniam]

யோசனைகளைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். இந்தப் பாடத்திட்டத்தை சரிவர நிறைவேற்றுவதற்கு என்ன என்ன சௌகரியங்களைச் செய்யவேண்டுமோ அவைகளைக் குறிப்பிடலாம்.

கல்லூரிகளை எடுத்துக்கொண்டால், கல்லூரிப் படிப்பு சம்பந்தமான பொறுப்பு பல்கலைக் கழகங்களுக்குத்தான் இருக்கிறது. பல்கலைக் கழகமானது தனி சுதந்திரத்துடன் இயங்கக்கூடிய நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டும் என்பதுகுறித்து எனக்கு வேறுபட்ட கருத்து இல்லை. ஆகையால்தான் நான் ப்ரோ-சான்ஸலராக இருந்தாலும் பல்கலைக் கழகத்தின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை. எந்தவிதத்திலும் நான் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் குறுக்கிடும் முறையில் நடந்துகொண்டதாக யாரும் என்மீது குற்றம் சாட்ட முடியாது.

**Sri M. KALYANASUNDARAM** rose.

**Mr. SPEAKER**: The hon. Member can speak but, at 5 p.m. I will have to stop the discussions even if the Hon. Minister speaks.

**Sri M. KALYANASUNDARAM**: அவ்வாறு குறுக்கிடும் முறையில் கனம் அமைச்சர் நடந்துகொள்ளவில்லை என்றுதான் நாங்கள் குற்றம் கூறுகிறோம்.

**The Hon. Sri C. SUBRAMANIAM**: நான் பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் குறுக்கிடும் முறையில் நடந்துகொள்ளவில்லை என்று கனம் அங்கத்தினர் ஸ்ரீ கல்யாணசுந்தரம் குற்றம் கூறுகிறார். அது இப்போதைய பிரச்னை அல்ல. அது சம்பந்தமாக விவாதிக்கவேண்டுமென்றால், பின்னர் விவாதிக்க வேண்டும். பல்கலைக் கழகத்தின் நிர்வாகத்தில் நான் குறுக்கிடுவது தவறு என்றுதான் நான் கருதுகிறேன். அந்தக் கொள்கை அடிப்படையில்தான் நான் என் பணியை ஆற்றி வருகிறேன்.

கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலும் நாம் கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கிறோம். அப்படியிருக்கும்போது, நாம், அந்தப் பணத்திற்கு எவ்வளவு அதிகமான பலன் ஏற்படுவது சாத்தியமோ அவ்வளவு அதிகமான பலன் ஏற்படச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியம். அந்தப் பணம் வீணாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் முக்கியம். அந்தக் கண்ணோட்டத்துடன், பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதங்களை நிர்ணயித்திருக்கிறோம். பணம் வீணாகாமலிருப்பதற்கு உகந்த முறையில் எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறோம். கல்லூரிகளைப் பொறுத்த வரையில், ஒருவேளை பல்கலைக்கழகத்திற்கு பூரண சுதந்திரம் இருப்பதினாலோ என்னமோ, அல்லது அவர்கள் ஒருவேளை திட்டம் வகுத்துக் கொள்ளவில்லையோ என்னமோ, அதன் காரணமாகவும் இருக்கலாம். இந்தப் பணம் கொஞ்சம் வீணாகிறது என்பதை இந்த சபைக்கு எத்தனையோ தடவைகள் தெரிவித்திருக்கிறேன் ; இப்போதும் தெரிவித்துக்கொள்கிறேன். கல்லூரிப் படிப்பில் மூன்று வருஷப் படிப்பிற்கு 9,400 இடங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ; அதாவது, அந்தப் பட்டப் படிப்பிற்கான மூன்று வகுப்புகளில் முதல் வகுப்பில் ஒவ்வொரு வருஷமும் 9,400 மாணவர்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அத்தனை மாணவர்களுக்கு எத்தனை ஆசிரியர்கள் வேண்டுமோ அத்தனை ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் ; அந்த அடிப்படையில்தான் கல்லூரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள் ; அல்லது அவர்களுடைய எண்ணிக்கை கொஞ்சம் கம்மியாகவும் இருக்கலாம். மூன்று வருஷப் பட்டப் படிப்பை 9,400 பேர்கள் படிப்பதற்கு ஏற்பாடுசெய்திருக்கும்போது 4,500 பேர்கள்தான் கல்லூரிகளில் அந்தப் படிப்பிற்காக சேர்ந்திருக்கிறார்கள். இந்த எண்ணிக்கை உயருமா அல்லது உயராதா என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமானால் ஜோஸ்யம் பார்த்துத்தான் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் (பல்கலைக்கழகத்தினர்) நாங்கள் செய்துள்ள முடிவு சரியா இல்லையா என்பதுபற்றி தாங்கள் கொண்டுள்ள கருத்தில் பிடிவாதமாக இருக்கிறார்கள். இதன் காரணமாக, பல காரியங்கள் சம்பந்தமாக முடி

வெடுப்பது தாமதமாகி வருகிறது. உதாரணமாக, கல்லூரி ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்துவதுபற்றி முடிவெடுப்பது தாமதிக்கப்படுகிறது. சில கல்லூரிகளின் ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தவேண்டுமென்று சர்வகலாசாலை மானியக் கமிஷன் சொல்லியிருக்கிறது. அவர்களுடைய சம்பளங்களை நாம் உயர்த்தினால் அப்போது மற்றக் கல்லூரிகளின் ஆசிரியர்களின் சம்பளங்களையும் உயர்த்தவேண்டும். கல்லூரி ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தும்போது, ஆரம்ப, உயர்நிலைப் பள்ளிகளின் ஆசிரியர்களின் சம்பளங்களையும் உயர்த்தவேண்டும். ஒரு பகுதியில் உள்ளவர்களின் சம்பளங்களை மட்டும் உயர்த்திவிட்டு மற்றப் பகுதிகளில் உள்ளவர்களின் சம்பளங்களை உயர்த்தாமல் இருக்கமுடியாது. நாங்கள் செய்துள்ள முடிவை சீக்கிரம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பல்கலைக் கழகத்தினரை நாங்கள் வற்புறுத்திக்கொண்டிருக்கிறோம். பல்கலைக் கழகம் நான் முன்பு கூறிய முறையில் தாமதப்படுத்திக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகத்தின்மீது குற்றம் சாட்டுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை. இருக்கும் நிலைமையை சபைக்குத் தெரிவிக்கிறேன்; அவ்வளவுதான். இன்னும் இரண்டு-மூன்று வருஷங்களுக்குள் இது சரியாகப் போய்விடும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். சரியாகப் போகாது என்று நான் நினைக்கிறேன். ஆசிரியர்களின் பிரச்னையைப்பற்றி முடிவுசெய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் நாம் செய்யவேண்டியிருக்கிறது. நாங்கள் எல்லாவற்றையும் கவனித்துவருகிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சமீபத்தில் நடந்த சம்பவங்கள் குறித்து பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. பல கனம் அங்கத்தினர்கள் ஸ்தலத்தில் இல்லாவிட்டாலும்கூட பலர் சொன்ன செய்திகளைக் கேட்டு பல்வேறு விஷயங்களை இங்கே சொன்னார்கள். நான் அங்கே இருந்திருந்தாலும் அந்த சம்பவங்கள் சம்பந்தமாக எது எது உண்மை என்று நான் சொல்லமுடியாது. எனக்குத் தெரிந்த விவரங்களையும் கிடைத்த விவரங்களையும்தான் நான் சொல்லமுடியும்; அவைகளைத்தான் நான் சொன்னேன். அங்கு இருக்கும் பிரச்னையைத் தீர்க்கவேண்டும். எந்தவிதமான கஷ்டமும் இல்லாமல் பல்கலைக்கழகங்கள் நடக்கச் செய்ய வேண்டும் என்பதுதான் இப்போதைய முக்கியமான பிரச்னை. பல்கலைக் கழகங்களை நடத்துவதில் எனக்கு திறமை குறைவாக இருக்கிறது என்று ஸ்ரீ ஆசைத்தம்பி சொன்னார். அவருடைய செர்டிபிகேட்டையோ வேறு யாருடைய செர்டிபிகேட்டையுமோ பெற்று செயலாற்ற வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. அப்படி செர்டிபிகேட் பெற்று நான் செயலாற்றவேண்டிய காலம் போய்விட்டது. அவருடைய செர்டிபிகேட்டை நான் விரும்பவும் இல்லை. அவர் எனக்கு செர்டிபிகேட் கொடுத்தால், நான் அதனால் பூரிப்படையப் போவதில்லை; அல்லது அவர் எனக்கு செர்டிபிகேட் கொடுக்காமல் என்மீது குற்றம் சாட்டினால் அதற்காக நான்...........

**SRI A. V. P. ASAITHAMBI:** கோபப்படப்போவதும் இல்லை.

***THE HON. SRI C. SUBRAMANIAM:** கோபப்படப்போவதும் இல்லை. அல்லது அவர்களுடைய அடுக்குமொழி பாணியில் சொல்ல வேண்டுமானால், என்மீது அவர் குற்றம் சாட்டும்போது நான் குனிய வேண்டிய அவசியமும் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். (சிரிப்பு). மேலும், பல்கலைக் கழகத்தை நடத்துவதற்குரிய ஆற்றல் எனக்கு இருக்கிறதா இல்லையா என்பது இப்போதைய பிரச்னை அல்ல. பல்கலைக் கழகம் நல்ல முறையில் நடக்கவேண்டுமென்பதுதான் என் ஆசை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பிரஸ்தாப சம்பவம் ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்திருக்கும் அங்கு இருக்கக்கூடிய நோயைக் கண்டுபிடித்து அதை நீக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அது ஆசிரியர்களிடம் இருக்கிறதா அல்லது நிர்வாகஸ்தர்களிடம் இருக்கிறதா அல்லது குழுவினரிடம் இருக்கிறதா என்பதுபற்றி பதில் சொல்ல நான் மறுத்துவிட்டேன். நான் வேலூரில் பேசியதுபற்றி குறிப்பிடப்பட்டது. வேலூரில் பேசியபோது நான் "திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தங்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிறையச் செல்வாக்கு இருப்பதாக



சொன்னார்கள். அப்படியானால், அவர்கள் ஏன் அங்கே இந்த சம்பவம் ஏற்படாதபடி செய்திருக்கக்கூடாது? ஏன் இந்த சம்பவம் நடக்கவிட்டார்கள். எனவே, அவர்கள் குற்றவாளிகளா, இல்லையா? சம்பவத்திற்கு அவர்கள் பொறுப்பாளிகளா, இல்லையா? இதற்கெல்லாம், அவர்களே தங்கள் மனச் சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளட்டும்" என்றுதான் சொன்னேனே தவிர, அவர்கள்தான் இந்தச் சம்பவம் ஏற்பட செய்தார்கள் என்று நான் சொல்லவில்லை. நான் அங்கே வேறு எதையும் சொல்லவில்லை என்றால், எனக்கு சொந்த அபிப்பிராயம் இல்லாததால் தான் நான் வேறு எதையும் சொல்லவில்லை என்று சொல்லமுடியாது. எனக்கு சொந்த அபிப்பிராயம் இருக்கிறது. என் சொந்த அபிப்பிராயத்தை நான் சொல்ல வேண்டியது அவசியம் இல்லை. இந்த சம்பவத்தைக் குறித்து ஆலோசிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுதான் இது சம்பந்தமாக அபிப்பிராயம் சொல்ல வேண்டும். நான் ஏதாவது அபிப்பிராயம் சொன்னால், மற்ற அங்கத்தினர்கள் அதை மறுக்கக்கூடும். அவர்கள் ஏதாவது அபிப்பிராயம் சொன்னால் அதை நான் மறுக்கக் கூடும். இந்த சம்பவம் சம்பந்தமாக நாம் எந்த முடிவிற்கும் வருவதற்கில்லை. அதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் குழுதான் இது சம்பந்தமாக முடிவுசெய்யவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள 12 கோடி ரூபாய் பூரண பலன் அளிக்க வேண்டுமென்றால் கல்வி ஸ்தாபனங்கள் நன்றாக இயங்கச் செய்யவேண்டும். என் அபிப்பிராயத்தில் கல்வி ஸ்தாபனங்களில் கட்சிப் பூசல்கள் இருக்கக்கூடாது. மாணவர்கள் அரசியல் கருத்துக்களைத் தெரிந்துகொள்ளக்கூடாது என்று நான் எந்தக் காலத்திலும் சொல்லவில்லை. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்சி அரசியல் ஏற்படக்கூடாது என்றும் அங்கே அரசியல் பூசல்கள் ஏற்படக் கூடாதென்றும்தான் நான் சொல்கிறேன். அங்கே கட்சி அரசியல் புகாமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இது சம்பந்தமாக, நாம் நியமித்திருக்கும் ஆலோசனைக் குழுவில் ஆலோசனை செய்ய வேண்டும். அந்தக் குழுவில் ஆலோசனை செய்த பிறகு, இது சம்பந்தமாகச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வதற்கு நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் பாடுபடவேண்டும். கல்விக்காக இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 12 கோடி ரூபாய் எல்லா வருஷங்களிலும் இதே அளவில் இருக்கப்போவதில்லை. இந்தத் தொகை வருஷா வருஷம் உயர்ந்துகொண்டே போகும். இந்தத் தொகை ஒவ்வொரு வருஷமும் 1—1½ கோடி ரூபாய் அதிகமாகும். இந்தப் பணச் செலவிற்கு நல்ல பலன் கிடைக்கச்செய்யவேண்டும். வருங்காலத்தில் இந்த நாட்டில் அறிவும் ஆற்றலும் பண்பும் மிக்க மக்கள் இருக்கவேண்டுமானால் கல்வி ஸ்தாபனங்களிலிருந்து, குறிப்பாக பல்கலைக்கழகங்களிலிருந்து, வெளிவரும் மாணவர்கள் அவைகளை உடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் தான் நாட்டின் வருங்கால மக்கள். அறிவையும் ஆற்றலையும் பண்பையும் அவர்கள் பெறும்படி செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் நாம் எடுக்கவேண்டும். அதற்கு சர்க்காருடன் ஒத்துழைக்கவேண்டுமென்று எல்லா கனம் அங்கத்தினர்களையும் கேட்டுக்கொண்டு, இந்த மானியத்தைக் கோருகிறேன். இந்த வெட்டுப் பிரேரேபணை வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி அவர்களே முடிவு செய்யட்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**SRI M. KALYANASUNDARAM:** நடந்ததெல்லாம் போகட்டும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைத் திறந்து பரீட்சைகளை நடத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் தெரிவிப்பாரா?

***THE HON. SRI C. SUBRAMANIAM:** இது சம்பந்தமாக முடிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் பல்கலைக் கழகத்திற்குத்தான் இருக்கிறது. வேண்டுமானால் நாம் பல்கலைக்கழகத்தினருக்கு

[Sri C. Subramaniam] [8th April 1958

யோசனை, ஆலோசனை கூறலாம். அவர்களுக்கு நாம் ஆலோசனை சொல்ல வேண்டுமென்றால், பிரஸ்தாப குழுவில் முடிவுசெய்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லலாம்.

5 p.m. MR. SPEAKER: The question is—

'That the allotment of Rs. 12,34,26,500 under Demand XV—Education be reduced by Rs. 100'

The cut Motion was put and lost.

MR. SPEAKER: I shall now put the main Motion to the vote of the House.

The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 12,34,26,500 under Demand XV—Education.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER: It being five of the clock, I shall now under 54 (3) of the Assembly Rules I will put to the vote of the House proceed to put the outstanding demands.

DEMAND II—EXCISE DEPARTMENT.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 6,67,200 under Demand II—Excise Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND III—STAMPS ADMINISTRATION.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 18,43,100 under Demand III—Stamps Administration.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND V—REGISTRATION DEPARTMENT.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 37,62,100 under Demand V—Registration Department.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIII—JAILS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 1,00,65,800 under Demand XIII—Jails.'

The Demand was put and carried and the Grant was made.



8th April 1958]

DEMAND XXIV—CIVIL WORKS—WORKS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 5,35,15,700 under Demand XXIV—Civil Works—Works.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVII—FAMINE.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 2,50,000 under Demand XXVII—Famine.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVIII—PENSIONS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 1,48,54,600 under Demand XXVIII—Pensions.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIX—STATIONERY AND PRINTING.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 88,55,000 under Demand XXIX—Stationery and Printing.

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON INDUSTRIAL DEVELOPMENT.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 1,76,47,000 under Demand XXXVIII—Capital Outlay on Industrial Development.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXX—MISCELLANEOUS.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 1,16,39,600 under Demand XXX—Miscellaneous.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XL—CAPITAL OUTLAY ON ROAD TRANSPORT SCHEMES.

MR. SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 1,67,67,000 under Demand XL—Capital Outlay on Road Transport Schemes.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLI—COMMUTED VALUE OF PENSIONS.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 10,00,000 under Demand XLI—Commuted Value of Pensions.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLII—CAPITAL OUTLAY ON SCHEMES OF STATE TRADING.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 8,52,76,000 under Demand XLII—Capital Outlay on Schemes of State Trading.'

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLIII—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding rupees 12,60,83,900 under Demand XLIII—Loans and Advances by the State Government.'

The Demand was put and carried and the Grant was made.

THE HON. SRI C. SUBRAMANIAM : On a point of order, Sir. Can an Opposition Member cross the floor?

MR. SPEAKER : There is no division and I think the Hon. Minister for Finance welcomes such crossing.

III.— ANNOUNCEMENTS BY THE HON. THE SPEAKER—*cont.*

(5) MESSAGE FROM GOVERNOR RECOMMENDING THE INTRODUCTION OF THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1958.

MR. SPEAKER : I have to announce that the Governor of Madras has recommended the introduction in the Madras Legislative Assembly of the Madras Appropriation (No. 3) Bill, 1958 and also the consideration of the said Bill by the Assembly.

V.— GOVERNMENT BILLS—*cont.*

(2) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1958.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I beg leave to introduce the Madras Appropriation (No. 3) Bill, 1958.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 3) Bill, 1958.'

The Motion was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

5-05 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. day after tomorrow (10th April 1958).

The House then adjourned.

* Published in *Fort St. George Gazette*, dated 8th April 1958.



APPENDIX

[Vide answer to clauses (*a*), (*b*) and (*c*) of starred question No. 634 asked by Sri P. G. Manickam at the meeting of the Legislative Assembly held on 8th April 1958, page 379 supra.]

## Schemes sanctioned and implemented during 1957–58

| *Name of scheme.* | *Location.* | *Amount sanctioned.* |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | RS. |
| **SMALL SCALE INDUSTRIES.** | | |
| 1 Establishment of an industrial colony. | Erode .. .. .. | 9,10,985 |
| 2 Establishment of model foot wear leather goods unit. | Do. .. .. .. | 2,43,000 |
| 3 Establishment of two model foundries. | Do. .. .. .. | 3,26,400 |
| 4 Establishment of model bolts and nuts factory. | Do. .. .. .. | 1,66,080 |
| 5 Wood seasoning plant .. .. | Pollachi .. .. .. | 87,500 |
| 6 Coir Production-*cum*-Training Centre. | Chinnamallampalayam. | 30,100 |
| 7 Common Central tool room and servicing centre. | Erode .. .. .. | 6,30,185 |
| 8 Leather goods (chappals) manufacturing units. | Do. .. .. .. | 1,02,120 |
| 9 Production-*cum*-Training Centre for manufacture of bullock shoe mail. | Modachur (Gobichettipalayam). | 6,200 |
| 10 Blacksmithy-*cum*-Carpentry Training Centre. | Palladam .. .. | 18,758 |
| **HANDICRAFTS.** | | |
| 1 Training centre for lace and embroidery. | Gobichettipalayam .. | 13,452 |
| 2 Training centre for manufacture of wooden toys. | Erode .. .. .. | 18,106 |
| 3 Training-*cum*-Production Centre for mat weaving. | Palladam .. .. | 29,329 |
| 4 Palmyrah fibre extraction unit .. | Perundurai .. .. | 9,600 |
| **VILLAGE INDUSTRIES.** | | |
| 1 Establishment of a handmade paper unit and cardboard making unit. | Shenbagaputtur, Satyamangalam Block. | 50,000 |
| 2 Supply of gins for ginning of cotton. | Palladam .. .. | 4,750 |
| 3 Do. | Avanashi .. .. | 4,750 |
| 4 Do. | Dharapuram .. .. | 4,750 |
| 5 Village model tannery .. .. | Palladam .. .. | 17,772 |
| 6 Soap making unit with non-edible oils. | Kangayam .. .. | 16,640 |

| Name of scheme. (1) | Location. (2) | Amount sanctioned. (3) |
|---|---|---|
| | | RS. |
| **VILLAGE INDUSTRIES—*cont.*** | | |
| 7 Soap making unit with non-edible oils. | Palladam .. .. | 16,640 |
| 8 Composite soap making and oil pressing unit | Doddampatti .. .. | 92,510 |
| 9 Wardha Ghani Demonstration and Training unit. | Kundadam .. .. | 12,488 |
| 10 Do | Makkanamkombai .. | 14,610 |
| 11 Ghani manufacturing centre .. | Do. .. | 94,335 |
| 12 Cottage match industry 5-D class match factories. | Thammaiyanpudur (four units). Kongarapalayam (one unit). | 45,000 |
| 13 Five flaying and bone crushing units. | Saliamangalam .. .. Perundurai .. Gobichettipalayam .. Bhavani .. .. .. Erode .. .. .. | 56,220 |
| 14 Establishment of three flaying units. | Kodumudi .. .. Tiruppur .. .. Dharapuram .. .. | 22,320 |
| 15 Atta chakki .. .. .. .. | Coimbatore .. .. | 5,680 |
| 16 Demonstration centre for development of Gur Khandsari. | Lower Bhavani Pilot Project Area. | 24,100 |
| **NEW SCHEMES PROPOSED TO BE STARTED DURING 1958–59.** | | |
| 1 Sales-*cum*-Procurement Depot .. | Coimbatore .. .. | 1,96,200 |
| 2 Establishment of industrial colony. | Do. .. .. | 6,16,250 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

## Thursday, the 10th April 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

*Swearing in of a new Member.*

Sri S. Ramakrishna Thevar was sworn in.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

MR. SPEAKER: இன்றைய தினம் 68 கேள்விகள் இருக்கின்றன. எல்லாக் கேள்விகள் பேரிலும் உப கேள்விகள் கேட்க சந்தர்ப்பம் கிடைக்காவிட்டால் மன்னிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR: Sir, the question hour may be extended by some minutes.

MR. SPEAKER: I have no objection, but then you will be delaying the Bills unnecessarily.

SRI S. NAGARAJA MONIGAR: This being the last day, the question hour may be extended.

MR. SPEAKER: Even if I give half an hour more, if hon. Members put ten supplementary questions on each question, it will not be possible to cover all questions. Therefore let me be given the liberty to decide the questions on which supplementaries should be allowed.

*Orphanages*

*50 *S.N.Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any representation has been received recently from the Association of Orphanages of the Madras State, regarding the removal of certain hardships experienced by the managements in running the institutions efficiently; and

(*b*) if so, whether the Government have taken any action in the matter so far?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination.

*51 *S.N.Q.*—SRI K. VINAYAKAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government intends to revise the Grant-in-aid Code for Indian Boarding Homes and Orphanages with a view to increase the grants?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question of increasing the existing rate of boarding grant paid to orphanages is under examination.

[10th April 1958

SRI K. VINAYAKAM: Sir, is the Hon. Minister aware of the fact that the grant given to the Backward Class and Scheduled Caste orphans staying in the orphanage is Rs. 15 whereas the grant given to orphans belonging to the other classes is only Rs. 8, with the result it is not possible to maintain the orphanages, and an allowance for oil bath (for oil, soapnut powder, soap and other things) is disallowed by the auditor who is asked to go into the accounts even though these are permissible items? Will the Government think of increasing the grant to them as per their request?

THE HON. SRI C. SUBRAMANIAM: All these matters are under consideration, and I may inform the hon. Member that it is not our intention that the orphanages should be run exclusively by Government grant alone but that private charities also should give aid. Anyhow the whole matter will be considered.

*Bus accident.*

* 52 *S.N.Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the number of persons belonging to this State who met with death recently due to a bus accident in the Anantapur district (Andhra State); and

(b) the steps taken, if any, to secure compensation for the families of the victims?

THE HON. SRI V. RAMAIAH: (a) Thirteen persons.

(b) Action can be taken up only after the disposal of case against the driver of the vehicle.

MR. SPEAKER: As the hon. Members who gave notice of the questions, namely, Sri P. S. Chinnadurai and Sri A. Govindasamy, are not in their seats, the questions together with the answers thereto will be printed in the official proceedings.

*Prime Minister's visit*

* 644 *Q.*—SRI P. S. CHINNADURAI: Will the Hon. the Chief Minister be pleased to state the expenditure incurred by the State Government in connexion with the visit of the Prime Minister of India to this State in December 1957?

THE HON. SRI C. SUBRAMANIAM: A total expenditure of Rs. 1,48,231-28 nP. was incurred by this Government in connexion with the Prime Minister's visit to this State in December, 1957.

* 645 *Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the strength of the Police Forces drawn from other States for bandobust duties when the Prime Minister visited Madras on 6th January 1958; and

(b) of these, how many from the Andhra and the Kerala States?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) It is regretted that the Government have to decline answering the question in public interest.



10th April 1958]

* 646 *Q.*—SRI A. GOVINDASAMY: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of times tear-gas was used against the people who had gathered at Mount Road on 6th January 1958 to witness the arrival of the Prime Minister at Rajaji Hall;

(b) the number of times lathi charge was made;

(c) how many persons were injured and admitted into the hospital; and

(d) how many lost their lives?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) On one occasion.

(b) On one occasion.

(c) Four persons were grievously injured and admitted into the hospital. (Thirty-eight others were treated as out-patients).

(d) None. However as a result of the stampede during the police action two persons lost their lives.

*Single-teacher schools*

* 647 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state whether the period of training undergone by teachers in single-teacher schools would be treated as part of their service?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

*Family-Planning*

* 648 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the pamphlets on Family Planning published by the Government are sold only to married persons; and

(b) whether any subsidy is paid to persons who wish to adopt birth control measures like sterilization?

THE HON. SRI M. A. MANICKAVELU: (a) Family Planning publications are distributed only to married employees of Government and local bodies. In respect of copies of these publications released for sale to the public, it is not feasible to ensure that only married people buy them.

(b) No, Sir.

MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely, Sri K. Sattanatha Karayalar, is not in his seat, the question together with the answer thereto will be printed in the official proceedings.

*Industrial undertakings*

* 649 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Industries be pleased to state the extent to

[10th April 1958

which progress in Government industrial undertakings are to be slowed down for want of finance?

THE HON. SRI R. VENKATARAMAN: During the current financial year, the progress in the establishment of the Government industrial undertakings has not been slowed down for want of finance. The extent to which the progress will have to be slowed down during 1958–59 can be decided only after the allocation for 1958–59 is finally made by the Planning Commission and the Government of India.

*Madras Removal of Civil Disabilities (Amendment) Act, 1946.*

* 650 Q.—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have reviewed the working of the Madras Removal of Civil Disabilities (Amendment) Act, 1947 (Act XI of 1947) and the Untouchability (Offences) Act, 1955, during 1956;

(b) the number of persons fined or convicted under the provisions of these Acts; and

(c) the amount spent in 1955–56 for aiding Harijans under these Acts?

THE HON. SRI P. KAKKAN: (a) Yes, Sir.

(b) 52.

(c) Nil.

*State Electricity Board*

* 651 Q.—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri A. Govindasamy): Will the Hon. the Minister for Electricity be pleased to state how many meetings have been held since the formation of the State Electricity Board on 1st July 1957?

THE HON. SRI V. RAMAIAH: Eighteen ordinary meetings and one special meeting to consider the Budget.

SRI S. M. ANNAMALAI: அந்த போர்டில் யார் யார் மெம்பர்கள் என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH: The P.W.D. Secretary, the Finance Secretary, the Director of Industries, the Chief Engineer, and one Sri Balakrishna Ayyar, retired Accountant-General.

SRI N. MAHALINGAM: எலெக்ட்ரிஸிடி போர்டு ஏற்பட்டிருப்பதினால் நாம் மத்திய சர்க்காருக்கு வருமான வரி கொடுக்கவேண்டியிருப்பதால், அதனால் ஏற்படக்கூடிய நஷ்டம் எவ்வளவு?

THE HON SRI V. RAMAIAH: தனி கேள்வி வேண்டும்.

MR. SPEAKER: As the hon. Member who gave notice of the question, namely, Sri A. R. Marimuthu, is not in his seat, the question together with the answer thereto will be printed in the official proceedings.



10th April 1958]

*Fisheries*

* 652 Q.—SRI A. R. MARIMUTHU: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether any amount has been received recently from the Central Government for fisheries;

(b) if so, how much; and

(c) how it is proposed to be spent?

THE HON. SRIMATHI LOURDAMMAL SIMON: (a) & (b) A total amount of Rs. 2,76,391 as subsidy and Rs. 1,50,375 as loan have been sanctioned by the Government of India for the current year (1957–58) for the schemes of the Fisheries Department included in the Second Five-Year Plan.

(c) A statement [a] is placed on the table.

*Block Development Officers*

* 653 Q.—SRIMATHI A. S. PONNAMMAL: Will the Hon. the Chief Minister be pleased to state the total number of Block Development Officers and number of Harijan Officers among them?

THE HON. SRI C. SUBRAMANIAM: One hundred and forty-one Block Development Officers are now working. Two of them are Harijans.

SRIMATHI A. S. PONNAMMAL: 135 பிளாக்குகள் இருந்தும் மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள ஹரிஜன அபிவிருத்தி அவைகளில் இலாகா அதிகாரிகள் இருப்பதால் 10 சதவிகிதம் என்று உயர்த்தி அந்த அளவுக்காவது ஹரிஜனங்களுக்கு வேலை கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: நேரடியாக இந்த உத்தி யோகங்களுக்கு நியமிப்பது இல்லை. வேறு இலாகாக்களிலிருந்து மாற்றப் படுகிறார்கள். ஆகையால், அங்கிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்குள்ளே யிருந்துதான் மாற்றப்படவேண்டும். இதிலே சமுதாய அடிப்படையிலே பிரதிநிதித்துவம் வேண்டும் என்று சொல்வது தவறு என்பது என்னுடைய கருத்து.

SRI P. G. MANICKAM: லாயக்குள்ள ஹரிஜனங்களை டைரெக்ட் ரெக்ரூட்மெண்ட் மூலம் சேர்ப்பதற்கு சர்க்கார் யோசனை செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது ப்ளாக் டெவலப் மெண்ட் ஆபீசரைப் பொருத்தது. இப்பொழுது உத்தியோகத்தில் வேறு இலாகாக்களில் இருப்பவர்களை மாற்றுவதன் மூலமாக ப்ளாக் டெவலப் மெண்ட் ஆபீசர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

SRI M. JAGANNATHAN: ப்ளாக் டெவலப்மெண்ட் ஆபீசர் பதவிக்கு நியமனம் செய்வதில் சமுதாய அடிப்படையில் கோருவது தவறு என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எப்படித் தவறாகும் என்பதை அவர்கள் விளக்குவாரா?

THE HON. SRI C. SUBRAMANIAM: நியமனம் செய்வது என்று சொல்லவில்லை. விகிதாசாரப் பிரகாரம் நியமிக்கவேண்டுமென்று சொல்வது தவறு என்று சொன்னேன். இந்த வேலைக்கு யார் தகுதி யாய் இருக்கிறார்களோ அவரைப் பார்த்து நியமிக்கவேண்டும். இது புதி தாக ஏற்படுத்தப்பட்ட உத்தியோகம் அல்ல. உத்தியோகத்திலே இருக்கிற வர்களையே நியமிக்கவேண்டும்.

---

[a] Printed as Appendix I on pages 576–577 infra.

[10th April 1958

*National Extension Service*

* 654 *Q.*—Sri T. VELUCHAMI : Will the Hon. the Chief Minister be pleased to state the reason for not including the eight villages of Veerakeralamputhur, Surandai, etc., in the National Extension Service Block in Alangulam firka of Tirunelveli district after celebrating the inaugural ceremony in all the eight villages on 2nd October 1957?

The Hon. Sri C. SUBRAMANIAM : It was a mistake on the part of the local officials to have celebrated the launching of the National Extension Service Scheme in the Alangulam block in some of the 8 villages under reference. These villages do not form part of the Alangulam block, but are included in the Kilapavoor block, to which the programme will be extended in due course.

Sri D. S. AUTHIMOOLAM : Sir, I rise on a point of order. There is no such block as the Kilapavoor block.

Mr. SPEAKER : The hon. Member may raise this question separately.

Sri T. VELUCHAMI : ஆரம்ப விழாவைக் கொண்டாடிவிட்டு, பின்னால் அந்தக் கிராமங்கள் எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தால் அந்த மக்கள் ஏமாற்றம் அடைந்திருப்பதால், அதை நீக்குவதற்கு சீக்கிரமாக அந்தக் கிராமங்களை தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்வார்களா ?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON**: இப்பொழுது அவ்வாறு உதவி கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. அந்த உதவி கூடுதலாக கொடுப்பதற்கு முயற்சி எடுக்கப்படும்.

**Sri A. VEDARATHNAM**: தஞ்சை ஜில்லாவில் வசிக்கும் மீனவர்களின் மனைவிகளிடமிருந்து அரசாங்கத்தினிடம் உதவி கோரி விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா? அப்படியென்றால் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON**: இதற்கு தகவல் இல்லை.

**Sri S. NAGARAJA MONIGAR**: இம்மாதிரி விபத்துகள் மீன் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மட்டும் ஏற்படுவதில்லை. வேறு பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கும் விபத்துகள் ஏற்படுகின்றன; உதாரணமாக; கிணறு வெட்டும் . . . . . .



**Mr. SPEAKER**: The hon. Member may ask a separate question.

**Sri A. A. RASHEED**: Is there any proposal to appoint Coast Guards for the prevention of sea accidents?

**The Hon. Srimathi LOURDHAMMAL SIMON**: At present there is nothing.

*Non-Gazetted Officers.*

* 695 *Q.*—**Sri N. K. PALANISAMI**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Non-Gazetted Officers' Association applied for permission to register their association under the Trade Unions Act to the Labour Commissioner on 23rd December 1957; and

(*b*) if so, the action taken on their request?

**The Hon. Sri R. VENKATARAMAN**: (*a*) Yes, Sir.

(*b*) The matter is pending before the Registrar of Trade Unions.

**Sri. N. K. PALANISAMI**: சார், இது விஷயமாக சர்க்கார் அட்வகேட் ஜெனரல் அவர்களை கலந்து ஆலோசித்தார்களா? அதைப் பற்றி அவர் என்ன யோசனை சொன்னார்?

**The Hon. Sri R. VENKATARAMAN**: டிரேட் யூனியனில் ரிஜிஸ்தர் செய்வது The Registrar of Trade Unions அவர்கள் பொறுப்பு. அவர் ரிஜிஸ்தர் செய்யாவிட்டால், ஹைகோர்ட்டுக்கு அப்பீல் இருக்கிறது. சர்க்கார் இதில் தலையிடவில்லை.

*State Investment Corporation*

* 696 *Q.*—**Sri A. A. RASHEED**: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have applied for a loan from the Life Insurance Corporation for the State Investment Corporation; and

(*b*) if so, the result thereof?

**The Hon. Sri R. VENKATARAMAN**: (*a*) The Government have not applied to the Life Insurance Corporation for a loan for the Madras Industrial Investment Corporation.

(*b*) Does not arise.

*Employment Exchange*

* 697 *Q.*—**Sri A. A. RASHEED**: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons provided with employment by the Employment Exchange during the year 1957?

**The Hon. Sri R. VENKATARAMAN**: Twenty-four thousand one hundred and sixty-eight.

**Sri A. A. RASHEED**: Has any instruction been given to private firms that persons who apply to the Employment Exchange should be appointed for clerical and technical posts?

[10th April 1958

THE HON. SRI R. VENKATARAMAN : A request has been forwarded to private employers to recruit their personnel through the Employment Exchanges.

SRI A. V. P. ASAITHAMBI : வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களைக் கலந்து கொள்ளாமல் எந்த உத்தியோகத்திற்கும் ஆட்களை எடுக்கக்கூடாது என்ற ஒரு உத்திரவை சர்க்கார் அனுப்புவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a suggestion but it is already in action.

* 698 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of unemployed persons registered in Employment Exchanges in 1957–58; and

(b) how many of them are (i) Graduates; and (ii) undergraduates?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The number of applicants registered at the District Employment Offices in the State during the period 1st January 1957 to 31st December 1957 is 1,60,503.

(b) Of these, 4,251 are graduates and 46,267 are undergraduates.

SRI K. SATTANATHA KARAYALAR : இவைகளில் சில வருஷங்களுக்கு முன்பு ரிஜிஸ்தர் செய்து இப்பொழுது ரி-ரிஜிஸ்தர் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : I have no details.

### *Kundar Bridge*

* 699 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the reason for the delay in executing the Kundar Bridge work in the Shencottah taluk?

THE HON. SRI P. KAKKAN : On inspection of the site of the bridge after the merger of the Shencottah taluk with this State it was found necessary to revise the design for the superstructure to conform to the standards adopted in this State and this has resulted in the revision of the estimates. Hence the work could not be commenced immediately after the merger. The revised estimate has since been finalised and the department expects to proceed with the execution of the work soon.

### *Juvenile Delinquents*

* 700 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to examine the Juvenile Delinquents by a Psychiatrist before they are sent to Borstal Institute?



10th April 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The answer is in the negative. I may add that juvenile delinquents are ordinarily sent to a certified school and not to a Borstal School which is intended for adults.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that in a recent judgment the Magistrate wanted these boys to be examined by a Psychiatrist before they are sent even to a certified school?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is an Honorary Adviser in Psychology and his advice is taken whenever it is needed.

### *Bran*

* 701 Q.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether bran is exported to foreign countries from Tamilnad;

(b) the countries to which bran is exported and the quantity of bran so exported;

(c) the quantity exported in 1955, 1956 and 1957;

(d) the quantity of bran transported to other States in India; and

(e) the quantity of bran imported from foreign countries or other States into this State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The answer is in the affirmative.

(b) & (c) The particulars are as follows :—

| Name of country. | Quantity exported in Tons | | |
|---|---|---|---|
| | 1955 | 1956 | 1957 (January to October). |
| 1 United Kingdom. .. .. | 4,310 | 398 | 80 |
| 2 Singapore .. .. .. | 300 | .. | .. |
| 3 Hongkong .. .. .. | 98 | .. | .. |
| 4 Ceylon .. .. .. | 10 | 535 | 25 |
| 5 Malaya .. .. .. | .. | .. | 5 |
| | 4,718 | 933 | 110 |

(d) A quantity of 246 tons was exported by sea from the Madras State to West Bengal during 1955. This includes fodder and pollards. Figures of exports by rail to other States in India are not available, as they are not recorded separately.

(e) There were no imports of bran into the Madras State during the years 1955 and 1956; a small quantity of bran was imported from foreign countries during 1957.

[10th April 1958

The particulars are as follows :—

| | Name of country. | Quantity in Tons. |
|---|---|---|
| 1 | Australia .. .. .. .. | 10 |
| 2 | United States of America .. .. | 1 |
| 3 | United Kingdom .. .. .. | Actual quantity not available; the value of imports was Rs. 798. |

SRI V. K. KOTHANDARAMAN : சார், நமது நாட்டில் 100-க்கு 80 பேர் விவசாயிகளாக இருக்கக்கூடிய நேரத்தில், நமது கால்நடைகளுக்கு தீனி இல்லாத நேரத்தில், இவைகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அவைகளை பிஸ்கட் போன்ற பலகாரங்கள் செய்து ஒன்றுக்கு 10 ஆக விற்பதற்கு அனுகூலமாக இருப்பதனால் நமது நாட்டு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் அல்லவா? விவசாயிகளுடைய நன்மைக்காகவும், உணவு உற்பத்தியை உத்தேசித்தும், கால்நடைகளின். . . . . .

MR. SPEAKER : இப்பொழுது விவாதம் நடக்கவில்லை. இப்பொழுது கேள்வி கேட்கவேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : ஏற்றுமதிகளை தடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மாட்டுத் தீனிக்காக அரிசி தவிடு இந்த நாட்டுக்கு வேண்டியிருக்கிறது. ஆகவே அதை ஏற்றுமதி செய்யக்கூடாது என்பதுதான் இந்த சர்க்காரின் அபிப்பிராயம். அதை மத்திய சர்க்காருக்கு தெரிவித்திருக்கிறது. முன்னமேயே 'கம்மிட்மெண்ட்' இருந்ததால், அந்த அளவுக்குமட்டும் கொடுத்திருக்கிறோம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

*Village Officers*

9-30 a.m. * 702 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether the Government have taken any decision regarding the demands of Village Officers; and

(b) whether there is any proposal to retain their hereditary system?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The Government have sanctioned the same educational and medical concessions to the Village Officers and their servants as are given to Non-Gazetted Officers of this State.

SRI N. R. THIAGARAJAN rose.

MR. SPEAKER : May I remind the hon. Member that only one Member can speak at a time in the House? Mr. Thiagarajan will please resume his seat. The Hon. Minister may continue.

THE HON. SRI M. A. MANICKAVELU : They have also sanctioned consolidated annual travelling allowance to all Village Officers of settled ryotwari villages and to the karnam (including Triune Officers) of estate villages taken over by the Government. They also enhanced the dearness allowance to the village officers. The Government have not taken any final decisions regarding questions relating to the re-organization of village establishments, revision of scales of pay for village officers and servants and their service conditions.



10th April 1958]

(b) The question of abolishing the hereditary system of appointing village officers is under the consideration of the Government.

MR. SPEAKER : I will take ten more minutes and finish the rest of the questions.

SRI N. R. THIAGARAJAN : இந்த கிராம அதிகாரிகளுடைய பரம்பரை பாத்தியதையை எடுத்து விட்டால் அவர்களை காக்கா பிடிப்பவர்கள் குறைந்து விடும் அல்லவா? அதனால் நாடு க்ஷேமமாக இருக்கும் அல்லவா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : Will the hon. Member please repeat the question?

SRI N. R. THIAGARAJAN : இந்த கிராம அதிகாரிகளுடைய பரம்பரை பாத்தியதையை எடுத்து விட்டால் இப்பொழுது அவர்களை சிலர் காக்கா பிடிக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை குறைந்து விடும் அல்லவா? அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : வெள்ளைக்காக்காய் பிடிக்கிறார்களா அல்லது கருப்புக்காக்காய் பிடிக்கிறார்களா என்பது தெரியவில்லை. இந்தப் பரம்பரை பாத்தியதையை வைத்துக்கொள்ளுவதா இல்லையா என்பதைப்பற்றி ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

MR. SPEAKER : I think before the Hon. Minister answers the hon. Member's question, the Speaker also would like to know the meaning of the word " காக்கா பிடித்தல் ". Well, we will pass on to the next question.

SRI N. K. PALANISAMI : Sir, I was not permitted to put a supplementary.

MR. SPEAKER : All right.

SRI N. K. PALANISAMI : கிராம அதிகாரிகள் விஷயமாக காபினெட் சப்-கமிட்டி ஒன்று போடப்பட்டு பரிசீலனை செய்து இருக்கிறது. அவர்களுடைய சிபாரிசு என்ன என்பதை, கனம் மந்திரி அவர்கள் சொல்லுவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது சொல்வதற்கு இல்லை. கனம் அங்கத்தினர் இதைப்பற்றி தனியாக கேள்வி கேட்டால் அதைப்பற்றி ஆலோசிக்கப்படும்.

*River bund roads*

* 703 Q.—SRI A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to use the river bunds as roads in the Cauvery-Mettur Project areas of the Tanjore district?

THE HON. SRI P. KAKKAN : There is no such proposal but where circumstances have warranted it, suitable portions have already been thrown open for public traffic.

[10th April 1958

### *Coleroon Bridge*

* 704 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the rate of tolls levied on lorries, buses, cars, etc., using the Coleroon Bridge;

(*b*) for what purposes;

(*c*) by whom;

(*d*) the amount collected so far in 1957–58; and

(*e*) how long the levy of tolls will be continued?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*e*) The attention of the Member is invited to the paper[a] laid on the Table of the House.

SRI A. V. P. ASAITHAMBI : இம்மாதிரி கட்டணம் வசூலிக்கப் படுவது கொள்ளடம் பாலத்திற்கு மாத்திரம் வசூலிக்கப்படுகிறதா, மற்ற இடங்களிலும் வசூலிக்கப்படுகிறதா ? சர்க்காரே இந்தப் பாலத்தைக் கட்டியதால் இந்தப் பாலத்திற்கு வெகுவாக வசூலிக்கப்படுவது என் ?

THE HON. SRI P. KAKKAN : இப்படி வசூலிப்பது கொள்ளடம் பாலத்திற்கு மட்டும் அல்ல. கொள்ளடம் பாலத்துடன், முக்காணி பாலத்திலும், தாண்டிக்குடி காட்டு ரோட்டிலும் இப்படியே வசூலிக்கப்பட்டு வருகிறது. தஞ்சை ஜில்லாவுக்கும், தென் ஆற்காடு ஜில்லாவும் அதைக் கட்டுவதற்கு ஈவு கொடுத்திருப்பதால் அப்படி வசூலிக்கப்படுகிறது. அதைத் திருப்பிக்கொடுக்க வேண்டியதாக இருப்பதால் இப்படி வசூலிக்கப்படுகிறது.

### *Culvert in Anumanthai*

* 705 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the present stage of the construction of a culvert in Anumanthai at 4-2/3 of the Tenkasi-Madurai road, included in Part II Scheme of 1957–58?

THE HON. SRI P. KAKKAN : There is no proposal to construct a culvert in Anumanthai at mile 4–2/3 of the Tenkasi-Madurai road as it is not found necessary to construct one at this place. The Government have, however, sanctioned the realignment and reconstruction of a bridge across the Hanuma Nadhi at mile 4/5 of the Tenkasi-Madurai road after consideration as a Part II Scheme for 1957–58. It is expected that technical sanction will be accorded to the detailed estimate for the bridge work shortly and work taken up for execution soon.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கடந்த நான்கு வருஷங்களாக இதற்கு டெக்னிகல் சாங்க்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லுகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக்கொண்டு அதற்கு வேண்டிய உத்தரவையும் போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடியசீக்கிரத்தில் அது எடுத்துக்கொள்ளப்படும்.

கேள்வி எண் 706 கனம் டேனியல் இடத்தில் இல்லாததால் அவருடைய கேள்வியும் பதிலும் நடவடிக்கையின் அறிக்கையில் அச்சடிக்கப்படும்.

[a] Printed as Appendix VII on pages 582–583 infra.



10th April 1958]

### *Salaries of District Munsifs and Judges*

* 706 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state the salaries of District Munsifs and Judges in the Kanyakumari district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Pending integration of their services and fixation of their pay, three of the six District Munsifs allotted to this State from the former Travancore-Cochin State are drawing a salary of Rs. 400 per mensem each, two are drawing Rs. 340 per mensem each, and the last one is drawing Rs. 310 per mensem. The two Subordinate Judges transferred from the Travancore-Cochin State are getting Rs. 540 per mensem and Rs. 480 per mensem respectively. After their services are integrated and the posts held by them immediately before the appointed day are equated with the corresponding posts in this State, their pay will be fixed in accordance with the instructions issued in the matter.

### *Number of children committed to Borstal Institute*

* 707 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state the number of children committed to Borstal Institute in 1956–57?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'Nil '.

If the hon. Member has in mind adolescent offenders, the number is 188.

MR. SPEAKER : Questions and answers are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO MATTER OF URGENT PUBLIC IMPORTANCE *RE* RYOTWARI PATTAS.

MR. SPEAKER : I have received notice of a motion from the hon. Member Sri A. R. Marimuthu, calling the attention of the Hon. Minister for Revenue under Rule 40, to a matter of urgent public importance, viz., the serious situation in Pattukkottai Revenue Division, caused by the failure of many small landholders of former inam and zamin villages to apply in time for ryotwari pattas under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, resulting in loss of their lands, Mr. Marimuthu . . .

## III.—ANNOUNCEMENT BY THE HON. THE SPEAKER.

### POINT OF ORDER *re* REPETITION OF QUESTIONS.

SRI S. LAZAR : Sir, while the question No. 662 was being answered, I raised a point of order as to whether it would be in order to permit the same question, repeatedly which has been answered previously in this House. Of course, the Chair pointed out that I should have been more specific and pointed out the rule itself and observed that it was wrong on my part to have done so. I find in Chapter 6, under Rule 31, sub-rule 11, it is specifically stated that a question which has been fully answered in the House must not be asked again. Sir, it was on this point that I rose to

a point of order. It was not as though I was not able to point the specific rule, but I just raised the point on the spur of the moment and it just struck me.

MR. SPEAKER : If the hon. Member reads the sub-rule 11, he will find that it says 'a huestion once *fully* answered . . .' This question was asked and the hon. Member Mr. Asaithambi put a supplementary and the Hon. Minister said that the Member might put another question. Thus it was not *fully* answered and thus it came in the form of a second question. I do not see how the hon. Member could not understand the implication of the expression "fully answered". Mr. Marimuthu will speak now.

## II.—CALLING ATTENTION TO MATTER OF URGENT PUBLIC IMPORTANCE *RE* RYOTWARI PATTAS—*cont.*

**SRI A. R. MARIMUTHU** : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்காரால் ஜமீன், இனும் ஒழிப்புச் சட்டத்தின் மூலமாக எடுத்துக்கொள்ளப்பட்ட கிராமங்களிலுள்ள ஜமீந்தாரி, இனும்தார் இவர்களுடைய சாகுபடியிலுள்ள நிலங்கள் என்று சொல்லக்கூடிய ப்ரைவேட் லாண்ட்ஸ் என்று சொல்லக்கூடிய நிலங்களுக்கு தனியாக மனுப்போட்டு ரயத்துவாரி பட்டா வாங்கவேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது பட்டுக்கோட்டை டிவிஷன் பகுதியில் அதாவது ஒர்த்தநாடு, அரந்தாங்கி, பட்டுக்கோட்டை தாலூகா பகுதிகளில் ப்ரைவேட் லாண்ட்ஸ் என்று சொல்லப்பட்ட நிலங்கள் ஜமீந்தார், இனும்தார்களிடத்தில் மட்டும் இல்லாமல், வெகு நீண்டகாலமாக ஜமீந்தார், இனும்தார்களிடமிருந்து நிலங்களை விற்பனை செய்ததன் மூலமாக அது பரவலாக எல்லா கிராமங்களிலும் எல்லா மக்களிடத்திலும்கூட இம்மாதிரியான நிலங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்கள் கைக்கு கை மாறிக்கொண்டிருக்கின்றன. அப்படி மாறிக்கொண்டிருப்பதால் பலரிடத்தில் அரை ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் என்றுதான் வைத்துக்கொண்டிருப்பார்கள். அவைகள் எல்லாம் ப்ரைவேட் நிலம் என்ற அடிப்படையில் அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி அரை ஏக்கர் ஒரு ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் மனுச் செய்துகொள்ள வேண்டுமோ அல்லது வேண்டாமோ என்பது அவர்களுக்குத் தெரியாது. அப்படித் தெரியாத நிலைமையில் அவர்கள் அந்த நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாருமே இந்தச் சட்டத்திலுள்ள விதிகளைப் புரிந்துகொண்டு தான் மனுச் செய்து கொள்ளவேண்டும். அப்படி அவர்கள் புரிந்துகொள்ளாத நிலையில் இருப்பதால் அவர்கள் மனுச் செய்து கொள்ளவில்லை. ஆனால் சர்க்காருடைய உத்தரவு எப்படி இருக்கிறது என்றால் அப்படி மனுச் செய்து கொள்ளாமல் இருந்தால் அந்த நிலங்களையெல்லாம் சர்க்காருடைய புரம்போக்கு நிலங்களாகக் கருதப்படும் என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். அதாவது பிப்ரவரி மாதம் **11**-ம் தேதிக்குள்ள ரயத்துவாரி பட்டாவாக மாற்றிக்கொள்வதற்கு அவர்கள் மனுச் செய்து கொள்ளாவிட்டால் அந்த நிலங்கள் பூராவையும் சர்க்கார் புறம்போக்கு நிலங்களாக மாற்றப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அப்படி மனுச் செய்துகொள்ளவேண்டும் என்று தெரியாமல் இருக்கிறார்கள். அந்த நிலைமையில் அவர்கள் நிலங்களை வாங்கி வைத்துக்கொண்டு அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். ஆகையினால் இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயிகள், அதாவது அரை ஏக்கர் ஒரு ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கக்கூடிய விவசாயிகள் இதனால் ரொம்பவும் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் எல்லோரும் தங்களுடைய நிலங்கள் போய்விடுமோ என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். பரிபோய் விடுமோ என்றுகூட கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அரசாங்கம் இதில் தலையிட்டு அப்படி மனுக் கொடுக்கவேண்டும் என்கிற காலத்தை நீடித்து அவர்கள் எல்லோரும் மறு முறை மனுச் செய்து கொள்ளவேண்டிய அவகாசம் கொடுத்து உத்தரவு கொடுக்கவேண்டும்





என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதன் மூலம் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். அவர்கள் பயனடையக்கூடிய நிலைமையில் இருப்பார்கள். ஆகவே இந்த விதியை உடனடியாக சர்க்கார் மாற்றி அமைத்து, மனுச் செய்துகொள்ளும் காலத்தை நீடித்துக்கொடுத்து அவர்கள் எல்லோரும் மனுச் செய்துகொண்ட பிறகு அவர்களுடைய நிலங்களுக்கு பட்டா செய்துகொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, under rule 2 (*a*) of the rules issued under section 67, read with section 15, of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, as amended in 1957, every landholder claiming ryotwari patta under sections 12, 13 or 14 of that Act should apply, in writing, to the Settlement Officer, within six months from the notified date or within two months from the date of publication of the amended rule, whichever is later; but no application should be entertained after the expiry of the date prescribed for the Rough Patta Objection Hearing or the Final Settlement Enquiry, as the case may be, in respect of the village concerned. The amendment was published in the *Fort St. George Gazette*, dated 11th December 1957 and a Press Note explaining it was also issued on 20th December 1957. It was presumably with reference to this amended rule that the Assistant Settlement Officer fixed 11th February 1958 as the last date for the receipt of applications from the landholders claiming ryotwari pattas in the estate areas taken over in the Pattukottai division of Tanjore district. 9-40 a.m.

The Board reported that it would instruct the Estate Managers to publish the amended rule in the villages concerned by beat of tom tom and affixture to the village chavadi or other suitable public building.

The hon. Member has also given a petition in the matter. A detailed report has been called for from the Board of Revenue. The matter will be examined on receipt of the Board's report and suitable orders will be issued.

**SRI S. M. ANNAMALAI** : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார், சட்டமன்றத்தின் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளேயே கையேறு வாரம்தார், மாட்டு வாரம்தார் சம்பந்தமான மசோதாவை கொண்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே சட்டமன்றத்தின் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளேயே இந்த மசோதா கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**MR. SPEAKER** : அது எப்படி பாயிண்டு ஆப் ஆர்டர் ஆகும் ? This is no point of order.

**SRI M. P. SUBRAMANIAM** : I raise this point of order, Sir.

**MR. SPEAKER** : If the members raise the same point of order, it makes no difference. I disallow the point of order.

**SRI M. P. SUBRAMANIAM** : இது வேறு பாயிண்டு ஆப் ஆர்டர் ஸார். சட்டமன்றத்தில் புதியதாக ஒரு அங்கத்தினர் அமர்ந்திருப்பதை நான் பார்க்கிறேன். இவர் ஜெயித்ததுபற்றி எலெக்ஷன் கமிஷன் நோடிபி

கேஷன் வந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்கும்போது, அவருக்கு அங்கத்தினராக பதவியேற்பு பிரமாணம் செய்வித்தது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : I have received intimation from the Election Commission that he has been declared elected. The hon. Member, if he raises a point of order, must be fully aware of the facts. It will be very wrong to raise points of order without sufficient knowledge of what has happened. It is only when I have received advice that the hon. Member is allowed to take his seat in this House.

I rule out the point of order raised by the hon. Member.

The hon. Member Sri M. P. Subramaniam will be well advised in these matters to see the Hon. Speaker in his room and not raise such points of order in the House.

## IV.—ADJOURNMENT MOTION *RE* TAPPING TELEPHONES, CENSORING CORRESPONDENCE, ETC., OF OPPOSITION MEMBERS.

MR. SPEAKER : I have received notice of an adjournment motion from the Leader of the Opposition. The adjournment motion reads—

'That the business of the Assembly be adjourned for discussing a definite matter of urgent public importance, namely, tapping of telephones used by Members of Opposition Parties, censorship of letters addressed to or addressed by Members of Opposition Parties and also the prevention of enrolment of members to Indian National Democratic Congress Party '.

Before I give my ruling I would like to know if the Government have got anything to say on this matter. If the Hon. the Leader of the House has got anything to say, he may speak. Otherwise I will give my ruling.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I do not think I have anything to say.

MR. SPEAKER : Enrolment of members to the Indian National Democratic Congress Party is not the concern of this House. With regard to the other matters, I am afraid they do not come within the rules governing Adjournment Motions. The hon. Member will have an opportunity within the next half an hour to say all that he wants to say while discussing the Appropriation Bill. I, therefore, think that it would not be correct to give permission to move the adjournment motion. I rule the adjournment motion out of order.

## V.—PRESENTATION OF THE SECOND REPORT OF THE COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

SRI K. ANBAZHAGAN : கனம் மன்றத் தலைவர் அவர்களே, அரசாங்க உறுதி மொழிகள் ஆய்வுக் குழுவினுடைய இரண்டாவது அறிக்கையை தங்களுடைய இசைவின் மீதும் அந்தக் குழுவினுடைய இணக்கத்தின் மீதும் நான் இந்த அவைக்கு வழங்குகின்றேன்.





## VI.—ANNOUNCEMENTS BY THE HON. SPEAKER.

### (1) COMMITTEE ON GOVERNMENT ASSURANCES.

MR. SPEAKER : I have to announce to the House that under rule 207 (1) of the Madras Assembly Rules, I have nominated the following Members to serve on the Committee on Government Assurances for the year 1958–59 :—

1 Sri P. G. Karuthiruman.
2 Srimathi P. K. R. Lakshmikantham.
3 Sri M. P. Subramaniam.
4 Srimathi Hemalatha Devi.
5 Sri A. Vedarathnam Pillai.
6 Sri N. K. Palanisami.
7 The Hon. Sri C. Subramaniam.

Under rule 208 (1) of the Assembly Rules, I nominate Sri M. P. Subramaniam to be the Chairman of the Committee.

### (2) THE MADRAS BEEDI INDUSTRIAL PREMISES (REGULATION OF CONDITIONS OF WORK) BILL, 1958.

MR. SPEAKER : I have to announce that the President of India has accorded his sanction to the introduction in the State Legislature of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958.

## VII.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS APPROPRIATION (NO. 3) BILL, 1958 (L.A. BILL NO. 17 OF 1958).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1958 * (L.A. Bill No. 17 of 1958) be taken into consideration."

கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்த மசோதாவை சமர்ப்பிக்கும் முறையிலே எந்த உரையும் நிகழ்த்தவேண்டிய அவசிய மில்லை என்று நான் கருதுகிறேன். கனம் அங்கத்தினர்கள் விவாதத்தின் போது ஏதாவது பிரச்னையை கிளப்பினால், அதுபற்றி பதில் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், கடைசியிலே சொல்லிக்கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1958 (L.A. Bill No. 17 of 1958) be taken into consideration."

According to the decision of the Business Advisory Committee, two hours will be allotted for discussing this Bill. I suppose this is enough. Will half an hour be sufficient for the Hon. the Leader of the House to reply?

THE HON. SRI C. SUBRAMANIAM : Not more than half an hour.

MR. SPEAKER : I find that the National Democratic Congress Party has given me the names of four Members. How am I to permit all the four Members to speak?

SRI M. JAGANNATHAN : Only the names of hon. Members who will speak, have been given.

---

* Published in the *Fort St. George Gazette*, dated 8th April 1958.

[10th April 1958

Mr. SPEAKER : If you are simply giving names, then it is all right.

The motion is before the House for discussion.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, ஒவ்வொரு தனி மான்யமும் விவாதிக்கப்படும்பொழுதும், பொதுவான விவாதத்திலும் நாங்கள் எங்களுடைய கருத்துகளை சொல்லியிருக்கிறோம். இருப்பினும் இப்பொழுது நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால் சர்க்கார் இன்னும் ஒரு வருஷத்திற்கு. . .

Mr. SPEAKER : சப்தம் அதிகமாக இருக்கிறது. கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் பேசுவதை கேட்க முடியவில்லை. சப்தம் குறைவாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri M. KALYANASUNDARAM : இந்தத் தொகையை இன்னும் ஒரு வருஷத்திற்கு செலவழிக்கக்கூடிய அதிகாரத்தை பெற்றுவிட்டோம் என்கின்ற எண்ணத்தில் இல்லாமல் எதிர்க்கட்சியினர் கூறிய யோசனைகளையும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். (குறுக்கீடு) சபையின் அங்கத்தினர்கள் எல்லோரும் யோசனை சொல்லியிருப்பது வாஸ்தவம்தான். இந்தச் சபையில் சர்க்காருக்கு இருக்கக்கூடிய மெஜாரிடி பலத்தை வைத்துக்கொண்டு, எதிர்க்கட்சியினர்கள் கூறிய யோசனைகளை நிராகரிக்கக்கூடாது. அவைகளையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஒவ்வொரு மான்யமும் வோட்டுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டுவிட்டது என்ற எண்ணத்தில், எதிர்க்கட்சியினர்கள் சொல்லிய கருத்துகளை நிராகரித்துவிடக்கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் இதைச் சொல்லுகிறேன். ஏனென்றால் சர்க்கார் அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்களும் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள். நாம் இன்று எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து இயங்கும் ஒரு கட்டத்தில் இருக்கிறோம். எதிர்க்கட்சியினராக இருந்தாலும், ஆளும் கட்சியினராக இருந்தாலும், ஒருவரை ஒருவர் மதித்து, ஒருவருடைய உரிமைகளை மற்றவர் மதிக்கக்கூடிய முறையில் இயங்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அதுவும் அரசாங்க அதிகாரத்தை உபயோகப்படுத்தி கட்சி பலத்தை பெருக்கிக்கொள்ளக்கூடிய போக்கிலே போகக்கூடாது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பல விஷயங்களைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் குறைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. எதிர்க்கட்சியிலிருந்து வரக்கூடிய யோசனைகளை, பிளாக் டெவலப்மெண்டு விஷயத்தில் இருக்கட்டும், அல்லது மற்ற விஷயங்களிலும் ஆகட்டும் எதிர்க்கட்சியினர்கள் கூறினார்கள் என்பதற்காக நிராகரிக்கக்கூடாது என்பதுபற்றி நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஆளும் கட்சியினர் அரசாங்க அதிகாரத்தை உபயோகப்படுத்தி, தங்களுடைய அரசியல் செல்வாக்கை பெருக்கிக்கொள்ள முயலுவதால்தான் சில இடங்களில் தகராறுகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்டவைகளில் ஒன்றுதான், அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களின் நிகழ்ச்சிகளும். அங்கே நடைபெற்ற கூட்டங்களும் பேசப்பட்ட பேச்சுகளும், அவை ஆளும் கட்சியினரின் பிரத்யேக காரியங்களாக இருந்துவந்திருக்கின்றன. இப்போது அந்த நிகழ்ச்சிகளைப் பற்றி ஆலோசனை செய்வதாக கனம் அமைச்சர் சொல்லியிருக்கிறார். அதோடு மட்டுமின்றி, உடனடியாக பல்கலைக்கழகத்தைத் திறந்து பரீட்சை நடத்த ஏற்பாடு செய்யவேண்டும். மாணவர்கள்பால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதையும் பழிவாங்கும் நடவடிக்கை எடுப்பதையும் கைவிட வேண்டுமென்று பல்கலைக்கழக அதிகாரிகளுக்கும் போலீசாருக்கும் சொல்ல வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக்கழகத்தினருக்கு சுதந்திரம் இருக்கிறது என்பது வாஸ்தவம். ஆனால், பல்கலைக்கழகத்தையே அழிக்கக்கூடிய சுதந்திரத்தை பல்கலைக்கழகத்தினருக்கு அரசாங்கம் அளிக்கக்கூடாது. சர்க்கார் இல்லாமல் பல்கலைக்கழகம் இயங்க முடியாது என்பதை பல்கலைக்கழகத்தினருக்கு உணர்த்தவேண்டிய பொறுப்பும் கனம் அமைச்சருக்கு இருக்கிறது. அவர், அதை அவர்களுக்கு உணர்த்த முற்படுவாரானால், அந்தக் காரியத்தில் இந்த சபையின் பூரண ஆதரவும் அவருக்கு இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-50 a.m.



10th April 1958] [Sri M. Kalyanasundaram]

இன்னொரு விஷயம்பற்றிப் பேச விரும்புகிறேன். தொழிலாளர்கள், விவசாயிகள் முதலியவர்களின் கஷ்டங்கள் தீருவதற்கான அறிகுறிகள் இன்னும் காணப்படவில்லை. திருச்சி, கோயமுத்தூர், மதுரை போன்ற நகரங்களில் உள்ள பஞ்சாலைகளில் ஷிப்டுகள் மூடப்படுவதால் தொழில் தகராறுகள் ஏற்பட்டு வருகின்றன. அந்தத் தகராறுகளை சுமுகமாகத் தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். இதுசம்பந்தமான கேள்விக்கு பதிலளிக்கும்போது, கனம் அமைச்சர், மில் முதலாளிகள் எல்லா ஷிப்டுகளையும் நடத்தவேண்டுமென்று சொல்வதற்கு தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறினார். மில் முதலாளிகளுக்கு, அவர்களுடைய ஜெனரேட்டர்களையும் இயக்கி, ஒரு ஷிப்டுகூட மூடாமல் இருக்கவேண்டுமென்று யோசனைகூற வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளின் நலன்களுக்காக சர்க்கார் போட்ட எல்லாச் சட்டங்களும் இப்போது கோர்ட்டுகளில் விவாதிக்கப்படுகின்றன. திருச்சியிலுள்ள கையேர், மாட்டேர் வார விவசாயிகளுக்காக ஒரு அவசரச் சட்டத்தை அரசாங்கத்தார் பிறப்பித்தார்கள். அந்தச் சட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று ஹைக்கோர்ட் தீர்ப்பளிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நியாய வாரச் சட்டம் போன்ற சட்டங்களும் ஹைக்கோர்ட்டில் விவாதிக்கப்படுமோ என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், இந்த விவசாயச் சட்டங்கள் எல்லாமே செல்லுபடியாகாமல் போய்விட்டால் தேவலை என்று அபிப்பிராயப்படுகிறேன். என்னைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டங்களால் அனுகூலத்தைவிட தொந்தரவுகள்தான் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன என்றும், விவசாய உற்பத்திக்குக்கூட குந்தகம் ஏற்பட்டிருக்கிறது என்றும் நான் அபிப்பிராயப்படுகிறேன் ; என் அனுபவத்தில் கண்டதும் அதுதான். பூரண நிலச் சீர்திருத்தம் செய்தால்தான் விவசாயிகளுக்கு கஷ்டங்களிலிருந்து நிவாரணம் ஏற்படும். கிணற்றை முழுவதும் தாண்டவேண்டும். பாதிக் கிணறு தாண்டினால் கஷ்டம்தான். பூரண நிலச் சீர்திருத்தம் கொண்டுவந்து, நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டி, நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் எடுக்கவேண்டும். விவசாயிகளுக்கு தாற்காலிகமாக சில சௌகரியங்களைச் செய்துகொடுப்பதற்காக இந்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக சர்க்கார் சொல்கிறார்கள். சர்க்காரின் நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. நல்லெண்ணத்துடன் அவர்கள் இந்தச் சட்டங்களை கொண்டுவந்தாலும், இவைகளால் கிராமங்களில் விவசாயம் சீர்குலையும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நிலச் சீர்திருத்தம் கொண்டுவரக்கூடாது என்ற எண்ணத்துடன் சிலர் இவ்வாறு கூறுகிறார்கள். அந்த எண்ணத்துடன் நான் இவ்வாறு கூறவில்லை. "பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்" என்ற நிலையில் இருப்பதுபோல், நிலப் பிரபுக்களின் கோபத்தையும் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்றும், அதே சமயத்தில் விவசாயிகளுக்கும் நன்மை செய்யவேண்டுமென்றும் அரசாங்கத்தார் விரும்புகிறார்கள். திருச்சி ஜில்லாவிலுள்ள ஒருவகை விவசாயிகளின் நன்மைக்காக கையேறு வார, மாட்டேறு வார அவசரச்சட்டத்தை சர்க்கார் கொண்டுவந்தார்கள். ஆனால் பொறுக்குக் கமிட்டியில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் அதை ஒருமுகமாக எதிர்த்தார்கள். எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் சொன்னதையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்ளவே இல்லை. அதிகாரிகள் சேகரித்து அனுப்பிய புள்ளிவிவரங்கள்கூட முன்பு அனுப்பப்பட்ட புள்ளிவிவரங்களை மாற்றக்கூடியதாக இருந்தன. அரசாங்கத்தார் ஒரு ரெவின்யூ போர்ட் மெம்பரை அங்கே அனுப்பினார்கள். அரசாங்கத்தார், அவர் கூறிய அபிப்பிராயத்தைக்கேட்டு, அங்கே கையேறுவார, மாட்டேறு வார விவசாயிகளின் தொல்லைகள் தீர்ந்துவிட்டன என்றும் இந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை என்றும் சொன்னார்கள். அவ்வாறு அரசாங்கத்தார் சொன்னதற்குப் பிறகு அந்தச் சட்டத்திற்குப் பதிலாக வேறு எந்த மசோதாவையும் அவர்கள் கொண்டுவரவில்லை. இந்தப் பிரச்னை சம்பந்தமாக, திருச்சியிலுள்ள விவசாயிகள் என்னை டெலிபோனில் கூப்பிட்டு என்னுடன் பேசினார்கள். எனக்கு திருச்சியிலிருந்து தந்திகளும் வந்துகொண்டிருக்கின்றன. கனம் அமைச்சர்களுக்கும் தந்திகள் வந்து

[Sri M. Kalyanasundaram] [10th April 1958

கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன். மிராசுதார்கள் போலீசாரின் உதவியுடன் கையேர் வாரம்தார்களையும் மாட்டேறு வாரம்தார்களையும் அவர்கள் வெகு காலமாகப் பயிரிட்டு வந்திருக்கும் நிலங்களிலிருந்து வெளியேற்றி வருகிறார்கள் என்ற தகவல் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. பயிரிட்டுக் கொண்டிருக்கும் கையேறு வாரம்தார்களையும் மாட்டேறு வாரம்தார்களையும் அந்த அந்த நிலங்களில் தொடர்ந்து பயிரிடுவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று போலீசாருக்கு அரசாங்கத்தார் ஏன் சொல்லக் கூடாது ? அவ்வாறு சொல்வதில் என்ன கஷ்டம் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த விவசாயிகளை பாதுகாக்க வேண்டுமென்று திருச்சி ஜில்லாக் கலெக்டருக்கு ஆலோசனை கூற வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். கோர்ட்டுத் தீர்ப்பு மிராசுதார்களுக்குச் சாதகமாக இருப்பதால் மிராசுதார்கள் அந்தத் தீர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு போலீஸ் உதவியுடன் விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறார்கள். அங்கே, நிலங்களிலிருந்து விவசாயிகளை மிராசுதார்கள் வெளியேற்ற வேண்டுமானால், தாசில்தார் முன்னிலையிலோ ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர் முன்னிலையிலோ அதைச் செய்யவேண்டுமென்றும், உரிய ரெக்கார்டுகளையும் சாட்சியங்களையும் அவர்கள் கொடுக்கவேண்டுமென்றும் சர்க்கார் உத்திரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால்தான் பின்னர் சட்டம் வந்தபிறகு விவசாயிகள் அந்தச் சட்டத்தினால் பலனடைவார்கள். நான் கூறும் இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று கனம் ரெவின்யூ அமைச்சரையும் கனம் முதல் அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன். அவசரச் சட்டத்தின் மூலம் அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று முடிவு கட்டியபின் அவசரச் சட்டத்தை ரத்து செய்ததற்குக் காரணம் என்ன ? ஒருவேளை, அதற்கு அரசியல் காரணம் இருக்குமோ என்றும், எதிர்க் கட்சிகள் சேர்ந்து கிளர்ச்சி செய்ததுதான் அதற்குக் காரணமாக இருக்குமோ என்றும் நான் நினைக்கிறேன். போலீஸ் அமைச்சரும் முதல் அமைச்சரும் அங்கே சுற்றுப்பிரயாணம் செய்தபோது, நிலங்களிலிருந்து தாங்கள் அப்புறப்படுத்தப்படுவதை அவர்களிடம் விவசாயிகள் தெரிவித்திருக்கிறார்கள். அரசாங்கத்தார், அரசியல் நோக்கத்துடன் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள், எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. "எதிர்க் கட்சிகளை எதிர்ப்பதற்கு அரசாங்கப் பணத்தையும் அரசாங்க அதிகாரத்தையும் உபயோகிக்காதீர்கள்" என்று கனம் அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டு, என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : இந்த விஷயத்தைப்பற்றி விவாதிப்பதற்கு குறுகிய காலம்தான் இருக்கிறது. 1½ மணி நேரம்தான் கொடுப்பேன். அந்த நேரத்திற்குள் காங்கிரஸ் அங்கத்தினர்கள் ஆறு பேரும், ஜனநாயகக் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இரண்டு பேரும், கட்சித் தலைவர்கள் இரண்டு பேரும் அதாவது—ஸ்ரீ அண்ணாதுரையும், ஸ்ரீ வி. கே. ராமசாமி முதலியாரும்—பேசவிருக்கிறார்கள். ஆகவே ஒவ்வொரு கனம் அங்கத்தினருக்கும் ஐந்து நிமிஷங்கள் கொடுக்கிறேன். கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் பத்து நிமிஷங்கள் கொடுக்கிறேன்.

* **Sri S. RAMAKRISHNA THEVAR** : கனம் தலைவர் அவர்களே, நான் இந்த சபைக்குப் புதியவன். ஆகவே பேசுவதற்கு எனக்குக் கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கவேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER** : நீங்கள் புதியவர்தான். இது உங்களுடைய முதல் பிரசங்கம். உங்களுடைய முதல் பிரசங்கத்திலேயே, நான் மணியடித்து உங்களை நிறுத்தவேண்டிய அவசியம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு.)

* **Sri S. RAMAKRISHNA THEVAR** : என் தொகுதியானது அதிகமான பிற்பட்ட இனத்தவர்கள் இருக்கும் தொகுதி. அது ஜமீன் பிராந்தியம். சமீபத்தில்தான் எங்கள் பிராந்தியத்திலுள்ள நிலங்களை



10th April 1958] [Sri S. Ramakrishna Thevar]

சர்க்கார் எடுத்துக்கொண்டார்கள். அந்தப் பகுதியில் குளங்கோர்வை புஞ்சை
நிலங்கள் என்ற ஒருவகை நிலங்கள் உண்டு. அந்த நிலங்களில் சாகுபடி
செய்யும் விவசாயிகள் சரி-வாரத்தை எடுத்துக்கொண்டு வந்தார்கள்.
இப்போது, கண்மாய்க்குள் குளங்கோர்வைப் புஞ்சை நிலங்கள் அதிகமாக
இருக்கக்கூடாது என்றும் அவை ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான்
இருக்கவேண்டும் என்றும் அரசாங்கத்தார் முடிவு கட்டியிருக்கிறார்கள்.
இதன் காரணமாக ஆயிரக்கணக்கான விவசாயிகள் அந்த நிலங்களி
லிருந்து வெளியேற்றப்பட்டு வருகிறார்கள். அவர்கள், தங்கள்
பிழைப்பிற்கு வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். முன்பெல்லாம் அவர்
கள் 10 அணா வரிசெலுத்திவிட்டு சரி வாரம் கொடுத்துவிட்டு சரி-வாரம்
எடுத்துக்கொண்டிருந்தார்கள். முன்பெல்லாம், அந்தச் சலுகை அவர்
களுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததால், அவர்கள் நிலங்களை கண்ணும் கருத்து
மாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள். அப்பகுதிகளில் குளம்கோர்வை
புஞ்சையில் பிரவேசிக்கக்கூடாது என்று சர்க்கார் தடை விதித்தால் அவை
கள் சம்பந்தப்பட்டவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை சர்க்கார் 10
பரிசீலனை செய்து சீக்கிரம் அவர்களுக்கு நிவாரணம் ஏற்படச் செய்ய a.m.
வேண்டும் என்பது என்னுடைய முதல் கோரிக்கை.

இரண்டாவதாக, நாங்கள் இருக்கும் பகுதி சமுத்திரக் கரைப் பகுதி.
அந்தப் பகுதியிலே எந்தவிதமான சுகாதார வசதியோ மற்ற குடி
தண்ணீர் வசதியோ, ரோடு வசதியோ கிடையாது. திண்டுக்கல்லிலிருந்து
வட்டாமை வரையில் ரோடு போட்டிருக்கிறார்கள். அந்தப் பக்கத்தில் உப்பு
இருக்கிறது. உப்பு கொண்டுவருவதற்காக அன்றைக்கு இருந்த சர்க்கார்
ஒரு ரோடு போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு நிர்வாகத்திலிருக்கும் அத்
தனை பேருக்கும் அந்த ரோடு எந்த நிலைமையில் இருக்கிறதென்று
நன்றாகத் தெரியும். பண்டைய காலத்தில் ராமபிரான் சீதையைத் தேடி
நடந்துசென்ற சேது ரஸ்தா என்று ஒன்று இருக்கிறது. 'சீதை போனார்,
ராமர் போனார்' என்ற ஒரு பழங்கதைப் பெருமையைத் தவிர, அந்தப்
பாதை மனித சஞ்சாரத்திற்கு அருகதை இல்லாத முறையில் இருக்கிறது.
தஞ்சாவூர் பார்டருக்கும் இராமநாதபுரம் பார்டருக்கும் இடையேயுள்ள
30 மைலுக்குத்தான் கஷ்டம் கொடுத்துக்கொண்டிருக்கிறது. அதைச் சர்க்
கார் கவனிக்கவேண்டும். தேவிபட்டணத்திலிருந்து சுந்தரபாண்டியபட்ட
ணம் வரையில் இருக்கும் பாதை ரொம்பவும் செப்பனிடப்பட்டு பஸ்
போக்கு வரத்து ஏற்பட்டால் பொதுஜனங்களுக்கும் சௌகரியமாக இருப்ப
தோடு, தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து உணவுத் தானியங்கள் கொண்டு
போவதற்கும் வசதியாக இருக்கும். அதையும் உடனடியாக அரசாங்கம்
செய்துகொடுக்க வேண்டும்.

அந்த ஏரியாவிலே பெரிய மேஜர் பஞ்சாயத்து, தொண்டி என்ற
இடம் இருக்கிறது. அங்கே முஸ்லிம்கள் வசிக்கிறார்கள். கோஷா
ஸ்த்ரீகள் ஜாஸ்தி. இரண்டு வருஷங்களுக்கு முன்னாலே லோகல் டெவலப்
மெண்ட்டிலே ஒரு ஆஸ்பத்திரி கட்டியது கட்டினபடியே இருக்கிறது. அது
பூட்டப்பட்டிருக்கிறது. இதுவரையில் அது மக்களுக்கு எந்தவிதமான உப
யோகமும் இல்லாத நிலைமையில் இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு
ஒரு லேடி டாக்டர் நியமிக்கப்படவேண்டுமென்று சர்க்காரை நான் பெரிதும்
கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனது தொகுதியிலே ஹரிஜனங்கள் ரொம்ப ஜாஸ்தி. சர்க்காரால்
கொடுக்கப்படும் நிவாரணங்கள் அவர்களுக்குச் சரியான முறையில் கிடைக்க
வில்லை. ஏனென்றால், அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குக் கிடைக்க
வேண்டிய நன்மைகளை எடுத்துச் சொல்லி வாங்கிக் கொடுக்க இதுவரை
ஒருவரும் முன்வராததால் அங்குள்ளவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்து
வருகிறார்கள். அதையும் உடனடியாகக் கவனித்து, அவர்களுக்கு மற்ற
ஜில்லாக்களிலும், மற்ற தாலூகாக்களிலும் கிடைக்கின்ற வசதிகள் கிடைக்க
ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்தப்படியாக, என்னுடைய ஏரியாவிலே மீனவர்கள் ரொம்ப
ஜாஸ்தி. திருவாடானை, தொண்டி, சுந்தரபாண்டியபட்டணம், தாரங்காடு,
திருப்பாலக்குடி, மோர்ப்பண்ணை இப்படிப்பட்ட பகுதிகள் அதிகமாக மீனவர்
கள் வாழும் பகுதி. சர்க்காரால் கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்

பட்டும், அந்தப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நூல், தூண்டில், வலை, முதலியவைகள் கிடைக்கும் விஷயத்தில் அவர்கள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை. ஏன் கவனிக்கப்படவில்லை என்று சொல்கிறேன் என்றால்—சர்க்கார் கொடுக்காமல் இல்லை—அந்தப் பகுதியில் வாங்கிக்கொடுக்க ஒருவர் இதுவரை முன்வராததால் நடைபட்டிருக்கிறது. அது சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

**Sri B. DORAISAMI REDDIAR :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டசபையில் எத்தனையோ விதமான சட்டங்களை நாம் பாஸ் செய்துகொண்டே போகிறோம். ஆனால், எந்த முறையில் அவைகளைப் பாஸ் செய்துகொண்டு போகிறோம் என்று கவனித்தால் சட்டசபை என்று இருப்பதால் சட்டங்களைப் பாஸ் செய்யவேண்டும் என்ற முதல் கடமையினால் சட்டங்களைப் பாஸ் செய்து வருகிறோம் என்று நினைக்கிறேன். ஆனால், அந்தச் சட்டங்கள் எந்த முறையில் இருக்கவேண்டும் ? எழுதுகின்ற கரும் பலகைக்கு சட்டம் போடுவது பலகையின் பாதுகாப்புக்காக. அதுபோல் ஜனங்களுடைய பாதுகாப்புக்காக இங்கே நாம் போடப்படும் சட்டங்கள் இருக்கவேண்டும். ஆனால், அந்தச் சட்டங்கள் என்ன முறையில் போட வேண்டும் ? கரும்பலகைக்குப் போடப்படும் சட்டங்கள் நயமான மரத்தில் இருந்தால்தான் அந்தப் பலகை பாதிக்கப்படாமல் இருக்கும். அந்த முறையில் அவர்கள் ரொம்ப ஜாக்கிரதையாக சட்டங்கள் போடுகிறார்கள். ஜனங்களுக்குப் போடும் சட்டங்களும் அம்மாதிரியே ஜனங்களைப் பாதுகாக்கக் கூடிய முறையில் இருப்பது நலம் என்று நான் கருதுகிறேன். ஆனால், ரொம்பக் கடினமான மரத்தில் சட்டம் போட்டால் எந்த முறையில் பலகை முறிந்து பாதிக்கப்படுமோ அந்த முறையில் ஜனங்களுக்கு நாம் போடும் சட்டங்கள் கடினமாக இருந்தால் ஜனங்கள் பாதிக்கப்படுவார்கள் என்பது தான் என்னுடைய எண்ணம்.

ஆகையால், சட்டசபை என்று இருப்பதால் சட்டங்களை பாஸ் செய்வது என்ற எண்ணம் கூடாது. நாம் உப்புமா சாப்பிடுகிறோம். உப்புமா என்பதனால், அதிலே அதிகமாக உப்பைப் போட்டுவிட்டால் அதைச் சாப்பிட முடியுமா ? சாப்பிட முடியாது. அதுபோல், சட்டங்களையும் ஒரு திட்டமாகப் போட்டால்தான் அமுல் நடத்த முடியும். ஏற்கெனவே செய்திருக்கும் சட்டங்களை ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கும்போது நாம் மேலும் மேலும் இப்பொழுது சரமாரியாக சட்டங்களைப் பாஸ் செய்வதில் என்ன பிரயோஜனம் என்று நான் கேட்கிறேன்.

ஆனால், தற்போது இரும்புப் பலகைகளாக நூதனமாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமையில் எதிர்க்கட்சி ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த ஸ்டீல் பலகையாகக் கருதப்படவேண்டியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் என்று நான் எண்ணுகிறேன். இந்தச் சட்டங்கள் எல்லாம் எவ்வளவு 'டைட்' டாகப் போட்டாலும் கொஞ்சங்கூட வளையாது இருப்பார்கள் என்பது என்னுடைய கருத்து.

நமது முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் ஆரணிக்கு விஜயம் செய்தபோது சில வார்த்தைகள் பேசினார்கள் : "நாங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக பொறுக்கியெடுத்துப் போட்டவரைத் தோல்வியடையச் செய்துவிட்டு, ரெட்டியாரை வெற்றியடையச் செய்துவிட்டீர்களே ; இம் மாதிரி செய்வது நியாயம் அல்ல" என்று சொன்னார்கள். ஜனங்கள் நியாயமாகத்தான் செய்திருக்கிறார்கள். ஏனென்றால், நாங்களும் காங்கிரஸ்காரர்களாக இருந்தவர்கள்தான். தேர்தலுக்கு பொறுக்கியெடுத்துப் போடும்போது தவறுதல் செய்தார்கள், அதேபோல் ஜனங்களும் தவறுதல் செய்தார்கள். அப்படியிருக்க ஜனங்கள் மீது குறை சொல்வதில் என்ன பயன் ? யார் அந்தத் தொகுதிக்கு லாயக்கானவர்கள் என்று பார்த்துப் போட்டிருக்கவேண்டும். மாடுகளைக் குதிரைகள் என்று ஜனங்கள் ஏற்றுக் கொள்வார்களா ? மாடுகள் மாடுகள்தான். குதிரைகள் குதிரைகள்தான், என்று ஜனங்கள் கருதுகிறார்கள். ஆனால், அதைப்பற்றி வருத்தப்படுவதில் பிரயோஜனம் இல்லை. அப்பொழுது அவர் சொன்னார் : "நாங்கள்தான்



எல்லாம் செய்யக்கூடிய பெருமை படைத்தவர்கள் ; எதிர்க்கட்சிக்கு வோட்டு போட்டு விட்டீர்களே, அவர்கள் என்ன செய்வார்கள் ? அவர்களால் என்ன செய்யமுடியும் ?" என்று கேட்டார்கள். நாங்கள் சிறிய எண்ணிக்கையினர் ஆனாலும், பெரிய எண்ணிக்கையுள்ள ஆளும் கட்சியினரிடம் சொல்லி, ஜனங்களுக்கு வேண்டிய காரியங்களைச் செய்யலாம் என்பது என்னுடைய எண்ணம். இப்பொழுது இருக்கும் ஆளும் கட்சியை எதிர்த்துத் தோல்வியடையச் செய்வதற்கு தற்போது எங்களிடம் பலம் இல்லை. நாங்கள் இன்றைக்கு 'வீக்' ஆக இருக்கிறோம். ஆனால், நீங்கள் மகா பலம் பொருந்தியவர்களாயிருக்கிறீர்கள் என்பதைச் சொல்லாமலேயே தெரிந்துகொண்டிருக்கிறோம். சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. சபாநாயகர் அவர்கள் எனக்கு ஐந்து நிமிஷம் மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்கள்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.

காட்டு இலாகாவைப் பற்றி சில நாட்களுக்கு முன்பு இங்கே விவாதம் நடந்தது. ஆனால், சில தேசங்களில் காடு வளர்ப்பை மிகவும் திறம்படச் செய்திருக்கிறார்கள், என்றுதான் நான் நினைக்கிறேன். வடாற்காடு ஜில்லாவைப் பொறுத்தவரையில் காடு வளர்ச்சித் திட்டம் எப்படி இருக்கிறதென்று சொல்லவேண்டுமானால், முன் காலத்தில் சொல்லக்கூடிய ஒரு பாடல் நினைவுக்கு வருகிறது. அதாவது :

" வேதம் ஓதிய வேதியர்க் கொருமழை
நீதி மன்னர் நெறியினர்க் கொருமழை
மாதர் கற்புடை மங்கையர்க் கொருமழை
மாதம் மூன்று மழையெனப் பெய்யுமே "

என்ற பிரகாரம் அந்தக் காலத்தில் மழை பெய்துகொண்டிருந்தது. அதனால் காடுகள் இயற்கையாக வளர்ந்துக்கொண்டிருந்தது. ஆனால், இப்பொழுது

" அரிசி விற்றிடும் அந்தணர்க்கொரு மழை
வரிசை தப்பிய மன்னருக்கொரு மழை
புருஷனைக் கொன்ற பூவையர்க்கொரு மழை
வருஷம் ஒன்று மழை எனப் பெய்யுமே "

என்ற நிலையில் மழை பெய்வதால் வடாற்காடு ஜில்லாவிலும் காட்டுவளம் குறைந்திருக்கிறது. எவ்வளவுதான் பணம் செலவு செய்து, செடி நட்டாலும், 20 நாள் கழித்துப் பார்த்தால் எல்லாம் உலர்ந்துபோகும் நிலைமைக்கு வந்திருக்கிறது என்பதை நேரில் பார்க்கலாம்.

சத்தியவதிநகரம் ஒரு ஜமீன் பிரதேசம். எங்களுடைய டிஸ்ட்ரிக்ட் அமைச்சர் ரொம்ப சிரமப்பட்டு எவ்வளவோ உபயோகப்படுத்தவேண்டுமென்று எண்ணி வாங்கியிருக்கிறார். இப்பொழுது இருக்கும் காடுகளின் நிலைமை தெரிந்தவர்களுக்குத் தெரியும். அதிகம் சொல்ல வேண்டியதில்லை. டிஸ்ட்ரிக்ட் அமைச்சர் இதைக் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

***Sri A. R. SUBBIAH MUDALIAR :** கனம் சபாநாயகர் அவர்களே, 10-10 a.m.
பூரா பணம் ஒதுக்கு மசோதாவின் மீது பேசும்போது பேசப்படாத முக்கியமான டிமாண்டைப்பற்றி மட்டும் சில வார்த்தைகள் சொல்லப் பிரியப்படுகிறேன். அதாவது நான்கு கோடி ரூபாய் மின்சார போர்டுக்காக கொடுக்கப்படுவதால் ஆனால் அந்த தொகை கடனாக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதால் அதைப்பற்றி பேசுவதற்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போய்விட்டது. முக்கியமாக நம் நாட்டில் விவசாயம் மின்சாரத்தினால்தான் நல்லமுறையில் அபிவிருத்தி அடையவேண்டியிருக்கிறது. மின்சார இலாகாவின் நிர்வாகம் சென்ற ஜூலை மாதம் ஒன்றாந்தேதியிலிருந்து போர்டினிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். அது நடப்பதைப் பார்த்தால் சர்க்காருக்கோ, குடிகளுக்கோ அதன்மூலமாக நன்மை கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்பதை சில உதாரணங்கள் மூலமாக சொல்லிக்கொள்ளப் பிரியப்படுகிறேன். திருநெல்வேலி ஜில்லா சங்கரன்கோயில் பகுதியில் கேரள மின்விசை

சப்ளை கொடுத்துக் கொண்டிருக்கிருர்கள். திடீரென்று பத்து தினங்களுக்கு முன் இண்டஸ்டிரியல் லோட் 25 சதவிகிதம் கட் செய்யப்பட்டிருக்கிறது என்பதாகச் செய்தி வந்தது. ஏன், எதற்கு என்று எவ்விதமான விளக்கமும் கொடுக்கப்படவில்லை. அதைப்பற்றி விசாரித்தபோது இங்கிருந்து தாளையூற்று சிமிண்டு பாக்டரிக்கு (பெ…ர்டு) சப்ளை கொடுத்திருப்பதாகத் தெரிந்தது. ஆனல் இரண்டு மூன்று தினங்கள்தாம். உடனே பவர் கட்டை ரத்து செய்துவிட்டதாக எங்களுக்குத் தகவல் வந்தது. விசாரித்துப் பார்த்தபோது இங்கேயிருந்து தாளையூற்றுக்கு அனுப்பிய கரன்டு அங்கேபோய்ச் சேருவதற்குள் லோட் குறைந்து உபயோகப்படுத்திக் கொள்ள முடியாத நிலைமை வந்துவிட்டதாகவும், அவர்களுக்கு இது வேண்டாம் என்று சொல்லிவிட்டதாகவும் தெரிந்தது. இப்படி இவர்கள் நினைத்தபடியெல்லாம் உத்தரவு போடுகிருர்கள் என்பதற்கு இந்த உதாரணத்தைச் சொல்லுகிறேன்.

அதேமாதிரி சீப்-இன்ஜினியர் 1957-ம் ௵ செப்டம்பர் ௴ 2உயன்று சுற்றறிக்கைப்படி சிஸ்டம் கொண்டுவந்தார்கள். ஆனல் மேஜர் பஞ்சாயத்து ஏரியாவிலுள்ள பம்பு செட்டுக்கு குரூப் சிஸ்டம் நடைமுறையில் இல்லை என்றும், பஞ்சாயத்து ஏரியாவுக்கு மேற்படி கட்டுப்பாடு உத்தரவு போட்டிருக்கிருர்கள். மேஜர் பஞ்சாயத்து ஏரியாவுக்கு ஒரு சட்டம், மைனர் பஞ்சாயத்து ஏரியாவுக்கு ஒரு சட்டம் என்று பம்பு செட்டு முறைப்படி இருக்கிறது. உணவு உற்பத்திக்கு மின்சாரம் மிகவும் அவசியமானது. அப்படியிருக்கும்போது பெரிய பஞ்சாயத்து ஏரியாவுக்கு ஒரு சட்டமும், சிறிய பஞ்சாயத்து ஏரியாவுக்கு ஒரு சட்டமும் என்று எதற்காக இருக்கவேண்டும். அந்த உத்தரவு காப்பியைக் கேட்டபோது அவை ரகசிய தஸ்தாவேஜி என்றும், காப்பி கொடுக்க முடியாது என்றும் சொல்லிவிட்டார்கள். கடன் கொடுப்பதற்குத்தான் அரசாங்கம் இருக்கிறதே தவிர, நஷ்டம் ஏற்படாத வகையில் நிர்வாகத்தை நடத்த வேண்டிய பொறுப்புடையவர்கள் நாங்கள் என்பதாக அவர்கள் சொல்கிருர்கள். அவர்களுடைய நிர்வாகத்தில் தலையிட அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது என்கிருர்கள்.

பத்து வருஷங்களுக்கு முன் எங்கள் பகுதிக்கு மின்சார சப்ளை கொடுக்கப்பட்டது அப்போது அவ்விலாகா ஊழியர்கள் எங்களிடத்தில் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார்கள். மின்சார இலாகாவில் இருக்கிற ஆட்கள் மிகுந்த உபசாரம் செய்வார்கள். ஆனல் இப்போது நாங்கள் அவர்களிடத்தில் சென்று ஏதாவது தகவல் கேட்கப்போனலும்கூட அவர்கள் எங்களுக்கு மரியாதையாக எந்தத் தகவலும் கொடுப்பது இல்லை. 1957-ஜுலை மாதத்திற்குப் பிறகு அவர்களிடம் போய்ப் பேசுவதே கஷ்டமாக இருக்கிறது. ஒரே குறிக்கோளுடன் பேசுகிருர்கள். "எங்கள் நிர்வாகத்தில் தலையிட சர்க்காருக்கு ஒருவிதமான அதிகாரமும் இல்லை. நாங்கள் வைத்ததுதான் சட்டம். போர்டில் நான்அபிஷியல் மெம்பர்கள் இல்லையெனத் தெரிகிறது. நஷ்டம் இருந்தால் சர்க்கார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆகவே நஷ்டம் ஏற்படாது நிர்வாகத்தை நடத்துவதற்கு எங்களிடத்தில் சகலவிதமான பொறுப்பும் இருக்கிறது" என்பதாகச் சொல்கிருர்கள். இப்போதுகூட மந்திரி அவர்கள் அந்த போர்டினுடைய அபிஷியல் மெம்பர்களுடைய பெயர்களைச் சொன்னரே தவிர நான்அபிஷியல் மெம்பர்களைப்பற்றிச் சொல்லவில்லை. போர்டில் நான்அபிஷியல் மெம்பர்கள் இல்லையெனத் தெரிகிறது. ஒரு நான்அபிஷியல் சார்மென் ஆக இருந்தால்தான் அந்த நிர்வாகம் செம்மையாக நடைபெறும். மக்களுடைய கஷ்டத்தை அவரிடத்தில்தான் நேரிடையாகச் சொல்லி தீர்த்துக்கொள்ள முடியும். விவசாயிகளை இரவில் தண்ணீர் பாய்ச்சவேண்டுமென்று உத்தரவு போடுகிருர்கள். ராத்திரி 9 மணிக்குமேல் சோளம், கம்பு இவற்றுக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியுமா? காலையில் சப்ளை செய்வதால் ஹெவிலோட் ஆகிவிடுகிறது என்று சொல்கிருர்கள். இரவில் கரண்டு கொடுப்பதனல் விவசாயத்திற்குச் சரியான முறையில் உபயோகப்படுத்திக்கொள்ள முடியாது போகிறது. இந்த எல்லாக் குறைகளையும் நான்அபிஷியல் சார்மெனைப் போட்டால்



நிவர்த்தி செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிச் செய்தால்தான் அதிலுள்ள குறைபாடுகளை எல்லாம் நிவர்த்தி செய்ய முடியும். ஜனங்களுக்கும் நன்மை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அத்துடன் 18 சதவிகிதம் வட்டிக் கணக்குப் போட்டு திட்டம் போடுகிருர்கள். சர்க்கார் 10 சதவிகிதம்தான் வாங்கவேண்டுமென்று முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் 18 சதவிகிதம் வசூல் செய்ய திட்டம் போட்டிருக்கிருர்கள். இதைப்பற்றியும் நன்ருகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு செய்தால்தான் விவசாயிகளுக்கு மின்சார விஸ்தரிப்புத் திட்டங்களினல் நல்ல பயன் ஏற்படும் என்று சொல்லிகொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

**Sri P. U. SHANMUGAM** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் முடிகிற தருணத்தில் சர்க்கார் சார்பில் கொண்டுவந்திருக்கிற அப்ரோப்ரியேஷன் பில்லையொட்டி திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சொல்கின்ற சில சொற்களை வைத்துக்கொண்டு நேற்றைய தினமும், அதற்கு முந்திய தினமும் இம்மாமன்றத்தில் பேசியவர்கள் குறை கூறியிருக்கிருர்கள். பொதுவாக திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் பேசிய பேச்சில்—தமிழில்—குறை இருப்பதாகச் சுட்டிக்காட்ட முன் வந்தவர்கள் தங்களுடைய பேச்சில் குறையில்லாதவாறு பேசியிருந்தால் நன்ருக இருந்திருக்கும். சட்டமன்றத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக அவர்களுக்குத் தாழ்மையுடன் சொல்லிக் கொள்வேன்—இலக்கணப்படி பேசவேண்டுமென்ருல் ஒருவன் என்பதற்குப் பெண்பால் ஒருவள் அல்ல—ஒருத்தி என்று சொல்லவேண்டும். இம்மாமன்ற உறுப்பினர் ஒருவள் பேசினள் என்பதற்கு ஒருத்தி பேசினள் என்று சொல்வது இலக்கணத்தோடு ஒட்டியதாக இருந்தாலும் ஒரு அம்மையார் பேசினர்கள் என்று மதிப்புடைய சொல்லாகவே இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களாகிய நாங்கள் பேசிவந்திருக்கிருேம். அதுவும் இன்றி நாங்கள் அடிக்கடி சொல்லி வருகிற இதரர் என்ற சொல்லை அஃறிணை என்று சொல்லிவிட்டார்கள். அதற்காக மிகமிக வருந்துகிறேன். அதைப்பற்றி தமிழ்ப் புலவர்க ளிடத்தில் விசாரித்தேன். வழக்கத்தில் அதன் பொருள் என்ன என்பதைப்பற்றியும் நன்ருக விசாரித்துத் தெரிந்துகொண்டேன். அந்தச் சொல் அஃறிணையைக் குறிக்காது. அப்படிச் சொல்கிறவர் அஃறிணையை தவிர என்று குறிப்பிட்டார்கள். சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சொல்லும் கருத்துக்கள் எல்லாம் ஆளும் கட்சியினர் செய்கிற காரியங்களையெல்லாம் எதிர்த்துச் சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல் லப்படுவன அல்ல. சட்டமன்றத்தில் நாங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் எங்கள் கட்சியின் கொள்கையைக் குழைத்துக் கொடுக்கும் கருத்துக்கள் தாம் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இதைப்புரிந்து கொள்ளாமல் எங்களைப்பற்றி வெளியில் தவருகப் பேசப்படுவதைக் கண்டிக்க விரும்பு கிறேன். பொதுவாக 64 கோடி ரூபாய்க்கு மேல் பலபல காரியங்களுக்காக பணத்தை ஒதுக்கியிருக்கிற நம் சர்க்கார், ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தை நல்ல முறையில் செலவு செய்யவேண்டுமென்பது திராவிடக் கட்சிக்காரர் களின் கொள்கையாகும். ஒதுக்கப்பட்ட தொகையை செலவு செய்யாமல் மிச்சப்படுத்தி வைப்பது சரியல்ல என்று சொல்ல விரும்புகிறேன். அதுவும் குறிப்பாக கல்வி மானியத்தின் மீது பேசிய பல மெம்பர்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஒதுக்கப்பட்ட தொகை எதற்காக ஒதுக்கப்பட்டதோ அதற்குச் செலவழிக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஏன் செலவழிக்கப்பட வில்லை என்பதற்கு சரியான காரணம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். கட்டிடம் கட்டவில்லை, பள்ளிக்கூடம் திறக்கவில்லை என்று சொல்லப்படுகிற பதில் சரியல்ல. ஒரு ஆண்டுக்கு முன்னரேயே அதற்காகப் பணம் ஒதுக்கி வைத்தும் அந்த வேலையைச் செய்யவில்லை என்று திராவிட முன்னேற்றக் கழகம் குற்றம் சாட்டுவதில் தவறு இல்லையென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

10-20 a.m. சிதம்பரம் பல்கலைக் கழக சம்பவம் குறித்தும் சர்க்கார் திராவிட முன்னேற்றக் கழகத்தை தங்களுடைய பலம்கொண்ட குரலில் கண்டித்தும் தாங்கள் செல்கிற எல்லாயிடங்களிலும் அதைப்பற்றி ஏசியும் பேசியும் வருகிறார்கள். இது, நாடறிந்த உண்மையாகும். இந்த மன்றத்தில் பேசும்போது ஒன்றும், வெளியில் பேசும்போது ஒன்றும் ஆளுகிறவர்கள் பேசுவதைப் பார்க்கும்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வருந்தாமல் இருக்க முடியாது. பொதுவாக பல்கலைக் கழகங்களுக்கு இருக்கிற அதிகாரத்தை வாங்கி வேறு ஒருவருக்கு கொடுத்துவிட வேண்டுமென்ற கருத்தை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அண்ணாமலை பல்கலைக் கழக சம்பவத்திற்கு யார் காரணமாக இருந்தாலும் சரி—ஒரு பத்து பதினைந்து மாணவர்களாக இருக்கக்கூடும். அமைச்சர்கள் சொல்வது உண்மைக்கு மாறானது என்று நான் சொல்லவில்லை. அதை அப்படியே ஏற்றுக்கொண்டாலும் ஒரு பத்து பதினைந்து மாணவர்கள் செய்த குற்றத்திற்காக ஒரு பல்கலைக் கழகத்தையே மூடிவைத்திருப்பது, பரீட்சைத் தேர்வுகளை தள்ளி வைத்திருப்பது ஜனநாயகத்திற்கு, அதுவும் நமது சர்க்காருக்கு உகந்ததல்ல என்று என் கருத்தை நான் மிகவும் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வெள்ளைக்காரன் நம்மை ஆண்ட காலத்தில் கிராமங்களில் ஏதாவது குற்றம் நடந்தால் கிராம மக்கள் எல்லோருக்கும் பொதுவாக தண்டவரி போடுவார்கள். அப்படி அவர்கள் செய்ததை நாம் கண்டித்து வந்தோம். ஒரு சிலர் செய்த குற்றத்திற்காக கிராம மக்கள் எல்லோருக்கும் தண்ட வரி விதிப்பது என்பது சரியல்ல என்று நாம் சொல்லி வந்தோம். அதைவிட மோசமான செய்கையாகும், இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற காரியம்—ஒரு சிலர் செய்த குற்றத்திற்காக ஒரு பல்கலைக் கழகத்தையே மூடி வைத்திருப்பது—என்று நான் இந்த அரசாங்கத்தை குற்றஞ்சாட்டுகிறேன். பத்துப் பதினைந்து மாணவர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக இவ்வரசாங்கம் ஒரு பல்கலைக் கழகத்தையே தண்டித்திருக்கிறது. அது, ஒரு "ஆட்டானமஸ் பாடி" என்று அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டாலுங்கூட இம்மன்ற ஆலோசனைக்குழு மூலம் அவர்களுக்கு ஆலோசனை சொல்ல உரிமையிருக்கிறது என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். ஆகவே, அப்படி அவர்களுக்கு ஆலோசனை சொல்லி அப் பல்கலைக் கழகத்தை திறந்து தேர்வுகளை கூடியசீக்கிரம் நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**SRI A. VEDARATHNAM** : பல்கலைக்கழகத்தை திறப்பதோ, மூடுவதோ இந்த அரசாங்கத்தின் கையில் இருக்கிறதா ? அந்த விஷயத்தைப்பற்றி இங்கு பேசுவது முறையா ? On a point of order....

**MR. SPEAKER** : அவர் ஒரு யோசனைதான் சொல்கிறார்.

**SRI P. U. SHANMUGAM** : பல்கலைக் கழகத்தை திறப்பதற்கு ஆலோசனை சொல்லலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் என்றுதான் என் பேச்சில் நான் குறிப்பிட்டேன். அதை சரிவர அவர் காதில் வாங்கவில்லை போலும். அதுபற்றி ஆலோசனை சொல்ல இந்த சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் நேற்று முன் தினம் கல்வி மான்யக் கோரிக்கை பற்றிய விவாதம் நடந்தபோது குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்தாகச் சொல்கிறேன். அப்பல்கலைக் கழகத்தை விரைவில் திறக்க முயற்சி செய்ய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். மாணவர்கள் தவறு செய்திருந்தால், அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருந்தவர்களாக இருந்தாலும்சரி, அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதை திராவிட முன்னேற்றக் கழகம் கூட தடுக்காது, அதை ஓரளவு ஏற்கக்கூடும். அமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள்தான் அதைச் செய்தார்கள் என்று சொன்னால் எங்களால் இயன்றளவு அக்குறைகளை களைய முற்படுவோம். யார் குற்றம் செய்திருந்தாலும் முதலாவதாக பல்கலைக் கழகத்தை திறந்து தேர்வுகள் நடத்தவேண்டுமென்று இவ்வரசாங்கத்தை பணிவோடு வேண்டிக்கொண்டு இந்த ஆலோசனையை அவர்களுக்குச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



* **SRI R. SUBRAMANIAM** : கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த அப்ரோப்பிரியேஷன் பில்லை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். நேரம் மிகவும் குறைவாக இருப்பதால் முக்கியமான சில பாயிண்ட்களை மட்டும் சொல்கிறேன். அதைக் கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். நம் ராஜ்ய வருமானத்தில் கணிசமான ஒரு தொகையை ஹரிஜன நலனுக்காக நாம் செலவிட்டு வருகிறோம். அதற்காக நாம் ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்ட் ஒன்று ஏற்படுத்தி அதற்கு தலைவராக டயரக்டர் ஒருவரையும் போட்டு எல்லாவித வேலைகளும் செய்து வருகிறோம். ஆகவே, நாம் ஒதுக்கக்கூடிய பணம் நல்ல முறையில் செலவிடப்படவேண்டுமென்று நான் சில யோசனைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது டயரக்டராக இருப்பவருக்கு அவரது வேலையை சரியான முறையில் செய்ய முடியவில்லை. ஏனெனில், ஹரிஜன வெல்பேர் ஆபீஸர்கள் ஆங்காங்கு ஜில்லா கலெக்டரைத் தலைவராகக் கொண்டு எல்லா ஸ்கீம்களையும் அங்கிருந்தே அனுப்புகிறார்கள். சர்க்காருக்கு அனுப்பக்கூடியது, வெல்பேர் ஆபீஸர்கள் மூலம் வருகிறது. இரண்டாவதாக, சென்ட்ரல் கவர்ன்மெண்டில் இருந்து காலேஜைப் பொறுத்தவரையில் பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் சாங்க்ஷன் செய்து விடுகிறார்கள். ஆக, டயரக்டர் நேரடியாக ஹரிஜன முன்னேற்றத்திற்கு செய்யக்கூடிய வேலைகள் குறைவாகயிருக்கிறது. கலெக்டர் ஆபீஸைப் பொறுத்தவரையில் இவருக்கு அங்கு ஒருவித அதிகாரமும் இல்லை. எல்லா ஸ்கீம்களையும் கலெக்டரே செய்வதால் அதை மறுத்துச் செய்யவோ அல்லது ஆட்சேபித்துச் செய்யவோ இவருக்கு அதிகாரம் இல்லை. ஆகவே, இந்த ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டை ரெவன்யூ டிபார்ட்மெண்டோடு இணைத்து ஹரிஜன் வெல்பேர் டயரக்டருக்கு டெபுடி கமிஷனர் என்ற பெயரைக் கொடுத்து இவருக்கு கலெக்டர் ஆபீஸில் ஓரளவு அதிகாரம் கொடுத்தால்தான் ஹரிஜன முன்னேற்றத்திற்காக அவர்கள் நன்கு வேலை செய்ய முடியும். இப்பொழுதுள்ள நிலையில் ஹரிஜன் வெல்பேர் ஆபீஸை இன்ஸ்பெக்ட் செய்யக்கூட இவருக்கு அதிகாரம் இல்லாத ஒரு நிலைதான் இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி இணைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். அல்லது "எக்ஸ் அபிஷியோ செக்ரட்டரி"யாக இவரை நியமித்து அந்த விதத்திலாவது கலெக்டர் ஆபீஸ்மேல் இவருக்கு அதிகாரம் இருக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, இந்த ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டைப் பொறுத்தவரையில் ஸ்டாப் குறைவு என்று நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன். ஸ்டாபை அதிகப்படுத்த வேண்டும். அதற்கு செலவு அதிகமாகும் என்று சர்க்கார் கருதினாலும் கூட அதற்கு நான் ஒரு யோசனை சொல்கிறேன். ஹரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டில் இருந்து புதிதாக பள்ளிகள் திறப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள பள்ளிகளைத்தான் நிர்வகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த பள்ளிகளை ஹரிஜன வெல்பேர் டிபார்ட்மெண்டில் இருந்து கல்வி இலாகாவிற்கு மாற்ற வேண்டும். அப்படி மாற்றினால் ஓரளவு இந்த ஸ்டாபுக்கு வேலை குறையும். அதோடு அவர்கள் ஹரிஜன முன்னேற்ற வேலைகளிலும் அதிகம் ஈடுபடவும் சாத்தியமாக இருக்கும். இதையும் அரசாங்கம் கவனிக்கவேண்டும். அடுத்தபடியாக, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம். இதை இரண்டு விதத்தில் செய்யவேண்டும். ஒன்று, சட்டத்தை பிரயோஜனப்படுத்தவேண்டும், கூட பிரசாரமும் நடக்கவேண்டும். அப்படி பிரசாரம் செய்வதற்கு நாம் ஆங்காங்கு டெப்டி சேவக்குகளை நியமனம் செய்கிறோம். தாலுகாவிற்கு ஒன்று, அல்லது இரண்டு தாலுகாவிற்கு மூன்றல்லது நான்கு பேர்கள் போட்டு விடுவதால் மட்டும் ஒரு பிரயோஜனமும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இப்பொழுதுள்ள நிலையில் அவர்கள் ஜாதி ஹிந்துக்களை அணுகி பேசி தீண்டாமை ஒழிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஹரிஜன தின விழா கொண்டாடுவதை ஒரு ஜாதி ஹிந்து தெருவில் வைத்து நடத்த அவர்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, செல்வாக்குள்ளவர்களை, ஜாதி ஹிந்துக்களிடையேயிருந்து ஹரிஜன முன்னேற்றத்திற்காக வேலை செய்யக்கூடியவர்களைப் போட்டு வேலை செய்தால் அது பிரயோஜனகரமாக இருக்கும். ரிட்டயர்ட் தாசில்தார் அல்லது

[Sri R. Subramaniam] [10th April 1958

டெப்டி கலெக்டர் போன்றவர்களைப் போட்டு அவர்களுக்கு ஒரு "ஆன ரேரியம்" கொடுத்து அவர்களை அமர்த்தினால் இந்த தீண்டாமை ஒழிப்பு வேலை நன்கு நடைபெறும். அடுத்தபடியாக, நாம் தீண்டாமை ஒழிப்பு வேலைக்காக ப்ரைஸ் கொடுக்கிறோம். தீண்டாமையை ஒழிக்கவேண்டியது ஜாதி ஹிந்துக்கள் செய்யவேண்டிய வேலை. ஆகவே தீண்டாமையை ஒழிக்க பாடுபடும் ஜாதி ஹிந்துக்களுக்கு அந்த ப்ரைஸ்களைக் கொடுத்தால்தான் நல்லதே தவிர அவைகளை ஹரிஜனங்களுக்கே கொடுப்பதில் அர்த்தமில்லை. ஆகவே, இனிமேலாவது இந்த மாதிரி தீண்டாமை ஒழிப்பிற்காக வேலை செய்தவர்களுக்கு ப்ரைஸ் கொடுக்கும்போது அவைகளை ஹரிஜனங்களுக்கு கொடுப்பதை அடியோடு நிறுத்திவிட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

**SRI J. MATHA GOWDER** : சபாநாயகர் அவர்களே, இம்மொத்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது அல்லது சர்க்கார் பணத்தில் வெளியில் சுற்றி மக்களின் பணத்தை கட்சிப் பிரசாரத்திற் காக செலவு செய்து வருகிறார்கள் என்று இங்கு அடிக்கடி பேசிக்கொண் டிருக்கிறார்கள். அமைச்சர்கள் அதிகமாக சுற்றுப்பிரயாணம் செய்து ஒவ் வொரு கிராமங்களுக்கும் போனால்தான் கிராமமக்களின் கஷ்டங்களை நேரில் தெரிந்துகொண்டு அதற்கு வேண்டிய திட்டங்களை வகுக்க முடியும். எந்த இடத்தில் யாருக்கு, என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று நேரில் பார்த்து தெரிந்துகொண்டால் அவைகளை வெகு விரைவில் தீர்க்க முடியும். அப்படியிருந்தும் ஏன் இப்படி சொல்கிறார்கள் என்றால், அமைச் சர்கள் இப்படி சுற்றுப்பிரயாணம் செய்து காங்கிரஸ் செய்யும் நல்ல காரி யங்களை மக்களிடம் எடுத்துச் சொல்வதால் அதை மக்கள் புரிந்து கொண்டு விட்டால் மக்களிடையே எதிர்கட்சிகளுக்கு ஆதரவு இல்லாமல் போய் விடுமே என்ற காரணத்திற்காக சொல்கிறார்களே தவிர வேறு எதற் காகவும் அல்ல.

10-30 a.m. ஆகையினால் நான் நமது அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். எந்த ஜில்லாவுக்கு போகாமல் இருந்தாலும் சரி, பிற்போக்கான நிலையில் இருக்கும் நீலகிரி ஜில்லாவுக்கு வந்து அங்குள்ள ஒவ்வொரு கிராமங் களுக்கும் சென்று அங்குள்ள கஷ்டங்களை எல்லாம் நேரிடையாக கண்டு அவைகளை தீர்த்து வைப்பதற்குவேண்டி அந்த இடங்களுக்கு எல்லாம் அடிக்கடி வரவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன். நீலகிரி ஜில்லா மிகவும் பிற்போக்கான ஜில்லாவாக இருக்கிறது. அந்த ஜில்லாவுக்கு அதிகமாக பப்ளிஸிட்டி வேண்டும் என்று நான் ஏற்கனவே சர்க்காரிடத்தில் சொல்லியிருக்கிறேன். காஷ்மீர் போன்ற இடங்களுக்கு எவ்வளவோ பப்ளிசிட்டி கொடுக்கப்படுகிறது. ஆனால் நம்முடைய சென்னை மாகாணத்தில் இருக்கிற மலைப்பிரதேசமான நீலகிரி ஜில்லாவுக்கு அதிகமாக பப்ளிசிட்டி கொடுக்கவேண்டும். காஷ்மீர் போன்ற இடங்களுக்கு கொடுக்கப்படும் பப்ளிஸிட்டி போன்று அயல்நாடுகளுக்கு இதன் முக்கியத்து வத்தை எடுத்துசொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சில தினங்களுக்கு முன் இங்கு சொல்லப்பட்டது, அதாவது தமிழர்களுடைய நன்மையைக் கருதி உதகமண்டலத்தில் இந்த சட்டசபையை கூட்டு வதற்கு அனுமதிக்க முடியாது என்று திராவிட முன்னேற்ற கழகத்தார் சொல்லிவிட்டார்கள். தமிழர்களுடைய நன்மையை கருதி சம்மதிக்கவில்லை என்று சொன்னால் நீலகிரி ஜில்லாவில் இருப்பவர்கள் எல்லாம் தமிழர்கள் இல்லையா என்று கேட்கிறேன். அங்கு இருக்கக்கூடிய இரண்டரை லட்சம் மக்கள் தமிழர்களாக இருந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் என்பது இவர்களுடைய அபிப்பிராயம் இல்லை என்று தோன்றுகிறது. அவர்களுடைய நல்வாழ்வுக்காக உதகமண்டலத்தில் வைத்து சட்டசபையைக் கூட்டவேண்டும் என்று சொன்னால், தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து அங்கு வருவதற்கு சம்மதிக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். பரவாயில்லை, அங்குள்ள மக்கள் இவர்களைப்பற்றி தெரிந்து கொள்வார்கள். யார் நமக்கு தடங்கலாக இருக்கிறார்கள் என் பதை அங்குள்ள மக்கள் புரிந்து கொள்வார்கள். ஆகவே இதைப்



10th April 1958] [Sri J. Matha Gowder]

பற்றியுள்ள முடிவு எடுப்பதற்கு சர்க்காருக்கும் எதிர்கட்சிகளுக்கும் பொறுப்பு இருக்கிறது. ஒருவேளை பட்டணத்திலே சட்டசபையை நடத்தி இங்கேயே தங்களுடைய செல்வாக்கை வளர்த்துக்கொண்டு இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் எண்ணவேண்டி யிருக்கிறது. நான் இதைப்பற்றி சொன்ன காரணத்திற்காக அன்பர் கருணாநிதி அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். சட்டசபையில் திராவிட முன்னேற்றக்கழகத்தார்களாகிய நாங்கள் சாதித்தது என்ன வென்றால் நீலகிரி ஜில்லாவில் சட்டசபையை நடத்துவதற்கு இருந்ததை நாங்கள் தடுத்திருக்கிறோம் என்று "தமிழ்நாடு" பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். அதைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டேன். சட்டசபை உதகமண்டலத்திற்கு போவதை நிறுத்தி வைத் திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் அக் கறை கொள்ளவில்லை. நீலகிரி ஜில்லா சென்னை மாகாணத்தில் பிற் போக்கான ஜில்லாவாக இருக்கிறது. அந்த ஜில்லா புறக்கணிக்கப்படுவதைப் பார்த்து நான் வருத்தமடைகிறேன். ஆகவே இந்த சட்டசபையை அங்கு நடத்துவதற்கு மீண்டும் ஒரு முறை எல்லோரும் ஆலோசித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**SRI K. RAMACHANDRAN** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். முக்கியமாக மூன்றாவது நிலச்சட்டத்தை இந்த வருஷத்திலேயே கொண்டு வரவேண்டும் என்று முதலில் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தப்படியாக நான் பல ஆண்டுகளாக சொல்லிவருகின்ற குளம் புறம்போக்கு விஷயத்தில் இப்போது ஒரு புது திருப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் நான் இதுவரை ஒருவன் ஒரே குரலில்தான் பாடிக்கொண்டிருந்தேன். இப்போது பக்கப்பாட்டுக்கு ஆளும் கட்சியி லிருந்தே ஒருவர் வந்திருக்கிறார். ஆகவே இனிமேலாவது இதில் அரசாங் கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நினைக்கிறேன். இந்த விஷயத்தில் இன்னும் அசட்டை செய்து கொண்டிருந்தால் இந்த விஷயம் இன்னும் மோசமான நிலைமையை அடைய நேரிடும் என்பதை சொல்லிக்கொள் கிறேன். ஆகவே இதில் தக்க கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள் கிறேன். அடுத்தபடியாக ராமனாதபுரம் ஜில்லாவை பொறுத்தவரையிலும் ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அந்த ஜில்லா இப் போது மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது, இரண்டு மூன்று தாலூகாக்களை தவிர அந்த ஜில்லாவில் ஐந்து தாலூ காக்கள் மிகவும் வரண்ட பிரதேசமாக இருக்கின்றன. பல வருஷங்களாக அந்த இடங்கள் கவனிக்கப்படாமலே இருந்துகொண்டு வருகின்றன. அங் கிருந்து யார் வந்தாலும் அந்த இடங்கள் கவனிக்கப்படாமல் இருந்து வந்திருக்கிறது. அந்த இடங்களில் எக்ஸ்-ஜமீன்தாரி ஏரியாவைப் பொறுத்தவரையிலும் அதைப்பற்றி விசாரிப்பதற்கு ஒரு ஹைபவர் கமிட்டி ஏற்படுத்தி அந்த பகுதியில் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டும் என்றும், என்னென்ன காரியங்களை கவனிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் விசாரிப்பதற்கு 1952-ம் வருடத்தில் அருள்தாஸ் என்பவரை ஸ்பெஷல் ஆபீஸராக போட்டார்கள். அவர் அந்த பகுதியில் செய்யவேண்டிய முன் னேற்றகரமான காரியங்களைப்பற்றி கிட்டத்தட்ட 100 பக்கங்களுக்கு மேலாக ஒரு புத்தகத்தை தயாரித்து கொடுத்தார்கள். அதை எடுத்து திருப்பி பார்ப்போமானால் அதில் ஒன்றுகூட அமுல் செய்யப்படவில்லை என்று தெரியும்போது மிகவும் கவலைப்பட வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்களிடத்தில் இதைப்பற்றி கேட்கும்போது ஏதோ அந்த ஆபீஸர் கதை பண்ணிக்கொண்டு போயிருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். அவர்களே நியமித்த அதிகாரி அவ்விதம் செய்திருக்கிறார் என்றால் வேறு ஒரு அதிகாரியை நியமித்து அந்த பகுதிக்கு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்ந்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த ஐந்து தாலூகாக்களையும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் எந்த வேலைகளிலும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. அங்கு மேலும் பொருளாதார முன்னேற்றத்திற்கான வசதிகள் எல்லாம்

[Sri K. Ramachandran] [10th April 1958

செய்து கொடுப்பதற்காக எந்த நடவடிக்கையும் எடுத்திருப்பதாக தெரிய வில்லை. மேலும் இப்போது ஸ்ரீவில்லிப்புத்தூரில் ஒரு டெக்ஸ்டைல் மில் ஏற்படுத்தப்போவதாக தெரிகிறது. இந்த மில்லை ஆரம்பத்தில் அருப்புக் கோட்டையில் ஏற்படுத்தவேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருந்ததாக தகவல் கிடைத்திருக்கிறது. ஆனால் இப்போது அந்த மில் ஸ்ரீவில்லிபுத்தூ ருக்குப் போய்விட்டது. அங்கு மில் வைக்கவேண்டாம் என்று நான் சொல்ல வில்லை. அங்கு பக்கத்தில் ராஜபாளையம் பகுதி, மில் ஏரியாவாக இருக்கிறது. இந்த மில் ஏற்படுத்துவதின் நோக்கமே கைத்தறியாளர்களுக்கு நூல் கொடுக்கவேண்டும் என்பது. அந்த விதத்தில் பார்த்தாலும் அருப்புக் கோட்டையிலும் பரமக்குடியிலும் அதிகமாக கைத்தறிகள் இருக்கின்றன. ஆகவே இந்த மில்லை—இன்று பூர்வாங்கமாகத்தான் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது—அருப்புக்கோட்டைக்கோ அல்லது பரமக்குடிக்கோ மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தால் எந்தவிதமான அபாயமும் வந்துவிடப் போவதில்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன். அதோடு அங்கிருக்கிற மக்கள் இதற்காக பூரணமாக ஒத்துழைப்பார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்து, முக்கிய மாக பரமக்குடியில் ஒரு டெக்ஸ்டைல் மில் ஏற்படுத்தி அங்கு இருக்கக்கூடிய மக்களுக்கு வேலை கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக நெசவுத் தொழிலைப்பொறுத்தவரை இந்த சர்க்காருக்கு திட்டவட்டமான ஒரு கொள்கை இருக்கவேண்டும். கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய முயற்சி செய்து வருகிறார்கள். இந்த கொள்கையின் அடிப்படையில் இண்டஸ்ட்ரியல் கார்ப்ப ரேஷன், வீவர்ஸ் காலனி போன்றவைகளை அதிகமாக பரமக்குடியிலும் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நம் நாட்டில் கனிவளம் அதிகமாக இருக்கிறது. ஜிப்ஸம், லைம்-ஸ்டோன் போன்றவைகள் ராமநாதபுரம் ஜில்லாவில் அதிகமாக கிடைக்கிறது. அவைகளை எடுத்துப்பயன்படுத்துவதாக இருந்தால் அதிகமான ஆட்களுக்கு வேலை கொடுக்க முடியும். ஆகவே அதை எடுத்து பயன்படுத்து வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்ததாக ரோடுவேஸ்களை எடுத்துக்கொண்டால் இந்த ஐந்தாறு தாலூகாக்களில் ரோடுகள் சரியானபடி கிடையாது. அங்கு ஏற்கனவே போடப்பட்டிருக்கிற ரோடுகள் எல்லாம் பழுது பார்க்க வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை எல்லோருக்கும் தெரியும். அத்துடன் பொதுவாக கல்விக்காக கட்டிடங்கள் கட்டவேண்டும் என்றும் ஆஸ்பத்திரிக்காக கட்டிடம் கட்டவேண்டும் என்றும் கல்லூரிக்காக கட்டிடம் கட்டவேண்டும் என்றும் கேட்டது எல்லாம் சர்க்காரிடத்தில் பெண்டிங்காக
10-40 a.m. கிடக்கிறது. இவைகளை எல்லாம் அந்த பகுதியில் உடனடியாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சேது சமுத்திரத்தைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள். அதையும் சேர்த்து எடுத்துக்கொள்ளவேண்டும், அப்படி எடுத்துக் கொண் டால் நல்லது என்று எழுதியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப் போது நிலைமை அந்த மாதிரி இருக்கிறது. தென் பகுதி நல்ல வள முடையதாக ஆகவேண்டுமானால், சேது சமுத்திரம் பிராஜெக்ட் ஏற்பட்டால் தான் அது முடியும். அதனால் ஜனங்களுக்கு நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு, அரசாங்கம் எடுக்கும் முயற்சியை நான் பாராட்டுவ தோடு, அதை விட்டுவிடாமல் மேற்கொண்டு முயற்சிகளைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் ஒரு ஹை பவர் கமிட்டியை இராமநாதபுரம் ஜில்லா மிகவும் பிற்பட்ட பகுதியென்ற காரணத்தினால் போடவேண்டுமென்று மறுபடியும் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**Sri N. MAHALINGAM** : மதிப்பிற்குறிய சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் மானியக் கோரிக்கைகளுக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவிக்கும் முறையிலே அப்ரோப்ரியேஷன் பில்லின் மேலே பேச விரும்பு கிறேன்.



10th April 1958] [Sri N. Mahalingam]

முதலாவதாக, கனம் மாதா கௌடர் அவர்கள் உணர்ச்சியுடன் பேசிய விஷயத்தை—அதாவது சட்டசபை உதகமண்டலத்தில் கூடவேண்டு மென்ற விஷயத்தை—நான் ஆதரிக்கிறேன். பொருத்தமாக நமது சர்க் கார் ஆரன்மூர் மாளிகையை வாங்கியிருக்கும் விஷயம் சந்தோஷத்தை அளிக்கிறது. அடுத்த பட்ஜெட் கூட்டம் உதகமண்டலத்தில் நடக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். உதகமண்டலத்தில் நமது மாகாணத்திலே மிக முக்கியமான பைக்காரா மின்சார உற்பத்தி நிலையமும், குந்தா திட்டமும், இது போன்ற முக்கியமான பல திட்டங்களெல்லாம் நடைபெற்று வருகிறது. ஆகையினால் இதையெல்லாம் கனம் அங்கத்தினர்களெல் லோரும் நேரில் கண்டு அதைப்பற்றி பூர்ணமாகத் தெரிந்துகொள்ள முடியும். இதைத் தவிர மலை வாசஸ்தலங்களெல்லாம் நல்ல முறையில் செழிப்பாக இருக்கவேண்டும், வெளிநாட்டார்களெல்லாம் வரவேண்டும், அதன் மூலம் நமக்கு வெளி நாட்டு நாணய வசதி கிடைக்கவேண்டும் என்ற முறையில் மத்திய சர்க்கார் நம் தேசத்தில் வெளி நாட்டார்கள் சுற்றுப்பிரயாணம் செய்ய வசதிகள் செய்து கொடுப்பதை மேற்கொண் டிருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய சட்டசபைக் கூட்டத்தையும் கூட்டினால் அதற்கு நல்ல வாய்ப்புக் கொடுப்பதுபோல இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக அதே போல பொள்ளாச்சி தாலூகாவில், ஆனை மலைப்பிரதேசம் மிக முக்கியமான பிரதேசம். தென் இந்தியாவில் முக்கிய மான அக்கா மலை இருக்கிறது. இப்போது அங்கே புதிதாக ஒரு திட்டம் அமுலுக்கு வர இருக்கிறது. அதாவது சென்ற சில ஆண்டுகளாக பரம்பிக் குளம் திட்டம் என்ஜினீயர்களால் கணக்கெடுக்கப்பட்டு வருகிறது. பி.டபிள்யூ.டி. என்ஜினீயர்கள் வேலை செய்து இப்போது ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். கேரள என்ஜினீயர்களும், சென்னை என்ஜினீயர் களும் சந்தித்து இரண்டு ராஜ்யங்களுக்கும் பூரண தண்ணீர் இருக்கிறது என்ற முடிவைச் செய்திருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் நமது அமைச்சர்கள் கேரள அமைச்சர்களைச் சந்தித்து 1958–59-ல் பரம்பிகுளத் திட்ட வேலைகளை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்தால் ஏராளமான பிரதேசம் செழிப்பாக, வளமுடையதாக மாறும் என்பதில் சந்தேகம் கிடையாது.

கோவை ஜில்லாவில் மிகவும் பிற்போக்காக இருக்கக்கூடிய உடுமலைப் பேட்டை, பல்லடம், தாராபுரம் முதலிய இடங்கள் செழிப்புள்ள இடமாக ஆகக்கூடிய வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய சர்க்கார் திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். இதற்கு கூடிய சீக்கிரம் கேரள சர்க்காரின் சம்மதத்தை அறிந்து, கூடிய சீக்கிரம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய சர்க்கார் நிர்வாகத்தில் பள்ளிகளுக்கும், பொது சாலைகளுக்கும் இடங்கள் வேண்டுமென்று சொன்னால் ரெவின்யூ இலாகாவில் தனிப்பட்டவர்களிடமிருந்து பூமியை, ரஸ்தாக்களை விஸ்தரிப்ப தற்கோ வேண்டுமென்று சொன்னால் அக்விஸிஷன் முறையிலே பெறும் கஷ்டங்கள் இருக்கின்றன. இன்றைய தினம் சொத்தைப்பற்றிய பழைய கொள்கைகளெல்லாம் மாறி வருகிறது. சொத்துக்கு இருந்த பழைய மதிப்பு இப்போது இருப்பதில்லை. அப்படி இருக்கக்கூடிய காலத்தில் இன்னும் பழைய காலத்திய சட்டத்தை வைத்துக்கொண்டு வருஷக் கணக்கில் பொதுக் காரியத்திற்கு இடம் வேண்டுமென்று சொன்னால் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் இந்த அக்விஸிஷன் சட்டத்தையும், அதே போல எவிக்ஷன் சட்டத்தையும் திருத்தி இந்த நடவடிக்கைகளைச் சீக்கிரம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது அமைச்சரவை சென்ற ஒரு வருஷ காலமாக நல்ல முறையில் வேலைசெய்து வந்திருக்கிறது. அவர்களுக்கு பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர்களுக்குள் வேலைப் பளுவானது சரியானபடி பங்கிடப்படாமல் ஒரு சிலருக்கு அதிக பளுவும் ஒரு சிலருக்கு குறைவான பளுவும் இருக்கிறது. இதைச் சரியான முறையில் பங்கீடு செய்து அதிக

பளு உள்ளவர்களுடைய வேலையைக் குறைத்தால் அது அவர்களுக்கும் நல்லது, நமது மாகாணத்திற்கும் நல்லது என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**DR. SRIMATHI T. S. SOUNDARAM RAMACHANDRAN**: சபைத் தலைவர் அவர்களே, இந்த மொத்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நல்ல விதமாக இந்த மானியக் கோரிக்கைகள் இந்தச் சபையினால் ஏற்கப்பட்டிருக்கிறது. இந்தப் புது வருஷத்திலே முதன் முதலாக நான் ஒன்று மறக்காதபடி சுகாதாரத்தில் செய்யவேண்டிய சில திட்ட வட்டமான காரியங்களைச் சொல்ல விரும்புகிறேன். வேறு துறைகளில் எவ்வளவு அபிவிருத்தி இருக்கிறதோ அவ்வளவு அபிவிருத்தி குடி தண்ணீர் விஷயத்தில் ஏற்படவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். சர்க்கார் ஹரிஜனங்கள் குடியிருப்பிலே முழுப் பணத்தையும் தாங்களே செலவழித்து கிணறு வெட்டிக் கொடுக்க ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். 75 சத விகிதம் கொடுத்தால்கூட அதை ஒத்துக்கொண்டு வேலை செய்வதற்குப் போதுமான வசதியுள்ளவர்கள் இல்லை. திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதில் சிரத்தை எடுப்பதில்லை. நூற்றுக்கு நூறு சர்க்கார் பொறுப்பு ஏற்றுக்கொண்டு, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடியும்போது ஹரிஜனங்கள் இருக்கும் இடங்களில் கிணறுகள் இல்லாமல் இருக்காதபடி இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். முக்கியமாக கம்யூனிடி பிராஜெக்ட், என்.ஈ.எஸ். இடத்திலெல்லாம் அனுபவத்தில் ஓரளவு குறைகள் போக்கப்பட்டிருகிறது என்றாலும் சர்க்கார் அதிகமாக கவனம் செலுத்தவேண்டியது, இந்தத் திட்டங்களின் கீழ் வராத இடங்களில், தீவிர கவனம் செலுத்தி குடி தண்ணீர் திட்டத்தை அமுல் செய்து கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக இந்த சுகாதார விஷயத்தில் இன்னொன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆசிரியர்கள் சம்பந்தப்பட்டவரையில் செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் எந்தப் பள்ளியில் வேலை செய்தாலும் ஒரே மாதிரிச் சம்பளம் என்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் வைத்தியத் துறையிலே டாக்டர்கள் பல இடங்களிலே வேலை செய்கிறார்கள், அதாவது லோகல் பண்டு டிஸ்பென்ஸரி, ரூரல் மெடிகல் டிஸ்பென்சரி, சர்க்கார் ஆஸ்பத்திரி என்ற வித்தியாசங்கள் நீக்கப்படவே இல்லை. சர்க்காருக்குள்ள கஷ்டங்களை நான் அறிவேன். பொறுப்பற்ற முறையில் நான் சொல்லவில்லை. பொறுப்பை உணர்ந்துதான் சொல்லுகிறேன். டாக்டர்கள் அதிகம் கிடைக்காத இந்த நாளிலே எல்லோருக்கும் ஒரே மாதிரி சம்பளம் கொடுக்கவேண்டும். இப்போது லோகல் பண்டு டிஸ்பென்ஸரிகளை, தலை நகரங்களில் உள்ள இடங்களில் புரொவின்ஷியலைஸ் செய்கிறார்கள். அது நல்லதுதான். அத்துடன் எல்லோருக்கும் ஒரே சம்
10-50 a.m. பளம் கொடுக்கப்படவேண்டும். முஸ்லிம்கள் அதிகமாக இருக்கிற இடங்களிலே, தாலூக்கா ஆஸ்பத்திரியாக இருந்தாலும், தாலூக்கா அல்லாத மேஜர் பஞ்சாயத்து போர்டு அல்லது முனிசிபாலிட்டியாக இருக்கிற இடமாக இருந்தாலும்கூட ஒரு பெண் டாக்டரைப் போடவேண்டியது மிகமிக அவசியம். ஏழை முஸ்லிம்கள் சாகிற நிலையில்தான் ஆண் டாக்டர்களிடம் போகிறார்கள். அவர்களது அந்த வழக்கத்தை சுலபமாக மாற்றி விட முடியாது. அந்த மாதிரியுள்ள இடங்கள் சிலதான் இருக்கும். அந்த இடங்களிலே பெண் டாக்டர்களைப் போடுவதுபற்றி அவசியமாக கவனிக்க வேண்டும். சிறிய தாலூக்கா தலைநகராக இருக்கிற நிலக்கோட்டை போன்ற இடங்களிலும் பெண் டாக்டரைப் போடவேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சமுதாய நலத்திட்டங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அந்தத் திட்டத்தைப் பொறுத்துத்தான்—அது கம்யூனிடி டெவலப்மெண்ட் திட்டமாக இருந்தாலும் சரி—நம்முடைய எதிர்கால ராஜ்ய சீரமைப்பு இருக்கப் போகிறது என்பதை உணருகிறோம், அதை வரவேற்கிறோம். அப்படிப் பார்க்கும்பொழுது, இன்னும் இரண்டு





லட்சம் ஜனத்தொகை கொண்டது ஒரு பிளாக் என்ற நிலைமை இருக்கிறது. சரியானபடி பார்த்தால், 66,000 ஜனத்தொகை கொண்டது ஒரு பிளாக். அதற்கு 12 லட்சம் ரூபாய்வரை கிடைக்கும். 1 லட்சம் அல்லது $1\frac{1}{2}$ லட்சம் அந்த வட்டாரத்திற்குப் போதுமானதாக இல்லை. இந்த விஷயம் ஆலோசனையில் இருப்பது எனக்குத் தெரியும். இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நன்றாக அமல் நடத்தப்படவேண்டுமானால், இந்த பிளாக்குகள் புனரமைப்பு செய்யப்படவேண்டும். அதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். அப்படிச் செய்யாமற்போனால், சமுதாய நலத் திட்டத்தின் மூலம் நாம் எந்த பலனை எதிர்பார்க்கிறோமோ, அது கிடைக்காமல் போவதுடன், எதிர்காலத்தில் பல சிக்கல்கள் ஏற்படும்.

இந்த சமுதாய நலத்திட்டத்தில் வேலை செய்யும் பிளாக் டெவலப்மெண்ட் ஆபீசர்களின் தரம்—அவர்களை பல டிபார்ட்மெண்டுகளிலிருந்து மட்டும்தான் பொறுக்கி எடுப்பதன் காரணமோ என்னவோ—மிகவும் குறைந்து விட்டது என்று நிச்சயமாகச் சொல்லுவேன். ஐ.ஏ.எஸ். போன்ற பதவிகளுக்கு டிபார்ட்மெண்டிலிருந்து ஒரு பகுதியும், பொது செலக்ஷன் படி ஒரு பகுதியும் எடுப்பதுபோல, சமுதாய நலத்திட்டத்தைப் பொறுத்த வரையிலும், நல்ல அனுபவமுள்ள, சக்தியுள்ள, ஆர்வம் மிகுந்த வாலிபர்களை—பெண்களையும்கூட—ஏன் எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறேன்.

**SRI C. N. ANNADURAI**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஒரு திங்களுக்கு மேலாக இந்த ஆண்டு துரைத்தனத்தாரிடத்தில் ஒப் படைக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையை எந்தெந்த நோக்கத்தோடு எந்தெந்தத் துறையில் எப்படிப் பயன்படுத்தவேண்டுமென்பதைப் பற்றி சர்க்கார் தரப்பிலே இருந்தும், எதிர் தரப்பிலே இருந்தும் கருத்துக்களை அவரவர்கள் எடுத்துச் சொல்வதன் மூலம், முடிவடைகிற இந்தத் தருவாயில் ஒரு தெளிவான நிலைமைக்கு வந்திருக்கிறோமென்று நினைக் கிறேன். இந்த ஆண்டுக்காக சர்க்காரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிற இந்தத் தொகையை எந்த வகையிலே அவர்கள் பல பல துறைகளுக்கு ஒதுக்கி, தக்க விதத்திலே பயன்படுத்துகிறார்களோ அதைப்பொறுத்துத் தான் சிறப்பு இருக்கிறது என்பது மட்டுமல்ல, அதைப் பொறுத்துத்தான் இந்த நாட்டினுடைய நன்மை தீமைகளும் அடங்கியிருக்கின்றன. பிற ருடைய பாராட்டுதலைப் பெறவேண்டிய பருவத்தைக் கடந்துவிட்டேன் என்று நேற்றையதினம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். (கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம்: ஆசைத்தம்பி அவர்களுடைய. . .) அவருடைய பாராட்டுதலைக் கோருகிற பருவத்தில் இல்லையென்று சொன் னார்கள். ஆசைத்தம்பி பாராட்டுதலைப் பெறுவதுடன், மற்ற பாராட்டுதல் களையும் சேர்த்துக்கொள்வது நிதி அமைச்சருக்கு நஷ்டமாக இராது, லாபத்தில்தான் முடியுமென்று அவருக்குக் குறிப்பிட்டுக்கொள்ள விரும்பு கிறேன். ஆனால் பொதுவாக ஒன்று சொல்வேன். இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட பல கருத்துரைகளில் இன்றையதினம் சர்க்கார் நடந்து கொள்கிற போக்கு அனைவருக்கும் . திருப்தி கொடுத்துவிட்டது என்று ஒரு குறிப்பிட்ட அங்கத்தினராவது தைரியமாக இந்த மன்றத்திலே பேசவில்லை என்பதை ஆட்சியாளர்கள் தயவுசெய்து மனதில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும். கட்சிக்கு கட்சி கருத்துமாறுதல் இருக்கிற காரணத் தினாலே. ஒருவர் சொல்லுகிற கருத்தை மற்றவர்கள் மறுக்கிறார்கள் என்றாலும்கூட, தொகுதிகள் சரியாக கவனிக்கப்படவேண்டுமென்று அந் தந்த தொகுதி உறுப்பினர்கள், கட்சியைப்பற்றிய நிலைமையைக்கூட ஓரளவுக்கு ஒதுக்கிவைத்து, எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தொகுதிகள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை, போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கப்படவில்லை, ஒதுக்கப்பட்ட நிதி சரியான முறையில் செல வழிக்கப்படவில்லை என்று மூன்று வகையான குற்றச்சாட்டுகள் எடுத்துச் சொல்லப்பட்டன. நிர்வாக ஊழல்கள் ஏராளமான அளவுக்கு இருக்கின்றன என்று எங்கள் தரப்பிலே உள்ளவர்கள் சுட்டிக்காட்டியதைவிட ஆளும் கட்சியிலுள்ளவர்கள் அதிகமான அளவுக்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நிச்சயமாக உணர்ந்து பார்க்க

[Sri C. N. Annadurai] [10th April 1958

வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் ஆளும் கட்சியில் இருக்கிறவர்கள் பெற்று இருக்கிற சிறந்த செல்வாக்கு அவர்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதைப் போலவே அவர்களுக்கு பெரிய பொறுப்பையும் கவலையையும் அளிக்க வேண்டும். அவர்களை சுலபத்தில் வீழ்த்திவிடக்கூடிய ஒரு எதிர்க்கட்சி உருவாகியிருக்குமானால் ஆளும் கட்சியினர் சிறிய சிறிய தவறுகளை செய்தாலும் அது பொது மக்களை அதிக நாட்களுக்கு பாதிக்காது. ஆனால் இன்றைய தினம் ஆளும் கட்சியில் உள்ளவர்களை எதிர்கட்சியில் உள்ளவர்கள் வீழ்த்திவிட முடியாது என்கிற நிலைமை இருக்கிற காரணத்தினால்தான், எதிர் தரப்பில் உள்ளவர்கள் எந்தக் கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும் அந்தக் கருத்துகளை உன்னிப்பாக கவனிக்கவேண்டிய பெருந்தன்மை அவர்களுக்கு இருக்கவேண்டும். நம்முடைய நிதி அமைச்சர், இந்த மன்றத்திலும் சரி, வெளியிலும் சரி, உருவான நல்ல கருத்துகளை எதிர் தரப்பிலிருந்து பெற முடியவில்லை என்று எடுத்துச் சொல்லி வருகிறார்கள். உருவான கருத்துகளை அவர்கள் தர முடியவில்லை என்பது அவர்களுக்கு இருக்கின்ற பயிற்சி குறைவு காரணமாக இருக்கலாம். அல்லது தருகின்ற எல்லா கருத்துக்களும் உருவான கருத்துக்கள் அல்ல என்று சர்க்காருடைய அகராதியில், நீண்ட நாளாக பழக்கப்பட்டதின் காரணமாக இருக்கலாம். எதிர் கட்சியில் உள்ளவர்களும் அந்த அந்த தொகுதியில் உள்ள குறைபாடுகளை நீக்க வேண்டும் என்று சொன்னால், உருவான கருத்துக்கள் என்கிற முறையில்தான் சொல்கிறார்கள் என்று ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கவனித்துப் பார்க்கவேண்டும். அது மட்டும் அல்ல.

பொதுவாக இந்த மாநிலம் இந்திய துணைக் கண்டத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது. அதன் காரணத்தினால், நன்மையோ, தீமையோ, வளர்ச்சியோ, குந்தகமோ, இந்திய துணைக் கண்டத்தின் பெரிய திட்டங்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. அதனுடைய நிதி நிலைமையைப் பொறுத்து நம்முடைய நிதி நிலைமை பாதிக்கப்படுகின்றது. ஆகையால் நாங்கள் பேசுகின்ற நேரத்தில் அதனை குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி குறிப்பிடுகின்ற நேரத்தில் 'வடக்கு, தெற்கு' என்கிற வார்த்தைகளை அதிகமாக உபயோகப்படுத்துகிறோம் என்று நிதி அமைச்சர் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறார். வடக்கு, தெற்கு என்று சொல்லுகின்ற காரணத்தினால் அது குறையுடையது என்றோ, அல்லது அதை வைத்துக்கொண்டு மற்றப் பிரச்னைகளை ஆராய்கின்ற போது, பிரச்னைகளின் தன்மை கெட்டுவிடும் என்றோ நிதி அமைச்சர் எண்ணிக்கொள்ளக்கூடாது. வரவு செலவு விவாதத்தின்போது, திராவிட நாடு பிரிவினைபற்றி அந்தப் பிரச்னை அதிகமாக கிளம்பிய காரணத்தால், அதைப்பற்றி என்னுடைய கருத்துக்களை நான் சொன்னதற்கு, நமது நிதி அமைச்சர் பதில் அளிக்கின்ற தன்மையில், பூர்வோத்திரத்தை ஆராய்ந்து கட்சியின் பூர்வோத்திரத்தைப் பற்றியும், கட்சியின் பூர்வோத்திரங்களில் எனக்கு இருந்த தொடர்புகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய பூர்வோத்திரங்கள் நிதி அமைச்சரின் கவனத்தை இழுத்தது பற்றி நான் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். அதேபோல் காங்கிரஸ் கட்சியில் உள்ள தனிப்பட்ட நபர்களைப்பற்றியும், அல்லது மொத்தமாக காங்கிரஸ் கட்சியின் பூர்வோத்திரத்தைப்பற்றியும் ஆராயவேண்டும் என்று ஆரம்பித்தால் அரசியலில் உள்ள பல அழுக்குகள் வெளிப்படையாகத் தெரிந்துவிடும். இந்த மன்றத்தில் அதிக பழக்கம் இல்லாமல் நான் இருக்கிறேன். ஆனால் நீண்ட நாள் பழக்கம் உள்ள நிதி அமைச்சர் அவர்கள் இந்த முறைதான் திருப்தி தருகிறது என்று நினைக்கிறார். அவர்களுக்கு அழுக்கை கிளறிப் பார்ப்பதில் பிரியம் இருக்குமானால் நான் அதைத் தடுக்கவில்லை. பூர்வோத்திரத்தை ஆராய வேண்டாம் என்று நாங்கள் சொல்வதற்கும், திராவிட நாடு பிரிவினைக்கும், ஒன்றுக்கு ஒன்று தொடர்பு உண்டு என்று கருதினால் பயன் இல்லை.

வட நாட்டில் வளர்ச்சி அதிகம் என்பதும், தென்நாட்டில் வளர்ச்சி குறைவு என்பதும், எங்கள் தரப்பில் உள்ளவர்கள் மட்டும்தான் சொல்கிறார்கள் என்கிற பொருள் அல்ல.



10th April 1958] [Sri C. N. Annadurai]

Are Ahmedabad and Bombay the only places where raw material for the textile industry is available in plenty? I represented in the previous Legislative Assembly five districts, four of which have the largest area under cotton cultivation. There is not a single spinning mill there. Why should you bring all the cotton to Ahmedabad to be spun into yarn and woven into cloth and sent back to the very place where it has come from? Is that not the very fact against which we had been fighting, that cotton which is produced in this country was being taken to Manchester to be woven into cloth and sent back to us? Was it not for that that we fought the British imperialists? Are we going to supplant one imperialism by another imperialism? 11-00 a.m.

ஏற்கெனவே இருந்த ஒரு ஏகாதிபத்தியத்தை நீக்கி விட்டு மற்றொரு புதிய ஏகாதிபத்தியத்தை நாம் கொண்டு வரவேண்டுமா என்கிற கருத்தை எடுத்துச் சொல்லப்பட்ட இடம் டில்லி பாராளுமன்றம். இதை எடுத்துச் சொல்லியவர் டில்லியில் பாராளுமன்றத் தலைவராக இருக்கின்ற கனம் அனந்தசயனம் அய்யங்கார் அவர்களே. அவர் முன்னாள் உறுப்பினராக இருந்த நேரத்தில் எடுத்துச் சொன்னார். ஆகவே திரு. அனந்தசயனம் அய்யங்கார் காங்கிரஸ் உருப்பினராக இருந்துகொண்டு டில்லி பாராளும் மன்றத்தில் . . . **Are we going to supplant imperialism by another imperialism ?** என்று கேட்கிறார்கள் என்றால் அது நான் சொல்லுகிற வட நாடு தென்னாடு என்கிற அதே கருத்தை அதிகமான அளவில் விவரித்துக் சொல்லாவிட்டாலும் மனதில் அவருக்கு அந்தக் கருத்து இருந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த மன்றத்தில் நடத்தப்படும் விவாதம் மிகுந்த உயர்ந்த தரம் அமைந்திருப்பதாகவும் அதனுடைய தரத்தின் தன்மை இன்னும் பெரும் தன்மையோடு உயர்ந்த முறையில் நடத்தப்பட்டு வருவதையும் இந்த மாநிலத்தில் மட்டும் அல்ல, பிற மாநிலத்திலும் பாராட்டப்படுகிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். என்றாலும் இந்த விவாதம் அமைந்திருக்கிற முறை எப்படி அமைந்திருக்கிறது என்று பார்த்தால் விவாதத்தின் கடைசி நேரத்தில் கனம் அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில், பதில் அளிக்க கனம் அமைச்சர் எழுந்து நிற்கிற நேரத்தில், ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள பிரச்னையைப்பற்றி அவருடைய பதில் அமைந்திருக்குமானால் அது விவாத முறைக்கு ஒத்ததாக இருக்கும். ஆனால் கனம் நிதி அமைச்சர் அவர்கள் சென்ற தடவை பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்; "திரு. அண்ணாத்துரை திராவிட நாட்டுப் பிரிவினையைப்பற்றி பேசாமல் இருந்தாலும் நான் பேசுவதற்கு தயாரித்துக் கொண்டு வந்திருக்கிறேன்," என்று சொல்லி தயாரித்துக் கொண்டு வந்து பேசினார். அந்த முறையில் விவாதங்களைக் கவனித்துப் பார்க்காமல் எதிர் தரப்பிலுள்ளவர்கள் என்ன குறைபாடுகளை இந்த சட்ட மன்றத்தில் குறிப்பிடுகிறார்களோ அதற்குத் தகுந்த சமாதானங்களைச் சொல்லுவதற்கு ஆளும் கட்சியினர் இருக்கவேண்டும். அந்த முறையில் விவாதம் அமைந்தால்தான் எந்த விவாதமும் நல்ல முறையில் இருக்கும் என்பதை நான் அல்ல மிகப் பெரியவர்; எங்கள் தரப்பிலுள்ளவர் அல்ல ; உங்களிடத்தில் செல்வாக்குள்ள ஆளும் கட்சியில் ஒத்துக்கொள்ளக்கூடிய மற்றொரு பெரியாருடைய கருத்தை இந்த மன்றத்தில் வைக்க பிரியப் படுகிறேன்.

With reference to these debates, may I make one submission? That is the Government reply at the end, and you naturally put down interruptions. I do not say you are wrong at all. What happens is that the whole debate becomes one-sided affair. It is

[Sri C. N. Annadurai] [10th April 1958

just like a durbar where representations are made by one side and the Government come along at the end and say, 'We do not accept this'. As it is, the Government give their reply at the end of the debate and we are not given opportunity to rebut the statements made by Government. We cannot interrupt. என்ற இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவர் காலஞ்சென்ற தமிழகத்தில், முற்றிலும் இந்தியத் துணைக்கண்டம் பூராவிலுமே பாராளும் மன்றத் திறமை பெற்றவர் என்று பாராட்டுதலைப் பெற்ற திரு. சத்தியமூர்த்தி அவர்களே இதனை எடுத்துக் காட்டியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட அதே குறிக்கோளுடன் இன்றைய தினம் இங்கே நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினால்தான் விவாதங்கள் முடிகிற நேரத்தில் கனம் நிதி அமைச்சர் அவர்கள் புதிய பிரச்னையைக் கிளப்பாமல் ஏற்கெனவே சொல்லப்பட்டவைகளுக்கு பதில் அளிக்கின்ற அந்த வித முறையைக் கையாள வேண்டும் என்பதை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக இப்பொழுது அவரிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பெரும் தொகையை எந்த வகையில் செலவழிக்கிறார்கள் என்பதைப் பார்த்து நாங்கள் சொல்கிற நேரத்தில் இந்த வரவு செலவு திட்டம், துண்டு விழுகிற பட்ஜெட்டா அல்லது உபரியாக இருக்கிற பட்ஜெட்டா அல்லது சரிக்கட்டுகிற பட்ஜெட்டா என்பதைப் பார்த்து நாட்டினுடைய நிலைமை இல்லை என்பதை மற்றொரு பேரறிவாளர் சொன்னதை இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

But the prosperity of a nation does not depend entirely upon its financial position or upon its having a balanced or a deficit budget.

THE HON. SRI C. SUBRAMANIAM : நீங்கள் சொன்னாலே நான் ஒத்துக்கொள்வதற்கு தயாராக இருக்கிறேன்.

SRI C. N. ANNADURAI : நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் இது பேரறிவாளர்களுடைய கருத்து.

It depends entirely upon the wealth of the country. In the present industrial set-up, howevermuch a labourer may produce, he is not in any way benefited. Therefore, the only way this problem can be solved is to find out a way by which whenever there is an increase of production, labour will be benefited to that extent, and not only the capitalist or the employer. That is why I said some sort of a sharing of profit system should be introduced. When I say that I realise the entire implications of the proposal.

இந்த மன்றத்தில் இந்தக் கருத்தை நான் வலியுறுத்துவதற்குக் காரணம் நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் பாராளும் மன்றத்தில் இருந்த காலத்தில் சொன்ன கருத்தையே, பேரறிவாளருடைய கருத்தையே அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இதை நான் குறிப்பிட்டேன். ஆகவே வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவு வருவாய் வருகிறது, எவ்வளவு செலவழிக்கிறோம் என்பதை மட்டும் ஒரு குறிக்கோளாக வைத்துக்கொள்ளாமல் அதன் மூலமாக ஏற்படுகின்ற பலனை எந்த அளவுக்கு அதிகரித்துக் கொள்ளலாம் என்பதை குறிக்கோளாகக் கொள்ளவேண்டும் என்பதை நான் மிகவும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். உருவான யோசனைகள் மன்றத்தில் தரப்பட வேண்டும் என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன காரணத்தால் நான் கனம் மகாலிங்கம் சொன்ன ஒரு கருத்தை கொஞ்சம் திருத்தத்துடன் அரசாங்கத்தினுடைய யோசனைக்குக் கொண்டு வந்து அதை கனம் நிதி அமைச்சர் அவர்கள் முன்பாக சமர்ப்பிக்க



10th April 1958] [Sri C. N. Annadurai]

விரும்புகிறேன். ஒரே அமைச்சருக்கு அதிகமான இலாகாக்கள் தரப்படுகிறது என்ற காரணத்தால் அந்த அமைச்சருக்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது என்று கனம் மகாலிங்கம் எடுத்துச் சொன்னார். அதையும் மனதில் வைத்துக்கொண்டு வேலைப் பளுவைப் பகிர்ந்து அளிக்கின்ற வகையிலே, இந்த மாநிலத்தில் குறிப்பிடத்தக்க ஒரு சமுதாயத்தினராகவும், இன்றைய தினம் ஆளும் கட்சி எடுத்துக்கொள்கிற எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்பவர்களாகவும், இந்தியாவுக்கும் காஷ்மீருக்கும் தகராறு என்றாலும், 'காஷ்மீரத்தை நாங்கள் ஆதரிக்கமாட்டோம், இந்திய சர்க்கார் செய்வதுதான் நியாயம்' என்று துணிவோடு பெருந்தன்மையோடு சொல்லுபவர்களாகவும் இருக்கின்ற முஸ்லிம் சமுதாயத்தினர் ஒருவருக்கு ஒரு அமைச்சர் பதவியைத் தந்து, நமது நிதி அமைச்சர் தன்னிடம் இருக்கின்ற இரண்டு, மூன்று இலாக்காக்களில் ஏதாவது ஒன்றை அவரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற ஒரு யோசனையை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முஸ்லிம்களை வலை போட்டு பிடிக்கின்றேன், அதற்காக நான் இப்படிச் சொல்லுகின்றேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். பெரிய வலை காங்கிரஸ் சர்க்காரிடத்தில் இருக்கிறது என்பது நன்றாகத் தெரியும். ஆகவே, வலை போடுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை என்பதை கூறிக்கொள்ளுகிறேன். முஸ்லிம் சமுதாயத்திற்கு ஒரு நல்ல பிரதிநிதித்துவம் இந்த அமைச்சர் அவையிலே தரப்பட வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த மாநில சர்க்காரின் நிதி நிலைமை மத்திய சர்க்காருடைய நடவடிக்கைகளை பொறுத்திருக்கிறது என்ற காரணத்தினாலே, மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகள் அனைத்தும் சரியான வகையிலே அமைந்திருக்கின்றதா என்று பார்க்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்முடைய அமைச்சர் அவைக்கு இருக்கிறது. அந்த வகையில் நான் மற்றொரு உருவான யோசனையைக் கூற விரும்புகிறேன். தேங்கிக் கிடக்கின்ற கைத்தறி ஜவுளியை நம்முடைய துரைத்தனத்தாரே விலை கொடுத்து வாங்கி, அதை வைத்துக்கொண்டு கைத்தறி நெசவாளர்களுடைய கஷ்டங்களை உடனடியாக நீக்க வேண்டுமென்று நான் ஆட்சியாளரை விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். ரிபேட் தொகையைக் குறைத்திருக்கின்ற மத்திய சர்க்காரின் போக்கை நமது அமைச்சர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். வன்மையான கண்டனம் டெல்லி செல்லுகின்ற காலத்துக்குள் மிக மென்மையாக ஆகிவிடாதபடி, பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு ரிபேட் தொகையைக் குறைக்காமல் கைத்தறி நெசவாளர்களுக்கு உருப்படியான பலன் கிடைப்பதற்கு வழி வகைகள் செய்ய வேண்டுமென்று ஆட்சியாளரை நான் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மன்றம் உதகமண்டலத்தில் நடத்தப்படவேண்டுமென்ற கருத்தை நம்முடைய நண்பர் மாதா கவுடர் அவர்கள் மிக உருக்கமாகவும், ஆத்திரமாகவும், கோபமாகவும், கடைசி நேரத்தில் கொஞ்சம் கண்ணீரும் கலக்கமும்கூட வந்ததாகக் கருதக்கூடிய அளவிலே எடுத்துச் சொன்னார்கள். நான் மெத்த வருந்துகிறேன். அவர்களுடைய இவ்வளவு உருக்கத்தைக் கேட்டும்கூட நான் என்னுடைய முடிவை மாற்றிக்கொள்ள முடியாமல் இருப்பதற்கு உண்மையிலேயே வருந்துகிறேன். உதகமண்டலத்தின் வளர்ச்சிக்கு இந்த மாமன்றம் அங்கேகூடப் போவது காரணமாக இருக்கும் என்று அவர்கள் சொல்லியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. உதகமண்டலம் வளர்ச்சி அடைய வேண்டும் என்று மாதா கவுடர் அவர்கள் சொன்னதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால், இந்த மாமன்றம். அங்கேகூடுவது அதன் காரணமாக அமையும் என்று சொல்லக்கூடிய அந்த வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் 'தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து நாங்கள் அங்கே வரமாட்டோம் என்று சொல்லுகிறோம், உதகமண்டலத்தில் இருப்பவர்கள் தமிழர்கள் அல்லவா ?' என்று கேட்டார்கள். எங்களுடைய தரப்பில் உள்ள யாரும் 'தமிழர்களுடைய நன்மையை உத்தேசித்து உதகமண்டலம் வரமாட்டோம்' என்று சொல்லவில்லை. எனக்கு கவனம் சரியாக இருக்குமானால், கனம் மாதா கவுடர் அவர்கள் ஒரு முறை இந்த

மன்றத்திலேயே ' நான் தமிழன் அல்ல, கன்னடக்காரர் ' என்று கூறி
யிருக்கிறார். இன்றைய தினம் நான் இதைக் குறிப்பிடுவதற்கு காரணம்
யார் தமிழர், யார் தமிழர் அல்ல என்று சொல்லுவதற்காக இல்லை.
நீண்ட காலத்திற்கு முன்னாலேயே தமிழர்கள் ' யாதும் ஊரே யாவரும்
கேளிர் ' என்ற விரிந்த மனப்பான்மையை வைத்துக் கொண்டிருக்கிறார்
கள். தமிழர் கெட்டுவிடுகிறார்களா, நன்மை அடைகிறார்களா என்ற பிரச்னை
இங்கே எழவில்லை. இந்த மன்றம் உதகமண்டலத்தில் கூடுவதால், அங்கே
வளர்ச்சி எற்படும் என்பதில் எனக்குக் கருத்து மாறுபாடு இருக்கிறது.
ஆகவேதான் உதகமண்டலத்தில் இந்த மன்றம் கூடுவதை நான் எற்றுக்
கொள்ளவில்லை. நான் அதை எற்றுக்கொள்ளாத காரணத்தினால் அது
நிறுத்தப்படுகிறது என்பதை வருத்தத்தோடு சொன்னார் கனம் மாதா
கவுடர் அவர்கள். நான் அவருக்குச் சொல்லுகிறேன். ஒரு குறிப்பிட்ட
கட்சியினுடைய ஒப்புதலை கேட்ட பிறகுதான் இப்படிப்பட்ட காரியங்கள்
நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் கொண்டிருக்கிற பெருந்தன்
மையை இன்னும் கொஞ்சம் விரிவுபடுத்தி, ஒரு குறிப்பிட்ட கட்சியாகிய
நாங்கள் சொல்லுகின்ற தமிழ் நாடு என்ற பெயரை அரசாங்கம் இந்த
மாநிலத்திற்கு வைக்காமல் இருக்கும் காரணத்தினால், அவர்களுக்கு
யோசனை சொல்லி, தமிழ் நாடு என்று பெயர் வைக்கும்படி அவர்களுக்கு
சிபார்சு செய்வார்களேயானால், தமிழ் நாடு என்று பெயர் வைக்கப்பட்ட
மறு நாளே உதகமண்டலம் வருவதற்குத திராவிட முன்னேற்றக் கழகம்
ஒப்புதலை அளிக்கும். எதோ பேரம் பேசுவதற்காக நான் இதைச் சொல்லு
வதாகக் கருத வேண்டாம். உங்களால் ஆட்சியாளரை மாற்ற முடியாது
என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குத்தான், காங்கிரஸ் உறுப்பினராக
இருந்தாலும், நீங்கள் சொல்லுகின்ற கோரிக்கையைக்கூட ஆட்சியாளர்
களுக்கு விருப்பம் இல்லாவிட்டால், எற்றுக்கொள்ளமாட்டார்கள் என்ற
அரசியல் நிலைமையை கவனிப்பதற்குத்தான் நான் இதைக் குறிப்பிடு
கிறேன்.

11.10 a.m. ஆகையால், இந்த மாமன்றம் உதகமண்டலத்தில் கூடுவதால், உதக
மண்டலத்திற்கு அதிக நன்மைகள் வந்துவிடாது. அதைவிட நல்ல
யோசனைகளும் சொல்லப்பட்டன. அவைகளை நான் மெத்த நம்பிக்கை
யுடன் வரவேற்கிறேன். உதகமண்டலத்திலுள்ள எழில்களையும் வனப்பு
களையும் அபிவிருத்தி செய்து அதைச் சிறந்த வாஸ்தலமாக ஆக்க வேண்டு
மென்று யோசனை சொல்லப்பட்டது. அவ்வாறு செய்தால் உண்மையிலேயே
உதகமண்டலம் அபிவிருத்தியடையும். ஆகையால், உதகமண்டலத்தை
அபிவிருத்தி செய்வதை கட்சிப் பிரச்னையாகக் கருதவேண்டாம் என்றும்,
மற்றவர்கள் பேரில் மாசு கற்பிக்க வேண்டாமென்றும் கனம் அங்கத்தினர்
களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த அந்தத் தொகுதிகளி
லுள்ள குறைகளை கனம் அமைச்சர்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரு
யோசனை சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர்கள் தங்கள் தங்கள்
தொகுதிகளில் ஆங்காங்கே உள்ள குறைபாடுகளை நேரிடையாகத் தெரிந்து
கொள்வதற்கு தங்கள் தங்கள் தொகுதிகளுக்கு கனம் அமைச்சர்களை
அழைத்தால், கனம் அமைச்சர்கள் கனம் அங்கத்தினர்களையும், ஜில்லாவி
லுள்ள அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு தொகுதிகளில் 2, 3 நாட்கள்
சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டும். இதற்குக் குறிப்பாக ஹரிஜன நல
இலாகா அமைச்சர் எற்பாடு செய்யவேண்டும். ஒரு தொகுதியிலுள்ள
குறைபாடுகள் எல்லாவற்றையும் ஐந்து நிமிஷப் பேச்சில் சொல்ல முடி
யாது. ஆகவே நான் கூறியபடி செய்ய வேண்டுமென்று கனம் அமைச்சர்
களைக் கேட்டுக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்தில் செலவினங்
களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பெரும் தொகை பணத்தை நல்லபடியாகச்
செலவழித்து மக்களுக்கு நன்மைகளைச் செய்ய அரசாங்கத்தார் முற்பட
வேண்டுமென்று சொல்லி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர்
அவர்களே, வரவு செலவுத் திட்டத்தின்பேரில் இன்று கடைசியாகச் சில
வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சில வருஷங்களுக்கு முன்பு,
நம் ராஜ்ய சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பு ஒவ்வொரு



ஆண்டிலும் 10—16 கோடி ரூபாயாகத்தான் இருந்தது. இப்போது நமக்கு
64 கோடி ரூபாய் வரையில் வருமானம் வருகிறது. இந்த ஆண்டு வரவு
செலவுத் திட்டத்தில் செலவுகளுக்காகப் பணத் தொகைகளும் அதிகமாக
ஒதுக்கப்பட்டிருக்கின்றன. நாளுக்கு நாள் வரி போடப்படுவதன் காரண
மாகவும் உற்பத்தி பெருகியிருப்பதன் காரணமாகவும் நம் வருவாய்
அதிகரித்திருக்கிறது. வருவாய் அதிகரித்ததால் எராளமான திட்டங்களை
எடுத்துக் கொண்டோம். எராளமான திட்டங்களை எடுத்துக்கொண்டதன்
காரணமாக நம் செலவினங்களும் அதிகரித்து, ஒவ்வொரு வருஷ பட்
ஜெட்டும் பற்றுக்குறை பட்ஜெட்டாகவே இருந்து வந்திருக்கிறது. நம்
பற்றுக்குறையை சரிக்கட்ட முடியாத நிலைமையில் நாம் இருந்து வரு
கிறோம். ஒவ்வொரு வருஷமும் வரி போட்டுக் கொண்டேயிருப்பதால்,
மக்களுக்கும் அதிருப்தி எற்பட்டிருக்கிறது. ஆகையால் நமது வரவு-
செலவுகளை நன்றாகப் பரிசீலனை செய்து மக்களுக்குத் திருப்தியளிக்கும்
வகையில் காரியங்களைச் செய்யவேண்டும். பல கருத்துக்கள் இங்கே
சொல்லப்பட்டன. நான் சிலவற்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.
அனேக பிரச்னைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. மக்களுடைய பல கஷ்டங்
கள் தீர்க்கப்படவில்லை. நாம் இதைப்பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்க்க
வேண்டியிருக்கிறது. இப்போது, பட்ஜெட் விவாதத்தின்போது கனம் அங்
கத்தினர்களுக்குப் பேசுவதற்குக் கொடுக்கப்படும் நேரம் கொஞ்சம் குறை
வானது என்று நான் சொல்வேன். கனம் நிதி அமைச்சரிடம் இதைப்
பற்றி நான் எற்கெனவே சொல்லியிருக்கிறேன். பட்ஜெட் கூட்டத்தில்
மசோதாக்கள் கொண்டுவரப்படும்போது, அவைகளை விவாதிப்பதற்கு
சபைக்குப் போதிய நேரம் கொடுக்க வேண்டும். இதையும் கனம் அமைச்சர்
கவனிப்பார் என்று நம்புகிறேன். பட்ஜெட் விவாதத்தில் இப்போது
' கில்லடின் ' (guillotin) செய்யப்படும் ' ஐடெம் ' களையும் இனிமேல்
இங்கே விவாதிக்க வேண்டும். அவைகளை இனிமேல் ' கில்லெடின் '
செய்யக்கூடாது. அடுத்த வருஷத்திலிருந்தாவது அதற்கு எற்பாடு செய்ய
வேண்டும். தவிரவும், பட்ஜெட் கூட்டத்தின்போது அனேக கமிட்டிகளைப்
போடுகிறோம். அதன் காரணமாகப் பல வேலைகளையும் நாம் சரிவரச்
செய்ய முடிவதில்லை. வருகிற வருஷத்திலிருந்தாவது பட்ஜெட்டிலுள்ள
எல்லா விஷயங்களையும் சரிவர விவாதிப்பதற்காக, பட்ஜெட் கூட்டத்திற்கு
அதிக நாட்கள் ஒதுக்குவதற்கு எற்பாடு செய்ய வேண்டுமென்று கனம்
நிதி அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்தால் இவைகளை
' கில்லெடின் ' பண்ணவேண்டிய அவசியம் இருக்காது. அதிக நாட்கள்
ஒதுக்குவதற்காக, பட்ஜெட் கூட்டத்தை இப்போது கூட்டும் தேதிக்குச் சில
நாட்களுக்கு முன்பு கூட்டவோ அல்லது பட்ஜெட் கூட்டத்தை இப்போது
முடிக்கும் தேதிக்குச் சிறிது பின்பு முடிக்கவோ செய்யலாம். சில மசோதாக்
களை இங்கே அவசரமாகக் கொண்டுவருவதாலும், மசோதாக்களைப் பரி
சீலனை செய்வதற்குப் பொறுக்குக் கமிட்டிக்கு அதிக நாட்கள் அவகாசம்
கொடுக்காததாலும், கைதேர்ந்தவர்களைப் பொறுக்குக் கமிட்டியில் போடாத
தாலும், சில மசோதாக்கள் சம்பந்தமாகப் பொதுமக்களின் அபிப்பிரா
யத்தைப் பெறாததாலும், மசோதாக்களுக்கும் சட்டங்களுக்கும் அடிக்கடி
பல திருத்தங்கள் கொண்டுவர வேண்டிய அவசியம் எற்படுகிறது. ஒரு
மசோதாவைக் கொண்டுவந்தால் அதைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு
எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கவேண்டும். மசோதாக்கள் பேரில்
அபிப்பிராயம் கூறுவதற்கு எல்லோருக்கும் போதிய அவகாசம் கொடுக்க
வேண்டும். இதையும் கனம் அமைச்சர் கவனிப்பார் என்று நம்புகிறேன்.

இன்று ஒரு வெட்டுப் பிரேரபணையைச் சபையில் சமர்ப்பித்தேன்.
அதில் சில பிரச்னைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். எதிர்க்கட்சிக்
காரர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் டெலிபோன்கள் '**tap**' பண்ணப்
படுகின்றன. எதிர்க் கட்சிக்காரர்களுக்கு வந்து சேரும் கடிதங்கள் பிரித்துப்
பார்க்கப்பட்டு ' ஸென்ஸார் ' (**censor**) செய்யப்பட்டு—மறுபடியும் ஒட்டப்
பட்டு வந்து சேருகின்றன. இப்போது, எங்கே பார்த்தாலும், ' எதிர்க்
கட்சி வளர வேண்டும் ' என்று ஆட்சியாளர்கள் சொல்லிக்கொண்டிருக்
கிறார்களே தவிர, நடை முறையில் அதற்கிணங்க நடந்து கொள்வதில்லை.
எதிர்க்கட்சிகள் வளருவதற்கு அவர்கள் சந்தர்ப்பம் கொடுப்பதில்லை.

இதன் காரணமாக, எங்கே பார்த்தாலும், எங்கள் கட்சியினருக்கு ஒரு பீதி உண்டாகியிருக்கிறது. சமீபத்தில், என் தொகுதியில், எங்கள் கட்சியில் சேர்ந்திருக்கும் சில பேர்களைப் போலீசார் கூப்பிட்டு மிரட்டி யிருக்கிறார்கள். போலீசார் ' நீங்கள் அந்தக் கட்சியில் சேரக்கூடாது ' என்று சொல்லி, அவர்களைப் பல தொந்தரவுகளுக்கு ஆளாக்கி யிருக்கிறார்கள் என்று கேள்விப் படுகிறேன். இது சம்பந்தமாக எனக்கு அனேக கடிதங்கள் வந்திருக்கின்றன. எங்கள் கட்சியில் ஒருவர் " நாங்கள் போலீசாரிடம் ' எங்கள் தலைவர்களுக்கும் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் கடிதங்கள் எழுதி அவர்களைக் கேளுங்கள் ; நாங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை. என்று சொன்னோம். ஆனால் போலீசார் ' மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. அதற்கு நீங்கள் பதில் சொல்லவேண்டும் ' என்று கூறி எங்களை இம்சித்தார்கள்" என்று கடிதம் எழுதியிருக்கிறார். இது ரொம்பவும் வருந்தத்தக்க விஷயம். போலீஸ் ஆட்சி நடத்தி நீங்கள் எவ்வளவு நாளைக்கு ஆட்சி நடத்த முடியும் என்று கேட்க விரும்புகிறேன். கனம் அமைச்சர்களுக்குத் தெரிந்தோ தெரியாமலோ இம்மாதிரியான காரியங்கள் பிராந்தியங்களில் நடந்து வருகின்றன. அரசியலில் நீண்ட கால அநுபவம் பெற்ற மகாத்மா காந்தியடிகள், ஸ்ரீ ராதாகிருஷ்ணன் போன்றவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் ? " நாட்டில் எதிர்க் கட்சி நன்றாக வளர வேண்டும். அதற்கான சலுகைகளை அவைகளுக்குக் கொடுக்க வேண்டும் " என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எதிர்க் கட்சிகளை நசுக்க வேண்டுமென்ற மனப்பான்மை எந்தக் கட்சிக்கும் இருக்கக்கூடாது என்று தான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூறியபடி ஆட்சி யாளர்கள் நடந்துகொள்ள வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டதுபோன்ற அக்கிரமங்களை போலீசார் செய்யாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(உதவி சபாநாயகர் தலைமை.)

தவிர, வட நாட்டிலிருந்து வரக்கூடிய சலுகைகளெல்லாம் போதுமான அளவு வருவது இல்லை என்று காலையில் கூட நமது தொழில் அமைச்சர்
11-20 a.m. அவர்கள் பதில் சொல்லும்போது கூறினார்கள். இரும்பு, இன்னும் முக்கிய மான சில ஐடம்களும் நாம் கேட்டதற்குக் கால்வாசி, அரைவாசிதான் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இம்மாதிரி அனேக வித சலுகைகள் நமக்குக் கிடைக்காததன் காரணமாக, நம்முடைய தென்னாடு அனேக தடவைகளில் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டு வருத்தப் படுகிறேன். அமைச்சர்கள் இவைகளை எப்பொழுதுதான் தீர்க்கப் போகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் எவ்வளவு தூரம் இதில் வாதாட முடியுமோ அவ்வளவு தூரம் வாதாடி நமக்கு வேண்டிய கிராண்டு எல்லாம் நல்ல முறையில் மத்திய சர்க்காரிலிருந்து வாங்கி, செலவிட்டு, தென்னாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சமீபத்தில் பத்திரிகையில் பார்த்தோம். கைத்தறிப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னையாக இருக்கிறது என்பதுபற்றி எல்லோரும் பேசினார்கள். அதைப்பற்றி தொழிலமைச்சர் அவர்கள் டில்லிக்குப் போவதாகவும், அது விஷயமாக முடிவு செய்து வருவதாகவும் பார்த்ததில் எனக்கு ஒரு சந்தோஷம். இருந்த போதிலும், அவர்கள் எப்படியாவது மத்திய சர்க்காரோடு வாதாடி இந்தப் பிரச்னையை உடனே தீர்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. உடனடியாக அவர்கள் இதைப்பற்றி நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதேமாதிரிதான் விவசாயிகளுக்கும் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு வேண்டிய இரும்பு, சிமிட்டி, இன்னும் விவசாய இலாகா மூலமாகச் சில பூச்சி மருந்துகள், சிறு சிறு உதவிகளெல்லாம் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். அம்மாதிரி உதவிகள் கொடுக்கப்



படாவிட்டால், விவசாயம் புறக்கணிக்கப்பட்டு விருத்தி அடையாது என்று நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுக்குப் பலவிதமான கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களை நாம் எவ்வளவு தூரம் தீர்த்தாலும் இன்னும் தீர்ந்தபாடில்லை என்று இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

சிறு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும் விஷயத்திலும் இன்னும் பலவிதமான கஷ்டங்களுக்கு அவர்கள் உள்ளாகியிருக்கிறார்கள். அவைகளை உடனே தீர்ப்பதற்கான வழிவகைகளை நாம் காணவேண்டும். சமுதாய நலத்திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் பற்றி ஒவ்வொரு ஜில்லாவிலும் எல்லாவித அங்கத்தினர்களையும் கூட்டி ஒரு கூட்டம் போட்டு, முக்கியமாகக் புறக்கணிக்கப்பட்ட பிராந்தியங்களிலே இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமே தவிர, ஆளும் கட்சியில் இருப்பவர்களுக்குச் சலுகை காட்டுவதற்காகவோ, நன்றாக இருக்கும் பிரதேசங்களில் மேலும் அந்தத் திட்டங்களைக் கொண்டுவந்து திணிப்பதற்கோ முயற்சி எடுக்கக் கூடாது என்று நான் ரொம்பவும் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்தத் திட்டங்கள் நல்ல முறையிலே நடக்க வேண்டுமானால், எல்லோருடைய ஒத்துழைப்பும் வேண்டும். புறக்கணிக்கப்பட்ட பிராந்தியங்களைத்தான் முக்கியமாக எடுத்து, அந்த மக்களுடைய ஒத்துழைப்பைக் கொண்டு இந்தத் திட்டங்களை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆனால், சில பாகங்களிலே (**Contiguous area**) ஆக இருந்தால்தான் எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன் சொன்னார்கள். அது எப்படி இருந்தபோதிலும், அதிலும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. கண்டிக்யூவஸ் ஏரியாவாக எடுத்துக் கொண்டு போனால் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் முடியுமோ முடியாதோ என்ற கஷ்டம் இருக்கிறது. **Undeveloped and under-developed areas** களில் முக்கியமாக எடுத்துக்கொண்டு இந்தத் திட்டங்களை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எடுத்துக்கொண்ட திட்டங்களும் சரிவர நடப்பதில்லை. பலவிதமான காரணங்கள் சொல்லப்படலாம். மக்கள் ஒத்துழைப்பு ஏற்படவில்லை என்று சொன்னபோதிலும்கூட இதற்கெனப் போட்டிருக்கும் அதிகாரி சரிவர அந்த வேலையை நடத்துவது இல்லை என்று இன்றைய தினம் ஒரு பெரிய புகார் இருக்கிறது. அதன் காரணமாக நன்றாக யோசித்து நல்ல அதிகாரிகளைப் போட்டு இந்தத் திட்டங்களை நல்ல முறையில் நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

லஞ்சத்தைப்பற்றி நான் சொல்லியிருக்கிறேன். லஞ்சம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே வருகிற நிலையில் ரெவினியூ டிபார்ட்மெண்ட் ரொம்ப மோசமான நிலைமையில் இருக்கிறது. அதன் காரணமாக, முக்கியமாக ஏழைகள் எல்லாம் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். இதற்குத் தனியாக ஸி.ஐ.டி. போட்டு எவ்வளவு சீக்கிரம் இதை ஒழிக்க வேண்டுமோ அந்த நடவடிக்கையை உடனே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அம்மாதிரி அநேக குறைகள் மக்களுக்கு இருக்கின்றன.

என்.ஜி.ஓ.-க்களுக்கு இருக்கும் கஷ்டங்கள்பற்றி அநேக தடவை இந்தச் சபையில் பேசப்பட்டிருக்கிறது. அத்துடன் ஹரிஜனங்களுக்கு வீட்டு வசதி சம்பந்தமாகவும், அவர்களுக்கு வீட்டு மனை வழங்குவது சம்பந்தமாகவும் பேசப்பட்டிருக்கிறது. அந்த வகையில் அவர்களுக்குக் காலனி ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும். சில ப்ராஜெக்டு களைப்பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் வைகை ப்ராஜெக்டைப் பார்த்தபோது, அங்கே கட்டிடங்கள் சரிவர கட்டப்படாமல் பெரிய புகார் வந்திருக்கிறது. இம்மாதிரி ப்ராஜெக்ட்டில் புகார் ஏற்படும்போது, அதைப் பற்றி இன்ஜினியர்களுடனும் மற்றவர்களுடனும் பரிசீலனை செய்து சரிவர

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [10th April 1958

தீர்க்கவேண்டும். சர்க்கார் போடக்கூடிய திட்டங்கள் சரிவர நிறைவேறுவதற்கான ஒத்துழைப்பை எதிர்க்கட்சியினர் தருவார்கள் என்று கூறிக்கொண்டு, இந்தத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: கனம் உதவி சபாநயாகர் அவர்களே, ஒரு மாதத்திற்கு மேலாக பட்ஜெட் திட்டங்களையெல்லாம் விவாதித்து இப்பொழுது இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். இந்தத் தொகையை ஒதுக்குவதன் மூலம் தொடர்ந்து இந்த வருஷத்தில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றக்கூடிய வசதியை இந்தச் சபை சர்க்காருக்குச் செய்து கொடுக்கிறது. அந்தத் தொகையை நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டிய பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது என்பதைப்பற்றி எதிர்க் கட்சியிலே இருக்கும் கனம் அங்கத்தினர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுதான் நாங்கள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அந்தப் பொறுப்பை எங்களால் இயன்ற வரையில் நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்துகொண்டு வருகிறோம்.

ஆனால், இதிலே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றும்போது, மக்களுடைய சக்தியையும் மக்களுடைய ஒத்துழைப்பையும் கொண்டுதான் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட சக்தியை சர்க்காருக்குத் தந்து உதவுகிற முறையிலே, மக்களுடைய ஒத்துழைப்பையும் கொடுக்கும் முறையிலே சூழ்நிலை எவ்வளவுக்கெவ்வளவு தெளிவாகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இந்தத் திட்டங்களையெல்லாம் நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு முயற்சிகளை நாம் செய்யலாம். அவ்வாறு இல்லாது, குழப்பமான நிலைமைகள் நம்முடைய ராஜ்யத்தில் இருந்துகொண்டிருக்கிற வரையில், மக்களுக்கு அந்தக் குழப்பத்தின் மூலமாகவே, பல தீங்குகள் ஏற்படுவதுடன், அதன் காரணமாகப் பல்வேறு திட்டங்களை நல்ல முறையிலே நடைபெறாமல் தடைபட்டு விடுகின்றன என்பதையும் முக்கியமாக எதிர்க்கட்சி மனதிலே கொண்டு யோசிக்க வேண்டுமென்று நான் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகின்றேன். சில சமயங்களில் எதிர்க்கட்சியாக இருக்கும் காரணத்தினாலேயே எப்படியாவது வருகிற ஒரு எதிர்ப்பை இன்னும் கொஞ்சம் அதிகமாகச் செய்து விடலாம்—அது நியாயமா, நியாயம் அல்லாத எதிர்ப்பா என்பதைக் கூட கவனிக்காமல்—எப்படியாவது குட்டையைக் குழப்பி விடலாம் என்று செய்கிறபோது உண்மையிலேயே சர்க்காருக்கு அது கொஞ்சம் கஷ்டத்தை உண்டாக்குகிறது. ஆனால், அதன் மூலமாகப் பாதிக்கப்படுகிறவர்கள் ஏழைகள். அவர்களுடைய முன்னேற்றத்திற்கான திட்டங்கள்தான் தடைப்படுகின்றன. கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், உண்மையிலேயே ராஜ்யத்தினுடைய முன்னேற்றத்தில் அக்கறை இருக்குமானால், மக்களுடைய நன்மையிலே, அக்கறை இருக்குமானால், இது செய்வது தவறு என்று உணருவார்கள் என்றே நான் நம்புகிறேன்.

உதாரணமாக, சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். விற்பனை வரியைப்பற்றி ஒரு தனிப்பட்ட நிபுணரைப் போட்டு, பரிசீலனை செய்து, அவருடைய அறிக்கையின் அடிப்படையிலே ஒரு மசோதாவைத் தயார் செய்தோம். அதைச் சர்க்காரே முழுப் பொறுப்பையும் ஏற்று, இதுதான் இறுதியான மசோதா என்ற ஒரு முடிவையும் செய்து விடாமல், இந்தச் சபை முன் சமர்ப்பித்து, இந்தச் சபையிலே இருக்கும் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது. இதை எந்த முறையில் மாற்றுவது என்பதைப் பரிசீலனை செய்வதற்காகத்தான் இந்தச் சபை பொறுப்பை ஏற்றுக்கொண்டு கமிட்டியை நியமித்திருக்கிறது.



10th April 1958] [Sri C. Subramaniam]

இந்தச் சமயத்தில் வியாபாரிகளிடத்திலே சில எதிர்ப்புக்கள் தோன்றி இருக்கின்றன. அந்த எதிர்ப்புக்கள் எப்படித் தோன்றின என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் எந்த முறையிலே விற்பனை வரியை மாற்றி அமைப்பது என்பதைப்பற்றி முடிவு செய்யவில்லை. அது இந்தச் சபையினுடைய பொறுப்புக்கு விடப்பட்டிருக்கிறது. வியாபாரிகள்தான் எதிர்ப்பு செய்தாலுங்கூட அதைப் பயன்படுத்திக்கொண்டு, அதிலும் எதிர்க்கட்சித் தலைவர்கள் சென்று, 'உங்களுக்கு நாங்கள் தலைமை தாங்கி நடத்துவதற்குத் தயாராக இருக்கிறோம்' என்று சொல்லி, இந்த எதிர்ப்பை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி விடுவதினாலே உண்மையிலேயே நல்ல 11-30 a.m. சூழ்நிலை ஏற்படப்போகிறதா அல்லது விற்பனை வரி அமைப்பையும் நாம் நல்ல முறையிலே பரிசீலனை செய்து பார்ப்பதற்கு நன்றாக இருக்குமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். இதே மாதிரிதான், எந்த ஒரு விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, ஏதாவது எதிர்ப்பு இருந்தால் அதை இன்னும் அதிகப்படுத்துவது, அதன் மூலமாகச் சர்க்காருக்கு நெருக்கடியை உண்டாக்குவது என்று எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் வேலை செய்வது சரியல்ல. இப்படிச் செய்வதால் என்ன ஆகிறது ? ஒரு பக்கத்தில் சர்க்கார் பல பல திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிற பணத்தை நல்ல முறையில் செலவு செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். வேலைகள் நன்றாக நடைபெறும்படி கண்காணிக்க வேண்டும் என்கிறார்கள். இன்னொரு பக்கம் அந்த வேலைகளில் ஈடுபட்டிருப்பவர்களிடையே அதிருப்தியை உண்டாக்கி வருகிறார்கள். தெரிந்தோ தெரியாமலோ அவர்கள் எல்லோரும் இந்த வேலைகளில் ஊக்கம் குன்றுவார்கள். எப்படி காரியத்தை நன்றாகச் செய்வார்கள் ? வேலையில் ஒழுக்கக் கேடுதான் வேண்டாமென்றாலும் வளர்ந்து விடுவதற்குரிய சூழ்நிலையைத்தான் எதிர்க் கட்சியினர்கள் உண்டாக்குகிறார்கள். இதனால் யாருக்கு நஷ்டம் ? நம்முடைய ராஜ்யத்திற்குத்தான் நஷ்டம். நம்முடைய ராஜ்ய மக்களுக்குத்தான் நஷ்டம். இது பெரும் ஆபத்தை விளைவிக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே அதுபோல் கருத்து ஒற்றுமை இருக்கிற விஷயத்தில் சர்க்காருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வதாகச் சொல்வது தவறு.

அதே மாதிரியாக ஆசிரியர்களுடைய விஷயம். ஆசிரியர்களுடைய தரத்தை உயர்த்த வேண்டுமென்றும், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதிலும் யாருக்கும் எந்த விதமான அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது. அதற்காகத்தான் முயற்சி செய்து வருகிறோம். ஆனால் இன்னொரு பக்கத்தில் எதிர்ப்புச் சக்திகள் அவர்களிடையே கிளர்ச்சி மனப்பான்மையைத் தூண்டி வருகிறது. சர்க்கார் சிப்பந்திகள் விஷயமும் அப்படித்தான். அவர்களுக்குப் போதுமான ஊதியம் இன்றைக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிறது என்பது உண்மையாக இருக்கலாம். அவர்களுடைய கஷ்டத்தை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பரிசீலனை செய்து பார்க்க வேண்டிய விஷயம். அவர்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்பதில் சர்க்காருக்கு அக்கறை இல்லை போலவும், அதற்காக மகாநாடுகள் கூட்டி, கிளர்ச்சிகள் பல செய்து சர்க்காருக்குத் தங்கள் அதிருப்தியைப் பலவகையிலும் தெரிவித்துக் கொள்ள வேண்டுமென்பது போலவும் பலகாரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பது வருந்த வேண்டிய விஷயமாகும். அரசியல் தத்துவங்கள் அதிகாரிகள் மனதில் புகும்படியாகச் செய்வதனால் எத்தனை விதமான ஆபத்து உண்டாகும் என்று சொல்வதற்கில்லை. முன்பே சொன்னேன், அவர்களால் செய்யப்பட வேண்டிய காரியங்களில் அதிகமான தடக்கம் உண்டாகிறது. ஆகையால் இந்தச் சர்க்கார் நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். அதிகமான சிக்கல்களைச் சர்க்காருக்கு உண்டாக்கிக் கொண்டிருப்பதனால் பயன் இல்லை. அதிகமான எண்ணிக்கை உடையவர்களாக ஆளும் கட்சி இருப்பதனால் அவர்களுக்கு அதிகமான பொறுப்பு இருக்கிறது. அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். மக்களுடைய முன்னேற்றத்திற்காகப்

[Sri C. Subramaniam] [10th April 1958

பல பல திட்டங்களை நாம் நிறைவேற்றும்போது அதில் பல சங்கடங்கள்
வருகின்றன. நாம் எல்லாம் ஒன்றுக யோசனை செய்து எப்படி அந்தச்
சங்கடங்களை எல்லாம் நிவர்த்தி செய்ய முடியும் என்று யோசித்தாக
வேண்டும். அதை விட்டு என்.ஜி.ஒ.-க்களுடைய கூட்டத்தில் எத்தனை
கேவலமாக நிலைமை போகும்படியாகத் தூண்டிவிடுகிறுர்கள் எதிர்க்கட்சிக்
காரர்கள் என்று நினைக்கும்போதுதான் நிலைமை சீர்திருந்துவதற்குப்
பதிலாகச் சீர்கெட்டு வருகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

**Sri S. M. ANNAMALAI :** எதிர்க் கட்சிக்காரர்கள் மாத்திரம் இப்படிப்
பேசுவதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். என்.ஜி.ஒ.-க்
களுடைய கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ புருஷோத்தம்
அவர்களும் பேசினுர்கள். அவர்களும் தூண்டிவிட்டவரா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அவர் என்ன பேசினுர்
என்பதும் எனக்குத் தெரியும்.

**Sri P. S. CHINNADURAI :** பாயின்ட் ஆப் ஆர்டர். சட்ட
மன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திற்கு வெளியில் நடைபெற்ற
சில கூட்டங்களில் எதிர்க்கட்சிக்காரர்கள் என்ன சொன்னுர்கள் என்பதைப்
பற்றி ஒருதலைப் பட்சமான கருத்துக்களை இந்த மன்றத்தில் கனம்
அமைச்சர் அவர்கள் வெளியிடலாமா ? அவர்கள் என்ன சொன்னுர்கள்
என்பது அவர்களுக்குத் தெரியுமா ? அதிகார பூர்வமாக என்ன பேசினுர்
கள் என்பதற்கு அமைச்சர் ஒரு அறிக்கையைச் சமர்ப்பிப்பார்களா ?

**The Hon. Sri C. SUBRAMANIAM :** கனம் அங்கத்தினர்கள்
என்ன பேசினுர்கள் என்பது எனக்குத் தெரியும். நான் ஒருதலைப்
பட்சமாகச் சொல்லவில்லை. அவர்களுடைய பேச்சை நான் படித்தேன்.
அந்தப் பேச்சு எவ்வளவு தூரம் உணர்ச்சியைக் கிளறிவிடும் என்பது
எனக்குத் தெரியும். அது அவர்களுடைய நோக்கம் இல்லையென்றுல்
நோக்கத்திற்கு விரோதமாகப் பேசியிருக்கிறுர்கள் என்றுகிறது.

அதற்கடுத்தபடியாக கனம் அண்ணுதுரை அவர்கள் நான் பட்ஜெட்
உரைக்குப் பதில் சொன்ன காலத்தில் திராவிட நாட்டைப்பற்றி பேசியது
பொருத்தமற்றது என்றுர்கள். அவர் அதைப்பற்றி பேசியிராவிட்டால்
அது பொருத்தமற்றதாகத்தான் இருக்கும். ஆனுல் அவர்களும் அன்றைய
தினம் அதைப்பற்றிப் பேசி என்னுடைய வாதத்தைப் பொருத்தமானதாக
ஆக்கினுர்கள். அதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஸ்ரீ அண்ணுதுரையின் தனிப்பட்ட சரித்திரத்தைப்பற்றி எனக்குக் கவலை
யில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து அறிந்து கொள்ள நான் விரும்ப
வில்லை. ஆனுல் அவர்கள் சேர்ந்திருக்கிற கட்சியின் கொள்கையாக வற்
புறுத்தப்பட்டு வருகிற திராவிட நாட்டுக் கொள்கை என்ன என்பதைப்
பற்றித்தான் நான் அன்றைய தினம் ஆராய்ச்சி செய்தேன். அந்த
அடிப்படையில் ஸ்ரீ அண்ணுதுரை அவர்கள் எழுதி வைத்திருக்கிற புத்
தகத்தைக்கொண்டே அவர்கள் கருத்துக்கள் எப்படி அடிபட்டுப் போனவை
என்று நான் விளக்கினேன்.

**Sri C. N. ANNADURAI :** மறுபடியும் கனம் அமைச்சர் அவர்கள்
அந்தப் பிரச்சனையைப் பேசுகிற காரணத்தினுல் எனக்குப் பதில்
அளிக்க சந்தர்ப்பம் கொடுப்பதாக இருந்தால் அதைப்பற்றி பேசலாம்
என்று சொல்ல விரும்புகிறேன்.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** சபை நடவடிக்கை எவ்வாறு
நடக்க வேண்டும் என்பதற்கு விதி இருக்கிறது. அந்த விதியை
அனுசரித்துத்தான் இங்கே விவாதம் நடக்க வேண்டியிருக்கிறது. இன்றை
கும் அவர் அந்த விஷயத்தைப்பற்றிச் சொன்னதால் அதை இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் கருத்துக்கள் அடிபட்டுப்போன கருத்
துக்கள். அந்தக் கருத்துக்களை இன்றைய தினமும் சொல்லிக்கொண்டே
இருப்பதால் பயனில்லை.



10th April 1958] [Sri C. Subramaniam]

எனக்கு அவர்களுடைய கருத்துக்களைப் படித்துப் பார்த்தபோது, எனது 11-40 a.m.
மாணவர்கள் விடுதி வாழ்க்கையில் உள்ள ஒரு நிகழ்ச்சிதான் ஞாபகத்
திற்கு வருகிறது. என்னுடன் ஒரு மாணவர் வாழ்ந்து வந்தார். அவ
ருக்கு குளிப்பதிலேயே நம்பிக்கை கிடையாது. ஆனுல் அவர் வெளியில்
வரும்போது நல்ல சட்டை போட்டுக் கொண்டு சென்ட்டையும் அதில்
தெளித்துக் கொண்டு வருவார். என்ன குளித்தீர்களா என்று அவரைக்
கேட்டால், குளிக்க ஒன்றும் இல்லை, சட்டை மாத்திரம் போட்டுக்கொண்
டேன் என்று சொல்வார். வெளியில் நல்ல சட்டையைப் போட்டுக்கொண்டு
தோன்றுவார். ஆனுல் உடம்பெல்லாம் அழுக்கு. அதே போல்தான்,
பழைய கொள்கைகளை வைத்துக்கொண்டு சட்டை மாத்திரம் போட்டுக்
கொண்டிருக்கிறீர்களா அல்லது அழுக்கை குளித்து நீக்கி விட்டீர்களா
என்று அவர்களிடம் கேட்கிறேன் ? அவர்களது பத்திரிகைகளை எல்லாம்
பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

**Sri C. N. ANNADURAI :** அமைச்சர் அவர்கள் முன்னுல்
சொல்லப்பட்ட வாதங்கள் எல்லாம் அடிபட்டுப் போய்விட்டது என்று
சொன்னதை ஆட்சேபிக்கிறேன். அவர்கள் சொன்னதெல்லாம் ஆதாரங்
கள் அல்ல. அவர் அதைப் படிக்கவில்லை எனத் தோன்றுகிறது. அப்
புத்தகம், 57-ல் எழுதப்பட்டதாகச் சொன்னுர்கள். அது, ஆருவது பதிப்
பாகும். 1930–35-ல் எழுதிய கட்டுரைகள் 1939-ம் ஆண்டில் பிரசுரிக்கப்
பட்டன. அதை ஆதாரம் என்று சொல்லி, ஆதாரங்கள் அடிபட்டுப்
போய் விட்டது என்று சொல்லி தனது வீரத்தை காட்டிக்கொள்வது
அவர்களது கடசிக்காரர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டக் கூடியதாக இருக்குமே
தவிர, விஷயத்தை ஆராய வேண்டுமென்று கருதுகிறவர்கள் ஏற்றுக்
கொள்ளக்கூடிய வாதமல்ல.

**The Hon. Sri C. SUBRAMANIAM :** அவர் பேசினதால் இன்னும்
அதைப்பற்றி கொஞ்சம் கூடுதலாகச் சொல்ல வேண்டி வருகிறது.
திராவிட நாடு அமைய அவர்கள் சொல்லியிருந்தது, நம் நாட்டில் மூன்று
இனங்கள் இருக்கின்றன. ஒன்று ஆரிய இனம், இரண்டாவது திராவிட
இனம், மூன்றுவது முஸ்லீம் இனம். முஸ்லீம் இனமும் திராவிட
இனமும் ஒன்றுக வாழ்ந்தாலும் வாழலாம், ஆனுல் ஆரிய இனமும்
திராவிட இனமும் சேர்ந்து வாழ முடியாதென்று. ஆனுல் அப்படி
ஒருவரை ஒருவர் கொன்று கொல்லாமல் வாழ்ந்ததற்குக் காரணம்
பிரிட்டிஷ் துப்பாக்கிகளே ஒழிய வேறல்ல. திராவிட முன்னேற்றக் கழகம்
சான்றுக எடுத்துக் காட்டியது, 625 சமஸ்தானங்கள் தனியாக இயங்க
முடியுமானுல் ஏன் தமிழ் நாடு தனியாக இயங்கக் கூடாது ? போர்ச்சு
கீஸும் ப்ரெஞ்சும் ஒரு பகுதியை இங்கு வைத்துக் கொண்டிருப்பார்களே
யானுல், அப்படி அன்னிய ஆதிக்கங்கள் இங்கு சிறு சிறு பகுதிகளை
வைத்துக் கொண்டு தனியாக இயங்குமானுல் நாம் ஏன் தனியாக
இயங்கக் கூடாது என்கிறுர்கள். இன்னும் அவர்கள் கேட்கும் பிரிவினை,
இன அடிப்படையிலா அல்லது வடநாடு தென்னுடு என்ற அடிப்படையிலா ?
அவர்கள் 625 சமஸ்தானங்கள் என்று சொன்னுர்கள். அவைகள் எல்
லாம் இப்பொழுது தவிடு பொடியாகி விட்டது. நம் நாட்டிலிருந்து
ப்ரெஞ்சு ஆதிக்கம் போய்விட்டது. போர்ச்சுகீசிய ஆதிக்கம் போகத்தான்
போகிறது, அதுபற்றி சந்தேகம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் அதை
வைத்துக் கொள்ள வேண்டாம். அந்த ஆதாரங்கள்தான் இன்றும்
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கிறதா இல்லை என்றுல் ஏதாவது
புதிய ஆதாரங்கள் இருந்தால் அவைகள் என்ன என்று கேட்கிறேன்.
இதுவரை அதுபற்றி ஒரு பதிலும் வரவில்லை. அழுக்கை கிளறிப் பார்ப்
பதில் எனக்கு ஆசையில்லை, ஆனுல் ஒருவரும் அழுக்காக இருக்கக்
கூடாது என்பதே என் ஆசை. அவர்கள் நல்ல முறையில் முன்னேறு
வதாக இருந்தால், அதுபற்றி என்னைப்போல் பெருமைப்படக் கூடியவர்கள்
வேறு யாருமே இருக்க முடியாது. நாங்கள் எங்கள் கருத்துக்களை ஒழித்து
விட்டோம், புதிய உயர்ந்த கருத்துக்களை வைத்து நாங்கள் இயங்குகிறோம்

என்று சொல்லளவில் இல்லாமல் செயல் அளவில் நிரூபிக்கப்படுமானால், அண்ணாதுரை அவர்கள் உண்மையிலே முன்னேறியிருக்கிறார், முன்னேறு கிறார் என்று சந்தோஷப்படுவதில் நான்தான் முதன்மையாக நிற்பேன் என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இதைத் தொடர்ந்து பேச வேண்டுமென்றால் நான் சொன்னதை மறுத்துச் சொல்லட்டும், இல்லாவிட்டால் வேறு விஷயத்திற்குப் போகிறேன்.

**Sri C. N. ANNADURAI :** ஆதாரங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வதெல்லாம் ஆதாரங்கள் அல்ல. திராவிட நாடு அமையலாம் என்பதற்கு பல்வேறு ராஜ்யங்களை உதாரணங்களாக எடுத்துக் காட்டப் பட்டதே தவிர, எடுத்துக் காட்டுகளை ஆதாரம் என்று வாதத்திற்கு எடுத்துக் கொண்டு எங்களது வாதங்கள் தவிடு பொடியாகி விட்டது என்று சொல்வதில் பயன் ஒன்றுமில்லை. சுதேச சமஸ்தானங்களைப் பொறுத்த வரையில் 39-க்கு முன்னால் எழுதப்பட்ட கருத்துக்களை வைத்துக்கொண்டு அதே போல் நீங்களும் இருக்க விரும்புகிறீர்களா என்று மறு வாதம் சொல்வதில் பயனில்லை. அதே அழுக்கு எங்களிடம் இருக்கிறதா, அல்லது சட்டை மாத்திரம் போட்டுக்கொண்டிருக்கிறோமா என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அவர்களுக்கு, மாணவப் பருவத்திலிருந்து அழுக்கோடு பழகிய பழக்கம் இருக்கிறது என்று தெரிகிறது. எங்களிடம் அழுக்கு இருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் நெருங்கி வந்து பார்த்தால் தெரியும்.

**The Hon. Sri C. SUBRAMANIAM** : இந்த உலகத்தில் உள்ளவர்கள் அழுக்கோடுதான் இயங்க வேண்டியிருக்கிறது. எல்லோருமே உலகத்தில் சுத்தமாக இருக்கிறார்கள் என்று நாம் எண்ணிக் கொண்டிருந்தால் நாம் நம்மையே ஏமாற்றிக் கொண்டவர்களாவோம். நாம் இன்று அழுக்கோடுதான் வாழ்கிறோம். அந்த அழுக்கை அழிப்பது தான் நம் கடமை. (ஆரவாரம்.)

அடுத்தபடியாக, இங்கு கைத்தறி விஷயத்தைப்பற்றி கூறப்பட்டது. கைத்தறி விஷயம் மட்டுமல்ல பேசப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், ஏதோ டெல்லி நம்மை புறக்கணித்து விடுகிற தென்று. நாம் அங்கு வாதாடி நமக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற வில்லை என்ற கருத்தையும் தெரிவித்தார்கள். அண்ணாதுரை அவர்களும் அதுபற்றிப் பேசினார்கள். பலவிடங்களிலும் அதுபற்றி பேசியிருக் கிறார்கள். டெல்லிக்குப் போனால் நாம் ஏதோ பயந்து கை கட்டிக் கொண்டிருந்து விட்டு அவர்கள் சொல்வதற்கெல்லாம் அடங்கி ஒன்றும் பேசாமல் வந்து விடுகிறேன் என்றும் சொல்லப்பட்டது. நான் ஒன்று அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், நான் அங்கு சென்றால் கை கட்டி, வாயைப் பொத்திக் கொண்டு சும்மா நிற்பது கிடையாது. நமது உரிமைகளை தைரியமாகத் தான் கேட்கிறோம். என் பேரில் அங்கு யாராவது குற்றம் சொல்வதாக இருந்தால் யாரையும் இவர் எடுத்தெறிந்து பேசுகிறார் என்ற குற்றம் சொல்வார்களே தவிர இவர் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்கிறார் என்று ஒரு சர்டிபிக்கேட்டை டெல்லியில் யாரும் எனக்குக் கொடுத்தது கிடையாது. அடுத்தபடியாக, இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது, இப்பொழுதுள்ள திட்ட அமைப்பில் என்னென்ன மாறுதல் செய்ய வேண்டும், இன்ன இன்னது செய்ய வசதிகள் இருக்கின்றன, இன்ன இன்ன திட்டங்களை ஏற்படுத்த வேண்டும், இப்படி யெல்லாம் மக்களுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னால் அவைகளை ஆராய்ந்து பார்க்கலாம். இன்று இங்கு ஒரு அலுமினியம் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். அலுமினியத் தொழிற்சாலை என்று சொல்லும்போது அது தனிப்பட்ட முறையில் நாம் மாத்திரம் ஏற்பாடு செய்யக் கூடியதல்ல, அல்லது மத்திய சர்க்கார் மட்டும் ஏற்பாடு செய்யக் கூடியதல்ல. அன்னிய நாட்டு உதவி அதற்கு வேண்டியிருக்கிறது. ஆகவே, பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதோடு, இன்னும் புதிய புதிய திட்டங்கள் எவை ஏற்படுத்த லாம் என்று ஆராய்ந்து பார்த்து அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறோம். இந்த கைத்தறி விஷயமாக சாதாரணமாக சொல்லக்கூடிய ஒரு யோசனை, இந்தச் சர்க்கார் தேங்கிக் கிடக்கும் துணிகளை வாங்கி வைத்துக்



கொண்டால் அந்தப் பிரச்னை தீராதா என்று கேட்கிறார்கள் ? உற்பத்தியாகும் பொருள்களை வாங்கிச் சேமித்து வைப்பதால் மட்டும் அதுபற்றிய பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை, உற்பத்தி செய்யும் பொருள்களை எல்லோரும் வாங்கி உபயோகித்தால்தான் அந்தத் தொழிலை நீடித்து நடத்திக் கொண்டு போக முடியும். இப்பொழுது தேங்கிக் கிடக்கும் துணியை மாத்திரம் வாங்கி வைத்துக் கொள்வதால் பிரச்னை தீர்ந்து விடாது. அத் துணிகளை நல்ல முறையில் வெளியே விற்பதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யலாம் என்று நாம் யோசனை செய்யவேண்டும். இப்பொழுது கைத்தறிக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டம் என்னவென்றால் மில் துணிகளுக்குள்ள வரியை ஓரளவு குறைத்து விட்டார்கள், அதே சமயத்தில் இதற்குள்ள ரிபேட்டும் குறைத்துவிடப்பட்டது. ஆகவே, கைத்தறிக்கு இன்று மில் துணியோடு போட்டி போட முடியவில்லை. ஓரளவு ஒன்றே கால் அணா விற்பனை வரி போட்டிருந்தோம், அதையும் எடுத்து உற்பத்தி வரி என்று குறைத்து விட்டோம். ஆகவே, இன்று கைத்தறித் துணிக்கு மில் துணியோடு போட்டி போட முடியாமல் இருக்கிறது. இன்று மில் துணி மாத்திரம் அதிகமாக விற்கிறது என்று சொல்ல முடியாது. அதுவும் ஓரளவு தேங்கிக் கிடக்கிறது. இது பொருளாதார அபிவிருத்தியில் அவ்வப்போது ஏற்படக்கூடிய சில நிகழ்ச்சிகளாகும் என்பதைப் பொருளாதாரச் சரித்திரம் படித்திருப்பவர்கள் தெரிந்து கொண்டிருக்கக்கூடும். ஆகவே, இந்தத் தடங்கல்களை, சிக்கல்களை எப்படி நீக்குவது என்பதுபற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். அதுபற்றி இந்தச் சர்க்கார் யோசித்துக்கொண்டிருக்கிறது. அதற்காக மத்திய சர்க்காருடன் கலந்து என்னென்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதுபற்றி எங்களாலான எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் துர்பாக்கியவசமாகச் சில பத்திரிகைகளில் சில செய்திகள் வந்து விடுகின்றன. அதை வைத்துக் கொண்டு, 'ஓ' எல்லாம் போய்விட்டது, இனிமேல் திட்டங்கள் ஒன்றும் நிறைவேறாது ' என்று சிலர் சந்தேகப்படுவதும், நாம் சொன்னது சரியாகப் போய்விட்டது என்று சிலர் சந்தோஷப்படுவதும் அவரவர் மனதிற்குத் தக்கபடி எடுத்துக் கொள்கிறார்கள்.

' உதாரணமாக நெய்வேலி திட்டத்தில் பார்லிமெண்டில் கொடுத்த 11-50 a.m.
பதலிலிருந்து மைனிங் போர்ஷன் மாத்திரம்தான் அங்கு இயங்கும் என்றும் இதுதான் "கோர் ஆப் தி பிளான்" என்கிற கருத்தையும் சிலர் தெரிவிக்கிறார்கள். அதிலிருந்து செய்யக்கூடிய உர உற்பத்தி என்னவாயிற்று ? மின்சார உற்பத்தி என்னவாயிற்று ? கார்பன் உற்பத்தி என்னவாயிற்று ? என்றெல்லாம் கேள்விகளை எழுப்புகிறார்கள். இம் மாதிரிச் சந்தேகம் வந்துவிடுகிறது. நாம் சந்தேகிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பொதுவாக மைனிங் என்று சொல்லப்படும்பொழுது அதிலிருந்து கிடைக் கிற கரியை வைத்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. அது சக்தி வாய்ந்த எரி பொருள். நாள் கணக்காக அதை அப்படியே வைத்துக் கொண்டிருக்க முடியாது. மைனிங்-லிருந்து எடுத்து உடனே அதை உப யோகப்படுத்த வேண்டும். அந்த அடிப்படையில் தான் அதோடு பல திட்டங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதோடு சேர்த்துத்தான் மின்சார திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்காகத் திட்டம் போட்டு அதற்கு கிடைக் கிற ரஷ்ய உதவியின் அடிப்படையில் இன்றைக்கு 17 கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை உருவாக்கி அதற்கான இயந்திரங்களும் வாங்க வேண்டு மென்று முடிவு செய்து அதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. அதே போலத்தான் உரத்தை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் அதற்கும் திட்டங்கள் போட்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கான சாமான்களை எங்கிருந்து வாங்குவது என்பதுதான் முடிவு செய்யப்படவில்லையே தவிர, வேறு அனேகமாக எல்லாத் திட்டங்களும் இந்த வேலையில் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் யாரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. ஆகவே நிலக்கரியை வெட்டி எடுத்துவிட்டு சும்மா இருக்கப்போவதில்லை. எல்லாத் திட்டங்களும் இதோடு பூர்த்தியாகத் தான் வேண்டும். அதே மாதிரி "கார்பனைஸ்ட் லிக்னைட்" தயாரிப்ப திலும் இத்துடன் சேர்த்து உற்பத்தி செய்யப்படும். ஆகவே இவை எல் லாம் சேர்ந்து இது ஒரு "இண்டிக்கிரேட்டடு ஸ்கீம்" என்று சொல்லலாம்.

இதற்குப் போதிய அளவு செலாவணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் மத்திய சர்க்காரும் போதிய அளவு உதவி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் நடந்தேதான் தீரும். இதில் யாரும் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை, யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.

"It is an integrated scheme and nobody can disintegrate." ஆகவே இந்தத் திட்டங்கள் எல்லாம் இதில் ஒன்றாக நடந்துதான் தீரும். முக்கியமாக உரத்திற்காக அந்நிய செலாவணி அதிகமாக நமக்குத் தேவையாக இருக்கிறது. ஆகவே உர உற்பத்தி விஷயத்தில் நாம் வேண்டிய ஏற்பாடு செய்திருக்கிறோம். கூடிய சீக்கிரத்தில் இந்தக் காரியங்கள் எல்லாம் வெற்றி பெறத்தான் போகிறது.

**Sri K. ANBAZHAGAN**: On a point of order, Sir. உதவித் தலைவர் அவர்களே, பாய்ண்ட் ஆப் ஆர்டர், சென்னை அரசாங்க அமைச்சர்கள் பல நேரங்களிலும் மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களுடைய பதிலை யொட்டி பல கருத்துக்கள் தெரிவிக்கிறார்கள். இந்த விஷயத்தில் இப்போது டெல்லி அரசாங்கத்திற்கு மாறாக சென்னை மாகாண அமைச்சர் அவர்கள் கருத்தினை உறுதியாகக் கூறுகிறார்கள். அப்படியானால் சென்னை அரசாங்கத்திற்குத் தனியாக ஏதாவது பதில் அனுப்பியிருக்கிறார்களா? அல்லது நேற்றைய தினம் டெல்லி அரசாங்கத்தில் கூறப்பட்டிருக்கிற கருத்துக்கள் இந்த அமைச்சர் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**DEPUTY SPEAKER**: இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. THE HON. Minister is perfectly right.

**THE HON. SRI C. SUBRAMANIAM**: இதைப்பற்றி அவர்கள் அளித்த பதிலின் அடிப்படையில்தான் நான் பேசுகிறேன். ஏதோ இந்தத் திட்டங்கள் இவர்களுக்கு வேண்டாம் என்று தோன்றுகிறதுபோல் தெரிகிறது. இவர்கள் வேண்டாம் என்று சொன்னாலும் இது கண்டிப்பாக வரத்தான் போகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ சி. என். அண்ணாத்துரை அவர்கள் எழுந்திருந்தார்.

**DEPUTY SPEAKER**: Even if the Hon. Minister yields, I am not going to allow any hon. Member to speak.

**THE HON. SRI C. SUBRAMANIAN**: அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால் நம்முடைய பல திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நிதி தேவையாக இருக்கிறது. சமீபத்தில் மூன்று நான்கு மாதங்களாக நமது ராஜ்யம் பூராவும் விரிவான முறையில் சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூல் நடந்திருக்கிறது. இதைப்பற்றி ஒரு சில விஷயங்களையும் புள்ளி விவரங்களையும் சொல்ல விரும்புகிறேன். இதில் பல குறைகள் நடந்திருப்பதாக இங்கு சொல்லப்பட்டது. இந்தத் திட்டத்தில் பல குறைகள் இருக்கலாம். இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. இதில் ஏதாவது குறைகள் இருந்தால் அதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களும் கூடி ஆலோசனை செய்து அதில் மாற்ற வேண்டியதை மாற்றி அமைக்கலாம். ஆனால் இதில் இருக்கிற சில புள்ளி விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய ராஜ்ய சர்க்கார் இந்த முயற்சி எடுத்துக்கொண்டதில் கிடைத்த வசூல், அதாவது நான்கு மாதங்களாக இந்தத் திட்டத்தின் கீழ் கிடைத்தது 7 கோடி 4 லட்சத்தி 90 ஆயிரத்தி 898 ரூபாய் கிடைத்திருக்கிறது. இந்தத் தொகை பெரியவர்களிடமிருந்தும் பெரிய பணக்காரர்களிடமிருந்தும்தான் வசூலாக்கப்பட்டது என்று சொல்லுவதற்கில்லை. இதில் 8 லட்சத்தி 31 ஆயிரத்தி 328 பேர்களுக்கு பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் இத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டுத்தான் 7 கோடி வசூலாகி யிருக்கிறது. மத்திய சர்க்காரும் இதற்கு ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. அதன் மூலம் தனியாக வசூல்



செய்தது, 1 கோடி 68 லட்சத்தி 23 ஆயிரம் ரூபாய். இவ்விதம் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலமாகச் சென்ற ஆண்டில் மொத்தமாக வசூலானது 8 கோடி 73 லட்சத்தி 14 ஆயிரத்தி 978 ரூபாய். இதில் எட்டு லட்சம் பேர்கள் பங்கெடுத்திருக்கிறார்கள் என்றால், இந்த எட்டு லட்சம் பேர்களையும் அதிகாரிகள் உருட்டி மிரட்டிப் பணத்தை வசூல் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அந்தக் குறையை நான் எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிகாரிகள் வரம்புமீறி நடந்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. சில இடங்களில் நடந்திருக்கலாம். அடியோடு நடந்திருக்காது என்று நான் சொல்ல வரவில்லை. ஆனால் இது மாதிரியான சந்தர்ப்பங்களில் சில நேரங்களில் நிர்பந்திக்கும்படியான நிலைமையும் ஏற்பட்டு விடுகிறது. இதைச் சில நேரங்களில் தவிர்க்க வேண்டியதாகவும் வருகிறது. ஆனால் சர்க்கார் இப்படி வசூல் செய்து விடுகிறார்களே என்று எண்ணிக் கொண்டு இவ்விதமான குறைகளைச் சொல்லக் கூடாது என்பதைத்தான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகையின் மூலமாக நாம் நிறைவேற்ற வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து முடிக்க வேண்டி இருக்கிறது. முக்கியமாக நாம் எவ்வளவுக்கெவ்வளவு சேமிப்பைத் திரட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நாம் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அடுத்தபடியாக அண்ணாமலை யூனிவர்ஸிட்டியைப்பற்றி பல கருத்துக்கள் இங்கு தெரிவிக்கப்பட்டது. அதில் ஒரு கருத்தை விளக்குகிற முறையில் நண்பர் பி. யு. சண்முகம் அவர்கள் எங்கள் கட்சியை சேர்ந்த மாணவர்களை வேண்டுமென்றால் நாங்கள் சொல்லுகின்றோம் என்று சொன்னார்கள். இதுதான் தவறு என்று சொல்லுகிறேன். எங்கள் கட்சி மாணவர்கள், தி.மு.க. மாணவர்கள், காங்கிரஸ் கட்சி மாணவர்கள் என்று சொல்லுவதுதான் தவறு என்பதை மீண்டும் மீண்டும் சொல்லுகிறேன். இம்மாதிரி கட்சி அரசியலின் அடிப்படையில் கட்சி அரசியல் விஷம் பரப்புவது நிற்கும் வரை பல்கலை கழகங்களையே மூடிவிடுவதுதான் நல்லது என்று நினைக்கிறேன். அரசியல் வேற்றுமைகள் மாணவர்கள் இடையில் இருக்கக் கூடாது. மாணவர்கள் அரசியலைப்பற்றி தெரிந்திருக்க வேண்டியதுதான். ஆனால் இதன் காரணமாக மாணவர்கள் வேற்றுமையுடன் நடந்து கொள்ளக்கூடாது என்பது தான் என்னுடைய கருத்து. ஆகவே இதைப்பற்றி எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் கூடி ஆலோசித்து ஒரு முடிவு எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் திறமையாக இருப்பதற்காக அரசியல் கருத்துக்களை எல்லாம் தெரிந்து கொள்ளட்டும், தெரிந்திருக்கக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. ஆனால் அரசியல் கட்சி அடிப்படையில் மாணவர்கள் போவது தவறு என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். இந்த விஷயத்தைப்பற்றி நான் இங்கே திரும்பவும் கிளப்ப வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் இதில் ஒரு விஷயத்தைப் பற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் ஒப்புக்கொண்ட காரணத்தினால்தான் குறிப்பிட வேண்டியதாக இருந்தது. நாங்கள் இப்போது அவ்விதம் சொல்லவில்லை என்று அவர்கள் சொல்லுவதாயிருந்தால் அதைப் பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. இதுபோன்ற பல்வேறு பிரச்னைகளில் நாம் வாதத்திற்காகவும் எதிர் வாதத்திற்காகவும் பேசக் கூடாது. நம்முடைய நாடு நம்முடைய மக்கள் என்ற முறையில் நாம் வேலை செய்வோமானால் நம்முடைய நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்பட முடியும். எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் மக்கள் இருக்கின்றார்களோ அதே முறையில் நாம் நடந்து கொண்டால்தான் நாடு முன்னேற முடியும், அப்போதுதான் பொருளாதாரம் வலுப் பெற முடியும், நாட்டிலுள்ள குறைகள் எல்லாம் நீங்கி சுபீட்சமாக வாழ முடியும். ஆகவே அம்மாதிரி ஒரு நிலையை நம் நாட்டில் ஏற்படுத்தியாக வேண்டும். ஆகவே இந்தத் தொகையை ஒதுக்குவதின் மூலமாக இந்த நாட்டில் ஒரு சுபீட்சமான நிலை ஏற்படுத்துவதற்கும் அதற்கான ஒத்துழைப்பை கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்கிற முறையில் இந்த நிதி ஒதுக்கு மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**SRI V. K. RAMASWAMY MUDALIYAR**: ஆன் எ பாயிண்ட் 12-00
ஆப் பர்ஸனல் எக்ஸ்பிளனேஷன், ஸார். இப்போது நிதி அமைச்சர் noon.
அவர்கள் தங்களுடைய உரையிலே என்ன சொன்னார்களென்றால்,

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [10th April 1958

கடற்கரையிலே எதிர் கட்சித் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து பிரசங்கம் செய்து விற்பனை வரி மசோதாவைப்பற்றிப் பேசியதை, சிறு வியாபாரிகளையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு, அரசியல் விஷயங்களைப் புகுத்திக் கொண்டு அதை யெல்லாம் சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதாகச் சொன்னார்கள். இது மிகவும் தவறான சமாசாரம். இதைப் பற்றி நான் ஆரம்ப உரையிலேயே சொன்னேன். ஒரு சட்டம் கொண்டு வரும்போது அதை தீர்க்கமாகப் பரிசீலனை செய்து, கெஜட்டில் பிரசுரம் செய்து . . .

SRI M. R. KANDASWAMI MUDALIAR : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், ஸார் . . .

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இடை மறித்துப் பேச நான் இடம் கொடுக்க விரும்பவில்லை.

DEPUTY SPEAKER : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் ஆச்சே.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : எதிர் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது மாற்றிச் சொன்னது தப்பு என்று சொன்னார்கள் . . .

DEPUTY SPEAKER : தவறான அபிப்பிராயம் என்றுதான் சொன்னார்கள்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : இம்மாதிரி சொந்த உபயோகத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. கெஜட்டில் பிரசுரம் செய்து, பொறுக்குக் கமிட்டி போட்டு சரியாகப் பரிசீலனை செய்து சட்ட மன்றத்திற்கு முன்பு வைக்க வேண்டுமென்று சொன்னேன். அதை மறுபடியும் வற்புறுத்திச் சொல்லுகிறேன். அமைச்சர் அவர்கள் எதிர் கட்சியைப்பற்றி குறை சொல்லிப் பிரயோசனம் இல்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1958 (L.A. Bill No. 17 of 1958) be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 and the Schedule were put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1958 (L.A. Bill No. 17 of 1958) be passed."

DEPUTY SPEAKER : The question is—

"That the Madras Appropriation (No. 3) Bill, 1958 (L.A. Bill No. 17 of 1958) be passed."

The Motion was put and carried and the Bill was passed.

## VIII—CHANGE IN THE ORDER OF BUSINESS UNDER RULE 21 (3) OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, under rule 21 (3) of the Assembly Rules, I move—

"That item 3, viz., the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958 be taken up now."



10th April 1958]

DEPUTY SPEAKER : The question is—

"That item 3, viz., the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958, be taken up now."

The Motion was put and carried.

## VII.—GOVERNMENT BILLS—*cont.*

### (2) THE MADRAS BEEDI INDUSTRIAL PREMISES (REGULATION OF CONDITIONS OF WORK) BILL, 1958.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I introduce the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958[a] (L.A. Bill No. 18 of 1958) and move—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 25 Members including the Mover of the Bill (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri R. Venkataraman (Mover).

1 Srimathi T. N. Ananthanayagi.
2 Sri K. S. G. Haja Sheriff.
3 Sri P. G. Manickam.
4 Sri T. V. Sannasi.
5 Sri A. A. Rasheed.
6 Sri A. Mariappan.
7 Sri A. Chidambaranatha Nadar.
8 Sri J. Matha Gowder.
9 Sri M. S. Selvarajan.
10 Sri B. Doraisami Reddiar.
11 Sri P. S. Ellappan.
12 Sri M. P. Sarathi.
13 Sri D. S. Authimoolam.
14 Sri S. Pakkirisami Pillai.
15 Sri V. K. Kothandaraman.
16 Sri A. V. P. Asaithambi."

[a] Published in the *Fort St. George Gazette*, dated 28th February 1958.

கனம் சபாநாயகர் அவர்களே, பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுடைய நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பது நமக்குச் சில வருஷங்களாக நன்றாகத் தெரியும். ஆரம்பத்திலே சில இடங்களிலே பீடித் தொழிலில் வேலை செய்துகொண்டிருப்பவர்கள் தொழிற் சட்டத்திற்கு உட்படவேண்டியிருந்த காரணத்தினால் அவர்கள் அந்தத் தொழிலை தனித் தனியாகப்பிரித்து அதைமாஸ்டர் முறையென்றும் ஏஜெண்ட் முறையென்றும் பலவிதமாகப் பிரித்து அமைத்து தொழிற் சட்டத்தின்கீழ் அவர்கள் வராத நிலைமை ஏற்பட்டிருந்தது. இவர்களுக்குச் சரியான பாதுகாப்பு அளிக்கப்படவில்லை என்ற காரணத்தினால், சர்க்கார் இவர்களுடைய நிலைமையைப் பரிசீலனை செய்வதற்கு ஸ்பெஷல் ஆபீஸர் ஒருவரை நியமித்து அவர்களுக்கு இருக்கின்ற குறைகள் என்ன, அவைகளைப் போக்குவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமென்று ஆராய்ச்சி செய்தார்கள். அந்த ஸ்பெஷல் ஆபீஸர் அவர்கள் செய்த ரிப்போர்ட்டில் கண்டபடி தொழில்களைச் சிறிது சிறிதாகத் துண்டாடுவதையும், யார் முதலாளி, யார் தொழிலாளி என்பதை நிர்ணயிக்க ஏதாவது ஒரு வழி வகை செய்ய வேண்டுமென்று, அவர்கள் வேலை செய்கிற இடத்தை நிர்ணயம் செய்து குறிப்பிட்ட இடத்தில்தான்—அதாவது இண்டஸ்ட்ரியல் பிரெமிஸெஸில்தான்—வேலை செய்யவேண்டுமென்று ஒரு இடத்தை நிர்ணயம் செய்தால்தான் பாதுகாப்பு அளிக்க முடியும் என்று சிபாரிசு செய்தார்கள். அந்தச் சிபாரிசின் அடிப்படையில்தான் இந்த மசோதாவைத் தயார் செய்திருக்கிறோம். இதனுடைய முக்கியமான நோக்கம் என்னவென்றால், எந்த இடத்திலும் அவர்கள் பீடித் தொழிலை நடத்த முடியாது. லைசென்ஸ் பெற்று பீடித் தொழிலை குறிப்பிட்ட இடத்தில் நடத்த வேண்டும். எந்த விதமான முறையென்று—அதாவது பிராஞ்ச் மானேஜர் ஸிஸ்டம், ஏஜெண்ட் முறை என்று—வைத்துக்கொண்டு, முதலாளி யார், தொழிலாளி யார் என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். மூன்றாவதாக, பெண்கள், குழந்தைகள் எல்லோரும் மிகவும் கஷ்டமான இடத்தில் வேலை செய்யவேண்டியிருப்பதைத் தவிர்க்கவும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் ஷரத்துகள் போடப்பட்டிருக்கின்றன.

இந்தச் சட்டத்தில் இருக்கின்ற சில முக்கியமான கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதை நான் ஜாயிண்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கோருகிறேன். முதலாளி என்பவர் யார் என்பதை இந்தச் சட்டத்தில் நிர்ணயம் செய்திருக்கிறோம். யாருக்கு பீடித் தொழில் நடத்துவதில் கடைசியாக நிர்ணயம் செய்யும் உரிமை இருக்கிறதோ அவர்களும், யார் பிராஞ்ச் மானேஜராக, அல்லது நிர்வாகியாக இருக்கிறாரோ அவர்களும், இன்னும் யாரிடத்தில் டிரேட் மார்க் உரிமை இருக்கிறதோ அவர்களும் முதலாளிகள் என்று கருதப்படுவார்கள். இவ்வாறு விவரிப்பதன் மூலம், நாங்கள் முதலாளிகள் அல்ல என்று தப்பித்துக்கொள்ளும் நிலைமையை சமாளிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். இப்போது இருக்கும் முறையிலே யார் ப்ராஞ்ச் மானேஜர்களை வைத்து வேலைகளை நடத்துகிறார்களோ அவர்களைச் சட்ட பூர்வமாக முதலாளியாகச் செய்யவேண்டுமென்று சொன்னார், நாங்கள் முதலாளிகள் அல்ல, உண்மையான முதலாளி பிராஞ்ச் மானேஜர் என்று சொல்லிவிடுகிறார்கள். பிராஞ்ச் மானேஜரைப் போய்க் கேட்டால் அவர்கள் நான் முதலாளி அல்ல, நான் ஏஜெண்ட்தான் என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலைமையைச் சமாளிக்க யார் முதலாளி என்று நிர்ணயம் செய்கிற முறையிலே இந்த ஷரத்து அமைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக இந்தத் தொழிலை இந்த இடத்தில்தான்—அதாவது இண்டஸ்ட்ரியல் பிரெமிஸெஸில்தான்—நடத்த வேண்டும். அந்த விதமாக லைசென்ஸ் பெறாத இடத்தில் நடத்தக் கூடாது என்பதை நாம் நிர்ணயித்திருக்கிறோம். அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு சுகாதார வசதிகள், இன்னும் காற்று வசதிகள், தண்ணீர் வசதிகள், அதிகமாக நெருக்கடி இல்லாத ஒரு முறை, அவர்களுக்கு அத்தியாவசியமான கை, கால் கழுவிக்கொள்ள வசதி, முதலுதவி என்று சொல்லக் கூடிய, அதாவது



விபத்து ஏதாவது ஏற்பட்டால் உடனடியாக சிகிச்சை செய்வதற்கு வசதி, இவைகளெல்லாம் வைக்க வேண்டுமென்று இந்த சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் 250 பேர்களுக்கு மேல் ஒரு இண்டஸ்ட்ரியல் பிரெமிஸெஸில் இருந்தால் கேண்டீன் அமைக்க வேண்டும் என்று இதில் கண்டிருக்கின்றன. இதில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வாரத்திற்கு 48 மணி நேர வேலை, நாள் ஒன்றுக்கு 9 மணிக்கு அதிகமாக இருக்கக் கூடாது என்று நிர்ணயித்திருக்கிறோம். அதிகப்படியான வேலை 12-10 p.m. செய்கிறபொழுது அவர்களுக்கு "ஓவர் டைம் வேஜஸ்" கொடுக்கவேண்டுமென்றும், அது பாக்டரி சட்டத்தில் இருப்பதுபோல் இரட்டிப்பாக இருக்க வேண்டுமென்றும் இந்த மசோதாவில் கண்டிருக்கிறது. அவர்கள் வேலைக்கு எந்த அளவுக்குக் கூலி கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வதற்காக, ஒரு குடும்பம் என்று சொன்னால், மூன்று பேர்கள் என்று நிர்ணயம் செய்து, மூன்று "Consumption unit" களுக்கான உணவு தான்யங்களை நாம் கணக்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கண்டிருக்கிறது. ஒருவர் வேலை செய்யும்பொழுது, ஓய்வு நேரம் அரை மணி இருக்க வேண்டுமென்று பாக்டரி சட்டத்தில் இருப்பதைப் போல போட்டிருக்கிறோம். வேலை ஆரம்பம் முதல் முடியும் வரையிலும் இருக்க வேண்டிய அவகாசத்தை (அதாவது "ஸ்பிரெட் ஓவர்") 10 மணி நேரம் என்று இந்த மசோதாவில் கண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர்கள் ஹோட்டல் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட சட்டத்தில் 14 மணி நேரமாகயிருந்ததை இந்த சட்டத்தில் 10 மணி நேரமாக மாற்றியிருப்பதைக் கவனிப்பார்கள். அந்தந்தத் தொழிலுக்குத் தகுந்தவாறு நியாயமான "ஸ்பிரெட் ஓவர்" இருக்கவேண்டுமென்ற காரணத்தினாலே, பீடித் தொழிலாளர்களுக்கு அதிக "ஸ்பிரெட் ஓவர்" நேரம் தேவையில்லை என்ற காரணத்தினால் 10 மணி நேரம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. பத்து மணிக்கு மேல் ஸ்பிரெட் ஓவர்" இருக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறோம்.

அடுத்தபடியாக, வாராந்திர விடுமுறை நாள் கொடுப்பதைப்பற்றிக்கூட, இந்த மசோதாவிலே வாரத்திற்கு ஒரு நாள் "Beedi Industrial Premises"ஐ மூட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். ஹோட்டல் தொழிலாளர் சம்பந்தப்பட்ட மட்டில் ஷிப்ட் முறையை நடத்தலாம் என்று சொல்லியிருப்பதையும், பீடித் தொழிலாளர் சட்டத்தில் ஒரு நாள் கட்டாயமாக மூட வேண்டுமென்று சொல்லியிருப்பதையும் கனம் அங்கத்தினர்கள் கவனிப்பார்கள். ஹோட்டல் தொழிலிலே அவர்கள் பொது மக்களுக்கு, சாப்பாடு, உணவு, வசதி செய்து கொடுப்பதினாலும், அதில் ஒருவேளை அதிக வேலையிருக்கும் என்ற காரணத்தினாலே ஷிப்ட் முறையை ஏற்றுக்கொண்டோம். பீடித் தொழில் பாக்டரியை வாரத்தில் ஒரு நாள் மூடுவதினால் பொது மக்களுக்கு எந்த விதமான பெரிய சேவையும் கிடைக்காமல் போய்விடாது. ஒரு நாள் மூடுவதினால் அந்த பாக்டரியை நல்ல முறையில் அமைக்கக் கூடுமென்று நினைத்து வாரத்திற்கு ஒரு முறை மூடப்படுமென்று கண்டிருக்கிறோம். வாராந்திர லீவுக்காக சம்பளத்தில் பிடிக்கக் கூடாது என்று போட்டிருக்கிறோம். நமது சர்க்கார் வகுத்திருக்கிற கொள்கையின் அடிப்படையில் வருஷத்திற்கு ஏழு நாள் பண்டிகை லீவு கொடுக்க வேண்டுமென்ற முறையில், பீடித் தொழிலாளர்களுக்கு பண்டிகை லீவாக ஒரு வருஷத்தில் ஏழு நாட்கள் கொடுக்க வேண்டுமென்று கண்டிருக்கிறது. ஆகஸ்டு 15-ம் தேதி சுதந்திர தினமும், ஜனவரி 26-ம் தேதி குடியரசு தினமும் நிச்சயமாக லீவாக இருக்க வேண்டும். மற்ற நாட்களை பீடித் தொழிலாளர்களும், முதலாளியும் சேர்ந்து நிர்ணயம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கண்டிருக்கிறது. இந்த மாதிரி விடுமுறை நாட்களில் வேலை செய்தால், அந்தத் தொழிலாளரின் விருப்பப்படி இரட்டிப்புக் கூலியோ அல்லது ஒரு நாள் கூலியும், மற்றொரு நாள் காம்பன்ஸேட்டரி லீவும் எடுத்துக்கொள்ளலாமென்று கண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, இந்தத் தொழிலில் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் வேலை செய்யக் கூடாது என்று கண்டிருக்கிறோம். இது சர்ச்சைக்குள்ளான விஷயம். இப்பொழுது இந்தத் தொழிலில் சிறுவர்கள் எல்லோரும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வேலை செய்யக் கூடாது

என்று தடுப்பதன் காரணமாக அவர்களுக்கு பிழைப்பு இல்லாமல் போய் விடுமென்று பேசக்கூடும். நம்முடைய அரசியல் சாஸனத்திலே 14 வயதுக்கு உட்பட்ட சிறு பிள்ளைகளிடமிருந்து வேலை வாங்கக் கூடாது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதுதான் சர்வ தேச தொழிலாளர்களுடைய ஒரு கன்வென்ஷன், அதாவது எல்லா நாடுகளும் சேர்ந்து ஒத்துக்கொண்டிருக்கிற நியதி. ஏதோ வருமானம் கிடைக்கிறது என்ற காரணத்துக்காக அவர்களை வேலை செய்ய அனுமதிப்பது தவறு. அவர்களுக்கு வேறு முறையில் வசதி செய்து கொடுக்கவேண்டும். அவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் இந்த ஷரத்தைப் போட்டிருக்கிறோம். மேலும், பெண்கள் இரவு வேலையில் 7 மணிக்குப் பிறகும், காலையில் 6 மணிக்கு முன்பும் வேலை செய்யக் கூடாது என்று கண்டிருக்கிறோம். சில இடங்களிலே பெண்கள் புகையிலை முதலியவற்றை வாங்கிக்கொண்டு, வீட்டிற்கு வந்து, அவர்கள் இஷ்டப்படி அவகாசம் இருக்கிறபொழுது சுருட்டுகளாகவோ பீடிகளாகவோ செய்கிறார்கள். அவ்வாறு வேலை செய்கிறவர்கள் பாதிக்கக் கூடாது என்பதற்காக பெண்களுக்கு மாத்திரம் தனியாக ரெஜிஸ்தர் வைத்துக்கொண்டு, வீட்டிற்கு எடுத்துக்கொண்டு சென்று, எப்பொழுது வேண்டுமானாலும் பீடிகளாக திருப்பிக் கொடுக்கலாமென்று போட்டிருக்கிறோம். இந்த சட்டத்தின்படி தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளம், கூலி விகிதம் எல்லாம் கோர்ட்டுக்குப் போய் வசூல் செய்யாமல் "**Payment of Wages**" சட்டத்தின்கீழ் நேரடியாக வசூல் செய்வதற்கான வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, வேலையிலிருந்து தொழிலாளரை நீக்குவதன் காரணமாக ஒரு பெரிய தொல்லையான பிரச்னை முதலாளிகள்—தொழிலாளிகள் உறவிலே இருந்துகொண்டிருக்கிறது. அதை ஒரு தொழில் தகராறாக மாற்றி அதற்காக ஒரு பெரிய "கான்ஸிலியேஷன்", அதற்கு மேல் தொழில் கோர்ட் என்றெல்லாம் வைப்பதற்குப் பதிலாக, ஹோட்டல் தொழிலாளர் சட்டத்தில் கொடுத்ததுபோல இந்த பீடித் தொழிலாளர் மசோதாவிலும் கொடுத்திருக்கிறோம். யாராவது வேலையிலிருந்து நீக்கப்பட்டால், சர்க்கார் நியமிக்கிற அப்பீல் அதிகாரியிடத்தில் நேரடியாகச்சென்று அப்பீல் செய்துகொள்ளலாம். அந்த அப்பீல் முடிவானது, இறுதியானது என்று மசோதாவில் கண்டிருக்கிறது.

இவைகள்தான் இந்த சட்டத்தில் இருக்கக்கூடிய முக்கியமான ஷரத்துகள், இதை நன்றாக பொறுக்குக் கமிட்டியிலே பரிசீலனை செய்து, இன்னும் ஏதாவது திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னாலும், அதையும் பரிசீலனை செய்து முடிவு செய்து கொள்ளலாம் என்ற நம்பிக்கையோடு, இந்த மசோதாவை பொறுக்கு கமிட்டிக்கு அனுப்ப அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : Motion moved—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 25 Members including the Mover of the Bill (16 Members of the Assembly and 8 Members of the Council) to consider the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee."

The names of the Members are the same as read out by the Hon. Minister. I think Sri N. K. Palanisami is not moving his amendment? (Sri N. K. Palanisami indicated assent.)

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, for the names Sri **M. P. Periasami, Sri A. Mariappan may be substituted.**



DEPUTY SPEAKER : I will read out the names—

1 The Hon. Sri R. Venkataraman.
2 Srimathi T. N. Ananthanayagi.
3 Sri K. S. G. Haja Sheriff.
4 Sri P. G. Manickam.
5 Sri T. V. Sannasi.
6 Sri A. A. Rasheed.
7 Sri A. Mariappan.
8 Sri A. Chidambaranatha Nadar.
9 Sri J. Matha Gowder.
10 Sri M. S. Selvarajan.
11 Sri B. Doraiswami Reddiar.
12 Sri P. S. Ellappan.
13 Sri M. P. Sarathi.
14 Sri D. S. Authimoolam.
15 Sri S. Pakkirisami Pillai.
16 Sri V. K. Kothandaraman.
17 Sri A. V. P. Asaithambi.

SRI N. K. PALANISAMI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த நாட்டில் இருக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கம் நாலைந்து வருஷ காலமாக போராடியதன் காரணமாக இன்றைய தினம் இப்படிப்பட்ட ஒரு மசோதா வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்ல. இம்மாதிரி மசோதா வரவேண்டுமென்பதற்காக, பத்தாயிரக் கணக்கான தொழிலாளர்கள் ஜெயிலுக்குப் போனார்கள். இவ்வளவு தியாகத்திற்குப் பிறகு இப்பேற்பட்ட ஒரு மசோதா வருவதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் இந்த மசோதா பிரசுரிக்கப்பட்டு பல வருஷங்கள் ஆய்விட்டன. இதில் இருக்கக் கூடிய ஷரத்துகளைப்பற்றி வெகுவாக இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய தொழிலாளி வர்க்கத்தை கலந்தாய்விட்டது. அதற்குப் பிறகும் கூட இந்த மசோதாவை இங்கே கொண்டுவந்து ஏன் ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு விடவேண்டுமென்பதுதான் தெரியவில்லை. இந்த மசோதாவை ஆராய மேல் சபை உறுப்பினர்கள் கொண்ட ஒரு பொறுக்கு கமிட்டி போட வேண்டிய அவசியம் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை. ஏற்கனவே, கை ஏர், மாட்டு ஏர், மசோதா இங்கு கொண்டுவர முடியாதபடி 12-20 p.m. போய்விட்டது. அது போல் இந்த பீடி மசோதாவும், ஷரத்துக்கள் நிறைவேற்றப்படாமல் வாபஸ் வாங்கக்கூடிய அளவுக்கு போய்விடுமோ என்பது எனக்கு சந்தேகமாக இருக்கிறது.

பீடித் தொழிலில் இப்பொழுது ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. போதுமான இலைகள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே வேலை நேரம் குறைவு. ஆகையால் சம்பளம் கிடைப்பதில்லை. தொழிலாளர்களை சரியாக வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை. இதில் பல பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. வேலை உத்திரவாதத்திற்கு இந்த மசோதாவில் ஒன்றும் கிடையாது.

ஸ்ரீ நடராஜன் அவர்கள் இந்த விஷயத்தை நன்றாகப் பரிசீலனை செய்து பல நல்ல சிபாரிசுகளை செய்திருக்கிறார். பல சிபாரிசுகளை விட்டுவிட்டதற்கு நான் வருந்தத்தான் வேண்டியிருக்கிறது.

[Sri N. K. Palanisami] [10th April 1958

ஆயிரம் பேர் வேலை செய்யக்கூடிய 'பாக்டரியில்' பல பிராஞ்சு களாகப் பிரித்து 50 பேர்களுக்கு குறைவாக வைத்துக்கொள்ளுகிறார்கள். ஐம்பது பேர்களுக்கு குறைவாக இருந்தால் 'பாக்டரி ஆக்ட்' அமலாக்க முடியாது. ஆனால் ஐந்து பேர் இருந்தாலும், 'ஷாப் அஸிஸ்டெண்டுகள் சட்டம்' அமுல் செய்யப்பட வேண்டும். அதையும் இப்பொழுது அமல் செய்வது கிடையாது.

தொழிலாளர்கள் அதிக கூலி உயர்வு வேண்டும் என்று பிராஞ்சு மானேஜரைக் கேட்டால் முதலாளியை கேட்க வேண்டும் என்று சொல்லு கிறார். முதலாளியைக் கேட்டால் பிராஞ்சு மானேஜரை கேட்க வேண்டும் என்று சொல்லுகிறார். ஆகையால் இப்பொழுது ஒரு குழப்பமான நிலைமை இருக்கிறது. சர்க்கார் கொண்டு வந்திருக்கும் மசோதாவில் இதற்கு ஒரு நிவாரணம் இல்லை.

பீடி தொழிலாளர் சட்டத்தில் முக்கியமானது 'எம்ப்ளாயர்' 'எம் ப்ளாயி' என்கிற 'டெபனிஷன்' தான்.

"'Employer' means the person who has the ultimate control over the affairs of any beedi industrial premises and where the affairs of any beedi industrial premises are entrusted to any other person (whether called a managing agent, manager, superintendent or by any other name) such other person shall be deemed to be the employer, etc."

ஒரு பிராஞ்சை ஏற்படுத்த முதலில் 'எம்ப்ளாயி' யாக இருக்கிறவர் 'எம்பிளாயர்' ஆகிவிடுகிறார். ஆகையால் பழைய முறைதான் இருக்கும்.

THE HON. SRI R. VENKATARAMAN : 'Employer' means the person who has the ultimate control over the affairs, etc. . . . . and includes t proprietor or a registered user, etc. I want the Member to note that.

SRI N. K. PALANISAMI : சாதாரணமாக ஒரு முதலாளி ஒரு பிராஞ்சை ஏற்படுத்தினால், அங்குள்ள பிராஞ்சு மானேஜர் 'எம் பிளாயி'யாக இருப்பவர் 'எம்பிளாயர்' ஆகிவிடுகிறார்.

'ராமசாமி கௌண்டர் சமீபத்தில் ஒரு தீர்ப்பு சொன்னது நமக்கு தெரியும். பிராஞ்சு மானேஜர் என்று சொல்லக்கூடியவர் இலை கொடுப் பது, வாரத்திற்கு ஒரு தரம் பணம் கொடுப்பது என்பதுதான் அவர் வேலை. "Raw materials are supplied by the proprietor . . . etc." ஆகையால் தீர்ப்பு கொடுத்த பிறகு கூட இந்த மசோதாவை சரியாக திருத்தாமல் இருப்பது மிகவும் வருந்துவதற்குரிய விஷயமாகும்.

சாதாரணமாக, போதுமான இடம் இருந்தால், யாருக்காவது லைஸன்ஸ் கொடுப்பது என்று இருந்தால் அதனால் குழப்பம் உண்டாகும். டிரேட் மார்க் உள்ள முதலாளிகளுக்கு மட்டும்தான் லைஸன்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

லேபர் அட்வைசரி கமிட்டியில் 'ஸிக் லீவ்' 15 நாள் கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அப்படி இதில் ஒன்றும் இல்லை. 'பேஸிக் வேஜ்' கொடுக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைப்பற்றி இதில் ஒன்றும் இல்லை. வாரத்திற்கு ஒரு நாள் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைப்பற்றியும் இதில் ஒன்றும் இல்லை.



10th April 1958] [Sri N. K. Palanisami]

பதினான்கு வயதுக்கு உட்பட்டவர்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்வதா யிருந்தால் 'சர்டிபிகேட்' வாங்கித்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இப்போது இருக்கிறது. இதன் காரணமாக 14 வயதுக்கு மேற் பட்டவர்களையும், 14 வயதுக்குள் இருப்பதாகச் சொல்லி வேலையிலிருந்து நீக்கிவிடுவார்கள். ஆகையால் இதை சரியானபடி மாற்ற வேண்டும்.

இப்பொழுது 'டிரேட் யூனியன் ரெகக்னிஷனு'க்காக பல சங்கங்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் ரிஜிஸ்தர் செய்ய வேண்டும். இந்த அடிப்படையில் மசோதாவை திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*SRI K. SATTANATHA KARAYALAR : உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதா நீண்ட நாட்களாக எதிர் பார்த்தது. தற்சமயம் இது வந்தபோதும், பொறுக்குக் கமிட்டிக்கு போய் வர வேண்டும் என்று சொல்லும்போது, இன்னும் கால தாமதம் ஆகும் என்று நான் வருந்துகிறேன். அதுவும் 'ஜாயிண்ட் செலக்ட் கமிட்டி' க்கு போய் திரும்பி வரும்போது இந்த மசோதா எந்த உருவத்தில் வருமோ என்பதைப்பற்றி எனக்கும் ஐயப்பாடு இருக்கிறது.

இந்தப் பீடித் தொழில்கள் இரண்டு மூன்று விதங்களாக நடக்கிறது. ஒன்று, தொழிற்சாலை அடிப்படையில் 100-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் ஒரு இடத்தில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இந்த மசோதா ஓரளவு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கலாம். இரண்டாவது கிராமாந்திரங்களில் உள்ள பெண்கள், ஆண்கள், குழந்தைகள் வீடுகளிலிருந்துகொண்டே இந்த தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மசோதா எவ்வளவு தூரம் பலன் கொடுக்கும் என்று தெரியவில்லை. இந்த தொழிலாளர்களுக்கு எந்த விதத்தில் நிவாரணம் அளிக்கும் என்பதைப் பற்றி எனக்கு மிகவும் ஐயப்பாடு உண்டு. மூன்றாவதாக தனிப்பட்ட கடைகளில், ஷர்பத் முதலிய பானங்கள் வைத்திருக்கக்கூடிய 'பங்கு' களில் உள்ளவர்கள் அங்கிருந்தபடியே இந்த தொழிலில் ஈடுபட்டிருக் கிறார்கள். திரு-கொச்சியிலிருந்து தமிழ் நாட்டோடு சேர்ந்த பகுதியில் இம்மாதிரி தொழிலாளர்கள் அதிகம். தற்சமயம் அவர்கள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை விட்டுவிட்டாலும், இரண்டாவது வகையில் வரும் தொழிலாளர்களுக்கும் இந்த மசோதாவினால் எந்த அளவு நிவாரணம் கிடைக்கும் என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

செக்ஷன் 29-ல் 'ஸ்பெஷல் புரொவிஷன்ஸ்' என்று கொடுத்திருக்கி றார்கள். இதன் பிரகாரம் வீட்டிலேயே பெண்கள் இலை வெட்டும் பீடி தொழி லில் ஈடுபடலாம் என்று இருக்கிறது. சாதாரணமாக வீடுகளில் குழந்தைகள் தான் இந்தத் தொழிலில் ஈடுபடுகின்றனர். சில சமயங்களில் பெண் களுக்கு பீடி பிடிக்கும் வழக்கம் ஏற்படுகின்றது. ஆகையால் இந்த மாதிரி செய்வதே மிகவும் அவசியமாக நிறுத்த வேண்டும். இது அவர் களுடைய உடல்நிலையை பாதிக்கும். ஆகையால் அதைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம்.

அதே சமயம் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்காது பார்த்துக் கொள்ளவேண்டும். தொழிற்சாலை முறையில் வேலை செய்யாத இடங்களில் கூலி குறைவாக விருக்கிறது. அதனால் மற்ற மாகாணங்களிலிருந்து கூட சில மாவட்டங்களுக்கு இத் தொழில் வருகிறது. இதைத் தடுக்க விதி வேண்டும். இந்த சட்ட விதிகளிலிருந்து தப்பக்கூடாது.

ஆண்கள் பீடிகளைச் சுற்றுவதற்கு ஆயிரத்துக்கு ஒரு ரூபாய் என்று 12-30 p.m.
இருந்தால் பெண்களுக்கு பத்தணா கூலி என்று திருநெல்வேலி மாவட்டத் —
தில் இருக்கிறது. பெண்களுக்கு குறைந்த அளவில் கூலி கொடுக்க வேண்டியதாக இருக்கிற காரணத்தால் பெண்களையே ரிஜிஸ்தரில் பதிவு செய்துகொண்டு ஆண்களுக்கு வேலையைக் கொடுக்க இஷ்டமில்லாமல்

இருக்கலாம். அதன் மூலமாக பெண்களையே நிரந்தரமாக வைத்துக் கொள்ள முற்படலாம். அதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருப்பது நல்லதாகும்.

"எம்ப்ளாயர்" என்ற டெபனிஷனில் ஏஜெண்டுகளையும் உட்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது என்று சொன்னபோது "அண்ட்" என்று போட்டிருப்பதால் ஏஜெண்டுகளும் எம்ப்ளாயர் என்ற அடிப்படையில் வருவதற்கு இடம் ஏற்படுகிறது என்று சொல்லப்பட்டது. அந்த விதத்தில் கனம் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்தார். அதை நீக்கி விட்டு முழுப் பொறுப்பும், அந்த ட்ரேட் மார்க் யாரிடத்தில் இருக்கிறதோ அவருக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் அதை திருத்தி அமைக்க வேண்டும். ஏஜெண்டுகள் என்று சொல்லி விட்டால் சாதாரண கூலியாளை ஏஜெண்ட் என்று வைத்துத் தொழிலை நடத்தி விடுவார்கள். அப்படியேதான் சில இடங்களில் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி இல்லாமல் யார் பேரில் டிரேட் மார்க் இருக்கிறதோ அந்த எம்ப்ளாயருக்குத்தான் பொறுப்பு இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நன்மையாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கிராமங்களில் வேலை செய்யக்கூடிய பெண்களுக்கு விதி விலக்கு அளிக்காத முறையில் பொறுக்குக் கமிட்டியில் விதியை மாற்றி அமைக்க முற்படலாம். அப்படி அமைக்க முற்படாமல் இருக்க பொறுக்குக் கமிட்டியில் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதை ஜாயிண்ட் செலெக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்யும்போது பெண் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க முன்வர வேண்டும். இப்பொழுது இருக்கக்கூடிய விதியையும் மாற்றாமல் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மசோதாவை இந்தக் கூட்டத்தின் ஆரம்பக் காலத்திலேயே கொண்டுவந்திருந்தால் இந்த சபையினுடைய ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பிவைத்து பரிசீலனை செய்து இந்தக் கூட்டத்தின் முடிவுக்குள்ளாகவே இதை நிறைவேற்றியிருக்கலாம். துரதிருஷ்ட வசமாக இதை இந்தக் கூட்டத்தின் இறுதியில் கொண்டுவந்து அதை ஒரு ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி வைப்பதால் இன்னும் அதிகப்படியான காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே அடுத்தக் கூட்டம் கூடுவதற்கு முன்னதாகவே இதை செலெக்ட் கமிட்டி பரிசீலனை செய்து அடுத்தக் கூட்டத்திலேயே இதைக் கொண்டுவந்து நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கூறிக்கொண்டு எனது உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**SRIMATHI T. N. ANANTHANAYAKI**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பீடித் தொழிலாளர்கள் அதிக நாட்கள் பல போராட்டங்களை நடத்தியும் இன்றைக்கு இம்மாதிரியான ஒரு மசோதாவைக் கொண்டு வந்தது உண்மையாகவே வரவேற்கத்தக்கது. பீடி தொழிலாளர்களுடைய நிலையை ஓரளவு நேரடியாகப் பார்த்து அனுபவித்து வந்த காரணத்தால் எனக்குத் தெரிந்த சில கருத்துக்களை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன் பேசியவர்கள் ஷரத்துவாரியாக விரிவாகப் பேசியவர்கள் பொறுக்குக் கமிட்டியில் இதன் ஷரத்துக்களை மாற்றக் கூடாது என்று குறிப்பிட்டார்கள். அப்படி மாற்றுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அப்படிச் சொல்லுகிறார்கள். அதன் காரணமாக பொதுவாக என்னுடைய சில நோக்கங்களையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பீடி தொழிலாளர்கள் இதுவரையிலும் எந்தச் சட்டத்தின் கீழும் வராத நிலைமையில் வாழ்ந்து வந்தார்கள். பாக்டரி சட்டத்தின்கீழ் வர முடியாது, ஷாப் அசிஸ்டெண்ட் சட்டத்தின்கீழ் வர முடியாது, முதலாளிகள் வைத்த ஒரு சட்டத்தின்கீழ்தான் அவர்கள் வாழ்ந்து வரக்கூடிய நிலையில் இருந்தார்கள். முதலாளிகளைக் காட்டிலும் ப்ராஞ்சு மானேஜர்களுடைய சட்டத்தின்கீழும் அவர்கள் வேலை செய்ய வேண்டியதாக இருந்-





தது. இந்த இரண்டு பேர்களுக்கும் இடையில் உள்ள சட்டத்தின்படிதான் அவர்கள் இது வரையிலும் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த அளவில் அவர்களுக்கு சில பாதுகாப்புக்களைத் தருவதற்காக கனம் அமைச்சர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருப்பதற்கு எல்லா பீடி தொழிலாளர்களும் அவரைப் போற்றுவார்கள், அதுவும் அவர்களால் போற்றத்தக்கதுதான் என்பதை கொஞ்சம் சந்தேகமின்றி பார்க்க வேண்டும். இன்றைக்கு ப்ராஞ்சு மானேஜர் வர்க்கம் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையில் இருப்பதாக தொழிலாளர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுவதோடு முதலாளிகளுடன் தொழிலாளர்களுக்கு நேரடித் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் தொழிலாளர்கள் இருப்பதால் முதலாளிகளைக் காட்டிலும் ப்ராஞ்சு மானேஜர்கள் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான கொடுமைகளைக் காட்டுகிறார்கள். இந்த நிலைமையில் தொழிலாளர்கள் நல்ல முறையில் எப்படி வாழ முடியும்? என்னுடைய தொகுதியில் இப்படிப்பட்ட கஷ்டங்கள் இருப்பதை நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். அதை நான் ஆராய்ந்து பார்த்து அதைப் போக்குவதற்கு பலவகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட ஒரு சட்டம் கொண்டு வந்ததைக் கண்டு அதை நான் வரவேற்கிறேன். இன்னும் பல முறைகளில் தொழிலாளர்களுக்கு வசதி செய்வதற்கு இடம் இருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் அவர்களுக்கு வசதிகளை செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். இதில் இருக்கக் கூடிய சில ஷரத்துக்களைப் பார்த்தால் பீடி தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வசதிகளைச் செய்வதாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நேரடியான தொடர்பு இருக்க வேண்டும் என்ற காரணத்தால் இப்படி இடையில் இருக்கும் ப்ராஞ்சு மானேஜர்களை ஒழித்துக் கட்ட வேண்டும். அப்படி அவர்களை ஒழித்துக்கட்டி பீடி தொழிலாளர்களுக்கு வசதி செய்து கொடுக்க முன் வர வேண்டும். இப்படிப்பட்ட ப்ராஞ்சு மானேஜர்களால் தொழிலாளர்களுக்கு எவ்வளவோ வசதிக் குறைவுகள் இருக்கின்றன. முதலாளிகள் பீடி தொழிலாளர்களுக்கு கூலி கொடுத்தாலும் ப்ராஞ்சு மானேஜர்கள் அந்தக் கூலியைக் கொடுக்காமல் குறைவான கூலியையும் கொடுத்து வருகிறார்கள். தொழிலாளர்களுக்கு முதலாளிகளுடன் நேரடி தொடர்பு இல்லாத காரணத்தால் தொழிலாளர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் நேரடித் தொடர்பு இருக்கும் அளவில் வைத்தால் முதலாளிகள் கொடுக்கும் வசதிகளை தொழிலாளர்கள் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதை பணிவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக பெண்களைப்பற்றி இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத் தக்கது. பெண்களின் இனத்தை நான் சார்ந்திருப்பதால் அவர்கள் சார்பில் நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எவ்வளவோ பெண்களை தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு தங்களுடைய கணவனுடைய வருமானம் போதாமல் இருக்கும்போது தங்களுடைய குடும்ப வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பெண்களும் வேலை செய்ய முற்படுகிறார்கள். அடுப்பில் உலையை வைத்துவிட்டு குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு வருமானத்தைத் தேடிக்கொண்டு போகிறார்கள். சில நேரங்களில் தாங்களும் சம்பாதித்தால் ஓரளவு தங்களுடைய குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ளலாம் என்று சம்பாதிக்க இப்படிப்பட்ட தொழிலில் ஈடுபடுகிறார்கள். எவ்வளவோ வீடுகளில் வருமானத்திற்கு லாட்டரி அடித்து எப்படியாவது சம்பாதித்து காசு பெற்று வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி மிக மிக குறைவு. சட்டத்திற்கு புரம்பானதாகக்கூட கொடுக்கப்படுகிறது. அதனால் அவர்களுக்கு ஒழுங்கான முறையில் கூலி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக பெண்கள் வேலை செய்யும் இடங்களில் இலைகளை வெட்டிப் போடுவதனால் ஏற்படும் குப்பைகளை எடுத்து அப்புறப்படுத்து வதற்கு வேண்டிய வசதிகளை முதலாளிகள் செய்ய வேண்டும் என்று சொல்லி முன் வந்திருப்பது மிக மிக போற்றத்தக்க விஷயம். வட சென்னையில் பார்த்தால் பீடி தொழிலாளர்கள் பீடி சுற்றும் குடிசைக்குள் உள்ளே புகுந்து பார்த்தால் அவர்கள் இருப்பது உலகம்தானா அல்லது நரகமா என்று நினைக்கக்கூடிய அளவில் அங்குள்ள வீடுகள் இருக்கும். பீடிகளை சுற்றி விட்டு வெட்டிப்போட்ட இலைகளை ஒழுங்காக அப்புறப் படுத்தாமல் அங்கேயே போட்டுவைக்கப்பட்டிருக்கும். அதனால் அங்குள்ள சுகாதாரம் எவ்வளவு தூரம் பாதித்திருக்கும் என்பதை பார்க்கவேண்டும். வெட்டிப் போடும் இலைகளின் குப்பையை அப்புறப்படுத்துவதற்கு அந்தந்த முதலாளிகள் அதற்கு வழி செய்ய வேண்டும் என்று சொல்லியிருப்பது ரொம்பவும் வரவேற்கத்தக்கது. கார்போரேஷன் அந்தக் குப்பைகளை எடுக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. சாதாரணமான குப்பை களையே அவர்கள் எடுக்காதபோது ஒரு தொழில் சம்பந்தப்பட்ட குப்பைகளை எடுப்பதற்கு அவர்கள் எங்கே நடவடிக்கை எடுத்துக்கொள்ள போகிறார்கள். சாதாரணமாக விழுகிற குப்பையைக்கூட அவர்கள் எடுப்பது இல்லை. அப்படி பட்ட நிலைமையில் யாராவது தனிப்பட்ட முறையில் வெட்டிப்போட்ட குப்பையை நீக்குவதற்கு ஒரு நடவடிக்கையையும் அவர்கள் எடுக்கமாட்டார் கள். அந்த நிலைமையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது மிகவும் போற்றத்தக்கது.

பெண்கள் பாக்டரியில் வேலை செய்வது போல் இல்லாமல் தங்களுடைய இடங்களிலேயே வேலை செய்யலாம் என்ற வசதியைக் கொடுக்கப்பட்டிருக் கிறது. தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் விதியை ஏன் இவர் களுக்கு விஸ்தரிக்கக் கூடாது என்று சிலர் கேட்கலாம். அப்படிச் செய்தால் பெண்களுக்குள்ள ஒரு சூழ்நிலையில் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களுடைய குடும்பங்களை அவர்கள் காப்பாற்ற வேண்டியதாக இருக் கிறது. பாக்டரியில் வேலை செய்யக்கூடியவர்களைப்போல் இவர்களும் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னால் அதனால் அவர்கள் மிகவும் பாதிக்கப் படுவார்கள் என்ற காரணத்தால் அவர்கள் வீட்டிலேயே இருந்துகொண்டு வேலை செய்து கூலியை வாங்கிக்கொள்ளலாம் என்று வசதி செய்து கொடுத்திருப்பது உண்மையிலேயே கனம் அமைச்சர் அவர்கள் அவர் களுடைய நிலைமையை உணர்ந்து இப்படி போட்டிருப்பது ரொம்பவும் வரவேற்கத் தக்கது. இப்படிப்பட்ட ஒரு வசதியை பொறுக்குக் கமிட்டியில் மாற்றி அமைக்க முடியும். அப்படி. மாற்றி அமைக்காமல் இருப்பதற்காகத் தான் முன்கூட்டியே இதைப்பற்றி சொல்லி அப்படி மாற்றி அமைக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பெண்களுடைய நிலைமையை உணர்ந்து தொழிலாளர்களுடன் அவர்களைப் பார்க்காமல் பெண்களுக்கு என்று நல்ல வகையில் வசதி செய்து கொடுப்பதற்கு ஏதாவது வழி இருந்தால் அதையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எந்த அடிப்படையிலும் பெண்கள் பாதிக்கப்படக்கூடாது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

**Sri S. PAKKIRISAMI PILLAI:** கனம் தலைவர் அவர்களே, பீடி தொழில் சம்பந்தமான மசோதா இப்பொழுது பொறுக் குக் கமிட்டிக்கு விடப்படப் போகிறது என்ற காரணத்தால் அதிக மான பேச்சுக்கு இங்கே அவசியம் இல்லை. ஆயினும் சிற்சில கருத்துக்களை இங்கே சொல்லும்படியான நிலைமையில் நான் இங்கே இருக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த பீடித் தொழில் 1887-ம் வருஷத்தில் நம் நாட்டில் கொண்டுவரப்பட்டது. அதன் முதற்கொண்டு இங்கே ஆரம்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு நமது நாட்டில் இருக்கும்படியான நகரப் பகுதிகளில், யூனைடெட் ப்ராவின்ஸ், பம்பாய், சென்னை முதலிய மாகாணங்களில் அதிகமாக பரவி இப்பொழுது இந்தியா முழுவதும் பரவலாக இருக்கிறது. பல லட்சக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்நாட்டில் அந்நிய ஆதிக்கம் இருந்த வகையில் இதற்கு நல்ல பாது





காப்பு செய்து கொடுக்க தவறிவிட்டார்கள். இந்தத் தொழிலாளர்களும் எந்த விதமான கிளர்ச்சியும் செய்வதற்கு பயந்துகொண்டு இருந்தார்கள். நாம் சுதந்திரம் அடைந்த பிறகு இதர தொழிலாளர்கள் எந்தந்த வசதிகளைப் பெற்று வருகிறார்களோ அம்மாதிரியான வசதிகளை இவர்களும் வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற கருத்துக்கொண்டு பல கிளர்ச்சிகளைச் செய்து கொண்டிருந்ததை நாம் பார்த்தோம். இப்பொழுது இந்தத் தொழிலில் ஒரு ட்ரேட் மார்க் உள்ள முதலாளி ஒரு முக்கியமான ஏஜெண்ட்களை தன் கீழ் வைத்துக்கொண்டு, அதாவது பல ப்ராஞ்சு மானேஜர்களை வைத்துக்கொண்டு தொழிலாளர்களிடமிருந்து வேலை வாங்கி வருகிறார்கள். எப்படி ப்ளான்டேஷன் தொழிலாளர்களை கங்காணிகள் மூலமாக முதலாளிகள் வேலை வாங்கி வந்தார்களோ அந்த மாதிரியான நிலைமையிலேயே பீடி சுற்றும் தொழிலாளர்களிடமிருந்து—தொழிலாளர் களுக்கும் முதலாளிகளுக்கும் மத்தியில்—ப்ராஞ்சு மானேஜர்கள் மூலமாக வேலை வாங்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. இது இப்பொழுது நடை முறையில் இருந்துகொண்டிருக்கிறது. இப்போதும் நடைமுறையில் 12-40 p.m. இருந்துகொண்டிருக்கிறது. எப்படி பிளாண்டேஷன் முதலாளிகள் தங்களுடைய பொறுப்பை தட்டிக் கழித்துவிட்டு லாபத்தை மட்டும் அடைந்து கொண்டிருக்கிறார்களோ, அதேமாதிரி நிலையில்தான் பீடி டிரேட்மார்க் முதலாளிகளும் லாபத்தை அடைந்துகொண்டிருக்கிறார்கள். நாம் பார்க்கிறோம் பலவித பிரசாரங்களின் மூலமும், சுவரொட்டிகள் மூல மும் அந்த பீடி முதலாளிகள் தங்களை பீடி சக்கரவர்த்தி என்று தாங்களே 'அட்வர்டைஸ்' செய்து கொள்ளும் நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். தொழிலாளிகளுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுக்காத நிலையிலே தங்கள் பொறுப்புகளை தட்டிக் கழித்து, சட்டப் பிடிப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை இவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பலவித கமிட்டிகளின் ரிபோர்டுகள் இருக்கின்றன. டாக்டர் பி. வி. நாராயணசுவாமி அவர்களின் ' கோர்டு ஆப் என்கொயரி ' தீர்ப்பு, எம். ஏ. நடராஜன் அவர்களின் ரிபோர்டு, டாக்டர் ரிகே அவர்களின் ரிபோர்டு இவைகளெல்லாம் நம் மத்தியிலே இருந்துகொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு இம்மாதிரியான ஒரு மசோதாவை கொண்டு வந்ததற்காக நமது கனம் அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பொதுவாக இந்த பீடித் தொழில் ஒரு தனி கைத்தொழில். இதை மெஷின் மூலம் செய்ய முடியாது. ஆனால் பர்மாவில் இலையையே சுருளாக வைத்து பீடிகளை சிகரெட்டு உருவத்தில் மெஷின் மூலமாகச் செய்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது. அதன் மூலமாக நிறைய பீடிகளைச் செய்ய முடியும் என்று அங்கே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படியிருந்தாலும் இந்திய நாட்டில் பீடித் தொழிலை மெஷின் மூலம் செய்ய முடியாது. பீடியின் உருவம், அதனுடைய நிலைமை மெஷின் மூலம் எப்பொழுதுமே செய்ய முடியாத அளவிற்கு இருந்துகொண்டுதான் இருக்கிறது. இது ஒரு பெரிய கைத்தொழில். அந்தக் கைத்தொழிலை எந்த விதத்திலும் பயன் படுத்தி முதலாளிகள் மற்றவர்களை சுரண்டவிடாமல், தாங்கள் மாத்திரம் பணத்தை சம்பாதித்துக் கொள்ளாமல் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக் கும்படியாக செய்ய வேண்டும். அந்த சுகத்தை மற்றவர்கள் அனுபவிக்க முடியாமல் முதலாளிகள் தடை செய்யும் நிலைமையை இந்த சட்டத்தின் மூலமாக நிவர்த்தனை செய்துகொள்ளலாம்.

முக்கியமாக இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்தத் தொழி லில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகள் காரம் மிகுந்த புகையிலைத்தூள் மத்தியில் வேலை செய்யும்படியான நிலைமையில் இருக்கிறார்கள். இதனால் அவர்களுடைய சுவாசப் பைகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன. ஆகை யால் க்ஷயரோகம், மற்ற சுவாச நோய்கள் இவர்களுக்கு சீக்கிரமாக ஏற்படுகின்றன. இந்த நிலையில் அவர்களுக்கு போதுமான அளவிற்கு சாப்பாடு கொடுக்காமல், கூலி கொடுக்காமல் இருப்பார்களேயானால், அவர் கள் க்ஷயரோகம் போன்ற வியாதியால் பீடிக்கப்பட்டு அதனால் மரணம்

[Sri S. Pakkirisami Pillai] [10th April 1958

அடைய வேண்டிய நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்காக
அவர்களுக்கு விசேஷ பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் என்
னுடைய கோரிக்கை. பொறுக்கு கமிட்டியாவது இதுபற்றி தீர விசாரணை
செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய மாறுதல்கள் ஏற்படு
வதன் விளைவாக அநேக தொழிலாளிகள் பாதிக்கப்படுவார்கள். ஆகவே,
பாக்டரி இன்ஸ்பெக்டர்கள், லேபர் இன்ஸ்பெக்டர்கள், லேபர் ஆபீஸர்கள்,
மற்றும் இதர லேபர் டிபார்ட்மெண்டு அதிகாரிகள் மிகவும் வெகு ஜாக்
கிரதையாக இருந்து தொழிலாளர்களுக்கு அப்போதைக்கப்போது வேண்டிய
பாதுகாப்பு கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். பலவித இன்னல்
களுக்கு மத்தியிலே அவர்கள் அகப்பட்டிக்கொண்டு கஷ்டப்படுவார்கள்.
அதைத் தடுப்பதற்கு என்ன வழி இருக்கிறதோ அந்த வழியில் அதற்கு
வேண்டிய உதவி செய்யுமாறு லேபர் இன்ஸ்பெக்டர்களுக்கு உத்தரவு
போட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என் பேச்சை முடித்துக்
கொள்ளுகிறேன்.

**SRI D. S. AUTHIMOOLAM** : மிஸ்டர் டெப்யூடி ஸ்பீக்கர், ஸார், பீடித்
தொழிலாளர்களின் நிலைமையை ஒழுங்குபடுத்துவதற்கான மசோதா,
நமது தமிழ் நாடு சம்பந்தப்பட்ட வரையிலே அந்தத் தொழிலில்
ஈடுபடாத பொது மக்கள் யாருக்கும் சிரத்தை இல்லாத ஒரு விஷயம்.
இந்தியாவிலுள்ள பாம்பே, யு.பி. போன்ற மாகாணங்களில் சட்ட சபை
களிலே இம்மாதிரி ஒரு மசோதா விவாதிக்கப்படும் என்று சொன்னால்
ஒரு விருவிருப்புகூட இருக்கும். பீடித் தொழில் வட இந்தியாவில்தான்
பிரபல்யமாக இருக்கிறது. யு.பி., மத்தியப் பிரதேசத்திலுள்ள சட்ட
சபை மெம்பர்களில் குறைந்தது 10, 20 பேர்களாவது பீடி முதலாளி
களாக இருப்பார்கள். முக்கியமாக ஆளும் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸைச்
சேர்ந்த 4, 5 அங்கத்தினர்கள் அங்கே பீடி முதலாளிகளாக இருப்பது
எனக்குத் தெரியும். வட இந்தியா சம்பந்தப்பட்ட வரையில் இது ஒரு
பிரபல்யமான தொழில் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைச்
சொன்னேன். திருநெல்வேலி ஜில்லாவில் பீடித் தொழில் ஏராளமாக
பரவி இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக திருச்சி, சென்னை, வட
ஆற்காடு ஜில்லாக்களில் இந்தத் தொழில் விசேஷமாக பரவி இருக்கிறது.
திருநெல்வேலி ஜில்லாவில் அம்பாசமுத்திரம் தாலூகாவில் பீடித்
தொழிலாளர்களுக்கு குறைந்த கூலியை கொடுத்துக் கொண்டிருக்கிறார்
கள். என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன். நானும் ஒரு சிறு
பீடி வியாபாரிதான். நான் அரசியலில் சம்பந்தப்பட்டிருப்பதன் காரணத்
தினால், பீடித் தொழிலாளர்களுக்கு கூலி-உயர்வு கிடைக்க வேண்டுமென்று
ரொம்ப நாளாக ஒரு கருத்து உடையவன் நான். மதராஸ் பக்கத்தில்
ஓரளவு அதிகமான கூலி கொடுக்கப்பட்டாலும், அதிலும் தொழிலாளர்
களுக்கு அதிருப்தி இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு
சரிவர கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இப்படிப்பட்ட ஒரு சட்டத்தின்
கீழ் அந்தத் தொழிலாளிகளைக் கொண்டு வா வேண்டும். இம்மாதிரி
ஒரு சட்டத்தை அமுல் நடத்துவதன் மூலம்தான் பீடி முதலாளிகளை
தொழிலாளிகளுக்கு ஒரு நியாயமான கூலி கொடுக்கும்படி கட்டாயப்
படுத்த முடியும். இப்பொழுது இருப்பதைவிட ஓரளவு தொழிலாளிகளுக்கு
கூலி உயர்வு கிடைக்க வேண்டுமென்பது இந்த சட்டத்தினுடைய ஒரு
குறிக்கோளாக இருக்க வேண்டும். இப்பொழுதைவிட ஆயிரம் பீடிக்கு
மேலும் கூலி விகிதம் அதிகமாக கிடைக்க வேண்டும். எங்கள் பக்கத்தில்
கூலியை சாவகாசமாகக்கூட கொடுப்பது உண்டு. அப்படியில்லாமல் காலா
காலத்தில் வாரத்திற்கு ஒரு முறை கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்ய
வேண்டும். திருநெல்வேலி ஜில்லாவைப் பொறுத்த வரையில், இந்த
சட்டம இரண்டுவித குறிக்கோள் கொண்டதாக அமைய வேண்டும். ஒன்று
கூலி உடனடியாக கொடுக்கப்பட வேண்டும். மற்றொன்று கூடுதல் கூலி
கொடுக்கப்பட வேண்டும். இந்த சட்டத்தைக் கொண்டுவருவதன் மூலம்
அதற்கு வழிவகை செய்ய வேண்டும். சென்ற நான்கு வருஷ காலமாக
இம்மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யப்
பட்டிருக்கிறது. இதற்கு முன்னால், முக்கியமாக எதிர்க் கட்சியைச் சேர்ந்த



10th April 1958] [Sri D. S. Authimoolam]

வர்கள், கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த சிலர் பீடித் தொழிலாளர்கள்
மத்தியிலே வேலை செய்து நான்கு வருஷங்களுக்கு முன்பாகவே இம்
மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்தார்கள். இந்த சட்டம்
பெரிய மண்டையிடி பிடித்த சட்டம். இதனால் அப்பொழுது இருந்த
தொழில் மந்திரி இம்மாதிரி ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதில் கால
தாமதம் ஏற்பட்டது. கடைசியில் அகில இந்திய ரீதியில் பீடித் தொழி
லாளர்களுக்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும், தனியாகக்
கொண்டுவர முடியாது என்ற நிலைமையில் அது கைவிடப்பட்டது. முந்தைய 12-50
சட்ட சபையில் எதிர்க் கட்சி உபதலைவராக இருந்து, இந்த சட்ட சபையில் p.m.
கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இங்கே வீற்றிருக்கும் ஸ்ரீ கல்யாணசுந்தரம்
அவர்கள்கூட பீடித் தொழிலாளர்களின் கஷ்டங்களுக்கு சர்க்காரின் கவ
னத்தை இழுப்பதற்காக, சில வருஷங்களுக்குமுன் சட்டசபை முன் மறியல்
செய்து ஜெயிலுக்குப் போனதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அப்
போதிருந்த தொழில் மந்திரியின்பேரில் குற்றம் கூறுவதற்காக இதை
நான் சொல்லவில்லை. பீடித் தொழிலாளர்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்
கான சட்டத்தைக் கொண்டு வருவது ஒரு சிக்கலான விஷயம். அதற்கான
சட்டத்தைக் கொண்டுவரக் கூடாது என்று பலர் ப்யூக் கார்களில் சென்று
பீடி முதலாளிகள் மற்றவர்களை பார்த்து அவர்களைத் தொந்தரவு செய்தார்க
கள். ஆகவே இனி பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர்களின் பாடு ரொம்ப
யோகமாக இருக்கும். நான் பீடி பாக்டரி வைத்திருப்பதால் என்னை
பொறுக்குக் கமிட்டியில் போடவில்லை என்று நினைக்கிறேன். பொறுக்குக்
கமிட்டி மெம்பர்களை ப்யூக் கார்களில் சென்று பாக்டரி மானேஜர்கள்
பார்ப்பார்கள். இந்த மசோதாவைக் கொண்டுவந்த கனம் அமைச்சரை
நான் இப்போதே 'கன்க்ராஜுலேட்' பண்ணுகிறேன். அவர் வெகு
தைரியமாகவும் சீக்கிரமாகவும் மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்.
பீடித் தொழிலாளர்களின் பிழைப்பைப் பாதுகாப்பதற்கு இந்த மசோதா
உதவும். பெண்களும், 13—14 வயதுக் குழந்தைகளும்கூட பீடித் தொழி
லாளர்களாக இருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் முக்கூடல் பீடி பாக்டரி
முதலாளிகள் பீடி சுற்றுபவர்கள் எல்லோருக்குமாக மாதம் 2½ லட்சம்
ரூபாய் வரையில் கூலி கொடுத்து வருகிறார்கள். பீடி ஒரு அருவறுப்பான
பொருள் என்று பலர் கருதினாலும், பலருக்கு அந்தத் தொழிலினால்
பிழைப்பதற்கான பணம் கிடைக்கிறது. இந்தத் தொழிலாளர்களின் நலன்
களைப் பாதுகாக்கக்கூடியதாக இந்த மசோதா இருக்கிறது. அரசாங்கத்தார்
பொறுக்குக் கமிட்டியில் இந்த மசோதாவை நன்றாகப் பரிசீலனை செய்து,
பிறகு நல்ல சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். இந்த மசோதாவை
நுட்பமாக ஆராய்ந்து இதில் நல்ல திருத்தங்களைச் செய்ய வேண்டும்.
இந்த மசோதா பொறுக்குக் கமிட்டியில் அடிபட்டுப் போய்விடாதபடி
பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்
கிறேன். ஏனென்றால் இந்தத் தொழிலில் 'படா, படா' கைகள்
இருக்கின்றன. அவைகள், இந்த மசோதாவை சட்டமாகாதபடி செய்து
விடக் கூடும். மசோதாவில் அனேக திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்
கிறது. செலக்ட் கமிட்டியில் அதை ஜாக்கிரதையாகச் செய்துகொள்ளலாம்.
சீக்கிரத்தில் சட்டம் கொண்டுவர வேண்டும். பீடித் தொழிலாளர்களுக்கு
உடனுக்குடன் கூலி கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு கூலி உயர்வும்
கொடுக்கப்பட வேண்டும். குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தில் கண்டுள்ள
விதிகளின்படி பீடித் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கப்படுவதற்கு,
கொண்டுவரப்படும் சட்டம் வகை செய்வதாக இருக்க வேண்டுமென்று
சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். மசோ
தாவை சீக்கிரம் கொண்டுவந்ததற்காக கனம் அமைச்சரை மனமார
வாழ்த்துகிறேன்.

(Mr. Speaker in the Chair.)

**MR. SPEAKER** : ஸ்ரீ கோதண்டராமன் இந்த மசோதாவின்
பேரில் பேச விரும்புகிறார். அவர் பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினராக
இருக்கிறார். அவர், தம் அபிப்பிராயங்களைப் பொறுக்குக் கமிட்டியில்
தெரிவித்துக்கொள்ளலாம்.

[Sri R. Venkataraman] [10th April 1958

'பதினான்கு வயதுக்குட்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்படுவார்கள், அவர்களுக்குக் கஷ்டம் ஏற்படும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால், அதற்காக 14 வயதுக்குட்பட்ட இளம் பிள்ளைகளுக்கு தவறான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பது சரியல்ல. அவர்களுக்கு பள்ளிக்கூடங்கள் வைத்துக் கொடுக்க வேண்டும், அல்லது வேறு பயிற்சி அளிக்க வேண்டும். அவர்கள் கஷ்டப் படுவார்கள் என்பதற்காக அவர்களைத் தவறான ஒரு வழியில் ஈடுபடுத்தி, அதிகமாக பிற்கால வாழ்க்கை பூராவும் கஷ்டப்படுகிற நிலைமையில் வைக்கக் கூடாது. அதையொட்டித்தான் இளம் பிள்ளைகளுக்கு, அதாவது 14 வயதுக்குட்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று கண்டிருக் கிறது.

'ஏன் இந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் ?' என்று சில அங்கத்தினர்கள் கேட்டார்கள். அதற்குப் பதில் கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதையே நான் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். எந்த ஒரு மசோதா வந்தாலும், கூடுமான அளவுக்கு அதை நன்றாகப் பரிசீலனை செய்து, குற்றங் குறைகள் இல்லாமல் செய்ய வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதுதான் என்னுடைய நோக்கமும் கூட. ஏதோ ஆறு மாதம், நான்கு மாதம் ஆனாலும், சரியான முறையில் இது பரிசீலனை செய்யப்பட்டு நல்ல முறையில் சட்டம் அமைய வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, இந்தப் பிரேரபணையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தப் பட்டியலில் ஒரு மாறுதலை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ வி. முத் தையா அவர்களுக்குப் பதிலாக ஸ்ரீமதி டி. என். அனந்தநாயகி அவர்கள் மெம்பராக இருப்பார்.

**Sri V. K. KOTHANDARAMAN** : On a point of information, Sir பீடித் தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி இந்தச் சட்டத் தைக் கொண்டுவரும் நேரத்தில் பல முதலாளிகள் பாக்டரிகளாக இருக்கக்கூடியவைகளை யெல்லாம் உடைத்து, அவுட்-டோர் ப்ராஞ்சுகளாக்கிக் கொண்டிருக்கிறார்கள். குடியாத்தம் எக்ஸ்ப்ரெஸ் பீடி பாக்டரியிலே உள் ளிருப்புப் போராட்டம் நடக்கிறது. வெளியிலே தொழிலாளர்களை அரஸ்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால், தயவு செய்து இந்தச் சட்டம் அமுலுக்கு வருகிறவரைக்கும் இப்பொழுது பாக்டரிகள் எந்த முறையில் நடந்து கொண்டிருக்கின்றனவோ அந்த முறையிலேயே நடக்க வேண்டும் என்ற அவசர உத்தரவை தயவு செய்து பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**The Hon. Sri R. VENKATARAMAN** : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது ஒரு தொழில் தகராறு (இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்). அதற்கு சட்டம் இருக்கிறது. அதன்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும். அப்படி எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று சொல் கிறேன்.

**Mr. SPEAKER** : The question is—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 25 Members including the Mover, 16 Members from the Assembly and 8 Members from the Council, to consider the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Bill, 1958, and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

Srimathi T. N. Anandanayaki.
Sri K. S. G. Haja Sheriff.
Sri P. G. Manickam.
Sri T. V. Sannasi.



10th April 1958] [Mr. Speaker]

Sri A. A. Rasheed.
Sri A. Mariappan.
Sri A. Chidambaranatha Nadar.
Sri J. Matha Gowder.
Sri M. S. Selvarajan.
Sri B. Doraisami Reddiar.
Sri P. S. Ellappan.
Sri M. P. Sarathi.
Sri D. S. Authimoolam.
Sri S. Pakkirisami Pillai.
Sri V. K. Kothandaraman.
Sri A. V. P. Asaithambi."

The Mover, of course, is separate. I have not mentioned his name, because it is part of the motion.

The motion was put and carried.

(3) THE MADRAS PLANTATIONS AGRICULTURAL INCOME-TAX (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 16 OF 1958).

* **The Hon. Sri M. A. MANICKAVELU** : Sir, I move—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958[a] (L.A. Bill No. 16 of 1958) be referred to a Select Committee."

The list of names will be furnished later.

Sir, the question of levying a tax on agricultural income has been engaging the attention of the Government. The Land Revenue Reforms Committee recommended among other reforms the levy of an agricultural income-tax over and above the land revenue assessment, the levy being applied in the first instance to plantation areas and extended gradually to other areas. This recommendation was accepted and the Madras Plantations Agricultural Income-Tax Act, 1955, was placed on the Statute Book. The Act applies to five plantation crops, namely, tea, coffee, rubber, cinchona, and cardamom. The Act has now been in existence for three years. In the discussions with the Planning Commission, the State Government have given an undertaking to raise enough resources to balance the revenue budget. Many new schemes are likely to be sanctioned during the current financial year, and this will widen the gap still further. The need for extending the levy of Agricultural Income-Tax Act to areas other than plantation areas has thus arisen. In the non-plantation areas, a surcharge on land revenue on larger holdings is now being levied, but the income from the surcharge is comparatively small and far less than what can be secured by an Agricultural Income-tax. The Government have also taken a decision to fix only a provisional ceiling on land holdings for the present. Social justice demands that a portion of the advantage derived by the people holding land in excess of that ceiling should be appropriated by the State towards common benefit. Having regard to all these considerations, the Government have decided to bring forward this Bill.

[a] Published in the *Fort St. George Gazette*; dated 8th April 1958.

[Sri M. A. Manickavelu] [10th April 1958

The main provisions of the Bill are—

(1) There will be two kinds of exemptions—one based on the extent of land held and the other on the actual agricultural income derived. Persons holding less than a certain specified extent of land will be exempted from agricultural income-tax. Persons holding in excess of the exempted extent of land will not be liable to the tax, if the agricultural income derived is less than the specified exemption limit. Any person who holds land not exceeding the following extent will not be liable to the tax :—

(*a*) two acres used for growing arecanut, or

(*b*) five acres used for growing tea, or

(*c*) fifteen acres used for growing coffee, rubber, cinchona or cardamom, or

(*d*) ten acres in the case of wet land assessed to land revenue at the rate of eight rupees and above per acre, or

(*e*) thirteen and one-third acres in the case of—

(i) wet land assessed to land revenue at the rate of four rupees and above but below eight rupees per acre, or

(*ii*) garden land irrigated from a Government source of irrigation, or

(*f*) sixteen and two-thirds acres in the case of—

(i) wet land assessed to land revenue at any rate below four rupees per acre, or

(ii) garden land irrigated from well or any source of irrigation other than a Government source of irrigation, or

(*g*) twenty-six and two-thirds acres in the case of dry land except those which are irrigated.

Any person who holds land in excess of the extent noted above will be liable to tax unless the agricultural income derived by him is less than Rs. 3,000.

1-10 p.m. In the case of every Hindu undivided family or Aliyasanthana family or branch or a Morumakkattayam tarvad or tavazhi including a Nambudiri family or any other class governed by the law applicable to Nambudiris which satisfies the condition that it consists of at least five members, the limit of agricultural income referred to will be Rs. 6,000. All pattadars paying land revenue of Rs. 100 and above are likely to become liable to the tax. There are about 26,000 individual pattas paying an assessment of Rs. 100 and above in the State.

The rates of tax and slabs will be as those applicable to plantation areas as given in the Bill and I need not mention them.

It may happen that many of the bigger landholders who will be liable to agricultural income-tax may also have a substantial income from non-agricultural sources. It is proposed to assess the agricultural income of such landholders at higher rates. The smaller assessees will be afforded facilities for compounding, in



10th April 1958] [Sri M. A. Manickavelu]

order to relieve them of the burden of keeping detailed accounts. Any person who holds land not exceeding three times the exempted extent may apply for permission to compound the agricultural income-tax payable by him and to pay in lieu thereof a lump-sum at the rate or rates mentioned in Part II of the Schedule to this Bill.

In the transferred areas of Kanyakumari district and Shencottah taluk of the Tirunelveli district, agricultural income-tax is already being levied under the Travancore-Cochin Agricultural Income-Tax Act, 1950. It is considered desirable to have only one Act applicable throughout the State; it is therefore proposed to repeal the Travancore Act and to extend the Madras Act as proposed to be amended to the transferred areas also.

The Madras Land Revenue Surcharge Act, 1954 will be repealed.

The above are the main provisions to embody which in the Madras Plantations Agricultural Income-tax Act, 1955, amendments to that Act will be made now. Incidentally, certain amendments which are found necessary in the actual working of the Act are also proposed to be made.

As the Bill is an important one, it is considered desirable that it should be referred to a Select Committee of the House for detailed scrutiny. Sir, the Members of the Select Committee proposed are as follows :—

1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 The Hon. Sri M. Bhaktavatsalam.
4 Sri P. G. Karuthiruman.
5 Sri T. P. Elumalai.
6 Sri S. Sadasivam.
7 Sri K. G. Palaniswami Gounder.
8 Sri P. M. Munuswami Gounder.
9 Sri P. Ramachandran.
10 Sri R. Srinivasa Iyer.
11 Sri W. P. A. R. Chandrasekaran.
12 Sri R. Krishnaswami Naidu.
13 Sri T. Karia Gounder.
14 Sri G. Narayanaswami Naidu.
15 Sri B. K. Linga Gowder.
16 Sri M. G. Shankar.
17 Sri P. R. Srinivasa Padayachi.
18 Sri M. Kalyanasundaram.

[Sri M. A. Manickavelu] [10th April 1958

19 Sri V. K. Ramaswami Mudaliar.
20 Sri M. Jangal Reddiar.
21 Sri M. Selvaraj.
22 Sri K. Sattanatha Karayalar.
23 Sri A. R. Marimuthu.
24 Sri S. M. Annamalai.

Sir, I request the House to accept this motion for referring the Bill to the Select Committee.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958) be referred to a Select Committee, consisting of the following members:—

1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 The Hon. Sri M. Bhaktavatsalam.
4 Sri P. G. Karuthiruman.
5 Sri T. P. Elumalai.
6 Sri S. Sadasivam.
7 Sri K. G. Palaniswami Gounder.
8 Sri P. M. Munuswami Gounder.
9 Sri P. Ramachandran.
10 Sri R. Srinivasa Iyer.
11 Sri W. P. A. R. Chandrasekaran.
12 Sri R. Krishnaswami Naidu.
13 Sri T. Karia Gounder.
14 Sri G. Narayanaswami Naidu.
15 Sri B. K. Linga Gowder.
16 Sri M. G. Shanker.
17 Sri P. R. Srinivasa Padayachi.
18 Sri M. Kalyanasundaram.
19 Sri V. K. Ramaswami Mudaliar.
20 Sri M. Jangal Reddiar.
21 Sri M. Selvaraj.
22 Sri K. Sattanatha Karayalar.
23 Sri A. R. Marimuthu.
24 Sri S. M. Annamalai."

I understand that the House is not going to sit in the afternoon. Therefore, is it the desire of the House to sit till 2 o'clock and finish the business? I must also remind the House that there is another



10th April 1958] [Mr. Speaker]

small Bill which will be moved by the Hon. Home Minister in this House. How long do we want for this Bill? Would the House agree to the convention that Members of the Select Committee need not speak now? It is a wholesome convention. How long do we take for this Bill?

SRI M. KALYANASUNDARAM : We can finish this Bill by 1-45 and for the other Bill, we will take 15 minutes.

THE HON. SRI M. A. MANICKAVELU : That is all right, Sir.

MR. SPEAKER : All right.

SRI M. A. MUTHIA CHETTIAR : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை. இந்தத் தடவை கொண்டுவரமாட்டார்கள் என்று எண்ணி இருந்தேன். இந்த மசோதாவை ஆட்சேபித்து நான் பேசவில்லை. இந்த மசோதாவைக் கொண்டுவரலாம். ஆனால் நான் சொல்ல வந்தது என்னவென்றால், ஆகஸ்டு மாதம் நடக்க இருக்கும் சட்ட சபைக் கூட்டத்தில் தான் வருவதாக எண்ணம் இருந்தது. இப்போது அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதோடு செலக்ட் கமிட்டிக்கு இந்த மசோதாவை இப்போது அனுப்புகிறார்கள். இதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்பது என் யோசனை.

MR. SPEAKER : It is a money Bill. We cannot have a Joint Select Committee.

SRI M. A. MUTHIA CHETTIAR : அப்படியானால் சரி. நான் இதை எதற்காகச் சொன்னேன் என்றால், இது மிகவும் முக்கியமான மசோதா. விவசாய வருமான வரி போடவேண்டாம் என்று சொல்வதற்கு நான் வரவில்லை. ஆனால் மற்ற வருமானத்தையும் சேர்த்துப் போடுகிறார்கள். இது அரசியல் அமைப்புக்கே விரோதமாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இப்போது யோசிக்காமல் எதையாவது போட்டு விட்டு பின்னர் இது கோர்ட்டுக்குப் போய் செல்லத்தக்கது அல்ல என்று தீர்ப்பாகி விட்டால் நன்றாக இராது. ஆகவே இதைப்பற்றி செலக்ட் கமிட்டியிலேயே நன்றாக ஆலோசனை செய்து இதை விட்டுவிட்டால் நன்றாக இருக்கும் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். ப்ளான்டேஷன் எஸ்டேட்டுகள் இதனால் பாதிக்கும்படியாக விட்டுவிடக் கூடாது. இதைப் பற்றிச் சொல்லும்போது எனக்கு இந்த ராஜ்யத்தில் ஏதோ ப்ளான்டேஷன் எஸ்டேட் இருப்பதாகவும் அதற்காகச் சொல்வதாகவும் நினைக்கக் கூடாது. எனக்கு இந்த ராஜ்யத்தில் ப்ளாண்டேஷன் எஸ்டேட் கிடையாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தையே நான் ஆட்சேபிப்பதாக நினைக்கக் கூடாது. அரசாங்கத்தார் கொண்டுவந்து விட்டார்கள். நானும் இதை ஆதரிக்கிறேன். ஆனால் இதர வருமானங்களையும் இதனோடு சேர்த்துக் கொண்டு கணக்கிடுவது என்பது சரியல்ல. இதைப்பற்றி மட்டும் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆந்திர ராஜ்யத்தில் விவசாய வருமானம் 5,400 ரூபாய்க்கு மேல் இருந்தால் வரி விதிப்பதாக யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இன்னும் கூடுதலாக அதைச் செய்தால்,நான் நல்லது என்று நினைக்கிறேன். அதைப்பற்றியும் செலக்ட் கமிட்டியில் நன்றாக யோசிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டிக்கு இந்த மசோதா அனுப்பப்படுவதால் இதைப்பற்றி இங்கே முக்கால் மணி நேரம் மட்டும் விவாதத்திற்கு நேரம் ஒதுக்கியிருப்பது சரியல்ல. அதுவும் பொறுக்குக் கமிட்டியில் உள்ளவர்கள் விவாதத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சபாநாயகர் நேரம் இல்லாத காரணத்தினால் . . .

[Sri M. A. Manickavelu] [10th April 1958

19 Sri V. K. Ramaswami Mudaliar.
20 Sri M. Jangal Reddiar.
21 Sri M. Selvaraj.
22 Sri K. Sattanatha Karayalar.
23 Sri A. R. Marimuthu.
24 Sri S. M. Annamalai.

Sir, I request the House to accept this motion for referring the Bill to the Select Committee.

MR. SPEAKER : Motion moved—

"That the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 16 of 1958) be referred to a Select Committee, consisting of the following members :—

1 The Hon. Sri M. A. Manickavelu.
2 The Hon. Sri C. Subramaniam.
3 The Hon. Sri M. Bhaktavatsalam.
4 Sri P. G. Karuthiruman.
5 Sri T. P. Elumalai.
6 Sri S. Sadasivam.
7 Sri K. G. Palaniswami Gounder.
8 Sri P. M. Munuswami Gounder.
9 Sri P. Ramachandran.
10 Sri R. Srinivasa Iyer.
11 Sri W. P. A. R. Chandrasekaran.
12 Sri R. Krishnaswami Naidu.
13 Sri T. Karia Gounder.
14 Sri G. Narayanaswami Naidu.
15 Sri B. K. Linga Gowder.
16 Sri M. G. Shanker.
17 Sri P. R. Srinivasa Padayachi.
18 Sri M. Kalyanasundaram.
19 Sri V. K. Ramaswami Mudaliar.
20 Sri M. Jangal Reddiar.
21 Sri M. Selvaraj.
22 Sri K. Sattanatha Karayalar.
23 Sri A. R. Marimuthu.
24 Sri S. M. Annamalai."

I understand that the House is not going to sit in the afternoon. Therefore, is it the desire of the House to sit till 2 o'clock and finish the business? I must also remind the House that there is another



10th April 1958] [Mr. Speaker]

small Bill which will be moved by the Hon. Home Minister in this House. How long do we want for this Bill? Would the House agree to the convention that Members of the Select Committee need not speak now? It is a wholesome convention. How long do we take for this Bill?

SRI M. KALYANASUNDARAM : We can finish this Bill by 1-45 and for the other Bill, we will take 15 minutes.

THE HON. SRI M. A. MANICKAVELU : That is all right, Sir.

MR. SPEAKER : All right.

SRI M. A. MUTHIA CHETTIAR : தலைவர் அவர்களே, இந்த
மசோதாவை. இந்தத் தடவை கொண்டுவரமாட்டார்கள் என்று
எண்ணி இருந்தேன். இந்த மசோதாவை ஆட்சேபித்து நான் பேசவில்லை.
இந்த மசோதாவைக் கொண்டுவரலாம். ஆனால் நான் சொல்ல வந்தது
என்னவென்றால், ஆகஸ்டு மாதம் நடக்க இருக்கும் சட்ட சபைக் கூட்டத்தில்
தான் வருவதாக எண்பு இருந்தது. இப்போது அவசரமாகக் கொண்டு
வந்திருக்கிறார்கள். அதோடு செலக்ட் கமிட்டிக்கு இந்த மசோதாவை
இப்போது அனுப்புகிறார்கள். இதை ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப
வேண்டுமென்பது என் யோசனை.

MR. SPEAKER : It is a money Bill. We cannot have a Joint Select Committee.

SRI M. A. MUTHIA CHETTIAR : அப்படியானால் சரி. நான்
இதை எதற்காகச் சொன்னேன் என்றால், இது மிகவும் முக்கியமான
மசோதா. விவசாய வருமான வரி போடவேண்டாம் என்று சொல்
வதற்கு நான் வரவில்லை. ஆனால் மற்ற வருமானத்தையும் சேர்த்துப்
போடுகிறார்கள். இது அரசியல் அமைப்புக்கே விரோதமாக இருக்கும்
என்று சொல்கிறார்கள். இப்போது யோசிக்காமல் எதையாவது போட்டு
விட்டு பின்னர் இது கோர்ட்டுக்குப் போய் செல்லத்தக்கது அல்ல என்று
தீர்ப்பாகி விட்டால் நன்றாக இராது. ஆகவே இதைப்பற்றி செலக்ட் கமிட்டி
யிலேயே நன்றாக ஆலோசனை செய்து இதை விட்டுவிட்டால் நன்றாக
இருக்கும் என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். ப்ளான்டேஷன்
எஸ்டேட்டுகள் இதனால் பாதிக்கும்படியாக விட்டுவிடக் கூடாது. இதைப்
பற்றிச் சொல்லும்போது எனக்கு இந்த ராஜ்யத்தில் ஏதோ ப்ளான்டேஷன்
எஸ்டேட் இருப்பதாகவும் அதற்காகச் சொல்வதாகவும் நினைக்கக் கூடாது.
எனக்கு இந்த ராஜ்யத்தில் ப்ளாண்டேஷன் எஸ்டேட் கிடையாது என்பதைச்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தையே நான் ஆட்சேபிப்
பதாக நினைக்கக் கூடாது. அரசாங்கத்தார் கொண்டுவந்து விட்டார்கள்.
நானும் இதை ஆதரிக்கிறேன். ஆனால் இதர வருமானங்களையும் இத
னோடு சேர்த்துக் கொண்டு கணக்கிடுவது என்பது சரியல்ல. இதைப்பற்றி
மட்டும் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.
ஆந்திர ராஜ்யத்தில் விவசாய வருமானம் 5,400 ரூபாய்க்கு மேல்
இருந்தால் வரி விதிப்பதாக யோசனை செய்து கொண்டிருக்கிறார்கள்
என்று நினைக்கிறேன். இன்னும் கூடுதலாக அதைச் செய்தால்தான்
நல்லது என்று நினைக்கிறேன். அதைப்பற்றியும் செலக்ட் கமிட்டியில்
நன்றாக யோசிக்க வேண்டுமென்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

செலக்ட் கமிட்டிக்கு இந்த மசோதா அனுப்பப்படுவதால் இதைப்பற்றி
இங்கே முக்கால் மணி நேரம் மட்டும் விவாதத்திற்கு நேரம் ஒதுக்கி
யிருப்பது சரியல்ல. அதுவும் பொறுக்குக் கமிட்டியில் உள்ளவர்கள் விவா
தத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என்று சபாநாயகர் நேரம் இல்லாத
காரணத்தினால் . . .

**MR. SPEAKER :** அவர்கள் பேசக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அது ஒரு ' கன்வென்ஷன் ' என்று சொன்னேன்.

**SRI M. A. MUTHIA CHETTIAR :** அதைத்தான் நானும் சொல்கிறேன். நேரம் இல்லை என்ற காரணத்திற்காக அப்படிச் செய்திருப்பது சரியல்ல. நேரம் இல்லை என்றால் நாளைக்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து விவாதிக்க வேண்டும். எதற்காக பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பும் மசோதாவுக்கு ஜெனரல் டிஸ்கஷன் முன்னால் நடத்துவது என்று விதிகளில் செய்திருக்கிறோம். பலர் பலவிதமான அபிப்பிராயங்களை முன்கூட்டியே இந்தச் சபையில் தெரிவித்தால் இவற்றை யெல்லாம் வைத்துக்கொண்டு பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர்கள் நல்ல முறையில் பின்னால் அவற்றைப் பரிசீலனை செய்ய முடியும். அப்படியில்லாவிட்டால் பொறுக்குக் கமிட்டி அங்கத்தினர் பத்து பேர்களுக்கு மட்டும் தபால் மூலம் இந்தத் தேதியில் இன்ன இடத்தில் கூட்டம் நடக்கிறது என்று தெரிவித்து விட்டால் போதுமே. சபையில் பலர் விவாதம் செய்தால் அந்த யோசனைகளை வைத்துக்கொண்டு அவர்கள் பொறுக்குக் கமிட்டியில் நல்ல சீர்திருத்தங்களை செய்ய முடியும் என்பதற்காகத்தான் பொது விவாதம் நடப்பது என்று வைத்திருக்கிறோம். அதற்கு வாய்ப்பு இல்லாமல், முக்கால் மணிக்குள் இந்த விவாதத்தை முடித்துவிடுவது சரியல்ல. விவசாய மக்களுடைய பிரதிநிதிகள் எல்லாம் தங்கள் யோசனைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். ஆகவே, மிகுந்த அவசரப்படாமல் நல்ல முறையில் இந்த மசோதாவைத் தயாரித்து கொண்டுவர சர்க்கார் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

என் அபிப்பிராயம், ஜாஸ்தி உள்ளவர்களிடம் சர்சார்ஜ்யை வேண்டுமானால் நான்கணு கூட்டி யிருக்கலாம். செலக்ட் கமிட்டிக்கு இந்த பில் போகப் போகிறது. அடிஷனல் சர்சார்ஜ் வேண்டுமானாலும் போட்டுவிட்டு இந்த வரியை விட்டு விடலாம். இதை 3,000 என்று வைத்துக்
1-20 p.m. கொண்டு மற்ற வருமானத்தை சேர்த்துக் கொள்ளக்கூடாது. செலக்ட் கமிட்டி ரிப்போர்ட் வந்த பிறகு இதுபற்றி நன்கு ஆலோசித்துத்தான் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அந்த சபை அங்கத்தினர்களுக்கு இதில் மிகவும் அக்கரை உள்ளவர்களாக யிருக்கிறார்கள். அவர்களையும் ஆலோசனைக்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்றுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI N. K. PALANISAMI :** கனம் சபா நாயகர் அவர்களே, இந்த மசோதாவை கொண்டு வந்ததற்காக நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். எனக்கு முன் பேசிய முத்தையா செட்டியார் அவர்கள், அவர்களுந்தான் இதை ஆதரித்தார்கள். ஆனால் அவர் ஆதரித்தது வேறு விதத்தில். சர்சார்ஜ் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம், ஆனால் இந்த மாதிரி வரி அவசியம் இல்லை என்று சொன்னார்கள். 1954-ல் இந்த மாதிரி ஒரு மசோதா, அக்ரிக்கல்ச்சரல் இன்கம் டாக்ஸ் ப்ளாண்டேஷனுக்குக் கொண்டுவரும்போது வரி போட வேண்டாமென்று சொன்னார்கள். இப்படி வருமான வரி விதிப்பதால்தான் சர்க்காருக்கு அதிக லாபம் கிடைக்கும். சர்க்கார் இன்று 75 லட்சம் ரூபாய் என்று சொன்னாலும், அது குறைவாகும், அதைவிட கூடுதல் கிடைக்கும். அப்படி கிடைக்கவில்லை என்றால், இச்சட்டத்தில் லூப் ஹோல்ஸ் இருக்கிறது என்றுதான் அர்த்தம். வரி விசாரணை கமிஷன் செய்த சிபார்சின் அடிப்படையில்தான் இந்த மாதிரி வரி விதிப்பொன்றை கொண்டு வந்திருக்கிறார்கள். இன்று 3,000 ரூபாய்க்கு அதிகமாக வைத்துக் கொண்டு நில வரியை எடுத்துவிட்டு, மேற்கொண்டு போகப் போக அதிக வரி போடுவது நன்றாகயிருக்கும். இருபத்தைந்து, முப்பது ரூபாய் கந்தாயம் செலுத்தக் கூடியவர்களுக்கு இவ்வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டியது மிக அவசியம். ஆந்திராவில் பிரகாசம் அவர்கள் இருக்கும்போது, 10 ரூபாய்க்குக் குறைவாக கந்தாயம் செலுத்தக் கூடியவர்களுக்கு குறிப்பாக நில வரி கூடாதென்று ஒரு மசோதா கொண்டு வருவதாக இருந்தார்கள். ஆனால் அதற்கு முன்பே அவர் மந்திரி சபை போய்விட்டது. இன்று நில



வரி கட்ட முடியாமல் பலர் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பலர் அவர்களது பூமிகளை விற்றுத்தான் இந்த வரி செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, 25, 30 ரூபாய் கந்தாயம் கொடுப்பவர்களுக்கு இவ்வரி விலக்கு அளிக்க வேண்டும். அதிகப்படி வருமானம் வரக்கூடியவர்களுக்கு கூடுதல் வரி விதிக்கலாம், ஸ்லாப் லிஸ்டத்தின் அடிப்படையில். இன்று விலைவாசிகள் ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும் இருக்கின்றன. விலை இறங்கும் போது அதைக் காண்பித்து அதில் இருந்து தப்பித்துக்கொள்ள வழி ஏற்படும். இன்று 100 படி கொள்ளும் மூட்டை ஒன்றுக்கு விலை 30, 40 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் திடீரென்று அதன் விலை 20, 25 ரூபாய் என்று குறைந்துவிடும். ஆகவே, அதனால் வரி விலக்கு வேண்டுமென்று கேட்பார்கள். ஒரிஸாவில் இதுபற்றி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அவர்கள் சிபார்சு செய்தது, கம்மெர்ஷியல் க்ராப்சில் ஆறில் ஒரு பங்கு சர்க்காருக்கு கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். அவ்விதத்தில் இங்கும், ஆறில் ஒரு பங்கு சர்க்காருக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**SRI J. MATHA GOWDER :** கனம் சபா நாயகர் அவர்களே, இந்த அக்ரிகல்ச்சுரல் இன்கம்டாக்ஸ் என்பது முன்பு, **Agricultural Income from Plantations** என்று இருந்ததை இப்பொழுது **Agricultural Income-tax from the lands** என்று மாற்றுகிறோம், ப்ளாண்ட்டேஷனில் இருந்து கிடைத்த வருமானத்தை இன்று பூமியின் அடிப்படையிலே செய்து இந்த பில்லை மாற்றுகிறோம். அப்படி மாற்றும் போது, ஏற்கனவே ப்ளான்ட்டேஷனுக்கு நான் சென்றுண்டு இங்கு இருக்கும் போதே ப்ளாண்ட்டேஷன் அக்ரிக்கல்ச்சரல் இன்கம்டாக்ஸ் அதிகப் படுத்தினோம். அதை ஓரளவு அதிகப் படுத்தும்போது, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதை இன்னும் அதிகமாக்கினால் பொன் வாத்தை அறுப்பது போலாகும், பொன் வாத்தை அறுக்கக்கூடாது என்று. ஓரளவிற்குத்தான் அதை போட முடியும் என்றும் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது கூறினார்கள். ஆனால் இன்று இந்த பில்லைப் பார்க்கும்போது, இது செலக்ட் கமிட்டிக்கு போகப்போகிறது. செலக்ட் கமிட்டி அங்கத்தினர் இதை ஓரளவு பார்க்கவேண்டும். இதற்கு முன் இயற்றிய சட்டத்தில் 20 எக்கர்களுக்குமேல் தோட்டம் உள்ளவர்கள் கணக்கு வைக்க வேண்டியதில்லை என்று இருந்தது. இன்று அது 15 எக்கர் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. ஏனென்று தெரியவில்லை. ப்ளாண்ட்டேஷன்ஸ்-ஐ பூமியின் அடிப்படையில் மாற்றுவதோடிருந்தால் பரவாயில்லை. ஆனால் அதுவும் 20-ல் இருந்து 15 எக்கர் என்று குறைத்திருப்பது கண்டு நான் விசனப்படுகிறேன். டீக்கு 20 எக்கர் என்றும் காப்பிக்கு 70 எக்கர் என்றும் முன் இருந்தது. இப்பொழுது அவை, 16 என்றும், 40 என்றும் வைத்திருப்பதை சர்க்கார் மாற்றி, முன்பு இருந்ததைவிட அது கூடுதலாக இருக்கவேண்டுமே தவிர அது குறையக் கூடாது, அப்படி குறைப்பது நியாயமல்ல. அதேநேரத்தில் ' **Lands used for growing plantation crops** '—அதில் நீலகிரியில் இருக்கக் கூடிய உருளைக்கிழங்கும் சேருகிறது. உருளைக்கிழங்கு நான்க்ராப் என்று வரும்போது, இதன்படி, 10 எக்கருக்கு உள்ளாக பயிரிடுபவர்களுக்கு வரியில்லை என்று இருக்கிறது. ஆனால் 10 எக்கர் நெற்பயிர் இடுவோருக்கு செலவு என்னவாகும் என்று எனக்குத் தெரியாது. ஆனால் உருளைக் கிழங்கு, சாதாரணமாக ஒரு விவசாயிகூட 10 எக்கர் உருளைக்கிழங்கு பயிர் செய்கிறான். அதில் 80 மூட்டை கிழங்கு போட முடிகிறது. எண்பது மூட்டை போட்டால் விளைவு 160 அல்லது 200 மூட்டைக்கு மேல் விளைவதில்லை. இருநூறு மூட்டைக்கு விலை போட்டால் மொத்தம் 4,000 ரூபாய் கிடைக்கும். அதில், செலவு 3,000 ரூபாய்க்கு மேல் ஆகிவிடும். எங்கள் அனுபவ பூர்வமாகச் சொல்கிறேன். ஆயிரம் ரூபாய் கூட கூலி கிடைப்பதில்லை. ஆகவே, இந்த உருளைக்கிழங்கு விவசாயம் செய்கிறவர்களுக்கு குறைந்தது 30 எக்கருக்கு கம்மியாய் உள்ளவர்கள் பொட்ட்டோ

கல்டிவேஷன் செய்வதாயிருந்தால் அவர்களுக்கு இந்த வரியில் இருந்து விலக்கு அளிக்கவேண்டும். ஆயிரம், இரண்டாயிரம் எக்கர் உள்ளவர்களுக்கு வரியை வேண்டுமானுல் அதிகப்படுத்தினுலும் நான் அதை ஆட்சேபிக்கவில்லை. ஆனுல் பத்து எக்கருக்கு மேல் 11 ஏக்கர் கல்டிவேஷன் இருந்தாலும் அவர்களுக்கு வரி விதிப்பது என்பது மிகவும் கஷ்டமாகும். ஆகவே, செலக்ட் கமிட்டி இதை நன்கு பரிசீலனை செய்து, நீலகிரியைப் பொறுத்த வரையில் உருளைக்கிழங்கிற்கு நான் சொன்னது போல் ஒரு விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காப்பி ஒரு வருஷத்தில் விளையக்கூடியதல்ல. ட வருஷந்தோறும்
1-30 p.m. பலன் தரக்கூடியது. ட 15 நாட்களுக்கு ஒரு தடவை பலன் தந்து கொண்டிருக்கும். காப்பி மூன்று வருடங்களுக்கு ஒரு முறைதான் பலன் தருகிறது. காப்பிச் செடியிலிருந்து ஒரு தடவை பலன் எடுத்த பிறகு அதை சீர்படுத்தி சுத்தம் செய்த பிறகு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பலன் கிடைக்கிறது. ஒவ்வொரு ஆண்டிலும் பலன் கிடைக்காது. இதைப்பற்றி பல அங்கத்தினர்கள் தெரியாமல் இருந்திருக்கலாம். டயை விட மூன்று மடங்கு அதிகமாக காப்பிக்கு இருக்கவேண்டும். பத்து எக்கர் காப்பிக்கு என்று இருந்தால் டக்கு ஐந்து எக்கர் என்று இருக்க வேண்டும். ஆகவே காப்பிக்கு 30 எக்கர்களுக்குமேல் வரி என்று போட வேண்டும். சாதாரணமாக 10 எக்கர் என்பது சாதாரணமாக அங்குள்ள எல்லா மக்களும் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இவ்விதம் தோட்டங்கள் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் 4,000 பேர்கள் இருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற முறை, இம்மாதிரி இருக்கின்ற 4,000 தோட்டக்காரர்கள் பாதிக்கின்ற முறையில் இருக்கின்றது. தனியாக ஐயாயிரம் எக்கர்கள், ஆருயிரம் எக்கர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், அவர்களின்மீது வேண்டுமானுல் வரியை எவ்வளவு வேண்டுமானுலும் போடலாம். ஆனுல் நீலகிரி ஜில்லாவை பொறுத்த வரை அங்கு அதிகமாக இருப்பவர்கள் நான் முன்னுல் சொன்ன தோட்டக்காரர்கள்தான். ஆகவே இவர்களது வரம்பு மிகவும் குறைந்திருக்கிறது. இதை அதிகமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி செலக்ட் கமிட்டி நன்ருக பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**Mr. SPEAKER :** கனம் அங்கத்தினர் முத்தையா செட்டியார் அவர்கள், செலக்ட் கமிட்டியில் அங்கத்தினர்களாக இருக்கக்கூடியவர்கள் பேசக்கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம் என்று சொன்னது தவறு. சாதாரணமாக செலக்ட் கமிட்டியில் இருக்கிறவர்கள் பேசுவதற்கு சமயம் இல்லாத நேரத்தில் இங்கே பேச வேண்டிய அவசியமில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம், அதல்லாமல் பேசக்கூடாது என்று எந்த விதமான சட்டமும் கிடையாது. இன்னொன்று நான் சொல்வது என்னவென்றுல் நான் கனம் அங்கத்தினர்களை அவசரப்படுத்துவதாக நினைக்கக்கூடாது. கட்சித் தலைவர்கள் இத்தனை மணி நேரத்திற்குள் விவாதத்தை முடிக்க வேண்டும் என்று சொல்லும்பொழுது அதை பகிர்ந்து கொடுக்க வேண்டியது சபா நாயகரின் கடமை. இந்த சபை 5 மணிக்கு மேல் இருக்கவேண்டும் என்ருே அல்லது இன்னும் 10 நாட்களுக்குக்கூட வேண்டும் என்ருே சொல்வதாக இருந்தாலும் எனக்கு ஆட்சேபம் ஒன்றும் இல்லை. ஆகவே இன்னும் அங்கத்தினர்கள் பேசுவதற்கு 15 நிமிடங்கள் இருக்கின்றன. அங்கத்தினர்கள் அதற்குள்ளாக பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**Sri S. NAGARAJA MONIGAR :** தாங்கள் இதைப்பற்றி இவ்வளவு விளக்கமாக சொல்ல வேண்டியதில்லையே . . .

**Mr. SPEAKER :** ஏனென்றுல் உங்களைப் போன்றவர்கள் பேசுவதற்கு கையை தூக்கும்போது நான் அதற்கு இடம் கொடுக்காமல் இருந்தால், அதை நீங்கள் ஆட்சேபிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு விளக்கமாகச் சொன்னேன். அடுத்தபடியாக கனம் நடராஜன் அவர்கள் பேசலாம்.





